தமிழ்நாட்டு வரலாறு

சங்ககாலம் — அரசியல்

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு

தமிழ்நாடு அரசு வெளியீடு

தமிழ்நாட்டு வரலாறு

சங்ககாலம் — அரசியல்

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு

தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்காக
வெளியிட்டோர்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை-6

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	...	**History of Tamilnadu Sangam Age (Political)**
Authors	...	Expert Committee for History of Tamilnadu
Publisher	...	Director of Tamil Development, Kuralagam, Madras-600 001.
Copyright	...	Government of Tamilnadu
Publication Number	...	2
Language	...	Tamil
Edition	...	First
Number of Copies	...	2000
Date of Publication	...	1983
Paper used	...	Sweedish 20·1 kg.
Binding	...	Full Calico Bound
Size of the Book	...	22 × 14·5 cm
Printing type used	...	10 Pt.
Number of pages	...	700

Price : **Rs. 37-15**

Printed at : Kumaran Press, Madras-600 001.

மதிப்புரை

மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர், தமிழ்நாடு

உலகில் மனித இனம் தோன்றியது கடல்கொண்ட தமிழகப் பகுதியான லெமூரியாக் கண்டத்தில்தான் என்றும், உலகின் வேறு பகுதிகள் பின்னடைந்திருந்த நிலையில் தமிழகம் உயர்ந்த நாகரிகத்தின் தொட்டிலாக இருந்தது என்றும் ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகின்றனர். முதல், இடை, கடைச் சங்கங்கள் தோன்றித் தமிழ்மொழியை வளர்த்தன.

ஒரு மொழியில் உள்ள இலக்கியம் அம் மொழி பேசுவோரின் வாழ்வையும், கலாசாரச் சிறப்பையும் எடுத்துக்காட்டும் கண்ணாடி எனக் கொள்ளப்படுகிறது. அந்த வகையில் நமக்குக் கிடைத்துள்ள சங்க இலக்கியம் பண்டைத் தமிழர்களின் பொற்காலம் என்று கருதப்படும் சங்ககால வரலாற்றை நமக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. கிறித்தவ சகாப்தத் தொடக்கத்திற்கு முன்னும் பின்னும் ஆயிரம் ஆண்டு காலம் பரவிநின்ற மூன்றாம் சங்க அல்லது கடைச்சங்க காலத்தையே பொதுவாகச் சங்ககாலம் என்று நாம் குறிப்பிடுகிறோம்.

சங்க இலக்கியம், தமிழர்கள் வாழ்ந்த பெருவாழ்வை, அவர்களது பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, மரபுகளை, வாழ்வின் பல்வேறு நிலைகளில் அவர்கள் ஒழுகிய நெறிமுறைகளை, அவர்களது காதலை, வீரத்தை, நீதியை, அறிவாற்றலை, அரசியலை, ஆட்சிமுறையை, சமுதாய நெறியை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு இலக்கணமாய் அமைந்திருந்தது சங்ககாலத் தமிழர் வாழ்வு. இயற்கையோடு இயைந்த உண்மையான வாழ்வு அவர்கள் வாழ்வு. எனவே, சங்ககாலத் தமிழர்களின் பெரு வாழ்வைக் கூறும் வரலாற்றினைக் கற்பதும், ஆய்வுசெய்வதும் இன்பந்தரும் இனிய, சிறந்த அனுபவம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்',

'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்,
புதுவது அன்றுஇவ் வுலகத்து இயற்கை',

'புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்',

'வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன்',

'நிலம்பெயரினும் நின்சொல் பெயரல்',

'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

என்னும் பற்பல அறக்கோட்பாட்டினை வகுத்துக்கொண்டு சங்க காலத் தமிழினம் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய வரலாறு, நமக்கு இன்றும் வழிகாட்டும் அறநெறிக் களஞ்சியமாக உள்ளது.

அகம், புறம் எனப்படும் தமிழரின் அகவாழ்வு புறவாழ்வினை ஒரு குறிப்பிட்ட கோணத்தில் வாழ்வியல், அரசியல் என இரு பகுதிகளாகப் பாகுபடுத்தி அவற்றின் சிறப்பினைத் தனித்தனியே எடுத்துக்கூறும் வகையில் தமிழ்நாட்டு வரலாறு எனும் நூலின் இரண்டாம் தொகுதியைச் சங்ககாலம்(அரசியல்), சங்ககாலம் (வாழ்வியல்) என்று இரண்டு பகுதிகளாகத் தமிழ் வளர்ச்சித் துறை வெளியிடுகிறது. இதற்குப் பெருமுயற்சி எடுத்து இந்த அரும் பணியை வெற்றிபெறச் செய்த வரலாற்றுக் குழுவின் சாதனை மெச்சத்தகுந்தது. 1970-ல் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட வரலாற்றுக் குழு, அவரது மறைவிற்குப்பின் தமிழறிஞர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, கே. கே. பிள்ளை ஆகியோரின் தலைமைப் பொறுப்பில் இயங்கி, பல்வேறு தமிழாராய்ச்சியாளர்கள், ஆசிரியர்களின் முயற்சியாலும் இந்தச் சாதனை நிறைவேறியுள்ளது. இப் பணியை ஒருங் கிணைத்து அதன் வெற்றிக்கு வழிவகுத்த தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் மா. நன்னன் அவர்களைப் பெரிதும் பாராட்டு கின்றேன். நூலை ஆக்கி அமைத்து வெளியிட உறுதுணையாக இயங்கி, தமிழ்ப்பணி புரிந்த பேராசிரியர்களையும் அரசு அலுவலர் களையும் பாராட்டுகின்றேன்.

அணிந்துரை

மாண்புமிகு செ. அரங்கநாயகம், எம்.ஏ., பி.டி., பி.எல்.,
கல்வி அமைச்சர், தமிழ்நாடு

"சிரித்தது பாரடா செந்தமிழ்க் கூடு!
விரிந்தது பாரடா அழிந்ததம் நாடு!
பாடுது பாரடா பைந்தமிழ் நாடு!
முழிச்சிப் பாத்து முறுக்குது மீசையை!
எதிரி மேலே எண்ணம் கொள்ளுது!
சொத்தைக் காக்கக் கத்தியைத் தூக்குது;
தமிழில் நனைந்த தமிழ்நாடு பாத்தியா
ஆடுது பாத்தியா அழகு நாடு!"

என்று 'திடுதிடும்' எனத் தொடங்கும் பாட்டில் புரட்சிக் கவிஞர் கூறியவாறு தமிழகம் மறுமலர்ச்சி பெற்றுவருகிறது. அதற்கான அறிகுறிகள் பலவும் தமிழ்நாடு முழுவதும் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் தமிழ்நாட்டு வரலாறு முழுமையாகவும் முறையாகவும் வெளிவருவதாகும். முதல் தொகுதி **'தமிழ்நாட்டு வரலாறு — தொல்பழங்காலம்'** என்னும் பெயரில் முன்னர் வெளிவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து வெளிவரவேண்டிய தொகுதிகளுள் இது **'தமிழ்நாட்டு வரலாறு — சங்ககாலம்'** என்னும் பெயரில் இரு பகுதிகளாக வெளிவருகிறது.

தமிழர்களின் பொற்காலமாகத் திகழ்ந்ததும் இன்றும் பல வகையிலும் அப் பொற்கால வாழ்வையே நாம் நாடி முன்னேறக் கூடியதாகத் திகழ்வதுமாக உள்ள சங்ககாலத் தமிழகத்தைப் பற்றிய வரலாறு வெளிவருவது தமிழர் அனைவரும் மகிழ்ச்சியும், நம்பிக்கையும், புதுவலிமையும் பெறக்கூடிய பெருஞ்செயலாகும்.

இந்நூல் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியச் செல்வங்களையும், வேற்று இலக்கியங்கள் சிலவற்றையும், அரசலூர், ஆறுநாட்டார்மலை போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுகளையும், அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், திருக்காம்புலியூர், புகார் ஆகிய இடங்களை அகழ்ந்து ஆய்ந்து பெற்ற தகவல்களையும், அயல்நாட்டாரின் பயணக் குறிப்புகளையும்

அடிப்படைச் சான்றுகளாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என அறிகிறேன்.

இவ்வரிய முயற்சியின் விளைவாகக் கருத்து வேறுபாடுகளும் மாறுபாடுகளும் மிக்க சங்ககாலத்தைக் கணித்துள்ளமை சிறப்புடையதாகும். இதனால் இன்றைய சான்றோர் சிலர் சங்க காலத்தை வலிந்து இழுத்துப் பின்னுக்குத் தள்ளியது பொருத்தமற்றது என்பது வெளிப்படுகிறது. மேலும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் குறிப்புகளையும் மட்டுமே தந்து செல்லாமல் தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், கோட்பாடு போன்றவற்றையும் துலக்கிச் செல்வது என் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது. அவ்வாறு துலக்கப்பட்டனவற்றுள் சிலவற்றையேனும் இங்குக் குறிப்பிடுவது இன்றியமையாதது என்று கருதுகிறேன். தமிழர்களின் அறப்போர், சான்றாண்மை, கொடை, தன்மானம், பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாமை போன்ற பண்புகளும், காரவேலனின் ஹதிகும்பாக் கல்வெட்டில் காணப்படும் மூவேந்தரின் ஒற்றுமைச் செய்தியானது இங்குத் தரப்பெற்ற தமிழ் இலக்கியச் சான்றால் உறுதிப்படுதலும். உலகம் ஒன்று என்னும் பரந்த நோக்கமும்.

மற்றும்,

'இன்னாது அம்மஇவ் வுலகம்!
இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே'

என்றும்,

'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வாணிகன் ஆய்அலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப்பட் டன்றுஅவன் கைவண் மையே'

என்றும்,

'எத்துணை யாயினும் ஈத்தல் நன்றுஎன
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர், வறுமைநோக் கின்றுஅவன் கைவண் மையே'

என்றும்,

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே'

என்றும் கூறியுள்ள தமிழர்களின் கோட்பாடுகள் சிலவும் குறிப்பிடத் தக்கனவாக அமைந்துள்ளன.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உல'கென உழவைச் சிறப்பித்துக் 'காவிதி'ப் பட்டம் வழங்கப்பட்ட செய்தியும் சிறப்புடையதாகும்.

சிந்துவெளி நாகரிகத்தில் இடம்பெற்றிருந்த மரம், விலங்கு, இலிங்கம் ஆகியவற்றை வணங்கும் முறை திராவிடர்களுடையதே என நிறுவப்படுவதும், தமிழர் செல்வாக்கினால்தான் வேத நாகரிகம் இந்து நாகரிகமாக உருமாறியது என்றும், தமிழர்களின் உருவ வழிபாட்டையே ஆரியர் ஏற்றனர் என்றும், தமிழர்களுக்குரிய ஆகம மரபுகள் வேதமரபுகளில் செல்வாக்குப் பெற்றன என்றும் டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்கள் கூறும் கூற்றை எடுத்துக்காட்டியிருப்பதும் அருமையானவையாகும். தமிழ் எழுத்துகள் அசோகன் காலத்துக்கு முந்தியவை என நிறுவித் தமிழ் வரிவடிவத்தின் தொன்மையை நிலைநாட்டியுள்ளமை மிகவும் நன்று.

தமிழரின் அருமைபெருமைகளை மட்டும் சுட்டிச் செல்லாமல் சில குறைபாடுகளையும் சுட்டியிருப்பது வரலாற்றுக் குழுவின் நடுநிலைக் கொள்கையைக் காட்டுகிறது. அவற்றுள் கோப்பெருஞ் சோழன் தான் பெற்ற மக்களிடம் போரிட நினைத்ததும், கிள்ளி வளவன், மலையமான் திருமுடிக்காரியின் மக்களை யானையின் காலடியில் கிடத்திக் கொல்ல முயன்றதும் குறிப்பிடத்தகுந்தனவாகும்.

இவ்வாறு பலவகையிலும் பாராட்டத்தக்க முறையில் இந்நூலை உருவாக்கி வெளிக்கொணர்ந்த கட்டுரையாளர்களும், வரலாற்றுக் குழுவினரும், அதன் தலைவர்களாக விளங்கி மறைந்த பெருமக்களான ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, டாக்டர் கே. கே. பிள்ளை ஆகியோரும், உருவாக்கத்திற்கும் வெளியீட்டிற்கும் உறுதுணையாகவும் இணைப்பாகவும் இருந்த தமிழ் வளர்ச்சி இயக்குநரும் என் பாராட்டுக்குரியோர் ஆவர்.

பதிப்புரை

தமிழ்நாட்டு வரலாற்றை முறையாகவும் முழுமையாகவும் வரைந்து பல தொகுதிகளாக வெளியிடவேண்டும் என்னும் அவாவினை, இந் நூற்றாண்டின் தொடக்கமுதல் அறிஞர் பலரீ வெளியிட்டு வந்துள்ளனர். அத் தமிழ் ஆர்வலர்களின் நெடு நாளைய 'கனவு' கடந்த பத்தாண்டுகளில் நினைவாகத் தொடங்கியுள்ளமை தமிழகத்திற்குக் கிட்டிய நல்வாய்ப்பாகும்.

உங்கள் கைகளில் தவழும் இந் நூல், தமிழ்நாடு அரசு அமைத்த வரலாற்றுக் குழுவின் உதவியோடு தமிழ் வளர்ச்சித் துறையினால் வெளியிடப்படும் தமிழ்நாட்டு வரலாற்றின் இரண்டாம் தொகுதியாகும். *'தமிழ்நாட்டு வரலாறு—தொல்பழங் காலம்'* என்னும் தொகுதி 1975 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டு வரலாற்றின் இரண்டாம் தொகுதியாகிய *'தமிழ் நாட்டு வரலாறு—சங்ககாலம்'* என்னும் இந் நூல், *'சங்ககாலம் —அரசியல்'*, *'சங்ககாலம்—வாழ்வியல்'* என இரு பகுதி களாக இப்பொழுது வெளியிடப்படுகின்றது.

1980 ஆம் ஆண்டுவரை கிடைத்துள்ள கருத்துகளைத் தொகைவகைப்படுத்தி, இயன்ற அளவு செம்மையாக நூலை உருவாக்கி வெளியிட்டுள்ளோம். வரலாற்றுத் துறையிலும் தமிழிலக்கியத் துறையிலும் பயிற்சியும் தேர்ச்சியும் வாய்ந்த அறிஞர்கள் பலருடைய குன்றாத ஆர்வத்தாலும் அயராத உழைப்பாலும் இந் நூல் உருவாகியுள்ளது. இத் தொகுதியில் சங்ககாலத் தமிழ் மக்களின் வரலாற்றையும் வாழ்வையும் முழுமை யாகப் படம்பிடித்துக் காட்டவேண்டும் என்பதே வரலாற்றுக் குழுவின் நோக்கமாகும். சங்ககாலத் தமிழக வரலாற்றின் போக்கினையும் பண்பாட்டின் சிறப்பினையும் தகுந்த ஆதாரங் களுடன் காட்டுவதாகவும் இஃது அமைந்துள்ளது.

நடுவுநிலையில் நின்று ஆராய்ந்து ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பெற்ற முடிவுகளை, இந் நூல் முறைப்படுத்தி எடுத் துரைக்கின்றது. எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய ஆராய்ச்சி களால், இந் நூலில் காணப்பெறும் கருத்துகள் பல வலிவும்

பொலிவும் பெறக்கூடும்; சில ஒளியிழக்கவும் கூடும். ஆயினும், இத் தொகுதி பண்டைய தமிழக வரலாற்று ஆராய்ச்சிக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக அமையும் என்பதில் ஐயமில்லை.

வீரத்தின் பெயரால் போர்க்களங்களில் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலியிட்ட துன்பக் கதையினைக் கூறுவதுதான் 'வரலாறு' என்று கருதிய காலம் மாறிவிட்டது; உலகின் பல பகுதிகளில் வாழ்ந்த மக்கள், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் சென்று குடியேறிய கதையே வரலாறு என்று எடுத்தியம்பிய காலம் மறைந்துவிட்டது; செந்நீரை வியர்வை ஆக்கி, அல்லும் பகலும் அயராது உழைத்த மக்கள் பெற்ற செல்வத்தைக் குறுநிலத் தலைவர்கள் கொள்ளையிட்டதைச் சுவையாகச் சொல்லுவதே வரலாறு என்று நம்பிய காலம் மறைந்துவிட்டது; அரசர்களின் அந்தப்புரங்களில் இருந்த ஆரணங்குகளின் வாழ்க்கையைப்பற்றிய தொடர்கதையே வரலாறு என்று போற்றிய காலமும் போய்விட்டது.

இன்றைய உலகம் சிறந்தது எனக் கருதும் வரலாறு மக்கள் சமுதாயத்தின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி, வீழ்ச்சி போன்ற வற்றையும், தனிமனிதனுக்கும் சமுதாய வாழ்விற்கும் இடையே நிலவும் தொடர்பையும், வெவ்வேறு காலங்களில் பற்பல நாடுகள் நாகரிகத்தின் கொடுமுடியில் வீறுடன் விளங்கியதையும் கால வரன்முறைப்படுத்தி உரைப்பதாகும்.

ஒரு நாட்டின் அல்லது மக்கள் இனத்தின் கடந்த கால வாழ்க்கை நிகழ்ச்சிகளை வரன்முறையாகக் கூறுவதோடு, வரலாறு அமைதிகொள்வதில்லை. அந் நிகழ்ச்சிகளின் விளைவுகள் இன்றைய வாழ்வில் எவ்விதம் வெளிப்படுகின்றன; அல்லது இன்றைய வாழ்க்கை நிலையை அவை எவ்வாறு உருவாக்கியுள்ளன என்பதை உணர்ந்து செயல்பட உறுதுணையாக அமைவதே வரலாறு. மேலும், ஒரு நாட்டின் அல்லது மக்கள் இனத்தின் வருங்கால வரலாற்றுப் போக்கு எவ்விதம் அமையும் என்பதை உய்த்துணர உதவுவதும் வரலாறே. இவற்றை யெல்லாம் உளங்கொண்டே, தமிழ்நாட்டின் 'சங்ககால' வரலாறு வரையப்பட்டு இருக்கிறது.

வரலாற்றுக் காலத் தொடக்கத்திற்கு முற்பட்ட தமிழக வரலாற்றைத் 'தொல்பழங்காலம்' எனவும் வரலாற்றின் தொடக்க காலத்தைச் 'சங்ககாலம்' (கி.மு. 400 முதல் கி.பி. 250 வரை) எனவும் வகைப்படுத்தியுள்ளோம். இவற்றைப் போன்றே

பல்லவர் - பாண்டியர் கால வரலாறு, சோழப் பெருவேந்தர் கால வரலாறு, விசயநகர-நாயக்க மன்னர் கால வரலாறு, மேற்கு நாட்டவர் ஆட்சிக் கால வரலாறு என்னும் தொகுதிகளாக எஞ்சியுள்ள தமிழ்நாட்டு வரலாற்றை வகைப்படுத்தலாம். தமிழ் நாட்டின் வரலாற்று வானில், சங்ககாலம் பேரொளியுடைய ஞாயிற்றைப்போல விளங்குகின்றது. இத் தனிப்பெருஞ் சிறப்பிற் குரிய காரணங்கள் சிலவற்றை நாம் ஆய்தல் நலமாகும். அவற்றுள், ஒன்று தமிழ்நாட்டில் முடியுடை மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களாகிய தமிழர்களே ஆட்சி புரிந்த காலம் அஃதாகும். இரண்டாவதாக, தமிழ்மொழியின் இலக்கிய வரலாற்றில், செம்மொழி இலக்கியக் காலமாகச் சங்ககாலம் பொன்றாப் புகழ் பெற்றுள்ளது. மூன்றாவதாக, பிற இனத் தவரின் மொழி, பண்பாடு முதலியவற்றின் ஊடுருவல் மிகக் குறைந்த அளவில் செயல்பட்ட நிலையில், தமிழ்மக்கள் போற்றி வளர்த்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் பொற்காலமாகச் சங்ககாலம் புகழ்பெற்றுள்ளது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களாகிய மண்ணின் மைந்தர்கள் ஒரே காலத்தில் தத்தம் குடிப்பெருமையைப் பேணும் வகையில் அறநெறியில் நின்று ஆட்சிபுரிந்தனர். மூவேந்தர் களுடைய அரசுகள் தன்னுரிமைத் தனியரசுகளாக விளங் கியதைச் சங்ககாலத்திற்குப் பிறகு நாம் காண இயலவில்லை. இவ்வகையில், சங்ககாலத் தமிழக வரலாறு தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். தலையாலங்கானத்துப் போரைப் பாடிய புலவர், 'தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானம்' என்று சுட்டி யுள்ளமை மேற்கூறப்பெற்ற கருத்துகளுக்குச் சிறந்ததொரு சான்றாக அமைகிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலமே 'செம்மொழி இலக் கியக் காலம்' என்பது யாவரும் அறிந்த உண்மை தமிழ்மொழியில், குறிப்பிட்ட ஒரு சமயத்திற்கு அடிமையாகாத நிலையில், மக்கள் நலனை நாடும் அறவுணர்வு கனிந்த வீரப் பாடல்களும், மென்மை மிகு மனித உள்ளத்தின் நுட்பமான காதல் உணர்வினைப் பல்வேறு கோணங்களில் ஓவியங்களாகத் தீட்டிக் காட்டும் அகப் பொருட் பாடல்களும் இயற்றப்பெற்ற காலம் சங்ககாலமேயாகும். அனைத்துலக மனிதனைப் பாடும் உலகப் பொதுமறையாகிய திருக்குறளும் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரமும் இக் காலத்தில் இயற்றப்பெற்றன. தமிழ் இலக்கியங்களுக்குள் இவை நேர்த்தியும் சீர்த்தியும் வாய்ந்தவை; ஏரும் எழிலும், ஏற்றமும் ஊற்றமும் பெற்றனவு; காலத்தை வென்றுவாழும்

'காலம் கடந்த' இலக்கிய உயிர்த்துடிப்பு வாய்ந்தவை. இன்றும் வாழும் இலக்கியங்களாகச் சங்க இலக்கியங்கள் புகழ்பூத்து விளங்குவதால் இக் கருத்து உறுதிபெறுகிறது. இந்த இலக்கியங்களில் இழையோடும் சிறப்பியல்புகளைப் பிற்காலத்திய தமிழ் இலக்கியங்களில் காணமுடியாது. இவை யாவற்றிற்கும் மேலாகச் சங்க இலக்கியங்களுள் 'அனைத்துலக நோக்கு' மேலோங்கி நிற்கிறது. 'இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை' என்பதை உலகிற்கு அறிவிக்கும் வகையில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளதை யாரும் மறுக்க இயலாது. இவ்விதம் வாழும் இலக்கியங்களாகவும், தன்னிகரற்ற சிறப்பியல்புகளை உடையனவாகவும், அனைத்துலகப் பண்பின் பேருற்றாகவும் விளங்கும் சங்ககால இலக்கியங்களைச் செம்மொழி இலக்கியங்களாக உலகம் போற்றுவதில் வியப்பிற்கு இடமில்லை.

சங்ககாலமே தமிழகத்தின் 'பொற்காலம்' எனப் போற்றப்படுகிறது. ஏனெனில், (1) ஒரு நாடு வெளியாருடைய படையெடுப்பால் அல்லற்படாமல் அச்சமின்றி, அமைதியான வாழ்க்கைக்கு உதவும் அரசியல் சூழ்நிலையைப் பெற்றிருக்க வேண்டும்; பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும் அற்றதாக விளங்க வேண்டும். (2) மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் அரசின் தலையீடோ, அடக்குமுறைக் கொடுமைகளோ இன்றி, அல்லவை குறைந்து அறநெறி ஓங்கி இருத்தல்வேண்டும். (3) மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் தொடர்பான பொருள்கள் இயலும் உழைப்பில் கிடைக்கத்தக்கனவாக இருத்தல் வேண்டும். (4) குடிமக்களுடைய நல்வாழ்வில், ஆட்சி செலுத்துவோர் அக்கறை கொண்டவர்களாக இருத்தல் முக்கியமானது. (5) சமூகம், கலை, பண்பாட்டுப் பணிகளுக்கு அரசின் ஆதரவும் ஊக்குவிப்பும் தொடர்ந்து இருத்தல் வேண்டும். (6) பொருளாதார அமைப்பில் நிலைபேற்றுத் தன்மையும் முற்போக்கான வளர்ச்சியும் இருத்தல் வேண்டும். (7) ஒரு நாட்டில் வாழும் பலதிறப்பட்ட—பல நிலைப்பட்ட—மக்களிடையே சமத்துவ உணர்வும், சமாதான மனப்பான்மையும் செழிப்பதற்கு ஏற்ற வசதிகள் இன்றியமையாதவை. (8) இவை அனைத்திற்கும் மேலாக, நாட்டு மக்களிடையே தங்களுடைய வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் தாம் சிறப்புற வேண்டுமென்ற துடிப்பும், அந் நிலையை அடைவதற்குரிய ஆர்வமும், சீரிய முயற்சியும் உந்துதல் ஆற்றல்களாக அமைய வேண்டும். மேற்கூறப்பெற்ற இயல்புகளுள் பெரும்பாலானவை, ஒரு நாட்டின் வரலாற்றில் அமைந்துள்ள காலக்

கட்டத்தையே, 'பொற்கால'மாக வரலாற்றுப் பேரறிஞர்கள் போற்றுகின்றனர். தமிழ்நாட்டின் வரலாற்றில், சங்ககாலமே இத்தகைய இயல்புகளில் பெரும்பாலானவற்றைக் கொண்டிருப்பதை இந் நூலில் பரக்கக் காணலாம்.

சங்ககால வரலாற்றின் தொடக்கக் காலத்தில் மோரியரின் படையெடுப்பு நடைபெற்றதைப் பார்க்கிறோம் (சங்ககாலம்— அரசியல், பக். 551). தமிழக வரலாற்று அரங்கில் களப்பிரர் என்னும் கூட்டத்தினரின் ஊடுருவல் சங்ககால வாழ்க்கை எனும் நாடகத்தைத் திரையிட்டு மறைத்துவிடுகிறது.

இவ் விரு எல்லைகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் உள் நாட்டுப் போர்கள் பல நிகழ்ந்துள்ளன. இவை வீர ஊழியின் இயல்புகளாகும். இவற்றை விதிவிலக்காகக் கொள்ளுவோமானால் பொற்காலத்தின் பிற இயல்புகள் யாவும் சங்ககால மக்கள் வாழ்வில் இணைந்தும் இழைந்தும் ஒளிர்வது எளிதில் புலனாகும். தமிழ்நாட்டு வரலாற்றில், சங்ககாலம் மேற்கண்ட சிறப்புகள் வாய்க்கப்பெற்ற பெருமைக்குரிய வரலாற்றுக் காலமாகப் புகழ் பூத்து விளங்குகிறது. இதனை, இந் நூலின் இரு பகுதிகளும் மெய்ப்பிக்கின்றன.

இரண்டாம் தொகுதியான இத் தொகுதி 'சங்ககாலம் — அரசியல்', 'சங்ககாலம் — வாழ்வியல்' என இரு பகுதிகளாக வெளியிடப்படுகிறது. முதற் பகுதியாகிய அரசியல் வரலாற்றில் பத்து இயல்கள் இடம் பெற்றுள்ளன. முதலிரு இயல்களில், அக் கால வரலாற்றிற்கு உதவக்கூடிய அடிப்படைச் சான்றுகள் தொகைவகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. அவற்றின் பயன் பாட்டைப்பற்றிய மதிப்பீடும் அவற்றிடையே இடம்பெற்றுள்ளது இவண் கருதத்தக்கதாகும். கால வரன்முறை 'வரலாற்றின் கண்'ணெனப் போற்றப்படுகிறது. இந்தக் கால வரன்முறையை வரையறுப்பதே பண்டைத் தமிழக வரலாற்றினை வரைவதில் உள்ள மாபெரும் சிக்கலாகும். பல்லவர் காலத்திற்கு முற்பட்ட தமிழக வரலாற்றில், ஒவ்வோர் அரசருடைய காலத்தையும் அறுதியிட்டு உறுதியாக வரையறுத்துக் கூறுவதற்குரிய சான்றுகள் போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை.

இவ்வகை இடர்ப்பாட்டை ஓரளவிற்குத் தவிர்ப்பதற்கே 'காலக் கணிப்பு' என்னும் மூன்றாம் இயல் முயலுகிறது. தமிழக வரலாற்றின் தொடக்கக் காலத்திற்குரிய மேல்எல்லையையும், கீழ்எல்லையையும் வரையறுக்கும் முயற்சி இவ்வியலில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. தக்க அகச்சான்றுகளையும் புறச்

சான்றுகளையும் கொண்டு இயன்றவரையில் நடுவுநிலைமை பிறழாத வகையில், கி.மு. நான்காம் நூற்றாண்டிற்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமே மதுரை நகரில் 'சங்கம்' என்னும் தொட்டிலில் தமிழ்மொழி பேணி வளர்க்கப்பட்ட சங்ககாலம் என வரையறை (அரசியல், பக். 131) செய்யப்பட்டுள்ளது. இக் காலக் கணிப்பினை முடிந்த முடிபாகக் கருத வேண்டுவதில்லை. சங்ககால வரலாற்றின் நோக்கினையும் போக்கினையும் புரிந்துகொள்ளுவதற்கு நடைமுறைக்குகந்த ஒன்றாக இதனைக் கொள்ளலாம்.

சங்க காலத்திய சேர, சோழ, பாண்டிய மன்னர்களுடைய வரலாறுகள் நான்கு, ஐந்து, ஆறாம் இயல்களில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. ஒரு குடியைச் சேர்ந்த அரசர்கள் பலருள் யார், எப்பொழுது ஆட்சிக்கு வந்தார்கள் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில், அரசர்களின் கால வரிசையைக் கிடைத்த சான்றுகளைக் கொண்டு கோடி காட்ட இக் கட்டுரைகளை எழுதிய ஆய்வாளர்கள் முயன்றுள்ளனர். மேலும், இப் பகுதிகளில் ஒவ்வோர் அரச மரபின் பல்வேறு குடிகளையும், கிளைகளையும் சேர்ந்த மன்னர்களின் வீரவரலாறும், கொடை, அளி, செங்கோல், ஆட்சித்திறன் முதலியனவும் தொகுத்துத் தரப் பட்டுள்ளன. ஏழாம் இயலில் கொங்கரைப்பற்றிய சிறப்புமிகு ஆராய்ச்சி இடம்பெற்றுள்ளது. கொங்கு நாட்டின் அமைப்பும் அழகும் அதனை ஆண்ட பல்வேறு குறுநில மன்னர்களின் வரலாறும், இக் காலத்தில் அங்கு வாழும் பழங்குடி மக்களின் பண்பாடும், இப் பகுதியில் தகுந்த ஆதாரங்களோடு தெளிவுறுத்தப்பட்டுள்ளன.

எட்டாம் இயலில் மூவேந்தர்களுடைய மேலாண்மைக்குட் பட்டு அவர்கட்கு உறுதுணையாக விளங்கிய குறுநில மன்னர்களின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது. பொதுவாகக் 'குறுநில மன்னர்கள்' எனச் சங்ககாலச் சிற்றரசர்களைச் சுட்டினாலும், அவர்களுள் பெரும்பாலோர் 'வேளிர் குடி'யினைச் சேர்ந்தவர்கள் என்பதை இவ்வாய்வு அறிவிக்கின்றது. சங்ககாலத் தமிழகத்தில் சிற்றரசுகளின் தோற்றம், இனக்குழுத் தலைவர்கள், படைத் தலைவர்கள், குறுநில மன்னர்கள் என்னும் தலைப்புகளில் சங்க காலச் சிற்றரசர்களின் வரலாறு வகைப்படுத்தப்பெற்றுளது. இக் குறுநில மன்னர்கள் ஆட்சிபுரிந்த அரசுகளின் நிலவியல் அமைப்பும், அவற்றுள் சிறப்புற்று விளங்கிய பேரூர்களின் நிலைமையும் ஒருவாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

சங்ககாலத்தில் நூற்று இருபதுக்கும் மேற்பட்ட சிற்றரசர்கள் சிறப்புற்று விளங்கினர். பல்வேறு புலவர்கள் அவர்களைப் போற்றிப் பாடியுள்ளனர். அப் புலவர்களை ஆதரித்த வேந்தரும் வேளிரும் பலராவர். இந்தப் புலவர்களுக்கும், வேந்தர்களுக்கும், வேளிர்களுக்கும் இடையே நிலவிய தொடர்பினை, நிலைக் களனாகக் கொண்டு சங்ககாலத்திய குறுநில மன்னர்களைப் பத்துத் தலைமுறைகளைச் சேர்ந்தவர்களாகக் கால அடைவு படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சங்ககாலத் தமிழ்ப் பண்பாட்டிற்குக் குறுநில மன்னர்களின் கொடை, அடுத்துக் கோடி காட்டப்பட்டுள்ளது.

ஒன்பதாம் இயலில், சங்ககால ஆட்சிமுறையின் மாட்சி விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம். நாடும் நாட்டுப் பிரிவுகளும் பற்றிய செய்திகள், அரசன், அரசச் சின்னங்கள், அலுவலர், போர்முறை, அரசியல், பழக்கவழக்கங்கள், சங்ககால ஊராட்சி முறை போன்ற பகுதிகள் இவ் வியலில் இடம்பெற்றுள்ளன. இதை யடுத்துள்ள 'இலங்கையில் தமிழர்' என்னும் பத்தாம் இயலில், சங்ககாலத் தமிழகத்திற்கும் இலங்கைத்தீவிற்கும் இடையே நிலவிய அரசியல், வாணிகப் பண்பாட்டுத் தொடர்புகள் தகுந்த சான்றுகளைக் கொண்டு தெளிவுறுத்தப்பட்டுள்ளன.

இத் தொகுதியின் இரண்டாம் பகுதியாகிய 'வாழ்விய'லில், ஒன்பது இயல்கள் உள்ளன. 'சமுதாயம்' என்னும் பகுதியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகையான நிலங்களில் வாழ்ந்த மக்களுடைய வாழ்க்கை முறைகள் விவரிக்கப் பட்டுள்ளன. சங்ககாலத்திய தமிழ்ச்சமுதாயம், இனக்குழு வழிப் பட்ட சமுதாயம் அன்று; நிலமானிய முறையில் உருவாகி வேளாண்மைப் பொருளியலைப் போற்றி வளர்த்த பெருமைக்குரிய நிலவுடைமைச் சமுதாயம் என்னும் கருத்தினை நிலைநாட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனுடன் நாகரிகவாழ்க்கை யின் வளர்ப்புப் பண்ணைகளான நகரங்கள், சங்ககாலத் தமிழகத் தில் பெற்றிருந்த பங்கு புலப்படுத்தப்படுகிறது. 'பொருளியலும் வாணிகமும்' என்னும் இரண்டாம் இயலில் கடல் வாணிகத்தின் சிறப்பும், அதனால் நாட்டில் உண்டான செல்வச் செழிப்பும் எடுத் துரைக்கப்பட்டுள்ளன. மூன்றாம் இயலான 'நாகரிகமும் பண்பாடும்' என்னும் பகுதி, சங்ககாலத் தமிழ்மக்களின் நாகரிகச் சிறப்பினை வகைப்படுத்திக் காட்டுகிறது. அவை இன்றைய தமிழர் வாழ்வில், எவ்விதம் பொலிவுறுகின்றன என்பதும் இடை யிடையே எடுத்தியம்பப்பெற்றுள்ளன. பண்டைத் தமிழரின் வாழ்வியல் நோக்கமும், அறவேட்கையும், மனிதகுல நலனை

நாடும் அனைத்துலகச் சிந்தனைப் போக்கும் சிறந்த முறையில் மதிப்பீடு செய்யப்பெற்றுள்ளன.

சங்ககாலத் தமிழ்மக்களின் அறிவியல் கோட்பாடுகளும் மெய்ப்பொருளியல் சிந்தனைகளும் அடுத்துள்ள நான்கு, ஐந்தாம் இயல்களில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ்மக்கள் போற்றி வளர்த்த கலைகளின் சிறப்பியல்புகள் ஆறாம் இயலில் தெளிவாக்கப்பட்டுள்ளன. தமிழிசைக் கலையின் சீரும் சிறப்பும் ஏழாம் இயலிலும், கட்டடக் கலையின் மாட்சியும், நகர அமைப்பு முறைகளின் பொறியியல் நுட்பங்களும் எட்டாம் இயலிலும் விளக்கப்படுகின்றன. இத் தொகுதியை நிறைவு செய்யும் பகுதியாகச் 'சிந்துவெளி நாகரிகமும் பண்டைத் தமிழரும்' என்னும் ஒன்பதாம் இயல் அமைக்கப்பட்டுள்ளது. 'சிந்துவெளி எழுத்துகள்' என்னும் பிற்சேர்க்கை வருங்கால ஆய்வாளர்களைப் பெரிதும் கவரக்கூடிய வகையில் அமைந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் வாய்வுகள் பெரிதும் வருணனை முறையில் அமைந்துள்ளன. எனினும், சங்ககாலக் கருத்துகளையும், கருத்து வேற்றுமைக்குரிய செய்திகளையும் விளக்கும் இடங்களில் பகுப்பாய்வு முறையும் தொகுப்பாய்வு முறையும் பின்பற்றப்பட்டுள்ளன. நுட்பமான உணர்வுகளும் எண்ணங்களும் தகுந்த முறையில் இக் கால ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் விளக்கப்பெற்றுள்ளன. கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும், வரலாற்றாசிரியர்களும் பண்டைத் தமிழரின் வாழ்வையும் வரலாற்றையும்பற்றித் தெரிவித்துள்ள கருத்துகள் பலவாகும். அவற்றுள் பொருத்தமானவை ஆராயப்பட்டுத் தேவையான இடங்களில் தெளிவுறுத்தப்பட்டுள்ளன.

கருத்துவேற்றுமைக்கு இந் நூலில் இயன்றவரையில் மதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. முற்றிலும் உடன்பட இயலாத கருத்துகளைப் பிடிவாதமான முரண்பாடுகள் எனத் தோன்றாத வகையில் 'குறிப்பிட்ட ஓர் ஆசிரியரின் கருத்து இது' என நயமாக எடுத்துரைக்கும் முறை பின்பற்றப்பட்டுள்ளது. இரண்டோர் இடங்களில் தவிர்க்க முடியாத முரண்பாடுகள் முனைப்பாக உள்ளன. இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு, கயவாகுவின் ஆட்சியை அடிப்படையாகக்கொண்டு துணியப்பட்டுள்ள சேரன் செங்குட்டுவனுடைய காலமாகும். எண்பது ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையின் வரலாற்றை முறைப்படுத்தி எழுதியவர் டாக்டர் டென்னன்ட் என்ற ஆங்கில அறிஞராவார். முப்பது ஆண்டு

களுக்கு முன்னர், புதிய ஆராய்ச்சி முறைகளின் முடிவுகளைக் கொண்டு இலங்கையின் வரலாற்றை டாக்டர் பரணவிதானே என்னும் சிங்கள அறிஞர் வரைந்துள்ளார். இவ் விருவரும் கயவாகுவின் ஆட்சிக்காலத்தைப்பற்றிக் கருத்துவேறுபாடு கொண்டுள்ளனர். இவ் விருவருடைய கருத்துகளையும் இந் நூலிற்கு ஆய்வுரை வழங்கிய அறிஞர் இருவர் ஆதாரமாகக் கொண்டுள்ளனர்.

இதைப்போன்று சோழ மன்னனாகிய கரிகாலன் ஒருவனா, இருவரா என்பதிலும் முரண்பாடு உள்ளது. சங்ககாலச் சோழ மன்னர்களின் வரலாற்றை எழுதிய மூதறிஞர், கரிகாற்சோழன் ஒருவனே எனக் கூறுவார் (அரசியல், பக். 288-89). ஆனால், சங்ககாலக் 'குறுநில மன்னர்கள்' என்னும் ஆய்வுரையை எழுதிய அறிஞர் கரிகாலன் I, கரிகாலன் II (திருமாவளவன்) என்னும் இருவர் இருந்தனர் என்று இலக்கியச் சான்றுகளைத் தந்துள்ளார் (அரசியல், பக். 457-90). மாறுபட்ட இவ் விரு கருத்துகளின் வன்மை மென்மைகளை ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வரவேண்டிய பொறுப்பினை வருங்காலத் தலைமுறையினரிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது.

சங்ககால வரலாற்றிற்குப் பெரிதும் சங்க இலக்கியங்களையே ஆதாரமாகக் கொள்ளவேண்டிய இன்றியமையாமை இன்னும் இருந்துவருகிறது. சங்க இலக்கியங்களுள், அரசியல் வரலாற்றிற்கு உதவும் செய்திகள் முழுமையாகக் கிடைக்கவில்லை. எனவே, கால வரன்முறைக்குட்பட்ட முறையான அரசியல் வரலாற்றை வரைய இயலாமையைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனால், சங்ககாலச் சமுதாய, பண்பாட்டு வரலாற்றைச் செம்மையாகவும் முழுமையாகவும் உருவாக்கித் தருவதற்கேற்ற முயற்சிகள் யாவும், இந் நூலில் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. இந்த வரலாற்று நூலிற்குச் சங்ககால இலக்கண இலக்கியங்களான தொல்காப்பியமும், பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் மட்டும் அல்லாமல், சங்கம் மருவிய காலத்திய திருக்குறளும், காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூட அடிப்படைச் சான்றுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. சங்கப் பாடல்களைத் தொடர்ந்து தோன்றிய இலக்கியங்களாக இவை இருக்கின்றன. இவையும் சங்ககாலத் தமிழ் மக்களின் வாழ்க்கையையும் மரபையும் பெரிதும் வெளிப்படுத்துகின்றன. பல்லவர் காலத்திற்கு முற்பட்ட வாழ்க்கைப் பாங்கினை இவை உணர்த்துகின்றமையால், சங்ககால வரலாற்றிற்குரிய அடிப்படைச் சான்றுகளாக இவை கொள்ளப்பட்டன.

சங்ககாலத்திய தமிழ் வேந்தர்களின் ஆட்சி நலிவுற்றமைக் குரிய காரணங்கள் இந் நூலில் தொகுத்துக் கூறப்பெறவில்லை. ஆகவே, பதிப்புரையில் அவற்றைச் சுருக்கிக் கூறவேண்டிய கடப்பாடு உள்ளது. மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் மண்ணாசை, புகழாசை மேற்கொண்டு தங்களுக்குள் ஓயாமல் போரிட்டு வந்தனர். பதிற்றுப்பத்தும் புறநானூறும் இவ்விதம் நடைபெற்ற போர்களைப் பெரிதும் விரித்துரைக்கின்றன. இதனால், காலப்போக்கில் முடியுடை வேந்தர்களும் குறுநில மன்னர்களும் ஒன்றாகச் சேர்ந்து பகைவரை எதிர்த்து வெற்றி பெறும் உயிராற்றலை இழந்தனர். பல்குழுவும் பாழ்செய்யும் உட் பகையும் மூவேந்தரின் ஆட்சியைச் சீர்குலைக்கும் வேர்ப் புழுக்களாக மாற்றம் அடைந்தன. ஓயாத உள்நாட்டுப் போர் களால், உழவுத் தொழிலும் கைத்தொழில்களும் நலிந்தன. உற்பத்தி குன்றி வாணிக முயற்சிகள் கைவிடப்பட்டன. இச் செய்திகள் சிறுபாணாற்றுப்படை என்னும் சங்க நூலில் இலக்கிய நயம் தோன்ற எடுத்தாளப்பெற்றுள்ளன. அப் பாடலில் 'தமிழ் நிலைபெற்ற மதுரையும் வறிதே, உறந்தையும் வறிதே, வஞ்சியும் வறிதே' என்றும், 'வள்ளல்களாகிய பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி முதலிய குறுநில மன்னர்களும் இவ் வுலகை விட்டு மறைந்தனர்' என்றும் வருத்தத்தோடு கூறப்பெற்றுள்ளன. இவ் விலக்கியச் சான்று சங்ககாலத்தின் இறுதியில் தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதார நிலையைத் தெற்றென எடுத்துக்காட்டு கின்றது.

மற்றொருபுறம் இயற்கையின் சீற்றமும் தமிழகத்தைத் தாக்கியது. தொடர்ந்து பல ஆண்டுகள் வான் பொய்த்தது. இதனால் பஞ்சமும் பட்டினியும் சங்ககாலத்தின் இறுதிப் பகுதியில் தலைவிரித்து ஆடத் தொடங்கியதைக் காண்கிறோம்.

இந் நூலுக்குத் தேவையான அடிக்குறிப்புகள் ஒவ்வொரு பக்கத்திலும் தரப்பட்டுள்ளன. நூலின் இடையே நாட்டுப் படங்கள் ஐந்து சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் இயலுக்கும் கருவிநூல் பட்டியலும் பொருட்குறிப்பு அகரமுதலியும் படிப்போ ருக்குப் பயன்படும் வகையில் இணைக்கப்பட்டுள்ளன. இந் நூலை சிறந்த முறையில் வெளியிடுவதற்கு உதவிய தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தாருக்கும் இவ்விரண்டு பகுதிகளையும் சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய அச்சகத்தார்களுக்கும் வரலாற்றுக் குழுவின் நன்றி என்றும் உரித்தாகும்.

தமிழ்நாட்டு வரலாற்று வெளியீட்டகம்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
குறளகம், சென்னை-5

குறுக்க விளக்கம்

அகம்.	அகநானூறு
ஐங்குறு.	ஐங்குறுநூறு
கலி.	கலித்தொகை
குறிஞ்சிப்.	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	குறுந்தொகை
சிலப்.	சிலப்பதிகாரம்
சிறுபாண்.	சிறுபாணாற்றுப்படை
திவ். பிர.	திவ்வியப் பிரபந்தம்
தொல்.	தொல்காப்பியம்
நற்.	நற்றிணை
நன்.	நன்னூல்
நாலடி.	நாலடியார்
பட்டினப்.	பட்டினப்பாலை
பதி.	பதிகம்
பதிற்.	பதிற்றுப்பத்து
பரிபா.	பரிபாடல்
பன்.ப.பா.	பன்னிருபடலப் பாயிரம்
புறம்.	புறநானூறு
பெருந்.	பெருந்தொகை
பெரும்பாண்.	பெரும்பாணாற்றுப்படை
பொருநர்.	பொருநராற்றுப்படை
மணிமே.	மணிமேகலை
மதுரைக்.	மதுரைக்காஞ்சி
மலைபடு.	மலைபடுகடாம்
முருகு.	திருமுருகாற்றுப்படை
முல்லைப்.	முல்லைப்பாட்டு

A.R.E.	Annual Report on Epigraphy
I.E.	Annual Report on Indian Epigraphy
M.E.R.	Madras Epigraphy Report
S.I.E.	Annual Report on South Indian Epigraphy
S.I.I.	South Indian Inscriptions

நிலப்படங்கள்

	பக்கம்
சங்ககாலச் சேரநாடு ...	219
சங்ககாலச் சோழநாடு ...	270
சங்ககாலப் பாண்டியநாடு ...	345
சங்ககாலக் கொங்குநாடு ...	394
சங்ககாலப் பாண்டிய நாடும் ஈழநாடும் ...	593

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு (1975-79)

*1. சைவசித்தாந்த கலாநிதி
ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ... தலைவர்

*2. திரு. மயிலை சீனி. வேங்கடசாமி ... உறுப்பினர்
ஆராய்ச்சிப் பேரறிஞர்.

3. திரு. இரா. நாகசாமி, எம்.ஏ., ... உறுப்பினர்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை-28.

*4. திரு. அ. இராகவன், ... உறுப்பினர்
61, பெருமாள் வடக்கு வீதி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

5. திரு. கா. அப்பாத்துரை எம்.ஏ. (ஆங்கிலம்),... உறுப்பினர்
எம்.ஏ. (தமிழ்), விசாரத் (இந்தி).
அன்னை இல்லம்,
8, அப்பாத்துரையார் தெரு,
சென்னை-18.

6. திரு. சி. ஈ. இராமச்சந்திரன், ... உறுப்பினர்
எம்.ஏ., எம்.லிட்.,
இணைப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5.

7. திரு. க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ. (தமிழ்), ... உறுப்பினர்
எம்.ஏ. (வரலாறு), எம்.லிட்.,
டிப்.இன்.லிங்.,
இணைப் பேராசியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113.

8. திரு. கி. ரா. அனுமந்தன், எம்.ஏ., ... உறுப்பினர்
தலைமை வரலாற்றுப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை-5.

9. திரு. கொண்டல் சு. மகாதேவன், ...உறுப்பினர் - செயலாளர்
பி.எஸ்சி., எம்.ஏ.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
குறளகம், சென்னை-1.

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு (1979-82)

*1. டாக்டர் கே. கே. பிள்ளை. ... தலைவர்
எம்.ஏ., பிஎச் டி., டி.லிட்.,
இயக்குநர், மரபுவழி-பண்பாட்டு நிலையம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5.

2. டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன், ... உறுப்பினர்
எம்.ஏ., எம்.லிட் , பிஎச் டி ,
பேராசிரியர், வரலாற்றுத்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5.

3. டாக்டர் க. த. திருநாவுக்கரசு. ... உறுப்பினர்
எம்.ஏ., எம்.லிட்.. பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113.

4. டாக்டர் கே. சுரேஷ்பிள்ளை, ... உறுப்பினர்
எம்.ஏ., பிஎச்.டி.,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113.

5. டாக்டர் கு. நம்பி ஆரூரன், ... உறுப்பினர்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
பேராசிரியர், வரலாற்றுத் துறை,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-21.

6. டாக்டர் மா. நன்னன். ... உறுப்பினர்—செயலாளர்
எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
குறளகம், சென்னை-1.

---

* இந் நூல் இறுதிநிலை பெறுமுன்னர் இயற்கை எய்திவிட்டனர்.

தமிழ்நாட்டு வரலாற்று வெளியீட்டகம்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. எ. சுப்பராயலு—20-7-72 முதல்
   31-10-1978 வரை
2. திரு. செங்கைப் பொதுவன்—14-8-1972 முதல்
   30-9-1980 வரை
3. திரு. ந. க. மங்களமுருகேசன்—2-11-1973 முதல்
   17-6-1974 வரை
4. திரு. கோ. தங்கவேலு—9-11-1973 முதல்
   2-4-1979 வரை
5. திரு. பொன். சுப்பிரமணியம்—22-7-1977 முதல்
   31-10-1980 வரை
6. திரு. தி. வீரப்பன்—11-7-1980 முதல்
7. டாக்டர் அ. கிருட்டிணசாமி—14-7-1980 முதல்

கட்டுரையாளர்கள்

1. அடிப்படைச் சான்றுகள் - I
   டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன்,
   பேராசிரியர், வரலாற்றுத்துறைத் தலைவர்,
   சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5

2. அடிப்படைச் சான்றுகள் -II
   ஆராய்ச்சிப் பேரறிஞர்
   மயிலை சீனி. வேங்கடசாமி

3. காலக் கணிப்பு
   பேராசிரியர் பொன். சுப்பிரமணியம்,
   இராசேசுவரி-வேதாசலம் கலைக்கல்லூரி, செங்கற்பட்டு

4. சேரர்
   ஆராய்ச்சிப் பேரறிஞர்
   மயிலை சீனி. வேங்கடசாமி

5. சோழர்
   ஆராய்ச்சிப் பேரறிஞர்
   மயிலை சீனி. வேங்கடசாமி

6. பாண்டியர்
   ஆராய்ச்சிப் பேரறிஞர்
   மயிலை சீனி. வேங்கடசாமி

7. கொங்கர்
   டாக்டர் அ. கிருட்டிணசாமி,
   பதிப்பாசிரியர், தமிழ்நாட்டு வரலாற்று வெளியீட்டகம்,
   தமிழ் வளர்ச்சி இயக்ககம், குறளகம், சென்னை-1

8. குறுநில மன்னர்கள்
   டாக்டர் க. த. திருநாவுக்கரசு,
   இணைப் பேராசிரியர்,
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113

9. ஆட்சிமுறை
   டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன்,
   பேராசிரியர், வரலாற்றுத்துறைத் தலைவர்,
   சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5

10. இலங்கையில் தமிழர்
    ஆராய்ச்சிப் பேரறிஞர்
    மயிலை சீனி. வேங்கடசாமி

பொருளடக்கம்

இயல் 1

அடிப்படைச் சான்றுகள்–I

			பக்கம்
1.	இலக்கியம்	...	1
2.	அயல்நாட்டார் குறிப்புகள்	...	21
3.	தொல்பொருள் சின்னங்கள்	...	35

இயல் 2

அடிப்படைச் சான்றுகள்–II

	கல்வெட்டுகள்	...	37

இயல் 3

காலக் கணிப்பு

	முன்னுரை	...	92
	புறச்சான்றுகள்	...	100
	மரபுவழிச் செய்திகள்	...	103
	காலம்	...	108
	முடிவுரை	...	132

இயல் 4

சேரர்

	சொல்லும் பொருளும்	...	133
	நாடும் எல்லைகளும்	...	134
1.	சேர அரசர்கள்	...	135
	உதியஞ்சேரல்	...	137
	நெடுஞ்சேரலாதன்	...	140
	பல்யானைச் செல்கெழு குட்டுவன்	...	152

		பக்கம்
	நார்முடிச் சேரல் ...	161
	செங்குட்டுவன் ...	167
	ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ...	179
	உதியன் கால்வழி அரசர்கள் ...	184
	அந்துவன் ...	189
	செல்வக்கடுங்கோ வாழியாதன் ...	192
	தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை ...	199
	இளஞ்சேரல் இரும்பொறை ...	207
	அந்துவன் கால்வழி அரசர்கள் ...	214
2.	பிற சேர அரசர்கள் ...	219
3.	சேர அரசப் புலவர்கள் ...	245

இயல் 5

சோழர்

சோழநாடு ...	249
சோழர் குடியின் தொன்மை ...	256
சோழர் குடிப்பெயர் ...	264
கரிகாலனுக்கு முற்பட்ட சோழ வேந்தர்கள் ...	267
கரிகால் பெருவளத்தான் ...	287
நலங்கிள்ளி (சேட்சென்னி) ...	301
நெடுங்கிள்ளி (காரியாற்றுத் துஞ்சியவன்) ...	307
கிள்ளிவளவன் I (குளமுற்றத்துத் துஞ்சியவன்)...	310
கிள்ளிவளவன் II (குராப்பள்ளித் துஞ்சியவன்)...	318
இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ...	321
சோழன் செங்கணான் ...	323
பிற சோழ அரசர்கள் - I ...	329
பிற சோழ அரசர்கள் - II ...	334
சோழ வேந்தரின் கால அடைவு ...	338

இயல் 6

பாண்டியர்

		பக்கம்
1.	அயலகக் குறிப்புகளால் அறியப்படும் பாண்டிய மன்னர்கள் ...	343
2.	செழியன் என்னும் பெயருடைய அரசர்கள் ...	354
3.	மாறன் என்னும் பெயருடைய அரசர்கள் ...	364
4.	வழுதி என்னும் பெயருடைய அரசர்கள் ...	369
5.	பாண்டியன் என்னும் பெயருடைய அரசர்கள்...	378
6.	பழங்கதைகளால் அறியப்படும் அரசர்கள் ...	384

இயல் 7

கொங்கர்

கொங்குநாட்டின் எல்லைகள் ...	388
நாட்டுப் பிரிவுகள் ...	392
கொங்குநாட்டின் பழைமை ...	397
கொங்குநாட்டு வள்ளல்களும் சிற்றரசர்களும் ...	398
மோரியரும் கோசரும் ...	410
கொங்குநாட்டின் வாணிகம் ...	417
கொங்குநாட்டுச் சமூக நிலை ...	421

இயல் 8

குறுநில மன்னர்கள்

குறுநில மன்னர்கள் ...	427
இனக்குழுத் தலைவர்களும் வட்டாரச் சிற்றரசர்களும் ...	447
வேளிரும் வேந்தரும் ...	458
படைத்தலைவரும் படைவீரரும் ...	460
சிறு சிற்றரசர்கள் ...	461
மாபெரும் குறுநில மன்னர் ...	463
குறுநில மன்னர்களின் கால அடைவு ...	484

பக்கம்

குறுநில மன்னரின் மாட்சி ... 511

பிற்சேர்க்கை ... 519

இயல் 9

ஆட்சிமுறை

முன்னுரை ... 522

அரசன் ... 530

அலுவலர் ... 558

போர் ... 565

நாட்டின் செல்வம் ... 582

முறை வழங்கல் ... 583

சங்ககால ஊராட்சி முறை ... 585

இயல் 10

இலங்கையில் தமிழர்

சங்ககாலத்து இலங்கை ... 592

இலங்கையின் பழங்குடி மக்கள் ... 599

விசயன் வருகை ... 603

சிங்களவர் ஆட்சி ... 606

உரோகண நாட்டில் பாண்டியர் ஆட்சி ... 608

அநுரையில் தமிழர் ஆட்சி ... 615

உரோகண நாட்டில் சிங்கள அரசர் ... 620

ஐந்து தமிழர் ஆட்சி ... 624

மீண்டும் சிங்களவர் ஆட்சி ... 626

இலம்பகன்னர் ஆட்சி ... 629

கஜபாகு I ... 631

சங்ககாலத்து இலங்கையில் தமிழர் வாணிகம் ... 633

கருவிநூல் பட்டியல் ... 625

பொருட்குறிப்பகராதி ... 655

தமிழ்நாட்டு வரலாறு

சங்ககாலம் — அரசியல்

இயல் 1

அடிப்படைச் சான்றுகள்-I

1. இலக்கியம்

அகத்தியம்

மூச்சங்கங்களுக்கும்[1] பொதுவான முதல் இலக்கண நூல் அகத்தியமாகும். தொல்காப்பியத்தின் மூலநூலும் இதுவேயாம். இதன் ஆசிரியர் அகத்தியர். அகத்தியர் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைமையேற்று ஆக்கம் தந்தாரென்பதைக் கம்பர் 'தென்தமிழ் நாட் டகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம்' எனக் குறிப் பிடுதல் காண்க. வால்மீகியும் தமது இராமாயணத்தில் அகத்தி யரைப்பற்றிக் குறிப்பிடுகிறார். சீதையைச் தேடத் சென்ற வானரரை நோக்கிச் சுக்கிரீவன் 'பொதிகை மலையில் அகத்திய முனிவரின் தமிழ்ச்சங்கம்[2] உள்ளது; அதனைக் காண்பீர்' எனக் கூறுவதாக வால்மீகி சுட்டிக் காட்டுவதிலிருந்தும், சிவபெருமான் பார்வதியின் திருமணம் கைலை மலையில் நடந்தபோது தேவரும் யாவரும் கைலைமலையில் திரண்டதால் வடக்குத் தாழ்ந்து, தெற்கு உயர்ந்தபோது வடக்கையும் தெற்கையும் சமன்செய்ய அகத்தியரைத் தெற்கேயுள்ள பொதியமலைக்கு அனுப்பியபோது, அகத்தியர் அவ்விடத்தில் தமிழ்ச்சங்கத்தை நிறுவினாரெனும் தொன்மமும், சிவனார் தமிழை அகத்தியருக்கும், வடமொழியைப் பாணினிக்கும் அருளினாரெனும் தொன்மமும் 'புராணங்களே' எனத் தள்ளப்படாமல், சங்கத்தின் தொன்மையை அறிய ஓரளவு ஆதாரமாய்த் திகழ்வதை உணரலாம்.

அகத்தியரே தமக்கு முன் பல இலக்கிய நூல்களிருந்தன வென்றும் அவற்றிற்கான இலக்கணத்தையே தாம் வகுத்ததாகவும்

---

1 முதற் சங்கம் தென்மதுரையிலும் இடைச்சங்கம் கவாடபுரத்திலும் கடைச் சங்கம் மதுரையிலும் இருந்தனவெனக் கொள்ளலாம்.

2 சங்கம் என்னும் சொல் சங்கத்தின் தலைவராகிய அகத்தியர் இருந்த இடத்தைக் குறிக்கும்.

கூறுவதிலிருந்து[3] சங்க இலக்கியங்களின் தொன்மையும், அகத்தியமும் அவற்றுள் ஒன்றாவதையும் உய்த்துணரலாம்.

இவ்வாறு அகத்தியம் சங்கத்தைப்பற்றி அறிய ஒரு சான்றாகின்றது.

தொல்காப்பியம்

இன்று நமக்குக் கிடைத்துள்ள பழம்பெரும் இலக்கண நூல் தொல்காப்பியமாகும். ஆயினும் இதற்கும் முன்னரே தமிழில் பல நூல்களிருந்தன. அவற்றையெல்லாம் கற்றுத் தேர்ந்தே தொல்காப்பியர் தொல்காப்பியத்தை உருவாக்கினார் எனத் தெரிகிறது. தொல்காப்பியத்திற்கு அகத்தியமே முதல் நூல் என்பர்.[4]

ஆயின் தொல்காப்பியத்தின் காலம் யாது ?

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பாயிரம் சுட்டும் தொடருக்கு, 'ஐந்திரம் என்னும் இலக்கண நூலறிவு நிரம்பிய தொல்காப்பியன்' என்பது பொருள். ஐந்திரம் என்பது ஒரு வடமொழி நூல். இது பாணினிக்கு முன்னரே அம்மொழியில் இருந்ததாகும். பாணினியின் காலம் கி. மு. ஆறாம் நூற்றாண்டு என்பர். எனவே, தொல்காப்பியர் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கும் முந்தியதாகக் கொள்ள இடமுண்டு. இக் கொள்கை ஏற்புடைத்தாயில்லை.

தொல்காப்பியம் கடைச்சங்க காலத்திற்கும் முற்பட்டது எனக் கூறலாம். இதனைத் தொல்காப்பியத்தில் வரும் சொல்லாட்சிகளுக்கும், கடைச்சங்க நூல்களில் வரும் சொல்லாட்சிகளுக்கு மிடையே காணப்பெறும் ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் ஒப்பிட்டு அறியலாம்.

சகரமெய் அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிரெழுத்துகளுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வாராது என்பது தொல்காப்பியம்

---

3 'இலக்கியம் இன்றேல் இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்.'

4 'ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்' (பன். ப.பா.)

வகுத்த நெறியாகும்.[5] ஆனால், இந் நெறியைக் கடைச்சங்கப் புலவர்கள் கடைப்பிடிக்கவில்லை. புறநானூற்றில் சடை, சமம், சகடம் முதலிய சொற்களும், பத்துப்பாட்டில் சவட்டி, சலம், சந்து முதலிய சொற்களும், பதிற்றுப்பத்தில் சவட்டம் என்னும் சொல்லும் பயின்றுள்ளன.

ஞகரமெய் ஆ, எ, ஒ என்னும் மூன்று உயிரோடு மட்டுமே கூடி மொழிக்கு முதலில் வரும் என்பது தொல்காப்பியர் நெறி.[6] ஆனால், அகநானூற்றிலும் புறநானூற்றிலும் இந் நெறி கடைப் பிடிக்கப் பெறவில்லை. யகர மெய் 'ஆ' என்னும் உயிரோடு மட்டுமே மொழிக்கு முதலில் வரும் என்பது தொல்காப்பியர் நெறி யாகும். ஆனால் 'யவனர்' என்னும் சொல் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்பெறுகின்றது. 'கள்' என்னும் விகுதி அஃறிணைப் பன்மையை மட்டுமே சுட்டுவதாகும் என்பது தொல் காப்பியம் கண்ட நெறி. ஆனால், இஃது உயர்திணைப் பன்மை சுட்டுவதாய்ச் சங்க இலக்கியங்களில் வருகிறது. தொல்காப் பியத்தில் கையாளப் பெற்ற அதோளி, இதோளி, உதோளி, எதோளி ஆகிய சொற்கள் வழக்கொழிந்துவிட்டன. இவை சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை.

வருணன், வேந்தன், மாயோன், சேயோன் ஆகிய பெயர்கள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. காலப்போக்கில் கடைச் சங்க நூல்களில் கண்ணன், இந்திரன், முருகன், சிவன், பலதேவன் ஆகிய பெயர்கள் சிறப்பெய்தி நின்றன.

எண்ணிக்கையைக் கணக்கிடும் முறையைத் தொல்காப் பியம் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், நூறாயிரம் வரைதான் குறிப்பிடுகிறது.[7] இதற்குமேல் எண்ணும் வகை இதில் காண வில்லை. ஆனால், புறநானூறு, பரிபாட்டால் ஆயிரத்திற்குமேல் கோடி, நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், தாமரை, வெள்ளம் ஆகியவற்றைக் கணக்கிடும் எண்ணல் அளவை அறியப்படுகிறது.[8]

மேற்சுட்டிய எடுத்துக்காட்டுகளிலிருந்து தொல்காப்பியம் கடைச்சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டதென்பதும் சங்கத்தைப் பற்றி அறிய இன்றியமையாத அடிப்படைச் சான்று என்பதும் புலனாகின்றன. ஆகவே, இஃது இடைச்சங்க காலத்தைச் சேர்ந்த நூலாகுமென முடிவு செய்கிறோம்.

---

5 தொல். எழுத்து. 62
6 ,, 64
7 ,, 437-71
8 புறம். 18, பரிபா. 2 : 13-14

ஆயின், இடைச்சங்க காலம் எது ? மகாவம்சம், தீபவம்சம், இராஜாவளி ஆகிய ஈழநாட்டு நூல்களில் மூன்று கடற்கோள்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை முறையே கி.மு. 2378, 504, 306 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்தனவாக அறிகிறோம். கடைசியாகக் கி.மு. 306-ல் நிகழ்ந்த கடற்கோளின்போதுதான் இடைச்சங்கத் தலைநகரமான கதவபுரம் (கபாடபுரம்) அழிந்தது. இதற்குப் பின்னரே, கடைச்சங்கத் தலைநகரமான இன்றைய மதுரை தோற்றுவிக்கப்பட்டது. இதனை இறையனார் அகப் பொருள் உரையாலும் அறியலாம். தொல்காப்பியம் இடைச்சங்க காலத்ததென்றால், கி.மு. 306-க்கு முன்புதான் இஃது அமைக்கப் பெற்றிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. எனவே, இதன் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டாகலாம்.

இவ்வாறு, காலத்தால் மூத்த இலக்கண நூலாகிய தொல் காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங் களைக் கொண்டுள்ளது. இதில் எழுத்து, சொல் ஆகிய இரண்டு அதிகாரங்களும் கடைச்சங்க காலத்திற்கும் முற்பட்டதென்றும், பொருளதிகாரம் மட்டும் கடைச்சங்க காலத்ததென்றும் கூறுவாரு முளர்.[9] இக் கூற்றின் அடிப்படையில்தான் தொல்காப்பியம் கடைச் சங்கத்திற்கும் சற்று முற்பட்டதென்றும், கி. மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்றும் சிலர் கருதுகின்றனர்.

தொல்காப்பியர் தமது நூலில் பார்ப்பனரின் (பிராமணர்) கடமைகளை விரித்துரைக்கக் காண்கிறோம்.[10] இதிலிருந்து இவர் காலத்திலேயே பார்ப்பனர் தமிழகத்தில் குடியேறி நிலை பெற்றிருந்ததை அறிகிறோம். இவர்கள் கி. மு. 6ஆம் நூற்றாண் டுக்கும் கி. மு. 4ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழகத்திற்கு வந்தேறியிருக்கலாம் என்பது அறிஞரின் முடிபாகும்.[11]

இத்தகைய கருத்து வேறுபாடுகளை ஊன்றி நோக்கித் தொல் காப்பியத்தின் காலம் தோராயமாகக் கி. மு. நான்காம் நூற்றாண் டெனக் கூறி அமையலாம். ஆகவே, கால வரன்முறைக்கடங்காத அகத்தியம், கி. மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல் காப்பியம் ஆகிய இரு பெரும் இலக்கண நூல்களும் சங்க காலத்தைப் பற்றி அறிய அடிப்படைச் சான்றுகளாகின்றன.

---

9 Chelvanayagam, V., *Some Problems in the Study of Tolkappiam in relation to Sangam Poetry*, Proceeds. of the First International Tamil Conference – Seminar, Kuala Lampur, 1966. Vol. II, p. 43.

10 தொல். பொருள். கற்பு. 36.

11 Pillay, Dr. K. K., *A Social History of the Tamils*, Vol. I. Second Edn. 1975, p. 120

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களாய்ப் பிரிக்கப்பட்டுள்ள தென்பதைக் கூறினோம். பொருளதிகாரம் அகத்திணை இயல் முதல் மரபியல் ஈறாக ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. தமிழரின் அகம், புறம் பற்றிய வாழ்க்கை நெறிகளைப் படம்படித்துக் காட்டுவது பொருளதிகாரமே. ஆணும் பெண்ணும் அகமொத்து நடத்தும் காதல் வாழ்வைப்பற்றிக் கூறுவது அகத்திணையெனவும், அரசியல், போர் போன்று மற்றவற்றில் செயல்படும் பண்பு நெறியே புறத்திணையெனவும் பகுக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொன்றுக்கும் உலகியல் நெறிகள் வகுக்கப்பெற்றுள்ளன. ஐவகை நிலத்திற்கும் பொருந்தும் ஒழுக்க நெறிகளைத் தொல்காப்பியம் கூறுகிறது.

சமூகத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வகை மக்கள் பிரிவினர் இருந்ததையும், மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய நான்கு தெய்வங்களையும் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நானில மக்கள் வழிபாடு செய்ததையும் தொல்காப்பியம் கூறுகிறது.[12] பாலைக்குக் கொற்றவை வழிபடு தெய்வமானாள். ஞாயிறு, திங்கள், தீ ஆகிய இயற்கைப்பொருள்களைத் தமிழர் வழிபட்டனரென்பதைத் தொல்காப்பியம் கூறுகிறது.

வாழ்வாங்கு வாழ்ந்த மக்கள் நல்ல செயல்களைத் தொடங்குவதற்கு நாள் பார்த்து, சகுனம் பார்த்துத் தொடங்கினரென்பதையும் தொல்காப்பியத்தால் அறிகிறோம்.[18]

விருந்தோம்பி வாழ்வதே இல்வாழ்வான் கடமையென்பதைத் தொல்காப்பியர் வலியுறுத்தியுள்ளார். இதனை அவருடைய 'வல்லிதின் விருந்து புறம்தருதல்' என்னும் சொற்றொடர் நன்கு விளக்குகிறது.

தொல்காப்பியம் சங்கத் தமிழரின் அகவாழ்க்கை நெறியையும், அவர்களின் வீரம், போர்முறை போன்ற புறவாழ்க்கை நெறியையும் அறிய இன்றியமையாத சான்றாக உதவுகிறது எனலாம்.

---

12 'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.' (தொல். பொருள். அகத். 5)

18 'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்' (தொல். டி 30)

செம்மைசான்ற அரசியல் அமைப்பும், அரசாட்சியும் தமிழகத்தில் நிலவியதைத் தொல்காப்பியம் தெளிவாகக் கூறுகிறது. சேரர், சோழர், பாண்டியர் ஆகிய முடியுடை வேந்தரின் பாகுபாட்டு நிலை, அவர்களின் குடிப்பூக்கள், போர்முறைகள், அரச சின்னங்கள் ஆகியவை விவரிக்கப் பெற்றுள்ளன. மூவேந்தருள் சேரரே முதலில் வைத்துப் பேசப்படும் பெருமையுடையவர் ஆகின்றனர்.[14]

தொல்காப்பியர் தமது நூலை நிலந்தரு திருவின் பாண்டியன் அவையில் அரங்கேற்றினார். அப்பொழுது அவையின் தலைவராயிருந்தவர் அதங்கோட்டாசான் எனும் பேரறிஞர் ஆவார்.

இவ்வாறு, தொல்காப்பியம் கி.மு. நான்காம் நூற்றாண்டளவில் தோன்றியதையும், அது தோன்றுவதற்கு முன்னமே பல அரிய நூல்கள் தமிழகத்தில் இருந்ததையும், சங்கத் தமிழரின் வாழ்க்கைப் பட்டாங்கையும் தொல்காப்பியத்தாலேயே அறிகிறோம். மேலும், நான்மறை, நான்கு வருணப் பாகுபாடு, ஆரியத்தாக்கம் போன்ற அயலகப் பண்பியல் கூறுபாடுகளையும் ஒருவாறு உணருகிறோம். வடமொழி, தமிழ்மொழியுடன் கலந்து உறவாடியதையும், அந்தக் கலப்பைப் பற்றிய புணர்ச்சி விதிகளைத் தொல்காப்பியர் வகுத்ததையும் அறிகிறோம். பிற சங்க இலக்கியங்களுக்கு அடிப்படை நூலாகவும், நெறிமுறை வழிகாட்டியாகவும் திகழும் தொல்காப்பியம் இலக்கியச் சான்றுகளில் முதலிடம் பெறுகிறது.

எட்டுத்தொகை[15]

தொகை நூல்கள் எட்டு. அவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகிய ஐந்தும் அகப்பொருள் பற்றியும், பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இரண்டும் புறப்பொருள் பற்றியும் பேசுகின்றன. பரிபாடல் அகம், புறம் ஆகிய இரண்டையும்பற்றிக் கூறுகிறது.

உள்ளமொத்த தலைவனும் தலைவியும் ஒன்றுகூடித் தாம் துய்த்த இன்பம் இத்தகையது, எனப் பிறருக்குப் புலப்படுத்த

---

14 'போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெரும் தானையர்.' (தொல். பொருள். புறத். 5)

15 'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.'

முடியாததாக விளங்குவது 'அகம்' ஆகும். 'இத்தகையது' என்று பிறருக்குப் புலப்படுத்தும் இயல்பு வாய்ந்த பிற உணர்ச்சி களையும் ஒழுக்கங்களையும் கூறுவது 'புறம்' ஆகும்.

பொதுவாக நோக்கும்போது, எட்டுத்தொகை நூல்களில் மன்னர்களின் போர்த்திறன், வெற்றிச் சிறப்பு, போரைத் தடுத்து அறிவுரை கூறும் புலவர் கூற்று, வள்ளல்களின் வள்ளன்மை, வறுமையில் வாடியோர் நிலைமை, மறக்குடி மகளிர் மாண்பு, கடவுள் நெறி, அன்பின் அடிப்படையிலான ஐந்திணை ஒழுக்க நெறிகள், தமிழகத்தில் அன்று சிறந்து நின்ற தலைநகரங்கள் பற்றிய செய்திகள் முதலியனவும் தொல்கதைகள் (புராணக் கதைகள்) பலவும் அறியக் கிடக்கின்றன. இவற்றை இங்கு ஆராய்வோம்.

நற்றிணை

இந் நூல் 400 அகப் பாடல்களைக் கொண்டது. இதனை 175 புலவர்கள் பாடியுள்ளனர். இதில் ஓரி, பழையன், தித்தன், அழிசி, மலையமான், பெரியன், ஆய் அண்டிரன், அன்னி, பாரி, விராஅன், நன்னன், மிஞிலி, தழும்பன், பாணன், அருமன், நெடுமான் அஞ்சி, முடியன் போன்ற சிற்றரசர்கள் அறியப்படு கின்றனர்.

அரசர்களின் ஆட்சி முறை, அவர்கள் அறம் பிறழாது நீதி வழங்குதல் ஆகியவையும், குறிஞ்சி நில ஊர்களில் திகழ்ந்த ஊர்க் காவல் முறையும், ஆயர் வாழ்க்கை, பரதவர் வாழ்விடம், வாழ்க்கை முறை ஆகியவையும் நற்றிணையில் சிறந்து காணப் பெறுகின்றன.

அக்காலத்தில் சிறந்து விளங்கிய தொண்டி, கொற்கை, மாந்தை, கூடல், கிடங்கில், குடந்தைவாயில், வெண்ணி ஆகிய ஊர்களையும் நற்றிணையில் காண்கிறோம்.

ஐந்து நிலங்களிலும் வாழ்ந்த மக்களின் உணவு, உடை, உறைவிடம், பண்டமாற்று முறை, தொழில் முதலியவற்றையும், பொழுதுபோக்குகளையும் நற்றிணையால் அறிகிறோம். பல் வேறு ஆடை வகைகள், யாழினங்கள், இசைக் கருவிகள் பற்றியும் அறவோன் (மருத்துவன்), கணியன் (சோதிடன்) ஆகியோர் பற்றியும் அறிகிறோம்.

செல்வத்தின் பயனும், அதன் நிலையாமையும், உயிர் பல பிறவிகளை எடுக்கும் என்ற நம்பிக்கையும் நற்றிணைப் பாடல்களில் காணப்பெறுகின்றன.

குறுந்தொகை

இந் நூல் 402 பாக்களைக் கொண்டது. இவை 205 புலவர்களால் பாடப்பெற்றவை. இந் நூலில் வரும் காதற் செய்திகள் பழந்தமிழரின் அகத்துறையறிவைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. எவ்வி, நன்னன், எழினி, ஆய், அஞ்சி, வல்வில் ஓரி, பாரி, மலையன், நள்ளி, அழிசி, ஆதி, அருமன், அகுதை, வீச்சிக்கோ ஆகிய சிற்றரசர்களைப் பற்றிய குறிப்புகளைக் குறுந்தொகையில் காணலாம். காஞ்சியூர், மாந்தை, சிறுநல்லூர், உறந்தை, தொண்டி, குன்றூர், முள்ளூர், குறும்பூர் முதலிய ஊர்களும் இந் நூலில் சுட்டப்படுகின்றன.

குறிஞ்சிநில வாழ்க்கை முறையை இந் நூலில் விரிவாகக் காணலாம். கொல்லிமலையின் சிறப்பும், அதிலிருந்த கொல்லிப் பாவையின் பறை, பணிலம், பதலை, முழவு, தட்டப் பறை, குளிர் முரசு முதலிய இசைக் கருவிகள் பற்றியும், நடனப் பெண் (ஆடுகள மகள்), நடனமாடும் ஆண் (ஆடுகள மகன்) ஆகியோர் பற்றியும் இந்நூலில் காணலாம்.

நல்வினை, தீவினை, வீடுபேறு (பெரும்பெயர் உலகம்), நரகம் என்பனவற்றைப்பற்றித் தமிழர் கொண்டிருந்த நம்பிக்கைகளும், கூற்றுவனால் உயிர்கள் கவரப்படுதல்பற்றிய நம்பிக்கையும் இந் நூலில் காணலாம்.

தமிழர்கள், வாழ்க்கையை இன்பம் மிக்கதாகவே கொண்டனர்; துணங்கை என்னும் கூத்தாடிக் களித்தனர். தமிழகத்தில் குடியேறிய ஆரியர்கள் மூங்கில் கழிகளை நட்டு அவற்றிற்கிடையே கயிற்றைக் கட்டி, அக் கயிற்றின்மேல் நடந்து கூத்தாடினர். இதனை 'ஆரியக் கூத்து' எனக் குறுந்தொகை சுட்டுகிறது. இதனால், சங்க காலத்திலேயே ஆரியரும் ஆரியமும் தமிழகத்தில் இரண்டறக் கலந்த வரலாற்றுண்மையை அறியலாம்.

ஐங்குறுநூறு

திணை ஒன்றுக்கு நூறு பாடல்கள் வீதம் ஐந்திணைக்கும் ஐந்நூறு பாடல்களைக் கொண்ட இந் நூலால், ஐந்நில மக்களைப்பற்றியும் நன்கு அறிய முடிகிறது. ஆதன், அவினி, குட்டுவன் ஆகிய சேர வேந்தரையும், கடுமான்கிள்ளி என்ற சோழ வேந்தனையும்,

தென்னவன், தேர்வண் கோமான், கொற்கைக்கோமான் ஆகிய பாண்டிய வேந்தர்களைப் பற்றியும் இந் நூலினால் அறிகிறோம். ஆமூர், இருப்பை, மத்தி, கழாஅர், தொண்டி, கொற்கை, வயலூர் முதலிய ஊர்களும் இந் நூலில் சுட்டப்படுகின்றன. வழிபாட்டு முறைகள், மகளிர் அணிந்த பலவகை அணிகலன்கள், போரில் பட்ட வீரனுக்கு நடுகல் எடுத்தல் முதலிய செய்திகளும் இந்நூலில் காணப்படுகின்றன.

பதிற்றுப்பத்து

சேர மன்னர்கள் பதின்மரைப்பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய நூலே பதிற்றுப்பத்து. ஒவ்வொரு சேரனுக்கும் பத்துப் பாடல் என்ற முறையில் நூறு பாடல்களைக் கொண்ட இந்நூலில், முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கப்பெறவில்லை. இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், செங்குட்டுவன், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன், செல்வக் கடுங்கோ வாழியாதன், பெருஞ் சேரலிரும்பொறை, இளஞ்சேரலிரும்பொறை ஆகிய சேர மன்னர் எண்மர் பற்றிய செய்திகள் இந் நூலில் காணப்பெறுகின்றன.

சங்ககாலச் சேரநாட்டுத் துறைமுகங்கள், ஊர்கள், ஆட்சி முறை, பரல், பளிங்கு, முத்து வகைகள், வடபுலப் படையெடுப்பு முதலிய வரலாற்றுச் சிறப்பிற்குகந்த செய்திகளைப் பதிற்றுப் பத்துத் தெரிவிக்கிறது.

பரிபாடல்

அகமும் புறமும் பற்றிய கருத்துகளைக் கூறும் 70 பாடல் களைக் கொண்ட பரிபாடலில், தற்காலம் கிடைப்பவை 22 பாடல் களே. இவை திருமால், செவ்வேள், வையை ஆறு பற்றிய பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. மதுரை, வையை ஆறு, திருப் பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை ஆகியவற்றின் பண்டைய பெருமைகளையும், அக்கால மக்களின் ஆடை அணிகள், உணவுகள், வணங்கிய கடவுளர்கள், வழிபாட்டு முறைகள், விழாக்கள் பற்றியும் அகலிகை, ரதி, மன்மதன் குறித்த புராணக் கதைகளையும் பரிபாடல் விளக்குகிறது.

கலித்தொகை

பாண்டிய வேந்தனையும், கூடல் நகரத்தையும், வையையாற் றையும் கலித்தொகை குறிப்பிடுகிறது. பெருந்திணை, கைக்கிளை ஆகிய ஒத்த அன்பில்லாத ஒழுக்க நெறிகளையும், புராணக்கதை

களையும் இது கூறுவதால், காலத்தால் பிந்திய நூலெனக் கருதுவர்.

பாரதக் கதை தொடர்பான சில செய்திகளைக் கலித்தொகையில் காணுகிறோம். தீயெழுந்தபோது வீமன் தன் சுற்றத்தாரை அத் தீயினின்று காத்ததையும், துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைப் பற்றி இழுத்ததையும், துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்து வீமன் வஞ்சினம் முடித்ததையும், துரியோதனன் தொடையை வீமன் முறித்ததையும் இத் தொகைப் பாடல்கள் கூறுகின்றன. இவ்வாறு இதிகாசக் கதைகளைக் கூறும் இந் நூல் வரலாற்றுக்கு உதவும் ஆய்வு நூலாகவும் பயன்படுகிறது. பாலைக் கலி, குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி ஆகியவை அகத்திணைக்குரிய மக்களின் வாழ்க்கை நெறிகளை விவரிக்கின்றன.

இளவேனிற் காலத்தில் மதுரையில் புலவர்கள் கூடித் தமிழ் ஆராய்ந்த செய்தியும், பிரமன் 'முதல்வன்' என்றும், மற்றும் காக்கும், அழிக்கும் சக்தியுடைய கடவுளர் பற்றியும் கலித்தொகை கூறுகிறது. முத்துவடம், இழை, மகரக்குழை, தொடி, மேகலை, தெள்ளரிச் சிலம்பு, கனங்குழை, வரிக்குழை, சதங்கை, வல்லிகை, வயந்தகம், கன்னசாமரை, புல்லிகை, கண்டிகை, தெய்வ உத்தி முதலிய பல்வேறு அணிகள்பற்றியும் கலித்தொகை விளக்கம் செய்கிறது.

அகநானூறு

அகப்பொருள் பற்றிக் கூறும் 400 பாக்களைக் கொண்ட இந் நூலில் பயன்மிக்க வரலாற்றுச் செய்திகள் பல காணப்படுகின்றன. தமிழகத்தை ஆண்ட பெருவேந்தர்கள், குறுநில மன்னர்கள் பலரும் இந் நூலின் மூலம் அறியப்படுகின்றனர். கங்க அரச மரபினர், தொண்டை மண்டலத்தை ஆண்ட திரையர், ஊராட்சி முறை முதலியனவும் இதில் விவரிக்கப்படுகின்றன.

மௌரியரின் தமிழ்நாட்டுப் படையெடுப்புப் பற்றியும் அவர்களுக்குதவியாக நின்ற வடுகர்கள் பற்றியும் அகநானூறு குறிப்பிடுகிறது. மாமூலனார் தமது மூன்று பாக்களில் மௌரியர்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். மௌரியர், கோசருடன் சேர்ந்துகொண்டு மோகூர்ச் (கொங்கு நாடு) சிற்றரசனான பழையன் என்பவனைத் தாக்கினர். அவன் அவர்களைப் புறங்கண்டு துரத்தினான். கோசருக்குத் துணைபுரிய மகதத்தினின்று ஒரு புதுப்படை வந்தது. அப் படையைச் சேர்ந்த தேர்களும், சரக்கு வண்டிகளும் தடையின்றி வருவதற்குத் தடை

யாயிருந்த பாறைகளைத் தகர்த்துச் செப்பனிட்ட புதுப்பாதை வழியாக அப் படை தமிழகம் வந்தது.[16] அவ்வாறு வந்த படையுடன் வடுகர் சேர்ந்துகொண்டனர்.[17]

இவ்வாறு வடவருக்குத் துணையாக வடுகரும், கோசரும் ஒன்றிணைந்து தமிழகத்தின்மீது படையெடுத்ததை அறிந்த சோழன் இளஞ்சேட்சென்னி, தமிழகத்தைக் காக்கும் நோக்கத்துடன் தன் படையுடன் கொங்கணம் சென்று பாழி அரசனை அழித்து வடுகரைத் தோல்வியுறச் செய்தான்.[18]

கிரேக்கத்திற்கும் தமிழகத்திற்குமிடையே நடந்த பண்டைய வாணிகத் தொடர்பைச் சங்க நூல்களில் பரவலாகக் காண முடிகிறது. சான்றாக, யவனர் தமிழ்நாட்டில் வாங்கிச் சென்ற வாணிகப் பொருள்களில் தனித்தன்மை பெற்றுத் திகழ்ந்த மிளகைப்பற்றி அகநானூறு கூறுகிறது. தங்களின் கப்பல்களில் ஏற்றி வந்த பொன்னைக் கொட்டிக் கொடுத்துவிட்டு யவனர்கள் மிளகை ஏற்றிச் சென்றனராம்.[19]

அகநானூற்றில் புராணக் கதைகள் பல சுட்டப்படுகின்றன. கண்ணன் யமுனை ஆற்றில் நீராடிய கோபியரின் ஆடைகளைக் கவர்ந்த காட்சியும், சூரபதுமனை வதைத்த செவ்வேளின் வீரமும், மன்னர்களின் குலத்தை அழித்த பரசுராமன் ஆற்றலும், இராமன்

---

16 ' துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவி யறைவாய்' (அகம். 251)

17 ' முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறையிறந்து .....' (கே. 281)

18 ' எழாஅத் திணிதோட் சோழர் பெருமகன்
வினங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக்கட னாகலீற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி ' (கே. 375)

19 ' யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும் ' (கே. 149)

கோடிக்கரையில் பறவைகளின் ஒலியை அடக்கிய பாங்கும், திங்களை உரோகிணி கூடிய கதையும் அகநானூற்றில் காணப் படுகின்றன.

பண்டைத் தமிழர் வாழ்க்கையில் நடைபெற்ற திருமண விழா முறைகளின் சிறப்பை அகநானூறு அழகுபடப் பேசுகிறது. முழவும் முரசும் முழங்கத் திருமண நிகழ்ச்சி தொடங்கும்; நெய் கலந்த வெண்சோறு விருந்தாக வழங்கப்படும்; மணமகளை நீராட்டி, மகப்பேறு பெற்ற குலப்பெண்டிர் நால்வர் குடங்களில் மலரும் நெல்லும் தூவி, 'கற்புநெறி வழுவாது கடமை ஆற்றிக் கணவன் விரும்பும் மனைக்கிழத்தி ஆகுக' என வாழ்த்துவர்.[20] இத்தகைய திருமண முறை தமிழர்க்கே உரியது, ஆரியம் கலவாதது என்பது பி. டி. சீனிவாச ஐயங்காரின் துணிபாகும்.[21]

புறநானூறு

புறப்பொருள் பற்றிய 400 பாடல்களைக் கொண்டது புறநானூறு. இது தமிழ்மக்களின் வரலாற்றிற்கு ஒரு களஞ்சியம் ஆகும்.

புறநானூற்றில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கரிகாலன், முன்னும் பின்னுமாக ஆட்சி புரிந்தவர்கள் என்று கருதப்படும் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான், கிள்ளி வளவன், கோப்பெருநற்கிள்ளி, இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி, வேல் பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி, சோழன் நல்லுருத் திரன் ஆகியோர் பேசப்படுகின்றனர்.

புறநானூற்றில் பொதிந்து கிடக்கும் செய்திகள் சங்க காலத் தமிழகத்து அரசியல், சமுதாயம், பழக்கவழக்கம், பண்பாடு, நாகரிகம், கல்வி, பொருளாதாரம், கலை முதலியவற்றை அறிய உதவுகின்றன.

பெருங்கற்கால நாகரிகச் சின்னமாகக் கருதப்படும் இறந்த வரைத் தாழியிலிட்டுப் புதைக்கும் வழக்கத்தைப்பற்றிப் புறநானூறு கூறுகிறது. நடுகல் நடுதல், கணவனை இழந்தோர் உடன்கட்டையேறுதல், அணிகளைக் களைந்து கைம்மை நோற்றல் முதலிய பண்பாட்டுப் பரிவர்த்தனைகள் பண்பியல் வரலாற்றின் மூலச்செய்திகளாகப் புறநானூற்றில் உள்ளன.

---

[20] அகம். 136, 86

[21] Iyangar, P. T. S., *History of the Tamils*, p. 80.

சுருங்கக் கூறின் புறநானூற்றில் ஆடை வகைகள், உணவு வகைகள், பதினைந்து பாண்டிய மன்னர்கள், பதினெட்டுச் சோழர்கள், பதினெட்டுச் சேரர்கள் ஆகியோரையும், பழனி மலைப் பேகன், பறம்புமலைப் பாரி, குதிரைமலை அதிகமான், கொல்லிமலை ஓரி, பொதியமலை நள்ளி, கோடைமலைக் கடிய நெடுவேட்டுவன் ஆகிய சிற்றரசர்களையும் இவர்களின் போர், நீதி, கொடை முதலியவற்றையும் அறியலாம். மேலும் வள்ளல்கள் எழுவரின் வரிசையும் காணப்படுகிறது.

பொதுமக்களின் ஒழுக்க நெறிகளையும் புறநானூறு நெறிப் படுத்திக் கூறியுள்ளது.

பத்துப்பாட்டு

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை ஆகிய ஐந்து ஆற்றுப்படை நூல்களும், பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய மூன்று அகப்பொருள் நூல்களும், மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை எனும் இரண்டு அகமும் புறமும் பற்றிய நூல்களும் 'பத்துப் பாட்டு' எனத் தொகுக்கப்பட்டவையாகும்.

பத்துப்பாட்டு நூல்களைப்[12] பாடிய புலவர்கள், அவர்களால் பாடப்பெற்ற அரசர்கள் பற்றி முதலில் கூறுவோம்.

நூல்	பாடிய புலவர்	பாடப்பெற்றவர்
1. திருமுருகாற்றுப்படை	நக்கீரர்	முருகக் கடவுள்
2. பொருநராற்றுப்படை	முடத்தாமக் கண்ணியார்	சோழன் கரிகாற் பெருவளத்தான்
3. பட்டினப்பாலை	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	சோழன் கரிகாற் பெருவளத்தான்

12 ' முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி — மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து. '

நூல்	பாடிய புலவர்	பாடப்பெற்றவர்
4. நெடுநல்வாடை	நக்கீரர்	தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
5. மதுரைக்காஞ்சி	மாங்குடி மருதனார்	தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
6. சிறுபாணாற்றுப்படை	இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்	ஓய்மானாட்டு நல்லியக்கோடன்
7. பெரும்பாணாற்றுப் படை	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	தொண்டைமான் இளந்திரையன்
8. மலைபடுகடாம்	பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார்	நன்னன் சேய் நன்னன்
9. முல்லைப்பாட்டு	நப்பூதனார்	அகப்பொருள்
10. குறிஞ்சிப்பாட்டு	கபிலர்	அகப்பொருள்

கடியலூர் உருத்திரங்கண்ணனார், சோழன் கரிகாற் பெருவளத்தான்மீது பட்டினப்பாலையைப் பாடியுள்ளார். இவரே தொண்டைமான் இளந்திரையன்மீது பெரும்பாணாற்றுப்படையைப் பாடியுள்ளார்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்மீது மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியைப் பாடியுள்ளார். அதே நெடுஞ்செழியனைப்பற்றி நக்கீரர் நெடுநல்வாடையைப் பாடியுள்ளார். பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் தமது மலைபடுகடாம் என்னும் பாட்டில், நன்னன் சேய் நன்னன் என்பவனைப் பாடியுள்ளார்.

சிறுபாணாற்றுப்படையில் கபிலர், பரணர், மூடமோசியார், ஔவையார் முதலியவர்களால் பாடப்பெற்ற ஏழு வள்ளல்களின்

வரலாறு கடந்தகாலச் செய்தியாகக் கூறப்பட்டுள்ளது. சிறு பாணாற்றுப்படையில் நல்லூர் நத்தத்தனார், ஓய்மானாட்டு நல்லியக் கோடனைப் பாடியிருக்கிறார்.

திருமுருகாற்றுப்படை

சங்க காலத்தில் தமிழகத்தில் வணங்கப்பட்டு வந்த தெய்வங்கள் யாவை என்பதை அறிய இந் நூல் பெரிதும் உதவுகிறது. தமிழரின் உருவவழிபாடும், வழிபாட்டு முறைகளும் இந் நூலால் அறியப்படுகின்றன. முருகனுடைய ஆறுபடை வீடுகளும் அவற்றின் அமைப்புகளும் இதில் விளக்கப்பட்டுள்ளன. இதில் வடபுலத்தில் வழங்கிய புராணக் கருத்துகளும் வடமொழிச் சொற்களும் பிற சங்க நூல்களில் காணப்படுவதைவிட அதிகமாகக் காணப்படுகின்றன.

கி. பி. இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்குள் வடமொழி தமிழோடு கலந்துவிட்டதென்றும், எனவே திருமுருகாற்றுப் படையில் காணப்பெறும் 'அங்குசம்', 'கோதண்டம்' முதலிய வடசொற்களைக் கொண்டு இது பிற்கால நூலென்று முடிந்த முடிபாகக் கூறிவிட முடியாது[28] என்றும் டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.

பொருநராற்றுப்படை

பொருநராற்றுப்படையில் கரிகாற் பெருவளத்தானைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் காணப்பெறுகின்றன. இவன் தந்தையின் பெயர் 'உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி'[24] என்பதும், ஆனால், இவன் கருவில் இருந்த போதே இவனுடைய தந்தை இயற்கை எய்தியதால் இவன் தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி[25] ஆண்ட தகுதியும், போந்தை, வேம்பு மாலைகளைச் சூடிய சேர, பாண்டியராகிய இருபெரு வேந்தர்களை வெண்ணி என்னுமிடத்தில் வென்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வீரமும்[26] இந் நூலில் காணப்பெறுகின்றன.

---

28 Pillay, Dr. K. K., Op. cit., Vol. I, p. 111

24 பொருநர். 130 உரை

25 ஷெ. 132

26 'இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்' (பொருநர். 146 – 48)

சிறுபாணாற்றுப்படை

ஓய்மானாட்டின் சிறப்பும், எயிற்பட்டினம்,[27] கிடங்கில்,[28] வேலூர்,[29] ஆமூர்[30] ஆகிய நகரங்களின் பெயர்களும் இந்நூலுள் காணப்பெறுகின்றன. எயிற்பட்டினம் மாடமாளிகைகளும் மதிலும் முள்ளது எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. நல்லியக்கோடனின் அரண்மனை, இமயமலைபோல் உயர்ந்த தோற்றமுடையதாகக் கூறப்படுகிறது.[31] மூவேந்தர்களைப் பற்றியும், வஞ்சி, உறையூர் ஆகியவற்றின் சிறப்பும் அதில் காணப்படுகின்றன.

பெரும்பாணாற்றுப்படை

இது கச்சியம்பதி(காஞ்சி)யிலிருந்து கொண்டு தொண்டை நாட்டை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனின் சிறப்பைக் கூறும். இப் பாடலில் தொண்டை நாட்டிலிருந்த உப்பு வணிகர், எயிற்றியர், கானவர், இடையர், உழவர், வலைஞர், அந்தணர் முதலிய பலதிறப்பட்ட மக்களின் உணவு, உறைவிடம் முதலியன விளக்கப்படுகின்றன. கடலில் திரியும் கலங்களைக் கரைந்து அழைக்கும் விளக்கந்தான் 'கலங்கரை விளக்கம்'[32] எனக் கலங்கரை விளக்கத்திற்கான சிறந்த பொருளை இந்நூல் கூறுகிறது.

பந்தாடுதல், கழங்காடுதல் முதலிய மகளிர் விளையாட்டுகளையும், நெல்லரிசியால் மதுபானம் செய்வதையும், பொன்னைக் கல்லில் உரைத்து மாற்றுக் காணும் முறையையும், கப்பல் துறையில் சுங்கவரித் தண்டல் செய்ததையும் இந் நூலில் காணலாம்.

முல்லைப்பாட்டு

இதில் பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டு நிற்றலையும், நெல்லையும் மலரையும் கோயிலுக்குக் கொண்டுசெல்லும் வழக்கத்தையும், அரசர்கள் தம் பள்ளியறைக்கு மிலேச்சரையும் ஊமையரையும் காவலர்களாக அமர்த்தியதையும், மகளிரும் போர் உடை அணிந்து வாளேந்திச் சென்றதையும், யானைகளை வடசொற்களால் ஆணையிட்டுப் பழக்கியதையும், காலத்தைக் கணக்கிட நாழிகை வட்டிலைப் பயன்படுத்தியதையும் அறிகிறோம்.

---

27 சிறுபாண். 152 – 53

28 ஷை. 160

29 ஷை. 173

30 ஷை. 188

31 ஷை. 205

32 'இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலக் கரையும்.' (பெரும்பாண். 249 – 50)

மதுரைக்காஞ்சி

தமிழகம் முழுவதும் ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழி யனுக்கு உலக இன்பத்தின் நிலையாமையைப் புலவர் எடுத் தியம்பும் முறையில் உள்ளது இந் நூல். ஆயினும், இந்நூலினால் மதுரை நகர மக்களின் வாழ்க்கை, முன்னிரவு நள்ளிரவு பின்னிரவு வைகறை முதலிய நேரங்களில் எப்படிக் கழிந்ததெனச் சித்திரிப் பதால் நகர மக்களின் பல்வேறு பழக்கவழக்கங்களையும், பொழுது போக்குகளையும், திருவிழாக்களையும் தெளிவாக அறியலாம். பண்டைத் தமிழகத்தின் பண்பாட்டு வரலாற்றினை அறிய இந் நூல் தலைசிறந்த மூலமாக உதவுகிறது.

நெடுநல்வாடை

இது குளிர்காலத்தில் மாந்தர், விலங்குகள், பறவைகள் முதலிய உயிர்களின் நிலைமைபற்றி அறிய உதவும் ஒரு பருவ காலப் பாட்டு ஆகும். அரண்மனை அமைக்கும் கலைநுட்பம், கொற்றவை வழிபாடு ஆகியவற்றையும் இதில் காணலாம்.

குறிஞ்சிப்பாட்டு

'தமிழ்' என்றாலும், 'பண்பு' என்றாலும், 'தமிழர்' என்றாலும் 'அறவழி நிற்றல்' என்ற நடைமுறை வாழ்வையே சுட்டும். இச் சீரிய தமிழின் மேன்மையை அறியாத பிரகதத்தன் என்னும் ஆரிய அரசனுக்கு எடுத்துக் கூறுவதற்கே இந்நூல் ஆக்கப் பெற்ற தென்பர். மணி, பொன், முத்து ஆகியவற்றாலான விலை யுயர்ந்த அணிகலன் குறைவுற்றால் நிறைவு செய்துவிடலாம். ஆனால், ஒருவனுடைய பண்பு சிதைவுற்றால் நிறைவு செய்ய முடியாது.[33] இதுவே தமிழர் வாழ்வு நெறி. ஆரியர், அந்தணர், கானவர் முதலியோரின் கடமைகளையும் இந்நூலில் காணலாம். பண்டைத் தமிழர்ப் பண்பாட்டை அறிய உதவும் ஓர் உரை கல்லாகக் குறிஞ்சிப்பாட்டுத் திகழ்கிறது.

பட்டினப்பாலை

இதில் சோழன் கரிகாற் பெருவளத்தானின் வாழ்க்கை வரலாற்றைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் திறம்படக் கூறி யுள்ளமை வரலாற்றுக்கு உகந்ததாயுள்ளது.

'கரிகாற் பெருவளத்தான்'[34], 'கரிகாலன்'[35] ஆகிய பெயர்கள் சோழன் கரிகாலனையே குறிப்பவை. இளமையில் இவனைச்

---

[33] குறிஞ்சிப். 13 – 18
[34] பட்டினப். கொஞ
[35] ஷை வெண்பா

சிறையிட்டனர். ஆனால், இவன் வாளை உருவிக்கொண்டே பகைவரிடமிருந்து வீரத்தோடு தப்பினான். இதனால் இவன் பெற்ற ஆட்சி உரிமை 'உருகெழு தாயம்'[36] எனப் புகழப் பெற்றது. இதனால், இவன் காலத்திலிருந்த உட்பூசல்களை நன்கு உணரலாம். காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை அறிய இந்நூல் பெரிதும் உதவுகிறது. இப் பட்டினத்தில் நிலவழியாக வந்த மிளகும், நீர்வழியாக வந்த குதிரைகளும், மலைபடுபொருள்களான பொன்னும், மணியும், அகிலும், ஆரமும், ஈழத்து உணவும், காழகத்து விளைபொருள்களும் எங்கும் குவிந்து கிடந்தமை கூறப்படுவதால், உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத் தொடர்பை இந் நூல் தெளிவுபடுத்துகிறது.

ஒளியரை ஓடுக்கியும், அருவாளரை அடக்கியும், வடவர் வாடவும், குடவர் கூம்பவும், பொதுவர் பொன்றவும், இருங்கோவேள் மருங்கு சாயவும் கரிகாலன் வென்றான்.[37] இக் கூற்றால் அக்காலத்தில் தமிழகத்திலிருந்த நாடுகளையும் அவற்றை ஆட்சி செய்தவர்களையும் அறியமுடிகிறது.

மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)

இதனை இயற்றியவர் கோசிகன் (கௌசிகன்) என்னும் புலவர். இந்நூலில் ஐவகை நில மக்களின் வாழ்க்கை முறைகள், மலையின் மாந்தர், விலங்கினங்கள், அருவிகள் முதலியவற்றால் எழும் ஓசைகள், பல்வேறு வகை இசைக்கருவிகள் முதலியவற்றையும் காண்கிறோம். பண்பாட்டு வரலாற்றுக்கு இது மூலக் கூறுபாடாக உதவுகிறது.

இரட்டைக் காப்பியங்கள்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன. கோவலன் கண்ணகி வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிலப்பதிகாரமும், கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறும் மணிமேகலையும் ஓரளவு சமகாலத்தில் தோன்றிய காப்பியங்களாகும்.

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தில் மதுரை சிறப்பாகப் பேசப்படுகிறது. நகர மக்களைப் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. பண்டைத் தமிழகத்தில் போரில் மாண்ட வீரனுக்கே நடுகல் நாட்டுவர்.

---

36 பட்டினப். 227
37 மே 274 – 277, 281 – 82

அதனோடு பெண்ணுக்கும் நடுகல் (மாசதிக்கல்) நட்டு, வணங்கும் புதிய பத்தினி வழிபாட்டு முறையையும் இதில் காண்கிறோம். சமண பௌத்த சமயங்களும், அவற்றின் பல்வேறு பிரிவுகளும் ஆரிய சமயக் கோட்பாடுகளும், சிறப்பாகத் திருமால் வழிபாடும், புராணக் கதைகளும் இதில் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் விரவப்பெற்றும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களை இணைத்தும், கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகிய குடிமக்களைப் பாத்திரங்களாகக் கொண்டும் திகழும் காப்பியமாகும். பெண்ணின் பெருமையையும், அறத்தின் மேன்மையையும், வாழ்வின் பயனையும் பேசுவது சிலப்பதிகாரம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை மக்களைப் பற்றியும், புகார், மதுரை ஆகிய நகர மக்களின் உயர்ந்த நாகரிக வாழ்க்கையைப் பற்றியும் சிலப்பதிகாரம் செப்புகிறது.

செங்குட்டுவனின் வடபுலப் படையெடுப்பும், இலங்கை மன்னன் கயவாகுவும், பிற மன்னர்களும் கண்ணகி வழிபாட்டில் கலந்துகொண்ட செய்தியால், சமகால அரசர்களையும் அவர்களின் வரலாறுகளையும் அறியச் சிலப்பதிகாரம் உதவுகிறது. பண்டைத் தமிழகம் கிரேக்கத்தோடும் பிற அயல்நாடுகளோடும் கொண்டிருந்த வணிகத் தொடர்பையும், தூதுவர் பரிமாற்றங்களையும் கூறுவதால் சங்க காலத்தின் கால வரன்முறையைக் கணிக்க உதவும் கருவியாக அமைகிறது. வானநூல் அறிவு மற்றும் பல்வேறு கலைகள் பற்றிய அறிவியல்கள் இதில் காணப்படுவதும் வரலாற்றுக்குப் பெரிதும் துணையாக உள்ளன.

மணிமேகலை

இந்நூல் சங்கம் மருவிய காலத்தில் ஏறத்தாழச் சிலப்பதிகார காலத்திலேயே தோன்றியது. தமிழ்ச் சமுதாயத்தில் பௌத்தமும் சமணமும் இக்காலத்தில் வலுப்பெற்றன.

சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகளும் மணிமேகலையின் ஆசிரியரான சாத்தனாரும் சமகாலத்தவர்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.[88]

---

88 'உரைசால் அடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்' (சிலப். பதி. 88-89)

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்[39]

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களோடு மேலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் சங்ககால வரலாற்றை அறிய உதவும் மூலங்களாகக் கொள்ளலாம். இவற்றோடு மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய காப்பியங்களையும் சேர்த்துச் 'சங்கம் மருவிய நூல்கள்' என்று குறிப்பிடுவர். அஃதாவது மூன்றாம் தமிழ்ச் சங்கம் முடிந்த அல்லது முடிவுறும் தறுவாயில் தோன்றிய நூல்களெனக் கருதுவர். உரையாசிரியர்களான பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இந்நூல்களின் ஆசிரியர்களைச் சங்ககாலச் சான்றோர்கள் எனக் கூறாமல், பிற சான்றோர் என்று தனிப்பெயரிட்டு அழைப்பதிலிருந்து இந் நூல்கள் மூன்றாம் சங்கத்திற்குப் பின்னரே தோன்றியிருத்தல் வேண்டுமெனலாம்.

மூன்று சங்கங்களையும், சங்கத்துப் புலவர்களையும், புரவலர்களையும், நூல்களையும், கால எல்லைகளையும் கணக்கிட்டுக் கூறும் இறையனார் களவியலுரையில், நாலடியார் போன்ற அரிய நூல்கள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். எனவே, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு நூல்களினின்று வேறுபடுவதையும், இவை கடைச்சங்கத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்டதையும் உய்த்துணரலாம்.

கடைச்சங்கம் முடிவுறும்போது மூவேந்தர்களால் ஆளப் பெற்ற நாடும், மொழியும், பண்பாடும் சிதைவுற்றன; அயலவர் நுழைந்தனர்; சீர்கேடுகள் தோன்றின. இவ்வாறு அரசியல் குழப்பமேற்பட்ட காலத்தில்தான், தமிழகத்தில் தங்களின் ஆதிக்கத்தைக் களப்பிரர் ஏற்படுத்திக் கொண்டனர். இக்காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியாகலாம். இந்நிலை ஆறாம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது. இவ்வாறு, தமிழகத்தில் அயலவர் ஆதிக்கமடைந்து தமிழருக்கும், தமிழர் பண்பாட்டிற்கும் ஊறு விளைவித்த காலத்தையே 'இருண்டகாலம்' என்று குறிப்பிடுவர்.

பொதுவாக வளமான வாழ்க்கை நெகிழ்ந்து, பண்பாடு சீர்குலையும்போதுதான் அறவோர்கள் தோன்றி அற நூல்களை

---

39 'நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலை யொடாம்கீழ்க் கணக்கு.'

இயற்றுவர். அவ்வாறு நோக்கும்போது, இக்காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பலவும் நீதிநூல்களாக இருப்பதால், இவை மேற்கூறப்பெற்ற இருண்ட காலத்தில் தோன்றியவை யாகலாம்.

இவை கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் ஆறாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியவை யாகலாம். ஆனால், போர்ச்செய்திகளைக் கூறும் 'களவழி நாற்பது' என்னும் நூலை இயற்றிய பொய்கையார், கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவரென்பதைப் புறநானூற்றில் அவர் பாடியுள்ள 48, 49ஆம் பாக்களைக் கொண்டும், நற்றிணையில் உள்ள 18ஆம் பாடலைக் கொண்டும் அறியலாம்.

இதைப்போலவே புறநானூற்றில் 229ஆம் பாடலைப் பாடியுள்ள கூடலூர்கிழார் என்னும் புலவர், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான முதுமொழிக்காஞ்சியைப் பாடியுள்ளார். இவ்வாறு பார்க்கும்போது, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் தோன்றின வென்று அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் ஆறாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட நீண்ட கால இடைவெளியில் இவை தோன்றியவை எனப் பொதுவாகக் குறிப்பிடலாம். களவழி நாற்பதும், முதுமொழிக்காஞ்சியும் மூன்றாம் சங்க காலத்தவை. இவற்றுடன் அல்லது இவற்றை யடுத்துத் தோன்றியது திருக்குறளாகும்.

திருக்குறள்

அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பெற்றுள்ள இந்நூல், பண்டைத் தமிழரின் மெய்ப்பொருளியலையும் வாழ்க்கை முறையையும் விளக்கும் கண்ணாடியாகும்.

நாலடி நானூறு

சமண முனிவர்களால் பாடப்பெற்ற நானூறு வெண்பாக்களைக் கொண்ட இந் நூலில் மக்கட்பண்பு, கல்வியின் சிறப்பு, வாழ்வின் நிலையாமை முதலியன சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் 'பெருமுத்தரையர்' பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.[40]

---

[40] நாலடி. 200, 296

நான்மணிக்கடிகை

ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணிபோன்ற கருத்துகளைக் கூறும் 101 பாடல்களைக் கொண்டது இந்நூல். அறிவின் சிறப்பையும், கற்றார் மாண்பையும், வாழ்வின் அன்றாட நெறிகளையும் இந்நூல் கூறுகிறது.

இன்னா நாற்பது

இனியவையற்ற அல்லது இன்னாத பொருள்களைப்பற்றிக் கூறும் நாற்பது வெண்பாக்களைக் கொண்ட இந்நூலில், 164 இன்னாத பொருள்கள்பற்றிக் கூறப்பட்டுள்ளன. இதுவும் அன்றாட உலகியல் வாழ்வுக்குரிய அறநெறிப்படுத்தும் நூலாகும்.

இனியவை நாற்பது

இனிய பொருள்களைப்பற்றிக் கூறும் நாற்பது வெண்பாக்களைக் கொண்டது இந்நூல். வாழ்வின் மாண்பையும் இனிமையையும் குறிப்பிட்டுக் குறைவற்ற வாழ்விற்கான இனிய பொருள்களைக் கூறுகிறது இந்நூல்.

திரிகடுகம்

நோயுற்ற உடலுக்கு மருந்துபோல் வாழ்க்கைக்கு வழி காட்டித் துணைநிற்கும் கருத்துகளைக் கொண்டது திரிகடுகம்; மூம்மூன்று கருத்துகளைக் கொண்ட 100 வெண்பாக்களை உடையது.

ஆசாரக்கோவை

இது வடமொழிச் சார்புடைய கருத்துகளைக் கூறும் நூலாகும். இந் நூலினால்தான் தமிழகத்தில் ஆரியப் பண்பாட்டுக் கலப்பால் சாதி, குலம், தீண்டாமை முதலிய தீய பாகுபாடுகள் தோன்றியதென விளங்குகின்றது.

பழமொழி

நானூறு வெண்பாக்களைக் கொண்ட இந்நூலில், ஒவ்வொரு பாவின் இறுதியிலும், ஒவ்வொரு பழமொழியுள்ளது. சங்ககால இரவலர், புரவலர், மூவேந்தர் முதலியோரைப்பற்றியும், இந் நூலில் குறிப்புகள் உள்ளன. இவை வரலாற்றுக் குறிப்புகளாகப் பயன்படுகின்றன. பொதுவாகப் பல்வேறு மக்களின் பழக்கவழக்கங்களை இப் பழமொழி எனும் நூலால் அறியலாம்.

சிறுபஞ்சமூலம்

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவை திரிகடுகம் ஆனதுபோல் கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில் ஆகிய ஐந்தின் வேர்கள் சேர்ந்த மருந்து சிறுபஞ்ச மூலமாயிற்று. இம் மருந்தைப்போலவே, வாழ்க்கைக்கு வேண்டிய அறநெறிகளை இந்நூல் கூறுகிறது.

ஏலாதி

திரிகடுகம், சிறுபஞ்சமூலம் போன்று ஆறு பொருள்களால் ஆன மருந்து 'ஏலாதி' எனப்பட்டது. இந் நூலில் உள்ள 80 பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஆறு நற்கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

முதுமொழிக்காஞ்சி

அதிகாரத்திற்குப் பத்துப்பாடல் முறையில் பத்து அதிகாரங்கள் கொண்ட மிகச் சிறிய நீதிநூல் இதுவே ஆகும். ஒழுக்க முடைமையே இதில் மிகுதியும் வலியுறுத்தப்படுகிறது.

ஐந்திணை ஐம்பது

இஃது ஐந்து திணைகளைப்பற்றிப் பாடப்பட்ட சிறந்த அகப் பொருள் நூலாகும். அகப்பொருள்பற்றிய கருத்துகளைக் கூறும் இந் நூல் செந்தமிழ் இன்பத்தைத் தருகிறது.

ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணை மாலை நூற்றைம்பது ஆகியவையும் ஐந்து திணைகளை விளக்கும் வெண்பாக்களையுடையன. *கைந்நிலை* என்னும் நூலிலும், அன்பின் ஐந்திணை விரித்துக் கூறப்படுகிறது. கார் கால வருணனையைக் கொண்ட முல்லைத் திணைக்குரிய அகவொழுக்கத்தை விரித்துக் கூறும் *கார் நாற்பது*, அகப் பொருள் நூலாகும்.

களவழி நாற்பது

கடைசியாக உள்ள *களவழி நாற்பது* புறப்பொருள் பற்றியதாகும். இதில் கூறப்படும் சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானிடம் கழுமலப் போரில் தோல்வியுறச் சோழன், சேரனைக் குடவாயிற் கோட்டத்தில் சிறைவைத்தான். அவனை மீட்கப் பொய்கையார் எனும் புலவர், இதனைப் பாடினார் என்ற குறிப்புள்ளது. போர்க்களக் கொடுமையையும்,

நால்வகைப் படைகளின் திறனையும் இந் நூலில் காணலாம். கார்த்திகை விழாவைப்பற்றிய குறிப்பும் இதில் காணப் படுகிறது.

கணைக்கால் இரும்பொறை, சோழனது குடவாயில் கோட் டத்தில் சிறையிலிருந்தக்கால் தாகத்திற்கு நீர் கேட்டபோது சிறைக் காவலர், அவனை மதியாது காலந்தாழ்த்தியதால் தன்மான உணர்ச்சியால் நீரும் உணவும் கொள்ள மறுத்து உயிர் விட்டானென்பது ஒரு மரபுவழிச் செய்தியாகும்.

சேரமானை விடுவிக்கக் களவழி நாற்பது பாடிய பொய்கை யார், சங்க காலத்திலிருந்த சேரன் கோக்கோதை மார்பனைப் புறநானூற்றில் (பாடல் 48, 49) பாடிய பொய்கையார் அல்லர் என்பது சிலர் கருத்து.

பொய்கையார் பாடியதாகக் காணப்படும் (புறம். 74) பாடலிலும் சோழன் செங்கணான் சேரமான் கணைக்கால் இரும் பொறையுடன் பொருது தோற்றதை அறிகிறோம்.

ஆக, இருமரபிலும் முடிவுதான் வேறுபடுகிறது. சேரன் விடுவிக்கப்பட்டதாக ஒன்றும், தற்கொலை செய்துகொண்டதாக மற்றொன்றும் கூறுகிறது. செங்கணான் சிவனுக்கும் திருமா லுக்கும் எழுபதிற்கு மேற்பட்ட கோயில்களைக் கட்டினானென்று திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார்.

'செங்கணான் சங்ககாலத் தமிழகத்தின் கடைசிச் சோழனா யிருத்தல் வேண்டும். ஆராய்ச்சியாளர் பலர் அவனை ஐந்தாம் நூற்றாண்டினன் என்று கருதுகின்றனர். இங்ஙனம் கருது வதற்குச் சரியான காரணம் கிடையாது. கோயில்கள் சங்க காலத்தில் கட்டப்பட்டிருக்க முடியாது என்ற அவர்கள் கருத்தே இதற்கு வழிவகுத்தது. இம் மறுப்பு, சங்ககாலத் தொடக்க நிலைக்கே பொருந்தும். கடைசிப் பகுதிக்கு அன்று எனலாம்.'[41]

களவழி நாற்பது சங்ககால நூலேயென்றும் கழுமலப்போர் நிகழ்ச்சியில் வரும் செங்கணான் சங்க காலத்தவனே என்றும் டாக்டர் கே. கே. பிள்ளை அவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்.[42]

---

41 அப்பாத்துரை, கா. 'தென்னாட்டுப் போர்க்களங்கள்', பக். 112

42 Pillay, Dr.K. K., Op. cit., Vol. I. pp. 126 - 127.

2. அயல்நாட்டார் குறிப்புகள்

மெகஸ்தனீஸ் (கி. மு. 302 - 296)

மாவீரர் அலெக்சாந்தரின் இறப்புக்குப்பின் அவருடைய அரசைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஆளுநர் பலர் ஆண்டனர். அத்தகைய ஆளுநர்களுள்[43] செல்யூகஸ் நிகேடர்[44] என்பவரும் ஒருவர். இவர் சிரியா நாட்டுக்கு ஆளுநரானார் (கி. மு. 312 - 280). பின்னர் நாடு பல வென்று தனியாட்சி புரியும் மன்னரானார்; கி. மு. 305-ல் இந்தியாவின்மீது படையெடுத்தார். அப்பொழுது மகதநாட்டு மன்னராய்த் திகழ்ந்த சந்திரகுப்த மௌரியர் அவரை எதிர்த்துப் போரிட்டார். பின்னர் இருவருக்கு மிடையே ஏற்பட்ட உடன்படிக்கையால் இவர்களிடையே நட்புறவு ஏற்பட்டது. இதற்குப் பின்னர் கி. மு. 302-ல் சந்திரகுப்தரின் அவைக்குச் செல்யூகஸ் நிகேடர், மெகஸ்தனீஸ்[45] என்பவரை அரச தூதுவராக அனுப்பினார்.

இவர் இந்தியாவில் தங்கியிருந்தபோது தாம் நேரில் கண்ட, கேட்டறிந்த செய்திகளைப் பல குறிப்புகளாய் எழுதினார். இவை யாவும் பின்னர் 'இண்டிகா'[46] எனும் நூலாகத் தொகுக்கப்பட்டது. இதில் பிறருடைய கூற்றுகளும் சேர்க்கப் பட்டுள்ளன. கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இந்நூலை மேக்ரிண்டில்[47] என்பாரும், அர்ரியன்[48] என்பாரும் மற்றும் பலரும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர்.

மெகஸ்தனீஸ், மௌரியரின் கோநகரான பாடலிபுரத்தில் ஆறு ஆண்டுகள் தங்கியிருந்தவர். இவர் தென்னாட்டிற்கு வரவில்லை. ஆயினும், அதுபற்றிக் கேட்ட செய்திகளையே இவர் கூறுகிறார்.

மெகஸ்தனீஸ் பாண்டிய நாடுபற்றிக் கூறுவது

இந்தியாவை ஆண்ட ஹிராக்கிளிஸ் II[49] என்பவனுக்குப் பிறந்த பெண்ணுக்குப் பண்டேயா[50] என்று பெயர். அவளுக்கு

---

43 Satraps
44 Seleucus Nicator
45 Megasthenes
46 Indika. இண்டிகா – இந்திய நாடு பற்றிய நூல்
47 McCrindle Indika
48 Arrian Indika
49 Heracles-II ஹிராக்கிளிஸ்-மலையத்துவச பாண்டியனைக் குறிக்கலாம்.
50 Pandeya

அவள் தந்தை இந்தியாவின் தென்பகுதியைப் பகிர்ந்தளித்தான். அப்பகுதி கடல்வரையில் பரந்துள்ளது. ஹிராக்கிளிஸ் தன் மகள் அரசாண்ட நாட்டை 365 ஊர்களாகப் பிரித்து, ஒவ்வோர் ஊரும் ஒவ்வொரு நாளைக்கு அரசிக்குரிய அரசு இறையைக் கொடுக்கும்படி கட்டளையிட்டான்.

கி.மு. நான்காம் நூற்றாண்டில் பாண்டிய நாடு தென்னகத்தே இருந்து வந்ததை மெகஸ்தனீஸின் குறிப்புகளால் அறிய முடிகிறது.

பிளினி

இயற்கை வரலாறு

பிளினி (கி. பி. 23 - 79) என்பவரால் எழுதப்பட்ட 'இயற்கை வரலாறு' என்னும் கிரேக்க நூலில் சங்க காலத் தமிழகத்தைப் பற்றிய குறிப்புகள் பல காணப்பெறுகின்றன.

பிளினி சங்கத் தமிழகத்திலிருந்த நாடுகளைக் குறிப்பிடுகிறார். மலையாளக் கடற்கரையை 'நாடே' என்றும், அது மிகவும் உயர்ந்த 'கபிதாலியா' என்னும் மலைகளால் சூழப்பட்ட தென்றும், அம் மலைகளுக்கு அருகில் பொன், வெள்ளிச் சுரங்கங்கள் உள்ளனவென்றும் கூறுகிறார்.

முசிறி

மேலைக் கடற்கரையில் உள்ள இப் பண்டைய துறைமுகப் பட்டினத்தைப்பற்றிப் பிளினி குறிப்பிடுகிறார். இம் முசிறித் துறைமுகத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது பிளினி ஓர் எச்சரிக்கையும் விடுக்கிறார். இம் முசிறித்துறையில் கப்பல்கள் பயமின்றித் தங்க முடியாது என்றும், இதற்குக் காரணம் ஆங்காங்கே இக் கடற்பகுதியில் கொள்ளைக் கூட்டத்தார் வசித்து வருவதும் அவர்கள் அவ்வப்பொழுது கடலில் வரும் கப்பல்களுக்கு இன்னல் விளைவிப்பதுமே யாகும் என்றும் கூறுகிறார். இக் கொள்ளைக் கூட்டத்தார் முசிறிக்கு அருகில் உள்ள நித்திரியஸ்[51] என்னும் தீவைத் (இருப்பிடம் 12° 52′ வ. × 75° கி.) தங்கள் தாயகமாகக் கொண்டுள்ளனர் என்றும் கூறுகிறார். இதனால்தான் இத் துறைமுகத்தில் மிகவும் விலையுயர்ந்த பண்டங்களைக் கொள்முதல் செய்வதில்லை என்றும் அவர் கூறுகிறார். மேலும், இத் துறைமுகம் கடற்கரையிலிருந்து உள்ளே வெகு தொலைவில் உள்ளதால், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் யாவும் சிறிய

---

51 Nitrias

படகுகளின்மூலம் கொண்டுசெல்லப்பட்டும், கொண்டுவரப் பட்டும் வாணிகம் நடைபெறுகிறதென்றும் கூறுகிறார். இவ் வரலாற்றைத் தாம் எழுதிக்கொண்டிருக்கும்போது, அந்த இடத்தை ஆண்ட அரசரைக் கலோபோத்ராஸ்[52] என்று குறிப்பிட்டுள்ளார். சேரரையே இவ்வாறு அவர் குறித்தார் எனக் கொள்ளலாம்.

நியாசிண்டன் — மதுரை

முசிறியைவிடக் கப்பல் போக்குவரத்திற்குக் காவிரிப்பூம் பட்டினத்தை அடுத்திருந்த தகுந்த துறைமுகம் நியாசிண்டன்[53] ஆகும் என்று பிளினி குறிப்பிடுகிறார். இதனை மக்கள் பிகாரே[54] என்றும் அழைப்பரென்றும் கூறுகிறார். இப் பட்டினம் உள்நாட்டிலிருக்கும் பாண்டிய மன்னனின் ஆட்சியின் கீழுள தென்றும், இது அரசன் வதியுமிடத்திற்கு வெகு தொலைவி லுள்ளது என்றும், அரசன் வதியுமிடம் மொதுரா[55] என்றும் குறிப்பிட்டுள்ளார். இத் துறைக்குக் கொட்டனாரா[56] என்ற இடத்திலிருந்து ஒரே அடிமரத்தால் செய்யப்பட்ட படகின்மூலம் மிளகு கொண்டு வரப்படுகிறதென்றும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து முசிறிக்குத் தெற்கே பாண்டியரின் துறைமுகம் ஒன்று மேற்குக் கடலில் இருந்தது என்பதை அறியலாம்.

பெரிபுளூஸ் (கி.பி. 50-80)

'பெரிபுளூஸ்' என்பது ரோமானியர் காலத்தில் கடற் பயணத்திற்கு உதவியாக எழுதப்பட்ட 'பயணக் குறிப்புகள்' ஆகும். சிலர் இதனைக் 'கடற் படம்' அல்லது 'செங்கடற் பயணக் கையேடு'[57] என்றும் அழைப்பர். கி. பி. முதல் நூற்றாண்டில் இந்தியப் பெருங்கடலில் நடந்த வணிகத்தைப் பற்றிய குறிப்புகள் என்றும் இதனைக் கூறலாம்.

தொண்டி

இதனைப் பெரிபுளூஸ் நூலார் திண்டிஸ்[58] எனக் குறிப்பிடு கிறார். இத் துறைமுகம் சேரருடையது. இதற்கப்பால் 500

---

52 Calobothras
53 Neacyndon
54 Becare
55 Modura
56 Cottonara
57 Periplus of Erythraean Sea
58 Tyndis

ஸ்டேடியா (62·5 மைல் அல்லது 100 கி.மீ.) தொலைவுள்ள முசிறித் துறைமுகத்தின் வழியாக ஏற்றுமதி செய்வதற்காகப் பண்டங்கள் கப்பல்களில் ஏற்றப்படுகின்றன. முசிறி (நொய்யல்) ஆற்றங்கரையின் கழிமுகத்திலிருந்து 20 ஸ்டேடியா தூரம் உள்ளே தள்ளி உள்ளது. முசிறிக்கு 500 ஸ்டேடியா தொலைவில் பாண்டிய நாட்டிற்குச் சொந்தமான நெல்சிண்டா[59] என்னும் பட்டினம் உள்ளது என்று பெரிபுளூஸில் குறிக்கப் பட்டுள்ளது. இந்த நகரம் கடலிலிருந்து 120 ஸ்டேடியா தொலைவில் ஓர் ஆற்றங்கரையில் உள்ளது என்று பெரிபுளூஸ் குறிக்கின்றது.

நெல்சிண்டா நகரம் அமைந்திருக்கும் ஆற்றின் கழிமுகத்தில் பொரக்காடு (பிகாரே)[60] அமைந்திருக்கிறது என்று பெரிபுளூஸ் நூலில் குறிக்கப்பட்டுள்ளது. பொரக்காட்டில் இருந்து மிகப் பெரிய மிளகு, இலவங்கபத்திரி ஆகியவை பெரிய கப்பல்கள் மூலம் கிரேக்க நாடுகளுக்குப் பெருவாரியாக ஏற்றுமதி செய்யப் படுகின்றன. நாணயங்கள், புட்பராகம், மெல்லிய துணிகள், சித்திரம் வரையப்பட்ட நார்ப்பட்டுகள், நீலாஞ்சனக்கல், பவளம், கண்ணாடி, பித்தளை, தகரம், ஈயம், மதுபானக் குப்பிகள், மாலுமிகளுக்குத் தேவையான கோதுமை முதலியன அந்தத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறப் பட்டுள்ளது. மேலைக் கடற்கரையிலிருந்து ஏற்றுமதியான பண்டங்களின் விவரங்களையும் இந் நூல் கூறுகிறது. மிளகு இங்கு மட்டுமே உற்பத்தியாகும் பண்டமென்றும், அதுவும் கொட்டனாரா (குட்டநாடு) அருகில்தான், இது அதிகமாகப் பயிராகிறதென்றும் இந் நூல் கூறுகிறது. பெருவாரியான அளவில் முத்துகளும், தந்தமும், பட்டுத்துணியும், கங்கைக் கரையிலிருந்து கொண்டுவரப்பட்ட சடாமாஞ்சிலும், உள்நாட்டிலிருந்து வரும் இலவங்கபத்திரியும், ஒளி ஊடுருவிப் பாயும் படிகக் கற்களும், வைரம், நீலக்கல், ஆமை ஓடு முதலியனவும், கிரிஸே தீவிலிருந்து (காழகத்திலிருந்து) வரும் பொருள்களும், திமிரிகா (தமிழகம்) கடற்கரையோரமாகவே பல்வேறு தீவுகளில் கிடைக்கும் பொருள்களும் ஏற்றுமதி செய்யப்பட்டனவாம். எகிப்தில் பருவக்காற்றுத் தொடங்கும் சூலை மாதத்தில் பயணத்தைத் தொடங்கும் கப்பல்கள் இங்கு வந்து பருவக்காற்று சாதகமாகும் போது, இத்தகைய பண்டங்களை ஏற்றிக்கொண்டு திரும்புகின்றன என இந்நூல் கூறுகிறது.

---

59 Nelcynda
60 Becare

கன்னியாகுமரி

குமாரி என்று ஓர் இடம் இருந்ததாகவும், அங்கே குமாரி[61] என்ற தேவதை முன்னொரு காலத்தில் தினமும் நீராடி வாழ்ந்ததாகவும், அதனையடுத்துக் குமரிமுனையும் அதன் துறைமுகமும் இருந்தன என்றும் குறிப்பிடுகிறார் பெரிபுளூஸ் நூலார். இத்துறையில் தங்களின் எஞ்சிய வாழ்நாளைக் கழிப் பதற்காக மக்கள் அங்கு வந்து நீராடி, நோன்புநோற்று வாழ்ந் தனர் என்றும் இவர் குறித்துள்ளார்.

கொற்கை (கோல்சி)

குமரியிலிருந்து புறப்பட்டுச் சென்று கோல்சி[62] என்னும் துறைமுகத்தை அடையலாம். அங்கு முத்துக்குளியல் நடை பெறுகிறது. தண்டனைக்குள்ளான குற்றவாளிகள், இம் முத்துக் குளியல் பணியில் ஈடுபட்டுள்ளனர். **பாண்டியன்**[63] என்னும் அரசனுக்கு, இத் துறைமுகம் சொந்தமானது என்று பெரிபுளூஸ் குறிக்கின்றது.

உறையூர் (ஆற்கரு)[64]

கொற்கையை அடுத்து (சோழமண்டலக் கடற்கரை) உள்ள விரிகுடாவில் **ஆற்கரு**[65] என்னும் ஊர் காணப்படுகிறது. இக் கடற்கரை முழுவதிலும் கிடைக்கும் முத்துகள் யாவும், இவ்வூருக் குக் கொண்டுவரப்படுகின்றன. வேறெந்த ஊருக்கும் அவை எடுத்துச் செல்லப்படுவதில்லை. முத்துகள் மட்டுமேயல்லாது **ஆற்கருத் துணிகள்** எனும் புகழ்மிக்க மஸ்லின் துணிகளும் இங்கிருந்து பேரளவில் ஏற்றுமதியாகின்றன என்பது பெரிபுளூஸ் நூலார் கூற்றாகும்.

சோழமண்டலத் துறைமுகங்கள்

வடக்கே இருந்து கீழக்கரை ஓரமாகத் தமிழகத்திற்குப் (திமிரிகா)[66] பல கப்பல்கள் வருகின்றன. அவ்வாறு வரும் கப்பல்கள் முக்கியமாகக் கமரா[67] (காவிரிப்பூம்பட்டினம்),

---

61 Kumari
62 Colchi
63 Pandean
64 Argaru
65 ஆற்கரு என்பது உறையூரைக் குறிக்கும். இது சோழரின் தலைநகராகத் திகழ்ந்தது. சோழ அரசன் உறைந்த ஊர் ஆதலால் உறையூர் ஆயிற்று இவ்வூர் சங்க இலக்கியங்களில் புகழ்ந்து பேசப்படுகிறது.
66 Dimirica
67 Camara

பொதுக்கா[68] (புதுச்சேரி அருகில் இருந்த பொதுகைப்பட்டினம்), சோபாட்மா[69] (சோப்பட்டினம் — மரக்காணம்) ஆகிய துறை முகங்களை அடைகின்றன.

கப்பல் வகைகள்

நீளமான மரத்துண்டுகள் ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டப்பட்ட கப்பல்களான சங்கரா[70] என்னும் கப்பல்கள் இப் பகுதியில் நடமாடுகின்றன. ஆனால், கிரிஸே[71] கங்கேக்குச்[72] செல்லும் கப்பல்கள் மிகப் பெரியவை. இவற் றிற்குச் சொலாண்டியா[73] என்று பெயர். தமிழகத்தில் உற்பத்தி யாகும் பொருள்களும், சிலபோது எகிப்திலிருந்து வரும் பொருள் களும், பராலியா[74] (திருவனந்தபுரம்) வழியாக வருகின்ற பண்டங்களும் இந்தத் துறைமுகங்களைச் சேர்கின்றன.

முடிவுரை

இவ்வாறு கி. மு. முதலாம் நூற்றாண்டில் தமிழகத்தின் நிலைமையை அறிய, பெரிபுளூஸ் நூல் பெரிதும் உதவுவதைக் கண்டோம். பொதுவாக இந்தியாவிற்கும் எகிப்து நாட்டிற்கும் இடையே நிலவிய வாணிகத்தையும், வாணிகப் பொருள்களையும் இந் நூலில் இருந்து அறிகிறோம். தமிழகத் துறைமுகங்களின் பெயர்களையும், அவை ஒவ்வொன்றிலிருந்தும் ஏற்றுமதியான பண்டங்களையும், இறக்குமதியான பண்டங்களையும் விவரப் பட்டியல் போல் தெளிவாக அறிகிறோம். ஆகவேதான், சங்க காலத் தமிழகத்தை அறிய உதவும் அயலகச் சான்றுகளில், பெரிபுளூஸ் நூலையும் ஒரு சிறந்த அடிப்படைச் சான்றாகக் கொள்ளுகிறோம்.

தாலமி (கி.பி. 119 - 161)

கிளாடியஸ் தாலமி தம்முடைய புவியியலில் இந்தியாவைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியும் குறித்துள்ளார்.

---

68 Poduca
69 Sopatma
70 Sangara
71 Chrysae
72 Gangetie Region
73 Colandia
74 Paralia

இவரும் தமது நூலில், தொண்டி[75], முசிறி[76], பொரக்காடு[77], நெல்சிண்டா[78], குமரிமுனை[79], உறையூர்[80] ஆகிய துறைமுகங்களைக் குறித்துள்ளார். இதிலிருந்து அவர் வாழ்ந்த கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இத் துறைமுகங்கள் சிறந்து விளங்கின என்பதை அறியலாம்.

தமிழகத்தின் வெளிநாட்டுத் தொடர்பைப் பற்றியும், கடல் வாணிகத்தைப் பற்றியும் பிளினி, தாலமி முதலானோர் குறித்துள்ளவை சங்க இலக்கியத்தில் குறித்துள்ளவற்றோடு ஒத்து உள்ளதால், இந்த வெளிநாட்டுக் குறிப்புகளும் சங்ககால வரலாற்றிற்கு அடிப்படைச் சான்றாக அமைகின்றன.

பான் கௌ[81]

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பான் கௌ என்ற சீன ஆசிரியர், சியன் ஹான் கௌ[82] என்னும் தம் நூலில், தமிழகத்தில் காஞ்சி நகரம் அவரது காலத்தில் இருந்து வந்ததைக் குறித்துள்ளார். காஞ்சியை ஹவுன்ங் டிசி[83] என்று குறித்துள்ளார். சீனப் போரசர் காஞ்சியை ஆண்ட அரசனின் அவைக்குத் தம் தூதுவனை அனுப்பி, காண்டாமிருகம் (யானை) ஒன்றைத் தம் நாட்டிற்கு அனுப்புமாறும், அதனுடன் ஒரு தூதுவனையும் தம் அவைக்குத் திருப்பி அனுப்புமாறும் கேட்டுக்கொண்டார். இந்தக் குறிப்பிலிருந்து, கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே தமிழகத்திற்கும், சீனநாட்டிற்கும் தொடர்பிருந்தது என்பதை உணரலாம். மைசூர்ப் பிரதேசத்தில் உள்ள சந்திரவல்லி என்னும் இடத்தில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன நாணயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளமை பான் கௌ குறித்துள்ளதைத் தெளிவுபடுத்துகிறது.

3. தொல்பொருள் சின்னங்கள்

மண்ணுக்கு அடியில் மறைந்து கிடக்கும் மனித இனத்தின் பண்டைய நாகரிகச் சின்னங்களை அகழ்ந்து எடுத்து வெளிப்

---

75 Tindis
76 Muziris
77 Becare
78 Nelcynda
79 Cory
80 Argari
81 Pan Kou
82 Is'en han chou
83 Houng Tche

படுத்தி, அவற்றின் உண்மை வரலாறுகளை உலகிற்கு அறிவிக்கும் ஆய்வு இன்றைய அறிவியல்களில் ஒன்றாகும். மண்ணுக்கடியில் மட்டுமேயன்றி, கடலுக்கடியிலும் (நீருக் கடியிலும்) இத்தகைய ஆய்வுகள் நடைபெறுகின்றன. இவ் வாய்வு கண்டெடுக்கும் தொல்பழம் சின்னங்கள் நமது முன்னோர் வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும், அரசியல், பொருளாதார, சமூக நிலைமை களையும் சுருங்கக் கூறின், அவர்களின் நாகரிகத்தைப் பற்றியும் ஓரளவு அறிய உதவுகின்றன.

ஓர் எடுத்துக்காட்டு : பூம்புகார்

புகார், பூம்புகார், பட்டினம், காவிரிப்பூம்பட்டினம் முதலிய பெயர்களால் அறியப்படும் பூம்புகார்ப் பட்டினம் சோழ மன்னர்கள் காலத்தில், குறிப்பாகக் கரிகாற் பெருவளத்தான் காலத்தில் தலைசிறந்த தலைநகராகவும், புகழ்படைத்த துறைமுகமாகவும் விளங்கியதைப் பட்டினப்பாலை விவரிக்கின்றது. இந் நகரின் பெருமையினைப் பட்டினப்பாலை ஒரு தலைசிறந்த வணிகத் தலமாகவும், தன்னக அயலகப் படகுகள் வந்து தங்கி, ஏற்றுமதி இறக்குமதிகளைச் செய்து வாணிகத்தை வளப்படுத்திய தாகவும் கூறுகிறது. அவ்வாறு படகுகளிலிருந்து வந்திறங்கிய பொருள்களில் அரபுநாட்டுக் குதிரைகள், வடமலைப் பகுதியி லிருந்து வந்த மணி, பொன் ஆகியவை, மேலைமலை அகில், தென்கடல் முத்துகள், கீழைக்கடல் பவளம், கங்கை வெளியி லிருந்து வந்த எண்ணற்ற பொருள்கள், காவிரியின் நெல் வகைகள், ஈழத்து உணவுப் பண்டங்கள் முதலியன வணிகப் பொருள்களாகக் காவிரித்துறையில் குவித்து வைக்கப்பட்ட காட்சியைப் பட்டினப்பாலை விரிக்கிறது.[84] கடல் வாணிகத்தால் நகரில் குவிந்த செல்வம்பற்றிச் சிலப்பதிகாரமும் பேசுகிறது.[85]

---

84 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு' (பட்டினப். 185 – 193)

85 'முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
அரும்பொருள் தரூஉம் விருந்திற் றேஎம்
ஒருங்குதொக் கன்ன உடைப்பெரும் பண்டம்' (சிலப். 2 ; 3–6)

இவ்வாறு தாயக இலக்கியங்களில் கூறப்பெற்ற உண்மைகளை மாற்றுரைத்து மெய்ம்மையறிய விரும்பும் ஒரு தமிழக வரலாற்று ஆசிரியன், அதே உண்மைகள் அயலக இலக்கியங்களிலும், அயல்நாட்டவரின் குறிப்புகளிலும், தாயகக் கல்வெட்டுகளிலும், அயலகக் கல்வெட்டுகளிலும் ஒரேவிதமாய் மாறுதலின்றிக் காணப்பெறுவதைக் கண்டு பெருமிதம் அடைகிறான். உலக வரலாற்று அறிஞர்களும் அதனை ஒப்புக்கொண்டுதானே ஆகவேண்டும் !

பூம்புகார் அகழ்வாய்ச் சின்னங்கள்

படகுதுறை : காவிரியாறு, முன்பு கடலோடு கலந்த இடம் இன்று மறைந்து காணப்படினும், அகழ்வாராய்ச்சியாளரின் பெரு முயற்சியால் கீழையூர் என்னுமிடத்தில் பூமிக்கடியில் ஒரு செங்கற் கட்டடம் கண்டுபிடிக்கப்பெற்றது. அதனை நன்கு ஆய்ந்து அஃதொரு படகுதுறை யென்றறிந்தனர். இதனை மேலும் துருவி ஆய்ந்து சிறிய படகுகளை நிறுத்திச் சரக்குகளை இறக்குமதி ஏற்றுமதி செய்வதற்கான சிறிய முன்துறை[86] என்று கண்டனர். இத் துறையின் சுவருக்குப் பெரிய செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இச் சுவரில் கம்பங்களிருந்தன வென்றும், அவற்றில்தாம் படகுகளைக் கட்டிவைத்தனரென்றும் அல்லது அவற்றின்மீது பலகைகளைப் பரப்பிப் பொருள்களை ஏற்றுவதற்கு ஏந்தாகப் பயன்படுத்தினரென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். இங்குக் கிடைத்த மரக்கம்பங்கள் 'கார்பன்-14'[87] என்னும் விஞ்ஞான முறைப்படி பரிசோதிக்கப்பட்டன. அதன்படி அவை சுமார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவை யென்று கணிக்கப்பட்டுள்ளன.[88]

புத்தப் பள்ளி

பூம்புகாரில் மேலையூர்ப் பகுதியில் 'பல்லவனீச்சுரம்' என்னும் கோயிலுக்கருகில் நடத்திய அகழ்வாராய்ச்சியில் ஒரு புத்தப் பள்ளிக் கட்டடம் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது. புத்தரை வழி பாடு செய்வதற்கும் துறவிகள் தங்குவதற்கும் ஏந்தாக இக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் ஓர் அறையில் புத்தரின் அழகிய திருமேனி கண்டெடுக்கப்பெற்றுள்ளது. மற்றோர் அறையில் புத்தரின் பாதங்களைக் கொண்ட (செதுக்கப்பட்ட) சுமார் 107 செ.மீ. நீளமும், 76 செ.மீ. அகலமும் உள்ள சலவைக்கல் ஒன்றும் கண்டெடுக்கப்பெற்றுள்ளது.

---

86 Brick jetty

87 Carbon-14

88 இராமன், டாக்டர் கே. வி., 'தொல்லியல் ஆய்வுகள்', பக். 37

பூம்புகாரில் புத்த சமயம் சிறந்து விளங்கியதென்பதைப் பல் வேறு சான்றுகளும் கூறுவதை இன்றைய இந்த அகழ்வாராய்ச்சி கண்கூடாகக் காட்டிவிட்டது. சிலப்பதிகாரத்தில் சிவன், திருமால், புத்தன், வர்த்தமானர் முதலிய தெய்வங்களுக்கே யன்றிப் பல்வேறு தெய்வங்களுக்கும் கோட்டங்களிருந்தமை பேசப்படுகிறது. மணிமேகலையாலும் பூம்புகாரில் புத்தப் பள்ளி இருந்ததைத் தெளிவாக அறிகிறோம்.

பூம்புகார் நகரம் கடலில் மூழ்கியது என்ற செய்தியைச் சிலம்பும், மணிமேகலையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

வானகிரி நீர்த்தேக்கம்

காவிரிப்பூம்பட்டினத்தின் ஒரு பகுதியில் (இன்று 'வானகிரி' என்னும் ஊரின் அருகில்) நடந்த கடலோரப் பகுதி அகழ்வா ராய்ச்சியில் ஒரு நீர்த்தேக்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் ஓரளவுக்குமேல் நீர் தேங்கியவுடன் வழிந்தோட ஏதுவாக முகத் துவாரமும் செங்கற்களால் படிப்படியாக அழகாக அமைக்கப் பட்டுள்ளது. இது சுமார் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டதாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. காவிரி ஆற்றி லிருந்து நீரைக் கொண்டுபோய்த் தேக்கி, அணைகள் கட்டி, நீரைப் பகிர்ந்துவிட்ட சோழர்களைப்பற்றிப் படிக்கும் நமக்கு வானகிரி நீர்த்தேக்கம் கண்கண்ட காட்சியாகிறது. வானகிரியில் தான் உரோமானிய நாணயமும், 'ரவுலடெட்' எனப்பெறும் ஒரு வகை உரோமானிய மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. இது சிலப்பதிகாரம் சுட்டும்[89] யவனர் குடியிருப்பாகலாமென அறிஞர்கள் கருதுகின்றனர். இது மருவூர்ப்பாக்கத்தில் இருந்தது.

அரிக்கமேடு

புதுச்சேரிக்குத் தெற்கில் இரண்டரைக் கிலோமீட்டர் தொலைவிலுள்ள 'அரிக்கமேடு' என்னுமிடத்தில்தான் முதன் முதலாக 1945ஆம் ஆண்டு, அறிவியல் அடிப்படையில் அகழ் வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதனை மேற்கொண்டவர் சர் மார்ட்டிமர் வீலர் ஆவார். இவ்வகழ்வாராய்ச்சியில் பல குடி யிருந்த பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை உரோமர் களின் இருப்புகளென்றும், இங்குக் கிடைத்துள்ள உரோமானியர் பயன்படுத்திய தங்கக் காசுகள், பானைகள் மற்றும் பல பொருள் களைக் கொண்டு இவை கி. மு. முதல் நூற்றாண்டிற்கும் கி. பி.

89 'கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்துஇருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்' (சிலப். 5: 11-12)

முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவை யென்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். செங்கற்களால் கட்டப்பட்ட பண்டசாலைகள், சாயச்சாலைகள் ஆகியவற்றின் இடிபாடுகளும் இங்குக் காணப்படுகின்றன.

சுடுமண்ணால் செய்யப்பட்ட அழகிய ஆண், பெண் உருவங் கள் பெரிதும் இங்குக் கிடைத்துள்ளன.

அரிக்கமேட்டில் வண்ணம் தீட்டப்பட்ட பளபளப்பான பானை ஓடுகளும், உருவங்கள் தீட்டப்பட்ட பானை ஓடுகளும், பிராமி எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடுகளும் கிடைத் துள்ளன. 'பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் அக்காலச் சமுதாயத்தில் சாதாரணக் குடிமக்களிடையே நிலவி வந்த கல்வி, எழுத்து அறிவை நமக்கு உணர்த்துகின்றன.'[90] இந்தப் பிராமி எழுத்துகள் கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண் டைச் சார்ந்தவையாகும். பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் அழகறை, உறையூர், கொற்கை, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளிலும் கிடைத் துள்ளன.

மேலும், இத்தாலி நாட்டில் மட்பாண்டத்திற்குப் பெயர்போன அரிஸ்ஸோ நகரக் குயவர்கள் வனைந்த அரிட்டைன் மட்பாண் டங்களின் ஓடுகளும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இரட் டைக் கைப்பிடியுள்ள மதுச்சாடிகளும், கண்ணாடிக் கோப்பை களும் சிதைந்த நிலையிலும் சிறப்பாகக் காணப்படுகின்றன.

அழகிய பளபளப்பான பலவண்ணக் கற்களால் செய்யப் பட்ட மணிகள், சுடுமண் காதணிகள், சங்கு வளையல்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பொருள்கள் முதலியனவும் இங்குக் கிடைத்துள்ளன.

மேற்கூறப்பெற்ற அரிக்கமேட்டுத் தொல்பொருள் சின்னங் களால் நாம் நமது தமிழகத்திற்கும் நடுநிலக்கடல் பகுதி மக்களுக்குமிடையே நடந்த பண்டைய வாணிக உறவுமுறை களையும், பண்பாட்டுப் பரிவர்த்தனைகளையும் ஊகித்தறி கிறோம். 'சங்க நூல்களின் வாயிலாகத் துறைமுகங்களையும்

---

90 குருமூர்த்தி, சா., 'தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்', சென்னைப் பல்கலைக்கழகம், பக். 31

அங்கு நடந்த அயல்நாட்டுக் கடல் வாணிகச் சிறப்புகளையும் பற்றிப் படித்து அறிந்தோமேயன்றி, அவற்றின் சான்றுகளையும் தடையங்களையும் நாம் ஐயமறக் கண்டதில்லை. தமிழர் நெடுங் காலமாக வேண்டிநின்ற சான்றுகளையும், பயன்படுத்திய பொருள்களையும் ஓரளவு அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சி, தமிழர்க்கு முதன்மை தந்து உதவுகிறது' என்று இவ்வாய்வினை மேற்கொண்ட சர் மார்ட்டிமர் வீலர் கூறுகிறார்.[91]

---

91 Wheeler, Sir Martimer, *Rome beyond the Imperial Frontiers*, pp. 124-125

இயல் 2

அடிப்படைச் சான்றுகள்-II

கல்வெட்டுகள்

முன்னுரை

இந்திய நாட்டில் பழமையான கல்வெட்டுகள் என்று கூறப்படுபவை அசோகன் கல்வெட்டுகளாகும். பாறைகளிலும் கல் தூண்களிலும் புத்தமதக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்துடன் அவை அசோக அரசனால் பொறிக்கப்பட்டவையாகும்.

தமிழ்நாட்டிலுள்ள பழமையான கல்வெட்டுகள் சமணக் குகைகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சமணமதக் கொள்கைகள் பொறிக்கப்படவில்லை. மாறாகத் தமிழ்நாட்டுப் பிற்காலக் கல்வெட்டுகளில் காணப்படுவதுபோன்ற செய்திகள் அக் கல்வெட்டுகளில் உள்ளன.

சங்ககாலக் கல்வெட்டுகளில், கல்வெட்டுகள் உள்ள குகையில் தங்கியிருந்த முனிவர்களின் பெயர்களும், அவர்களுக்கு உதவியவர்களின் பெயர்களும், எந்த வகையில் உதவி செய்தார்கள் என்ற விளக்கமும், சில கல்வெட்டுகளில் கல்வெட்டுகளைப் பொறித்தவர் இன்னார் என்பதும் குறிக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பானது தமிழ்நாட்டிலுள்ள பிற்காலக் கோயில் கல்வெட்டுகளில் கோயிலுக்குக் கொடையளித்தவர்கள் பெயர்களும், அவர்கள் அளித்த கொடைப்பொருள்களும் குறிப்பிடப்படுவதைப் போன்றதாகும். இத்தக் கல்வெட்டுத் தொடர்பாங்கானது முற்றிலும் தமிழ்நாட்டிற்கே உரிய பாணியாகும்.

சங்ககாலக் கல்வெட்டுகள் அசோகன் பயன்படுத்திய அதே பிராமி (தாமிழி, தமிழி) எழுத்துகளில் உள்ளன. எனவே, இதன் காலமானது அசோகன் கல்வெட்டுகள் தோன்றிய காலத்தவை என்றும், சற்று முன்னும் பின்னும் தோன்றிய கல்வெட்டுகளும் உள்ளன என்றும் அறிஞர்கள் கணித்துக் கூறியுள்ளனர்.

திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழ்நாட்டில் காணப்படும் சங்ககாலக் கல்வெட்டுகள் அனைத்தையும் திரட்டி அக் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகளின் பருமன், எழுத்துகளின் உருமாற்றம் முதலானவற்றின் அடிப்படையில் ஒருவாறு அவற்றைக் காலநிரல் செய்துள்ளார். அதனைப் பெரும்பாலான அறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே, அவர் கண்ட முறைப்படி கல்வெட்டுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

சங்ககாலக் கல்வெட்டுகள் சங்ககால வரலாற்றை அறிய உதவும் வகையும். கல்வெட்டுகளில் உள்ள பொதுச் செய்தியும் முதலில் முறையே இங்குத் தரப்படுகின்றன. பின்பு கல்வெட்டுகளை இதுவரை படித்தறிந்தவர்களின் பாடங்களில் சிறந்தவை செய்தியில் தரப்பட்டு விளக்கமும் கூறப்பட்டுள்ளது. ஆங்காங்கே கருத்துக்கு மாறுபடுவோரின் பாடங்களும் விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றின் விரிவைப் பிற்சேர்க்கைப் பகுதியிலும் காணலாம்.

கல்வெட்டுகள் பல சிதைந்த நிலையில் உள்ளன. அன்றியும் அவற்றைப் பொறித்தவர்களின் மொழியறிவு செம்மையானதாக இல்லாமல் சிற்சில பிழைகளும், அக்கால முறைமைகளும் உடையனவாக உள்ளன. சில குறியீடுகள் குறிப்பாக அழகர்மலைக் கல்வெட்டுகளில் உள்ளவை. இதுவரை யாராலும் தெளிவாக்கப் படவில்லை. இந்த நிலையில் கிடைத்துள்ள பாடங்களையும் விளக்கங்களையும், சிலர் நேரில் படித்தறிந்து தந்துள்ள கருத்து விளக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு இந்த வரலாற்றுப் பகுதி அமைந்துள்ளது. டாக்டர் கே. வி. இராமன், டாக்டர் ஏ. சுப்பராயலு, தொல்பொருள் துறையைச் சேர்ந்த திரு. சி. சிவராமமூர்த்தி, திரு. மயிலை சீனி. வேங்கடசாமி ஆகியோர் நேரில் படித்தறிந்து தந்த கருத்துகளும் ஒப்புக் கொள்ளத்தக்க வகையில் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. பிற அறிஞர்கள் இக் கல்வெட்டுத் தொடர்பாக எழுதி வெளியிட்டுள்ள செய்திகளும் இதில் இடம்பெற்றுள்ளன. எதிர்காலத்தில் இக் கல்வெட்டுகளைப் படிக்கும் பாடம் மாறுபடுமாயின், செய்திகளும் மாற இடமுண்டு. இன்றைய நிலையில் இக் கல்வெட்டுகளால் தெரியவரும் வரலாற்றுச் செய்திகள் இவை என்ற நோக்கிலேயே, இந்த வரலாற்றுப் பகுதியை நாம் அணுகவேண்டும்.

சங்ககால வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் உதவிபுரிவன இலக்கியங்களே. அவ்விலக்கியங்களில் காணப்படும் வரலாற்றுத்

தொடர்புடையோரின் பெயர்களைக் காலத்தால் மேலும் உறுதி செய்வதற்குத் துணையாகச் சங்ககாலக் கல்வெட்டுகள் பல தமிழ்நாட்டில் ஆங்காங்கே கிடைத்துள்ளன. அந்தக் கல் வெட்டுகள் இயற்கையாக அமைந்துள்ள மலைக்குகைகளில் செயற்கையாய் இருப்பிட வாய்ப்புச் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ளன.

இந்தக் குகைகளிலெல்லாம் சமண முனிவர்கள் தங்கியிருந் தனர். பௌத்தத் துறவிகள் தங்கியிருந்ததாகக் கருதுவோரு முண்டு.[1] தங்கியிருந்தவர் பெயர்களும், தங்கியிருந்தவர் களுக்கு உதவியவர்களின் பெயர்களும், உதவிய வகையும் பிறவும் ஆங்காங்குள்ள கல்வெட்டுகளில் அக்கால எழுத்துகளால் பொறிக் கப்பட்டுள்ளன.[2]

குகையின் அமைப்பும் வெட்டெழுத்துகளும்

குகையின் மேற்பாறையில் மழைநீர் வழிந்து தங்கியிருப்பவர் களுக்கு இடையூறு செய்யாவண்ணம் கூரையில் இறைவான அமைப்புடைய சிறு வடிம்புத்தவணை எல்லாக் குகைகளிலும் அமைக்கப்பட்டுள்ளது. குகை உட்குழிவுள்ளதாய் இருக்குமிடங் களில் மேற்கூறிய வடிம்பிலிருந்து விழும் நீரும், சாரல் மழை நீரும் உட்குழிவுகளுக்குச் செல்லாமல் தடுக்கும் வகையில் குகையின் அடிப்பாறையிலும் சிறு வடிகால் அமைப்புகள் செய்யப்பட்டுள்ளன. குகைக்குள்ளும், குகையின் முற்றத்திலும் ஆங்காங்கே பல படுக்கைகளும், சிற்சில இடங்களில் அமரும் இடங்களும் கல் உளி கொண்டு வெட்டிச் செப்பம் செய்யப்பட்டுள்ளன. ஆறுநாட்டார் மலை முதலான இடங்களில் படுக்கைக் கல்லின்மீது பூசப் பெற்றுள்ள வழவழப்பான ஒருவகைக் களிம்பு, ஈராயிரம் ஆண்டு களுக்குமேல் ஆகியும் இன்றும் நிலைகுலையாமல் இருப்பது ஒரு விந்தையே. குகைக்கு ஏறிச்செல்லும் வழியில் காலின் அடிகள் மட்டும் வைக்கும் அளவுள்ளதாகச் சில படிக்கட்டுகள் செதுக்கப் பெற்றுள்ளன.

---

[1] Nilakanta Sastri, K. A., Op. cit., p. 90

[2] இந்த எழுத்தைப் பிராமி எழுத்துகள் என்று வழங்கி வந்தனர். எனினும் அசோகன் கல்வெட்டில் காணப்படும் பிராமி எழுத்துகளில் வடமொழியிலுள்ள வல்லின எழுத்துகளுக்கான வர்க்க எழுத்துக் குறியீடுகள் உள்ளதாலும், தமிழ்நாட்டிலுள்ள இந்தக் கல்வெட்டுகளில் அந்த வர்க்க எழுத்துக் குறியீடுகள் யாண்டும் காணப்படாததாலும், மேலும், சிறப்பாகத் தமிழ்மொழிக்கே உரிய 'ற', 'ன', 'ழ' ஆகிய எழுத்துகள் காணப்படுவதாலும் இதனைத் 'தமிழி' என்று பெயரிட்டு வழங்கி வருகின்றனர். இந்தத் 'தமிழி' எழுத்து நிலையிலும், காலத்தால் முந்தியவை 'தாமிழி' என்றும், பிற்காலத்தைத் 'தமிழி' என்றும் வழங்கி வருகின்றனர். 'திராவிடி' என்று வரலாற்றில் குறிப்பிடப்படும் எழுத்து இதுவே என்றும் கருதப்படுகிறது.

இத்தகைய குகைகளில் பொதுவாக, குகையைச் செயற்கை முறையில் வாய்ப்புள்ளதாகச் செய்து தந்தவர்களின் பெயர்கள் மேற்பாறையில் நீர்த்தாரை வடிம்பிற்குக் கீழே பொறிக்கப் பட்டுள்ளன. குகையில் தங்கியிருந்தவர்களின் பெயர்கள் படுக்கைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறு மேடைப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளன. வேறு வகையில் உதவியவர்களின் பெயர்களும், பிறவும் சிற்சில இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன.

காலம்

இந்தக் கல்வெட்டுகளின் காலத்தைப்பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவிவருகின்றன. திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் இதன் தொன்மையைக் கி. மு. இரண்டாம் நூற்றாண்டுவரை கொண்டுசெல்கிறார். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினரும் இவரது கருத்தினை ஏற்றுக் கல்வெட்டுகள் உள்ள இடங்களில் ஆங்காங்கே குறிப்புப் பலகைகளை வைத்துள்ளனர். ஆந்திர மாநிலத்திலுள்ள பட்டிப்புரோலு என்னுமிடத்தில் காணப் படும் பௌத்தக் கோயில் கல்வெட்டை ஆராய்ந்த இந்தியத் தொல் பொருள் துறையினர், அக் கல்வெட்டை அசோகனுக்கு முந்திய எழுத்தாக இருக்கலாம் என்று கணித்துள்ளனர். இவ்வெழுத்து அசோகன் காலத்திற்கு முந்தியதாக இருக்குமாயின், படிக்கும் மொழிநெறிப்பாங்கில், மேலும் முந்திய படிநிலை ஒன்றனைக் கொண்டுள்ள தமிழ்நாட்டு மீனாட்சிபுரம் கல்வெட்டு போன்றவற்றையும் அவ்வாறே அசோகன் காலத்திற்கு முந்தியவை என்று நாம் கருதலாம். இந்தக் கருத்தை அடியில் காட்டப்படும் விளக்கம் மேலும் உறுதி செய்யும்.

'க' என்னும் எழுத்து அசோகன் கல்வெட்டிலும் தமிழ்நாட்டிலுள்ள புகழூர்க் கல்வெட்டிலும் சிலுவைக்குறி அல்லது கூட்டல் குறி வடிவில் செதுக்கப்பட்டிருக்கும். மீனாட்சிபுரம் கல்வெட்டு இந்தப் புகழூர்க் கல்வெட்டைவிடக் காலத்தால் முந்தியது என்னும் உண்மை எழுத்துகளின் வடிவம், உருப்பெருக்கம் முதலானவற்றை நோக்கி எல்லா அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. இந்த மீனாட்சிபுரம் கல்வெட்டில் மேலே கண்ட கூட்டல் அல்லது சிலுவைக்குறி காணப்படுமேயானால், அதனைக் 'க' என்று படிக்காமல் 'க்' என்று படிக்க வேண்டிய நிலை உள்ளது. 'க' என்று படிப்பதற்கு மீனாட்சிபுரம் கல்வெட்டு அமைப்பில் சிலுவைக்குறியின் உச்சிப் பகுதியை ஒட்டி வலப்புற மாகச் சிறுகோடு போட்ட அமைப்புடைய எழுத்து வேண்டும். இந்த எழுத்து வடிவம் அசோகன் கல்வெட்டிலோ, புகழூர்க்

கல்வெட்டிலோ காணப்படுமேயானால் 'கா' என்று நெடிலாகப் படிக்கவேண்டும். இந்த வேறுபாடு நோக்கியும் இதனை அசோகனுக்கு முந்திய எழுத்து எனக் கருத முடியும்.

தமிழ்நாட்டில் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் இத்தகைய தமிழ் எழுத்துகள் யாண்டும் காணப்படவில்லை. வட்டெழுத்துகளும், அவற்றோடு கலந்தனவும், பிறவுமே காணப்படுகின்றன. எனவே, சங்ககாலத்தைச் சேர்ந்த இந்த எழுத்துகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரையிலான காலத்தைப் பின்எல்லையாகக் கொண்டவை எனலாம்.

இந்தக் கல்வெட்டுகள் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு எந்த வகையில் அடிப்படைச் சான்றுகளாய் உதவுகின்றன என்பது நோக்கத் தக்கது. சங்ககால அரசர்களின் பெயர்களும், சில அரசர்களின் உறவுமுறைகளும், சில வாணிகர்களின் பெயர்களும், சிலரது வாணிகப் பொருள்களும். சில சங்ககால ஊர்ப்பெயர்களும், அக் காலப் பட்டங்கள் சிலவும் அக் கல்வெட்டுகளில் குறிக்கப் பட்டுள்ளன. மற்றும் சில பழக்கவழக்கங்களையும் நாம் அக் கல்வெட்டுகளிலிருந்து உய்த்துணரும் விளக்கமாகப் பெற முடிகிறது. அவற்றுள் சில வருமாறு :

சங்ககால அரசர் பெயர்கள்

இத்தகைய கல்வெட்டுகளில் நெடுஞ்செழியன், வழுதி என்னும் பாண்டிய அரசர்களின் பெயர்கள் உள்ளன. கோ ஆதன் செல்லிரும்பொறை, பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ ஆகிய சேர அரசர்களின் பெயர்கள் அவர்களது உறவுமுறையுடன் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அந்துவன் என்னும் சேர அரசன் பெயரும் உள்ளது. சேந்தன் என்னும் சோழ அரசன் பெயர் இந்தக் கல்வெட்டில் உள்ள எழுத்துகளால் நாணயம் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றும் பிட்டன் கொற்றன், பேகன், கோயமான், கோக் கீழ்மா ற நாடன், திரை நாடன், கடலன் முதலான குறுநிலத் தலைவர்களின் பெயர்களும் குறிக்கப் பட்டுள்ளன.

வாணிகர் பெயர்கள்

நந்தி, ஆதன், ஆந்தை முதலான வாணிகர் பெயர்களும், பொன், சுண்ணம், உப்பு, வெற்றிலை, பண்ணியம் முதலான பொருள்களை வாணிகம் செய்துவந்தவர்களைப் பற்றிய செய்திகளும் இக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

ஊர்ப் பெயர்கள்

கீழ்மாற நாடு, திரை நாடு ஆகிய உள்நாட்டுப் பெயர்களும், ஈழம் என்னும் வெளிநாட்டுப் பெயரும் சங்ககாலக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. மதிரை (மதுரை), கோழியூர் (உறையூர்), கருவூர், நல்லாவியூர், எருக்காட்டூர், எருமையூர், தொண்டி முதலான ஊர்ப் பெயர்களும் அவற்றில் உள்ளன.

பட்டப் பெயர்கள்

காவிதி, எட்டி (செட்டி), ஆரிதி, பணையன் முதலான பட்டப் பெயர்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

மற்றும் பெண் துறவு, பெண் அளித்த கொடை, கொடைப் பொருள்கள் (பொன், காணம், உணவு), எச்சரிக்கை, சிலரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் முதலியவைபற்றிய குறிப்புகளும் உள்ளன.

இந்த வகையில் அரசியல், வாழ்வியல் என்று இரு வரலாற்றுப் பகுதிகளுக்கும் உதவும் வகையில் பல குறிப்புகளைக் கால வரையறை உறுதிப்பாட்டுடன் உணர்த்தும் அடிப்படைச் சான்று களாக இந்தக் கல்வெட்டுப் பகுதிகள் உள்ளன.

இந்தச் சங்ககால எழுத்துகளைக்கொண்ட கல்வெட்டுகள் மதுரையை அடுத்துள்ள சிறுசிறு குன்றுப்பகுதிகளில் மிகுதி யாகவும், பிற மாவட்டப் பகுதிகளில் ஆங்காங்கே பரவலாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றை வரலாற்று நோக்கில் காலத்தின் தொன்மைக்கு முதலிடம் கொடுத்து வரிசைப் படுத்திக்கொண்டு (திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் பின் பற்றிய வரிசை) நோக்குவோம். ஊரும், அவ்வூரில் உள்ள சங்க காலக் கல்வெட்டுகளில் காணப்படும் செய்திச் சுருக்கமும் முதலில் தொகுத்து நோக்கப்படுகின்றன. பின், கல்வெட்டில் உள்ள எழுத்துகள் இக்கால எழுத்துகளில் எழுத்துப் பெயர்ச்சி முறையில் ஆங்காங்கே தொகுத்துச் சுட்டப்படுகின்றன. சிலவற்றிற்குப் படங்களும் அடுத்துப் பொருள் தோன்றும்படி படிக்கப்பட்டிருக்கும் பாங்கும் தரப்பட்டுள்ளன. இதற்கு ஆங்காங்கே கொடுக்கப் பட்டுள்ள தொடர்எண்ணைக் குறிப்பிட்டுப் பிற்சேர்க்கையில் விளக்கங்களும் பிறர் படித்துக் கண்ட முடிபுகளும் ஆய்வு நோக்கில் தரப்பட்டுள்ளன.

1. மீனாட்சிபுரம் கல்வெட்டு[3]

மதுரை மாவட்டத்தில் மீனாட்சிபுரத்தை அடுத்துள்ள கழுகு மலைப் பாறைகளில் அமைந்துள்ள இந்தக் கல்வெட்டுகளை மாங்குளம் கல்வெட்டென்றும், அரிட்டாபட்டிக் கல்வெட்டென்றும் அழைப்பர். இதில் காணப்படும் செய்திகள் வருமாறு :

நந்தி என்னும் பெயர்கொண்ட சமணத் துறவி, இங்குள்ள மலைக் குகைகளில் தங்கியிருந்தான். அவனது தலைமாணாக்கன் ஆதன். வெள்ளறை என்னும் ஊர்வாழ் மக்களின் வழிவந்தவர் துறவு பூண்டு நந்தியோடு தங்கியிருந்தனர்.

இவர்கள் பாதுகாப்புடன் வாழ நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய அரசன் உதவி புரிந்தான். தன் செயலாளுநன் கடலன் வழுதி என்பான் வழியாக அறையிறை வாரமும், பள்ளியும் வெட்டி உதவினான் ; தன் சகலை சடிகன் (செழியன்) வழியாகவும் சில படுக்கைகள் அமைத்துக் கொடுத்தான்.

தன் ஊர் மக்களில் பலர் அங்குத் துறவு மேற்கொண்டிருந்த தால், அச்சுதன் என்னும் சிறந்த வேளாண் பெருமகன் அவர் களுக்கு உணவளித்துக் காப்பாற்றி வந்தான். இந்தச் செய்தி களை இங்குள்ள ஆறு கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அவற்றின் பாடத்தை இக்கால எழுத்துகளில் அடியிற் காணலாம். அதனை யடுத்துப் பொருள்கொள்ளும்படி சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் படித்திருக்கும் பாங்கைக் காணலாம்.[4] (இவ் விளக்கத்தைப் பிற கல்வெட்டுகளுக்கும் கொள்க.)

(1) க ணி ய் ந ந் தி அ லி ரி ய் ஈ வ் ஆ ன் கே ஏ ம்
ம ம் ஈ த் த அ நெ டு ஞ் ச ழி ய ன் ப ண அ ன் க ட
ல் அ ன் வ ழு த் தி ய் கொ ட் டி பி த் த அ ப ளி ஈய்



வரைபடம் 1

[3] Annual Report of South Indian Epigraphy (SIE) 460 to 465 of 1906.

[4] Reading through the estampages of Mahadevan, I.

கணி நந்தி ஆசிரியற்கு ஆங்கே ஏமம் ஈத்த
நெடுஞ்செழியன்
பணவன் கடலன் வழுதி கொட்டுபித்த பள்ளி.

(2) க ணி ப் ந ந் த ஸி ரி ய் கு அ ன் ஏ ம ம் ஈ
த நெ டு ஞ் ச ழி ய ன் ஸ ல க ன் இ ள ஞ்
ச டி க ன் த ந் தை ப் ச டி க ன் செ இ
ய ப ளி ப்

கணி நந்த ஆசிரியற்கு ஆன் ஏமம் ஈத்த
நெடுஞ்செழியன்
சகலன் இளஞ்சடிகன் தந்தை சடிகன் செய்யி பள்ளி

(3) க ணி ஈ ந் த ஸி ரி ய் கு வ் வெ ன் அ றை ப் நி
க ம து கா வி தி ஈ ய் க ழி தி க அ ந் தை அ
ஸ் தன் பி ண ஊ கொ டு பி தோ ன்

கணி நந்த ஆசிரியற்கு வெள் அறை நிகமத்து காவிதி
கழிதிகன் தந்தை அச்சுதன் பிண ஊ கொடுப்பித்தான்.

(4) க ணி ப் ந தி றி ய் கொ டி ப் ஆ தன்

கணி நந்தி அறி கொடி ஆதன்

(5) ச ந் த ரி தன் கொ டு பி தோ ன்

சந்தரிதன் கொடுப்பித்தோன்

(6) வெ ள் அ றை நி க ம தொ ர் கொ டி ஓ ர்

வெள் அறை நிகமத்தோர் கொடியோர்

வெள் அறை நியமத்தோராகிய கொடியோர் என்பது இந்தத் தொடரின் பொருள். இப் பள்ளிகளில் தங்கியிருந்தவர்களில் சிலர் 'வெள்ளறை' என்னும் ஊர்வாழ் மக்களின் வழிவந்தவர்கள் என்பதை இதனால் உணரலாம். வெள்ளரிப்பட்டி என்னும் ஊர் இம் மலைக்கு அருகில் இப்போதும் உள்ளது கவனிக்கத்தக்கது.

2. திருவாதவூர்க் கல்வெட்டு[5]

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்திலுள்ள திருவாதவூரை அடுத்துள்ள குன்றுப்பொடவில் இரண்டு கல்வெட்டுத் தொடர்கள் உள்ளன. இக் குன்றிலுள்ள குகையின் சீரமைப்புப் பணிகளைச் செய்தவன் வங்க நாட்டு அரிதன் (ஆரிதன்) ஆவான். இந்தக்

[5] 1966 ல் திரு. ஐராவதம் மகாதேவனால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குகைகளில் தங்கித் தவம் செய்தவர்களுக்கு உணவளித்து அவர் களின் துன்பத்தைப் போக்கியவன் 'பாசன் பரசு' என்னும் பெயர் கொண்ட உழுவன் ஆவான் என்னும் செய்திகள் இக் கல்வெட்டுத் தொடர்களால் தெரியவருகின்றன.[6]

(1) ..... பங் காட அரி இ தன் கொட் டு பி தோன்

பங்காட்டு அரிதன் இதனைக் கொடுத்தான்.

(2) ஊ பா ச ன் ப ர அ சு ஊ றை கொட் டு பி தோன்

பரசு என்னும் உபாசன் இந்தப் படுக்கையைக் கொடுத்தான்.

3. கீழவளவுக் கல்வெட்டு[7]

மதுரை மாவட்டத்திலுள்ள மேலூருக்கும் கீழூருக்கும் இடை யில் உள்ள கீழவளவுக் குன்றுப் பொடவில் ஒரு கல்வெட்டுத் தொடர் உள்ளது. இதில் சில எழுத்துகள் தலைகீழாகப் பொறிக் கப்பட்டுள்ளன.

வெற்றிலை வாணிகன் ஒருவன் இங்கிருந்த துறவிகளுக்கு உணவு வழங்கும் தொண்டைச் செய்துவந்ததோடு குகைச் சீரமைப்புப் பணியையும் செய்து உதவினான் என்னும் செய்தி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டுப் பாடம் பின்வருமாறு:

ஊ பா ச அ ன் தொ ன் டு லா வா ன் கோ டு ப ளி ஈ[8]

ஊ பாசவன் தொண்டு உலாவான் கொட்டு பள்ளி

ஊ = உணவு, பாசவன் = வெற்றிலை வாணிகன், உலாவான் = கெடாதவனாய்; வெற்றிலை வாணிகன் ஒருவன் துறவிகளுக்கு உணவு வழங்கும் தொண்டில் பிழைபாடு நேராமல் ஒழுகி வந்தான். அவன் பள்ளி அமைத்துக் கொடுத்தும் உதவினான்.[9]

---

6 Reading and Interpretation by :
Mahadevan, I., Corpus of the Tamil Brahmi Inscriptions, Reprint of the Seminar on Inscriptions, Madras, 1966

7 S. I. E. 135 of 1903

8 வேங்கடசாமி, மயிலை சீனி. மு. கு. நூ.

9 வேங்கடசாமி, மயிலை சீனி. நேரிலும் பிறர் பதிவுகளைக்கொண்டும் படித்தவை

4. கொங்கர் புளியங்குளம் கல்வெட்டு[10]

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் கொங்கர் புளியங்குளத்தை அடுத்து நாகமலைக்குத் தெற்கிலுள்ள குன்றுப் பொடவில் மூன்று கல்வெட்டுத் தொடர்கள் உள்ளன. அவற்றில் காணப்படும் வரலாற்றுச் செய்திகள் வருமாறு :

உப்பாறு என்னும் ஊரைச் சேர்ந்த வெற்றிலை வாணிகன் ஒருவன், மேல்பாறையில் மழைநீர் வழியாமல் வாரம் அமைத்துக் கொடுத்தான். இங்கிருந்த துறவிகளுக்குச் சோறளித்த ஆதன் என்பவன் படுக்கைகளைக் கூறுபடுத்தி அமைத்ததோடு ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள பொன்னும் கொடுத்தான் என அறிகிறோம்.

பாகனூரில் வாழ்ந்த போத்தன் மகன் பிட்டன் என்பவனும் இங்கிருந்த சமணத் துறவிகளுக்கு உதவியாக அமையும்படி ஒரு குறிப்பிட்ட நிறையளவுள்ள பொன் கொடுத்தான். இவ்வாறு சோறும், பொன்னும், இருக்கை வசதியும் செய்துகொடுத்தது பற்றிய செய்திகளை இக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. கல் வெட்டுத் தொடர்களுக்கு இறுதியில் பொன்னின் மதிப்பு ஒருவகைக் குறியீட்டால் செதுக்கப்பட்டுள்ளது.[11]

(1) கு ற கொ டு பி த வ ன் ஊ
பா ச அ ன் ஊ பா று வ...



வரைபடம் 2

---

[10] S. I. E. 55 to 57 of 1910, *New Indian Antiquary*, Vol. I

[11] வேங்கடசாமி, மயிலை சீனி. மு. கு. நூ.

(2) கூ று கோ ட ல கு ஈ த் த வ ன்
சோ ற ஆ த ன் பொ ன்



வரைபடம் 3

கூறையோடு உலகு ஈத்தவன் சேர ஆதன் மன்
என்று பொருள் கொள்ளத் தோன்றுகின்றது.

(3) பா க வ் ஊ ர் போ த் த ன் பி
ட வ் ஈ த் த வே பொ ன்



வரைபடம் 4

பாகனூர் போத்தன் பிட்டன் ஈத்தவை பொன்

5. விக்கிரமங்கலம் கல்வெட்டு[12]

மதுரை மாவட்டத் திருமங்கலம் வட்டம் விக்கிரமங்கலத்தை அடுத்து உண்டான்கல் என வழங்கும் குன்று உள்ளது. அங்குள்ள பொடவில் ஐந்து கல்வெட்டுத் தொடர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுத் தொடர்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் ஆளின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

அந்தை பேகன் மகன் வேண் ஆதன், ஏமூர்ச் சாத்தன் மகன் ஆதன், குவிரன், குவிரன் மகன் ஆதன், செங்குவிரன் ஆகியவை அந்தப் பெயர்கள்.

---

12 S. I. E. 621 to 623 of 1926, Annual Report on Indian Epigraphy (I. E.) 225 & 286 of 1963-64

அவர்கள் இந்தக் குகைகளில் தங்கித் தவம் மேற்கொண்டவர்களாகவோ, குகையில் தங்கியிருந்த துறவிகளுக்கு உதவியவர்களாகவோ இருந்திருக்கலாம்.

(1) அந்தைப் பிகன் மகன் வேய அதன்

அந்தை பிகன் மகன் வேய் அதன்

(2) பொதலை குவிரன்

பொதலை என்னும் ஊரைச் சேர்ந்த குவிரன்

(3) செங்குவீரன்

இது ஒருவன் பெயர்[13]

(4) கு(வி)ராதன்

குவிராதன் என்பது ஒருவன் பெயர்[14]

(5) ஏம்ஊர்ச அதன் அதன்

ஏமூர் சாத்தன் ஆதன்[15]

6. மேட்டுப்பட்டிக் கல்வெட்டு[16]

மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் மேட்டுப்பட்டி என்னும் ஊரை அடுத்துச் சித்தர்மலை உள்ளது. அம் மலையிலுள்ள குகைப் பகுதியில் எட்டுக் கல்வெட்டுத் தொடர்கள் உள்ளன. விக்கிரமங்கலக் கல்வெட்டில் காணப்படுவதுபோலவே இங்குள்ள ஒவ்வொரு கல்வெட்டிலும் ஒவ்வோர் ஆளின் பெயராக மொத்தம் எட்டுப் பேர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ஆந்தை மகன் ஆரிதி, ஆந்தை தத்து மகன் ஆதன், மதுரை ஆந்தை மகன் விசுவன், ஆந்தை மகன் வேந்து ஆதன், சந்தந்தை மகன் சந்தன், திட்டி இள ஆதன், பதனூர் ஆந்தை, குவிரந்தை மகன் வேண் ஆதன் ஆகியவையே அந்தப் பெயர்கள். இவர்கள் இந்தக் குகைகளில் தங்கித் தவம் செய்த சமண முனிவர்கள் என்று கொள்வது மிகவும் பொருத்தமானது. அன்றியும் குகையில் தங்கி வாழ்ந்த துறவிகளுக்கு இவர்கள்

---

13 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ.

14 Mahadevan, I., Op. cit.

15 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ.

16 S. I. E. 45 (a) to (i) of 1908.

உதவியவர்களாக இருக்க முடியுமா என்றும் எண்ணிப் பார்க்கலாம்.[17]

(1) அந்தை அரிதி
(2) அந்தை ஈர்வதன்
(3) மதிர் அந்தை விசுவன்
(4) அந்தை வேந்த அதன்
(5) சந்த நந்தை சந்தன்
(6) திடி ஈள அதன்
(7) பதின் ஊர் அ-தை
(8) குவிர அந்தை வேய் அதன்

7. சித்தன்னவாசல் கல்வெட்டு[18]

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் என்னும் ஊரை அடுத்து ஏழடிப்பாக்கம் என்று வழங்கப்பெறும் குன்றுப்பொடவு ஒன்று உள்ளது. இங்குக் காணப்படும் ஒரே ஒரு கல்வெட்டுத் தொடரில் எருமை நாட்டுக் குமுழூரில் பிறந்த கவுடிஞன் குமணன் என்பவன் குறிக்கப்பட்டுள்ளான். இவனிடம் போர்ப்பயிற்சி பெற்ற வீரர்கள் இங்கிருந்த துறவிகளுக்குப் படுக்கைகள் அமைத்துக்கொடுத்தனர்.[19]

எருமநாடு குமுழ்ஊர் பிறந்த
கவுடிஞன் குமணன் மல்ஈள
யர்செய்த அதிட்டானம்

எருமை நாடு குமுழூர் பிறந்த கவுடிஞன் குமணன்
மல் மனையர் செய்த அதிட்டானம்

8. கருங்காலக்குடிக் கல்வெட்டு[20]

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கருங்காலக்குடியை அடுத்துள்ள குன்றுப்பொடவில் ஒரே ஒரு கல்வெட்டுத் தொடர் காணப்படுகிறது.[21]

ஏழையூர் அரிதில் பள்ளி

ஏழையூர் அரிதில் பள்ளி

17 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ.
18 S. I. E. 388A of 1914 Madras Epigraphy Report (M. E. R.) of 1914-15 Part II Para 1 & 2 and Inscription of Pudukottai State, Plate No. 1
19 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ.
20 S. I. E. 561 of 1911 S. I. E. of 1912 Plate on page 57
21 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ.

9. மருகல்தலைக் கல்வெட்டு[22]

திருநெல்வேலியை அடுத்துள்ள மருகல்தலை என்னும் ஊரை ஒட்டிப் பூவுடையார் மலை என்னும் குன்று ஒன்று உள்ளது. இம் மலையிலுள்ள குகையில் ஒரு கல்வெட்டுத் தொடர் காணப்படு கிறது. இதனைச் சீவலப்பேரிக் கல்வெட்டு என்றும் வழங்கு கின்றனர்.

வெண்காசிபன் என்பவன் கஞ்சணம் தந்தான் என்ற செய்தி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.[23]

வெ ண் கா சி ப ன் கொ டு பி த த கல் க ஞ் ச ண ம்

வெண் காசிபன் கொடுப்பித்த கல் கஞ்சணம்

10. அழகர்மலைக் கல்வெட்டு[24]

மதுரை மாவட்டம் அழகர்கோயிலுக்குக் கிழக்கில் சுந்தராசன் பட்டி என்னும் ஊருக்கு வடபால் அழகர்மலையில் உள்ள ஒரு கற்குகையில் 12 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இங்குள்ள குகைகளில் வாழ்ந்தவர்களுக்கு உதவும் வகையில் பலர், காணம் என்று வழங்கப்பட்ட நாணயத்தினைப் பொருளுதவி யாகக் கொடுத்தனர். அவர்களில் பதினொருவர் பெயர்கள் குறிக் கப்பட்டுள்ளன. பெயர்கள் வருமாறு :

மதுரை பொற்கொல்லன் ஆதன் மகன் ஆதன், மதுரை கோ உப்பு வாணிகன் ஆய்கோன் கோனான், கோழி வாணிகன் இளவல் நாகன், அறுவை வாணிகன் எளாடன், வாணிக ஆதன் மகன் ஆதனாதன், பணித வணிகன் நெடுமாலன், ஆவியன், சொம்மிதீன் வழுதி, கோக் கீழ்மாறநாடன் திரைநாடன், அரையன் ... கலபன் ஈழ வாவிரயன், தீன்சேர்நாதன்.

இப் பதினொருவருள் முதல் எழுவர் வாணிகர். அடுத்த மூவர் அரசர். இறுதியில் உள்ளவர் யார் எனத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் கொடுத்த காணத்தின் மதிப்பளவும் குறிக்கப் பட்டுள்ளது.[25]

---

22 S. I. E. 407 of 1906 and M. E. R. of 1907, p. 60

23 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ.

24 S. I. E. 334 of 1908 and S. E. I. 70-7 of 1910, I. E. 244 & 245 of 1963-64

25 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ.

(1) ம தி ர ய் பொ ன் கொ ல் வா ன் ஆ த ன்
ஆ த ன்



வரைபடம் 5

மதிரய் பொன் கொல்வான் ஆதன் ஆதன்

(2) அ னி க ன் த.....

வரைபடம் 6

ஆனிகன் த.....

(3) ம த் தி ரை கோ ஊ பு வா ணி க ன் தி ய்
கோ ன் கோ ண க ன்



வரைபடம் 7

மதிரை கோ உப்பு வாணிகன் ஆய் கோன் கோணான்

(4) (வா) ணி க அ த ன் ம க ன் அ த ன் அ த ன்



வரைபடம் 8

வாணிக ஆதன் மகன் ஆதனாதன்

(5) சொ ம் மி த ஈ ன் வ ழு த் தி



வரைபடம் 9

சொம்மிதீன் வழுதி

(6) ப ணி த வ ணி க ன் நெ டு ம ல ன்



வரைபடம் 10

பணித வணிகன் நெடுமாலன்

(7) கோ ழி வா ணி க ன் எ ள வ நா க ன்



வரைபடம் 11

(8) கோ கி க் ழ் மா ற நா ட ன் தி ரை நா ட ன்



வரைபடம் 12

(9) அ ரை ய ... க ல ப னி ழ வா வி ர ய ன்



வரைபடம் 13

அரைய(ன்) கலபன் ஈழவாவிரயன்

(10) க ண ம் கு டு பி தோ



வரைபடம் 14

காணம் கொடுபித்தோ(ர்)

(11) வெ ண் கு ளி ரு அ று வை வ ணி க ன் எ ள அ
அ ட ன்



வரைபடம் 15

வெண் குளிர் அறுவை வாணிகன் எளாடன்

(12) தி ய் ன சே நா த ன

வரைபடம் 16

தீன் சே(ர்) நாதன்

11. வரிச்சியூர்க் கல்வெட்டு[26]

மதுரை வட்டம், வரிச்சியூரை அடுத்துள்ள குன்றுப்பொடவில் மூன்று கல்வெட்டுத் தொடர்கள் காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டுகளைக் குன்னத்தூர்க் கல்வெட்டுகள் என்று குறிப்பிடுவதும் உண்டு.

இக் கல்வெட்டுகள் பெரிதும் சிதைந்து போய்விட்டன. தெளிவாகத் தெரியும் பகுதிகள் உள்ள செய்திகள் இவை:

நடன் என்பவன் நான்கு படுக்கைகள் செய்து கொடுத்தான். மற்றொருவன் நூறு படுக்கைகள் செய்து கொடுத்தான். பிறரும் செய்து கொடுத்துள்ளனர்.[27]

(1) ...ப ளி ய் கொ டு பி...

பள்ளி கொட்டுபித்தான்

(2) ...டா...இ டா வே...

நு து சு ச னு

100 காஞ்சணம் (படுக்கை) கொடுத்தான்

(3) ...ந ட ன் ஆ க இ ய நா ல் லு
இ ரு கை

நடன் என்பவனால் செய்யப்பட்ட நான்கு இருக்கை

---

[26] S, I. E. 38 of 1908

[27] Mahadevan, I., Op. cit

12. திருப்பரங்குன்றம் கல்வெட்டு[28]

மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தில் இயற்கையாய் அமைந்த குகை ஒன்று உள்ளது. அக் குகைப் பகுதியில் மூன்று கல்வெட்டுத் தொடர்கள் உள்ளன. இங்குள்ள படுக்கைகளில் தங்கியிருந்தவர்களில் முதன்மைபெற்று விளங்கியவர் நெடுஞ் சாத்தன் என்னும் சமணத் துறவி என்பதும், இங்குள்ள படுக்கை களை அமைத்துக் கொடுத்தவர்களில் அந்துவன், கோயமான், எருக்காட்டூர் ஈழக் கடும்பிகன் பொலாலயன் என்னும் மூவர் என்பதும் இக் கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகின்றன.[29]

(1) எ ரு கா டூ ர் ஈ ழ கு டு ம பி கன் பொ லா
ல ய ன் செ ய் த ஆ ய சா ய ன நெ டு
சா த ன்

(2) அ ந் து வ ன் கொ டு பி த வ ன்



வரைபடம் 17

(3) கோ ய து ய செ ன் மா

வரைபடம் 18

13. முத்துப்பட்டிக் கல்வெட்டு[30]

மதுரையை அடுத்துள்ள முத்துப்பட்டிக்கு அருகில் அம்மணா மலைப் பொடவு என்னும் பகுதியில் மூன்று கல்வெட்டுத் தொடர்கள் உள்ளன.

---

28 S. I. E. 333 of 1908 and S. I. E. 140 to 142 of 1951 - 52

29 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ. இங்குள்ள கல்வெட்டுகளில் மூன்றாம் எண்ணிட்ட கல்வெட்டில் முதல் இரண்டு எழுத்துகள் படுக்கையின் கால் மாட்டிலிருந்து தலைமாட்டை நோக்கியவண்ணம் இருந்துகொண்டு படிக்க வேண்டுவனவாயும், பிற அதற்கு எதிர்த்திசையில் அமர்ந்துகொண்டு படிக்க வேண்டுவனவாயும் உள்ளன.

30 S. I. E. 58-60 of 1910 ; I. E. 243 of 1963-64

இவற்றில் காவி, அந்தை சாத்தன், காத்தான் (கோடாமன்) என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. இப் பெயர்கள் இக் குகைகளில் தங்கி வாழ்ந்த சமண முனிவர்களைக் குறிக்கலாம் அல்லது குகையில் இருந்தவர்களுக்கு ஏதோ ஒருவகையில் உதவியவர்களைக் குறிக்கலாம்.[31]

(1) சை ய அ ல ன் வி ந் தை ஊ ர் கா வி ய்



வரைபடம் 19

(2) நா க பே ரூ ர் அ தை சா த் த ன் ம க ன்

(3) கொ டா ம அ ... ல க ய தா அ று ர



வரைபடம் 20

கோடாமல் கயத்தானூர்

14. ஆனைமலைக் கல்வெட்டு[32]

மதுரையை அடுத்துள்ள ஒத்தக்கடை என்னும் ஊரைச் சார்ந்து ஆனைமலை உள்ளது.

சமணத் துறவியின் படுக்கையைப் பிறர் மிதிக்கக்கூடாது. மிதித்தால் எரிந்துவிடுவர் என்னும் செய்திகள் இங்குள்ள கல்வெட்டில் காணப்படுகின்றன.[33]

---

31 Mahadevan, I., Op. cit.

32 S. I. E. 457 of 1906

33 Reading and Interpretation by Dr. K. V. Raman, Department of an Archaeology and Ancient History, University of Madras.

(1) இவ குன் ற து உ றை யு ள பா த ந் தா ன
ஏ ரி ஆ ரி த ன அ த் து வா யி அ ரி ட்
ட கா யி ப ன



வரைபடம் 21

இவ(ன்) குன்றது உறையுள் பாதந்தான் ஏரி ஆரிதன்
அத்து வாய் அரிட்ட காய்(கு) பன்

15. புகழூர்க் கல்வெட்டு[34]

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், வேலாயுதம் பாளையம் என்னும் ஊரின் நடுவே ஆறுநாட்டார் மலை என்னும் குன்று ஒன்று உள்ளது. அதன் உச்சியில் அருணகிரிநாதரால் புகழ்ந்து பாடப்பெற்ற முருகன் கோயிலும், குன்றின் இடைப் பகுதியில் வடக்குப் பக்கத்தில் சூடாமணி குன்று என்னும் குகையும், தெற்குப் பக்கத்தில் மற்றொரு குகையும் உள்ளன. இந்தக் குகையில் உள்ள படுக்கைகளின் தலைமாட்டுப்பகுதியிலும் பக்க மேடைகளிலும் அக் குகைகளில் தங்கியிருந்த முனிவர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இந்தப் படுக்கைகளுக்கு மேலே உள்ள பாறையில் இந்தப் படுக்கைகளை அமைத்துக்கொடுத்தவர் களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிய விளக்க மான செய்திகள் வருமாறு :

இக் கல்வெட்டில், குகைகளில் தவம் மேற்கொண்ட சமணத் துறவிகளான யாற்றூர்ச் செங்காயபன், பிட்டந்தை மகள் கீரன் கொற்றி, சுண்ண வாணிகன் வேள் ஆதன், கருவூர்ப் பொன் வாணிகன் நத்தி, கொற்றந்தை இள ஏய், நாகன் மகன்

34 S. I. E. 341 to 347 and 349 of 1927-28; I. E. 296 and 297 of 1963-64

பெருங்கீரன் ஆகியோர் பெயர்களும் படுக்கைகளை அமைத்துக் கொடுத்த இளங்கடுங்கோ, கீரனேறி ஆகிய இருவரின் பெயர்களும் பொறிக்கப்பெற்றுள்ளன. இந்த அரசர்களின் பெயர்கள் உறவு முறையோடு குறிக்கப்பட்டுத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பெயர்களோடு ஒப்புமை உடையனவாய் உள்ளன. இதனால் வரலாற்றுச் சிறப்புடையவை இவை என்பது கருதத்தக்கது.

இங்குள்ள கல்வெட்டுகளில் சமண முனிவர்களுக்குப் படுக்கை அமைத்துக் கொடுத்தவர்களின் பெயர்களும், இங்குள்ள பள்ளிகளில் தங்கியிருந்த சமணத் துறவிகளின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

குகைகளில் தவம் மேற்கொண்ட சமணத் துறவிகள்:

1. யாற்றூர்ச் செங்காயபன்: யாற்றூரில் (ஆத்தூரில்) பிறந்தவன் செங்காயபன். இவன் சமணத் துறவியாக மாறித் தவம் செய்தான். 'மூத்த அமணன்' என்று இவன் சிறப்பித்துக் கூறப்படுவதால் இங்கிருந்த சமணத் துறவிகளுக்கெல்லாம் தலைவனாக விளங்கினான் என்று கொள்ளலாம்.

2. பிட்டந்தை மகள் கீரன் கொற்றி: இவள் பெண் துறவி. இவள் தந்தை பிட்டந்தை. பிட்டந்தை என்னும் பெயர் பிட்டன் தந்தை என்பதன் தொகுப்பு வடிவம். எனவே, பிட்டன் என்பவன் இந்தப் பெண் துறவி கொற்றியின் அண்ணணாகவோ, தம்பியாகவோ இருந்திருக்க வேண்டும். இவளது பெயருக்கு முன் கீரன் என்னும் சொல் உள்ளது. இந்தக் கீரன் என்னும் சொல் அவள் தந்தையின் இயற்பெயராகவோ, கணவனின் பெயராகவோ இருக்கலாம். தந்தையின் பெயர் 'பிட்டந்தை' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கண்டோம். அந்தப் பெயர் பிட்டன் தந்தை என்று பொருள் படுவதால் அவனது இயற்பெயர் வேறொன்று இருந்திருக்கமுடியும். அது கீரன் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகக் கொள்ளலாம்.

அல்லது கீரன் என்பது கணவன் பெயர் ஆயின், அக்காலத்திலும் இக்காலத்தைப்போலப் பெண்கள் கணவன் பெயருடன் சேர்த்து அழைக்கப்பட்டனர் என்று முடியும்.

3. சுண்ண வாணிகன் வேள் ஆதன்: சுண்ணம் என்பது மணப்பொடி.[35] இதனை வாணிகம் செய்துவந்தவன் ஆதன். அவன் 'வேள்' என்னும் அடைமொழி பெற்றுள்ளான்.

35 Talcum powder

இந்த அடைமொழி அவன் பிறந்த குடியைக் குறிப்பதாக இருக்கலாம் அல்லது இவன் வேள் (உதவி) நோக்குடன் வாணிகம் செய்ததைக் குறிப்பதாக இருக்கலாம். அன்றியும் வேள் (முருகன்) என்னும் தெய்வப் பெயர் அடைமொழியாகவும் இருக்கலாம்.

இவன் தன் வாழ்க்கையைத் துறந்து சமண முனிவன் செங்காயபன் மாணாக்கனாய்ச் சேர்ந்துவிட்டான்.

4. கருவூர்ப் பொன் வாணிகன் நத்தி : இந்த நத்தி என்பவன் கருவூரில் பொன் வாணிகம் செய்துவந்தான். இவனும் துறவு பூண்டு செங்காயபனின் மாணாக்கன் ஆனான்.

5. கொற்றந்தை இள ஏய் : 'ஏய்' என்பது இவனது பெயர். சங்ககாலத்துப் பெயரான 'எயினன்' என்பதனோடும், பிற்காலத்துப் பெயரான 'ஏயர்கோன்' (கலிக்காம நாயனார்) என்பதனோடும் இந்தப் பெயர் சொல்லால் தொடர்புடையது. இவன் 'இள ஏய்' என்று குறிப்பிடப்படுகிறான். இது அமைப்பு முறையில் 'இளங்கோ' என்னும் பெயரைப் போன்றது.

இவனது பெயருக்கு முன் உள்ள 'கொற்றந்தை' இவனது பெயருக்குள்ள அடைமொழி ஆயின், இவன் கொற்றன் என்பவனின் தந்தை என்று முடியும்.

'கொற்றந்தை இள ஏய்' என்பதைக் கொற்றந்தை மகன் இள ஏய் என்று கொள்வோமாயின் கொற்றனும் இளஏயும் அண்ணன் தம்பியர் ஆவர்.

இந்த இளஏயும் சமண மதத்தைத் தழுவி தவம் மேற் கொண்ட செங்காயபனோடு சேர்ந்துகொண்டான்.

(பிட்டன், கொற்றன் ஆகியோர் சங்ககாலக் குறுநிலத் தலை வர்கள். இவர்களது வரலாற்றைக் குறுநிலத் தலைவர்கள் என்னும் பகுதியில் விரிவாகக் காணலாம்.)

6. நாகன் மகன் பெருங்கீரன் : இவன் சமணத் துறவி யாகி இந்த மலையின் வடபுறமுள்ள குகையில் (சூடாமணிப் பொந்து) தவம் மேற்கொண்டிருந்தான். மற்றவர்கள் எல்லாரும் மலையின் தென்புறமுள்ள குகையில் இருந்தனர்.

இங்குள்ள படுக்கைகளை அமைத்துக் கொடுத்தவர் இருவர். ஒருவர் சேர அரசன் இளங்கடுங்கோ; மற்றொருவர் 'கீரனேறி' என்ற பெண்.

இளங்கடுங்கோ : இவன் தந்தை பெயர் பெருங்கடுங்கோ. பாட்டன் பெயர் கோ ஆதன் செல்லிரும்பொறை. இங்குக் குறிக்கப் பட்டவர் முறையே மருதம் பாடிய இளங்கடுங்கோ, பாலை பாடிய பெருங்கடுங்கோ, செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆகியோர் என்பதை அவர்களது வரலாற்றுப் பகுதியில் காணலாம்.

கல்வெட்டு 51-ல் இவன் இளங்கோ ஆவதற்காக இந்தக் கற்படுக்கைகளை அமைத்தான் என்றும், கல்வெட்டு 52-ல் இவன் இளங்கோ ஆகி அமைத்தான் என்றும் குறிப்பிடப்படுகிறது. இஃது இரண்டு முறை இந்தப் பணியைச் செய்ததைக் குறிக்கிறது.

கீரனேறி : 'பிட்டன் குறுமகள்' என்னும் இப் பெயர் தெளிவாகக் குறிக்கப்படுவதால் இப் பெயர் பெண்ணைத்தான் குறிக்கிறது என்பது உறுதியாகிறது. குறுமகள் — இளைய மகள். எனவே, இவள் பிட்டனின் இளைய மகள். இந்தப் பிட்டன் நம்பி யூரில் வாழ்ந்தவன். 'கீரன் ஏறி' என்பது கீரன் மனைவி எயிற்றி என்பதாகலாம். 'ஏறி' என்னும் பெயர் 'எயிற்றி' என்னும் பெயரில் நேர்ந்த பழிபட்ட வடிவமாயிருக்கலாம். 'எயிற்றி' என்பது சங்க காலப் பெயர்.[36]

இந்தக் கீரன்எயிற்றி பள்ளி செய்து கொடுத்தது கீரன் கொற்றிக்குத்தான், மற்றவர்களுக்கு அன்று என்பது கொற்றி அதிட்டானமும் (இருக்கையும்) இவளது பெயரைக் குறிப்பிடும் கல்வெட்டும் உள்ள பகுதியை நோக்கி உணரலாம்.

துறவு பூண்டவள் பிட்டனின் தங்கை (அல்லது அக்காள்) 'கொற்றி'. அவளுக்குப் படுக்கை அமைத்துக் கொடுத்தவள் பிட்டனின் இளைய மகள் எயிற்றி. எனவே, எயிற்றி தன் அத்தை கொற்றிக்குப் படுக்கை அமைத்துக் கொடுத்தாள் என்பது தெரிகிறது.

கொற்றியும் எயிற்றியும் கீரன் மனைவியர் என்று கொள்ளப்படு வராயின், கீரனின் முதல் மனைவி கொற்றி என்றும், இரண்டாம் மனைவி எயிற்றி என்றும் முடியும். எயிற்றிக்குக் கீரன் மாமன் ஆதலின் மணக்கும் முறை உடையவனே ஆவான்.

---

36 கழார்க் கீரன் எயிற்றியார் புலவர்—அகம். 163, 217 முதலான பாடல்களைப் பாடியவர்

கொற்றியை மணந்து வாழ்ந்த கீரன், எயிற்றியையும் மணந்ததால் கொற்றி தன் வாழ்க்கையை வெறுத்துத் துறவு பூண்டாள் போலும். இந்தத் துறவு கண்டு மனம் வருந்திய எயிற்றி தன் கணவனின் முதல் மனைவிக்கு (அத்தைக்கு) உதவும் வகையில் படுக்கையை அமைத்துக் கொடுத்தாள் போலும்.

பிட்டன் தந்தை நல்லாவியூரில் வாழ்ந்தவன்; பிட்டன் நம்பியூரில் வாழ்ந்தவன்.[37]

(1) மூ தா ம ணை (ணை ன) யா ற றூ ா செ ங
கா ய ப உ ...
கோ ஆ ... ல லி ரு ம பு றை ம க ன பெ ரு ங
க டு ங கோ ன ம க ன க டு ங கோ ன ள ங
க டு ங
கோ ன ங கோ ஆ க அ று பி த க ல

(2) ...தா அ ம ணை ன யா ற றூ ா செ ங கா
ய ப ன உ றை ய
கோ ஆ த ன செ ல லி ரு ம பொ றை ம க ன
பெ ரு ங க டு ங கோ ன ம க ன ன ங்
க டு ங கோ ள ங கோ ஆ சி அ று த த க ல

(3) ந ம பி ஊ ர அ பி ட ன கு று ம ம க ள
கீ ர ன னே றி செ யி பி த ப ளி

(4) ந ல லா வி ஊ ர அ பி ட ந தை ம க ள கீ
ர ன கொ ற றி அ தி ட டா ன ம்

(5) யா ற றூ ா செ ங கா ய ப ன ... ற றி ட
டா ட டா ன ம

(6) .....த த அ தி ட டா ன ம

(7) (சு) ண ண வா ண ணி க ன
வே ள ஆ த ன அ தி ட டா ன ம

(8) ... பெ ....
பொ.....
க ன .....
ம க .....
ள லி ... .

37 வேங்கடசாமி, மயிலை சீனி., மு. கு. நூ.

(9) கொ ற ற ந தை ள ஏ ய
மு ன று

(10) க டு ஊ ர பொ ன வா ணி க ன
ந த தி அ தி ட டா ன ம

(11) ணா க ன ம க ன பெ ரு ங கீ ர ணி

16. திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு[38]

திருச்சியிலுள்ள மலைக்கோட்டையில் இயற்கையாக அமைந்துள்ள குகைப் பகுதியில் உள்ள கல்வெட்டில் செங்காயபன் என்னும் பெயர் பொறிக்கப்பெற்றுள்ளது.[39]

செ ன கா யி ப ங் கே (?)

17. குன்றக்குடிக் கல்வெட்டு[40]

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், குன்றக்குடி மலையில் ஞானியகர் மடத்தை அடுத்துள்ள குகையின்கண் இரண்டு கல்வெட்டுத் தொடர்கள் காணப்படுகின்றன.

இவற்றில் ஆதன், சாத்தன் என்னும் பெயர்கள் பொறிக்கப் பெற்றுள்ளன.[41]

(1) .....பி ஊ ர ஆ த ன சா த ன

ஆதன் மகன் சாத்தன். இவன் ஊரின் பெயர் சிதைந்துள்ளது.

(2) ..... கு டு ..... த .....
கொடுத்தான்.

18. மாமண்டூர்க் கல்வெட்டு[42]

வடார்க்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், மாமண்டூரிலுள்ள பல்லவர் குகைக்கு மேற்கில் இயற்கையாக அமைந்துள்ள குகை ஒன்று உள்ளது.

---

38 S. I. E. 139 of 1937-38
39 Mahadevan, I., Op. cit.
40 S. I. E. 46 of 1909
41 Mahadevan, I., Op. cit.
42 S. I. E. 171 of 1939-40

கணிமான் தேனூர் தந்த கோன் இங்குத் தவமிருந்தானென்று இங்குள்ள கல்வெட்டுக் கூறுகிறது.[43]

க ணி மா ன்
தே னூ ர் த ந் த கோ ன கு ன் று
செ யி தா ன த ச ன சி று
..... வ ன்

19. அரசலூர்க் கல்வெட்டு[44]

பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், அரசலூரிலுள்ள நாகமலைக் குன்றுப் பொடவில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இரண்டு கல்வெட்டுகள் அக்கால ஐந்திசைப்பண் இசையினைத் தெரிவிப்பனவாய் உள்ளன. மணிவண்ணக்கன் தேவன் சாத்தன் என்பவன் படுக்கை வெட்டிக் கொடுத்ததோடு இசைக் குறிப்பு என்று கருதத்தக்க குறியீட்டு எழுத்தையும் இதில் பொறித்து வைத்தான் என்பது மற்றொரு கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது.[45]

(1) எ ழு து த ம பு ன ரு த தா ன ம ணி ய வ
ண ண க க ன தே வ ன சா த த ன

(2) தா தீ தா தீ தா
தீ தா தே தா தீ
தா தே தீ தே தா
தீ தா (தே) தா தீ
த் (அ) தீ தா (த்) ஈ தா

(3) கீ த தி த கீ
த (நீ த தீ த)
தீ த கீ த (தீ)
த தீ (த) தீ (த)
கீ த் (அ) த் (ஈ) த (க்) ஈ

20. பிள்ளையார்பட்டிக் கல்வெட்டு[46]

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பிள்ளையார்பட்டியை அடுத்த குன்றுப் பொடவில் உள்ள கல்வெட்டில் எருக்காட்டூர்க் கோன் பெரும்பரணன் என்ற பெயர் பொறிக்கப்பெற்றுள்ளது.

---

43 Mahadevan, I., Op. cit.
44 . to 282 of 1961-62
45 வேங்கடசாமி, மயிலை சீனி. மு. கு. நூ.
46 S. I. E. 136 of 1936-37

பெரும்பரணன் என்பவன் எருக்காட்டூர் அரசன் என்பதும், அவன் இந்தக் குகைகளில் தங்கித் தவம்செய்தான் அல்லது தங்கித் தவம் செய்தவர்களுக்கு உதவினான் என்பதும் இக் கல்வெட்டிலிருந்து தெரியவரும் செய்தியாகும்.[47]

எ ரு கா ட டு கு க் கோ ன் பெ கு
ப ர ண ன்

21. திருநாதர்குன்றம் கல்வெட்டு[48]

தென்னார்க்காடு மாவட்டம், செஞ்சி வட்டம், திருநாதர் குன்றத்திலுள்ள குகையில் காணப்படும் கல்வெட்டிலுள்ளது. சமணத் துறவி சந்திர நந்தி இக் குகையில் 57 நாள் உண்ணா நோன்பிருந்தாரென்னும் செய்தி காணப்படுகிறது.[49]

ஐ ம் ப தி தே மா ன
ச ன ன் னோ ற் ற
ச ந் தி ர ந் தி ஆ
தி ரி கர் நி சீ தி கை

22. கழிஞ்சமலைக் கல்வெட்டு

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அரிட்டாபட்டிக்கு வடமேற்கிலுள்ள கழிஞ்சமலைக் குகையில் உள்ள கல்வெட்டுத் தொடரைக் கி.பி. 1971ஆம் ஆண்டில் டாக்டர் ஏ. சுப்பராயலு, டாக்டர் கே. வி. இராமன் ஆகியோர் கண்டுபிடித்தனர்.

நெல்வேலிச் செழியன் அதனன் மகன் ஒளியன், பள்ளி வெட்டி உதவினான் என்னும் செய்தி இதில் காணப்படுகிறது.

நெ ல் வெ ளி ஈ ய் ச ழி வ ன் அ த ன ன்
வொ ளி ய ன மு ஸ ை கை கொ டு வ ன்

'நெல்வெளி சழிவன் அதனன் ஒளியன் முககை கொடுவன்' என்று இது சரிசெய்து படிக்கப்படுகிறது.

23. ஐயர்மலைக் கல்வெட்டு[50]

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம், ஐயர் (ஐவர்) மலையிலுள்ள குகையில் காணப்படும் சங்ககால எழுத்து

47 Mahadevan, I., Op. cit.
48 S. I. E. 239 of 1904.
49 Mahadevan, I, Op. cit.
50 'Indian Express', dated 6—2—73
தினமணிச் சுடர் அனுபந்தம், நாள் 15-7-73
கொங்குநாள் 15-8-74

கல்வெட்டுகளை 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு தொல்பொருள் துறையினர் கண்டுபிடித்தனர்.

ப ணை து றை வே ஸ ன அ த ட அ ன ம
பணைத்துறை வேசன் அதிட்டானம்

24. *சங்கரமலைக் கல்வெட்டு*[51]

திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரை அடுத்துள்ள சங்கர மலைத் தொடரில் பழங்கால எழுத்துகள் காணப்படுவதாகத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையினர் குறிப்பிட்டுள்ளனர். வே, ஏ, ஆகிய இரண்டு எழுத்துகளைத் தவிர வேறு எதனையும் அதில் தெளிவாகப் படிக்க முடியவில்லை.

25. *மாலகொண்டாக் கல்வெட்டு*[52]

ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டம், கண்டுகூர் வட்டம் மாலகொண்டா என்னும் ஊரை அடுத்துள்ள மலைக்குகையில் உள்ள எழுத்துகளில் 'அருவாள குலம்' என்னும் தொடரும், 'வீரிசெட்டி' என்னும் பெயரும் காணப்படுகின்றன.

அ ர வா ள கு ல ஸ ந த ஸெ டி பு த ஸ ஸ
ரி வீ ரி செட்டி நோ தா ன

மேற்கூறிய கல்வெட்டு எழுத்துகளோடு ஒப்புநோக்கத்தக்க வேறு பல சான்றுகளும் நமக்குக் கிடைத்துள்ளன. வடார்க்காடு மாவட்டம், செய்யாறு வட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி என்னும் சிற்றூரில் கண்டெடுக்கப்பட்ட ஈயக்காசுகளில் 'சேந்தன், ஆதி' என்னும் சங்ககால மன்னர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு உள்ளன. இவ்வெழுத்துகள் பண்டைய 'தமிழி' எழுத்துகளாகும்.

அடுத்துப் புதுச்சேரிக்கு அண்மையிலுள்ள அரிக்கமேடு என்னும் இடத்தில் தொல்பொருள் துறையினரால் அகழ்ந்தாய்ந்து கண்டெடுக்கப்பட்ட பொருள்களில் 'விளக்கொன்றில்' 'முது குமூரன்' என்ற பெரும்பானை ஓடுகளில் 'சாத்தன், ஆவி, ஆந்தை, பணிகன், மிகோதி, ஈசன்' முதலான பெயர்களும் காணப்படுகின்றன. இவையும் தமிழி எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ளன.

மேலே கண்ட கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்துகளும், ஆண்டிப்பட்டி ஈயக்காசுகள், அரிக்கமேட்டு விளக்கு, பானை ஓடுகள் ஆகியவற்றில் காணப்பெறும் எழுத்துகளும் தமிழி என்னும் ஒரே வகை எழுத்துகளால் ஆனவை என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

---

51 South Indian Palaeography
52 S. I. E. Part II Para I of 1937–38

ஆண்டிப்பட்டி - ஈயக்காசுகள்[58]

(1) சேந்தன் ஆதி..... (3) எதிரா .....

(2) எதிரான் சே... .. (4) எதினன் .....



ஒளிப்படம் 1



ஒளிப்படம் 2

நன்றி : அரும்பொருட்காட்சியகம், சென்னை-9.

58 'First finds of Sangam Age Coins', The Sunday Standard, dated 16—7—1967

அரிக்கமேடு - அகல் விளக்கு[54]

(1) முதி குழுர அன அகல

அரிக்கமேடு - மண் ஓடு[55]

(2) சாத்தன ஆவிஈ நிகதிஈசன ஆதி
தை பனிக

முடிவுரை

இதுவரையில் ஆராய்ந்த கல்வெட்டுகளை எண்ணும்போது சில வரலாற்றுச் செய்திகள் உண்மை என உறுதி செய்யப்படு கின்றன. சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள சேர, சோழ, பாண்டி யர்களின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முந்தியதே என்பதும், அக்காலம் முதலே சமணமதம் தமிழ்நாட்டின் மக்களா லும், மன்னராலும் மதித்துப் பேணப்பட்டு வந்தது என்பதும் அவற்றுள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்க செய்திகள் ஆகும்.

மற்றும் மதுரையைச் சுற்றிலுமுள்ள குன்றுப்பகுதிகளில் வாழ்ந்த சமண முனிவர்கள் சில நூற்றாண்டுகளுக்குப் பின் கி. பி. 470-ல் மதுரையில் வச்சிரநந்தி தலைமையில் 'திரமிள சங்கம்' என்னும் கூட்டமைப்பினை உருவாக்கினார்கள். ஆதலால், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பல, சங்ககாலத்தை அடுத்த காலத்தில் தோன்றக் காரணமாயிருந்த இவர்களின் முன்னோரே சங்ககாலக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெளிவாகிறது.

பெண்களும் துறவுபூண்டு சமணத் துறவிகளோடு நோன் பிருந்த செய்தியும், அவர்களுக்கு உணவு, உறையுள் முதலான அடிப்படைத் தேவைகளைப் பொதுமக்கள் முன்வந்து உதவி வந்த பாங்கும், நேரில் இருந்து உதவ முடியாதவர்கள் பொருள் முதலீடாகக் கொடையளித்து அதன் உதவியால் துறவிகளைப் பேணி வரும்படி செய்தனர் என்பதும், இக் கல்வெட்டுச் செய்தி களிலிருந்து உய்த்துணரப்படுகின்றன. கொல்லாமை, புலால் உண்ணாமை முதலான கோட்பாடுகள் தமிழகத்தில் வேரூன்ற இந்தத் துறவிகள் காரணமாயிருந்திருக்கவும் கூடும். தமிழ்நாட்டுச் சமணத்தில் வடநாட்டுச் சமணத்தைப்போலப் பெண்ணைத் தாழ்வாகக் கருதும் மனப்போக்கு காணப்படவில்லை என்பதும் இக் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன.

---

54 தமிழ் முரசு, நாள் 13—9—1973
55 ஷெ

மொழியியல் நிலையில் இந்தக் கல்வெட்டுகள் கிறித்துவுக்கு முற்பட்ட இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் காணப்படும் சில விதிகளுக்கு இலக்கியங்களாகத் திகழ்கின்றன; தமிழ் மொழிக்கே உரிய சிறப்பெழுத்துகளான ழ, ற, ன ஆகிய வற்றிற்குத் தனிக் குறியீடுகளைப் பெற்றுத் தமிழ்மொழிக்கென்று தனி எழுத்துகள் இருந்ததைக் காட்டும் சான்றுகளாகத் திகழ் கின்றன. இவ்வாறு சங்ககாலக் கல்வெட்டுகள் மக்கள் வரலாற் றையும், மக்கள் பேசிய மொழியின் வரலாற்றையும் அறிய உதவும் பதிவுகளாய் உள்ளன.

பிற்சேர்க்கை

1. மீனாட்சிபுரம் கல்வெட்டு—1

கணி நந்தி ஆசிரியன் என்பவன் இங்குள்ள குகைகளில் தங்கியிருந்த சமணத் துறவிகளுக்கு ஆசிரியனாக விளங்கியவன். நந்தி என்பது இவனது இயற்பெயர். கி. பி. 470-ல் மதுரையில் சமண சங்கத்தை ஏற்படுத்தியவன் பெயர் வச்சிரநந்தி என்பது ஈண்டு நோக்கத்தக்கது. சோதிடத்தில் வல்லவனாய் இவன் விளங்கியதால் கணி என்னும் அடைமொழி பெற்றான். 'ஆங்கே' என்னும் சொல், கல்வெட்டில் 'ஆன்கே' என்று பொறிக்கப்பட்டுள்ளது. 'நந்தி தங்கியிருந்த அந்த இடத்தில்' என்பது அதற்குப் பொருள். 'ஏமமாம்' என்னும் சொல்லுக்கு 'ஏமம் ஆகும்படி' அதாவது, பாதுகாவலாய் அமையும்படி என்பது பொருள். துறவிகள் மழையில் நனையாமல் அறையிறையில் (பாறைத் தாழ்வாரத்தில்) வாரம் வெட்டிக் கொடுத்துள்ளமை போன்ற செயல்கள் ஏமமாம் செயல்கள் என்று கொள்ளத்தக்கவை. நெடுஞ்செழியன் என்று இங்குக் குறிக்கப்பட்டுள்ளவன் பாண்டிய அரசன். 'பணவன்' என்பது (பணயன்) பணி மேற்கொண்டவனைக் குறிக்கும். கடலன் வழுதி என்பவன் பாண்டியன் நெடுஞ்செழியன் செயலாளுநன் (பணயன்) ஆவான். கடலன் என்பது இவனது பெயர். வழுதி என்பது குடிப்பெயர். இது பாண்டியரின் ஐந்து குடிகளில் ஒன்று. நந்திக்குப் பாதுகாவல் செய்து தரும்படி நெடுஞ்செழியன் ஆணையிட்டான். அவனது செயலாளனான கடலன் வழுதி வாரம் கொட்டும்படி செய்து பள்ளி அமைத்துக் கொடுத்தான். 'ஏமமாம்' என்னும் சொல்லைத் 'தம்மம்' என்றும் படிக்கின்றனர். 'ஏ' என்னும் உயிர் எழுத்தை வடமொழியிலுள்ள 'த' வர்க்கத்தின் 4 ஆவது எழுத்தாக அவர்கள் படித்துள்ளமையே இதற்குக் காரணம். ஐராவதம் மகாதேவன் படிக்கும் 'தம்மம்' என்னும் இச் சொல்லைப் பாலிமொழிச் சொல் என்று அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி கருதுகிறார். 'பணயன்' என்னும் சொல்லுக்குப் பணயக்காரன் என்னும் விளக்கம் தந்து அரசனுடைய கல்தச்சன் என்று அவனைக் கருதுகிறார்.

மீனாட்சிபுரம் கல்வெட்டு—2

'அங்கு' என்னும் பொருள் கொள்ளும்படி 'அன்' என்னும் சொல் இங்குப் பொறிக்கப்பட்டுள்ளது. 'பெலகன்' என்னும் சொல்லைச் 'சகலன்' அதாவது சகலை என்று எடுத்துக்கொண்டு

நெடுஞ்செழியன் மனைவியின் தங்கை அல்லது அக்காள் கணவன் அந்தச் சகலன் என்று விளக்கம் காண்கின்றனர். இவன் பெயர் 'சடிகன்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. இளஞ்சடிகன் தந்தை பெயர் சடிகன். அசோகன் கல்வெட்டுகளில் சோழன் 'சோட' என்று குறிக்கப்படுவதை எண்ணும்போது சடிகன் என்பது சழியன் (செழியன்) என்பதன் வேற்றுமொழி வடிவமோ என்று எண்ண வேண்டியுள்ளது. புகழ்மூர்த் 'தமிழ்'க் கல்வெட்டில் பெருங்கடுங்கோ மகன் இளங்கடுங்கோ என்று வருவதைக் காண்கிறோம். நன்னன் சேய் (மகன்) நன்னன் என்று சங்க நூல்களில் வருவதைக் காண்கிறோம். தந்தை பெயரும் மகன் பெயரும் சில சமயங்களில் ஒரே பெயராய் அமைவதை இந்தச் சான்றுகள் காட்டுகின்றன. இந்தக் கல்வெட்டிலும் 'ஏமம்' என்னும் சொல்லைத் திரு ஐராவதம் மகாதேவன் 'தமம்' என்று படித்து, தர்மம் என்று விளக்கம் கூறுகிறார். பெவகன் என்னும் சொல்லுக்குச் சேவகன் (சேனைத் தலைவன்) என்றும் பொருள் கொள்ளலாம் என்பது அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமியின் கருத்தாகும். சுப்பிரமணிய ஐயர்[1] பின் காணுமாறு படித்து விளக்கம் காணுகிறார்.

'காணியன் நதா ஸிரி யகுஅன் தமாம் இதா நடிஞ் சாறியன் ஸாலாகான் இளஞ்சாறிகான் தாந்தைய் சாறிகான் செஇய பாளிய்'

காணியன் என்பது கரணியன். கரணியன் என்பது அநுலோம (கலப்பு) சாதியைக் குறிக்கிறது. நதா என்பது நாத (தலைவன்) என்னும் பொருள் உள்ள சொல். யகுஅன் என்பது யக்ஷன் என்னும் சமஸ்கிருதச் சொல். பாளிய் என்பது பாழி.

'கரணிய குலத்தில் பிறந்த புகழ்பெற்ற தலைவனான ஸ்ரீயக்ஷன் இந்தத் தருமத்தைச் செய்தான். பாறையைக் குடைந்து இந்தச்சயித்தியத்தை அமைத்தவன் நெடுஞ்சாறியனின் மைத்துனனும் (சட்டகன்) இளஞ்சாறிகனின் தந்தையுமான சாறிகன்.' திருச்சி நாராயணராவ்[2] இந்தக் கல்வெட்டெழுத்தைப் பிராகிருத மொழி என்று தவறாகக் கருதிக்கொண்டு முதலில் பிராகிருதமாகப் படிக்கிறார். பிறகு அந்தப் பிராகிருதத்தைச் சமஸ்கிருதமாக அமைக்கிறார்.

---

1 Subramania Iyer, K. V., Historical sketches of ancient dekkan, Vol. III pp. 18-20

2 Narayan Rao, C., The Brahmi Inscriptions of South India, New Indian Antiquary, Vol. I. pp. 362-376

'காணியநா நதா விரியகு அநா தமாம
இத நடிஞா சாட்டியந ஸாயாகாநா இளாந
சாடிகாநா தாநதைங ; சாடிகாநாசே இய பாளிய'
(பிராகிருதம்)

'கணகாநாம் நாதா (நாம்) ஸ்ரீயக்ஷாணாம் தர்மம்,
இதா நர்திநாம் ஸார்தவாஹகாநரம் ஸிம்
ஹளாநாம் ஸ்ரேஷ்டிகாநாம் தனதேயம் ஸ்ரேஸ்டிகாநாம்
சைத்ய பாலிகா' (சமஸ்கிருதம்)

'காணிய ந(ா)ந தாஸிரியகு அனா தமாஇ தா நடிஞ
சாட்டியனா
ஸால(ா) கா னா ஈ லா ஞ சா ட் டி கா னா தா ந தை ய
சா ட் கா ன சே இ யா பா ளி ய'

என்பது கிருட்டிண சாஸ்திரியின் பாடமாகும்.[3]

மீனாட்சிபுரம் கல்வெட்டு—3

வெள்ளைப் பாறையால் (பளிங்குக் கல்லால்) ஆன மாடி வீடு களைக் கொண்ட ஊர் வெள்அறை நியமம். இவ்வாறு அமையப் பெற்றிருந்த ஊர் 'வெள்ளறை நியமம்' என்று வழங்கப்பட்டது. நியமம் என்னும் சொல் சங்ககாலத்தில் வழங்கப்பட்டிருப்பதை ஒப்புநோக்கலாம்.[4]

அச்சுதன் : இது சமணர் பெயர் என்பதைப் பிற்கால நன்னூலால் உணரலாம்.[5] இவன் இந்த வெள்ளறை நியமத்தில் வாழ்ந்தவன். இவன் வேளாண்மையில் சிறந்து விளங்கிய தற்காக அரசனால் 'காவிதி' என்னும் பட்டம் அளிக்கப் பெற்றவன். இவன் 'கழிதிகன்' என்பவனின் தந்தை. (அழிசி என்பது போன்ற அமைப்பினை உடைய பெயர் கழிதி. அதிகன் என்னும் பெயர் 'கன்' என்று முடிவதுபோலக் 'கழிதிகன்' என்னும் பெயரும் முடிகிறது.) அச்சுதன் என்னும் தொடரை

---

3 Krishna Sastri, H., Cavern and Brahmi Inscriptions of South India, Proceedings and Transactions of the First Oriental Conference, Poona, 1919, p p. 327-348

4 இருபெரு நியமம்—மதுரைக். 355; நியமமூதூர்—நற். 45 : 4; பொன்னுடை நியமம்—பதிற். 15:19, 30:12, கள்ளுடை நியமம்—பதிற். 75: 0, கொடிநுடங்கு நியமமூதூர்—அகம். 83:7; செல்லூர்க் குணாது .. கோசர் நியமம்—அகம். 90:12

5 நன். 258

வேறு வகையாகப் பிரித்து, சுதன் என்னும் சொல்லாகப் பிரித்து மகன் என்னும் பொருள் கொள்வாரும் உண்டு. பிண ஊ என்பது பிணைந்த உணவு ஆகும். இந்த அச்சுதன் துறவிகளுக்கு உணவு கொடுப்பித்தான். வேளாளன் ஆனதால் இப் பணியை இவன் செய்தான். சோற்றுடன் தக்கவற்றைச் சேர்த்துப் பிணைந்த உணவைக் கொடுத்தான்.

வெ ள (அ) (டை) ய நி கா மா த (ா) கொ (போ)
தி ர (ய) கா ஸீ தி கா அ (ரிதெ) அ ஸா தா னா பி நா க
கொ டு பி தோ னா

என்று திரு. கிருஷ்ணசாஸ்திரி படிக்கிறார்.

வெள் அடைய் நிகாமதா கொ
பொதிர் யகாஸீ தி கா அரிதாவ
ஸாதான் பினாக கொடுபி தோன்

வெள்ளடையில் வசிக்கிறவரின் மகளான யட்சாஸதி (இந்தக் குகையை) செய்வித்தாள். சாத்தன் பிணக்கன் இதைச் செய்தான் என்பன சுப்பிரமணிய ஐயரின் பாடமும் விளக்கமும் ஆகும்.

வெள் அடைய் நிகமத கொபிதிர்
யக ஸிதிக அரிதெ அ சதன்
பிணக கொடுபிதோன்

இதன் பொருள் :

வெள்ளடையில் வசிப்பவரின் மகளான யகஸிதி என்பவள் (இந்தக் குகையை) செய்வித்தாள். சாத்தன் பிணக்கன் இதைக் கொடுப்பித்தான் என்பது டாக்டர் டி. வி. மகாலிங்கம் அவர்களின் விளக்கமாகும்.

மீனாட்சிபுரம் கல்வெட்டு—4

'அறி' என்னும் சொல்லால் அறிவன் குறிப்பிடப்பட்டுள்ளான். அறிவன் முக்காலமும் உணர்ந்தவன் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.[6] நந்தி என்னும் துறவி கணியனாய் விளங்கினான் என்பது மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. அறிவன் என்னும் சொல் இதனை மேலும் உறுதி செய்கின்றது. கொடிவழி (மரபுவழி) வந்த ஆதன், கொடி ஆதன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். நந்தியின் மரபுவழியில் வந்த ஆதனும் துறவுபூண்டு அந்தக் குகைகளில் இருந்தவர்களில் ஒருவன்.

---

6 தொல் பொருள். புறத். 16

க ணீ ய் ந த ன் கொ டி ய் அ வ ன்

கணீ நதன் (இதைக்) கொடுத்தான் என்னும் பாடமும் விளக்கமும் திரு. ஐ. மகாதேவன் தருவனவாகும்.

1. மீனாட்சிபுரம் கல்வெட்டு—5

இந்தப் பள்ளிகளில் தங்கியிருந்தவர்களில் சிலர் 'வெள்ளறை' என்னும் ஊர்வாழ் மக்களின் வழிவந்தவர். ஆகையால், வெள்அறை நிகமத்தோராகிய கொடியோர் என்று குறிக்கப் பட்டுள்ளனர். நிகமத்தோர் என்பதற்கு வாணிகக் குழுவினர் என்று பொருள் கூறுகின்றனர். ஊ என்பது உணவு. 'பாசவன்' என்று வெற்றிலை வாணிகன் இங்குக் குறிக்கப்பட்டுள்ளான். 'உலவான்' என்பதற்குக் கேடில்லாதவன் என்று பொருள். வெற்றிலை வாணிகன் ஒருவன் துறவிகளுக்கு உணவு வழங்கும் தொண்டில் பிழைபாடு நேராமல் ஒகி வந்தான்; அவன் பள்ளி அமைத்துக் கொடுத்தும் உதவினான் என்னும் செய்திகள் இதில் குறிக்கப்பட்டுள்ளன.

2. கீழவளவுக் கல்வெட்டு

உ பா ச அ ன் கொ ண் டி ள வ ன் கொ டி பா ளி ஈ

என்று திரு. ஐராவதம் மகாதேவன் இதனைப் படித்து, 'தொண்டி உபாசகன் இளவன் கொடுத்த பள்ளி' என்னும் விளக்கத்தைத் தருகிறார்.

உ பா ச அ ன் த ண் டு லா வ ன் கொ டு ப ளி ஈ

என்னும் பாடமும், உபாசகனான (சாவகனான) தண்டுலாவன் கொடுத்த பள்ளி என்னும் விளக்கமும்கூடத் தர இயலும் என்பது அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி கருத்தாகும்.

டாக்டர் டி. வி. மகாலிங்கம்,

உ பா சா அ பொ தெ ணெ டு ள வோ சோ
கொ டு ப ளி ஈ

என்று பாடம் கொண்டு உபாஸகன் ஆபுத்திரன் நெடுவேள் என்னும் விளக்கத்தையும், நெடுவேள் என்பது முருகப் பெருமானையும் திருமாலையும் குறிக்கும் சொல் என்றும், 'வத்ஸன்' என்பது மகனைக் குறிக்கும் சொல் என்றும் விளக்கம் தருகிறார்.

திரு. சுப்பிரமணிய ஐயர்,

உ பா சா அ போ த நெ ட் டு ல வோ ச் சோ
கொ டு ப ளி ஈ

என்னும் பாடத்தையும், உபாசகன் மகன் நெடுலலோச்சன் அமைத்த குகை என்னும் விளக்கத்தையும் தருகிறார்.

திரு. நாராயணராவ்,

உ பா ச அ போ தா நா ட் ட லா ஞ ச் சோ
கொ டு ப ளி ஈ

என்னும் முறையில் பிராகிருத மொழியென்று படித்து அதற்கு,

'உபாத்யாய்—புத்ரஷ் நாட்ய கர் ஓ பாத்யாயயஷ்ய குட்டபிதா பாணிகர'

என்னும் சமஸ்கிருத விளக்கம் கண்டு, உபாத்தியாயரின் மகனான நாட்டியர் கற்பிக்கிற நட்டுவன் வெட்டி உண்டாக்கிய ஆசிரமம் என்று தமிழில் செய்தியைக் கூறுகிறார்.

3. கொங்கர் புளியங்குளம் கல்வெட்டு—1

இங்குள்ள கல்வெட்டில் பாறையை வெட்டிக் குறைத்து வசதி செய்து கொடுக்கும் பணியானது 'குறை' என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. 'உப்பாசவன்' என்பது இங்குள்ள கல் வெட்டில் குறிக்கப்பட்டுள்ளவனது பெயராகும். இந்தப் பெயரைப் பற்றிய விளக்கத்தைத் திருவாதவூர்க் கல்வெட்டில் காணலாம். இவன் உப்பாறு என்னும் ஊரைச் சேர்ந்தவன் என்பது 'உப்பாறு வன்' என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து தெரிகிறது. 'குறை' என்று படிக்கப்பட்டுள்ள பகுதியைக் 'கூறு' என்று படித்து அதற்குக் குன்று என்று விளக்கம் கண்டு இவனது பெயரை உப்பாசகன், உப்பாறுவன் என்று படித்து அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி விளக்கம் காண்கிறார். 'குறை' என்று படிக்கப் பட்டுள்ள இந்தப் பகுதியைத் திரு. ஐராவதம் மகாதேவன் 'கூறு' என்று படித்துக் 'கூரை' என்று விளக்கம் காண்கிறார். டாக்டர் டி. வி. மகாலிங்கம் உபாசகனான உப்பாறுவன் உறையும் இடம் என்னும் விளக்கத்தையும்,

திரு. கிருஷ்ணசாமி,

'கு ட் டு கொ ட் டு பி தா வா னா
ஊ பா சா அ னா (ஊ) பா (ட்டூ) வ'

என்னும் விளக்கத்தையும்,

திரு. நாராயணராவ்,

'கு ட் டு கொ ட் டு பி தா வா னா
உ பா சா அ வு வா ஊ பா ட் டு வ'

என்னும் பிராகிருத பாடத்தையும்,

'உபாட்டு அ குட்டு கொட்டா பிதவான உபாத்யா யானாம்'

என்னும் அதற்கான சமஸ்கிருத விளக்கத்தையும், ஊபாட்டு அ என்பவன் பொக்கிஷத்துக்காக இதை வெட்டினான் என்னும் தமிழ் மொழிபெயர்ப்பையும் காண்கிறார்.

கொங்கர் புளியங்குளம் கல்வெட்டு—2

'சோறா அதன்' என்பது ஒருவன் பெயர். சோறு அளித்தவன் ஆதலால், சோறாஅதன் என்று இவன் சிறப்பிக்கப் பட்டுள்ளான். உணவு அளித்த பாசவன் 'ஊபாசஅன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது போல், சோறு அளித்த ஆதன் சோறா அதன் (சோறாதன்) என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இந்த ஆதன் சமணர் படுக்கைகளைக் கூறுபடுத்திக் கொடுத்தான். அதனுடன் இவன் பொன் முதலீடும் செய்திருக்கலாம். அல்லது இந்தத் தொகையை இவன் படுக்கைகளைக் 'கூறுகோடலகு' செய்வதற்காகவும் செலவிட்டிருக்கலாம். இதன் இறுதியில் குறிக்கப்பட்டுள்ள குறியீடு பொன்னின் மதிப்பைக் குறிப்பதாகும். (இது ஏனையவற்றுக்கும் பொருந்தும்.) கோடலகு என்பதற்குக் குன்றின் பொடவு என்னும் விளக்கத்தைத் தந்து கொடையாளியின் பேரைச் 'சோறா ஆதன்' என்று அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி படிக்கிறார்.

திரு. ஐராவதம் மகாதேவன்,

'கு டு கொ ட லு கு ஈ த் த வ ன் கெ ற அ த ன் எ ன்'

என்னும் பாடத்தைத் தந்து 'செறா அதன்' என்று இங்குக் குறிக்கப்பட்டுள்ள ஆளின் பெயரைப் படிக்கின்றார்.

டாக்டர் டி. வி. மகாலிங்கம்,

'கு ற கொ ப லு கு சி த் த வ ன் செ ற அ த ன் என்'

என்னும் பாடத்தையும்,

'சிறு ஆதன் என்பவன் உறைவிடம் செதுக்கியளித்தான்'

என்னும் அதற்கான விளக்கத்தையும் தருகிறார்.

திரு. சுப்பிரமணிய ஐயர்,

'கு டு கொ டா ல கு இ தா வி ன் செ டு'

என்னும் பாடத்தையும்,

'குகைகளைக் கொத்துகிறவனாகிய இதாதவென் செடு அதான் என்பவனுடைய குகை'

என்னும் விளக்கத்தையும் தருகிறார்.

திரு. நாராயணராவ்,

'கு ட் டு கொ டா ல கு இ தா தா னி நா சே ட்ட அ தானா லே னா' கோஷ்ட்டம் கோஷ்ட் டாகா என்ற முறையில் பிராகிருதம் ஆகப் படித்து, 'க்ரு தே ஹி தார்த்தாய்; ஞான—ஸ்ரேஷ்ட் யஸ்ஸ தானும் லயனம்' என்ற முறையில் அதற்குச் சமஸ்கிருத விளக்கத்தையும் கண்டு, 'நூல்நிலையத்தின் ஆக்கத்திற்கான இடம் ஞானசிரேஷ்டர் தானமாகக் கொடுத்த குகை'

என்னும் முறையில் தமிழ் மொழிபெயர்ப்பைத் தருகிறார்.

கொங்கர் புளியங்குளம் கல்வெட்டு—3

பிட்டன் என்பவனின் தந்தை போத்தன் என்பதும், அவனது ஊர் பாணூர் என்பதும், பாணூர்ப் போத்தன் பிட்டன் என்னும் தொடரால் இக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளான். ஊர்ப் பெயரை முதலிலும், தந்தை பெயரை அதற்கடுத்தும், மகன் பெயரை அதனையடுத்தும் குறிக்கின்ற இத்தகைய வழக்கம் சங்க காலத்தில் பெருவழக்கு என்பதைச் சங்ககாலப் புலவர் பெயர்கள் பட்டியலிலிருந்து நாம் அறியலாம்.

'பா க ன் ஊ ர் பே தா ? த ன்' என்னும் பாடத்தையும் பா க னூ ர் ப் பேராதன் என்னும் பாட விளக்கத்தையும் திரு. ஐராவதம் மகாதேவன் கொள்கிறார்.

அடியில் காணப்படுவது டாக்டர் இரா. நாகசாமியின் பாடமும் விளக்கமும் ஆகும் :

'பா க ன ஊ ர் பே தா த ன் பி ட ன் இ த்த வே போ ன்'

பாகனூர் பேதாதன் பிடன் என்பவன் இதை வேய்ந்தான்.

டாக்டர் சுப்பராயலுவின் பாடம் வருமாறு :

'பா க ன் ஊ ர் பொ த் தன் பி ட ன் ஈ த னூ வே போ ன்'

'தூ வே' என்னும் சொல் மயில் இறகு கற்றையை உணர்த்தும் என்றும், பொன் என்னும் சொல் பொன்மலையாகிய

மேருமலையைக் குறிக்கும் என்றும் டாக்டர் டி. வி. மகாலிங்கம் கருதுகிறார்.

திரு. கிருஷ்ணசாஸ்திரி,

'பா க னா ஊ ர பே க (ஆ) த (ஆ)
னா பி ட் டா னா ஈ த தா வே பொ னா'

என்னும் பாடத்தையும்,

சுப்பிரமணிய ஐயர்,

'பா கா னூ ர் போ தா தா ன் பி டா ன் இ தா தா வே லே ன்'

என்னும் பாடத்தையும், பாகனூர் என்பது பாண்டி நாட்டிலுள்ள ஓர் ஊர், பிடான் என்பது பட்டாரகன் என்பதன் திரிவு, லேன் என்பது குகை ஆகிய விளக்கத்தையும் தருகிறார்.

திரு. நாராயணராவ் வழக்கம்போல், 'பாகானா ஊரா வ்ருத் தானாம்' தானம் பிட்டாகானாம் ஹிதார்த்தாய போ (ப்ரோ) தானாம் என்னும் பிராகிருத பாடத்தையும், முன் பின்னாக மாறிப் போன (பௌத்த மதத்தின்) பிடகப் புத்தகங்களை மாணவர் நன்மைக்காகப் 'பாகனூர்ப் பெரியவர்கள் கொடுத்த தானம்' என்னும் தமிழ் விளக்கத்தையும் காண்கிறார்.

4. விக்கிரமங்கலம் கல்வெட்டுகள்

'ஆந்தை பேகன்' என்னும் பெயர் 'அந்தை பிகன்' என்று எழுதப்பட்டிருக்கலாம். 'வேய் ஆதன்' என்னும் பெயர் 'வேய் அதன்' என்று எழுதப்பட்டிருக்கலாம். 'வேய்' என்னும் சொல் அரசனின் உளவாளியாக இவன் விளங்கியதை உணர்த்தும். இவன் ஆந்தை பேகன் என்பவனின் மகன்.

சுப்பிரமணிய ஐயர் 'அந் தை பிகான் மாகன் வேன் தான' என்று படித்து 'பிகான் மகனான வேன் இந்தப் படுக்கையைத் தானஞ் செய்தான்' என்று விளக்கம் கூறுகிறார்.

நாராயணராவ்,

வழக்கம்போல் அடியில் காணுமாறு படிக்கிறார் :
'அந் தை பிகானா மாகனாவே ஊ தான'

டாக்டர் டி.வி. மகாலிங்கம், 'ஆந்தையப் பிகன் வேநா அதன்' என்று படிக்கிறார்.

டாக்டர் நாகசாமியின் பாடம், 'அந்தையப் பிகன் மகன் வெந் அ தான' என்பதாகும். தானம் (ஸ்தானம்) என்பது இடத்தைக் குறிக்கும் என்பது அவர் விளக்கம்.

திரு. சுப்பிரமணிய ஐயர், 'பொதிலை குவிரன்', 'வேன் குவீர கொடுபிதான்' என்னும் பாடங்களையும்,

திரு. நாராயணராவ், 'பொதிலை குவீரனா குவீரனா கொட்டு பிதா' என்னும் பாடத்தையும்,

டாக்டர் டி. வி. மகாலிங்கம், 'பொதிலை குவிர(ன்) பொதிலை-பொதிகைமலை' என்னும் பாடத்தையும் அதற்கான விளக்கத்தையும் தருகின்றனர்.

5. மேட்டுப்பட்டிக் கல்வெட்டு

(1) ஆந்தை அரிதி என்பது ஒருவன் பெயர். ஆந்தை மகன் அரிதி என்று இது பொருள்படும்

(2) 'ஈர்வு' என்பது தத்து எடுத்துக்கொண்டதை உணர்த்தும் சொல் எனலாம். இதனால் ஆந்தையின் தத்துப்பிள்ளை ஆந்தை என்று பொருள் அமையும். இதை 'அந்தை ஈர்வு அதன்' என்று படிக்கலாம்.

(3) மதிரை ஆந்தை விசுவன் என்பது மதுரையில் வாழ்ந்த ஆந்தை என்பானின் மகன் விசுவன் என்பதாகும்.

(4) இந்த ஆதன் வேந்தனாய் விளங்கியவன் ஆதலால் 'அந்தை மகன் வேந்து ஆதன்' என்று குறிப்பிடப் பட்டுள்ளான்.

(5) சந்தந்தை மகன் சந்தன். சந்தந்தை என்னும் பெயர் சந்தன் தந்தை என்னும் சொற்களின் சேர்க்கை என்பதை 'ஆதன் தந்தை' என்பது 'ஆந்தை' என்று அமையும் என்று தொல்காப்பியம்[7] கூறுவதிலிருந்து அறியலாம்.

(6) 'திட்டி இவ ஆதன்' என்னும் கல்வெட்டுத் தொடரில் திட்டி என்பது ஊரின் பெயர்.

(7) பதனூர் என்பது 'பதின் ஊர் அந்தை' என்று குறிக்கப் பட்டுள்ளது.

(8) குவிரன் தந்தை என்பது குவிராந்தை என்று அமையும். இந்தக் குவிராந்தைக்கு ஆதன் என்னும் மகனும் இருந்தான். அவன் அரசனின் வேயாளியாய் (ஒற்றாளியாய்)

---

[7] தொல். எழுத்து. புள்ளி. 53

விளங்கினான். இந்த வேயாள் ஒற்றனே இங்குக் குறிப்பிடப்படுகிறான்.

திரு. கிருஷ்ண சாஸ்திரி மேட்டுப்பட்டியிலுள்ள கல்வெட்டுத் தொடர்களை அடியில் காணுமாறு படிக்கிறார் :

(1) போ தி னா (ஊ) ர தா (னா)
(2) கு வி ரா அ (ந) தை வெ ய அ தா னா
(3) கு வி ரா அ ந தை வெ (ய) அ தா னா
(4) தி தோ ஈ ல அ தா னா
(5) அ ந தை அ ரி ய
(6) தி அ ந தை (ஈர) வா த ன
(7) ம தி ர (ஆ) அ ந தை (வி) ஸ் லா னா
(8) சா ந தா ந தை சா ந தா னா
(9) அ ந தை வ (எ) நா தா அ தா னா

அதற்குக் கீழ்க்காணும் விளக்கத்தையும் தருகிறார் :

(1) பொதின் ஊர - அ தான
(பொதினூரைச் சேர்ந்த ஒருவர் கொடுத்த தானம்)

(2) குவீர அந்தை வேய்-அ-தான
(குவரனுடைய படுக்கை வேண் கொடுத்த தானம்)

(3) திடயில்-அ-தான
(திட்டையூரில் இருந்தவர் கொடுத்த தானம்)

(4) அந்தை அரியதி
(அரியதி என்பவரின் படுக்கை)

(5) அந்தை இரவாதான்
(இரவாதானின் படுக்கை)

(6) மதிர அந்தை
(மதிரைக்கு உரிய ஒருவருடைய படுக்கை)

(7) விசுவாசானதா அந்தை
(விவான் சானதானின் படுக்கை)

(8) சானதான் அந்தை
(சானதானின் படுக்கை)

(9) வேனதா-அ-தான
(வேனதானின் தானம்)

திரு. நாராயணராவ் அவர்கள் இவ்வூரிலுள்ள கல்வெட்டுகளில் சிலவற்றைத் தனித்தும் சிலவற்றை இரண்டாகச் சேர்த்தும் தம் வழக்கப்படி முதலில் பிராகிருதமாகப் படித்துப் பிறகு சமஸ்கிருதத்தில் விளக்கம் தந்து, பின்பு தமிழில் செய்தியை மொழி பெயர்த்துத் தருகிறார்.

1. பொதின 'உர' அ தான (பிராகிருதம்)
பொதின ஊரஸ்ய தானானி (சமஸ்கிருதம்)

பொதின ஊர என்னும் கிராமத்தானின் தானம்.

2-3. குவிரா அன தை (பிராகிருதம்)
குபேரானாம் தேயம் (சமஸ்கிருதம்)

குபேரன் என்னும் பெயருள்ள இனத்தார் செய்த தானம்.

4-5. திடோயிள அ தான

(பௌத்த பிக்கு பிக்குணிகளுக்குக் கொடுக்கப்பட்ட தானம்).

5-6. அரியதி அநதை (பிராகிருதம்)
ஆர்ய ஸ்திரீனாம் தேயம் (சமஸ்கிருதம்)

கணவன் - மனைவி கொடுத்த தானம்.

6-7. இரவாதனா மதிரா அந்தை (பிராகிருதம்)
இராவதானாம் மாத்ருணாம் தேயம் (சமஸ்கிருதம்)

இரவாத என்னும் பிரிவினரின் தாய்மார் செய்த தானம்.

7-8. விஸுவா னா சானதானா தை (பிராகிருதம்)
விஸ்வா னாம் ஜானபதானாம் தேயம் (சமஸ்கிருதம்)

எல்லாக் கிராமத்தாருடையவும் தானம்.

8-9. சானதானா அநதெ (பிராகிருதம்)
ஜானபதானாம் அந்யத் தேயம் (சமஸ்கிருதம்)

கிராமத்தாருடைய இன்னொரு தானம்.

9. வெனதாத் தானா (பிராகிருதம்)
விநதாயா தானம் (சமஸ்கிருதம்)

விதாவினுடைய அல்லது ஒரு பக்தருடைய தானம்.

இவ்வூர்க் கல்வெட்டுத் தொடர்பான அறிஞர்களின் விளக்கங்கள் வருமாறு :

1. 'பொ தி ன (ஊ) ர அ த ன' என்பது இதன் வாசகம். திராவிடியில் இது 'பொதின ஊர் அதன்' என்றாகும். இதன் பொருள் 'பொதின் ஊர் ஆதன்' என்பது.

2-3. 'கூவிரா அநதாய் வேய அதான, குவிர அந்தாய் வேள் அதன்.' இது திராவிடியில் 'குவிர அந்தாய் வேள் அதன்' என்றாகும். இதன் பொருள் (ஆசீவக மதத்தைச் சேர்ந்த) 'தூய தந்தையான குவிரனும் ஆதனும்.' தமது அடிக்குறிப்பில், இதன் முழு வாசகம் ஒரே ஆளைக் குறிப்பதாகவும் இருக்கிறது என்று கூறுகிறார்.

4. 'தீ டா இ ல அ த ன.' இது திராவிடியில் 'தி-ட-இன் அதன்' என்றாகும். திடியில் அல்லது தீடியில் என்பது, மதுரை மாவட்டம் திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ள திடியன் என்னும் ஊர். 'திடியில் ஆதன்' என்பது இதன் பொருள்.

5. 'அந்தை அரிய' என்பது இதன் வாசகம். திராவிடியில் இது 'அந்தை அரியி' என்றாகும். இதன் பொருள் 'தூய தந்தை அரி' என்பது.

6. 'தி ஆந தை (இர) வா த ன.' இது திராவிடியில் 'தி அந்தை இராவதன்' என்றாகிறது. இராவதன் என்பது, ஐராவதன் என்பதாகும். இந்திரனுடைய யானை ஐராவதம் என்பது. ஐராவதன் என்பது ஆளின் பெயர். இரவாதான் என்பது இரவாதவன் (யாசிக்காதவன்) என்னும் பொருளுள்ளதாகவும் இருக்கலாம்.

7. 'மதிர அந்தை விஸுவன்.' இதன் பொருள் 'மதுரையில் உள்ள தூய தந்தை விசுவன்' என்பது.

8. 'சாத தா ந தை சா ந தான.' திராவிடியில் இது 'சந்தந்தை சந்தன்' என்றாகிறது. சந்தன் என்பது இடை ஏழு வள்ளல்களில் ஒருவன். சந்தன்—தந்தை—சந்தந்தை.

9. 'அ ந தை வெ ந த அ தா ன.' இதை 'அந்தை வேந்த அதன்' என்று படிக்கலாம், வேந்த(ன்) என்பதற்கு அரசன் அல்லது இந்திரன் என்பது பொருள். மேலே கூறப்பட்ட எல்லாப் பெயர்களும் ஒரு சமயப் பிரிவைச் சேர்ந்தவை எனக் குறிக்கின்றன என்பது தெரிகிறது. இவர்கள் ஆசீவக மதத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும்.

6. சித்தன்னவாசல் கல்வெட்டு

இப்போதுள்ள கருநாடக மாநிலப் பகுதியில், இக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள 'எருமை நாடு' உள்ளது எனலாம். இது சங்ககாலத்தில் 'எருமை நன்னாடு' என்னும் பெயருடன் வழங்கப் பட்டது.[8] இதன் தலைநகர் அப்போது எருமையூர்.[9] குழூஉர்[10] என்று சங்ககாலத்தில் வழங்கப்பட்ட ஊர்; இந்தக் கல்வெட்டில் குமூரூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. குழூஉரில் பிறந்த ஒருவனின் பெயர் குமணன். இவன் 'கவுடஞன்' என்னும் அடைமொழி யால் சிறப்பிக்கப்பட்டுள்ளான். இக்காலத்தில் கொங்கு நாட்டில் வாழும் கவுண்டர்கள் மைசூர்ப் பகுதியிலும் வாழ்ந்ததைப் பிற் காலக் கல்வெட்டுகள் 'கவுடர்' என்னும் சொல்லால் குறிப்பிடு வதை இந்தக் 'கவுடஞன்' என்னும் சொல்லோடு ஒப்பிட்டு நோக்கலாம். குமணனிடம் மற்போர் பயின்ற இளையர் 'குமணன் மல் இளயர்' என்று குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் இங்கிருந்த சமண முனிவர்களுக்குத் தவ இருக்கைகள் செய்து அளித்தார்கள். இந்தக் கல்வெட்டைத் திரு. கிருஷ்ண சாஸ்திரி,

'ஏ உ யி நா ட் (டு) கு மு ட் ட (ஊ) ர யிடா
த தா க வு டி ஈ தெ னா கு சி டு போ சி ல
ஈ ள ய ர செ ய தொ அ தி ட அ ன ம'

என்னும் முறையில் படிக்கிறார். மற்றும்,

'ஏழமி நாடு குமட்டூர் பிறாந்த காவுடி ஈதேண்டு
சிடுபோசில் இளாயர் செய்தா அதிட்டானம்'

என்பது திரு. சுப்பிரமணிய ஐயர் தரும் விளக்கமாகும். பௌத் தருடைய பிடகத்தின் வளர்ச்சிக்காக இலங்கை இராச்சியத்தி லிருந்து செய்த ஏசமி நாட்டு குமிட்ட ஊர் நிலையம் என்பது திரு. நாராயண ராவ் கண்டறிந்த விளக்கமாகும்.

---

8 அகம். 253 : 19
9 மையூர்-மைசூர்-பதிற். பதி. 9 : 1
10 அகம். 168 : 5

திரு. கே. ஆர். சீனிவாசன் தரும் விளக்கம் வருமாறு :

'ஏழமி நாட்டு (ஓய்மானாட்டு) குமட்டூர் பிறந்தான் காவுதி
ஈதனுக்குச் சிறுபோசில் இளயர் செய்த அதிட்டானம்'

மற்றும்,

'ஏமோமி நாட்டு முகுட்டு ஊர் பிறந்த காவுதி
ஈதென்கு சிறுபோசில் இளயர் செய்த அதிட்டானம்'[11]

என்னும் விளக்கத்தை டாக்டர் டி. வி. மகாலிங்கம் தருகிறார்.

'எருமி நாடு குமிழ்ஊர் பிறந்த காவுதி ஈதன்கு
சிறுபாவில் இளயர் செய்த அதிட்டானம்'

என்னும் விளக்கம் தருபவர் திரு. ஐராவதம் மகாதேவன்.

7. கருங்காலக்குடிக் கல்வெட்டு

ஏழையூரில் வாழ்ந்த அரிதின் என்பவன் சமணத் துறவியாக மாறி, இங்குள்ள பள்ளியில் இருந்துகொண்டு நோன்பு இயற்றினான். 'அரிதில்' என்பதனை 'ஆரிதின்' என்று பிற இடங்களில் எடுத்துக்கொண்டது போலவே எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கிருஷ்ண சாஸ்திரி, '(ஏ) ட்டு ய ர (2) ர அரிதி னா பாளி'[12] என்று படிக்கிறார்.

திரு. சுப்பிரமணிய ஐயர், 'எடுயரூர் அரிதின் பாளி' என்று படித்து 'எட்டியூர் அரிதின் குகை' என்று விளக்கம் காண்கிறார்.

திரு. நாராயண ராவ் வழக்கம்போல் 'எட்டுயார ஹரீ தானாம் பாளி' என்று சமஸ்கிருத மொழிபெயர்ப்பு வரும்படி படிக்கிறார்.

டாக்டர் டி. வி. மகாலிங்கம், 'எட்டுய உர அரிதித பாளி' என்று படித்து 'எட்டியூர் ஹரிதன் படுக்கை' என்று விளக்கம் கூறுகிறார்.

மற்றும் 'ஏழை ஊர் அரிதின் பாளி' என்பது ஐராவதம் மகாதேவன் விளக்கம்.

---

11 South Indian Paleography, p. 248
12 Krishna Sastri, H., Op. cit. p. 23

8. மருகல்தலைக் கல்வெட்டு

வெண் காசிபன் என்ற பெயர் சங்ககாலத்து வெண்பூதனார்,[13] வெண்பூதியார்,[14] வெண்கண்ணனார்,[15] வெண்கொற்றனார்[16] என்னும் பெயர்கள் போன்ற அமைப்பினைக் கொண்டது.

இக் கல்வெட்டில் காணப்படும் எழுத்துகளை,

'வே ண கோ ஸி பா னா கு டு பி தா க (ா) (ளா)
கா ஞ னா ன'

என்னும் முறையில் திரு. கிருஷ்ண சாஸ்திரி படித்து விளக்கம் காண்கிறார்.

'வேண் கோளிபான் குடுபிதா காள காஞ்சணம்'(வேணாட்டுக் காஸ்யபன் அல்லது வேளிர் தலைவன் காஸ்யபன் கொத்துவித்த சுபமுள்ள ஆசிரமம்)[17] என்பன சுப்பிரமணிய ஐயர் தரும் பாடமும் விளக்கமும் ஆகும்.

திரு. நாராயண ராவ் 'வேண கோஸிபான குட்டுபிதா காள காஞ்சணம்' என்று பிராகிருதமாகப் படித்து 'வேணாகி விபான குட்டுபிதா கால காஞ்சணம்' என்று சமஸ்கிருதத்தில் விளக்கம் கண்டு, 'பௌத்த விநய பிடகத்தைச் சேர்ந்த அல்லது வேனாகீ/ வேராய கீ என்னும் பெயருடைய சில்பி குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்மகளால் செய்விக்கப்பட்ட கல்கால காஞ்சணம்' என்று தமிழில் மொழிபெயர்த்துச் செய்தி விளக்கம் தருகிறார்.[18]

9. அழகர்மலைக் கல்வெட்டுகள்

1. மதுரை நகரம் 'மதிரய்' என்று குறிக்கப்பட்டுள்ளது. பொற்கொல்லன் என்பது 'பொன் கொல்வான்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. பொற்கொல்லன் பெயர் 'ஆதன் ஆதன் ஆதன்.' மகன் ஆதன் என்பது இதன் விரிவு. இவனது பெயர் முடியுமிடத் தில் பொறிக்கப்பட்டுள்ள குறி, இவன் அளித்த காசின் மதிப்பைக் குறிக்கிறது. (இதனை) ஏனையோர் பெயரின் இறுதியில் உள்ள குறியீடுகளுக்கும் கொள்ளவேண்டும்.

---

13 குறுந். 83
14 குறுந். 97
15 அகம். 130
16 குறுந். 86
17 Subramania Iyer, Op. cit., p. 15-16
18 Narayan Rao, C., Op. cit. p. 304-5

'மத்திரையப் பொன் கொலவன் ஆதான் ஆதான்'

என்று அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமியும்,

'மத்திரையப் பொன் கொலவன் ஆதன்அ தான (ம்)'

என்று ஐராவதம் மகாதேவனும் படிக்கின்றனர். 'பொன்குலவன்' என்பது பொன் வாணிகன் என்னும் பொருளைத் தரும்.

'மா (த) தி (வர) ய் போ நா கு ல வா னா அ (த) அ த (ஆ)ன'

என்று படிப்பவர் திரு. கிருஷ்ண சாஸ்திரி ஆவார்.

'மத்திரையப் போநா குலவானா அதனா அ தானா' என்று பிராகிருதமாகவும் 'மட்டரக் — புத்ரானாம் பொத்ரானாம்? போதாராம்? குலபாநாம் ஆதாராய/அஸ்தானாய?/ஆஸ்தாநஸ்ய? தாநாநி' என்று அதற்குச் சமஸ்கிருத விளக்கமும், 'மட்டரக் என் பவனுடைய மகள், பேரர்கள், குலத் தலைவர்கள் / குலத்தலை வருக்கு ஆகாரத்துக்காகக் கொடுத்த தானம்' (தமிழ்) என்பது திரு. நாராயண ராவ் தரும் விளக்கமாகும்.

2. வாணிகன் என்னும் சொல் போன்ற அமைப்பினை யுடைய சொல் அணிகன். ஆனிரை வாணிகர் இந்தச் சொல்லால் குறிக்கப்பட்டிருக்கலாம்.

3. மதுரையில் வாழ்ந்தான் ஓர் உப்பு வாணிகன். அவன் 'ஊபு வாணிகன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இந்தத் தொடருக்கு முன் 'கோ' என்னும் சிறப்பு அடைமொழி உள்ளது. இது உப்பு வாணிகர்களின் தலைவனாய் அவன் விளங்கியது நோக்கி அமைந்திருக்கலாம். இவனது பெயர் கோணான். வாணி கத்தில் ஒருபால் கோடாத தன்மை நோக்கிய காரணப் பெயராகக் 'கோணான்' என்பதைக் கொள்ள இடமுண்டு இந்தக் கோணான் என்னும் பெயருக்கு முன் 'ஆய்கோன்' என்னும் அடைமொழி உள்ளது. ஆய் அரசன் அளித்த 'கோன்' என்னும் பட்டம் 'ஆய்கோன்' என்று அமைந்தது. சோழ அரசன் அளித்த 'ஏனாதி' என்னும் பட்டம் 'சோழிய ஏனாதி'[19] என்று அமைந்தது போல் இது அமைந்தது.

4. வாணிகனாய் விளங்கிய ஆதன் என்பானின் மகன் ஆதனாதன் என்பவன். இவன் அளித்த பொருளின் மதிப்புக் குறியீட்டை வரைபடத்தில் காணலாம் (பக். 52).

---

19 புறம். 394

5. 'வழுதி' என்பது பாண்டிய அரசர்களின் குடிப்பெயர்களுள் ஒன்று. இங்குக் குறிக்கப்பட்டுள்ள வழுதி 'சொம்மிதீன்' என்னும் அடைமொழி பெற்றுள்ளான். தீன்மிதி நாகனார்[20] என்பவர் சங்ககாலப் புலவர். 'ஆ' என்பது 'ஆன்' என்று வருவதுபோலத் 'தீ'என்பது 'தீன்' என நின்று, தீயை மிதித்த நாகனார்க்கு அடைமொழியாய் நின்றது. அதுபோல இந்த வழுதிக்கும் பெயர் அமைந்துள்ளது. 'சொம்' என்பது உடைமை, சொத்து என்னும் பொருள் தரும். தம் உடைமைகளைப் பொருட்படுத்தாமல் இவன் மிதித்தேறித் துறந்தான்போலும். 'சொம்மிதி' என்பதைச் 'சோமிதி' என்றும் கொள்ளலாம். 'சோ' என்னும் சொல் 'அரண்' என்று பொருள்படும். அரண்மீது ஏறி வென்ற வழுதி என்பதால், இந்த அடைமொழி இவனுக்கு அமைந்ததோ என்றும் எண்ண வேண்டியுள்ளது. இவன் அளித்த பொருளின் மதிப்பை வரை படத்தில் காணலாம் (பக். 52).

6. 'நெடுமால்' என்னும் பெயர் 'அன்' விகுதி பெற்று 'நெடுமாலன்' என்று அமைந்துள்ளது. வணிகன் நெடுமாலனது வணிகப் பொருள் 'பணிதம்' என்று தெரிகிறது. பணியம்[21] அல்லது பணிலம்[22] இவனது வணிகப் பொருளாக இருக்கக் கூடும். இவனது கொடையின் மதிப்பு, குறியீட்டில் உள்ளதை வரைபடத்தில் காணலாம் (பக். 52).

7. 'கோழி' என்னும் சொல் உறையூரைக் குறிக்கும். மேலே மதுரை வாணிகர்கள் குறிக்கப்பட்டுள்ளதுபோல் இங்கு உறையூர் வாணிகன் குறிக்கப்பட்டுள்ளான். இந்த உறையூர் வாணிகனின் தம்பி நாகன். தம்பி உறவு, இளவல் (எளவ) என்னும் சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. இரண்டாவது, மூன்றாவது எழுத்துகள் இடம் மாறி உள்ளன. கீழவளவுக் கல்வெட்டில் இடையிடையே சில எழுத்துகள் தலைகீழாக உள்ளதுபோன்ற பிழைபாடு இங்கு நேர்ந்துள்ளது. இதனைக் 'கோக்கீழ் மாற நாடன் திரை நாடான்' என்று தெளிவாகப் படிக்கலாம்.

9. ஈழநாட்டு 'வாவிரயன்' அல்லது ஆவிரயன் என்பவன் கலம் (கப்பல்) ஓட்டும் தொழில் புரிந்தவன். 'கலபன்' என்பது இவனது தொழிலை உணர்த்தும் சொல். இவன், அவனது நாட்டில் அரசனாக விளங்கியவன் என்பதை

---

20 குறுந். 111

21 பண்ணியம் — பலகாரம்

22 முத்து

'அரையன்' என்னும் சொல் விளக்குகிறது. இவனது கொடையின் மதிப்பும் குறியீட்டில் உள்ளதை வரைபடத்தில் காணலாம் (பக். 53).

10. காணம் என்பது அக்காலத்தில் வழங்கிய காசு.[23] மேலே குறிப்பிட்ட ஒன்பது பேரும் அவரவர் பெயர்களுக்கு இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள எண் மதிப்புடைய காணம் கொடுத்தோர் ஆவர்.

11. அறுவை (ஜவுளி) வாணிகன் ஒருவனின் பெயர் 'ஏளாடன்.' இவன் குளிர்காலத்திற்கேற்ற வெண்மையான ஆடைகளை விற்று வாணிகம் செய்தவன். இவன் அளித்த காணத்தின் மதிப்பும் குறியீட்டில் தரப்பட்டுள்ளது (பக். 53).

12. தும்பிசேர் கீரனார்,[24] தீன்மிதி நாகனார், பூதநாதனார்[25] ஆகிய சங்ககாலப் பெயர்களைக் காணும் நமக்குத் 'தீன் சேர்ந்தான்' என்று பெயர் அமைவது இயல்பு என்பது விளங்கும்.

1. 'எருக்காட்டூர்' என்பது 'எருகாடூர்' என்று கூறப்பட்டுள்ளது. சங்ககாலத்து ஊர்களில் ஒன்று எருக்காட்டூர். அவ்வூரில் பிறந்த புலவர் ஒருவர் 'எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்' எனப்பட்டார். ஈழநாட்டிலிருந்து வந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் இவ்வூரில் வாழ்ந்துவந்தான். இந்தச் செய்தி 'ஈழக் குடும்பிகன்'[26] என்று குறிப்பிடப்படுவதிலிருந்து தெரிகிறது. பொலாலன் என்பது அவன் பெயர். இந்தப் பெயரில் உள்ள இரண்டு, மூன்றாம் எழுத்துகள் இடம் மாறியிருக்குமாயின், அவன் பெயர் பொல்லாயன் என்று அமையும். பொலிவுடைய ஆயன் என்னும் பொருளை அப் பெயர் கொண்டிருக்கும். 'செய்தாய சாயனம்' என்று இறுதிப் பகுதியைப் படிக்கலாம். எனவே, இந்தப் 'பொலாலயன்' படுக்கை செய்து கொடுத்தான் என்பது பெறப்படும். இந்தச் சயனத்தில் சாய்ந்திருந்தவன் 'நெடுஞ்சாத்தன்' என்பவன். அவனது பெயர் 'நெடுசாதன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. படுக்கையில் இருந்துகொண்டு எல்லாக் கல்வெட்டுகளையும் பார்ப்பதுபோல் பார்த்தால், இந்தக் கல்வெட்டுப் பகுதி

---

23 பதிற். பதி. 7
24 குறுந். 61
25 புறம். 219
26 'குடும்பி' என்னும் சொல்லையும் பெயர் என்று கொள்ளலாம் – சிலப். 30 : 135

முழுவதும் தலைகீழாகத் தோன்றும். எழுத்தினைப் பொறித்தவன் தலைமாட்டுப் பக்கம் அமர்ந்துகொண்டு பொறித்துவிட்டான். 'அந்துவன் கொட்டுபித்தவன்' என்று இதனைத் திருத்திப் படிக்கலாம். அந்துவன் என்பவன் திருப்பரங்குன்றத்தைச் சிறப்பித்துப் பாடினான் என்று சங்க இலக்கியம் கூறுகிறது.[27] நல்லந்துவனார் என்னும் புலவர் (நெய்தல் கலியைப் பாடியவர்) இந்தத் திருப்பரங்குன்றத்து முருகனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.[28] இங்குள்ள படுக்கைகளை அமைத்துக் கொடுத்தவர்களில் ஒருவனான அந்துவன், சங்கப் பாடல்களில் குறிப்பிடப்படும் இந்த அந்துவன் தானோ என்று எண்ணலாம்.

3. இதில் உள்ள ஏழு எழுத்துகளும் ஒரே வரிசையில் உள்ளன; சிதைவு இல்லை. எனினும், முதல் இரண்டு எழுத்துகளும் படுக்கையில் அமர்ந்துகொண்டு வெட்டப்பட்டனவாயும், பின் 5 எழுத்துகளும் படுக்கையின் தலைமாட்டில் படுக்கையை நோக்கி அமர்ந்துகொண்டு வெட்டப்பட்டனவாயும் உள்ளன. இதனைச் சரிசெய்துகொண்டு படித்தால் 'கோயமான் செய்(த)து' என்று படிக்க முடிகிறது. சங்ககாலத்தில் ஈந்தூர் கிழான் தோயன் மாறன்' என்னும் அரசன் ஆண்டுவந்தான்.[29] இந்தத் தோயன் மாறனை அறிஞர்கள் 'கோயன் மாறன்' என்று திருத்திப் படிக்கின்றனர்.[30] எனவே, சங்ககாலத்தில் 'கோயர் குடியினர்' இருந்தனர் எனலாம்.[31] இந்தக் கோயர்குடி அரசன் கோயமான் என்பவன், இந்தப் படுக்கையை அமைத்துக் கொடுத்தான்.

1. விந்தையூரில் வாழ்ந்த 'காவி' என்பவன் ஒருவன். (இவனது பெயர் தனியே பொறிக்கப்பட்டுள்ளது.) இவன் 'சையலன்' என்று குறிப்பிடப்படுவது, 'சையமனை' என்று வழங்கிய மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலிருந்து வந்ததால் போலும். அல்லது 'செயலன் பிந்தை ஊர்' என்பது இவ்வாறு வெட்டப்பட்டிருக்கலாம். செயலூர் என்பது சங்ககாலத்து ஊர்களில் ஒன்று.[32] இதனை எண்ணும்போது 'செயலூர்ப் பிந்தை' என்று இதனை இடம்மாற்றிப் பொருள் கொள்ளலாம்போல் தோன்றுகிறது.

---

27 அகம். 59 : 12
28 பரிபா. 8
29 புறம். 180
30 ஷி — ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை
31 ஆ மேய்த்தவர் ஆயர்; கோ மேய்த்தவர் கோயர்
32 அகம். 177—புலவர்-செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்

2. நாக பேரூரைச் சேர்ந்த அந்தை (அதை) என்பவன் மகன் சாத்தன். இந்தச் சாத்தன் மகன் ஒருவன் இக் குகையோடு கொடையாலோ இருக்கையாலோ தொடர்பு கொண்டிருந்தான். சாத்தன் தந்தை என்று பொருள் கொள்ளத் தக்க 'சாத்தந்தையார்' என்னும் பெயர் சங்க நூல்களில் காணப்படுகிறது.[33]

3. கயத்தானூர் என்பது ஊரின் பெயர்; 'கோடாமல்' என்று கொள்ள முடியுமா என்று எண்ண வேண்டியுள்ளது. 'ம' எழுத்து கல்வெட்டில் தலைகீழாக உள்ளது. அது சரியாக உள்ளது என்று கருதினால், அதனை வடமொழி எழுத்தாகப் படிக்கவேண்டும்.[34]

10. ஆனைமலைக் கல்வெட்டு

'இவன் குன்றத்து உறையுளில் பாதந்தான் ஏறி ஆர் இதன் அத்துவாய் அரட்ட காய்குபன்.' இவன் குன்றத்து உறையுளில் யாரும் ஏறி அடி வைக்கக்கூடாது. இவனது அத்துவாயில் (எல்லைப் பகுதியில்) இருந்துகொண்டு யார் அரட்டினாலும் (ஒலி எழுப்பினாலும்) இவன் காய்குவன் (சினமடைவான்).[35] இந்தச் செய்தி பிற கல்வெட்டுப் பகுதிகளில் காணப்படாத புதுமையாகும்.

11. திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு

'செங்காயபன்' என்னும் சமண முனிவன் பெயர் புகழூர்க் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டில் காணப்படும் 'செங்காயபன்' என்னும் பெயர், அதனோடு தொடர் புடையதாக உள்ளது. உணவாலும் உணர்வாலும் கட்டுப்பாடு கொண்ட செம்மையான உடம்பினைச் சமணத் துறவிகள் பெற் றிருந்தமை நோக்கிச் (செங்காயம்) செங்காயபன் என்னும் பெயர் பொதுவகையால் அமைந்ததோ என்று எண்ண வேண்டியுள்ளது.

12. மாமண்டூர்க் கல்வெட்டு

கணிமான்: 'கணிமகன்' என்னும் சொல் கணிமான் என்று அமையும். இவன் 'தேனூர் தந்த கோன்' என்று குறிப்பிடப்படு கிறான். கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி என்னும்

---

33 புறம். 80 – 82

34 க3 (ga) என்னும் உச்சரிப்பைக் கொடுக்கும்.

35 குறள். 29 கருத்து இதனோடு ஒப்புநோக்கத் தக்கது

பெயர், சங்க காலத்தில் கானப்பேரெயில் என்னும் ஊரை வென்றமையை உணர்த்துவதைக் காண்கிறோம். இந்தத் துறையில் இவன் தேனூரை வென்று கைப்பற்றியவன் என்று தெரிகிறது. 'கோன்' என்னும் சொல், இவன் அரசன் என்பதைத் தெரிவிக்கிறது. இந்தக் குன்றுக் குகையில் இவன் தங்கியிருந்ததால் இந்தக் குன்றே அவனுடைய குன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல் யானைச் செல்கெழு குட்டுவன் என்னும் சேர அரசன் 25 ஆண்டுகள் அரசாட்சி செய்துவிட்டுப் பின் துறவுபூண்ட செய்தியை அவன் வரலாற்றில் காணலாம். அந்த முறையில் இந்தக் 'கணிமான் தேனூர் தந்த கோன்' சில காலம் அரசாட்சி செய்துவிட்டுத் துறவுபூண்டவன் என்று கருதலாம். சிறு .....வன் என்பவன் கல் தச்சன். இவன் இந்தக் குன்றுப் படுக்கைகளைச் செய்தவன்.

13. அரசலூர்க் கல்வெட்டு

காட்டப்பட்டுள்ளவாறு ஐயெழுத்துச் சதுக்கங்கள் இரண்டு காணப்படுகின்றன. இவை ஒருவகைப் பண்ணோசையின் அடையாளங்களாக இருக்கலாம். இந்தப் பண்ணிசையை அமைத்தவன் பெயர் சாத்தன். இவன் தந்தை பெயர் தேவன். இந்தச் சாத்தன் மணிக்கற்களை ஆய்வுசெய்து மதிப்பீடு செய்ததால் 'வண்ணக்கன்' என்று குறிக்கப்பட்டுள்ளானெனத் தெரிகிறது. இந்தக் கல்வெட்டிற்கு டாக்டர் இரா. நாகசாமி அடியில் காணும் பாடத்தைக் கொள்கிறார்:

(1) த தை தா தை த
தை தா தே தா தை
தா தே தை தே தா
தை தா தே தா தை
த தை தா தை த

(2) கை த தை த கை
த தை (த) தை த
தை த தை த தை
த தை (த) தை த
(கை த தை த கை)

எழுத்துப் புணருத்தான் மணியி வண்ணக்கன் தேவன் சாத்தன்.

14. கழிஞ்சமலைக் கல்வெட்டு

நெல்வேலி என்பது 'நெல்வேளி' என்று இங்கு எழுதப் பட்டிருக்கலாம். நெல்வேலி என்பது இப்போதுள்ள திருநெல்வேலிப் பகுதி. இப் பகுதி பாண்டிய நாட்டைச் சேர்ந்தது. எனவே, இந்த நெல்வேலியில் வாழ்ந்த 'சழியன்' என்பது செழியன் என்பதன் பிழைபட்ட வடிவமாயிருக்கலாம். இவன் பெயரை அடுத்து ஒ(வொ)ளியன் என்னும் பெயர் காணப்படுகிறது. ஒளியர் குடியைச் சேர்ந்தவர் சங்ககாலத்தில் வாழ்ந்து வந்தனர்.[36] இந்த ஒளியன் அந்தக் குடியைச் சேர்ந்தவன் போலும். இவன் 'சழியன் அதனன்' என்னும் முன்னொட்டுடன் கூறப்படுகிறான். இதில் செழியனுக்கும் ஒளியனுக்கும் இடையே உள்ள உறவு கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த உறவு இன்னதென விளங்கவில்லை. 'கொடுவன்' என்பது கொடுத்தவன் என்பதைக் குறிக்கலாம். ஆயின், ஒளியன் கொடுத்தது 'முசுகை' என்று கல்வெட்டுக் கூறுகிறது. இச் சொல் படுக்கையை உணர்த்துவதாகவோ, நீர்த்தாரை வரத்தை உணர்த்துவதாகவோ இருக்கலாம்.

36 புட்டினப். 274

இயல் 3

காலக் கணிப்பு

முன்னுரை

இந்த வரலாற்றுப் பகுதியில் சங்கத்தைப் பற்றிய செய்திகளும், அதன் காலத்தைப் பற்றிய செய்திகளும் ஆராயப்படுகின்றன. மூன்று சங்கங்கள் இருந்தன என்றும், இரண்டு சங்கங்களே இருந்திருக்கலாம் என்றும், ஒரே ஒரு சங்கம்தான் இருந்தது என்றும், 'சங்கம்' என்னும் அமைப்பே இருந்ததில்லை என்றும் பல்வேறு கருத்துகள் நிலவி வருகின்றன.

சங்கம் இருந்தமைக்கான சான்றுகள் பல இலக்கியங்களில் கிடைத்துள்ளன. சங்க இலக்கியங்களில் 'சங்கம்' எனும் சொல் இல்லை. இந்தச் சொல் இல்லாவிட்டாலும், புலவர்கள் கூடிப் பாடல்கள் பாடியதுபற்றியும், தமிழை ஆராய்ந்ததுபற்றியும் பல குறிப்புகள் உள்ளன. 'அவை' என்பதே 'சபை'யிலிருந்து வந்த தாகச் சிலர் வாதாடுகின்றனர். பௌத்த, சமண மதங்களின் அமைப்புகள் 'சங்கம்' என்றே அழைக்கப்பட்டன. எனவே, அச் 'சங்கம்' எனும் சொல்லிலிருந்து இச் 'சங்கம்' எனும் சொல்லும் வந்திருக்கலாம் எனவும் வேறு சிலர் கருதுகின்றனர். அன்றியும், 'அவையம்' என்னும் சொல் சங்கம் என்னும் அமைப்பினைச் சுட்டக்கூடிய வகையில் சங்க இலக்கியங்களில் கையாளப்பட்டிருப் பதனையும் நாம் கருதிப் பார்க்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

இனிப் புலவர்கள் கூடிப் பாடல்கள் பாடியதுபற்றியும் தமிழை ஆராய்ந்ததுபற்றியும் தெரிவிக்கும் சான்றுகளை நோக்குவோம். இந்தச் சான்றுகளை 'அகச் சான்றுகள்', 'புறச்சான்றுகள்' என்று இரு பகுதிகளாக நாம் ஆராயலாம். இச் செய்திகளைக் கூறும் சங்க இலக்கியப் பாடல்களை 'அகச் சான்றுகள்' என்றும், பிற்காலப் பாடல்களையும் செப்பேட்டுத் தொடர்களையும் 'புறச் சான்றுகள்' என்றும் நாம் பாகுபடுத்திக் கொள்ளலாம்.

சங்கம் இருந்தமைக்கான அகச்சான்றுகள்

மதுரையில் இருந்து ஆட்சிசெய்த தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவன் தன்

னுடைய பாடலில் 'மாங்குடி மருதன்' என்பவனைத் தலைமைப் புலவனாகக் கொண்டு பல புலவர்கள் தன் நாட்டைச் சிறப்பித்துப் பாடிவந்ததைத் தெளிவாகக் குறிப்பிடுகிறான்.

> ' ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் தலைவ னாக
> உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
> புலவர் பாடாது வரைகளன் நிலவரை '[1]

என்பது அவனுடைய பாடலாகும்.

தலைமைப் புலவன் ஒருவனை வைத்துக்கொண்டு பல புலவர்கள் பாடினார்கள் என்று இதனால் தெரியவருகிறது. இந்த அமைப்பு, 'சங்கம்' என்னும் சொல்லால் குறிப்பிடப்படா விட்டாலும் சங்கம் என்று நாம் வழங்கும் அமைப்பையே உணர்த்துகிறது என்பது தெளிவு.

இந்தப் பாடலில் புலவர்கள் பாடினார்கள் என்று குறிப்பிடப் படுவது, தமிழை வளர்த்த சங்கத்தைக் குறிக்கிறது என்பதை உணரலாம். இதுபோலவே தமிழின் இலக்கணப் பாங்கை ஆராய்ந்த சங்கங்களும், இசைத்தமிழை ஆராய்ந்த சங்கங்களும் இருந்தன என்பதை உணர்த்தும் சான்றுகளும் உள்ளன.

மேலே நாம் கண்ட சான்றில் சங்கத்தின் தலைமைப் புலவரான மாங்குடி மருதன், 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி' என்னும் அடைமொழி கொடுத்துச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளார். 'உயர்ந்த கேள்வி' என்பதற்கு 22 கேள்விகள் (சுருதிகள்) கொண்ட இசைப்பாங்கு என்று அறிஞர்கள் விளக்கம் கண்டுள்ளனர்.[2] இந்த வகையில் மாங்குடி மருதன் இசையில் சிறந்து விளங்கினார் என்பது பெறப்படுகிறது. இந்த மாங்குடி மருதனார் நாம் முன்பு குறிப்பிட்ட தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைச் சிறப்பித்துப் பாடுகையில், 'பெரியகற்று இசைவிளக்கி'[3] என்று குறிப்பிட்டுள்ளார். பாண்டிய அரசன் இந்தப் புலவரை 'இசையில் வல்லவர்' என்று குறிப்பிட்டிருப்பதையும், இந்தப் புலவர் பாண்டிய அரசனை, 'இசை விளங்கும்படி செய்தான்' என்று குறிப்பிட்டிருப்பதையும் எண்ணிப்

---

1 புறம். 72 : 13-16

2 கோதண்டபாணி பிள்ளை, கு. — பழந்தமிழ் இசை, பக். 109.

3 மதுரைக். 767

பார்க்கும்போது, இசைத்தமிழ் வளர்க்கப்பட்டதைத் தெளிவாக உணரமுடிகிறது. இந்த வகையில் பாண்டியனது சங்கத்தில் இசைத்தமிழும் வளர்க்கப்பட்டது என்று நாம் கொள்ளலாம்.

'நிலந்தரு திருவின் நெடியோன்' என்னும் பாண்டிய அரசன் ஆசிரியர்களை ஒன்றுகூட்டினவன் என்னும் செய்தி மதுரைக் காஞ்சியில் கூறப்படுகிறது.

> 'தொல்லாணை நல்லாசிரியர்
> புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
> நிலந்தரு திருவின் நெடியோன்'[4]

என்பது அக் குறிப்பாகும். 'ஆசிரியர்' என்னும் சொல் இலக்கணத்தில் வல்லவரைக் குறிக்கும் என்பதைத் தொல்காப்பியத்தில் வரும் சொல்லாட்சியால் உணர முடிகிறது.[5] இதனால் இங்குக் குறிப்பிடப்பட்ட நல்லாசிரியர் என்னும் தொடரும், இலக்கணத்தில் வல்ல புலவர்களைக் குறிக்கும் எனலாம் ஆயின், 'தொல்லாணை நல்லாசிரியர்' என்பது பழைமையான இலக்கண நெறியில் வல்ல ஆசிரியர்களைக் குறிக்கும் தொடராகும். இந்தத் தொல்லாணை நல்லாசிரியர்களாகிய இலக்கணப் புலவர்கள், நிலந்தரு திருவின் நெடியோனாகிய பாண்டிய அரசனால் ஒன்று திரட்டப்பட்டனர் என்று இந்தப் பாடல் கூறுகிறது. இந்த நிகழ்ச்சி பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய அரசன் உணவளிக்கும் வல்வேள்வி (அன்னதானம்) செய்தபோது நடைபெற்றதாக மேலும் அது தெரிவிக்கிறது.

இவற்றால் இந்த இரண்டு பாண்டிய அரசர்களும் இலக்கணத்தில் வல்ல புலவர்களை ஒன்றுதிரட்டித் தமிழைப் போற்றி வந்தார்கள் என்று உணரலாம். இந்தத் திரட்சியை நாம் 'சங்கம்' என்று கொள்ளலாம்.

இதனை மேலும் உறுதிசெய்யும் வகையில் சோழ நாட்டுப் புகார் நகரத்தில், இதேபோன்ற தொல்லாணை நல்லாசிரியர்கள் ஒன்றுகூடித் தத்தம் கருத்துகளைக் கொடிகட்டிக் கொண்டு எடுத்துக் கூறிச் சொற்போர் நிகழ்த்திய செய்தி பட்டினப்பாலையில் கூறப்படுகிறது.

---

4 மதுரைக். 761—63

5 தொல், எழுத்து. புள்ளி. 20, 94

‘ பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும் ’[6]

இந்தப் பகுதியில் வரும் ‘தொல்லாணை நல்லாசிரியர்’ எனும் தொடரைக்கொண்டு இவர்களை இலக்கணப் புலவர்கள் என்று நாம் கருதுவதுபோலவே ‘பல்கேள்வித் துறை’ என்னும்தொடரைக் கொண்டு, இவர்களை இசைத்துறையில் வல்ல புலவர்கள் என்றும் நாம் கருதலாம். புகார் நகரத்தில் இந்தப் புலவர்கள் தத்தம் கருத்துகளை எடுத்துக்கூறி, ஒருவரோடொருவர் மாறுபட்டுச் சொற்போர் புரிந்தனர் என்றும், பாண்டியர்களால் கூட்டப்பட்ட இத்தகைய புலவர்கள் பொதுவாக ஒன்றுகூடினார்கள் என்றும் கூறப்படுவதால், பாண்டிய நாட்டு மதுரையில் கூடிய புலவர்களின் கூட்டமே சங்க அமைப்பாகும் என்றும், புகாரில் சொற்போர் புரிந்த கூட்டம் சங்க அமைப்பு அன்று என்றும் தெரிகிறது.

மதுரை நகரில் இவ்வாறு பழைமையான இயல், இசை, இலக் கணப் பகுதிகளை ஆராய்ந்து வளர்க்கும் அமைப்புகள் இருந்தது போலவே, புதுமையான பாடல்களைப் பாடிப் போற்றும் அமைப்பும் இருந்தது என்பதைத் தெரிவிக்கும் அகச்சான்றும் உள்ளது.

‘ முதுமொழி நீராப் புலனா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர ’[7]

இந்தச் சான்றில் புதுமையான பாடல்கள் ‘புதுமொழி’ என்னும் தொடரால் குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதுமையான பாடல் களைப் பாடிய புலவர்கள் பழைமையான இலக்கணத்தையும் புறக் கணிக்காமல் அதனை அடிப்படையாகக்கொண்டு பாடினார்கள் என்பதை ‘முதுமொழி நீரா’ என்னும் தொடர் தெரிவிக்கிறது.

இதுபோன்ற சங்கங்கள் மதுரையில் வேனிற்காலத்தில் பொது மக்கள் முன்னிலையில் நடைபெற்றன என்பதைத் தெரிவிக்கும் அகச்சான்றும் உள்ளது.

‘ நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை ’[8]

---

6 பட்டினப். 169-171
7 கலி. 68 : 4-5
8 கலி. 35 : 17-20

இந்தச் சான்றில் 'புலனாவில் பிறந்தசொல் புதிது' என்று குறிப்பிடப்படுவது, மேலே நாம் காட்டிய சான்றில் காணப்படும் 'புதுமொழி' என்னும் தொடரோடு தொடர்புடையதாக உள்ளது. இவற்றை எண்ணும்போது புதிய புதிய இலக்கியங்களும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வரவேற்கப்பட்டன என்பதை நன்கு உணரலாம். 'கூடல் நகரத்தில் உள்ள மக்கள் புலவரது பாடல்களைக் கேட்டு மகிழும் காலத்தில் திரும்பி வருவதாகத் தலைவன் சொல்லிச் சென்றான்' என்று இந்தப் பாடற்பகுதியில் கூறப்படுவதிலிருந்து சங்கத்தில் புலவர்கள் பாடல் பாடும் நிகழ்ச்சி அமைந்திருந்தது என்பதையும், தலைவன் பொருள் தேடச் சென்று மீண்டு வரும் காலமாகப் பொதுவாகக் கருதப்படும் வேனிற்காலத்தின் இறுதியில், இந்தக் கூட்டம் நடைபெற்றது என்பதையும் உணரலாம். (இப்போது மதுரையில் ஆவணித் திங்களில் திருவிழா நடைபெறுவதற்கும், சங்ககாலத்தில் வேனிற்கால இறுதியில் புலவர்கள் கூடியதற்கும் காலத்தால் தொடர்பு காணப்படுவதை இவ்விடத்தில் நாம் நினைவுகூரலாம்.)

சங்க இலக்கியங்களில் மதுரைமாநகரம் பல்வேறு இடங்களில் 'தமிழ்' என்னும் அடைமொழியுடன் சிறப்பித்துக் கூறப்படுகிறது.[9] இதிலிருந்தும் மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதை உறுதிசெய்யலாம்.

பாண்டிய நாட்டு மதுரையில் இவ்வாறு புலவர்கள் கூடிய தமிழ்ச் சங்கம் நடைபெற்றதற்கு அகச்சான்றுகள் கிடைப்பதைப் போலவே சோழ நாட்டிலும், சேர நாட்டிலும், பிற இடங்களிலும் தமிழ் வளர்க்கும் பணிகள் நடைபெற்றதைக் குறிப்பிடும் சான்றுகளும் உள்ளன.

சேர அரசன் செல்வக்கடுங்கோ வாழியாதன், பகைவர் நாடுகளை வென்று அங்கிருந்து கவர்ந்துவந்த செல்வத்தைத் தமிழை வளப்படுத்துவதற்காகவே செலவிட்டான் என்று ஒரு பாடல் தெரிவிக்கின்றது.[10]

---

9 'தமிழ்கெழு கூடல்'—புறம். 58: 13

'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை' (சிறுபாண். 65–66)

'தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை' (சிலப். 58)

10 'கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்து' (பதிற். 63 : 9.)

சோழ நாட்டில் புகார் நகரத்தில் மொழியை வளர்ப்பதற்காகப் புலவர்களைக் கூட்டி, விருந்து அளிக்கப்பட்ட செய்தி பட்டினப் பாலையில் கூறப்படுகிறது.[11]

புகார் நகரத்தின் புலவர்களுக்கு இவ்வாறு சோறு அளித்த நிகழ்ச்சி, பாண்டிய நாட்டில் முதுகுடுமிப் பெருவழுதி புலவர் களுக்குச் சோறு அளித்தான் என்று நாம் முன்பு கூறிய நிகழ்ச்சி யோடு தொடர்புடையதாகக் காணப்படுவதை எண்ணிப் பார்த்து, நம் கருத்து வலிமை பெறுவதை உணரலாம்.

செங்கண்மா (செங்கம்) நகரில் நன்னன் என்னும் அரசன் ஆண்டு வந்தபோது, 'நல்லோர் குழீஇய நாநவில் அவையம்' இருந்ததைச் சங்கப் பாடல் தெரிவிக்கிறது.[12] இந்த அவையம் நாநலத்தைத் தெரிவிக்கும் அவையம் என்று குறிப்பிடப்படுவதால், இயல் தமிழையோ, இசைத் தமிழையோ பேணிய அவையாக இஃது இருந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. இவ்வாறு சேரரும், சோழரும், பிறரும் தமிழை வளர்த்த நிகழ்ச்சி களைச் சங்கம் என்று நாம் கொள்ள முடியாவிட்டாலும் சங்கம் போன்ற ஒருவகை அமைப்பு என்று நாம் கருதலாம். இவையே யன்றித் தமிழ்நாடெங்கும் பல்வேறு புலவர்கள் பல்வேறு அரசர் களை நேரில் கண்டு, பாடித் தமிழை வளப்படுத்தினார்கள் என்ப தையும் நாம் நினைவுகூரவேண்டும். இவர்களது பாடல்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் ஒன்றுதிரட்டிப் பாகுபடுத்தப் பட்டுள்ளன.[13]

உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய அரசன் அக் காலத் தில் பல்வேறு புலவர்களால் பல்வேறு இடங்களில், பல்வேறு

---

11 ' புலிப்பொறிப் போர்க்கதவின்
திருத்துஞ்சும் திண்காப்பில்
புகழ் நிலைஇய மொழிவளர
அறம்நிலைஇய அகனட்டில்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீராடிய களிறுபோல
வேறுபட்ட வினைஓவத்து
வெண்கோயில் மாசூட்டும்' (பட்டினப். 40–50)

12 மலைபடு. 77

13 வையாபுரிப் பிள்ளை, சு., 'சங்க இலக்கியங்களின் வரலாறு' முதலியன 'சங்க இலக்கியம்', பக். 137 முதல்

காலங்களில் பாடப்பட்ட அகத்திணைப் பாடல்களையெல்லாம் ஒன்று திரட்டினான். அப் பாடல்களை அடியை அளவுகோலாகக் கொண்டு மூன்று பகுதிகளாகப் பகுத்துக்கொண்டான்.

4 முதல் 8 அடிகளைக் கொண்ட பாடல்களைப் பூரிக்கோ (பூமிக்கோ) என்பவனிடம் ஒப்படைத்தான்; 9 முதல் 12 அடிகள் கொண்ட பாடல்களைப் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவனிடம் ஒப்படைத்தான். 13-ம் அதற்கு மேற்பட்ட அடிகள் கொண்டதுமான பாடல்களைத் தன் மேற்பார்வையில் உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மன் என்னும் புலவரைக் கொண்டு தொகுக்கச் செய்தான். மூவரும் அவரவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பாடல்களிலிருந்து 400 பாடல்களைப் பொறுக்கி எடுத்து நூலாகத் தொகுப்பது என்பது கூட்டு முடிவு. இதனைத் தமிழ்ச் சங்கத்தின் முடிவு என்றும் கொள்ளலாம். இந்த முடிவுக்கிணங்கத் தொகுக்கப்பட்ட பாடல்கள் முறையே குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை (அகநானூறு) என்னும் பெயர்கொண்ட நூல்களாக உருப்பெற்றன.

மேலே கூறப்பட்ட நூல்களில் உள்ளவை தனித்தனிப் பாடல்கள். அவை தனித்தனிப் புலவர்களால் பாடப்பெற்றவை. இவையேயன்றி, ஒரு புலவர் ஒரு பொருள்மேல் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட பாடல்களை ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு நெறியில் பாடுவது என்று முடிவு செய்துகொண்டு, சில புலவர்கள் பாடியபின் அப் பாடல்களின் தொகுப்பாக அமைந்த நூல்களும் சங்ககாலத்தில் தோன்றின. 5 புலவர்கள் ஐவ்வேறு திணைகளில் ஆளுக்கு 100 பாடல்கள் பாடித் தொகுத்த நூல் ஐங்குறுநூறு. இதனை இவ்வாறு தொகுக்கும்படி செய்த அரசன் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர அரசன். இவன் பாண்டிய அரசன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான்.[14] இந்த வகையில் இவனுக்கும் மதுரைக்கும் தொடர்பு உள்ளது.

இவ்வாறு ஐவ்வேறு புலவர்களால் ஐவ்வேறு திணைப் பாடல்களாகப் பாடப்பட்டுத் தொகுக்கப்பட்ட மற்றொரு நூல் கலித்தொகை. இதனைத் தொகுத்த புலவர் நல்லந்துவனார்[15] என்பவர். மதுரைத் திருப்பரங்குன்றத்தைப் பாடிய அந்துவன்,[16]

---

14 புறம். 17.
15 அகம். 59 : 12
16 இந் நூல் பக். 88

அக் குன்றத்திலுள்ள சங்ககாலத் தமிழி எழுத்துக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளார். இந்த அந்துவனே கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் என்று கருதப்படுகிறது.[17] திருப்பரங் குன்றம் மதுரையை அடுத்திருப்பதை எண்ணுகையில் நல்லந்து வனாரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவராய்த் திகழ்ந்து, அச் சங்கம் முடிவெடுத்தபடி இதனைத் தொகுத்தார் என்று கொள்ளலாம்.

இந்த வகையில் எட்டுத்தொகையில் சேர்க்கப்பட்டுள்ள ஐந்து அகத்திணை நூல்களும் மதுரைச் சங்கத்தோடு தொடர்புகொண்டு விளங்குகின்றன.

எட்டுத்தொகை நூல்களில் எஞ்சியவை மூன்று. இந்த மூன்றில் இரண்டு புறத்திணைப் பாடல்களைக் கொண்டவை. ஒன்று மேலே கூறப்பட்ட குறுந்தொகை, நற்றிணை, நெடுந் தொகை என்னும் நூல்களைப்போல் வெவ்வேறு புலவர்களால், வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் பாடப்பட்ட தனித்தனிப் பாடல்களின் தொகுப்பாகும். புறநானூறு என்னும் இந்த நூலைத் தொகுத்தவர்பற்றியும் தொகுப்பித்தவர் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. மற்றொரு நூல் பதிற்றுப்பத்து. இஃது ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் அகத்திணை நூல்கள் போன்ற அமைப்பினைக் கொண்ட புறத்திணைப் பாடல்களின் தொகுதி. இதில் 100 பாடல்கள் இருந்தன. ஒரு புலவர் ஓர் அரசன்மேல் 10 பாடல்கள் பாடினார். இவ்வாறு 10 புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு இது. இப்போது 8 புலவர்கள் 8 அரசர்மேல் பாடிய 80 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

எஞ்சிய மற்றொரு நூல் பரிபாடல். இது இசைத்தமிழ் இலக்கியம்.[18] அகத்திணை, புறத்திணை ஆகிய இருதிணைப் பாடல்களும் இதில் உள்ளன.

மேலே கண்ட 8 தொகைநூல்களையும், 'எட்டுத்தொகை' என்று ஒரே தொகைச்சொல்லால் வழங்குவர். இவ்வாறு வழங்கும் மற்றொரு தொகைநூல் பத்துப்பாட்டு. இதில் நூற்றுக்கு மேற்

17 வையாபுரிப் பிள்ளை, சு., 'சிறப்புப் பெயர் அகராதி' 'சங்க இலக்கியம்'

18 'இன்னியல் மாண்தேர்ச்சி இசைபரி பாடல்' என்று கூறப்படுவதாலும் (பரிபா. 11 : 137), எல்லாப் பாடல்களுக்கும் இசை வகுக்கப்பட்டிருப்பதாலும் பரிபாடல் இசைத்தமிழ் இலக்கியம் என்பதை உணரலாம். தொல்காப்பியத்தில் (தொல். பொருள். செய். 116) இயற்பாக்களில் ஒன்றாகப் பரிபாடல் குறிக்கப் பட்டுள்ளது. எனவே, இதனை ஏனைய எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகச் சேர்த்துள்ளனர்.

பட்ட அடிகள்கொண்ட 10 பாடல்கள் உள்ளன.[19] மற்றும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலும், திருக்குறள் என்னும் நீதிநூலும் சங்ககாலத்தவை. சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காப்பியங்களும், முத்தொள்ளாயிரம் என்னும் மூவேந்தரைப் பற்றிய நூலும் சங்ககால வரலாறு கூறும் நூல்கள் என்று கொள்ளத்தக்கவை. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிலவற்றைப் பாடிய ஆசிரியரின் பெயர் ஒப்புமை நோக்கி அவற்றைச் சங்ககாலத்தவை என்று சொல்கின்றனர். இவற்றின் காலம்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்துவருகின்றன. இவை தொடர்பான விளக்கமான செய்தியை 'அடிப்படைச் சான்றுகள்-I' என்னும் இயலில் காணலாம்.

சங்கம் இருந்தமைக்கான புறச்சான்றுகள்

சங்கம் இருந்தது என்பதை உறுதிப்படுத்தும் அகச் சான்றுகளை இதுவரை ஆராய்ந்தோம். இனி அதனை உறுதிப்படுத்தும் புறச்சான்றுகளைக் காணலாம். இந்தப் புறச்சான்றுகள் பிற்கால இலக்கியம், செப்பேடு, மரபுவழிச் செய்தி என்னும் மூன்று நிலைகளில் உள்ளன. இவற்றில் முதலில் பிற்கால இலக்கியச் சான்றுகளைக் காணலாம்.

கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் தமது தேவாரப் பாடலில் 'சங்கம்' என்னும் அமைப்பினை அச் சொல்லாலேயே குறிப்பிட்டு, அதில் நக்கீரன் என்னும் புலவன் தலைமைப் புலவனாய் வீற்றிருந்து, தருமிக்குப் பொற்கிழி வழங்கிய வரலாற்றைச் சுட்டியுள்ளார்.[20]

இந்தப் புறச்சான்றானது, அகச்சான்றுப் பகுதியில் நாம் முன்பு கண்ட மாங்குடி மருதன் தலைமையிலான சங்கச் செய்தியோடு ஒப்புமை உள்ளதாக விளங்குவதை உணரமுடிகிறது.

அதே காலத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தமது பாடலில் மதுரையில் பாடல்கள் தொகுக்கப்பட்ட செய்தியைக் கூறியுள்ளார்.[21]

---

19 இந் நூல் பக். 13

20 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளி னோன்காண்'
—அப்பர் தேவாரம்—திருப்புத்தூர், 3 திருத்தாண்டகம்.

21 'அந்தண் மதுரைத் தொகையாக்கி னானும்'
—சம்பந்தர் தேவாரம்—திருப்பாசுரம், 11

இந்தச் செய்தி சங்கப் பாடல்கள், தொகைநூலாக்கப்பட்ட, இனி நாம் கூறப்போகும் செய்தியோடு தொடர்புடையதாக விளங்குவதை அறியலாம்.

கி. பி. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் தமது திருப்பாவையில் 'சங்கத்தமிழ்' என்று தமிழைப் பெருமைப்படுத்திக் கூறி, தமிழ்மொழி சங்கத்தில் வளர்க்கப்பட்ட உண்மையைச் சுட்டியுள்ளார்.[23]

கி. பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமங்கையாழ்வார் 'சங்கமுகத் தமிழ்' எனும் தொடரை வழங்கி சங்கத்தின் உண்மையைக் காட்டியுள்ளார்.[28]

மற்றும் 'உயர்மதில் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழ்' என்று மாணிக்கவாசகரும்,[24] 'சங்கப்புலவர் திருமுகம்' என்று சேக்கிழாரும்,[25] 'சங்கத் தமிழ்மூன்றும் தா' எனப் பிற்கால ஔவையாரும்[26] குறிப்பிடுகின்றனர். திருவிளையாடற்புராணத்தில் சங்கப் பலகையைப் பற்றிய வரலாறு கூறப்படுகிறது.[27] இவையெல்லாம் புறச்சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.

அகநானூற்றுக்கு உரை எழுதுங்கால் தோன்றிய உரைப் பாயிரப் பகுதி, பாண்டியருடைய அவையிற் சான்றோர்கள் கூடி, முத்தமிழையும் ஆராய்ந்து, பாடி வளர்த்தனர் என்னும் செய்தியைத் தெரிவிக்கிறது.[28]

சின்னமனூர்ப் பெரிய சாசனம் என்று வழங்கும் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பேடு, மதுரை மாநகரில் பாண்டிய அரசன் ஒருவன் சங்கம் நிறுவியதைக் குறிப்பிடுகிறது.

தலையாலங்கானம் என்னுமிடத்தில் இருபெரு வேந்தரை வென்ற பாண்டிய அரசன் இத்தகைய சங்கத்தை வைத்தான் என்று கொள்ளும்படி, இந்தக் குறிப்புகளுக்கு முன்னுள்ள சில தொடர்கள் தெளிவுபடுத்துவதைக் காணலாம்.

---

22 திருப்பாவை, 30
23 திவ். பிர. பெரிய திருமொழி, 3 : 4 : 10
24 திருக்கோவையார், 20
25 பெரி. பு., கழறிற்றறிவார், 29
26 நல்வழி,
27 திருவி. பு. சங்கப்பலகை தந்த படலம்
28 'பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந் தமிழ் மூன்றும் தெரிந்த காலை' (அகம். உரைப்பாயிரம்)

'தலையாலங் கானத்திற் றன்னொக்கு மிருவேந்தரைக்
கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின்
கூத்தொழித்தும்
மகாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்'[29]

இந்தச் செப்பேட்டில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் சங்கத்திற்கும் தொடர்பு உள்ளமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முன்பு நாம் அகச்சான்றுப் பகுதியில் புறநானூறு, மதுரைக்காஞ்சி நூல்களின் துணைகொண்டு இந்த நெடுஞ்செழியனுக்குச் சங்கத்தொடு தொடர்பு உள்ளமையைக் கண்டோம். இந்த வகையில் அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் ஒரே செய்தியை வெளிப்படுத்துவதைக் காணலாம். இதனால், சங்கம் இருந்த செய்தி மேலும் உறுதிபெறுகிறது.

மரபுவழிச் செய்திகள் என்று நாம் கூறியவற்றுள் களவியல் என்னும் நூலுக்கு நக்கீரரால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் உரையும், சிலப்பதிகாரப் பாடற் பகுதிகளுக்கு அடியார்க்கு நல்லார் கூறும் உரையும், இவற்றோடு தொடர்புடைய செய்திகளும் கருதத்தக்கவை.

களவியலுக்கு நக்கீரனார் எழுதிய உரை சங்ககாலத்தைச் சேர்ந்தது என்று நம்பப்படுகிறது எனினும், கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றிக் கி. பி. 10ஆம் நூற்றாண்டில் எழுத்துருவம் பெற்றது என்று சான்றுகளுடன் கூறப்படுகிறது.[30]

அடியார்க்குநல்லார் கி. பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இவர் தமது உரையில், மூன்று சங்கங்களைப் பற்றிய வரலாற்றைத் தெரிவித்துள்ளார். நக்கீரரும் அடியார்க்கு நல்லாரும் குறிப்பிடும் செய்திகளை ஆராய்ந்த அறிஞர்கள், அச் செய்திகளின் வன்மைமென்மைகளைப்பற்றிப் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவற்றை நாம் ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்கலாம்.

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் இருந்தன என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் தலைச்சங்கத்தில் அகத்தியனார் முதலான 549 புலவர்

29 'பாண்டியர் செபேடுகள் பத்து', பக். 168

30 அருணாசலம், மு., 'தமிழ் இலக்கிய வரலாறு' 10ஆம் நூற்றாண்டு, பக். 236

களும்,[31] இடைச்சங்கத்தில் அகத்தியனார், தொல்காப்பியனார் முதலான 59 புலவர்களும்,[32] கடைச்சங்கத்தில் சிறுமேதாவியார் முதலான 49 புலவர்களும்[33] இருந்தார்கள் என்று நக்கீரர் குறிப்பிடுகிறார்.

இவர்களோடு சேர்ந்து தலைச்சங்கத்தில் 4449 புலவர்களும், இடைச்சங்கத்தில் 3700 புலவர்களும், கடைச்சங்கத்தில் 449 புலவர்களும் பாடினார்கள் என்று கூறப்படுகின்றது. அடியார்க்கு நல்லார் இடைச்சங்கத்தில் இருந்தவர்களாக மேலும் சில புலவர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார். இவர்களது கூற்றுகளையெல்லாம் முற்றிலும் உண்மை என ஏற்றுக்கொண்டு அதன் பட்டியலை உய்த்துணர்வால் தந்தவரும் உண்டு.[34]

மரபுவழிச் செய்திகளைப் பற்றிய வரலாற்று மதிப்பீடு

சங்கம் என்னும் அமைப்பே இருந்ததில்லை என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.[35] 'சங்கம்' என்னும் சொல் சங்க இலக்கியங்களில் கையாளப்படாதது, அதற்கு ஒரு காரணமாகக் காட்டப்படுகிறது. தேவாரம் முதலான புறச்சான்றுப் பகுதிகளில் இச் சொல் கையாளப்பட்டிருப்பினும், அது வடசொல் என்று கருதப்படுவதால், தமிழ்ச்சங்கத்தைக் குறிக்க இச் சொல்லை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது அவர்கள் கூறும் மற்றொரு காரணம் ஆகும்.

'சங்கம்' என்னும் சொல் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை என்பது உண்மையே எனினும், 'அவையம்' என்னும் சொல் அதனைக் குறிக்க வழங்கப்பட்டிருப்பதையும், புலவர்கள் கூடித் தமிழைப் பாடியதைப் பற்றிய செய்திகளையும் சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் கொண்டு திகழ்வதை நாம் முன்பே

---

31 திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த குமரவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் முதலானோர்.

32 இருந்தையூர்க் கருங்கோழி, மோசியார், வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கனார், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தை முதலானோர்.

33 சேந்தன்பூதனார், அறிவுடை அரனார், பெருங்குன்றூர்க் கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் முதலானோர்.

34 (1) சிதம்பரனார், அ., 'கால வரிசைப் பொருள் அட்டவணை' 'சேரர் வரலாறு' பக். 275 முதல்

(2) புலவர் குழந்தை, 'கொங்கு நாடு' பக். 275 முதல்

35 Sivaraja Pillai, K. N., *The Chronology of the Early Tamils*, pp. 18-19

விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம். எனவே, சங்கம் என்னும் சொல் இல்லாமை ஒன்றை மட்டும் கொண்டு, நாம் சங்கம் என்னும் அமைப்பே இல்லை என்று கூறமுடியாது. மேலும், சங்கம் என்னும் சொல்கூடத் தூய தமிழ்ச் சொல்லே என்று கருதுவாரு முண்டு.

சங்கப் புலவர்களுடைய எண்ணிக்கை அமைந்துள்ள நிலையை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இஃது இயல்பாக நிகழக்கூடியதன்று என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். தலைச்சங்கத்தில் இருந்த புலவர்கள் பட்டியலில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் (சிவபெருமான்), குன்றமெறிந்த குமரவேள் (முருகப்பெருமான்), நிதியின் கிழவன் (குபேரன்) ஆகிய புலவர்களின் பெயர்கள் கடவுளருடைய பெயர்களாகக் காணப்படுகின்றன. கடவுளே சங்கத்தில் வீற்றிருந்தார் என்பது கற்பனையாக இருக்க முடியுமே அன்றி, உண்மை வரலாறு ஆகாது என்பது அந்த வரலாற்று ஆசிரியர்களின் கருத்து. வரலாற்று ஆசிரியர்களின் இந்தக் கருத்து, ஒருவகையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதே எனினும் எல்லாவகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதன்று.

தலைச்சங்கப் புலவர்களைப் பொறுத்தமட்டில் இத்தகைய நிலை இருந்தாலும், மற்றச் சங்கத்தில் இருந்த புலவர்களின் பெயர்களில் இத்தகைய தடை எழ வாய்ப்பில்லை என்பதையும் நாம் நினைவுகூரவேண்டும். மற்றபடி புலவர்கள் எண்ணிக்கையை நோக்கும்போது 549, 59, 49, 4449, 3700, 449 ஆகிய எண்ணிக்கைகள் ஏதோ ஒருவகைக் கலைக் கண்ணோட்டத்தில் அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது என்னும் தடையையும் வரலாற்று ஆசிரியர்கள் எழுப்புகின்றனர். இந்த எண்களில் கலை நோக்குக் குறியீடு இருப்பது, நாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

தலைச்சங்கம் 4440 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் ஆக மொத்தம் 9990 ஆண்டுகள் இருந்துவந்தன என்று நக்கீரனார் குறிப்பிடுகிறார். இந்த ஆண்டுக் கணக்கை வரலாற்று ஆசிரியர்களுள் சிலர் ஐயுறுகின்றனர்.

9990 ஆண்டுகள் சங்கம் நிலவியது என்றால், கி.மு 10ஆம் நூற்றாண்டிலேயே சங்கம் தோன்றியிருக்க வேண்டும். இவ்வளவு முந்திய காலத்தில் சங்கம் இருந்தது என்று கொள்வதற்கு இந்த மரபுவழிச் செய்திக் குறிப்பைத் தவிர வேறு சான்று ஏதும் நமக்குக்

கிடைக்கவில்லை. எனவே, இந்த ஆண்டு எண்ணிக்கைகள் முற்றிலும் சரியானவை என்று நாம் கொள்ள முடியவில்லை.

4440 என்ற எண்ணிக்கை 37 ஐ 120 ஆல் பெருக்கிவரும் தொகையாகவும், 3700 என்ற எண்ணிக்கை 37ஐ 100 ஆல் பெருக்கிவரும் தொகையாகவும், 1850 என்ற எண்ணிக்கை 37ஐ 50 ஆல் பெருக்கிவரும் தொகையாகவும் அமைந்துள்ளன. எனவே, இந்த எண்ணிக்கைகளை உண்மையான காலக் கணக்கீடு என்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை.[36]

இந்த எண்ணிக்கையை வேறு கண்கொண்டு நோக்கி, விண்ணியலின் கணக்குப்படி இரண்டு அமைந்திருப்பதாகவும், சோதிவட்டம் என்பது 1480 ஆண்டுகளைக் கொண்டது என்றும், தலைச்சங்கம் இந்த வகையில் 3 சோதிவட்டக் காலம் நிலவிக் கடற்கோளுக்கு இரையான பின்னர், இடைச்சங்கம் $2\frac{1}{2}$ சோதிவட்டக் காலம் நிலவி, இதுவும் கடற்கோளுக்கு இரையானதற்குப் பின்னர், கடைச்சங்கம் $1\frac{1}{4}$ சோதிவட்டக் காலம் நிலவியது என்று கூறுபவர் உண்டு.[37]

மரபுவழிச் செய்திகளைத் தவிர இந்த எண்ணிக்கைக்கு வேறு அடிப்படைச் சான்று இல்லாத நிலையில், நாம் இக் கால எண்ணிக்கைபற்றி ஒரு தெளிவான முடிவுக்கு வரமுடியவில்லை.

தலைச்சங்கத்தில் காய்சினவழுதி முதல் கடுங்கோன் ஈறாக 89 அரசர்களும், இடைச்சங்கத்தில் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக 59 அரசர்களும், கடைச்சங்கத்தில் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 அரசர்களும் புலவர்களைக் கூட்டிச் சங்கம் செயல்பட உதவிவந்தனர் என்று நக்கீரனார் உரை கூறுகின்றது. இந்த அரசர்களுள் 7 பேர் தலைச்சங்கத்திலும், 5 பேர் இடைச்சங்கத்திலும், 3 பேர் கடைச் சங்கத்திலும் பாவலர்களாகவும் விளங்கிப் புலவர்களோடு புலவர் களாக அமர்ந்து பாடல்கள் பாடினார்கள் என்றும் அது கூறுகிறது.

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள 89, 59, 49, 7, 5, 3 ஆகிய எண்ணிக்கைகள் ஏதோ ஒருவகைக் கலைக் கண்ணோட்டத்தில் தரப்பட்டுள்ளனவாகத் தெரிகிறதேயன்றி,[38] உண்மையின் அடிப்

---

36 Ramachandra Diksitar, V. R., *Studies in Tamil Literature in History*, pp. 19-20

37 சுப்பிரமணிய பிள்ளை, கா., 'தமிழ் இலக்கிய வரலாறு' முதல் பாகம், பக். 25

38 Seshagiri Sastri, cited by R. Ramachandra Dikshitar, Op. cit., pp. 9-10

படையில் தரப்பட்டுள்ளனவாகப் புலப்படவில்லை. மேலும், தலைச்சங்கம் ஒன்று மட்டுமே 89 அரசர்களால் 4440 ஆண்டுகள் பேணப்பட்டது என்று கூறப்படுவது, இயற்கைக்கு மாறுபட்ட கூற்றாகும். பல நூறு ஆண்டுக் காலம் அந்த அரசர்கள் உயிர்வாழ்ந்தார்கள் என்று அது நம்மைக் கொள்ளவைக்கிறது. எனவே, இந்த எண்ணிக்கைகளை நாம் பொதுவாக நோக்கும்போது, சரியாகக் கணிக்கப்பட்ட ஆண்டுகள் என்று கொள்ள முடியாது.

தலைச்சங்கம் கடல்கொள்ளப்பட்ட மதுரையில் இருந்தது என்றும், இடைச்சங்கம் அழிந்துபோன கபாடபுரத்தில் இருந்தது என்றும், கடைச்சங்கம் தற்போதுள்ள மதுரையில் இருந்தது என்றும் நக்கீரர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடல் கொள்ளப்பட்ட மதுரை, கபாடபுரம் ஆகியவை இருந்தன என்பதற்குத் தேவையான, தெளிவான வேறு சான்றுகள் இல்லையெனினும், கபாடபுரத்தைப் பொறுத்தமட்டில் வான்மீகி இராமாயணத்திலும்[39] அர்த்தசாஸ்திரத்திலும்[40] குறிப்புகள் உள்ளன.

சுக்கிரீவன் சீதையைத் தேடிச் செல்கையில் கபாடபுரத்திலும் தேடினான் என்றும், இந்தக் கபாடபுரத்தைத் தன்னகத்தே கொண்டு பாண்டிய நாடு விளங்கியது என்றும் வான்மீகி இராமாயணம் குறிப்பிடுகின்றது. அர்த்தசாஸ்திரத்தில் கபாடபுரம் முத்துக்குப் பெயர் பெற்ற இடம் என்னும் செய்தி குறிப்பிடப்படுகின்றது. இந்த அர்த்தசாஸ்திரப் பகுதிக்கு விளக்கம் கூறும் உரையாசிரியர்கள் கபாடபுரம் என்பது 'மலையகோடி' என்று வழங்கப்பட்ட இடமாகும் என்றும் கூறியுள்ளனர்.[41]

இந்தச் சான்றுகளை நோக்கும்போது கபாடபுரம் என்று ஒன்று இருந்தது என்பது தெளிவாகிறது. கபாடபுரத்தை மலையகோடி என்று அர்த்தசாஸ்திர உரை குறிப்பிடுவதை நாம் சங்க இலக்கியங்களில் 'தொன்முதுகோடி'[42] என்று குறிப்பிடப்படும் இடத்தோடு ஒப்புநோக்கலாம். மலை என்னும் சொல் குவடு என்னும் சொல்லாலும் வழங்கப்படும். இந்த வகையில் மலைய கோடி, குவடுபுரம் (கபாடபுரம்) என்பன ஓர் இடத்தை உணர்த்துவன என்பது ஏற்புடையதாகும்.

---

39 இராகவய்யங்கார், மு., 'வால்மீகி முனிவரும் தென்னாடும்' ஆராய்ச்சித் தொகுதி, பக். 2

40 தங்கவேலு, கோ., 'இந்திய வரலாறு' முதல் பாகம், பக். 201

41 Ramachandra Dikshitar, V. R., Op. cit. pp. 14-15

42 அகம். 70 : 13

'மலையகோடி' என்று அர்த்தசாஸ்திரத்திலும் 'கோடி' என்று சங்கப்பாடலிலும் குறிப்பிடப்படும் இடம் இப்போதுள்ள தனுக்கோடி ஆகும். தனு என்பது வில். வில்லைப் போன்று உட் குழிவாக உள்ள வளைகுடாவைக் கொண்ட பகுதி தனுக்கோடி என்று வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் அக்காலத்தில் கபாடபுரம் அமைந்திருந்தது. கபாடபுரமே கொற்கை என்று குறிப்பிடப்படும் நகரம் என்று கூறுபவர்களும் உண்டு.[48] 'கோல்' என்னும் சொல் வளைவு என்று பொருள்படும். 'கை' என்னும் சொல்லுக்குப் பக்கம் என்னும் பொருளும் உண்டு. இந்த வகையில் கோல்கை அதாவது கொற்கை, வளைந்த பகுதியை உடைய இடம் என்று பொருள்படும். இந்தச் சொல் தனுக்கோடி என்று நாம் மேலே கூறப்பட்டதோடு பொருள் வகையிலும் இடவகையிலும் ஒப்புமை உடையதாக விளங்குவதைக் காணமுடிகிறது. இதனால் கொற்கையும் கபாடபுரமும் ஒன்றே என்னும் கூற்று ஒரு வகையில் ஏற்புடையதாகும்.

இவ்வாறு கொற்கை என்னும் நகரம் இருந்தது உண்டு என்னும் நிலை ஏற்படும்போது, தென்மதுரை என்னும் நகரமும் இருந்தது எனலாம். எனினும் இஃது ஒருவகையில் உய்த்துணர்வேயாகும். இதனை வரலாற்று உண்மை என்று கொள்வதற்கு மேலும் சில சான்றுகளை நாம் தந்தாக வேண்டும். இந்துமாக் கடலில் ஆய்வு நடத்தினால், எதிர்காலத்தில் இதற்குச் சான்று கிடைக்கக்கூடும்.

தலைச்சங்கத்தில் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலான பாடல் வகைகள் பாடப்பட்டன என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த வகைப் பாடற்பகுதிகள் நமக்கு இப்போது கிடைக்கவில்லை. இடைச்சங்கத்தில் கலி, குருகு, வெண்டாளி, வியாளமாலை அகவல் முதலான பாடல்கள் பாடப்பட்டன என்று குறிப்பிடப்படுகிறது. இவையும் அப்படியே. இவற்றுள் பரிபாடல், கலி, அகவல் முதலானவை இடைச்சங்கப் பாடல்களிலும் காணக் கிடக்கின்றன. மற்றும் கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலான பாடல் வகைகள் இடைச்சங்கத்தில் பாடப்பட்டன என்று குறிப்பிடப்படுகிறது. இப் பாடல் வகைகளைக் கொண்ட பிற நூல்களும் இப்போது கிடைக்கவில்லை. இந்த நிலையில் மூன்று சங்கங்கள் பாடப்பட்ட பாடல்களாகத் தரப்பட்டுள்ள பட்டியலை நாம் முழுமையான அளவில் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. இடைச்சங்கத்தில் பல்வேறு இசைநூல்களும், நாடக

---

48 இராகவய்யங்கார், இரா., 'கோனகர் கொற்கை', பக். 18
Iyengar, P. T. S., Op. cit., p . 242

நூல்களும் பாடப்பட்டன என்று அடியார்க்குநல்லார் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார்.[44] இவற்றின் காலமும் ஐயுறவிற்கிடமானதே ஆகும்.

காலம்

இதுவரை சங்கம் நிலைபெற்று இருந்தமைக்கான செய்திகளை ஆராய்ந்தோம். இனிச் சங்ககாலம் என்று கூறப்படும் பகுதியின் காலப் பரப்பளவு எல்லையைக் காணவேண்டும். சங்க காலத்தின் காலப் பரப்பளவுப் பின் எல்லையைக் கி. பி. 7, 8ஆம் நூற்றாண்டு வரை ஒரு சிலர் கொண்டுசெல்கின்றனர். சிலர் சங்க காலப் பரப்பளவின் முன்எல்லையைக் கிறிஸ்துவிற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கொண்டுசெல்கின்றனர். இவர்களுக்கு இடைப்பட்ட நிலையில் கி மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 5ஆம் நூற்றாண்டு வரையுள்ள ஆயிரம் ஆண்டுக் காலத்தைச் சங்ககாலத்தின் காலப் பரப்பளவாக ஒருசிலர் காண்கின்றனர். மற்றும் சிலர் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையுள்ள சுமார் 600 ஆண்டுக் காலத்தைச் சங்க காலம் என்கின்றனர் இன்னும் சிலர் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளை மட்டும் சங்க இலக்கியங்கள் தோன்றிய காலம் என்கின்றனர். இவ்வாறு சங்ககாலத்தின் காலப் பரப்பளவு எல்லை வெவ்வேறு நிலைகளில் காட்டப்படுகிறது. இவற்றின் வன்மைமென்மைகளை ஆய்வுநோக்கில் சான்றுகளுடன் ஆராய்ந்து, இங்கு நாம் ஒரு பொது முடிவுக்கு வர முயல்வோம்.

---

44 இசைத்தமிழ் நூல்கள் :

1. பெருநாரை, பெருங்குருகு
2. பஞ்சபாரதீயம் (தேவ இருடி நாரதன் செய்தது) தொன்னூல்

நாடகத்தமிழ் நூல்கள் :

1. பரதம்
2. அகத்தியம்
3. முறுவல்
4. சயந்தம்
5. குணநூல்
6. செயிற்றியம்
7. இசைநுணுக்கம் (அகத்தியர் மாணவர் சிகண்டி என்பவரால் செய்யப்பட்டது)
8. இந்திரகாளியம் (பரவசு முனிவரில் யானேந்திரர் செய்தது)
9. பஞ்சமரபு (அறிவனார்)
10. பரத சேனாபதீயம் (ஆதிவாயிலார்)
11. மதிவாணனார் நாடகத்தமிழ் நூல்

(கடைச்சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறியவன் பாண்டியன் மதிவாணன்—வசைக்கூத்திற்கு மறுதலையான புகழ்க்கூத்தாக அமைக்கப்பட்டது)

மேலே கூறப்பட்ட பல்வேறு கருத்துகளைத் தனித்தனியே ஆராய்வதற்கு முன்பு, பொதுவான ஒருசில உண்மைகளை மனத்தில் இறுத்திக்கொள்ள வேண்டும். சங்க இலக்கியங்கள், சங்ககாலக் கல்வெட்டுகள், சங்ககாலத்தனவாக கிடைத்துள்ள நாணயங்கள் இவற்றிலெல்லாம் காணப்படும் காலநிலைகளை ஒப்பிட்டு நோக்கத்தக்க வகையில் வெளிநாட்டு வரலாறுகளில் கிடைக்கும் செய்திகள், அகழ்வாய்வு முடிவுகளுக்கும் சங்க இலக்கியங்களில் காணப்படும் செய்திகளுக்கும் இடையேயுள்ள ஒப்புமைக் கூறுகள் முதலானவற்றின் அடிப்படையிலேயே இங்கு நாம் சங்க காலத்தின் காலப் பரப்பளவு எல்லைகளை வரையறுக்க முயல்கிறோம்.

பல்லவர் காலத்திற்கு முந்தியது

சங்ககாலத்தின் பின்எல்லையை வரையறுக்க உதவும் சான்றுகளில் முதன்மையான இடம் பெறுவது, சங்க இலக்கியங்களில் பல்லவர்பற்றிய குறிப்புகள் யாண்டும் இல்லையென்னும் பேருண்மையே ஆகும். சங்க இலக்கியங்களில் பல்லவர்களைப்பற்றிய குறிப்பு யாண்டும் இல்லாததால், சங்க இலக்கியங்களின் காலம் பல்லவர்களின் காலத்திற்கும் முந்தியது என்பது தெளிவு. இந்த உண்மையின் அடிப்படையில் நோக்கும்போதும் இருவேறு காலப் பின்எல்லைகள் சங்ககாலத்திற்குக் காட்டப்படுகின்றன.

பல்லவர்கள் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ் நாட்டில் செல்வாக்குடன் ஆட்சி புரிந்தவர்கள் ஆகையால், அவர்களைப்பற்றிய குறிப்பு இல்லாத சங்க இலக்கியங்கள் கி. பி. 5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.[45]

முற்காலப் பல்லவர்கள் என்று வரலாற்று அறிஞர்களால் கூறப்படும் பல்லவர்கள் கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதலே காணப்படுகின்றனர். இவர்களைப்பற்றிய குறிப்பு சங்க நூல்களில் இல்லாததால், சங்க நூல்கள் கி.பி. 4ஆம் நூற்றாண்டிற்கு முந்தியவை என்றும் கூறப்படுகிறது.

மற்றும் கி.பி. 575-ல் கடுங்கோன் என்னும் பாண்டிய அரசன் களப்பிரரிடமிருந்து நாட்டை மீட்டுக்கொண்டான் என்னும் வரையறை, கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குமுன் ஓரிரு நூற்றாண்டுகளேனும் களப்பிரர் நாட்டை ஆண்டனர் என்று தெரிவிப்பதால், இந்தக் களப்பிரரைப் பற்றிய குறிப்பு இல்லாத சங்க இலக்கியங்கள்

45 Ramachandran, Dr., C. E., *Ahananuru in Its Historical Setting*, p.5

கி.பி. 4ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை என்பது ஒரு சாரார் கருத்து.[46]

இந்த வகையில் கி பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கால எல்லையை, கி பி. 3ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று வரலாற்று அறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடு கின்றார்.[47]

பல்லவர் செப்பேடுகளில் காலத்தால் முற்பட்டவை கி.பி. 250 முதல் 350 வரையிலான காலத்தவையாகும்.[48] இக்காலத்தில் குறிப்பாக நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசாண்ட வன் என்று கணிக்கப்படும்[49] ஸ்கந்தவர்மன் என்பவன் காஞ்சி புரத்திலிருந்துகொண்டு மயிதவோலு, கிரஹடகள்ளிப் பட்டயங் களை வழங்கியுள்ளான்.[50]

இவன் காஞ்சிபுரத்திலிருந்த சமண சமயத்திற்குரிய கடிகை யைக் கைப்பற்றினான். காஞ்சிபுரத்தில் தொண்டைமான் இளந் திரையன் அரசாண்டதுபற்றிய குறிப்புகளைத் தரும் சங்க இலக் கியங்களில் மேற்கண்டவை போன்ற மிகப் பெரிய வரலாற்று நிகழ்ச்சிகள் குறிப்பிடப்படவில்லையாதலால், சங்க இலக்கியங்கள் நிச்சயமாக இவனது காலமாகிய கி.பி. 4ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதிக்கு முந்தியவை; அதாவது கி.பி. 300-க்கு முற்பட்டவை என்பது தெளிவாகிறது. இந்த நோக்கில் கி.பி. 250ஐ நாம் சங்ககாலத்தின் பின்எல்லையாகக் கொள்வது பொருத்தமானது.

கி. பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தியது அன்று

மேலே நாம் காட்டியுள்ள சான்றுகளுக்கு எதிரிடையான கருத்துகளும் கூறப்படுகின்றன. பல்லவர்களைப்பற்றிய குறிப்பும், பல்லவர்களுக்குப் பிற்பட்ட அரசர்களைப்பற்றிய குறிப்பும் சங்க இலக்கியங்களில் உண்டு என்று காட்டப்படுகிறது. இதன் வழி, சங்க காலத்தின் பின்எல்லை கி.பி 7, 8ஆம் நூற்றாண்டுகள்

---

46 சதாசிவ பண்டாரத்தார், தி. வை., 'பாண்டியர் வரலாறு', பக். 34

47 சதாசிவ பண்டாரத்தார், தி. வை., 'தமிழ் இலக்கிய வரலாறு', கி. பி. 250–600 பக். 1–9

48 (i) Thirty Pallava Copper Plates, *South India Peeps into History from Copper Plates*, p. V.

(ii) Sathianathaier, R., *Dynasties of South India*, R. C. Majumdar (ED.) History and Culture of the Indian People, Vol. III. p. 257

49 Sathianathaier, R., Ibid. p. 282

50 பல்லவர் வரலாற்றுச் சுருக்கம், 'பல்லவர் செப்பேடுகள் முப்பது' முகப்புப் பக்கம் 5

வரை கொண்டுசெல்லப்படுகிறது. இந்தக் கருத்திற்கு உறுதுணை யாகக் கூறப்படும் சான்றுகளை இனி நாம் எண்ணிப் பார்க்கலாம்

சங்க இலக்கியங்களில் தொண்டைமான் என்று குறிப்பிடப் படும் அரசர்கள், பல்லவ அரசர்களே ஆவர் என்று எடுத்துக் கொண்டு, சங்க இலக்கியங்களில் பல்லவரைப்பற்றிய செய்தி இருக்கிறது என்றும், எனவே பல்லவர் ஆட்சிக் காலம் சங்க காலப் பரப்பளவிற்கு உட்பட்டது என்றும் கேரள வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.[51]

தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டுக் கிடந்ததால்தொண்டை மான் எனப் பெயர்பெற்றான் என்று வழங்கப்படும் கதைக்கும், பல்லவம் என்னும் தளிர்க்கொடியால் சுற்றப்பட்டுக் கிடந்ததால் பல்லவன் என்று பெயர் பெற்றான் என்று கூறப்படும் கதைக்கும் ஏதோ ஒருவகையில் தொடர்பு இருப்பதனை மனத்தில் எண்ணிக் கொண்டு, இவ்வாறு தொண்டைமானும் பல்லவனும் ஒருவனே என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது. பல்லவன் என்னும் சொல்லுக்கு வேறு வகையில் பல விளக்கங்கள் கூறப்படுவதாலும், கொடியோடு தொடர்புடைய செய்தி வெறும் கதையாக வழங்கி வருவதாலும் நாம் இதனைச் சான்றாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. இந்த வகையில் தொண்டைமானும் பல்லவனும் ஒருவனே என்னும் கூற்றுப் பொருந்தாது என்று உணரலாம்.

சங்க இலக்கியங்களில் சேர அரசன் கடப்பமரத்தைக் காவல் மரமாகக் கொண்ட கடல் தீவு மக்களை வென்ற செய்தி கூறப் படுகிறது. இவர்களைக் கடம்பர் என்று சங்க இலக்கியங்கள் எங்கும் குறிப்பிடவில்லை. 'கடம்பன்' என்னும் சொல் நான்கு குடியினருள் ஒருவன்[52] என்னும் குறிப்புண்டு. இந்த நிலையில் 'கடம்பர்' என்னும் சொல் கதம்பர் என்னும் சொல்லோடு தொடர் புடையதென்றும், கடம்பரும் கதம்பரும் ஒருவரே என்றும், கதம்பர் கி. பி. 4ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் வானவாசி யையும் கோகர்ணப் பகுதியையும் அரசாண்டவர்கள் ஆதலால், சங்க இலக்கியங்களில் சுட்டப்படும் கடம்பரும் கி. பி. 4ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவராவர் என்றும் அக் கேரள வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.[53]

---

51 குஞ்ஞன் பிள்ளை, எளங்குளம், 'பண்டைய கேரளம்' பக். 93
Studies in Kerala History, pp. 127–135

52 புறம். 335 : 7

53 குஞ்ஞன் பிள்ளை, எளங்குளம், மு. கு. நூ., பக். 219

கடம்பர்கள் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் இல்லாத தாலும், கடப்பமரத்தைக் காவல் மரமாகவுடைய மக்கள் அரபிக் கடல் தீவுப்பகுதியில் வாழ்ந்தவர்கள் ஆதலாலும், கதம்பர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த வானவாசி கோகர்ணப் பகுதிகள் தீவுப் பகுதிகள் அல்லனவாததாலும் கடம்பரும் கதம்பரும் ஒருவரே என்னும் கருத்தை நாம் ஏற்பதற்கில்லை.

சங்கப் பாடல்களில் கங்கன், கட்டி, பாணன் ஆகிய அரசர் பெயர்கள் உள்ளன. பாணர், கங்கர், கட்டியர் என்னும் இனத்தவர் தமிழ்நாட்டுக்கு வடபாலுள்ள பகுதிகளில் கி. பி. 5ஆம் நூற்றாண்டிற்குப்பின் ஆட்சி புரிந்து வந்தவர் என்று தெரிய வருவதால், இந்த இனத்தவர்களின் பெயரைக்கொண்ட மேலே குறிப்பிட்ட அரசர்களும் இந்தக் கி. பி. 5ஆம் நூற்றாண் டிற்கு முற்பட்டவரல்லர் என்று கூறி, அதன் அடிப்படையில் சங்க இலக்கியங்களில் உள்ள சில பாடல்கள் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தியவை என்று அந்தக் கேரள வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்கள்.[54]

கங்கர், கட்டியர், பாணர் ஆகிய இனத்தவரைப் பற்றிய வரலாறு கி. பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே கல்வெட்டு களில் கிடைக்கின்றன என்பது உண்மையே. எனினும், இவர்களது முன்னோர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்தார்கள் என்று கொள்வதில் தடை இருக்க முடியாது. சோழரைப்பற்றிய செய்திகள்கூடக் கி. பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. இதனால், அதற்குமுன் சோழர்களே தமிழ்நாட்டில் அரசாண்டது இல்லை என்று நாம் கூறமுடியுமா? அதேபோல் கங்கர் இனத்தவர்களின் முன்னோன் கங்கனும், கட்டியர் இனத்தவர்களின் முன்னோன் கட்டியும், பாணர் இனத்தவர்களின் முன்னோன் பாணனும் சங்க காலத்திலேயே வாழ்ந்திருக்க முடியும்; வாழ்ந்தார்கள் என்று ஏற்பதே பொருத்தமாகும்.

மோரியர் தென்னாட்டிற்குப் படையெடுத்து வந்ததுபற்றிய குறிப்பு சங்க இலக்கியங்களில் உள்ளது. குப்த அரசனான சமுத்திரகுப்தன் தென்னாட்டின்மீது படையெடுத்து வந்து, கௌராளாம் என்ற பகுதியையும், அங்கு அரசாண்ட மந்தராஜா என்பவனையும் வென்றதாக அவன் கல்வெட்டில் குறிப் பிட்டுள்ளான். 'மந்தராஜா' என்பது 'மாந்தரஞ்சேரல்' என்னும்

54 குஞ்ஞன் பிள்ளை, எளங்குளம், மு, கு. நூ., பக். 200

சேர அரசனைக் குறிக்கும் சொல் என்றும், சமுத்திரகுப்தன் வெற்றியைக் குறிக்கும் இந்தக் கல்வெட்டுச் செய்திக்கும், மோரியர் படையெடுப்புப்பற்றிக் குறிப்பிடும் சங்க இலக்கியச் செய்திக்கும் தொடர்பு இருப்பதாகக்கொண்டு இந்த நிகழ்ச்சி சமுத்திரகுப்தன் காலத்தில் நிகழ்ந்தது என்றும், இதனால் சமுத்திரகுப்தன் காலமான கி. பி. நான்காம் நூற்றாண்டு (கி.பி. 320-350)[55] சங்ககாலப் பரப்பில் அடங்குமென்றும் கேரள வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியங்களில் மோரியர் என்னும் சொல் உள்ளதே தவிர, குப்தர் என்னும் சொல் இல்லை. எனவே, மோரியர் என்னும் சொல் மௌரியர் என்னும் சொல்லோடு தொடர்புடையதேயன்றிக் குப்தர் என்னும் சொல்லோடு தொடர்புடையதன்று. ஆதலால், சங்க இலக்கியங்களில் கூறப்படும் மோரியர், வரலாற்று நூலில் குறிப்பிடப்படும் குப்தர் ஆவர் என்னும் கருத்தை ஏற்க முடியவில்லை.

சங்க இலக்கியங்களில் நந்தர் என்னும் சொல் உள்ளது. பாடலிபுத்திரத்தில் கங்கை ஆற்றின் நீருக்கடியில் அவர்கள் தம் செல்வத்தைப் புதைத்து வைத்ததுபற்றிச் சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.[56]

கி. மு. 4ஆம் நூற்றாண்டில் மோரியர்களின் ஆட்சி தொடங்கியது. நந்தர் குடி ஆட்சி அவர்களுக்கு முந்தியது. நந்தர் குடி அரசர்களுள் ஒருவனான தனநந்தன் என்பவன், நிறைந்த செல்வம் பெற்று விளங்கியதையும், அதனைப் புதைத்து வைத்ததையும் பற்றிய குறிப்புகளைக்கொண்ட வன்மைமிக்க அடிப்படைச் சான்றுகள் கிடைத்துள்ளன. எனவே, அப்படியிருக்கையில் கி. பி. 5ஆம் நூற்றாண்டில் பாடலிபுத்திரத்தில் வெள்ளப் பெருக்கு ஒன்று நிகழ்ந்தது என்றும், அவ் வெள்ளப்பெருக்கால் அந்த நகரமும் செல்வமும் முழுகிய செய்தியே சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறதென்றும், இதனால் இந்தச் செய்திகளைக்

---

55 Majumdar, R. C., *The Foundation of the Gupta Empire—History and Culture of the Indian People*, Vol. III., p. 16

56 (அ) 'பொன்மலி பாடலி' (குறுந். 75 : 4)

(ஆ) 'நந்தன் வெறுக்கை எய்தினும்' (அகம். 251 : 5)

(இ) 'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ' (அகம். 265 : 3-6)

கூறும் சங்கப் பாடல்கள் கி. பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை என்றும் கூறப்படுகிறது.[57]

சங்க இலக்கியங்களில் நந்தர் என்னும் சொல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாலும், சங்க இலக்கியங்களில் கூறப்படும் செய்திக்கு நந்தர் கால வரலாற்றில் தெளிவான சான்று இருப்பதாலும் கி. பி. 5ஆம் நூற்றாண்டு என்னும் கருத்து ஏற்புடையதன்று.

சங்க இலக்கியங்களில் யவனரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பிளினி, தாலமி, பெரிபுளூஸ் நூலார் முதலான மேலை நாட்டார் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவர். யவனர் தமிழ்நாட்டிலுள்ள முசிறி முதலான துறைமுகங்களில் வாணிகம் செய்ததுபற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் உள்ளன. இவற்றை ஒருங்கிணைத்து நோக்கிச் சங்ககாலம் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைத் தன்னகத்தே கொண்டது என்று கூறப்படுகிறது. இந்தக் கருத்தை மறுக்கும் போக்கும் நிலவிவருகிறது. யவனர் தொடர்பு, கி. பி. 4, 5, 6ஆம் நூற்றாண்டுகளிலும் இடையீடின்றி இருந்ததால் யவனரைப் பற்றிய குறிப்பைக்கொண்டு சங்ககாலத்தின் எல்லையை நாம் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளோடு நிறுத்திவிட முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர்.[58]

பிளினியும் தாலமியும், மேற்குக் கடற்கரையில் இருந்த நெல்சிந்தா என்னும் நகரம் பாண்டியர்க்குரியது என்று குறிப்பிட்டு உள்ளனர். பாண்டிய அரசன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 'நெல்வினூர்' என்னும் ஊரை வெற்றி கொண்டதுபற்றி மதுரைக்காஞ்சி என்னும் சங்க நூல் தெரிவிக்கின்றது.[59] இந்த வகையில் சங்கப் பாடல்கள் செய்தியும் கிரேக்கர் குறிப்புகளும் ஒன்றுபட்டுக் கிடப்பதைக் காணலாம். இதனால் அந்தக் கிரேக்கப் பயணிகளின் காலமே சங்ககாலத்தின் பகுதியாகும் என்று தெளிவாக அறியலாம்.

அன்றியும் அசோகன் ஆட்சிக் காலத்திற்குப் பின்னும் சங்ககாலத்திற்குப் பின்னும் சேரநாட்டு வரலாற்றில் ஓர் இருண்ட காலம் நிலவியது என்றும், அதற்குப் பின்னர் பெருமாள் குடியினர் ஆட்சியைக் கைப்பற்றினர் என்றும், கி. பி. 6ஆம் நூற்றாண்

---

57 இராகவையங்கார், மு., மேற்கோள் சதாசிவப் பண்டாரத்தார், தி. வை., 'தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 250-600)', பக். 1-9

58 குஞ்ஞன்பிள்ளை, எளங்குளம், மு. கு. நூ., பக். 214

59 மதுரைக். 75-88

டிலேயே சேரநாட்டில் கிறித்தவ மதம் இருந்தது என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.[60] பெருமாள் குடியினருக்கு முன்பு சேரநாட்டுப் பகுதியில் களப்பிரர் செல்வாக்கும் இருந்ததாகக் கூறப்படுகிறது.[61]

கி. பி. 4, 5, 6ஆம் நூற்றாண்டுகளில் சேரநாட்டுப் பகுதியில் நிலவிய இத்தகைய ஆட்சியைப்பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் யாண்டும் இல்லை. எனவே, சங்ககாலத்தை இந்தப் பின்எல்லைக்குக் கொண்டுசெல்வது பொருத்தமாகாது.

சிலப்பதிகாரத்தில் கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், கட்டியர் முதலானோரைச் செங்குட்டுவன் வென்றதாகக் கூறப்பட்டுள்ளது.[62] மற்றும் பாலகுமரன் மக்களான கனகன், விசயன் ஆகியோரும்[63] அவனால் வெற்றிகொள்ளப்பட்டவர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இவர்களில் பாலகுமரன் என்பவன் பாலர் குடியில் தோன்றிய குமரன் என்றும், இந்தப் பாலர் குடி கி. பி. 765-ல் கோபாலன் என்பவனால் பீகாரில் நாளந்தாவுக்கு அருகிலுள்ள உத்தண்டபுரியில் நிறுவப்பட்டதாகையால் சிலப்பதிகாரம் இதற்குப் பிற்பட்டதென்றும் கூறப்படுகிறது.

'பாலகுமரன்' என்னும் பெயரைக்கொண்டு இவன் பால வமிசத்தவன் என்று முடிவு செய்ய முடியாது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் 'பாலா' என்னும் பெயருடன் விளங்கிய பல் வேறு அரசர்களை இந்திய வரலாற்றில் நாம் காணமுடிகிறது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வடநாட்டிலுள்ள மதுரை நகரில் சாகர்கள் செல்வாக்கு இழந்த பின்னர்த் தலையெடுத்த நாக வமிச அரசர்களுள் ஒருவன் 'பாலபூதி' என்னும் அரசன் ஆவான். இவன் குசானர்களுக்கு உதவியாக இருந்தவன்.[64]

கி. பி. 238-ல் பொறிக்கப்பட்ட 'பத்வா கல்வெட்டில்' மாளவ விடுதலைக்கு உதவிய 'மௌகாரி மகாசேனாபதி பாலா' என்பவனின் பெயர் உள்ளது.[65]

---

60 Sathianathaier, R., Op. cit., Majumdar, R. C. (Ed.) Op. cit., Vol. III., p. 275

61 Nilakanta Sastri, K. A., *A History of South India*, p.p. 144–145

62 சிலப். 25 : 156–159

63 ஷெ 26 : 158-159

64 Sircar, D. C., *Northern India After the Kushanas*, Majumdar, R. C. (Ed.) Op. cit., Vol. II., p. 177

65 Ibid, p. 164

சமுத்திரகுப்தனால் (கி. பி. 320-380) வெற்றிகொள்ளப் பட்டவர்களுள் ஒருவன் பெயர் பாலவர்மன்.[66]

காமரூபம் எனப்பட்ட அஸ்ஸாம் நாட்டில் கி. பி. 350-650 ஆண்டுகளில் அரசாண்ட 13 அரசர்களுள் மூன்றாம் அரசன் பாலவர்மன்.[67]

கி. பி. 5ஆம் நூற்றாண்டில் தென்கோசல நாட்டில் ஆண்ட பாண்டு வமிச அரசர்களுள் ஒருவன் பெயர் 'பாலராஜா'. இவன் பேரன் பெயர் 'நன்னன்' (கி. பி. 475-500).[68]

இவ்வாறு பாலன் என்று வரும் பெயரைக்கொண்டு காலத் தைக் கணிக்கப்புகின் பொருத்தமின்றி முடியுமாகையால் குஞ்ஞன் பிள்ளையின் இத்தகைய கணிப்பை விட்டொதுக்கலாம். பால குமரனும் கனகனும், செங்குட்டுவன் காலமான கி. பி. 2ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் அரசாண்டவர் என்றே கொள் வோம். மற்றும் செங்குட்டுவனால் வெல்லப்பட்ட ஏனையோரை யும் செங்குட்டுவன் காலத்தவர் என்றே கொள்ளலாம்.

சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள மொழிநடை, சமயக் கருத்துகள், பண்பாட்டு நெறிகள் முதலானவற்றை நோக்கிச் சங்க காலத்திற்குப் பிற்பட்டது சிலப்பதிகாரம் என்னும் கருத்தும் நிலவி வருகிறது.

சமயநூலில் சமயக் கருத்துகளும், சமயச் சொற்களும் அவற் றோடு இயைபுடைய பண்பாட்டுக் கருத்துகளும் புகுவது இயற்கை. பரிசில் வேண்டியும், ஆண் பெண் உறவு குறித்தும் சங்கப் பாடல் கள் பாடப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம், திருமுருகாற்றுப்படை ஆகியவை சமயநோக்கில் பாடப்பட்டுள்ளன. இவற்றை இணைத்துப் பார்ப்பதால் ஏற்படும் சிக்கல்தான் மொழிநடையில் ஏற்படும் சிக்கலாகும். மற்றும் கலித்தொகை, பரிபாடல் போன்ற தனிவகைப்பட்ட பாடல்கள் மக்களின் இசைப்பாங்கு முறையில் அமைந்துள்ளன. அக்கால மக்கள் மொழியில் அமைந்த இசைப் பாடல்களில் 'நான்' முதலான சொற்கள் இடம்பெற்றன என்பதை

---

66 Majumdar, R. C., *The Foundation of the Gupta Empire*, Self (Ed.) Op. cit., Vol. III, p. 8

67 Majumdar, R. C., *Northern India After the Break up of the Gupta Empire*, Self (Ed.) Op. cit., Vol., III, p. 89

68 Sircar, D. C., *Decan in the Gupta Age*, Majumdar, R. C. (Ed.) Op. cit., Vol. III, p. 221

இவை காட்டுகின்றன. இவை புலவர் மொழியில் இயல் பாடல் களில் இடம்பெறாமல் போனது இயற்கையே. இத்தகைய சொல்வழக்கு நிலையைக்கொண்டு நாம் காலத்தை வரையறுப்பது பொருந்தாமல் தவறாய் முடியும். இதனை ஒரு சான்றால் விளக்கலாம்.

புகழூர்த் தமிழிக் கல்வெட்டில் காணப்படும் 'அறுப்பி(த்)தகல்' என்னும் தொடரைக் கொண்டு இத்தகைய வடிவம் சங்க இலக் கியங்களில் காணப்படாமை நோக்கி, கல்வெட்டு சங்க காலத் திற்கும் பிற்பட்டது என்று கூறினால் எவ்வாறு தவறாய் முடியுமோ, அதுபோலத் தவறாய் முடியும். அதே கல்வெட்டில் 'மூன்று', 'அதிட்டானம்' என்னும் இரு சொற்களும் ஒரே பொருளில் அதாவது, 'சமணத் துறவியின் இருப்பிடம்' என்னும் பொருளில் வருகின்றன. அதிட்டானம் என்னும் சொல் சங்கப் பாடல்களில் இல்லை. இதனால் இக் கல்வெட்டைச் சங்க காலத்தது அன்று எனக் கூறமுடியுமோ ? இதேபோல் சங்ககாலக் கல்வெட்டுகளில் பல்வேறு சொற்களைக் காணலாம். எனவே, சொற்களைக்கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை ஏதோ ஒருவகையில் எண்ணிப் பார்க்கப்படவேண்டுமேயொழிய அதன் முடிவுதான் வரலாற்று முடிவு என்பதற்கில்லை.

இதுவரை சங்ககாலம் கி. பி. 7, 8ஆம் நூற்றாண்டு வரை யுள்ள காலத்தைக் கொண்டதென்று கூறுவாரின் கருத்துகளை ஆராய்ந்து அவற்றின் வலிமையின்மையைக் கண்டோம். நாம் முன்பு கூறியவாறு கி. பி. 250 வரையுள்ள காலத்தை மட்டுமே சங்ககாலப் பரப்பளவில் நாம் கொள்ளமுடியும் என்பதற்கு மேலும் பல்வேறு சான்றுகள் உள்ளன. அவற்றையும் நாம் பொருள் நோக்கில் பாகுபடுத்திக் காண்போம்.

கி. பி. 250-க்கு முந்தியதே கல்வெட்டுச் சான்றுகள்

இந் நூலின் 'அடிப்படைச் சான்றுகள்-II' என்னும் பகுதியில் சங்ககாலக் கல்வெட்டுகள் எனும் உட்பகுப்பின்கீழ்க் கி. மு 5ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 3ஆம் நூற்றாண்டு வரையிலான சுமார் 800 ஆண்டுகள் கால அளவில் தோன்றிய பல்வேறு கல்வெட்டுகள் 'பிராமி' என்று வழங்கப்படும் தமிழி எழுத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுவதை அறிந் தோம். அவற்றில் சேரர், பாண்டியர், சில குறுநிலத் தலைவர்கள் முதலானோரின் பெயர்களும், அவர்களுள் ஒருசிலரைப்பற்றிய உறவுநிலைகளும் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றையும் சங்க இலக்கியங்களில் காணப்படும் கருத்துகளையும் ஒப்புநோக்கும்

போது செய்தி ஒப்புமைகள் பல காணப்படுவதால், இவற்றை ஒரு காலத்தனவென்றே கொள்ளவேண்டிய நிலை உள்ளது. இந்தக் கல்வெட்டுகள் கி. பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை யல்ல. ஆதலால், அவற்றோடு ஒப்புமையுடைய சங்க இலக் கியங்களும் கி. பி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவையல்ல என்பது தெளிவு. இந்தப் பொதுக்குறிப்பின் அடிப்படையில் கல்வெட்டுச் செய்திக்கும் இலக்கியச் செய்திக்கும் உள்ள ஒப்புமை யைக் காட்டும் ஒருசில பகுதிகளை நாம் இங்குக் காணலாம்.

புகழூர் ஆறுநாட்டான் மலையிலுள்ள கல்வெட்டு 'கோ ஆதன் செல் இரும்பொறை' என்னும் அரசனையும், அவன் மகன் 'பெருங்கடுங்கோ' என்னும் அரசனையும், அப் பெருங்கடுங்கோ மகன் 'இளங்கடுங்கோ' என்னும் அரசனையும் உறவுமுறையுடன் சுட்டிக்காட்டுகிறது. சங்க இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப் பத்து என்னும் நூல் செல்வக்கடுங்கோ வாழியாதனைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இந்தப் பெயர் கல்வெட்டில் கூறப்படும் 'கோ ஆதன் செல் இரும்பொறை' என்னும் பெயரோடு தொடர் புடையது. மற்றும் பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ என்னும் அரசப் புலவர்களைப்பற்றிய வரலாற்றுச் செய்திகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. கல்வெட்டில் காணப் படும் பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ என்னும் பெயர்கள் இந்த அரசப் புலவர்களின் பெயரோடு தொடர்புடையனவாகக் காணப் படுகின்றன. இந்தத் தொடர்பு ஒப்புமையால் கல்வெட்டில் கூறப் படும் செய்தியும், சங்க இலக்கியங்களில் கூறப்படும் செய்தியும் ஒன்றே எனத் தெரியவருகிறது. இதிலிருந்து இந்தக் கல்வெட்டின் காலமான கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு, சங்க காலத்தின் ஒரு பகுதியாகும் என்பதைத் தெளிவாக அறியலாம்.

மதுரை மாவட்டம் மீனாட்சிபுரம் மலையிலுள்ள கல்வெட்டில் நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய அரசனின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. திருப்பரங்குன்றத்திலுள்ள கல்வெட்டில் அந்துவன் என்னும் பெயர் கூறப்படுகிறது. சங்க இலக்கியங்களில் கூறப் படும் நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய அரசன் பெயரோடும், அந்துவஞ்சேரல் என்னும் சேர அரசன் பெயரோடும் இந்தக் கல்வெட்டுப் பெயர்கள் ஒப்புமையுடையனவாகக் காணப்படுவ தால், இந்தக் கல்வெட்டின் காலமாக நாம் கணித்துள்ள கி. மு. 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காலப்பகுதி, நம் சங்ககால எல்லை யில் அடங்குமென்பதை அறியலாம்.

மற்றும் கடலன் வழுதி, பிட்டன் முதலான குறுநிலத் தலை வர்களின் பெயர்களும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் காணப்படும் இந்தப் பெயர்களோடு அவற்றை ஒப்புமைப்படுத்தி நோக்கி, அக் கல்வெட்டுகளின் காலமான கி. பி. 3ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியை நாம் சங்ககாலமாகக் கொள்ளலாம்.

இதுவரையில் தமிழ்நாட்டிலுள்ள சங்ககாலக் கல்வெட்டுகளை அடிப்படைச் சான்றுகளாகக் கொண்டு சங்ககாலத்தின் பரப்பளவைக் கண்டோம். இந்தக் கருத்தை உறுதிசெய்யும் வகையில் அசோகன் கல்வெட்டும் கலிங்க அரசன் காரவேலனது கல்வெட்டும் அமைந்துள்ளதை நாம் காணலாம்.

அசோகன் கி. மு. 273-236 ஆண்டுகளில் அரசாண்டான். அவன் தனது 13ஆவது பாறைக் கல்வெட்டில் தனது ஆட்சிக்கு உட்படாமல் தென்பகுதியில் விளங்கிய நாடுகளென்று சேர, சோழ, பாண்டிய, கேரளபுத்திர, சத்தியபுத்திர, தம்பபன்னி (இலங்கை) நாடுகளைக் குறிப்பிட்டுள்ளான். சேர அரசன் அந்துவன் கால்வழியினர் அரசாண்ட கொங்குநாட்டுப் பகுதியைச் சேர நாடு என்றும், சோழர்கள் ஆண்ட நாட்டைச் சோழ நாடு என்றும், பாண்டியர்கள் ஆண்ட நாட்டைப் பாண்டிய நாடு என்றும், சேர அரசன் உதியஞ்சேரல் கால்வழியினர் ஆண்ட மேற்குக் கடற்கரையை ஒட்டிய நாட்டுப் பகுதியைக் கேரளபுத்திர நாடு என்றும், கோசர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த துளு நாட்டைச் சத்தியபுத்திர நாடு என்றும், இலங்கை அரசைத் தம்பபன்னி என்றும் அசோகன் குறித்துள்ளதாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த நாட்டு அரசர்களின் வரலாற்றினைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. எனவே, அசோகன் கல்வெட்டில் கூறப்படும் செய்திகள் சங்க இலக்கியங்களில் கூறப்படும் செய்திகளோடு ஒப்புமையுடையனவாக விளங்கி, அசோகன் காலமான கி. மு. 3ஆம் நூற்றாண்டும், சங்ககால எல்லையின் ஒரு பகுதியாகும் என்பதை உணர்த்துகின்றன. கலிங்க நாட்டில் காரவேலன் கி. மு. 200-150 காலப் பகுதியில் அரசாண்டான்.[69] (கி. மு. முதல் நூற்றாண்டின் இறுதியில் அவன் அரசாண்டதாகக் கூறுவாரும் உண்டு.) இவனது ஹதிகும்பா கல்வெட்டில் 113 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி நிலைபெற்றிருந்த தமிழ்நாட்டுக் கூட்டணிபற்றி அவன் குறிப்பிட்டுள்ளான்.[70] இவனது ஆட்சிக் காலத்தின் மையப் பகுதி கி. மு. 175 முதல் என்று நாம் கொண்டால் அன்றைக்கு 113 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆண்டு

---

69 Majumdar, R. C., (Ed.), Op. cit.,, Vol. III, p. 211-216

70 Nilakanta Sastri, K. A., Op. cit., p. 88

கி. மு. 288 என்று முடியும். இந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் தோன்றியிருந்த கூட்டணியை இவன் தன்னுடைய கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளான் என்றால், தமிழ் இலக்கியங்களில் மோரியரை முறியடித்த அந்தக் கூட்டணி என்று குறிக்கப்பட்டுள்ள கூட்டணியாய் அமைவதை நாம் உணர முடியும். மோரிய அரசன் பிந்துசாரன், தென்னாட்டைத் தாக்கிய நிகழ்ச்சியே சங்க இலக்கியங்களில் கூறப்படுகிறது என்று வரலாற்று அறிஞர்களும் கருதுகின்றனர்.[71] இந்த வகையில் காரவேலன் தன்னுடைய கல்வெட்டில் குறிப்பிடும் கூட்டணியின் காலமும், பிந்துசாரன் படையெடுப்பின் காலமும், சங்க இலக்கியங்களில் மோரியர் படையெடுப்பு பற்றிக் காணப்படும் குறிப்புகளின் காலமும் ஒன்றாக அதாவது, கி. மு. 3ஆம் நூற்றாண்டாக அமைவதைக் காணமுடியும். எனவே, சங்க இலக்கியங்களின் காலப்பரப்பளவு கி. மு. 3ஆம் நூற்றாண்டையும் தன்னகத்தே கொண்டது என்பதைத் தெளிவாக உணர முடிகிறது.

தமிழ் இலக்கியங்களில் பிற நாட்டு வரலாற்றுக் குறிப்புகள்

இதுவரையில் கல்வெட்டுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலத்தின் எல்லையை ஒருவாறு கணித்தோம். இனிச் சங்க இலக்கியங்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகளோடு தொடர்புடைய வெளிநாட்டுக் குறிப்புகளை ஒப்பு நோக்கிச் சங்ககாலம் எது என்பதை அறியலாம்.

சங்க இலக்கியங்களில் மோரியர்கள் படையெடுப்பைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. கோசர்கள், மோகூரைத் தாக்கியபோது மோகூர் அரசன் பணியாமையால் அவனை வெல்லமுடியாமல் கோசர்கள் மோரியரின் துணையை நாடினர்.[72] மோரியர்கள் வம்ப வடுகர் துணையுடன் தமிழகத்தில் நுழைந்து தாக்கினர். இந்தச் செய்திகளைச் சங்க இலக்கியத்தின் பல்வேறு பாடல்கள் தெரிவிக்கின்றன. மோரியர் என்று சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுபவர் மௌரிய வமிசத்து அரசர்கள் என்பது வரலாற்று ஆசிரியர்கள் கருத்து. மௌரிய அரசர்களுள் கி. மு. 324-300 ஆண்டுகளில் அரசாண்ட சந்திரகுப்தன் என்பவன் ஆட்சி, தெற்கே மைசூர்வரை பரவியிருந்தது. இதனால் இவனே தமிழ் நாட்டில் ஊடுருவி இருக்கமுடியுமென்று கருதுகின்றனர்.[73]

---

71 Mookerji, R. K., *Chandra Gupta and the Mauryan Empire*, Majumdar, R. C., (Ed.) Op. cit., Vol. II, p. 69

72 அகம். 251 : 7-11

73 Mookerji, R. K., Op. cit., Vol. II, p. 61

இவனது மகன் பிந்துசாரன் கி. மு. 300-273 ஆண்டுகளில் அரசாண்டான். இவன் 16 குறுநிலத் தலைவர்களை அழித்து மன்னர் மன்னனாக விளங்கச் சாணக்கியன் என்னும் இவனது அமைச்சன் உதவினான் என்று தாரநாதன் என்னும் திபெத்திய எழுத்தாளன் குறிப்பிடுகிறான். இந்த வெற்றியை எண்ணி, தமிழகத்தின்மீது படையெடுத்த மௌரிய அரசன், இந்தப் பிந்து சாரனாக இருக்கவேண்டுமென்று சிலர் கருதுகின்றனர்.[74] பதினாறு அரசர்களை வென்ற இவனைக் கோசர்கள் துணைக்கு வரும்படி அழைத்திருக்கலாம் என்னும் உய்த்துணர்வு முறை யானதே. எப்படியாயினும் இந்த மௌரியர் காலத்திலேயே தமிழ்நாட்டில் சங்க இலக்கியங்களில் கூறப்படும் ஊடுருவல்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். இந்தப் படையெடுப்பு, குப்தப் பேரரசனான சமுத்திரகுப்தன் காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறுவாரு முண்டு. இவனது கல்வெட்டொன்று, இவன் கேரளப் பகுதியை வென்றதுபற்றிக் குறிப்பிடுகிறது. அதில் மந்தராஜா என்னும் அரசனின் பெயரும் குறிப்பிடப்படுகிறது. சங்க இலக்கியங்களில் மாந்தரஞ்சேரல் என்று கூறப்படுபவனே மந்தராஜா என்று சமுத்திரகுப்தன் கல்வெட்டில் கூறப்பட்டிருப்பதாக எடுத்துக் கொண்டு, சங்க இலக்கியத்தின் காலம் சமுத்திரகுப்தனின் கால மாகும் என்று கூறப்படுகிறது. சங்க இலக்கியங்களில் குப்தர் என்னும் சொல் யாண்டுமில்லை; மோரியர் என்னும் சொல்லே உள்ளது. குப்த அரசர்கள் மோரிய அரசர்கள் அல்லர். எனவே, சங்க இலக்கியத்தில் கூறப்படும் மோரியர் சமுத்திரகுப்தன் அல்லன் என்பது தெளிவு. இந்த வகையில் சங்ககாலம் மௌரி யரின் ஆட்சிக் காலமாகிய கி.மு. 3, 4ஆம் நூற்றாண்டுகளைத் தன்னகத்தே கொண்டது எனலாம்.

சங்க இலக்கியங்களில் நந்தரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன என்பதைக் கண்டோம். நந்தர்களைப்பற்றிப் புத்தர் பாடலும், யுவான் சுவாங் குறிப்பும் தரும் செய்திகளோடு சங்க இலக்கியங் களில் கூறப்படும் செய்திகள் ஒன்றாய் அமைவதைக்கொண்டு அந்த நந்தர்களின் காலப்பகுதி, சங்ககால எல்லைப் பகுதியில் அடங்கும் என்று நாம் குறிப்பிட்டதை ஈண்டு நினைவுகூரலாம். நந்தர்கள், அலெக்சாந்தர் படையெடுப்பின்போது (கி. மு. 327-325) வலிமையுடன் செல்வாக்குப் பெற்றிருந்ததைக் கிரேக்க எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[75]

---

74 Ibid, p. 69

75 Ibid, p. 33

பிற நாட்டார் குறிப்புகள்

பிற்காலத்தில் வெளிநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த யாவரும் 'யவனர்' என்றே அழைக்கப்பட்டனர். இந்த வகையில் தான் இந்தியாவுக்கு வந்த அயோனியர், யவனர் என்று கூறப் பட்டனர். இவர்கள் பெரிய பெரிய வாணிகக் கப்பல்களுடன் தமிழகத்திற்கு வந்து வாணிகம் செய்ததுபற்றியும், சிலர் தமிழகத் திலேயே தங்கிவிட்டதுபற்றியும் சங்க இலக்கியங்களில் பல குறிப்புகள் கிடைக்கின்றன. இந்தக் குறிப்புகளைக்கொண்டு யவனர்கள் தமிழ்நாட்டோடு தொடர்புகொண்டிருந்த காலமாகிய கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகள், தமிழகத்தின் சங்ககாலப் பரப்பளவில் அடங்குவதைக் காணலாம். தமிழ்நாட்டோடு யவனர்களின் தொடர்பைக் கி. பி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரும் கொண்டுசெல்ல இயலும் என்று கூறப்படும் கருத்துப் பொருந்தாது என்பதை முன்பே சுட்டியுள்ளோம்.

இந்தியாவில் வீசும் பருவக்காற்றுகளை 'ஹிப்பாளஸ்'[76] என்று அக்கால மேலைநாட்டார் வழங்கினர். இப் பருவக்காற்றின் உதவியால் கப்பலைச் செலுத்தலாம் எனக் கண்டுபிடித்த முதல் மேலைநாட்டான் 'ஹிப்பாளஸ்'. இவன் பெயரால் அக் காற்று வழங்கப்பட்டது. (இவனுக்கு முன்பே கரிகாலனின் முன்னோன் ஒருவன் பருவக்காற்றின் உதவியால் கடலில் கப்பலைச் செலுத்தும் முறையை அறிந்து கலம் செலுத்தி வந்தான்.)[77] பிளினி (கி.பி.75) தமிழ்நாட்டைப்பற்றிய பல செய்திகளைத் தருகிறார். ஹிப்பாளஸ் காற்றின் உதவியால் இந்தியாவிலுள்ள முசிறியை 40 நாளில் அடையலாம். முசிறிப் பகுதியில் கடற்கொள்ளைக்காரர்கள் வாழ்ந்தனர். அவர்கள் 'நிற்றியாஸ்'[78] என்னும் பகுதியில் செல் வாக்குப் பெற்றிருந்தனர். அப்போது இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியைச் சுலோபோத்ராஸ்[79] என்போர் ஆண்டு வந்தனர். மேற்குக் கடற்கரையில் அப்போது விளங்கிய வசதி யான துறைமுகம் 'நியாசிண்டன்'. இதனைப் 'பிகாரே' என்றும் வழங்கினர். இந்தப் பிகாரே பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருந் தது. இந்தப் பாண்டியர் நியாசிண்டன் நகரிலிருந்து வெகு தொலைவில் உள்நாட்டில் விளங்கிய மதுரையைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். பிகாரே நகரிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகு, கொட்டனாரா என்னும் மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்டது.

---

76 Hippalus
77 புறம். 66 : 1 – 2
78 Nitries
79 Calobothras

பிளினி, முசிறித் துறைமுகத்தில் கொள்ளைக்காரர் இருந்தனர் என்று குறிப்பிடுகிறார். சேர அரசனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனால் அடக்கி ஒடுக்கப்பட்ட கடல் தீவு மக்களே (கடப்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டு ஆண்ட அரசனின் குடிமக்கள்) இக் கொள்ளைக்காரர்கள் என்று கருதலாம். பிகாரே என்று பிளினி குறிப்பிடும் நகரைச் சங்க இலக்கியங்களில் 'பந்தர்'[80] என்று குறிப்பிடப்படும் துறைமுகம் எனலாம். முசிறிப் பகுதியைக் 'கலோ போத்ராஸ்' என்பவர் ஆண்டுவந்ததாகப் பிளினி குறிப்பிடுகிறார். சங்ககாலக் கல்வெட்டு ஒன்று சேர அரசன் ஒருவனைச் 'சேலலிரும்பொறை' (செல்வக்கடுங்கோ வாழியாதன்) என்று குறிப்பிடுகிறது. இக் குறிப்பு சேரர்கள் 'சேலர்' என்றும் வழங்கப்பட்டதைத் தெரிவிப்பதாகலாம். எனவே, பிளினியின் வழக்கு, சங்ககாலக் கல்வெட்டு வழக்கோடு தொடர்புடையதாக உள்ளது. அன்றியும் அசோகன் தன் கல்வெட்டில் 'கேரளபுத்திர' என்று குறிப்பிடும் வழக்கோடு தொடர்புடையதாகவும் கொள்ளலாம். பாண்டிய அரசன் நியாசிண்டன் துறைமுகத்தை ஆண்டதாகப் பிளினி கூறுகிறார். பெரிய கப்பல்கள் வந்துபோன கடலை அடுத்திருந்த நெல்லின் ஊர் (நெல்சிந்தூர்-நேசிந்தை ?) ஒன்றைப் பாண்டிய அரசன் கைப்பற்றி ஆண்டதாகச் சங்கநூல் குறிப்பிடுகின்றது. மிளகு விளைந்த 'கொட்டனாரா' பற்றிப் பிளினி குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்கள் கூறும் குட்டுவரின் நாடாகிய குட்ட நாடு இந்த நாடு எனலாம். பாண்டிய அரசன் ஒருவன் தன் தலைநகரை மாற்றிக் கொண்டதாகப் பிளினி குறிப்பிடுகிறார். கொற்கையிலிருந்து வெற்றிவேற் செழியன் மதுரைக்குத் தலைநகரை மாற்றிக் கொண்டதாகச் சிலப்பதிகாரம் கூறுவது, இதனோடு தொடர்புடையது. இந்த வகையில் பார்க்கும்போது பிளினி கூறும் செய்திகள், சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகளோடும், சங்ககாலக் கல்வெட்டுச் செய்திகளோடும் தொடர்புற்று விளங்குவதைக் காணலாம். எனவே, பிளினி இந்தியாவுக்கு வந்த கி.பி. முதல் நூற்றாண்டு, சங்ககாலத்தின் ஒரு பகுதி என்பது தெளிவாகிறது.

'எரித்திரையக் கடற்செலவு'[81] என்னும் குறிப்பு நூலானது. கி.பி. 75-ல் 'இயற்கை வரலாறு'[82] என்னும் நூல் எழுதிய காலத்திற்குச் சற்று முன்போ, பின்போ எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். 'இயற்கை வரலாறு' நூலில் கூறப்படுபவை பிளினி தமக்கு முன்பிருந்த எழுத்தாளர்களின்

80 பதிற். 67 : 2
81 செங்கடற்செலவு (The Periplus of Erythraean Sea)
82 Natural History

குறிப்பிலிருந்து அறிந்து எழுதியவை என்றும், 'எரித்திரையக் கடற்செலவு' என்னும் நூலிலுள்ள செய்திகள், அதன் ஆசிரியர் தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களை நேரில் கண்டறிந்து எழுதியவை என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பிளினியின் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் கூறப்படும் செய்திகளோடு தொடர்புடையனவாய் அமைந்து விளங்குவதை முன்பு கண்டோம். அதுபோலவே 'பெரிபுளூஸ் எரித்திரையக் கடற் செலவு' (கி.பி. 70-80) நூலில் குறிப்பிடப்படும் செய்திகளும் சங்க நூலில் கூறப்பட்டுள்ள செய்திகளோடு தொடர்புடையனவாய் விளங்குவதைக் காணலாம்.

'எரித்திரையக் கடற்செலவு' என்னும் நூலில் தமிழ்நாட்டின் மேற்குக் கடற்கரையிலும், கிழக்குக் கடற்கரையிலும் அக்காலத் தில் சிறப்புற்று விளங்கிய பல துறைமுகங்கள் குறிப்பிடப் படுகின்றன.

பெரிபுளூஸ், நவ்றா[83] என்னும் துறைமுகத்தைக் குறிப்பிடு கிறது. சங்க இலக்கியங்களில் 'துவ்வா நறவு' என்று குறிப்பிடப் படும் நகரம் இந்த ஊராகும். இக்காலத்திய கண்ணனூரை இந்த நகரமாகக் கருதுகின்றனர். 'திண்டிஸ்' என்று பெரிபுளூஸ் நூலில் கூறப்படும் துறைமுகம் சங்க இலக்கியத்தில் 'தொண்டி' என்னும் பெயருடன் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலப் 'பொன்னானி' அந்தத் துறைமுகமாகும். சங்க இலக்கியங்களில் முசிறி என்று கூறப்படும் துறைமுகம் 'மூசிறிஸ்'[84] என்று பெரிபுளூஸில் குறிப் பிடப்பட்டுள்ளது. இக்காலக் கிராங்கனூர் அந்தத் துறைமுக மாகும்.

கோட்டயத்திற்கு மிக அண்மையிலுள்ள பொறைக்காடு என்னும் பகுதியில் பெரிபுளூஸால் குறிப்பிடப்பட்ட நெல்சிண்டா என்னும் நகரம் இருப்பதாகவும் சங்க இலக்கியத்தில் நெல்வினூர் என்று குறிப்பிடப்படும் நகரம் இதுவே என்றும் அறிஞர்கள் கருது கின்றனர்.

பந்தர்த் துறைமுகத்திலுள்ள முத்துகளின் சிறப்புப்பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிக்கின்றனர். பெரிபுளூஸில் கூறப்படும் பிகாரே என்னும் துறைமுகம் இதுவாகலாம். பராலியா என்னும் ஒரு துறைமுகத்தைப் பெரிபுளூஸ் குறிப்பிடுகிறது. இது பாலி

---

83 Naura
84 Muziris

நாட்டிலிருந்த ஓர் ஊர். இது 'வக்கலை' என்று இக்காலத்தில் வழங்கப்படுகிறது. 'கொமரி'[85] என்று இக்காலக் குமரிமுனையைப் பெரிபுளூஸ் குறிப்பிடுகிறது. இதுவரை தமிழகத்தில் மேற்குக் கடற்கரையிலிருந்த துறைமுகங்களை வடக்கிலிருந்து தெற்காகப் பெரிபுளூஸில் குறிப்பிட்டுள்ள வரிசைப்படி நோக்கினோம். இனிப் பெரிபுளூஸில் குறிப்பிட்டுள்ளபடி தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையில் உள்ள துறைமுகங்களைத் தெற்கிலிருந்து வடக்காக வரிசைப்படுத்தி நோக்கலாம்.

சங்க இலக்கியங்களில் கொற்கை என்னும் துறைமுகம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. பெரிபுளூஸில் கோல்சி என்று கூறப்படும் துறைமுகம் இஃது எனலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தைப் பெரிபுளூஸ் 'கமரா' என்று குறிப்பிடுகிறது. புன்னையங்கானல் என்று சங்க இலக்கியங்களில் கூறப்படும் துறைமுகப் பகுதி, பொதுக்கா என்று பெரிபுளூஸில் கூறப்படும் துறைமுகம் எனலாம். இக்காலத்திலுள்ள புதுச்சேரி இப் பொதுக்காவாக இருக்கலாமென்று சொல் ஒப்புமைநோக்கில் கருதலாம்.

'மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை' என்று தேவாரத்தில் கூறப்படும் குறிப்பை நோக்கிப் புன்னையங்கானல் என்பது சென்னையிலுள்ள மயிலாப்பூரோ என்று எண்ணவேண்டியுள்ளது. சங்க இலக்கியங்களில் எயிற்பட்டினம் என்று குறிப்பிடப்படும் துறைமுகம் இக்காலத்து மரக்காணம் என்னும் ஊராகும். 'எயில்' என்னும் தமிழ்ச் சொல்லைச் 'சோ' என்னும் வடமொழிச் சொல்லால் வழங்குதலுண்டு. இந்த வகையில் எயிற்பட்டினத்தைச் சோப்பட்டினம் என்றும் வழங்கியிருக்கலாம். இந்த வழக்கு, பெரிபுளூஸ், 'சோபாட்மா' என்று குறிப்பிடும் நிலைக்குக் காரணமாயிருக்கலாம். இவ்வாறு பெரிபுளூஸ் கூறும் நகரங்கள் சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கி, அக்கால இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதை எண்ணி, இரண்டும் ஒரே காலத்தைச் சேர்ந்தவை என்று அறியலாம்.

மற்றும், பிளினி குறிப்பிட்டதுபோலவே இந் நூலாசிரியரும் முசிறித் துறைமுகப் பகுதி சேரபுத்திர[86] நாட்டைச் சேர்ந்தது என்றும், நெல்சிந்தையும் பிகாரேயும் பாண்டியர் ஆட்சிக்குட்

---

85 Comari
86 Cerobothra

பட்டன என்றும், ஆற்கரு என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு கடற்கரை சேர்ந்த நாடு[87] விளங்கியது என்றும் குறிப்பிடுவது சங்க நூல் செய்திகளோடு மிகவும் தொடர்புடையவை.

ஆற்கரு (உறையூர்) நகரில் நெய்யப்பட்ட (ஆர்காரிடிக்)[88] என்னும் மெல்லிய ஆடைபற்றி இந்நூல் பெருமையாகப் பேசுவது, உறையூர் அகழ்வாய்வில் கிடைத்த சாயத்தொட்டியோடு மிகவும் தொடர்புடைய செய்தியாகும். இப்போது உறையூர் கைத்தறி ஆடை நெய்வதில் சிறப்புற்று விளங்குகிறது. கோல்சி (கொற்கை) துறைமுகத்தில் முத்துக்குளிக்கும் தொழில் நடைபெற்றது பற்றியும், முசிறியில் கப்பல்கள் பொன்னுடன் வந்து கறி (மிளகு) மூட்டைகளுடன் மீள்வது பற்றியும் இந்நூல் விளக்கிக் கூறும் செய்திகள் அப்படியே சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றால் 'பெரிபுளூஸ்' நூல் தோன்றிய கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும் சங்ககாலத்தின் ஒரு பகுதி எனலாம்.

தாலமி[89] (கி. பி. 140) என்பவரின் 'நிலவியல் கையேடு'[90] என்னும் நூல், ஸ்ட்ராபோ[91] குறிப்புகளின் எலும்புத் தொகுதி போன்ற நூல் என்று குறிப்பிடப்படுகிறது. அதில் தாலமி 'ஆயோய்'[92] என்று குறிப்பிடுவது சங்க நூல்களில் கூறப்படும் அரசனோடு தொடர்புடையதாய் விளங்குகிறது. மற்றும், பட்டினப் பாலையில் குறிப்பிடப்படும் செய்திகளோடு அவரது வருணனைகள் மிகவும் ஒன்றிவருகின்றன. எனவே, தாலமியின் காலமும் சங்ககாலத்தின் ஒரு பகுதி என்பது தெளிவாகிறது.[93]

ஏறத்தாழக் கி.மு. 302-ல் சந்திரகுப்தன் அரசவைக்கு வந்த மெகஸ்தனீஸ் என்னும் கிரேக்கத் தூதன் இண்டிகாவில்'பண்டேயா' என்னும் அரசி தமிழ்நாட்டில் அரசாண்டதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டில் பெண் அரசி யாரும் அரசாண்டதாக இலக்கியங்களில் சான்று இல்லை. பிற்காலத் திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களில் மீனாட்சி என்னும் பெண்ணரசி மதுரையில் அரசாட்சி புரிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்தப்

---

87 Coast Country
88 Argaritic
89 Ptolemy
90 A Guide to Geography
91 Strabo
92 Aoi
93 Subramanian, N., *A History of Tamilnadu* p. 42

புராணக் கதைக்கும் மெகஸ்தனீஸ் குறிப்பிற்கும் தொடர்பு இருக்கக்கூடும். அன்றியும் பாண்டிய நாட்டில் நாள்முறை வைத்துக்கொண்டு அரண்மனைக்கு வேண்டிய பொருள்களை மக்கள் வழங்கி வந்ததாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. பண்டேயா என்னும் அரசிக்கு நாள்முறை வைத்துக்கொண்டு மக்கள் பொருள்கள் வழங்கிவந்ததை மெகஸ்தனீஸ் குறிப்பிட்டுள்ளார். இவற்றிற்கிடையே ஓரளவு ஒப்புமை இருப்பதை நாம் காணமுடிகிறது. அர்த்தசாஸ்திரம் என்னும் நூல் மௌரியர் காலத்துச் சாணக்கியர் (கி.மு. 350-200) என்பவரால் எழுதப்பட்டது. ஏறக்குறைய இந்தியா முழுவதையும் அறிந்திருந்த சாணக்கியர் காஞ்சி மாநகரத்தைப் பற்றிச் சில குறிப்புகளைத் தந்துள்ளார். சங்க இலக்கியங்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப் படையில் காஞ்சி மாநகரத்தைப்பற்றிக் கூறப்படும் குறிப்பு இதனோடு தொடர்புடையதாக உள்ளது.

விசயன் என்னும் இலங்கை அரசன் (கி.மு. 483-345) தமிழ் நாட்டில் அரசாண்டு கொண்டிருந்த பாண்டிய அரசனுடைய மகளைத் திருமணம் செய்து கொண்டது பற்றிப் பாலி மொழியில் எழுதப்பட்டுள்ள இலங்கை வரலாற்று நூலான மகாவம்சம் கூறுவதும், முட்டசிவன் என்னும் இலங்கை அரசன் (கி.மு. 307-247) இலங்கையிலுள்ள அனுராதபுரத்தில் அரியணை ஏறி அரசாண்டு கொண்டிருந்தபோது இலங்கையின் மற்றொரு பகுதியான உரோகண நாட்டில் மாகாமம் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய அரசர்கள் ஆண்டுவந்ததை அந் நாட்டுப் பிராமிக் கல்வெட்டுகள் கூறுவதும் கி. மு. 5ஆம் நூற்றாண்டு முதலே பாண்டியர்கள் செல்வாக்குப் பெற்றிருந்ததை உணர்த்துகின்றன.

கி.பி. முதல் நூற்றாண்டுக்கு முன் தமிழகம் வந்து மீண்ட 'பான் கௌ' என்னும் சீனத் தூதர் தம் 'சியன் ஹான் கௌ' என்னும் நூலில் காஞ்சி மாநகரத்து அரசன், தம் அரசனுக்குப்பரிசளித்துச் சிறப்பித்ததைக் குறிப்பிட்டுள்ளார். கிறித்துவிற்கு முற்பட்ட காலத்துப் புத்தத் துமுளி ஒன்று காஞ்சியில் இருப்பதை அண்மையில் அகழ்வாய்வு செய்து கண்டுபிடித்துள்ளனர். இந்த அகழ்வாய்வு உண்மையும், மணிமேகலையில் காஞ்சிபுரத்திலிருந்த புத்த மதச் செல்வாக்குப்பற்றிச் சொல்லப்படும் செய்தியும், சீனப் பயணியின் புத்த மதத் தொடர்புச் செய்தியும் கால ஒருமைப்பாட்டைக் காட்டுகின்றன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹதிகும்பா கல்வெட்டு சேர, சோழ. பாண்டியர் சற்றேறக்குறைய 113 ஆண்டுகள் தனக்கு முன்பிருந்தனர் எனக் குறிப்பிடுகிறது. இவ்வாறு மெகஸ்தனீஸ் குறிப்பு, அர்த்தசாஸ்திரக் குறிப்பு,

இலங்கை வரலாற்றுக் குறிப்பு, சீனப் பயணிக் குறிப்பு, காஞ்சி அகழ்வாய்வுச் செய்தி ஆகியவற்றை எண்ணிப்பார்த்துச் சங்க காலம் கி.பி. முதல் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பதைக் காண முடிகிறது.

கயவாகு, கரிகாலன், செங்குட்டுவன், நூற்றுவர் கன்னர்

இலங்கையை அரசாண்ட கயவாகு என்னும் அரசன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை நிறுவி வழிபாடு செய்த போது வந்திருந்து வரம்பெற்றான் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.[94] கயவாகு என்னும் பெயருடைய அரசன் கி. பி. 174-196 ஆண்டுகளில் இலங்கையை ஆண்டுவந்தான் என்று இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவனது பாட்டன் விசயன் என்பவன் 44 ஆண்டுகள் (கி. பி. 127-171) இலங்கையைச் சிறப்பாக ஆண்டான் என்றும் இவன் காலத்திற்கும் இவன் பாட்டன் காலத்திற்கும் இடைப்பட்ட மூன்றாண்டுக் காலப் பகுதியில் இக் கயவாகுவின் தந்தை வங்க நாளிக திஸ்ஸன் அநுராதபுரத்திலிருந்து அரசாள் கையில் இந்தத் திஸ்ஸன் தம்பியர் இருவர் அண்ணனோடு முரணி இலங்கையின் தென்பகுதியில் அரசாண்டனர் என்றும், இக் குழப்பமான காலத்தில்தான் கரிகாலன் இலங்கையை வென்றமை நிகழ்ந்திருக்கலாம் என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.[95] கயவாகு தெய்வச் சிலையாகிய கண்ணகியிடம் வரம் பெற்றான். அவனது தந்தை காலத்தில் கண்ணகியின் கணவனான கோவலன், கரிகாலன் அவையில் மாதவி அரங்கேறிய நாட்டியத்தைக் கண்டான். இந்தக் கரிகாலன் இலங்கையைப் படையெடுத்துத் தாக்கினான் என்பவை மிகப் பொருத்தமாய் அமையும் நிகழ்ச்சிகளாய் உள்ளன. தந்தை, மகன் ஆகிய இருவர் ஆட்சிக் காலத்தில் அதாவது, கி. பி. 172-196-க்கு இடைப்பட்ட 25 ஆண்டுக் கால இடைவெளிக்குள் அவை இரண்டும் நடைபெறக் கூடியனவே.

மாதவியின் நடன அரங்கேற்றத்திற்கும் கண்ணகி தெய்வச் சிலையாய் நின்றதற்கும் இடைப்பட்ட காலம் சுமார் 20 ஆண்டுகள் என்று நாம் கொள்வோமானால் கரிகாலன் இலங்கையை வென்றது கி.பி. 173 என்றும், கயவாகு சேர நாட்டுக் கண்ணகி விழாவில் கலந்துகொண்டது கி. பி. 193 என்றும் அமையும். இந்தக் காலக் குறியீடு பிற ஒப்புநோக்குகளாலும் உறுதிப்படுகின்றது.

---

94 சிலப். 30 : 160

95 Majumdar, R., C. (Ed.) Op. cit. Vol. II. p. 239

நூற்றுவர்கன்னர் என்னும் அரசர் சஞ்சயன் என்னும் தூதுவனைச் செங்குட்டுவனிடம் அனுப்பியதையும்,[96] செங்குட்டுவன் கங்கையாற்றைக் கடக்கப் படகு வசதி செய்துகொடுத்து[97] உதவி புரிந்ததையும், செங்குட்டுவன் இமயமலையிலிருந்து கண்ணகிச் சிலைக்குக் கல்லெடுத்துக் கொண்டுவந்து கங்கையாற்றின் தென்கரையை அடைந்தபின் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு தன் நாட்டுக்குச் சென்றதையும்[98] சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது.

சாதவாகன அரசர்கள் மௌரிய அரசு வீழ்ச்சிக்குப்பின் தென்னகத்தில் தலையெடுத்தனர். கி.மு. 230-ல் தொடங்கிய இவர்களின் ஆட்சி கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் குசராத்திலிருந்த சாகர்களால் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படும்வரை அவர்கள் தெக்கணப் பகுதியில் அரசாண்டனர். மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில்தான் இந்த அரசு முற்றிலுமாக அழிந்தது.[99]

இவர்களில் சிறப்பாக அறியப்படும் அரசன் 'ஸ்ரீயக்ஞ ஸ்ரீசதகர்ணி' (சுமார் கி.பி. 170-199) ஆவான். இவனது நாணயங்களில் கப்பல் உருவம் காணப்படுகிறது. இது இவனது கடற்படை வலிமையைக் குறிப்பதாகலாம்.[100] 'நூற்றுவர்கன்னர்' என்று குறிப்பிடுவது 'சதகர்ணி' என்னும் பெயரின் மொழி பெயர்ப்புத் தொடராகும். சிலப்பதிகாரம் 'நூற்றுவர்கன்னன்' என்று ஒருமையால் குறிப்பிடாது பன்மையால் 'நூற்றுவர்கன்னர்' என்று குறிப்பிடுவது ஸ்ரீயக்ஞ ஸ்ரீசதகர்ணியின் குடியைச் சேர்ந்த அரசர்களையும் குறிப்பதாகும். இவர்கள் காசுகளில் கப்பல் சின்னம் காணப்படுவதும், சிலப்பதிகாரத்தில் கங்கையாற்றைக் கடக்க இவர்கள் உதவிய நிகழ்ச்சியும் தொடர்புடையன. மற்றும் இவன் காலமும் இலங்கை அரசன் கயவாகுவின் காலமும் ஒன்றாய் அமைவது சிலப்பதிகாரக் கூற்றை மேலும் உறுதி செய்கின்றது.

அகழ்வாய்வு

அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ள செய்திகள் சங்ககாலத்தை வரையறுக்க மேலும் உதவி செய்கின்றன. பெரிபுளூஸ் நூலாசிரியரான கிரேக்கக் கடற்பயணி கி.பி. 75-ல் இந்தியாவுக்கு வந்து

96 சிலப். 26 : 129-155
97 ஷ. 26 : 176
98 ஷ. 27 : 177-178
99 Nilakanta Sastri, K. A., Op. cit., p. 92
100 Ibid, 95-96

இந்தியாவின் மேற்குக் கரையிலும் கிழக்குக் கரையிலும் உள்ள பல்வேறு துறைமுகங்களைக் குறிப்பிட்டுள்ளதை மேலே கண்டோம். இவற்றுள் ஒன்று 'பொதுக்கா' என்னும் துறைமுகம். இதனைப் புதுச்சேரிக்கு அண்மையிலுள்ள அரிக்கமேடு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.[101] வாணிகத் தொடர்புபற்றிப் பெரிபுளூஸ் கூறுவனவும், அரிக்கமேட்டு அகழ்வாய்வுப் பொருள்களும் ஒரே செய்தியையே தருகின்றன. மேலும், அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ள உரோமப் பேரரசின் தங்க வெள்ளி நாணயங்கள் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாக இருப்பதும், உரோம நாணயச் சாலை ஒன்று அங்குக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் காலத்தை வரையறுக்க உதவி செய்கின்றன.

இந்த நாணயச்சாலை கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கருதப்படுகிறது.[102] அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ள பானை ஓடுகளில் காணப்படும் தமிழ் (பிராமி) எழுத்துகள் கி.பி. 50ஐச் சார்ந்தவை என்று உறுதியாக வரையறுக்கலாம் என்பது வரலாற்று ஆசிரியர் கருத்து.[103] இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது சங்ககாலம் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைத் தன்னகத்தே கொண்டது என்பதை அரிக்கமேட்டு அகழ்வாய்வின்வழி நாம் அறியமுடிகிறது.

நாணயங்கள்

கி. மு. 44 முதல் கி.பி. 323 வரை உரோமாபுரியில் அரசாண்ட அகஸ்டஸ் பேரரசன் முதல் கான்ஸ்டன்டைன் அரசன் ஈறாகவுள்ள பல்வேறு அரசர்களின் காலத்திய உரோம நாணயங்கள் கொங்குநாட்டிலுள்ள பொள்ளாச்சி, வெள்ளனூர், கரூர், கலயமுத்தூர் முதலான இடங்களிலும் மதுரை முதலான பிற இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டு அகழ்வாய்வுத் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த நாணயங்கள் செம்பொன்னாலும் சொக்க வெள்ளியினாலும் செய்யப்பட்டவை. உரோமநாட்டு டினார், டிராட்சம் என்னும் மதிப்புள்ள நாணயங்களாக இவற்றைக் கருதுகின்றனர். இந்த நாணயங்களில் அகஸ்டஸ் சீஸர், அந்தோணியார் அக்ரிபினா முதலான அரசர்களின் உருவங்கள் தெளிவாக உள்ளன. இவற்றிலிருந்து உரோம நாட்டிற்கும் தமிழகத்திற்கும் அந்தக் கால இடைவெளியில் நடை

---

101 Nilakanta Sastri, K. A., Op. cit., p. 140
102 Ibid, p. 118
103 Ibid, p. 89

பெற்ற வாணிகத்தைப்பற்றி நாம் அறியமுடிகிறது.[104] கொங்கு நாட்டின் வடமேற்குப் பகுதியிலிருந்த, துளு நாட்டின் தலைநகர் பாழி. இந்தப் பாழி நகரில் மக்கள் செல்வத்தைப் பாதுகாத்து வைத்திருந்தது[105] பற்றிச் சங்கப் பாடல்களிலிருந்து அறிய முடிகிறது. கிடைத்துள்ள உரோம நாணயங்களுக்கும், சங்கப் பாடல் செய்திகளுக்கும் இடையே காணப்படும் ஒப்புமையை எண்ணும்போது சங்ககாலமானது நாம் முன்பு குறிப்பிட்ட கால எல்லைப் பகுதியைக் கொண்டது என்பதை அறியலாம். அரிக்க மேட்டு அகழ்வாய்வில் கிடைத்த நாணயச்சாலைபற்றிய செய்தி யையும் இதனோடு ஒப்புநோக்கிக் காலத்தை மேலும் நாம் உறுதிப் படுத்தலாம்.

சங்ககாலத்தின் தொடக்கம்

சங்ககாலத்தின் தொடக்கம்பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவிவருகின்றன என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம். மூன்று சங்கங்கள் இருந்தனவென்றும், அடிப்படையில் கி.மு. 9 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சங்கம் இருந்தது என்றும் கூறி வருகின்றனர். இந்தக் காலக் கணக்குக் குறியீடுகளில் கலைக்கண் நோக்கு இருப்பதை நாம் முன்பே சுட்டியுள்ளோம். தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் கி.மு. 5ஆம் நூற்றாண் டில் தோன்றியது என்று கூறிச் சங்ககாலத்தின் முன்எல்லை கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குவதாகக் காட்டுவர்.

தொல்காப்பியத்தின் காலத்தைக் கி.மு 3ஆம் நூற்றாண்டு என்று கூறுவாருமுண்டு. சங்க இலக்கியங்களில் கூறப்படும் மோரியர், நந்தர் முதலான குறிப்புகளைக் கொண்டு கி.மு. 4ஆம் நூற்றாண்டும் சங்ககாலத்தில் அடங்கும் என்று நாம் முன்பு குறிப் பிட்டுள்ளோம். இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நோக்கும் போது சங்ககாலம் கி.மு. 5, 4, 3 நூற்றாண்டுகளாகக் காட்டுவன வற்றின் இடைப்பகுதியான 4ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங் குவதாக நாம் பொதுவகையில் கருதலாம். சங்ககாலத்தின் முன்எல்லையை இவ்வாறு கி.மு. 4ஆம் நூற்றாண்டிலிருந்து நாம் கொண்டாலும் தொல்காப்பியம் இதரச் சங்க இலக்கியங்களில் காணப்படும் ஒருசில பாடல்கள் ஆகியவை நீங்கலாக, சங்கப் பாடல்களில் பெரும்பகுதி கி.மு. முதல் நூற்றாண்டின் மையப் பகுதியிலிருந்து கி.பி. 250 வரை தோன்றியவையாகும் என்று பொதுவாகக் கருதவேண்டிய நிலை உள்ளது.

---

104 இராமச்சந்திர செட்டியார், கோ. மா., 'கொங்கு நாட்டு வரலாறு', பக். 69
105 அகம். 258 : 1-3

முடிவுரை

இதுவரை சங்ககாலம் பல்லவர் காலத்திற்கு முந்தியது என்றும், கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தியது என்று காட்டப்படும் காரணங்கள் பொருந்தாவென்றும், ஹதிகும்பா போன்ற கல்வெட்டுச் சான்றுகளும் தமிழ் இலக்கியங்களிலுள்ள பிறநாட்டு வரலாற்றுக் குறிப்புகளும், பிற நாட்டார் குறிப்புகளும், கயவாகு, கரிகாலன், செங்குட்டுவன் முதலானோரின் தொடர்புகளும், அரிக்கமேட்டு அகழ்வாய்வுச் செய்திகளும், உரோமாபுரி நாணயங்களும், இவற்றிற்கிடையே காணப்படும் ஒப்புமைக் கூறுகளும் சங்ககாலம் கி.பி. 250-க்கு முந்தியது என்பதைக் காட்டுகின்றன என்றும், சங்ககாலத்தின் தொடக்க எல்லை கி.மு. நான்காம் நூற்றாண்டு என்றும், சங்க இலக்கியங்களில் பெரும்பாலானவற்றின் தொடக்க எல்லை கி.மு. முதல் நூற்றாண்டின் இடைப்பகுதி என்றும் ஆராய்ந்து கண்டறிந்தோம்.

இந்த வகையில் சங்ககாலம் கி.மு. 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையுள்ள சுமார் 600 ஆண்டுக்கு மேற்பட்ட கால இடைவெளியைக் கொண்டது என்பதை உணரலாம். எனினும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலுள்ள பெரும்பாலான பாடல்கள், கி.மு. முதல் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.பி. 3ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையுள்ள சுமார் 300 ஆண்டுக் காலத்தில் தோன்றியவை. தெளிவான சான்றுகள் கிடைக்கும்போது இந்தக் கால வரையறை மேலும் துல்லியமாக வரையறுக்கப்படலாம்.

இயல் 4

சேரர்

சேரர் வரலாறு

சங்ககால இலக்கியங்களின் வாயிலாக அக்கால மக்களின் அகவாழ்க்கையையும், புறவாழ்க்கையையும் ஒருவாறு அறிய முடிகின்றது. அரசர், அரசியர், புலவர்கள், மக்கள், அரசுமுறை, போர்முறை, கொடைத்தன்மை, பழக்கவழக்கங்கள், நாடு, எல்லைகள் ஆகியவற்றை உய்த்துணர முடிகின்றது.

சேரர்—சொல்லும் பொருளும்

இராமாயண காலத்தில் சீதையைத் தேடிச் சென்ற வானர வீரர்களுக்குச் சுக்கிரீவன் வழித்துறைகளை வகுத்துரைக்கும் போது சோழ, சேர, பாண்டிய நாடுகளைக் குறிப்பிடுகிறான். உதிட்டிரன் இராயசூய வேள்வி வேட்டபோது சோழ, சேர, பாண்டியர் மூவரும் வந்திருந்ததாக வியாசரும் கூறுகிறார்.

கிரேக்கத் தூதரான மெகஸ்தனீஸ் என்பார் தமது குறிப்பில் சேரர்களைச் சேரமான்கள் என்றே அழைக்கின்றார்.

திருஞானசம்பந்தரும் தமது பதிகங்களில் சேரர், சேரலர் என்னும் சொற்களைப் பயன்படுத்துகிறார். இவர் வாழ்ந்தது ஏழாம் நூற்றாண்டாகும். இதனை நோக்கும்போது சேரர், சேரலர் என்னும் சொற்களே வழக்கில் வந்தனவாகும்.

அசோகனது கல்வெட்டுகளை நாம் நோக்கும்போது சேரல புத்திரர் என்பதைக் கேரளபுத்திரர் என்றே வடமொழி அறிஞர்கள் படித்து வந்துள்ளனர். கல்வெட்டில் உள்ள பிராமிய எழுத்துகள் சேரலபுத்திரர் என்று படிக்கும் வண்ணமும் உள்ளது. அதைப் படித்த அறிஞர்கள் கேரளபுத்திரர் என்றே படித்து வந்ததனால், பிற்கால அறிஞர்களும் கேரளபுத்திரர் என்றே கூறிவந்தனர்.

இதனால் நாம் அறிவதாவது சேரலர் தம்மைக் கேரளரென வழங்கத் தலைப்பட்ட காலமானது, தமிழ்மொழியானது சிதைந்து மலையாளமாக மாறிய காலமாயிருக்கலாம். கேரளர் என்னும் சொல்லானது கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்தான் மாறிற்று என்று உரைக்கத்தக்க வகையில், கி. பி. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த பிற்காலச் சோழன் வீரராசேந்திரன் என்னும் அரசனின் கல்வெட்டுகளில் கேரளாந்தகன்[1] என்றே குறிப்பு உள்ளது. இன்றும் தென்னாட்டில் சிலர் தங்களது ஊர்களை வடவரிட்ட பெயராலேயே அழைத்து வருதல் காணலாம். இது வடமொழியின்மீது உள்ள பற்றினால் எழுந்ததே ஆகும். இந்த வகையில் கேரளம் எனும் சொல் வழக்கினையே பெரிதும் விரும்பி வழங்கி வந்தனர்.

நாடும் எல்லைகளும்

சேர மன்னர்களைக் கூறும் முக்கியச் சங்ககால நூல்களை நோக்குவோமானால் நாட்டினது பரப்பும் அதன் எல்லைகளும் குறிக்கப் பெறும். பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் பார்ப்போமாயின் சேர நாட்டில் அடங்கியுள்ள பகுதிகள் குட்டநாடு, குடநாடு, பூழிநாடு, குன்ற நாடு, மலைநாடு, கொங்குநாடு, பொறைநாடு முதலியன ஆகும். இதில் அயிரைமலை, நேரிமலை, செருப்புமலை, அகப்பாக் கோட்டை, உம்பற்காடு, நறவுத் துறைமுகம், முசிறித் துறைமுகம், தொண்டித் துறைமுகம் ஆகிய இடங்களும் அடங்கும். பல அரசர் கள் வஞ்சியையும், சிலர் மாந்தையையும் தலைமைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். சேர மன்னர்களின் இவ் வஞ்சி நகரைப்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுள்ளது. 'சேரன் வஞ்சி' எனும் சிறந்த நூலை எழுதிய சா. கிருட்டினசாமி என்பார் சேர நாட்டில் பெரியாறு என்னும் ஆற்றின் அருகில் உள்ள கரூர்ப்பட்டினமே சேரர்களது வஞ்சிமாநகர் என்று குறிப் பிட்டுள்ளார். இதையே திரு. கனகசபைப் பிள்ளையவர்களும், திரு. கே. ஜி. சேஷய்யரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். கொங்கு நாட்டில் உள்ள கரூர் ஆனிலை என்ற நகரத்தையும், அதைச் சுற்றியுள்ள இடத்தையும் பிற்காலச் சேரர்களே வென்று தங்கள் நாட்டுடன் சேர்த்துக்கொண்ட பிறகு அதற்குச் 'சேரர் கொங்கு' என்ற பெயரும் வழங்கினர். எனவே, சேர நாட்டில் உள்ள கரூர்ப்பட்டினமே சங்கநூல்களில் கூறப்பெறும் வஞ்சிமா நகரம்

---

[1] Inscriptions of Sri Vira Rajendra (Rajakesari Varman) S.I.I., Vol. III, No. 20

எனக் கொள்ளவேண்டும். இவர்களது நல்லாட்சியை ஓரளவு உறவுமுறையுடன் தெரிந்துகொள்ள மேற்கூறிய நூல்கள் துணை புரிகின்றன. அவற்றை ஒரு முறைப்படுத்தித் தெளிவான முறையில் நோக்கினால் அவர்களது வரலாற்றை அறியமுடியும்.

பதிற்றுப்பத்து என்னும் நூல் சேர அரசர்கள் பதின்மரும் அவர்களது உறவுமுறைகளும் தெரிந்துகொள்ள முழுதும் பயன் படுகிறது. இந்தப் பதின்மரின் வரலாற்றை முதலிலும் பின்னர் ஏனைய நூல்களில் காணப்படும் மற்றச் சேர அரசர்களையும், சேரமான் புலவர்களையும்பற்றித் தெரிந்துகொள்ளலாம். இதையே சேர அரசர்கள், பிற சேர அரசர்கள், அரசப் புலவர்கள் என்னும் தலைப்புகளின் கீழும் காணலாம்.

1. சேர அரசர்கள்

பதிற்றுப்பத்து என்பது சங்ககால நூல்களில் ஒன்று. இது ஒரு தொகுப்பு நூல். இதில் பத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் இடம்பெற்றிருந்தன என்பது பதிற்றுப்பத்து என்னும் நூலின் பெயரால் தெரியவருகிறது. ஒவ்வொரு புலவரும் ஒவ்வோர் அரசனைப் புகழ்ந்து பத்துப் பாடல்கள் பாடியுள்ளனர். அந்தப் பாடல்கள் முதற் பத்து, இரண்டாம் பத்து, மூன்றாம் பத்து என்னும் முறையில் எண் குறியீட்டுப் பெயரால் தொகுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் முதல் பத்தும் பத்தாம் பத்தும் இதுவரை கிடைக்கவில்லை. இடையிலுள்ள எட்டுப் பத்துகளே கிடைத்துள்ளன.

கிடைத்துள்ள இந்த எட்டுப் பத்துகளில் எட்டுப் புலவர்கள் எட்டுச் சேர அரசர்களைப் பாடியுள்ளனர்.

இந்த எட்டுப் பேர்களில் ஐந்துபேர் ஒரு கால்வழியினராகவும், எஞ்சிய மூன்றுபேர் மற்றொரு கால்வழியினராகவும் இருந்த வர்கள் என்னும் உண்மையைப் பதிற்றுப்பத்து நூலைத் தொகுத்த ஆசிரியரின் பதிகக் குறிப்பு வாயிலாக அறிகிறோம்.

பத்துப் புலவர்களின் பாடல்களை ஒன்றுதிரட்டிப் பதிற்றுப் பத்து என்னும் பெயருடன் நூலாக்கிய தொகுப்பாசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. எனினும், அந்தப் புலவரும் சங்க காலத்தவரே ஆவார். இந்தப் பதிற்றுப்பத்து நூலைச் சங்க நூல்களில் இறுதியாகத் தோன்றியவற்றுள் ஒன்று எனச் சிலர் கூறுகின்றனர். எனவே, பதிற்றுப்பத்துச் சேர அரசர்களைப் பற்றி இவர் தரும் பதிகச் செய்திகளை நாம் வரலாற்று உண்மை என்றே கொள்ளவேண்டும்.

பதிற்றுப்பத்து நூலைத் தொகுத்தவர் ஒவ்வொரு பத்துப் பாடல்களைப்பற்றியும் பதிகம் என்னும் பெயரில் சில தெளிவான உண்மைகளைத் தெரிவிக்கின்றார். இந்தத் தொகுப்பாசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு சிறப்புப் பெயர் இட்டுள்ளார்; இன்னின்ன சிறப்புப் பெயர் கொண்ட பாடல்கள் இன்னின்ன பத்தில் அடங்கியுள்ளன என்றும் கூறியுள்ளார். இந்தப் பத்துப் பாடல்களையும் பாடிய புலவர் இன்னார் என்பதும், அவரால் பாடப்பட்ட அந்தப் பத்து இன்ன சேர அரசனைச் சிறப்பித்துக் கூறுகிறது என்பதும், அந்தச் சேர அரசன் இன்னார்க்கு இன்ன உறவுமுறையினன் என்பதும் அவரது பதிகங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளன.

மற்றும் இந்தப் புலவர் அந்தச் சேர அரசனை இந்தப் பத்துப் பாடியதற்காக இன்ன பரிசுபெற்று இவ்வாறு சிறப்பிக்கப் பட்டார் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்த அரசன் இத்தனை ஆண்டுகள் அரசனாய் விளங்கினான் என்னும் செய்தியையும் குறிப்பிட்டுள்ளார். நாம் இந்தச் செய்திகளை யெல்லாம் வரலாற்று உண்மைகள் என்றே கொள்ளவேண்டும்.

உதியன் கால்வழி

பதிற்றுப்பத்தில் இரண்டு கால்வழியைச் சேர்ந்த அரசர்கள் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளனர் என்று கூறினோம். அவற்றுள் ஒன்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும், அவன் தம்பியையும், ஆண்மக்கள் மூவரையும் கொண்ட ஒரு கால்வழியாகும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தந்தை உதியஞ்சேரல் என்று கூறப்பட்டுள்ளான். இந்த உதியஞ்சேரலுக்கு முன்னோன் என்று சான்றுடன் இவனது கால்வழியில் கூறத்தக்கவர் யாரும் தெரிய வில்லை. ஆதலால், இந்தக் கால்வழியை நாம் உதியன் கால்வழி என்று குறிப்பிடலாம். இந்த வகையில் உதியன், உதியன் மகன் நெடுஞ்சேரலாதன், நெடுஞ்சேரலாதனின் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன், நெடுஞ்சேரலாதனின் மக்கள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங் குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற முறையில் ஆறு சேர அரசர்களை நாம் அறிய முடிகிறது.

அந்துவன் கால்வழி

மற்றொரு கால்வழி மூன்று அரசர்களைச் சிறப்பித்துப் பாடு கிறது என்று கூறினோம். இந்த மூவருள் முன்னவன் செல்வக் கடுங்கோ வாழியாதன் ஆவான். இவன் தந்தை அந்துவன் என்று கூறப்படுகிறான். எனவே, இவர்களது கால்வழியை

அந்துவன் கால்வழி என்று குறிப்பிடலாம். இந்த வகையில் அந்துவன் கால்வழி அரசர்கள் நான்குபேர் ஆவர். அந்துவன், அந்துவன் மகன் செல்வக்கடுங்கோ, செல்வக்கடுங்கோவின் மகன் பெருஞ்சேரல் இரும்பொறை, மற்றும் குட்டுவன் இரும்பொறை ஆகியோரே அந்த நால்வர். இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை குட்டுவன் இரும்பொறையையும் கணக்கில் சேர்த்துக் கொண்டால் இந்த மாந்தரஞ்சேரல் கால்வழி அரசர்கள் ஐவர் எனக் கொள்ளலாம்.

இந்த ஐந்து அரசர்கள் பெயரிலும் 'பொறை' என்னும் அடை மொழி உள்ளது. இதனால் இவர்களைப் 'பொறையர்குடி அரசர்கள்' என்று குறிப்பிடுதலும் உண்டு. பொறை அரசர்கள் என்று நோக்கும்போது, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, மாந்தரன் பொறையன் கடுங்கோ முதலான அரசர்களையும் ஒன்றுசேர்த்து எண்ணவேண்டும்.

இனி, நாம் மேலே கண்டவாறு உதியன் குடியைச் சேர்ந்த சேர அரசர்கள் ஆறு பேர், அந்துவன் குடியைச் சேர்ந்த சேர அரசர்கள் நான்கு பேர், ஆக மொத்தம் பத்துச் சேர அரசர்களைச் சேர அரசர்கள் என்னும் தலைப்பின்கீழ்க் காண்கிறோம்.

இந்தப் பத்துச் சேர அரசர்களின் வரலாற்றைப் பதிற்றுப் பத்து என்னும் நூலை அடிப்படைச் சான்றாகக்கொண்டு நாம் ஆராயும்போது, புறநானூறு, அகநானூறு முதலான பிற சங்கப் பாடல்களிலிருந்தும், சங்ககாலக் கல்வெட்டுகளிலிருந்தும் தெரிய வரும் செய்திகளையும் ஆங்காங்கே இணைத்துக் காண்கிறோம். பின்னர், முறையே பிற நூல்களில் காணும் சேர அரசர்களையும், சேரமான் புலவர்களையும் காண்போம்.

உதியஞ்சேரல்

உதியஞ்சேரல்[1] செங்குட்டுவனின் பாட்டன்.[2] வீரமும் கொடையும் இவனது வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றன.

போர்த்திறன்

'நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்'[3] என்று இவன் குறிப்பிடப் படுகின்றான். நாட்டின் பரப்பை விரிவாக்கினான் என்பதே

1 நற். 113 : 9 ; அகம். 65 : 5, 168 : 7, 233 : 8
2 பதிற். பதி. 2 : 3
3 அகம். 65 : 5

இதன் பொருளாகும். இதனால், இவன் தன் முன்னோரிடமிருந்து நாட்டுப் பகுதி ஒன்றைப் பெற்றிருந்தான் என்பது தெளிவாகிறது. இவன் முன்னோர் சேர அரசர்களாய் முடியாட்சி புரிந்து வந்தனர் என்பது விளங்குகிறது.

பேய்க்குப் பெருஞ்சோறு

உதியஞ்சேரல் நாட்டின் பரப்பை விரிவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான். இதனால், அவன் பகைவர்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டனர். 'முதியர்' என்னும் குடியினர் பாண்டியர்க்குப் பகைவர்; சேரருக்கு நண்பர்.[4] முதியர் குதிரைப் படையில் சிறந்து விளங்கினர். இந்தக் குடியினரைப் பகைவர்கள் தாக்கினார்கள். முதியர்களில் பலர் மாண்டனர். செய்தி அறிந்த உதியஞ்சேரல் முதியர்களுக்குத் துணை வந்தான். பகைவர்கள் பலர் மாண்டனர். அவர்களின் உடல் குறுகியதும், நெடியதுமாய் வீழ்ந்து பல பேய்கள் கூட்டத்திற்குப் பெருஞ்சோறாய்[5] அமைந்தன.

கொடை நலம்

இவனைப் பாடிக்கொண்டு புலவர்கள் பலர் சென்றனர். அவர்களெல்லாம் மனம் மகிழும்படி இவன் கொடை வழங்கினான். இவனை மாமூலனார் 'உதியஞ்சேரற் பாடிச் சென்ற பரிசிலர்'[6] எனவும் 'தொய்யா நல்லிசை முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்'[7] எனவும் அவன் கொடை வழங்கிய காட்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

குழுமூர்ச் சோற்றுமடம்

குழுமூர் என்பது ஓர் ஊர். அவ்வூரில் வாழ்ந்தவர்கள் ஆடு மாடு மேய்த்து வாழும் ஆயர்கள். இவ்வூரைச் சூழ்ந்த பகுதியில் ஆங்காங்கே குன்றுகளும் நிழல் தரும் மரங்களும் உண்டு. ஆயர்கள் ஆங்காங்கே அம் மர நிழல்களில் தங்குவர். அதுவே உதியனின் சோற்றுமடமாகும்.[8] 'உதியன் அட்டில்' என்றும் இது வழங்கப்பட்டது. இதற்குக் கைம்மாறாக இவன் ஆயர்களிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை. இந்த மடத்தில் உணவு உண்ணும் ஒலி, அருவியில் ஒலிக்கும் ஒலியின் எதிரொலிபோல் கேட்டது.

---

4 பதிற். பதி. 3 : 4
5 அகம். 233 : 6-10
6 அகம். 65 : 5-6
7 ஷை 233 : 7-8
8 ஷை 168 : 4-7

பண்புநலம்

இவன் குற்றமற்ற சொற்களையே பேசுவான்; உண்மையே பேசுவான். 'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந் தீமை இலாத சொலல்' என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தான் என்று கூறலாம்; கொடை வழங்குதலைத் தன் கடமை என எண்ணிச் செய்தான்; கோணாத தன் நெஞ்சு விரும்பியவாறு செய்தான். நிலம், விசும்பு, காற்று, தீ, நீர் என்னும் ஐம்பெரும் பூதங்களின் இயற்கைக் குணங்களாகிய பொறை, சூழ்ச்சி, வலி, தெறல், அளி போல் இவன் தனக்குப் பகைவர் பிழை செய்தபோது அப் பிழையைப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும், அவரை அழித்தற்கேற்ற மனவலியும், அவ்வாற்றலால் அவரை அழித்தலும், அவர் வழிபட்டால் அவருக்குச் செய்யும் அருளும் உடையோனாவான்.[9]

இசை வேட்கை

இவன் இனிய இசையுடன் முரசுகளை முழக்கி மகிழ்வது உண்டு என்பது 'இன்னிசை முரசின் உதியஞ்சேரல்'[10] என்று குறிப்பிடுவதால் தெரிகிறது. இவன் போர் புரியும்போது இயவர்கள் (இசைக் கருவிகள் முழங்குவோர்) ஆம்பலங் குழல்களால் ஊதினார்கள்.[11]

மனைவி மக்கள்

இவனது மனைவி நல்லினி ஆவாள். இவள் வெளியன்வேள் என்பவனின் மகள் ஆவாள். இவனுக்கும் நல்லினிக்கும் பிறந்த ஆண்மக்கள் இருவராவர். மூத்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்; இளையவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆவான்.[12]

ஒப்புநோக்கம்

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் பாரதப்போரில் இருதரத்துப் படைகளுக்கும் சோறு வழங்கினான். அவன் வேறு, இவன் வேறு. அவனைப் பற்றிய செய்தியினைப் பிற சேர அரசர்கள் என்னும் தலைப்பின்கீழ்க் காணலாம்.

---

9 புறம். 2 : 1–8
10 பதிற். பதி. 2 : 2
11 நற். 113 : 11
12 பதிற். பதி. 2 : 3

நெடுஞ்சேரலாதன்

சங்ககாலத்தில் சேரலாதன் என்னும் பெயர்கொண்ட அரசர் நால்வர் இருந்தனர். நெடுஞ்சேரலாதன் இரண்டு பேர். இவர்கள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன் என்போர் ஆவர். பெருஞ்சேரலாதன், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆகியோர் மற்ற இருவர். இவர்களுள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வரலாற்றைச் சேர அரசர்கள் எனும் இப் பகுதியின் கீழும், முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதனின் வரலாற்றைச் சேர அரசப் புலவர்கள் எனும் தலைப்பின் கீழும் காணலாம்.

நெடுஞ்சேரலாதன் சோழன் வேல்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியோடு போரிட்டு மாண்டான். பெருஞ்சேரலாதன் கரிகாற் பெருவளத்தானோடு போரிட்டு முதுகில் காயம்பட்ட தற்காகப் போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர்நீத்தான். சேரவேந்தர்களைச் சிறப்பித்துப் பாடும் பதிற்றுப்பத்து என்னும் நூலில் நெடுஞ்சேரலாதன் இரண்டாம் பத்தில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளான்.

போர்த்திறம்

கடம்பறுத்தல் : அரபிக் கடலில் பல சிறு தீவுகள் உள்ளன.[1] 'இருமுந்நீர்த் துருத்தி'[2] என இது பதிற்றுப்பத்தில் கூறப் பட்டுள்ளது. அங்குக் கடம்ப (கடப்ப) மரத்தைக் காவல் மரமாக உடைய அரசன் ஒருவன் இருந்தான். அவனைக் கடம்பன் என்றே குறிப்பிடலாம்.[3] நெடுஞ்சேரலாதன் தன்னிடமிருந்த பெரும்படை யைக் கடற்போரில் ஈடுபடுத்தினான்;[4] கடம்பனைத் தாக்கினான். நெடுஞ்சேரலாதன் கடம்பனின் படையைக் கொன்று குவித்தான். குருதி ஆறு ஓடிக் கடற்கழிகளைச் செந்நிறமாக்கியது. காவல் மரம் கடம்பு அடியோடு வெட்டி வீழ்த்தப்பட்டது. அதன் அடித் துண்டால் அக்கால வழக்கப்படி நெடுஞ்சேரலாதன் தனக்குப் போர் முரசு செய்துகொண்டான்.

கடம்பை வெட்டி வீழ்த்தும்படி நெடுஞ்சேரலாதன் ஏவினான் என்று ஒரு பாடல் கூறுகிறது.[5] இவனது மகன் செங்குட்டுவன்

---

1 பதிற். 11 : 12-14, 12 : 1-3, 17 : 4-5, 20 : 2-4

2 மே 20 : 2

3 ஒப்புநோக்கு, வேம்பு—வேம்பன், முருகனைக் கடம்பன் என்று அழைப்பது வழக்கம். இவன் அந்தக் கடவுள் முருகன் அல்லன்.

4 அகம். 347 : 3-4

5 பதிற். 11 : 12

கடம்பறுத்தவன் என்று சிறப்பித்துப் பாராட்டப்படுகிறான். எனவே, நெடுஞ்சேரலாதன் இந்தப் போரில் தானே நேரில் ஈடுபடாமல் தன் மகனை அனுப்பி வெற்றிகொண்டானோ என எண்ணவேண்டியுள்ளது.

அரபிக்கடல் தீவுகள் நெடுஞ்சேரலாதனின் ஆட்சிக்குட் பட்டிருந்தன. நெடுஞ்சேரலாதன் அப் பகுதிகளில் வயவர்களை அமர்த்தி நாடு காவல் புரிந்துவர ஏற்பாடு செய்தான். அத் தீவுகளில் அதற்கு முன்னர் ஆட்சி புரிந்து வந்த மன்னர்கள் வயவர்களோடு போரிட்டு அவர்களை வீழ்த்தித் தம் நாடுகளைக் கவர்ந்துகொண்டனர்.[6] மேலும், இவர்கள் நெடுஞ்சேரலாதனுக்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் சினமுற்றுச் சேரலாதன் இப் போரில் ஈடுபட்டான்.[7]

கடற்போரில் ஈடுபட்டுக் கடப்ப மரத்தை வெட்டி வீழ்த்திய வனைச் சிலப்பதிகாரம் பல இடங்களில் குறிப்பிடுகிறது. சில இடங்களில் கடம்பு எறிந்த செயலும், இமயமலையில் வில்லைப் பொறித்த செயலும் இணைத்துப் பேசப்படுகின்றன.[8] ஓரிடத்தில் செங்குட்டுவனை 'வாய்வாட்கோதை' என்று குறிப்பிட்டு, கடம்பு எறிந்ததும் வில் பொறித்ததும் அவனது செயல்கள் என்று கூறப் படுகின்றன.[9] ஓரிடத்தில் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக் கண்டு வாழ்த்தும் பராசரன் எனும் பார்ப்பான் கடம்பு எறிந்ததும், இமயத்தில் வில்லைப் பொறித்ததுமாகிய செயல்களை அவனது செயல்கள் என்று கூறுவதைக் காண்கிறோம்.[10] இவற்றிற்கு

---

6 பதிற். 20 : 3 முரணியோர்

7 காவல் மரத்தின அடிப்படையில் குடிமக்களுக்குப் பெயர் அமைத்தமைக்கான சான்றுகள் இல்லை. பாண்டியர் காவல் மரம் வேம்பு. அவர்களை வேம்பர் என்று குறிப்பிடும் வழக்கம் இல்லை. இவ்வாறே புன்னை, அத்தி, பனை முதலான மரங்களைக் காவல் மரமாக உடைய நாட்டு மக்களும், அவ்வகை மரப்பெயரால் அழைக்கப்படுவதில்லை. 'கடம்பர்' என்னும் சொல் நமக்கு யாண்டும் ஆட்சியில் இல்லை. தக்கணத்தில் இருந்த கதம்பர் வேறு. அரபிக்கடல் தீவுகளில் கடப்ப மரத்தைக் காவல் மரமாகக் கெண்டிருந்த அரசு வேறு. பாடல்களில் கடம்பு வெட்டப்பட்டது என்று மட்டுமே உள்ளது. அறிஞர்கள் கடம்பர்களை ஓட்டினான் என்று குறிப்பிடுகின்றனர். இவர்கள் கடற்கொள்ளைக்காரர்கள் என்றும், மேலைநாட்டு வாணிகக் கப்பல்களை வழிப்பறி செய்து வந்தனர் என்றும், வழிப்பறியைத் தடுக்கும் முயற்சியில் நெடுஞ்சேரலாதன் இப்போரில் ஈடுபட்டு வெற்றிபெற்றான் என்றும் கூறுகின்றனர். இவற்றிற்குச் சான்றுகள் இல்லை. ஆய்வுக்குரியன.

8 சிலப். 23 : 81, 29 : 1, 25 : 187, 28 : 135, 29 : உரைப்பாட்டு மடை

9 ஷை. 25 : 1-3

10 ஷை. 23 : 81-82

மாறாகக் கடம்பு எறிந்த அரசன் கண்ணகிக்குக் கல்நாட்டு விழா நடைபெற்றபோது உயிருடன் இல்லை என்று குறிப்பிடுவதையும் காண்கிறோம்.[11]

ஓரிடத்தில் யவனரைப் பிணித்தவன் என்றும், பாரதப் போரில் சோறு வழங்கியவன் என்றும், கடம்பறுத்தவன் என்றும் மூன்று வரிப்பாடல்கள் சேரனை வாழ்த்துதல் என்னும் ஒரு பொருள்மேல் அடுக்கி வந்துள்ளன.[12] இச் செய்தியைப் பொதுப் படையாகக் குறிப்பிடும் இடமும் உண்டு.[13]

இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு நாம் பார்க்கும்போது கடம்பு எறிந்தவன் நெடுஞ்சேரலாதன் என்பதையும், அவனது அச் செயல்களுக்கு உறுதுணையாகச் செங்குட்டுவனும், மாந்தரஞ் சேரல் இரும்பொறையும் இருந்தார்கள் என்பதையும் நாம் அறிகிறோம்.

வன்சொல் யவனர் பிணித்தல்

கடம்பு தடிந்த போர்ச்செய்தி, நெடுஞ்சேரலாதனைச் சிறப்பிக்கும் பதிகத்தில் கூறப்படவில்லை. பதிகத்தில் யவனரைப் பிணித்ததாகக் கூறப்படும் செய்தி, பாடல்களில் கூறப்படவில்லை. எனவே, கடம்பு தடிந்தது போரின் விளைவே. 'வன்சொல் யவனர்'[14] என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் கடம்பு தடிந்த போரில் பிடிபட்ட போர்க் கைதிகள் எனலாம். இந்தப் போர்க் கைதிகளைப் பிணித்துக்கொண்டு வரும்போது அவர்களுடைய கைகளைப் பின்புறத்தில் சேர்த்துக்கட்டியும், தலையில் நெய்யை ஊற்றியும் அழைத்துவந்தனர். போர்க் கைதிகளை இவ்வாறு அழைத்துவருவது கிரேக்கர் மரபு. நெடுஞ்சேரலாதன் சார்பில் அழைத்து வந்த செங்குட்டுவன் பகைவரின் மரபுக்கு மதிப்பளித்து அழைத்துவந்தான்.[15]

---

11 சிலப். 28 : 135

12 ஷெ. 29 : ஊசல்வரி ; 23 : 3, 24 : 2, 25 : 1

13 ஷெ. 29 : வள்ளைப்பாட்டு

14 பதிற். பதி. 2 : 8

15 தமிழர்கள் போர்க் கைதிகளை எவ்வாறு நடத்தினார்கள் என்பதை விரிவாகக் குறிப்பிடத்தக்க சான்றுகள் இல்லை. எனினும் கனகவிசயர் வரலாறும், கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த வரலாறும் போர்க் கைதிகள் வெற்றி பெற்றவரின் ஆக்கப்பணிகளைச் செய்ய அழைத்துவரும் வழியிலும் அழைத்து வந்த பின்னரும் பயன்படுத்தப்பட்ட நிலைமையைக் காட்டுகின்றன. கணையன், கணைக்காலிரும்பொறை, பெருஞ்சேரலிரும்பொறை ஆகியோர் சிறைவைக்கப்பட்ட வரலாறுகளும் உண்டு.

பிணிக்கப்பட்ட யவனர்கள் யார் என்பதில் அறிஞர்கள் இடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. மேலைநாட்டுக் கடல் வாணிகராகிய யவனர்கள் என்று சிலரும், வடநாட்டில் வாழ்ந்த சாக யவனர் என்று சிலரும் கருதுகின்றனர். சாக யவனரின் கூட்டத்தார் என்று கூறும் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி, வெளிநாட்டுச் செலாவணியில் நாட்டின் பொருளியலை வளப் படுத்திய மேலைநாட்டு வாணிகக் குழுவினராகிய யவனரைப் பிணித்தான் என்பது பொருந்தாது என்கிறார். வடநாட்டு யவனர் வடுகரைப் போன்றும், ஆரியரைப் போன்றும் நேரே தமிழகத்தில் ஊடுருவாமல் அரபிக்கடல் தீவுகளுக்குச் சென்றிருக்க மாட்டார்கள் என்பது மறுசாரார் கருத்து. இந்தக் கருத்துகள் உய்த்துணரப்பட்டவையாகத் தென்படுகின்றன.

யவனர் யாவர் என்பதை, கிடைக்கும் அடிப்படைச் சான்று களை வைத்துக்கொண்டு தீர்மானிப்பதே நல்லது. யவனரின் பாவை விளக்கு,[16] அன்ன விளக்கு,[17] கட்குடம்[18] ஆகியவை சிறப்பு மிக்க பொருள்கள் எனப் பேசப்படுகின்றன. யவனரின் மரக்கலங்கள் முசிறித் துறைமுகத்திற்குப் பொன்னைக்கொண்டு வந்து இறக்கிவிட்டு மிளகு மூட்டைகளை ஏற்றிச் சென்றதையும் நாம் காண்கிறோம்.[19] இதனால் இவர்கள் பிற நாட்டிலிருந்து கடல் கடந்து வந்த வாணிகர்கள் என்பது தெளிவாகிறது. இவர்கள் புகார் நகரத்திற்கு வாணிகத்தின்பொருட்டு வந்திருந்து தங்கியிருந்ததையும் நாம் காண்கிறோம்.[20] மதுரை நகரில் யவனர்கள் வாளைக் கையில் ஏந்திக்கொண்டு கோட்டை வாயிலில் காவல்புரிந்து வந்ததைக் காணும்பொழுது,[21] யவனர்கள் சிலர் தமிழ்நாட்டிலேயே தங்கி வாழ்ந்தனர் என்பதை அறிகின் றோம். இவ்வாறு தங்கியவர்களில் புகார் நகரில் தங்கியவர் மாடமாளிகைகளில் வாழ்ந்ததையும், மதுரையில் தங்கியவர் கோட்டையைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததையும் நாம் பார்க்கிறோம்.

சேர அரசன் ஒருவன் யவனர்களின் வளநாட்டை ஆண்டான் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.[22] இந்த அரசன் இந்த யவனர் நாட்டுடன் தென்குமரி, இமயம் ஆகிய எல்லைக்குட் பட்ட நாட்டையும் ஆண்டான் என்று அங்குக் கூறப்பட்டுள்ளது.

16 நெடுநல். 101
17 பெரும்பாண். 316-317
18 புறம். 56 : 18
19 அகம். 149 : 9-11
20 சிலப். 5 : 10
21 ஷை 14 : 66-67
22 ஷை 28 : 141-142

யவனர் நாடு தென்குமரி, இமயம் ஆகிய எல்லைகளுக்கு உட்பட்டதென்பது விளங்காத காரணத்தால் அந்தச் சேர அரசன் ஆண்ட யவனர் நாட்டையும் இதனுடன் இணைத்துக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அந்த யவனர் நாடு எது?

மேலே கூறியபடி தென்குமரி, இமயம் இவ்விரு எல்லைக்குட்பட்ட நாட்டை ஆண்ட சேர அரசன் நெடுஞ்சேரலாதன்.[23] இவன் கடற்போரில் ஈடுபட்டுக் கடப்ப மரத்தை வீழ்த்தினான். கடப்ப மரம் மேற்குக் கடற்கரையை அடுத்த தீவுகளில்[24] இருந்த காவல் மரம். இந்தக் காவல் மரத்தை உடையவர்கள் அந்தத் தீவு மக்கள். மேலை நாடுகளிலிருந்து அரபிக்கடல் வழியே கலம் செலுத்தி வாணிகம் செய்துவந்த யவனர்கள் இந்த இலக்கத் தீவுகளில் தங்கினார்கள். அங்கிருந்த மக்களைத் தம் வாணிகத்திற்குத் துணையாகக் கொண்டனர்.

சேர நாட்டில் இவர்கள் செய்துவந்த வாணிகத்தில் ஏதோ ஒருவகையில் தவறு நேர்ந்திருக்கலாம். அந்தத் தவற்றுக்குக் கடம்புத் தீவுகளிலிருந்த மக்களும் உடந்தையாயிருந்திருக்கலாம். அரசன், தவற்றினைத் திருத்த அவர்களோடு போரிடவேண்டிய தாயிற்று. இந்தப் போரின் விளைவுதான் காவல் மரமாகிய கடப்பமரம் வெட்டியதும், அதனால் முரசு செய்துகொண்டதும், யவனரைக் கைது செய்துகொண்டுவந்ததும், பிறகு அவர்களது செல்வத்தைச் சேரநாட்டு மக்களுக்கு வழங்கியதும் ஆகிய நிகழ்ச்சிகளாகும்.

இமயம்வரை வெற்றி

நெடுஞ்சேரலாதன் இமயமலையில் தன் சேரர்குடிச் சின்னமாகிய வில்லைப் பொறித்துவிட்டு மீண்டான் எனப் பதிகம் கூறுகிறது. பதிகம், பதிற்றுப்பத்தைத் தொகுத்தவரால் பிற்காலத்தில் உருவாக்கப்பட்டது. பாடல் தோன்றிய காலமே அந்தந்த மன்னர்களுக்குரிய காலம். இவன் காலத்தில் பாடப்பட்ட இரண்டாம் பத்துப் பாடல்களில் இமயத்தில் வில் பொறித்த செய்தி கூறப்படாமையை எண்ணவேண்டியுள்ளது.

குமட்டூர்க் கண்ணனார் நெடுஞ்சேரலாதன்மீது பத்துப் பாடல்கள் பாடிச் சிறப்பித்த காலத்தில் நெடுஞ்சேரலாதன் இமயத்தில் வில்லைப் பொறித்த நிகழ்ச்சி நடைபெறவில்லை.

---

23 பதிற். 11 : 24

24 இக்காலத்தில் இலக்கத்தீவுகள் என வழங்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சி. இவனது வரலாற்றில் மிக முக்கிய நிகழ்ச்சி யாகையால், குமட்டூர்க் கண்ணனார் பாடலில் இடம்பெறா விட்டாலும் சேர்க்கப்படவேண்டும் என்னும் கருத்து உடைய வராய்ப் பதிற்றுப்பத்து நூலைத் தொகுத்த ஆசிரியர் தம் பதிகத்தில் சேர்த்துக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் யவனரைப் பிணித்த நிகழ்ச்சியை இமயத்தில் வில் பொறித்த நிகழ்ச்சிபோல் அல்லாது பாடல் பாடப்பட்ட காலத் திற்குப் பின் நடந்த நிகழ்ச்சி என்றாலும் நெடுஞ்சேரலாதன் காலத்து நிகழ்ந்தது என்று கூறினோம். அதற்கு முதன்மைக் காரணமாவது கடம்பறுத்த முக்கிய நிகழ்ச்சியானது பதிகத்தில் விடுபட்டபோதிலும் பதிகத்தில் காணப்படும் யவனரைப் பிணித்ததாகிய தொடர்நிகழ்ச்சியில் வேறுவகையில் பதிகத்தில் கூறப்பட்டுள்ளது என்று கொண்டதே ஆகும்.

இமயம் நோக்கிச் சென்றபோதும், அங்கிருந்து தன் நாட்டை நோக்கி மீண்டபோதும் நெடுஞ்சேரலாதன் பல மன்னர்களை வென்றான். இந்த வெற்றிகளில் ஆரியரை அடிபணியும்படி செய்த செயல் பதிகத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இந்த வெற்றிச் செய்திகள் பதிற்றுப்பத்துப் பாடல்களிலும்[25] கூறப் பட்டுள்ளன.

இவனது வடநாட்டுப் போரில் பல அரசர்களை வென்றான்; ஆயினும் அவர்களது நாடுகளைக் கைப்பற்றிக் கொள்ளவில்லை. இதனைச் சமுத்திரகுப்தனின் தென்னிந்தியப் படையெடுப்பிற்கு ஒப்புமையாகக் காட்டலாம். இமயம் சென்ற வழியில் சிலர் நெடுஞ்சேரலாதனைவிட அவர்களது அரசர்கள் மேம்பட்டவர் எனப் புகழ்ந்து கூறினர்.[26] அவர்களது பேராற்றல் அழியும்படி வென்றான். இவ்வாறு புகழ்ந்து கூறியதால் பேராற்றல் அழிக்கப்பட்டவரே ஆரியர். இவனது இமயப் படையெழுச்சி வடநாட்டு அரசர்களின் வரலாற்றில் எங்கும் காணப்படாமைக்கு இதுவே காரணமாகும்.

இமயத்தில் வில்லைப் பொறித்தான் என்று கூறும் பதிகம் அப் பகுதிகளில் தமிழகத்தின் பெயர் விளங்கும்படி தன் கோலை நிலை நாட்டினான் என்றும் கூறுகிறது.[27] கோலை நிலைநாட்டினான் என்றால் ஆட்சியை நிலைநாட்டினான் என்பது பொருள். தமிழ்

---

25 பதிற். 11 : 23

26 டி 11 : 23–25

27 'தமிழகம் விளங்கத் தன்கோல் நிறீஇ' (பதிற். பதி. 2 : 5–6)

நாட்டு வரலாற்றில் ஆட்சியை நிலைநாட்டுதல் என்பது அரசாளுதலை மட்டும் குறிக்கும் சொல் அன்று. பிறர் பணிந்து கொடுத்துப் பின்னர் மீண்டாலும் திறை தந்த நாடு, திறைபெற்ற மன்னனின் ஆட்சிக்குக்கீழ் இருந்ததாகவே கருதப்படும்.[28]

இந்த வகையில் நெடுஞ்சேரலாதன் இமயமலைப் பகுதியில் ஆட்சியை நிலைநாட்டினான் என்று பதிகம் கூறுவதாவது, இமயம் முதல் குமரிவரை வென்றான்[29] என்று பொருளாகும். எல்லை காண முடியாத அளவுக்கு இவன் நாடு விரிந்தது[30] என்ற பாடற் கூற்றுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மைகளேயாகும்.

நெடுஞ்சேரலாதனின் போர்முறைச் செய்திகள்

'கூற்று வெகுண்டுவரினும் மாறாதவன்'[31] என்றும், 'பகைவர் உள்ளத்தை வருத்தும் போர்ச் செயல்களைச் செய்பவன்'[32] என்றும் வரும் செய்திகளால் இவனது போராற்றலை நன்கு உணர்கின்றோம்.

இவனும், இவனது படைவீரர்களும் எழுமரம் போன்ற உறுதியான நெஞ்செலும்பை உடையவர்கள்;[33] முறுக்கான உடற் கட்டு உடையவர்கள்;[34] இவனது படை வரிசை வரிசையாக வந்தது.[35] நெடுஞ்சேரலாதன் தன் மார்பில் பச்சைநிறக் கற்கள் பதித்த அணிகலன்களை அணிந்திருந்தான்.[36] நெடுஞ்சேரலாதன் யானைமீதேறிப் போர்க்களம் சென்றான்.[37] அப்போது அவன் படைப் பிரிவுகளின் கண்களாக விளங்கினான்.[38] படைகளைத் தழுவிச் செல்லும் முறையில் படையின் கவசமாக விளங்கினான்.[39] வெற்றிக்கொடி நாட்டும் படையை ஏராகக்கொண்டு இவன் பகைவர்களாகிய நிலத்தை உழுபவன்.[40] இவ்வகைச் செய்திகள்

---

28 'அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்' (பதிற். பதி. 2 : 10–12)
29 பதிற். 11 : 23-24
30 ஷை 17 : 10–15
31 ஷை 14 : 10
32 'அணங்குடை நோன்றாள்', (பதிற். பதி. 2 : 12)
33 'எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலம்', (பதிற். 14 : 11, 16 : 17)
34 'வயவர்' பதிற். 12 : 1, 19 : 7, 'வயவர் வேந்து', (பதிற். 15 : 21)
35 'போரடு தானை', (பதிற் 11 : 16), 'நிரைய வெள்ளம்', (பதிற். 15 : 4)
36 'பசுமபூண் மார்பன்', (பதிற். 17 : 14)
37 'போர்வல் யானைச் சேரலாதன்', (பதிற். 15 : 23, 11 : 14-16)
38 'புரையோர் உண்கண்', (பதிற் 16 : 18)
39 'சான்றோர் மெய்ம்மறை', (பதிற். 14 : 12)
40 'படையே குழவ பாடினி வேந்தே', (பதிற். 14 : 17)

எல்லாம் இவனது படைஎழுச்சி நிலையைக் காட்டுகின்றன. படையில் இருந்த இயவர்கள், உலகமெல்லாம் பாதுகாப்புக்காக இவனுடைய குடைநிழலின்கீழ் வரவேண்டும் என்று கூறி வெற்றி முரசினை முழக்கினர்.[41]

இவன் படையெடுத்துச் சென்றபோது கூளியர்கள் காட்டுப் பாதைகளில் படைசெல்ல வழி அமைத்துக் கொடுத்தனர். இதற்கு மாறாக நெடுஞ்சேரலாதன் வெற்றிபெற்ற நாடுகளில் உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டனர். வயவர்கள் தம் வேல்களில் இருந்த புலித்தோல் உறைகளை நீக்கிவிட்டு ஏந்திச் சென்றனர். முரசு முழக்குவோர் குருதிபாயும் போர்க் களத்தைக் காணும் விருப்பத்தோடு செந்தினையில் குருதியைக் கலந்து தூவிப் போர் முரசை முழக்கினர். இவனது படையினர் போருக்கெழுந்த நாள் முதல் போர் முடியும் நாள் வரை தம் போர் உடைகளைக் களைந்ததே இல்லை.[42] இவ்வாறு இவனது படை யெடுப்பு நிகழ்ந்தது.

நெடுஞ்சேரலாதன் தன் போர்ப் பாசறையில் நீண்ட நாள் தங்கினான்,[43] ஓர் ஆண்டுக்குமேல் தொடர்ச்சியாகத் தங்கிய தும் உண்டு.[44]

போரில் இவன் பகைவர்களது மதில்களையும் கதவுகளையும் அழித்தான்;[45] அவர்களது ஊர்களைத் தீக்கிரையாக்கினான்.[46] வளமுடன் விளங்கிய பகைவரது நாடுகளும் இவனை எதிர்த்தமை யால் அழிந்து தம் பொலிவை இழந்துபோயின.[47] அரிமாக்கள் நடமாடும் இடங்களில் பிற விலங்குகள் தலைகாட்டாமைபோல நெடுஞ்சேரலாதன் தோன்றிய நாடுகளில் மன்னர்கள் ஒடுங் கினர்.[48]

தும்பைப் பகைவரை வெல்லுதல்

வடநாட்டில் இவனை எதிர்த்துத் தாக்கும் மன்னர்கள் இல்லை என்று கூறினோம். தமிழ்நாட்டில் இத்தகைய நிலை இல்லை. இவன் போர் தொடுக்காமல் இருந்தபோதே இவனைச் சில அரசர்கள் இவனது நாட்டை அடையக் கருதிப் போர் தொடுத் தனர்.[49] அவர்களை எதிர்த்துப் போரிட்டு நெடுஞ்சேரலாதன்

41 பதிற். 17 : 7-14
42 ஷை 19 . 1-10
43 ஷை 16 : 8-9
44 ஷை 15 : 1-2
45 ஷை 16 : 4-5
46 ஷை 15 : 2
47 ஷை 13 : 10-13, 15 : 7, 19 : 16-17
48 ஷை 12 : 5-8
49 'தும்பைப் பகைவர்', (பதிற். 14 : 8)

அழித்தான்.[50] இது தற்காப்புப் போர் ஆகும். இவ்வாறு புகழ் நாட்டும் போர்களிலும், தற்காப்புப் போர்களிலும் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.

தமிழ்நாட்டு அரசர்களை வலியச் சென்று தாக்கும் செயலை இவன் செய்யவில்லை. தமிழ்நாட்டு அரசர்கள் யாராக இருந்த போதிலும் தன்னைச் சேர்ந்தவர்கள் என்றே இவன் கருதினான். தன்னை வலியவந்து எதிர்த்த வடநாட்டு அரசர்களைத்தாம் இவன் பகைவர்களாகக் கருதினான்; தமிழ்நாட்டு அரசர்கள் வலிய வந்து எதிர்த்தாலும் அவர்களை இவன் பகைவர்களாகக் கருதவில்லை. இவனது உணர்வை அறிந்திருந்த பதிற்றுப்பத்துத் தொகுப்பாசிரியர் வடநாட்டில் இவன் சேரநாட்டுப் புகழ் விளங்கும்படி செய்தான் என்று கூறாமல் தமிழகத்தின் புகழ் விளங்கும் படி செய்தான் எனக் கூறியுள்ளார்.

இவன் இமயத்தில் வில்லைப் பொறிக்கும்போது புலியையும் கெண்டையையும் சேர்த்துப் பொறித்ததும் உண்டு.[51]

இவனது இந்த ஒருமைப்பாட்டு உணர்வுகள் போற்றுதலுக்கு உரியவையாகும்.

போர்ப்புறம் வேற்போர்

நெடுஞ்சேரலாதன் சேரநாட்டில் இருந்துகொண்டு ஆட்சி புரிந்து வருகையில் கொங்குநாட்டுக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு அந்துவஞ்சேரல் இரும்பொறை ஆட்சிசெலுத்தி வந்தான். இவர்கள் காலத்தில் சோழநாட்டை ஆண்டுவந்த வேந்தன் வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி என்னும் பெரு விறற்கிள்ளி என்றும் அழைக்கப்பட்டான்.

நெடுஞ்சேரலாதனுக்கும், இந்தச் சோழ அரசனுக்கும் போர் மூண்டது. அந்தப் போரானது 'போர்'[52] என்னுமிடத்தில் நடை பெற்றது. சோழன் அவனைப் 'போர்' என்ற நகரத்திற்கு வெளியே எதிர்த்துப் போராடினான். போரில் இருதிறத்துப் படைகளும் அழிந்தன. இறுதியில் வேந்தர் இருவரும் நேரில் வேற்போரில் ஈடுபட்டனர். கிள்ளியானவன் வேற்போரில் வல்லவன் என்பது

---

50 'தும்பைப் பகைவரின் போர்ப்பீடு அழித்த', (பதிற். 14 : 8-9)
'மன்மருங்கு அறுத்த', (பதிற். 15 : 5)

51 சிலப். 29 ஊசல்வரி, 25 : 2

52 அகம். 326 : 10-11

அவனது பெயரிலேயே விளங்கும். இருபெருவேந்தரும் போரில் சாய்ந்தனர்.[58] நெடுஞ்சேரலாதன் உயிர் நீங்குகின்ற நிலையில் நெடுநேரம் போர்க்களத்திலேயே கிடந்தான். அப்போது கழாத் தலையார் என்னும் புலவர் அவனைக் கண்டு பாடி அவனது கழுத்தில் இருந்த ஆரத்தைப் பரிசிலாகக் கேட்டார். அவனும் வழங்கினான்; பின்னர் மாண்டான்.

இவனுக்குப்பின் சேரநாட்டின் தலைமைப் பொறுப்பினைச் செங்குட்டுவன் ஏற்றான் என்பதைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோ வடிகள் வரலாறு உணர்த்துகிறது.

கொடைத்தன்மை

இவன் சிறந்த வள்ளல் ஆவான். இவன் நாட்டில் பருவ மழை பொய்த்தல் இல்லை. அப் பருவமழையே தவறிவிட்டாலும் பரிசிலர் விரும்பிவந்த பொருள்களை இவன் அளிப்பதில் தவறிய தில்லை.[54] இவனது கைகள் பிறருக்குக் கொடுத்துக் கொடுத்து மிகுந்த வளமை பெற்றிருந்தன.[55] இவனது கொடைத்தன்மை யைப் பகைவர்களும் புகழ்ந்தனர்.[56]

இவன் கொடையில் கர்ணனைப் போன்றவன் என்று குமட்டூர்க் கண்ணனார் இவனை ஒப்புமைப்படுத்திப் பாடி யுள்ளார்.[57] இவன் உயிர் நீங்கும் நிலையில் போர்க்களத்தில் கிடந்திட்டபோது இவனைக் கண்டு பாடிய கழாத்தலையார் இவனது கழுத்தில் இருந்த மணிமாலையைப் பரிசிலாகக் கேட்டுப் பெற்றார். கண்ணனானவன் கர்ணனிடம் அவன் செய்த புண்ணி யங்களை யெல்லாம் தானமாகக் கேட்டு அவன் இறக்கும் தறுவாயில் இருந்தபோது பெற்ற நிகழ்ச்சி இதனோடு பொருத்த மாய் அமைந்துவிட்டது. முன்னர்ப் புலவர் பாடிய ஒப்புமை யானது பின்னர் உண்மை நிகழ்ச்சியாய் அமைந்துள்ளது.

பாடினி,[58] விறலியர்,[59] புலவர், வயிரியர், ஓவியர், சிற்பத் தொழில்களில் வல்ல கண்ணுளர்[60] முதலான பலருக்கு இவன் கொடை வழங்கினான். பரிசில்பெற வந்தவர் பெறத் தகுதியற்ற வராய் விளங்கினாலும் அவர்களது அத்தன்மையைப் புறத்தார் உணராவண்ணம் மறைத்துவிட்டு நல்கினான்.[61]

---

54 பதிற். 18 : 10-13, 20 : 22-24
55 ஷை 15 : 36-37
56 ஷை 20 : 25-28
57 ஷை 14 : 5-7
58 புறம். 62 : 7-8, 63 : 10
58 ஷை 14 : 17, 17 : 14
59 ஷை 18 : 6
60 ஷை 20 : 15-17
61 ஷை 20 : 23-24

மா, களிறு, தேர் ஆகியவற்றைப் பரிசிலாகக் கொடுத்தான்.[62] பகைவர்களிடம் பெற்ற உயர்ந்த அணிகலன்களைப் பரிசிலாகக் கொடுத்தான்.[63] உணவு, உடை முதலானவற்றால் மகிழ்ந்திருக்கும் தன் மகிழ்ச்சியான வாழ்வையே பிறருக்கு அளித்தான்.[64] மிளை, அகழி, மதில், நிலைவாயில், ஆரெயில் முதலானவற்றால் இவனது அரண்மனை, பகைவரால் உள்ளே நுழைய முடியாத அளவு அமைந்திருந்தது; ஆனால், பரிசிலர்கள் எளிதாக நுழைவதாய் அமைந்திருந்தது. பரிசிலர்கள் உள்ளே நுழைந்து, உண்டு, உடுத்து, நுகர்ந்து, மகிழ்ந்து இருந்தனர். இவ்வாறு பரிசிலர்கள் இருந்ததைப் பார்த்துப் பெருமிதத்தோடு மலரும் மார்பினனாய் அவன் விளங்கினான்.[65] இத்தகைய வள்ளன்மையால் இவனைப் பரிசிலர்களின் செல்வம் என்றே அழைத்தனர்.[66]

இவன் தன்மீது பத்துப் பாடல்கள் பாடிச் சிறப்பித்த குமட்டூர்க் கண்ணனார் என்னும் அந்தணப் புலவருக்கு தான் வெற்றி பெற்ற உம்பற்காட்டுப் பகுதியில் ஐந்நூறு ஊர்களைப் பிரமதேயமாகக் கொடுத்தான். மேலும், அவரது வாழ்க்கைச் செலவுக்காகத் தனது எஞ்சிய ஆட்சிக் காலம் முழுவதும் தான் வென்ற தென்னாட்டிலிருந்து வரும் வருவாயில் சரிபாதியும் கொடுத்தான்.

பண்புநலம்

பகைவர்கள் பெரிய தவற்றைச் செய்திருந்தாலும் அவர்கள் பணிந்து திறை தந்தால், திறையை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அருள்புரியும் பண்பு நலம் உடையவன்;[67] நிலத்தைப் போல் பொறுமையுடையவன்; நீரைப்போல் சினம் ஆறும் தன்மை உடையவன்; காற்றைப்போல் எல்லோர் உள்ளங்களிலும் நிறைந்திருப்பவன்; வெட்டவெளியைப்போல் பரந்த உள்ளம் உடையவன். இந்தப் பண்புகளில் இவன் அந்த நான்கு பூதங்களைப்போல் அளக்க முடியாத தன்மையை உடையவன்.[68] நாள், கோள், திங்கள், ஞாயிறு, அழல் ஆகிய ஐவகை ஒளிப்பிழம்புகள் ஒருங்கிணைந்தால் தோன்றும் ஒளிபோல இவனது பொலிவும் புகழும்

---

62 பதிற். 20 : 16
63 ஷை பதி. 2 : 9-10
64 ஷை 12 : 25 — 'மகிழ்'—மகிழ்ச்சியான வாழ்வு
65 ஷை 20 : 21 'அட்டுமலர் மார்பன்'
66 ஷை 15 : 21 'பரிசிலர் வெறுக்கை'
67 ஷை 17 : 2-3
68 ஷை 14 : 1-2

விளங்கின.[69] இவனது புகழ் திருமாவின் புகழ்போலப் பரவியிருந்தது.[70] இவனது ஆட்சிக்குக்கீழ் இருந்த நாடுகள் வளமுடனும், இவனை எதிர்த்த நாடுகளின் வளமை பாழடைந்தும் காணப்பட்டன.[71]

இசை வேட்கை

இவனது தந்தை உதியஞ்சேரல் இன்னிசை முழக்குடன் மகிழ்வாக வாழ்ந்தவன்.[72] இவனும் மகிழ்ச்சியால் முழக்கும் முரசொலியைக் கேட்டுத் தன்னையே பரிசிலாகக் கொடுத்தான்[73] இதனால் தந்தைக்கும் மகனுக்கும் இசையின்மீது இருந்த ஈடுபாடு நன்கு விளங்கும்.

பெற்றோர்

இவனது முன்னோர்கள் நாவலந் தண்பொழில் முழுவதும் ஆட்சிபுரிந்து புகழுடன் விளங்கினர்.[74] இவனது தந்தை அந்துவஞ்சேரலாகும்; தாயார் நல்லினி ஆகும்.

மனைவியின் மாண்புகள்

இவனது மனைவி சிறந்த அழகியாவாள்.[75] அடக்கமான தோற்றப் பொலிவினை உடையவள்.[76] பெரிய சான்றாண்மைப் பண்புகள் அவளிடம் அமையப் பெற்றன; நாணம் மிக்கவள்;[77] கணவனிடம் ஊடல் கொள்ளாத ஆறிய கற்பினை உடையவளாக விளங்கினாள். கணவனொடு ஊடிய காலத்தும் இனிய சொற்களையே கூறுவாள்.[78] அவளே வேளாவிக் கோமான் பதுமன் மகளாவாள்.[79] இவள் பெற்ற பிள்ளைகள் 4, 6ஆம் பத்தில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளனர்.

'சோழன் மணக்கிள்ளி'யின் மகள் நற்சோணை என்னும் பெயருடைய மற்றொரு பெண்ணை இவன் மணந்தான்.[80] இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் இருவர். மூத்தவன் பதிற்றுப் பத்தில் ஐந்தாம் பத்தின் தலைவன். இளையவன் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள்.

---

69 பதிற். 14 : 3–4
70 ஷை 15 : 39
71 ஷை 13 : 19–28, 15 : 1–8
72 ஷை பதி. 2 : 2
73 ஷை 15 : 21
74 ஷை 14 : 19–20
75 ஷை 14 : 13–15
76 ஷை 16 : 10 'அடங்கிய சாயல்'
77 ஷை 19 : 14
78 ஷை 16 : 10
79 ஷை பதி. 4 : 2-3, 6 : 1-2
80 ஷை 5 : 3

காலம்

இவன் 58 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். இவனைப் பாடிய தற்குப் பரிசாக 88 ஆண்டுகள் தென்னாட்டில் இருந்து வரும் வருவாயில் குமட்டூர்க் கண்ணனார் பங்கு பெற்றார். இதனை அவன் தனது ஆட்சிக் காலம் முடியும் வரையில் தந்திருக்க வேண்டும். எனவே, இரண்டாம் பத்தானது இவனது இருபதாம் ஆட்சியாண்டில் பாடப்பட்டது எனலாம். இதற்குப் பின்னர்தான் இவன் செங்குட்டுவன் தாயை மணந்திருக்க வேண்டும். திருமணமான ஓராண்டில் செங்குட்டுவன் பிறந்து அவனது இருபதாம் வயதில் இளவரசு பட்டம் கட்டப்பட்டான் என்றால், செங்குட்டுவன் அரியணை ஏறியது[81] நெடுஞ்சேரலாதனது 42ஆம் ஆட்சியாண்டில் எனக் கொள்ளலாம். இதனை ஐந்தாண்டுக் குறியீட்டுக்குச் சரிசெய்து 40ஆம் ஆட்சியாண்டு எனக் குறிப்பிடலாம்.

சிறப்புப் பெயர்கள்

மாமூலனார் இவனைச் 'சேரலாதன்' என்றே குறிப்பிடு கின்றார். பதிற்றுப்பத்துப் பதிகம் மூன்று இவனை 'இமய வரம்பன்' என்று மட்டும் குறிக்கிறது. குடக்கோ,[82] குடவர் கோமான்[83] என்னும் அடைமொழிகள் இவனது ஆட்சிபானது தொடக்க நிலையில் குடநாட்டில் தொடங்கியதைத் தெளிவுறுத்து கின்றன. இமயவரம்பன்[84] என்றால் இமயமலையினை வரம்பாக வைத்து ஆண்டவன் என்பது பொருளாகும்.

இவன் 'ஆராத் திருவின் சேரலாதன்'[85] என்றும் குறிப் பிடப்படுகின்றான். இது இவனது செல்வ வளத்தை வெளிப் படுத்துகின்றது.

பல்யானைச் செல்கெழு குட்டுவன்

இவன், பாலை பாடிய கௌதமனார் என்னும் பார்ப்பனப் புலவரால் சிறப்பித்து இரண்டாம் பத்தில் பாடப்பெற்றவன். பாலை என்னும் இவனது ஊர் இப்போதுள்ள பாலக்காடு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

---

81 20 + 1 + 1 + 20 = 42ஆம் ஆண்டு
82 புறம். 62, 63, 368; பதிற். பதி. 6 : 1
83 பதிற். பதி. 5 : 2
84 ஷை 2 : 12
85 ஷை 4 : 1

இவன் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பி; செங்குட்டுவனுக்குச் சிறிய தந்தையாவான்.

பூழியர்கோ

நெடுஞ்சேரலாதன் சேரநாட்டு முடிவேந்தனாய் ஆண்டபோது இவன் பூழி நாட்டில் இருந்துகொண்டு நாடுகாவல் புரிந்து வந்தான். பின்னர்ப் பூழி நாட்டை ஆண்டுகொண்டிருந்ததால் 'பூழியர்கோ'[1] என்று கூறப்பட்டான்.

பூழி நாடானது செருப்பு மலையைத் தன்னகத்தே கொண்டது. செருப்பு மலையில் மணிக்கற்கள் கிடைத்தன. கோவலர் தம் ஆடு மாடுகளைப் புல்வெளிகளில் மேய விட்டுவிட்டு இச் செருப்பு மலையில் கிடைத்த மணிக்கற்களைத் திரட்டி விற்று வாணிகம் செய்துவந்தனர். அக்கால மக்கள் அந்த மணிக்கற்கள் பதித்த அணிகலன்களை விரும்பி அணிந்துவந்தனர்.[2] இந்தப் பூழி நாட்டுக் கோவலர்களுக்கு முல்லைப்பூ குடிப் பூவாகும்.

மழவர் மெய்ம்மறை

மழவர்கள் கொங்குநாட்டு மக்கள். அவர்களுள் ஒருசாரார் குவியற் கண்ணியைத் தம் முடியில் அடையாளச் சின்னமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் சேரர்களின் துணைவர்களாய் விளங்கினர். மழவரில் மற்றொரு சாரார் பாண்டியனைச் சார்ந்திருந்தனர். பல்யானைக் குட்டுவன் குவியற்கண்ணி மழவரின் பாதுகாவலனாகக் கவசம்போல் விளங்கினான்.[3]

அயிரைப் பொருநன்

ஓர் ஊரில் தங்கியிருந்து ஆண்ட அரசனை அவ்வூரின் பொருநன் எனக் குறிப்பிடுவது வழக்கம். அயிரை மலையிலிருந்த கொற்றவை சேரர்களின் குடித்தெய்வம். இதனை இவன் வழிபட்டான்.[4] இவன் பல நாள்கள் வழிபாட்டில் ஈடுபட்டு அயிரை மலையில் தங்கியிருந்தான். அதனால், 'அயிரைப் பொருநன்'[5] என்னும் சிறப்பினைப் பெற்றான்.

---

1 பதிற். 21 : 23
2 ஷ. 20 : 23
3 ஷ. 21 : 24
4 ஷ. 30 : 34 'அருந்திறல் மரபிற் கடவுட் பேணியர்'
பதி. 3 : 8 'அயிரை பரைஇ'
5 ஷ. 21 : 29

உம்பற்காட்டு வெற்றி

'உம்பல்' என்னும் சொல்லுக்கு யானை என்னும் பொருள் உண்டு. எனவே, உம்பற்காடு என்பது ஆனைக்காடு என்று பொருள்படும். ஆனைமலைப் பகுதியில் இருந்த காடு இப் பெயர் பெற்றிருந்தது. ஆனைமலைக்கு வடக்கில் இருந்தது பூழி நாடாகும். உம்பற்காடானது அப்போது இவனது ஆட்சியின்கீழ் இருந்திருக்கவேண்டும். பூழி நாட்டில் ஆண்ட இவன் உம்பற் காட்டின்மீது படையெடுத்துச் சென்று, வென்று தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான்.[6]

அகப்பாக் கோட்டையை அழித்தல்

பாகுடி என்பது ஊரின் பெயர்.[7] இந்த ஊர், பெருமலைகளுக்கு இடையே இருந்ததால்[8] அகப்பாக்குடி எனப்பட்டு, 'அகப்பா' என மருவியும் வழங்கப்பட்டது. உம்பற்காட்டைத் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்த பல்யானைக் குட்டுவன் அகப்பாக் கோட்டையைத் தாக்கி வென்று தீக்கிரையாக்கினான்.[9] இக் கோட்டையைக் கைப்பற்ற வேண்டும் என்பதே அவன் நோக்கம்.[10]

அகப்பாக் கோட்டை மிக வலிமையானது. உயர்ந்த மதிற் சுவர்; அதில் வரிசை வரிசையாகப் பதுங்குமிடங்கள்; மதிற் சுவரை அடுத்து ஆழமான அகழி; அகழியைச் சுற்றிக் காவற் காடு.

கோட்டைக்குள்ளே நுழைய உயர்ந்த நிலைவாயில்; வாயிற் கதவைச் சாத்தித் தாழிடுவதற்காக வில்விசை முறைப்படி மாட்டித் தொங்கும்படி அமைக்கப்பட்ட கணையமரம்; வாயிலுக்கு முன் அகழியைக் கடக்கும் மரப்பாலம்; பாலத்திற்கு வெளியே போரிடுவதற்காக அமைக்கப்பட்ட வெட்டவெளி; வாயிலிலும் காவற்காட்டிலும் இருந்துகொண்டு கோட்டையைக் காக்கும் நாற்படைகள். இத்தனை பாதுகாவலையும் கொண்டது அகப்பாக் கோட்டை[11] ஆகும்.

---

6 பதிற். பதி. 3 : 2
7 பதிற. 21 : 26 — இது மயிலை சீனி. வேங்கடசாமியின் கருத்து.
8 ஷி 22 : 26 'அண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த'
9 ஷி பதி. 3 : 3
10 பதிற். 22 : 27 'உழிஞைகுடி'
11 ஷி 22 : 26

அகப்பாக் கோட்டையைச் சூழ்ந்திருந்த மலை தலைமலை ஆகும்.[12] இப் பகுதியில் முதியர் என்னும் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பாண்டியரின் ஆட்சியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தனர்.[13] பல்யானைக் குட்டுவன் முதியரைத் தம் பக்கம் தழுவிக்கொண்டான்.[14] அவர்களுக்காகப் போராடி அகப்பாவில் இருந்த பாண்டிய ஆட்சியாளரை அழித்தான்.

உம்பற்காட்டு வெற்றியாலும் அகப்பா வெற்றியாலும் தனக்குச் கிடைத்த பரந்த நாட்டைப் பகுத்துக் கொடுத்தான்.[15] அப் பகுதியில் உம்பற்காட்டு ஆட்சி, அவனது அண்ணன் மகன் செங்குட்டுவனது நேரடிப் பார்வையில் விடப்பட்டது. அகப்பா, முதியர்க்கு விடப்பட்டது.

அகப்பா வெற்றி, பாண்டியரின் வேற்படைக்குப் பேரச்சத்தை உண்டுபண்ணியது. கொங்குநாட்டைத் தன் ஆட்சியில் கொண்டு வந்த படைக்கே இத்தகைய அச்சத்தை உண்டாக்கியது.[16]

சோழ பாண்டியரின் தோல்வி

இவனது போர் வலிமையையும் அதனால் பெற்ற புகழையும் அறியாத சோழரும், பாண்டியரும், சில வேளிர் மன்னர்களும் ஒன்றுதிரண்டு வந்து இவனைத் தாக்கினார்கள். இவனும் எதிர்த்துத் தாக்கினான். போரில் முதன்முதலில் பகைவரைத்

---

12 பதிற். 22 : 26 'அண்ணலம் பெருங்கோடு'—கோபி வட்டம்

13 ஷை. பதி. 3 : 4 'மதியுறழ் மரபின் முதியர்'
மதி = திங்கள் குலத்தவராகிய பாண்டியர்
உறழ் = முரண்பாடு

14 பதிற். பதி. 3 : 4

15 ஷை 3 : 2-3

16 பதிற். 22 : 15-16—'கொங்கர் நாடகப் படுத்த வேல்கெழு தானை வெருவரு தோன்றல்.' இதனைக் கொங்கர் நாடடை அகப்படுத்திய பல்யானைக் குட்டுவன் என்று பிரித்துப் பொருள் கொண்டு கொங்குநாட்டைத் தன் ஆட்சிக்குக்கீழ்ப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் கொண்டுவந்தான் என்று சிலர் கூறுகின்றனர். இவ்வாறு பொருள்கொள்வது சமகால அரசர்களின் வரலாற்றை ஒப்புநோக்குகையில் ஒத்துவரவில்லை. இவனது காலத்துப் பாண்டிய வேந்தன் பசும்பூட்பாண்டியன் என்று வழங்கப்பட்டவனான நெடுஞ் செழியன் ஆவான். இவன் கொங்கர்களை வென்ற செய்தியை அவனது வரலாற்றில் காணலாம். அன்றியும் கொங்கு நாட்டுக் குடிமக்களாகிய மழவர் களுக்கு (பதிற். 21 : 24 'குவியற்கண்ணி மழவர் மெய்ம்மறை') இவன் கவசம் போல் விளங்கினான் என்பதோடு மாறுபாடாய் அமையும். மேலும், பாட்டில் கூறப்பட்ட இந்த நிகழ்ச்சி பதிகத்தில் கூறப்படவில்லை. இது பல்யானைக் குட்டுவனின் வெற்றியாயின் பதிகத்தில் விடுபடக் காரணமில்லை.

தாக்கும் படை தார்ப்படை எனப்படும்.[17] வேந்தர்களின் இந்தத் தார்ப்படை பல்யானைச் செல்கெழு குட்டுவனின் தாக்குதலால் அழிவுற்றது.[18] இந்த நிலையில் எஞ்சிய படையையும் தாக்கும் பொருட்டு இவன் தன் படைவீரர்களுக்குப் பெருஞ்சோறு வழங்கிப் போர் விழா நடத்தினான். அப்போது போர்வீரர்கள் வஞ்சினங் கூறலாகிய மந்திரம் சொல்லிக் கடவுளை (அயிரைமலைக் கொற்றவை) வழிபட்டனர். பகைவரின் தார்ப்படை தாக்கிய போது தாம் பெற்ற விழுப்புண்களில் வழியும் குருதியைத் தூவிப் படையின் வெற்றி முரசை முழக்கினர். இந்த முரசொலியின் எழுச்சிமிக்க ஒலியைக் கேட்டு இவனது எதிரிப் படையினர் காடுகளிலும், கடற்பகுதிகளிலும் ஓடி ஒளிந்துகொண்டனர்;[19] எனவே, தொடர்ந்து போரிடாமல் போர்க்களத்தைவிட்டு நீங்கினர். இதன் விளைவால் எதிரியின் நாடுகளில் சில பகுதிகள் அழிவைப் பெற்றன.[20]

போர் முறை

பல்யானைச் செல்கெழு குட்டுவன் போர்க் காலங்களில் படை வீரர்கள் தங்கியிருந்த அறைகளிலேயே உடன் தங்கியிருந்து ஊக்கமூட்டினான்;[21] குதிரைகள் பூட்டிய தேரில் சென்று போரிட்டான்.[22] வீரர்கள் தம் வேல்களில் இருந்த புலித்தோல் உறைகளை நீக்கிவிட்டு வெற்றிக்கு அறிகுறியாக வலத்தோளால் அவற்றை உயர்த்தியபோதே வெற்றி மாலையை இவன் சூடிக் கொண்டான். அவனே அவர்களின் படைத்தலைவனாக விளங்கினான்.[23]

'பெரும்படைத் தலைவ', 'வயவர்', 'இருக்கை இயலறைக் குருசில்' என்னும் தொடர்களைக்கொண்டு இவன் பெரும் படைத் தலைவனாகவே விளங்கினான் என்று கருத இடமுண்டு; அரச னாக விளங்கவில்லை எனவும் எண்ணலாம். ஆனால், 'கடுஞ் சினவேந்து'[24] என இவன் கூறப்படுவதால் இவன் வேந்தனாக வும் விளங்கினான் என்பது பெறப்படுகிறது.

---

17 பதிற். 22 : 16

18 'மைந்துமலி பெரும்புகழ் அறியார் மலைந்த
போர்எதிர் வேந்தர் தார்அழிந்து ஓராஅலின்' (பதிற். 23 : 16-17)
'பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து' (பதிற். 30 : 30)

19 பதிற். 30 : 31

20 மே. 23 : 20-25

21 மே. 24 : 12-14

22 மே. 25 : 1

23 மே. 24 : 5

24 மே. 30 : 44 ஒப்புநோக்குக. 'பாடினிவேந்து' (பதிற். 17 : 14)

இருகடல் நீரில் ஒருபகல் ஆடல்

இரண்டாம் பத்தில், இமயத்தில் வில்பொறித்த நிகழ்ச்சி குறிப்பிடப்படாமல் அதன் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல மூன்றாம் பத்தில் 'இருகடல் நீரும் ஒருபகல் ஆடிய' நிகழ்ச்சி[25] அதன் பதிகத்தில் மட்டும் கூறப்பட்டுள்ளது. மற்றும் இவன் நெடும்பாரதாயனார் வழிநின்று காடுபோந்த நிகழ்ச்சியும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த நிகழ்ச்சிகள் மூன்றாம் பதிகம் பாடப்பட்ட பின் நிகழ்ந்தவை எனலாம். இவன் 25 ஆண்டுகள் அரியணையில் வீற்றிருந்தான். இம் மூன்றாம் பத்தானது இவனது இருபதாம் ஆண்டில் பாடப்பட்டதாகவும், அண்ணனுக்குப்பின் தம்பி, 5 ஆண்டுகள் கழித்து அரியணை யேறினான் என்றும் கொண்டால், இரண்டாம் பத்துப் பாடப்பட்ட பின் சுமார் ஐந்து ஆண்டுகள் கழித்து மூன்றாம் பத்துப் பாடி யிருக்க வேண்டும் என்பது தெரியவரும். அப்போது அவனைப் பாடிய புலவர் விருப்பப்படி பத்து வேள்விகள் செய்துவிட்டுத் தொடர்ந்து ஆண்டு வரும்போது 'இருகடல் நீரும் ஒருபகல் ஆடிய' நிகழ்ச்சி நடைபெற்றிருக்கவேண்டும்.

தன் யானைப் படையின் ஒரு பகுதியை வங்கக் கடலுக்கும் மற்றொரு பகுதியை அரபிக் கடலுக்கும் அனுப்பிக் கடல் நீரைக் கொண்டுவரச் செய்தான். அந்த இரண்டு கடல் நீரையும் ஒரே நாளில் ஊற்றிக்கொண்டு திருமுழுக்காடியபின் இவன் காடு போந்தான்.

பகைவர்நாட்டு அழிவு-தன் நாட்டு வளம்

இவனது ஆட்சிக்குக் கீழிருந்த நாட்டில் வெள்ளநீர் மோதிக் கேட்கும் பூசல் ஒலி அல்லாது மக்கள் கொடுமைகளுக்குள்ளாகி ஓலமிட்டு அழும் பூசல் ஒலி கேட்டதே இல்லையாம்.[26] இவனை எதிர்த்த பகைவர்களது நாடுகள் வளம் நிறைந்தவையாய் இருந்து, இவனால் அழிக்கப்பட்டுப் பொலிவிழந்து காணப்பட்டனவாம்.[27] முருகன் என்னும் மன்னனின் சீற்றத்திற்குள்ளாகிய உரும்பில் கூற்றம் அழிந்ததுபோல அவை அழிந்துபோயினவாம்.[28]

---

25 பதிற். பதி. 3 : 7

26 பதிற். 27 : 13-15

27 ஷை. 22 : 38, 23 : 13, 25 : 9, 27 : 1, 29 : 10

28 ஷை. 26 : 12-14 முருகன் என்னும் நற்பேர் கொண்ட அரசன் பொதிகை மலையை ஆண்டுவந்ததும், இவனுக்கு நெடுவேளாவி எனச் சிறப்புப் பெயர் இருந்ததும், இவன் மழவர் இனத்தவரைப் புறங்கண்டோடச் செய்து அவர் களின் நாட்டைவிட்டு விரட்டினான் என்பதும் மாமூலனார் அகம். 1-லும், இவனது சீற்றத்தைப் பாண்டரங்கண்ணனார் புறம். 16-லும் கூறுவது இவ்விடத்துக் கருதத்தக்கது.

கொடைத்தன்மை

மழை. பருவத்தில் பெய்ய மறந்தாலும் இவன் வந்தவர்களுக் கெல்லாம் உணவளித்தான்.[29] மரபுக் கடவுளைப் பேணுவதற் காக இவன் செய்த வேள்வி 'பெரும் பெயர் ஆவுதி' எனப்பட்டது. தன்னை நாடி வந்தவர்களுக்கு உணவளிக்க இவன் செய்த வேள்வி 'அடுநெய் ஆவுதி' எனப்பட்டது.[30] வயிரியர் தம் வறுமைக் காலத்திலும் பிறரிடம் கையேந்தும் வழக்கம் இல்லை; பொதுவிடங்களில் தம் இசைக் கருவிகளை முழக்குவர். மக்கள் தாமே முன்வந்து அவர்களுக்கு வழங்கிப் பேணுவர். இத்தகைய வயிரியர்களுக்குப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் பொன் அணிகலன்களையும் உணவுப் பொருள்களையும் வழங்கினான்.[31] தன் கொடை முரசை முழக்கி அவர்களைத் தானே அழைத்து வழங்கினான்.[32]

தன்னைப் பத்துப் பாடல்களில் சிறப்பித்துப் பாடிய புலவர்க்கு அவர் விருப்பப்படி இவன் கொடை வழங்கியுள்ளான். அக் கொடை பத்து வேள்வியாக அமைந்தது. இத்தகைய வேள்வி களை இவனும் பிற வேந்தர்களும் சங்ககாலத்தில் செய்ததற் கெல்லாம் கொடை உள்ளமே காரணம்; வேந்தர்கள் விருப்பம் அன்று என்பதை இவனது வேள்வி நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது.

பாலைக் கௌதமனார் மூன்றாம் பத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாடல்களைப் பாடி முடித்தார். புலவர் வேண்டியதைக் கேட்டுப் பெறலாம் என்றான் வேந்தன். பார்ப்பனப் புலவர் தாமும் தன் மனைவியும் வானுலகம் புக வேண்டினர். புலவரின் விருப்பத்தை நிறைவேற்ற அரசன் செய்வது குறித்துப் பார்ப்பாரிற் பெரியாரைக் (நெடும்பாரதாயனாரைக்) கேட்டான்.

கௌதமனார் பெயரில் பத்து வேள்விகள் செய்ய வேண்டும் என்றார். வேண்டியனவெல்லாம் கொடுத்து நெடும்பாரதாய னாரையே வைத்து அந்த வேள்விகளை முறைப்படி நடத்தினான். தாயனார் ஒன்பது வேள்விகள் செய்தார். பத்தாம் வேள்வியில் புலவரும் அவரது மனைவி பார்ப்பனியும் மறைந்தனர் என்பத னால் அவர்கள் இறந்துவிட்டனர் என்று தெரிகிறது. இது அவர் கள் அடைந்த சுவர்க்கம். இந்தச் செய்தியானது பதிகத்தில் காணப்படுகின்றது.

---

29 பதிற். 24 : 28-30
30 ஷை 21 : 7-13
31 ஷை 23 : 6-8
32 ஷை 23 : 8-9

பண்பு நலம்

தன் வாய்ச்சொல்லாலும், தனக்கிருந்த செல்வாக்காலும், தன் குறிப்புப் பார்வைகளாலும், தான் கேள்விப்பட்ட செய்தி களைக் கொண்டு பிறர்க்கு நெஞ்சாலும் தீமை எண்ணாத கொள்கை உடையவனாய்ப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் விளங்கினான்.[33] நீர், நிலம், தீ, வளி, விசும்பு என்னும் ஐம் பூதங்களை அளந்தறிந்தாலும் அவற்றின் தன்மைகள் அமையப் பெற்றிருந்த இவனது பண்புகளின் பெருமையை அளந்தறிய முடியாது.[34] காலை நேரத்தில் பிறக்கும் தெளிவைப்போல இவனது வாயிலிருந்து பிறக்கும் சொற்கள் அமைந்திருந்தன.[35]

தோற்றப் பொலிவு

இவனது மார்பில் எப்போதும் சந்தனம் படிந்திருந்தது.[36] போர்ச்சின்னமாகிய உழிஞைப் பூவையும் இவன் பொன்னால் செய்து அணிந்துகொண்டான்.[37] இவனது மாலையும் பொன் னால் செய்யப்பட்டது.[38]

துறவிக்குப் பணிவிடை

இத்தகைய போர்த்திறனும், கொடை உள்ளமும், நற்பண்பு களும், ஆடம்பர வாழ்வும் கொண்டிருந்த இவன் காட்டுக்குச் சென்றான். இவனைப் பாடிய புலவரின் விருப்பத்தை நிறை வேற்ற நெடும்பாரதாயனார் உதவினார். உதவிய தாயனாரின் விருப்பத்தை நிறைவேற்ற இவன் காட்டுக்குச் சென்றான். அங்குத் தாயனாரின் தவத்திற்கு இடையூறு வாராமல் காத்து நின்றான் எனலாம்.[39]

சிலகாலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவிட்டுப் பின் துறவு பூண்டான் பல்யானைச் செல்கெழு குட்டுவன். அண்ணன் தொடர்ந்து நாடாண்டு கொண்டிருந்தான் (இளங்கோவடிகள் தன் சிறிய தந்தையான பல்யானைச் செல்கெழு குட்டுவனின் துறவு வழியை இளமையிலேயே பின்பற்றினார்).

முன்னோர்

சினம், காமம், கழிகண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், அன்புமிகவுடைமை, தெறல், கடுமை முதலான தீய பண்புகள்

---

33 ↓ 21 : 3-4
34 ஷை. 24 : 15-16
35 ஷை. 21 : 4
36 'மண்படு மார்ப', பதிற். 21 : 19
37 பதிற். 22 : 27
38 ஷை. 23 : 10
39 ஷை. பதி. 3 : 10-11

அறநெறியில் செல்லும் ஆட்சிக்குத் தடையாய் அமைந்துவிடும் என்னும் உண்மையை உணர்ந்து அந்தத் தீய பண்புகளை விட்டு, நல்ல பல செய்து இவனது முன்னோர் வாழ்ந்துவந்தனர். நாட்டுமக்கள் மாசற்ற தெளிவான அறிவினை உடையவர்கள்; பிறரை நலியாதவர்கள்; வேற்றவர் பொருளைப் பறிக்க விரும்பாதவர்கள்; செந்நெறியில் நடப்பவர்கள்; தம்மை விரும்பி வாழும் துணைவரைப் பிரியாதவர்கள்; பிணியின்றி வாழ்ந்தமையால் மூத்துப் பின்னர்தான் இறந்தனர். இவ்வாறு குடிமக்கள் வாழும்படி பல்யானைச் செல்கெழு குட்டுவனது முன்னோர் அரசாட்சி செலுத்தினார்களாம். இத்தகைய உரம் பெற்ற முன்னோரின் வழிவந்து, அவர்களைக் காட்டிலும் மேம்பட்டு உயர்ந்து விளங்கினானாம் பல்யானைக் குட்டுவன்.[40]

மனைவியின் மாண்பு

இவன் மனைவி சிறந்த உடலழகும் ஒப்பனை அழகும் கொண்டவள். இவனுடன் இவள் அரியணையில் வீற்றிருந்தாள்.[41] இவளது கற்புநெறியால் நாட்டில் பருவமழை தவறாமல் பெய்தது.[42] கணவனைப் போலவே இவளும் திருந்திய இயல் மொழியைப் பேசினாள்.[43] பலரும் இவளைத் தம் பாடல்களில் போற்றிப் புகழ்ந்தனர். அவற்றை அவள் விரும்பவில்லை; உலக மெல்லாம் தன் கணவன்வழி ஒழுகும்படி தன் வாழ்க்கைப் பாங்கை அமைத்துக்கொண்டாள். எனினும் ஆறு தொழில்களைச் செய்யும் அந்தணர்களின் சொற்களை இவள் வழிமொழிந்து ஒழுகியது நமக்கு வியப்பைத் தருகிறது. 'கணவன் எவ்வழி மனைவி அவ்வழி' என்பதே நாம் காணும் அமைதி.

சிறப்புப் பெயர்கள்

'செல்போர்க் குட்டுவன்',[44] 'பொலந்தார்க் குட்டுவன்',[45] 'பெரும்பல்யானைக் குட்டுவன்'[46] என்றெல்லாம் இவன் அடைமொழிகளுடன் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான். பதிகம் இவனைப்

---

40 பதிற். 22 : 10-11

41 ஷை. 21 : 37 'இவள்' என்னும் சுட்டுக்குறிப்பை நோக்குக.

42 ஷை. 21 : 37-38

43 மலையாளம் தோன்றக் காரணமாயிருந்த திரிசொற் கொச்சை மொழி அக்காலத்து அரும்பியதுபோல் உள்ளது. அதனை அவள் பேசாது செந்தமிழ் பேசியது கண்ட புலவர் வியந்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

44 பதிற். 22 : 27

45 ஷை. 23 : 10

46 ஷை. 29 : 14

பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்று குறிப்பிடுகிறது. பல யானைகள் சேர்ந்த கூட்டமானது மேகக்கூட்டம்போல் காட்சி அளிக்கும். அதனைப் 'பல்யானைச்செல்'[47] எனக் குறிப்பிடலாம். அந்த யானைகளாகிய மேகக் கூட்டத்திடையே இவன் மிகுதியும் தோற்றமளித்ததால் பல்யானைச் செல்கெழு குட்டுவன் எனப் பட்டான்.

பாலைக் கௌதமனார்

இவர் இவன்மீது பாடியுள்ள பத்துப் பாடல்கள் பதிற்றுப் பத்தில் மூன்றாம் பத்தாக அமைந்துள்ளன. பொதுவாகக் 'குட்டுவன்' என்று குறிப்பிட்டுச் செய்திகளைத் தெரிவிக்கும் பாடல்கள் உள்ளன. அந்தக் குழப்பங்கள் பிற சேர அரசர்கள் என்னும் தலைப்பின்கீழ் ஓரளவு தெளிவாக்கப்பட்டுள்ளன.

நார்முடிச் சேரல்

'களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்' என்று முழுமையான அடைமொழிகளுடன்கூடிய பெயரால் கூறப்படும் இவன், செங்குட்டுவனது மாற்றாந்தாயின் மகன் ஆவான்; செங்குட்டுவனுக்கு மூத்தவன். தந்தை நெடுஞ்சேரலாதன் ஆவான். தாய் பதுமனின் மகளாவாள். இந்தப் பதுமன் வேளிர் குடியில் ஒரு பிரிவான ஆவியர் குடியைச் சேர்ந்தவன். இந்த ஆவியர்குடி பழனிமலைப் பகுதியில் சிறப்புற்று விளங்கியது.

நன்னன் போர்

வாகை மரத்தைக் காவல் மரமாகக்கொண்டு நன்னன் எழில் மலைப் பகுதியில் அரசாண்டு வந்தான். அவனுக்கும் நார்முடிச் சேரலுக்கும் போர் மூண்டது. போர் 'வாகைப் பறந்தலை' என்னுமிடத்தில் நடைபெற்றது. இந்த இடம் குடமலைக்கு மேற்குப் பக்கம் இருந்தது. போரில் நன்னன் கொல்லப்பட்டான்.[1] அவனது காவல் மரம் 'வாகை' வெட்டிச் சாய்க்கப்பட்டது.

இந்த வெற்றிக்குப்பின் மகிழ்வால் நறவுண்டு மகிழ்ந்தும், இரவலர்களுக்கு வாரி வழங்கியும் இவன் இருந்தான். பின் நேரிமலைப் பகுதிக்குச் சென்று தங்கியிருந்தான்.

---

47 செல் = கார்மேகம்

1 பதிற். 40 : 14; பதிற். பதி. 4 : 7-8; அகம். 199 : 20

இப் போரில் வென்றதன் வாயிலாக நார்முடிச் சேரல் தான் மூன்பு இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான் என்று கல்லாடனார் கூறுகிறார். இழந்த நாடு எது என்பதனை அறியப் பதிகம் நமக்கு உதவி செய்கிறது. அது 'பூழி நாட்டைப் படையெடுத்துத் தழுவிக் கொண்டான்' என்று கூறுகிறது.

பழனிமலைப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய ஆவியர்குடிப் பதுமனிடம் இவன் பெண் கொண்டதால் அவர்களின் உதவியும் இப் போரில் கிடைத்திருக்கும். பூழி நாடு பழனி மலைகளுக்கு வடக்கில் உள்ள நாடு.

நெடுமிடல் சாய்தல்

நெடுமிடலை நார்முடிச் சேரல் போரில் சாய்த்தான் எனக் காப்பியாற்றுக் காப்பியனார் கூறுகிறார். நெடுமிடல் பசும்பூட் பாண்டியனின் பகைவர்களால் சாய்க்கப்பட்டவன் எனப் பரணர் கூறுகிறார். மற்ற இரண்டையும் ஒப்பிட்டு நோக்கும்போது பசும்பூட் பாண்டியனின் பகைவனான நார்முடிச் சேரல் நெடுமிடலைக்[2] கொன்றான் என்பது பெறப்படுகிறது.

எவ்வி என்பவனின் மிழலை நாட்டை நெடுஞ்செழியன் (தலையாலங்கானத்துச் செருவென்றவன்) கைப்பற்றினான் என்பது வரலாறு. இதனால் எவ்விக்கும் பாண்டியருக்கும் இடையே பகைமை உணர்வு இருந்தமை புலனாகும். இந்தப் பகைமை உணர்வு காரணமாகப் பசும்பூட் பாண்டியனின் படைத் தலைவனாய் விளங்கிய நெடுமிடல், எவ்விக்குப் பல இடையூறுகள் செய்துவந்தான். இதனால் எவ்வி, சேரலின் உதவியை நாடினான். சேரல் படை எவ்விக்கு உதவியது. போரில் நெடுமிடல் கொல்லப்பட்டான்.

நெடுமிடலைக் கொன்ற நார்முடிச் சேரலின் படையும் எவ்வியின் படையும் அரிமணவாயில் (அரிமழம்), உறத்தூர் (உரத்தநாடு) ஆகிய இடங்களில் கள்ளும், பெருஞ்சோறும் உண்டு மகிழ்ந்தன.

கொடுமிடல் மாய்தல்

கொடுமிடல்[3] என்பவன் பாண்டியனின் மற்றொரு படைத் தலைவன். நெடுமிடல் போரில் சாயவே இவன் பாண்டியர்

---

[2] பதிற். 32 : 10; அகம். 266 : 12 [3] பதிற். 32 : 10

படைக்குத் தலைமை தாங்கிப் போரை நடத்தினான். இவனும் நெடுமிடலைப்போலவே கொல்லப்பட்டான்.

இந்தப் போர் வெற்றியினால் நார்முடிச் சேரலுக்குக் கிடைத்த நாடு, நெல்லும் கரும்பும் விளையும் நாடாகும்.[4]

போரில் இவன் பெருமலை (பழனிமலை) யானைகளைப் பயன்படுத்தி வெற்றிபெற்றான்.

பெரும் படை

இவனது படை வரம்பில்லாத வெள்ளம்போல் வருவது;[5] நால்வகைப் படைகளையும் கொண்டது;[6] பகைவர்களுக்குப் பேய் போன்ற நடுக்கத்தைத் தருவது; ஆயினும், நகைவர்க்கு (மகிழ்ச்சி செய்பவர்களுக்கு) அரண்போல் விளங்கியது.[7] போர் நிழலில் வாழ்வதையே அப் படை மிகவும் விரும்பியது.[8]

போராற்றல்

பகைவரது காவல் மரங்களில் இவன் தனது யானைகளைப் பிணிப்பான்; அந்த யானைகளைப் பகைவர் நாட்டிலுள்ள நன்னீர்த் துறைகளில் குளிக்கக் செய்து கலக்குவான். வானை மதிலாகவும், வேல்களைக் காவற்காடாகவும், வில், அம்பு, எஃகம் ஆகியவற்றை அகழியாகவும் தம் படைக்குக் காவலாய் அமையும் படி முரசு முழங்கக் காற்றுப்போல் படையை நடத்திச் சென்று இவன் போரிடுவதை நினைத்தவுடனே பகைவர்கள் நடுங்குவர்.[9] கூளியரும் பறவைகளும் உண்டு மகிழப் பிணம் குவிப்பான்.[10] பகைவர்களுக்கு இவன் எமன் போன்றவன் ஆவான்.[11]

வளம் பெருக்குதல்

இவன் நாட்டில் சில பகுதிகள் வளம் குன்றின. அந்த நிலங்களுக்கு இவன் வளப்பத்தை உண்டாக்கினான்.[12] கால்வாய்கள், ஏரிகள் அமைத்து வளமுறச் செய்தான். இவ்வாறு நிலத்தை வளமுறச் செய்ததன் வாயிலாகச் சோர்வு நீக்கிக் குடிமக்களைக் காப்பாற்றினான். இதனால் குடிமக்கள் போர்க் காலங்களில் இவனுக்குப் பெரிதும் உதவினர். உழவர்களின் உதவியால் இவனுக்குப் போர் வெற்றி எளிதாயிற்று.[13]

---

4 புறம். 24 : 1-13
5 பதிற். 33 : 6
6 ஷை. 34 : 4-12
7 ஷை. 31 : 34
8 ஷை. 40 : 1
9 ஷை. 33 : 10-12
10 ஷை. 35 : 5-10
11 ஷை. 39 : 8
12 ஷை. 38 : 3-4
13 ஷை. 31 : 13-14, 32 : 3-5, 37 : 7-10, 38 : 1-2; பதிற். பதி. 4 : 6-9

தோற்றப் பொலிவு

இவன் பெரிய மாலையை அணிந்து இருந்தான். காலிலே பெரிய வீரக்கழல் அணிந்திருந்தான்.[14] இவனது மார்பு அகலமும் உறுதியும் கொண்டது.[15] கொடிகள் பறக்கும் தேரில் ஏறிக் கொண்டு இவன் பீடுடன் செல்வது வழக்கம்.[16] யானைமீது செல்வதும் சில வேளைகளில் வழக்கமாயிருந்தது.[17]

இவன் தலையில் 'நார்முடி' அணிந்திருந்தான். அது பட்டு நூல் போர்வையைக்கொண்டு செய்யப்பட்டு இருந்தது. இதனால் வெள்ளை நிறத்துடன் நாரால் செய்யப்பட்ட முடிபோல் காட்சியளித்தது. அதில் பொன் கம்பிகள் ஊடுருவிய அழகுக் கரைகள் இருந்தன. அந்தக் கரைகளுக்கிடையே மணிகளும் முத்துகளும் சேர்த்து அழகு செய்யப்பட்டிருந்தன. மணிகள் கரிய நிறமுடைய களாப்பழம் போலவும், பொன் கம்பிகளில் கோக்கப்பட்ட முத்துகள் களங்காய்கள் போலவும் நிறத்தால் தோற்றம் அளித்தன. மணியும் முத்தும் கோக்கப்பட்ட இந்தக் கோவை, களாப்பழமும் களங்காயும் கோத்துக்கட்டிய கண்ணி போல் காட்சியளித்தது. இந்தக் கோவையால் அழகுபடுத்தப் பட்டிருந்த பட்டுத் துணியால் ஆன முடியை இவன் அணிந் திருந்ததால் இவன் 'களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான்.[18] இந்தப் பெயர் பாடலின் உள்ளேயே பாடிய புலவரால் குறிப்பிடப்பட்டுள்ளமை வலிமை மிக்க சான்றாகத் திகழ்கிறது.

கொடைத்தன்மை

இனிய பொருள் எதனைப் பெற்றாலும் இவன் அதனைப் பகுத்துண்ணும் பண்பினன் ஆவான்;[19] பாணர்க்கும்,[20] விறலியர்க்கும்,[21] பரிசிலர்க்கும்[22] இவன் பரிசில் வழங்கினான். போர்த் தொழிலில் வல்ல யானைகளை இவன் பரிசிலாக வழங்கியதும் உண்டு.[23] தனக்கு மகிழ்ச்சியூட்டியவர்களுக்கு இவன் நல்ல கலன்களை வழங்கினான்.[24]

---

14 பதிற். 37 : 8
15 டி. 31 : 14-17
16 டி. 33 : 1
17 டி. 38 : 6
18 டி. 38 : 4
19 டி. 38 : 15-16
20 டி. 38 : 9, 40 : 24
21 டி. 40 : 21
22 டி. 38 : 9
23 டி. 40 : 31
24 டி. 37 : 4

யண்பு நலம்

போரில் வெற்றி பெற்றாலும் சினம் தணியாத அரசர்கள்தாம் சங்ககாலத்தில் மிகுதி. இவனோ சினங்கொள்ளாமலேயே நெடுமிடல், கொடுமிடல் ஆகியவர்களோடு போரிட்டு வென்றனன்;[25] போர்க் கைதிகளை நன்முறையில் நடத்தினான். இவன் தனது கொள்கையில் சிறிதும் வளைந்து கொடுக்க மாட்டான். இவன் ஆன்று அவிந்து அடங்கிய செம்மலாக விளங்கினான்.[26]

சிறப்புப் பெயர்

இவனை வானவரம்பன் என்னும் சிறப்புப் பெயராலும் அழைத்துவந்தனர். இவனது ஆட்சியின்கீழ் ஒரு பெரிய நிலப் பரப்பு இருந்தது என்பதை இதனால் உணரலாம்.

'சேரலர் வேந்து'

சேர நாட்டில் ஆங்காங்கே பல அரசர்கள் ஒரே காலத்தில் ஆட்சி செய்துவந்தனர். குட்ட நாட்டை ஆண்டவன் குட்டுவன் என்றும், குட நாட்டை ஆண்டவன் குடவர் கோமான் என்றும், பொறை நாட்டை ஆண்டவன் பொறையன் என்றும் பொதுப்படையாக வழங்கப்பட்டனர். இவன் ஒரு காலத்தில் இத்தகைய சேரர்குடி அரசர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கியமையால் இவன் 'சேரலர் வேந்து'[27] எனக் குறிப்பிடப் பட்டான்.

செல்வமிகுதி

இவனும் இவனது சுற்றத்தார்களும் செல்வத்தை வாரி வாரி வழங்கினர். எனினும் இவனது செல்வம் குறைவுபட வில்லை. அந்த அளவு மிகுதியான செல்வம் இருந்தது.[28]

தூங்கெயில் என்பது ஒருவகைக் கோட்டை. அது வானம் என்னும் நகரில் அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கோட்டையை அமைத்தவன் கடவுள் அஞ்சி என்பவன். அந்தக் கோட்டையின் காவலன் வண்டன் என்பவன் ஆவான். இந்தக் காவலை நாடு காவல் என்றும் கொள்ளலாம். அவன் பெருஞ் செல்வனாகவும், கொடையாளியாகவும் விளங்கினான். அந்த வண்டன்போல நார்முடிச் சேரலும் சிறந்து விளங்கினான்.[29]

---

25 பதிற். 32 : 10
26 ஷ 37 : 10-14
27 ஷ 38 : 8
28 ஷ 32 : 5-8
29 ஷ 31 : 23

இவனது தந்தை 'ஆராத்திருவின் நெடுஞ்சேரலன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இதனால் இவன் தந்தை வழியே இவனுக்குக் கிடைத்த செல்வம் மிகுதி எனத் தெளிவாகிறது.

ஆட்சி

ஆளுந்திறமை, கொடை, வீரம் இவை அனைத்தும் ஒருங்கே பெற்றவன். மக்கள் மகிழ்வுடன் கடவுளை வழிபட்டு வாழும்படி இவன் நல்லாட்சி நடத்தினான்.

மனைவியின் மாண்பு

அவள் வானத்துச் செம்மீன் போலக் கற்புக்கடம் பூண்டவள்.[30] அவளது கற்பை அறக்கற்பு எனப் புலவர் கூறுகின்றார். அறக்கற்பென்பது ஊடியும் கூடியும் இல்லற நெறியில் வழுவாது கணவனுடன் வாழ்வது. ஏனைய ஆறிய கற்பும், சீறிய கற்பும் இன்றி அவளது கற்பு அறக்கற்பாய் அமைந்தது.

தழைத்த கூந்தல், காதிலே குழை, அந்தக் குழைக்கே ஒளி நல்குவதுபோல் அமைந்து ஒளிரும் நெற்றி, மார்பிலே பொன்னாலான இழைகள், அந்த இழைகளுக்கு ஒளி ஊட்டுவது போல் விளங்கி அழகுத் தெய்வம் பியத்துத் தின்னும் உத்தி. இத்தகைய நலங்களுடன் அவள் விளங்கினாள்.

காப்பியனார்

காப்பியாறு என்னும் ஊரில் வாழ்ந்த புலவர் காப்பியனார் என்னும் பெயரைப் பெற்றார். காப்பியன் என்பது காப்பியம் இயற்றியமையால் வழங்கப்பட்ட பெயர் என்றும் தெரிகிறது. தொல்காப்பியனார், பல்காப்பியனார் என்னும் பெயர்கள் இதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன. இந்தக் காப்பியனார் காப்பிஆற்றின்மீது காப்பியம் பாடியதால் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் பெயரைப் பெற்றார் எனக் கொள்வது பொருத்தமாயிருக்கும். காப்பியாறு இப்போது வழங்கும் கபினி என்னும் ஆறாக இருக்கலாம்.

பதிற்றுப்பத்தில் உள்ள இவர் பாடிய பத்துப் பாடல்களில் ஒரு புதுமையான அமைப்பைக் காண்கிறோம். இந்தப் பாடல்கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளதே அந்தப் புதுமையாகும். ஒரு பாடலின் கடைசிப் பகுதி அடுத்த பாடலின் முதற்

30 பதிற். 31 : 27-28

பகுதியில் அமையும்படி அமைத்துப் பாடுவது அந்தாதித் தொடை. பதிற்றுப்பத்து 34, 35, 38ஆம் பாடல்களின் கடைசி அடி அப்படியே அடுத்த பாடலின் முதல் அடியாக அமைந் திருப்பதையும், பிற பாடல்களில் (இறுதிப் பாடல் நீங்கலாக) இறுதியில் உள்ள இரண்டு சீர்கள் அடுத்த பாடலின் தொடக் கத்தில் அமைந்திருப்பதையும் நாம் பார்க்கிறோம்.

இந்தப் புலவர் திருமால்மீது பற்றுடையவர்போல் காணப் படுகிறார். மாலைக் காலத்தில் துளசி மாலைச் செல்வனை மக்கள் வழிபடுவதாகவும் நார்முடிச் சேரலின் மார்பு திருமாலிருஞ் சோலை மலை (விண்டு விறல்வரை) போல் இருப்பதாகவும் இவர் கூறுவதால்[31] இவரது திருமால் பற்று விளங்குகிறது.

இவர் மாலைக் காலத்துக் காட்சிகளில் மகிழ்ந்து திளைத் துள்ளார். மாலைக் காலத்தில் திருமால் கோயிலின் மணி கேட்பதும், மக்கள் குளிர்ந்த நீர்த்துறைகளில் நீராடிவிட்டு வந்து திருமாலின் திருவடிகளைப் பரவுவதும் இவரது உள்ளத்தைக் கவர்ந்துள்ளன.[32]

போர்க்களத்தில் பேய்களும், முண்டங்களும் ஆடுவதும், குருதி பாய்ந்து செக்கச் செவேலெனத் தோன்றுவதும் அந்திமாலையில் தோன்றும் வானக் காட்சிகளை நினைவுக்குக் கொண்டு வருகின்றன.[33]

செங்குட்டுவன்

பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் சேரன் செங்குட்டுவனும் ஒருவனே.

பெற்றோர்

குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் இவனின் தந்தை யாவான். 'சோழன் மணக்கிள்ளி' என்பவள் இவனது தாய் ஆவாள்.[1]

தாயின் பெயர் சோழ அரசனின் பெயராகவும், ஆண் மகனின் பெயராகவும் அமைந்திருப்பதைப் பிற பெயர்களை ஒப்புநோக்கி அறியலாம். இக்காலத்தில் கணவன் பெயருக்கு முன் 'திருமதி'

---

31 பதிற். 31 : 7-10
32 டி 31 : 6-9
33 டி 35 : 6-9
1 பதிற். பதி. 5 : 2-3

என்னும் அடைமொழியைச் சேர்த்து மனைவியின் பெயராகக் குறிப்பிடும் வழக்கம்போல, அக்காலத்தில் எல்லாரும் அறிந்த தந்தையின் பெயரால் மகளைக் குறிப்பிடும் வழக்கம் இருந்ததை இந்தப் பெயர் காட்டுகிறது. திருமணமாகு முன்னர்ப் பெண்டிரைத் தந்தையார் பெயரோடு தொடர்புபடுத்தியோ, தந்தையின் பெயரால் குறித்தோ வந்தது தெரிகின்றது.[2]

சிலப்பதிகாரப் பதிகத்துக்கு அடியார்க்கு நல்லார் உரையில் 'சேரலாதற்குச் சோழன் மகள் நற்சோணை ஈன்ற மக்களிருவருள்' என்னும் தொடர் உள்ளதால் 'சோழன் மணக்கிள்ளியீன்ற மகன்' என்னும் பதிற்றுப்பத்து ஐந்தாம் பதிகத்தின் தொடர் கூறுவது சோழன் மகள் நற்சோணையையே குறிக்கும்.

ஆட்சியின் தொடக்கநிலை

இவனது தந்தை நெடுஞ்சேரலாதன் குடநாட்டு மாந்தை நகரில் இருந்துகொண்டு தனது ஆட்சியைத் தொடங்கினான். சிறிய தந்தை பல்யானைச் செல்கெழு குட்டுவன் குட்டநாட்டு வஞ்சியில் இருந்துகொண்டு ஆட்சியைத் தொடங்கினான். அண்ணன் நார்முடிச் சேரல் குன்ற நாட்டில்[3] தனது ஆட்சியைத் தொடங்கினான். இவன் குட்டநாட்டுக் கிழக்குப் பகுதியையும் பூழி நாட்டையும் தன்னகத்தே கொண்ட பகுதியில் இருந்து ஆட்சி செய்தான். இந்த ஆட்சித் தொடக்க நிலைகள் தந்தை அரசாண்ட காலத்திலேயே நாடுகாவல் பணி என்ற முறையில் அமைந்தவை.[4]

முசிறித் துறைமுகம் இவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்று இவனைப் பதிற்றுப்பத்தில் பாடிச் சிறப்பித்த பரணர் குறிப்பிடுகிறார்.[5] வஞ்சி மாநகரில் இருந்துகொண்டு இவன் நாடாண்டதைச் சிலப்பதிகாரம் விளக்கமாகக் கூறுகிறது. இவை, இவன் தனது முன்னோருக்குப் பின் முழுமை பெற்றுப் பேரரசனாக, சேரநாட்டுக்கெல்லாம் பெருவேந்தனாக விளங்கிய காலத்து நாட்டுப் பரப்பு எனக் கொள்வது பொருந்தும்.

---

2 இந்த நிலையை மையமாகக் கொண்டு டாக்டர் ச. சோ. பாரதி சேரநாட்டில் 'மருமக்கள் தாயமுறை' வழக்கத்தில் இருந்தது என்று வேறு வகையில் விளக்கம் கூறுகிறார். இந்த முடிவு வேறு பிற சான்றுகளைக் கொண்டு முடிவுசெய்ய வேண்டியதாகும்.

3 குட்ட நாட்டுக்கும் வேணாட்டுக்கும் இடையில் கிழக்குப் பகுதியில் இருந்த நாடாகும்.

4 துரைசாமி பிள்ளை, ஔவை, 'சேர மன்னர் வரலாறு', பக். 151

5 புறம். 343 : 10

மோகூர்ப் போர்

'மோகூர் மன்னன் முரசங்கொண்டு'[6] என்பதால் இப் போர் நிகழ்ச்சி சிறப்புடையது. இது பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊராகும்.[7] பழையன் என்பவன் இவ்வூரை ஆட்சிபுரிந்து வந்தான். இவனைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது படைத் தலைவனாக விளங்கிய பழையன் மாறன் எனக் கொள்வதும் பொருத்தமாகும்.

அறுகை என்பவன் அக்காலத்தில் இருந்த மற்றுமோர் அரசன். இவன் குன்றத்தூரில் இருந்து ஆட்சி புரிந்து வந்தான்.[8] இந்த அறுகை செங்குட்டுவனது நண்பன். செங்குட்டுவனது அண்ணன் நார்முடிச் சேரல் குன்ற நாட்டில் தனது ஆட்சியைத் தொடங்கினான். அவன் இருபத்தைந்தாண்டுகள் அரசாண்டான். அண்ணனுக்குப் பின் சுமார் ஐந்தாண்டுகள் கழித்துத் தன் ஆட்சியைத் தொடங்கி ஐம்பத்தைந்தாண்டுகள் செங்குட்டுவன் அரசாண்டான். எனவே, 35 ஆண்டுகள் (55-20) அண்ணனுக்குப் பிறகு அரசாண்டான். அக்காலத்தில் அண்ணனது குன்ற நாட்டுப் பகுதியைக் குன்றத்தூரில் இருந்துகொண்டு இந்த அறுகை ஆண்டு வந்தானாகையால், சேரர்களுக்கு அவன் நண்பனாக விளங்கினான். வஞ்சிக்கும் குன்றத்தூருக்கும் இடைவெளி சற்று அதிகமாக இருந்ததாலும்[9] செங்குட்டுவனுக்கும் இந்த அறுகைக்கும் நட்பு நீடித்திருந்தது.

மோகூர்ப் பழையன் அறுகையைத் தாக்கி வென்றான் போலும். அறுகையைப் பிடித்து வந்து சிறையில் மறைத்து வைத்துக்கொண்டனர்.[10] தன் நண்பனை மறைத்து வைத்த செய்தி கேட்டுப் பொறுக்காத செங்குட்டுவன் பழையனை அவனது மோகூரிலேயே தாக்கினான்.

இந்தப் போரில் பழையனுக்குத் துணையாகப் பாண்டியனும் சோழனும் சேர்ந்துகொண்டனர். அன்றியும் வேளிர் அரசர்கள் பலரும் சேர்ந்துகொண்டனர். இவர்களுக்கும், செங்குட்டுவன்

---

6 பதிற் 44 : 14, 49 : 8–9, .பதிற். பதி. 13–14

7 இந்த மோகூர் இப்போது மதுரை வட்டத்தில் மோகர் என்னும் பெயருடன் வழங்கும் ஊர் என்றும், நாமக்கல் வட்டத்தில் மோகனூர் என்னும் பெயருடன் வழங்கும் ஊர் என்றும் பலவாறு கருதப்பெறுகிறது. 'மோகர்' என்பது பொருத்தமெனத் தோன்றுகிறது.

8 துரைசாமி பிள்ளை, ஔவை, மு. கு. நூ., பக். 160

9 'சேண னாயினுங் கேளென மொழிந்து' (பதிற். 44 : 11)

10 'ஒளித்த களையாப் பூசல்' (பதிற். 44 : 12)

படைக்கும் பெரும்போர் நடந்தது. போர்க்களத்தில் குருதியாறு வெள்ளம்போல் ஓடிற்று.

செங்குட்டுவன் பழையனது காவல் மரமாகிய வேப்ப மரத்தை வெட்டிச் சாய்த்தான்; அவனது கோட்டைகள் பலவற்றைக் கடந்தான்; பழையன் கூறிய வஞ்சின மொழிகள் பொய்யாகும்படி வெற்றி பெற்றான். போரில் பழையன் மாண்டான் எனலாம். அவனது வீரர்களும் மாண்டனர்.

தம் கணவன்மார் போரில் மாண்டது கண்டு மோகூரிலிருந்த அவர்களது மனைவியர் கைம்மைக் கோலம் பூண்டனர். கைம்மைக் கோலத்திற்குத் தலைமுடியை மழித்துக்கொள்வது அக்கால வழக்கம். அவ் வழக்கப்படி அவர்கள் மொட்டை அடித்துக் களைந்தெறிந்த முடியைக்கொண்டு கயிறு திரித்து அக் கயிற்றால் தான் வெட்டி வீழ்த்திய வேப்பமரத் துண்டை யானைகளோடு பிணித்துச் செங்குட்டுவன் தன் நாட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தான். அம்மரத்தால் தன் வெற்றிமுரசைச் செய்துகொண்டான்.

குராலம் பறந்தலைப் போர்

மோகூர்ப் போரில் வென்று திரும்புகையில் பழையனது நண்பர்களாக விளங்கிய சில அரசர்கள் செங்குட்டுவனைத் தாக்கினர். அவர்களை இவன் குராலம் பறந்தலை என்னும் இடத்தில் தாக்கி வென்றான்.[11]

நேரிவாயில் போர்

சோழநாட்டு உறையூரின் தென்வாயில் நேரிவாயில் எனப் பெயர் பெற்றிருந்தது. பதிற்றுப்பத்தில் 'வாயிற்புறம்' என்று கூறப்படுவதும் இதுவேயாகும். செங்குட்டுவனது மைத்துனர் கிள்ளிவளவன் ஆவான். கிள்ளிவளவன் சோழநாட்டுப் பெரு வேந்தனாவதைச் சோழர் குடியைச் சேர்ந்த ஒன்பது மன்னர்கள் விரும்பவில்லை. எனவே, அவர்கள் கிள்ளிவளவனுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். செங்குட்டுவன் தன் மைத்துனனுக்கு உதவ முன்வந்தான்.

நேரிவாயிலில் அப் போர் நடைபெற்றது. செங்குட்டுவன் வெற்றிபெற்றான். ஒன்பது குடை மன்னர்களும் ஒரே பகற்

---

[11] பதிற் 44 : 19; சிலப். 27 : 118-123, 28 : 116-117

பொழுதில் அழிக்கப்பட்டனர்.[12] கிள்ளிவளவன் அரசனாக்கப் பட்டான்.

வியலூர்ப் போர்

வியலூர் என்பது சேரநாட்டின் வடபகுதியில் இருந்த ஓர் ஊர். சிறுகுரல் நெய்தல் வியலூர், வயலை வேலி வியலூர், விரிநீர் வியலூர் என்றெல்லாம் இந்த ஊர் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளது. இந்த வியலூரில் செங்குட்டுவனுக்கு எதிரான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதனால், செங்குட்டுவன் இந்த ஊரைத் தாக்கி அழித்தான்.[13]

கொடுகூர்ப் போர்

வியலூருக்கு வடபால் ஓர் ஆறு ஓடிற்று. அந்த ஆற்றின் வடகரையில் கொடுகூர் என்னும் ஊர் இருந்தது. வியலூரில் செங்குட்டுவனிடம் தோற்ற படையின் சார்பாளர் கொடுகூரில் செங்குட்டுவனைத் தாக்கினர். செங்குட்டுவன் அவர்களுடன் போரிட்டு அவ்வூரையும் அழித்தான்.[14]

இடும்பில் போர்

இது சோழநாட்டு ஊராகும். இவ்வூர் தேவாரத்தில் 'இடும்பாவனம்' என்றும் இக்காலத்தில் இரும்பாதவனம் என்றும் வழங்கப்படுகிறதென்பர்.[15] செங்குட்டுவன் வெட்சிப் பூச்சூடி ஆனிரைகளைக் கவரும் போரில் ஈடுபட்டான். அவன் தான் கவர்ந்துவந்த ஆனிரைகளை இந்த ஊரின் புறத்தே இளைப் பாற்றிப் பின் தன் நாட்டுக்கு ஓட்டிக்கொண்டு வந்தான். ஆனிரைகளுக்கு உரியவர்கள் இவனை அவ்வூரில் எதிர்த்துத் தாக்கினர். நடந்த போரில் செங்குட்டுவன் வெற்றி பெற்றான்.

கொங்குநாட்டுப் போர்

சோழ அரசனும் பாண்டிய அரசனும் சேர்ந்து கொங்கு நாட்டில் செங்குட்டுவனைத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் போர்க்களம் குருதியால் செங்களம் ஆகியது. இந்தப் போரில் செங்குட்டுவன் வெற்றி பெற்றான்;[16] களவேள்வி செய்து வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தான்.

---

12 பதிற். பதி. 5 : 19
13 ஷை 5 : 11-14
14 ஷை 5 : 12
15 கோவிந்தன், புலவர், கா. 'சேரர்', 46
16 சிலப். 25 : 152-155, 29 : உரைப்பாட்டுமடை

தக்கணப் போர்

வஞ்சிக் காண்டத்தில் தக்கணப் போர் பற்றிய செய்தி காணப்படுகிறது.[17] தமிழ்நாட்டின் வடஎல்லைப் பகுதிகளில் பல்வேறு குடியைச் சேர்ந்தவர்கள் செல்வாக்குப் பெற்று விளங்கினர். கொங்கணர்,[18] கலிங்கர்,[19] கருநாடர்,[20] பங்களர்,[21] கங்கர்,[22] கட்டியர்,[23] வடஆரியர்[24] என்போர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர். இவர்கள் எல்லோருமே தமிழைத் தாய் மொழியாக உடையவர்கள் அல்லர்.[25] இவர்களுக்கும் செங்குட்டுவன் தலைமையேற்ற தமிழர் படைக்கும் போர் நடந்தது. போர் வேங்கடமலைப் பகுதியில் நடைபெற்றது. இந்தப் போரில் செங்குட்டுவன் வெற்றி பெற்றான்,

கடல் பிறக்கோட்டல்

இவன் நிலப் போர்களில் வெற்றி பெற்றது போன்றே கடற் போரிலும் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.[26] இப் போரைப்பற்றிக் குறிப்பிடும் இடங்கள் பலவற்றில் போர்க்களம் கடலாக உருவகம் செய்யப்பட்ட இடங்கள் பல உண்டு. நிலப் பகுதிகளில் நடந்த போரே உருவக நிலையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளதோ என்று எண்ணத்தோன்றும். உண்மை அஃது அன்று. 'நீர்புக்குக் கடலொடு உழந்தான்'[27] என்னும் தொடரைச் சில இடங்களில் 'கடற்படை' என்றே கொள்ளவேண்டும்.

இவன் பின்னிடச்செய்த கடற்படை எது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவன் தந்தை நெடுஞ்சேரலாதன் கடற்போரில் ஈடுபட்டுக் கடப்ப மரத்தைக் காவல் மரமாக உடைய கூட்டத்

---

17 சிலப். 25 : 156-159

18 கொண்கான தேயத்தவர். சேர நாட்டுக்கு வடக்கிலும், கருநாடகத்திற்கு மேற்கிலும் இருந்தது கொண்கான நாடு.

19 கலிங்க நாட்டவர்

20 கருநாடகத்தில் செல்வாக்குப் பெற்றவர்

21 வங்க நாட்டிலிருந்து வந்தேறி வாழ்ந்தவர்

22 கங்கக்குடியைச் சேர்ந்தவர்

23 கட்டிக்குடியைச் சேர்ந்தவர்

24 வடநாட்டு ஆசியர், தென்னாட்டு ஆரியராகிய தமிழரிடமிருந்து வேறுபட்டவர்

25 'வண்டமிழ் மயக்கம்' என்னும் சிலப்பதிகாரத் தொடர் இவர்களை எதிர்த்துப் போரிட்டவர்கள் அனைவரும் தமிழ்மொழி பேசுபவர் என்று குறிப்பிடுவதால் இவர்களைத் தமிழ்மொழியைத் தாய்மொழியாக உடையவர் அல்லர் எனக் கொள்வது பொருத்தமாய் அமைகிறது.

26 அகம். 212 : 15 - 16 ; பதிற். 41 : 25-27, 42: 21-22, 45 : 20-23, 46 : 11-13, 48 : 3-4, 50 : 12-13, பதிற பதி. 20-21 ; சிலப். 28 : 119, 23 : கட்டுரை-12

27 பதிற். 48 : 3-4

தாரை வென்றான். அப் போரில் செங்குட்டுவன் துணைநின்று தந்தைக்கு வெற்றி தேடித் தந்திருக்கலாம் அல்லது தந்தையால் அடக்கப்பட்ட கடல் கூட்டத்தார் இவன் காலத்து மீண்டும் குழப்பம் விளைவித்தபோது மீண்டும் போரில் ஈடுபட்டு வெற்றி கண்டிருக்கலாம்.

செங்குட்டுவனைப் போன்று பழங்காலப் பாண்டிய அரசன் ஒருவனும் கடலில் வேலிட்டதை (கடற் போரில் வென்றதை) இவ்விடத்தில் நினைவுகூரலாம்.[28]

கடல் பிறக்கோட்டிய இந்தச் செயலைக் கடல் கடந்த செயலாக எண்ணிப் போற்றிய நிலையும் உண்டு.[29]

தகடூர்ப் போர்

செங்குட்டுவன் தகடூரை முற்றுகையிட்டான்.[30] அப்போது அங்கு அவனது முற்றுகையை எதிர்த்துப் போரிடுவோர் இல்லை. எனவே, இவன் வறிதே தன்னாடு திரும்பினான். அப்போது அங்கு இவனது பெருஞ்சினத்திற்குத் தீனி கிடைத்தது. கடலை முற்றுகையிட்டான். கடலில் தன்னை எதிர்த்த பகைவர்களைக் கடலுக்கப்பால் ஓட்டிவிட்டான். தகடூர்ப் போரானது கடல் பிறக் கோட்டிய நிகழ்ச்சிக்குமுன் நடைபெற்றதாகும்.

இமயத்தில் வில் பொறித்தல்

செங்குட்டுவன் தன் முன்னோர்களைப்போலவே தானும் இமயமலையில் தன் வில் சின்னத்தைப் பொறித்தான்.[31]

கடம்பெறிதல்

செங்குட்டுவன் தன் தந்தை நெடுஞ்சேரலாதனைப் போலவே கடப்ப மரத்தைக் காவல் மரமாக உடைய கூட்டத்தாரை வென்றான்.[32] இந்த வெற்றி தன் தந்தை வெற்றியின் கூறுபாடா யிருக்கலாம். அல்லது இவனது ஆட்சிக் காலத்தில் மீண்டும் போர் மூண்டு அடைந்த வெற்றியாக இருக்கலாம்.

---

28 சிலப். 11 : 17-22
29 சிலப். 17, பூவைநிலை (உள்வரி வாழ்த்து) 3
30 அகம். 212 : 14-16
31 சிறுபாண். 48-49
32 சிலப். 17, பூவைநிலை (உள்வரி வாழ்த்து) 3, 25 : 1-187, 28 : 135, 29 : ஊசல்வரி, 1 : 3-5, 2 : 3-5, வள்ளைப்பாட்டு, 3

இரண்டாம் வடநாட்டுப் போர்

முதலாம் வடநாட்டுப் போர் மேலே கூறப்பட்டுள்ளது. பின்னர்ச் செங்குட்டுவன் தன் தாயாரைக் கங்கையில் நீராட்டுவதற்காக வடநாடு சென்றான். அப்போது ஆரிய மன்னர் ஆயிரவர் இவனை எதிர்த்துத் தாக்கினர். செங்குட்டுவன் அவர்களைப் போரிட்டு வென்றான். இஃது இவனது இரண்டாம் வடநாட்டுப் போராகும்.[33]

மூன்றாம் வடநாட்டுப் போர்

பாண்டிய நாட்டில் தன் கணவனை இழந்து சேரநாட்டுக்கு வந்து விண்ணுலகடைந்த கண்ணகிக்குக் கோயில் எடுத்து வழிபட விரும்பிய தன் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று செங்குட்டுவன் விரும்பியதால், இம் மூன்றாம் வடநாட்டுப் போர்[34] நடைபெற்றது. கண்ணகிக்குச் சிலை செய்வதற்கு வேண்டிய கல்லை இமயமலையிலிருந்து எடுத்து வருவதென முடிவு செய்தான்.[35]

அவனது படைத் தலைவன் வில்லவன் கோதை வீரமுழக்கம் செய்தான்.[36]

வடநாடு செல்லும் வழியில் உள்ள மன்னர் எல்லாரும் அவன் வரும் வழியில் தமிழ்நாட்டுச் சின்னங்களாகிய வில், புலி, கயல் கொடிகளைப் பறக்க விடவேண்டுமென்று ஓலை அனுப்பும்படி கூறினான். 'ஓலை அனுப்ப வேண்டா' என்றும் வஞ்சிமாநகரில் உள்ள ஒற்றர்களே செய்தியை அறிவிப்பர் என்றும் அவனது மற்றொரு படைத்தலைவன் அழும்பில்வேள் கூறினான்.[37] வஞ்சியில் வடநாட்டுப் படையெழுச்சி குறித்துப் பறையறையப் பட்டது.

'வடநாட்டு மன்னர் தலையில் கண்ணகிக்குக் கல் ஏற்றிக் கொண்டு வராமல் மீள்வேனே யானால் என்னைக் கொடுங்கோலன் என்று இகழ்க' எனச் செங்குட்டுவன் வஞ்சினம் கூறினான். இவனது ஆசான் இவனைப் புகழ்ந்தான். கணியன் நல்ல நேரம் பார்த்துச் சொன்னான். படைகள் புறப்பட்டன. வஞ்சிப்போர் அவர்களின் நோக்கம். செங்குட்டுவன் சிவனையும் திருமாலையும் வழிபட்டான். வஞ்சியை விட்டு வந்து நீல மலையில் தங்கினான்.

---

33 சிலப். 25 : 160-164
34 பதிற். பதி. 5 : 4-10
35 சிலப். 25 : 168-169
36 டி 25 : 151
37 டி 25 : 149-177

நீலமலைப்[38] பாடி வீட்டில் இருக்கும்போது கலை நிகழ்ச்சி களைக் கண்டு மகிழ்ந்தான். கொண்கான நாட்டவரும், குடகு நாட்டவரும் இந்தக் கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தி மகிழ்வூட்டினர். அப்போது சஞ்சயன் என்னும் தூதன் வந்தான். நூற்றுவர் கன்னராகிய தம் மன்னர், செங்குட்டுவன் சார்பில் சென்று இமயத்தில் கண்ணகிக்குக் கல்லெடுத்து வந்து தர விழைவதாக அவன் கூறினான். கல்லெடுப்பதோடு கனகவிசயர்க்குப் பாடம் கற்பிப்பதே தன் நோக்கமாகையால் தானே செல்ல விரும்புவ தாகவும், நூற்றுவர்கன்னர் விரும்பினால் செங்குட்டுவன் கங்கையைக் கடக்க உதவி செய்யலாம் என்றும் அத் தூதனிடம் கூறினான்.

சஞ்சயன் போனபின் சட்டை அணிந்த தென்னவர் ஆயிரவர் செங்குட்டுவனுக்குத் திறை தந்து தம் அரசன் பாண்டியன் அளித்த வாழ்த்து மடலையும் தந்தனர்.

பின்னர்ச் செங்குட்டுவன் படை நடத்திச் சென்று கங்கை ஆற்றை அடைந்தான். ஆற்றைக் கடக்க நூற்றுவர்கன்னர் உதவினர். செங்குட்டுவன் தன் படையுடன் கங்கையின் வட கரையை அடைந்தான்.

வடநாட்டு அரசர்கள் கனக விசயர் தலைமையில் திரண்டனர். உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் ஆகியோர் அவ்வாறு திரண்ட வர்களில் சிலராவர். இவர்கள் செங்குட்டுவனை எதிர்த்துத் தாக்கினர்.[39]

கடும்போர் நிகழ்ந்தது. செங்குட்டுவன் தும்பை சூடி நூழில் போரில் ஈடுபட்டான். போர் மொத்தத்தில் 18 நாழிகைதான் (சுமார் 7 மணி நேரந்தான்) நடைபெற்றது. செங்குட்டுவன் வெற்றி பெற்றான். கனகவிசயர் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் மற்றும் 52 பேர் போர்க்களத்தில் கைது செய்யப் பட்டனர். இந்த நிலையை அறிந்த ஏனைய வடநாட்டு அரசர்கள் துறவிக்கோலம் பூண்டு தப்பி ஓடினார்கள். இவன் தன் வஞ்சினத்தை முடித்துக்கொண்டான். இமயமலையில் கண்ணகிக்குக் கல் எடுத்தான்; கனகவிசயர் தலையில் சுமத்திக் கொண்டு வந்து கங்கையில் நீராட்டினான்.

---

38 சிலப். 26 : 85 (Nilgiris) 39 கூடி. 182-187

தோற்ற ஆரிய அரசர்கள் கங்கை ஆற்றின் தென்கரையில் செங்குட்டுவனுக்குப் பாடிவீடு அமைத்துக் கொடுத்தனர். அந்தப் பாடி வீட்டில் இருந்துகொண்டு தன் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்த தனது வீரர்களுக்கெல்லாம் சிறப்புச் செய்தான். அப்போது தமிழ்நாட்டிலிருந்து வந்த மறையவன் மாடலனுக்குத் தன் எடைக்கு எடை பொன்னைப் பரிசிலாகக் கொடுத்தான்.[40] நூற்றுவர்கன்னர்க்கு நன்றியுடன் விடை கொடுத்து அனுப்பினான்; பின்னர்த் தன் நாட்டுக்குத் திரும்பினான்.

செங்குட்டுவன் அறவேள்வி ஒன்று செய்தான். அப்போது தன் நாட்டுச் சிறையில் இருந்தவர்களையெல்லாம் விடுதலை செய்தான். மற்றும் தான் கைது செய்து வந்திருந்த கனக விசயரையும் விடுதலை செய்தான். வஞ்சி நகருக்கு வெளியே பூஞ்சோலையில் இருந்த வேளாவிக்கோ மாளிகையில் அவர்களை விருந்தினர்களாகத் தங்க வைத்தான்.

கடவுள் பத்தினிக்குச் சிலைசெய்து கோயில் கட்டி வழிபாடு செய்தான். அந்த வழிபாட்டு விழாவில் தமிழ்நாட்டு அரசர்களுடன் பிறநாட்டு அரசர்களும் கலந்துகொண்டனர். விடுதலை பெற்ற கனகவிசயரும், அவர்களுடன் சிறைபிடிக்கப்பட்டு விடுதலை பெற்ற வடநாட்டு அரசர் 52 பேரும், குடக நாட்டுக் கொங்கர், மாளுவ நாட்டு வேந்தர், இலங்கை அரசன் கயவாகு ஆகியோரும் விழாவில் கலந்துகொண்ட சிலர் ஆவர். இவர்கள் தம் நாட்டிலும் கண்ணகிக்குக் கோயில் அமைக்க இருப்பதாகவும், அமைத்து வழிபடும்காலை பத்தினித் தெய்வம் வந்திருந்து அருள் புரிய வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டனர்.

இவன் வஞ்சியில் இருந்து புறப்பட்டது முதல் வெற்றி பெற்று மீண்டதுவரை கடந்து சென்ற காலம் 32 மாதங்கள்[41] ஆகும்.

போர்ச் சிறப்பு

இவன் கடற்போரிலும் மலைப் போரிலும் ஈடுபட்டான். அப் பகுதிகளில் பல கோட்டைகளைக் கைப்பற்றினான்: பாசறைகளில் பல நாள்கள் தூங்காதிருந்தான். அப்போது இவனுக்குப் பால் உணர்வுகள் தோன்றுவதே இல்லை.[42]

---

40 சிலம். 27 : 175 - 176
41 ஷெ 27 : 149
42 பதிற். 50 : 23-26

போரில் தான் கொன்று குவித்த வீரர் பிணங்களிடையே வெற்றிக் களிப்போடு தோள்கொட்டித் துணங்கைக் கூத்து ஆடினான்.[43]

இவனது போர் வெற்றிகள் பலவற்றைச் சிறப்பித்து விறலியர் இவனது தொன்னகரான வஞ்சியில் இரவில் தெரு விளக் கொளியில் ஆடிப்பாடினர்.[44]

இவனது போர்வீரர்கள்—இவன் கூறும் வஞ்சின மொழிகள் இவனுக்குக் கைகூடுமாறு செய்த 'ஒன்றுமொழி மறவர்'[45]—வீரக்கழலே அன்றிக் கொடைக்கழலும் அணிந்திருந்தனர்; அம்பு தைத்துப் புண் ஆறிய அழகிய மார்பினை உடையவர்கள். இவர்கள் தும்பைப்பூச் சூடியதில்லை. அதாவது, வலியச் சென்று போர் தொடுத்தது இல்லை; பனம்பூமாலையை அணிந்திருந்தனர்.[46]

கொடைத்தன்மை

போர் வெற்றியால் பகைவர்கள் நாட்டிலிருந்து இவனுக்குக் கிடைத்த பொருள்கள்,[47] கடல் வாணிகத்தால் இவனுக்குக் கிடைத்த பொருள்கள்[48] ஆகியவற்றை இவன் கொடையாக வழங்கினான்.

விறலியருக்கு ஆரம், பிடி முதலானவற்றை வழங்கினான்;[49] பாணர்க்குப் பொன்னாலான தாமரையை வழங்கினான்;[50] வீரர்களுக்குக் கள்ளும் மாவும் வழங்கினான்;[51] கொண்டி மன்னர்களுக்குப் போர்க் களிறுகளை வழங்கினான்.[52] அகவலர் களுக்குக் (குறி கூறுபவர்களுக்குக்) குதிரைகளும்,[53] பரிசில் நாடி வந்தவர்களுக்குக் களிறுகளும் இவன் வழங்கினான்.[54]

பதிற்றுப்பத்தில் தன்னைப் பாடிச் சிறப்பித்த பரணர் என்னும் புலவர்க்கு உம்பற்காடு என்னும் பகுதியில் அரசுக்குக் கிடைத்த வருவாய் அனைத்தையும் கொடுத்தான். அதனுடன் இவனது அருமை மகன் குட்டுவன் சேரல் என்னும் பெயர் கொண்டவனைப்

---

43 பதிற். 45 : 11-12
44 ஷை. 47 : 7-8
45 ஷை. 41 : 18
46 ஷை. 42 : 1
47 ஷை. 44 : 5
48 ஷை. 48: 4-5; புறம். 343 : 5-6
49 ஷை. 43 : 20-22, 48 : 2, 49 : 2-4
50 ஷை. 48 : 1
51 ஷை. 42 : 12-15
52 ஷை. 43 : 25
53 ஷை. 43 : 28
54 ஷை. 43 : 21-25

புலவர்க்குப் பணிவிடை செய்வதற்கென்று அனுப்பிவைத்தான்.[55] வடநாட்டு வெற்றிக்குப்பின் கங்கையாற்றின் தென்கரையில் பாடி வீடமைத்துத் தங்கியிருந்தபோது தமிழ்நாட்டிலிருந்து வந்த மாடலன் என்னும் மறையவனுக்குத் தன் எடைக்கு எடை பொன் கொடுத்தான் என்ற செய்தியைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம்.

பண்பு நலம்

இவன் பெருஞ்சினம் கொண்டவன்.[56] போர் முழக்கத்தைக் கேட்பதில் பெரும் விருப்பினன்.[57]

சினத்தீயைப்போலவே இவன் தண்ணிய சாயலையும் உடையவன். இவனது அருள் காவிரி நீர் போலவும், குமரி முனை நீர் போலவும் பயனும், புனிதத் தன்மையும்[58] உடையதா யிருந்தது.

தோற்றப் பொலிவு

சந்தனம் பூசி அதன்மேல் வண்ணக் குழம்புகளால் வகைபெற எழுதி வண்டுகள் மொய்க்குமாறு பொலிவுடன் இவனது மார்பு விளங்கியது.[59] பொன்னாலாகிய மாலையையும் அணிந்திருந் தான்.[60] கணையமரம் போன்ற வலிமை மிக்க விலா எலும்புக் கட்டுடன் அகன்றிருந்தது அவன் மார்பாகும்.[61] மன்னர்களின் ஏழு முடிகளைக் கோத்து அணிந்திருந்தான் எனக் கூறுவோரும் உளர்.[62] இவன் பார்வைக்கு அடக்கம் உடையவனாகக் காணப் பட்டான். எனினும், யாருக்கும் வணங்காத ஆண்மை உடையவனாக விளங்கினான்.[63] யானைமீதும் தேர்மீதும் இவன் ஏறிச் சென்றான்.[64]

சிறப்புச் செயல்கள்

இவனது செயல்களில் சிறப்பு மிக்கனவாக இரண்டைக் குறிப்பிடலாம். அஃதாவது கற்பரசி கண்ணகிக்குச் சிலை யமைத்துத் தெய்வமாக்கி வழிபட்டதும், காஞ்சியம் பெருந்துறை என்னுமிடத்தில் தன் ஆயத்தார் புடைசூழ நீர்விழாக் கொண்டாடி யதும்[65] ஆகும்.

---

55 பதிற். பதி. 5 : 3
56 ஷெ 49 : 17
57 ஷெ 43 : 9-10
58 ஷெ 50 : 6-7
59 ஷெ 48 : 11-12, 50:16-18
60 ஷெ 43 : 11
61 'எழுமுடி மார்பின் எய்திய சேரல்' பதிற். 45 : 6
62 பதிற். 45 : 6 உரை
63 ஷெ 48 : 9
64 ஷெ 41 : 7,15, 42 : 18-20
65 ஷெ 48 : 18; சிலப்பதிகாரம்

மனைவி

இவனது மனைவி வேண்மாள் ஆவாள். இவளைச் சோழர் குடிப்பெண் என்பர். இவள் சிறந்த அழகியாவாள்.[66] இவன் பிற மகளிரோடு மகிழ்ந்திருந்ததாகத் தெரிகிறது.[67]

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

இவன் தந்தை நெடுஞ்சேரலாதன்; தாய் வேளாவிக் கோமான் பதுமன் மகள்; அண்ணன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல். இவன் செங்குட்டுவனுக்கும் இளையவன் எனலாம்.[1]

நாடு

பயன்படுத்த முடியாமல் அழியும் செல்வவளம் மிக்க நகரம் பந்தர்.[2] இது கடற்கரையில் இருந்தது.[3] இக் கடற்கரைப் பகுதி 'கானலம் பெருந்துறை' என்னும் பெயரைப் பெற்றிருந்தது. இப் பெருந்துறைப் பகுதியையும் அதனை அடுத்திருந்த வயல் வளம் மிக்க நன்னாட்டையும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன் தொடக்க காலத்தில் ஆண்டுவந்தான். இக்காலத்தில் பந்தர் இவனது தலைநகரமாகக்கூட அமைந்திருக்கக்கூடும். இது இவனது தந்தை நெடுஞ்சேரலாதன் குடநாட்டிலிருந்து ஆண்டு கொண்டிருந்த காலம்.

தென்னை வளம்மிக்க துறைமுகம் நறவு. இது குட்டநாட்டின் வடபால் கொண்கான நாட்டில் இருந்தது. அப் பகுதியில் வாழ்ந்த இனத்தவரோடு இவன் மகிழ்ந்து வாழ்ந்துவந்தான்.[4] கொண்கான நாடு முல்லைவளம் மிக்க நாடு. அந்நாட்டு மக்கள் புன்புலத்தை உழுது விளையும் கதிர்மணிகளைப் பெற்று வாழ்ந்துவந்தனர். அந்த நாட்டு மக்கள் இவனது தலைமையை விரும்பி ஏற்றனர்.[5]

நெடுஞ்சேரலாதனுக்குப் பின் செங்குட்டுவன் தலைமையின் கீழ்ச் சேரநாட்டு ஆட்சி அமைந்தது. அப்போது இவன் தான்

---

66 பதிற். 42 : 7
67 ஷை. 50 : 18
1 பதிற்றுப்பத்தில் இவனது பத்து, ஆறாம் பத்தாக வைத்திருப்பது ஒன்றுதான் இதற்கு அடிப்படை
2 பதிற். 55 : 4
3 ஷை. 53 : 4
4 ஷை. 60 : 10–12
5 ஷை. 58 : 19, 'நாடுகிழவோன்' ஒப்புநோக்குக. கொண்கானங் கிழான்

ஆண்டுகொண்டிருந்த நாட்டுக்குத் தெற்கிலிருந்த குடநாட்டு ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றான்.[6]

இவனது ஆட்சிக்காலம் முழுவதும் நாடு காவல் பணியாய் அமைந்திருந்தது எனலாம்.

இவன் தன்னை அண்டி வாழ்ந்த மழநாட்டுக் குடிமக்களுக்குக் கவசம்போல் அமைந்து அவர்களைக் காத்து வந்தான்.[7] தன் ஆட்சியை விரும்பாத மழவர்களை இவன் வென்று அவர்களின் தொகை குறையுமாறு செய்தான்.

மழவர்களுக்குக் கவசம்போல் விளங்கியதுபோலவே இவன் குதிரைமலைப் பகுதியிலிருந்த வில்லோர் குடிமக்களுக்கும் பாது காவலனாய் விளங்கினான்.[8]

போர்

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன் முன்னோர் வென்ற நாடுகளை யெல்லாம் தானும் வென்றான்.[9] வேந்தர்தம் தார்ப் படை அழிந்து அலறுகையில் மலைநாட்டைக் கைப்பற்றினான்.[10] வேந்தர்கள் போர்க்களத்தில் மெய்மறந்தனர்.[11] மனைவியைப் பிரிந்திருந்தவன் வேந்தர்களின் எயிலைப் பிரிந்திருக்கவில்லை[12] என்பது இவன் உழிஞைப் போரில் ஈடுபட்டிருந்த நிலைமையைக் காட்டும். இவனுக்கு நண்பர் அல்லாத ஏனைய மழவர் இவனது பகைவர்களுடன் சேர்ந்துகொண்டு இவனைத் தாக்கியபோது இவன் அவர்களைக் கொன்று அவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தான்.[13] போர்களில் இவன் பல மன்னர்களைத் தோற் றோடும்படி செய்தான்.[14] பகைவர்கள் இவனுக்குத் திறைதந்த போது அதனை ஏற்றுக்கொண்டு அவர்களை அழிக்காமல் விட்டு விட்டு மீண்டான்.[15]

தண்டாரணியப் போர்

இவையேயன்றி ஆறாம் பத்துப் பாடப்பட்ட காலத்திற்குப் பின் இவன் கரந்தைப் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான். தண்டாரணியத்தில் வாழ்ந்த மக்கள் இவனது குடநாட்டில்

---

6 பதிற். 55 : 9, 'குடவர்கோ'
7 ஷை. 55 : 8 'மழவர் மெய்ம்மறை'
8 ஷை. 59 : 9, 'வில்லோர் மெய்ம் மறை'
9 ஷை. 53 : 12-13
10 ஷை. 55 : 17-18
11 ஷை. 56 : 7
12 ஷை. 52 : 31
13 ஷை பதி. 6 : 7-8
14 ஷை. 6 : 8
15 பதிற். 53 : 10–13

புகுந்து வருடை ஆடுகளைக் கவர்ந்து சென்றனர். ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் தண்டாரணியத்துக்கே படையெடுத்துச் சென்று அவர்கள் கவர்ந்துசென்ற ஆடுகளை மீட்டுக்கொண்டு வந்தான். அவற்றைத் தொண்டி நகருக்குக் கொண்டுவந்து ஆட்டுக்குரியாருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தான்.[16]

படைச்செருக்கு

இவனது வெற்றிகளுக்கு உறுதுணையாய் அமைந்தவை போர்த்திறமும் இவனது படையின் ஆற்றலுமாகும்.

நாகப்பாம்பை இடிகொல்வதுபோலப் பகைவர்களைக் கொல்லும் ஆற்றல் மிக்கவன் இவன்.[17] இவனது படை வீரர்கள் வாண்முகம் பொறித்த தழும்பினைப் பெற்றவர்களாய்ப் பயிற்சித் திறம் மிக்கு விளங்கினர்.'[18] தும்பை சூடித் தேரில் ஏறிவந்து இவனது நாட்டைத் தாக்கிய பகைவரின் தார்ப்படையை இவர்கள் போந்தை சூடி எதிர்த்து வென்று கொன்றனர்.[19] இவனது படைகள் பகைவரின் யானைகளைக் கண்டு நிலைகொள்ளாது பாய்ந்தன.[20]

கொடைத் தன்மை

எல்லா வசதிகளையும் பெற்றவர்கள் செல்வர்கள். இவன் அத்தகைய வசதிகளையெல்லாம் பெற்றிருந்ததோடு அவற்றைப் பிறர்க்கு அளித்துச் செல்வர் செல்வனவாக விளங்கினான். சேர்ந்தோரையெல்லாம் பாதுகாக்கும் கோட்டை அரணாக இவன் விளங்கினான்.[21] இரவலர்கள் யாரும் இவனை நாடி வராத காலத்தில் இவன் தானே சென்று தேடிப் பிடித்துத் தேரில் ஏற்றிக்கொண்டு வந்து அவர்களுக்குப் பரிசில்கள் நல்கினான்.[22] அவர்கள் ஆசைப்பட்ட மொழிகளைப் பேசி, பின் பேசியபடியே நடந்து தன் சொல்லை உண்மையாக்கினான்.[23] இரவலர்களுக்குப் பரிசில் நல்கியதோடு அமையாது அவர்கள் வாழ்ந்த ஊர்களையே வளம் பெருகச் செய்தான்.[24]

இவன் இரவலர்கள் சிறு துன்பம் அடைவதைக்கண்டு பெரிதும் அஞ்சி அதனைப் போக்கினான்.[25] இத்தகைய பண்புகள்

---

16 பதிற். பதி. 6 : 3-4
17 பதிற். 51 : 26-28
18 மே. 57 : 1-3
19 மே. 51 : 31
20 மே. 54 : 16-17
21 மே. 59 : 10
22 மே. 55 : 10-11
23 மே. 55: 12, 'நசைசால் வாய்மொழி'
24 'இரவல் மாக்கள் சிறுகுடி பெருக
உலகம் தாங்கிய மேம்படு கற்பின்'
(பதிற். 59 : 7-8)
25 பதிற். 57 : 14

நிறைந்த இவனைப் பலரும் 'வள்ளல்' என்று புகழ்ந்துரைத்தனர்.[26]

இவனேயன்றி இவனது நாட்டு மக்களும், தம்மிடமிருந்த பல வகை வளங்களையும் பகுத்துண்ணும் பண்பினராய் விளங்கினர். அவர்கள் நெறி தவறாது அறம் புரிந்து வாழ்ந்துவந்தனர்.[27]

இவன் பார்ப்பனர்க்குப் பசுக்களைக் கொடுத்ததோடு தான் ஆண்ட குடநாட்டில் ஓர் ஊரை அவர்களின் நல்வாழ்வுக்கென்று ஒதுக்கிக் கொடுத்தான்.[28]

இவனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்னும் புலவர் சிறப்பித்துப் பாடினார். அவர் பெண்பாற் புலவர். அப் புலவரைச் சிறப்பித்து அவன் பரிசில்கள் வழங்கினான்; அவர் நகை செய்து போட்டுக்கொள்ளவேண்டி ஒன்பது கா நிறையுள்ள பொன் கொடுத்தான்; செலவுக்காக நூறாயிரம் காணம் பணம் கொடுத்தான். இவற்றிற்கு மேலாக தன் பக்கத்தில் அமர இருக்கை அளித்துப் பெருமைப்படுத்தினான்.[29]

பண்பு நலம்

இவனது கை இரப்போர்க்குக் கொடுப்பதற்காகக் கவிந்ததே யன்றி, எதை விரும்பியும் மலர்ந்ததில்லை.[30] பிறரை விரும்பி அவர்களுக்கு நலம் பயப்பனவற்றைச் செய்யும் நெஞ்சப் பாங்கு உடையவன்.[31] 'இன்று வாண்மறவர் வென்று கொடுத்த உணவை உண்டோம். நாளை கோட்டை கடந்தபின்தான் உணவு' என்று போர்க் காலத்திலும் பொய் கூறாது உண்மையையே பேசி வந்தான்.[32] 'பகைவர் திறைதரின் அவற்றை ஏற்று அவர்களைப் பணிகொள்வாயாக' என்று இவன் அறிவுரை கூறப் பட்டுள்ளான்.[33] இதனைப் பார்க்கும்போது பகைவர் பணிந்தாலும் அவர்களை ஏற்காத பண்பினனாக ஒரு காலத்தில் விளங்கினான் என்பது பெறப்படும்.

சிறப்புச் செயல்கள்

இவன் ஆடல் கலையில் தேர்ச்சி மிக்கவன்.[34] விழாக் காலத்தில் விளக்கொளியில் கோடியர் முழவு முழங்க மைந்தரும்

---

26 பதிற். 54 : 1
27 ஷை 59 : 16
28 பதிற். பதி. 6 : 4-5
29 ஷை 6 கொளு
30 பதிற். 52 : 11-12
31 பதிற். பதி. 6 : 10
'நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்'
32 பதிற். 58 : 8-9
33 ஷை 59 : 11-13
34 ஒப்பு நோக்குக. ஆட்டனத்தி

மகளிரும் தழுவிக்கொண்டு ஆடும் துணங்கை ஆட்டத்தில் இவனும் தலைக்கை தந்து (தலைமையிடம் கொண்டு) நெளிந்து ஆடினான்.[35] வெற்றிக்குப் பின் போர்க்களத்தில் ஆடும் துணங்கை ஆட்டத்திலும் இவன் பங்கு கொண்டான்.[36] இவ்வாறு ஆட்டத்தில் ஈடுபட்டுத் தன் மனைவியையும் மறந்து நீண்டநாள் வெளியில் தங்கிவிட்டதும் உண்டு.[37] அரசாட்சியை மறந்து தங்கிவிட்டதும் உண்டு.[38]

இவன் தனது நாட்டைக் குழந்தையைக் காக்கும் தாய்போலக் காத்து வந்தான்.[39] நன்னடத்தைக்குப் பெருமதிப்பளித்துச் சான்றோர்களைப் பேணி வந்தான்.[40]

உருவத் தோற்றம்

ஒளிவீசும் அணிகலன்களை இவன் அணிந்திருந்தான். பேரிச் சின்னமாக அணியும் உழிஞைப் பூவையும் பொன்னால் செய்து அணிந்து கொள்ளும் அணிவேட்கையன்.[41] வேங்கையை வென்ற களிற்றின்மீது ஏறிக்கொண்டு இவன் சென்றது உண்டு.[42]

சிறப்புப் பெயர்கள்

வானவரம்பன்,[43] ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்[44] என்பன இவனது சிறப்புப் பெயர்கள். இவன் ஆடற்கலையில் சிறந்து விளங்கினான் என்று குறிப்பிட்டோம். இதனாலோ, வருடை ஆடுகளை மீட்டுக்கொண்டு வந்தமையாலோ இவன் 'ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்' என்று சிறப்பிக்கப்பட்டான்.

மனைவி

இவன் மனைவி சிறந்த அறிவுநலம் வாய்க்கப்பெற்றவள்.[45] இவன் ஆட்டத்தில் ஈடுபட்டுப் பலநாள் வெளியில் தங்கியிருந்த போது அவனைப் பிரிந்து தனிமையில் இவள் வாழ்ந்துவர நேர்ந்தது. அவன் பல நாள்கள் கழிந்து மீண்டும் இவளிடம் வந்த போது இவள் ஊடினாள்.[46] பிற சேர வேந்தரின் மனைவியைப்

---

35 பதிற். 52 : 14, 56 : 3
36 மே. 57 : 4
37 மே. 51 : 11-15
38 மே. 59 : 19, 'நாடு புறந்தருதல், நினக்குமார் கடனே' என்று அறிவுறுத்தப்படுவதால் இது விளங்கும்
39 பதிற். பதி. 6 : 2-10
40 பதிற். 55 : 1
41 மே. 56 : 5
42 மே. 53 : 18-21
43 மே. 58 : 12; பதிற். பதி. 6 : 6
44 பதிற். பதி. 6 : 11
45 பதிற். 55 : 1, 'ஆன்றோள் கணவ'
46 மே. 52 : 14-24

போல ஆறிய கற்புடையவள் அல்லள்; கணவனை ஊடித் திருத்தும் சீறிய கற்பினள். இவளேயன்றி வேறு மனைவியரும் இவனுக்கு இருந்தனர்.

உதியன் கால்வழி அரசர்கள்

(திரண்ட நோக்கு)

உதியன் கால்வழி அரசர்கள் என்று தெளிவாகத் தெரியவரு பவர் அறுவர் என்று கண்டு அவர்களது வரலாற்றைத் தனித் தனியே விரிவாக அறிந்தோம். இனி அவர்கள் அறுவரது உறவு முறைகள், அரசாண்ட இடங்கள், போர்கள், சிறப்புச் செயல்கள் முதலானவற்றை ஒருங்கிணைத்துத் திரட்டி ஆய்வுக் கண்ணோட் டத்தில் நோக்குவோம்.

அடியில் காணும் பட்டியல் அவர்களது உறவு முறையினை விளக்கும்.

உதியன் கால்வழி அரசர்களின் உறவு முறை

(பதிற்றுப்பத்துப் பதிகத்தில் உள்ளபடி.)

உதியஞ் சேரற்கு	வெளியன் வேள் மான் (மகள்) நல்லினி	ஈன்ற மகன்	இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன்
இமயவரம்பன்		தம்பி	பல்யானைச் செல்கெழு குட்டுவன்
ஆராத்திருவின் சேரலாதற்கு	வேளாவிக் கோமான் பதுமன் தேவி	ஈன்ற மகன்	களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
குடவர்கோமான் நெடுஞ் சேரலாதற்குச்	சோழன் மணக்கிள்ளி	ஈன்ற மகன்	கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்
குடக்கோ நெடுஞ் சேரலாதற்கு	வேளாவிக் கோமான் தேவி	ஈன்ற மகன்	ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்

முன் கண்ட அட்டவணைச் செய்தியைக்கொண்டு கீழ்க் காணும் உருவமைதியால் இந்த அரசர்களது உறவினை விளக்கலாம்.



இந்த உறவுமுறையைச் செங்குட்டுவனை மையமாகக் கொண்டு காணின் செங்குட்டுவன் தலைமுறை, செங்குட்டுவனின் தந்தை தலைமுறை, செங்குட்டுவனின் பாட்டன் தலைமுறை, செங்குட்டுவனின் மகன் தலைமுறை என்ற முறையில் நான்கு தலைமுறைகள் அமைகின்றன. இந்த நான்கு தலைமுறையினர் காலம் சுமார் 100 முதல் 150 ஆண்டுகள் என்று கொள்வது பொருத்தமான முடிவாய் அமையும்.

இலங்கைக் கயவாகு அரசன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலையமைத்து விழா எடுத்தபோது வந்திருந்தான் என்று கூறப்படுவதைக்கொண்டு விழா நடந்த காலம் கி. பி. 175 என்று கொள்ளலாம். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்த போது அவன் அரியணையேறி ஐம்பது ஆண்டு நிறைவுற்றிருந்தது. எனவே, செங்குட்டுவன் அரியணை ஏறியது கி. பி. 125 எனத் தெரிகிறது. செங்குட்டுவன் 55 ஆண்டு அரசு வீற்றிருந்தான் என்று பதிகம் கூறுகிறது. எனவே, அவன் அரசாண்ட காலம் கி. பி. 125-180 எனக் கருதலாம். இவன் கால இறுதியில் கயவாகு வேந்தன் (கி. பி. 174-196) இலங்கையில் அரசாண்டான் எனத் தெரிகிறது,

அண்ணன் தம்பியருக்கிடையே அகவை இடைவெளி ஐந்து என்று பொதுவகையாகக் கொள்வோமானால், செங்குட்டுவனின் அண்ணன் நார்முடிச் சேரல் கி. பி. 120-ல் அரியணை ஏறினான் என்றும், செங்குட்டுவனது தம்பி கி. பி. 130-ல் அரியணை ஏறினான் என்றும் கொள்ளலாம். இவ்வாறு கணிக்கும்போது நார்முடிச்சேரல் கி. பி. 120 முதல் 145 வரை அரசாண்டான் என்றும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் கி. பி. 130 முதல் 168 வரை அரசாண்டான் என்றும் முடிவதைக் காணலாம்.

தந்தைக்கும் மூத்த மகனுக்கும் இடைவெளி அதாவது, ஒரு தலைமுறை 25 ஆண்டுகள் என்று கொள்வோமானால் நார்முடிச் சேரலுக்கும் அவனது தந்தைக்கும் அரியணையேறிய தொடக்க ஆண்டுகள் முறையே கி. பி. 120, கி. பி. 95 என்று அமைவதைக் காணலாம். இந்த முறையில் 50 ஆண்டுகள் அரசாண்ட நெடுஞ்சேரலாதன் கி. பி. 95-145 ஆண்டுகளில் அரசாண்டான் எனலாம். இவனது தம்பி பல்யானைச் செல்குழு குட்டுவன் கி.பி. 100-125 ஆண்டுகளிலும், இவர்களின் தந்தை உதியஞ்சேரல் கி. பி. 70-95 ஆண்டுகளிலும் அரசாண்டனர் என்று முடியும். இந்த அரசாட்சி முறையை அடுத்துள்ள அட்டவணையில் காணலாம். இது பிற சமகால அரசர்களை ஒப்புநோக்கி ஆராயப் பெரிதும் உதவும்.

இனி இவர்களது நாடு, தலைநகர், போர்களும் அவற்றின் முடிவுகளும் ஆகியவற்றை அடுத்துக்காணும் பட்டியலில் காணலாம்.

அரசன்	நாடு	தலைநகர்	பேரும் முடிவும்
உதியஞ்சேரல்	குட்டநாடு	வஞ்சி	நாட்டின் பரப்பை விரிவாக்கினான். முதியரை நண்பராக்கிக் கொண்டான்.
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்	குடநாடு	மாந்தை	கடம்பறுத்தல், யவனரைக் கைது செய்துகொண்டு வரல், இமயம் வரை வெற்றி.
பல்யானைச் செல்கெழு குட்டுவன்	குட்டநாடு, பூழி நாடு, அயிரை மலை, இரு கடலையும் எல்லையாகக் கொண்டது	வஞ்சி	மழவர்க்கு அடைக்கலம் தந்தான்; உம்பற் காட்டில் ஆட்சியை நிலைநாட்டினான்; அகப்பாக் கோட்டையை அழித்தான்; பரிவேள்வி செய்தான்; சோழ பாண்டியரை வென்றான்.
நார்முடிச் சேரல்	குன்றநாடு, இது முதியர் குடி வழியினர் வாழ்ந்த நாடு		நன்னனைக்கொன்று அவன் கைப்பற்றியிருந்த பூழி நாட்டைத் தன்னாட்டுடன் சேர்த்துக் கொண்டான். நெடுமிடல், கொடுமிடல் ஆகியோரைக் கொன்றான். (இது பாண்டியனை வென்றது என்று கருதலாம்).

அரசன்	நாடு	தலைநகர்	போரும் முடிவும்
செங்குட்டுவன்	பூழிநாடு, மலைநாடு	வஞ்சி	1. மோகூர்ப் போரில் பழையனை வென்றான். 2. குராலம் பறந்தலைப் போரில் வென்றான். 3. நேரிவாயில் போரில் வென்று சோழக் குடியினர் ஒன்பதின்மரை வீழ்த்தித் தன்மைத்துனச் சோழனுக்கு உதவினான். 4. வியலூர்ப் போரில் வென்றான். 5. கொடுகூர்ப் போரில் வென்றான். 6. சோழநாட்டு இடும்பில் போரில் வெற்றி கண்டான். 7. கொங்கு நாட்டை வென்று களவேள்வி செய்தான். 8. தக்கணப் போரில் ஈடுபட்டுக் கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், கட்டியர், வடசூரியர் முதலானோரை வென்றான். 9. கடல் பிறக்கு ஓட்டினான். 10. தகடூர்ப் போரில் வெற்றி கண்டான். 11. இமயத்தில் வில்லைப் பொறித்தான்.

அரசன்	நாடு	தலை நகர்	போரும் முடிவும்
			12. கடம்பு எறிந்தான்.
			13. இரண்டாம் முறையாக வடநாட்டுப் போரில் வென்று தன் தாயாரைக் கங்கையில் நீராட்டி வந்தான்.
			14. மூன்றாம் முறையாக வடநாட்டில் போரிட்டுக் கனகவிசயர் தலையில் கண்ணகிச் சிலைக்குக் கல் சுமத்திக் கொணர்ந்தான்.
ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்	பொறை நாடு	தொண்டி, பந்தர், நறவு	மலைநாட்டை வென்றான். தண்டாரணியப் போரில் வெற்றிபெற்று வருடை ஆடுகளை மீட்டுவந்தான்.

அந்துவன்

பதிற்றுப்பத்து நூலில் ஏழாம் பத்தின் தலைவனாகச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளவன் செல்வக் கடுங்கோ வாழியாதன். இவனது தந்தை அந்துவன் என்னும் சேர அரசன்.[1]

அந்துவனின் மனைவி 'பொறையன் பெருந்தேவி.' இவள் ஒருதந்தை என்பவனின் மகள். பெருந்தேவி என்னும் வழக்கு பொதுவாக அரசியை உணர்த்தும். எனவே, இவளது பெயர் பொறையனுக்கு மனைவி என்று பொருள் தரும். இதனால் அந்துவன் பொறையர் குடி அரசன் என்பது தெளிவாகப் பெறப்படும். ஆகவே, புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 'சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை'[2] இந்த அரசனே என்பது பெறப்படும்.

1 பதிற். பதி. 7 : 2

2 புறம். 13

நாடு

இவன் கருவூரைத் தலைநகராகக்கொண்டு நாடாண்டு வந்தான். கொங்கு நாட்டிலுள்ள கருவூரே இவனது கருவூர் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

அந்துவனும் மோசியாரும்

உறையூர் ஏணிச்சேரி என்னுமிடத்தில் பிறந்து வளர்ந்த மோசியார் என்னும் பெயர்கொண்ட முடவனார், அந்துவனால் மதிக்கப்பட்ட புலவர். ஒரு நாள் அந்தப் புலவருடன் கருவூர் வேண்மாடத்தில் அரசன் அமர்ந்திருந்தபோது சோழ அரசன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி யானைமீது அமர்ந்த வண்ணம் கருவூர்த் தெருவில் செல்வதைக் காண நேர்ந்தது. அந்தக் காட்சி சோழ அரசன் சேரநாட்டின்மீது படையெடுத்து வருவதுபோன்று பொது வகையால் தோற்றமளித்தது; ஆனால், உண்மை அது வன்று. சோழன் அமர்ந்திருந்த பட்டத்து யானைக்கு மதம் பிடித்துவிட்டது. அது சோழனது கட்டுப்பாட்டிற்குள் நில்லாது விருப்பம்போல் ஓடியது. இந்த நிலையில்தான் அந்த யானை கருவூர்த் தெருவில் ஓடிவந்தது. யானைமீது அரசன் இருந்த தால் அவனைக் காக்கும் பொருட்டுக் காவலர்கள் தொடர்ந்து ஓடிவந்தனர். யானையின் மதங்கொண்ட நிலையையும் சோழனின் அளித்தக்க நிலையையும் வேண்மாடத்தில் சேர அரச னோடு இருந்த புலவர் உணர்ந்து சேர அரசனிடம் எடுத்துக் கூறினார். சேரன் முதலில் சோழன் படையெடுத்து வருவதாக எண்ணினான்போலும். புலவரின் இந்த உரையால் சேரன் தெளிவு பெற்றிருக்கலாம். சோழனை மதங்கொண்ட யானையிட மிருந்து மீட்க உதவியும் இருக்கலாம். சோழன் பிழைத்திருக்க லாம். இருவரும் நண்பர்களாகியிருக்கலாம். முடிவு என்னவா யிருந்தது என்பதற்குச் சான்றில்லை.

சோழன் கருவூர் வரவேண்டிய அளவுக்கு என்ன நிலை நேர்ந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எமன் போன்ற யானைமீதிருந்த சோழன் கவசம் சிதைந்த அம்புபட்ட அகன்ற மார்பை உடையவனாக விளங்கினான் என்று கூறப்படு கிறது.[3] இதனால் இவன் பகைவரை எதிர்த்துப் போராடிய நிலையில் யானைமீது வந்திருந்தான் என்பது பெறப்படுகிறது.

---

3 'இவனே
புலி நிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின்மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே' (புறம். 13 : 1-4)

இவனது மார்பில் அம்புகள் எய்து காயப்படுத்திய பகைவர்கள் யார்? போர் எங்கு நடைபெற்றது? என்பனவற்றை அறிய இயல வில்லை. எனினும் இவன் சேரனைத் தாக்க வந்தபோது பகைவர் களால் காயப்படுத்தப்பட்டான் எனவும், யானை மதங்கொண்டு சோழனுக்கு அடங்காமல் திடீரென ஓடவே பகைவர் மேலும் இவனைத் தாக்கவில்லை எனவும், சோழனது வீரர் மன்னனைக் காக்க வாளேந்திய கோலத்துடன் யானையைப் பின்தொடர்ந் தார்கள் எனவும், போரின் தொடக்கம் சோழனுக்கும் சேரனின் படைத் தலைவனுக்கும் இடையில் நிகழ்ந்திருக்கலாம் எனவும் நாம் உய்த்துணர்வதற்கான குறிப்புகள் உள்ளன.

முருகனைச் சிறப்பித்துப் பாடல்

அந்துவன் என்பவன் திருப்பரங்குன்றத்திலுள்ள முருகனைச் சிறப்பித்துப் பாடினான் என்று சங்ககாலப் புலவர் ஒருவர் குறிப் பிட்டுள்ளார்.[4] இந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் திருப்பரங்குன்றத்திலுள்ள சங்ககாலக் கல்வெட்டு ஒன்று உள்ளது.[5] அஃது அந்துவன் என்பவனது பெயரைக் குறிப்பிடுகிறது. இந்த அந்துவன் நம் சேர அரசன் அந்துவனாக இருக்கலாம். நல்லந்து வனார் என்னும் புலவர் திருப்பரங்குன்றத்து முருகனைச் சிறப் பித்துப் பாடியுள்ள பாடல் பரிபாடலில் இடம் பெற்றுள்ளது.[6] இவர் நெய்தற்கலிப் பாடல்களையும் மற்றும் சில பாடல்களையும் பாடியவர்.[7] நம் சேர அரசன் அந்துவன் இந்த நல்லந்துவனார் என்னும் புலவர் என்று கருதவும் இடம் உண்டு.

(அந்துவஞ்சாத்தன்,[8] அந்துவன் கீரன்[9] ஆகிய பெயர் களுக்கும் இவனுக்கும் உறவுமுறையில் தொடர்பு இருந்திருக்கவும் கூடும். அந்துவஞ்செள்ளை என்னும் பெயரும் இத்தகையதே.)[10]

பண்பு நலம்

அந்துவன் தன் நுண்மையான கேள்வி அறிவால் பகைவர் களையும் தன் நண்பர்களாகப் பிணித்து வைத்திருந்தான்.[11]

இவன், புலவர் மோசியாரோடு வேண்மாடத்தில் மகிழ்வாக இருந்தான். இவனது பேரன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. மேலே கூறப்பட்ட மோசியாரின் மகன் என்று பெயர்

---

4 அகம். 59 : 10-13
5 இந் நூல், இயல் ஒன்று
6 பரிபா. 8 : 21-28
7 கலி. 119
8 புறம். 71 : 13
9 ஷை 359
10 பதிற். பதி. 9 : 2
11 ஷை 7 : 1-2

அமைப்பால் கொள்ளக்கிடக்கும் புலவர் மோசிகீரனார்க்குக் கவரி வீசினான். இந்த நிகழ்ச்சிகள் புலவர்களிடம் இவர்கள் வைத்திருந்த நட்பையும் நன்மதிப்பையும் புலப்படுத்துகின்றன.

மகன்

இவனது மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆவான்.

செல்வக்கடுங்கோ வாழியாதன்

ஒருதந்தை என்பவனின் மகள் பொறையன் பெருந்தேவி. இவளுக்கும் அத்துவஞ்சேர லிரும்பொறைக்கும் பிறந்த மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன்.

நாடு

இவன் தொடக்க நிலையில் பூழி நாட்டை ஆண்டுவந்தான்.[1] பூழி நாடு நேரிமலையைத் தன்னகத்தே கொண்டது.[2] செருப்பு மலையும் அயிரையும்கூட இப் பூழிநாட்டிலேதான் இருந்தன.[3] பூழி நாட்டிலிருந்த செருப்புமலைப் பகுதியைப் பல்யானைக் குட்டுவன் ஆண்டுகொண்டிருந்த போதுதான், வாழியாதன் அதே நாட்டிலிருந்த நேரிமலைப் பகுதியை ஆண்டுகொண்டிருந்தான். இந்த இருவர் நாட்டுப் பகுதிகளிலும் மணிக் கற்கள் கிடைத்தன.[4] நேரிமலைப் பகுதியில் பலாப்பழம் மிகுதி.[5]

இவனைப் பாடிய புலவர் கபிலர்; இவன் நறவு என்னும் ஊரில் இருந்தபோது பாடினார். இனிய சுனைகளையும் செல்வ வளச் செழுமையையும் கொண்ட பக்கமலைகள் பல சூழ்ந்த நாட்டுப் பகுதியில் அந்த 'நறவு' என்னும் நகரம் இருந்தது[6] என்று கூறப் படுவதால், இவனது தொடக்க கால ஆட்சி பூழி நாட்டுப் பகுதியில் அமைந்திருந்தாலும் இவனது பல வெற்றிகளுக்குப்பின் மேலைக் கடற்கரையில் இருந்த நறவுப்பட்டினமும் இவனது ஆட்சிக்கு உட்பட்டது எனலாம்.

'வில்லோர் மெய்ம்மறை' என்று இவன் குறிப்பிடப்படுகிறான். 'வில்லோர்' குடியினர் குதிரைமலைப் பகுதியில் வாழ்ந்து

---

1 புறம். 387 : 28, 'பூழியர் பெருமகன்'

2 பதிற். 67 : 22, நன்னனைக் கொன்றுவிட்டு நார்முடிச்சேரல் இங்குத் தங்கி இருந்த இடத்தையும் இவ்விடத்து நினைவுகூரலாம். பதிற். 40 : 14-16

3 பதிற். 21 : 23, 29

4 மே 21 : 22, 58 : 17-18

5 மே 61 : 1

6 மே 85 : 6-8

வந்தனர்.[7] அவர்களுக்கு இவன் மார்புக் கவசம்போல் பாதுகாவலாய் விளங்கினான்.[8]

தன் தந்தைக்குப்பின் இந்த வாழியாதன், அவன் ஆண்டுகொண்டிருந்த கொங்குநாட்டுக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவரலானான்.[9]

வெற்றிகள்

இவன் எந்த நாட்டோடு, யாரோடு போரிட்டான் என்னும் செய்திகள் பாடல்களில் குறிப்பிடப்படவில்லை. எனினும், பகை வேந்தரின் செம்மாப்பைத் தொலைத்தான்;[10] அவர்களின் காவற் காட்டில் தன் முரசு முழங்க யானைப்படையை நடத்திச் சென்றான்;[11] உழிஞைப் பூச்சூடி மதிலை முற்றுகையிட்டு ஒரே முற்றுகையில் இருவரைத் தோற்றோடும்படி செய்தான்;[12] படையுடன் வளைத்து எயிலை முற்றுகை இட்டான்;[13] இவனது வீரர்கள் பகைவேந்தர் ஊர்ந்துவந்த பட்டத்து யானையின் தந்தத்தைக் கொண்டுவந்து தாம் உண்ட கள்ளுக்கு விலையாகக் கொடுத்தனர்[14] என்னும் செய்திகள் இவன் பகை வேந்தரின் மதிலை முற்றுகையிட்டு வென்றதைக் குறிப்பிடுகின்றன.

பல்யானைக் குட்டுவன் அகப்பாக் கோட்டையை அழித்தான். பாண்டியனையும் அவனைச் சார்ந்தோரையும் வென்றான். இந்தப் போரில் பல்யானைக் குட்டுவனுக்குத் துணையாக வாழியாதன் போரிட்டிருக்கவேண்டும். இந்தப் போர் நிகழ்ச்சிகளே மேற்கண்ட செய்திகளில் குறிப்பிடப்பட்டிருத்தல்வேண்டும். துணையாக நின்று இவன் போரிட்டமையால் வெற்றிகள் இவனுக்குரியன என்று வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை. இவன் உன்னமரத்தின் பகைவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான்.[15] இந்த உன்னமரம் அகப்பா மன்னனின் காவல் மரமாகவோ வேறொருவனுடையதாகவோ இருக்கலாம். யாருடையதாக இருப்பினும் இவன் அந்த உன்ன மரத்தை வெட்டிச் சாய்த்தான்

---

7 'வில்லோர்குடி' வரலாறு காண்க.

8 குதிரைமலைப் பகுதியை அஞ்சியும், எழினியும் ஆண்டபோது அவனது ஆட்சியை விரும்பாத வில்லோர் சிலர் இவனுக்கு எதிராய் இவனது துணையையும் நன்னனது துணையையும் பெற்றனர். அவ்வாறே புன்னாட்டுக் கொங்கரும் பெற்றனர். இவற்றை அவ்வப் பகுதியில் காணலாம்.

9 புறம். 387 : 34, 'பொருநை' ஆன்பொருநை—அமராவதி என்றும் வழங்கப் படுகிறது.

10 பதிற். 70 : 10

11 புறம். 387 : 19-22

12 பதிற். 63 : 8-11

13 டி 62 : 4

14 டி 68 : 9-11

15 டி 61 : 6

என்பது மட்டும் தெளிவாகிறது.[16] அகப்பாப் போரில் துணையாய் நின்றதோடு மட்டுமன்றி வேறு சில போர்களிலும் இவன் ஈடுபட்டு வெற்றிகண்டான்.

செருப்பல கடந்தான்;[17] பகைவரை ஓட்டினான்;[18] பகைவர் குழுவை நொறுக்கினான்;[19] ஞாயிற்றின்முன் விண்மீன் மறைவது போல இவன்முன் நிற்கமாட்டாது பகைவர் மறைந்தனர்[20] என்னும் செய்திகள் அவ் வெற்றிகளைத் தெரிவிக்கின்றன.

தோற்ற மன்னர்கள் இவனுக்குத் திறை தந்தனர்.[21] யானைகள் அத் திறைப் பொருள்களில் அடங்கியிருந்தன.[22] தன் பகையைத் தேடிக்கொள்வதால் விளையும் தீங்கை, பகைவர்கள் நாட்டை அழிப்பதன் வாயிலாக வெளிப்படுத்திப் பகைநாட்டுக் குடிமக்களையும் உணரும்படி செய்தான்.[23] இதனால், மன்னன் விரும்பாவிட்டாலும் பகைநாட்டு மக்கள் தாமே முன்வந்து இவனுக்கும் இறை (வரி) செலுத்தியதுண்டு.[24]

இவனது வெற்றிகளுக்கு உறுதுணையாய் அமைந்தது இவனுடைய படை. இவனது நாற்படை போரில் தேர்ச்சி பெற்றிருந்தது.[25] இவனது வேல், வாள் வீரர்கள் வெற்றி உறுதி தோன்றத் தம் படைக்கருவிகளில் தம் குடிச் சின்னமாகிய போந்தைக் கண்ணியையும் போர் வெற்றிச் சின்னமாகிய வாகைப் பூவையும் தொடக்கத்திலேயே அணிந்துகொண்டு போருக்குச் சென்றனர்.[26] உடம்பெல்லாம் வாள்பட்ட தழும்பு வரிகளும் மார்பில் வேல் பாய்ந்த விழுப்புண் தழும்புகளும் உடையவர்கள் அவர்கள்.[27] போர் தொடங்கினால் இடையில் உணவைப் பற்றிக்கூட அவர்கள் கவலைப்படமாட்டார்கள். பகைவேந்தர் பட்டத்து யானையின் தந்தம், தாம் உண்ட கள்ளுக்கு விலையாகக் கொடுக்கும் அளவுக்கு அவர்களுக்கு எளிய பொருள்.[28]

---

16 உன்னமரம் தன் இலையை உதிர்த்து மன்னனுக்கு நேரவிருக்கும் தீங்கை முன்கூட்டி அறிவிக்கும் பரம் என்றும், அம்மரம் காட்டிய தீக்குறியையும் பகைத்து வெற்றி பெற்றான் – ஊழையும் உப்பக்கம் கண்டான் — என இதற்கு விளக்கம் பெறலாம்.

17 பதிற் பதி. 7 : 5
18 ஷை 7 : 4
19 பதிற். 66 : 4-5
20 ஷை 64 : 12-13
21 புறம். 387 : 12
22 பதிற். 66 : 7
23 ஷை 69 : 11-14
24 ஷை 62 : 12
25 ஷை 69 : 15-18
26 ஷை 66 : 15
27 ஷை 66 : 13-14
28 ஷை 68 : 11

கொடைத் தன்மை

இவன் சிறந்த வள்ளல்; தன் நாண்மகிழ் இருக்கையில் கொடைவிழாக் கொண்டாடிப் பரிசிலர்களுக்கு வேண்டியன வெல்லாம் கொடுத்தான்.[29] சேரநாட்டுப் பந்தர்த் துறைமுகத்தில் கிடைத்த முத்து,[30] களிறு, மா, ஆநிரை, கதிரடித்துக் குவித்துள்ள களம்[31] முதலானவை அவன் வழங்கிய கொடைப் பொருள்கள்.

அக் கொடைப் பொருள்களை அவன் மழையைக்காட்டிலும் மிகுதியாகக் கொடுத்தான்; பாலைப் பண்ணில் பையுள் இசைத்திறத்தைக் கட்டினால் செவிகளில் பாயும் அருளின்பம் போலப் பரிசிலர் உள்ளம் இன்புறும்படி நல்கினான்;[32] அலர்ந்த நெய்தல்போல் மலர்ந்த முகத்துடன் கொடுத்தான்;[33] பெற்றவர்கள் கனவோ என்று மருளும்படி நனவில் கொடுத்தான்;[34] ஏற்றவரின் வறுமையெல்லாம் நீங்கும்படி அளித்தான்.[35] கொடுக்கும்போது பெறுபவர்களின் சிறுமையை அளவுகோலாக இவன் கொண்டதில்லை. தன் பெருமையின் தகவையே அளவு கோலாகக் கொண்டான்.[36]

பரிசில் நாடிவரும் வயிரியர்களைத் தன் அரண்மனைக்கு வெளியில் கண்டபொழுதே குதிரைகளுக்கு அணிகலன்களைப் பூட்டிப் பரிசிலாக அனுப்பிவைத்தான். பாசறையிலும் போர்க் களத்திலும் இருந்தபோதும் கொடுத்தான்.[37] நாண்மகிழ் இருக்கையில் நடந்த கொடைப்போரில் பாடினிக்கே வெற்றி.[38]

இவ்வாறு இவன் கொடை நல்கிய போதெல்லாம் முன்பு கொடுத்தவற்றை நினைத்துப் பார்த்ததில்லை; இவ்வளவு கொடுக்கிறோமே என்று பெருமித உணர்வு தோன்றி மகிழ்வது மில்லை. கொடுக்கும் போதெல்லாம் பெருவள்ளல்.[39]

மற்றும் இவன் வேள்வி செய்து கொடை வழங்கினான்.[40] அவ் வேள்வியில் அந்தணர்களுக்குப் பெறற்கரிய அணிகலன் களைத் தாரை வார்த்துக் கொடுத்தான்;[41] கடவுளர்க்கு உணவூட்டினான்; அதனால் ஐயர்கள் இன்புற்றனர்.[42] வேள்வி

---

29 பதிற் 65 : 13
30 ஷை 67 : 2, 5
31 புறம். 387 : 22-25
32 பதிற். 65 : 11-16
33 ஷை 64 : 16-17
34 புறம். 387 : 16
35 ஷை 387 : 12-13
36 ஷை 387 : 29-32
37 பதிற் 64 : 8-10, 67
38 ஷை 61 : 15-16, ஒப்புநோக்குக சேரலாதனின் கோட்டையை வயிரியர் அழித்து உண்டனர் (பதிற். 20 : 17-20)
39 பதிற். 61 : 8
40 பதிற். பதி. 7 : 6-7
41 பதிற். 64 : 4-5
42 ஷை 70 : 18-19

செய்த திருமால் வழிநின்ற புரோகிதனுக்கு ஓகந்தூர் என்னும் நெல் மிகுதியாக விளையும் ஊரையே கொடுத்தான்.[43]

தன்னைப் பாடிச் சிறப்பித்த புலவர் கபிலர்க்கு நூறாயிரம் காணம் பணமாகக் கொடுத்தான். 'நன்றா' என்னும் குன்றின் மீது ஏறிநின்று தன் கண்ணிற்கண்ட இடமெல்லாம் அவருக்குக் காட்டி அவற்றையெல்லாம் அவருக்குப் பரிசாகக் கொடுத்தான்.[44]

பண்பு நலன்

வள்ளன்மைப் பண்புடன் மற்றும் சிலவும் குறிப்பிடத் தக்கனவாய் இவனிடம் அமைந்திருந்தன. இவன் வளமான உள்ளம் படைத்தவன்.[45] பார்ப்பார்க்கல்லது பணியாமை, நட்டோர்க்கல்லது கண் அஞ்சாமை, மகளிர்க்கல்லது மார்பு மலராமை, உலகமே பிறழ்ந்தாலும் சொன்ன சொல் தவறாமை ஆகிய பண்புகள் இவனிடம் குடிகொண்டிருந்தன.[46]

சிறப்புச் செயல்கள்

பகைவரை வென்று கிடைத்த கொண்டிப் பொருளை இவன் தமிழ் வளர்க்கும் பணிக்குச் செலவிட்டான்.[47]

இவன் பல ஊர்களைத் தோற்றுவித்து, நாடோடிகளாகத் திரிந்துவந்த மக்களை நிலைபெற்று வாழும்படி செய்தான்.[48]

தோற்றப் பொலிவு

இவன் சிறந்த அணிகலன்களைத் தன் மார்பில் அணிந்து கொண்டு பொலிவுடன் தோற்றமளித்தான்.[49] கழலும் தொடியும் கூட இவன் அணிந்திருந்தான்.[50]

சிறப்புப் பெயர்கள்

செல்வக்கோ,[51] செல்வக்கோமான்,[52] வாழியாதன்,[53] செல்வக்கடுங்கோ வாழியாதன்,[54] சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன்,[55] கோ ஆதன் செல்லிரும்

---

43 பதிற். பதி. 7 : 9
44 ஷை கொஞ
45 ஷை 7 : 11
46 பதிற். 63 : 6-7
47 ஷை 63 : 9
'கொண்டி மிகைப்படத் தண்டமிழ் செறித்து'
48 பதிற். பதி. 7 : 4
'நாடுபதி படுத்து'
49 பதிற். 65 : 12
50 ஷை 64 : 15
51 ஷை 63 : 16
52 ஷை 67 : 23
53 ஷை 63 : 21
54 ஷை பதி. 7 : 12
55 புறம். 387 : 30

பொறை[56] முதலான பெயர்களால் இவன் குறிப்பிடப்படுகிறான். ஆதன் என்பது இவன் பெயர். வாழி என்பது இக் காலத்தில் திரு என்று குறிப்பிடுவதுபோன்று சங்ககாலத்தில் மன்னர் களுக்குத் தந்த அடைமொழியாயிருக்கக்கூடும். வெற்றிச் செல்வ மிகுதி, மன்னர்களின் அடைக்கல மிகுதி,[57] தம்மைச் சேர்ந்தோர்க்குச் செல்வம்போல் பயன்பட்ட தன்மை[58] முதலான தன்மைகளின் அடிப்படையில் 'செல்வ' என்னும் அடைமொழி இவனது பெயரில் சேர்ந்திருக்கலாம். மழைமேகங்களைக் காட்டிலும் மிகுதியாகக் கொடை வழங்கிய இவனது தன்மை யாலும்[59] 'செல்' என்னும் அடைமொழி[60] தோன்றியிருக்கலாம்.

காலம்

இவனைப் பாடிய கபிலர், பாரி இறந்தபின் இவனிடம் வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, பாரி காலத்திற்குப் பின் இவன் வாழ்ந்தான் என்பது தெளிவாகிறது. பதிற்றுப்பத்து ஏழாம் பத்தில் இவன் கருவூரை ஆண்ட செய்தி குறிப்பிடப்பட வில்லை. ஆனால், பாடலிலேயே அச் செய்திக்கான குறிப்பு உள்ளது. எனவே, ஏழாம் பத்து இவன் பூழிநாட்டில் ஆண்டுக் கொண்டிருந்தபோதே, அதாவது அவனது தந்தை கருவூரில் ஆண்டுகொண்டிருந்தபோதே பாடப்பட்டது என்பது தெளிவா கிறது. பல்யானைக் குட்டுவன் அகப்பாக் கோட்டையை அழித்த போரில் இவன் உதவினான் என்பது முன்பே குறிப்பிடப்பட்டது. எனவே, இவன் பல்யானைக் குட்டுவன் அரசாண்ட அதே 25 ஆண்டுக்கால எல்லையில் 25 ஆண்டுகள் அரசாண்டான் எனலாம். இவன் சிக்கற்பள்ளி என்னுமிடத்தில் இறந்து போனான்.[61]

முன்னோர்

இவன் 'சேரலர் மருகன்' என்று குறிப்பிடப்படுகிறான்.[62] இதனால் இவன் சேரர் குடியில் தோன்றியவன் என்பது தெளிவாகிறது.

இவனது முன்னோர் தம் கொள்கையில் உறுதிப்பாடு உடையவர். அவர்கள் தம் குடிமக்கள் தளர்ச்சியடையா வண்ணம் நல்லாட்சி புரிந்தனர்; நிலம் நல்ல பயனைத் தரும் வகையில் வேளாண்மைக்கு உதவினர். வெயிலின் கொடுமை

---

56 புகழூர்த் தமிழிக் கல்வெட்டு
57 பதிற். 63 : 8-12
58 ஷை 65 : 5 'சேர்ந்தோர் செல்வ'
ஷை 65 : 11 'பரிசிலர் வெறுக்கை'
59 ஷை 64 : 18
60 புகழூர்க் கல்வெட்டுப் பெயரில் உள்ளது
61 புறம். 387 கெ ரூ
62 பதிற் 63 : 16

நீங்க ஆங்காங்கே மண்டபங்கள் கட்டி உதவினர். பருவமழை தவறாது பொழியக் காடுகளைப் பாதுகாத்து வந்தனர். நாற்றிசையும் வென்று இவ்வாறு நல்லாட்சி புரிந்தனர்.

குடிப்பூ

சேர மன்னர்களின் குடிப்பூவாகிய போந்தைக்கண்ணி இவனது போர்ப்படைக் கருவிகளுக்குச் சூட்டப்பட்டது என்று கூறப்படுவதால்[63] அஃது அவனது குடிப்பூ என்பது தெளிவாகிறது.

மனைவி

வேள் ஆவிக்கோமான் பதுமன் என்பவனின் பெண்மக்கள் இருவருள் ஒருத்தியை வாழியாதனும் மற்றொருத்தியை இமயவரம்பனும் மணந்திருந்தனர். வாழியாதன் மணந்தது இளையவளை எனலாம்.

காமர் கடவுளும் (காமனும்) கண்டு தனக்கும் கிடைக்க வில்லையே என்று எண்ணும் வகையில் பேரழகும் கற்பும் உடையவளாக இவள் விளங்கினாள்.[64] இவள் தன் கணவனிடம் நகைச்சுவையாகப் பேசியபோதும் பொய்மொழி புனைந்ததில்லை.[65] வாழியாதன் பல மகளிரைத் தழுவி மகிழ்வது உண்டு.[66] இதுபற்றிப் பிறர் கூறிய புறஞ்சொற்களை இவள் பொருட்படுத்தியதில்லை.[67] பெண்மை, மடமை, கற்பு ஆகிய பண்புகளில் இவள் தலைமைபூண்டு விளங்கினாள்.[68] செல்வக் கடுங்கோவின் அரண்மனைக்கேற்ற நல்லோளாக இவள் விளங்கினாள்.[69]

அரண்மனை

இவனது அரண்மனையில் ஓவியங்களும் சிற்ப வேலைப் பாடுகளும் நிறைந்திருந்தன.[70]

மக்கள்

இவனுக்கு இரண்டு ஆண்மக்கள் இருந்தனர். இவர்களைக் கொண்டு வாழியாதன் முதியர் குடியினரைப் பேணிவந்தான். முதியர் குடியினர் சேரர் சார்பாளர். அவர்களைப் பேணுதல்

---

63 பதிற். 70 : 6
64 ஷ. 65 : 9
65 ஷ. 70 : 12
66 ஷ. 68 : 18 19
67 ஷ. 70 : 13
68 ஷ. 70 : 14 15
69 ஷ. 61 : 4
70 ஷ. 61 : 3

சேரர்களின் கடமையாகத் தொன்றுதொட்டு அமைந்துவந்தது (உதியஞ்சேரல் பேணியது காணலாம்). இவன் தன் மக்களின் வழியே தன் தொல்லோர் கடமையை நிறைவேற்றினான்.[71]

இரண்டு மக்களுள் மூத்தவன் எட்டாம் பத்தின் தலைவன். இளையவன் 8ஆம் பத்துத் தலைவனின் தந்தை. (இவர்களைப் பற்றித் தொடர்புள்ள வரலாற்றுப் பகுதிகளில் காணலாம்.)

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

இவனது தந்தை செல்வக்கடுங்கோ வாழியாதன். தாய் பழனிமலைப் பகுதியை ஆண்ட பதுமன் என்பவனுக்கு மகளாய்ப் பிறந்து செல்வக்கடுங்கோ வாழியாதனை மணந்தவள்[1] இவளது உடன்பிறந்தாள். ஒருத்தி நெடுஞ்சேரலாதனை மணந்தாள் என்பதை நினைவுகூரலாம்.

நாடு

பெருஞ்சேரலிரும்பொறை தொடக்கக் காலத்தில் ஆண்டு கொண்டிருந்த நாடு இன்னதெனத் தெரியவில்லை. எனினும், அந்த நாடு பகன்றைப் பூக்களைக் குடிப்பூவாகச் சூடும் உழவர்கள் வாழ்ந்த நெல் வளம்மிக்க நாடு என்று தெரிகிறது.[2]

வளர்ந்த இடம்

இவன் 'புகார்ச் செல்வன்' என்று கூறப்படுகிறான்.[3] அவ்வாறு இவன் கூறப்படும்போது புகார் நாட்டு உயர்திணை மகளிரும் (செல்வச் சீமாட்டியர்) வயலில் நாரைகளை ஓட்டும் மகளிரும் (உழைக்கும் பெண்டிர்) இரவும் பகலும் பாசிழை களையாது இணைந்து குரவை ஆடும் இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குறிப்பு இத்தகைய பெண்டிர்க்கிடையே இவன் வளர்ந்தவன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இதனால், இவன் புகார் நகரத்தில் இளமையில் வளர்ந்துவந்தான் எனலாம்.

நாடு காத்தல்

'பூழியர் மெய்ம்மறை' என்று இவன் கூறப்படுகிறான். பூழி நாட்டு மக்களுக்குக் கவசம்போன்று விளங்கினான் என்பது இதன் பொருள். இவன் தொடக்கக் காலத்தில் ஆண்டுகொண்டிருந்த

---

1 பதிற். 70 : 20 23
1 பதிற். பதி. 8 : 1
2 ஷ 76 : 12
3 ஷ 73 : 9

நாட்டுக்கு அண்மையில் பூழிநாடு இருந்தது. அந் நாட்டைக் காக்கும் பொறுப்பும் இவனிடம் இருந்தது.[4]

காமூர்ப் போர்

கழுவுள்[5] என்பவன் காமூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டவன். இந்தக் காமூர் தோட்டிமலையில் இருந்தது. ஆழமான அகழி, குறுகிய ஞாயில் உறுப்புகளைக்கொண்ட மதில் ஆகிய அரண்களை உடையது அந்த ஊர். அவ்வூர் மக்கள் பசு வளர்த்த இடையர்கள். அரசனது போர்வீரர்களாக வாழ்ந்த அவ்வூர் இளையர்கள் பிற நாடுகளுக்குச் சென்று வெட்சிப் போர் செய்து ஆநிரைகளைக் கவர்ந்துவந்த ஆற்றல்மிக்க வீரர்கள்.

பெருஞ்சேரல் இரும்பொறை கழுவுள் மன்னனது கோட்டையைத் தாக்கினான். வென்று காமூரைத் தீக்கிரையாக்கினான். அதில் எழுந்த தீப்புகை, திசைகளையும் மதில்களையும் மறைக்கும் அளவுக்கு மிகுந்து உயர்ந்தது. இந்தப் போர் காலையில் தொடங்கி மாலையில் முடிவுற்றது. தன் தோல்வியை எண்ணிய கழுவுள், மறுநாள் விடியுமுன்பே காமூரைவிட்டு ஓடிவிட்டான். தலைவனை இழந்த காமூர் மக்கள் கலங்கினர்; மேலும் போர் செய்யாமலிருக்கும்படி பெருஞ்சேரலை வேண்டிக்கொண்டனர்; கைம்மாறாகப் போர் யானைகளையும் அணிகலன்களையும் தந்தனர். அவர்கள் தந்த திறைப்பொருளைப் பெற்றுக்கொண்டு பெருஞ்சேரல் மேலும் அவர்களைப் போரிட்டுக் கொல்லாது விட்டுவிட்டு மீண்டான். கையூட்டு வாங்கிக்கொண்டு உயிரைக் கொல்லாது விட்டுவிட்டுச் செல்லும் எமன்போல அவன் மீண்டான் என்று கூறப்படுகிறது.

இந்தப் போரில் பெருஞ்சேரல் இரும்பொறையோடு 14 வேளிர் தலைவர்கள் சேர்ந்திருந்தனர் எனத் தெரிகிறது.[6] இந்த வேளிர் தலைவர்கள் தாய்வழி உறவினரான பழனிமலை வேளிர், மனைவிவழி உறவினரான மையூர் வேளிர், இந்த வேளிர்களுக்கு உறவினரான பிற வேளிர் ஆகியோர் சேர்ந்த குழுவினர்.[7]

---

4 பதிற். 73 : 9

5 அகம். 135 : 12, 135 : 13; பதிற். 71 : 17, 72 : 7

6 14 வேளிர் கழுவுளின் காமூரை அழித்த போரைப் பரணர் பாடியுள்ளார். பெருஞ்சேரல் இரும்பொறை கழுவுள் தலைமறைந்து ஓடும்படி போரிட்டதை அரிசில்கிழார் குறிப்பிடுகிறார். இரண்டு பாடல்களிலும் மன்னர் கலங்கிய நிலை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, இரு போரும் ஒன்றென்றே கொள்ளத் தகும்.

7 இவ்வாறு 11 வேளிரும், சேர, பாண்டியரும் ஒன்றுகூடிக் கரிகால் வளவனோடு வெண்ணியில் போரிட்டுத் தோற்றதை அகநானூறு 246-ல் காணலாம்.

இந்தப் போரில் கழுவுள் மடமை அதாவது, அறியாமை காரணமாகப் பெருஞ்சேரலை எதிர்த்துள்ளான் என்பதை எடுத்துக் கூறிப்[8] போருக்குப்பின் இருவரையும் ஒன்றுசேர்க்க அரிசில்கிழார் முயன்றுள்ளார் எனத் தெரிகிறது. இவரது முயற்சி கைகூடியிருக்கலாம்.

கொல்லிமலைப் போர்

கொல்லிமலையில் நீர்கூர் என்பது பண்டைக்காலத்தில் இருந்த ஓர் ஊர். கழுவுளை வெற்றிகண்ட பெருஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டில் ஊடுருவி அதியமானை இந்த ஊரில் தாக்கினான்.[9] பெருஞ்சேரலின் செல்வாக்கைக் குலைக்க விரும்பிய சோழனும் பாண்டியனும் அதியமானுடன் சேர்ந்து கொண்டனர். போர் கடுமையாக நடைபெற்றது. பெருஞ்சேரல் வெற்றி பெற்றான்; பகையரசர்களின் முரசு, குடை, அணிகலன்கள் முதலானவற்றைக் கைப்பற்றிக்கொண்டான்.

தன் வெற்றிக்கு அறிகுறியாகப் போர்க்களத்திலேயே களவேள்வி ஒன்று செய்தான். வெற்றிக்கு உதவியவர்களுக்கு வேண்டியவற்றைப் போர்க்களத்திலேயே நல்கல் களவேள்வி எனப்படும்.

மகளிர் வருந்தும்வண்ணம் அவர்கள் முன்னிலையிலேயே பகைவர்களை இவன் கொன்றான்.[10] இத்தகைய கொடுமையை வீரம் என்று கருதியது வியப்பே.

'புகார்ச் செல்வன்' என்று இவன் கூறப்படுவது புகார் நகரில் வளர்ந்தமை நோக்கி என்று முன்னமே கூறியுள்ளோம். புகார் நாட்டை வென்றதால் இவன் இவ்வாறு கூறப்பட்டான் என்று இதற்குப் பொருள் கொள்வாரும் உளர். இப் பொருள் சிறப்பின்று. எனினும் கொல்லிமலைப் போரில் அதியமானுக்குத் துணையாக வந்த இருவேந்தர்களுள் சோழனும் ஒருவன். ஆகையால், அவனை வென்றமை நோக்கி இவ்வாறு கூறப்பட்டான் எனக் கொள்ளுதலும் ஒருவகையில் அமையும். அவ்வாறாயினும் சோழநாட்டைத் தாக்கி வென்றான் என்றோ அதனால் புகார் நாட்டைத் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தான் என்றோ கூறுவது பொருந்தாது

---

8 பதிற். 71 : 17. 72 : 7, 73 : 1

9 ஷை பதி: 8 : 3-5

10 ஷை பதி. 8 : 8 (மகளிர் இரங்கத் துப்பறுத்து)

தகடூர் வெற்றி

அதியமானின் மகன் எழினி,[11] அதியமான் கொல்லிமலைப் போரில் சேரனிடம் தோற்றபின் பசும்பூட் பாண்டியனது படைத் தலைவனாக அமர்ந்துவிட்டான்.[12] கொல்லிமலைப் போரில் வெற்றிபெற்ற பெருஞ்சேரல் அதியமானின் தலைநகரான தகடூரைத்[13] தாக்கினான். தன் தந்தை அதியமானுக்குத் துணையாகக் குதிரைமலைப் பகுதியில் ஆட்சி செய்து கொண் டிருந்த எழினி, தன் தந்தையின் தலைநகரைக் காக்க விரைந்து வந்து போரிட்டான்.

தாமரைப் பூக்களையும், நெய்தல் பூக்களையும் வீசி மகளிர் கிளிகளை ஓட்டும் வளம்மிக்க பகுதிகளை உடையதாக அக்காலத் தகடூர் விளங்கியது. அத் தகடூரைச் சுற்றிக் காவற்காடு இருந்தது. இந்தக் காட்டரண் போர்வீரர்களின் பயிற்சிக்களமாக விளங்கியது. தேர்ச்சிபெற்ற வீரர்களின் காவலையும் அது உடையதாக இருந்தது. பெருஞ்சேரல், தகடூரை அரசன் இல்லாத போது தாக்கியதால் எளிதில் கைப்பற்றிக் கொண்டான்; கோட்டையை அழித்துக் கைப்பற்றிக்கொண்டான். கோட்டை அழிந்ததைக் கண்ட மறவர்கள் பாதுகாவல் நாடி ஓடிவிட்டனர்.

எழினி தன் தந்தையின் தலைநகரை மீட்கப் போராடினான்; ஆனால், போரில் கொல்லப்பட்டான்.

குட்டுவன் தகடூரைத் தாக்கிக் கொளுத்தினான் என்றும், அப்போது அவனை எதிர்த்துப் போராடுவதற்கு ஆள் இல்லை என்றும் பரணர் குறிப்பிடுகிறார்.[14] பெருஞ்சேரல் தகடூரைத் தாக்கியபோது அவனுக்குத் துணையாக[15] வேந்தன் செங்குட்டு வனும் வந்திருந்து தகடூரை வென்ற செய்தியையே பரணர் இவ்வாறு கூறியுள்ளார். செங்குட்டுவன் தகடூரை அழித்துவிட்டு எதிர்ப்போர் இன்றி மீண்டான். பெருஞ்சேரல் கோட்டையில் தங்கியிருந்து ஆட்சிசெய்யத் தொடங்கியபோது எழினி தாக்கிய போர் மூண்டது என்றும், எனினும் சேரரே வெற்றி பெற்றனர் என்றும் கொள்வது பொருத்தமானது.

---

11 புறம். 230 : 6

12 அந்தப் பாண்டியனுக்காக நன்னனை எதிர்த்துப் போராடி மாண்டதை அவனது வரலாற்றில் காணலாம்

13 தர்மபுரி

14 அகம். 212 : 16-17

15 அல்லது செங்குட்டுவனுக்குத் துணையாகப் பெருஞ்சேரல்

சேரன் செங்குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை, அதியமான் ஆகியோர் சமகாலச் சேரர் குடியினர். இவர்கள் மூவரும் பனம்பூ மாலை அணிபவர். செங்குட்டுவன் தந்தை நெடுஞ்சேரலாதனும் பெருஞ்சேரல் தந்தை செல்வக்கடுங்கோவும் பழனி மலைப் பகுதியில் ஆண்ட வேள் ஒருவனின் இரண்டு பெண் மக்களைத் திருமணம் செய்துகொண்டதால் இவர்களிடையே உறவு நெருக்கமாயிருந்தது. எனவே, இருவரும் சேர்ந்து தம்மோடு உறவு நெருக்கம் இல்லாதவனும், தம் பகைவேந்தரான சோழ பாண்டியரோடு தொடர்பு கொண்டிருந்தவனுமாகிய அதியமானை — சேரரின் கிளைக்குடியைச் சேர்ந்த அதியமானை — ஒழிக்கத் திட்டமிட்டு வெற்றிகண்டனர். செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு இரண்டு ஆண்மக்கள் இருந்தனர் என்று குறிப்பிட்டோம். அவர்களுள் மூத்தவன் இங்குக் கூறப்பட்ட பெருஞ்சேரல் இரும்பொறை. இளையவன் ஒன்பதாம் பத்தின் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை. அவன் பெயரை ஒன்பதாம் பதிகம் 'குட்டுவன் இரும்பொறை' என்று குறிப்பிடுகிறது. பரணர் தகடூரில் பொருமுரண் பொறாது திரும்பிய குட்டுவன் என்று குறிப்பிடுவது இவனையோ என்று ஐயுறவுக்கும் இடமுண்டு. இந்த ஐயுறவு வேண்டியதில்லை. பரணர் குறிப்பிடும் குட்டுவன், குட்டுவன் இரும்பொறை அல்லன். பரணர் குறிப்பிடும் குட்டுவன் தகடூரில் பொருமுரண் பொறாது வென்று கடலை முற்றுகையிட்டுக் கடல் அலை விலகும்படி நல்ல துறைமுகம் அமைக்கும் பணியில் ஈடுபட்டான் இதனாலோ, கடற்போர் வெற்றியாலோ கடல் பிறக்கோட்டினான் என்று அவன் குறிப்பிடப்பட்டுள்ளான். எனவே, நாம் மேலே கூறியவாறு சேரன் செங்குட்டுவனே அதாவது, கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனே பெருஞ்சேரல் இரும்பொறைக்கு உதவியாக இருந்தான் என்று கொள்ளவேண்டும்.

இவனது போரைக் குறிப்பிடும்போது புலியைக் கொன்று விட்டுப் பின் யானை ஒன்றைக் கொல்லும் அரிமா[16] இவனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இஃது இவன் இரண்டு அரசர்களைக் கொன்ற செய்தியைக் குறிப்பிடுகிறது எனலாம். எழினி இவனால் கொல்லப்பட்ட செய்தி தெளிவு. இவனால் கொல்லப்பட்ட மற்றோர் அரசன் பெயர் தெரியவில்லை.

பகைவர் நிலை

இவனைத் துன்புறுத்தியவர் தாணியச் சேமிப்புக் களஞ்சியத்தை உடைத்த சிறுவர்கள்போலத் துன்புற்றனர் என்றும்[17]

16 பதிற். 75 : 1-2 17 கூ 71 : 7

இவனது பகைவர்கள் இவனது ஆற்றலைப் புலவர்கள் கூறும் போது உணர்வதில்லை, இவனது சான்றோர் (படைவீரர்) செயல் படும்போது உணர்வார்கள் என்றும்,[18] வேந்தரும், வேளிரும், பிறரும் ஒன்றுசேர்ந்து வந்தாலும் பணிந்து இவன் வழியில் நடக்கா விட்டால் அவர்களது நாடு இவனால் வெள்வரகு விதைக்கப்பட்டுப் பாழாகும் என்றும்[19] புலவர் கூறுவது இவனது பேராற்றலையும் பகைவரின் எளிமையையும் உணர்த்துவனவாக உள்ளன.

பகைவரின் முரசை அறுத்தும், பகைவரின் பட்டத்து யானைக் கொம்புகளை வெட்டியும் அரியணை செய்து அமர்ந்து, குருதிக் கலப்பில்லாத உணவுப் படையலை ஏற்காத இவனது அயிரை மலைக் குலதெய்வம் போலக் கேடில்லாப் புகழுடன் வாழவேண்டும் என்றும்,[20] போர் முறையில் பகைவரிடம் திறைபெற்று வாழ வேண்டும் என்றும்[21] இவன் வாழ்த்தப்படுகிறான்.

படை

இவனது யானைப் படை கொங்கர்களின் பசுக் கூட்டம்போல் பெரியது. அந்த நாட்டு (தகடூர் நாட்டு) ஆட்டு மந்தைபோல் குதிரைப் படை பெரியது. தேர்ப்படைகளும் காலாட் படைகளும் எண்ணில் அடங்காதவை. இவனது படை வீரர்களில் வேற் படையினர் மிகுதி.[22]

கொடைத்தன்மை

படைவீரர், தம்மிடம் வந்து இரந்தவர். இரக்க இருப்பவர், விறலியர் முதலானவர்களுக்கு இவன் கொடை வழங்கினான். கனவிலும் புலவர்கள் பிறரைக் கருதாவண்ணம் மிகுதியாக வழங்கினான். மழைபோல் வரையாது வழங்கினான்.[23]

பெருஞ்சேரல் இரும்பொறை தன்னைச் சிறப்பித்துப் பாடிய அரிசில்கிழார் என்னும் புலவருக்குத் தன் அரண்மனையை அரசுரிமையோடு பரிசாகக் கொடுத்தான். தானும் தன்மனைவி யும் அரண்மனைக்கு வெளியே வந்து நின்றுகொண்டு அவற்றைப் புலவருக்குக் கொடுத்தான். அவற்றுடன் தன் சொந்தப் பணமாக இருந்த ஒன்பது நூறாயிரம் காணம் பணத்தையும் அவருக்குக் கொடுத்தான். புலவர் அவற்றை ஏற்றுக்கொண்டார். பின்னர்த் தாம் பெற்ற பொருள்களை அவனே ஏற்றுக்கொண்டு

---

18 பதிற் 72
19 ஷ. 75 : 11
20 ஷ. 79 : 18-19
21 ஷ. 80 : 9-10
22 ஷ. 76 : 1-2
23 ஷ. 76 : 9-10, 79 : 4-5

ஆளவேண்டுமென்று இரந்து வேண்டினார். பெருஞ்சேரல் புலவரின் வேண்டுகோளை நிறைவேற்றி மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். புலவர் அரிசில்கிழார் அதுமுதல் அவனுக்கு அமைச்சராக விளங்கி வந்தார்.

வேள்வி

இவன் நல்லோர் உரைகளைக் கேட்டுப் படிவ நோன்பு தவறாது இருந்து வேள்விகள் செய்தான்.[24] இந்த வேள்வியால் உயர்ந்தோர் (உயர்நிலையிலிருந்த பார்ப்பனர்) மகிழ்ந்தனர். இந்த வேள்வி வேட்டலில் இவனது மனைவி வேறுபட்ட கருத்துடையவளாய் இருந்தாள் (வேள்விக்கு ஒப்பவில்லை). இவர்களுக்கு நாடாளத்தக்க ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவனைக்கொண்டு இவ்வுலகில் உள்ள மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் இவன் செய்தான். அதாவது, இவன் மகன் அரசனாகவும் மக்கள் தொண்டனாகவும் விளங்கினான். இந்த நிகழ்ச்சி மனைவி இல்லாமல் கணவன் மட்டுமே வேள்வி செய்து மனைவி குழந்தையைப் பெற்றெடுத்த நிகழ்ச்சி ஆகையால், அரிசில்கிழார் என்னும் தமிழ்நெறியறிந்த புலவர்க்கு வியப்பை உண்டாக்கவில்லை. காரணம், வேள்விக்கும் குழந்தைப் பேற்றிற்கும் தொடர்பில்லை. புலவர்க்கு வியப்பை உண்டாக்கியது வேறொன்று இருந்தது. அது அவனிடமிருந்த நரைமூதாளனை அறிவு, தெளிவு பெறச் செய்ததேயாகும்.

பெருஞ்சேரல் இரும்பொறை பார்ப்பானைக் கொண்டு வேள்வி செய்தானல்லனோ ? அப்போது அந்த வேள்வியால் பயனில்லை என்பதைத் தானே உணர்ந்திருந்தான். எனினும், நரை மூதாளனாய் உலகியல் முழுதும் உணர்ந்தவன்போல் அவனிடம் வாழ்ந்த பார்ப்பானின் மகிழ்ச்சிக்காகவே வேள்வி செய்தான். தன் படிவ நோன்புகளால் சித்துமுறையில் இருந்து குழந்தைப் பேற்றைப் பெற்றான். இந்தப் 'படிமைச் சித்துத் தவம்' உடையோர் கொடை, மாண்பு, உடல் உள்ள செல்வ வளம், எச்சமாகிய குழந்தைப் பேறு, தெய்வத்தன்மை ஆகிய யாவும் கைவரப் பெறலாம் என்பதைத் தெளிவுபடுத்தினான். இவனிடம் தோற்ற நரைமூதாளப் பார்ப்பான் சேர நாட்டை விட்டே ஓடி விட்டான். இந்தச் செயல் புலவரை வியப்புக்கு உள்ளாக்கியது.

பண்பு நலம்

இவனது பண்புகள் குறித்து அரிசில்கிழார்[25] கூறுகிறார். இவன் போரை விரும்பும் உடல்வலிமை மிக்கவன். பிறர்க்கு

24 பதிற். 74 : 1-2

25 ஷ 72 : 5 7, 74 : 25-28. 79 : 1-3

இவன் துணையாவானே அன்றிப் பிறர் துணையை வேண்டுவதில்லை என்னும் அளவுக்குத் தன்நிகரில்லாதவன்.[26] பகைவர்களுக்கு மடங்கல் தீப்போன்றவன்; சினம் மிக்கவன்;[27] போரில் இவன் தன் உயிரைப் போற்றுவதில்லை; பெரியோரைப் பேணுவான்; சிறியோரை அளி செய்து காப்பாற்றுவான்;[28] புகழ்தரும் கல்வி நலம் சான்றவன்;[29] செம்மையான நாநலம் படைத்தவன்;[30] அளக்க முடியாத நற்பண்புகள் மிக்கவன்.[31]

இவனது ஆண்மை நலம்[32] கண்டு உலகிலுள்ள ஆண்களின் ஆண்மை தேய்வுற்றது. தோளில் பூமாலையணிந்து மகிழ்வுடன் இவன் வாழ்ந்தான்.[33] பொன்மாலை அணிவதும் உண்டு.[34] புரவி பூட்டின தேரில் போர்க்களம் செல்வதும்,[35] கொடி பறக்கும் தேரில் பிற இடங்களுக்குச் செல்வதும்[36] இவன் வழக்கம். பல வேற்படைகளைத் தாங்கிச் செல்வதும், யானைமீது செல்வதும் உண்டு.[37]

மனைவியின் மாண்பு

இவனது மனைவி அந்துவஞ்செள்ளை. அவள் மையூர் (மைசூர்) கிழான் என்னும் வேளிர் தலைவனின் மகள். அறல் போன்ற அழகிய நீண்ட கூந்தலை உடையவள் இவள்.[38]

மனைவியர்

இவன் தன் மலர்மாலை குழைய மகளிர் பலரைத் தழுவி மகிழ்ந்தான் என்று கூறப்படுகிறது.[39] இதனால் அந்துவஞ் செள்ளையாகிய பட்டத்தரசியே அன்றிப் பிற மனைவியரும் இவனுக்கு உண்டு எனத் தெரிகிறது.

மகன்

பெருஞ்சேரல் சில காலம் மகப்பேறின்றி இருந்து தன் சித்துப் படிமைத் தவநெறியால் தன் பட்டத்தரசியின்பால் மகனைப் பெற்றான் அவன் நாடாளும் மன்னனாகவும் மக்கள் தொண்ட

---

26 பதிற். 73 : 1-3
27 டி. 72 : 5-16
28 டி. 79 : 3
29 டி. 80 : 17
30 டி. 79 : 5
31 டி. 79 : 8
32 டி. 79 : 6
33 டி. 79 : 7
34 டி. 75 : 3
35 டி. 80 : 13
36 டி. 73 : 15
37 டி. 75 : 2-3
38 டி. 74 : 3
39 டி. 79 : 6-7

னாகவும் விளங்கினான்.[40] இவன் பெயர் என்னவென்று தெரிய வில்லை. நாடாண்ட செய்திபற்றி வேறு குறிப்பும் இல்லை. ஒருவேளை நாடாளத் தொடங்கும்போதே போரில் ஈடுபட்டு மாண்டிருக்கவேண்டும்.

பாடின புலவர்

அரிசில்கிழார் என்னும் புலவர் இவனைப் பாடியுள்ளார். அரிசில் என்பது காவிரியின் கிளை ஆறாய்ச் சோழநாட்டில் பாயும் ஆறு. புகார் நாட்டில் இவன் வளர்ந்தபோது இப் புலவர் இவனுக்கு ஆசிரியராய் விளங்கியிருக்கக்கூடும்.

ஆட்சி ஆண்டு

பெருஞ்சேரல் இரும்பொறை 17 ஆண்டுகள் அரசாண்டான்.[41]

இளஞ்சேரல் இரும்பொறை

பதிற்றுப்பத்து அமைப்பைக் காணும்போது இவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பின் அரசாண்டவன் எனத் தெரிகிறது.

பெற்றோர்

இவனது தந்தையின் பெயர் குட்டுவன் இரும்பொறை; தாயின் பெயர் அந்துவஞ்செள்ளை.[1] செள்ளை என்னும் சொல்லுக்குத் தாய் என்றும் பொருள் உண்டு. எனவே, அந்துவஞ் செள்ளை என்னும் பெயர் அந்துவனது தாய் என்னும் பொருளுடை யதாக இருக்குமோ என்று எண்ணவேண்டியுள்ளது. ஆயின், இளஞ்சேரல் இரும்பொறைக்கு அந்துவன் என்னும் பெயர் கொண்ட மகன் ஒருவன் இருந்தான் என்றும், அவன் தன் பெயரில் தாயைக் குறிப்பிட்டு வழங்கும் அளவுக்குப் பெரும் புகழுடன் விளங்கினான் எனவும் கொள்ள வேண்டிவரும். இந்த அந்துவன் பற்றிய செய்தி எதுவுமே கிடைக்கவில்லை.

இந்த அந்துவஞ்செள்ளையின் தந்தை மையூர்கிழான். மையூர்கிழான் என்பது மையூர் (மைசூர்) மக்களின் தலைவன் என்று கொள்ளக்கிடப்பது. இவன் இளஞ்சேரல் இரும்பொறைக்கு அதாவது, தன் மருமகனுக்கு அமைச்சனாகவும் விளங்கினான்.

---

40 பதிற். 74 : 19-21
41 ஷை பதி. 8

1 பதிற். பதி. 9 : 1-2

தன் அமைச்சுப் பணியில் மையூர்கிழான் உண்மையைப் பெரிதும் போற்றிக் கடைப்பிடித்து ஒழுகிவந்தான்.[2] இவனை இளஞ்சேரல் இரும்பொறை நல்ல அறிவுரை கூறிக் குறுநிலத் தலைவனாக விளங்கும்படி செய்தான்.

தனக்குத் துணையாகக் குறுநிலத் தலைவனாக விளங்கும்படி இவனைச் செய்ய நன்கு அறிவுரை கூறப்பட்டது என்ற செய்தி இவன் முன்பு இளஞ்சேரல் இரும்பொறைக்கு எதிராக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது. எனவே, இளஞ்சேரல் இரும்பொறை இவனுக்குத் தக்க அறிவுரை கூறித் தனக்குத் துணையாகக் குறுநிலத் தலைவனாக ஆக்கிக் கொண்டான். இவனது தந்தை இவனது மகளை மணந்து கொண்டதன் வாயிலாக உறவை வலுப்படுத்திக்கொண்டான்.

மையூர்கிழானின் அமைச்சு இளஞ்சேரல் அரசாட்சியிலா, மையூர் அரசாட்சியிலா என்பது தெரியவில்லை. யாண்டைய தாயினும் இவன் அமைச்சன் என்பது மட்டும் உறுதி. (எருமை யூரன் வரலாற்றை ஈண்டு நினைவுகூர்தல் நலம்.)

நாடு

இளஞ்சேரல் இரும்பொறையின் மனைவி கொல்லிமலையில் மலர்ந்திருந்த காந்தள் மலரைச் சூடிக்கொண்டாள்.[3] நறவுத் துறைமுகப் பகுதியில் இவனது நாண்மகிழ் இருக்கை இருந்தது.[4] மகளிர் நீராடும் வானியாற்று நீரைக்காட்டிலும் இவன் இனிய தண்ணளி உடையவன்.[5] கொங்கர் கோ,[6] தொண்டியோர் பொருநன்,[7] மரந்தையோர் பொருநன்,[8] குட்டுவர் ஏறு,[9] பூழியர் மெய்ம்மறை,[10] பூழியர்கோ,[11] விரவுமொழிக் கட்டூர் வயவர் வேந்து[12] என்றெல்லாம் கூறப்படும் இவனைப்பற்றிச் செய்திகள் கொல்லிமலைப்பகுதி, நறவுத் துறைமுகம், வானியாற்றுப்படுகை, கொங்கு நாட்டுப் பகுதி, தொண்டித் துறைமுகப் பகுதி, மாந்தைத் துறைமுகப்பகுதி, குட்ட நாட்டுப் பகுதி, பூழி

---

2 ' மெய்யூர் அமைச்சியன் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி ' (பதிற். பதி. 9 : 11-12)

3 பதிற். 81 : 22
4 ஷை. 85 : 8
5 ஷை. 86 : 12-13
6 ஷை. 88 : 19, 90-25
7 ஷை. 88 : 21
8 பதிற். 90 : 28
9 ஷை. 90 : 26
10 ஷை. 90 : 27
11 ஷை. 84 : 6
12 ஷை. 90 : 30

நாட்டுப் பகுதி. கட்டூரைச் சூழ்ந்த பகுதி ஆகியவை இவனது நாட்டில் அடங்கியிருந்தது என்பதைப் புலப்படுத்தும். இந்தப் பரப்பளவு சேர நாட்டின் வடபகுதி என்று குறிப்பிடத்தக்கது.

விச்சிமலைப் போர்

இப்போது பச்சைமலை என வழங்கும் விச்சிமலைப் பகுதியை ஆண்டவன் 'விச்சிக்கோ'[13] எனப்பட்டான். இவன் அம் மலைப் பகுதியில் 'ஐந்தெயில்' என வழங்கப்பட்ட கோட்டையில் இருந்து கொண்டு அரசாண்டு வந்தான். இளஞ்சேரல் இரும்பொறை அந்தக் கோட்டையைத் தாக்கினான். விச்சி அரசனுக்கு உதவியாக இரண்டு அரசர்கள் சேர்ந்துகொண்டனர். அவர்கள் யார் எனத் தெரியவில்லை. பொதுவகையால் பாண்டியனும் சோழனும் சேரனுக்கு எதிராகப் போரிட்டனர் என்று கூறுவது வழக்கமாக இருந்துவருகிறது. போரில் 'ஐந்தெயில்' கோட்டை அழிந்தது. சேரன் வெற்றி பெற்றான். விச்சி அரசன் போரில் மாண்டான்.

பெருஞ்சோழன் வீழ்ச்சி

பெருஞ்சோழன்[14] என்பவன் கோப்பெருஞ்சோழன் என்று கொள்ளலாம். இவன் பொத்தியை[15] ஆண்டவன். இவனைச் சேரன் வஞ்சினம் கூறி வென்றான் என்று கூறப்படுகிறது. இவ்வாறு சேரன் இவன்மீது வஞ்சினம் கூறக் காரணம், இச் சோழன் விச்சிக்குத் துணையாக நின்றமையால் விளைந் திருக்கவேண்டும் என்று உய்த்துணரக்கிடக்கின்றது. சோழன் விச்சிக்குத் துணையாக இந்தச் சேரனை எதிர்த்து நின்றதை மேலே கண்டோம். பதிற்றுப்பத்துப் பாடலில்[16] இந்தச் சோழன் 'பெரும்பூண் சென்னியர் பெருமான்' என்று குறிப்பிடப் படுகிறான். போர் நடந்தபோது இந்தச் சோழனைத் தன்முன் கொண்டுவந்து நிறுத்துமாறு இளஞ்சேரல் இரும்பொறை தன் படைக்கு ஆணையிட்டான். படைவீரர்கள் முயன்றனர். சோழர் படையினர் அப்போது தம் வேல்களைப் போர்க்களத்திலேயே போட்டுவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர். இவ்வாறு ஓடியவர்களின் வேல், கபிலர் நன்றா என்னும் குன்றின் மீதேறிக் கண்ணிற்

---

13 பதிற். பதி. 9 : 4

14 ஷை 9 : 6

15 'பொத்தனூர் என்னும் ஊரை ஆண்டவன். இவ்வூர் சேலம் மாவட்டம் வேலூரை அடுத்துக் காவிரி ஆற்றங்கரையில் உள்ளது.

16 பதிற். 85 : 2-3

கண்ட ஊர்களையெல்லாம் பரிசாகப் பெற்றாரே அதனைக் காட்டிலும் அதிக எண்ணிக்கை உடையனவாம்.

பாண்டியன் மாறன் வீழ்ச்சி

'மாறன்' என்று பெயர் முடிவதைக்கொண்டு இளம்பழையன் மாறன், பாண்டியன் என்பது விளங்கும்.[17] இந்தப் பாண்டியன் வித்தை என்னும் ஊரை ஆண்டவன். சோழனை வென்றது போலவே இந்த மாறனையும் இளஞ்சேரல் இரும்பொறை வஞ்சினம் கூறிப் போராடி வென்றான். எனவே, இவனும் விச்சிக்குத் துணை நின்றவன் என்பது உய்த்துணரக் கிடக்கின்றது.

முற்கூறியதுபோல விச்சி அரசன் போரில் மாண்டான். கோப்பெருஞ்சோழனும், இளம்பழையன் மாறனும் சிறைப் பிடிக்கப்பட்டனர். இவர்கள் வஞ்சி மூதூருக்குக் கொண்டுவரப் பட்டனர். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த சதுக்கப் பூதத்தை இவன் வஞ்சிக்குக் கொண்டுவந்து சாந்தி விழா நடத்தினான்.

(செங்குட்டுவன் வடநாட்டுக் கனக விசயரைச் சிறைப் படுத்திக் கொண்டுவந்தான். இவனோ தமிழ்நாட்டு வேந்தரைச் சிறைப்பிடித்துக் கொண்டுவந்தான். இருவரும் வஞ்சிக்குத்தான் கொண்டுவந்தனர். செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை அமைக்க இமயத்திலிருந்து கல் கொண்டுவந்தான். இளஞ்சேரல் இரும்பொறையோ காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த சதுக்கப் பூதத்தைக் கவர்ந்து சென்றான். இருவரும் விழா நடத்தினர். செங்குட்டுவன் சோழ பாண்டியரை அரவணைத்துக் கொண்டவன். இவனோ பகைத்துக் கொண்டவன்.)

இவனது போர்பற்றிப் பொதுவகையில் பல செய்திகள் தரப்படுகின்றன. இவன் வேற்று நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அங்குத் தங்கியிருந்தான்.[18] அப்போது அவன் யானைப் படையுடன் பாசறையில் தங்கினான்.[19] கொல்லக் கொல்லக் குறையாத தானையில் யானை, மா, மறவர், தேர், தோல் படைகள் இருந்தன.[20] இவன் பல நாடுகளை அழித்து அந் நாட்டுச் செல்வங்களைத் தன் நாட்டுக்கு கொண்டுவந்தான்.[21] இவனால் அழிக்கப்பட்ட கோட்டைகள் எண்ணற்றவை.[22] யானைக் காலில் மூங்கில் முளைகள் நசுங்கி அழிவதுபோல்

17 பதிற். பதி. 9 : 7
18 ஷை 81 : 18
19 ஷை 84 : 4-5
20 ஷை 82 : 13, 83 : 3-4
21 ஷை 83 : 6-7
22 ஷை 84 : 7-8

இவனுக்குச் சினமூட்டியவர் நசுக்கப்பட்டனர்.[23] இவனது படைகள் அணிவகுத்துச் செல்வது கண்ணுக்கினிய காட்சியாயினும் பகைவர்க்கு அது இன்னாதது.[24] இவனது படையில் பலமொழி பேசும் மக்களும் வீரர்களாய் விளங்கினர்.[25] அவர்கள் பகைவர்களைக் காஞ்சியாக்கும் (நிலையாமையாக்கும்) பண்பினர்.[26] இவன் பாசறையில் தங்கியிருந்தபோது வேந்தர்கள் இரவு பகலாய்த் தூங்காமல் நடுங்கிக் கொண்டிருந்தனர்.[27] இவ்வாறு போர் வல்லமை உடையவனாக இவன் திகழ்ந்தான்.

கொடை

இவன் இசைவாணர்களைப் பேணிப் பாதுகாத்து வந்தான்.[28] இசைபாடும் பெண்களுக்கு அரிய நல்ல அணிகலன்களை அளித்துச் சிறப்பித்தான்.[29] வறுமையில் வாடியவர்களுக்கு அவர்களது துன்பம் நீங்கும் அளவுக்குக் கொடுத்தான்.[30] போர் வெற்றியில் கிடைத்த செல்வங்களையெல்லாம் வஞ்சி மூதூருக்குக் கொண்டு வந்து பிறர்க்கு உதவும் வகையில் நல்கினான்.[31]

பெருங்குன்றூர்கிழார் இவன் போர்ப் பாசறையில் இருந்த போது கண்டு பாடினார்.[32] அவரது பாடலைப் போற்றி இளஞ்சேரல் இரும்பொறை 32 ஆயிரம் காணம் பணமாகக் கொடுத்தான். பெருங்குன்றூர்கிழாரின் பாடல்திறத்தைக் கண்டு, வியந்து போற்றாதவர்களுக்கு இந்தச் செல்வத்தை அளித்துப் புலவர் பிறரை வியக்கச் செய்யவேண்டும் என்று கூறி அந்தச் செல்வத்தைக் கொடுத்தான்.[33] புலவர் இந்தப் பணத்தைப் பிறருக்குக் கொடுத்தபின் அவரது வாழ்க்கைக்கு உதவும் பொருட்டு ஊர்களும், வளமனைகளும், அவ் வீட்டில் வாழ்வதற்கு வேண்டிய பொருள் வளமும், வேளாண்மை செய்வதற்காக ஏர் வளமும், இன்பமாக வாழ்வதற்கு வேண்டிய பிற வசதிகளும், எண்ணிலடங்கா அணிகலச் செல்வமும் அவருக்குக் கொடுத்ததோடு அச் செல்வங்களையெல்லாம் முறையாக நிர்வகித்து உதவும் வகையில் ஏற்பாடும் செய்து கொடுத்தான்.[34]

---

23 பதிற். 84 : 11-12
24 ஷை 83 : 3-6
25 ஷை 90 : 30
26 ஷை 84 : 19
27 ஷை 81 : 35-37
28 'பாடுநர் புரவலன்' (பதிற் : 86:8)
29 'பாடினி நன்கலம் பெறுகுவை' (பதிற். 87 : 1)
30 'இல்லோர் புன்கண் தீர நல்கும்' (பதிற். 86 : 6)
31 பதிற். பதி. 9 : 9
32 பதிற். 82 : 2
33 'மருளில் லார்க்கு மருளக்கொடு வென்று' (பதிற். பதி.9) கொளூ
34 பதிற். பதி. 9 கொளூ

பெருஞ்சேரல் இரும்பொறையே அன்றி அவனது நாட்டில் இருந்த செல்வர்களும் தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் வள்ளல்களாக விளங்கினர்.[35]

குறிப்பிடத்தக்க செயல்கள்

இளஞ்சேரல் இரும்பொறையின் செயல்களில் குறிப்பிடத் தக்கவை சில உள்ளன. அவை வருமாறு :

சதுக்கப்பூதரை வஞ்சிக்குக் கொண்டுவரல் : பெருஞ் சதுக்கத்து அமர்ந்திருந்த பூதங்களைக் கொண்டுவந்து வஞ்சி நகரில் நிலைநாட்டினான்.[36] இவன் கொண்டுவந்தவை பூதச் சிலைகள் எனக் கொள்ளலாம். இவன் எங்கிருந்து இந்தப் பூதச் சிலைகளைக் கொண்டுவந்தான் என்பது தெரியவில்லை. எனினும் சோழனை வென்ற இவன் சோழ நாட்டுப் புகார் நகரிலிருந்த பூதச் சிலைகளைக் கவர்ந்து வந்தான் என்று உய்த்துணரப்படு கிறது. மணக்கிள்ளி என்ற சோழ அரசன் பீலிவளை காரணமாக இந்திரவிழாக் கொண்டாட மறந்ததனால், காவிரிப்பூம்பட்டினம் கடல்கோளுக்கு இரையானதற்கும், இவன் புகார் நகரத்துப் பூதச் சிலைகளைக் கவர்ந்து வந்ததற்கும்கூடத் தொடர்பிருக்க வாய்ப்பு உண்டு.

இவ்வாறு இளஞ்சேரல் இரும்பொறை நிலைநாட்டிய சிலைக்குச் சாந்தி வேள்வி செய்தான். சாந்தி வேள்வி என்பது நடுகல் விழாவாகும்.

மந்திர மரபில் தெய்வம் பேணல்

தெய்வ வழிபாடு தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலவி வந்த வழக்கமே ஆகும். ஆனால், இந்த இளஞ்சேரல் இரும்பொறை மந்திரம் சொல்லிக் கடவுளை வழிபாடு செய்யும் புதிய வழக்கத்தை உண்டாக்கினான்.[37] மந்திரம் என்பது வடமொழி மந்திரம். சேர நாட்டில் இவனது காலத்திற்கு முன் அரசாண்ட இவனது முன்னோர்களில் சிலர் பார்ப்பார்க்கு உயர்வு தந்து வேள்வி செய்தார்கள் என்பது நாம் அறிந்த ஒன்றே. எனினும், அவர்கள் பார்ப்பனரைக் கடவுளுக்கு மந்திரம் சொல்லும்படி செய்து தாம் பின்னின்று வழிபாடு செய்யவில்லை. இவன்தான் அந்த நிலையை முதன் முதலில் உண்டாக்கியவன் போலும்.

---

35 பதிற். 81 : 22-23
36 ஷை பதி. 9 : 13-14
37 ஷை பதி. 9 : 10

மந்திரம் என்பது வடமொழி மந்திரம் அன்று. திருமந்திரம் என்னும் வழக்கினைக் கொண்டு தமிழில் மந்திரம் இருந்தது என்றும், அதுபோன்ற தமிழ் மந்திரங்களைச் சொல்லிக் கடவுள் வழிபாடு செய்ய இவன் ஏற்பாடு செய்தான் என்றும் கொள்ளலாம். எப்படியாயினும் இவனது காலத்திலேதான் கோயிலில் மந்திரம் சொல்லும் வழக்கம் தோன்றியது என்றும், அதற்கு மக்கள் தம் விருப்பம்போல் தாமே கடவுளின் முன்பு நின்று தம் குறைகளைப் போக்க வேண்டிக்கொண்டனர் என்றும் கொள்ளவேண்டி வரும்.

எது எப்படி ஆயினும் இவன் காலத்தில்தான் வழிபடுவோன் சார்பில் மற்றொருவன் நின்று கடவுளை வேண்டும் இடைத்தரகு நிலை தோன்றியது என்று எண்ணும்படி வரலாற்றுச் சான்று அமைந்துள்ளது.

இன்னிசை முரசு

செங்குட்டுவனின் பாட்டன் உதியஞ்சேரல் 'இன்னிசை முரசின் உதியஞ்சேரல்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான். அதுபோலவே, இவனும் 'இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை' என்று குறிப்பிடப்பட்டுள்ளான். பொதுவாக மணமுரசு, மறமுரசு, கொடை முரசு என முரசு முழக்கத்தைப் பொருட்பயன் நோக்கிப் பகுத்துக் காட்டுவது வழக்கம். ஆனால், இங்குக் கூறப்பட்ட 'இன்னிசை முரசு'[38] என்னும் தொடர் இசைத்தன்மையை நோக்கி அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. முத்தமிழில் ஒன்றாகிய இசையை, முரசு முழக்கி இசைவழிப் போற்றியதால் இவன் இவ்வாறு அழைக்கப்பட்டான்.

செங்கோலாட்சி

இவனது ஆட்சி 'மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்' என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது.[39] இதனால் இவன் மக்களைப் போலவே பிற உயிரினங்களையும் மாண்புடன் காத்துச் செங்கோலோச்சி வந்தான் என்பது பெறப்படுகிறது. இவனது செங்கோலாட்சியால் நாட்டுவளம் பெருகிற்று என்றும் கூறப்படுகிறது.

தோற்றம்

இவன் குதிரைமேலும் யானைமேலும் உலாச் சென்ற காட்சி மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது.

---

38 பதிற். பதி. 9 : 17 39 பதிற். பதி. 9 : 16

மனைவியின் மாண்பு

ஒளிபொருந்திய நெற்றி, நீண்ட கண்கள், சீவிப்படிந்த கறு கறுத்த தலைமுடி, அழகே உருவான முகம், வண்டுகள் மொய்க்கும் கூந்தல், காதிலே குழை, கையிலே ஒளிரும் வளையல் முதலானவற்றுடன் இவனது மனைவி பொலிவுடன் விளங்கினாள். அவள் பெருந்தகைமைப் பண்பு உடையவள். அந்தப் பண்புக் கேற்ப அவளது வாயிலிருந்து வரும் மொழிகள் எப்போதுமே மென்மையானவையாய் விளங்கின. அதாவது, அரசி என்ற ஆணவச் சொற்கள் அவளது வாயிலிருந்து வரவில்லை. கொள்கையில் அடக்கமுள்ளவளாயும் கணவன் தன் அகவாழ்வில் தவறு செய்தாலும் அதைப் பொடுட்படுத்தாது தன் கடமையைச் செய்யும் ஆறிய கற்பு உடையவளாயும் அவள் விளங்கினாள்.[40] இவளது கற்பு (அருந்ததி) மீனொடு ஒப்ப வைத்து எண்ணக்கூடிய அளவுக்குச் சிறந்தது என்றும் கூறப்பட்டது. தெளிவான இவளது நற்பண்பின் புகழ் ஓங்கியிருந்தது.[41]

இவளைச் சுற்றி ஆயத்தார் எப்போதும் இருந்தனர். அவர்கள் ஒளிமிக்க அணிகலன்களை மிகுதியாக அணிந் திருந்தனர். இவளும் மார்பில் சந்தனம், நெற்றியில் பொட்டு, பூமாலை, கச்சுப் போன்ற பூண்வகைகள், மணி பதித்த அணி கலன்கள் முதலானவற்றை அணிந்துகொண்டு பொலிவுடன் விளங்கினாள்.

பாவைபோல் அழகிய ஆயத்துப் பெண்களுக்கு நடுவே, ஓவியம்போல் சிறப்பாகக் கட்டப்பட்ட அந்தப்புர மாளிகையில் இவள் வாழ்ந்துவந்தாள்.

அந்துவன் கால்வழி அரசர்கள்
(திரண்ட நோக்கு)

அந்துவன் கால்வழியில் தோன்றி அரசாண்ட அரசர்கள் என்று தெளிவாக நமக்குத் தெரியவருபவர் நான்கு பேர். அவர்களது வரலாற்றைத் தனித்தனியே முன்பு கண்டோம். இனி, அவர்களது உறவு முறைகள், அவர்கள் ஆண்ட நாடு, அவர்கள் செய்த போர்கள், முதலானவற்றை ஒருங்கிணைத்து ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்கவேண்டும். அடுத்துத் தரப்பட்டுள்ள அட்டவணை அவர்களுடைய உறவு முறையைத் தெளிவாக்கும்.

---

40 பதிற். 90 : 48-50 41 ஷ 89 : 19

அந்துவற்கு	ஒரு தந்தை ஈன்ற மகன்	பொறையன்	பெருந் தேவி	ஈன்ற மகன்	செல்வக் கடுங்கோ வாழி யாதன்
செல்வக்கடுங் கோவுக்கு		வேளாவிக் கோமான் பதுமன்	தேவி	ஈன்ற மகன்	பெருஞ் சேரல் இரும் பொறை
குட்டுவன் இரும் பொறைக்கு		மையூர் கிழான்	வேண்மாள் அந்துவஞ் செள்ளை	ஈன்ற மகன்	இளஞ் சேரல் இரும் பொறை

இந்தப் பட்டியலில் வேளாவிக் கோமான் பதுமன் தேவியை அதாவது, பதுமனது மகளை செல்வக்கடுங்கோ மணந்தான் என்பதை அறிகிறோம். முன்பு உதியன் கால்வழி அரசர்களது வரலாற்றைத் திரட்டி நோக்கியபோது வேளாவிக்கோமான் பதுமன் தேவியை (அதாவது, பதுமனது மகளை) இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் மணந்தான் என்று அறிந்தோம். எனவே, பதுமனின் பெண்மக்கள் இருவரை முறையே நெடுஞ்சேரலாதனும் செல்வக் கடுங்கோ வாழியாதனும் திருமணம் செய்துகொண்டார்கள் என்பது தெரியவருகிறது. இதனால் இவர்கள் இருவரும் சமகாலத்தவர் என்பது தெளிவாகும்.

முன்பு செங்குட்டுவனது காலத்தை அடிப்படையாகக் கொண்டு உதியன் கால்வழியில் தோன்றி அரசாண்ட அரசர்களது காலத்தை அட்டவணை விளக்கத்தில் வரையறுத்துக் கண்டோம். அந்த அட்டவணையில் இங்கு நாம் கண்ட அந்துவன் கால்வழியில் தோன்றிய அரசர்களது ஆட்சிக் காலமும் காட்டப்பட்டுள்ளது.

அங்கு நாம் வரையறுத்துக் கொண்டது போலவே ஒரு தலை முறைக்கும் மற்றொரு தலைமுறைக்கும் இடையிலுள்ள காலம் இருபத்தைந்து ஆண்டுகள் என்றும், அண்ணனுக்கும் தம்பிக்கும் அல்லது அக்காளுக்கும் தங்கைக்கும் இடையிலுள்ள காலம் ஐந்து ஆண்டுகள் என்றும் வைத்துக்கொண்டு இவர்களது காலத்தை யும் நாம் விளக்கமாகக் காணலாம்.

உதியன் கால்வழி அரசர்களை மூத்த தலைமுறை என்றும், அந்துவன் கால்வழி அரசர்களை இளைய தலைமுறை என்றும் பொதுவாக அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, உதியன் கால்வழியைச் சார்ந்த நெடுஞ்சேரலாதனை மணந்தவள் அக்காள் என்றும், அந்துவன் கால்வழியைச் சார்ந்த செல்வக்கடுங்கோவை மணந்தவள் தங்கை என்றும் நாம் உய்த்துணருதல் பொருத்த முடையதாகும். அக்காள் தங்கையருக்கிடையே ஐந்து ஆண்டு இடைவெளி என்னும் கோட்பாட்டை நாம் கொண்டிருப்பதால் அக்காளை மணந்த நெடுஞ்சேரலாதன் அரியணை ஏறியபின் தங்கையை மணந்த செல்வக்கடுங்கோ வாழியாதன் ஐந்து ஆண்டுகள் கழித்து அரியணை ஏறினான் என முடியும்.

நெடுஞ்சேரலாதன் கி. பி. 95-ல் அரியணை ஏறினான் என்று பார்த்தோம். எனவே, செல்வக்கடுங்கோ வாழியாதன் கி.பி.100-ல் அரியணை ஏறினான் எனலாம். நம் கோட்பாட்டுப்படி செல்வக் கடுங்கோவின் தம்பி அந்துவன், அவனுக்கு 25 ஆண்டுகட்கு முன்பு (அதாவது, கி. பி. 75—100 ஆண்டுகள்) அரசாண்டான் எனத் தெரியவரும். 25 ஆண்டுகள் அரசாண்டான் என்று பதிற்றுப்பத்துப் பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செல்வக்கடுங்கோ வாழியாதன் கி. பி. 100—125 கால இடைவெளியில் அரசாண்டான் எனவும், 17 ஆண்டுகள் அரசாண்ட பெருஞ் சேரல் கி.பி. 125—142 ஆண்டு இடைவெளியில் அரசாண்டான் எனவும் நாம் கொள்ளலாம். பெருஞ்சேரல் ஆண்ட காலத்திற்கும் இளஞ்சேரல் ஆண்ட காலத்திற்கும் இடையிலுள்ள காலத்தில் இளஞ்சேரலின் தந்தையும் வேறு சிலரும் ஆண்டிருக்கக்கூடும். ஆதலால், இளஞ்சேரல் இரும்பொறை கி. பி. 150 —171 (16 ஆண்டுகள்) இடைவெளியில் அரசாண்டான் என்பது தெரிய வரும்.

இனி அவர்கள் ஆண்ட நாடு, போர் முதலியவற்றைத் திரட்டி நோக்கலாம்.

அரசன்	ஆண்ட நாடு	செய்த போர்
அந்துவன்	(கொங்குக் கருவூர்)	(முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி மதங்கொண்ட யானைமீது இவனது கருவூரில் நுழைதல்)
செல்வக் கடுங்கோ வாழியாதன்	(கொங்குக் கருவூர் பூழிநாடு) நேரிமலைப் பகுதி, செருப்புமலைப் பகுதி, நறவுத் துறைமுகத்தைச் சூழ்ந்த நாடு, வில்லோர் (குதிரை மலைப் பகுதி) நாடு	வேந்தர் செம்மாப்பைத் தொலைத்தான்.
பெருஞ்சேரல் இரும்பொறை	(புகார் நாட்டில் வளர்ந்தான்) பூழிநாடு	1. கழுவுளின் காமூரைத் தீக்கிரையாக்கினான். 2. அதியமானோடு நீர்கூரில் போரிட்டுச் சோழரையும் பாண்டியரையும் உடன்வென்றான். 3. எழினியோடு தகடூரில் போரிட்டு வென்றான்.
இளஞ்சேரல் இரும்பொறை	கொல்லிமலைப் பகுதி வானியாற்றுப்படுகை, நறவுத் துறைமுகப் பகுதி, கொங்கு நாடு, தொண்டித் துறைமுகப் பகுதி, குட்டநாட்டுப் பகுதி, பூழிநாட்டுப் பகுதி, காட்டூரைச் சூழ்ந்த பகுதி.	1. விச்சியோடு போர். 2. பெருஞ்சோழனோடு போர். 3. இளம்பழையன் மாறனோடு போர்.

மூன் கண்ட அட்டவணையில் ஒவ்வோர் அரசரும் ஆண்ட நாட்டுப் பகுதிகளையும் அவர்கள் பிற நாட்டு அரசர்களோடு நடத்திய போர்களையும் ஒப்புநோக்கி எண்ணிப் பார்க்கும்போது அந்துவன் கால்வழி அரசர்களின் செல்வாக்குப் படிப்படியாக உயர்ந்தும் தாழ்ந்தும் வந்திருப்பதை நாம் காண முடியும். அந்துவன்சேரல் இரும்பொறை கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்தவன் என்பது மட்டும் தெரிகிறது. இந்தக் கருவூர் கொங்கு நாட்டுக் கருவூர். கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் பெயர்கொண்ட அரசன் முதன்முதலாகக் கொங்குநாட்டுக் கருவூருக்கு வந்து சேரர் ஆட்சியை நிலைநாட்டினான் என்று அவனது பெயரால் தெரிகிறது (பிற சேர அரசர்கள் என்னும் தலைப்பின்கீழ்க் காணலாம்). இந்தக் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையை அடுத்தோ சில தலைமுறைகளுக்குப் பின்போ அந்துவன் சேரல் அரியணை ஏறிக் கருவூரைச் சேர்ந்த ஒரு சிறு நாட்டுப் பகுதியை ஆண்டுவந்தான்.

இவன் மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன் காலத்தில் நாடு பெரிதும் விரிவு உடையதாகக் காணப்படுகிறது. இவனுக்குப் பின் அரியணை ஏறிய பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தில் செல்வக்கடுங்கோவின் ஆட்சியின்கீழ் இருந்த நாட்டுப் பகுதிகள் சிலவற்றில் போர் மூண்டிருக்கிறது. எனவே, இவனுடைய நாட்டுப் பரப்புச் சற்றுக் குறைந்து போயிற்று எனத் தெரிகிறது.

இவனுக்குப் பிறகு இவனது மகன் இளஞ்சேரல் இரும்பொறை காலத்தில் முன்பு இல்லாத அளவுக்கு நாடு மிகப்பெரிய பரப்புடையதாக விளங்கி இருந்தது. இவனது பெரியப்பன் பெருஞ்சேரல் இரும்பொறை, அதியமானோடு கூட்டுச்சேர்ந்து தன்னை எதிர்த்த சோழரையும் பாண்டியரையும் வென்றான். இவனோ தனித்த முறையில் கோப்பெருஞ்சோழன் என்னும் சோழ அரசனோடும் இளம்பழையன் மாறன் என்னும் பாண்டிய அரசனோடும் போரிட்டு வெற்றி பெற்றிருக்கிறான். இந்த வகையில் இவனது நாடு மிகப்பரந்த எல்லையை உடையதாக விளங்குகிறது.

இளஞ்சேரல் இரும்பொறைக்குப் பின் நாடாண்ட சேர அரசன் யார் என்பது தெரியவில்லை. ஒருவேளை நமக்குக் கிடைக்காமல் போன 10ஆம் பதிற்றுப்பத்துத் தலைவன் இவனுக்குப் பின் அரியணை ஏறி அரசாண்டிருக்கலாம். இவனை அடுத்துச் சேர நாடு சிதறுண்டு பல குறுநில மன்னர்களின் ஆட்சிக்குக்கீழோ சேர அரசர்கள் பலரது ஆட்சிக்குக்கீழோ வந்திருக்கலாம்.

2. பிற சேர அரசர்கள்

பல்வேறு புலவர்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் பாடிய பாடல்கள் நானூறு கொண்டது புறநானூறு. அவற்றுள் 267, 268 எண்ணுள்ள பாடல்கள் முற்றிலுமாகக் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள பாடல்கள் சிலவற்றில் சில



அடிகள் கிடைக்கவில்லை. சில பாடல்களைப் பாடியவர் இன்னார் என்று தெரியவில்லை. சில பாடல்கள் யார்மீது பாடப் பட்டவை என்னும் குறிப்புச் சிதைந்து போயிற்று.

இந்த நானூறு பாடல்களையும் தொகுத்தவர் யார் என்று தெரியவில்லை. தொகுத்தவர் ஒவ்வொரு பாடலுக்கும் சுருக்கக் குறிப்பு ஒன்று தந்துள்ளார். அக் குறிப்புகளை அறிஞர்கள் 'கொளு' என்று குறிப்பிடுகின்றனர். யாரை யார் பாடினார் என்னும் குறிப்பு அதில் சிறப்பிடம் பெறுகிறது. சில பாடல் களுக்குப் பாடப்பட்ட சூழலும் கூறப்பட்டுள்ளது.

சில அரசர்கள் பெயருக்கு இந்தக் கொளுக் குறிப்புச் செய்த தொகுப்பாசிரியர் மட்டுமே பொறுப்பாளி. எடுத்துக்காட்டாக ஒன்று குறிப்பிடலாம். சேரமான் மாரிவெண்கோ என்ற அரசன், சோழ அரசன் ஒருவனோடும் பாண்டிய அரசன் ஒருவனோடும் சேர்ந்திருந்தபோது ஔவையார் பாடியதாகக் கொளுக் குறிப்பிடு கிறது. பாடலில் அவர்கள் பெயர் குறிப்பாலும் உணர்த்தப்பட வில்லை. இதுபோன்ற குறிப்புத் தவறாகவும் இருக்கமுடியும் என்பதை 389ஆம் எண்ணுள்ள பாடல் தெரிவிக்கின்றது. இந்தப் பாடலில் புலவர் தாம் பாடிவந்த அரசனிடம் (யார் என்று தெரியவில்லை) ஆதனுங்கன் போலப் பரிசில் தரவேண்டும் என்று வேண்டுவதைக் காண்கிறோம். பாடலில் கொளுக் குறிப்பு ஆதனுங்கனையே பாடியுள்ளதாகக் குறிப்பிட்டுவிட்டது. இது பொருந்தாக் கூற்று. இதுபோன்ற நிலைகள் இருப்பதால் கொளுக் குறிப்பினால் மட்டும் தெரியவரும் செய்திகளை அப் படியே முழுமையான உண்மைகள் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது.

பதிற்றுப்பத்துச் சேர அரசர்களைப்பற்றிய வரலாற்றில் அவர்களோடு தொடர்புடைய செய்திகள் பிற நூல்களில் எங்கு இருந்தாலும் உடன் எடுத்துக் கூறப்பட்டதுபோல் புறநானூற்றில் சிறப்பாகக் காணப்படும் அரசர்களின் வரலாற்றைக் காணும்போது பிற நூல்களில் கிடைக்கும் செய்திகளும் ஒருங்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றன.

சேரமான் வஞ்சன்

வாய்மொழி வஞ்சன்[1] என்னும் திருத்தாமனாரின் தொடரால் இவனைப்பற்றி அறிகிறோம்.

நாடு

அருவிகள் பாயும் மலை பாயல் மலை. அந்த மலைப் பகுதியைக் கொண்ட நாட்டுக்கு இவன் அரசனாக விளங்கினான்.

---

1 புறம். 398 : 8

வீரம்

மக்களை மகிழ்விப்போராகிய கூத்தர், பாணர், புலவர்கள் இவனது ஊரில் நுழையலாமே அன்றி, இவனது பகைவர்களால் அவ்வூரை நெருங்கவும் முடியாது. பகைவர்களுக்கு அந்த ஊர் புலிக்கூட்டங்கள் தூங்கும் குகை போன்றது. கட்டுகளால் மாட்சிமைப்பட்ட கடி அரண் ஒன்றில் வாழ்ந்து வந்தான். இங்ஙனம் கூறப்படுவதால் கோட்டையது வலிமையும், இவனைச் சார்ந்தவர்களின் ஆற்றலும் பெறப்படும். இவனது வீரமும் உய்த்துணரப்படும்.

கொடைத்தன்மை

இவன் தன்னை நாடிவந்த புலவர்களுக்கெல்லாம் பரிசில் வழங்கினான். அதிலே ஒரு தனிச் சிறப்பாக இவன் வழங்கினான். பரிசில் பெற வந்தவர்களிடையே உயர்வு தாழ்வு காணாது முன் வந்தவர்களுக்கு முன்னும், பின் வந்தவர்களுக்குப் பின்னும் வரிசை முறைப்படி வழங்கினான்.

திருத்தாமனார் என்னும் புலவர் இவனைப் பாடிச் சென்றார். அவரை இவன் சிறப்பித்த பாங்கில் தனிச்சிறப்பு உண்டு. மான் கறி வறுவலும், கொக்கின் நகம்போலும் நெல்லரிசிச் சோறும் கொடுத்து விருந்து படைத்தல் வியப்பன்று. தூசி படிந்த அவரது கிழிந்த உடையை நீக்கிவிட்டுப் புத்தாடை உடுத்தது வியப்பன்று. இவன் தன் உடையின்மேல் பகட்டுக்காக ஓர் உயர்ந்த ஆடை அணிவது வழக்கம். புகை விரிந்தாற்போல் பொங்கித் தோன்றும் பட்டாடை அது. இவனுக்கே உரித்தான ஒரே ஓர் ஒப்புயர்வற்ற ஆடை அது. அந்த ஆடையை இவன் புலவர்க்கு அணிந்து மகிழ்ந்தான்.

ஒப்புநோக்கம்

அதியமான் தனக்கு எதிர்பாராமல் கிடைத்த நாவல்கனியை அவ்வைக்கு ஈந்து மகிழ்ந்தான். வஞ்சனோ தன்னிடம் இருந்ததையே புலவர்க்கு அளித்து மகிழ்ந்தான்.

பண்புநலம்

இவன் எப்போதும் சொன்ன சொல் தவறியதில்லை. கோசர்கள் 'வாய்மொழிக் கோசர்' எனச் சிறப்பிக்கப்படுகின்றனர். அவர்கள் வாய்மொழிக்கும் இவனது வாய்மொழிக்கும் வேறுபாடு உண்டு. கோசர்கள் போரில் வஞ்சினம் கூறுவர். கூறிய மொழி பொய் போகாது சூழ்ச்சி செய்தேனும் செயலை நிறைவேற்றிக்

கொள்வர். இந்தவகையில் அவர்களது வாய்மொழி வஞ்சின வாய்மொழியாகும். வஞ்சன் வாய்மொழியோ கொடையில் வாய்மொழி. தருவதாகக் கூறி, கூறிய சொல் தவறாமல் நல்குவான். பிறர் புகழ்ந்து கூறினும் அவர்கள் மொழி பொய்போகாதவாறு வழங்குவான். இதுவே இவன் பண்பாகும்; தெய்வ நம்பிக்கை மிக்கவன்; இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லவன்; எவராலும் வெல்ல இயலாத வீரத்தையுடையவன்.

தோற்றப் பொலிவு

இவன் மார்பு மலை போன்றதாகும். அதில் அரவு போன்ற ஆரம் உள்ளது. அதில் வையகம் விளங்கும் மணிக்கல் பதித்துள்ளது. இந்தக் கோலத்தில் அவனது மேனியே ஒரு பூவாகப் பூத்திருந்தது.

வஞ்சமன் கூடல்

இவன் காலத்தில் கொங்குநாட்டைச் சேர்ந்த கரூர், சேரர்க்குச் சேர்ந்திருந்தது. கரூருக்கு எட்டுக் கி.மீ. தொலைவில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற வெஞ்சமக் கூடல் என்னும் சிவதலத்தைக் கருங்கற்களால் கட்டினான். அவ்வூர் அவனது பெயரால் வழங்கி வந்தது. வஞ்சமன் கூடல் என்பது பேச்சு வழக்கில் வஞ்சமாங்கூடல்—வெஞ்சமாங்கூடல் என மருவி வழங்கப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத் தலத்தைப் பற்றித் தேவாரம் பாடியுள்ளார். அப் பாடலைப் பார்த்தால் சேரமான் வஞ்சன் காலத்தில் அவ்வூர் சிறப்புற்று விளங்கியது என்பது தெரிகின்றது. அவ்வூர் சிற்றாற்றின் கீழ்க்கரையில் உள்ளது.

சேரமான் மாரிவெண்கோ

சேரமான் மாரிவெண்கோ,[1] சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி ஆகிய சேர, சோழ, பாண்டிய அரசர்கள் ஓரிடத்தில் மகிழ்ந்து நட்புறவோடு கூடியிருந்ததாகக் கொளுக் குறிப்பிடுகிறது. பாடலில் 'கொடித்தேர் வேந்தர்' என்று விளித்து அவ்வையார் அறிவுரை கூறியுள்ளார். அவர்கள் 'முத்தீ'ப்போல் இருந்ததாக அவர் குறிப்பிடுவதால் மூன்று அரசர்கள் என்பதும் உறுதியாகிறது. மூன்று அரசர்கள் இன்னார் என்று கொள்வதற்குப் பாடலில் சான்று இல்லை.

---

1 புறம். 367, கொளு

பார்ப்பார்க்கும் இரவலர்களுக்கும் கொடை வழங்க வேண்டும் என்றும், மகளிரோடு மதுவருந்தித் திளைத்து வாழ வேண்டு மென்றும் அந்த மூவரையும் அவ்வையார் வாழ்த்துகிறார்.

மூவேந்தர் கூட்டாட்சி

சமயத்திற்கேற்றாற்போல் மூவேந்தர்களில் இருவர் ஒன்று சேர்ந்துகொண்டு மற்றொருவனை எதிர்த்து நிற்றல் சங்ககால வரலாற்றில் பொதுநிகழ்ச்சி. ஆனால், மூன்று அரசர்களும் உணர் வால் ஒன்றி உடலால் நெருங்கியிருந்து தமிழ்நாடு முழுவதையும் ஒருமைப்பாட்டு உணர்வுடன் ஆளமுனைந்தது இவன் காலத்தில் தான். இந்த நிகழ்ச்சி தமிழக வரலாற்றில் கிடைக்கும் சான்று களில் முதல் அரசியல் ஒருமைப்பாட்டு நிகழ்ச்சியாகத் திகழ்கிறது.

சேரமான் பெருஞ்சேரலாதன்

சேரமான் பெருஞ்சேரலாதனுக்கும்[1] கரிகால் பெருவளத்தா னுக்கும் போர் மூண்டது. போர், வெண்ணி என்னும் ஊரில் நடை பெற்றது. இது சோழனுடைய ஊர்.[2] எனவே, இந்தச் சேர அரசன் படையெடுத்துத் தாக்கினான் எனத் தெரிகிறது. போரில் கரிகால் வளவன் வெற்றிபெற்றான். எனினும், முடிவு எல்லா மக்களுடைய உள்ளத்தையும் உருக்கும் அவலமாக முடிந்தது.

போர்க்களத்தில் இரண்டு அரசர்களும் நேருக்குநேர் நின்று போரிட்டனர். கரிகாலன் வலிமையுடன் வேல் வீசினான். அந்த வேல் சேரலாதனின் மார்பில் பாய்ந்து முதுகில் கழன்றோடி விட்டது. இதனால் தன் முதுகில் காயம்பட்டதை அறிந்த சேர லாதன் போரிடுவதை நிறுத்திவிட்டான். போர்க்களத்திலேயே வடக்குத் திசையை நோக்கி அமர்ந்து உயிர்துறந்தான்.

தமிழர்கள் மார்பில் படும் காயம் ஒவ்வொன்றையும் தமக்குக் கிடைத்த பேறு என்று கருதுவர்.[3] முதுகில் எதிர்பாராது காயம் பட்டாலும் அப் புண் தம்மைப் புறமுதுகு காட்டியவர் என்று சிலரையேனும் எண்ணத்தூண்டும் என்று எண்ணி அப் புண்ணை ஆற்றிக்கொள்ளாமலேயே மாய்வர். நெடுஞ்சேரலாதன் தன்

---

1 புறம். 65; அகம். 55 : 10-11

2 'கோயில்வெண்ணி' என்பது இவ்வூரின் வழக்கு

3 'ஏமப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து' (குறள். 776)

முதுகில் பட்ட புண் தானே ஆறித் தான் பிழைத்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணிப் போர்க்களத்திலேயே வடக்கிருந்தான். புறப்புண்ணோடு தன் நாட்டுக்குச் செல்ல விரும்பாமல் போர்க்களத்திலேயே வடக்கிருந்தான். தன் மானத்திற்கு இழிவு நேர்ந்த அப்பொழுதிருந்தே தன் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக மாய்த்துக் கொண்டான். வடக்கிருத்தல் என்பது வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணாமல் உயிர் துறப்பது. தன் வாளைத் தனக்கு எதிரே ஊன்றி வைத்துவிட்டு வடக்கிருக்கும் பழக்கத்தால் அது 'வாள் வடக்கிருத்தல்'[4] எனப்பட்டது.

மக்கள் அவலம்

எந்த இசைக்கருவியும் முழங்கவில்லை; வீரர்கள் கள் உண்ணவில்லை; உறவினர்கள் தேறல் அருந்தவில்லை; உழவர்கள் தம் கடமை ஆற்றும்போது சோர்வை மறைக்க எழுப்பும் ஓசையை எழுப்பவில்லை; ஊர்களிலே மகிழ்ச்சி நடமாட்டம் இல்லை. இவ்வாறு எங்கும் அவலம். சேரனுக்காகச் சோழ நாட்டிலேயே இத்தகைய அவலம். படையெடுத்துத் தாக்கிய பகைவன் சாகிறான் என்பதில்கூட அவலம். இது சோழநாட்டு மக்கள் நிலை.[5]

சான்றோர் அவலம்

சேரலாதன் நிலைமைபற்றிய செய்தி சான்றோரிடையே பரவியது. கேட்ட சான்றோர் ஆங்காங்கே தாமும் வடக்கிருந்தனர்; உயிர் துறந்தனர்.[6]

புலவர் கருத்து

இவன் இறந்துவிட்டபின் ஞாயிறு தோன்றிப் பயன் இல்லை; பகலும் இரவுதான்.[7] இவ்வாறு கூறுகிறார் கழாத்தலையார்.

வெண்ணிக் குயத்தியார், வென்ற கரிகாலனிடம் கூறுகிறார்:[8] 'வென்ற சோழனுக்கு வெற்றிப் புகழ், தோற்ற சேரனுக்கோ வீரப் புகழ். வெற்றிப் புகழைக் காட்டிலும் வீரப் புகழ் நல்லதாம்.'

இவ்வாறெல்லாம் பெருஞ்சேரலாதனின்மீது அதாவது, படையெடுத்துத் தாக்கியவன்மீது எல்லாருக்கும் இரக்கம் தோன்றக் காரணம் என்ன? கரிகாலன் செய்த கொடுமை. பகைவன் மார்பில்

---

4 புறம். 65 : 11
5 ஷ 65 : 1-5
6 அகம். 55 : 11-15
7 புறம். 65 : 12
8 ஷ 66

வேலைப் பாய்ச்சியது கொடுமையா? இல்லை. அது அவன் கடமை, பின் என்ன? அவன் வலிமையிலே சோர்வு. மார்பில் பாய்ந்து முதுகில் வெளிவரும்படி எய்த அவனது பெரு வலிமையிலா சோர்வு? இல்லை இல்லை. பகைவனுக்குப் போரிட வாய்ப்பு நல்குவது தமிழர் போர்த்துறைகளிலே தலைமையான பண்பு. படைக்கலம் இல்லாதவனோடு படைக்கலம் தந்து போரிடுவான். இறுதித் தாக்குதலில் அன்றி எடுத்த எடுப்பிலேயே திடீரென்று கொன்றுவிடமாட்டான். கரிகாலன் செய்த பிழை அதுதான். எடுத்த எடுப்பிலேயே முதல் வீச்சிலேயே அரசனை வீழ்த்திவிட்டான். இந்த நிகழ்ச்சியைக் கொடிய சூழ்ச்சி, மோசமான சூழ்ச்சி என்று எல்லோரும் கருதினர். கரிகால் வளவன் இளைஞன். அவனிடம் சூழ்ச்சி இல்லை. ஏதோ இளமைத் துடுக்கு நிகழ்ந்துவிட்டது. அரசன் செயலை மக்கள் உள்ளம் ஏற்றுக்கொள்ளவில்லை; குறைகூறவும் இடமில்லை. விளைவு, பகைவன்மீது இரக்க உணர்வு; மரியாதை நிகழ்ச்சி. நாட்டுத் தலைவர்களை இழக்கும்போது இப்போது நாம் துக்கம் கொண்டாடுவதில்லையா? அதுபோல அன்று மக்கள் துக்கம் கொண்டாடினர். பகைவன் இறந்ததற்காகத் துக்கம் கொண்டாடினர்.

கொல்லிமலைத் தலைவன் ஓரியைக் காரி கொன்றான். அப்போது ஓரிக்காக அவன் நாட்டுமக்கள் துக்கம் கொண்டாடினார்கள்.

ஒல்லையூர் நாட்டில் பெருஞ்சாத்தன் மாய்ந்தான். அப்போது அவனால் நலமடைந்தோர் துக்கம் கொண்டாடினார்கள். இந்தத் துக்க நிகழ்ச்சிகளையெல்லாம் விஞ்சிய துக்க நிகழ்ச்சி பெருஞ்சேரலாதனுக்காகக் கொண்டாடப்பட்ட துக்க நிகழ்ச்சி.

ஞாயிறும் திங்களும்

நிறைமதிநாள் மாலை நேரத்தில் ஒரு சுடர் மறைகிறது; ஒரு சுடர் எழுகிறது. சேரலாதன் மறைகிறான்; கரிகால் வளவன் எழுகிறான். ஆற்றல் மிக்க ஞாயிறு சேரலாதன். ஒளிமிக்க திங்கள் கரிகால் வளவன்.[9] இந்த உவமையால் பெறப்படுவது என்ன? வெண்ணிக்குயத்தியார் கூறுவதுபோல்[10] சேரன் சோழனைக் காட்டிலும் நல்லவன்; வல்லவன்.

வேறு பெயர்

'சேரமான் பெருந்தோளாதன்' என்னும் பெயரும் இவனுக்கு வழங்கிவந்ததாகத் தெரிகிறது.[11]

9 புறம். 65 10 ஷெ 66 : 4-8 11 ஷெ 65 'கொளு'

சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்[1]

நாட்டுப் பரப்பு

வங்காளக் குடாக்கடலும் அரபிக்கடலும் இவனுடைய கடல்கள் என்று சொல்லும்படி இவனது நாட்டுப் பரப்பு தமிழகத்தின் தென்பகுதி முழுவதும் பரவியிருந்தது.

வானவரம்பன்

இவனே வானவரம்பன் என்னும் சிறப்புப் பெயரை முதன் முதலில் பெற்றவன் என்று தெரிகிறது. ஞாயிறு இவனது கீழைக்கடலில் தோன்றி இவனது மேலைக்கடலில் மறைந்தது என்று சான்று கூறுகிறது. வடக்கில் இருந்த நாடுகள் இவனைப் புகழ்ந்து கொண்டிருந்தமையால் ஒருவகையில் இவனுக்கு அடங்கியவை. தென்புறம் கடலாகும். எனவே, இவனது நாட்டுக்கு எந்த வகையில் வரம்பு (எல்லை) கூறுவது. மேலே உள்ள வானத்தைக் கூறுவதைத்தவிர வேறுவழியில்லை. எனவே, 'வானவரம்பன்' என்று இவனைப் பலரும் சிறப்பித்துக் கூறி மகிழ்ந்தனர்.

இந்தப் புகழ்ச்சிகளைப் பொருள் நுட்பத்தோடு கேட்டறிந்த மூரஞ்சியூர் முடிநாகராயர் அவனை நேரில் கண்டபோது அதே சிறப்புகளைப் பெருமிதத்தோடு வியப்பும் மகிழ்வும் தோன்றக் கூறி மகிழ்ந்தார்.

போரும் சோறும்

ஐவருக்கும் நூற்றுவருக்கும் போர் நடந்தது. ஐவர் என்பவர் பஞ்சபாண்டவர். நூற்றுவர் என்பவர் துரியோதனன் முதலானோர். இருவருக்கும் நடந்த போர் பாரதப்போர். இப் போரில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் இவன் சோறு வழங்கினான்; பெருஞ்சோற்றுவிழா நடத்திச் சிறப்பாக வழங்கினான்; நண்பர், பகைவர் என்று வரையறுத்துக் கொள்ளாது (வரையாது) எல்லோருக்கும் வழங்கினான்.

பாண்டியரில் பஞ்சவர், கௌரியர் என்போர் கிளைக் குடியினர் ஆவர். இந்தக் கிளைக்குடியினர்க்கிடையே போர் நடந்தபோது இவன் இவ்வாறு நடந்துகொண்டான் என்று அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி கருதுகிறார். 'பொலம்பூண் ஐவர்'[2] எனச் சங்கப் பாடல் குறிப்பொன்று கூறுகிறது. அது பாண்டியரைக் குறிப்பிடுகிறது. எனவே, பாண்டியரும் ஐவர் எனத் தெரிகின்றது. நூற்றுவர் என்பார், ஈரைம்பதின்மரைக் கொள்ளலாம். எனவே, இது கௌரியர் என்னும் துரியோதனன்

[1] புறம். 2 [2] மதுரைக். 775

முதலானோரைக் குறிக்காமல் பாண்டியரில் ஒரு குடியினராகிய 'கவுரியரை' குறிப்பிட்டிருக்கலாம். பாண்டிய நாட்டில் உள் நாட்டுப் போர் நிகழ்ந்தபோது இவன் இரு படைக்கும் உணவு வழங்கியிருக்கலாம் என்று கருதவும் வாய்ப்புண்டு.

பண்புநலன்

பகைவர் செயல்களைப் பொறுத்துக்கொள்வதில் இவன் நிலம் போன்றவன்; சூழ்ச்சித்திறன் அகலத்தால் வானத்தைப் போன்றவன்; வலிமையில் காற்றைப் போன்றவன்; பகைவரை அழிப்பதில் தீப் போன்றவன்; கொடையில் நீரைப் போன்றவன்.

சுற்றம்

பால் புளித்தாலும், பகல் இருண்டாலும், வேதநெறி திரிந்தாலும் இவனோடு உறவில் திரியாத தன்மை உடையது இவனது சுற்றம்.

இத்தகைய சுற்றத்துடன் இமயமலையும் பொதியமலையும் போல அசைவின்றி வாழவேண்டும் என்று இவன் வாழ்த்தப் படுகிறான். ஆட்சிப்பரப்பு பொதியத்திலும், புகழ்ப்பரப்பு இமயத்திலும் விளங்கியமை நோக்கி இவன் இவ்வாறு வாழ்த்தப் படுகிறான்.

உதியஞ்சேரல், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் இருவரும் வெவ்வேறு அரசர்கள்

உதியஞ்சேரல்	சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்
1. செங்குட்டுவனுக்குப் பாட்டன்	பாரதப்போர் நடந்த காலத் தவன். கால்வழி தெரிய வில்லை.
2. பேய்க்குப் பெருஞ்சோறு அளித்தான்.	வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தான்.
3. பாடிய புலவர் கடைச்சங்க காலத்தவர்.	பாடிய புலவர் தலைச்சங்கக் காலத்தவர் (களவியல் உரை).
4. பகைவர்களை வென்றான்.	பகைவர்க்கும் நண்பர்க்கும் நடுநிலையாளனாய் விளங் கினான்.

இளங்கோ கருத்து[3]

இவன் சேர அரசன். பாரதப்போரில் சோறு அளித்தான், சேரர் குடியில் சேரன், பொறையன், மலையன் என்னும் பெயருடன் வரும் கிளைக்குடிகள் உண்டு. அந்தக் குடிகளில் இவன் எந்தக் குடியைச் சேர்ந்தவனானாலும் இவன் சேரர் குடியினன். இவனால் சேரர் குடிக்கே பெருமை.

பெயர் ஒப்புமை, வள்ளன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த இருவரையும் ஒருவர் என்று கூறுகின்றார். இந்த ஒப்புமை மேம்போக்கானது. ஆழ்ந்த நோக்கில் வேற்றுமைகளே மிகுதி. எனவே, இருவேறு அரசர்கள் என்று கொள்வதே சரியானது.

பாரதப்போரே கட்டுக்கதை என்பது சிலர் துணிபு. இஃது உண்மையாயின், இவன் அப்படையினருக்கு உணவு கொடுத்தான் என்று கூறுவது வரம்பிகழ்ந்த புகழ்ச்சி. பாரதப்போர் நிகழ்ந்தது உண்மையாயின், இவன் அப்படையினர்க்குச் சோறு வழங்கியதும் உண்மை.

சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை

இந்த அரசனின் பெயரைப் புறநானூற்றுக் கொளுக் குறிப்பிடுகிறது.[1] பாடலில் பெயர் இல்லை.

நாடு

இவன் கானக நாடன் என்றும் பாடலில் குறிப்பிடப்படுகிறான். எருமை போன்ற கருங்கற்களுக்கிடையில் ஆடுமாடுகள் மேய்வது போல யானைகள் மேயும் கானக நாடு அந்த நாடு என்று பாடல் கூறுகிறது. உம்பல் என்னும் சொல்லுக்கு யானை என்பது பொருள். உம்பற்காட்டில் (இக்காலத்து ஆனைமலைப் பகுதி) யானைகள் மிகுதி. பாடல் குறிப்பால் இவன் தொடக்கக் காலத்தில் ஆனைமலைப் பகுதியில் அரசாண்டு கொண்டிருந்தான் என்று கருதலாம்.

கொங்கு நாட்டில் ஒரு கருவூர் உண்டு. இவ்வூர் சேரநாட்டுக் கருவூர் நினைவாகப் பெயர் சூட்டப்பெற்றது என்பது வரலாற் றாசிரியர்களின் கருத்து. காவிரிக் கரையிலுள்ள முசிறியும் தாராபுரத்திற்கு வழங்கிவந்த வஞ்சி என்னும் பெயரும் இந்த

---

3 சிலப். 29, ஊசல் வரி

1 புறம். 5

முறையில் சேரர்களால் நினைவுச் சின்னப் பெயர்களாக வழங்கப் பட்டவை.

உம்பற்காட்டில் ஆட்சி செய்துகொண்டிருந்த கோப்பெருஞ் சேரல் இரும்பொறை இந்தக் கொங்குநாட்டுக் கருவூருக்கு வந்து அரியணையேறி அரசு புரியலானான். ஒருவேளை இவனே இக் கருவூர் வந்து ஆளத்தொடங்கிய முதல் சேர அரசனாக இருக்கலாம். ஆனதுபற்றி இவனுக்குக் 'கருவூர் ஏறிய' என்னும் சிறப்பு அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கலாம். இந்தச் சிறப்பு அடைமொழியில் 'ஒள்வாள்' என்னும் அடைமொழியும் உள்ளது. இந்த அடைமொழி இவன் வாட்போரில் கொங்குநாட்டில் பெற்ற வெற்றியைக் குறிப்பதாக இருக்கலாம்.

நரிவெரூஉத்தலையார் என்னும் புலவர் இவனைக் கண்டு பாடினார். அன்பும் அருளும் இல்லாதவர்களோடு சேராமல் நாட்டைக் குழந்தையைப்போல் பேணி வளர்க்கவேண்டும் என்று அவனுக்கு அறிவுரை கூறினார். இஃது அவன் புதிதாகக் கைப்பற்றிய நாட்டில் நடந்துகொள்ளவேண்டிய முறையைக் கூறியதாகக் கொள்வது பொருத்தம்.

புறநானூற்றுப் பாடலில் கொளுக் குறிப்பு ஒரு கதையை உருவாக்கியுள்ளது.

இந்தப் புலவரின் தலை, பிணம் தின்னும் நரிகளே வெருண்டு ஓடும்படி அமைந்திருந்தது. இந்த நிலை அவருக்கு ஒரு சாபக் கேட்டால் அமைந்தது. சாபம் கொடுத்தவர் அவருக்குச் சாப விடுதியும் குறிப்பிட்டிருந்தார். சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்டபோது சாபக்கேடு நீங்கிப் புலவர் தம் உடம்பு மீண்டும் கைவரப் பெறுவார் என்பது அந்தச் சாப விடுதி. புலவர் அவ்வாறே கண்டார். தம் உடம்பு கைவரப் பெற்றார். கண்டவன் இன்னான் என உணர்ந்து பாடினார். இந்தக் கதைக்குக் கொளு இடமளிக்கிறது; பாடலில் இடமில்லை. நிகழக்கூடிய நிகழ்ச்சியும் அன்று.

புலவரின் பெயர் நரிவெரூஉத்தலையார் என்று குறிப்பிடப்படு கிறது. இவர் தமது பாடல் ஒன்றில் 'நரைமுதிர் திரை' என்று பாடியுள்ளார்.[2] 'அணில் ஆடு முன்றி'லைப் பாடியவர் அணிலாடு முன்றிலார் என்றும், 'செம்புலப் பெயல் நீர் போல' என்று

---

[2] புறம். 195

பாடியவர் செம்புலப் பெயல் நீரார் என்றும் பெயர் பெற்றிருப்பது போல, 'நரைமுதிர் திரை' என்று பாடியுள்ள இவர் நரைமுதிர் திரையார் என்று பெயர் பெற்றிருக்கலாம். இந்தப் பெயர் நாளடைவில் மருவி நரிவெரூஉத்தலையார் என்று அமைந்திருக்கலாம்.

முதன்முதலில் கருவூருக்கு வந்த சேர அரசனாக இவன் இருப்பதால் பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் அந்துவஞ்சேரலுக்கும் இவன் காலத்தால் முற்பட்டவன் என்று ஆகிறது. எனவே, புறநானூறு தொகுக்கப்பட்ட காலத்திற்கும் இவன் காலத்திற்கும் இடைவெளியாக ஐந்தாறு தலைமுறைகளேனும் இருக்க வேண்டும். இந்த நிலையில் பெயரின் திரிபு வழக்கு இயல்பே. திரிபு வழக்கால் எழுந்த கற்பனைக் கருத்து மிகுதி. இதில் ஓரளவு உண்மை இருக்குமானால் அஃது இந்த அரசனைக் கண்ட மகிழ்ச்சியால் புலவர்க்குத் தோன்றிய புத்துணர்வை உணர்த்துவதாய் இருக்கும்.

சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ[1]

நாடு

தண்பொருநை ஆறு பாயும் விறல் வஞ்சி நகர்க்கு இவன் வேந்தன்.[2] இப்போதுள்ள தாராபுரம், வஞ்சி என்னும் பெயர் பெற்றிருந்தது. அந்தப் பகுதியில் இருந்துகொண்டு இவன் அரசாண்டான் எனத் தெரிகிறது.

வெற்றிகள்

இவன் கோட்டைகள் பலவற்றைக் கடந்தான்.[3] அக் கோட்டையிலிருந்த வலிமைமிக்க வீரர்களைப் புறங்கண்டான். எந்தக் கோட்டையை வென்றான் என்பது தெரியவில்லை.

கொடை

இவன் தன் வெற்றி மகிழ்ச்சியில் பாணர்களுக்குப் பொன்னால் தாமரைப் பூக்கள் செய்து வெள்ளி நாரால் தொடுத்துப் பரிசில்களாக வழங்கினான். இவனது வெற்றிப் புகழை அதாவது, மறப்புகழைப் பாடிய பாடினிக்குக் கழஞ்சு எடை கொண்ட பொன் இழைகள் செய்து வழங்கினான்.

---

1 புகழூர்த் தாமிழிக் கல்வெட்டு 11
2 புறம். 11. 5-7
3 புறம். 11 : 8-3

புலமை நலம்

இவன் பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவன். இவனது பாடல்களில் ஒன்று மட்டும் மருதம்.[4] பிற யாவும் பாலைத் திணை மேலன.

பாடல்களில் உவமை நயங்களும் பிற நயங்களும் மிகுதி. எடுத்துக்காட்டாக ஒன்றைக் காணலாம்.

வேனில் காலத்தில் மரங்கள் தழைத்திருப்பதை இவன் கூறுகிறான். சோம்பல் இல்லாதவனிடம் செல்வம் தழைப்பதுபோல் மரங்கள் தழைக்கின்றன. அவனது செல்வத்தின் பயனைப் பலரும் துய்ப்பதுபோல் மரக்கொம்புகளில் வண்டுகள் படிந்து உண்கின்றன. சில மரங்கள் மாயவளின் மேனிபோல் கரும் பச்சையான தளிர்களை ஈனுகின்றன. அவள் மேனியிலே சுணங்கு இருப்பதுபோன்று அத் தளிர்களின்மீது பூந்தாதுகள் உதிர்ந்துள்ளன.[5]

கல்வெட்டுச் சான்று

கருவூரை அடுத்த புகழூரில் சங்ககாலத்துக் கல்வெட்டு உள்ளது. தாமிழி எழுத்துகளாலான அக் கல்வெட்டில் 'கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோ' என்னும் குறிப்பு வருகிறது. இந்தக் குறிப்பு நம் பாலை பாடிய பெருங்கடுங்கோவையே குறிக்கும் என்று நம்பப்படுகிறது. ஆயின், இவனது தந்தையின் பெயர் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்று முடியும்.

செல்வக்கடுங்கோ வாழியாதனுக்குப் பெருஞ்சேரலிரும்பொறை, குட்டுவன் இரும்பொறை என்னும் பெயரைக்கொண்ட இரண்டு ஆண்மக்கள் இருந்தனர் என்பதை முன்பே கண்டோம். இந்தச் செய்திகள் செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர் என்னும் நிலையை உண்டாக்கும். இவனுக்கு இரண்டு பிள்ளைகள்தாம் இருந்தனர் என்று பாடல் ஒன்று கூறுகிறது.[6] எனவே, மூவர் என்று கூறுவது பொருந்தாது. குட்டுவன் இரும்பொறை என்னும் பெயர் நம் பாலை பாடிய

---

4 குறுந். 231

5 'மடியிலான் செல்வம்போல் மரன்நந்த அச்செல்வம்
படியுண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞிறுஆர்ப்ப,
மாயவள் மேனிபோல் தளிர்ஈன அம்மேனித்
தாய சுணங்குபோல் தளிர்மிசைத் தாதுஉக' (கலி. 35 : 1-4)

6 'இளந்துணைப் புதல்வர்' (பதிற். 70 : 21)

பெருங்கடுங்கோவுக்கு வழங்கப்பட்ட பெயராக இருக்கலாம். இவன் தானே புலவனாக விளங்கியதனால் இவன்மீது வேறு ஒரு புலவர் பதிற்றுப்பத்துப் பாடல்கள் பாடிச் சிறப்பிக்கவில்லை போலும்.

புகழூர்க் கல்வெட்டு பெருங்கடுங்கோ மகன் இளங்கடுங்கோ என்று குறிப்பிடுகிறது. பதிற்றுப்பத்துப் பதிகம் குட்டுவன் என்பவனின் மகன் இளஞ்சேரல் இரும்பொறை என்று குறிப்பிடு கிறது. இந்தச் செய்திகளும் ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவைபோல் காணப்படுகின்றன. பொறையன், கடுங்கோ ஆகிய பெயர்கள் ஒரே அரசனுக்கு வழங்கிய நிலையும் உண்டு என்பதை 'மாந்தரம் பொறையன் கடுங்கோ' என்பவனது வரலாற்றில் காணலாம்.

இந்தச் செய்திகளையெல்லாம் திரட்டி நோக்கி இந்தப் பாலை பாடிய பெருங்கடுங்கோவை ஒன்பதாம் பதிற்றுப்பத்துத் தலைவ னான இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை என்றும் கருதலாம்.

சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறை

நாடு

குடநாட்டிலிருந்து ஆட்சி செய்துகொண்டிருந்தவன் இவன் என்பது இவனது பெயரிலிருந்து பெறப்படும் உண்மையாகும்.

போர்

இடி போன்று போர் முரசு முழங்கப் பெரும்படையுடன் படை யெடுத்துச் சென்று, எதிர்த்த அரசர்கள் அழியும்படி வெற்றி கொள்ளும் வல்லமை பெற்றவன் இவன்.[1] ஒருமுறை இவன் பகை அரசனை அழித்தபோது பகைவர்கள் கையற்று வருந்தினர்.[2] இந்தச் செய்திகள் ஏதோ எல்லோரையும் பொதுப்படக் கூறுவது போல் கூறப்பட்ட செய்திகளாக உள்ளன. சிறப்பாக இவனது போரைப்பற்றிக் குறிப்பிட ஒன்றுமில்லை.

கொடை

பெருங்குன்றூர்கிழார் இவனிடம் பரிசில் பெற வந்தார்; வள்ளல் என்று இவனைப் புகழ்ந்து பாடினார். தாயிடம் பால் இல்லாமையால் பாலுண்ண மறந்த தன் குழந்தையின் நிலையைக்

---

1 புறம். 210 : 13-14 2 ஷ 211 : 5-6

கூறித் தன் வறுமை நிலைமையையும், பக்கத்து வீடுகளுக்குச் சென்றேனும் உண்டு வாழும் எலிகூட உணவின்றிச் செத்து மடிந்துள்ள தன் வீட்டுச் சுவரைக் கூறித் தன்னைச் சூழ்ந்துள்ள வறுமையையும் கூறிப் பரிசில் நல்குமாறு வேண்டினார். அவன் முதல் நாள் பரிசிற் பொருளைக் காட்டி நல்குவதுபோல் பாசாங்கு செய்தான். புலவர் மறுநாளும் பாடினார். தரவில்லை. மூன்றாம் நாளும் பாடினார். முடிவு தெரியவில்லை. கொடுத்திருக்கலாம்.

மாந்தரன்

மாந்தரன் என்னும் பெயர் தனித்தும் பல்வேறு அடைமொழிகளுடனும் காணப்படுகிறது. மாந்தரன்[1], மாந்தரம் பொறையன் கடுங்கோ,[2] சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை[3], சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை,[4] சேரல் மாந்தரஞ் சேரல் இரும்பொறை,[5] கோச்சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை[6] இவ்வாறு ஆறு வேறு தொடர்மொழிகளால் குறிப்பிடப்படும் மாந்தரன் எத்தனை பேர் என்பது தெரியவில்லை. எனவே, தனித்தனியே இவர்களைப் பற்றிய செய்திகளை முதலில் காண்போம்.

மாந்தரன்

ஒன்பதாம் பத்துத் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறை மாந்தரனின் வழிவந்தவன்.

நல்லாட்சி

இந்த மாந்தரன் அறக்கடவுள் வாழ்த்தும்படி நல்லாட்சி புரிந்தவன். இவனது ஆட்சியில் கோள்நிலை திரியவில்லை. வானம் பருவமழை தவறாமல் பொழிந்தது. மக்களுக்கு அச்சம்

---

1 பதிற். 90 : 13
2 அகம். 142 : 4-5
3 புறம். 125
4 ஷை 22
5 ஷை 53
6 ஷை 229; ஐங்குறுநூறு தொகுப்பித்தவனைப் பற்றிய குறிப்பு

'கடுங்கோ' என்பதும் ஒரு நாடடின் பெயர்

'பொறை' என்று அரசனைக் குறிப்பிடுகையில் அவன் பொருந்தி அதாவது, தங்கி அரசாண்டதை எல்லா இடங்களிலும் உணர்த்தும்வகையில் சங்கப் பாடலில் ஆட்சி உள்ளது.

'கோ' என்பது அரச சாதியையும், சேரமான் என்பது குடியையும், யானைக்கண் என்பது வடிவையும், சேய் என்பது இயற்பெயரையும், மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பது சிறப்புப் பெயரையும் உணர்த்துகிறது என்பது பரிமேலழகர் கருத்து. (குறள். 355 உரை).

என்பதே இல்லை. இவனது நாட்டிலிருந்த பொருள்களுக்குப் பாதுகாப்பு மிகுதி. மக்களிடம் அறியாமை என்பது இல்லை. சமூகவாழ்வில் இன்பம் பெருக்கெடுத்திருந்தது. கல்வி பல்வேறு துறைகளில் பல்வேறு அறிஞர்களிடம் துறைபோகிக் கிடந்தது.

திறை பெறல்

வாள்வேந்தர்கள் பலர் இவனுக்குக் களிறும் கலமும் பரிசிலாகத் தந்து இவன் சொன்னபடி செயலாற்றி வந்தனர்.

மாந்தரம் பொறையன் கடுங்கோ

நாடு

இவன் பெயரில் 'மாந்தரன்' என்று வாராமல் 'மாந்தரம்' என்று வருவதால் இது நாட்டின் பெயர் என்பது பெறப்படுகிறது.

பொறையன் என்பது பொறை நாட்டோடு தொடர்பு உடையது. கடுங்கோ என்பது 'இருங்கோ', 'இளங்கோ' என்பன போல் அரசன் பெயராகும்.

புகழ்

பரிசில் வேண்டிச் சென்றவர்களின் கொள்கலம் நிறையும்படி கொடை வழங்கினான். இவனது வள்ளன்மையைப் புலவர்கள் போற்றிப் பாடினார்கள். அவர்கள் செந்நா மேலும் சிவப்புறும்படி பாடினார்களாம்.

படை

வெல்லுதற்கு அரிய படை இவனிடம் இருந்தது என்று கூறப்படுவது பொதுப் புகழ்ச்சியாகப்படுகிறது.

சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை[1]

புறநானூற்றைத் தொகுத்தவர், இவனுக்கும் சோழ அரசன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளிக்கும் நடந்த போரைக் குறிப்பிடுகிறார். போரில் இவன் தோற்றான். சோழன் வென்றான். சோழனது வெற்றிக்குக் காரணம் சோழனது ஆற்றல் அன்று. சோழனுக்குத் துணையாகத் தேர்வண் மலையன் என்னும் சிற்றரசன் இருந்ததே ஆகும். இந்தச் செய்தி பாடலிலும் கூறப்

---

[1] புறம். 125 : 13-17

பட்டுள்ளது. பாடலில் அரசர்களுடைய பெயர் குறிப்பிடப் படவில்லையே அன்றிப் பாடலில் உள்ள செய்தியும் புற நானூற்றைத் தொகுத்தவர் கொளுவில் தரும் செய்தியும் ஒன்றே. எனவே, இவனைப்பற்றிக் கூறப்படும் போர்ச்செய்தி ஐயத்திற்கிட மின்றி உண்மை எனத் தெரிகிறது.[1]

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை[1]

யானையைப் போல் கூர்மையான பார்வையும் முருகனைப் போன்ற அழகும் உடையவனாக இவன் விளங்கியமையால் இவனது பெயரில் 'யானைக்கண்', 'சேய்' என்னும் அடைமொழி கள் முறையே அமைந்தன. பாடலில் 'வேழ நோக்கின் விறல் வெஞ்சேய்' என்று இந்த அடைமொழி குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு

மரந்தை அல்லது மாந்தைத் துறைமுகத்தைத் தலைநகராகக் கொண்ட நாடு மாந்தர நாடு. இந்த நாட்டுக்கு இவன் அரசன் என்பது இவனது பெயரால் விளங்கும் உண்மையாகும்.

வெற்றிகள்

வயலும், மலையும், மணலும், கழியும், கானலும் தன்னகத்தே கொண்ட தொண்டி நகரில் இருந்தவர்களோடு இவன் போரிட்டு அவர்களை அழித்து வென்று சிலகாலம் தங்கி அரசாண்டான்.[2]

கொல்லி வெற்றி

தொண்டி நகரில் போரிட்டு வென்று சிலகாலம் அங்குத் தங்கி அரசாண்டதுபோலவே கொல்லியிலும் சிலகாலம் தங்கி அரசாண்டான்.[3]

சிறைபட்டு மீளல்

இவன் மேலே கூறியவாறு பல வெற்றிகள் பெற்று ஆளு கையில் பாண்டிய அரசன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் பகையைத் தேடிக்கொண்டான். இந்த நெடுஞ் செழியன் இவனைத் தந்திரமாகக் கைதுசெய்து சிறையில் அடைத்தான். யானை பொய்க்குழியில் விழுந்தது இவன் சிறைப்

---

1 புறம் 22
2 ஷை 17 : 27
3 ஷை 22 : 20-28

பட்டதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளபடியால் பாண்டியன் இவனைப் போரில் வென்று கைது செய்யவில்லை; தந்திரமாகக் கைது செய்தான் என்பது தெரிகிறது.

குழியை அழித்துவிட்டு யானை தப்பிச் சென்று தன் கூட்டத் தோடு சேர்ந்துகொண்டது, இவன் சிறையிலிருந்து தப்பிச் சென்ற செயலுக்கு உவமையாகக் கூறப்பட்டிருப்பதால் இவன் பிறருடைய உதவியின்றித் தானே சிறையைத் தகர்த்தெறிந்து விட்டுத் தப்பிவிட்டான் என்பது தெரிகிறது.[4]

பகையரசர் பணிவு

இவனை அண்டினால் தாம் இழந்த நாட்டையும் செல்வத் தையும் திரும்பப் பெறலாம் என்று சில அரசர்கள் இவனைப் பணிந்தனர்.[5] இவன் சினந்தால் தம் கோட்டையை அழித்து விடுவான் என்று சிலர் இவனைப் பணிந்தனர். வேந்தர்கள் பணிந்து திறை கொடுத்தனர்.

படை

இவனது தோல்படை மேகக் கூட்டம் போன்றது. யானைப் படை மலைபோல் உயர்ந்த யானைகளைக் கொண்டது. இவை கடல்போல் பெரியன.[6]

இவனது வீரர்கள் பனம்போழைச் செருகிக்கொண்டு வெறிக் குரவை ஆடினர்.

கொடைத்தன்மை

இவன் முரசு முழக்கி இரவலரை அழைத்துக் கொடை நல்கினான் என்பது குறிப்பிடத்தக்கது.

இவனிடம் பரிசில் பெற்றபின் வேறொருவரிடம் சென்று பெறவேண்டிய நிலை இல்லாதவாறு இவன் மிகுதியாகக் கொடுத்தான். தனக்கு வேண்டுமென்று எதையும் வைத்துக்கொள்ளாது கொடுத்தான்.[7]

ஆட்சி

இவனது நாட்டு மக்கள் சோறு ஆக்கும் தீ அன்றி வேறு தீ அறியார்; வெயில் அல்லது வேறு சூடு அறியார்; வானவில்

---

4 புறம். 17
5 ஷை 17 : 30-34
6 ஷை 17 : 34-36
7 ஷை 229 : 25-27

அன்றிக் கொலை வில் அறியார்; உழுபடை அன்றிக் கொல்படை அறியார். இவன் நாட்டு மண்ணைக் கருவுற்ற பெண்கள் விரும்பி உண்ணுதல் அன்றிப் பகைவர் கொள்ளார். இவனது கோட்டையிலே அம்புகள் பயன்படுத்த வாய்ப்பின்றிக் கிடந்தன. நாட்டிலே அறம் தூங்கியது. மக்களுக்கு நல்ல நிமித்தம் கெட்ட நிமித்தம்பற்றிக் கவலையே இல்லை.[8] விறுவிறுப்பு இல்லாத அமைதியான இன்பமான வாழ்க்கையாகும். இவன் பாதுகாக்கும் நாடு தேவர் உலகம்போல் இன்பத்தையே துய்த்தது.

முன்னோர் ஆட்சி

குமரி முதல் இமயம் வரை மேற்கிலும் கிழக்கிலும் இருகடல்களுக்கிடையில் ஆண்ட அரசர்கள் எல்லாம் ஒன்றுபட்டு இவனது முன்னோருக்கு வழிமொழிந்து வாழ்ந்தனர். இவனது முன்னோர் கொடியவற்றை நீக்கிச் செங்கோலோச்சினர். காடுகளைத் திருத்தி விளைநிலமாக்கினர்.[9]

பண்பு நலம்

கடலின் ஆழம், நானிலத்தின் பரப்பு, திசையின் நீளம், வானத்தின் உயரம் இவற்றையெல்லாம் அளந்துவிட்டாலும் இவனது அறிவு, ஈரம், இரக்க உணர்வு ஆகியவற்றை அளக்க முடியாது என்று கூறுவதால்[10] இவன் நல்ல பண்பாளன் என்பதை அறியலாம்.

ஐங்குறுநூறு தொகுப்பித்தல்

அகத்துறையில் அரிய நூல் ஒன்றைத் திறமையாளர்களைக் கொண்டு உருவாக்க வேண்டுமென்று இவன் விரும்பினான். அறிவில் சிறந்து விளங்கிய புலவர் கூடலூர்கிழாரிடம் அப் பணியை ஒப்படைத்தான். அவர் ஐந்து திணைகளையும், ஐந்து புலவர்களிடம் பகிர்ந்தளித்தார். ஒவ்வொருவரும் 100 பாடல்கள் பாடவேண்டும் என்றும் அந்த நூறும் பத்துப் பத்தாகத் தனித் தனித் தலைப்பின்கீழ் அமையவேண்டும் என்றும் அவர் வரையறை கூறியிருந்தார். அவர் கூறியபடி ஓரம்போகியார் மருதத்திணைப் பாடல்களைப் பாடினார். அம்மூவனார் நெய்தல், கபிலர் குறிஞ்சி, ஓதல் ஆந்தையார் பாலை, பேயனார் முல்லை என்ற முறையில் பிற திணைக்குரிய பாடல்களும் பாடப்பெற்றன. அவை கூடலூர்

---

8 புறம். 20 : 7-21
9 ஷெ 17 : 1-8
10 ஷெ 20 : 1-6

கிழாரால் தொகைநூலாக உருவாக்கப்பட்டன. தலைப்புக்குப் பத்துப் பாடல், திணைக்குப் பத்துத் தலைப்பு என்ற நிலையைக் காணும்போது இது திட்டமிட்டுப் பாடிய தொகுப்பு நூல் என்பது புலனாகிறது.

சேரல் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

விளங்கில் வெற்றி

விளங்கில் என்பது மாடமாளிகைகள் நிறைந்த ஊர். 'தெற்றி' என்னும் ஒருவகை விளையாட்டு அங்குள்ள மக்களுக்குச் சிறப்பு விளையாட்டாகும். இவன் அந்த ஊரைத் தாக்கினான். அதன் சிறப்புகளைத் தன் வாட்படை கொண்டு அழித்தான்.[1]

காலம்

இவன் தனது விளங்கில் வெற்றியைப் புலவர் ஒருவர் நன்கு சிறப்பித்துப் பாடவேண்டும் என்று விரும்பினான். கபிலர், செல்வக்கடுங்கோ வாழியாதனைச் சிறப்பித்துப் பத்துப்பாடல்கள் பாடியது அவன் நினைவுக்கு வந்தது. அப்போது கபிலர் இல்லை; இறந்துவிட்டார். அவர் இருந்தால் நலமாயிருக்குமே என்று எண்ணி ஏங்கினான். இந்த ஏக்கத்தை நிறைவுசெய்யப் பொருந்தில் இளங்கீரனார் என்ற புலவர் தாமே முன்வந்தார். கபிலரைப்போல் இவர் இவன்மீது பத்துப் பாடல்கள் பாடியிருக்கக்கூடும். பதிற்றுப்பத்தைத் தொகுத்தவர் ஏதோ காரணத்தால் இதை விட்டிருக்கக்கூடும்.

இவன் தன் காலத்தில் கபிலர் இல்லை எனக் கூறுவது இவனது காலத்தை வரையறுக்க உதவி செய்யும். செல்வக் கடுங்கோவை அடுத்து அரியணையேறியவன் பெருஞ்சேரல் இரும்பொறை ஆவான். சேரல் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய அரிசில்கிழாரைப் பற்றி எண்ணவில்லை. எனவே, இவனது காலம் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கும் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் இடைப்பட்டது என்பது தெரிகிறது.

வானவன் வரலாற்றில் இவனைப்பற்றி மேலும் காணலாம்.

---

1 புறம். 53 : 3-5

கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை[1]

இவனது வரலாற்றைப் புறநானூற்றுக் கொளுக் குறிப்பு ஒன்று சுட்டுகிறது.

மனைவி

இவன் ஒருத்தியை மணந்து உவகையுடன் வாழ்ந்தவன் எனத் தெரிகிறது. இறந்தவன் தெய்வப் பெண்களுக்குத் துணை யாகச் சென்றான் என்று கூறப்படும்போது தன் துணை (மனைவி), ஆயம் இவற்றை மறந்தான் என்று கூறப்படுவ தால் அதை உணரமுடிகிறது,

கொடைத்தன்மை

அளந்து கொடுத்து அறியாதவன்; அளக்காமல் அள்ளி அள்ளிக் கொடுத்தவன்.

தோற்றப் பொலிவு

'மணிவரை அன்ன மாயோன்' என்று இவன் கூறப்படுவ தால் கறுகறுத்த இவன் பொலிவு வெளிப்படுகிறது.

யானைக்கண் என்பதனோடும் இந்த நிற ஒருமைப்பாடு தொடர்புகொண்டுள்ளதை நாம் உணர முடிகிறது.

கூடலூர்கிழார் வானியலில் வல்லவர். சில கோள்நிலைக் குறிகளால் இந்த அரசன் இன்ன நாளில் இறந்துபடுவான் எனக் கணித்து அறிந்தார். ஆனால், தம் கணிப்புப்படி நடவாதிருக்க வேண்டுமென்று விரும்பி அரசன் நோயற்று இருக்கவேண்டு மென வாழ்த்தினார். வாழ்த்துப் பலிக்கவில்லை; கணிப்புப் பலித்தது. கணித்த நாளில் அவன் இறந்தான். இறந்தது கண்டு புலவர் வருந்திப் பாடினார்.

இறந்த நாள்

மேழ ஓரை, கார்த்திகை நாள் அந்த நாளின் முதல் கால் பகுதியாகும். அது பாதி இரவாகும். முடப்பனையின் (அனுடம்) நிலை அடிவெள்ளி, கடைக்குளத்தின் (புனர்பூசம்) நிலை கடை வெள்ளி. இந்த எல்லையில் பங்குனி மாதத்து முதல் பதினைந்து

1 இவனும் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் ஒருவராக இருக்கலாம்.

நாளில் உச்சம் உத்தரமீன். அந்த உத்தரமீன் உச்சியிலிருந்து சாய்ந்தது. அதற்குப்பின் எட்டாம் மீனாகிய மூலம் அதற்கு எதிரே எழுந்தது. அந்த உத்தரத்திற்குமுன் எட்டாம் மீனாகிய மிருகசீரிடம் துறையிடத்தே தாழ்ந்தது. அப்போது ஓர் எரிமீன் கீழ்த்திசையிலோ வடதிசையிலோ செல்லாது நிலத்திற்கு விளக்காக விழுந்தது. இந்த நிகழ்ச்சி நடந்த ஏழாம் நாள் அவன் இறந்தான்.[2]

மேலே தனித்தனியே கண்ட வரலாற்றில் வரும் செய்திகள் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக உள்ளன. அன்றியும் குறுங்கோழியூர் கிழாரால் பாடப்பட்ட மூன்று பாடலுக்கு நான்கு வகையான தொடர் அமைப்புகள் உள்ளன. எல்லாமே புறநானூற்றைத் தொகுத்தவரால் குறிப்பிடப்பட்டவை. எனவே, நால் வேறு பெயர்களில் கூறப்பட்டுள்ளவரும் ஒருவனே எனக் கருதலாம்.

வானவன்

வானவன் யார்? ஒருவனா? பலரா? என்பனவற்றைத் தெரிந்துகொள்வதற்கு அவனது செயல்களையும் இருப்பிடங்களையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.[1]

இமயத்தில் வில் பொறித்தவன்

வஞ்சி நகரில் இருந்த வானவன் ஒருவன் இமயத்தில் வில்லைப் பொறித்தான்.[2] இவன் 'மாண்வினை நெடுந்தேர் வானவன்' என்று கூறப்பட்டுள்ளான். இந்த வானவனுக்கும், சோழ அரசன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கும் போர் நடந்தது. வஞ்சி நகரில் நடந்த அந்தப் போரில் இந்த வானவன் மாண்டான். வஞ்சி நகரம் வருத்தத்திற்கு உள்ளாகியது.

இமயத்தில் வில்லைப் பொறித்தவன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர அரசன் ஆவான். இந்தச் செயலில் அவனுக்குத் துணையாக இருந்தவர்கள் இருவராவர். ஒருவன் அவனது மகன் செங்குட்டுவன்; மற்றொருவன் அவன் காலத்தில் கொங்கு நாட்டுப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர அரசனாவான்.[3]

---

2 புறம். 229 : 17

1 அகம். 33 : 14, 77 : 15, 143 : 10, 159 : 15, 213 : 15, 309 : 10, 381 : 12

2 புறம். 39 : 15-17, 126 : 14

3 மே. 39 : 14-10

நெடுஞ்சேரலாதன் (வேல்பஃறடக்கை) பெருநற்கிள்ளியோடு போரிட்டு இறந்தான். எனவே, இங்குக் குறிப்பிடப்பட்ட வானவன் செங்குட்டுவனாகவோ, மாந்தரஞ்சேரல் இரும்பொறையாகவோதான் இருக்கமுடியும்,

செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை அமைத்தபின் துறவு பூண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. எனவே, கிள்ளிவளவனோடு போரிட்டு இறந்தவன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையே என்பது தெளிவாகிறது. இந்தக் கருத்தை மேலும் சில சான்றுகள் உறுதிசெய்கின்றன.

வானவன் கொல்லிமலைப் பகுதியை ஆண்டுவந்தான்.[4] மாந்தரஞ்சேரல் கொல்லிமலை நாட்டைத் தாக்கிப் போரில் வென்று அங்குத் தங்கி அரசாண்டபோது குறுங்கோழியூர்கிழார் இவனை நேரில் கண்டு பாடியுள்ளார்.[5] இவை வானவன் என்று குறிப்பிடப் படுபவனும், மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் ஒருவரே என்பதை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இந்த வானவனின் படைத் தலைவன் பிட்டன் ஆவான்.[6] மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு 'மாந்தரம்பொறை கடுங்கோ' என்னும் பெயரும் உண்டு. புகழூரில் உள்ள சங்ககாலத்துக் கல்வெட்டு கடுங்கோ அரசனையும்,[7] பிட்டனையும் குறிப்பிடுகிறது. எனவே, வானவன் என்பவன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையே என்பது கல்வெட்டுச் சான்றாலும் உறுதி செய்யப்படுகிறது.

இவனைச் செல்வக்கடுங்கோ வாழியாதனின் மகன் என்று அந்தச் சங்ககாலக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

செல்வக்கடுங்கோவின் மக்கள் இரண்டு பேர். ஒருவன் பெருஞ்சேரல் இரும்பொறை (தகடூரை வென்றவன்). அவன்

---

4 அகம். 33 : 14, 213 : 15

5 புறம். 22

6 அகம். 77 : 16, 143 : 12

7 இக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் கடுங்கோ, பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆவான். இவன் ஒன்பதாம் பத்தின் தலைவனாகிய இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை குட்டுவன் இரும்பொறையே ஆவான்; எட்டாம் பத்தின் தலைவனான பெருஞ்சேரல் இரும்பொறையின் தம்பி ஆவான். இவன் குட்ட நாட்டில் சிறப்புப் பெற்றுப் பொறையர்குடி அரசனாய் விளங்கியது போலச் சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறை குடநாட்டில் சிறப்புற்று விளங்கிய பொறையர்குடி அரசன் ஆவான்.

எட்டாம் பத்தின் தலைவனாவான்.[8] மற்றொருவன் குட்டுவன் இரும்பொறை. இவன்: ஒன்பதாம் பத்துத் தலைவனின் தந்தை ஆவான்.[9] மாந்தரஞ்சேரல் தொண்டி நகரில் போர் தொடுத்து வென்று அங்கும் சில காலம் தங்கி அரசாண்டான்.[10] தொண்டி, குடநாட்டில் இருந்த துறைமுகம். குடநாட்டை அடுத் திருந்த குட்டநாட்டில் இவன் முதன்முதலில் தன் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினான் எனல் பொருந்தும். இதனால் இவன் குட்டுவன் இரும்பொறை என்றும் கூறப்பட்டான். இவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து எண்ணும்போது குட்டுவன் இரும்பொறை, மாந்தரஞ்சேரல் இரும்பொறை, வானவன் என்ற பெயரால் குறிப்பிடப்படுவோர் அனைவரும் ஒருவரே என்று ஐயம் திரிபு இல்லாமல் தெரிந்துகொள்ளலாம். இவன் பதிற்றுப்பத்து எட்டாம் பத்துத் தலைவனின் தம்பியாவான். சங்ககாலக் கல்வெட்டு இவனைப் 'பெருங்கடுங்கோ' என்று குறிப்பிடுகிறது என்பதைக் கண்டோம். இந்தப் பெருங்கடுங்கோ, பாலை பாடிய பெருங்கடுங்கோ வஞ்சி நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தவன் என்பதை அவனது வரலாற்றால் அறியலாம்.[11] வானவன் வஞ்சி நகரில் இருந்துகொண்டு அரசாண்டதும் இதுவும் ஒன்றாய் அமைந்து இவர்களுடைய வரலாறுகள் எல்லாமே ஒன்றுக்கொன்று எள்ளளவும் முரண்பாடு இல்லாமல், குழப்பம் இல்லாமல் தெளிவாய் அமைவதைக் காண்கின்றோம்.

இந்த முடிவுகள் எல்லாம் மேலும் ஆய்வுக்குரியவை. சோழ அரசர் இருவரோடு இவன் போராடினான். முதலில் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போரிட்டுத் தோற்றான்.[12] பின்பு, கிள்ளிவளவனோடு போரிட்டு மாண்டான்.[13]

குடகடலில் நாவாய் ஓட்டல்

தொண்டி, மாந்தை ஆகிய மேற்குக் கடற்கரைத் துறை முகங்கள் இவனுக்கு உரித்தாயிருந்தன. இவன் கடல் வாணி கத்தில் கவனம் செலுத்தினான். இவனது கப்பல்கள் அரபிக்கடல் வழியே மேலை நாடுகளுக்குச் சென்று பொன்னைக் கொண்டு வந்தன. கப்பல் வாணிகத்தில் இவனோடு போட்டியிட எவராலும் முடியவில்லை. எனவே, இவனது கப்பல்கள் வாணிகத்தில் ஈடு பட்டதிலிருந்து அரபிக்கடலில் பிறரது கப்பல்கள் செல்லவில்லை.[14]

---

8 பதிற். பதி. 8 : 10
9 ஷை 9 : 1
10 புறம். 17 : 13
11 ஷை 11 : 5-7
12 ஷை 125 : 16
13 ஷை 39 : 16-17
14 ஷை 126 : 14-16

கொடைத் தன்மை

யாழ் இசையில் வல்ல 'கோடியர்' எனும் மக்கள் இவனை நாடிச் சென்றனர். அவர்கள் இவனிடம் பரிசில் பெற்றார்கள் எனலாம்.[15]

சிறப்புப் பெயர்கள்

'வெல்போர் வானவன்'[16], 'நற்போர் வானவன்'[17] ஆகிய தொடர்கள் இவனது போர் ஆற்றலையும், வெற்றியையும் உணர்த்துகின்றன. 'சினமிகு தானை வானவன்'[18], 'பொருந்தார் முனையரண் கடந்த வினைவல் தானை வானவன்'[19] ஆகிய தொடர்கள் இவனது படையின் ஆற்றலை விளக்குகின்றன.

'வில்கெழு தடக்கை..... வானவன்'[20]

'பெரும்படைக் குதிரை ..... வானவன்'[21] ஆகியவை இவனது போர்க்கோலத்தைக் காட்டுகின்றன.

'தேனிமிர் நறுந்தார் வானவன்'[22] 'நெடுந்தேர் வானவன்'[23] ஆகியவை இவனது தோற்றப் பொலிவை நன்கு புலப்படுத்துகின்றன.

சோழிய ஏனாதி திருக்குட்டுவன்[1]

குட்டுவன் என்னும் பெயர் இவன் சேரர் குடியைச் சேர்ந்தவன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. அதனை வலியுறுத்தும் சான்றாக அவனைப் பாடிய புலவர், அவனது தந்தை வஞ்சி நகரத்தவன் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, சேரர் குடியினன் என்பது தெளிவு.

இவன் நாடு

இவன் வெண்குடை என்னும் ஊரில் இருந்துகொண்டு அரசாண்டு வந்தான். அந்த ஊர் வயல்கள் நிறைந்த ஊர். இவன் தந்தை வஞ்சி நகரத்தவன்.

---

15 அகம். 309 : 9
16 மே. 33 : 14, 143 : 10, 159 : 15, 213 : 15
17 மே. 309 : 10
18 புறம். 126 : 14
19 அகம் 381 : 13-15
20 மே. 159 : 15
21 மே. 309 : 10
22 மே. 381 : 15
23 புறம். 39 : 16
1 மே. 394

தோற்றம்

மார்பிலே சந்தனம், தோளிலே வில், வலிமைமிக்க கைகளில் கூர்மையான வாள். இந்தக் கோலத்துடன் இவன் காட்சியளித்தான்.

கொடைத் தன்மை

குமரனார் என்னும் புலவர் மதுரையில் வாழ்ந்தவர். அவரது தந்தை கோனாட்டு எறிச்சலூரில் வாழ்ந்த மாடலன். இந்தக் குமரனார் இந்தக் குட்டுவனை வள்ளல் என்று பலரும் புகழ்வதைக் கேட்டிருந்தார். வெண்குடை நகருக்குச் சென்று இந்தக் குட்டுவனின் தந்தை நகரான வஞ்சியைச் சிறப்பித்துப் பாடினார். கேட்ட இந்தக் குட்டுவன் பெரிதும் மகிழ்ந்து கொல்லும் போர் யானை ஒன்றைப் பரிசிலாக வழங்கினான். புலவர் யானையைக் கண்டு அஞ்சி ஒதுங்கினார். புலவர் பரிசில் சிறியது என்று எண்ணி ஒதுங்கினார் என்று எண்ணினான். முன்பு அளித்ததைக் காட்டிலும் மிகப் பெரிய மற்றுமொரு யானையைப் பரிசிலாக அளித்தான். இதனால், புலவர் நடுநடுங்கிப்போய் அவனிடம் பரிசில் கேட்பதையே நிறுத்திவிட்டாராம்.

இவ்வாறு அவனது கொடைத் தன்மை அமைந்திருந்தது.

ஏனாதிப் பட்டம்

'ஏனாதி' என்னும் பட்டம் படைத் தலைமை பூண்டு சிறப்புடன் போராடியவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பட்டம். வேளாண்மையில் சிறந்தவர்களுக்குக் 'காவிதி'ப் பட்டமும் வாணிகத்தில் சிறந்தவர்களுக்கு 'எட்டி'ப் பட்டமும் இவ்வாறு சிறப்புக் கருதித் தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட பட்டங்களாகும். இந்தக் குட்டுவனுக்கு அளிக்கப்பட்ட இந்தப் பட்டத்தில் 'சோழிய' என்னும் அடைமொழி உள்ளது. இதனால், இந்தப் பட்டத்தை அளித்தவன் சோழ அரசன் என்பது தெளிவாகத் தெரிகிறது. சோழன், சேரனுக்கு இத்தகைய பட்டம் அளித்துச் சிறப்பிக்கக் காரணம் என்ன?

இந்தக் குட்டுவன் சோழரது படைத் தலைமை பூண்டு சிறப்புடன் போராடிச் சோழனுக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்க வேண்டும். இதனால் இவன் இந்தச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

இந்தப் படைப்பணியை இவன் தனது இளமைக் காலத்தில் ஆற்றியிருக்கலாம். சோழன் பாராட்டிப் பட்டம் வழங்கியதோடு

தன் சார்பாக அல்லது தனக்குத் துணையாக வெண்குடையில் இருந்துகொண்டு ஆளும்படி அமர்த்தியிருக்கலாம். வெண்குடை மக்கள் அவனது நற்பண்புகளை எண்ணி அவனைத் தம் ஊர் 'கிழவோன்' என்று ஏற்றுக்கொண்டிருக்கலாம். இவ்வாறு இவன் 'வெண்குடை கிழவ'னாக விளங்கினான்.

இந்தப் பட்டத்தை இவனுக்கு வழங்கிய சோழன், சேட் சென்னி (இலவந்திகைப் பள்ளியில் இறந்தவன்) என்பதை ஏனாதி திருக்கிள்ளி வரலாற்றில் காணலாம்.

3. சேர அரசப் புலவர்கள்

பிற புலவர்களால் பாடப்பெற்றுள்ள சேர அரசர்கள் வரலாற்றை இதுவரை கண்டோம். இவர்களே அன்றித் தாம் பாடிய பாடல்களால் சங்கநூல்களில் இடம் பெற்றுள்ள சேர அரசர்களும் உண்டு.

1. கருவூர்ச் சேரமான் சாத்தன்
2. சேரமான் இளங்குட்டுவன்
3. சேரமான் எந்தை
4. சேரமான் கணைக்கால் இரும்பொறை
5. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை
6. பாலைபாடிய பெருங்கடுங்கோ
7. மருதம் பாடிய இளங்கடுங்கோ
8. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்

'சேரமான்' என்னும் சொல் சேரர் குடிமகன் என்னும் பொருளைத் தரும். இது சேரர் குடியினர் அனைவர்க்கும் உரியது. சேரர் குடி, சேர நாட்டை அரசாண்ட குடி; சேர நாட்டுக் குடிமக்கள் அன்று.

சேரர் குடியைச் சேர்ந்த அரசன் ஒருவனின் மகன் எத்தனை பேர் இருந்தாலும், அத்தனை பேரும் ஆங்காங்கே சிறு பகுதிக் கேனும் அரசர்களாக விளங்கிய நிலைமையை அவர்களது வரலாற்றில் நாம் காண்கின்றோம். எனவே, சேரமான் என்னும் அடைமொழி பெற்றுள்ள அனைவரும் ஒரு சிறு பகுதிக்கேனும் அரசர்களாக விளங்கினார்கள் என்று கொள்வது பொருத்தமானது. இந்த வகையில் பிறரால் பாடப்படாவிட்டாலும் தாம் பாடல்கள்

பாடிச் சங்கப் பாடல்களில் இடம் பெற்ற புலவர்கள்—'சேரமான்' என்னும் அடைமொழியுடன் சங்கநூல்களைத் தொகுத்தோரால் குறிப்பிடப்பட்டுள்ள புலவர்கள் — சேர அரசர்கள் என்றே கொள்ளத்தகும்.

மற்றும் பாலைபாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங் கடுங்கோ ஆகிய பெயர்களில் 'கோ' என்னும் சொல் அவர்கள் அரசர்களே என்பதை உணர்த்துகின்றன, 'முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்' என்னும் பெயரில் 'சேரல்' என்னும் குடிப் பெயர், இவன் அரசன் என்பதை உணர்த்துகிறது. அந்துவன் என்னும் பெயர், பெயர் ஒப்புமையால் தோன்றக்கூடிய உய்த் துணர்வு.

கருவூர்ச் சேரமான் சாத்தனார்[1]

காதலன் யாமத்தில் வந்திருக்கிறான்; வெளியில் காத்திருக் கிறான். தோழி அவனுக்குக் கேட்கும்படி காதலியிடம் கூறுகிறாள். 'வா என்றும் சொல்ல முடியவில்லை. போ என்றும் சொல்ல முடியவில்லை. என்ன செய்வோம்?' என்பது அவளது கூற்று. இந்தக் கருத்தமைந்த பாடலை அவன் பாடியுள்ளான்.

சேரமான் இளங்குட்டுவன்[2]

காதலி காதலனுடன் சென்றுவிட்டாள்; தாய் தந்தை யருக்குத் தெரியாமல் சென்றுவிட்டாள். செய்தி அறிந்த செவிலித் தாய் அவளை வளர்த்த தாய்க்கு வருந்திக் கூறுகிறாள். தான் ஆயத்தாரோடு பந்தடிக்கும்போதே கன்றும் அவளது காலடிகள், வெயில் காயும் காட்டில் எப்படி நடந்து சென்றனவோ என்பது அவளது ஏக்கம். இந்தக் கருத்தமைந்த பாடலை இவன் பாடி யுள்ளான்.

சேரமான் எந்தை[3]

காதலன் தன்னை விட்டுவிட்டுச் செல்கிறான் என்று கவலைப் படுகிறாள் காதலி; கண்ணீர் வடிக்கிறாள். தோழி அவளைத் தேற்றுகிறாள். இந்தக் கண்ணீரோடு உன்னை விட்டுவிட்டு யார் செல்வார்; மராமரம் வேனில் காலத்தில் பூத்திருக்கும் தேமூர் போன்ற அழகி நீ. உன்னையும் உடன்கொண்டு செல்வார் என்பது அவளது ஆறுதல் மொழி.

இந்தக் கருத்தமைந்த பாடலை இவன் பாடியுள்ளான்.

1 குறுந். 268 2 அகம். 153 3 குறுந். 22

நாடு

தலைவியின் அழகைத் தேமூர் என்னும் ஊரின் அழகோடு ஒப்பிட்டு இவன் பாடியுள்ளான். எனவே, தேமூரில் தங்கி இவன் ஆட்சிபுரிந்து வந்தான் எனலாம்.

(தேமூர் ஒண்ணுதல், என்பதற்குத் தேமல் ஊர்ந்து ஒளிவீசும் நெற்றி என்றும் பொருள் கொள்ள இடம் உண்டு.)

சேரமான் கணைக்கால் இரும்பொறை[4]

இவன் தான் பாடிய பாடலில் விழுப்புண்பட்டு இறக்க வழியின்றிக் கட்டிப்போட்ட நாய்போல் கிடக்கும் நிலையை வெளிப்படுத்துகிறான். பிறர் முயற்சியால் கிடைத்த நீரை வயிற்றுத் தீத் தணிய இவ்வுலகில் உண்பவர் உண்டோ? இல்லை என்கிறான்.

புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் தம் கொளுக் குறிப்பில் விளக்கமான வரலாற்றைத் தருகிறார்.

சோழ அரசன் செங்கணான் என்பவனோடு இவன் போரிட்டான். போர் 'திருப்போர்ப்புறம்' என்னுமிடத்தில் நடைபெற்றது. போரில் சேரன் பிடிபட்டான். குடவாயில் (குடவாசல்) என்னும் ஊரில் ஒரு கோட்டம். அந்தக் கோட்டத்தில் ஒரு சிறை. அந்தச் சிறையில் இவன் அடைக்கப்பட்டான். சிறையில் அடைபட்டுக் கிடக்கையில் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான்; கிடைக்கவில்லை. காலம் தாழ்ந்து வேறொருவன் முயற்சியால் தண்ணீர் கிடைக்கப்பெற்றான். அதனைக் கையிலே வாங்கினான். உண்ண மனம் வரவில்லை. மேலே கண்ட கருத்தமைந்த பாடலைப் பாடினான். தண்ணீரைக் குடிக்காமலேயே மாண்டு போனான்.

களவழி என்னும் நூலுக்கும் இந்தப் போருக்கும் தொடர்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. சோழன் செங்கணான் வரலாற்றில் இதனைத் தெளிவாகக் காணலாம்.

தோற்றம்

கணையமரம்போல் வலிமைமிக்க கால் இருந்தமையாலோ, கணுக்காலுக்கும் கீழ் இல்லாத காலை உடையவனாக இருந்தமை

4 புறம். 74

யாலோ, கணைகள் தாக்கிய விழுப்புண்களைத் தழும்புகளாகக் கொண்டிருந்தமையாலோ, பிற எதனாலோ இவனது பெயரோடு கணைக்கால் என்னும் அடைமொழி அமைந்துள்ளது.

மருதம் பாடிய இளங்கடுங்கோ[5]

குடும்பத் தலைவன் குடும்பத் தலைவியை விட்டுவிட்டு வேறொருத்தி நலத்தைத் துய்க்கும் கொடுமையை விளக்கும் மருதத்திணைப் பாடலை இவன் பாடியுள்ளான்.[6]

மகனைப் பெற்ற பின்னும் கணவனைக் காணாது வாழ்கிறாளே அவள் 'என்ன கடத்தளோ' (எத்தகைய கடப் பாட்டாளோ) என்று இவன் குறிப்பிடுகிறான்.[7]

இவன் பருவூர்ப் போர்க்களத்தில் சோழனுக்கும், சேர பாண்டியர்க்கும் நடந்த போரில் சேர பாண்டியரைப் போரில் கொன்று, 'அஃதை' என்னும் பெண்மணியின் தந்தை வெற்றி பெற்றதைக் குறிப்பிட்டுள்ளான்.[8]

முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்[9]

காதலனுக்குக் காதலியின் தோழி அறிவுரை கூறுகிறாள்.

துறைவ, 'ஒரு நாள் வந்து, உன் வண்ணம் எப்படி என்று கேட்டுவிட்டுச் சென்றால் உன் பெருமைக்குக் குறைவு வந்து விடுமோ' என்பது அவள் கூற்று. திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதை இவ்வாறு நயமாகக் கூறுவதாகப் பாடியுள்ள இவனது புலமைத் திறம் பாராட்டுதலுக்கு உரியது.

இவன் எங்கு முடங்கிக் கிடந்தான்? ஏன் முடங்கிக் கிடந்தான்? முடப்பட்டுக் கிடந்தானா? என்பனபோன்ற வினாக்கள் இவன் பெயரிலுள்ள அடைமொழியில் தோன்றும்; விடைக்குச் சான்று இல்லை.

---

5 அகம். 96, 176
6 நற். 50
7 அகம். 176 : 21
8 மே 96 : 10-15
9 அகம். 30

இயல் 5

சோழர்

முன்னுரை

சங்ககாலத்தில் தமிழ்நாட்டில் அரசோச்சிய மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர்களுள், பாண்டிய அரசர்களுடைய வரலாறு மிகுதியாகவும் தெளிவாகவும் கிடைக்காததாலும், மிகுதியாகவும் தெளிவாகவும் கிடைக்கும் சேர அரசர்களுடைய வரலாற்றுக்கு அடிப்படையாக உள்ள பதிற்றுப்பத்து என்னும் நூல் ஒருவரால் பாடப்பெற்றிருக்குமோ என்று ஐயுறக் கிடக்கும் நிலை சிலரிடையே இருந்துவருவதாலும், ஓரளவு தெளிவான வரலாற்றுடன் கரிகாலன் முதலான பேரரசர்களது வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள சோழர் வரலாறு ஒருவகையில் முக்கியத்துவம் பெற்றதாகும். சோழநாட்டைப்பற்றி அறிவதற்குத் தக்க சான்றுகளாகச் சோழர் காலத்திய தொல்கதைகளும், சங்ககால இலக்கியங்களும், அயல்நாட்டுக் குறிப்புகளும், கல்வெட்டுகளும் இன்றைய அகழ்வாராய்ச்சிகளும் பெரிதும் நமக்குத் துணைபுரிகின்றன.

'சோழநாடு' என்னும் பகுதியில், சோழநாட்டின் நிலவியல் அமைப்பு, எல்லைகள், முக்கிய ஆறுகள், பட்டினங்கள், மக்களினங்கள், அரசர்களின் வழிமுறைகள், போர்கள், ஆட்சிமுறை முதலானவற்றைக் காணலாம்.

சோழநாடு

எல்லைகள்

சோழநாடு தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரை ஓரமாக இருந்தது. கிழக்குக் கடல் இக்காலத்தில் வங்காளக் குடாக் கடல் என்று பெயர் பெற்றிருக்கிறது. இந்தக் கடல் சங்க காலத்தில் குணகடல் (குணக்கு—கிழக்கு) என்று பெயர் பெற்றிருந்தது. கடைச்சங்க காலத்தின் இறுதியில் கி. பி. முதலாம் நூற்றாண்டு, இரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தோடு

வாணிகம் செய்த யவனர் (கிரேக்கரும் உரோமரும்) குடகடலை எரித்திரையக் கடல் (செங்கடல்) என்று கூறினார்கள்.[1]

கடலைக் கிழக்கு எல்லையாகவும், கோட்டைக்கரையை மேற்கு எல்லையாகவும், வெள்ளாற்றைத் தெற்கு எல்லையாகவும், ஏணாட்டை வடக்கு எல்லையாகவும் கொண்டு 24 காதம் விரிந்து கிடந்தது சோழநாடு என்று பழம் பாடல் ஒன்று தெரிவிக்கிறது.[2]

இவற்றுள் வெள்ளாறு[3] என்பது இப்போது புதுக்கோட்டைப் பகுதியில் பாயும் ஆறு. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கொடும்பாளூர், சோழ நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும் எல்லையில் அமைந்திருந்தது என்று கூறப்படும் கருத்தும் இதனோடு தொடர்புடையது.

கோட்டைக்கரை (பேட்டைவாய்த்தலை?), ஏணாடு ஆகியவைபற்றித் தெளிவாகத் தெரியவில்லை. மேலும், இந்த எல்லையைக் கூறும் பாடல் சங்க காலத்திற்குப் பிந்தியது. எனவே, சங்ககாலச் சோழநாட்டின் எல்லை இது என்று அறுதியிட்டுக் கூறுவதற்குப் போதிய சான்று இல்லை. எனினும் இப்போதுள்ள குளித்தலை வட்டம்வரை சங்ககாலச் சோழநாடு மேற்கில் பரவியிருந்தது என்று கொள்ள இடமுண்டு.[4] வடக்கில் இதன் எல்லை சங்ககாலத்தில் காவிரி ஆற்றுச் சமவெளியைத் தாண்டிச் செல்லவில்லை என்றே எண்ணவேண்டியுள்ளது. (தென்)பெண்ணையாறு அருவா நாட்டின் தெற்கு எல்லை என்று கூறப்படும் கருத்தும் இதனோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது.

---

1 யவனர், அரபுநாட்டுக்கு மேற்கிலுள்ள செங்கடலையும் அதற்கு இப்பால் உள்ள பாரசீகக் கடலையும் அதற்கப்பால் உள்ள அரபிக்கடலையும், குமரிக் கடலையும், குண கடலையும் செங்கடல் (எரித்திரையக் கடல்) என்று கூறினார்கள்.

2 'கடல் கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்'—பழம்பாடல்

3 புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலைக்கு மேற்கில் தொடங்கி அறந்தாங்கிக்குத் தென்மேற்குப் பகுதியில் ஓடி, மணல்மேல்குடி என்னும் ஊருக்கு வடபால் கடலில் கலக்கிறது.

4 இப்போதுள்ள தான்தோன்றி மலைப்பகுதி சங்ககாலத்தில் 'தாமான் தோன்றிக்கோன்' என்னும் அரசனால் ஆளப்பட்டது. அவன் காலத்தில் கிள்ளிவளவன் என்னும் சோழ அரசனும் ஆண்டான் (புறம். 399). இந்த நிலை மேற்கண்ட உய்த்துணர்வுக்கு இடமளிக்கிறது.

காவிரியாறு

சோழநாட்டின் முக்கிய ஆறு காவிரி ஆகும். காவிரியாற்றின் நீர்வளத்தினால் சோழநாடு செழிப்பும் செல்வமும் பெற்று விளங்கிற்று. நெல்லும், கரும்பும், மற்றும் காய்கறித் தோட்டங் களும், தெங்கஞ் சோலைகளும், கமுகஞ் சோலைகளும் சோழ நாட்டில் செழித்திருந்தன. இதற்கு முதல் காரணமாக இருந்தது காவிரி ஆறேயாகும். 'சோழ நாடு சோறுடைத்து' என்னும் பழமொழியை நிலைபெறச் செய்தது காவிரி ஆறே. காவிரி ஆற்றுக்குப் 'பொன்னி' என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.

காவிரி ஆறு கடலில் கலக்கிற இடத்தில் உலகப் புகழ் பெற்ற காவிரிப்பூம்பட்டினம் (புகார்) என்னும் துறைமுக நகரம் இருந்தது.

உறையூர் (உறந்தை)

சோழநாட்டின் தலைநகரம் உறையூர் என்றும், உறந்தை என்றும் வழங்கப்பட்டது. இது உள்நாட்டில் காவிரி ஆற்றின் தென்கரையில் இருந்தது. உறையூர், கோட்டைமதில் சூழ்ந்த நகரம். இந்த மதிலுக்கு வெளியே ஆழமான அகழியும், அகழியைச் சூழ்ந்து மிளைக்காடும் இருந்தன. உறையூருக்குக் 'கோழி' என் றும் ஒரு பெயர் உண்டு. உறையூர்க் கோட்டைக்குள்ளே சோழ அரசனுடைய அரண்மனை இருந்தது. உறையூர்த் தெருக்களில் ஒன்றன் பெயர் ஏணிச்சேரி (சேரி - தெரு). முடமோசியார் என் னும் புலவர் அந்தத் தெருவில் வாழ்ந்திருந்தார். உறையூருக்கு எதிர்க்கரையில் (திருவரங்கம்) இருந்தது. உறையூருக்குக் கிழக்கே திருச்சிராப்பள்ளி மலை இருந்தது.[5] தாலமி[6] என்னும் யவனர் ஓர்தொவுர[7] என்று குறிப்பிடுவது இந்த உறையூர்தான். ஓர்தொவுர சோர் நகரின் (சோழ நகரின்) தலைநகரம் என்று தாலமி கூறுவது சிந்திக்கத்தக்கது. சோழர், நாகர் இனத்தைச் சேர்ந்தவர் என்று அவர் கருதுகின்றார். உறையூரை உரகபுரம் என்றுவடமொழியாளர் கூறியுள்ளனர்.

காவிரிப்பூம்பட்டினம்

காவிரியாறு கடலில் புகுமிடத்தில் வடகரையின்மேல் காவிரிப் பூம்பட்டினம் இருந்தது. உலகப் புகழ்பெற்றிருந்த இப் பட்டினம்,

5 'உறந்தைக் குணாது நெடும்பெருங் குன்றம்.' (அகம். 4 : 14-15)
6 Ptolemy
7 Ortheura

புகார் என்றும் பெயர் பெற்றிருந்தது. இதனைப் பௌத்த நூல்கள் கவீரப்பட்டினம் என்று கூறுகின்றன. இது பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என்று இரண்டு பிரிவாக இருந்தது. மருவூர்ப் பாக்கம் கடற்கரையை அடுத்து இருந்தது. மருவூர்ப்பாக்கத்தில் மீன்பிடிக்கும் பரதவரும், கொல்லர், கருமார், கன்னார், தச்சர், பொற்கொல்லர், இசைவாணர் முதலான தொழிலாளரும் நடுத்தர மக்களும் வாழ்ந்தனர். பல பொருள்களை விற்கும் கடைவீதிகள் மருவூர்ப் பாக்கத்திற்கும் பட்டினப்பாக்கத்திற்கும் இடையில் இருந்தன. மருவூர்ப் பாக்கத்துக்கு மேற்கே பட்டினப்பாக்கம் இருந்தது. பட்டினப்பாக்கத்தைச் சூழ்ந்து நாற்புறமும் கோட்டை மதில்கள் இருந்தன. மதில்களுக்கு வெளியே அகழி இருந்தது. கோட்டைக்குள் இருந்த பட்டினப்பாக்கத்தில் செல்வரும் பெருங்குடி மக்களும் வாழ்ந்தனர். சோழ அரசருடைய அரண்மனை ஆற்றங்கரைப் பக்கமாகப் பட்டினப்பாக்கத்தில் இருந்தது.

காவிரிபூம்பட்டினத்தின் துறைமுகம் உலகப் புகழ் பெற்றிருந்தது. இந்தத் துறைமுகத்திற்குப் பாரத நாட்டின் பல திசைகளிலிருந்தும் கடல் வாணிகர் வந்தனர். யவன வாணிகரும் இங்கு வந்தனர். 'பெரிபுளூஸ்',[8] என்னும் கடற்பயண நூல் இத் துறைமுகத்தைக் 'கமரா'[9] என்று கூறுகிறது. தாலமி என்னும் யவனர் இதனைச் 'சபாரிஸ்'[10] என்று கூறுகிறார். காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றிச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன. இங்கு நடந்த ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களையும், வாணிகத்தையும் பற்றிப் 'பட்டினப்பாலை' கூறுகிறது. மணிமேகலை, சிலப்பதிகாரக் காப்பியங்களிலும் இதன் சிறப்புக் கூறப்படுகிறது. கடல் வாணிகர்களும் (மாநாய்கர்), தரை வாணிகர்களும் (மசாத்துவர்) இந்நகரத்தில் வாணிகம் செய்தார்கள். சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் தலையாய துறைமுகமாகவும்[11] பெரிய வணிக நகரமாகவும் இருந்தது.

குடந்தை

சோழ நாட்டில் சங்ககாலத்தில் இருந்த ஊர்களில் குடந்தையும் ஒன்று. குடந்தை இக்காலத்தில் கும்பகோணம் என்று வழங்கப்படுகிறது. சோழரின் பெருநிதி இவ்வூரில் சேமித்து

---

8 Periplus

9 Kamara

10 Chaberis

11 வேங்கடசாமி, மயிலை சீனி., 'சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்' (சங்ககாலத்து நகரங்கள்), பக். 126-150.

வைக்கப்பட்டிருந்தது.[12] குடந்தையைச் சூழ்ந்து கோட்டை மதில் இருந்தது. மதிலைச் சூழ்ந்து அகழி (கிடங்கு) இருந்தது. அகழியில் நீலப்பூக்கள் மலர்ந்திருந்தன.[13] குடந்தைக்கு அருகில் இருந்த குடவாயில் என்னும் ஊரில் குடவாயில் கீரத்தனார் என்னும் புலவர் வாழ்ந்தார். குடவாயிலில் சோழர் சிறைச்சாலை அமைத்திருந்தனர் எனத் தெரிகிறது.[14]

ஆர்க்காடு

ஆர்க்காடு என்னும் பெயர் ஆத்தி மரத்தினால் வந்த பெயர். 'ஆர்' என்றால் ஆத்தி மரம். ஆத்திப்பூமாலையைச் சோழர் அணிந்தனர். பழங்காலத்தில் மரங்களின் பெயரையே ஊர்ப் பெயராக வைத்தனர். ஆலங்காடு, வேற்காடு, கடம்பங்காடு என்பனபோல ஆர்க்காடு என்பதும் மரங்களினால் வந்த பெயர்.

சோழநாட்டில் ஆர்க்காட்டுக் கூற்றம் என்னும் பிரிவு சங்க காலத்திலும் பிற்காலத்திலும் இருந்தது. ஆர்க்காட்டுக் கூற் றத்தின் தலைநகரம் ஆர்க்காடு. ஆர்க்காடு நகரம் சங்ககாலத்தில் பெரிய நகரமாக இருந்தது.[15] 'அழிசி' என்னும் சோழன் ஆர்க்காட்டில் இருந்தான்.[16] 'தாலமி' என்னும் யவனர் சோரையரின் (சோழரின்) தலைநகரம் அர்கொடஸ்[17] என்று கூறுவது இந்த ஆர்க்காட்டையே. இந்தச் சோழநாட்டு ஆர்க்காடு[18] தொண்டைநாட்டு ஆர்க்காடு அன்று. இது வேறு; அது வேறு. சோழ அரசனை உள்ளிட்ட எழுவரைப் பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்னுமிடத்தில் வென்றான் என்பது வரலாறு. இந்த ஆலங்கானம் சோழநாட்டு ஊர் என்று நம்பப்படுகிறது.

பிடவூர்

சோழநாட்டில் இருந்த இவ்வூர் உறையூருக்குக் கிழக்கில் இருந்தது. இங்கு இருந்த வேள் அரசர் பிடவூர்கிழார் என்று

---

12 அகம். 60 : 13 - 14.

13 நற். 379 : 7 - 9

14 அந்தச் சிறைச்சாலைக்குக் குடவாயில் கோட்டம் என்று பெயர். சோழன் செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் போரில் சிறைப் பிடித்துக் கொண்டுவந்து குடவாயில் சிறையில் அடைத்துவைத்தான் என்று கூறப்படுவது இந்தச் சிறைச்சாலை போலும்.

15 நற். 227 : 5-6

16 குறுந். 258 : 7; நற். 190 : 4 : 6

17 Sorai

18 Arkatos

பெயர் பெற்றிருந்தனர். பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பவனை நக்கீரர் பாடியுள்ளார்.[19]

நெய்தலங்கானல்

இது சோழநாட்டில் காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் தென்வடலாகக் கடற்கரை ஓரத்தில் இருந்த நீண்ட கடற்கரைப் பகுதி ஆகும். இங்கு இளஞ்செட்சென்னி என்னும் சோழன் இருந்தான். ஆகையால், அவன் 'சோழன் நெய்தலங்கானல் இளஞ் சேட்சென்னி' என்று கூறப்பட்டான். நெய்தலங்கானலில் உப்பளங்கள் இருந்தன.[20] பரதவர் (மீன் பிடிப்போர்) இருந்த குப்பங்களும் இருந்தன. நெய்தலங்கானல், பிற்காலத்தில் சோழ மண்டலக் கரை என்று பெயர் பெற்றிருந்தது. ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் 'கும்பினி'யார் இதைக் 'கொரமாண்டல் கோஸ்ட்'[21] என்று கூறினார்கள்.

குராப்பள்ளி

இவ்வூரில் குராப்பள்ளி என்று பெயர்பெற்ற சோழர் அரண்மனை இருந்ததாகத் தெரிகிறது. கிள்ளிவளவன் என்னும் சோழன் இங்கு இறந்து போனான். ஆகவே அவன் 'குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன்' என்னும் பெயர் பெற்றான்.[22]

கழார்

சோழநாட்டில் காவிரிக்கரையில் இருந்த கழார் என்ற ஊருக்கு[23] மத்தி என்பவன் தலைவனாக இருந்தான்.[24] 'மத்தி', பரதவர் (நெய்தல் நிலத்து மக்கள்) கோமான்.[25] காவிரியில் நீர்ப்பெருக்கு வரும்போது கழார்ப் பெருந்துறையில் நீராட்டுவிழா நடந்தது.[26] அந்த நீராட்டுவிழா மிகச் சிறப்பாக நடந்ததாகத் தெரிகிறது. சோழன் கரிகாலன் அந்த விழாவுக்குத் தன்னுடைய சுற்றத்தோடு வந்து கண்டு மகிழ்ந்தான்.[27]

---

19 புறம். 395

20 மணிமே. 24 : 27

21 Coramandal coast

22 தஞ்சை மாவட்டம் திருவிடைக்கழி என்னும் ஊரை அடுத்துள்ள திருக்களாச்சேரி என்பது திருக்குராச்சேரி என்பதன் திரிபு வழக்கு என்பது கோயிலில் தலவிருட்சம் குராமரமாக இருப்பதனால் உய்த்துணரக் கிடக்கிறது. (செந்தமிழ்ச் செல்வி 40, பக். 13, 79) 'துஞ்சிய' என்பதற்கு ஓய்வு எடுத்துக் கொண்ட என்னும் ஒரு பொருளும் உண்டு.

23 நற். 281 : 3

24 அகம். 6 : 20

25 ஷை 226 : 7 - 8

26 ஷை 222 : 5

27 ஷை 376 : 4-10

போர் (போரூர், போர்வை)

இவ்வூர் போரூர் என்றும், போர்வை என்றும், திருப்போர் என்றும் கூறப்பட்டது. இது சோழநாட்டில் காவிரி ஆற்றங்கரை மேல் இருந்தது. இவ்வூரில் கொங்குச் சேரருக்கும் சோழருக்கும் வெவ்வேறு காலத்தில் பல போர்கள் நடந்தன. இவ்வூரில் பழையன் என்னும் சிற்றரசன் ஆண்டுவந்தான்.[28] இவன் சோழ அரசர் சார்பில் நாடு காவல் பணி பூண்டிருந்தவனாவான்.

பொத்தி

இது சோழநாட்டிலிருந்த ஓர் ஊராகும். பெருஞ்சோழன் என்பவன் இவ்வூரை அரசாண்டான். இவ்வூரில் இருந்த புலவர் பொத்தியார் என்று பெயர்பெற்றார். பெருஞ்சோழன் வடக்கிருந்து (உண்ணாநோன்பிருந்து) உயிர்விட்டபோது அவனுடைய நண்பரான இந்தப் பொத்தியாரும் அவனுடன் வடக்கிருந்து உயிர்விட்டார்.[29]

தலைச்செங்காடு

தலைச்செங்காடு என்னும் இவ்வூர் தலைச்செங்கானம் என்றும் கூறப்படும். காவிரிப்பூம்பட்டினத்துக்குத் தென்மேற்கே இது உள்ளது. இவ்வூரில் மாடலன் என்னும் மறையவன் இருந்தான். அவன் உலகியலை நன்கு அறிந்தவன். காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் இருந்த காலத்தில் அவனையும் அவனுடைய குடும்பத்தையும் மாடலன் நன்கு அறிந்திருந்தான். குமரி, காசி (கங்கை) முதலான ஊர்களுக்குச் சென்று இவன் நீராடி மீண்டான். சேரன் செங்குட்டுவனுக்கும் இவன் நண்பனாக இருந்தான். கோவலன், கண்ணகியுடன் மதுரைக்குச் சென்று கவுந்தியடிகளுடன் இருந்தபோது மாடலன் குமரியில் நீராடிச் சோழநாட்டுக்குத் திரும்பிவரும் வழியில் மதுரையில் தற்செயலாக அவர்களைச் சந்தித்தான். கண்ணகிக்குச் செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்து விழாச் செய்தபோது அவ் விழாவுக்கும் சென்றிருந்தான்.

சாய்க்காடு

இக்காலத்தில் இது திருச்சாய்க்காடு என்று கூறப்படுகிறது. இதற்குச் சாயாவனம் என்னும் பெயரும் உண்டு. 'நெடுங்கதிர்க்

---

28 அகம். 186 : 15

29 புறம். 217, 220, 221, 222, 223 (சேலம் மாவட்டம் காவிரியின் வடகரையிலுள்ள பொத்தனூர் இந்த ஊராயிருக்கலாம்)

கழனித் தண்சாய்க் கானம்' என்றும்[30] 'செந்நெலஞ் செறுவின் அன்னந் துஞ்சும், பூக்கெழு படப்பைச் சாய்க்காடு' என்றும்[31] இது சிறப்பிக்கப்பட்டுள்ளது.

வல்லம்

இது சோழநாட்டிலிருந்த ஊர். இவ்வூர் கோட்டை மதிலினால் சூழப்பட்டு, மதிலுக்கு வெளிப்புறத்தில் மிளைக்காடுகளால் அரண் செய்யப்பட்டிருந்தது. வல்லத்துக் கோட்டையை ஆரியப் படை தாக்கிப் போர் செய்தது. அப்போது வல்லத்து வீரர்கள் அவர்களைத் தாக்கினார்கள். தாக்குதலுக்கு எதிர்நிற்க முடியாமல் ஆரியப்படை சிதறி ஓடிப்போயிற்று.[32] வல்லத்தின் தலைவனாக இருந்தவன் சோழர் குலத்தைச் சேர்ந்த நல்லடி என்பவன்.

வெண்ணி

இவ்வூர் இக்காலத்தில் கோயில்வெண்ணி என்று கூறப்படுகிறது. இது, தஞ்சாவூருக்குக் கிழக்கே இருபத்து நான்கு கி. மீ. தொலைவில் இருக்கிறது. இந்த ஊரில் சில போர்கள் நடந்துள்ளன. பாண்டியனும் சேரனும் பதினோரு வேள் அரசரோடு வந்து போர் செய்தபோது, கரிகாற்சோழன் அவர்களை வென்றான்.[33] கரிகாற்சோழனுடைய இந்த வெற்றியைப் பாடிய வெண்ணிக்குயத்தியார் இந்த ஊரிலிருந்த புலவர்.

சோழர் குடியின் தொன்மை

இலக்கியச் சான்று

பன்னெடுங் காலமாகத் தமிழகத்தை மூவேந்தர்கள் ஆட்சி செய்து வந்தனர். 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்' என்று தமிழகத்தைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.[1] மற்றும், சோழர் குடியின் அடையாளச் சின்னமாக ஆத்திப் பூமாலையை[2] அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கியத்துள் காலத்தால் முந்தியது தொல்காப்பியம். சற்றேறக்குறைய கி. மு. நான்காம் நூற்றாண்டு அளவில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம் என்று

30 அகம். 220 : 18
31 நற். 73 : 8-9
32 அகம். 336 : 22-23
33 ஷை 55 : 10-11 ; புறம். 66 ; 3-4 ; பொருநர். 143-148
1 தொல். பொருள். செய். 75 : 3
2 ஷை புறத். 5 : 4

அறிஞர்கள் கருதுகின்றனர்.[3] இந்த இலக்கியச் சான்றுகளால், சோழர்குடி மிகவும் தொன்மையானது என்பது புலனாகிறது. நெடுங்காலமாக ஆட்சி செய்துவந்த அரசகுடி எனும் பொருளிலேயே 'படைப்புக் காலந் தொட்டு' இந்நாட்டை ஆண்டுவரும் குடி என்று நம் முன்னோர்கள் போற்றியுள்ளனர்.[4]

வடமொழி இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றுள் சோழ அரச மரபைப்பற்றிச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. பாணினியின் இலக்கணத்திற்குக் காத்தியாயனர் உரை எழுதியுள்ளார். ஓர் இலக்கண விதிக்கு எடுத்துக் காட்டாகச் 'சோழர்' என்னும் பெயரை அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.[5] அவருடைய காலம், மௌரியப் பேரரசர்க்கு முற்பட்ட நவநந்தரின் ஆட்சிக் காலம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அக்காலத்திலேயே (கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி) சோழ அரசமரபு புகழ்பூத்து விளங்கியமை இதனால் புலனாகின்றது.

கல்வெட்டுச் சான்று

மௌரியப் பேரரசன் அசோகனுடைய (கி.மு. 272—232) கல்வெட்டுகளில் தமிழக வேந்தர்களைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. அவற்றுள் சோழ அரசமரபே முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[6] மௌரியப் பேரரசனுடைய ஆதிக்கத்திற் குட்படாது, தன்னுரிமைத் தனியரசுகளாகச் சோழ, பாண்டிய, சேர அரசுகள் விளங்கியமையும் தெரியவருகிறது. இக் குறிப்புகளால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அளவிலேயே சோழப் பெருவேந்தரின் குடி, வடஇந்திய மக்களின் கருத்தைக் கவரத்தக்க நிலையில் பெருவாழ்வு பெற்றிருந்தமை தெளிவாகத் தோன்றுகிறது.

அயல்நாட்டார் குறிப்பு

கிறித்தவ நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்ட கிரேக்கக் கடலோடிகளின் பயணக் குறிப்பேடுகளில் தமிழ் நாட்டின் பல பகுதிகளைப்பற்றிய செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் சோழரைப்பற்றியும், அவர்களுடைய நாட்டைப்பற்றியும், அவர்களுடைய பட்டினங்களைப்பற்றியும் புகழ்மிக்க குறிப்புகள் காணப்படுகின்றன.

---

3 வரதராசனார், மு. 'தமிழ் இலக்கிய வரலாறு', பக். 5
4 குறள். 955, பரிமே. உரை
5 Mukerji, R. K., *The Fundamental Unity of India*, p. 54
6 Sircar, D.C. (ed.), *Inscriptions of Asoka*, pp. 47, 58

சோழ மன்னரைப் பற்றிய பழங்கதைகள்

சங்க காலத்தின் பிற்பகுதியில் (கி.பி. 200—300) சோழ மன்னர்களைப்பற்றிய பல பழங்கதைகள் வழக்கிற்கு வந்துள்ளன. அக் கதைகள் எல்லாம் வரலாற்றுக் காலச் சோழர்களுக்கு முற்பட்ட சில மன்னர்களைச் 'சோழர் குடியின் மூதாதையர்' என்று அறிவிக்கின்றன. அச் சோழ அரசர்கள் தெய்விகத் தன்மையுடையவர்களாகவும், அற்புதச் செயல்கள் பலவற்றைப் புரிந்தவர்களாகவும் போற்றப்படுகின்றனர். இத்தகைய பழங் கதைகள் பெரிதும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களில் பயின்று வழங்குகின்றன. எட்டுத்தொகை நூல் களுள் இவை அருகிய வழக்குடையனவாகவே உள்ளன. எனவே, இக் கதைகளைச் சோழரைப்பற்றிய பழங்கதைகள் எனக் கொள்ளுவதே பொருத்தமாகும். இக் கதைகளால் அறியப் படும் சோழ மன்னர்களின் வரலாற்றைக் காண்போம்.

காந்தமன்

காந்தமன் என்னும் சோழ அரசன் காவிரி ஆற்றைச் சோழ நாட்டில் பாயச் செய்தான் என்னும் புராணக் கதையை மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. காந்தமன் குடகுமலையில் இருந்த அகத்திய முனிவரிடம் சென்று, அவரை வேண்ட அவர் தம்மிடமிருந்த கமண்டலத்து நீரைக் கவிழ்த்தாராம். அந்த நீர் காவிரி ஆறாகப் பாய்ந்து சோழ நாட்டில் புகுந்து வந்ததாம். இந்தக் கதையை மணிமேகலைக் காப்பியப் பதிகங் கூறுகிறது.[1]

சோழன் காந்தமனைப்பற்றிய இன்னொரு புராணக் கதை யையும் மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. காந்தமன் காலத்தில், பரசுராமன் அரசர் குலத்தை எல்லாம் அழித்துக்கொண்டு வந்த போது சோழ நாட்டுக்கும் வந்தான். அப்போது கன்னித் தெய்வம் (கொற்றவை) அரச பதவியை விட்டுச் சில காலம் எங்கேனும் போயிருக்கும்படி காந்தமனுக்கு யோசனை கூறிற்றாம். அந்த யோசனைப்படி காந்தமன் தன்னுடைய கணிகையின் மகனான சுகந்தன் என்பவனிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டுத் தான் திரும்பிவருமளவும் ஆட்சி செய்யுமாறு கூறிச் சென்று விட்டானாம். பரசுராமன் வந்தபோது அரச குலத்தவன் அல்லாத ஒருவன் ஆட்சி செய்வதைக் கண்டு சுகந்தனைக்

---

1 மணிமே. பதி. 9-12

கொல்லாமல் போய்விட்டானாம். பரசுராமன் போன பிறகு காந்தமன் திரும்பி வந்து சோழநாட்டை அரசாண்டானாம்.[8]

சுகந்தன்

இவன் சோழர் குலத்து மன்னன் அல்லன். மேலே கூறப்பட்ட காந்தமன் என்னும் சோழனுடைய காதற் கணிகையின் மகன். மேலே கூறப்பட்ட காரணத்தினாலே இவன் சோழ நாட்டைச் சில காலம் அரசாண்டான். இவன் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து அரசாட்சி செய்தபோது இரண்டு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. இவ்வரசனுடைய இளைய மகன், காவிரியாற்றில் நீராடி வீடு திரும்பிச் சென்ற மருதி என்பவளைக் கண்டு அவளைத் தன்னுடன் வரும்படி அழைத்தான். அவள் மனம் நொந்து பூதசதுக்கத்தில் உள்ள காவல் பூதத்தின் கோயிலில் சென்று சுகந்தன் மகனுடைய தகாத செயலைக் கூறி முறையிட்டாள். அதற்கு அந்தப் பூதம், 'அரசன் இந்தக் குற்றத்துக்குத் தண்டனை கொடுக்காவிட்டால், பிறகு நான் முறை செய்வேன்; நீ உன் இல்லத்துக்குப் போ' என்று கூறிற்று, பிறகு சுகந்த அரசன் தன்னுடைய மகன் செய்த தகாத செயலை யறிந்து விசாரித்துத் தன் மகனை வாளினால் வெட்டிவிட்டான். இதனை மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது.[9]

இது நடந்த பிறகு சில காலம் கழித்துச் சுகந்தனுடைய மூத்த மகன் தன்னுடைய தம்பியின் மரணத்துக்குக் காரணமாயிருந்த அந்த மருதி வீதிவழியே சென்றபோது, தன்னுடைய குடுமியில் சூடியிருந்த பூமாலையை எடுத்து அவள் கழுத்தில் இடுவதற்குக் கையை அவன் உயர்த்தியபோது, அந்தக் கை உயர்த்தியபடியே (தாழாமல்) நின்றுவிட்டது. தன்னுடைய மகன் செய்யக் கருதிய தகாத செயலை அறிந்த சுகந்தன் அந்த மகனையும், மகனென்று கருதாமல் வாளால் வெட்டிவிட்டான் என்று மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது.[10]

சிபிச் சோழன் (செம்பியன்)

சிபிச் சோழன் அரசாண்ட காலத்தில் ஒரு நாள் வல்லூறு என்னும் பறவை ஒன்று தீனிக்காகப் பறந்து அலைந்தது. அப்போது அது ஒரு புறாவைக் கண்டு அதை அடித்துத் தின்று பசியாற

8 மணிமே. 4 : 25-28
9 ஷை 22 : 40-79
10 ஷை 22 : 146-158

எண்ணி, அப் புறாவின்மேல் பாய்ந்தது. உயிர்தப்பிப் பிழைக்க அந்தப் புறா, தனக்குப் புகலிடம் கிடைக்காமல் சிபிச் சோழனிடம் வந்து அடைக்கலம் புகுந்தது. வல்லூறும் அவனிடம் வந்து தன்னிடம் புறாவைக் கொடுக்கும்படி கேட்டது. சிபி அதற்கு இணங்காமல் புறாவின் எடைக்குச் சமமாகத் தன்னுடைய உடம்பிலிருந்து தசையை அறுத்துக் கொடுப்பதாகக் கூறினான். அவன் தராசு கொண்டுவரச் சொல்லி, அதில் ஒரு தட்டில் புறாவை வைத்து, மற்றொரு தட்டில் தன்னுடைய உடம்பிலிருந்து தசையை அறுத்து வைத்து நிறுத்தான்; ஆனால், புறாவின் எடை அதிகமாக இருந்தபடியால், தானே தராசில் அமர்ந்தான். அப்போது தராசு சம எடையாக இருந்தது. உடனே தெய்வம் தோன்றி அவனுக்கு வரங்கள் கொடுத்து, அவனுடைய உடம்பை முன்பு இருந்தது போலச் செய்ததாம். இந்தக் கதை புத்த ஜாதகக் கதையில், சிபி ஜாதகத்தில் கூறப்படுகிறது. அதே கதை, இந்தச் சிபிச் சக்கரவர்த்தியைப்பற்றியும் கூறுகிறது. சங்க காலத்துப் புலவர்களும் இந்தக் கதையைக் கூறியுள்ளனர்.[11]

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய மாறோக்கத்து நப்பசலையார், அவன் சிபிச் சோழனுடைய பரம்பரையில் வந்தவன் என்று கூறுகிறார். இந்தச் சோழனைப் பாடிய கோவூர்கிழாரும் இவ்வாறே கூறுகிறார்.[12] இவன் செம்பியன் என்ற பெயராலும் குறிப்பிடப்படுகிறான்.

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானைப் பாடிய தாமப்பல் கண்ணனார், அந்தச் சோழன் சிபிச் சோழனுடைய பரம்பரையில் வந்தவன் என்று கூறுகிறார்.[13] சிலப்பதிகாரமும் சிபிச் சோழன் கதையைக் கூறுகிறது.[14] மேலும், சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதையிலும் (51—52), கட்டுரை காதையிலும் (55) வரந்தருகாதை (அம்மானை வரி)யிலும் இந்தக் கதை கூறப்படுகிறது.

முசுகுந்தன்

தேவலோகத்தில் இந்திரனுக்கும் அவுணர்க்கும் போர் நடந்ததாம். அந்தக் கடும்போரிலே சோழன் முசுகுந்தன் தேவலோகத்துக்குப் போய் இந்திரன் சார்பாக அவுணரோடு போர் செய்து வெற்றி பெற்றானாம். மகிழ்ச்சியடைந்த இந்திரன், 'உமக்கு வேண்டும் வரத்தைக் கேள்' என்று கூற, தனக்குப் போரில்

11 புறம். 37 : 5-6, 39 : 1-3, 43 : 5-7
12 ஷை 46 : 1-2
13 ஷை 43 : 4-8
14 சிலப் . 27 : 166-169

உதவி செய்த பூதத்தைத் தன்னுடைய சோழ நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று முசுகுந்தன் விரும்பிக் கேட்டானாம். இந்திரனும் அந்தப் பூதத்தை அனுப்ப, சோழன் அந்தப் பூதத்தைக் காவிரிப்பூம்பட்டினத்தில் நகர்க் காவலுக்காக இருக்கச் செய்தானாம். அந்தப் பூதம் இருந்த இடம் பூத சதுக்கம் என்று பெயர் பெற்றிருந்தது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதற்கு உரையையும் விளக்கத்தையும் அடியார்க்கு நல்லார் தருகிறார். மிக்க வேகத்தினையுடைய அசுரர் கூட்டமாக வந்து நெருங்கி இந்திரனது நகரைக் காத்த புலிபோன்ற வலிமையுடைய முசுகுந்தனுக்குத் தோற்றுப் பின்பு தம்மில் ஒத்துக்கூடி அம் முசுகுந்தனது நெஞ்சமும் இருள்கூரும்படி செலுத்திய அத்திரத்தைப் போக்கிய பெரிய பூதத்தை அவ்வண்ணல் பொருட்டு இந்திரனேவலால் போந்து அப் புகாரிலிருந்து அது பலியுண்ணும் நாளங்காடியிடம் தங்கியது.[15]

'என் சொல்லியவாறோ வெனின், அங்ஙனம் விட்ட அம்பு கண்ணையும் மனத்தையும் புதைத்தலாற் போர்த்தொழிலொழிந்து நின்ற முசுகுந்தற்கு அவ்விருளுடைதற்குக் காரணமானதோர் மந்திரத்தை யருள அதனால் வஞ்சங்கடிந்த அவுணரைக் கொன்று குவித்து நின்றானைக் கண்ட இந்திரன், அவரை எங்ஙனம் வென்று குவித்தாயென்றாற்கு இவன் இப் பூதத்தின் செயலெனக் கேட்ட இந்திரன், அப் பூதத்தை அவன்பொருட்டு மெய்க் காவலாக ஏவுதலின் ஆங்கு நின்றும் போந்து ஈங்குப் புகாரினுள் ளிருந்து பலியுண்ணும் நாளங்காடியிடம்[16] தங்கியது. மணிமேகலைக் காப்பியமும் இந்த முசுகுந்தனைக் கூறுகிறது.[17]

மனுச் சோழன்

மனுச் சோழன் சோழநாட்டுத் திருவாரூரில் நீதி தவறாமல் அரசாண்டான்; ஏழை எளியவரும் நீதி பெறுவதற்காக ஆராய்ச்சி மணியொன்றைக் கட்டிவைத்தான்; அந்த மணியில் நீண்ட கயிற்றைக் கட்டி அரண்மனை வாயிலிலிருந்து இழுத்து மணி அடிக்க வாய்ப்பாகக் கட்டிவைத்தான். இவன் நடு நிலைமையோடு நீதியாகச் செங்கோல் செலுத்திய காலத்தில், இவனுடைய ஒரே மகன், தேரை ஓட்டிக்கொண்டு தெருவில் செல்லும்போது, பசுவின் இளங்கன்று ஒன்று துள்ளியோடித் தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு இறந்துவிட்டது. அதைக் கண்ட

15 சிலப். 5 : 65-67; 6 :7-13
16 வெ. : 29. அம்மானை வரி 1
17 மணிமே. 1 : 4; 19-20

தாய்ப்பசு கதறி அழுது, அரண்மனை வாயிலுக்கு வந்து ஆராய்ச்சி மணிக் கயிற்றை இழுத்தது. அதனால், மணியோசை கேட்க, அரசன் வந்து பார்த்து பசுவின் இளங்கன்று தன் மகனுடைய தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு இறந்ததை அறிந்து தன் அமைச்சரிடம் தன் மகனைத் தேர்ச் சக்கரத்தில் மடியும்படி செய்ய ஆணையிட்டான். அமைச்சர் அதனைச் செய்ய மனமின்றித் தற்கொலை செய்துகொண்டார். அதனை அறிந்த மனுச்சோழன் தானே தேரைச் செலுத்தி அதன் சக்கரத்தில் தன் மகனை அகப்படுத்திக் கொன்றான்.[18] இதைக் கண்டு வியந்த தேவர்கள், அவனிடம் வந்து மெச்சிப் புகழ்ந்து, இறந்துபோன அமைச்சரையும் அரசகுமாரனையும் உயிர்ப்பித்துக் கொடுத்தனர் என்பது இவனைப்பற்றிய புராணக் கதை. இந்தப் புராணக் கதையைப் பெரியபுராணத்தில் காணலாம்.[19]

கி.மு. முதல் நூற்றாண்டில் இலங்கையை அநுராதபுரத்திலிருந்து அரசாண்ட சோழநாட்டுத் தமிழனாகிய ஏலேலசிங்கனும் மனுச் சோழனைப் போலவே தன் மகன் பசுவின் கன்றைத் தேர்ச் சக்கரத்தில் அகப்படுத்திக் கொன்ற குற்றத்திற்காகத் தானே தன்னுடைய தேரின் சக்கரத்தில் தன்னுடைய ஒரே மகனை அகப்படுத்திக் கொன்றான் என்று மகாவம்சம் என்னும் நூல் கூறுகிறது. ஆனால், தேவர்கள் வந்து இறந்துபோன மகனை உயிர்ப்பித்துக் கொடுத்ததாக அந் நூல் கூறவில்லை.[20]

மனுச் சோழனின் புராணக் கதையைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.[21] மணிமேகலைக் காப்பியம் 'மகனை முறைசெய்த மன்னவன்'[22] என்று கூறுகிறது.

தொடித்தோட் செம்பியன்

தூங்கெயில் எறிந்த

வானம் என்பது ஓர் ஊர். (இந்த ஊர் வானியாற்றுப் பகுதியில் இருந்தது என்று பெயரமைதி நோக்கிக் கொள்ளலாம்.) அவ் ஊரில் கடவுள் அஞ்சி என்பவன் ஒரு கோட்டை கட்டியிருந்தான். அந்தக் கோட்டையின் கதவு மேலிருந்து தொங்கும்படி அமைக்கப்

18 புறம். 39 : 5-6
19 திருத்தொண்டர் புராணம், திருநகரச் சிறப்பு
20 Mendis, G. C. 'Ceylon' in *A Comprehensive History of India*, Vol. 2: *The Mauryas and Satavahanas*, p. 579
21 சிலப். 20 : 53-55, 29 : அம்மானை வரி 2
22 மணிமே. 22 : 210

பட்டிருந்தது (இக்காலத்துச் சுருள் கதவு போன்றது). அதனால், அது தூங்கும் எயிற்கதவம் எனப்பட்டது. இதனை வண்டன் என்னும் பெருஞ்செல்வன் காவல் புரிந்து வந்தான்.[23] (இந்தக் கோட்டை அரசக் கருவூலப் பாதுகாப்பாக அமைந்திருந்தது எனலாம்.) 'தூங்கு எயிற்கதவம்' என்பது 'தூங்கெயில்' என்று சுருக்கமாக வழங்கப்பட்டது.

தொடித்தோட் செம்பியன் என்று சிறப்பித்துக் கூறப்பட்ட சோழ அரசன் இந்தத் தூங்கெயில் கோட்டையைத் தாக்கி அழித்தான். இதனால், 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்' என்று வழங்கப்பட்டான். இவன் இக் கோட்டையை அழித்தது இவனது பேராற்றலை வெளிப்படுத்தும் செயலாகும்.[24]

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இந்தச் செம்பியனின் வழிவந்தவன் என்று குறிப்பிடப்படுகிறான்.

தூங்கெயில், 'தூங்கெயில் கதவம்' என்று விளக்கிக் காட்டப் பட்டுள்ளது. இக் கோட்டைக் கதவை அழித்த இச் சோழன், 'நற்றேர்ச் செம்பியன்' என்றும் வழங்கப்பட்டான்.[25] இவன் உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட அரசன்.[26] செம்பியன் என்னும் அரசன் கழுமலம் என்னும் ஊரைத் தாக்கி வென்றான்.[27]

அகப்பா என்னும் கோட்டையை அழித்துப் பகற்பொழுதிலேயே தீக்கிரையாக்கிய சோழன் ஒருவன் பெயரும் செம்பியன் ஆகும்.[28]

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடம் தோற்றுப்போன எழுவருள் ஒருவன் செம்பியன்.[29]

புறாவுக்காகத் தன்னையே நிறுத்துத் தந்த சோழனது பெயரும் செம்பியன் என்று கூறப்படுகிறது.[30] கழுமலப் போரில் சேரனை வென்ற சோழனது பெயரும் செம்பியன் என்று கூறப் படுகிறது.[31]

---

23 'தூங்கெயில் கதவம்' (பதிற். 31 : 19)
24 புறம். 39 : 6
25 சிறுபாண். 81-82
26 நற். 236 : 8
27 ஷெ 234 : 7
28 ஷெ 14 : 4-5
29 அகம். 36 : 13.16
30 புறம். 37 : 5-6
31 களவழி. 6 : 5-6, 23 : 4-5, 33 : 4-5, 38 : 3-4

தொடித்தோட் செம்பியன் எறிந்த தூங்கெயில் மூன்று என்றும், அவை உயர்விசும்பில் இருந்தன என்றும் கூறப் படுவது[32] வியப்பே யாகும். மூன்று என்பது வானம், கழுமலம், அகப்பா என்னும் ஊர்களிலிருந்த மூன்று கோட்டைகளைக் குறிப்பதாகலாம்.

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் புகாரில் இந்திர விழாவினை முதன் முதலாகத் தொடங்கி வைத்தான் என்றும் கூறப்படுகிறது.[33] இவனது வேண்டுகோளின்படி விண்ணவர் தலைவனான இந்திரன் புகார் நகரில் இந்திர விழா நடைபெறும் 28 நாளிலும் வந்திருந்து பூசனையை ஏற்றுக்கொண்டானாம்.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது,

1. புறாவுக்காகத் துலைபுக்க செம்பியன்,
2. தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்,
3. அகப்பா எறிந்த செம்பியன்,
4. கழுமலம் எறிந்த செம்பியன்,
5. களவழித் தலைவன் செம்பியன்

என்னும் 5 நிலைகளைக் காணலாம். இந்த 5 பெயர்கள், எத்தனை அரசர்களைக் குறிப்பன என்பது தெரியவில்லை.

செம்பியர் குடியைப் பற்றிய குறிப்பும் உண்டு [34]

சோழர் குடிப்பெயர்

'சோழர்' எனும் பெயர் உணர்த்தும் பொருள் யாது? எனும் ஐயம் தோன்றலாம். 'சோழர்' என்பது பன்மைப் பெயர். 'சோழன்' எனும் சொல்லிற்கு விளக்கம் பன்னிருபாட்டியல் எனும் இலக்கண நூலில் தரப்பட்டுள்ளது. 'சோழன்' என்பது ஒரு குடிக்கண் பிறந்தாரைச் சுட்டும் குடிப்பெயர்[1] என்பது அந் நூலினால் அறியப்படுகிறது.

சோழர்—சொல்லும் பொருளும்

இந்த அரச மரபிற்குச் 'சோழர்' என்னும் பெயர் எவ்வாறு வந்தது என்பதை இன்றைய நிலையில் எளிதில் அறிய இயல

---

32 சிலப். 29 : அம்மானை வரி 1
33 மணிமே. 1 : 4
34 புறம். 228 : 9; சிலப். 28 : 95
1 பன்னிருபாட்டியல்-76

வில்லை. இதனை, இயற்பெயராகவே பண்டை அறிஞர்கள் கருதினர். ஆனால், இக்கால அறிஞர்கள் அச் சொல்லின் பொருளைக் காண முயன்றுள்ளனர். கர்னல் ஜெரினி[2] என்பார், வடமொழியில் 'கருமை' எனப் பொருள்படும் 'காள' என்னும் சொல்லோடும், 'கோல' என்னும் சொல்லோடும் தொடர்புபடுத்தி இச் சொல்லின் பொருளை விளக்க முயன்றுள்ளார். திராவிடருக்கு முற்பட்ட பழங்குடி மக்கள் கோலர்[3] என்பவராவர். அவர்கள் கரிய நிறம் வாய்ந்தவர்கள். அவர்களுடைய ஒரு கிளையினரே 'சோழ'ராக இருந்திருக்கலாம் என்பது அவருடைய கருத்தாகும். இக் கருத்து மொழியியல் அடிப்படையிலோ, மானிடவியல் அடிப்படையிலோ ஆராய்ச்சிக்குப் பொருந்தி வரவில்லை.

மற்றொரு சாரார், 'சோளம்' மிகுதியாக விளைந்த நாட்டினை ஆண்ட அரசமரபிற்குச் 'சோளர்' எனும் பெயர் அயலவரால் இடப்பட்டிருக்கலாம்; அப் பெயரில் உள்ள 'ளகரம்' நாளடைவில் 'ழகரமாக'த் திரிந்திருக்கலாம் என்பர். அல்லது 'திருடன்' எனப் பொருள் தரும் 'சோரன்' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாகச் 'சோழர்' என்னும் பெயர் தோன்றி இருக்கலாம் என்று டி. ஆர். பந்தர்க்கர் கூறியுள்ளார்.[4]

முதலாவதாக 'ளகர'வொலி, 'ழகர'வொலியாகத் திரியும் என்னும் ஒலியியல் விதியினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கருத்து இது. இந்த ஒலித்திரிபு முறையை நாம் உடன்படலாம். ஆனால், புன்செய்ப் பயிரான 'சோளம்' மிகுதியாக விளையும் நாட்டைச் சுட்டுவது என்பது, நீர்வளமிக்க சோழநாட்டை அறியாதவர் கூற்றாகும். 'சோழநாடு சோறுடைத்து' என்பது பழமொழி. 'சோளமுடைத்து' என்று இதுவரை யாரும் சொன்னதில்லை. மருதநிலமான சோழநாட்டில், பன்னெடுங்காலமாக நெல்லே பயிரிடப்பட்டு வருகிறது. எனவே, 'உண்மை அறியாதார் கூற்று' என இதை ஒதுக்குவதைத் தவிர வேறு வழியில்லை.

மற்றும் 'திருடன்' என்று பொருள் கூறுவது தமிழினைத் தவறை இழித்துப் பேச நினைப்போரின் இழிந்த தன்மையாகும். மேலும், வல்லின 'றகரம்'தான் 'ழகரம்' ஆகத் திரியுமே ஒழிய,

---

[2] Gerini, Col., *Researches*, pp. 85-90
[3] Kols
[4] Bhandarkar, D. R., *Ancient India*, p. 89

இடையின 'ரகரம்' 'ழகர'மாகத் திரியாது. இது தமிழ்மொழியின் இயல்பினை அறியாதவரின் விழைவார்ந்த விருப்பமாகத் தோன்றுகிறது.

உறையூருக்குக் 'கோழியூர்' என்று மற்றொரு பெயருமுண்டு. கோழியூரை ஆண்டவர் 'கோழியர்' எனப்பட்டனர். புறநானூற்றுப் பழைய உரையாசிரியர், 'கோழி' என்னும் சொல்லிற்கு, 'உறையூர்' என்றே உரை எழுதியுள்ளார். 'கோழியர்' என்னும் சொல்லில் உள்ள பின்னண்ண ஒலியாகிய 'ககர' ஒலி, இடையண்ண ஒலியாகிய 'சகர'மாகத் திரியும் இயல்பு திராவிட மொழிகளில் காணப்படுகிறது. எனவே. 'கோழியர்' என்னும் சொல்லில் இருந்து 'சோழியர்', 'சோழர்' என்னும் சொற்கள் பிறந்திருக்கலாம் என்பது மற்றோர் அறிஞரின் கருத்து.[5] இந்த அறிஞர் கூறுவதற்குச் சான்றாக, இவ்வாறு திரிந்து வழங்கும் வேறு சொற்களைக் காட்டி இருந்தால், ஓரளவிற்கு இதனை ஒப்புக்கொள்ள இயலும்.

மற்றொரு மொழியியல் அறிஞர் தந்துள்ள விளக்கம் நம் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. திராவிட மொழிகளில் 'உகரம்', 'ஒகர'மாகத் (உலக்கை—ஒலக்கை) திரிவது இயற்கை. இவ்வொலித் திரிபினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால், 'சூழ்' என்னும் வேர்ச்சொல்லடியாகச் 'சோழர்' என்னும் சொல் தோன்றி இருக்கலாம் என்பார். 'சூழ்வோர்' என்பது காலப் போக்கில் 'சோழர்' எனத் திரிந்திருக்கலாம் என்பது அவருடைய கருத்தாகும்.[6]

சூழ்வோர் என்பதற்குச் 'சுற்றியிருப்பவர்', 'ஆராய்வோர்', 'கருதுவோர்' என்பன போன்ற பல பொருள்கள் உண்டு. இவற்றுள் எப்பொருளும் பொருத்தம் உடையதாகத் தோன்றவில்லை. எனவே, 'சேரழர்' என்னும் குடிப்பெயரை, இடுகுறிப் பெயராகவே இன்று கொள்ளவேண்டியவர்களாக உள்ளோம்.

பல்வகைப் பெயர்கள்

பண்டைக் காலத்திய சோழ வேந்தர்கள், பல்வேறு வகையான குடிப்பெயர்களால் சுட்டப்பட்டனர். செம்பியன், சென்னி, கிள்ளி, வளவன் என்பன அவற்றுள் பெருவழக்குடைய பெயர்களாகும். 'சிபிச் சக்கரவர்த்தியின் மரபிலேயே வந்தவர்கள் சோழர்'

---

5 துரையரங்கனார், மொ. அ., 'சங்க காலச் சிறப்புப் பெயர்கள்', பக். 227

6 Ramaswami Aiyar, L. V., *Collected Papers*, p. 42

எனனும் பழங்கதையின் வழி, 'செம்பியன்' என்னும் பெயரானது சோழ மன்னர்களுக்கு வழங்கிய பொதுப் பெயராகவே தோன்றுகிறது. 'சென்னி' என்னும் பெயர் 'சென்னியர்' எனப் பன்மையிலே வழங்குகிறது.[7] 'சென்னி' என்பதற்குத் 'தலை' அல்லது 'முடி' என்பது பொருள். சோழர் குடியில், முடிசூட்டிக் கொண்டு நாடாளும் உரிமை பெற்ற மூத்தமகன் வழிவந்த கிளைக் குடியை இது குறிப்பதாகலாம். 'கிள்ளி' என்னும் பெயர், 'பகைவரை முளையிலேயே கிள்ளி எறிவதில் வல்லவர்' எனும் பொருளில் வழங்கப்பட்ட சிறப்புப் பெயராகலாம். நிலத்தைக் கிள்ளிச் (உழுது) செய்யப்படும் பயிர்த்தொழிலைச் சிறப்புறச் செய்தவர்கள் எனவும் இதற்குப் பொருள் கொள்ளலாம். இதுவும் ஒரு கிளைக்குடிக்குரிய பெயராக வழங்கி இருத்தல் கூடும்.

'வளவன்' என்னும் பட்டப் பெயர், நிலவளமும் நீர்வளமும் மிக்க நாட்டின் தலைவர் எனும் காரணத்தால் வழங்கிய பெயராகலாம். தமிழ்நாட்டினை வளமிக்க நாடாகச் செய்தவன் கரிகால் பெருவளத்தான். 'காடு கெடுத்து நாடாக்கிக் குளந் தொட்டு வளம் பெருக்கிய' காரணத்தாலேயே, கரிகாலனைப் 'பெருவளத்தான்' என்று புலவர்கள் போற்றினர். கரிகாலனுக்குப் பிறகு அவனுடைய குடியில் வந்த சோழ அரசர்களுக்குரிய சிறப்புப் பெயராக 'வளவன்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. திருமாவளவன், மாவளத்தான், கிள்ளிவளவன் என்னும் பெயருடைய சோழ அரசர்கள் கரிகாலனுக்குப் பிறகு சிறப்புற்று விளங்கியவராவர்.

1. கரிகாலனுக்கு முற்பட்ட சோழ வேந்தர்கள்

வேளிர்குடி அரசனான தித்தன் உறையூரில் இருந்துகொண்டு அரசாண்டபோது போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்னும் அரசன் போரில் ஈடுபட்டு வெற்றி வாகை சூடிக்கொண்டிருந்தான் என்பதும், இந்த வெற்றி நிகழ்ச்சிகளைக் கண்டு தித்தன் பொறாமை கொண்டிருந்தான் என்பதும் தித்தன் வரலாற்றில் குறிப்பிடப்படும்.

மற்றும் இரண்டாம் வெளியனிடமிருந்து உறையூர் ஆட்சியைக் கைப்பற்றியவன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியாக இருக்கலாம் என்பது உய்த்துணரத்தக்கதாக உள்ளது.

---

7 துரையரங்கனார், மொ. அ., மு. கு. நூ., பக். 228-230

(அ) (பெருநற்) கிள்ளி மரபினர்

இந்த உய்த்துணர்வுகள் 'பெருநற்கிள்ளி' என்னும் பெயர் கொண்ட அரசர்கள் செல்வாக்குப் பெற்று வளர்ந்ததைக் காட்டுவது ஆகும்.

பெருநற்கிள்ளி என்னும் பெயர் கொண்ட அரசர்களின் பெயர்கள் நான்கு வெவ்வேறு அடைமொழிகளுடன் காணப்படுகின்றன :

(1) போரவைக் கோப்பெருநற்கிள்ளி (பெருநற்கிள்ளி-1)

(2) முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி (பெருநற்கிள்ளி-2)

(3) வேல் பஃறடக்கைப் பெருநற்கிள்ளி (பெருநற்கிள்ளி-3)

(4) இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி (பெருநற்கிள்ளி-4)

என்பன அந்தப் பெயர்கள். இவர்களது அடைமொழிகள் வெவ்வேறாக அமைந்திருப்பதால், இவர்களை வெவ்வேறு அரசர்கள் என்று கொள்வதே பொருத்தமானது.

மேலே கண்ட வரிசை காலக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் நாம் அமைத்துக்கொண்டதாகும். இந்தக் காலக் கண்ணோட்டத்துக்கு அடிப்படையாய் அமைந்த செய்திகள் அடுத்துள்ள அட்டவணையிலும் அதனை அடுத்த விளக்கத்திலும் தரப்படுகின்றன.

அரசர்	பாடிய புலவர்	பாடல்
போரவைக்கோப் பெருநற்கிள்ளி	சாத்தந்தையார், நக்கண்ணையார்	புறம். 80, 81, 82 83, 84, 85
முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி	உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்	ஷ 13
வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி	கழாத்தலையார்	ஷ 368
இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி	உலோச்சனார்,	ஷ 377
	ஔவையார்,	ஷ 367
	பாண்டரங்கண்ணனார்,	ஷ 16
	பேரிசாத்தனார்	ஷ 125

மேலே கண்ட அட்டவணையில் ஒருவனைப் பாடிய புலவர் மற்றொருவனைப் பாடிய தொடர்புச் செய்தி காணப்படவில்லை. இந்த நிலையில் இவர்களைக் கால வரிசைப்படுத்த வேறு சான்றைத்தான் தேடவேண்டியுள்ளது.

மேலே கண்ட எட்டுப் புலவர்களால் பாடப்பட்ட வேறு அரசர்களை நினைவுகூர்வோம்.

புலவர்	அரசர்	பாடல்
சாத்தந்தையார்	தித்தன்,	புறம். 80
	ஆமூர் மல்லன்,	ஷை 80, 81, 82
	பொருநன்	ஷை 82
நக்கண்ணையார்	அழிசி	நற். 87
உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்	அந்துவஞ்சேரல்,	புறம். 13
	ஆய் அண்டிரன்	ஷை 127, 135, 247, 374, 375
கழாத்தலையார்	குடக்கோ நெடுஞ் சேரலாதன்,	ஷை 62, 368
	பெருஞ்சேரலாதன்,	ஷை 65
	கரிகாலன்	ஷை 65
உலோச்சனார்	பெரியன்	அகம். 100 நற். 131
பாண்டரங்கண்ணனார்	...	...
பேரிசாத்தனார்	மாந்தரஞ்சேரல்,	புறம். 125
	மலையன்,	ஷை 125
	நன்மாறன் (இலவந்தி, கைப்பள்ளித் துஞ்சியவன்)	ஷை 198
ஔவையார்	மாரி வெண்கோ,	ஷை 367
	பசும்பூட்பொறையன்,	அகம். 303
	உக்கிரப் பெருவழுதி (கானப் பேரெயில் கடந்தவன்),	புறம். 367
	அதியமான்,	பல பாடல்கள்
	தொண்டைமான்,	புறம். 95
	நாஞ்சில் வள்ளுவன்,	ஷை 140
	பாரி,	அகம். 303
	முடியன்,	நற். 390
	வெள்ளிவீதி,	அகம். 147
	பரணர்,	புறம். 99

மேலே கண்ட அட்டவணைகள் நமக்கு ஓர் உண்மையைத் தெளிவுபடுத்துகின்றன. பெருநற்கிள்ளி என்னும் பெயர்கொண்ட சோழ அரசர்களைப் பாடிய புலவர்களையோ, அந்தப் புலவர்



நிலப் படம் 2

களால் பாடப்பட்ட பிற அரசர்களையோ அடிப்படையாகக் கொண்டு இந்தச் சோழ அரசர்களை நேர்முறையில் காலநிரல் படுத்த முடியவில்லை. எனவே, மேலும் சில படிகள் செல்ல வேண்டியுள்ளது.

சேர அரசர்களான அந்துவஞ்சேரலும், மாந்தரஞ்சேரலும் முறையே காலத்தால் முந்தியவரும் பிந்தியவரும் ஆவர் என்பது அவரது வரலாறுகளினால் தெரிகிறது. எனவே, அவர்களோடு தொடர்புடைய பெருநற்கிள்ளிகளான முடித்தலைக் கோவும், இராசசூயம் வேட்டவனும் முறையே காலத்தால் முற்பட்டவனும் பிற்பட்டவனும் ஆவர். எஞ்சியுள்ள இருவரில் போர்வைக்கோ, தித்தன் காலத்தவன் என்பது தெளிவாகத் தெரியும் சான்று. ஆதலால், முடித்தலைக்கோ மேற்கண்ட தித்தனின் மகனான வெளியனிடமிருந்து நாட்டைக் கைப்பற்றினான் என்பது நாம் முன்பு கூறியதுபோல் உய்த்துணரக் கிடப்பதாலும், போர்வைக் கோவை, முடித்தலைக்கோவிற்கு முந்தியவன் என்று கொள் கிறோம். எஞ்சியுள்ளவன் வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி. இவன் நெடுஞ்சேரலாதனோடு போரிட்டு மாண்டவன். சேர அரசர்களான அந்துவனும் உதியனும் சமகாலத்தவர் ஆதலால், உதியனின் மகனான நெடுஞ்சேரலாதனோடு போரிட்டு மாண்ட வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியை முடித்தலைக்கோவுக்கு அடுத்த தலைமுறையினனாகக் கொள்ளலாம்.

இந்த முறையில் நாம் மேலே கண்ட காலநிரல் அமைவதைக் காணலாம். இனி இவர்களது வரலாறுகளைத் தனித்தனியே நோக்குவோம்.

பெருநற்கிள்ளி - 1

சோழ மன்னருள் காலத்தால் மிகவும் முற்பட்டவனாகத் தோன்றுகிறான். உறையூரை ஆண்ட முதல் சோழ அரசனாக இவன் விளங்கினான்.

போர்கள்

ஆமூர், முக்காவல் நாட்டின் தலைநகர். இந்த ஊரில் ஆமூர் அரசன் மல்லனுக்கும், போர்வை அரசன் (கோ) பெருநற் கிள்ளிக்கும் போர் நடந்தது.

இந்தப் போரில் சோழன் மல்லனைத் தாக்கினான்; மல்லனது ஊரிலேயே தாக்கினான். சோழன் போரிட்ட காட்சி கண்ணுக்குப் பெருவிருந்தாய் அமைந்திருந்தது. பசியால் பனைமரத்தை முரிக்கும் யானை போல அவன் போரிட்டான். ஒடியும் பனை மரம்போல் மல்லனது படை இரு பகுதியாகச் சிதைந்தது. சிதைந்த படை பின்புறமும் வளைத்துக்கொண்டு சோழனைத்

தாக்கியது. சோழன் மண்டியிட்டுக்கொண்டு முன்னும் பின்னும் திரும்பித் தாக்கிப் போரிட்டான்; பகைவர்களைக் கொன்று குவித்தான். இது ஆமூரில் நடந்த போர்.[1]

போர்வை அரசன் பெருநற்கிள்ளி மற்றொரு போரில் ஈடுபட்டான். அந்தப் போர் ஊரைக் கைப்பற்ற வந்த பொருநனோடு நடத்திய போர்.[2] ஊரைக் கைப்பற்ற வந்த பொருநன் யார்? எந்த ஊரைக் கைப்பற்ற வந்தான்? எங்குப் போர் நடைபெற்றது என்பதைத் தெளிவாக உணர்த்தக்கூடிய சான்று இல்லை. இந்தப் போர் ஆமூரில் நடைபெறவில்லை என்பது மட்டும் உறுதி. ஆமூர் இந்தச் சோழனின் நாடு அன்றாகையால் இந்த உறுதி பெறப்படுகிறது.

பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் இவன் நிகழ்த்திய போர் ஒன்றைக் கண்டு பாடியுள்ளார். தம் இல்லத்தில் இருந்துகொண்டே போரைக் கண்டிருக்கிறார்.[3] எனவே, அவர் கண்ட போர் பெருங்கோழியூரில் நடைபெற்றது என்பது தெளிவாகிறது. உறையூருக்குக் கோழியூர் என்ற பெயரும் உண்டு. பேரரையும் சிற்றரையும் என்பன ஓர் ஊரின் பகுதிகளாய் விளங்கியமை போலப் பெருங்கோழியூர் என்பது கோழியூரின் ஒரு பகுதியாய் விளங்கியிருக்கலாம். இந்த வகையில் இப் போர் உறையூரில் நடந்தது என்று கொள்கிறோம்.

உறையூரைக் கைப்பற்ற வந்தவன் யார்? 'பொருநன்' என்று பாடல் கூறுகிறது.[4]

தலையாலங்கானத்துப் போரில் நெடுஞ்செழியனை எதிர்த்த எழுவருள் ஒருவன் 'பொருநன்' என்னும் பெயர் கொண்டவன்.[5] இந்தப் பொருநன்தான் இந்தத் தாக்குதலைச் செய்தவனா என்று எண்ண இயலாது. தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் காலத்தால் மிகவும் பிற்பட்டவனாவான்.

உறையூரில் அப்போது ஆட்சி செலுத்தி வந்தவன் தித்தன் என்பவன்.[6] பொருநன் உறையூரைத் தாக்கியபோது தித்தனுக்குப் போர்வை அரசன் பெருநற்கிள்ளி உதவ முன்வந்தான். இந்த உதவியைத் தித்தன் விரும்பவில்லை.[7] எனினும் சோழ நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்பது கிள்ளியின் விருப்பம்.

---

1 புறம். 80
2 ஷ 82
3 ஷ 85 : 6
4 ஷ 82 : 5
5 அகம். 36 : 19-20
6 புறம். 80 : 6
7 ஷ 80 : 5-9 ஆமூர்ப் போர்

பொருநனுக்குச் சோழர் குடியைச் சேர்ந்த வேறொருவன் நண்பன். அவன் பெயர் செம்பியன்.[8] இந்தச் செம்பியனுக்கும் இந்தப் போருக்கும் தொடர்பு இல்லை. என்றாலும் அந்தச் செம்பியனுக்குச் சோழ நாட்டுத் தலைமையை அளிக்க அவன் செய்த முயற்சியே, இந்த உறையூர்ப் போராய் இருக்குமோ என்று எண்ண வேண்டியுள்ளது.

போரில் பெருநற்கிள்ளியின் கைகள் விரைந்து செயற் பட்டன.[9] இவன் போர்க்களம் புகுவான் என்று யாரும் எதிர் பார்க்கவில்லை. எதிர்பாராமல் இவன் போர்க்களத்தில் தோன் றினான். பொருநனின் போர் வீரர்கள் வெருண்டு ஓடினர்.[10]

பெருநற்கிள்ளிக்கு உறையூர் சொந்த ஊர் அன்று. (அவனது சொந்த ஊர் போர்வை.) எனவே, உறையூரில் இருந்தவர்களில் சிலர் போர்வை அரசன் வெற்றி பெற்றான் என்று கூறினர். சிலர் தன் அரசன் தித்தனே வெற்றி பெற்றான் என்பாராய், போர்வை அரசன் பெற்றது வெற்றி அன்று என்று கூறினர். உண்மையில் வென்றவன் போர்வை அரசனே ஆவான்.[11]

நாடு

'போர்வைக்கோ' என்னும் அடைமொழியுடன் இவன் கூறப் படுவதால் போர்வை என்பது இவன் ஆட்சிபுரிந்த நாடு எனத் தெரிகிறது. போர்வை நாட்டின் தலைநகர் போர் என்பதும், போர் நகரின் புறப்பகுதி போர்ப்புறம் என்னும் பெயர் பெறும் என்பதும், அது திரு என்னும் அடைமொழி பெற்றுத் திருப்போர்ப் புறம் என அமையும் என்பதும் சொல் ஒப்புமையால் பெறப்படும் பொருத்தமான முடிவுகள்.

போர், சோழனின் படைத்தலைவன் பழையன் இருந்து அரசாண்ட ஊர். போர்ப்புறம், வேல்பாய்ந்தடக்கைப் பெருவிறற் கிள்ளியும் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் போரிட்டு மாண்ட ஊர். திருப்போர்ப்புறம் செங்கணானுக்கும், கணைக்கால் இரும் பொறைக்கும் போர் நடைபெற்ற இடம். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் காவிரி ஆறு பாயும் பகுதியில் இருந்தது என்பதைப் பழையன் வரலாற்றில் காணலாம். இப்போதுள்ள திருப்பூர் மேலே குறிப்பிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராய் இருக்கலாம் என்பது அறிஞர் கருத்து.

---

8 அகம். 36 : 15
9 புறம். 82 : 3-4
10 ஷை 84 : 3-5
11 ஷை 85 : 7-8

தோற்றப் பொலிவு

கழல் காலில் விளங்கியது; கறுகறுத்த மீசை முகத்தில் விளங்கியது;[12] சோழர் குடிக்குரிய ஆத்தி மாலையை அவன் அணிந்திருந்தான்.[13] போர்க் காலங்களில் அவனுக்கு நல்ல உணவுகூடக் கிடைக்கவில்லை; புல்லரிசிச் சோறுதான் கிடைத்தது. எனினும் அவனது போர்த்திறம் குறையவில்லை.[14]

காதல்

கடல் வாணிகர் 'நாய்கன்' என்று குறிப்பிடப்பட்டனர். கண்ணகியின் தந்தை பெயர் 'மாநாய்கன்' இதற்கு ஒரு சான்று. பெருங்கோழியூரில் (உறையூரில்) வாழ்ந்த கடல்வாணிகன் ஒருவன் 'பெருங்கோழி நாய்கன்' என்று அறிமுகமாகியிருந்தான். அவனது மகள் நக்கண்ணையார். கண்ணின் சிரிப்பைக் காட்டும் கண்ணகி என்னும் பெயரைப் போன்றதே கண்ணின் நலத்தைக் காட்டும் நக்கண்ணையார். போர்வை அரசன் பெருநற்கிள்ளி பொருநன் படையை எதிர்த்துப் போரிடுகையில் கண்டு அவன்மீது காதல் கொண்டாள். கிள்ளி போரில் கண்ணும் கருத்துமாய் இருந்தான். இவளுடைய நிலை அவனுக்குத் தெரியாது.

உறையூர்ப் போர் முடிந்ததும் ஆமூரின் போர் தொடங்கி விட்டது. உறையூர் போர்வைக்கோவின் ஊர் அன்மையால், அவன் திரும்ப உறையூருக்கு வரவும் இல்லை. எனவே, நக்கண்ணையார் காதல் என்றும் ஒருதலைக் காதலாய் முடிந்து விட்டது; இருதலையும் (ஆணிடத்திலும் பெண்ணிடத்திலும்) தோன்றி மணக்க வாய்ப்பின்றி முடிந்தது.

தித்தன் உறவு

தித்தன் உறையூர் அரசன். இவன் போர்வைக்கோவின் உதவியை நாடவும் இல்லை; அவன் உதவுவதை விரும்பவும் இல்லை. எனினும் பொருநனை முறியடிப்பதில் தானே வலிய வந்து போர்வைக்கோ உதவினான். இந்த உதவியை வெற்றிக்குப் பின்னரும் பாராட்டவில்லை. உறையூர்ப் போருக்குப் பின் ஆமூர்ப் போர் மூண்டது. இந்தப் போர் தித்தன் மல்லனைத் தாக்கிய போர். போர்வைக்கோ முன்புபோலவே தித்தன் பக்கம் வலிய வந்து நின்று போராடினான். இவன் போரிட்ட பாங்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. 'இதனையேனும் தித்தன்

12 புறம். 83 : 1
13 ஷை 82 : 6
14 ஷை 84 : 1

காண்பானாக! விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் காண்பானாக!' என்று புலவர் பாடியுள்ளார். தித்தன் புலவர் கூற்றைப் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை.

தித்தனுக்கும் போர்வைக்கோவுக்கும் இத்தகைய முரண்பட்ட உறவையே நாம் காண்கிறோம். சிலர் போர்வைக்கோவைத் தித்தனின் மகன் என்று கூறுகிறார்கள். அவர்கள் கூற்றுக்குப் பொருத்தமான சான்று இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பின் தந்தை மகனிடையே இருந்த இந்த மனமுறிவு கோப்பெருஞ் சோழனுக்கும் அவனது மக்களுக்கும் இடையே தோன்றிய மன முறிவை ஒப்பிட்டு எண்ண வைக்கும். கோப்பெருஞ்சோழன் வரலாற்றில் மக்கள் (மகன்மார்) தவறு செய்கிறார்கள். தித்தன் வரலாற்றில் தந்தை தவறு செய்கிறான் என முடியும்.

பெருநற்கிள்ளி - 2

இவன் மதம்கொண்ட யானைமீது நமக்கு அறிமுகமாகிறான். மதங்கொண்ட யானையை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது அந்த யானை கருவூர்த் தெருவழியாக, சோழனது கட்டுக்கு அடங்காமல் ஓடியது. அப்போது கருவூர் வேண் மாடத்தில் இருந்த உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் கண்டு அருகில் இருந்த சேர அரசன் அந்துவனிடம் நிலைமையை விளக்கினார். அவன் யானைமீதிருந்து படையெடுத்து வருவது போலத் தோற்றமளித்தாலும் அவன் உண்மையில் படை யெடுத்து வரவில்லை என்பதையும் விளக்கினார்.[15] முடிவு என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. சேரனும் யானையின் மதத்தை அடக்க உதவி செய்திருக்கலாம். சோழன் பிழைத்துத் திரும்பி யிருக்கலாம். இதற்கு மாறாகவும் நிகழ்ந்திருக்கலாம்.

நாடு

முடித்தலை என்னும் நாட்டை ஆண்டமையால் இவன் 'முடித்தலைக்கோ' என்று கூறப்பட்டிருக்கலாம். முடித்தலை என்பது இப்போதுள்ள 'கொடுமுடி' எனலாம். இந்தக் கொடு முடிக்கும் கருவூருக்கும் இடையில் உள்ள தூரம், கருவூருக்கும் உறையூருக்கும் இடையில் உள்ள தூரத்தை நோக்க மிகக் குறைவு. எனவே, மதங்கொண்ட யானைமீது ஏறிக் கருவூரில் நுழைந்த நிகழ்ச்சி இயல்பாய் முடிகிறது.[2] எனினும் உறையூர்

15 புறம். 13

ஏணிச்சேரியில் வாழ்ந்த புலவர் முடமோசியாருக்கு இந்தச் சோழன் நன்கு அறிமுகமாகியிருத்தலை எண்ணும்போது இவனை உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசன் என்று கொள்வதே பொருத்தம். ஆயினும், இவனது தொடக்க கால ஆட்சி, அதாவது ஆரியணையேறும் முதல் நிகழ்ச்சி இளவரசன் என்ற நிலையிலேனும் கொடுமுடியில் நிகழ்ந்திருக்கக் கூடும்.[16]

பெருநற்கிள்ளி - 3

(வேல்பாய்தடக்கை)

கழாத்தலையார்

சேர அரசன் நெடுஞ்சேரலாதனுக்கும் இவனுக்கும் போர் நடைபெற்றது. போர்ப்புறம் என்ற இடத்தில் நடைபெற்ற அந்தப் போரில் இரண்டு அரசர்களும் போர்க்களத்திலேயே மாண்டனர்;[17] இவனைப் 'பெருநற்கிள்ளி' என்றும், 'பெருவிறற் கிள்ளி' என்றும் சுட்டுவது மரபு.

போரும் வீழ்ச்சியும்

சேர அரசன் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும் இவனுக்கும் போர் நடந்தது. இந்த நெடுஞ்சேரலாதன் செங்குட்டுவன் தந்தை என்பதை அவனது வரலாற்றில் காணலாம். போர், 'போர்ப்புறம்' என்னுமிடத்தில் நடந்தது.[18]

போர் அவலக் காட்சியில் முடிந்தது. யாருக்கும் வெற்றி யில்லை; தோல்வியும் இல்லை. நாற்படையும் களத்தில் அழிந்தன.

---

16 இவ்வாறு கொள்ளின் இந்தச் சோழன் சேர அரசனின் கருவூருக்கு மேற்கில் ஆண்டான் என்று முடியும். சோழ அரசன் சார்பில் பழையன் என்பவன் போர் (திருப்பூர்)ப் பகுதியை ஆண்டு கொண்டிருந்ததையும் அந் நாட்டை ஆண்ட சோழ அரசன் ஒருவன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்று பெயர் பெற்றிருந்ததையும் எண்ணும்போது கொடுமுடியில் இருந்துகொண்டு சோழ அரசன் ஒருவன் அரசாண்டான் என்று கூறுவது இயல்பாகவே முடியும். அன்றியும் அந்துவன் என்னும் சேர அரசனின் தலைநகரான கருவூர் மேற்குக் கடற்கரையை அடுத்த கருவூராகவும் இருக்கலாமன்றோ? அந்துவனுக்குச் சமகாலத்துச் சேர அரசனான உதியஞ்சேரல் மேற்குக் கடற்கரைப் பகுதியில் அரசாண்டான் என்று கொள்வதால், அந்துவனது தலைநகரான கருவூரைக் கொங்குநாட்டுக் கருவூர் என்று கருதுகிறோம்.

17 புறம். 368

18 இந்த ஊர் 'திருப்போர்ப்புறம்' என்றும் சுட்டப்படும். செங்கணானுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் இவ்விடத்தில்தான் போர் நடந்தது.

தம் படை அழிந்தமை கண்டு இரண்டு பெரு வேந்தர்களும் தாமே நேரடிப் போரில் ஈடுபட்டனர். போர்ப்பறை முழங்க இரு வருக்கும் கடுமையான போர் நடந்தது. இறுதியில் இருவரும் போர்க்களத்திலேயே மாண்டனர்.[19]

இவர்களுடைய மனைவிமார் கைம்மைக் கோலத்துடன் பச்சைக் கீரையை மட்டும் தின்றுகொண்டு, தண்ணீரிலேயே குளித்துக்கொண்டு வாழ விரும்பாமல் போர்க்களம் வந்து தம் கணவர்மார்பைத் தழுவியவராய் மாய்ந்தனர்.[20] எங்கும் அவலம்.

(ஆ) கோப்பெருஞ்சோழன்

சோழர் வரலாற்றில் கோப்பெருஞ்சோழன், தனித்துக் காணப்படுகிறான். அவனுடைய சமகாலத்திய பாண்டிய அரசன் அறிவுடை நம்பி என்பவனாவான். அவனைப் பாடிய புலவர் களும் நம்பியைத் தவிர வேறு யாரையும் பாடவில்லை. உறையூரில் இருந்து இவன் ஆட்சி செய்ததனால், கரிகால் பெரு வளத்தானுக்குக் காலத்தால் முற்பட்டவனவாக இருத்தல் கூடும். இவனைப் பாடிய பிசிராந்தையார் எனும் புலவரின் பெயர், மிகப் பழங்காலத்தில் வழங்கிய பெயருமாகும். எனவே, கோப்பெருஞ்சோழனைப் பழைய அரசனாகக் கொள்ளலாம்.

கோப்பெருஞ்சோழன், சோழ நாட்டை ஆண்டு வந்தான். அவனது தலைநகரம் உறையூர் ஆகும். அவ்வூரில் மாட மாளிகையோடு கூடிய அவனது அரண்மனை இருந்தது.

பதிற்றுப்பத்தைத் தொகுத்த ஆசிரியர் இவனைப் 'பொத்தி ஆண்ட பெருஞ்சோழன்'[1] என்று குறிப்பிடுகிறார். இதில் 'பொத்தி' என்னும் சொல் பொத்தியார் என்னும் புலவரை உணர்த்துவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். பொத்தியாருக்கும் இவனுக்கும் இடையே இருந்தது, நட்புறவே அன்றி ஆண்டான் அடிமை என்ற நிலையில்லை. எனவே, பொத்தியாரை இவன் ஆண்டான் என்பது பொருந்தாது. இவன் பொத்தியாரை மட் டும்தான் ஆண்டானா? ஏனையோரை ஆளவில்லையா? என்று வினவுவதற்கும் இடம் உண்டாகிறது. ஆதலின், இவன் பொத்தி

---

19 புறம். 62 : 7-9
20 டி 62 : 14-15
1 பதிற். பதி. 9 : 6

என்னும் இடத்தை ஆண்டான் என்று கொள்வதே பொருத்த மாய் அமைகிறது. இந்த இடம் எது? அந்த இடத்தை இவன் ஆண்டான் எனல் இயல்பாக அமைகிறதா என்பனவற்றை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

காவிரியின் வடகரையில் பொத்தனூர் என்னும் ஊர் ஒன்று உள்ளது. அது மிகப் பழமையான ஊர். அந்த ஊரின் பழம் பெயர் அல்லது மருவிய பெயர் 'பொத்தி' என்பதாக இருக்கலாம். கோப்பெருஞ்சோழன் தொடக்ககாலத்தில் இவ்வூரில் தன் ஆட்சி யைத் தொடங்கியிருக்கலாம். அப்போது உறையூரை ஆண்ட சோழ அரசனைச் சார்ந்தவனாக இவன் இவ்விடத்தில் ஆட் சியைத் தொடங்கியிருக்கலாம். பின் செல்வாக்கினைப் பெற்று உறையூர்க் கோட்டையைத் தாய உரிமை முறையிலோ வேறு முறையிலோ கைப்பற்றியிருக்கலாம். இந்தப் பொத்தனூருக்குக் கிழக்கிலுள்ள இடையாற்றுப் பகுதியில் கரிகாலனின் ஆட்சி நடைபெற்றிருக்கக் கூடும் என்பதை அவனது வரலாற்றில் காண்போம். திருப்பூர்ப் பகுதியில் பெருநற்கிள்ளி ஒருவனின் (போர்வைக்கோ) ஆட்சி தொடங்கப் பெற்றிருக்கலாம் என்று அவனது வரலாற்றில் கண்டோம். எனவே, இந்தப் பொத்தனூரில் கோப்பெருஞ்சோழனின் ஆட்சி தொடங்கியிருக்க முடியும்.

சேரனோடு போர்

சேர அரசன் இளஞ்சேரல் இரும்பொறைக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் போர் மூண்டது. போரில் சோழன் தோற்றான்.[2]

சங்க காலத்தில் காவிரிக்குத் தெற்கேயிருந்த கொங்குநாட்டுப் பகுதியைப் (தென்கொங்கு) பொறையர் குடியைச் சேர்ந்த சேர அரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்களது தலைநகர் கருவூர்,[3] வஞ்சிமுற்றம்[4] ஆகியவை. இவர்கள் காவிரிக்கு வடக்கில் இருந்த வடகொங்கு நாட்டிலும் தங்களது செல்வாக்கைப் பரப்ப முயன்றனர். இந்த முயற்சியின் விளைவுதான், சோழர் களோடும் அதியமானோடும் நடத்திய போர்கள். இவற்றை ஆங்காங்கே விரிவாகக் காணலாம். இவற்றையெல்லாம் நாம் இங்கு நினைவுகூர்வதன் நோக்கம் இந்தப் பொத்தனூர் எங்கு அமைந்திருந்தது எனத் தெளிவதற்கும், போரின் காரணங்களை உய்த்துணர்வதற்குமே ஆகும்.

---

2 பதிற். பதி. 9 : 3-6
3 திருச்சி மாவட்டம்
4 கோவை மாவட்டம்

மகன்மார்மீது போர் தொடுத்தல்

கோப்பெருஞ்சோழனுக்கு ஆண்மக்கள் இருவர் இருந்தனர். அவர்கள்மீது இவனுக்குக் கசப்பு உணர்வு தோன்றியது. கசப்பு உணர்வுக்குக் காரணம் புலப்படவில்லை. சிற்றினச் சேர்க்கையால் அறிவு பேதுற்று, தந்தைபால் பகைமைகொண்டு போருக்கு எழுந்தனர் போலும்.[5] இந்தக் கசப்பு உணர்வு படையெடுப்பில் முடிந்தது. இரண்டு மகன்மாரும் இருவேறு இடங்களில் இருந்து கொண்டு அரசாண்டு அரசியலில் பயிற்சி பெறும்படி அமர்த்தப் பட்டிருக்கவேண்டும் என்பதை இவர்கள்மீது கோப்பெருஞ் சோழன் போர் தொடுத்தான் என்பதிலிருந்து அறியலாம்.

தந்தை தன் மக்கள் இருவரையும் எதிர்த்துப் போர் தொடுப்பதை, நாட்டின் நல்லாட்சியை விரும்பிய சான்றோர்கள் விரும்பவில்லை. புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர் இத்தகைய எண்ணத்தோடு கோப்பெருஞ்சோழனை நேரில் கண்டு, போரைக் கைவிட்டு விடும்படி அறிவுரை கூறிப் பாடினார்.

போரில் மக்கள் வெற்றி பெற்றுவிட்டால் தந்தை எண்ணம் நிறைவேறாது. தந்தையின் அரசாட்சி மக்களுக்குக் கிடைக்கும். மக்கள் தோற்றுவிட்டால், தந்தை தான் வென்ற அரசாட்சியைத் தனக்குப் பின் யாருக்குத் தரமுடியும்? தோற்ற அந்த மக்களுக்குத்தாமே தரவேண்டும். இது பிற அரசர்கள் பழிக்க ஏதுவாகும் என்னும் கருத்துகளைப் புலவர் எடுத்துரைத்தார். கோப்பெருஞ்சோழன் புலவரது அறிவுரைகளை ஏற்றுப் போரைக் கைவிட்டான். இதற்குப் பின் தன் மகன்மாருக்கு எதிராகத் தான் தொடர்ந்து ஆட்சி புரிவதையும் அவன் விரும்பவில்லை. அவன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான்.

வடக்கிருத்தல்

வடக்குத் திசையை நோக்கி அமர்ந்து உண்ணாநோன்பிருந்து உயிர்துறப்பது வடக்கிருத்தல் ஆகும். கோப்பெருஞ் சோழன் இவ்வாறு வடக்கிருந்தான்.

ஆற்றின் இடையே இருந்த நிலப்பகுதியில், புள்ளி புள்ளியாக இருந்த அருநிழலில் உட்கார்ந்துகொண்டு அவன் வடக்கிருந்தான்.[6]

---

5 புறம். 213 : 4

6 ஷை 219 : 1-2 உறையூருக்கு அருகில் காவிரி ஆறும், உய்யக்கொண்டான் ஆறும் ஒன்றுகூடுகின்றன. இந்த இடத்தில் இக்காலத்தில் ஒரு மண்டபம் உள்ளது. இந்த மண்டபம் உள்ள இடத்தில்தான் அக்காலத்தில் கோப்பெருஞ் சோழன் அருநிழலில் அமர்ந்து உயிர்விட்டான் என்பர்.

இவன் வடக்கிருப்பதற்கு ஓர் இடம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் வந்து அமர்ந்த அரசன் மற்றும் ஓர் இடம் தன் நண்பர் பிசிராந்தையாருக்கு அமைத்து ஒதுக்கவேண்டும் என்று கூறினான்.[7] பிசிராந்தையார் பாண்டிய நாட்டின் தென்கோடியில் வாழ்ந்து வந்தார். எனவே, சான்றோர் சிலர் 'பிசிராந்தையார்' வரமாட்டார் என்று கூறினர். கோப்பெருஞ்சோழன் கட்டாயம் வருவார் என்றே நம்பினான். 'நான் செல்வம் துய்க்கும்போது வரவில்லை என்றாலும், நான் அல்லல் படும்போது வராமல் இருக்க மாட்டார்' என்று அவன் கூறினான்.[8]

அவன் கூறியபடியே பிசிராந்தையார் வந்து சேர்ந்தார்.[9] இதற்குமுன் அவன் பிசிராந்தையாரைப் பார்த்ததில்லை. அவரது அகவை முதலியவற்றால் சான்றோர்கள் இவ்வாறு இருப்பார் என்று கற்பனை செய்து வைத்திருந்தனர். அவர்களது கற்பனைப்படி பிசிராந்தையார் நரைதிரை உடையவராகத் தோன்றவில்லை. மாறாகக் கறுகறுத்த முடி இருந்தது. இதனைச் சுட்டிக் காட்டிக் காரணம் கேட்டார்கள். அமைதி நிறைந்த இனிய வாழ்க்கையே இதற்குக் காரணம் என்பதைப் புலவர் விளக்கினார்.[10]

கோப்பெருஞ்சோழன் வடக்கிருப்பதைக் கண்ட சான்றோர் பலர், தாமும் அவனுடன் உயிர்விடத் துணிந்து வடக்கிருந்தனர்.[11]

இவ்வாறு வடக்கிருக்க அமர்ந்த சான்றோர்களில் ஒருவர் பொத்தியார் என்பவர். அவரை அப்போது வடக்கிருக்க வேண்டா என்று கோப்பெருஞ்சோழன் தடுத்துவிட்டான். பொத்தியாரின் மனைவி முதன் முறையாக நிறைமாதமாய் இருந்தாள். பொத்தியார் சோழனின் நெருங்கிய நண்பர். அதனால், அவன் அவரது குடும்ப நிலையை உணர்ந்திருந்தான். எனவே, அவரை இல்லத்திற்குத் திரும்பிச் சென்று, அவருக்கு மகன் பிறந்தபின் வரலாம் என்று கூறிவிட்டான். பொத்தியார் வேறு வழியின்றி உறையூர் மீண்டார். உறையூரில் இருந்த மன்றம் (அரசவை) கோப்பெருஞ்சோழன் இல்லாமல் வெறுமனே கிடக்கும் காட்சியைக் கண்டு கலங்கி அவர் பாடினார்.[12]

---

7 புறம். 216 : 11-12
8 மே. 215 : 10-12
9 மே. 217 : 7-8
10 மே. 191
11 மே. 219 : 2-4
12 மே. 220 : 5-7

சில நாள்களில் கோப்பெருஞ்சோழன் இறந்தான். அவன் இறந்ததும், அவனை அவ்விடத்தில் புதைத்து அடையாளக் கல் நட்டுவிட்டனர். பொத்தியாருக்கு மகன் பிறந்துவிட்டான். மகனைக் கண்டு மகிழ்ந்துவிட்டு, நண்பனைக் கண்டு நண்பனோடு அமர்ந்து உயிர்துறக்க எண்ணி ஓடோடி வந்தார் பொத்தியார். கோப்பெருஞ்சோழன் இல்லை. அவனது நடுகல்தான் இருந்தது. கல்லைக் கண்டபோது, கல்லாகி நின்ற கோப்பெருஞ் சோழனின் நற்பணிகள் அவர் நினைவிற்கு வந்தன; எண்ணி உருகிப் பாடினார்.[13]

தனக்கு இடம் தரும்படி அந்தக் கல்லைக் கேட்டார்.[14] நடுகல் தனக்கு இடங்கொடுத்துவிட்டதாகக் கருதினார். கல்லாகிய பின்னும் சோழன் தனக்கு இடம் கொடுத்தான் என்று அவர் கருதினார்; வடக்கிருந்தார்;[15] உயிர் துறந்தார்.

தோற்றப் பொலிவு

இவன் பெண்களைப்போல் மென்மையான மேனி நலம் (சாயல்) கொண்டவன். எனினும், வலிமையில் ஆண்களுக்கெல்லாம் தலைவன் என்னும்படி மிகக வலிமை படைத்தவன்.[16]

கொடைத் தன்மை

'பாணர் பசிப்பகை' என்று இவன் கூறப்படுகிறான்.[17] இதனால் பாணர்களுக்கு இவன் கொடை வழங்கியமை பெறப்படும். அன்றியுப் பாடுநர், ஆடுநர், புலவர் முதலானோர்க்கும் இவன் கொடை வழங்கியுள்ளான். நண்பனிடமிருந்து வருவதாக அறிந்தால் பறவைகள் ஆயினும் மக்கள்போல் மதித்து அணிகலன்கள் வழங்குவான் என்று பிசிராந்தையார் இவனைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.[18] இதில் கொடை மாண்பைக் காட்டிலும் நட்பின் மாண்பு சிறந்து நின்றமையையே காண்கின்றோம். இவ்வாறே இவன் கல்லாகிய பின்னும் இடங்கொடுத்ததாகப் பொத்தியார் கூறுவதும் அமைகிறது.

இவன் பாடல்கள்

இவ்வரசனே ஒரு புலவனாகவும் விளங்கினான். இவன் பாடல்களில் இவனது நட்பின் பண்பு வெளிப்படுகிறது, முயற்சிக்குத் தக்க பயன் உறுதியாகக் கிடைக்கும் என்று இவன்

---

13 புறம். 221
14 மே 222 : 5-6
15 மே 223 : 3-4
16 மே 221 : 5
17 மே 212 : 6-7
18 மே 67 : 13-14

கூறுவது இவன் உழைப்பில் நம்பிக்கை உனடயவன் என்பதைக் காட்டுகிறது. பிறர் கூற்றாக அமைந்தாலும் 'பேதைச் சோழன்' என்று இவன் தன்னையே குறிப்பிட்டுக் கொள்வது இவனது அடக்க உணர்வை வெளிப்படுத்துகிறது.

பெயர்களும் அடைமொழிகளும்

'கோப்பெருஞ் சோழன்',[19] 'பெருஞ்சோழன்,'[20]

'பெருங்கோக்கிள்ளி',[21] 'பொலந்தார்த் தேர்வண் கிள்ளி',[22]

'அடுமான் தோன்றல்'[23]

ஆகிய பெயர்களும், பெயர் அடைமொழிகளும், இவனுக்கு வழங் கப்பட்ட பல்வேறு பெயர்களையும் போர்க்கோலத் தோற்றத்தை புலப்படுத்துகின்றன.

(இ) சென்னி மரபினர்

இளஞ்சேட்சென்னி - 1 (நெய்தலங்கானல்)

(பாமுள்ளூர் எறிந்தவன்)

'சென்னி' எனும் சோழர் குடியைச் சேர்ந்த இரு அரசர்கள், கரிகால் பெருவளத்தானுக்கு முன்னர் ஆட்சி செய்துள்ளனர். அவர்கள் பாமுள்ளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி (இளஞ்சேட் சென்னி-1), செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி எனும் உருவப்பஃறேர் (இளஞ்சேட் சென்னி-2). இவர் களுக்கு இடையே இருந்த உறவுமுறை யாதென்பது தெரிய வில்லை. பாட்டனும் பேரனுமாக இவர்கள் இருப்பார்களானால், இவர்களுக்கு இடையே வேறோர் அரசன் ஆட்சி செய்திருக்க வேண்டும். அவன் யார் என்பதை அறிய இயலவில்லை. இவர்கள் இருவரும் சம காலத்தில் அரசாண்டவர் எனக் கொள்ளு வோரும் உண்டு.

கிள்ளி மரபினருக்கும் சென்னி மரபினருக்கும் இடைப்பட்ட நிலையில் கோப்பெருஞ்சோழன் விளங்குகிறான். அவனுடைய இயற்பெயர் தெரியாததனால், சிறப்புப் பெயராலேயே அவனைச் சுட்டியுள்ளோம்.

---

19 புறம். கொளு, 212 : 8
20 பதிற். பதி. 9 : 6
21 புறம். 67 : 11
22 ஷை 220 : 5-6
23 ஷை 213 : 8

செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி உறையூரிலிருந்து அரசாண்டு கொண்டிருந்த காலத்தில், இவன் புகார்நகரப் பகுதியில் இருந்துகொண்டு சோழநாட்டின் ஒரு பகுதியை அரசாண்டான்.

நெய்தலங்கானல் இளங்சேட் சென்னியின் பெயர் 'சேரமான் பாமுள்ளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி' என்று புறநானூற்றுக் கொளுவில் காணப்படுகிறது. இதில் சேரமான் என்னும் அடைமொழி வேறு எந்தப் பெயர்த் தொடரிலும் காணப் படாத முறையில், கூறப்படும் அரசனுக்கு அடைமொழியாய் அமையாமல் அடைமொழியாகிய 'பாமுள்ளூர்' என்பதற்கு அடைமொழியாய் அமைந்துள்ளது. இதனால் இந்தப் பெயர்த் தொடரில் ஏதோ தவறு இருக்கிறது என்று எண்ணவேண்டி யுள்ளது. அல்லது இவனது வரலாற்றில் மேலும் குழப்பம் இருக் கிறது என்று எண்ணவேண்டியுள்ளது.

போர்

பாமுள்ளூர் என்ற ஊரை இவன் தாக்கி அழித்தான் என்பது இவனது பெயருக்கு அடைமொழியாகப் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் 'பாமுள்ளூர் எறிந்த' என்பதைக் கொடுத்ததி லிருந்து தெரிகிறது.

கொடை

இவன் பாணர்களுக்குப் பகைவர் கோட்டைகளைப் பரிசி லாகக் கொடுத்தான். கோட்டை பகைவர்களின் கைவசம் இருக்கும்போதே தான் கைப்பற்றப்போகும் உறுதிநோக்கிப் பரிசி லாகக் கொடுத்தான்.[1]

இளஞ்சேட் சென்னி - 2

(செருப்பாழி எறிந்தவன்)

'ஊன்பொதி பசுங்குடையார்' என்னும் சிறப்புப் பெயரால் அறியப்படும் புலவர் இவனைப்பற்றிப் புறநானூற்றில் பாடி யுள்ளார்.[2] இடையன் சேந்தங்கொற்றனார் என்னும் புலவர் அகநானூற்றில் 'சோழர் பெருமகன் இளம்பெருஞ்சென்னி'[3] என்று சுட்டியுள்ளார்.

---

1 புறம். 203 : 9-11
2 மே 370, 378
3 அகம். 375 : 10-15

செருப்பாழிப்போர்[4]

எழிமல்லைப் பகுதியில் பாழி என்பது ஒரு நகரம். நன்னன் இதனைத் தலைநகராகக் கொண்டு ஒரு காலத்தில் ஆண்டு வந்தான். இந்தப் பாழி நகரத்தில் வேளிர் குடியினரும் வாழ்ந்தனர். இந் நகரில் அடிக்கடி போர் மூண்டது. காரணம் இது வடநாட்டிலிருந்து மேற்குக் கடற்கரை வழியே தமிழ்நாட்டில் கிழக்கு நோக்கி நுழைவார்க்கு வாயிலாய் அமைந்திருந்ததே ஆகும். அடிக்கடி போர் நிகழ்ந்த காரணத்தால் இந்த நகரம் 'செருப்பாழி' (செரு நடக்கும் பாழி) என்று வழங்கப்பட்டது.[5] செருப்பாழிப் பகுதியில் வழிப்பறி மிகுதியாக இருந்தது. சோழ நாட்டு வாணிகர் தரைவழியே மேலைக் கடற்கரைக்குச் சென்ற வழி இது. எனவே, இங்கு நடந்துகொண்டிருந்த வழிப்பறியைத் தடுக்கவேண்டிய பொறுப்புச் சோழனுடையதாயிற்று ('குடிக் கடன்'). இந்தக் கடமையைச் செய்ய முன்வந்தான் இந்த இளஞ்சேட் சென்னி.

பாழி நகரில் செம்பை உருக்கி வார்த்த கோட்டை இருந்தது. இவன் அதனைத் தாக்கி அழித்தான். வம்ப வடுகர் அவனை எதிர்த்தனர். வம்ப வடுகர் என்பவர் வடநாட்டு வடுகர்;[6] மௌரியர் தமிழ்நாட்டில் நுழைய வழியமைத்துக் கொடுத்தவர். தமிழரோடு ஒன்றுபட்டு வாழ்ந்த எருமை நாட்டு வடுகர் போன்றவர் அல்லர். 'எருமை' அரசன் வரலாற்றில் இவர்களைப் பற்றிக் காணலாம். சோழன் வம்ப வடுகரைத் தரையில் சாய்த்து யானைக் காலால் துவட்டினான்;[7] வாட்போர் செய்து வென்றான்.[8] தோற்ற வடுகர்களில் சிலர் திரும்பி ஓடிவிட்டனர்.

தென்பரதவரை அடக்கல்

தென்னாட்டுப் பரதவர் தம் வலிமையைக் காட்டிக் கலகம் செய்து வந்தனர். எனவே, இவன் தென்திசைப் போரில் ஈடுபட்டு இவர்களது கொட்டத்தை அடக்கினான்.

இவன் பகைவர் பிணங்களை நெல்லின்தாள் போல் உதறி, யானைகளை எருதுகள்போல் நடத்திப் போரடித்த காட்சி, புலவர் உள்ளத்தில் நிலைபெற்றது.[9]

---

4 புறம். 378

5 பூழி நாட்டிலிருந்த செருப்பு மலை வேறு பதிற். 21 : 23

6 புறம். 378 : 2

7 அகம். 375 : 13-15

8 புறம். 378 : 2

9 டி 370 : 15-16 (சிதைவு)

கொடை

ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் தடாரி என்னும் இசைக்கருவியை முழக்கிக்கொண்டு போர்க்களத்திற்குச் சென்று அவனது வெற்றியைச் சிறப்பித்துப் பாடினார். அவனது பட்டத்து யானையைப் பரிசிலாகக் கேட்டார். சோழன் கொடுத்திருப்பான் என்று நாம் கருதலாம். இப் போர்க்களிற்றைப் பரிசிலாகப் பெற்றுக்கொள்வதன் மூலம் இனிமேல் கொடிய போர்களில் அவன் ஈடுபடக்கூடாது என்பதைப் புலவர் குறிப்பால் உணர்த்தினார் போலும்.[10]

இளஞ்சேட்சென்னி - 3
(உருவப்பஃறேர்)[11]

நாடு

இவன் நாடு மழைவளம் குன்றினும் நீர்வளம் குறையாது.

போர்

போர்களில் ஈடுபட்டதால் இவனது வாள் மழுங்கிக் குருதிக் கறை படிந்திருந்தது. இவனது தாளிலிருந்த வீரக்கழல் போர்க் களத்தில் நடந்ததால் குருதிக்கறை படிந்திருந்தது. மார்புக் கவசம் பல துளைகளை உடையதாய் இருந்தது.[12] புலிபோன்ற இவனது குதிரைகள் கடிவாளம் பூண்டு சிவந்த வாயை உடையன. எமன்போன்ற இவனது யானைகள் கதவைக் குத்திக் கோடுகளின் நுனி மழுங்கப் பெற்றிருந்தன. இவ்வாறு இவனது படைகள் கூறப்படுவதால் இவன் பல போர்களில் ஈடுபட்டான் எனத் தெரிகிறது.

கொடை

பெருங்குன்றூர்கிழார் என்னும் புலவர், விருந்தினரைக் கண் டால் ஒளிந்துகொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் தன் வறுமை நிலையை விளக்கிக் கூறிப் பரிசில் தரும்படி இவனை வேண் டினார். இவன் பரிசில் நல்கினான் என்று கருதலாம்.[13]

தோற்றம்

வெண்கொற்றக் குடையின்கீழ் இவன் காட்சியளித்தான்;[14] கடலிடையே தோன்றும் செங்கதிர்போலப் படைகளுக்கிடையே தானும் படைக்கலம் தாங்கிப் பொன்தேரின்மேல் பொலிவுடன் தோன்றினான்.[15]

---

10 புறம். 370 : 18-21
11 மே. 266
12 மே. 4 : 1-7
13 மே. 266 : 10-13
14 மே. 266 : 7
15 மே. 4 : 14-19

இந்தக் காட்சி இவனது பெயரில் அமைந்துள்ள 'உருவப் பல்தேர்' என்னும் அடைமொழியை விளக்கும் சான்றாய் விளங்குகிறது.

மகன்

'உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி' என்று புறநானூற்றுத் தொகுப்பாசிரியர் குறிப்பிடும் பெயர், அவன் மகன் காலத்துப் புலவரான முடத்தாமக்கண்ணியாரால் 'உருவப்பஃறேர் இளையோன்' என்று கூறப்படுகிறது.[16]

பொருநராற்றுப் படையில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ள கரிகாற் பெருவளத்தான் இவன் மகன்.

இளஞ்சேட் சென்னி ஒப்புநோக்க முடிவு

இதுவரை புறநானூற்றுத் தொகுப்பாரிசியர் பெயர் சுட்டியுள்ளபடி மூன்று இளஞ்சேட்சென்னியரின் வரலாறுகளைத் தனித் தனியே பார்த்தோம். இனி அவர்கள் மூவர்தாமா? இருவரா? ஒருவரா? என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

செருப்பாழி எறிந்தவனையும், பாமுள்ளூர் எறிந்தவனையும் ஒருவனே என்று கொள்ள முடியவில்லை. அவர்களிடையே மூன்று வேற்றுமைகள் தெளிவாகத் தெரிகின்றன :

(1) ஒருவன் செருப்பாழியை வென்றான். மற்றொருவன் பாமுள்ளூரை வென்றான்.

(2) செருப்பாழியை வென்றவன் உறையூரிலிருந்துகொண்டு அரசாண்டான். பாமுள்ளூரை வென்றவன் நெய்தலங் கானலில் இருந்துகொண்டு (புகாரிலிருந்து கொண்டு) அரசாண்டான்.

(3) செருப்பாழி எறிந்தவன் இளம்பெருஞ்சென்னி என்ற பெயரில் வேறுபாடு உடையவனாகக் காணப்படுகிறான்.[17]

இவற்றை ஒப்பிட்டு எண்ணும்போது, இளம்பெருஞ்சென்னி அண்ணன் என்றும், இளம்சேட்சென்னி தம்பி என்றும் கருதுவது மிகப் பொருத்தமான முடிவாய் அமைவதைக் காணலாம்.

---

16 பொருநர். 130 17 அகம். 375 : 10 - 13

உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி 'பொலந்தேர்மிசைப் பொலிவுடன் தோன்றினான்' என்றும், 'நெய்தலங்கானல் இளஞ் சேட் சென்னி இயல்தேர்ச் சென்னி' என்றும் தேரால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். பொலந்தேர் என்பது பொன்னலாகிய அழகிய தேர் ஆதலின் உருவப் (அழகிய) பல்தேர் என வழங்கப் படுதல் இயல்பாகும். இயல்தேரை உருவப் பல்தேர் என்று கொள்வது அத்துணைச் சிறப்பில்லை. எனவே, இயல்தேர்ச் சென்னி என்று குறிப்பிடப்படும் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி வேறு; உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி வேறு என்று நாம் கொள்கிறோம்.

இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில் இவர்களுடைய மக்களின் வரலாறும் அமைந்துள்ளமையை அடுத்துக் காணலாம்.

கரிகால் பெருவளத்தான்

கரிகாலன் என்னும் பெயருடைய சோழ அரசன் சங்க காலத் தில் ஒருவன்தான் இருந்தான். அவனுக்குப் பல்வேறு வகையில் வழங்கிவந்த பெயர்களும், அவனது பல்வேறு செயல்களும் பல்வேறு பாடல்களில் பல்வேறு புலவர்களால் குறிப்பிடப்பட் டுள்ளன. அவற்றையெல்லாம் திரட்டி ஒப்புநோக்கும்போது கரிகாலன் என்னும் அரசன் ஒருவன்தான் இருந்தான் என்பது பெறப்படுகிறது.

பத்துப்பாட்டு என்னும் தொகுப்பில் உள்ள பட்டினப்பாலை என்னும் பாட்டைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்; பொருநராற்றுப்படை என்னும் பாட்டைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார். இவர்களது இந்தப் பாட்டுகள் கரிகாலன்மீது பாடப் பட்டவை. இவர்களால் பாடப்பட்டுள்ள கரிகாலன் ஒருவனே என்பதை அந்தப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அவனது பெயர்களை நோக்கி அறியலாம்.

'திருமாவளவன்',[1] 'கரிகாலன்',[2] 'சோழன் கரிகாற் பெரு வளத்தான்',[3] 'பெருவளக் கரிகால்'.[4]

கொளுக்குறிப்பு, பத்துப்பாட்டைத் தொகுத்தவரால் தரப் பட்டது. இவர் அந்தப் பாட்டுகள் பாடப்பட்ட காலத்தவர்

1 பட்டினப். 299; பொருநர். வெண்பா; திருமாவளவனை இரண்டாம் கரிகாலன் என்பர்.

2 ஷை வெண்பா; ஷை

3 ஷை கொளு; பொருநர். கொளு.

4 அகம். 125 : 18

அல்லது நம் எல்லோரையும் காட்டிலும் பாட்டுகள் தோன்றிய காலத்தோடு நெருங்கிய தொடர்புடையவர். எனவே, இவர் ஒரே பெயரை இரண்டு பாட்டுகளின் தலைவனுக்கும் குறிப்பிடுவதால் இவற்றில் கூறப்பட்டவன் ஒருவனே என்பது தேற்றம்.

கரிகாலனைப்பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் புறநானூற்றில் நான்கு உள்ளன. அவற்றைப் பாடிய புலவர்கள் மூன்று பேர். இந்த நான்கு பாடல்களுக்கும் தரப்பட்டுள்ள கொளுக் குறிப்பில் கரிகாலனது பெயர் 'சோழன் கரிகாற் பெருவளத்தான்' என்றே உள்ளது. இந்தக் கொளுக் குறிப்பைத் தந்தவர் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர்.

புறநானூற்றைத் தொகுத்தவரும் பத்துப்பாட்டைத் தொகுத்தவரும் ஒருவரா, இருவேறு அறிஞரா என்பது நமக்குத் தெரியாது. எப்படியாயினும் குறிப்புகள் எல்லாம் 'சோழன் கரிகாற் பெருவளத்தான்' என்னும் ஒரே பெயரையே கையாளுகின்றன. கரிகாலனைப்பற்றிக் கருத்துகள் தரும் அறிஞர்கள் எல்லோரையும்விட இந்தக் கொளுக் குறிப்புத் தந்தவர் கரிகாலன் காலத்தோடு நெருங்கிய தொடர்புடையவர். எனவே, புறநானூற்றிலும் பத்துப் பாட்டிடலும் குறிப்பிடப்பட்ட அரசன் ஒருவனே ஆவான். இவை பெயரால் தெரியவரும் உண்மை.

ஒரே பெயர்கொண்ட பலர் இருந்திருக்கலாம் அல்லவா என்றும் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

கரிகாலன் நடத்திய போர்களில் ஒன்று வெண்ணிப்போர். இந்தப் போர் பொருநராற்றுப்படை, புறநானூறு, அகநானூறு ஆகிய மூன்று நூல்களிலும் குறிப்பிடப்படுகிறது. எனவே, ஒரே போரை நடத்திய கரிகாலனை வேறுவேறு அரசர்கள் என்று கொள்ள முடியவில்லை.

ஒரே ஊரில் வெவ்வேறு காலங்களில் போர் நடந்திருக்கலாம் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

வெண்ணிப்போரில் கரிகாலனை எதிர்த்துப் போரிட்டவர் பலர். அவர்களுள் சேர அரசன் ஒருவனும், பாண்டிய அரசன் ஒருவனும் இருந்தனர். அவர்கள் இரண்டுபேருமே அந்தப் போர்க் களத்தில் இறந்து போனார்கள் என்று பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது. பரணரின் அகநானூற்றுப் பாடலும்[5] அதையே குறிப்

5 அகம். 246 : 8-12

பிடுகிறது. கழாத்தலையாரின் புறநானூற்றுப் பாடலும்,[6] மாமூலனாரின் அகநானூற்றுப் பாடலும்,[7] வெண்ணிக்குயத்தியாரின் புறநானூற்றுப் பாடலும்[8] அந்தப் போரில் சேர அரசன் இறந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு வெண்ணிப் போரில் கரிகாலனை எதிர்த்த பகைவர்களும் ஒரே கூட்டத்தாராக உள்ளனர். அப்படியிருக்க வெண்ணியில் வேறுவேறு காலத்தில் நடைபெற்றவை என்று அந்தப் போரைக் கொள்ளமுடியவில்லை. எனவே, சங்ககாலத்து வெண்ணிப் போர் ஒன்றுதான்; நிகழ்ந்த காலமும் ஒன்றுதான்; இந்தப் போரில் ஈடுபட்ட கரிகாலனும் ஒருவன்தான்; இதில் குழப்பத்திற்கு இடமில்லை.

கரிகாலன் என்னும் பெயர்கொண்ட அரசர் சங்க காலத்திலேயே பலர் இருந்தனர் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். அவர்களது கருத்துரையின் சாரம் இவனுடைய வரலாற்றின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

நாடு

கரிகாலன் காவிரி ஆறு பாய்ந்த பகுதியை அரசாண்டான் என்பது அடிப்படைச் சான்றுகளில் வெளிப்படை. அவன் உறந்தையைத் தலைநகராகக் கொண்டிருந்தான் என்றும், பின்னர்த் தன் அரசச் சுற்றத்தாரோடு புகாருக்கு வந்து அமர்ந்து, தன் தலைநகரை மாற்றிக்கொண்டான் என்றும் பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[9] இதனால் இவன் கிட்டத்தட்ட சோழ நாடு முழுவதையும் விரிவான பரப்பில் ஆண்டுவந்தான் என்பது தெளிவாகிறது. இவன் கழார்த் துறைக்குத் தன் குடும்பத்தாருடன் வந்திருந்து அத்தியின் நீர் விளையாட்டைக் கண்டு மகிழ்ந்ததாகவும்,[10] இடையாறு என்னும் பகுதி இவனது நாட்டில் இருந்ததாகவும்[11] குறிப்பிடும் பாடல்களும் உள்ளன. கழார்த் துறையும் இடையாற்றுப் பகுதியும் இப்போதுள்ள தஞ்சை மாவட்டப் பகுதியில் அப்போது இருந்தவை. இப்போது நாமக்கல் வட்டத்தில் உள்ள இடையாறு என்னும் பழமைச் சிறப்பு வாய்ந்த ஊரும் காவிரிக் கரையில் உள்ளது. பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள இடையாறு என்று கொண்டாலும் எல்லா வகையிலும் பொருந்தும்.

---

6 புறம். 65 : 6-11
7 அகம். 55 : 10-12
8 புறம். 66 : 6-8
9 பட்டினப். 285
10 அகம். 376 : 10-11
11 ஷை 141 : 23

கரிகாலனின் முன்னோன்[12]

கரிகாலனின் முன்னோன் ஒருவன் கடலில் தனது கப்பல்களை ஓட்டினான். அவை பாய்மரக் கப்பல்கள். காற்றின் விசையால் அவை முன்னும் பின்னும் வேண்டிய இடங்களுக்கு ஓட்டிச் செல்லப்பட்டன. இவனது காலத்திற்குமுன் கடலில் மரக்கலங்கள் துடுப்புகளின் உதவியைக்கொண்டு தள்ளியே ஓட்டப்பட்டன. இவன்தான் முதன்முதலில் பருவக்காற்றைப் பயன்படுத்தி அதன் விசையால் கப்பல்களைத் தாமே இயங்கும்படி செய்தான். இதனால் இவன் 'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன்' என்று குறிப்பிடப்பட்டான்.

இவ்வாறு இவன் ஓட்டிச் சென்ற கப்பல்கள் வெளிநாட்டு வாணிகத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இவன் வழியே கரிகாலனது கப்பல்களும் புலிபொறித்த பண்டங்களுடன் சென்று வாணிகம் செய்திருக்கலாம் அல்லது இந்த உரவோனின் கப்பல் வெளிநாட்டுச் செலவுகட்குப் பயன்பட்டிருக்கலாம்.

சேர அரசன் வானவன்[13] கப்பல் ஓட்டி வாணிகம் செய்ததையும், நெடுஞ்சேரலாதனின் கடற்போர் வெற்றிக்குக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்பதையும் நாம் இங்கு நினைவுகூரலாம். சேரர் கப்பல்கள் அரபிக் கடலிலும், சோழர் கப்பல்கள் வங்காளக் குடாக்கடலிலும் மிதந்து மேலைநாடுகளோடும் கீழைநாடுகளோடும் வாணிகம் செய்துவந்தன. கரிகாலன் காற்று விசையைத் தன் கப்பலுக்குப் பயன்படுத்திய உரவோனின் வழிவந்தவன் என்று குறிப்பிடப்படுகிறான்.

தந்தை[14]

கரிகாலன் 'உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்' என்று குறிப்பிடப்படுகிறான். இதில் சிறுவன் என்பது மகன் என்னும் பொருளைத் தருகிறது. 'இளையோன்' என்பது இளஞ்சேட் சென்னி என்பவனைக் குறிக்கிறது என்பதை அப் பெயர்களுக்கு முதலிலுள்ள 'உருவப் பஃறேர்' என்னும் அடைமொழியால் உணரலாம். இதனால், கரிகாலனது தந்தை, உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்பது பெறப்படும்.

அரியணையேறல்

கரிகாலன் தாய் வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்தபோதே அவனது தந்தை இறந்துவிட்டான். எனவே, அரசாட்சிப்

12 புறம். 66 : 1-2
13 ஷை 126 : 14
14 பொருந. 130

பொறுப்பு அப்போதே அவனுக்குக் கிடைத்துவிட்டது. இது 'தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி' என்று பொருநராற்றுப் படை[15] குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது.

இந்த நிலையில் இவன் சார்பாக இருந்து ஒருவன் ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்டிருந்தான் என்று நம்பலாம். இவ்வாறு அரசு பொறுப்பினை மேற்கொண்டிருந்தவன் அவனது தாய்மாமன் என்று கூறப்படுகிறது. இதனையும் இயல்பென்று நாம் ஏற்கலாம். தாய்மாமன் பெயர் இரும்பிடர்த்தலையார் என்று கூறப்படுகிறது. இரும்பிடர்த்தலையார் என்னும் பெயர் கொண்ட ஒருவர் சங்ககாலத்தில் பாண்டிய அரசன் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதியைக் கண்டு வாழ்த்திப் பாடி அறிவுரை கூறியுள்ளதைப் புறநானூற்றில் நாம் காண்கிறோம். இந்தப் புலவரின் இயற்பெயர் தெரியவில்லை. இவர் தம் பாடலில் 'இரும்பிடர்த் தலையிருந்து' என்னும் தொடரைக் கையாண்டுள்ளார். அதுகொண்டு இவரை இரும்பிடர்த்தலையார் என்று வழங்கிவருகின்றனர். இதுபோன்ற பெயர் அமைப்புகள் பல சங்ககாலப் புலவர்களுக்கு அமைந்துள்ளன. இந்த அமைப்பு நமக்கு ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்றது. நூலைத் தொகுத்தவருக்குப் பாடலைப் பாடிய ஆசிரியரின் பெயர் தெளிவாகத் தெரியாவிட்டால், அவர் ஏதோ தம் மனம்போல் குறிக்காமல் உண்மைக்கு முதலிடம் தந்து அவரது பாடலிலிருக்கும் சிறப்பான தொடரால் அவரது பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதே அந்த உண்மை. இத்தகைய இரும்பிடர்த்தலையாரைத் தாய்மாமன் என்று ஒருவர் குறிப்பிடுவாரேயானால், அந்தக் குறிப்பு அவரது பெயர்க் குறியீட்டில் அமைந்த கற்பனை போலவே அமைந்தது என்று கொள்வதைவிட வேறு வழியில்லை.[16]

கரிகாலன் எவ்வாறு அரியணையேறினான் என்பதைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.[17] உவமையாலும் பொருள் விளக்கத்தாலும் அது தெளிவாகக் குறிப்பிடுகிறது.

குட்டி வரிப்புலி கூட்டில் வளர்வதுபோல் இவன் பிறருடைய காப்பில் வளர்ந்தான். பருவம் வந்ததும் இவன் வெளிப்பட்டான்.

---

15 பெருநர். 132

16 இக் கருத்தினை ஏற்றுக்கொள்ள இயலாது. பழமொழி நானூற்றில் (239 : 1-2)

'சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்று'

என வருகிறது. இந்தப் பிடர்த்தலையாரை நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் கரிகாலனுடைய தாய்மாமன் எனச் சுட்டுகிறார், (ப-ர்.)

17 பட்டினப். 220 - 227

பொய்க்குழியில் அகப்பட்டுக் கிடந்த ஆண்யானை அந்தக் குழியின் கரைகளைக் குத்திச் சரித்துவிட்டுத் தானே மேடேறிச் சென்று தன் பெண்யானையோடு சேர்ந்து கொள்வதுபோல, இவன் இவனது காப்புக் கூட்டைச் சிதைத்துவிட்டு அதாவது, தனக்குத்தானே விடுதலையை உண்டாக்கிக்கொண்டு வாளை உருவிக் கையிலேந்திய கோலத்துடன் வந்து தனது மரபுரிமையாகிய அரசபதவியைத் தானே எடுத்துக்கொண்டான். பட்டினப்பாலையில் கூறப்பட்டிருக்கும் இந்தச் சினக்கோலம் 'முருகற் சீற்றத்து உருகெழு குருசில்' என்று பொருநராற்றுப்படையிலும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இவனுக்குக் கிடைத்த அரச பதவி அமைதியானது அன்று. அது அச்சந்தரும் அரச பதவி[18] யாகும். இவனும் அமைதியாக அரியணையேறவில்லை. மேனியெல்லாம் கனல்பொறி பிறந்து சிவந்து தோன்றும் பேரச்சம் தரும் உருவோடு[19] இவன் அரியணையேறிய வரலாறு இவ்வாறு தெளிவாக இருக்கும்போதே, பட்டத்து யானை மாலை சூட்டி அழைத்துவந்த கற்பனைக் கதைகள் வழங்கிவருவது வியப்பிற் குரியதாகும்.

கரிகாலும் கால்நெருப்பும்

கரிகாலன் உறையூர்க் கோட்டையில் இரவில் உறங்கிக் கொண்டிருந்தபோது அவனது பகைவர்கள் கோட்டைக்குத் தீ மூட்டிவிட்டார்களாம். கரிகாலன் தீயிலிருந்து தப்பி வெளிவந்த போது அவனது கால் கருகிப் போயிற்றாம். அதுமுதல் 'கரிகாலன்' என்னும் பெயருடன் அவன் அழைக்கப்பட்டானாம்.[20]

இந்தத் தீ நிகழ்ச்சியில் தப்பிப் பிழைத்த கரிகாலன் தன் தாய்மாமன் வீட்டில் வளர்ந்துகொண்டிருந்தானாம். மக்கள் அரசனைக் காணாது வருந்தித் தேடிமுயன்றும் கிடைக்காமையால் பட்டத்து யானையின் துணைகொண்டு தக்கான் ஒருவனைத் தேர்ந்தெடுக்க முயன்றார்களாம். அதன்படி அவர்கள் பட்டத்து யானையின் கையில் மாலையைக் கொடுத்து அனுப்பி அந்த மாலையை அது யாருக்குச் சூட்டிவிடுகிறதோ அவனையே அரியணையேற்றுவதென்று முடிவு செய்து யானையை அனுப்பினார்களாம். யானை தேடிச்சென்று கால் நெருப்புப் பட்டு அடையாளம் மாறியிருந்த கரிகாலனுக்கு மாலை சூட்டியதாம்.[21] மாலை சூட்டப்பட்டவன் உண்மையான அரசன் கரிகாலனே என்பதை உணர்ந்து மக்கள் பெரிதும் மகிழ்ந்து ஏற்றார்களாம்.

---

18 'உருகெழு தாயம்' (பட்டினப். 227)
19 'உருகெழு குருசில்' (பொருநர். 131)
20 பட்டினப். வெண்பா
21 பழமொழி. 230

வெண்ணிப் போர்[22]

வெண்ணி[23] என்னும் ஊரின் வாயிலை அடுத்திருந்த வெளியில் கரிகாலன் அவனது பகைவர்களை எதிர்த்துத் தாக்கினான். ஊர் வாயிலில் போர் நடைபெற்றதால் வெண்ணி வாயிலில் நடைபெற்றது என்றும், அந்த வாயில்வெளி போர்க்களமாகப் பயன்படுத்தப்பட்டதால் வெண்ணிப் பறந்தலையில்[24] போர் நடைபெற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெண்ணிப் போர் கரிகாலன் இளைஞனாய் இருந்தபோதே நடத்திய போர் என்பதைப் பொருநராற்றுப்படை தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

வெண்ணியில் கரிகாலனை எதிர்த்துத் தாக்கியவர்களுள் பதினொரு குலத்தலைவர்களும் இருபெரு வேந்தர்களும் அடங்கியிருந்தனர். இந்தப் பதினொரு வேளிர் யார்? அவர்களுடன் சேர்ந்து போரிட்ட பாண்டியன் யார்? என்பன தெளிவாகத் தெரியவில்லை. எதிர்த்துத் தாக்கிய சேர அரசன் பெயர் மட்டும் பெருஞ்சேரலாதன் என்பது தெரிகிறது.

போரின் முடிவு கரிகாலனுக்கு வெற்றியாய் முடிந்தது. அவனை எதிர்த்த சேரனும் பாண்டியனும் போரில் மாண்டனர். வேளிருள் பலரும் மாண்டிருக்கலாம்.

சேர அரசன் பெருஞ்சேரலாதன் முதுகில் புண்பட்டதையும், அதனால் அவன் போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்ததையும், அதன் விளைவுகளையும் அவனது வரலாற்றில் கண்டோம்.

பட்டினப்பாலை, கரிகாலனால் வெல்லப்பட்டவர்கள் என்று ஏழு பேரைக் குறிப்பிடுகிறது.

அவர்களுள் சிலரோ. அவர்களுள் அனைவருமோ இந்தப் போரில் ஈடுபட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. இவர்கள் இவன் நடத்திய வாகைப் பறந்தலைப் போரில் எதிர்த்துப் போராடியிருக்கவும்கூடும்; அல்லாமல் தனித்துப் போராடியிருக்கவும்கூடும்.

---

22 பொருநர். 143-148; புறம். 65, 66 : 6; அகம். 55 : 10, 246 : 9-10

23 கோயில்வெண்ணி-தஞ்சை மாவட்டம், வெண்ணில் என்பது வெண்ணி என மருவியுள்ளது.

24 போர் நடைபெற்ற முரம்பு நிலம்

வாகைப் பறந்தலைப் போர்[25]

வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் ஒன்பது மன்னர் கரிகாலனை எதிர்த்துப் போரிட்டனர். அந்தப் போர் கரிகாலன் தன் குதிரைப் படையைக்கொண்டு பகைவர் நாட்டைத் தாக்கிய போர். அந்தப் போரில் கரிகாலன் தானே போர்க்களத்தில் இறங்கிப் போரிட்டான். ஒன்பது மன்னர்களில் யாராலும் அவனை எதிர்த்து நிற்கமுடிவில்லை. அவர்கள் அனைவரும் தம் வெண்கொற்றக் குடைகளைப் போர்க்களத்திலேயே போட்டு விட்டு ஓடிவிட்டனர். கரிகாலன் வெற்றிபெற்றான்.

பிற போர்கள்

பட்டினப்பாலை, கரிகாலனது வெற்றிப் புகழைப் பாடுங்கால் அவனுக்கு அடங்கியவர் என்று கொள்ளும் வகையில் இரண்டு அரசர்களையும் ஐந்து இனக்குழுத் தலைவர்களையும் குறிப்பிடு கிறது.

ஒளிநாட்டு மக்கள் ஒளியர் எனப்பட்டனர். அவர்களுள் பலர் இவனது பேராற்றலைக் கேள்விப்பட்டோ, இவனோடு போராடித் தோற்றோ கரிகாலனைப் பணிந்து ஒடுங்கிக் கிடந்தனர்.[26]

அருவா நாட்டு மக்கள் அருவாளர். இவர்கள் தொன்மை யான குடியைச் சேர்ந்தவர்கள். அவர்களும் ஒளியர் போன்ற நிலையினராய்க் கரிகாலன் இட்ட கட்டளையை நிறைவேற்றும் ஏவலராய் மாறினர்.[27]

சங்ககாலத்தில் தமிழ்மொழி பேசப்பட்ட எல்லைக்கு வடபால் வாழ்ந்தவர் வடவர். அவர்கள் இவனது தாக்குதலால் வாட்ட மடைந்திருந்தார்கள்.[28]

குடநாட்டு மக்கள் குடவர் எனப்பட்டனர்; கரிகாலனது வெற்றிகளை எண்ணி எண்ணம் சோர்ந்து கிடந்தனர்.[29]

பொதுவர் என்னும் இனக்குழுவினர் சங்ககாலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இன்னார் என்பது தெரியவில்லை. எனினும், பொதியமலைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பொதுவர் எனப் பட்டனர் எனலாம். அவர்களின் கால்வழியை அழியும்படி கரிகாலன் அவர்களை வென்றான்.[30]

---

25 அகம். 125 : 19
26 பட்டினப். 274
27 ஷை 275
28 ஷை 276
29 ஷை 276
30 ஷை 281

இருங்கோவேள் கரிகாலனை எதிர்த்துப் போராடி மாண்ட அரசன்.[31]

பாண்டியநாட்டு அரசன் தென்னவன் என்று சுட்டப் படுகிறான். கரிகாலன் சீற்றம் கொண்டு தென்னவனின் கோட்டை களைத் தாக்கி அழித்தான்; இதனால் தென்னவன் அரசாளும் ஆற்றலை இழந்தான்.[32]

கரிகாலனது போர்ச் செயலைப்பற்றிச் சில பாடல்கள் பொது வகையில் குறிப்பிடுகின்றன.

கரிகாலன் அரியணையேறியதும், பகைவர் கோட்டைகளைத் தாக்கி அழிக்கும் உழிஞைப் போர் நடத்திப் பகைவர் படைகளை அழித்தான்.[33] இவன் பகைவர்களது வளப்பம்மிக்க நாடுகளைப் பாழாகும்படி அழித்தான்;[34] பகைவர் ஊர்களைத் தீயிட்டுக் கொளுத்தினான்.[35]

இலங்கைப் போர்

'இராசாவளி' என்பது இலங்கையின் வரலாற்றைக் கூறும் பிற்கால நூலாகும். இந்த நூலில் கரிகாலனது செயலைப்பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. கரிகாலன் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்று 12 ஆயிரம் இலங்கை மக்களைச் சிறை செய்து தன் நாட்டுக்குக் கொண்டுவந்தானாம். அவர்களைக் கொண்டு தன்னாட்டில் பாயும் காவிரி ஆற்றுக்கு இரண்டு பக்கமும் கரைகள் அமைத்தானாம். இவ்வாறு கூறும் அந்த வரலாறு மேலும் சிலவற்றைக் கூறுகிறது. முதலாம் கயவாகு என்னும் இலங்கை அரசன் சோழநாட்டுக்கு வந்து தன்னாட்டுக் கைதி களை மீட்டுக்கொண்டு சென்றதோடு தமிழ்நாட்டிலிருந்து மேலும் 12 ஆயிரம் பேர்களைக் கைதுசெய்து தன்னாட்டுக்கு அழைத்துச் சென்றானாம். இவ்வாறு கூறப்படும் வரலாறுகளில் வரும் கைதி களின் எண்ணிக்கை உயர்வுநவிற்சியாக இருக்கக்கூடும். ஆனால், நிகழ்ச்சியில் ஓரளவேனும் உண்மை இருக்கத்தான் செய்யும்.

கரிகாலனின் முன்னோன் கடலில் பருவக்காற்றின் துணை கொண்டு கப்பல் ஓட்டிச் சென்றான் என்பதை முன்பே கண்டோம்.

---

31 பட்டினப். 282
32 ஷெ 277
33 ஷெ 235-239; புறம். 224 : 1
34 பட்டினப். 240-245
35 புறம். 7 : 7-8

அவனது வழிவந்த இவனிடம் கடற்படை இருந்தது என்பது பொய்யாகாது. இந்தக் கடற்படையின் துணைகொண்டு இவன் இலங்கை நாட்டைத் தாக்கி வென்று கைதிகளைப் பிடித்து வந்திருக்கலாம். நெடுஞ்சேரலாதன் கடற்போரில் ஈடுபட்டுத் தன் நாட்டை அடுத்திருந்த தீவுகளை வெற்றிபெற்றது போலக் கரிகாலன் தன் நாட்டை அடுத்திருந்த இலங்கையைத் தாக்கி வெற்றி பெற்ற போர் இது என்று எண்ணவேண்டும். கரிகாலனுக்கும் இலங்கைக்கும் வாணிகத் தொடர்பு இருந்ததைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. எனவே, கரிகாலனது இலங்கை வெற்றியை உண்மை எனக் கொள்ளலாம்.

கொடை[36]

கரிகாலன் பாணர்களுக்குக் கொடை வழங்கினான். உணவு, உடை, யானை, தேர் முதலானவை அவன் கொடை வழங்கிய பொருள்களில் சில. பாணர்க்குப் பொன் தாமரை செய்து அணிவித்ததும், நான்கு குதிரைகள் பூட்டிய தேர் நல்கியதும், அத் தேரை நல்கும்போது ஏழடி பின்சென்று மரியாதை செலுத்தி வழங்கியதும், பொருநர் தலையிலிருந்த ஈரையும் பேனையும் வாங்கிவிட்டதும், பொருநர்கள் தாம் செல்ல விரும்பியதைக் குறிப்பிட்டபோது இப்போதே செல்லவேண்டுமா? இன்னும் சில நாளேனும் என்னுடன் தங்கலாகாதா? என்னும் பொருள்பட 'அகறிரோ' என்று அன்புடன் அருள்கனியக் கூறியதும் இவனது கொடைப் பாங்கில் குறிப்பிடத்தக்கவை.

ஆட்சி

இவனது ஆட்சி செங்கோலாட்சியாக அமைந்திருந்தது. அஃது அறத்தை அடிப்படையாகக் கொண்டது.

இவனது மேலாண்மையில் பல நாடுகள் இருந்தன. அவற்றிற்குத் தனித்தனி அரசுகள் இருந்தன. அவற்றையெல்லாம், தன்னுடைய ஒரு குடைக்கீழ் இவன் ஆண்டான். அரசுகள் எல்லாம் ஒருமைப்பாட்டு உணர்வுடன் இவன் தலைமையின்கீழ் திரண்டிருந்தன. அந்த அரசுகளுக்கிடையே அடிமைநிலை இல்லை; ஆதிபத்தியக் கோட்பாடே பின்பற்றப்பட்டது. பெருந்தன்மையுடைய நட்புறவே இருந்தது. இவ்வாறு இவன் பெருஞ் சிறப்புடன் அரசாண்டான்.[37]

---

36 பொருநர். 74-78, 158-171; புறம். 224

37 ஷை 226-230

சிறப்புச் செயல்கள்

நாட்டு மச்களின் நலனுக்காக இவன் செய்த ஆக்கப்பணிகள் பல.

மக்கள் நலனுக்காக உணவளித்து உதவும் அறம் செய்யும் அட்டில் சாலை (அன்னசத்திரம்) ஒன்றை இவன் புகார் நகரத்தில் அமைத்திருந்தான்.[38]

இவனுடைய காலத்திற்கு முன்னர், நாட்டிலிருந்த குடி மக்களில் சிலர் பிழைப்புக்காக வெளியிடங்களுக்குச் செல்லும் நிலைமை இருந்தது. இவன் இந்த நிலைமையை மாற்றி, இந்நாட்டிலேயே விருப்பமுடன் தங்குவதற்குரிய வசதிகளைச் செய்தான்.[39] பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்ட காட்டைத் திருத்துதல், குளம் வெட்டுதல் போன்ற நாட்டை வளப்படுத்தும் செயல்கள், புதிய குடியேற்றங்களை அமைத்துத் தன் ஆட்சிப் பரப்பின் எல்லையை விரிவுபடுத்தியதைக் காட்டும்.

வேளாண்மைக்கு உதவி[40]

இவன் காடுகளை வெட்டி விளைநிலமாக மாற்றினான்; குளங்கள் வெட்டி வெள்ளநீரைத் தேக்கிவைத்துப் பாய்ச்சி, நிலத்தை நீர்வளமுள்ளவையாக மாற்றினான்.

காவிரிக்குக் கரை அமைத்தல்

இலங்கையில் கரிகாலன் வெற்றி பெற்றபோது 12 ஆயிரம் பேர் இலங்கை மக்களைச் சிறைப்பிடித்து வந்து, அவர்களைக் கொண்டு தனது நாட்டிலுள்ள காவிரி ஆற்றுக்கு இரண்டு பக்கமும் கரை அமைத்துக்கொண்டான் என்று இலங்கையின் கால்வழிச் செய்திக்கோவை ஒன்று குறிப்பிடுகிறது. இந்த நிகழ்ச்சியைத் தெலுங்கச் சோழர் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. தெலுங்கச் சோழர்கள் தங்களைக் காவிரிக்குக் கரை அமைத்த கரிகாற் சோழன் வழிவந்தவர் என்று கூறிக் கொள்கின்றனர். இவர்கள் கூற்று கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்தான் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

கல்லணை இந்தக் கரிகாலனால் கட்டப்பட்டது என்று ஒரு செவிவழிச் செய்தி உண்டு; தெளிவான அகச்சான்று கிடைக்க

---

38 பட்டினப். 42-46

39 அகம். 141 : 22-24

40 பட்டினப். 283-284

வில்லை. இராசராசனுடைய அண்ணனான ஆதித்த கரிகாலனே கல்லணையைக் கட்டியுள்ளான். அந்த அணையின் அடித்தளத் தொடக்கப் பணிகளேனும் கரிகாலன் காலத்தில் அமைக்கப்பட்டிருக்கக்கூடும் என்று எண்ண இடமுண்டு.

களவேள்வி[41]

தன்னுடைய வெற்றிகளைக் கொண்டாடும் வகையில் இவன் களவேள்விகள் செய்தான். இதனைக் கருங்குழலாதனார் எனும் புலவர் பாராட்டியுள்ளார். இதனால் வைதிக சமயத்தவர் பெற்றிருந்த செல்வாக்குப் புலனாகிறது.

வாணிகம்[42]

புகார் நகரத்தில், கரிகாலன் காலத்தில் கடல் வாணிகமும் தரை வாணிகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இந்த வாணிகம் அரசின் மேற்பார்வையில் நடந்தது என்பதை வாணிகப் பொருள் மூட்டைகளின்மீது, புலிச்சின்னம் பொறிக்கப்பட்டது என்று கூறப்படுவதிலிருந்து அறியலாம். அன்றியும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கதவுகளையுடைய காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தன. அந்தக் காப்பகத்தில் இடம் இல்லாமல் வெளியில் குவிக்கப்பட்டிருந்த பொருள்களுக்கும் அரசனின் காப்பு அமைக்கப்பட்டிருந்தது.

உயர்ந்த குதிரைகள், அரபிக் கடல் வாணிகத்தின் வழியே வந்திறங்கின. ஈழநாட்டு (இலங்கை) உணவுப் பொருள்களும் காழக நாட்டுச் (பர்மா) செல்வமும் (தேக்கு) வங்காள விரிகுடா வழியே நடத்திய வாணிகத்தால் வந்து இறங்கியவை. மிளகு மூட்டைகள் சேரநாட்டுப் பகுதியிலிருந்து தரைவழியே வந்து இறங்கின.

வடமலையில் கிடைத்த மணி, பொன் ஆகியனவும், குடமலையில் கிடைத்த சந்தனம், அகில் ஆகியனவும், கங்கையாற்றுப் பகுதியில் கிடைத்த வளப்பம் நிறைந்த பொருள்களும் தரைவழியாகவும் கடல்வழியாகவும் இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. தென்கடலில் தோன்றிய முத்துகளும் குணகடலில் தோன்றிய பவளமும் தோன்றிய இடத்திலிருந்து நேரே கொண்டு வரப்பட்டன. வெளிநாடுகளுக்குச் செல்லும்போது ஏற்றுமதி செய்வதற்காகக் காவிரி ஆற்றுப் பகுதியில் கிடைத்த சிறப்புமிக்க பொருள்கள் (கரும்பு, வெல்லம், இஞ்சி, மஞ்சள் முதலானவை)

---

41 புறம். 224 : 9

42 பட்டினப். 119-137, 184-193

அங்குக் கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இவற்றையெல்லாம் நாம் எண்ணும்போது கரிகாலன் வேளாண்மை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்ததுபோலவே, வாணிக மேம்பாட்டிலும் கண்ணும் கருத்துமாய் இருந்தான் என்பதை அறியமுடிகிறது.

புதுப்புனல் விழா[43]

தமிழ்நாட்டில் பல இடங்களில் ஆங்காங்கே சிறப்புமிக்க திருவிழாக்கள் நடந்தன. புகார் நகரத்தில் நடைபெற்ற கடல் நீராடுவிழா, இந்திர விழா என்னும் பெயரைப் பெற்றிருந்தது. உறையூரில் நடைபெற்ற குளநீராடு விழா, 'பங்குனி முயக்கம்' எனப் பெயர் பெற்றிருந்தது. கழார் நகரின் காவிரித் துறையில் நடைபெற்ற விழா, புதுப்புனல் விழா.[44] இந்த விழாவில் அரசனும் கலந்துகொள்ளுவது வழக்கம். ஆட்டன் அத்தி இந்த விளையாட்டில் சிறப்புற்று விளங்கியதை அவனது வரலாற்றில் காணலாம். இந்த ஆற்றுநீர்த் திருவிழாவுக்குக் கரிகாலன், தன் சுற்றத்தாருடன் வந்திருந்தான் என்று கூறப்படுவதால், அரசன் என்ற நிலையில் மட்டுமன்றிச் சோழநாட்டுக் குடிமகன் என்ற முறையிலும் இவன் கலந்துகொண்டான்போலும்.

இந்த விழாவில் கரிகாலன் கலந்துகொண்டு சிறப்பித்த செய்தி சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.[45] அரசிளங்குமரர், அரசனின் உரிமைச் சுற்றம், பரதவ குமரர் (கடல் வாணிகர்), பல்வேறு ஆயத்தார், ஆடும் பெண்கள், பாடும் பெண்கள் முதலானோர் கரிகாலனோடு விழாவில் கலந்துகொண்ட செய்தியை அது கூறுகின்றது.

சிறப்புப் பெயர்கள்

'திருமாவளவன்',[46] 'பெருவளத்தான்'[47] என்னும் பெயர்கள் இவனது செல்வ வளத்தைக் காட்டுவனவாய் உள்ளன. 'இயல்தேர் வளவன்'[48] என்னும் அடைமொழி இவன் தேரில் சென்ற காட்சியை நினைவூட்டுகிறது. 'முருகற் சீற்றத்து உருகெழு குருசில்'[49] என்பது இவனது சினமிகுதியைக் காட்டுகிறது.

---

43 அகம். 376 : 3-10
44 இதனைச் சேர நாட்டில் 'ஆறாட்டு' என்பர்.
45 சிலப். 6 : 155-160
46 பட்டினப். 299; பொருநர். வெண்பா
47 ஷெ கொளூ, பொருநர். கொளூ
48 புறம். 7 : 10
49 பொருநர். 131

தோற்றம்[50]

இவனது கால்கள் களிறுகளை நடத்திப் பழக்கப்பட்டவை; அவற்றில் அவன் வீரக் கழல்களை அணிந்திருந்தான். கைகள் அம்புகள் எய்து வளம்பெற்றவை; அவை வில்லையும் அம்பையும் கொண்டிருந்தன. வேண்டாதபோது வில் அவனது மார்பிலே கிடந்தது. மலர்ந்த அவனுடைய மார்பைவிட்டு நீங்கத் திருமகள் மறுத்துவிட்டாள். அந்த மார்பில் தோல் என்னும் பெயர் கொண்ட எறுழ் வன்மையுடையதாகப் பொத்திக் கட்டப்பட்டிருந்தது. இது இவன் போர்க்கோலம் பூண்டிருந்தபோது தோன்றிய உருவம்.

போர்க்கோலம் பூணாதபோதும் இவன் அரிமாவைப் (சிங்கத்தைப்) போலக் காட்சியளித்தான். அவனது மார்பிலே ஒளிமிக்க அணிகலன்கள் விளங்கின; சிவந்த சந்தனம் பூசப்பட்டிருந்தது. மகளிர் தழுவவும் மைந்தர் ஏறி விளையாடவும் ஏதுவாய்ப் பரந்து விளங்கியது அது. போர்க்கோலம் பூண்டிருந்தபோது, அவன் மார்பிலே விளங்கிய வலிமைமிக்க தோல் என்னும் கவசம் இல்லை. மாறாக, வேறொரு கவசம் கலைநோக்குடன் செய்யப்பட்டு விளங்கியது. பகையரசர்கள் தலையில் சூடிய முடிமணிகள் அந்த மார்புக் கவசத்தில் பதிக்கப்பட்டிருந்தன.

கையறவு[51]

கரிகாலன் உயிரோடு வாழ்ந்தபோது அவனது வெற்றிச் சிறப்புகளை வியந்து பாடிய கருங்குழலாதனார் அவன் இறந்த பின் அவனது மனைவியர் தம் இழைகளைக் களைந்துவிட்டு நின்ற அவலக் காட்சியைக் கண்டு வருந்திப் பாடியுள்ளார். இடையன் தன் ஆடுகளுக்காகப் பூத்துக் காய்த்து விளங்கிய வேங்கை மரத்தின் கிளைகளை மொட்டை மொட்டையாக வெட்டிச் சாய்த்தபின் மொட்டைக் கிளைகளுடன் நிற்கும் அடி மரம்போல் அவர்கள் அணிகலன்களைக் களைந்துவிட்டு பொலிவிழந்து நின்றார்களாம்.

மனைவியர்[52]

இவன் இறந்தபோது இழை களைந்தவர் 'மெல்லியல் மகளிர்' என்று குறிப்பிடப்படுகின்றனர். கணவன் இறந்தால் அதற்காகத் தம் அணிகலன்களைக் களைந்துவிடுதல் தமிழர் பண்பாடு. இந்த வகையில் இழை களைந்தவர் எல்லாரும் கரிகாலனது

50 புறம். 7 : 1-6; பட்டினப். 293-299 52 மே 224 : 17
51 மே 224 : 14-17

மனைவியர் என்பது பெறப்படும். இழை களைந்தவர் 'மகளிர்' என்று பன்மையால் குறிப்பிடப்படுவதால் கரிகாலனுக்குப் பல மனைவியர் இருந்தனர் என்பது புலனாகின்றது.

மகள்

ஆதிமந்தி என்பவள் இந்தக் கரிகாலனின் மகள் என்று கூறப்படுகிறாள். சேர இளவரசன் ஆட்டன் அத்தியை மணந்து இவள் வாழ்ந்தாள். இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சேரர் வரலாற்றில் கண்டோம்.

நலங்கிள்ளி
(சேட்சென்னி)

சேட்சென்னி நலங்கிள்ளி சோழநாட்டில் தங்கி அரசாண்டவன் அவனது தலைநகர் உறந்தை.[1]

தந்தை முதலானோர்

இவனது பெயர் 'சேட்சென்னி நலங்கிள்ளி' என்று பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] இஃது இவன் சேட்சென்னியின் மகன் என்பதைக் காட்டுகிறது.

மாவளத்தான் என்னும் பெயர்கொண்ட ஒருவன் நலங்கிள்ளியின் தம்பி என்று குறிப்பிடப்படுகிறான். இவர்கள் இருவருடைய தந்தையின் பெயர் 'நலங்கிள்ளி சேட்சென்னி' என்று குறிப்பிடப்படுகிறது. எனவே, மாவளத்தானின் அண்ணன் நலங்கிள்ளி, சேட்சென்னிக்கு மூத்த மகனாய்ப் பிறந்து பாட்டன் பெயர் சூட்டப்பட்டான் எனக் கொள்வது பொருந்தும்.

உறையூர் முற்றுகை

உறையூரில் நெடுங்கிள்ளி என்னும் அரசன் தங்கி அரசாண்டு வந்தான். நலங்கிள்ளி சோழநாடு முழுவதையும் தானே ஆள வேண்டுமென்று கருதினான். எனவே, நெடுங்கிள்ளியோடு போர் தொடுக்க வேண்டி உறையூரை முற்றுகையிட்டான்.

நெடுங்கிள்ளி, கோட்டைக் கதவுகளை அடைத்துக்கொண்டான்; நலங்கிள்ளியை எதிர்த்துப் போரிடவில்லை. இந்நிலையில் இளந்தத்தன் என்னும் புலவர் கோட்டைக்கு வெளியிலிருந்து

---

1 புறம். 68 : 18 2 மே 225 : 9

உள்ளே சென்றார். அந்தப் புலவரை நெடுங்கிள்ளி தன் பகை வனான நலங்கிள்ளியின் ஒற்றன் என எண்ணிக் கொல்லப் புகுந் தான். உண்மையில் இளந்தத்தன் நலங்கிள்ளியின் ஒற்றன் அல்லன் நலங்கிள்ளி வேறு எந்த ஒற்றனையும் அனுப்பவில்லை. புலவர் கோவூர்கிழார் இந்த உண்மையை நெடுங்கிள்ளியிடம் எடுத்துரைத்துப் புலவரைக் காப்பாற்றினார்.[8]

புலவர் கோவூர்கிழார் இந்த முற்றுகையின்போது அடைத் திருந்தவனையும் அடைக்கப்பட்டிருந்தவனையும் நேரில் கண்டு அறிவுரைகள் பல கூறினார். போரிடப்போகும் இருவரும் சோழர் குடியினராகையால் யாருக்குத் தோல்வி வந்தாலும் சோழர் குடிக்கே தோல்வி கிடைக்கும் என்றும், இந்தத் தோல்வி ஏனைய சேர, பாண்டிய அரசர்கள் ஏளனம் செய்ய ஏதுவாய் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். உண்மை உணர்ந்த சோழ அரசர்கள் போரைக் கைவிட்டனர். நெடுங்கிள்ளி இறுதியில் மாண்ட இடம் காரியாறு என்று குறிப்பிடப்படுவதால் மேலே குறிப்பிட்ட உறையூர்ப் போர் கைவிடப்பட்டது என்பதைத் தெளி வாக உணரலாம்.

தம்பி வழியே போர்

நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் என்று அறிந்தோம். அவன்வழி இவன் போர் தொடுத்ததாகவும் தெரிகிறது. இந்தப் போர் ஆஹூரில் நடைபெற்றது. மாவளத்தான் ஆஹூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி உள்ளே அடைந்திருந்தான். அங்குக் கோவூர்கிழார் அறிவுரை கூறினார். நெடுங்கிள்ளிக்கு மட்டும் கூறினார். அவன் மாவளத்தானுக்கு ஆஹூர்க்கோட்டையை விட்டுக்கொடுத்துவிட்டு வெளியேறினான்.

ஆஹூர் முற்றுகை, உறையூர் ஆகியவற்றுள் எது முன்னர் நடைபெற்றது என்பதை அறியத்தக்க தெளிவான சான்று இல்லை. நெடுங்கிள்ளி காரியாற்றில் துஞ்சும்வரை உயிருடன் இருந்தான் என்று தெளிவாகத் தெரிகிறது. அக்காலம்வரை அவன் அரசனாய் விளங்கினான் என்றால் ஆஹூர் முற்றுகை முதலில் நடைபெற்றது என்றும், அதில் நெடுங்கிள்ளி விட்டுக் கொடுத்தான் என்றும், உறையூர் முற்றுகை பின்னர் நடை பெற்றது என்றும் கொள்ளவேண்டும். முற்றுகையின் காலத்தை மாற்றிக்கொள்வோமானால் ஆஹூரை விட்டுக்கொடுத்துவிட்டபின்

---

8 புறம். 47

நெடுங்கிள்ளி தான் காரியாற்றில் இறக்கும்வரை அரச பதவியை இழந்து வாழ்ந்தான் என்று கொள்ளவேண்டும்.

உறையூர்ப் போரைத் தவிர, இவன் ஈடுபட்ட போர் என்று குறிப்பிட்டுக் கூறத்தக்கது ஒன்றும் இல்லை. பொதுவாக இவனது போர் ஆற்றல்கள் புலவர்களால் புகழ்ந்து கூறப்படுகின்றன.

வங்காளக் குடாக்கடலைப் பின்பக்கமாகவும் அரபிக் கடலை முன்பக்கமாகவும் கொண்டு வெற்றி வலம் வரும்போது இவனது குதிரைகள் தம் நாட்டுக்கும் வருமே என்று அஞ்சி வடநாட்டு அரசர்கள் இரவெல்லாம் தூங்காமல் இருப்பார்களாம்.[4]

தன் சுற்றத்தாரின் சோறு சமைக்கும் பானை நிறைவதற்காக இந்த நலங்கிள்ளி, வஞ்சி நகரையே பரிசாகத் தருவான்; விறலியருக்கு விலையாக மாடமதுரை நகரையே தருவான்; வாருங்கள் பாடுவோம் என்று புலவர் ஒருவர் இவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.[5]

தென்னம் பொருப்பன் நன்னாட்டில் (பொதியமலைப் பகுதியில்) ஏழெயில் கதவம்கொண்ட கோட்டை ஒன்று இருந்தது. அதனை வென்று தன் புலிச் சின்னத்தைப் பொறிக்கும் ஆற்றல் உடையவன் இவன்.[6]

இவனது படை மிகப் பெரியதாகும். பிற அரசர்களின் வாயில்களில் யாராவது காலையில் வலம்புரிச் சங்கை ஊதினாலும் அதனை இவன் போர் தொடுக்கும் ஒலி என்று நினைத்துக் கொள்வானே என்றும், இதனால் போர் மூளுமே என்றும் ஒரு புலவர் வருந்திப் பாடியுள்ளார்.[7]

உலகமெல்லாம் நலங்கிள்ளிக்கு உரியது என்று மாற்றான் அவையில் தாம் பாடப்போவதாகவும் அதற்குக் கொடை வழங்க வேண்டும் என்றும் புலவர் ஒருவர் இவனைப் பாடுகிறார்.[8]

இவை எல்லாம், இவன் போர் ஆற்றலில் வல்லவன் என்பதைக் காட்டுகின்றன என்ற அளவில்தான் கொள்ள முடியும்.

---

4 புறம். 31 : 3-17
5 ஷ 32 : 1-6
6 ஷ 33 : 7-9
7 ஷ 225
8 ஷ 68

கொடை

இவனது கொடையில் சிறப்பித்துக் கூறத்தக்கவை சில உண்டு. பாசறையிலும் பாணர்களுக்கு நல்லுணவு அளித்தமை, இவனிடம் பரிசில் பெற்றவர் பிறரிடம் சென்று பின்னும் பரிசில் பெறவேண்டிய நிலை நேராவண்ணம் இவனே மிகுதியாக வழங்கியமை[9] ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவன் பொருநர்களுக்குப் பெருந்தலைவனாய் விளங்கினான். இவனது நாட்டு மக்களும் கொடை உள்ளம்[10] நிரம்பியவர்களாக இருந்தனர்.

பண்பு நலம்

மகளிரை வணங்குவதில் இவன் அவர்களைக் காட்டிலும் மென்மையானவன். ஆடவர்களைத் தன் கட்டுக்குள் அடக்கிக் கொண்டுவருவதில் இவன் மிக வன்மையுடையவன்.[11]

பகைவர் பணிவோடு வந்து தன்னிடம் இருந்தால் தன் அரசு முழுவதையும் அவர்களுக்குக் கொடுப்பதோடு தன் உயிரையும் கொடுப்பதற்கு அணியமாய் இருப்பதாக அவனே குறிப்பிடுகிறான். இதனால் இவனது கொடை உள்ளம் நன்கு வெளிப்படுகிறது.

'பகைவரை வென்று அடக்காவிட்டால் தனது மார்பிலுள்ள மலர்மாலைகள் காதலின்றிக் காசுக்காகக் கட்டித் தழுவும் பெண்களிடம் குழைந்துபோகட்டும்' என்று இவன் வஞ்சினம் கூறியுள்ளான்.[12] இதனால், தன் மனைவியைத் தவிரப் பிற மகளிரைத் தழுவாத நல்லொழுக்க நெறியினன் இவன் என்பது பெறப்படும்.

வாணிகம்

இவன் காலத்தில் வாணிகக் கப்பல்கள் தமது கூம்புகளை உயர்த்திப் பாய்களை விரித்தபடியே புகார் நகரத்திற்குள் நுழைந்தன. கடல் வழியே சென்றபோது இடையிலிருந்த தீவுகளிலும் அவை பொருள்களை இறக்கி வாணிகம் செய்தன.[13]

புகார் நகரமே அன்றி நல்லூர் என்னும் ஊரும் அவனது நாட்டிலிருந்த துறைமுகம் ஆகும். இது பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையே இருந்தது (ஒரு காலத்தில் எவ்வி இதன் அரசன்). இந்த நல்லூரில் பாய்ந்த ஆற்றினூடேயும் பெரிய கப்பல்கள் (வங்கம்) நுழைந்துவந்தன. அந்தக் கப்பல்கள் அவ்வூரில்

---

9 புறம். 382:3-11
10 ஷ. 2 : 9-20
11 ஷ. 68 : 6-7
12 ஷ. 73 : 11-14
13 ஷ. 30 : 10-14

நாட்டப்பட்டிருந்த வேள்வித் தூண்களில் கட்டிவைத்து நிறுத்தப் பட்டன.[14]

இவ்வாறு இவனது ஆட்சிக் காலத்தில் இரண்டு துறை முகங்கள் வழியே கடல் வாணிகம் சிறப்புடன் நடைபெற்றது.

வேந்தர் வழிப்படல்

அறத்தின் வழியே பொருளும் இன்பமும் செல்லும். அது போல இவனது குடைநிழலின் வழியே ஏனைய இரு வேந்தர்களது குடைகள் சென்றனவாம்.[15] இந்தச் செய்தி இவனது வெற்றியை உணர்த்துவது அன்று; சேர பாண்டியர்களோடு இவனுக்கு இருந்த நட்புறவை விளக்குவது என்று கொள்ளலாம்.

'அணி இவுளி நலங்கிள்ளி', 'கடுமான் தோன்றல்'[16] என்பன இவனது போர்க்கோலத்தை நினைவூட்டுவன.

புலிச் சின்னம்

சோழர்களின் அடையாளச் சின்னம் புலி. இது 'பேழ்வாய் உழுவை' என்று கூறப்படுவதால் திறந்த வாயமைப்பு உடையதாகப் பொறிக்கப்பட்டிருந்தது என்பது தெரியவருகிறது.

நலங்கிள்ளியின் சமகாலத்திய சோழமன்னர்

மாவளத்தான்

(நலங்கிள்ளியின் தம்பி)

நலங்கிள்ளியின் உடன்பிறந்த இளவல் மாவளத்தான். உடன்பிறவாப் பங்காளி நெடுங்கிள்ளி. இவர்கள் நலங்கிள்ளியின் காலத்திலேயே வாழ்ந்தவராவர். புறநானூற்றுக் கொளு, மாவளத் தானைச் சோழ அரசன் நலங்கிள்ளியின் தம்பி என்று குறிப் பிடுகிறது.[1] இஃது இவனது உறவுமுறையைத் தெளிவாக அறிய உதவி செய்கிறது. நலங்கிள்ளி, இளஞ்சேட் சென்னியின் மகன் என்பதை அவனது வரலாற்றில் கண்டோம். எனவே, இவனும் இளங்சேட் சென்னியின் மகன் என்பதை அவனது வரலாற்றால் அறிகிறோம். எனவே, இவனும் இளஞ்சேட் சென்னியின் மகன் ஆவான்.

---

14 புறம். 31
15 ஷ. 31 : 1-3
1 புறம். 43

ஆஹூர் முற்றுகை

ஆஹூர்க் கோட்டையில் இருந்துகொண்டு நெடுங்கிள்ளி அதனைச் சூழ்ந்திருந்த நாட்டை ஆண்டுவந்தான். அப்போது அவனது செல்வாக்கை ஒடுக்கச் சோழர் குடியைச் சேர்ந்த மற்றொரு கிளையினர் கருதினர். நலங்கிள்ளியும் அவன் தம்பி மாவளத்தானும் இந்த முயற்சியில் ஈடுபட்டனர்.

நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் ஆஹூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். கோட்டைக்குள்ளே இருந்த நெடுங்கிள்ளி மாவளத்தானை எதிர்த்துப் போரிடவில்லை. கோட்டைக் கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயே இருந்தான். கோட்டைக் கதவுகளைத் தகர்க்க மாவளத்தானால் முடியாது என்று அவன் கருதியிருக்கலாம். அல்லது மாவளத்தானை எதிர்த்துப் போரிட்டால், தான் வெற்றிபெற முடியாது என்று நெடுங்கிள்ளி கருதியிருக்கலாம். முற்றுகையின் காலம் நீடித்தது. கோட்டைக் குள்ளேயே இருந்த மக்களும் விலங்கினங்களும் வெளியே வர முடியவில்லை. வெளியில் இருந்தவர் கோட்டைக்குள் வாழ்ந்தவர்களுக்கு வழக்கம்போல் உதவிசெய்ய முடியவில்லை. எனவே, கோட்டைக்குள் இருந்த மகளிர், தலையில் பூ இல்லாமல் வெறுமனே தலையை வாரி முடித்துக்கொண்டனர். தாய்மார்களுக்கு நல்ல உணவு இல்லாமையால் குழந்தைகள் தாய்ப்பால் இல்லாமல் அழுதனர். யானைகள் உணவுக் கவளம் இல்லாமல் கட்டுத் தறிகளைத் தாக்கின; குளங்களில் படிய வாய்ப்பின்றி நிலங்களில் புரண்டன.[2] இந்த நிலைக்கெல்லாம் காரணம் நெடுங்கிள்ளி எதிர்த்துப் போரிடாமல் அடைத்துக்கொண்டு கிடக்கும் நிலைதான் என்று கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் எடுத்துரைத்தார். புலவரின் அறிவுரைகள் நெடுங்கிள்ளியைத் திருத்தின. அவன் கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டுப் போரிடாமலேயே சென்றுவிட்டான். இதனால், ஆஹூர்க் கோட்டை மாவளத்தானுக்குக் கிடைத்தது.

வட்டும் மாண்பும்

இந்த மாவளத்தானும் பார்ப்பனப் புலவர் தாமப்பல் கண்ணனாரும் வட்டு என்னும் சூது விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது புலவர் அரசனை ஏமாற்ற எண்ணி வஞ்சனையாக வட்டுக்காயைத் தம் கையால் மாற்றியமைத்துத் திருட்டுத்தனம் செய்தார். புலவர், அரசனுக்குத் தெரியாமல்

---

2 புறம். 44 : 1-7

இதனைச் செய்ய முயன்றார். என்றாலும் அரசன் பார்த்து விட்டான். அரசனுக்குச் சினம் மேலிட்டது. வட்டுக்காயை எடுத்து அவர்மீது ஓங்கி எறிந்தான். புலவருக்கு நல்ல அடி.

தவறு செய்தது அரசனிடம். அரசன் மேலும் வேறு வகையிலும் அவரைத் தண்டிக்கலாம். தண்டிக்க அவனுக்கு உரிமை உண்டு. அந்தத் தண்டனையிலிருந்தாவது இனித் தப்ப வேண்டுமே என்று புலவர் உணர்ந்தார். தந்திரமாகத் தம் குடிப் பிறப்பைப் பார்ப்பனர் என்று கூறித் தப்பித்துக்கொண்டார்.[3]

குடிச்சிறப்பு

மாவளத்தான் கொடைவள்ளல் குடியில் வந்தவன்; புறாவுக் காகத் தன் உடலையே நிறுத்துத் தந்த சிபியின் வழிவந்தவன்; பிறரால் பிற உயிருக்கு உண்டான துன்பத்தையே கண்டு உள்ளம் தாங்காத சிபியின் வழிவந்தவன்.[4] இதனைப் புலவர் முதலில் நினைவூட்டினார். இதனால், தானே பிறர் ஒருவருக்குத் துன்பம் செய்யக்கூடாது என்னும் கருத்தைக் குறிப்பால் உணர்த்தினார். மேலும், தம்மீது அவனுக்குக் கருணை தோன்ற அவனது முன் னோர்கள் யாரும் பார்ப்பார்க்குத் துன்பம் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார். இவன், பார்ப்பனனாகிய தம்மை அடித்துத் துன்புறுத்தினான் என்று குற்றம் சுமத்தினார். குற்றம் செய்தது புலவர்; குற்றம் சுமத்தப்பட்டது அரசன்மேல், எனினும் அரசன் நாணினான். தான் பிறரைத் துன்புறுத்தியது—அதிலும் பார்ப்பாரைத் துன்புறுத்தியது—தன் தவறு என்று எண்ணிக் கொண்டு நாணினான்.

தோற்றப் பொலிவு

'கடுமான் கைவண் தோன்றல்'[5] என்று இவன் குறிப்பிடப் படுகிறான். இது இவனது போர்க்கோலத்தைக் காட்டுகிறது.

நெடுங்கிள்ளி

(காரியாற்றுத் துஞ்சியவன்)

நலங்கிள்ளியும் மாவளத்தானும் அண்ணன் தம்பியர். இவர் கள் காலத்தில் இருந்த மற்றொரு சோழ அரசன் நெடுங்கிள்ளி. இவன் நலங்கிள்ளியின் பங்காளியாக இருந்திருக்கவேண்டும் என்பது புறநானூற்றுப் பாடல்களால் புலனாகின்றது.

---

3 புறம். 43 : 13-15
4 ஷ 43 : 4-8
5 ஷ 43 : 11-12

ஆஹூர் முற்றுகை

ஆஹூரில் நெடுங்கிள்ளி தங்கியிருந்தான். நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான், ஆஹூரைத் தாக்கினான். நெடுங்கிள்ளி கோட்டைக் கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயே தங்கிவிட்டான். மாவளத்தான் விட்டபாடில்லை. ஆஹூர்க் கோட்டையே வளைத்து முற்றுகையிட்டான். முற்றுகை நீடித்தது.[1]

கோஹூர்கிழாரின் அறிவுரையினை ஏற்றுக் கோட்டைக் கதவுகளைத் திறந்து விட்டுவிட்டான். இவன் உறையூர்க் கோட்டைக்குள் அடைந்து கிடப்பதை மீண்டும் நாம் காண்பதால், இவன் ஆஹூர்க் கோட்டையை மாவளத்தானிடம் இழந்துவிட்டான் எனத் தோன்றுகிறது.

உறையூர் முற்றுகை

ஆஹூரில் நிகழ்ந்தது போலவே, உறையூரிலும் முற்றுகை நிகழ்ந்தது. நெடுங்கிள்ளி கோட்டைக் கதவுகளை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்தான். இங்கு முற்றுகையிட்டிருந்தவன் நலங்கிள்ளி.

முற்றுகையின்போது புலவர்களுக்கு மட்டும் தடை இல்லை. அவர்கள் உள்ளேயும் வெளியேயும் கட்டுப்பாடு இல்லாமல் சென்று வரலாம். ஆஹூர் முற்றுகையின்போது கோஹூர்கிழார் அவ்வாறு தடையின்றி உள்ளே சென்றதை அறிவோம். உறையூர் முற்றுகையின்போதும் அவர் வெளியிலிருந்து உள்ளேயும், உள்ளேயிருந்து வெளியேயும் வந்து முறையே அடைக்கப் பட்டிருந்தவனுக்கும், அடைத்தவனுக்கும் அறிவுரை கூறுவதை அடுத்துக் காண்போம். இந்த வகையில் இளந்தத்தன் என்னும் புலவர் உறையூருக்குச் சென்றார். உள்ளே இருந்த அரசன் இந்தப் புலவரை நலங்கிள்ளியின் ஒற்றன் என்று கருதிக் கொல்ல நினைத்தான். புலவர்க்கு நேர்ந்த நிலையைக் கோஹூர்கிழார் கண்டார்.

இளந்தத்தன் புலவர் என்றும், புலவர்கள் பரிசில் பெற்று உண்டும் வழங்கியும் வாழும் வாழ்க்கையினர் என்றும், பிறருக்குத் தீங்கு செய்து அறியாத அவரது பண்புகளால் அரசன்போல் செம்மாந்து செல்லும் இயல்பினர் என்றும் எடுத்துரைத்தார்.[2] நெடுங்கிள்ளி, கோஹூர்கிழாரின் அறிவுரையை ஏற்றுக்கொண்டு இளந்தத்தனைக் கொல்லாது விட்டுவிட்டான்.

---

1 புறம். 44 2 புறம். 47

உறையூர் முற்றுகை நீடித்தது. கோவூர்கிழார் அடைத்த வனையும் அடைக்கப்பட்டிருந்தவனையும் கண்டு பாடினார். இருவரும் சோழர் குடியினர். இருவரும் வெற்றி பெறுவது முடியாத செயல். எனவே, யார் தோற்றாலும் தோற்பது சோழர் குடியே. இந்தத் தோல்வி ஏனைய சேர பாண்டியர், சோழரை ஏளனம் செய்ய ஏதுவாகும். இவ்வாறு இரண்டு சோழ அரசர்களிடமும் எடுத்துப் புலவர் கூறினார்.

இந்த அறிவுரையின் விளைவு என்ன என்பது தெரியவில்லை. முற்றுகை கைவிடப்பட்டிருக்கலாம். அல்லது நெடுங்கிள்ளி உறையூரை நலங்கிள்ளிக்கு விட்டுக்கொடுத்திருக்கலாம்.

இறுதிநிலை

இவனது பெயரைக் 'காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி'[3] என்று புறநானூற்றுக் கொளுக் குறிப்பிடுகிறது. இதனால், இவன் காரியாறு என்னுமிடத்தில் இறந்தான் என்பதை அறியலாம். இந்தச் சிறப்பு, போரின் விளைவு ஆயின் மீண்டும் நலங்கிள்ளி யோடு இகலி நடத்திய போரோ என்று எண்ணத்தூண்டும்.

கிள்ளிவளவன் - 1 & 2

கிள்ளி அரசர்களது வரலாற்றைக் காண்கையில் வளத்தான் என்னும் பெயருடன் கிள்ளி அரசர்களின் தம்பியராய் விளங்கி யவர்களின் வரலாற்றையும் கண்டோம். இப்போது 'வளவன்' என்னும் பெயர்கொண்ட அரசர்களின் வரலாற்றைக் காண்போம்.

வளவன் என்னும் பெயர்கொண்ட அரசர்களின் வரலாறெல் லாம் புறநானூற்றுப் பாடல்களிலிருந்தே கிடைக்கின்றன. அகத் திணைநூல்களில் அவர்களைப் பற்றிய குறிப்பு இல்லை. காரணம், இவர்கள் காலத்திற்கு முன்பே பாண்டியன் உக்கிரப் பெருவழுதி வரலாற்றில் சுட்டியதைப்போல், புறநானூறு தொகுக்கப்பட்டு விட்டதே ஆகும்.

வளவன் என்று குறிப்பிடப்படும் அரசர்கள் இருவர். இரு வரும் கிள்ளிவளவன் என்றே குறிப்பிடப்படுகின்றனர். எனவே, இவர்களது தந்தை கிள்ளி என்பது பெறப்படும். இவர்களில் ஒரு கிள்ளிவளவன் குளமுற்றம் என்னுமிடத்தில் இறந்தான். மற்றொரு வன் குராப்பள்ளி என்னுமிடத்தில் இறந்தான். எனவே, இரு

---

3 புறம். 47 கொளு

வேறு அரசர்கள் இவர்கள் என்பது பெறப்படும். இரு வேறு அரசர்கள் ஒரே பெயர்கொண்டு விளங்கியுள்ளனர். எனவே, ஒரு தந்தையின் மக்கள் என்று கொள்ள இயலவில்லை. இதனால், இவர்களில் ஒருவனை நலங்கிள்ளியின் மகன் என்றும், மற்றொருவனை நெடுங்கிள்ளியின் மகன் என்றும் நாம் கருதலாம். செல்வாக்கு மிகுதிநோக்கி நலங்கிள்ளியின் மகன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று உய்த்துணரலாம்.[1]

இனி, இவர்களது வரலாற்றைத் தனித்தனியே நோக்கலாம்.

கிள்ளிவளவன் - 1

(குளமுற்றத்துத் துஞ்சியவன்)

தந்தை

கிள்ளிவளவன் என்னும் பெயர் கிள்ளியின் மகன் வளவன் என்னும் பொருளைத் தருகிறது. செல்வாக்குடன் அரசாண்ட கிள்ளி, நலங்கிள்ளி ஆவான். இவனது மகன் என்று இவனைக் கொள்ளலாம்.

இந்தக் கொள்கை சரியானது என்பதைக் கீழ்க்காணும் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. நலங்கிள்ளியையும் கிள்ளிவளவனையும் இரண்டு புலவர்கள் கண்டு பாடியுள்ளனர். அவர்களில் ஆலத்தூர்கிழார் தம் பாடலில் இவர்களது பெயர்களைத் தந்தை பெயருடன் கூறுவதன் வாயிலாக உறவுமுறையை நமக்குத் தெளிவுபடுத்துகிறார். இவர் நலங்கிள்ளியைச் 'சேட்சென்னி நலங்கிள்ளி'[2] என்று குறிப்பிடுகிறார். வளவனைப் 'பசும்பூண் கிள்ளிவளவன்'[3] என்று குறிப்பிடுகிறார். இந்தக் குறிப்புகள் தெளிவான உறவுமுறை ஒன்றை நமக்குக் காட்டுகின்றன.

சேட்சென்னி
|
நலங்கிள்ளி
(பசும்பூண்கிள்ளி)
|
வளவன்
(குளமுற்றத்தில் துஞ்சியவன்)

இருவரும் ஒருவனே என்பாரும் உண்டு. குளத்தின் பக்கத்தில் இருந்த கூடாரத்தில் (குராப்பள்ளியில்) இறந்தவன் என்று டாக்டர் ஜி. யூ. போப் கூறுவார். காண்க: *Tamilian Antiquary*, vol. 29, p. 250, F.N. 2

[2] புறம். 225 : 9 [3] ஷை 69 : 15-16

இந்த உறவுமுறை பொருத்தமானது என்பதைத் தெளிவு படுத்தும் வகையில் கோவூர்கிழார் பாடல்களும் அமைந்துள்ளன.

மேலே கண்டவாறு ஒரே புலவர் இரண்டு அரசர்களையும் கண்டு பாடியதிலிருந்து அந்த அரசர்கள் சமகாலத்தவர் அல்லது அடுத்தடுத்த காலத்தவர் என்னும் உண்மையை மட்டும்தான் நாம் பெறமுடியும். அண்ணன் தம்பி உறவா, தந்தை மகன் உறவா என்பதை அவர்களது பாடல்களிலிருந்து உணர முடியவில்லை என்றாலும். அவர்களது பெயர்கள் தந்தை மகன் உறவு முறையையும். அண்ணன் தம்பி உறவுமுறையையும் காட்டுவனவாய் உள்ளன.

நாடு

இவன் உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தான்.[4] (உறையூரில் அவனது அரண்மனை இருந்தது.) அது ஒளிரும் நிலைமாடங்களைக் கொண்டது.[5]

மழையில்லாத காலங்களிலும் காவிரி நீரூட்டும் வளம் நிறைந்த நாடு அவன் நாடு.[6] ஒரு பெண்யானை படுக்கக்கூடிய பரப்பளவில் ஏழு ஆண்யானைகளைக் காப்பாற்றும் அளவுக்கு நல்ல விளைவினைத் தரக்கூடிய வளம் நிறைந்த நாடு அது.[7] இவனது நாட்டில் ஆறு தொழில்களைப் புரியும் அந்தணர் அறம் செய்தற் பொருட்டுத் தீ வளர்த்தார்கள்.[8]

இத்தகைய வளமும் நலமும் மிக்க நாட்டை இவன் ஆண்டுவந்தான்.

கருவூர் முற்றுகை

தண்ஆன்பொருநை என்னும் ஆறு பாயும் ஊர் கருவூர். இந்த ஆற்று மணலில் மகளிர் கழங்கு விளையாடுவர். இந்தக் கிள்ளிவளவன் அந்தக் கருவூரை முற்றுகையிட்டான்;[9] ஆற்றங் கரையிலிருந்த காவல்மரங்களை வெட்டி வீழ்த்தினான். காவல் மரங்களை வெட்டும் ஒலி கருவூர் நகருக்குள்ளேயும் எதிரொலித்தது. கருவூர் அரசன் சேரன் கருவூரின் கோட்டைக் கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயே இருந்தான்; வெளியில் வந்து காவல்மரத்தை வெட்டுபவனை எதிர்த்துப் போர் செய்யவில்லை. இது சேரனின் கோழைத்தனம். இத்தகைய கோழையோடு

4 புறம். 39 : 8-9
5 ஷை. 69 : 12
6 ஷை. 35 : 6-11
7 ஷை. 40 : 10-11
8 ஷை. 397 : 20-21
9 ஷை. 36

வீரனான கிள்ளிவளவன் போரிட நினைப்பது நாணத்தக்க செயல். இதனை வளவனுக்கு எடுத்துக் கூறினார் ஆலத்தூர்கிழார் என்னும் புலவர்.[10] (இது போன்ற செயலை இவனின் தந்தை வரலாற்றிலும் காணலாம்.)

புலவர் அறிவுரையைக் கேட்ட வளவன் முற்றுகையைக் கைவிட்டிருக்கலாம்.

செம்பு உருக்கி வார்த்த ஒரு கோட்டைக்குள்ளே வேந்தன் ஒருவன் இருந்தான். அந்தக் கோட்டை முதலை வாழும் அகழி களையும், இலஞ்சிகளையும் கொண்டது. இது மிகவும் அழகான கோட்டை. கிள்ளிவளவன் அந்தக் கோட்டையின் அழகை எண்ணியாவது அழிக்காமல் விட்டிருக்கலாம். ஆனால், அவன் விடவில்லை; கோட்டையைச் சிதைத்தான்.[11]

இந்தக் கோட்டை எந்த ஊரில் இருந்தது? கோட்டைக் குள்ளே இருந்த வேந்தன் யார்? என்பன தெரியவில்லை. இந்தக் கோட்டை முன்கூறிய கருவூர்க் கோட்டையாயின் முன்பு ஆலத்தூர்கிழார் கூறிய அறிவுரையை இந்த வளவன் பொருட் படுத்தாமல் கோட்டையைச் சிதைத்தான் என்று முடியும். இவன் வஞ்சி நகரை வாட்டிய போர் ஒன்றும் உண்டு. இந்தப் போரை இஃது உயர்த்துவதாயும் இருக்கலாம். பாழி நகரம், துவரை நகரம் ஆகியவை செம்புக்கோட்டையைக் கொண்டவை. ஒரு வேளை இவன் அழித்தானா என்பதும் தெரியவில்லை.

நாம் பொருத்தமான வகையில் இதனை எண்ணிப் பார்க் கலாம். கருவூர் முற்றுகையை ஆலத்தூர்கிழார் அறிவுரைப்படி இவன் கைவிட்டான். கருவூர்க் கோட்டைக்குள்ளே இருந்த அரசன் அந்தக் கோட்டையை விட்டுவிட்டுச் சென்று பாழி நகரக் கோட்டைக்குள் தங்கினான். நார்முடிச்சேரல் நன்னனைக் கொன்றுவிட்டதனால் அந்த நகரம் சேரர் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தது. எனவே, அந்தக் கோட்டையில் இந்தச் சேரன் தங்கி யிருந்துகொண்டு சோழனைத் தாக்க வலிமைமிக்க படையைத் திரட்டிக்கொண்டிருந்தான். நிலைமை உணர்ந்த இந்த வளவன் பாழி நகரக் கோட்டையைத் தாக்கி அழித்தான்.

இவ்வாறு கோழைத்தனமாகவும் சூரத்தனம் போலவும் இவனிடம் நடந்துகொண்ட சேரன், யார் என்பது விளங்க வில்லை

10 புறம். 36 : 11-13 11 ஷ 37 : 7-13

வஞ்சி நகரை வாட்டல்

சேர அரசன் வானவனுக்கும் இவனுக்கும் போர் மூண்டது. போர் வஞ்சி நகரில் நடைபெற்றது. இப்போது தாராபுரம் என வழங்கும் ஊர்க்கு அக்காலத்தில் சேர நாட்டு வஞ்சி நகரின் நினைவாக வஞ்சிமுற்றம் என்னும் பெயர் சூட்டப்பட்டிருந்தது. இந்த வஞ்சி நகரில் நடந்த போரில் வானவன் கொல்லப்பட்டான்.[12] வஞ்சிமுற்ற மக்கள் வாடினர்.

கிள்ளிவளவனால் இப் போரில் கொல்லப்பட்ட வானவன் இமயத்தில் வில்லைப் பொறித்தான் என்று கூறப்படுகிறது. இவன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் அரசன் என்று எண்ணவேண்டியுள்ளது.

பெருநற்கிள்ளியும் (இராசசூயம் வேட்டவன்) இந்த மாந்தரஞ் சேரலும் போரிட்டபோது சேரன் தோற்றதை நாம் காண்கிறோம். இந்த நிகழ்ச்சியை அடுத்துத் தோன்றிய போரில் கிள்ளிவளவன் இந்த மாந்தரஞ்சேரலோடு (வானவனோடு) போரிட்டதையும், போரில் சோழன் வெற்றிபெற்றதையும், சேரன் மாண்டதையும் நாம் காண்கிறோம்.

சேரர்க்கும் சோழர்க்கும் நடந்த போர்களில் குறுநில மன்னர்கள் சோழனுக்குத் துணையாக நின்றதைக் காண்கிறோம். ஓரி, அதியமான், மலையன் ஆகியோர் அவ்வாறு சோழர் பக்கம் இருந்தவர்கள். பெருஞ்சேரல் இரும்பொறையும் அவனது தம்பி மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழர்க்கு எதிர்ப்பாய்க் கொங்கு நாட்டில் தங்களது ஆட்சியை விரிவுபடுத்திக் கொண்டிருந்தார்கள். பணம் கொடுத்த பக்கம் சேர்ந்துகொள்ளும் மலையமான் மரபினர் சோழர் பக்கம் ஒருசமயம் சேர்ந்துகொண்டு மாந்தரஞ்சேரலுக்கு தோல்வியை உண்டாக்கியது போலவே, மற்றொரு சமயம் சேரர் பக்கம் சேர்ந்துகொண்டு கொல்லிமலைத் தலைவன் ஓரியைக் கொன்று அவனது நாட்டைச் சேர அரசர்க்குக் கொடுத்தனர்.

இந்தப் போர்களில் எல்லாம் நாம் குறிப்பிடத்தக்க உண்மை ஒன்று உண்டு. சேரர்கள் குறுநில மன்னர்களை எதிர்த்துத் தாக்கிய போர்களில் வெற்றியையே கண்டனர். கொல்லிப் போரில் சோழ அரசன் அதியமானுக்கு உதவியதுபோல் முடிவேந்தர் உதவி இருந்தபோதும் சேரர்க்கே வெற்றி கிடைத்தது.

---

12 புறம். 39 : 16

ஆனால், சோழர்கள் தாமே எதிர்த்துத் தாக்கிய போர்களில் எல்லாம் இந்தச் சேர அரசர்கள் தோல்வியையே கண்டனர். இந்த முடிவுகளே நாம் குறிப்பிடத்தக்கவை.

சேர, பாண்டியரை வெல்லக் கருதல்

புலவர்கள் எல்லாரும் இவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற விரும்பி நாடி வந்தனர். அவர்களுக்கெல்லாம் கொடை வழங்கிய அதேநேரத்தில் இவனது நாட்டமெல்லாம் சேர நாட்டையும் பாண்டிய நாட்டையும் வெல்வதிலேயே இருந்தது.[13]

பகைவர்களின் கோட்டைகள் பலவற்றைக் கடந்து வெற்றி பெற்றான் என்றும்,[14] அவர்களது முடிப்பொன்னைக் கொண்டு வீரக்கழல் செய்து அணிந்துகொண்டான் என்றும்,[15] இவன் படையெடுத்து வந்து தம் நாட்டை அழிப்பான் என்று எண்ணிய பகைவர்கள் தீக்கனாக் கண்டு நடுங்கினர் என்றும்[16] கூறப்படும் செய்திகள் இவனது போர் நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றன. ஞாயிற்றிடம் நிலவொளியையும் திங்களிடம் வெயிலையும் விரும்பினால் முயன்று பெறக் கூடியவன் என்று கூறப்படுவது[17] இவனது ஆற்றலைப் புலப்படுத்துகின்றது.

மலையமான் மக்களைக் கொல்ல முயன்றது

புறநானூற்றுக் கொளு, இந்தக் கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானையின் காலடியில் இட்டுக் கொல்ல முயன்றதாகக் குறிப்பிடுகிறது.[18] பாடலில் குழந்தைகள் இன்னார் என்ற குறிப்பு இல்லை. குழந்தைகள் கள்ளமற்ற தன்மையை எடுத்துக்காட்டிக் கோவூர்கிழார் என்னும் புலவர் சோழனது செயலைத் தடுத்து நிறுத்தினார். குழந்தைகள் கொல்லப்படாமல் காப்பாற்றப் பட்டனர்.

காரி, சோழர் பக்கம் சேர்ந்துகொண்டு சேரனை வெல்ல ஒரு சமயம் உதவினான் என்றாலும், பின்பு ஒருமுறை சேரர் பக்கம் சேர்ந்துகொண்டு ஓரியைக் கொன்று கொல்லிமலைப் பகுதியைச் சேர்க்கச் சேரனுக்கு உதவினான் என்பதை அவன் வரலாற்றில் நாம் அறியலாம். இவ்வாறு காரி நிலையின்றிச் சோழர் பக்கமும் சேரர் பக்கமும் மாறியதால், சோழ அரசன் அவன்மீது சினம் கொண்டான். காரியின் குழந்தைகள் அவனுக்குக் கிடைத்த

13 புறம். 42 : 22-24
14 டி. 40 : 1-2
15 டி. 40 : 3-5
16 டி. 41 : 4-11
17 டி. 38 : 7-9
18 டி. 46

போது, இந்தக் குழந்தைகளும் பெரியவர்கள் ஆனபின் தந்தை யைப்போல் சேரர்க்குத் துணையாய் அமைவார்களோ என்று எண்ணியிருப்பான். இந்த எண்ணம் முள்மரத்தை முளைக்கும் போதே கிள்ளி எறிந்துவிடுவது போன்றது என்று அவனது அரச நீதி அவனுக்குக் கூறியிருக்கும்.[19] அதனால், கொல்லத் துணிந் திருப்பான்.

புலவர் குழந்தைகளின் கள்ளமற்ற தன்மையை விளக்கினார். அவனது முன்னோன் புறாவுக்காகத் தன் உடலையே வழங்கிய கொடையை நினைவூட்டினார். சோழன் உள்ளம் மாறியது; குழந்தைகளும் பிழைத்தனர்.

கையறவு

நப்பசலையார், மாசாத்தனார், முடவனார் என்னும் புலவர்கள் இவன் இறந்தது கண்டு இரங்கிப் பாடியுள்ளனர். கூற்றுவன் கொடியவன் என்றும், இவனது உயிரைக் கொண்டதால் இவனால் போரில் கூற்றுவனுக்குக் கிடைக்கும் இரை கிடைக்காதாகையால் கூற்றுவன் ஓர் அறிவிலி என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.[20] இதனால், அவனது உடல் தாழியில் இட்டு நிலத்தில் அடக்கம் செய்யப்பட்டது எனலாம்.

ஆட்சி

வெள்ளி தெற்குத் திசையில் தோன்றினாலும் கவலை யில்லை. வெள்ளி எந்தத் திசையில் தோன்றினால் என்ன? தோன்றாமல் போனால்தான் என்ன?[21] இந்த வளவன் இருக் கிறான் உதவுவதற்கு என்று புலவர்கள் மகிழ்ந்திருந்தனர்.

இவனது நாட்டு மக்கள் சோறு சமைக்கும் நெருப்பைத் தவிர வேறு சூடு அறியாராம். (இதனால் பகைவன் இவனது நாட்டை வென்று எரியூட்டியது இல்லை என்பது பொருள்.)[22] இவனது நாட்டார் போர்ப் பூசலைக் கனவிலும் அறியாதார்; குட்டிகளைக் குகையில் காக்கும் புலிபோல் இவன் நாட்டுமக்களைக் காத்து வந்தானாம்.[23]

வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் இவனுக்குக் கூறும் அறிவுரைகள் இவனது ஆட்சி முறையைப்பற்றி நம்மை

---

19 குறள். 879
20 புறம். 226, 227, 228
21 ஷ 386 : 20-24
22 ஷ 70 : 8-9
23 ஷ 42 : 8-11

எண்ணச் செய்கின்றன. 'காட்சிக்கு எளியனாக இருக்கவேண்டும். வெண்கொற்றக் குடை அரசனுக்கு வெயில்படாமல் மறைப்பதற்கு அன்று; மக்களுக்குத் துன்பம் நேராமல் நிழல் தந்து காப்பாற்று வதற்காகவே என்று கூறுகிறார். நண்பர் அல்லாதார் பொதுப் படையாகக் கூறும் சொற்களை உண்மை என்று ஏற்றுக்கொள்ளக் கூடாது. உழவர்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டும்' என் றெல்லாம் அவர் அறிவுரை கூறியுள்ளார். இவனிடம் ஓரள வேனும் இந்தக் குறைபாடுகள் இருந்ததனால்தான் இவ்வாறு இவர் அறிவுரை கூறவேண்டிய நிலை ஏற்பட்டது என்று கருத லாம்.

கொடை

இவனது கொடைத்தன்மை புலவர்களைப் பொறுத்தவரை 'ஆனா ஈகை'யாக அமைந்திருந்தது.[24] எவ்வளவு கொடுத்தாலும் இன்னும் கொடுத்திருக்கலாமே என்றும், வந்தவருக்கெல்லாம் கொடுத்தாலும் இன்னும் பலர் வந்திருந்தால் கொடுத்திருக்கலாமே என்றும் கொடையாளி கருதுவதுதான் 'ஆனா ஈகை'.

இவன் எல்லாருக்கும் எல்லாப் பொருள்களையும் கொடுத் தான் என்றாலும், சிலருக்குச் சில பொருள்களைக் கொடுத்ததில் தனிச் சிறப்பு இருந்தது.

கலையில் வல்ல பாணர்க்கும்,[25] எதிலும் வல்லமையின்றி ஏதோ ஆசையில் பரிசில் பெறலாம் என வந்த பரிசிலர்க்கும் இவன் பரிசில் வழங்கினான்.[26] சிறந்த உணவு,[27] சிறந்த உடை,[28] அணிகலன்கள்[29] முதலான பொருள்களையும், பாணர்க் குப் பொன்னால் செய்யப்பட்ட தாமரையையும்[30] இவன் வழங்கி யதில்கூட அத்தனை வியப்பு இல்லை. தன் வாழ்நாளையும் சேர்த்துக்கொண்டு வாழவேண்டும் என்று கொடைவள்ளல் ஒருவனை இவனே வாழ்த்தியதில்தான் இவனது கொடைத் திறனின் உச்சநிலை அமைந்திருக்கிறது.

பண்ணன் அவனது நாட்டிலிருந்த குடிமகன். சிறுகுடியில்[31] அவன் வாழ்ந்துவந்தான். அவன் வழங்கியதெல்லாம் என்ன?

---

24 புறம். 42 : 1
25 ஷை 34 : 14–15, 69 : 1-4
26 ஷை 38 : 14-17
27 ஷை 34 : 8-14, 386 : 3-7, 393 : 14, 397 : 14
28 ஷை 393 : 17-18, 397 : 15
29 ஷை 397 : 22
30 ஷை 69 : 20
31 திருச்சிராப்பள்ளி மாவட்டம்

சோறு, அதில் என்ன சிறப்பு? வந்தவர்க்கெல்லாம் சோறு. அத்துடன் வாராதவர்களுக்கும் சோற்று மூட்டை கொடுத்தான். இந்தக் கொடைத் தன்மையைக் கண்டான்; வியந்தான். தன் கொடையைக் காட்டிலும் பயன்நோக்கில் விஞ்சி மேம்பட்டு நிற்பதை உணர்ந்தான். தனது வாழ்நாளும் சேர்ந்து பண்ணனுக்கு அமைந்தால் மக்களுக்குப் பயனுடையதாக இருக்குமே என்று கருதினான்; வாழ்த்தினான்; பாடினான்.[32]

குடிமகன் அரசனைப் பாராட்டிப் பாடுவது இயல்பு. குடிமகன் மற்றொரு குடிமகனைப் பாராட்டிப் பாடுவதில் வியப்பு ஒன்றும் இல்லை. அரசன் ஒருவன்—பேரும் புகழும் ஒருங்கு பெற்ற அரசன் ஒருவன்—தன் நாட்டிலுள்ள குடிமகனை, எளிய குடிமகனைப் பாராட்டிப் பாடுகிறான் என்றால், தன் வாழ் நாளையே அவனுக்குக் கொடுக்க விழைகிறான் என்றால், அவனது கொடைத் தன்மையிலும் பெருந்தன்மையிலும் எத்துணைச் சான்றாண்மைப் பண்புகள் உள்ளன என்பதை நாம் உணரலாம்.

பெயர் அடைமொழிகள்

'பசும்பூண் கிள்ளிவளவன்',[33] 'பொன்னியல் பெரும்பூண் வளவன்',[34] 'பொலந்தார் வளவன்',[35] 'பலகோள் செய்தார் மார்ப'[36] என்பன அணிகலன்களோடு கூடிய அவனது தோற்றப் பொலிவினைக் காட்டுகின்றன.

'வாய்வாள் வளவன்',[37] 'திண்தேர் வளவன்',[38] 'நெடுங்கொடி நுடங்கும் யானை நெடுமா வளவன்'[39] என்பன அவனது போர்க்கோலத்தைக் காட்டுகின்றன.

இவனது மரபினர் 'மறங்கெழு சோழர்'[40] என்று குறிப்பிடப்படுகின்றனர்.

முன்னோர்

புறா உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தன் உடலையே துலாக்கோலில் (தராசில்) நிறுத்தித் தந்த அரசனான சிபியின் வழி வந்தவன் இவன் என்று குறிப்பிடப்படுகிறான்.[41] அவன் வழிவந்த இவனுக்கும் கொடை உள்ளம் அமைந்தது.

---

32 புறம். 173 : 1
33 மே. 69 : 15-16
34 மே. 227 : 8-9
35 மே. 226 : 4-6
36 மே. 397 : 8-9
37 மே. 393 : 24
38 மே. 226 : 6
39 மே. 228 : 10
40 மே. 39 : 8
41 மே. 37 : 5-6, 39 : 1-3, 46 : 1-2

கிள்ளிவளவன் - 2

(குராப்பள்ளித் துஞ்சியவன்)

'காவிரிக் கிழவன்' என்றும் 'உறந்தைப் பொருநன்' என்றும் இவன் சிறப்பிக்கப்பட்டுள்ளான்.[1] இதனால், இவன் உறையூரில் தங்கிச் சோழநாட்டை ஆண்டுவந்தான் என்பதை உணரலாம்.

கருவூர்ப் போர்

கொங்குநாட்டிலிருந்த கருவூரை இவன் தாக்கினான்.[2] போரில் பிட்டை (பிட்டன்) என்பவன் படுகாயமடைந்தான். இதனால், கொங்கு நாட்டார் தோற்றனர்.

வஞ்சிமுற்றப் போர்

வஞ்சிமுற்றம் என்னுமிடத்தையும் இவன் தாக்கினான்.[3] போரில் எதிரிகளைக் கொன்றுகுவித்தான். இதில் கொல்லப் பட்டவர்களில் பெரும்பகுதியினர் குடநாட்டுப் படையினர்.

இந்த இரண்டு ஊர்களும் வெவ்வேறு இடங்கள். கருவூர் இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கருவூர். வஞ்சிமுற்றம் என்பது இப்போது கோவை மாவட்டத்தில் உள்ள தாராபுரம். கருவூரில் தாக்கப்பட்ட அரசன் யார் என்பதற்கு வெளிப்படையான சான்று இல்லை என்றாலும், உறுதிமிக்க சான்று உள்ளது. அது பிட்டன் போரில் காயம்பட்டான் என்று குறிப்பிடப்படுவதே ஆகும். பிட்டன் வானவனின் படைத் தலைவன் என்பதைச் சேரர் வரலாற்றுப் பகுதியில் 'வானவன்' என்னும் தலைப்பின்கீழ்க் கண்டோம். எனவே, பிட்டன் போரிட்டபோது கருவூரில் இருந்த அரசன் மாந்தரஞ்சேரல் என்பது பெறப்படுகிறது.

இந்த மாந்தரஞ்சேரல் வரலாறு, சோழர் வரலாற்று நிகழ்ச்சி களை ஒரு நிரல்செய்து காட்டுகிறது.

மாந்தரஞ்சேரல், காரியின் துணை தனக்குக் கிடைக்காமை யால் சோழரை எதிர்த்துத் தாக்கிய ஒரு போரில் தோற்றான். இந்தப் போரில் இவனைத் தாக்கிய சோழ அரசன் பெருநற்கிள்ளி (இராசசூயம் வேட்டவன்).

---

1 புறம். 58 : 1, 9 : 6
2 ஷ 373 : 8
3 ஷ 373 : 24

கிள்ளிவளவன் - 1 (குளமுற்றத்துத் துஞ்சியவன்), கருவூரைத் தாக்கியபோது வானவன் கோட்டைக் கதவை அடைத்துக் கொண்டு உள்ளேயே இருந்தான். அடைத்துக்கொண்டு உள்ளே இருக்கும் அரசனோடு போர்புரிவது அழகன்று என்று புலவரால் அறிவுறுத்தப்பட்ட சோழன் முற்றுகையைக் கைவிட்டான்.

எனினும், வானவன் கருவூர்க் கோட்டைக்குள் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை. தன் படைத்தலைவன் பிட்டனிடம் கருவூரை ஒப்படைத்துவிட்டு, பாழி நகருக்குச் சென்று தங்கி பெரும்படை ஒன்றைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். நிலைமை அறிந்த கிள்ளிவளவன் - 1 அவனைப் பாழி நகரிலே தாக்கினான்; பாழிக் கோட்டையை அழித்தான். மாந்தரஞ் சேரல் தன் மற்றொரு கோட்டையான வஞ்சிமுற்றக் கோட்டைக் குத் தப்பிவிட்டான்.

கிள்ளிவளவன் - 1 (குளமுற்றத்துத் துஞ்சியவன்) பாழிக் கோட்டையைத் தாக்கிக் கொண்டிருந்தபோது கருவூரில் அப் போரின் எதிரொலியாக மற்றொரு போர் மூண்டது. அந்தப் போர் பிட்டனுக்கும், கிள்ளிவளவன் - 2 (குராப்பள்ளித் துஞ்சி யவன்)என்பவனுக்கும் இடையே நடைபெற்றது. கிள்ளிவளவன்-2, பிட்டனைப் படுகாயம் அடையும்படி செய்தான்.

பாழியிலிருந்து தப்பிவந்த மாந்தரஞ்சேரல் வஞ்சிமுற்றக் கோட்டையில் இருந்தபோது கிள்ளிவளவன்-1, கிள்ளிவளவன்-2 ஆகிய இருவரும் தாக்கினர். மாந்தரஞ்சேரல் கொல்லப்பட்டான்.

இந்த நிகழ்ச்சிகள் கிள்ளிவளவன் - 1, கிள்ளிவளவன்-2 ஆகிய இருவரும் சமகாலத்தவர் என்பதைத் தெளிவாக்கு கின்றன.[4] ஒருவன் குளமுற்றத்தில் துஞ்சினான் என்றும், மற் றொருவன் குராப்பள்ளியில் துஞ்சினான் என்றும் கூறப்படுவதால் இவர்கள் இருவரையும் ஒருவர் எனக் கூறமுடியவில்லை.

கிள்ளிவளவன்-1, கருவூரை முற்றுகையிட்டபோது போரே நடைபெறவில்லை என்பது தெளிவு. கிள்ளிவளவன்-2, கருவூரை முற்றுகையிட்டபோது போரும் நடந்தது. போரில் பிட்டன் என்ப வனும் படுகாயம் அடைந்தான். இந்த வேறுபட்ட நிகழ்ச்சிகள் ஒரே அரசன் காலத்தில் நிகழ்ந்தவை என்று கூறுவது பொருந்தா. இதனாலும், கிள்ளிவளவன்-1, கிள்ளிவளவன்-2 ஆகியோர் வேறு வேறு அரசர்களே என்பது பெறப்படும்.

---

4 இருவரும் ஒருவனே என்பதைத் தெளிவிக்கின்றன (ப-ர்.)

இவர்கள் உடன்பிறந்த அண்ணன் தம்பியராகவோ பெரியப்பன், சிற்றப்பன் மக்களாகவோ இருக்கலாம். நலங்கிள்ளியின் மகன் கிள்ளிவளவன்-1 என்று அவனது வரலாற்றிலே கண்டோம்.

ஆட்சி

வண்டிச் சக்கரம் கல்லால் தடுக்கப்பட்டாலும், பள்ளத்தில் ஆழ்ந்தாலும் பொருட்படுத்தாமல் பெரிதும் முண்டி இழுத்துச் செல்லும் காளைமாடுபோல இவன் தன் நாட்டை நடத்திச் சென்றான்.[5]

இவனது ஆட்சிக்குச் சோதனையாகத் தடைகளும் சோர்வும் பிறந்தன. அவற்றை இவன் வலிமையுடன் சமாளித்து அரசாட்சி நடத்திவந்தான். இதனால், அவன் நாட்டுமக்கள்முன் அவர்களின் துன்பம் நீக்கும் இவனது ஆட்சிக் கோலமே நின்றது. உறையூர் மருத்துவன் தாமோதரனாரும் விறலியும் கடற்கரை ஓரமாகச் சென்றுகொண்டிருந்தபோது கடலில் முழுநிலாத் தோன்றுவதைக் கண்டனர். உடனே அவர்களுக்கு இந்தச் சோழனின் வெண்கொற்றக் குடைதான் நினைவுக்கு வந்தது. அந்த நிலாவைச் சோழனது குடையென எண்ணி வணங்கினர்.[6]

கொடை

இவனது ஆட்சிக் காலத்தில் இன்னல்கள் பல நேர்ந்தன என்று கண்டோம். அந்த இன்னற் காலத்தில் இவனைக் கண்டு, குமரனார் என்னும் புலவர் பாடிப் பரிசில் வேண்டினார். இந்தக் குமரனாரின் சொந்த ஊர் கோனாட்டு எறிச்சலூர். கோனாடு என்பது இப்போதுள்ள புதுக்கோட்டை மாவட்டப் பகுதியில் இருந்தது. அங்கிருந்து இவர் உறையூர் வந்து இவனைக் கண்டு பாடினார். பாடலில் அவர் இந்தச் சோழன் நல்லறிவுடையவன் என்றும், அவனது வறுமையை என்றும் தாம் எண்ணிப் பார்க்கும் தன்மை உடையவர் என்றும் கூறுகிறார். புலவரிடம் பண்பறிந்து ஒழுகாதவர், நாற்படையில் வலிமை மிக்க வேந்தராயினும் அவர்களைத் தாம் வியந்து மதிப்பதில்லை என்றும், அவர் குறிப்பிடுகிறார். சோழன் பரிசில் நல்காவிடினும் அவனை இவர் பாடியுள்ளார்.[7]

தோற்றம்

அவையில் வீற்றிருக்கும்போது பனைக்கொடிக் கடவுள் இவனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளார்.[8] இந்தக் கடவுள்

---

5 புறம். 60 : 7-9
6 ஷை 58, 59
7 ஷை 197
8 ஷை 58 : 14

வெள்ளை நிறத்தவர். பாண்டியனுக்கு நீலநிறத் திருமால் உவமை கூறப்பட்டுள்ளார். எனவே, பாண்டியனைக்காட்டிலும் இந்தச் சோழன் சற்றேனும் வெளுப்பான மேனி உடையவனா யிருந்தான் என்பது பெறப்படும்.

கூர்மையான வாளைப் பயன்படுத்தும் வல்லமை மிக்கவனாய்ச் அதனுடன் தோற்றமளித்ததையும், பக்கத்தே வெற்றியின் அறிகுறியாக முரசு முழங்க அவன் உலாவந்த காட்சியையும் தாமோதரனார் குறிப்பிடுகிறார்.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி

சங்ககாலச் சோழவேந்தருள் சிறப்புமிக்க மாபெரும் மன்னன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆவான். இவனுக்குப் பிறகு ஓர் அளவிற்குப் புகழ்பெற்றவன் சோழன் செங்கணான் ஆவான்.

சேர சோழ பாண்டியர் ஒருமைப்பாடு

தமிழ்நாட்டு மூவேந்தரான சேர, சோழ, பாண்டியர் தம்முள் பகைமைகொண்டு ஒருவரோடு ஒருவர் போரிட்டுக்கொள்வது வழக்கமாக இருந்துவந்தது. இவர்களுள் இருவர் ஒன்றுசேர்ந்து மூன்றாமவனைத் தாக்குதல் உண்டு. இந்த நிகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் தமிழக வரலாற்றிலேயே முதல் நிகழ்ச்சி யாக நாம் காணும் அளவில், இவன் காலத்தில் மூவேந்தரும் அரசியல் முறையில் ஒன்றுகூடி இணைந்து நண்பர்களாகச் செயலாற்றத் தொடங்கினர்.

சேர அரசன் மாரிவெண்கோ, பாண்டிய அரசன் கானப் பேரெயில்தந்த உக்கிரப்பெருவழுதி ஆகியோர் இவனுடன் கூடித் தமிழக முன்னேற்றத்திற்காகத் திட்டமிடத் தொடங்கினர். இந்தக் காட்சியைக் கண்ட ஔவையார் 'இன்றுபோல் என்றும் ஒருமைப் பாட்டுடன் வாழவேண்டு'மென்று வாழ்த்தினார்.[9]

அப்போது அவர் பார்ப்பனர்க்குப் பூவும் (நிலமும்) பொன்னும் தாரைவார்த்துக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொள் வதும், மகளிர் மதுவூட்ட மகிழ்ந்து வாழவேண்டும் என்று வாழ்த்துவதும் நம்மை எண்ணத் தூண்டும் செய்திகள் ஆகும்.

---

[9] புறம். 367

சுடுதீ விளக்கம்

குதிரை, யானை, காலாள் படைகளின் துணைகொண்டு தனது பகைவர் நாடுகளைத் தாக்கினான். அங்கிருந்த நன்னீர்த் துறைகளில் தன் யானைகளைப் படியச் செய்து கலக்கினான். விளைந்த வயல்களைக் கவர்ந்தான். வீடுகளில் உள்ள மரங் களை விறகாகக்கொண்டு மாலைவேளையில் தீ வளர்த்தான். இந்தத் தீ, சுடுதீ விளக்கமாக எரிந்தது. கரும்பு வயல்களுக்கும் தீ மூட்டினான். இதனால் வளமான வயல்கள் பாழாயின. இந்தப் போரைக் கொடிய போர் என்பதுபட 'நாம நல்லமர்' — அஞ்சத்தக்க நல்ல போர் — என்று புலவர் குறிப்பிடுகிறார். இந்தப் போர் தொடங்கும்போது இவனுக்குச் சில அரசர்கள் உதவிசெய்ய முன்வந்ததாகத் தெரிகிறது. இவனோ அவர்களை யெல்லாம் வேண்டா என்று கூறிவிட்டுத் தான்மட்டும் தன் படைத்துணையுடன் போரிட்டு வெற்றிபெற்றதாகத் தெரிகிறது.[10]

மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடு போர்

சேர அரசன் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கும் இவனுக் கும் போர் மூண்டது. அப்போது இவன், தேர்வண் மலையன் என்பவனின் உதவியைப் பெற்றான். அவனது துணையால் சேரனை வென்றான். மலையன் வரலாற்றில் இப் போரைப் பற்றிய செய்திகளை மேலும் காணலாம்.[11]

படை

பொன் பூண் பூட்டிய தந்தங்களைக் கொண்ட யானைப் படை, கச்சை அணிந்த குதிரைப்படை, மணி ஒலிகொண்ட தேர்ப்படை, வாளால் ஆர்வமுடன் வாழும் மறவர் படை ஆகியவை அடங்கிய இவனது தானை கடல் ஒலிபோல் முழங்கும்.[12] அது வரம்பில்லாப் பெரிய படை.

கொடை

உலோச்சனார் கிணைப்பறையை முழக்கிக்கொண்டு வைகறைக் காலத்திற்கு முன்பே சென்றார். நல்ல பனிக்காலம் (மார்கழி மாதம் எனலாம்); அரண்மனையிலே சோழன் இனிமை யாகத் தூங்கிக்கொண்டிருந்த நேரம். அப்போதுதான் இவர் கிணையை முழக்கிக்கொண்டு சென்றார். (இந்தச் செயலை மார்கழி மாதம் விடியற் காலத்தில் தாதன் திருப்பாவை

10 புறம். 16 : 10-19
11 ஷை 125
12 ஷை 377 : 23 - 30

பாடிக்கொண்டு தெருத்தெருவாகச் செல்லும் நிகழ்ச்சியோடு ஒப்பிடலாம்.) 'அறநெஞ்சத்தோன் வாழ்க' என்று இடையிடையே அவர் வாழ்த்தினார். அந்த வாழ்த்து தனக்குத்தான் என்று கொண்டு தொலைநாடு செல்லும் உலோச்சனார் என்னும் புலவரைத் தடுத்து அழைத்துச்சென்று அந்தப் புலவர் கனவு காண்பது போல் மருளும்படி முத்தும், நல்ல உடைகளும், காலையில் பருகும் 'தசும்பு' என்னும் மதுக்குடங்களையும் அளித்தான். புலவர் பெற்று அவனைப் பாராட்டிப் பாடினார்.[13]

நாடு என்றால் அவன் நாடுதான் நாடு. வேந்து என்றால் அவன்தான் என்ற முறையில் அவரது பாராட்டு அமைந்திருந்தது.

தோற்றப் பொலிவு

மார்பிலே சந்தனம், புலவு நாற்றம் வீசும் வாள் ஆகியவற்றுடன் இவன் தோன்றினான். இவனது சீற்றம் முருகனது சீற்றம் போன்றது.[14] முருகனது சீற்றம் இதிலிருந்து தெரியவருகிறது.

இராசசூயம் வேட்டல்

இவனது பெயர் பெருநற்கிள்ளி. புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் இப் பெயருக்கு 'இராசசூயம் வேட்ட' என்னும் அடைமொழியைத் தந்துள்ளார்.[15] இந்த அடைமொழியால் வைதிக சமயவழிப்பட்ட இராசசூய வேள்வியை இவன் செய்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

சோழன் செங்கணான்

சோழன் கிள்ளிவளவன் (குளமுற்றத்துத் துஞ்சியவன்) காலமான பின் சோழநாட்டை அரசாண்ட சோழ அரசன் செங்கணான் எனலாம். சங்க இலக்கியங்களிலிருந்து அறியப்படுகிற சோழ அரசர்களுள் கடைசி அரசன் இவன். இவன் சைவ அடியார்களுள் ஒருவரான செங்கட்சோழ நாயனார் அல்லன்.[1]

---

13 புறம். 377 : 16 - 20 14 அகம். 158 : 16 15 புறம். 16 கொளு

1 சுந்தரமூர்த்தி நாயனார் தம்முடைய திருத்தொண்டத் தொகையில் 'தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்' என்று ஒரு செங்கட் சோழனைக் கூறுகிறார். நம்பியாண்டார் நம்பி இயற்றிய 'திருத்தொண்டர் திருவந்தாதி'யில் கோச்செங்கட் சோழ நாயனாரைக் கூறுகிறார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் கோச்செங்கட் சோழ நாயனார் புராணம் பாடினார். இந்தக் கோச்செங்சேட் சோழன் ஒருவரே என்று சிலர் கூறியும் எழுதியும் வருகிறார்கள். ஆழ்ந்து நுணுகி ஆராயும் போது இந்த இரண்டு செங்கணான்களும் வெவ்வேறு காலங்களில் இருந்தனர் என்பது தெரிகிறது.

சங்ககாலத்தின் இறுதியில் சோழநாட்டை ஆண்ட சோழன், செங்கணான் என்று கூறினோம். சோழன் செங்கணான் காலத்தில் கொங்குநாட்டை அரசாண்டவன் கணைக்கால் இரும்பொறை. பொறையர் குடி அரசர்களுள் கடைசி அரசன் இவன்.

சோழநாட்டை அரசாண்ட (குளமுற்றத்துத் துஞ்சிய) கிள்ளி வளவன் கொங்குநாட்டை வென்று, சேரநாட்டை அரசாண்ட கோதை அரசனின் படைத் தலைவன் பிட்டனையும் வென்றான் என்று அறிந்தோம். கிள்ளிவளவனுக்குப் பிறகு சோழநாட்டை அரசாண்ட செங்கட்சோழன் கொங்குநாட்டை ஆண்ட கணைக்கால் இரும்பொறையுடன் போர் செய்தான். போர் செய்ய வேண்டிய காரணம் தெரியவில்லை. இவனை எதிர்த்துச் செங்கணான் போர் செய்தான். அந்தப் போர் 'போர்' என்னும் ஊரில் நடந்தது. (போர் என்னும் ஊருக்குப் போர்வை என்னும் பெயரும் இருந்தது.) இந்தப் போரில் கணைக்கால் இரும்பொறை தோல்வி அடைந்தது மட்டுமல்லாமல் செங்கணானால் சிறைப் பிடிக்கப்பட்டான். சிறைப்பட்ட கணைக்கால் இரும்பொறையைச் சோழன் செங்கணான் குடந்தைக் (கும்பகோணம்) கோட்டையில் மேற்கு வாயில்புறத்தில் இருந்த குடவாயில் சிறைக்கோட்டத்தில் அடைத்துவைத்தான்.

சிறையில் இருந்த கணைக்கால் இரும்பொறை நீர்வேட்கை கொண்டு நீர் கேட்டான். சிறைக்கோட்ட ஊழியர் அலட்சியமாக இருந்து நெடுநேரஞ்சென்று நீர் கொண்டுவந்து கொடுத்தனர். அவன் நீரைப் பருகாமலே ஒரு செய்யுளைப் பாடினான். இச் செய்யுளின் அடிக்குறிப்பு இவ்வாறு கூறுகிறது. 'சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு திருப் போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு.'

'பிறந்த குழந்தை இறந்தாலும், பிறக்கும் முன்பே குழந்தை இறந்து பிறந்தாலும், அக் குழந்தை வீர ஆள் ஆகவில்லை என்று கருதி அதனை வீர ஆளாக மடியச் செய்வாராய் அதன் உடலில் வாளால் காயப்படுத்திப் புதைப்பதோ எரிப்பதோ செய்யும் வழக்கம் தமிழ்நாட்டில் இருக்கிறது. நானோ வீரர்களுக்குத் தலைவனான அரசனாக விளங்கியும் சங்கிலியால் பிணைக்கப் பட்ட வேட்டைநாய்போல் சிறையில் அடைபட்டுள்ளேன். பகைவர் கூட்டத்தில் உள்ள நண்பரல்லாத ஒருவர் அளித்த நீரை

மான உணர்வின்றி எனது நீர்வேட்கையைத் தணிக்கும் பொருட்டுக் கெஞ்சிக் கேட்டுப் பருகுதலை இவ்வுலகத்திலுள்ள யாரேனும் விரும்புவரோ ? விரும்பார்[2] (எனவே நானும் விரும்பேன்).'

இந்தக் கருத்தமைந்த பாடலைப் பாடிவிட்டுத் தண்ணீர் பருகாமல் நாச்சுருண்டு சோர்ந்து கணைக்கால் இரும்பொறை சோழனது சிறையில் மாண்டு போனான்.

தொண்டித் துறைமுகப் பட்டினத்தில் வாழ்ந்திருந்த பொய்கையார் கோக்கோதை மார்பன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆகியோர் காலத்தில் இருந்தவர். இந்தப் பொய்கையார் அவ்வரசர் காலத்துக்குப் பிறகு கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணான் ஆகியோர் காலத்திலும் வாழ்ந்திருந்தார். அவர் கணைக்கால் இரும்பொறை குடவாயிற் கோட்டத்தில் செங்கணானால் சிறை வைக்கப்பட்டதை அறிந்து செங்கணானிடம் சென்று 'களவழி நாற்பது' என்னும் நூலைப் பாடி அதற்குப் பரிசாகக் கணைக்கால் இரும்பொறையைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு கேட்டார் என்றும், செங்கணான் கணைக்கால் இரும்பொறையை விடுவித்தான் என்றும், விடுவிப்பதற்கு முன்பே சிறைக்கோட்டத்தில் கணைக்கால் இரும்பொறை துஞ்சினான் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு புறநானூற்றுச் செங்கணானுக்கும் களவழியில் கூறப்பட்டுள்ள சோழ அரசனுக்கும் தொடர்பு இருப்பதாகக் கொள்வது பொருந்துமாறில்லை. காரணங்களை எண்ணிப் பார்க்கலாம். இதனுடன் சைவ அடியார்களில் ஒருவனாய் விளங்கிய செங்கணானைப் பற்றியும் எண்ணலாம்.

போரில் வெற்றிபெற்ற அரசனது பெயர் சோழன் செங்கணான் என்று புறநானூற்றுக் கொளுக் குறிப்பிடுகிறது. செங்கண்மால்,[3] செங்கட்சினமால்,[4] திண்டேர்ச் செம்பியன்,[5] பொன்னார மார்பிற் புனைகழற்காற் செம்பியன்[6] என்ற முறையில் ஓரளவு சிறப்பு வகையாலும், புனல்நாடன்,[7] புனல்நீர் நாடன்,[8]

---

2 புறம். 74 : 4–7
3 களவழி. 4 : 3, 5 : 3, 11 : 5
4 ஷை 15 : 3–4, 21 : 4–5, 29 : 3-4, 30 : 3, 40 : 3
5 ஷை 6 : 5, 23 : 4. 33 : 4
6 ஷை 38 : 3
7 ஷை 1:4, 2:4, 9:3, 10:3, 14:3, 16:4, 20:3, 25:3, 26:4, 27:3, 28:5, 31 3, 36:4, 37:3, 39:3
8 ஷை 8-4, 17:4 22:5, 41:4

நீர் நாடன்,[9] காவிரி நாடன்,[10] சேய்,[11] பைம்பூட்சேய்[12] என்ற முறையில் ஓரளவு பொதுவகையாலும் வெற்றிபெற்ற சோழ அரசன், 'களவழி' நூலில் குறிக்கப்படுகிறானே அன்றிச் சோழன் செங்கணான் என்று குறிக்கப்படவில்லை. மால் (திருமால்) என்றும், சேய் (முருகன்) என்றும் இவன் குறிப்பிடப்படுவது மனிதன்மீது கடவுள் தன்மை ஏற்றப்பட்ட நிலையாகும். மற்றும், 'செங்கண்மால்', 'செங்கட் சினமால்' என்னும் பெயர்களை நோக்கும்போது போர்க்காலத்தில் சினம் மிகுதியால் சிவந்திருந்த கண் நோக்கிய தெளிவுரைப் பெயரே அன்றிச் சோழன் செங்கணான் என்று சங்ககால இயற்பெயர் போன்றது அன்று. மற்றும் 'செங்கணான் கோச்சோழன்' என்று திருமங்கை ஆழ்வாரால் குறிப்பிடப்படுபவன் சிவபெருமானுக்கு 70 கோயில்கள் கட்டியவன். இவர்கள் மூவரும் வெவ்வேறு அரசர்கள். வரிசைப்படி காலத்தால் வேறுபட்டவர்.

இந்தச் சோழனை எதிர்த்துப் போரிட்ட அரசனின் பெயரைப் புறநானூற்றுக் கொளு, 'கணைக்கால் இரும்பொறை' என்று குறிப்பிடுகிறது. களவழியில் சோழனது பெயர் குறிப்பிடப்படாதது போலவே, சோழனை எதிர்த்துப் போரிட்டவனின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. 'வஞ்சிக்கோ'[13] என்று பொதுவகையால் ஓரிடத்தில் குறிப்பிடப்படுகிறான். மற்றோரிடத்தில் 'கொங்கர் படையைக் கொண்டவன்'[14] என்று குறிப்பிடுகிறார். மற்றும், பகைவர் என்றும் பிறவாறும் பொருள் தரக்கூடிய பல சொற்களால் (அடங்கார், உடற்றியார், ஒன்னார், காய்ந்தார், கூடார், செற்றார், தப்பியார், தெவ்வர், நண்ணார், நேரார், பிழைத்தார், புல்லார், மேவார்) சோழனை எதிர்த்தவர் குறிப்பிடப்படுகின்றனர். மற்றும் சங்க காலத்தில் செங்கணானை எதிர்த்தவன் கணைக்கால் இரும்பொறை என்று மட்டும் தெரியவருகிறது. களவழியிலோ தெவ்வேந்தர்,[15] வேந்தர்[16] என்றெல்லாம் பல்வேறு அரசர்கள் சோழனை எதிர்த்ததாகக் குறிப்புள்ளது. திருமங்கை ஆழ்வார் குறிப்பிடும் சோழன் எதிரி 'கழல் மன்னர்'[17] 'விழல் மன்னர்',[18]

---

9 களவழி. 3:3, 19:3, 24:4, 32:3

10 ஷ 7:3, 12:4, 35:3, 36:2

11 ஷ 13 : 4, 18:3

12 ஷ 34 : 4-5

13 ஷ 39 : 4

14 ஷ 14 : 4

15 ஷ 6 : 5 - 6

16 ஷ 16 : 5

17 'கவ்வைமா களிறுந்தி வெண்ணி ஏற்றக்
கழல்மன்னர் மணிமுடிமேல் காகம் ஏறத்
தெய்வவாள் வலங்கொண்ட சோழன்' (பெரிய திருமொழி, 6 – 6 – 3).

18 வெங்கண்மா களிறுந்தி வெண்ணி ஏற்றி
விறல்மன்னர் திறல்அழிய வெம்மா உய்த்த
செங்கணான் கோச்சோழன்' (ஷ 6 – 6 – 4).

'படை மன்னர்'[19] என்று பன்மையால் காட்டப்படுகின்றனர். மற்றும் சிவனடியான் கோச்செங்கணானால் வெல்லப்பட்டவன் 'விளந்தைவேள்'[20] என்ற தெளிவான குறிப்பும் உள்ளது. இந்த வகையிலும் மேற்கண்ட மூவேறு பகைவர்களும் வேறுபட்டவர் என்பது தெளிவாகிறது.

புறநானூற்றுக் கொளுவில் போர் நடந்த இடம் 'திருப்போர்ப் புறம்' என்று கூறப்பட்டுள்ளது. களவழியிலோ போர் நடந்த இடம் 'கழுமலம்'[21] என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருமங்கை ஆழ்வார் போர் நடந்த இடம் 'அழுந்தை'[22] என்று குறிப்பிடுகிறார். இந்த வகையிலும் மேற்கண்ட மூன்று போர் நிகழ்ச்சிகளும் வெவ்வேறானவையாய் அமைந்துவிடுகின்றன.

புறநானூற்றுப்படி சோழனை எதிர்த்தவன் சிறையிலடைக்கப்பட்டு மானம் கருதி உயிரைவிடுகிறான். களவழிப்படி சோழனை எதிர்த்தவன் தன் யானையுடன் போர்க்களத்திலேயே உயிர் துறக்கிறான்.[3] களவழி உரைகாரரோ சோழனை எதிர்த்தவன் சிறையில் அடைக்கப்பட்டுப் பொய்கையாரின் களவழி நூலால் விடுதலை பெறுகிறான் என்று கற்பனை செய்கிறார். மற்றும் திருமங்கை ஆழ்வாரோ சோழனை எதிர்த்தவர் மாண்டனர் என்கிறார். மற்றும் கலிங்கத்துப் பரணி விலங்கைத் தகர்த்து விடுதலை செய்யப்பட்டதோடு அரசுரிமையும் அளிக்கப்பட்டான் என்று கூறுகிறது.[24] இவையெல்லாம் வரலாற்றுச் செய்திகளைச் சொல்வதில் தழுவியும் நழுவியும் செல்வதைப் பார்க்கும்போது வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்றே கொள்ளத்தகும்.

---

19 'பாரானர் அவர்இவர் என்று அழுந்தை ஏற்றப்
படைமன்னர் உடல்துணியப் பரியா உய்த்த
தேராளன் கோச்சோழன்' (பெரிய திருமொழி, 6—6—9)

20 'மின்னாடு வேல்ஏந்தும் விளந்தை வேளை
விண்ஏறத் தனிமேல் உய்த்து உலகம் ஆண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன்' (ஷை 6—6—6)

21 களவழி. 36 : 2

22 விளந்தை என்பதற்கு 'விளைந்த' என்பதும் பாடம் (ஷை 6—6—6)

23 களவழி. 35 : 3 - 5

24 'களவழிக் கவிதை பொய்கை உரைசெய்ய உதியன்
கால்வழித் தளையை வெட்டிஅர சிட்ட அவனும்'
(கலிங். இராச பாரம்பரியம், தாழிசை - 18)
உதியன் - சேரன், இங்குக் கணைக்கால் இரும்பொறையைக் குறிக்கிறது.
கால்வழித்தளை - காலில் இடப்பட்ட விலங்கு

இவை ஒருபுறம் இருக்க இவ் வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் புலவர்களையும் எண்ணுவோம். சங்க காலத்து நிகழ்ச்சியைப் பாடிய புலவர் பொய்கையார். இவர் கோக்கோதை மார்பனைப் பாடியுள்ளார்.[25] மற்றும் 'பொறையன்' என்னும் சேர அரசனையும் குறிப்பிட்டுள்ளார்.[26] இந்தப் பொறையன் கணைக்கால் இரும்பொறைதான் என்று அறுதியிட்டுக் கூறமுடியா விட்டாலும் பெயர் ஒப்புமை கருதி ஓரளவு ஏற்கத்தான் வேண்டும். ஆயின், இந்தக் கோதை மார்பனின் படைத்தலைவன் பிட்டன் என்று வரலாற்றுப்படி முடியும். பிட்டன் காலம் வேறு; கோச் செங்கணான் காலம் வேறு. முன்னது சங்ககாலத்தின் இடைப் பகுதி; பின்னது கடைப்பகுதி. மற்றும் கோக்கோதை மார்பன் பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன் என்று கொள்வது பொருத்தமானது என்று அவர்களது வரலாற்றில் விளக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பொய்கையாருக்கும் கோச்செங்கணானுக்கும் தொடர்பில்லை எனல் சாலும். மற்றுக் களவழி நூலைப் பாடிய புலவரும் பொய்கையார் என்றாலும், களவழிப் பாடலில் காணப்படும் நடைவேறுபாட்டை எண்ணி அவர்களை வெவ்வேறு பொய்கையார் என்று கொள்ளலே தகும். மற்றும், மூன்றாவது நிகழ்ச்சியோடு தொடர்புடைய பொய்கை யாரோ ஆழ்வார் (திருமால் அடியவர்). புலவர் தொடர்பான இந்த வேறுபாடுகளும் இவர்களை வெவ்வேறு காலத்தவராகவே கொள்ளவைக்கின்றன.

இந்த வரலாறு மூவேறு நிகழ்ச்சிகளாகக் கொள்ளத்தக்கது. செங்கணானுக்கு நல்லடி என்று ஒரு மகன் இருந்தான் என்று சிலர் கருதுகின்றனர். சோழர் குலத்தில் நல்லடி என்றும் ஒருவர் இருந்தார்.[27] சோழநாட்டைக் களப்பிரர் கைப்பற்றி இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏறத்தாழக் கி.பி. 250 அளவில் களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றினார்கள். அவர் களுக்குச் சோழநாடும் கீழ்ப்பட்டது. சேர பாண்டிய நாடுகளைக் களப்பிரர் கைப்பற்றிக் கொண்டதுபோலவே, சோழ நாட்டையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

சோழன் செங்கணானோடு, சங்க காலத்துச் சோழர் ஆட்சி முடிவுற்றது எனலாம்.

---

25 புறம். 48, 49

26 நற். 18 : 5

27 'கடும்பகட்டு யானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்
நல்லடி யுள்ளா னாகவும் ஒன்னார்' (அகம். 356 : 12 - 14)

பிற சோழ அரசர்கள் - 1

அரசுகட்டில் ஏறி நாடாளும் உரிமை பெறாத சில சோழ அரசர் குடியினரைப்பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அக் குறிப்புகளிலிருந்து, அந்த அரசக் குடியினர் செங்கோல் வேந்தரின் தம்பியராகவோ, சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளைகளாகவோ இருந்திருக்கவேண்டும் என்பது புலனாகிறது. அவர்களுள் சிலர், சிறப்புமிகு பாவலராகவும் விளங்கினர். 'எலி போன்றவர் நட்பு வேண்டா, புலிபோன்றவர் நட்பே போற்றிப் பேணத்தக்கது' எனும் அரிய கருத்தை அறிவுறுத்தும் சோழன் நல்லுருத்திரன்,[1] சோழன் நலங்கிள்ளியைப் போன்ற உணர்ச்சித் துடிப்பும் கற்பனை வளமும் வாய்ந்த புலவனாவான்.

கிள்ளிமரபினைச் சேர்ந்தோர்

நெடுமுடிக்கிள்ளி

மணிமேகலை என்னும் காப்பியத்தால் அறியப்படும் சோழ அரசன் நெடுமுடிக்கிள்ளி. 'இவனும் நெடுங்கிள்ளியும் ஒருவரா? வெவ்வேறானவரா?' என்னும் ஐயம் அறிஞர்களிடையே உண்டு. ஒருகால் இவன் ஒரு கற்பனைப் படைப்பாகவும் இருக்கக்கூடும். கிள்ளி என்பவன் புகார் நகரத்தில் இருந்துகொண்டு அரசாண்டான் என்பது மணிமேகலை வரலாற்றால் அறியப்படுகிறது. இவன் மகன் உதயகுமரன். இவன் மணிமேகலையைக் காதலித்தான். அவளை அடைய முயன்ற போதெல்லாம் அடைய முடியாமல் ஏமாந்தான். இறுதியில் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அவளைப் பலவந்தமாக அடையக் கருதி அவளது இருப்பிடம் சென்றபோது வேறொருவனால் கொல்லப்பட்டு மாண்டான். மகன் இவ்வாறு ஒருத்தியைக் கற்பழிக்க முயன்ற குற்றத்தைச் செய்து அந்தக் குற்றத்திற்காக வேறொருவனால் கொல்லப்பட்டு இறந்த செய்தியை நெடுமுடிக்கிள்ளி கேள்விப்பட்டான்; வருந்தினான். தன் மகன் இறந்தானே என்பது அவன் வருத்தம் அன்று. பிழை செய்தவனைத் தன் கையால் கொல்ல வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதே என்பதுதான் அவனது வருத்தம்.

---

1 'விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டுஅளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி உள்ளதம்
வளன்வலி யுறுக்கும் உளம்இ லாளர்' (புறம். 190 : 1–4)

இவனது முன்னோனான சோழ அரசன் ஒருவன் (மனுநீதிச் சோழன்) தன் மகனைத் தானே கொன்று தண்டனையை நிறை வேற்றினான். (துள்ளி விளையாடிய கன்றுக்குட்டி தவறிக் தேர்க்காலில் சிக்கி இறந்தது) தேரைச் செலுத்திச் சென்றவன் சோழ அரசன் மனுவின் மகன். தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை அடித்தபோது வந்து பார்த்து, நிலைமையை அறிந்த அரசன் தன் ஒரே மகனை அதே இடத்தில் கீழே கிடத்தி, அவன்மேல் தன் தேரை ஏற்றிக் கொன்று தாய்ப் பசுவுக்கு நீதி வழங்கினான்.

இந்த நிகழ்ச்சியை நெடுமுடிக்கிள்ளி நினைத்தான். தன் மகனைத் தன் கையால் கொன்று நீதி வழங்கும் வாய்ப்பு இல்லையே என்று வருந்தினான்.

இந்த நிகழ்ச்சிபற்றிய செய்தி பிற வேந்தர்களின் காதுகளில் படுவதன் முன்னர்த் தன் மகனது உடலைத் தன் கண்ணில் படாமல் எரித்துவிடும்படி ஆணையிட்டான். இவனது இந்தச் செங்கோன்மையை எண்ணும்போது தமிழர் உள்ளம் பெருமிதம் கொள்கிறது.

மற்றும் இந்த அரசன் தன் மகன் கொல்லப்படக் காரணமா யிருந்த அந்தப் பெண்ணையும் கைதுசெய்து காவலில் வைக்கு மாறு கூறினான். இவன் இவ்வாறு செய்ததிலும் தவறு இல்லை. அவன் அந்தப் பெண்ணைக் 'கணிகையின் மகள்' (விலைமாதர் மகள்) என்றே எண்ணியிருந்தான். இவளது வலையில்பட்டு இன்னும் பலர் தன் நாட்டில் அவலநிலை எய்தக்கூடும் என்று கருதினான். நாட்டு மக்களின் நலனுக்காகவே அவளைச் சிறை யில் அடைக்கச் செய்தான். மணிமேகலை சிறையில் அடைக்கப் பட்டாள்.

நெடுமுடிக்கிள்ளியின் மனைவி இராசமாதேவி செய்தியை அறிந்து மகனைப் பிரிந்த துன்பத்தால் மணிமேகலைக்குப் பல துன்பங்கள் செய்தாள். மணிமேகலை அத் துன்பங்களைக் களைந்து நலமுடன் இருந்தது கண்டு அரசி அவளிடம் மன்னிப்பு வேண்டினாள்.

மேலே கூறப்பட்ட அரசமாதேவியின் பெயர் சீர்த்தி. அவள் திருமாலுக்கு மூன்றடி மண் வழங்கி மாண்ட 'மாவலி' அரச பரம் பரையில் தோன்றிய ஒருவனின் மகள்.[2]

---

2 மணிமே. 19 : 54–55

நெடுமுடிக்கிள்ளி 'புன்னையங்கானல்' மணல்வெளியிலே உலாவிக் கொண்டிருந்தான். அங்கே தனித்து நின்ற ஓர் அழகியைக் கண்டான். பால் உணர்வுகள் அவர்களைக் கூட்டிவைத்தன. ஒரு மாதம் அவளுக்கும் அவனுக்கும் அவ்விடத்தில் களவு ஒழுக்கம் நடைபெற்றது. ஒரு மாதத்திற்குப் பின் அவளை அவ்விடத்தில் காணமுடியாமல் ஏங்கினான். அங்கே வந்த சாரணர் அவள் நாகநாட்டு இளவரசியாய் இருக்கக்கூடும் என்றனர். நாகநாட்டு அரசன் வளைவணன். அவனது மனைவி வாசமயிலை. இவர்கள் இருவருக்கும் பிறந்தவள் பீலிவளை.[3] இவள் பிறந்தபோது 'இவள் வயது வந்தபின் கதிர்க் குலத்தவன் ஒருவனைக் களவில் கூடிக் கருவுற்ற நிலையில் திரும்பி வருவாள்' என்று கணியர்கள் கணித்துக் கூறினர். இந்தச் செய்தி சாரணர்க்குத் தெரியும். அரசன் கூறிய கூற்றைச் சாரணர் கேட்டனர். சோழ அரசன் சூரிய குலத்தினன் எனவே, பீலிவளையைத்தான் அரசன் அடைந்து மகிழ்ந்திருக்க முடியும் எனக் கூறினர்.

(கருவுற்றுச் சென்ற பீலிவளை தான் கருவுற்ற நிலையை உணர்ந்தாள். உயிருடன் தன் தந்தை தாயாருக்குச் சுமையாக வாழ விரும்பவில்லை. எனினும், வயிற்றில் உள்ள குழந்தைக்காக வாழ்ந்தாள். குழந்தை பிறந்தது; ஆண் குழந்தை. அங்கு வந்த வாணிகர் கண்களில் படும்படி குழந்தையைக் கிடத்தி விட்டுச் சென்றுவிட்டாள். வாணிகர்கள், யாரும் இல்லாமல் கிடந்த குழந்தையைக் கண்டு எடுத்துவந்து சோழநாட்டில் சேர்ப்பித்தனர். தாய் மாண்டாள்; குழந்தை தன் தந்தை நாட்டுக்கே வந்துவிட்டது.)[4]

வஞ்சி வெற்றி

நெடுமுடிக்கிள்ளி நாட்டுப் பரப்பை விரிவுபடுத்தக் கருதினான். இதனால் இவன் வஞ்சி நகரைத் தாக்கினான். வெற்றி பெற்றான்.

காரியாற்றுப் போர்

இவனது தம்பி இவனுக்காகக் காரியாறு என்னுமிடத்தில் போரிட்டான். இவனை எதிர்த்துச் சேரரும் பாண்டியரும் போரிட்டனர். வெற்றி சோழர்களுக்குக் கிடைத்தது.[5]

---

3 மணிமே. 24 : 54-60

4 அடைப்புக் குறிப்பில் உள்ள கதைப் பகுதி செவிவழிச் செய்தியை அடிப்படையாகக் கொண்டது. வரலாற்று உண்மையன்று.

5 மணிமே. 19 : 124-127

பெயர்களும் அடைமொழிகளும்

'கிளர்மணி நெடுமுடிக்கிள்ளி',[6] 'அணிகிளர் நெடுமுடி அரசாள்வேந்தன்',[7] 'மாவண் கிள்ளி'[8] இவற்றில் முதல் இரண்டு தொடர்களும் இவன் தலையில் அணிந்திருந்த முடியின் சிறப்பை உணர்த்துகின்றன. 'மாவண்கிள்ளி' என்னும் தொடரும் 'மாவண் சோழர்'[9] என்னும் தொடரும் எந்த அளவு ஒற்றுமை உடையவை என்பது விளங்கவில்லை.[10]

இசைவெங்கிள்ளி

இவன் அம்பர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு அரிசிலாற்றங் கரையைச் சூழ்ந்த பகுதியை அரசாண்டு வந்தான். இவன் பாண்டிய அரசன் ஒருவனோடு போரிட்டு வெற்றி கண்டான்.[11] இவன் புதுமை அழகுடன் திகழும் வெற்றிக் கொடியை நாட்டி மகிழ்ந்தான்.

இவன் கைகளிலெல்லாம் மலர் மாலைகளை அணிந்து கொண்டான். இவன் களிற்றின்மேல் ஏறிப் போருக்கெழும் கோலம் அன்றைய மக்கள் உள்ளத்தைக் கவர்ந்திருந்தது.[12]

இசைவெங்கிள்ளி என்பதற்கு இசைத் தமிழில் வேட்கை யுடைய கிள்ளி என்றோ, புகழ்மீது வேட்கையுடைய கிள்ளி என்றோ பொருள்கொள்ளலாம்.

---

6 மணிமே. 24 : 29

7 ஷை. 22 : 215

8 ஷை. 19 : 127

9 அகம். 123 : 10

10 மாவண் கடலன் (அகம். 81 : 13) மாவண் கழுவுள் (அகம். 365 : 12)
மாவண் தித்தன் (புறம். 352 : 9)
மாவண் பாரி (புறம். 236 : 3
பதிற். 61 : 8) மாவண் புல்லி (அகம். 61 : 12, 359 : 12)
மாவண் தோன்றல் (புறம். 121 : 4)
அகம். 394 : 12 (தலைமகன்) என்னும்
தொடர்களையும் ஒப்புநோக்கி எண்ண வேண்டியுள்ளது.

11 பாடலில் 'பாண்டில்' என்றே உள்ளது. இச்சொல்லுக்குக் 'காளை' என்பது பொருள். காளையொடு பொருதான் எனில் வெற்றிக்கொடி நாட்டினான் என்பது பொருளின்றி முடியுமாகையால் ஏற்புடை வழியில் பாண்டிய அரசன் என்று கொள்ளப்பட்டது.

12 சல்லியங்குமரனார், நற். 141

கைவண் கிள்ளி

கரிகாலன் பெரும்போரில் ஈடுபட்ட ஊர் வெண்ணி என்பதை அறிவோம். இந்த வெண்ணியினைத் தலைநகராகக்கொண்டு ஒரு சமயம் 'கைவண் கிள்ளி'[13] என்பவன் ஆண்டுவந்தான்.

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் 'கைவண் தோன்றல்'[14] என்று குறிப்பிடப்படுகிறான். இந்தக் கைவண்மை குதிரை பூட்டிய தேரை ஓட்டுவதில் இவன் பெற்றிருந்த திறமையைக் குறிக்கிறது. இதனோடு மேற்கூறிய கைவண் கிள்ளிக்கு எந்த அளவு தொடர்பு உண்டு என்பது தெரியவில்லை.

பொலம்பூண் கிள்ளி[15]

பொலம்பூண் கிள்ளி என்று குறிப்பிடப்படும் இவன் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்துகொண்டு காவிரி ஆற்றுப் பள்ளத்தாக்கி லுள்ள நாட்டை ஆண்டுவந்தான்.

இவன் கோசர்களின் படையை அழித்தான். அன்றியும், அவர்களது நாட்டையும் கைப்பற்ற முயன்றான்.

கடுமான் கிள்ளி

'கதிரிலை நெடுவேல் கடுமான் கிள்ளி' என்று குறிப்பிடப் படும். இந்த அரசன் தன் யானையைக் கொண்டு பகைவர் மதில் களைத் தாக்கி அழித்தான் என்று தெரிகிறது.

வாள்பட்ட புண் ஆறி வடுப்பட்ட மேனியுடன் விளங்கிய ஏனாதிப் பட்டம் பெற்ற திருக்கிள்ளி என்னும் படைத்தலைவன் 'கடுமான் கிள்ளி' என்று குறிப்பிடப்படுகிறான்.[16]

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் என்பவன் 'கடுமான் தோன்றல்'[17] என்று குறிப்பிடப்படுகிறான்.

மேலே கூறப்பட்ட கடுமான் தோன்றல் அடுத்துக் கண்ட இருவருள் ஒருவனாகவோ, தனியொருவனாகவோ இருக்கலாம்.

---

13 நற். 390 : 3
14 புறம். 43 : 12
15 அகம். 205 : 10
16 புறம். 167 : 10
17 மே. 43 : 11-12

மணக்கிள்ளி

'சோழன் மணக்கிள்ளி' என்னும் பெயரைப் பதிற்றுப்பத்து நூலைத் தொகுத்த ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

'நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்'[18] செங்குட்டுவன் என்று அது குறிப்பிடுமிடத்தில் இப் பெயர் பெண்ணின் பெயராக அமைந்திருப்பதைக் காண்கிறோம். மணக் கிள்ளி என்னும் சோழ அரசனின் மகனது பெயரும் மணக்கிள்ளி என்றே வழங்கப்பட்டிருக்கலாம்.

'செங்குட்டுவனின் தாய்ப்பாட்டான் 'ஞாயிற்றுச் சோழன்' என்றும் குறிப்பிடப்படுகிறான்.[19] இங்கும் செங்குட்டுவனது தாயின் பெயர் காணப்படவில்லை. (ஆனால் இந்தப் பகுதிக்கு உரை கூறுகையில் அடியார்க்குநல்லார் ஞாயிற்றுச் சோழனை நெடுந்தேர்ச் சோழன் என்று சிறப்பித்துக் கூறி அவனது மகளுக்கு 'நற்சோணை' என்னும் பெயரையும் குறிப்பிட்டுள்ளார்.)

பிற சோழ அரசர்கள் - 2

சோழர் குடியினர் ஒன்பது இடங்களில் செல்வாக்குடன் தனித்தனிக் குடியினராய் விளங்கினர். அவர்களுள் புகார், உறையூர், கழார் ஆகிய ஊர்களில் இருந்துகொண்டு அரசாண்ட சோழ அரசர்கள் வரலாற்றை இதுவரைகண்டோம்.

பிற இடங்களில் (ஆர்க்காடு, வல்லம் ஆகிய இடங்களில்) இருந்துகொண்டு அரசாண்ட சோழ அரசர்களின் பெயர்கள் தெரிய வருகின்றன.

ஆர்க்காட்டுச் சோழர்[1]

நாடு

ஆர்க்காடு நீர்வளம் மிக்க ஊர். நெல்வயல் நீரில், நெய்தல் பூவிலுள்ள தேன் கலந்து பாயும்.[2] இந்த ஆர்க்காட்டைச் சூழ்ந் திருந்த பகுதியை நாம் ஆர்க்காட்டு நாடு என்று குறிப்பிட்டுக்

18 பதிற். பதி. 5 : 2-3
19 சிலப். 29 : உரைப்பாட்டுமடை

1 பறம். 71 : 13; நற். 87 : 3, 190 : 4, குறுந். 258 : 7
2 நற். 190 : 6; சிலப். 29 : உரைப்பாட்டு மடை

கொள்வோம். இந்த ஆர்க்காட்டு நாட்டில் வாழ்ந்த குடியினருள் ஒருவர் இளையர். இந்த இளையர் குடியினர் அலையலையாக வரும் வெள்ளம்போல் அணியணியாகச் சென்று வேட்டையாடு வார்கள். அவர்கள் வேட்டையாடிப் பெற்ற பொருள்களில் குறிப் பிடத்தக்கது யானைக்கோடு.[3] இந்த இளையர் குடியினர் வாள் வீரர்களாய் விளங்கினர்.[4] இவர்களின் பெருமகனாய் (தலை வனாய்) அழிசி என்பவன் விளங்கினான்.

ஆர்க்காட்டு நாட்டில் இருந்த காடு இந்த அரசன் அழிசியின் பெயராலேயே 'அழிசியம் பெருங்காடு' என வழங்கப்பட்டது.[5] இந்தக் காட்டு நெல்லிக்கனிகள் சிறப்புப் பெற்றவை.

நீர்வளம், நெல்லிமரக் காடு, சோழர் குடியினர் ஆட்சி ஆகியவற்றை எண்ணும்போது இந்த ஆர்க்காடு தஞ்சை மாவட் டத்தில் உள்ளதாக இடைக்காலக் கல்வெட்டுகள் குறிப்பிடும் ஆர்க்காட்டுக் கூற்றமோ என்று எண்ணவேண்டியுள்ளது.

இந்த ஆர்க்காட்டைத் தலைநகராகக்கொண்டு அரசாண்ட அரசர்களுள் மூன்று பேரைப் பாட்டன்—தந்தை—மகன் என்னும் உறவு முறையில் நாம் காணமுடிகிறது. அவர்கள் இவர்கள்:

ஆதன்
|
அழிசி
|
சேந்தன்

ஆதன்[6]

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் தன் அரசவையில் நட் புரிமையுடன் விளங்கிய ஐந்து பேரைக் குறிப்பிடுகையில் ஆதன் அழிசி என்னும் ஒருவனைக் குறிப்பிடுகிறான். இந்த அழிசி பிற புலவர்களால் குறிப்பிடப்படும் ஆர்க்காட்டு அரசன் அழிசியே என்று கொள்வதில் தவறில்லை. ஆயின், அந்த அழிசியின் தந்தை பெயர் ஆதன் என்பது பெறப்படுகிறது. இவனைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

---

3 'அரியல்அம் புகவின் அம்தோடு' குறுந். 258 : 5 புகா—உணவு, அரி—அரிசி. அரி அல்லாத அழகிய புகா—யானை. எனவே, கொல்லிமலை மக்கள் யானைக் கோட்டை விற்று வாழ்ந்த நிலையை ஓரி வரலாற்றில் கண்டு ஒப்புநோக்கலாம்.

4 குறுந். 258 : 6

5 நற். 87 : 3

6 புறம். 71 : 13

அழிசி

மேலே குறிப்பிட்டபடி இவன் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனுடைய நண்பனாக விளங்கினான். இதனால் இவன் சோழப் பேரரசின் தலைமை இடத்தோடு முரண்பட்டிருந்தானோ என்று எண்ணவேண்டியுள்ளது. பேரரசர்கள் பகையரசனின் சிற்றரசர்களைத் தம்வயப்படுத்திக் கொள்வது உண்டு. அந்த வகையில் இந்த அழிசி பாண்டியனின் நண்பனாய் விளங்கியிருக்கலாம்.

இவன் காவிரி ஆற்றங்கரையிலுள்ள மருதமரத்தில் கட்டி வைக்கப்பட்டான் என்றும், இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது என்றும் கூறப்படுகிறது.[7] இவன் பாண்டியனோடு சேர்ந்து கொண்டதால் சோழர்க்கு எதிராகப் படையெடுத்தான் என்று கருதிச் சோழப் பேரரசன் இவனை இவ்வாறு பலரும் நீராடும் நீர்த்துறையில் கட்டிவைத்து இழிவுபடுத்தியிருக்கக்கூடும் என்று எண்ண இடமுண்டு.

அழிசி, 'வெல்போர்ச் சோழர்' குடியில் தோன்றியவன்;[8] இளையர் குடியினரிடையே தலைமையாக விளங்கியவன்.[9] மலர்மாலை அணிந்துகொண்டு இவன் தேரில் உலாவருதல் கண்கொள்ளாக் காட்சி[10] ஆகும்.

சேந்தன்

அழிசி பாண்டியனின் நண்பனாக விளங்கினான் என்று கூறுவதைத் தவிர அவனது சிறப்புமிக்க அரசியல் தொடர்பான செயல்கள் வேறு ஒன்றும் இல்லை. அன்றியும் இவனது பெயரும் புகழும் அக்காலத்திலேயே பிற நாடுகளில் அவ்வளவாகப் பரவவில்லை. (எனினும், அவன் நாட்டுமக்கள் ஆர்க்காட்டையே அழிசியம் பெருங்காடு' என்று குறிப்பிடும் அளவுக்கு அவனைப் பெரிதும் போற்றி மதித்தனர்.) எனவே, அயல்நாட்டு மக்களுக்கும் புலப்படும்படி இவனை அறிமுகப்படுத்தும் புலவர்கள் இவன் மகன் சேந்தனைக்கொண்டு அறிமுகப்படுத்துவராயினர். அவர்கள் 'சேந்தன் தந்தை அழிசி' என்றே தெளிவாகக் குறிப்பிடுகின்றனர்.[11]

---

7 குறுந். 258 : 2-3
8 நற். 87 : 3
9 குறுந். 258 : 6
10 நற். 190 : 4
11 ஷ 190 : 3-4; குறுந். 258 : 4-7

போர்

சேந்தன் அரிய கோட்டையைத் தாக்கி வென்றான் என்று கூறப்படுகிறது. அந்தப் போரின்போது அவன் வேலில் படிந்த புள்ளி புள்ளியான குருதிக் கறையைத் துடைக்காமல் வெற்றிச் சின்னமாக அப்படியே வைத்துக்கொண்டு தோற்றமளித்த நிலைமையைப் புலவர் வியந்து குறிப்பிட்டுள்ளார்.[12]

இவன் 'ஏந்து கோட்டு யானைச் சேந்தன்' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளான். இதனால், இவன் யானைமீது ஏறிக் காட்சி தந்த நிகழ்ச்சிகள் பல எனலாம். இவன் தந்தை தேரில் ஏறிக் காட்சி தந்ததை இவ்விடத்தில் ஒப்புநோக்கலாம். யானை வேட்டையாடுவதில் வல்ல இளையர் குடியினர்க்கு இவன் தந்தை, தலைவனாக விளங்கியதற்கும், இவன் யானைமீது தோன்றியதற்கும் தொடர்பு இருப்பதைக் காணலாம்.

இந்தச் சேந்தன் சோழப் பேரரசனுக்குத் துணைவனாய் விளங்கினான் என்று கொள்ளலாம். இதனால், இவன் தந்தை இவனைக்கொண்டு அறிமுகப்படுத்தப்படுகிறான் என்றே கொள்ளலாம். படை எடுத்த கொடியவனை நேரடியே அறிமுகப் படுத்த விரும்பாத புலவர், அவனது மகன் நல்லவனைக் கொண்டு அறிமுகப்படுத்துகிறார் என்று எண்ணுவது பொருத்தமே.

அழிசி தன்னலத்துக்காகப் பாண்டியனோடு உறவு பூண்டான். அவன் மகன் சேந்தன் தன் நாட்டு மக்கள் நலனுக்காகத் தன் தந்தைக்கு மாறாகச் சோழப் பேரரசனுக்குத் துணையாய் விளங்கினான். இதனால், சேந்தன் போற்றப்பட்டான். இந்த நல்லவன் வழியே தீயவன் அறிமுகப்படுத்தப்படுகிறான். (கதைகளிலும் நாடகங்களிலும் நல்லவனைத் தலைவனாகவும், அவன் வழிக் கயவனை இழிந்தவனாகவும் காட்டுவதுபோலக் காட்டப் படுகிறான்.)

சோழர் மருகன் நல்லடி

நல்லடி என்னும் அரசன் 'சோழன் மருகன்' என்று குறிப்பிடப்படுகிறான். 'சோழர்வழி வந்தவன்' என்பது இதன் பொருள். இவன் 'வல்லங்கிழவோன்' என்று குறிப்பிடப்படுவதால் வல்லம் என்னும் ஊர்மக்களின் நன்மதிப்பினைப் பெற்ற அரசியல் தலைவனாக விளங்கினான் என்பது பெறப்படும்.

---

12 நற். 190 : 1-2

இவனது கோட்டைக் கதவுகளை இவனது பகைவர்கள் தாக்கினார்கள். பகைவர்கள் தாக்குவார்கள் என்று நல்லடி எதிர்பார்க்காதபோதே தாக்கினார்கள்.

ஆரியப் படை, வல்லம் என்னும் ஊரைத் தாக்கியது என்பதையும், அவ்வூரை அடுத்திருந்த காவற்காட்டில் அந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்பதையும் பின்னர்க் காணலாம். இந்த ஆரியரே இந்த நல்லடியைத் தாக்கியவர்கள் என்றும், நல்லடி அவர்களை முறியடித்தான் என்றும் நாம் கொள்ளலாம்.

சோழரின் படைத்தலைவர்கள்

சோழ வேந்தர்களின் படைத்தலைவராய் விளங்கியவர்களுள் நான்கு பேர்களின் பெயர்கள் தெரியவருகின்றன. பழையன் (சோழன் மறவன்),[13] ஏனாதி திருக்கிள்ளி,[14] சோழிய ஏனாதி திருக்குட்டுவன்,[15] மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்.[16] இந்த நால்வருள் பழையன் வரலாறும் மலையமான் வரலாறும் குறுநிலத் தலைவர்கள் வரிசையில் விளக்கப்படுகின்றன. சோழிய ஏனாதி திருக்குட்டுவன் வரலாறு சேரர் வரலாற்றுப் பகுதியில் உள்ளது. எஞ்சியுள்ள ஏனாதி திருக்கிள்ளி வரலாறும் கிள்ளி அரசர் வரிசையில் உள்ளது. தொகுத்துக் காட்டும் முறையில் இவர்களை இங்குக் குறிப்பிட்டோம்.

சோழ வேந்தரின் கால அடைவு

சங்ககாலச் சோழ வேந்தரின் வரலாற்றை வரைவதற்குச் சங்க இலக்கியப் பாடல்களே பேருதவியாக உள்ளன. ஆனால், அவற்றில் ஒரு குறையுண்டு. அரசர்களின் ஆட்சிக் காலத்தைப் பற்றியோ, எந்த ஆண்டில் யார் ஆட்சிக்கு வந்தனர் என்பதைப் பற்றியோ அவை யாதும் கூறுவது இல்லை. காலவரன்முறை, வரலாற்றின் கண்ணாகப் போற்றப்படுகிறது. காலத்தை வரையறுக்க நமக்கு அகச்சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும், அப் பாடல்களில் காணப்படும் சிற்சில குறிப்புகளையும், அம் மன்னர்களைப் பாடிய புலவர்களைச் சில தலைமுறையினராக வகைப்படுத்துவதற்குரிய செய்திகளையும், புறச்சான்றுகள் சில வற்றையும் கொண்டு, சங்ககாலச் சோழ வேந்தர்களை ஒருவகை

13 அகம். 326 : 9
14 புறம். 167
15 டி. 394
16 டி. 174

யாகக் 'காலத்தால் முற்பட்டவர் - பிற்பட்டவர் யாவர்' என்பதைத் துணிந்து, அம்முறையில் அவர்களுடைய வரலாற்றை வரைந் துள்ளோம்.

இனி, அவர்களுடைய ஆட்சிக் காலத்தைக் கணிக்கும் முயற்சியில் ஈடுபடலாம். அசோகனின் கல்வெட்டுகளால், கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சோழ வேந்தர் தமிழகத்தில் ஆட்சி புரிந்தனர் என்பதை நாம் முன்னரே கண்டோம்.

பண்டைத் தமிழகத்து வேந்தருள் காலத்தால் மிகவும் முற்பட்டவனாகக் கரிகாலன் காட்சி அளிக்கிறான். அவனைப் பற்றிப் பல வரலாற்றுச் செய்திகளை அறிய முடிகிறது. அவனை வெண்ணிக்குயத்தியார்,[1] கருங்குழலாதனார்,[2] குடவாயில் கீரத் தனார்,[3] கழாஅத்தலையார்,[4] பரணர்[5] போன்ற புலவர்கள் பாடியுள்ளனர். கரிகாலன் காலத்தில் சேரமான் பெருஞ்சேரலாதன் எனும் சேர அரசன் சிறப்புற்று விளங்கினான்.[6] கழாஅத்தலை யார் என்னும் புலவர் அவனைச் சுட்டுகிறார்.[7]

இப் பெருஞ்சேரலாதன் பதிற்றுப்பத்தின் முதற்பத்தில் பாராட் டப்படும் பெருஞ் (சோற்றுதியன்) சேரலாதனாக இருத்தல் கூடும். இதைக் கருதுகோளாகக் கொண்டால், இவனுடைய மகன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பது போதரும். இமயவரம்பன் மகனே (கடல் பிறக்கோட்டிய) செங்குட்டுவனாவான். இதனால், சேரன் செங்குட்டுவன் கரிகால் பெருவளத்தானுக்கு இரு தலை முறைகள் பிற்பட்டவனாவான்.

கரிகாலன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சிறப்புற்று விளங் கியது. அதன் சிறப்பினைப் 'பெரிபுளூஸ்' எனும் நூல் சுட்டுகிறது. இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் கி.பி. 81-க்கும் கி.பி. 96-க்கும் இடைப்பட்ட காலமாகும்.[8] எனவே, இதற்கு முன்பே கரிகால னால் பூம்புகார் வலிவும் பொலிவும் பெற்றிருக்கவேண்டும் என்பது புலனாகிறது. இதனால், கரிகாலன் கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவனாகத் தோன்றுகிறது.

---

1 புறம். 66
2 ஷை 7, 224
3 அகம். 44 : 13–14
4 புறம். 65, 202 : 12
5 அகம். 326 : 5
6 புறம். 65
7 ஷை
8 McCrindle, *Indian Antiquary*, Vol. VIII, p. 145

சேரன் செங்குட்டுவன் - கயவாகு (காமனி அபயன்) காலக் கணிப்பினை அறிஞர்கள் கணித்துள்ளனர். பரணவிதானே எனும் இலங்கை வரலாற்றறிஞர் கயவாகுவின் காலத்தைக் கி.பி. 111—136 என்று கணக்கிட்டுள்ளார்.[9] சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் குடமுழுக்கு விழா நடத்தியது, அவனுடைய ஆட்சியின் இறுதிப் பகுதியிலாகும். அப்பொழுது தான் கயவாகு ஆட்சிக்கு வந்து சில ஆண்டுகளே கழிந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. கி.பி. 115-ல் வஞ்சிமாநகரில் இத் திருவிழா நடந்ததாகக் கூறலாம். இதற்குப் பிறகு நான்கைந்து ஆண்டுகளே செங்குட்டுவன் ஆட்சி செய்ததாக அறிகிறோம். அவன் மொத்தம் 55 ஆண்டுகள் ஆட்சி செய்ததாகப் பதிற்றுப்பத்துப் பதிகம் தெரிவிக்கிறது. இவ்வடிப்படையில், செங்குட்டுவன் கி.பி. 65 முதல் கி.பி. 120 வரை ஆட்சி செய்தவனாகலாம்.

அவனுடைய தந்தையான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 58 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகப் பதிற்றுப்பத்தின் பதிகத்தால் அறிகிறோம். அவன் கி.பி. 7 முதல் கி பி. 65 வரை ஆட்சி செய்தவனாகலாம். இவனுடைய தந்தை பெருஞ்சேரலாதன் கரிகாலனோடு போரிட்டு மாண்டான். அவனுக்குப் பிறகு இவன் அரசுகட்டில் ஏறியுள்ளான். எனவே, பெருஞ்சேரலாதன் இறந்தது கி.பி. 7ஆம் ஆண்டு எனத் துணியலாம்.

கரிகாலன் சேரனோடு நடத்திய போர் வெண்ணிப்போர் என்பதாகும்.[10] அஃது அவனுடைய கன்னிப் போராகும். எனவே, கி.பி. 7ஆம் ஆண்டிற்குச் சற்று முன்பே கரிகாலன் ஆட்சிக்கு வந்திருத்தல் கூடும். கரிகாலன் கி.பி. 6ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்ததாகக் கொள்ளலாம். ஓர் அரசனுடைய ஆட்சிக் காலத்தை 25 ஆண்டுகள் கொண்டதாகக் கொள்ளுவது ஆராய்ச்சியாளர் வழக்கம். இவ்வடிப்படையில் கரிகாலன் கி.பி. ஆறாம் ஆண்டு முதல் கி.பி. மூப்பதாம் ஆண்டுவரையில் ஆட்சி செய்ததாகக் கொள்ளலாம்.

இந்தக் காலத்தை மையமாகக் கொண்டால், கரிகாலனுக்கு மூற்பட்ட பெருநற்கிள்ளி, சேட்சென்னி அரசர்களும், கோப்பெருஞ் சோழனும் கி. மு. முதல் இருநூற்றாண்டுகளில் ஆட்சி செய்தவர் களாகத் தோன்றுவர்.

---

9 Paranavitane, *History of Ceylon*, Vol. I, pp. 124-126, 181-185

10 புறம். 66 : 6

கரிகாலனுக்குப் பிறகு நலங்கிள்ளி ஆட்சிக்கு வந்ததாகத் தெரிகிறது. அவன் கி. பி. 30 - 55வரை ஆட்சி செய்ததாகக் கொள்ளலாம். அவனுடைய மகன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கி. பி. 56 முதல் கி. பி. 80வரை ஆட்சி புரிந்திருக்கக்கூடும். இவனுடைய காலத்தை யொட்டிக் குராப் பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் ஆண்டதாகக் கண்டோம். எனவே, கி. பி. 81முதல் கி. பி. 105வரை இவன் ஆண்டதாகத் தெரிகிறது. இதற்குப் பிறகு இரண்டு அல்லது மூன்று தலைமுறைச் சோழ அரசர்கள் யாவர் எனத் துணிய இயலவில்லை.

கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியின் சமகாலத் தவனாக இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி காணப்படுகிறான். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவனாவான். இவனுடைய சமகாலத்துப் புலவரான நக்கீரர், கிள்ளிவளவனிடத்துப் பழையன் மாறன் தோற்றோடியதைச் சுட்டுகிறார்.[11] எனவே, கிள்ளிவளவனுக்குப் பிறகு தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. இரண்டு தலைமுறை சோழ ராட்சியில் இடைவெளி காணப்படுவதாகக் கொண்டு கணக்கிட்டால், கி. பி. 155முதல் 180வரை இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆட்சி செய்ததாகக் கொள்ளலாம். இவனுக்குப் பிறகு யார் ஆட்சி செய்தார்கள் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

சோழ மரபின் சிறப்புமிக்க கடைசி அரசன் சோழன் செங்கணான். அவன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குக் காலத்தால் இரண்டு மூன்று தலைமுறைகள் பிற்பட்டவனாவான். இவன் கணைக்கால் இரும்பொறையோடு போரிட்டான் என்பதைக் கண்டோம். கணைக்கால் இரும்பொறை என்னும் சேர வேந்தன் மாரிவெண்கோ என்னும் சேர அரசனுக்குக் காலத்தால் மிகவும் பிற்பட்டவன்; எனவே, இரண்டு தலைமுறைகளுக்குப் பின்னால் தோன்றியவன் எனக் கொள்ளலாம். மாரிவெண்கோ இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் சமகாலத்து அரசன் என்பது முன்னர்ச் சுட்டப்பட்டது. எனவே, சோழன் செங்கணான் கி. பி. 230 முதல் கி. பி. 255 வரை ஆட்சி புரிந்ததாகக் கூறலாம்.

---

11 அகம். 346 : 19-22

ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகள் (கி.மு. 300 முதல் கி. பி. 300வரை) சங்ககாலச் சோழ மன்னர் ஆட்சிபுரிந்தமை இந்தக் காலக்கணிப்பினால் புலனாகிறது. செங்கணானுக்குப் பிறகு களப்பிரர் இடையீட்டால், தமிழக அரசியல் வானிலிருந்து சோழ அரசமரபு பையப் மறைந்துவிட்டது, ஆந்திர நாட்டில் ஆந்திரச் சோழ அரசமரபு ஒன்று கி. பி. நான்காம் நூற்றாண்டில் தோன்றியுள்ளதைக் காணுகின்றோம்.

இயல் 6

பாண்டியர்

பாண்டிய நாடு தமிழகத்தின் தென்கோடியில் கிழக்கே வங்காளக்குடாக் கடலையும், தெற்கே குமரிக் கடலையும், மேற்கே அரபிக் கடலையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. யவனர் இம் மூன்று கடல்களையும் செங்கடல் என்னும் பொருட்பட எரித்திரையக்கடல்[1] என்று அழைத்தனர். பாண்டி நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் கடல் உள்ளது. இராமேசுவரத்திற்கு வடபால் உள்ள கடற்பகுதி 'பாக்' கடலிணைப்பு என்றும், தெற்கிலுள்ள சிறுபகுதி 'மன்னார் வளைகுடா' என்றும் வழங்கப்படுகின்றன. இக் கடற்பகுதிகளைப் பெரிபுளூஸ் நூல் 'ஆர்கலஸ்'[2] என்றும், தாலமி 'ஆர்கலிக் கடல்' என்றும் குறிப்பிடுகின்றனர். இதனால் 'ஆர்கலி கடல்' என்னும் பெயர்[3] இப் பகுதிக்கு வழங்கியதாகக் கொள்ளலாம்.[4]

இப்போது இராமேசுவரம் இருக்கும் பாம்பன் தீவு முற்காலத்தில் பாண்டிய நாட்டோடு இணைந்திருந்தது. நானூறு ஆண்டுகளுக்குமுன் போர்ச்சுகீசியர் வந்து வாணிகம் செய்த காலத்தில் பெரும்புயல் ஒன்று அடித்து இந் நிலப்பகுதி கரைந்து தீவாக உருக்கொண்டது. ஆகையால், சங்க காலத்தில் இந்தத் தீவு பாண்டிய நாட்டோடு இணைந்திருந்தது. பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் இப்போதுள்ள இலங்கைத் தீவும் பாண்டிய நாடும் இணைந்து ஒரே நிலப்பரப்பாக இருந்தது. கன்னியாகுமரிக்குத் தெற்கிலும், கிழக்கிலும் அக்காலத்தில் நிலங்கள் இருந்தன. பின்னர் அவ்வப்போது தோன்றிய புயல்களினாலும், கடல் கொந்தளிப்பினாலும் கரைந்தும் சிதைந்தும் அந்நிலப் பகுதிகள் மறைந்துபோயின.

---

1 எரித்திரையக் கடலின் ஆதிப்பெயர் 'Erythraean Sea' என்பதாகும். எரிதிரியன்கள் ('Etruscans' என்போர்) என்ற செந்நிறமுடைய மக்கள் அக் கடல்களில் வாணிகம் செய்துவந்தனர்.

2 Argalus

3 Orgalic sea

4 முதுமொழிக்காஞ்சி 'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்' என்று கூறுமிடத்து அச் சொல் கடலின் பொதுப் பெயராக அமைந்திருந்ததைக் காணலாம்.

இப்பொழுது இலங்கை என்று வழங்கப் பெறும் நிலப்பகுதி சங்க காலத்தில் 'ஈழம்' எனப் பெயர் பெற்றிருந்தது.

இலங்கை தனியாகப் பிரிந்துபோன பிறகும், எஞ்சியிருந்த நிலப்பகுதிகளில் பல, கொஞ்சம் கொஞ்சமாகக் கடலில் முழுகிப் போயின. முழுகிப்போன பகுதிகளில் பல பாண்டியருடைய ஆட்சியில் இருந்தன. பாண்டிய அரசர்கள் அமைத்திருந்த தலைச்சங்கம், இடைச்சங்கம் என்ற இரண்டு தமிழ்ச் சங்கங் களும், கடலில் மூழ்கிப்போன நாட்டில் இருந்தன என்று பழைய செவிவழிச் செய்தி கூறுகிறது. சிலப்பதிகாரமும், கலித்தொகை யும், இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரமும் பாண்டிய நாட்டின் தெற்கே பரவியிருந்த நிலப்பகுதிகள் கடலில் மூழ்கிப் போனதைப்பற்றிக் கூறுகின்றன.[5] இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சமும் இச் செய்தியை வலியுறுத்துகிறது.[6] அக் காலத்திலும் குமரித்துறை புண்ணிய தீர்த்தமாகக் கருதப்பட்டது. கி.பி இரண்டாம் நூற்றாண்டில் குமரித் துறையில் இருந்து இலங்கைப் பக்கமாக கடலில் இடையிடையே பாறைக்கற்கள் காணப்பெற்றதை மணிமேகலை கூறுகிறது.[7] இந்திய நாட்டு மக்கள் காசிக்குச் சென்று கங்கையில் நீராடிய பிறகு குமரித் துறை யிலும் நீராடினர். பாண்டி நாட்டிற்குத் தெற்கே இலங்கை வரையில் இருந்து பின்னர் மூழ்கிப்போன நிலம் 'லெமூரியா' என்றும், 'குமரிக்கண்டம்' என்றும் கூறப்படுகிற பழங்காலப் பெரிய நிலப்பரப்பு அன்று. இப்பொழுது இந்தியப் பெருங்கடல் என்று கூறப்பெறுகிற பெரிய நிலப்பரப்பு மிகப்பழைய காலத்தில் ஆப்பிரிக்காக் கண்டம் முதல் ஆஸ்திரேலியா வரையில் பரந்த பெரிய நிலமாக இருந்தது என்றும், அதற்கு 'லெமூரியா' என்னும் பெயர் வழங்கியதென்றும், பின்னர் அக் கண்டம் மறைந்துபோய் இந்தியப் பெருங்கடல் தோன்றியதென்றும் நிலப்பொதியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். மிகப் பழங்காலத்தில் இருந்த லெமூரியாக் கண்டம் வேறு; சங்க காலத்தில் கன்னியாகுமரிக்கு

---

5 'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' (சிலப். 11 : 19-20)

'மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவா நாடு இடர்ப்பட
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்' (கலி. 104 : 1-4)

'அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்து கடல் கொள்ளப்பட்ட மதுரையும்
கபாடபுரமும் என்ப.' (இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம்)

6 மகாவம்சம், 22 : 20

7 மணிமே. 5 : 37

அருகிலே இருந்து மறைந்துபோன நிலப்பரப்பு வேறு. இவை இரண்டையும் ஒன்றாகக் கூறுவது கூடாது.[8]



நிலப் படம் 3

---

8 லெமூரியா பற்றிய தீர்ந்த முடிவு இதுகாறும் கிடைக்கவில்லை. எனினும், லெமூரியாக் கண்டம் இருந்தது உண்மையே என்றும் 1,50 000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் முதாதையர்கள் அங்கு வாழ்ந்திருக்கக் கூடுமென்றும் இந் நூலின் முதல் தொகுதியில் 'தெல்பழங்காலம்' பக்கம் 25-ல் விளக்கப் பட்டுளளது. அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களின் மூதாதையர்கள் என்று தீர்மானமாகக் கூறமுடியாவிட்டாலும் தென்னிந்தியாவை ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியாவுடன் இணைத்த ஒரு பொதுநிலப்பகுதி இருந்திருக்கலாம். அண்மையில் ஜப்பான் மொழிக்கும் தமிழுக்கும் தொடர்பு இருந்திருப்பதாகச் சில அறிஞர் கூறுகின்றனர். கபாடபுரத்தை வடநாட்டுக் காப்பியங்கள் குறிப்பிடுவதிலிருந்து ஒரு நிலப்பகுதி குமரிக்குத் தெற்கில் இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

மேற்கு எல்லைப் பகுதி

சங்க காலத்துப் பாண்டிய நாடு மேற்குக் கரைப்பக்கத்தில் இப்போதைய தென்திருவாங்கூர் வரையில் பரவி இருந்தது. பொதிகைமலை நாடும், நாஞ்சில் நாடும் தென்திருவாங்கூர் வரையில் பாண்டிய நாட்டுடன் சேர்ந்திருந்தன. ஆய் என்னும் வேள் அரசர் பொதிகைமலை நாட்டை அரசாண்டார். பாண்டிய அரசர்களைச் சேர்ந்திருந்த ஆய்ச் சிற்றரசர்களின் நாடு, மேற்குக் கடற்கரை வரையில் விரிந்து இருந்தது.

வடக்கு எல்லைப் பகுதி

முதுகோடி (தனுக்கோடி) பாண்டிய நாட்டைச் சேர்ந்திருந்தது.[9] தென்வெள்ளாறும் அதன் பகுதியாகிய கொடும்பாளூரும் பாண்டிய நாட்டின் வடஎல்லைகளாகும். கொடும்பாளூரையாண்ட குறுநில மன்னர்கள் இருங்கோவேள் என்பவராவர்.[10] திண்டுக்கல பாறையும், கோடைக்கானல் மலைகளும் பாண்டிய நாட்டின் வடக்கே இருந்தன. கோடைக்கானலில் தென்னவன் மறவனான கோடைப் பொருநன் பாண்டியருடைய சேனாதிபதியாக இருந்தனன்.[11] பன்றிமலைகள் எனப்படும் வராக மலைகளும் பாண்டிய நாட்டின் வடபகுதியில் இருந்தன. அரபிக் கடலை அடுத்திருந்த வேணாடு சங்ககாலத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்திருந்தது.

பாண்டிய நாட்டு மலைகள்

இருங்குன்றம்

இக் குன்றம் அக்காலத்தில் கீழ்இரணியமுட்ட நாட்டைச் சேர்ந்திருந்தது. ஓங்கிருங்குன்றம், கேழிருங்குன்றம், மாலிருங்குன்றம், திருமால்குன்று, திருமால் இருஞ்சோலை, சோலைமலை முதலான சிறப்புப் பெயர்கள் இதற்கு வழங்கின. இம் மலையில் கண்ணன், பலராமன் ஆகிய இருபெருந் தெய்வங்களுக்கும் கோயில்கள் இருந்தன.[12] புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் மூன்று பொய்கைகள் இங்கிருந்தன.[13] சிலம்பாறு அல்லது நூபுரகங்கை இம் மலையில் தோன்றிப் பாய்ந்தது.

---

9 'வெல்வேற் கவுரியர் தொன்முது கோடி' (அகம். 70 : 13)

10 கொடும்பாளூர் இக்காலத்திய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது.

11 அகம். 13 : 10

12 பரிபா. 1 : 1-5, 2 : 19-21, 13 : 27-33, 15 : 13-14

13 சிலப். 11 : 94-97

சுமார் 16 கி. மீ. நீளமுள்ள இம் மலைகளின் குகைகளில் பல சமண முனிவர்கள் வாழ்ந்தனர்.

திருப்பரங்குன்றம்

சங்ககாலத்துப் புலவர்களால் சிறப்பித்துப் பாடப்பெற்ற தெய்வம், திருப்பரங்குன்றத்து முருகனாகும். இக் குன்றத்தின் உச்சியில் இயற்கையாக அமைந்துள்ள குகைகளில் முனிவர்களின் கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக் கல்வெட்டுகளும் உள்ளன. இங்குள்ள தாமிழி எழுத்துக் கல்வெட்டுகளில் சங்க காலத்திய நல்லந்துவனார் பெயர் காணப்படுகிறது.[14]

ஆனைமலை

சங்கச் செய்யுள்களில் ஆனைமலையைப்பற்றி ஒன்றும் சொல்லப் பெறவில்லை. எனினும் 'சங்ககால எழுத்துகள் இம் மலையில் உள்ளன.

பறம்பு மலை

பாண்டிய நாட்டில் இருந்த இம் மலைக்குத் தலைவன், பாரி வள்ளலாகும்.

பொதிகை மலை

பொதியில், பொதியம் என்று வழங்கப்பெறும் இம் மலைக்குத் தென்னவன் பொதியில், ஆய்பொதியில் என்னும் பெயர்கள் வழங்கப்பெறுவதால், இது பாண்டிய நாட்டு மலை என்பது தெளிவாகும். சங்கப் புலவர்களில் ஒருவராகிய அகத்தியர் பொதிகை மலையில் இருந்ததாகக் கூறப்படும் கதை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றியது. சிலப்பதிகாரத்தில் கூறப் பெறும் பொதியில் முனிவர் அகத்தியர் அல்லர். வடமொழியில் உள்ள பாகவத புராணத்தில் பொதிகை மலையில் மலயத்துவச பாண்டியன் தவம் செய்ததாகக் கூறுகிறதேயன்றி, அகத்தியர் தவம் செய்ததாகக் கூறவில்லை.

கழுகு மலை

மதுரை மாவட்டம் மீனாட்சிபுரத்தையடுத்துள்ள இந்த மலையைப்பற்றிச் சங்கப் பாடல்களில் குறிப்புகள் இல்லை. எனினும் சங்ககாலத்துக் கல்வெட்டுகள் இந்தக் மலையில் காணப்

14 இந் நூலின் அடிப்படைச் சான்றுகள்-II, கல்வெட்டு வரிசை எண் 44 முதல் 46 வரை

பெறும் சமணர் குகைகளில் உள்ளன. பாண்டிய அரசன் நெடுஞ் செழியன்பற்றியும் அவனது பகைவன் கடலன்வழுதிபற்றியும் அக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[15]

ஆறுகள்

வையை, சிலம்பாறு, பஃறுளி, குமரி ஆகிய ஆறுகள் பாண்டிய நாட்டில் பாய்ந்தன என்று சங்கப்பாடல்களால் அறிகிறோம். இவற்றுள் குமரியாறும் பஃறுளியாறும் கடலில் மூழ்கிப்போன நிலப்பகுதியில் பாய்ந்தன. வையையாற்றிற்கு வைகை என்னும் பெயரும் வழங்கியது. இவ்வாற்றின் தென் கரையில் மதுரை நகரம் இருந்தது. இந் நகரம் வட்டவடிவமாக தாமரைப் பூப்போல் அமைக்கப்பட்டிருந்தது. இந் நகரத்தின் கோட்டைச் சுவருக்கு வெளியே அதைச் சூழ்ந்திருந்த அகழியில் வையை நதியின் நீர் பாய்ந்தது.[16] வையையில் திருமருதந்துறை என்னும் இடத்தில் சங்ககாலத்து மக்கள் புதுப்புனலில் நீராடி மகிழ்ந்தனர்.

சிலப்பாறு

திருமாலிருஞ்சோலை மலையில் தோன்றிப் பாய்ந்தது.[17]

பஃறுளியாறு

இது கன்னியாகுமரிக்குத் தெற்கிலிருந்த ஓர் ஆறு. கி.பி. முதல் நூற்றாண்டிற்கு முன் கடல்கோளினால் மறைந்துபோயிற்று. குமரியாறும் மேற்கூறப்பெற்ற கடல்கோளினால் மறைந்தது.[18]

துறைமுகப் பட்டினங்கள்

சங்க காலத்தில் பாண்டிய நாட்டில் நிலைபெற்றிருந்த தொண்டி, மருங்கூர்ப்பட்டினம், கொற்கை, குமரி, விழிஞம் முதலிய துறைமுகங்களைப்பற்றிச் சற்று விரிவாகக் காணலாம். இக்காலத்தில் தொண்டி என்ற துறைமுகங்கள் இரண்டில் ஒன்று மேற்குக் கரையில் சேர நாட்டிலும், மற்றொன்று பாண்டிய நாட்டுக் கிழக்குக் கரையிலும் இருந்தது. கிழக்குக் கரையிலிருந்த

---

15 இந் நூலின் அடிப்படைச் சான்றுகள்–II, கல்வெட்டு வரிசை எண் 1-6

16 பரிபா. 12 : 9 10, கலி. 67 : 3-4

17 சிலப். 11 : 108; பரி. 15 : 21-23

18 'அக்காலத்து அவர் நாட்டிற்குத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழு நூற்றுக் காவதம்—கடல் கொண்டு ஒழிதலால் குமரியாகிய பௌவம் என்றார்.'
—சிலப். 8 : 1–2 அடியார். உரை

தொண்டி, பாண்டிய நாட்டின் வடக்கு எல்லையில் இருந்தது. இத் துறைமுகத்தில் கிராம்பு, இலவங்கம், தக்கோலம், சாதிக்காய், கற்பூரம் முதலிய நறுமணப் பொருள்கள் இறக்குமதி செய்யப் பெற்றன.[19] இத் துறைமுகப்பட்டினம் பிற்காலத்தில் மறைந்து இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி என்னும் சிற்றூராக இருக்கிறது. மருங்கூர்ப்பட்டினம் மருங்கை என்றும் வழங்கியது. இதற்கு மேற்கில் ஊணூர் என்னும் இடமும், அதைச் சூழ்ந்து மதிலும், அம் மதிலைச் சூழ்ந்து நெல்வயல்களும் இருந்தன.[20] நெல் வயல்கள் மிக்கிருந்த ஊர் சாலியூர் இதற்கும் நெல்வினூர் என்னும் பெயர் பெற்றிருந்த ஊருக்கும் தொடர்பு இருந்திருக்கலாம். நெல்வினூர்த் துறைமுகத்தில் பெரிய நாவாய்கள் தங்கிச் சென்றன. தாலமி என்ற யவன ஆசிரியர், 'சாலோர்' என்று குறிப்பிடும் இடம் சாலியூர் ஆகலாம்.[21]

கொற்கை, குமரி, விழிஞம்

உலகப் புகழ்பெற்ற பாண்டி நாட்டுத் துறைமுகப்பட்டினம் கொற்கையாகும். இத் துறைமுகம் ஒரு வளைகுடாவில் இருந்த தனால் முத்துக் குளிக்கும் இடமாகவும், சங்கு எடுக்கும் இடமாகவும் விளங்கியது. கொற்கையில் கிடைத்த முத்துகள் உலகப் புகழ் பெற்றவையாகும். சங்கப் புலவர்களும் இங்குக் கிடைத்த முத்துகளின் பெருமையைப் புகழ்ந்துள்ளனர். கொற்கை, பாண்டிய இளவரசர்களுடைய இருக்கையாகவும் திகழ்ந்தது. யவனர்கள் 'கொல்கொய்' என்று வழங்கிய துறைமுகம் கொற்கையேயாகும்.[22] கடல் கொண்ட கவாடபுரம் கொற்கையாக இருக்கலாம் எனச் சில அறிஞர்கள் கருதுவர். பாண்டிய நாட்டின் தென் கோடியில், கன்னியாகுமரிக்கருகில் குமரித்துறைமுகம் இருந்தது. இது துறைமுகமாகவும் புனித நீராடும் இடமாகவும் கருதப்பெறுகிறது. தமிழ்நாட்டவரும், மற்றையோரும் இங்குப் புனித நீராடுவதுண்டு. குமரித் துறைமுகத்திற்கருகில் குமரி என்னும் ஊரும், அங்கு ஒரு கப்பல் அமைக்கும் தொழிற்சாலையும் இருந்ததென்று யவனர்களுடைய குறிப்புகளிலிருந்து அறிகிறோம். பாண்டிய நாட்டின் மேற்குக் கடற்கடற்கரையில் ஆய் நாட்டில் விழிஞம் என்னும் துறைமுகப்பட்டினம் இருந்தது. ஆய் நாட்டுக் குறுநிலமன்னர்கள்

---

19 சிலப். 14 : 108-112

20 அகம்: 220 : 13

21 பெரிபுளூஸ் 'நெல்சிந்தா' என்று குறிப்பிடும் மேற்குக் கடற்கரைத் துறைமுகத்தையும் 'நெல்லினூர்' என்று கொள்ள இடமுண்டு. இதுவும் பாண்டியருக்குச் சொந்தமானது என்று பெரிபுளூஸ் நூல் கூறுகிறது.

22 Kol kei

பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆவர். ஆய் நாட்டில் (எலங்கோன்) என்னும் துறைமுகம் இருந்ததென்று தாலமி என்னும் ஆசிரியர் கூறியுள்ளது விழிஞம் துறைமுகமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[23]

முற்காலப் பாண்டிய நாட்டு நகரங்கள்

கடல்கொண்ட மதுரை

கன்னியாகுமரிக்குத் தெற்கே இருந்த நிலப்பரப்பில் ஆதி மதுரை இருந்து பின்னர்க் கடலில் மூழ்கியது.[24] இக் கடல் கோளுக்குப் பிறகு கவாடபுரம் பாண்டியர்களுடைய தலைநகராயிற்று.[25] இக் கவாடபுரத்தில்தான் இடைச்சங்கம் இருந்ததெனச் செவிவழிச் செய்தி கூறுகிறது. இரண்டாவது கடல்கோளில் இக் கவாடபுரம் அழிந்துபோயிற்று. கவாடபுரத்தில் முடத்திருமாறன் என்ற பாண்டிய அரசன் இருந்ததாகவும், அவ்வரசன் வையை யாற்றங்கரையில் மதுரை நகரத்தை அமைத்து அதைத் தலை நகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான் எனவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.[26]

கூடல் நகர்

கவாடபுரம் கடலில் மூழ்கியபிறகு கூடல் நகரம் பாண்டிய நாட்டின் தலைநகரமாயிற்று. இந் நகரம் தாமரை மலர்போல் வட்ட வடிவமாக அமைக்கப்பெற்றதென்றும், அம் மலரின் நடுவிலுள்ள பொகுட்டுப்போலப் பாண்டியனுடைய அரண்மனை இருந்ததாகவும், அரண்மனையைச் சூழ்ந்திருந்த தெருக்கள் தாமரை மலரின் இதழ்களைப் போலவும், அந் நகரத்தில் வாழ்ந்த மக்கள் மலரில் இருந்த மகரந்தப் பொடிபோல இருந்தனர் எனவும் கூறப்பெறுகிறது.[27] மதுரை நகரத்தைச் சூழ்ந்து மூன்று மதில்கள் ஒன்றுக்குள் ஒன்றாக இருந்தன. கோட்டை மதிலுக்கு

---

23 Elankon of Ptolemy

24 'சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப.' (களவியலுரை)

25 'அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது' (களவியலுரை)

26 இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம்

27 பரிபா. தி. 7 : 1-5

வெளியே மிளைக்காடு நிறைந்த காவற்காடு இருந்தது. மிளைக் காட்டைச் சூழ்ந்து அகழி இருந்தது. கோட்டை வாயிலின் மேலே பாண்டியருடைய கயற்கொடி பறந்தது. கையில் பந்து ஏந்திய பெண்பாவை உருவங்கள் கோட்டை வாயிலில் தொங்கிக் கொண்டிருந்தன. கூடல் நகரத்திற்கு மேற்கே திருப்பரங்குன்றம் இருந்தது.[28] கோட்டை வாயிலில் யவன வீரர்கள் காவல் புரிந்தனர். அவர்களுடைய தோற்றம் அஞ்சத்தக்கதாக இருந்தது.[29] தாலமி 'மதௌர' என்னும் பெயரால் இந்த நகரைச் சுட்டியுள்ளார். மதுரை நகரக் கோட்டையைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக மதிலின்மீது போர்க்கருவிகள் வைக்கப்பட்டிருந்தன.[30] மதுரைக்கு அருகில் மோகூர் இருந்தது. பிற்காலத்தில் இது 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்றாகத் திருமோகூர் எனப் பெயர்பெற்றது. பாண்டிய மன்னர்களின் படைத்தலைவனாகிய பழையன் மாறன் இவ்வூர்ப்பகுதியின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்தான். இவனது காவல்மரமாகிய வேம்பு, இவ்வூரில் ஓங்கி வளர்ந்திருந்தது. சேரன் செங்குட்டுவன் பழையனை வென்று இதனை வெட்டிச் சாய்த்தான்.

தங்கால் என்னும் ஊர் திருவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ளது. இது திருத்தங்கால் என்றும் அழைக்கப்பெறுகிறது. தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், தங்கால் ஆத்தி ரேயன், செங்கண்ணனார் ஆகிய சங்கப் புலவர்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அலைவாய் எனப்படும் திருச்செந்தில் பாண்டிய நாட்டின் கீழைக்கரை ஓரத்தில் உள்ளது. சங்ககாலம் முதல் இங்கு முருகன்கோயில் ஒன்று இருந்துவருகிறது. பிசிர் என்பது பாண்டிய நாட்டில் இருந்த மற்றோர் ஊராகும். இவ்வூரில் வாழ்ந்த புலவர் பிசிராந்தையாருக்கும் சோழ நாட்டரசனாகிய கோப்பெருஞ்சோழனுக்கும் நெருங்கிய நட்பு இருந்தது.[31]

இவை சங்க காலத்துப் பாண்டிய நாட்டின் எல்லைகளையும் அந் நாட்டில் சிறந்து காணப்பெற்ற மலைகள், ஆறுகள், பட்டினங்கள், நகரங்கள் ஆகியவற்றையும்பற்றிச் சங்க இலக்கியச் சான்றுகளால் அறிவனவாகும். இனி, அக்காலத்துப் பாண்டிய மன்னர்களைப் பற்றி ஆராய்வோம்.

---

28 முருகு. 67-77

29 சிலப். 14 : 67

30 மே. 15 : 207-16

31 புறம். 215 : 6-7

பாண்டிய மன்னர்களின் குலம்[32]

1. அயலகக் குறிப்புகளால் அறியப்படும் பாண்டிய மன்னர்கள்

பாண்டிய மன்னர்களைப்பற்றிய வரலாறு தொடர்ச்சியாகவும் வரன்முறையாகவும் கிடைக்கப்பெறவில்லை. அயல்நாட்டவருடைய குறிப்புகளைக்கொண்டு சில பாண்டிய மன்னர்களின் வரலாறுகளை அறியமுடிகிறது. இவர்களைப்பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் இல்லை.

கி. மு. நான்காம் நூற்றாண்டுப் பாண்டியன்

இலங்கை நாட்டின் முதல் அரசனான விசயனுக்குப் பெண் கொடுத்த பாண்டியன் ஒருவனைப்பற்றித் தீபவம்சம், மகாவம்சம் ஆகிய இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. விசயன், தன்னுடைய 700 தோழர்களோடு வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து, அங்கு அரசு செலுத்தி வந்த இயக்கர் என்னும் இனத்தாரை வென்று, தனது அரசை நிறுவினான். விசயனுக்கு முடிசூட்ட விரும்பிய அரசன் அவனது புதல்வியை மணம் பேசித் திருமணம் செய்வித்தனன். ஆனால், விசயனுக்கு மகட்கொடை

---

32 திருக்குறளின் சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகர் 'குடிமை' என்னும் அதிகாரத்தில் ஐந்தாவது திருக்குறளுக்குப் பொருள் கூறுமிடத்துப் 'பழங்குடி' என்னும் சொல்லிறுதி 'சேர, சோழ, பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வருதல்' எனக் கூறியுள்ளார். ஆகையால், பாண்டியர் குலம் இன்ன காலத்தில் தோன்றியதென்று அறுதியிட்டுக் கூற இயலாது. தென்னிந்தியத் தலபுராணங்களில் பாண்டியர்கள் சந்திரகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பெறுகிறது. இக் கூற்றுகள் பாண்டிய மன்னர்களுடைய நீண்டகாலத் தொடர்பைக் குறிக்கின்றன. பாண்டிய மன்னர்களின் குலத்தைச் சார்ந்தவர்கள் தற்காலத்தில தமிழ்நாட்டில் உள்ளனரா ? என உறுதியாகக் கூறுவதற்கில்லை. சில வரலாற்றாசிரியர்கள் தென்தமிழ்நாட்டு மறவர் குலத்தைப் பாண்டிய மன்னர்களுடைய சந்ததியார் என்று கூறுவர். மற்றும் சிலர் கள்ளர்கள் இனத்தைச் சார்ந்தவர்களே பாண்டியர்களுடைய சந்ததியார் ஆவர் என உரைப்பர். இப்பொழுது தென்மாவட்டங்களில் வாழும் 'பள்ளர்' இனத்தைச் சேர்ந்தவர்களே பாண்டிய மன்னர்களின் மூதாதையர்கள் என்றும், 'மள்ளர்' என்று சங்க இலக்கியங்களில் காணப்படும் குலப்பெயர் பள்ளர் என்று திரிந்துவிட்டது என்றும் சிலர் கூறுவர். இக் கூற்றில் எவ்வளவு வரலாற்றுண்மை பொதிந்துள்ளது என்பது அறிஞர்களின் ஆய்விற்கு உரியதாகும். சங்க இலக்கியங்களில் பயின்றுள்ள 'மள்ளர்' என்னும் சொல் பள்ளர் எனத் திரிந்தது என்பதற்கும், இப் பள்ளர்கள் பாண்டிய மன்னர்களின் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கும் தகுந்த ஆதாரங்கள் இல்லை. (ப-ர்.)

செய்த பாண்டிய அரசனுடைய பெயர் இவ் வரலாற்று நூல்களில் குறிப்பிடப் பெறவில்லை. மற்றும் விசயனுக்குப் பாண்டியன் மகளைத் திருமணம் செய்வித்த அவனுடைய 700 தோழர்களும் பாண்டிய நாட்டுப் பெருங்குடியிலிருந்து மகளிரை மணந்து கொண்டனர் என்றும் இந் நூல்கள் கூறுகின்றன. மணமகளான பாண்டிய குமாரியையும், மற்றும் பிற மணமகளிரையும் படைச் சிறப்புடன் இலங்கைக்கு அனுப்பிவைத்தான். அவர்களோடு தன் நாட்டிலிருந்து கொல்லர், தச்சர், உழவர், குயவர் முதலான பதினெட்டு வகையான தொழிலாளர்களையும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆயிரவரையும் இலங்கைக்கு அனுப்பிவைத்தான். இலங்கை மன்னனாகிய விசயன் தன்னுடைய மாமனாராகிய பாண்டியனுக்கு ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் பொன் பெறுமானம் உள்ள முத்துகளைக் காணிக்கையாக அனுப்பிக் கொண்டிருந்தான். இந் நிகழ்ச்சிகள் கி. மு. நான்காம் நூற்றாண்டில் நடந்ததாக இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இச் செய்திகளை உறுதி செய்யக்கூடிய சான்றுகள் தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை. இலங்கை மன்னன் விசயனுக்கு மகட்கொடை அளித்ததைத் தவிர, அப் பாண்டிய மன்னனைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

பாண்டிய அரசி

சந்திரகுப்த மௌரியருடைய ஆட்சிக் காலத்தில் கி. மு. 304-ல் செலியூகஸ் நிகேட்டாருடைய தூதனாகப் பாடலிபுத்திரத்தில் இருந்த மெகஸ்தனீஸ் தாம் எழுதிய இண்டிகா என்னும் நூலில் பாண்டிய நாட்டில் ஒரு பெண் ஆட்சி செய்தாள் என்று கூறியுள்ளார். அவளது பெயர் தடாதகைப் பிராட்டி என்று தமிழ்ப் புராணங்கள் கூறினாலும் அவளுடைய சரியான பெயர் தெரியவில்லை.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அரசாண்ட அசோகன் தனது பாறைக் கல்வெட்டுகளில் சேர, சோழ, பாண்டிய அரசர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறான்.[1] தன்னுடைய தருமத்தை மக்களிடையே பிரசாரம் செய்யவும், மக்களுக்கும் விலங்குகளுக்கும் உதவி செய்வதற்கும் பௌத்த பிக்குகள் தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பெற்றதாகக் கூறியுள்ளான். இக் கல்வெட்டுகள் பாண்டியர்கள் என்று குறிக்கின்றனவேயன்றிக் குறிப்பிட்ட அரசனுடைய பெயரைக் கூறவில்லை.

---

1 Rock Edicts II and XIII

கலிங்க நாட்டை அரசாண்ட காரவேலன் ஏறத்தாழக் கி. மு. 185-ல் தென்னாட்டின்மீது படையெடுத்து வந்து தமிழ் நாட்டு மன்னர்களை வென்று அவர்களிடமிருந்து பொன், மணி, முத்துகள் முதலியவற்றைப் பெற்றான் என்று கூறும் அத்திகும்பா கல்வெட்டிலும் பாண்டிய மன்னனுடைய பெயர் குறிப்பிடப்பெற வில்லை.

ஆகையால், இயற்பெயர் தெரியாத இந்தப் பாண்டிய அரச னும் அரசியும் அயலகக் குறிப்புகளால் அறியப்படும் அரச - அரசியர் ஆவர்.

2. செழியன் என்னும் பெயருடைய அரசர்கள்

செழியன்

இப் பெயர் பொதுவாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையே சுட்டுவதாகும். தெளிவாக அறியப்பெறும் செய்திகளின் அடிப்படையில் சமணரைப் பேணியவன், ஆரியப் படை கடந்தவன், தலையாலங்கானத்துச் செருவென்றவன் ஆகிய மூவரைக் கால வரிசைப்படக் கூறலாம். எனினும், இவர் களது ஆட்சிக் காலங்களுக்கு இடையில் நிலவிய நிகழ்ச்சிகளைப் பற்றியோ அரசர்களைப்பற்றியோ தெளிவாக அறியமுடியவில்லை.

சமணரைப் பேணிய நெடுஞ்செழியன்

இவனைப்பற்றிய செய்திகள் மீனாட்சிபுரம் தாமிழிக் கல் வெட்டுகளால் அறியப்பெறுகின்றன. வானநூல் அறிஞரான நந்தி என்னும் சமணப் பெரியாருக்கு, இந்த நெடுஞ்செழியன் மலைக் குகையில் கற்படுக்கைகளைச் சமைத்துக் கொடுத்தான் என்ற செய்தியை இக் கல்வெட்டால் அறியமுடிகிறது. மேலும், இக் கல் வெட்டில் கடலன்வழுதி என்னும் பெருந்தச்சனைப்பற்றியும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இத் தச்சன் கற்படுக்கைகளின் தரை யைச் செம்மைப்படுத்தினான். சடிகன், இளஞ்சடிகன் ஆகிய இருவருடைய பெயர்களும் இக் கல்வெட்டில் காணப்பெறு கின்றன.[1]

---

[1] இந் நூல் அடிப்படைச் சான்றுகள் – II, கல்வெட்டு எண்கள் 1 முதல் 6

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

இவன் பாடிய பாடலொன்று புறநானூற்றில் காணப் பெறுகிறது. இப் பாடல் கல்வியின் சிறப்பைச் சித்திரிக்கிறது. இதில் அக்காலத்திய நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பெற்றிருந்த குறிப்பும் காணப்பெறுகிறது.[2] கோவலனைக் கொலைசெய்தவன் என்று சிலப்பதிகாரத்தில் கூறப்படும் பாண்டிய அரசன்,

'வடவாரியர் படைகடந்து
தென்றமிழ் நாடு ஒருங்கு காணப்
புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்'[3]

என்று குறிப்பிடப்படுகிறான். இவ்வாறு குறிப்பிடப்பெறும் 'ஆரியப்படை கடந்த' என்னும் தொடரும் புறநானூற்றைத் தொகுத்தவர் குறிப்பிடும் 'ஆரியப்படை கடந்த' என்னும் தொடரும் ஒன்றாக அமைவதால் இவ்விருவரும் ஒருவரே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் இவனோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் இவனது வரலாற்று நிகழ்ச்சிகளே என்று கூறலாம்.

வார்த்திகனைச் சிறையிட்டது

சோழ நாட்டில் பராசரன் என்னும் பார்ப்பனன் ஒருவன் இருந்தான். அவன் சேர அரசன் ஒருவன் மறையவன் ஒருவனுக்கு வீடுபேறு கொடுத்த செய்தியைக் கேள்விப்பட்டு (பல் யானைச் செல்கெழு குட்டுவன்) அவனைத் தானும் நேரில் கண்டு பரிசில் பெற்றுத் திரும்பினான்; வழியில் தங்கால் என்னும் இடத்தில் ஓர் ஆலமரத்தடியில் தங்கி இளைப்பாறினான். அப்போது பார்ப்பனச் சிறுவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்

---

2 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.' (புறம். 183)

3 சிலப். 23: கட்டுரை 14-18

டனர். பராசரன் தன்னோடு வழுவின்றி வேதம் ஓதுபவர்க்கு ஒரு பரிசு நல்குவதாகக் கூறினான். அவ்வூரில் வாழ்ந்த வார்த்திகன் என்னும் அந்தணனின் மகன் வழுவின்றி வேதம் ஓதக் கேட்டுத் தன்னுடைய முத்துப் பூணூலை அச் சிறுவனுக்கு அளித்தான். ஏழை வார்த்திகன் மகனின் மார்பில் விலையுயர்ந்த முத்துப் பூணூலைக் கண்ட அரசு காவலர் அரண்மனையில் திருடிய குற்றம் சாட்டி வார்த்திகனைச் சிறையிலிட்டனர்.

வார்த்திகனின் மனைவி கார்த்திகை தன் மகனுக்கு இழைக்கப்பெற்ற கொடுமையை ஐயை கோயிலில் முறையிட்டு அழுதாள். ஐயைத் தெய்வம் தன் கோயிற் கதவுகளை அடைத்துக்கொண்டது. தன்னாட்சியில் கொடுங்கோன்மை நிகழ்ந்துள்ளதோ என வினவிப் பாண்டியன் ஆராய்ந்தபோது, காவலர் வார்த்திகனுக்கு உண்டாக்கிய துன்பத்தைக் கூறினர். மன்னன் வார்த்திகனை வருவித்து அவனிடம் மன்னிப்பு வேண்டினான். ஐயை கோயில்கதவு திறந்துகொண்டது. இங்குக் குறிப்பிடப்படும் மன்னனுடைய பெயரும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று கருதத்தக்கது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் மதுரைநகர் (அரண்மனை) அழியும் என்ற நிமித்திக வாக்கு மக்களிடையே நிலவி வந்தது [4] அரியணையில் அமர்ந்த படியே இறந்துபோனமையால் இந்தப் பாண்டியன் அரசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியன் என்று பெயர் பெற்றான். வார்த்திகன் நிகழ்ச்சியில், அறியாத மக்களின் சொல்லைக் கேட்டு, இவன் கொடுமை செய்தது போலவே கோவலன் நிகழ்ச்சியிலும் அரண்மனைப் பொற்கொல்லன் சொல்லைக் கேட்டு இவன் கோவலனைக் கொன்றுவிடச் செய்கிறான். முன்னர்ச் சிறையில் இருந்து விடுதலையால் அப் பிழை பொறுக்கப்பட்டது. இப் பொழுது கொலையுண்ட உயிருக்கு ஈடாகத் தன் உயிரையே கொடுக்கவேண்டிய நிலை நேர்ந்துவிடுகிறது. தன் தவற்றினை உணர்ந்தபோது, தனக்குத் தானே தண்டனை விதித்துக் கொண்டு அரியணையிலிருந்து கீழே விழுந்து உயிர்துறந்தான். பாண்டிமாதேவியும் கோவலன் கொலைக்கு ஒருவகையில் காரணமாகையால் கணவனுடன் தானும் மாண்டு செங்கோலை நிலை நாட்டுகிறாள்.

---

4 'ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து
அழற்குட டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோடு அரைசுகே டுறும்எனும்
உரையும் உண்டே நிரைதொடி யோயே' (சிலப். 23 : 133-137)

ஆரியப்படையை வென்றது

தமிழ்நாட்டுக்குத் தெற்கிலிருந்த நிலப்பகுதியைக் கடல் கொண்டமையால் தமிழர், தம் நாட்டுப் பரப்பை வடக்கில் விரிவாக்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஆரியரும், தெற்கில் தம் நாட்டை விரிவுபடுத்திக் கொண்டிருந்தனர். இந்தப் போட்டியில் நிகழ்ந்த போர்களில் நெடுஞ்செழியன் ஆரியப் படைகளை வென்றிருத்தல் வேண்டும். ஆகையால், இவனுக்கு 'ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்' என்னும் பெயர் வழங்கியிருத்தல் வேண்டும். இங்குச் சுட்டப்படும் 'ஆரியர்', தொடக்க காலப் பல்லவராக இருத்தல் கூடும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் அப் போரில் ஏழு அரசர்களை வென்றவன் ஆவான்; வென்வேற் செழியன் என்றும் ஒரு பாடலில் குறிப்பிடப்படுகிறான்.[5] இப் பாடல் பாண்டியன் நெடுஞ்செழியன்மீது பாடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.[6] எனவே, 'வென்வேற் செழியன்', 'பாண்டியன் நெடுஞ்செழியன்' ஆகிய பெயர்கள் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையே சுட்டுகின்றன. இப் போரில் ஏழு பேரை வென்ற அரசனைப் 'பசும்பூட் செழியன்' என்று குறிப்பிடப்படும் அரசனும் இவனே எனத் தெரிகிறது.[7] வென்வேற் செழியன் என்னும் பெயர் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்குப் பிறகு மதுரையில் அரியணை ஏறிய வெற்றிவேற் செழியன் என்னும் பெயரை நினைவுபடுத்துகிறது.[8] இவன் தொடக்கத்தில் கொற்கை நகரில் இருந்துகொண்டு அரசாண்டமையால் இவன் கொற்கைக் கோமான் என்றும், மதுரையை ஆண்ட அரசன் என்றும் குறிப்பிடப்படுகிறான்.[9] கொற்கையில் ஆட்சியைத் தொடங்கிய இவன் 'கடுந்தேர்ச் செழியன்' என்றும், 'தென்புலங் காவலர் மருமான்' என்றும் குறிப்

---

5 'தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத்து ஒருமையும்
தின்னெடு தூக்கிய வென்வேற் செழிய!' (புறம். 19 : 2-4)

6 ஷை 19 : 2 4

7 ஷை 76 : 9

8 கொற்கையில் இருந்த வெற்றிவேற்செழியன். (சிலப். உரைபெறு கட்டுரை)

9 'கொற்கைக் கோமான்
தென்புலங் காவலர் மருமான்' (சிறுபாண். 62-63)

பிடப்படுகிறான். மற்றொரு பாடல் 'இயல்தேர்ச் செழியன்', 'நெடுந்தேர்த் தென்னவர் கோமான்' எனவும் குறிப்பிடுகிறது.[10] தேர் அடைமொழியும், தென்னர் குடித் தலைமையும் சேர்ந்து மேலே கண்ட கருத்துகளை உறுதிப்படுத்துகின்றன. மற்றும் 'கொடித்தேர்' என்னும் அடைமொழியாலும் சிறப்பிக்கப்படுகிறான்.[11] அடுபோர், வெம்போர், மறப்போர், நெடுந்தேர், கடுந்தேர், இயல்தேர், கொடித்தேர், திண்டேர் முதலிய சொற்கள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனைக் குறிக்கின்றன எனக் கூறலாம். வெற்றிவேற் செழியன் என்பதும் இவனையே உணர்த்தியது என்றும் நினைக்கலாம்.

நாடு

தொடக்க நிலையில் இவன் கொற்கையைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சூழ்ந்திருந்த நிலப்பரப்பை ஆண்டு வந்தான். கொற்கையை அடுத்த கடலில் முத்து எடுக்கப்பட்டது. அந்தக் கடற்பகுதியும் இவனாட்சிக்கு உட்பட்டிருந்தது.[12] தென்னர் கோமான் என்றும், தென்புலம் காவலர் மருமான் என்றும் இவன் கூறப்படுவதால் தென்பாண்டிநாடு இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததெனத் தெரிகிறது. ஆலங்கானப்போர் இவனது இளமைப் போர் எனத் தெரிய வருவதால் அப் போருக்குப் பின்னர், இவன் தன்னாட்டின் பரப்பை மேலும் விரிவுபடுத்தினான் எனத் தெரிகிறது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்தபிறகு பாண்டிய நாட்டில் செல்வாக்குப் பெற்ற அரசன் இல்லை. நாட்டில் நல்லாட்சி இன்மையால், பாண்டிய நாடு மழை வளங்குன்றி நலிவுற்றது.[13] இந் நிலை ஏற்படுவதற்குச் சில ஆண்டுகள் பிடித்திருக்கும். அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவர் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.[14] பின்னர்த் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூடல்நகரைக் கைப்பற்றி அரசனானான்.[15] பின் இவன் எவ்வியை வென்று அவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்த மிழலைக் கூற்றத்தைக் கைப்பற்றினான். வேளிரை வென்று முத்தூற்றுப் பகுதியைக் கைப்பற்றினான். கொங்கர்களை அவர்களது

---

10 அகம்.209 : 3-4

11 'இழையணி நெடுந்தேர்க் கைவண் செழியன்' (அகம். 47 : 15)

12 'முத்தின் தெண்கடல் பொருநன் திண்டேர்ச் செழியன்' (ஷ 137 : 13-14)

13 சிலப். 23 : உரைபெறு கட்டுரை

14 பசும்பூண் பாண்டியன் எனக்கொள்ள இடமுண்டு.

15 அகம். 149 : 13-14, 231 : 12-13 ; நற். 39 : 9-10

நாட்டைவிட்டுத் துரத்தினான். சேர அரசனுடைய முசிறியையும் கைப்பற்றினான். இவ்வகையில் இவனது நாட்டுப் பரப்பு விரிவடைந்தது. இவற்றால் அள்ளூர், சிறுமலை முதலிய பகுதிகள் இவனது ஆட்சிக்குட்பட்டன.[16]

போர்கள்

ஏழு அரசர்கள் ஒருங்குகூடித் தலையாலங்கானம் என்னுமிடத்தில் இந்த நெடுஞ்செழியனைத் தாக்கினர்.[17] சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய ஏழு அரசர்கள் இந்தக் கூட்டுக் குழுவிலிருந்த பகையரசர்களாவர்.[18] இப் போர் நடந்தபோது நெடுஞ்செழியன் மிகவும் இளைஞனாக இருந்தான் என்று தெரிகிறது.[19] இந்தப் போரைப்பற்றிப் பல புலவர்கள் பல பாடல்களில் குறித்துள்ளனர். வேற்படையின் துணைகொண்டு அவன் வெற்றிபெற்றதுபற்றியும், பிற அரசர் துணையின்றிப் போரிட்டு வென்றது, போருடை அணிந்த வீரர்கள் பேரெண்ணிக்கையில் வந்து தாக்கியது, கிணை முழக்குடன் ஒரு பகலிலேயே ஆரவாரமின்றி அடக்கத்துடன் திறமையாகப் போரிட்டது, தலையாலங்கானப் போரின் தொடர்ச்சியாகப் பகைவர்களைத் துரத்தியடித்து அவர்களுடைய அரண்களைத் தாக்கும் போரில் ஈடுபட்டது, கூலிப் படையின் துணையால் பகைவர் நாடுகளைச் சூறையாடியது, திங்கள் தோன்ற ஞாயிறு மறைந்ததுபோல அவர்களை வென்றது முதலான செய்திகள் கூறப்பெற்றுள்ளன. பகை மறவரின் மூதிற் பெண்கள் அழுதரற்ற வென்று, ஒரு பகலில் வெற்றிபெற்றுப் பகைவரின் முரசு, குடை முதலியவற்றைக் கைப்பற்றிக் களவேள்வி செய்த வீரச் செயல்களையும்பற்றி மேற்கூறப்பெற்ற புலவர்கள் கூறியுள்ளனர். இப் புலவர்களில், இடைக்குன்றூர்க்கிழார், கல்லாடனார், குடபுலவியனார், நக்கீரர், வெங்கண்ணியார், மாங்குடிமருதனார் முதலியோர் முக்கியமானவர் ஆவர்.

ஆலங்கானப் போரில் நெடுஞ்செழியன் உழிஞைப் பூச்சூடிப் போரிட்டான் என்று கூறப்பட்டுள்ளது.[20] இவ்வகைப் போர் பகைவரின் கோட்டையைத் தாக்கும் போர்முறை என்பதை நாம்

16 அகம். 46 : 14, 47 : 16

17 இத் தலையாலங்கானம் என்னுமிடம் தஞ்சை மாவட்டத்திலுள்ள தலையாலங்காடு என்று கருதப்படுகிறது.

18 அகம். 36 : 15-20

19 புறம். 77 : 6

20 டி 76 : 5-9

அறிவோம். இதனால், நெடுஞ்செழியன் தலையாலங்கானத்தை முதலில் தாக்கினான் என்பதும், அத் தாக்குதலை முறியடிக்கவே ஏழு அரசர்கள் ஒன்றுசேர்ந்தனர் என்பதும் தெரியவருகின்றன. அப் போரில் நெடுஞ்செழியனை எதிர்த்த ஏழுவரில் ஐவர் குறுநில மன்னர்கள், எஞ்சிய இருவர் முடியுடை வேந்தர்கள் ஆவர். நெடுஞ்செழியனை எதிர்த்த சேர அரசன் இன்னான் என்பது தெளிவாகத் தெரியவில்லை. சேரல் என்று அவனது பெயர் பொதுவகையால் சுட்டப் பெற்றுள்ளது. சேரல் என்னும் பொதுப் பெயருடன் நெடுஞ்சேரலாதன், நார்முடிச்சேரல், அந்துவஞ்சேரல், மாந்தரஞ்சேரல், பெருஞ்சேரல், இளஞ்சேரல் ஆகிய பல அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் ஆதன் என்னும் பின்அடையோ, இளமை, பெருமைப் பண்பை உணர்த்தும் முன் அடையோ இன்றிக் காணப்படும் அரசர்கள் நார்முடிச் சேரல், குட்டுவன்சேரல், மாந்தரஞ்சேரல் என்னும் மூவரேயாவர். இந்த மூவரில் மாந்தரஞ்சேரல் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் சிறையிலிருந்து தப்பிச் சென்றான் என்று ஒரு பாடலில் கூறப்படுவதால், மேற்கூறப்பட்ட போரில் இந்தப் பாண்டியனை எதிர்த்துத் தோற்றவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையே என்று நாம் கருதலாம். இவன் சிறையில் இருந்து தப்பிச் சென்ற செயல், குழியில் அகப்பட்ட யானை, குழியைத் தூர்த்துக்கொண்டு தப்பிச் சென்றதுபோல் அமைந்திருந்தது என்று கூறப்படுவதால், சிறையில் அடைக்கப் பட்டான் என்பது தெளிவாகிறது.

நெடுஞ்செழியனை எதிர்த்த சோழன்

இவன் பெயர் செம்பியன் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இவன் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் வழியில் வந்தவன் எனலாம். இச் செய்தியின் விளக்கத்தைச் சோழர் வரலாற்றில் நாம் கண்டோம்.

கடற்போர்

தலையாலங்கானத்துப் போர் நெடுஞ்செழியனுடைய இளமைக் காலத்தில் நடந்ததாகும். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்குப் பிறகு மதுரையை ஆண்ட அரசன் இன்னான் என்பது தெளிவாக விளங்கவில்லை. பசும்பூண் பாண்டியன் போன்ற அரசர்கள் இடைக்காலத்தில் அரசாண்டு உட்பூசலில் மாண்டுபோய், நாடு அரசனின்றி இருந்தது எனக் கருதலாம். இந்நிலையில் நெடுஞ்செழியன் கூடல் நகரத்தைத் தாக்கிப் பாண்டிய நாட்டின் அரியணையைக் கைப்பற்றியிருக்க

வேண்டும்.[21] நெடுஞ்செழியன் பாண்டிய நாட்டினைக் கைப் பற்றுவதைச் சோழனும் சேரனும் எதிர்த்துள்ளனர். இவர் களுடைய முயற்சி வெற்றி பெறாது, தங்களுடைய முரசங்களைப் போர்க்களத்திலேயே போட்டுவிட்டு ஓடினர். நெடுஞ்செழியன் பெருவெற்றி பெற்றான்.[22]

எவ்வி, வேளிரோடு போர்

நெடுஞ்செழியன் கொற்கையிலிருந்து மதுரைக்குத் தலை நகரை மாற்றிக்கொள்ளவே, பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையில் கிழக்குப் பகுதியில் மிழலைக் கூற்றத்தை ஆண்டுவந்த எவ்வி என்ற குறுநில மன்னன் பாண்டியனுக்குக் கப்பம் கட்டாது ஆளத்தொடங்கினான் போலும். இதனால், நெடுஞ்செழியன் எவ்வியைத் தாக்கி நல்லூரைத் தன்னகத்தே கொண்ட அவனது மிழலைக்கூற்றத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அக்காலத்தில் முத்தூறு என்னும் பகுதியில் வாழ்ந்த தொன்முது வேளிர் என்னும் குடிமக்கள், தம்மூள் ஒன்று கூடி நெடுஞ்செழியனை எதிர்த்தனர். நெடுஞ்செழியன் அவர்களை வென்று, அவர்களது முத்தூற்றுகூற்றத்தைத் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டான்.

பல்குட்டுவரை வென்றது

சேர அரசர்களில் இளஞ்சேரல் இரும்பொறை, குட்டுவர் ஏறு என்று கூறப்பெறுகின்றான். இவனது தந்தை குட்டுவன் இரும்பொறை என்று குறிப்பிடப்படுகிறான். எனவே, பொறையர் குடியைச் சேர்ந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறைக்குக் குட்டுவர் குடியைச் சேர்ந்த சிற்றரசர்கள் உறு துணையாய் விளங்கி வந்தனர். நெடுஞ்செழியன் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைத் தாக்கியபொழுது பல குட்டுவர்களுடன் போரிட நேர்ந்தது.

முசிறிப்போர்

பல்குட்டுவரை வென்றதன் காரணமாக, கீழைச் சேரர் செல்வாக்கை ஓரளவு இவன் அடக்கிவிட்டான். அப்போது மேலைச் சேரர் இவனை எதிர்த்து நின்றனர். சேரன் செங்குட்டு

---

21 'தண்ணார் ஆண்டலை மதிலர் ஆகவும் முரசுகொண்டு
ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன், பெரும்பெயர்க்கூடல்' (நற். 39 : 7-10)

22 'ஆடுகொள் முரசின் அடுபோர்ச் செழியன்
மாட மூதூர் மதிற்பறம் தழீஇ—யாத்தகுடை' (அகம். 335 : 10-14)

வனுக்குக் குட்டுவன் சேரல், குட்டுவன்கோதை என இருமக்கள் இருந்தனர். குட்டுவன் சேரல் பரணருக்குப் பணிவிடையாளாகக் கொடுக்கப்பட்டான். குட்டுவன் கோதையே நாட்டையாண்டு வந்தான்; தன் தந்தை செங்குட்டுவனுக்குப் பிறகு தொண்டி, வஞ்சி முதலிய இடங்களில் ஆட்சி புரிந்தான். குட்டுவன் கோதையின் துறைமுகப் பட்டினமாகிய முசிறியை நெடுஞ் செழியன் தாக்கி, அவனுடைய யானைப் படையை அழித்தான். குட்டுவன் கோதையும் தோல்வியுற்றான். இதனால் நெடுஞ் செழியன் பல குட்டுவரை வென்றவன் என்று பாராட்டம் பெற்றான்.

நெல்லினூர் கொண்டது

பெருங் கப்பல்கள் வந்து தங்கி, வாணிகச் சிறப்புடன் விளங்கிய 'நெல்லினூர்' என்னும் ஊரையும் நெடுஞ்செழியன் கைப்பற்றினான். நெல்சிந்தம் என்னும் மேற்குக் கடற்கரைத் துறைமுகம் வாணிகத்தில் சிறப்புற்று விளங்கி, பாண்டியர்களுக் குரியதாய் விளங்கியது பற்றியும் கிரேக்க ஆசிரியர்கள் குறிப் பிட்டுள்ளனர். இந்த நெல்லினூரையே அவர்கள் நெல்சிந்தம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நெல்லினூரையே நெடுஞ் செழியன் கைப்பற்றினான்.[23] குட்டுவரையும் முசிறியையும் வென்ற செய்திகளுக்கு இவ்வெற்றி தொடர்புடையதாகிறது.

முதுவெள்ளிலையும், முதுபொழில் மண்டிலமும்

முதுவெள்ளிலை மருதநில வளமும் நெய்தல்நில வளமும் ஒருங்கமையப்பெற்ற ஓர் ஊர். இவ்வூரை நெடுஞ்செழியன் கைப் பற்றிக் கொண்ட பிறகு இவனது நல்லாட்சியில் மகிழ்ந்து அவ்வூர் மக்கள் இவனைப் பெரிதும் பாராட்டினர்.[24] முதுபொழில் மண்டிலம் என்பது சிறப்பாக ஓர் இடத்தைக் குறிப்பது அன்று. நாவலந் தண்பொழிலாகிய நாடு முழுவதுமே முதுபொழில் மண்டில மாகும். இவன் பல நாடுகளை வென்று தன் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்த செயலே முதுபொழில் மண்டலம் முற்றியதாகக் கூறப்படுகிறது.[25]

---

23 சிலர் நெல்சிந்தம் என்பது கிழக்குக் கடற்கரைத் துறைமுகமெனக் கூறுவர். அங்ஙனமாயின் அது பாண்டியருடைய துறைமுகமாகும். அதனைக் கைப்பற்றம் பாண்டியன் முயன்றிருக்க இயலாது.

24 மதுரைக். 119

25 ஷெ 190

ஆட்சி

குளம் வெட்டி நாட்டில் நீர்வளத்தைப் பெருக்கவேண்டும் என்று புலவர் ஒருவர் இவனிடம் அறிவுரை கூறினார்.[26] இவரது அறிவுரைப்படி இவன் பெருங்குளம் என்னும் பெயருடைய குளத்தை அமைத்தான்.[27] இவன் நான்மறைகள் கூறும் வேள்விகளைச் செய்தான்.[28] அன்றியும் களச்சோறு வழங்கும் வேள்வியும் செய்தான்.[29] இந்த வேள்விகள் பல நாடுகளை வென்றதன் நினைவாகச் செய்த அறக்கொடைகள் ஆகும். இந்த அறக் கொடைகள் வீரர்க்கும், பாணர் முதலானோர்க்கும், நான்மறை வல்ல அந்தணர்களுக்கும் வழங்கியவையாகும்.

புறநானூற்றுச் செய்யுளில் நம்பி நெடுஞ்செழியனைப்பற்றிக் கையறு நிலையில் பேரெயின் முறுவலார் என்ற புலவர் பாடியுள்ளார். நம்பி நெடுஞ்செழியன் போரில் ஈடுபட்டு உயிரிழந்தான். போர்க்களத்தில் இறந்த அவனுடைய தலைமாத்திரம் கிடைத்த நிலையில் பேரெயின் முறுவலார் பின்வருமாறு இரக்கம் கொண்டு பாடியுள்ளார். 'நம்பி நெடுஞ்செழியன், சந்தனம் பூசி மலர்மாலையணிந்து உரிமை மகளிரைத் தழுவி மகிழ்ந்தான்; பகைவர்களை அடியோடு ஒழித்தான்; நண்பர்களுக்கு உயர்வளித்தான். தன்னைவிட வலிமை உடையவராயின் அவர்களிடம் வணங்குவதோ, தன்னைக் காட்டிலும் வலிமை குறைந்தவர்கள் முன்னிலையில் தன்னைப் புகழ்ந்து பேசிக்கொள்வதோ இவனிடம் காணமுடியாத பண்புகள். பிறரிடம் இரப்பதோ, இரந்தவர்களுக்குக் கொடுக்க மறுப்பதோ இவனிடம் கிடையாது. பல அரசர்கள் கூடியிருந்த சபையில் தலைமை தாங்கினான்; தாக்க வரும் படையை எதிர்க்கத் தான் முதலில் சென்றான்; பல படைகள் தன் முன் நிற்கமாட்டாது புறமிட்டு ஓடியதைக் கண்டு மகிழ்ந்தான்; குதிரைமீதும், தேர்மீதும், களிறுமீதும் ஊர்ந்து சென்று அந்தந்தப் படைகளின் தலைமையை ஏற்றுப் போரிட்டான்; பாணர்களின் பசியைத் தீர்த்தான்; மிகுதியாகக் குடிக்காமல், அளவோடு பருகி, கள் மயக்கம் கொண்டு பேசும் வழக்கம் இவனிடம் இல்லை. இத்தகைய நற்பண்புகள் உடையவனாக இருந்தான்.[30]

---

26 புறம். 18 : 28–30
27 நற். 340 : 3
28 புறம். 26 : 13–15
29 டி 372 : 5–12
30 டி 239

நம்பி நெடுஞ்செழியன்

பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசன் ஒருவன் சங்க காலத்தில் விளங்கினான்.[81] நம்பி நெடுஞ்செழியன் என்ற பெயரை நோக்குகையில் இவனை அறிவுடை நம்பியின் மகன் என்று கருதலாம்.

3. மாறன் என்னும் பெயருடைய அரசர்கள்

இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய புலவர்களான மருதன் இளநாகனாரும் நக்கீரரும் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனையும் நேரில் கண்டு பாடியுள்ளனர்.[1] இவனைப் பாடியுள்ள பிற புலவர்களை நோக்கும் போது இவன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனுக்குப் பிறகு ஆட்சி புரிந்தவன் எனத் தோன்றுகிறது. நெடுஞ்செழியனுக்கும் இவனுக்கும் இருந்த உறவையும் நெடுஞ்செழியனுக்கு அடுத்து அரியணையில் அமர்ந்தான் என்பதையும் திட்டவட்டமாகக் கூற இயலாத நிலை உள்ளது. இவன் நெடுஞ்செழியனுடைய மகனா என்று பற்றியும் கூறமுடியவில்லை.

நெடுஞ்செழியன் மதுரையில் பேரரசனாக விளங்கியபோது இவன் கொற்கைப் பகுதியில் இருந்து நாடுகாவல் புரிந்து வந்தான் என்று கருதலாம். இவனை நேரில் கண்டு வாழ்த்திய புலவர் ஒருவர் செந்தில் கடற்கரையில் உள்ள மணலினும் மேலான பல காலம் இவன் வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றார்.[2] எந்த இடத்திலும் இவன் மதுரையில் இருந்து அரசாண்டான் என்று குறிப்பிடப்பெறவில்லை. பாண்டியப் பேரரசர்களின்கீழ் ஆண்ட அரசன் என்ற நிலையிலேயே இவன் காலம் முடிந்துவிட்டதோ என்று எண்ண வேண்டியுள்ளது. பிறர் நாட்டைக் கைப்பற்றும் போது அவர்களது வயல்களிலுள்ள விளைச்சல்களை வீரர்கள் கவர்ந்து கொண்டாலும் கொள்ளட்டும்; அவர்களது பேரூர்கள் எரியூட்டப்பட்டாலும் படட்டும்; பகைவீரர்களைக் கொன்றாலும் கொல்லட்டும். ஆனால், பகையரசர்களுடைய காவல்மரத்தை

---

81 'பாண்டியர்' என்னும் பகுதியில் விளக்கம்

1 புறம். 55, 56

2 டி 55 : 18-21

மட்டும் வெட்ட வேண்டா என்று புலவர் ஒருவர் இவ்வரசனுக்கு அறிவுரை கூறியுள்ளார். இந்த அறிவுரை இவன் போருக்கு எழுந்தபோது, போர் வேண்டா என்று தடுத்துரைத்த அறிவுரையாகலாம்.[3] இவன் தாராளமாகக் கொடை வழங்கியதாகத் தெரியவில்லை. பரிசில் வழங்கக் காலம் தாழ்த்தியிருக்கக்கூடும். இவனது போக்கைக் கண்டித்துப் புலவர்கள் இவன் நோயின்றி வாழ்ந்தால் சரி என்று வாழ்த்தியுள்ளார்கள்.[4] இவனது மனைவி கடவுள் சான்ற கற்பினை உடையாள்; சிறந்த செம்பொன் அணிகலன்களுடன் விளங்கினாள்; பெண்மைக்குரிய மடமைத் தன்மை கொண்டவள்.[5]

இவனுக்கு ஆண்மக்கள் சிலர் இருந்தனர். அவர்கள் கிண்கிணி அணிந்த காலுடன் விளங்கியதைக் கண்ட புலவர்கள் வாழ்த்தியுள்ளனர். காலைக் கதிரவன் போலவும், வளர்பிறை போலவும் இவன் வாழவேண்டும் என்று வாழ்த்தும் புலவர் ஒருவர் இவன் சினத்தால் எமனையும், வலிமையிற் பலராமனையும், புகழால் திருமாலையும், எண்ணிய செயலை முடித்தலில் முருகனையும் ஒத்தவன் என்று குறிப்பிட்டுள்ளார்.[6]

'பூந்தார் மாற'[7] என்று இவன் கூறப்படுவதிலிருந்து இவனது மலர்மாலை அணிந்து விளங்கிய கோலத்தையும், 'கடுமான் மாற'[8] என்று கூறப்படுவதிலிருந்து இவனது குதிரைச் சவாரியையும், 'திண்டேர் அண்ணல்'[9] என்று கூறப்படுவதிலிருந்து இவன் தேரில் உலாவச் சென்ற காட்சியையும் நாம் உணரமுடிகிறது. இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் பெயர் இவன் இலவந்திகைப் பள்ளி என்னுமிடத்தில் மாண்டதைத் தெரிவிக்கிறது. இலவந்திகை என்னும் சொல் தாமரைக் குளத்தைச் சூழ்ந்த சோலையாகும்.

சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்

இவனைப் பாடிய புலவர் வேறு எந்த அரசனையும் தமது பாடல்களில் குறிப்பிடவில்லை. ஆகவே, இவனது காலத்தைத் திட்டவட்டமாக அறிய முடியவில்லை. மணிமேகலையை இயற்றிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இவர்

3 புறம். 57 : 5-11
4 ஷை 57
5 ஷை 196 : 13-15
6 ஷை 198 : 10, 56 : 9-15
7 ஷை 55 : 6
8 ஷை 198 : 2
9 ஷை 198 : 6

அல்லர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்விருவரும் ஒருவராயின் இவரால் பாடப்பெற்ற இந்த நன்மாறன் சேரன் செங்குட்டுவன் காலத்தவன் என்று கூறலாம்.

இவனது அகன்ற மார்பில் முத்தாரம் அணிந்திருந்தான். இவனது கைகள் முழந்தாள்வரை நீண்டு இருந்தன. பகைவர்களைக் காய்வதில் இவன் ஞாயிறு போன்றவன்; புலவர்களுக்கு நலம் சொரிவதில் திங்கள் போன்றவன்; பொய் என்பதை முற்றிலும் வெறுத்தவன். இவனது இறுதிக்காலம் சித்திரமாடம் என்னுமிடத்தில் முடிவுற்றது. இஃது ஒரு மாளிகையின் பெயராகவோ, ஊர்ப் பெயராகவோ இருக்கலாம்.

முடத்திருமாறன்

இவன் கபாடபுரத்தில் இருந்த இடைச்சங்கத்தைப் புரந்து வந்தான் என்றும், கபாடபுரம் கடல்கோளுக்கு இரையானபோது தப்பி மதுரைக்கு வந்து கடைச்சங்கத்தை நிறுவினான் என்றும் இவனைப்பற்றிச் செவிவழிச் செய்தி கூறுகிறது.[10] சிறந்த புலவனாகவும் விளங்கிய இவனது பாடல்கள் இரண்டு சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவன் தனது நண்பனான குட்டுவன் என்னும் சேர அரசனைத் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளான். இவன் குடவரைப் பகுதிக்கு அரசன். குடவரை என்பதை மேற்குத் தொடர்ச்சிமலையாகக் கொள்ளலாம். நீரும் நிழலும் இல்லாத வழியில் பொருள் தேடச் செல்லும் தலைவன் தன் காதலியை நினைத்துக்கொண்டு கவல்வதாகவும், களவு வழியில் காதலியைப்பெறத் தலைவன் மின்னல் வெளிச்சத்தில் வழியை அறிந்து வரும் அச்சந்தரும் காட்சியையும் தனது இரு பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளான்.[11]

மாலைமாறன்

மாறன் என்று பாண்டியரை உணர்த்தும் சொல் இவனது பெயரில் உள்ளதால் இவனது வரலாற்றை இங்குக் கூறுகிறோம். மற்றபடி, இவன் ஒரு புலவன் என்ற நிலையிலேயே காணப்படுகிறான். இவனது பாடல் சங்கநூலில் இடம் பெற்றுள்ளது.[12] களவு வழியில் கூடிய தலைவனை எண்ணி எண்ணி உருக்

10 இறையனார் களவியல் உரை
11 நற். 105 : 5-10, 228
12 குறுந். 245

குலைந்த தன் நிலையைப்பற்றிக்கூடக் கவலைப்படாது, தலைவன் மீது பழிதூற்றுவார்களே என்று தலைவி ஒருத்தி வருந்துவதாக இவன் பாடியுள்ள பாடல் பெண்களின் பெருந்தகைமையைப் புலப்படுத்துவதாக உள்ளது.[13]

பழையன் மாறன்

பழையன் என்னும் பெயர் கொண்ட இருவர் சங்ககால வரலாற்றில் காணப்படுகின்றனர். ஒருவன் மோகூர் மன்னன் என்ற முறையில் அறிமுகமாகிறான்.[14] மற்றொருவன் 'போர்' என்னும் ஊரின் தலைவன். மோகூர்ப் பழையன் பாண்டிய அரசர்களுக்கு உறுதுணையாய் விளங்கியவன். போர்ப் பழையன் சோழர் படைத்தலைவன். வித்தை என்னும் இடத்தை ஆண்ட அரசன் 'இளம் பழையன்' மாறன் என்னும் பெயர் பெற்றுள்ளான்.[15] மோகூர் அரசனைச் சேரன் செங்குட்டுவன் வென்றான். வித்தை அரசன் இளம்பழையன் மாறனை இளஞ் சேரல் இரும்பொறை வென்றான். போர் அரசன் பழையனை நன்னன் முதலான ஏழுபேர் கூட்டாகத் தாக்கிப் போரில் கொன்றனர். மாறன் என்றால் இவனையே குறிக்கும் அளவிற்கு இவனது பெயர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் காலத்தில் பரவியிருந்தமையால் இவன், பெரும்பெயர் மாறன் என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறான்.[16] பாண்டியன், மோகூரின் ஆட்சிப் பொறுப்பினை இவனிடம் ஒப்படைத் திருந்தான்; கோசர் இவனது அரசவையைச் சிறப்பித்தனர்.[17] இவனுக்கும் சோழன் கிள்ளிவளவனுக்கும் கூடல் நகரில் ஒரு போர் நடந்தது.[18]

கிள்ளிவளவன் என்ற சோழ அரசன் மதுரையில் வெற்றி பெற்ற செய்தி நமக்கு ஒரு வரலாற்றுத் தொடர்நிகழ்ச்சியை உய்த்துணர உதவி செய்கிறது. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் செங்குட்டுவன் காலத்தவன். கோவலனது கொலையால் இவன் தன் அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்தான். பிறகு பழையன் மாறன் மதுரையில் செல்வாக்குப் பெற

---

13 குறுந். 2-6
14 பதிற். 44 : 14, 49 : 8; பதி. 5 : 13
15 பதிற். பதி. 9 : 7
16 மதுரைக். 772-74
17 'பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன' (மதுரைக். 508-509)
18 அகம். 346 : 19-22

முயன்றான்.[19] அந்த முயற்சியில் சோழன் கிள்ளிவளவன் வெற்றி பெறவே, மதுரை சோழர் வசமாகிவிட்டது. பழையன் மாறன், பின் மோகூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வரலானான். சோழன் கிள்ளிவளவன் பசும்பூண் பாண்டியன் என்பவனைப் பாண்டிய நாட்டிற்கு அரசனாகச் சில காலம் ஆண்டுவரச் செய்தான்.

பசும்பூண் பாண்டியன் சோழருக்குட்பட்டு அவர்களுக்குத் திறை செலுத்திக்கொண்டு, நாட்டை ஆண்டு வந்திருக்கலாம். இந்நிலை பாண்டியரின் விடுதலையுணர்வைத் தூண்டி தன்னாட்சி பெறும் மனப்பான்மையை வளர்த்தது. இந்த உயர்வே வெற்றிவேற் செழியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற நிலையில் நமக்கு அறிமுகமாகி மதுரையைக் கைப்பற்றி ஆண்ட நிகழ்ச்சியில் முடிந்தது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது வெற்றியில் சோழனும் சேரனும் தோல்வியுற்றதை அவனது வரலாற்றில் காணலாம்.

மதுரை நகரில் அரியணையில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அமர்ந்தபின் பழையன் மாறன் அவன் படைத்தலைவனாக விளங்கினான். மோகூர் ஆட்சிப் பொறுப்பும் அவனிடம் இருந்தது. கோசர் படையில் தலைவனாகவும் கோசர் குடிமக்களைத் தன் அரசவையில் கொண்ட மன்னனாகவும் இவன் விளங்கினான்.

மேற்கூறப்பெற்ற போரில் இவனது காவல்மரமான வேம்பு வெட்டி வீழ்த்தப்பட்டது. அம் மரத்தின் அடித்துண்டை வெற்றி பெற்ற செங்குட்டுவன் முரசு செய்து கொள்வதற்காகத் தன் தலைநகருக்கு இழுத்துச் சென்றான். போரில் இறந்த வீரர்களின் மனைவியர் கைம்மை நோன்பிற்காகக் களைந்த தலைமயிரைக் கொண்டு கயிறு திரித்து அந்தக் கயிற்றில் வெட்டிய வேப்பமரத் துண்டைக் கட்டி யானைகளில் பிணைத்து தன் தலைநகர்க்கு இழுத்துச்சென்றான். இந்தப் போரில் பழையன் மாறன் மாண்டிருக்கலாம்.[20]

---

19 மதுரையில் நடந்த போரில் பழையன் மாறன் கிள்ளிவளவனிடம் தோற்றுத் தன் கோநகரமாகிய மதுரையையும் யானைகளையும் குதிரைகளையும் இழந்து மோகூர் என்னும் ஊருக்கு ஓடி, அதைக் கோநகரமாகக் கொண்டு ஆளத் தொடங்கினான். இவனது தோல்வியைக் கேட்ட சேரன் கோதைமார்பன் மகிழ்ச்சியடைந்தான்.

20 பழையன் மாறன் என்னும் பெயர்கொண்ட ஒருவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் படைத்தலைவனாக விளங்கினான். இவனுடைய பெயரிலிருந்து மோகூர் அரசன் பழையனின் மகனாக இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

சிறப்புகள்

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு இவன் பல போர்களில் வெற்றி தேடித் தந்திருக்கிறான். இதனைப் பாராட்டி நெடுஞ்செழியன் இவனுக்கு வேலைப்பாடு அமைந்த மாலை ஒன்றைச் சூட்டிச் சிறப்பித்தான்; மாறன் என்னும் பட்டத்தையும் அளித்தான்.[21] பழையன் என்று பொதுப்பட வழங்கப் பட்டுவந்த இவன், இந் நிகழ்ச்சிக்குப் பிறகு 'பழையன் மாறன்' என்று வழங்கப்படலானான் என்பதைப் 'பெரும்பெயர் மாறன்' என்னும் தொடர் உணர்த்துகிறது.

தோற்றம்—குடி

'நெடுந்தேர் இழையணி யானைப் பெரும்பெயர் மாறன்' என இவன் சிறப்பிக்கப்படுதலால், தேரிலும் யானையிலும் இவன் உலாப்போந்த காட்சி நமக்குக் காட்டப்படுகிறது. பழையன் இவனது பெயர். இவன் பழையர் குடியைச் சேர்ந்தவனாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இளம் பழையன் மாறன்

இவன் 'வித்தை' என்னும் இடத்தையாண்ட அரசன். இவன் இளஞ்சேரல் இரும்பொறையோடு போரிட்டுத் தோல்வியுற்றான்.[22] பெயர் அமைதிகொண்டு பழையன் மாறனின் தம்பியாக இவன் இருக்கக்கூடும் என்று எண்ணத்தோன்றுகிறது. இருவரும் மாறன் என்ற பட்டம் பெற்றிருப்பதும், சேர அரசர்களிடம் தோல்வியடைந்ததும் இக் கருத்திற்கு வலுவூட்டுகின்றன.

4. வழுதி என்னும் பெயருடைய அரசர்கள்

'வழுதி' என்பது பாண்டியர்க்கு வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்று. இச் சொல் 'வழித்தோன்றல்' என்னும் பொருளில் தோன்றியதாக எண்ண இடமுண்டு. இப் பெயரைக்கொண்ட அரசர்கள் சங்ககாலத்தில் பலர் இருந்தனர். பெருவழுதி என்னும் பெயர்பெற்றுள்ள அரசர்கள் நால்வேறு அடைமொழிகளைக் கொண்ட நிலையில் காணப்படுகின்றனர். சிறப்பு அடைமொழிகளை நோக்கி, இவர்களை வெவ்வேறு அரசர்கள் என்று கொள்வதே பொருத்தமாக அமைகின்றது.

---

21 அகம். 346 : 19

22 வித்தை போர்ப்பயிற்சி என்று கொள்வாரும் உளர்

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

வழுதி எனப்படும் அரசர்களுள் இவனே காலத்தால் முந்தியவனாகக் காணப்படுகிறான்.[1] இவனை வாழ்த்தும் புலவர் பஃறுளியாற்றின் மணலைக்காட்டிலும் பல்லூழி வாழவேண்டும் என்று வாழ்த்துகிறார்.[2] பஃறுளியாறு சங்ககாலத்திலேயே கடலால் கொள்ளப்பட்டது. எனவே, இவன் அந்த ஆறு கடலால் கொள்ளப்படுவதற்குமுன் வாழ்ந்தவன் என்று தெரிகிறது. ஆதலால், இவனைப் பிறரினும் பழமையானவன் என்று நாம் கொள்ளலாம். இவனைப் பாடிய எல்லாப் புலவர்களும் இவனை மட்டுமே பாடியுள்ளனர். இவர்கள் வேறு அரசர்களையும் பாடியிருந்தால் அவ்வாறு பாடப்பெற்ற அரசர்களின் காலத்தைக் கொண்டு இவ்வரசனுடைய காலத்தைக் கணிக்கக்கூடும்.

இவன் பஃறுளியாறு கடலோடு கலக்குமிடத்தில் நிகழ்ந்த விழாவில் கலந்துகொண்டான்.[3] அவ் விழாவில் யாழில் வல்ல வயிரியர்களுக்குச் சொக்கத் தங்கத்தைப் பரிசாக வழங்கினான்.[4] அத்துடன், தன் கோமகனையும் அவர்களுக்குப் பரிசாக அனுப்பி வைத்தான். அவன் 'கடல்விழா நடத்தி மகிழ்ந்த நெடியோன்' என்னும் பெயரினன்.[5] கடல்விழா என்பது வணிகர் விழா. முதுகுடுமிப் பெருவழுதியின் மகன் நெடியோன் ஆவான். இவன் 'குடுமி தன்கோ' என்று குறிப்பிடப்படுகிறான். முதுகுடுமியின் மகனான நெடியோனின் கால்வழித் தோன்றியவன்தான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.[6]

போர்கள்

முதுகுடுமிப் பெருவழுதி பல போர்களில் ஈடுபட்டு வெற்றி கண்டான். இமயமலைக்கு வடக்கிலுள்ள நாடுகளிலும், குமரி முனைக்குத் தெற்கிலுள்ள கடல் தீவுகளிலும், கீழைக்கடலிலும், மேலைக்கடலிலும் இருந்த தீவுகளிலும் இவனது புகழ் பரவியது.[7] இவனிடம் கடற்படையும் யானைப்படையும் இருந்தனவாகக் கருதலாம். இவற்றைக்கொண்டு இவன் இந்த

---

1 அடுத்த வழுதி சங்ககாலக் கல்வெட்டில் காணப்படும் கடலன் வழுதி.

2 புறம். 9 : 10-11

3 காவிரி கடலோடு கலக்குமிடத்தில் புகாரில் நடைபெற்ற இந்திரவிழாவில் சோழ அரசர்கள் கலந்துகொள்வது போன்று

4 'வயிர்' என்னும் ஒருவித இசைக்கருவியை இயக்குபவர்கள்.

5 'முந்நீர் விழவின் நெடியோன்' (புறம். 9 : 10)

6 மதுரைக். 759-768

7 புறம். 6 : 1-8

வெற்றிகளைப் பெற்றிருக்கவேண்டும். தான் வெற்றிபெற்ற இடங்களில் கிடைத்த செல்வங்களைக்கொண்டு தன்னிடம் பரிசில் நாடி வருவோர்க்கெல்லாம் வாரி வழங்கினான். நல்வேள்வி என்று சிறப்பிக்கப்படும் வேள்வியை இவன் செய்தான்.[8] கள்ளும் கறிச் சோறும் அளித்தான், போரில் வெற்றிபெற உதவியவர்களையும் வெற்றி பெற்றபின் பாராட்டியவர்களையும் தானே அழைத்து, வேண்டிய பரிசில்களைக் கொடுத்துக் கொண்டாடும் வேள்வி, நல்வேள்வியாகும்.[9] இந்த நல்வேள்வியில் நான்மறை முனிவரை இவன் பாராட்டாதது கண்ட புலவர் ஒருவர்[10] மனம் வருந்தி நான்மறை முனிவர்க்குத் தலைவணங்கியும், சிவ பெருமான் நகர்வலம் வரும்போது தன் குடையைச் சாய்த்துப் பிடித்தும் மரியாதை செய்யவேண்டும் என்று கூறினார். முதுகுடுமி, புலவர் அறிவுரையை ஏற்று அவர் விருப்பப்படி செய்தான். நான்மறை முறைப்படி யூபம் என்னும் வேள்வித் தூண்கள் பல நட்டான். நான்மறை வல்ல அந்தணர்களைக் கொண்டு பல வேள்விகளைச் செய்வித்தான்.[11] இவ்விதம் பல வேள்விகளைச் செய்தமையால் இவன் 'பல்யாகசாலை' என்னும் அடைமொழியுடன் வழங்கப்பட்டான்.

புலவர்களுக்குப் பொற்றாமரைப் பூக்களைப் பரிசளித்துச் சிறப்பித்ததும், புலவர்களுக்கு யானைகளையும், தேர்களையும் பரிசில்களாக நல்கியதும் இவனது கொடைகளில் நினைவுகூரத் தக்கவை.

பகைவர் நாட்டின் தேர் சென்ற தெருக்கள் எல்லாவற்றிலும் கழுதைகளைப் பிணைத்துத் திரியவிட்டதும், அறுவடை செய்யும் நிலையில் உள்ள விளைச்சல் வயல்களில் தன்னுடைய தேர்ப்படையுடன் சென்று பாழாக்கியதும் இவன், தனது பகைவர்கள் நாட்டிற்குச் செய்த கொடுமையாகும். இஃது அக்காலப் போர் மரபாகக் கருதப்பட்டதுபோலும். முதுகுடுமி என்னும் இவனது பெயர் முதுமையை உணர்த்தும் நரைத்தலை முடி உடையவனாக இவன் விளங்கியதால் அமைந்திருக்கலாம். போரில் மிகுதியாகப் பழகியதால், இவனது மனைவிமார் ஊடல் கொண்டபோதும் அன்பாகப் பேசாமல் அடக்குமுறையைப் பின் பற்றி வந்தான். இதனால் மகளிர் சினந்தால், எதிராகச் சினங் கொள்ளக்கூடாது என்று புலவர் இவனுக்கு அறிவுரை கூறினார்.[12]

8 மதுரைக். 760
9 வேள்வி—யாகம்
10 புறம். 6 : 19-20
11 புறம். 15 : 17-21
12 டி 20 : 13-14

கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி[13]

இவனது பெயரை நமக்கு அறிவிப்பவர் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியரே ஆவர். அவர் ஓரிடத்தில் கடந்த என்னும் சொல்லாலும் மற்றோரிடத்தில் 'தந்த' என்னும் சொல்லாலும் இவனைக் குறிப்பிடுகிறார். கானப்பேர் எயில்பற்றியும், அதனை வேங்கைமார்பன் என்பவன் ஆண்டதுபற்றியும், காவற்காடு, காவல் சிற்றூர்கள், ஆழ்ந்த அகழி, உயர்ந்த மதில், மீன்பூத்தன்ன ஞாயில் ஆகியவற்றைக் கொண்டிருந்த தன் கானப்பேர் எயில் கோட்டையைப் பறிகொடுத்துவிட்டு வேங்கைமார்பன் ஓலமிட்டு வருந்தியதுபற்றியும் சங்கப் பாடல்களில் தெளிவான செய்திகள் உள்ளன. இந்த வெற்றி இவனது வரலாற்றில் மிகவும் சிறப்புடையதாய் விளங்கியதுபற்றி, இவன் 'கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி' என்று சிறப்பித்துக் கூறப்பட்டான்.

மூவேந்தர் நட்பு

தமிழக வரலாற்றில் மிகச் சிறப்பு வாய்ந்ததாக எண்ணத்தக்க மூவேந்தர் நட்பு இவன் காலத்தில் அமைந்தது. சேரமான் மாரி வெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோருடன் இவனும் சேர்ந்து முத்தீப் போல அமர்ந்திருந்து செயல்படும் காட்சியைப் புலவர் ஒருவர் கண்டு வாழ்த்தியுள்ளார்.[14] பார்ப்பார்க்குப் பூவும் பொன்னும் தாரை வார்த்துத் தரவேண்டும் என்றும், மகளிர் பொற்கலத்தில் ஊட்டும் தேறலை உண்டு மகிழ்ந்து களித்திருக்க வேண்டும் என்றும் கூறி அவர் வாழ்த்தினார்.

மூவேந்தரின் இத்தகைய கூட்டுறவு பாரியைப் பொறுத்தமட்டில் தீதாய் முடிந்தாலும், தமிழைப் பொறுத்தமட்டில் நன்மையாக முடிந்தது. தமிழ்நாட்டு மூவேந்தர்களிடையே பகைமை நீங்கி அமைதி நிலவியது. பாண்டியன் தமிழில் பாடல்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டான். உக்கிரப் பெருவழுதி காலத்தில்தான் குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை என்னும் நூல்கள் தொகுக்கப்பட்டன. நெடுந்தொகை அல்லது அகநானூறு என்னும் நூலைத் தொகுக்கும் பணியைத் தானே மேற்கொண்டான்; உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மன் என்னும் புலவரைத் தலைமைப் புலவராக அமர்த்தி அத் தொகுப்புப் பணியைச் செய்து முடித்தான். திருக்குறள் அரங்கேற்றமும், இறையனார் களவியலுக்கு நக்கீரர் என்பார் எழுதிய உரையும் இவனது

13 புறம், 21 14 மே 367 : 13

அவையில் அரங்கேற்றப்பெற்றன என்பது செவிவழிச் செய்திகளாகும். நாஞ்சில் வள்ளுவன் இவன் காலத்தில் வாழ்ந்தவன்.[15]

வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி[16]

சோழ அரசன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் இந்தப் பாண்டிய அரசனும் ஒருங்கிருக்கக் கண்ட புலவர் ஒருவர் இவர்களுடைய நட்பு நீடிக்கவேண்டுமென்று வாழ்த்துகிறார். இவர்கள் கூடியிருந்த இடம் சோழ நாட்டுத் தலைநகர் என்பது, புலவர் சோழனை முன்னிலைப்படுத்தியும் பாண்டியனைப் படர்க்கையில் குறிப்பிட்டும் பாடியிருப்பதிலிருந்து தெரிகிறது. இவ்வரசனைப் பாடிய புலவர், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனையும்[17] பிட்டங்கொற்றனையும் தனித்தனியே நேரில் கண்டு பாடியுள்ளார்.[18] பிட்டங்கொற்றன், சேர அரசன் கோதையின் படைத்தலைவன் என்பதும்[19] கோதை அல்லது கோதை மார்பன், கிள்ளி வளவனிடம் பழையன் மாறன் மதுரையில் தோற்றபோது மகிழ்ந்தான் என்பதும்[20] பல பாடல்களைத் திரட்டி அறியப்படும் சமகால நிகழ்ச்சிகள்.

இந் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து எண்ணும்போது பழையன் மாறன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனுக்காக மதுரையில் போரிட்டான். அச் சமயத்தில் பாண்டிய நாட்டு அரியணையைப் பெறப் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனின் உதவியை வேண்டினான். அப்போதுதான் சோழன் அவையில் இருவரையும் ஒருங்குகண்டு புலவர் வாழ்த்தினார். பெருந்திருமாவளவன் குராப்பள்ளியில் துஞ்சியவன் என்பது அவனது பெயரால் தெளிவாகிறது.[21] அந்த அடைமொழியைக் கொண்ட கிள்ளிவளவன் என்பது இவனே ஆவான்.[22] திருமாவளவன் என்பது இச் சோழனின் இயற்பெயர். கிள்ளிவளவன் என்பது கிள்ளியின் மகன் வளவன் என்று விளங்கும் பெயர்.

கிள்ளிவளவன் தன்னை நாடிவந்து உதவி வேண்டிய வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதிக்கு உதவினான். பாண்டியனின் கூடல் நகரத்தைத் தாக்கி வென்று, பெருவழு

15 புறம். 367
16 மே 58
17 மே 57
18 மே 169, 171
19 மே 172 : 8-11
20 அகம். 346 : 25
21 புறம். 373
22 மே 50, 68, 197

திக்கு அளித்தான். இந்தப் பெருவழுதி மதுரையில் இருந்து அரசாண்டு வரும்போது, வெள்ளியம்பலம் என்று வழங்கப்பெறும் மதுரைச் சொக்கநாதர் கோயில் மன்றத்தில் உயிர்நீத்தான்.[23] இந்தப் பெருந்திருமாவளவனும், பெருவழுதியும் சேர்ந்து வென்ற நாடுகளில் புலிச் சின்னமும் கயற்சின்னமும் சேர்த்துப் பொறிக்கப் படவேண்டும் என்று புலவர் அறிவுரை கூறினார். இவனது ஆட்சிக் காலத்தில் சோழ, பாண்டிய நாட்டு இலச்சினைகள் இவ்வாறு விளங்கின எனக் கொள்ளலாம். (இந்த கூட்டுச் சின்னத்தை மீண்டும் தனிச் சின்னமாக்கியவன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.) பாண்டியர் ஐந்து கூறுகளாகப் பிரிந்து நாடாண்டு வந்தனர்.[24]

இளம்பெருவழுதி

இவன் புலவன் என்ற நிலையிலேயே காணப்படுகிறான். வழுதி என்னும் பெயர் அமைதியை எண்ணி, ஏதாவது ஓரிடத்தில் இளவரசனாகவேனும் இருந்திருக்கக்கூடும் என்று கருதலாம். வழுதியர் குடியில் தோன்றியவன் எனக் கொள்ளலாம். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் பெயரால் இவனைப் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் குறிப்பிடுகிறார். தேவாமிர்தமே கிடைத்தாலும் தனியாக உண்ணாமல் பகுத்துண்ணல், பிறர் அஞ்சுகிறார்களே என்று தானும் பழிக்கு அஞ்சிச் செயலாற்றுதல், புகழ் தரத்தக்க செயலுக்காக உயிரையே கொடுத்தல், பழிக்கத்தக்க செயல்களில் உலகமே பரிசாகக் கிடைப்பதாயினும் அவற்றைச் செய்யாமை, தனது ஊக்கமான செயல் முயற்சிகளைப் பிறர்நலம் கருதிச் செய்தல் ஆகிய சிறந்த பண்புடையவர்கள் உலகில் வாழ்வதால்தான் இந்த உலகம் அழியாமல் இயங்கிக்கொண்டிருக்கிறது என்னும் கருத்தமைந்த பாடலை இவன் பாடியுள்ளான்.[25] இவன் கடலுள் மூழ்கி இறந்து போனான். கடற்போரில் ஈடுபட்டிருந்தபொழுது இந்தச் சாவு நிகழ்ந்து இருக்கலாம். முதுகுடுமிப் பெருவழுதி கடற்போரில் ஈடுபட்டதையும், செங்குட்டுவன் கடல் வாணிகத்திற்கு உதவும் பொருட்டுப் போரிட்டதையும் நாம் இங்கு நினைவுகூரலாம்.

முதுகுடுமிப் பெருவழுதி கடற்போரில் ஈடுபட்டதைக் கண்டோம். இப் பாண்டியன் கடலில் மாண்டவன் என்பது

---

23 'துஞ்சினான்' என்பதற்கு ஓய்வு எடுத்துக்கொண்டான் என்னும் பொருளும் உண்டு எனக் கூறப்பெறுகிறது.

24 மதுரைக். 775, பொலம்பூண் ஐவர்

25 புறம். 182

தெரிகிறது. இருவர் பெயர்களும் பெருவழுதி என்றமைந்துள்ளன. 'முது', 'இள' என்னும் அடைமொழிகள், மூத்தவன், இளையவன் என்னும் பொருளைத் தருவனவாய் இவர்களுக்கு அமைந்தனவோ என்று ஐயுற வேண்டியுள்ளது.

பெரும்பெயர் வழுதி

இவன் (பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்) 'வழுதி' என்று குறிப்பிடப்படுகிறான். பாண்டியருள் 'கவுரியர்' என்னும் குடியினரும் ஒருவராவர். தனுக்கோடியை அடுத்த பகுதியிலும் கவிரம் என்று சங்ககாலத்தில் வழங்கப்பெற்ற செங்கோட்டைப் பகுதியிலும் இவர்கள் வசித்தனர். இவர்களுடைய வழித் தோன்றல்களில் ஒருவன் பெரும்பெயர் வழுதி.[26] இவன் போரில் வெற்றி பெற்று யானை மீதேறி உலா வந்தான். 'தவிரா ஈகைக் கவுரியர் மருக' என்று கூறப்படும் பகுதியில் இவனது முன்னோர் கொடைச் சிறப்புடன் இவனது கொடைச்சிறப்பும் குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. வழிப்பறிமிக்க காட்டு வழிகளில் புலவர்கள் இவனை நாடிப் பரிசில் பெறுவதற்கு வருவார்கள் என்றும், அவர்கள் வந்ததும் அவர்களுடைய குறிப் பறிந்து உதவவேண்டும் என்றும் அவனுக்கு அறிவுறுத்திப் புலவர் பாடியுள்ளனர்.

அகன்ற மார்பு, உலர்ந்த சந்தனம், கால்களில் பொன்னால் செய்யப்பெற்ற வீரக்கழல் இவற்றுடன் காணப்பட்டான். நிலமே தலைகீழாக மாறினாலும் வாக்குத் தவறக்கூடாது என இவன் அறிவுறுத்தப்பட்டிருக்கிறான். இவனுடைய மனைவி செம் பொன்னாலாகிய அணிகலன்களை அணிந்த கற்பரசியாக விளங்கினாள். இவன் மதுரையில் இருந்து ஆட்சி செலுத்திய தாகத் தெரிகிறது.[27] கூடலைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வழுதி ஒருவன் 'வாடா வேம்பின் வழுதி' என்றும், 'அரண் பல கடந்த முரண்கொள் தானை' உடையவன் என்றும் கூறப்படுகிறான்.[28] கூடல் நகரத் தலைமை வேறு எந்த வழுதிக்கும் குறிப்பிடப்படாததால் இவனைக் 'கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி' என்றே கருதலாம். இவன் பல கோட்டைகளை வென்றபோது இவனுடைய வலிமைமிக்க கைகளில் ஒளிபொருந்திய வாள் ஒன்று சிறப்புற்று விளங்கியது. இதனால் இவன் 'கருங்கை ஒள்வாள்' என்ற அடைமொழியைத் தன் பெயருக்குமுன் பெற்றான்.

---

26 புறம். 3 : 13-உரை
27 அகம். 315 : 7-8
28 மே 315

குறுவழுதி

'அண்டர் மகன் குறுவழுதியார்' என்னும் பெயருடன் குறிக்கப் படும் இவரும் புலவர் என்ற நிலையிலேயே காணப்படுகிறார். அண்டர் என்போர் ஒரு குடியினர் ஆவர்.[29] நள்ளி என்ற அரசனுடைய தோட்டிமலைப் பகுதிகளில் அவர்கள் வாழ்ந்து வந்தனர்.[30] நார்முடிச் சேரல் இவர்களை வென்று பின்னிடும்படி துரத்தினான்.[31] அண்டர் அல்லது ஆயர்குடியில் தோன்றியவர் என்பதும், ஆட்சிப் பொறுப்பேற்று விளங்கியவர்கள் என்பதும் பெறப்படும். பாண்டியரில் ஒரு கிளைக்குடியினர் கண்டீரமலைப் பகுதியில் அண்டர் என்னும் பெயருடன் செல்வாக்குப் பெற்று விளங்கினார்கள் எனலாம். இந்த அண்டர்களுக்குப் பெருந் தலைவனாக விளங்கியவன்தான் குறுவழுதி. இவன் சிறந்த புலவனாக விளங்கியதால் 'ஆர்' என்னும் சிறப்பு அடைமொழி சேர்த்துக் 'குறுவழுதியார்' என்று வழங்கப்பட்டான். இவனுடைய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, புறநானூறு ஆகிய மூன்றிலும் காணப்பெறுகின்றன. இவன் பாண்டிய மரபில் தோன்றியவனாகத் தெரியவில்லை.

நல்வழுதி

நல்வழுதியர் என்னும் புலவராக அறிமுகமாகும் இவரை வழுதி என்ற பெயரைக்கொண்டு, ஒரு சிறு பகுதிக்கு மன்னனாக விளங்கியிருக்கலாம் எனக் கொள்கிறோம். வையை ஆற்றைச் சிறப்பித்துப் பாடும் இவர் அதனைப் 'போரடு தானையான் யாறு'[32] என்று குறிப்பிடுகிறார். இதனால், வையை அவருக்கு உரிய ஆறு அன்று என்பது பெறப்படுகிறது. இவர் பிற வழுதியரைப் போலவே, பாண்டிய நாட்டின் தென்பகுதியில் ஒருபால் ஆண்டுவந்தார் என்று கருதலாம்.

பாண்டியன் மாறன் வழுதி

பாண்டியன் பன்னாடு தந்தானும் பாண்டியன் மாறன் வழுதியும் ஆகிய இருவரும் புலவர்களாகக் கருதப்பெறுகின்றனர்.[33] இந்த இரண்டு பெயர்களும் ஒருவனையே குறிப்பன என்று

---

29 குறுந். 117 : 3; அகம். 59 : 5

30 குறுந். 210 : 1

31 பதிற். 88 : 7-10

32 பரிபா. 12 : 86

33 நற். 97, 301; குறுந். 270

கொள்ளத்தக்க வகையில் 'பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி' என்ற நிலையில் அமைந்த பெயரும் காணப்படுகிறது. இப் பெயர் கொண்டவன் நற்றிணை என்னும் தொகுப்பு நூலை உருவாக்கியவன்.[34]

'கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி' என்பானை பல புலவர்கள் பாடியுள்ளனர். தமிழ்நாடு, மூவேந்தர்க்கும் பொது என்று கூறினால் இவன் பொறுக்கமாட்டானாம். தனக்கே உரியது என்று ஆக்கிக்கொள்ளப் போருக்கு எழுவானாம். இவ்வாறு போருக்கெழுந்தபோது, ஏதோ ஒருவகையில் தமிழ் நாடு முழுவதும் இவனுக்குரியதாயிற்று என்ற நிலை வந்தது போலும். அதன் பின்னும் இவனது போர்வேட்கை தணிய வில்லை. 'வடபுல மன்னர் வாட அடல்குறித்து' எழுந்தான்.[35] இதன் விளைவு என்னவாயிற்று என்பது தெரியவில்லை. தமிழ் நாட்டிற்கு வடக்கில் இருந்த சில சிற்றரசர்களையேனும் இவன் வென்றிருக்கலாம். 'சினப்போர் வழுதி', 'இயல்தேர் வழுதி' என்னும் அடைமொழிகள் இவனது சினமிகுதியையும், தேரில் உலா வந்த பாங்கையும் நம் நினைவிற்குக் கொண்டுவருகின்றன. பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும், இந்த மாறன் வழுதியும் ஒரே காலத்தில் அகத்திணைத் தமிழ்ப் பாடல்களைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இவர்களைப் பாடிய புலவர்களைக் கொண்டு இவர்கள் சமகாலத்தவர் என்பதை உணரலாம்.[36]

கடலன் வழுதி

மதுரை மாவட்டம் மீனாட்சிபுரத்தையடுத்த கழுகுமலையில் உள்ள சமணர் படுக்கைகளுக்குமேல் உள்ள பாறைகளில் சங்க காலத்துத் தாமிழி எழுத்துகள் உள்ளன. அந்த எழுத்துகள் கி. மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அந்த எழுத்து களில் கடலன் வழுதி என்ற பெயர் வருகிறது. இந்த வழுதி நெடுஞ்செழியனின் பணி மேற்கொண்டவன்.[37] இவன் கவிஞ னாகிய நந்தி என்னும் சமணத் துறவிக்கு கழுகுமலைப் பாறையில் படுக்கை வெட்டிக் கொடுத்தான்.

---

34 சங்க இலக்கியங்கள், 'வரலாறு', வையாபுரிப்பிள்ளை, பக். 1373

35 புறம். 52 : 5

36 மருதன் இளநாகனார், ஔவையார்

37 அடிப்படைச் சான்றுகள்-II கல்வெட்டு எண் 1

மருங்கை வழுதி

மருங்கூரைத் தலைநகராகக் கொண்டு வழுதி என்ற ஒருவன் ஆண்டுவந்தான். இவன் பசும்பூண் வழுதி என்று குறிப்பிடப் படுகிறான்.

கொற்கை வழுதி

கொற்கைத் துறைமுகத்தைத் தலைநகராகக் கொண்டு வெற்றிவேற் செழியன் ஆண்டுவந்ததுபோல இவன் 'நற்றேர் வழுதி' என்று சிறப்பித்துக் கூறப்படுகிறான்.[38]

பிற வழுதி அரசர்கள்

'தாடோய் தடக்கை வழுதி' என்று கூறப்படும் வழுதி ஒருவன் தன் வேலை உயர்த்திப் பகைவர்களைப் புறங்கண்டான்.[39] சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் இவனைப் போலவே தாடோய் தடக்கை வழுதி என்று கூறப்படுகிறான். இதனால் இருவரும் ஒருவராக இருக்கலாம். இவன் 'வெல்போர் வழுதி' என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளான். 'போர்வல் வழுதி' என்று கூறப்படும் வழுதி ஒருவனுக்குப் பகைவர்கள் பெறற்கரிய உயர்ந்த திறைப்பொருள்களைக் கொடுத்தனர். இப் போர்வல் வழுதி மேற்கூறப்பெற்ற சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று கருத இடமுண்டு.[40] கடல்போன்ற பெரிய படையைக் கொண்ட 'கலிமா வழுதி' என்ற பெயரும் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைக் குறிக்கக்கூடும்.

புலிமான் வழுதி என்பவன் தன் மனைவி மக்களுடன் சென்று திருப்பரங்குன்றத்து முருகவேளை வழிபட்டதாகத் தெரிகிறது. அகநானூறு தொகுக்கப்படக் காரணமாக இருந்த உக்கிரப்பெரு வழுதிக்கு இப் பெயர் வழங்கியது என்று கருதலாம்.

5. பாண்டியன் என்னும் பெயருடைய அரசர்கள்

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்

இவனது பாடல்களில் இரண்டு, சங்க நூல்களில் இடம் பெற்றுள்ள வகையில் புலவனாக இவன் நமக்கு அறிமுக

38 அகம். 130 : 11
39 ஷை 312 : 11-12
40 கலி. 141 : 24-25

மாகிறான். என்றாலும், இவனது வஞ்சினப் பாடலும் இவன் பெயருக்குமுன் உள்ள 'ஒல்லையூர் தந்த' என்னும் அடை மொழியும் இவன் சிறந்த அரசனாக நாடாண்டு வந்தவன் என் பதைத் தெரிவிக்கின்றன. தன்னுடைய பகைவர்களைப் புறம் காணாவிட்டால் தனக்குத் தன் மனைவியைப் பிரிந்து வாழும் நிலை நேரட்டும். அறநெறி தவறாத அரசவையில் திறமை இல்லாத ஒருவனை அமர்த்தித் தீமை செய்தவன் என்ற பழி நேரட்டும். மையற்கோமான் மாவன், எயிலாந்தை, அந்துவன் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் ஆகிய ஐவருடனும் பிறருட னும் கூடி மகிழ்ந்திருக்கும் பேறில்லாமல் வறண்ட நிலத்தின் மன்னனாக அடுத்த பிறவி அமையட்டும் என்றெல்லாம் இவன் வஞ்சினம் கூறுமிடத்து இவனது நற்பண்புகள் வெளிப்படு கின்றன.[1] ஒல்லையூர் என்பது இப்பொழுது உள்ள புதுக் கோட்டை மாவட்டத்தில் இருந்த நாடு. இவன் அந்த நாட்டில் நடந்த போரின்போது இவ்விதம் வஞ்சினம் கூறினான். தான் கூறியவாறு ஒல்லையூர் நாட்டை வென்று தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ் சாத்தன் என்பவன் இறந்ததற்காகப் பாணர்கள் பெரிதும் வருந்திய செய்தியைக் கூறும் பாடல் ஒன்று உள்ளது.[3] இந்தச் சாத்தன் இறந்தது பூதப் பாண்டியன் நடத்திய போரில் நிகழ்ந் திருக்கலாம்.

தமிழ் இலக்கியங்களில் வடக்குப் பகுதியிலுள்ள மலைகளைக் கடந்து பொருள் தேடச் சென்றவர்களைப் பற்றியே மிகுதியாகப் பேசப்படுகிறது. ஆனால், இவன் தமிழக மக்கள் பொதிய மலையைக் கடந்து பொருள் தேடச் சென்ற மக்களைக் குறிப் பிடுவது நினைவுகூரத்தக்கது.[3]

பொதியமலைப் பகுதியில் திதியன் என்பவன் ஆண்டு வந்ததை இவன் குறிப்பிடுவதோடு, அவனது செல்வச் செழிப் பையும், அவனது அரண்மனையில் முழங்கிய இன்னிசை முழக் கத்தையும் பாராட்டிக் கூறியுள்ளான். இதனால் திதியன் இவனது சிறந்த நண்பன் என்பது தெரிகிறது. இத் திதியன், பாண்டியன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனை எதிர்த்துத் தாக்கியது அவர்களது வரலாறுகளில் காணலாம். தலையாலங் கானத்துப் போர், நெடுஞ்செழியன் கொற்கையில் ஆண்டு

---

[1] புறம். 71 : 4-19
[2] ஷை 242
[3] அகம். 25 : 20

கொண்டிருந்தபொழுது நிகழ்ந்ததாகையால் அக்காலத்திலோ, அதற்குச் சற்று முன்னரோ பூதப்பாண்டியன் மதுரையிலிருந்து அரசாண்டான் என்று கூறலாம். ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியனுக்குப் பின்னும் தலையாலங்கானத்து நெடுஞ்செழிய னுக்கு முன்னும் உள்ள இடைப்பட்ட காலத்தில் இவன் ஆட்சி செலுத்தினான் எனறு கூறலாம்.

போரில் வஞ்சினம் கூறியபோது, புறங்காணாவிட்டால் 'பேர்அமர் உண்கண் இவளினும் பிரிக' என்று வஞ்சினம் கூறும் அளவிற்கு இவனது அன்பு, மனைவியிடம் சிறந்து விளங்கியது. இவனைப் போலவே இவனது மனைவியும் இவன்மீது பேரன்பு கொண்டு விளங்கினாள். பூதப்பாண்டியன் இறந்தபோது அவளும், அவனை எரித்த தீயில் பாய்ந்து உயிர்துறந்தாள். அவள் பெயர் பெருங்கோப்பெண்டு.[4]

பசும்பூண் பாண்டியன்

'பசும்பூண்' என்னும் அடைமொழியைமட்டும் கொண்டு இந்தப் பாண்டியனைத் தனியான ஓர் அரசன் என்று கொள்ள முடியுமா என்பது ஆய்விற்குரியது.[5] இப் பெயர்கொண்ட அரசன், மதுரையில் இருந்து மிகச் சிறப்புடன் அரசாண்டதாகத் தெரிகிறது. அப்படியிருந்தும் எந்தப் புலவரும் இவனை நேரில் கண்டு வாழ்த்திப் பாடியதாகப் புறநானூற்றில் பாடல்கள் இல்லை. எனவே, பசும்பூண் பாண்டியன் என்னும் பெயர் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனாக இருக்கலாமென்று கருதப் படுகிறது.

அரசுகட்டிலைக் கைப்பற்றிய போர்

பாண்டிய நாட்டின் அரியணையைக்கைப்பற்றவே இவன் போராடி இருக்கிறான். போரில் வெற்றிகண்டதால் வெண் கொற்றக் குடையை உயர்த்திப் பெரும் புகழுடன் அரசாண்டிருக் கிறான்.[6] பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் இதே நிலையினன் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிகனை வென்றது

அதிகன் என்பவன் கொல்லிமலைப் பகுதியை ஆண்ட அரசன். பசும்பூண் பாண்டியன் ஒரு யானைப் படையுடன்

---

4 புறம். 246 : 13-15

5 நற். 279 : 2; பெரும்பாண். 458; பரிபா. 3 : 53

6 அகம். 231 : 12

சென்று அதிகனை வென்று தன் வெற்றிக்கொடியை உயர்த்தி, அவனது கொல்லிமலையில் யானைப் படையின் வெற்றி அணி வகுப்பை நடத்தினான். இப் போருக்குப்பின் அதிகன் பாண்டிய னுடைய நண்பன் ஆனான். பின்னர்த் தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறையிடம் நாட்டைப் பறிகொடுத்து இந்தப் பாண்டியனின் படைத்தலைவனாக மாறிவிட்டான்.[7]

கொங்கரை ஓட்டியது

அதிகன் கீழைக் கொங்கர்களின் தலைவன். பசும்பூண் பாண்டியனும் அதிகனும் நண்பர்களாக மாறியபின் கீழைக் கொங்கரும் பாண்டியனுக்கு நண்பர் ஆயினர். இந்நிலையில் மேலைக் கொங்கர்கள் பொறையர் குடியைச் சேர்ந்த சேர அரசர் களுடன் சேர்ந்துகொண்டு பாண்டியனுக்கு எதிர்ப்பாய் விளங் கினர். பசும்பூண் பாண்டியன் இந்தக் கொங்கர்களோடு போரிட்டு அவர்களை நாட்டைவிட்டே துரத்திவிட்டான்.[8] தங்களது வேற் படைகளைப் போர்க்களத்திலேயே எறிந்துவிட்டுத் தப்பியோடிய கொங்கர், குடகடல்பக்கம் ஓடிவிட்டனர். இந்தப் போரில் இவ னுக்கு ஆய் அரசன் உதவி செய்தான் எனத் தெரிகிறது.[9] ஓடிய கொங்கர்களில் சிலர் வழியில் இருந்த நாட்டில் அரசாண்ட நன்ன னுடன் சேர்ந்துகொண்டனர். நன்னன் மூவேந்தருக்கும் எதிரி யாக இருந்தான்.

வாகைப் பறந்தலைப் போர்

ஆய் எயினனுக்கும் நன்னனது படைத்தலைவன் ஞிமிலிக்கும் நன்னனின் தலைநகர் பாழியில் போர் நடந்தது. போரில் ஆய் எயினன் மாண்டான். இந்நிலையில் ஞிமிலி, ஆய் எயினனின் நகர் வாகையைக் கைப்பற்ற முயன்றான். வாகையைப் பாது காக்கப் பசும்பூண் பாண்டியன் தன் படைத்தலைவன் அதிகனை அனுப்பியிருந்தான். பாண்டியன் தலைவனான அதிகனுக்கும், ஞிமிலிக்கும் வாகைப்பறந்தலையில் போர் நடந்தது. போரில் நன்னனுக்கு உதவியாகக் கொங்கர்கள் உதவினர். யானை மீதிருந்து போரிட்ட அதிகன் யானையுடன் கொல்லப்பட்டான். இந்த நிகழ்ச்சியில் கொங்கர்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.[10]

பொதியமலை வெற்றி

அதிகனை வென்று கொல்லிமலையில் யானைகளை வெற்றி உலாவரச் செய்தான் இப் பாண்டியன் என்பதை முன்னரே

---

7 அகம். 162 : 18
8 ஷை 253 : 4-5
9 புறம். 130 : 5-6
10 குறுந். 393 : 3-6

பார்த்தோம். அதுபோலவே, இவன் பொதியமலையைக் கைப் பற்றினான் போலும்.[11] இதன் பயனாகப் பொதியமலை அரசன் ஆய், அதிகனைப் போலப் பாண்டியனின் நண்பன் ஆனான். அதிகன் வாகைப் பறந்தலையில் பாண்டியனுக்காகப் போரிட்டது போலவே, ஆய் அரசன் கொங்கர்களை ஓட்டுவதில் பசும்பூட் பாண்டியனுக்கு உதவினான்.[12]

நெடுமிடல் படைத்தலைமை

பசும்பூண் பாண்டியனுக்குப் படைத்தலைவனாக விளங்கியவன் நெடுமிடல் என்பவனாவான்.[13] பசும்பூண் பாண்டியனுடைய பகைவர்கள் இப் படைத்தலைவனைக் கொன்ற பிறகு அரிமணவாயில் உறத்தூரில், கள்ளுடைப் பெருஞ்சோறு உண்டு வெற்றிவிழாக் கொண்டாடினர் என்று அறிகிறோம்.[14] இந்த நெடுமிடல் என்பவனுடன் கொடுமிடல் என்பவனும் மற்றொரு படைத்தலைவனாக இருந்தவன் எனத் தெரிகிறது. இவர்களைப் போரில் கொன்றவன் நார்முடிச் சேரல் என்று கூறப்படுகிறது.[15] இதைக் கருதுமிடத்துப் பசும்பூண் பாண்டியன் வடக்கில் கொல்லி மலை, தெற்கில் பொதியமலை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட பெருநிலப்பரப்பை, அதிகன் முதலிய சிறப்புமிக்க வள்ளல்களின் துணையுடன் அரசு புரிந்தான் எனக் கொள்ளலாம்.

பாண்டியன் அறிவுடைநம்பி

இவனை நேரில் கண்டு பாடிய புலவர் 'அறிவுடைவேந்தன்' என்னும் தொடரைப் பொதுப்படையாகக் குறிப்பிடுகிறார்.[16] இதனால் இவனை அறிவுடைநம்பி என்று குறித்தார்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. இவனது பாடல்கள் இன்பப் பயனை விளக்குவனவாக உள்ளன. நம்பி என்னும் பெயர், முறுக்கான உடற்கட்டுக் கொண்டு அழகுடன் பொலிவும் ஆடவர்க்கெல்லாம் வழங்கப்பெற்ற பொதுப் பெயர் ஆகும்.

இவன் அரியணையில் அமர்வதற்குமுன் அரசியல் அலுவலர்கள் குடிமக்களின் நிலையைப் பார்த்து மிகுதியான வரிகளை வசூலித்ததாகத் தெரிகிறது. புலவர் இவனை நேரில் கண்டு

---

11 அகம். 338 : 5-6
12 புறம். 130 : 5-6
13 அகம். 266 : 12
14 'அரிமண வாயில்' என்பது புதுக்கோட்டைக்கருகில் உள்ள அரிமளம்
15 பதிற். 32 : 9-11
16 புறம். 184 : 5

சிறிது சிறிதாகப் பல தவணைகளில் மக்கள் வரிகளைச் செலுத்த அனுமதிக்கப்படவேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த் தினார்.[17] அரசன், புலவரின் அறிவுரையை ஏற்று மக்களின் விருப்பம்போல் பல தவணைகளில் வரி செலுத்த அனுமதித்தான் எனலாம். வாழ்க்கையில் பலவகையான செல்வ வளங்களும் ஒருங்கமையப் பெற்றிருந்தாலும் மக்கட்செல்வம் இல்லாவிட்டால் இன்பம் அமையாது என்று இவன் தன்னுடைய பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளான்.[18]

சங்கப்பாடல் தொகுதிகளில் இவனுடைய பாடல்களாக அகத்துறைப் பாடல்கள் மூன்று இடம்பெற்றுள்ளன. தினைப் புனம் காக்கச் சென்ற பெண் ஒருத்தி அதனை மறந்து, அவளது காதலனோடு கூடி மகிழ்ந்தே காலம் போக்குவதை அவளது தோழி பக்குவமாகத் தவறு என்று அறிவுறுத்தும் வகை யில் ஒரு பாடல் அமைந்துள்ளது.[19] காதலன் ஒருவன் அடிக்கடி காதலியிடம் கள்ளத் தொடர்பு கொள்வதைத் தோழி வன்மை யாகக் கண்டிப்பதாய் மற்றொரு பாடல் அமைந்துள்ளது.[20]

கற்பரசி ஒருத்தியின் கையில் இருந்த குழந்தையைப் பேய் ஒன்று பிடுங்கிக்கொண்டது போலத் தோழியிடமிருந்து தலைவி யைத் தலைவன் பிடுங்கிக்கொண்டான் என்றும், பூப்போன்ற அவளைத் தேனீப் போன்று நலம்நுகர்ந்து சென்றான் என்றும் நயம்படப் பாடிய பாடல் ஒன்றும் கிடைத்துள்ளது.[21] நம்பி நெடுஞ் செழியன் எனும் பெயர்கொண்ட அரசன் ஒருவன் மிகச் சிறந்த போர்த்திறம் படைத்த அரசனாக விளங்கியதை நெடுஞ்செழியன் வரலாற்றில் காணலாம். இந்தப் பெயர் நம்பியின் மகன் நெடுஞ் செழியன் என்பதாக இருக்கக்கூடும்.

பாண்டியன் கீரஞ்சாத்தன்

கீரன் மகன் சாத்தன் என்னும் பெயர் கீரஞ்சாத்தன் என்று அமைந்திருக்கக்கூடும். பாண்டியன் என்னும் அடைமொழியைக் கொண்டு இவன் பாண்டியர் குடியைச் சேர்ந்தவன் அல்லது பாண்டியர் படைத் தலைவன் என்பது தெரியவருகிறது. கள் ளுண்ட மயக்கத்தால் கடமையை மறந்து சில போர்வீரர்கள் அஞ்சியிருந்தபோது, எஞ்சிய படையினருக்குப் பாதுகாவல

17 புறம். 184
18 மே 188
19 அகம். 28 : 3-14
20 மே 28
21 நற். 15 : 7-10

னாகத் தழுவிக்கொண்டு போரில் குதித்து முன்னேறிச் சென்றான். போர் வீரர்கள் காயம்பட்டு உணவு கொள்ளாமல் இருந்தபொழுது இவன், 'நீங்கள் உணவு கொள்ளாவிட்டால் நானும் உண்ணமாட்டேன்' என்று சூளுரைத்து அவர்களை உண்ணும்படி செய்தான். இதனால் இவன் சிறந்த படைத்தலைவனாகவும், படைவீரர்களைத் தன் உயிரைப்போல் போற்றும் உயர்ந்தோனாகவும் விளங்கினான். பாண்டியன் என்னும் பெயர், பாண்டிய அரசர்கள் இவனைப் பாராட்டி அளித்த சிறப்புப் பட்டமாகவும் இருக்கலாம். இவனைப் பாடிய புலவர் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனையும் பாடியுள்ளார். ஆகையால், இவன் நன்மையுடைய படைத்தலைவனாக இருந்தான் என்றும் கூறலாம்.[22]

6. பழங்கதைகளால் அறியப்படும் அரசர்கள்

தமிழ்நாட்டில் வழங்கும் சில மரபுவழிச் செய்திகள் பாண்டிய மன்னர்களுடைய செயல்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றில் சில புராணத் தலைவர்களோடு தொடர்புடையனவாக இருப்பதால் உண்மையான வரலாற்றுச் செய்திகள் என்று கொள்ள முடியவில்லை.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன்

நிலப்பகுதியைத் தங்கள் நாட்டுப் பரப்பில் கொண்டிருந்தது தோடு நீர்ப்பரப்பாகிய கடலையும் ஓர் எல்லை வரையில் தங்களுக்கு உரியதாகப் பாண்டிய மன்னர்கள் கொண்டிருந்தனர். அந்த எல்லைப்பகுதி எதுவரையில் என்று பாண்டிய அரசன் ஒருவன் தன்னுடைய வேலை வீசிக் காட்டினான்.[1] வடிம்பு என்பது வேலின் நுனியாகும். எனவே, இவன் வடிம்பு அலம்ப நின்ற பாண்டியன் எனப்பட்டான்.

இவன் தன்மீது வேலை வீசியதால் சினங்கொண்ட கடல் பொங்கியெழுந்தது; பாண்டிய நாட்டின் நிலப்பகுதியை விழுங்கியது. இதனால், பாண்டியன் தன் நாட்டுப் பரப்பில் குமரியாறு பாய்ந்த நிலம், குமரிக்கோடு முதலான பல மலைகளைக் கொண்டிருந்த நிலம் ஆகியவற்றை இழந்தான். இந்த நில இழப்பை

22 புறம். 196

1 சிலப். 11 : 17-22

டுசெய்வதற்காக அவன் வடதிசை நோக்கிப் படையெடுத்துச் சென்று கங்கைச் சமவெளியையும் இமயமலைப் பகுதியையும் கைப்பற்றிக்கொண்டான். இந்த அரசன் தென்னன் என்று குறிப்பிடப்படுகிறான்.

நெடியோன் என்னும் அரசன்,[2] பஃறுளி ஆற்றோடு தொடர் புடையவனாகவும், 'நிலந்தருதிருவின்' நெடியோன் என்று நிலப் பரப்பினைத் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டவனாகக் காட்டப்படுவதால் இந்த அரசனை வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்று கருதுகின்றனர்.[3] பிற்காலத் தமிழ்நூல் ஒன்று இவனை 'ஆழி வடிவு அலம்ப நின்றான்' என்று குறிப்பிடுகிறது.[4] இந் நூல் இவனை யதுகுல அரசன் என்றும், ஏழிசை நூல் சங்கத் தலைவன் என்றும், தேவர்களுக்காகத் தூது சென்றவன் என்றும், பாரதப் போரில் கலந்துகொண்டவன் என்றும் குறிப்பிடுகிறது.

இந்திரன் ஆரம்பூண்ட பாண்டியன்[5]

தேவர் கோனாகிய இந்திரன் எல்லா அரசர்களையும் விருந் திற்கு அழைத்தான். விருந்திற்குச் சென்ற அரசரெல்லாரும் இந்திரன்முன் தலைதாழ்த்தி வணக்கம் செலுத்தினர். பாண்டியன் மாத்திரம் தலைதாழ்த்தி வணக்கம் செய்யாது, தன் பெருமிதம் தோன்ற நிமிர்ந்து சென்றான். இதைக் கண்ட இந்திரன் தன் முத்தாரத்தை அந்தப் பாண்டியனுக்கு அளித்துப் பெருமைப்படுத்தினான்.

மழை பிணித்தாண்ட மன்னவன்

பாண்டியன் ஒருவன் இந்திரனுடைய தலையிலிருந்த முடி வளையை உடைத்து எறிந்தான். அதனாற் சினங்கொண்ட இந்திரன் தனது ஆணைக்குட்பட்டு நடந்துவந்த மேகங்களை அழைத்துப் பாண்டிய நாட்டில் பெய்யக்கூடாதென்று கூறித் தடுத்துவிட்டான். இதனால் பாண்டிய நாட்டில் மழையில்லாமல் போயிற்று. பாண்டியன் ஒருவன் அந்த மேகங்களைத் தடுத்து மழைபெய்யச் செய்தான்.

---

2 புறம். 9 : 10; மதுரைக். 763

3 'சங்க இலக்கியம்' பக். 1482

4 நளவெண்பா, 137

5 'தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே' (சிலப். 17 உள்வரி வாழ்த்து 1 : 2)

பொற்கைப் பாண்டியன்

இவனுடைய ஆட்சிக் காலத்தில் மதுரை நகரில் வாழ்ந்த கீரந்தை என்பான் தன்னுடைய மனைவியைத் தனியே வீட்டில் விட்டு வெளியூருக்குப் போனான். பாண்டியனுடைய ஆட்சி, தனித்திருக்கும் தன் மனைவிக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பது அவனுடைய நம்பிக்கை. கீரந்தை வெளியூருக்குப் போயிருப்பதை அறிந்த பாண்டியன் இரவில் நகர்வலம் வரும் போது கீரந்தையின் மனைவிக்கு யாதொரு தீங்கும் நேராதபடி அவள் அறியாமலே காத்துவந்தான். நெடுநாள் சென்றபிறகு, நள்ளிரவில் கீரந்தை வீட்டிற்குள் யாரோ இருவர் பேசுங்குரல் கேட்டது. நள்ளிரவில் நகர்வலம் வந்த பாண்டியன், யாரேனும் கீரந்தையின் மனைவிக்குத் தீங்கு செய்ய வந்தனரோ என்று கருதி அந்த வீட்டுக் கதவைத் தட்டினான். உள்ளிருந்து கணவனாகிய கீரந்தையின் குரல் 'யார் அது?' என்று கேட்டது. கீரந்தை ஊரிலிருந்து திரும்பி வந்துவிட்டான். அவனுடைய பேச்சுக்குரல்தான் உள்ளிருந்து கேட்டது. கதவைத் தட்டின படியால் அவன் அவள்மீது ஐயப்படுவானே. அவனுடைய ஐயத்தைப் போக்கவேண்டுமே' என்று கருதிய பாண்டியன் அந்தத் தெருவிலுள்ள எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிக்கொண்டே அரண்மனைக்குப் போய்விட்டான்.

அடுத்த நாள் அந்த வீதியில் உள்ளோர் எல்லோரும் முன்னிரவு தங்கள் வீட்டுக் கதவுகளை யாரோ தட்டிவிட்டுச் சென்றார்கள் என்று மன்னனிடம் முறையிட்டனர். தன் மனைவியின் மீது ஐயங்கொண்ட கீரந்தை எல்லா வீட்டுக் கதவுகளும் தட்டப்பட்டதை அறிந்து தன் மனைவியின்மேல் ஐயம் நீங்கினான். பிறகு பாண்டியன் தானே அந்தக் குற்றம் செய்ததை அரசவையில் ஒப்புக்கொண்டு, கதவுகளைத் தட்டின குற்றத்திற்காகத் தன்னுடைய கையை வெட்டிக் குறைத்துக்கொண்டான் என்று கதை கூறப்படுகிறது.[6]

மலயத்துவச பாண்டியன்

மலயத்துவசன் என்னும் பெயர் மலையைத் தன்னுடைய அடையாளமாகக் கொண்டவன் என்ற பொருளுடையதாகும். சங்க இலக்கியத்துள் இவனைப்பற்றிய குறிப்பு இல்லை. மலையத்துவச பாண்டியன் காஞ்சனை என்ற பெயருள்ள

---

[6] சிலப். 23 : 42-52; பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் 23 : 42-52

பாண்டிமா தேவியோடு வாழ்ந்தான். இவ்விருவருக்கும் மகப் பேறில்லாமையால் தவம் செய்து ஒரு பெண்மகவைப் பெற்றனர். அக் குழந்தைக்குத் தடாதகை என்று பெயரிடப்பெற்றது. அப் பெண் பாண்டிய நாட்டை அரசாண்டாள் என்று புராணக் கதை கூறுகிறது.

மலையத்துவச பாண்டியனைப்பற்றி வடமொழி பாகவத புராணம் மற்றொரு வரலாற்றைக் கூறுகிறது. இப் புராணக் கதைகள் நம்பத்தகுந்தன அல்ல.

தடாதகைப் பிராட்டியார்

மலையத்துவச பாண்டியனுக்குப் பிறகு அவனுடைய மகளாகிய தடாதகைப் பிராட்டியார் அரசாண்டதாகத் திருவிளை யாடற் புராணங்கள் கூறுகின்றன.[1] அங்கயற்கண்ணியாகிய மீனாட்சி அம்மையே தடாதகைப் பிராட்டியாகப் பிறந்தார் என்று புராணக் கதைகள் கூறுகின்றன. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் பாடலிபுத்திரத்தில் செலியூகஸ் நிகேடாரின் தூதுவராக இருந்த மெகஸ்தனீஸ் தம்முடைய காலத்தில் பாண்டிய நாட்டை ஒரு பெண்ணரசி அரசாண்டாள் என்று கூறியுள்ளார். ஹெர்க்குலிஸ் என்ற கிரேக்க வீரனுக்குப் பண்டேயா என்ற பெண் இருந்தாள் என்றும், அவளுக்குத் தென்னாட்டில் கடற்கரை வரையில் உள்ள நாட்டை அரசாளக் கொடுத்தான் என்றும் மெகஸ்தனீஸ் கூறி யுள்ளார். மலையத்துவச பாண்டியனை இவர் ஹெர்க்குலிஸ் என்று கூறினார் எனத் தோன்றுகிறது. அவனுடைய மகளுக்குப் பண்டேயா என்று பெயரிட்டான் என்பதும், பாண்டிய நாட்டைத் தடாதகையார் அரசாண்டார் என்பதும் ஒரே வரலாற்றைக் குறிக்கின்றன எனலாம்.

பாண்டிய அரசைப்பற்றி மெகஸ்தனீஸ் இன்னொரு செய்தியையும் கூறியுள்ளார். பாண்டிய அரசிக்கு 365 ஊர்கள் இருந்தன. ஒவ்வோர் ஊராரும் அரண்மனைக்கு நாள்தோறும் கடமை செலுத்தினார்கள். இந்த அரசிறை, காசாக இல்லாமல் பொருளாகச் செலுத்தப்பட்டிருக்கலாம் எனத் தோன்று கிறது. சிலப்பதிகாரத்தில் மாதரி என்ற இடைக்குல மடந்தை அரண்மனைக்குச் சேரவேண்டிய இறைவரியை நெய்யாகச் செலுத்தினாள் என்று கூறப்பட்டுள்ளது.

---

[1] பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் தடாதகைப் பிராட்டியார் திரு அவதார, திருமணப் படலங்கள்

இயல் 7

கொங்கர்

செந்தமிழ் வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தொன்றுதொட்டு ஆண்டுவந்தமையால் பழந் தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்று பெரும் பிரிவுகளாக இருந்துவந்தது. சேர, சோழ, பாண்டிய நாடுகளோடு கொங்குநாடு, தொண்டைநாடு என்ற பகுதிகளும் இருந்தன. ஆனால், இவை சங்க காலத்தின் கடைப்பகுதி யிலேயே சிறப்புறத் தொடங்கின. சேரநாடு முதலிய ஐந்தும் முறையே சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டியமண்டலம், கொங்குமண்டலம், தொண்டைமண்டலம் எனவும் வழங்கப் பெற்றன. சோழ, தொண்டை, கொங்கு நாடுகளுக்கிடையே நடுநாடு என்ற பிரிவும் சங்ககாலத்தின் இறுதியில் உருவாயிற்று. இதன் வடக்கெல்லை தென்பெண்ணையாறு; தெற்கெல்லை வட வெள்ளாறு; மேற்கெல்லை கொங்கு நாடு. இந்த இரு ஆறு களுக்கும் இடைப்பட்ட பகுதியே நடுநாடென வழங்கப்பட்டது. இந் நாட்டின் முக்கிய நகரம் திருக்கோவலூர். இந் நாட்டை மலையமான் மரபினர் ஆண்டனர். தற்காலத்தில் கோவை, நீலகிரி, சேலம், தருமபுரி, பெரியார் முதலிய மாவட்டங்களும் திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களின் மேல்பகுதியும் வட பகுதியும் கொண்டது கொங்கு நாடாகும். மதுரை மாவட்டத் திலுள்ள பழனி, திண்டுக்கல் வட்டங்களும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்துக் கரூர், குளித்தலை வட்டங்களும், வடக்கில் கொள்ளேகாலம் வட்டமும் கொங்குநாட்டைச் சேர்ந்தவையாகும். சேலம் மாவட்டத்து ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்களும் கொங்கு நாட்டைச் சேர்ந்தவையாகும். கொங்குநாட்டு மக்கள் 'கொங்கர்' எனக் குறிப்பிடப்பட்டனர்.[1]

கொங்குநாட்டின் எல்லைகள்

'கொங்குமண்டல சதகம்' என்னும் நூலில் காணப்பெறும் இரு வெண்பாக்கள் கொங்குநாட்டின் எல்லைகளைத் தொகுத்துக் கூறுகின்றன. அவையாவன :

---

1 புலவர் குழந்தை, 'கொங்குநாடு', பக். 27

'வடக்குத் தலைமலையம் வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று - கிழக்கு
கழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவே கொங்கு'[2]

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு'[3]

இவ்விரண்டு வெண்பாக்களும் கொங்கு நாட்டின் மேற்கெல்லை வெள்ளிமலை எனவும், தெற்கெல்லை வைகாவூர் எனவும், கிழக்கெல்லை குளித்தலை எனவும் கூறுகின்றன. ஆனால், வடக்கெல்லையைத் தலைமலை, பெரும்பாலை என்று இருவிதமாகக் கூறுகின்றன. தலைமலை, பெரும்பாலை என்பன கொங்கு நாட்டின் வடக்கு எல்லையாக உள்ள மலைத் தொடர்களின் பெயர்களாகும். கொங்குமண்டல சதகத்தின் மற்றொரு பாடலில் கொங்குமண்டலத்தின் எல்லைகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன:

'மதிற்கரை கீழ்த்திசை தெற்குப் பழனி மலைகுடக்குக்
கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின்வடக்கு
விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்றும் மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமும்'[4]

இச் செய்யுளின்படி மதிற்கரை அல்லது மதுக்கரை என்னும் ஊர் கொங்குநாட்டின் கிழக்கெல்லையாகும். இம் மதுக்கரை குளித்தலைக்கு மேற்கே காவிரியின் தென்கரையில் உள்ள ஓர் ஊராகும். இது கோட்டைக்கரை எனவும் அழைக்கப்பெறுகிறது. மேற்கூறப்பெற்ற ஆதாரங்களின் துணைகொண்டு கொங்கு நாட்டின் நான்கு எல்லைகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.[5]

தெற்கு - பழனி அல்லது பொதினி மலை
மேற்கு - வெள்ளிமலை (வெள்ளியங்கிரி)
வடக்கு - தலைமலை, பெரும்பாலை மலை
கிழக்கு - குளித்தலை - மதுக்கரை.

---

2 மே பக். 28
3 கொங்குமண்டல சதகம்
4 மே
5 புலவர் குழந்தை, மு.கு.நூ., பக். 29

கொங்குநாட்டின் அமைப்பு

கொங்குநாட்டின் தெற்கு எல்லையாகக் கருதப்பட்ட பழனி அல்லது பொதினி மலையின் தொடர்ச்சிமலைகளாகிய பன்றி மலையும் கோடக்கானல் மலைத்தொடரும் கொங்குநாட்டைச் சேர்ந்த மலைகளாகும். இவற்றின் தொடர்ச்சியாகிய ஆனை மலைத்தொடரும் கொங்குநாட்டின் தெற்கு எல்லையாகும். வெள்ளிமலை என்ற வெள்ளியங்கிரி மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்ததாகையால், அம் மலைத்தொடரின் சாரலே கொங்குநாட்டின் மேற்கு எல்லையாகும். பாலைக்காட்டுக் கணவாயைச் சேர்ந்துள்ள வள்ளுவநாடும் பழங்காலக் கொங்கு நாட்டைச் சேர்ந்ததேயாகும். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களின் வடபகுதி பாராமகால் (12 மகால்) எனப்படும். இப் பகுதி கொங்குநாட்டின் வடக் கெல்லையாகும். குளித்தலையும் மதுக்கரையும் கிழக்கெல்லை களாகக் கருதப்பட்டன. இவ்விரு இடங்களிலிருந்து தென் கிழக்கு-தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சேர்வராயன் மலை, கல்வராயன்மலை, பச்சைமலை, கொல்லிமலை முதலிய மலைத் தொடர்கள் கிழக்கெல்லையாக அமைந்துள்ளன. மேற்கூறப்பெற்ற எல்லைகளையுடைய கொங்குநாடு நான்கு பக்கங்களிலும் மலை யரண்களால் சூழப்பட்டு, தென்கிழக்குப் பகுதியில் மட்டும் சிறிது பாகம் இடைவெளியாக அமைந்துள்ளது. கொங்குநாட்டின் மத்தியில் காவிரியாறு வடக்கிலிருந்து தெற்காகச் சென்று பின் கிழக்கே திரும்பி ஒரு பள்ளத்தாக்கின் வழியாகச் சோழநாட்டில் புகுகிறது. கொங்குநாடு ஒரு மண்விளக்குப் போலவும், காவிரியாறு திரிபோலவும், காவிரியாற்றின் நாற்புறங்களிலிருந்தும் வந்து பாயும் நீர் எண்ணெய்போலவும், சோழநாட்டில் புகும் காவிரி அவ் விளக்குச் சுடர்போலவும் அமைந்துள்ள அமைப்பு வியக்கத்தக்கதாகும்.

பெயர்க்காரணம்

கொங்குநாடு என்னும் பெயர் 'கொங்கு' என்னும் சொல்லி லிருந்து உண்டானதாகப் புலவர் குழந்தை கருதுகிறார். அச்சொல் லிற்குப் 'பூந்தாது', 'மணம்', 'தேன்' என்னும் பல பொருள்கள் உண்டு. 'இயல்எறி பொன்னிறக் கொங்குசேர் புறைப்ப', 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி', 'கொங்கலர் பூம் பொழிலி' என்னும் இலக்கியத் தொடர்களில் இச் சொல் பூந்தாது, மணம், தேன் என்னும் பொருள்களில் பழகியுள்ளதால் இவை நிறைந்து விளங்கும் நாடெனக் கொள்ளலாம். கொங்குநாட்டைச் சுற்றிலும் மலைத்தொடர்கள் சூழ்ந்துள்ளன. நாட்டின் உட்பகுதி

களில் சிறுமலைகளும் குன்றுகளும் மிகுந்துள்ளன. சங்ககாலத்தில் கொங்குநாடெங்கும் மரம் செடி கொடிகள் மிகுந்து தழைத்துப் பூத்து மணங்கமழ்ந்ததனாலும், முன்னையோர் இந் நாட்டிற்குக் கொங்குநாடு எனப் பெயரிட்டனர்போலும். 'கொல்லிமலைத் தேன் சொரியும் கொற்றவா' எனக் கம்பர் பாராட்டிய இலக்கியச் சிறப்பு வாய்ந்தது. பூநாடு, மணநாடு, தேன்நாடு என்னும் மூன்றையும் உள்ளடக்கி, 'கொங்குநாடு' எனப் பெயர்பெற்றது. கொங்கு நாட்டு மக்கள் 'கொங்கர்' எனப் பெயர்பெற்றனர்.

இயற்கை வளம்

இந் நாட்டில் உயர்ந்த மலைகளும், அவற்றில் நெருங்கிய காடுகளும் இருப்பதால் தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய இரு பருவக்காற்றுக் காலங்களிலும் இந் நாட்டில் மழை பெய்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. மேல்நீர், கீழ்நீர் ஆகிய இருபுனலும் இந் நாட்டில் நிரம்ப உண்டு. வான் பொய்ப்பினும் தான்பொய்யா வளநீர்ச் செல்வக் களஞ்சியமாகிய காவிரியாறும் அதன் கிளை யாறுகளும் கொங்குநாட்டையும் சோழநாட்டையும் வளம்பெறச் செய்கின்றன. சோழநாடு நெற்களஞ்சியம் ஆக, கொங்கு நாட்டின் நீர்க்களஞ்சியம் அவசியமாகும். மேட்டூர் நீர்த்தேக்க மும், கீழ்பவானி அணைக்கட்டும் கொங்கு நாட்டில் அமைந் துள்ளன. சோழநாட்டின் நீர்வளம், கொங்குநாட்டில்தான் அமைந்துள்ளது. 'கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்' என்னும் பழமொழியில் 'எங்கும்' என்பது சோழநாட்டைக் குறிக்கும். கொங்குநாட்டில் நெல் அதிகமாக விளையாமற் போனாலும் அவரை, துவரை, உளுந்து, கடலை, மொச்சை, கொள்ளு முதலிய பருப்புவகைகள், காய்கறி கிழங்கு வகைகள், எண்ணெய் வித்துகள், கடுகு, மிளகாய், பருத்தி போன்ற இன்றியமையாப் பொருள்கள் அங்கு விளைகின்றன. மழைவளம் பிழைத்தாலும், நீர்வளம் பிழையாத ஆழ்ந்தகன்ற கேணிகள் நிறைந்துள்ள நாடு கொங்குநாடாகும். கொங்குநாட்டில் மலைவளம், நீர்வளம், காட்டுவளம், மருதவளம் ஆகிய நான்கு வளங்களும் நிறைந் துள்ளன. கொங்குநாட்டில் அமைந்துள்ள காடுகளில் கோங்கு, வேங்கை, தேக்கு, ஈட்டி, கருங்காலி, மருது, இருள், சூச்சர், சந்தனம், அகில், மா, பலா, மூங்கில் முதலிய மரவகைகள் அதிகமாகக் காணப்பெறுகின்றன. மலைச்சரிவுகளில் காய்கறி, கிழங்குகள், வாழை, ஆரஞ்சு, முந்திரி முதலிய பழவகைகளும், மஞ்சள், இஞ்சி, மிளகு, ஏலம், கிராம்பு, சாதிக்காய் முதலிய நறுமணப் பொருள்களும், நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய், அரக்கு, தேன் முதலிய மருந்துப் பொருள்களும், ஓரளவிற்குக்

காப்பிச் செடிகளும்: தேயிலைச் செடிகளும் பயிராகின்றன. ஆகையால், தமிழ்நாட்டில் மக்களுடைய உணவு. உடை, மருந்துகள் முதலியவற்றின் தேவைகளைக் கொங்குநாடு பூர்த்தி செய்கிறது எனக் கூறலாம்.

நாட்டுப் பிரிவுகள்

சங்ககால முதற்கொண்டு கொங்குநாடு வடகொங்கு, தென் கொங்கு என இரு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததாக இலக்கியங்களும் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. கோவை, பல்லடம் வட்டங்களின் வடபகுதியும், அவிநாசி, கோபி, பவானி, ஈரோடு, கொள்ளேகால் வட்டங்களும், சேலம் மாவட்டமும் வடகொங்கு என அழைக்கப்பட்டதெனக் கூறலாம். கோவை, பல்லடம் வட்டங்களின் தென்பகுதியும், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, தாராபுரம், கரூர், குளித்தலை, பழனி, திண்டுக்கல் வட்டங்களும் தென்கொங்கு எனக் கூறலாம். அவிநாசிக்கு மேற்கேயுள்ள கொங்குநாட்டுப் பகுதி 'மேல்கொங்கு' என வழங்கியது.[6] கொங்குநாட்டின் கிழக்குப் பகுதிக்கு 'மழகொங்கம்' என்னும் பெயர் வழங்கியதாகப் பாண்டியன் நெடுஞ்சடையனுடைய வேள்விக்குடிச் செப்பேடுகளிலிருந்து அறிகிறோம்.[7]

தொன்றுதொட்டுக் கொங்குநாடு இருபத்துநான்கு உள்நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தொண்டைமண்டலம் 24 கோட்டங்களாகப் பிரிவுபட்டிருந்ததுபோன்று கொங்குமண்டலமும் 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுபோலும். அந் நாடுகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

1. ஆறைநாடு
2. கொன்கலூர் நாடு
3. வாரக்க நாடு
4. காலடிக்கா நாடு
5. ஆனைமலை நாடு
6. நல்லுருக்க நாடு
7. வையாபுரி நாடு
8. அண்டநாடு
9. தென்கரை நாடு
10. காங்கய நாடு
11. மணநாடு
12. வெங்கால நாடு

---

6 ''ஆரூரர் தம்பிரான் ஆரூரன் 'மீகொங்கில்' அணிகாஞ்சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றாம் அன்றே''.
(சுந்தரர் தேவாரம்)
'மீகொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினார்' (பெரிய புராணம் - ஏயர்கோன்)

7 ''பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்டு அழகமைந்த வார்ச்சிலையின் 'மழகொங்கம்' அடிப்படுத்தி'' (வேள்விக்குடிச் செப்பேடு)

13. தலையநாடு
14. கிழங்கு நாடு
15. தட்டைய நாடு
16. ஒடுவங்கநாடு
17. காஞ்சிக்கோயில் நாடு
18. குறும்பு நாடு
19. வடகரை நாடு
20. அரைய நாடு
21. பூந்துறை நாடு
22. வாழவந்தி நாடு
23. இராசிபுர நாடு
24. பூவாணிய நாடு[8]

தனியாட்சி நாடு

சங்ககாலத்தில், சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தராட்சிக்கு உட்படாது தனியாட்சி நாடாகவே கொங்கு நாடு இருந்துவந்தது. மூவேந்தர்களுடைய வீரமும் புகழும் ஒருங்கே அமையப்பெற்ற தமிழ்க் குறுநில மன்னர்கள் பலர் இந்நாட்டை ஆண்டுவந்தனர். அவர்களைக் குறுநில மன்னர்கள் என்றழைப்பதைவிடத் தனியரசர்கள் என்றழைப்பது பொருத்தமாகும் எனப் புலவர் குழந்தை கூறுவார்.[9] இக் குறுநில மன்னர்களில் சிலர் மூவேந்தரும் ஒன்றுகூடி எதிர்ப்பினும் பயமின்றிப் போரிடும் வீரமும், ஆண்மையும், போர்த்திறமையும் நிரம்பியிருந்தனர்.

'களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர்எதிர்ந்து
எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே'[10]

'பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்னையும் உளனே'[11]

என ஔவையாரால் புகழப்பெற்ற தகடூர் அதிகமான் நெடுமானஞ்சி போன்ற வீரமும் போராற்றலும் வாய்ந்த தலைவர்கள் பலரால் தனித்தனியாகக் கொங்குநாடு பழங்காலத்தில் ஆளப்பட்டு வந்தது. இந்தத் தனியரசர்கள் வேளிர் என்னும் சிறப்புப் பெயருடைய வேளாண்குடிச் செல்வர்களாவர். சங்ககாலத்திய கொங்குநாட்டுக் குறுநில மன்னர்கள் தம்முட் பகைகொண்டு போர் செய்ததாக வரலாறு இல்லை எனப் புலவர் குழந்தை

8 புலவர் குழந்தை, மு.கு.நூ. பக். 49
9 டி பக். 79
10 புறம். 87 1-4
11 டி 89 : 7-9


தொண்டை நாடு
நடுநாடு
சோழநாடு
பாண்டியநாடு
மதுரை
திருச்சிராப்பள்ளி
காவேரி
அமராவதி
பவானி ஆறு
சங்க காலக் கொங்கு நாடு

நிலப்படம் 4

1. தழைக்காடு
2. ஹடிநாடு
3. மாதேசுரன்மலை
4. பிளிகிரிரங்கன்மலை
5. தகடூர்
6. தருமபுரி
7. பெரும்பாலை
8. பருகூர்மலை
9. தலைமலை
10. டணாயக்கன்கோட்டை
11. சிறுமுகை
12. ஒடுவாங்கநாடு
13. சத்தியமங்கலம்
14. வடகரைநாடு
15. அந்தியூர்
16. பூவாணியநாடு
17. தோப்பூர்
18. சூரமங்கலம்
19. சேலம்
20. சேர்வராயன்மலை
21. கல்வராயன்மலை
22. சேலநாடு
23. இராசிபுரம்
24. இராசிபுர நாடு
25. பச்சைமலை
26. கொல்லிமலை
27. தூசூர்நாடு
28. நாமக்கல்
29. வாழவந்திநாடு
30. விமலைநாடு
31. காட்டுப்புத்தூர்
32. நெரூர்
33. குளித்தலை
34. வெங்கல்நாடு
35. கீழ்கரை
36. ஆரயநாடு
37. கொடுமுடி
38. மேல்கரை
39. ஈரோடு
40. பூந்துறை
41. குறும்புநாடு
42. திருப்பூர்
43. தணக்குநாடு
44. செம்பைநாடு
45. பல்லடம்
46. ஆறைநாடு
47. கவையநாடு
48. வெள்ளிமலை
49. தென்கரைநாடு
50. தாராபுரம்
51. பொள்ளாச்சி
52. ஆனைமலைநாடு
53. உடுமலைநாடு
54. ஆனைமலை
55. வராகமலை
56. அண்டநாடு
57. பழனி
58. விருபாட்சி
59. மணநாடு
60. கன்னிவாடி
61. நீலகிரி

கூறுகிறார்.[12] கொங்குநாட்டு வேளிர்கள் மூவேந்தர்களுடன் மணவுறவுகொண்டு நெருங்கிய உறவினர்களாக விளங்கினர். கொங்குநாட்டின் வடக்குப் பகுதியின்மீது மொழிபெயர் தேயத்து அன்னியர்கள் படையெடுத்து வராத வகையில் நாட்டைக் காத்துவந்தனர். கொங்குநாடு சங்ககாலத்தில் தனியாட்சி நாடாக இருந்தது என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன:

(1) கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பசும்பூண் பாண்டியன் கொங்கரை வென்று அந் நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றினான்.[13]

(2) சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கொங்குநாட்டை வென்று பின் மேற்குநோக்கிச் சென்று சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சியை முற்றுகையிட்டான்.[14]

(3) சேரன் செங்குட்டுவனின் சிற்றப்பனாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவன் கொங்குநாட்டை அடிமைப் படுத்தினான்.[15]

(4) சேரன் செங்குட்டுவன் கொங்குநாட்டுச் செங்களம் என்ற இடத்தில் நடந்த போரில் மோகூர்ப் பழையனுக்குத் துணையாக வந்த சோழ பாண்டியரை வென்றான்.[16]

(5) சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இலங்கை மன்னனையும், மாளுவ வேந்தனையும் போலவே கொங்கு மன்னரையும் வேற்று நாட்டு மன்னராகவே குறிப்பிட்டார்.

சங்க காலத்திற்குப் பிறகும் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்னும் பாண்டிய மன்னன் கொங்குநாட்டுத் தகடூரில் நடந்த போரில் அதிகமானையும் அவனுக்குத் துணையாக வந்த நந்திவர்ம பல்லவனையும் வென்று, பிறகு சேரநாட்டு மங்கலாபுரத்தை அடைந்தான்.[17] கொங்குநாட்டின் உரிமை பற்றியே மாறவர்ம

---

12 புலவர் குழந்தை, மு.கு.நூ., பக் 79

13 'வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்' (அகம். 253 : 4-5)

14 புறம். 373 : 8

15 பதிற். 23 : 15-16

16 சிலப். 25 : 153-4

17 Aiyangar, Dr. S. K., *Seran Vanji*, p. 179

பாண்டியனுக்கும் இரண்டாம் நந்திவர்மனுக்கும் பகைமை உண்டாயிற்று. பராந்தக நெடுஞ்சடையன் அதிகமானை வென்று மதுரையில் சிறையிட்டதாக வேள்விக்குடிச் செப்பேடுகள் விளம்புகின்றன.[18] எனவே, சேர சோழ பாண்டியர் ஆகிய மூவேந்தரும் கொங்குநாட்டின் உரிமைக்காகப் போட்டியிட்டதனால் அந்நாடு மூவேந்தரின் ஆட்சிக்கு உட்படாது தனியாட்சி நாடாகவே இருந்தது என்பது புலனாகின்றது.

கொங்குநாட்டின் பழைமை

வரலாற்றிற்கு முந்திய காலத்தை வரலாற்றறிஞர்கள் கற்காலம், செம்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக் காலம் எனப் பலவகைகளாகப் பிரித்துள்ளனர். கற்காலத்தையும் முதற் கற்காலம், இரண்டாம் கற்காலம், மூன்றாம் கற்காலம் என மூன்றாகப் பாகுபாடு செய்துள்ளனர். கொங்குநாட்டில் மூன்றாம் கற்காலப் பொருள்கள் நிரம்பக் கிடைத்துள்ளன. கற்களால் செய்யப்பெற்ற பொருள்களில் பெரும்பான்மையானவை உளி, கத்தி, உரைகல், ஆட்டுக்கல் முதலியனவாகும். இக் கற் பொருள்கள் சேர்வராயன்மலை, கல்வராயன்மலை, கொல்லி மலை, கோதைமலை மீதே கிடைத்துள்ளன.

இரும்புக்காலம்

பழங்காலத் தமிழ்மக்கள் இறந்தவர்களைப் பெரிய மண் தாழிக்குள் வைத்து மூடிப் புதைத்துவந்தனர். குழிக்குள் அந்தத் தாழியை வைத்து மண்கொண்டு மூடிவிடுவது ஒருவகையாகும். சதுரமான குழிக்குள் நான்கு பக்கங்களிலும் செங்குத்தாகப் பலகைக் கற்களை நிறுத்திவைத்துப் பலகைக் கல்லால் மூடி மண் கொண்டு மூடிவிடுவது மற்றொரு வகையாகும். இத் தாழிகளுக்கு 'முதுமக்கட்டாழி' என்றும், குழிகளுக்கு 'மாண்டவர் குழி' என்றும் பெயர்கள் வழங்கின. இத் தாழிகள் சில செம்மண்ணாலும் சில கருமண்ணாலும் செய்யப்பட்டு மேற்பாகம் பளபளப்பாக்கப்பட்டிருந்தன. இவற்றினுள் மாண்டவர்களுக்கு விருப்பமான பொருள்களையும் வைப்பர். அங்ஙனம் வைக்கப் பட்ட பொருள்களில் கொங்குநாட்டில் இதுவரையில் கிடைத்துள்ளவை, இரும்புக் கருவிகளும் வெண்கலக் கருவிகளும் ஆகும். கத்தி, குத்தீட்டி, மரப்பிடி கொண்ட ஈட்டி, அம்பு, மண்வெட்டி முதலியன இரும்பினால் செய்யப்பட்டிருந்தன. கிண்ணம், செம்பு, கெண்டி, தட்டு, கரண்டி, சாடி, சலங்கை, வளையல்,

18 புலவர் குழந்தை, மு.கு.நூ., பக். 81

மாலை முதலியன வெண்கலத்தினால் செய்யப்பெற்றிருந்தன. வெண்கலத்தினால் செய்யப்பட்ட பொருள்கள் மிகுந்த வேலைப்பாடு கொண்டவையாகும். சில இடங்களில் பொன்முடிகளும் கிடைத்துள்ளன. இவை கொங்குநாட்டுத் தலைவர்கள் அணிந்தவையாகும். இதனால் பொன்கண்டு பொருள் செய்யவும் கொங்கு மக்கள் அறிந்திருந்தனர் என்று கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட மாண்டவர் குழிகள் கொங்குநாட்டிலுள்ள பெருந்துறை, பேரூர், வெள்ளலூர், பல்லடம், உடுமலைப்பேட்டை, பூண்டி, பொள்ளாச்சி முதலிய இடங்களுக்கு அருகில் உள்ள கிராமங்களில் கிடைத்துள்ளன. டால்மன் என்ற சதுரக் குழிகள் நீலகிரியில் மேட்டுப்பாளையத்திற்கு அருகில் நூற்றுக்கு மேல் கிடைத்துள்ளன. தாராபுரத்திற்குப் பக்கத்தில் அவை பல இடங்களில் கிடைத்துள்ளன. பல்லடம் வட்டத்துச் செட்டிப்பாளையத்தில் கிடைத்த ஒரு மாண்டவர்குழியில் பளபளப்பான கருமைநிற மட்பாண்டங்கள், மான்உருவம் வரையப்பட்ட செப்புக்குவளை, யானைத்தந்தம், தந்தச்சீப்பு, சிப்பி, மணி, தலையணை முதலிய பொருள்கள் இருந்தன.[19]

கொங்குநாட்டின் வரலாற்றுக் காலம்

சங்ககாலத் தமிழகத்தே நூற்றுக்கணக்கான சிற்றரசர் இருந்தனர். அவர்களுள் பாரி, ஓரி, காரி, பேகன், ஆய், அதியமான், நள்ளி என்னும் எழுவரை மட்டும் சங்ககாலச் சான்றோர்கள் வள்ளல்கள் என வரையறுத்துக் கூறினர். இந்த ஏழு வள்ளல்களுக்குப் பின்னர் வாழ்ந்த வள்ளல் குமணனோடு சங்ககால வள்ளல்கள் எண்மராவர். இவ் வெண்மரில் நால்வர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவராவர்.

பேகன்

பொதினி அல்லது பழனி மலையும் அதைச் சூழ்ந்த பகுதியும் வையாபுரி நாடு அல்லது வைகாவூர் நாடு என வழங்கியது. இது கொங்கு நாட்டிலிருந்த இருபத்து நான்கு நாடுகளில் ஒன்றாகும். சங்க காலத்தில் இந்த நாட்டிலிருந்த மலைக்கு பொதினிமலை என்ற பெயரும் வழங்கியது.

> ‘ முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
> பொன்னுடை நெடுநகர்ப் பொதினி ’[20]

என்னும் அகநானூற்று வரிகள் இதனை வலியுறுத்துகின்றன.

---

19 புலவர் குழந்தை, மு.கு.நூ., பக். 89-90 20 அகம். 61 : 15-16

இந் நாட்டை ஆவியர் குடியினர் ஆண்டுவந்தனர். 'ஆவி' என்பவன் அக் குடிக்கு முதல்வனாவான். இதனால், பழனிக்கு ஆவிநன்குடி என்றும் பெயர் வழங்கலாயிற்று. 'ஆவிநன்குடி அசைதலும் உரியன்',[21] 'ஆவிநன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே'[22] என்பதையும் காண்க. இம் மரபினர் வையாவி, வேளாவி எனத் தம் குடிமுதல்வன் பெயரை முன்வைத்துத் தங்களை அழைத்துக்கொள்ளுவது வழக்கம். உதியன்குடி, பொறையன்குடி என்ற சேரமரபைச் சேர்ந்த சேரவரசர்கள் ஆவியர் குடியைச் சேர்ந்த வேளிர்களோடு மணஉறவு கொண்டிருந்தனர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மனைவியும், செல்வக்கடுங்கோ வாழியாதன் மனைவியும் வேளாவிக் கோமான் பதுமன் என்பாரின் மகளிராவர். இவ்விருவருக்கும் வேளாவிக் கோமான் பதுமன்தேவி என்றே பெயர் வழங்கியது. இவ் வேளாவிக்கோமான் பெயரால், சேரர் தலைநகராகிய வஞ்சியில் 'வேளாவிக்கோ மாளிகை' என்ற ஓர் அரண்மனை இருந்தது.[23]

வையாவிக்கோப் பெரும்பேகன் என்பது பேகனின் முழுப் பெயராகும். இவனுடைய மனைவியின் பெயர் கண்ணகி. இவள் சிலப்பதிகாரக் கண்ணகிக்கு முற்பட்டவளாவாள். பழனிக்குப் பக்கத்தில் ஆய்க்குடி என்னும் ஊர் இருக்கிறது. இது வள்ளல்களில் ஒருவனான ஆயின் ஊரெனவும் அப் பகுதியை அவன் ஆண்டு வந்தனன் எனவும் கூறுவர். ஆவிக்குடி அல்லது ஆவியர்குடி என்பதே ஆய்க்குடி எனத் திரிந்து வழங்கலாயிற்று. ஆவிநன்குடி என்பதும் இதற்குச் சான்றாகும். கார்காலத்தில் ஒருநாள் மேகத்தைக் கண்டு களிப்புற்ற ஒரு மயில் தன்னுடைய அழகிய தோகைகளை விரித்து ஆடியதைக் கண்டு களித்து, அம் மயிலின் ஆட்டக்கலையில் தன்னுடைய மனத்தைப் பறி கொடுத்து, தான் அணிந்திருந்த விலையுயர்ந்த பொன்னாடை ஒன்றை அம் மயிலுக்குப் போர்த்திப் பொன்றாப் புகழ் எய்தினான் பேகன். பேகனுடைய இவ்வரிய செயலை வியந்த பரணரும் இடைக்கழி நல்லூர் நத்தத்தனாரும் அவனுடைய கொடை மடத்திறந்தினைப் பின்வருமாறு புகழ்ந்துள்ளனர் :

'உடாஅப் போரர் ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்'[24]

---

21 முருகு. 176
22 திருப்புகழ்
23 புலவர் குழந்தை, மு. கு. நூ. பக். 140
24 புறம். 141 : 10-12;

'மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேகன்'[25]

'கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகன்'[26]

புலவர்களுக்கு வரையாது வாரி வழங்கித் தமிழ் வளர்த்தவன் பேகன். இத்தகைய கொடைமடம்பட்ட கொங்கர்களால் போற்றப்பட்டது சங்கத்தமிழ்.

ஆனால், இத்தகைய அருளுள்ளமுடைய பேகன் தன் மனைவி கண்ணகியை வெற்றுதுப் பழனிக்குப் பக்கத்தில் இருந்த நல்லூரில் உள்ள ஒருத்திபால் சென்று வசிக்கலாயினன். பேகனது போற்றா ஒழுக்கத்தைக் கண்ட கபிலர், பரணர், அரிசிற்கிழார், பெருங்குன்றூர்கிழார் என்ற சான்றோர்கள் பேகனைப் புகழ்ந்து அவனுடைய கற்புடைய மனைவி கண்ணகியுடன் அமைந்து வாழும்படி செய்தனர்.

அதியமான்

சங்ககால வள்ளல்களுள் ஒருவனான இந்த அதியமான் கொங்கு நாட்டுத் தகடூரை ஆட்சிபுரிந்தவனாவான். தருமபுரி, அரூர், ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்களின் தென்பகுதி ஆகியவை தகடூர் நாடாகும்; சங்ககாலத்தில் வடக்கில் கோலார்ப் பகுதியிலிருந்து தெற்கே நாமக்கல் வரையில் பரவியிருந்தது. இன்றைய தருமபுரியே அன்றைய தகடூர் ஆகும். தருமபுரிக்குத் தெற்கிலுள்ள அதமன்கோட்டை சங்ககாலத்திய அதியமான் கோட்டையாகும். சங்ககாலம் முதல் கி. பி. 13ஆம் நூற்றாண்டுவரையில் இத் தகடூர் நாட்டை அதியமான் மரபினர் ஆண்டுவந்தனர். இவ் வதியமான் மரபினர் வீரமும் புகழும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற கொங்குவேளிர் குடியினராவர். இம் மரபினர் பொன்முடிக் கணவாயின் பாதுகாவலராக இருந்துவந்தனர்.

அதியமான் நெடுமான் அஞ்சி என்பது அதியமானின் முழுப் பெயராகும். தமிழ்மக்களின் தனிப்பெருஞ் செல்வமாகிய சங்ககாலத்து ஔவையாரிடம் ஆராத அன்புடையவன் அதியமான். ஔவையாரைத் தமிழ்த்தாய் என்றே மதித்து, தன்னுடைய

25 புறம். 145 : 1-3 26 சிறுபாண். 85-87

அவைப்புலவராகவே போற்றினான். அதியமான் ஒரு நாள் சேலத்தை அடுத்த கஞ்சமலையில் உயர்ந்த பாறைப் பிளவின் உச்சியில் இருந்த நெல்லிக்கனி யொன்றை அரிதின் முயன்று பறித்துவந்தான். அக் கனி, உண்டவருக்கு உறுதியான உடல் நலத்தையும் நீண்ட வாழ்நாளையும் தரவல்லது. அதைத் தான் உண்பதினும் தமிழ்த் தொண்டாற்றிவரும் ஔவையார் உண்பதே மேலெனக் கருதிய அதியமான், அதன் பயனை உரையாது அதை ஔவைக்குக் கொடுத்துப் பொன்றாப் புகழை அடைந்தான். தனக்கென வாழாத அதியமானின் அரும்பெருங் குணத்தினைத் தம் பாடல் ஒன்றில் ஔவையார் பாராட்டியுள்ளார்.

'மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே'[27]

பெருந்திறல் படைத்த அதியமான் தன்னோடு மாறுபட்ட காஞ்சித் தொண்டைமானிடம் ஔவையாரைத் தூது அனுப்பி, போர் நிகழாதவண்ணம் அமைதியை நிலைநாட்டினான். ஔவையார் தொண்டைமானிடம் தூதுசென்று அவனுடைய போர்க்கருவி களைப் புகழ்வதுபோன்று அதியமானுடைய போர்வன்மையைப் பின்வருமாறு ஒரு பாடலில் விளக்கியுள்ளார்.

'இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணல்எங் கோமான் வைந்நுதி வேலே.'[28]

கொங்குநாட்டைச் சேர்ந்து கிழக்கே தென்பெண்ணையாற் றின் கரையிலுள்ள திருக்கோவலூரைத் தலைமை நகரமாகக் கொண்டது நடுநாடு. அதைச் சங்ககாலத்தில் மலையமான் மரபினர் ஆண்டுவந்தனர். அதியமான் அஞ்சியின் ஆட்சிக் காலத்தில் அதை மலையமான் திருமுடிக்காரி என்பான் ஆண்டு

27 புறம். 91 : 7-11 28 மே 95

வந்தான். சங்ககால வள்ளல்களுள் ஒருவனான காரி அதிய மானோடு பகைமைகொண்டு தகடூர் நாட்டின்மீது படை யெடுத்தான். அதியன் அவனை வென்று துரத்தினதோடு கோவலூரையும் அழித்தான். இச் செயலை ஔவையார்,

'முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி யேந்திய தோளே'[29]

எனப் பாராட்டியுள்ளார். தோற்றோடிய காரி பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னனைத் தகடூர் நாட்டின்மீது படையெடுக்கும்படி தூண்டினான். காரியின் படைத் துணை யோடு சேரன் இரும்பொறை படையெடுத்து வந்து தகடூரை முற்றுகையிட்டான். அதியமான் வெளிப்போந்து ஆற்றலுடன் பொருது மறப்புகழ் எய்தினான். இப் போரைப்பற்றி எழுதப் பெற்றதே 'தகடூர் யாத்திரை' என்னும் பழந்தமிழ் நூலாகும்.[30] அதியமான் இறந்தது கண்ட ஔவையார் ஆறாத்துயரத்துடன் பாடி அழுதார்.[31] சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை இவ் வெற்றியின் அறிகுறியாகச் சேலத்தருகில் உள்ள மலைக்குச் சேர அரையன் மலை எனப் பெயரிட்டனன். இம் மலை இப்பொழுது சேர்வராயன் மலை எனத் திரிந்து வழங்குகிறது.[32] அதியமானின் மனைவி நாகையார் எனப்படுவார். இவ்வம்மையார் சங்ககாலப் புலவருள் ஒருவர் என்றும் அகநானூற்றில் 352ஆம் பாடல் அவரால் இயற்றப்பெற்றதென்றும் புலவர் குழந்தை கூறுவார்.[33] அதியமானின் மகன் பொகுட்டெழினி என்பானும் தன் தந்தை யைப் போலவே வீரமும் புகழும் உடையவனாக விளங்கினான். அதியமானுடைய முன்னோரில் ஒருவன், மக்கள் பயன்படுத்த அறியாது காட்டில் இருந்த கரும்பை, முதன்முதலில் அதன் பயனைக் கண்டு நாட்டில் பயிர்செய்து மக்கட்குப் பயன்படச் செய்தவனாவான்.[34] எனவே, கரும்பை உலக மக்கள் பயன் படுத்தச் செய்த பெருமை கொங்குநாட்டைச் சேர்ந்ததாகும்.

ஓரி

கொங்குநாட்டில் கொல்லிமலைப் பகுதியிலிருந்த பதினான்கு சிறு நாடுகளுக்குத் தலைவனாக இருந்தவன் ஓரி. இந் நாடு மிக்க வளம் பொருந்திய மலைநாடு. அம் மலைமீதிருந்த கொல்லிப்பாவை இலக்கியச் சிறப்புடையது.

---

29 புறம். 99 : 13-14
30 புலவர் குழந்தை, மு.கு.நூ., பக். 144
31 புறம். 235
32 புலவர் குழந்தை, மு.கு.நூ., பக். 144
33 ஷெ
34 புறம். 99 : 1-7

'முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
பலர்புகழ் பாவை யன்னநின் நலனே.'[35]

கொல்லிமலையில் கிடைத்த தேனும் மிக்க புகழ்பெற்றதாகும். ஆதன் என்பான் ஓரிக்குடியின் முதல்வனாகையால், ஓரிக்கு ஆதன் ஓரி, என்ற பெயரும் வழங்கியது. ஓரி விற்போர் செய்வ திலும் வில்லம்புகொண்டு விலங்குகளை வேட்டையாடுவதிலும் மிக்க திறமையுள்ளவன். ஆகையால், இவனை வல்வில் ஓரி என்று மக்கள் அழைத்தனர். கொல்லிமலைச் சாரலில் வேட்டை யாடச் சென்ற ஓரி, ஓர் யானையின்மீது அம்பொன்றை எய்தான். அந்த அம்பு யானையை வீழ்த்தி, அந்த யானையின்மீது பாய் வதற்குச் சமயம் பார்த்திருந்த ஒரு புலியின் அகன்ற வாயில் தைத்து ஊடுருவிச் சென்று அதைக் கொன்றது. பின்னர் வழியில் நின்ற ஒரு கலைமானை மாய்த்து, பின்னர் ஒரு காட்டுப்பன்றியின் உயிரை மாய்த்து அங்குப் புற்றின்கண்ணிருந்த ஓர் உடும்பினையும் கொன்றது.[36]

வன்பரணரின் இக் கூற்று எவ்வளவு உண்மையுடையது என்பது ஐயுறத்தக்கதாகும். எனினும், கொல்லிமலைப் பகுதியை ஆண்ட ஓரி என்ற வள்ளல் சிறந்த வில்வீரன் என்று கூறும்படி 'வல்வில் ஓரி' என்னும் பெயர் பெற்றனன். அவ்வழியே வந்து இளைப்பாறியிருந்த பாணர்கள், ஓரியின் வில்திறத்தைக் கண்டு தங்களுடைய யாழை மீட்டி அவனைப் பாடினர். அத் தமிழிசை யைச் சுவைத்த ஓரி, தான் வேட்டையாடிய மானின் தசை யுணவோடு தேனும் தந்து, அம் மலையிடைப் பிறந்த பொன்னும் மணிகளும் அளித்து, தன் பெயரைமட்டும் சொல்லாது சென்ற பெருந்தகையாளனாவான்.[37] ஓரியின் குதிரைக்கும் ஓரி என்று பெயர். சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோட்டிலும், இராசிபுரத் திலும் வள்ளல் ஓரிக்குத் தற்காலத்தில் உருவச் சிலைகள் அமைத்துள்ளனர். கொல்லிமலைக்கருகில் நடந்த ஒரு போரில் அதியமானும் ஓரியும் சேர்ந்து, சேரனையும் காரியையும் எதிர்த் தனர். அப் போரில் ஓரி உயிரிழந்ததாகத் தெரிகிறது.

'இளையோ ளிறந்த அனைத்தற்குப் பழவிறல்
ஓரிக் கொன்ற ஒருபெரும் தெருவிற்
காரி புக்க நேரார் புலம்போல்'[38]

---

35 அகம். 209 : 12-17
36 புறம். 152 : 1-6
37 ஷை 152 : 13-32
38 நற். 320 : 4-6

குமணன்

கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த உடுமலைப் பேட்டைக்கருகில் குதிரைமலை இருக்கிறது. சங்ககாலத்தில் இதற்கு முதிரைமலை என்றும், அம் மலையைச் சூழ்ந்த நாட்டிற்கு முதிரநாடு என்று பெயர்கள் வழங்கின. இந்த முதிரநாடு பழனி வட்டத்து வடமேற்குப் பகுதியும், உடுமலை வட்டத்தின் தென் கீழ்ப் பகுதியும் கொண்டதாகும். சங்ககால வள்ளல்களுள் ஒருவனான குமணன் இந்த முதிரைமலை நாட்டை ஆண்டான். இவன் பேகன், அதியன், ஓரி முதலிய சங்ககால வள்ளல்களுக்குப் பின்னர் இருந்தான்.

'நட்டோர்ர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே'[89]

என்ற பெருஞ்சித்திரனாரின் கூற்றுப்படி இவனது தலைமையூர் முதிரம் என்பதாகும். மிக்க வறுமையால் வாடிய பெருஞ்சித்திரனார் முதிரத்திற்குச் சென்று குமணனைப் பாடினார். குமணன் தன் அரண்மனையில் அவரை இருக்கச்செய்து நல்லுணவு உண்பித்து உடல்வளம் பெற்ற பிறகு புலவர் விரும்பியவாறு பெரும் பொருள் கொடுத்து, ஓர் யானையையும் பரிசிலாகக் கொடுத்தான். புலவர் அப் பொருள்களை யானையின்மீது ஏற்றிக்கொண்டு பெருஞ்செல்வராகத் தம் ஊருக்குத் திரும்பினார்.[40] குமணனுக்கு இளங்குமணன் என்ற தம்பியொருவன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன். அண்ணனது புகழ்கண்டு அழுக்காறு கொண்டு குமணனது நாட்டைக் கவர்ந்துகொண்டதோடு, அவன் உயிரைப் போக்குவதற்கும் முயன்று வந்தான். ஆகையால், குமணன் நாட்டைவிட்டு ஒரு காட்டில் வாழ்ந்துவந்தான்.

பெருந்தலைச்சாத்தனார் எனும் புலவர் முதிரத்திற்குச் சென்று குமணனை நாட்டில் காணாது காட்டில் சென்று கண்டார். குமணன், தன்னைப் பாடிய அப் புலவர்க்குப் பரிசாகத் தன்னுடைய தலையையே வழங்குவதற்கு முன்வந்தனன். ஆனால், புலவர் அவன் தந்த வாளைமாத்திரம் வாங்கிக்கொண்டு, இளங்குமணனுக்கு அவ் வாளைக் காட்டி., நடந்தது கூறித் தம் புலமை நலத்தால் அவனுக்கு நல்லறிவு கொளுத்தினார்.

---

89 புறம். 160 : 12-13 40 மே 159, 160, 161

நன்னன்

கொங்குநாட்டின் மேற்குப் பகுதியாகிய கொண்கானத்தை நன்னன் வேண்மான் மரபினர் ஆண்டனர். இம் மரபினர் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பரவி அங்கங்கே உள்ள சிறு பகுதிகளை ஆண்டுவந்தனர். அம் மரபைச் சேர்ந்த நன்னன் சேய் நன்னன் என்பான் திருவண்ணாமலைக்கு மேற்கில் உள்ள செங்கண்மா (செங்கம்) என்னும் ஊரில் இருந்து பல்குன்றக் கோட்டத்தை ஆண்டனன். பத்துப்பாட்டில் ஒன்றான மலைபடு கடாம் என்னும் நூலின் பாட்டுடைத் தலைவன் இவனாவான். முன்னர்க் கூறப்பெற்ற கொண்கானத்து நன்னன் மரபில்வந்த ஒருவனான நன்னன் என்பான் பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள ஆனைமலைப் பகுதியை ஆண்டுவந்தான். இந்த நன்னனுக்குத் தலைமை ஊராக விளங்கியது நன்னனூர் என்பதாகும். அப் பகுதியில் நன்னன் பாறை, நன்னன் மூக்கு என்னும் பெயர் கொண்ட ஊர்கள் பலவுள்ளன. ஆனைமலைச் சோமேசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்றில் நன்னனூர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பாலக்காட்டின் கீழ்ப்பகுதியும் இந்த நன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

ஆனைமலைப் பகுதியை ஆண்ட நன்னன் கொண்கானத்து நன்னன் காலத்தவன்; மிகுந்த வீரமும் புகழும் படைத்த பழங் கொங்கன் என்பதை நாம் உணரவேண்டும்.

> ' நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
> துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி
> பொன்னணி வல்வில் புன்றுறை '[41]

இந்த அகநானூற்றுப் பாட்டில் குறிக்கப்பெற்ற வேளிருள் நன்னன் என்பான் இவனேயாகும். இப் பாட்டில் குறிக்கப்பெற்ற வேளிர்கள் ஒன்றுகூடிக் கழுமலம் என்ற இடத்தில் நடந்த போரில், சோழன், பெரும்பூட்சென்னியின் படைத்தலைவனாகிய பழையன் என்பானுடன் போரிட்டு அவனைக் கொன்றனர். அதுகண்ட சோழன் வெகுண்டு இவர்களோடு பொருது வெற்றிபெற்றான். இந் நன்னன் சேரநாட்டின்மீது படையெடுத்துப் பாலக்காட்டுக் கணவாய் வழியாகச் சென்று, அப் பகுதியையும் அதற்குத் தெற்கில் இருந்த பூழிநாட்டையும் பிடித்துக்கொண்டனன். இது கேட்ட களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்ற சேரவரசன், பெரும் படையுடன் வந்து நன்னனை வென்று தன்னாட்டை மீட்டுக்கொண்டான்.[42]

---

41 அகம். 44 : 7-9

42 பதிற். பதி. 4 : 6-8

விச்சிக்கோ

கொங்குநாட்டுக் கொல்லிமலையின் வடகிழக்கில் அதன் தொடராக உள்ளது பச்சைமலை என்பது. இதன் பழைய பெயர் விச்சிமலையாகும். கொல்லிமலை போன்று இம்மலையும் ஒரு மலை நாடு. குறும்பூர் இந்நாட்டின் தலைநகர்.

'வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோக் குறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே'[43]

கொல்லிமலை நாட்டை வல்வில் ஓரி மரபினர் ஆண்டுவந்ததுபோல விச்சிக்கோ மரபினர் விச்சிமலை நாட்டை ஆண்டு வந்தனர். இம் மலையின் அடிவாரத்தில் விச்சியூர் என்ற ஊரும் இருந்தது. விச்சிக்கோவிற்கு, இளவிச்சிகோ என்ற இளவல் ஒருவன் இருந்தனன். அவனுடைய பெயரையொட்டி இவ்வூர் 'பெருவிச்சியூர்' 'சிறுவிச்சியூர்' என இரண்டாகப் பிரிந்திருந்தது. பெருவிச்சியூர் மறைந்து, சிறுவிச்சியூர் 'சிறுவாச்சூர்' எனத் திரிந்து வழங்குகின்றது. இவ் விச்சிக்கோ கொங்கு வேளிர்குடிச் செல்வன்; வீரமும் கொடைக் குணமும் ஒருங்கமைந்து புலவர் பாடும் புகழுடையவனாக விளங்கினான்.

முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளலான பாரி இறந்தபின் பாரியின் நண்பரான கபிலர், பாரியின் மகளிரை அழைத்துக் கொண்டு இவன்பால் வந்து,

'விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னும் அந்தணன் நீயே,
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுநன்
நினைக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்
அடங்கா மன்னரை யடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே'[44]

என வேண்டினார். ஆனால், விச்சிக்கோ, பாரியை வென்று கொல்வித்த மூவேந்தருடைய சினத்திற்கு ஆளாக விரும்பாது, பாரியின் மகளிரை மணந்துகொள்ள மறுத்துவிட்டான். அதன்

43 குறுந். 328 : 5-8 44 புறம். 200 : 8-17

பின்னர், கபிலர் பாரியின் மகளிரை மலையமான் நாட்டுத் திருமுடிக்காரியின் மக்களுக்கு மணஞ்செய்து கொடுத்தார் என்ற செய்தி வழக்கத்தில் உள்ளது. தகடூர் அதியமானைப் போரில் வென்ற பெருஞ்சேரல் இரும்பொறையின் மகன் இளஞ்சேரல் இரும்பொறை என்பான் கொங்குநாட்டின்மீது படையெடுத்து வந்து, இந்த விச்சிக்கோவை வென்றதாகப் பதிற்றுப்பத்து என்னும் நூலிலிருந்து உணர்கிறோம்.[45]

தாமான் தோன்றிக்கோன்

கொங்குநாட்டுக் கரூர்க்குப் பக்கத்தில் தாந்தோன்றிமலை என்னும் மலை இருக்கிறது. அதன் பழம்பெயர் தோன்றிமலை யாகும். தாமான் என்பான் இம் மலைப்பகுதியை ஆண்டு வந்தமையின், தாமான் தோன்றிமலை என வழங்கிப் பிற்காலத்தில் தாந்தோன்றி மலையென மாற்றம் அடைந்தது. இந்தத் தோன்றிக்கோன் கொங்கு வேளாளப் பெருங்குடிச் செல்வன். அச் செல்வச் சிறப்பிற்கேற்ற கொடைக்குணமும் தமிழ்ப்பற்றும் ஒருங்கே அமையப் பெற்றவன். இவன் காலத்தே ஐயூர் முடவனார் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்பால் பேரன்புடையவர். அவனையன்றிப் பிறரைப் பாடுவதில்லை எனவும், அவனிடம் அன்றிப் பிறர் எவரிடத்திலும் ஒன்றும் வேண்டிச் செல்வதில்லை எனவும் உறுதிபூண்டவர். இப் புலவர் ஒரு சமயம் கிள்ளி வளவனைக் காணச் சென்றார். முடவராதலின் இவர் மாட்டு வண்டியில் செல்வது வழக்கம். கொங்குநாட்டிலிருந்து உறையூருக்குச் செல்கையில் வண்டியை இழுத்துவந்த எருதுகளில் ஒன்று களைப்படைந்து படுத்துக்கொண்டது. தோன்றிக்கோவின் கொடைத் தன்மையைக் கேள்வியுற்ற முடவனார் அவனிடம் சென்றார்.

முடவனாரின் புலமைச் சிறப்பினை அறிந்த தோன்றிக்கோன் அவருடைய குறையினை உணர்ந்து ஓர் எருது வேண்டிவந்த அவருக்குப் பல பசுக்களையும் சிறந்த காளைகள் பூட்டிய ஓர் இரட்டைமாட்டு வண்டியையும் கொடுத்துப் பெருமைப்படுத்தினான். இச் செய்தியை ஐயூர் முடவனார்,

‘ கடுந்தேர் அள்ளற் கசாவா நோன்சுவற்
பகடே யத்தையான் வேண்டிவந் ததுவென
ஒன்றியான் பெட்டா வளவை யன்றே
ஆன்று விட்டனன் அத்தை விசும்பின்

---

45 பதிற். பதி. 8 : 9-10

மீன்பூத் தன்ன வுருவப் பன்னிரை
ஊர்தியொடு நல்கி யோனே சீர்கொள
இருமென விழிதரும் அருவி
வான்றோய் உயர்சிமைத் தோன்றிக் கோவே'[46]

எனத் தம்முடைய செய்யுள் ஒன்றில் பாராட்டியுள்ளார்.

மோகூர்ப் பழையன்

கொங்கு நாட்டுச் சேலம் மாவட்டத்து நாமக்கல்லிற்குத் தெற்கில் காவிரியின் வடகரையில் மோகனூர் என்னும் ஊர் இருக்கிறது. இதன் பழைய பெயராகிய மோகூர் இப்பொழுது மோகனூர் எனத் திரிந்து வழங்குகிறது. இது காவிரிக் கரையில் உள்ள மிக்க வளம் பொருந்திய ஊராகும். இவ்வூர்

'மழையொழுக் கறாஅப் பிழையா விளையுள்
பழையன் மோகூர்'[47]

என்று பாராட்டப்படும் இலக்கியச் சிறப்பு வாய்ந்தது. இம் மோகூர் நாடு கொங்குநாட்டின் தென்கீழ்ப் பகுதியான கரூர், குளித்தலை வட்டங்களின் வடபகுதியை உள்ளிட்டு மேற்கே நொய்யல் ஆற்றங்கரைப் பகுதி, சேரக் காங்கயம்வரை பரவியிருந்தது. நாமக்கல் வட்டத்தின் தென்கீழ்ப் பகுதியும் இந்நாட்டுடன் சேர்ந்ததாகும். இம் மோகூர் நாட்டைப் பழையன் என்னும் கொங்குவேளிர் மரபினர் ஆண்டுவந்தனர். பழையன் என்பான் இம் மரபின் குடிமுதல்வன் ஆவான். 'மொய்வளம் செருக்கி மொசிந்துவரு மோகூர்'[48] என இவ்வூரின் பெயர் குறிக்கப்படுகிறது. பழையன் மரபினர் தம் நாட்டில் பல வலிமை வாய்ந்த கோட்டைகளை அமைத்து நாட்டைப் பாதுகாத்தனர். இவற்றுள் பழையகோட்டை என்பதும் ஒன்றாகும். பழையன் + கோட்டை பழையகோட்டை என்று திரிந்திருக்கக்கூடும்.

இப் பழையன் மரபு, வீரமும் புகழும் ஒருங்கேயுடைய பழமையான கொங்குவேளிர் மரபாகும். இம் மரபைச் சேர்ந்த ஒருவன் முன்னர்த் தமிழ்நாட்டின்மீது படையெடுத்து வந்த மோரியரைப் பின்வாங்கும்படி செய்த செயல், இம் மரபினரின் வீரத்திற்கு எடுத்துக்காட்டாகும். சேரன் செங்குட்டுவன் காலத்தே இருந்த இம் மோகூர்ப் பழையன் பெருவீரனாகத்

46 புறம். 399 : 27-31
47 மதுரைக். 507-8
48 பதிற். 49 : 8

திகழ்ந்தான். கடைச்சங்கத்தின் இறுதிக் காலத்தில் இருந்த சேரமன்னர் ஒவ்வொருவரும் கொங்குநாட்டின்மேல் படையெடுத்துள்ளனர். கொங்குநாடு சேரருடைய ஆட்சிக்கு உட்பட்டால் தமக்குத் தீமை உண்டாகுமென்று கருதிய சோழ, பாண்டிய மன்னர்கள் கொங்குநாட்டு வேளிர்களுக்கு உதவி செய்தனர். களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், அதியமான் நெடுமிடல் அஞ்சியை வென்றதாகவும்,[49] பெருஞ்சேரல் இரும்பொறை, கொல்லிமலை வல்வில் ஓரியோடு, அதியமான் நெடுமான் அஞ்சியைக் கொன்றதாகவும் நாம் அறிகிறோம்.[50] பெருஞ்சேரல் இரும்பொறையின் மகனான இளஞ்சேரல் இரும்பொறை கொல்லிமலையை அடுத்துள்ள விச்சிமலை நாட்டு விச்சிக்கோவை வென்றதாகப் பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளது.[51]

வடகொங்கில், காவிரியின் கீழ்ப்பாகத்தில் இருந்த தகடூர் அதியமான் மரபினரையும், கொல்லிமலை வல்வில் ஓரியின் மரபினரையும், விச்சிமலை விச்சிக்கோ மரபினரையும் வென்று அடக்கியதால் மேற்கூறப்பெற்ற இடங்களுக்குத் தெற்கில் இருந்த மோகூர்ப் பழையனை வென்று அடக்கச் சேரன் செங்குட்டுவன் காலம் பார்த்துக்கொண்டிருந்தான். சேரன் செங்குட்டுவனுக்கு நண்பன் ஆகிய அறுகை என்னும் குறுநில மன்னன், தான் செங்குட்டுவனுடைய நண்பன் என்று செருக்குற்று மோகூரை முற்றுகையிட்டான். ஆனால், பழையனால் முறியடிக்கப்பட்டுத் தோற்றோடி ஒளிந்துகொண்டான். இவ்விதம் அறுகை என்பான் தோல்வியுற்றது தன்னுடைய பெருமைக்கு இழுக்கெனக் கருதிய செங்குட்டுவன், மோகூரின்மீது படையெடுத்துப் பழையனை வென்று மோகூர் அரணை அழித்தனன். இவ்வரலாற்றுச் செய்தி,

> 'நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
> சேண னாயினும் கேளென மொழிந்து
> புலம்பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு
> அரண்கள் தாவுறீஇ அணங்குநிகழ்ந் தன்ன
> மோகூர் மன்னன் முரசங் கொண்டு
> நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து'[52]

என்னும் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. செங்குட்டுவனுடைய மோகூர் முற்றுகையைக் கண்ட பழையன் தன்னுடைய துணைவர்களோடு செங்களம் என்னு

---

49 பதிற். 32 : 10
50 மே பதி. 8 : 3-4
51 மே பதி. 9 : 3-4
52 பதிற். 44 : 10-15

மிடத்தில் செங்குட்டுவனை எதிர்த்தனன். இந்தக் கொங்கர் செங்களப் போரில் சேரன் செங்குட்டுவன் பழையன்மீது வெற்றிபெற்றனன். இவ் வரலாற்றுச் செய்தியும் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகத்தால் வலியுறுகிறது.

'வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய்வளம் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை அதிர மண்டி.'[53]

மேற்கூறப்பெற்ற இலக்கியச் சான்றின்படி இருபெரு வேந்தர்கள், வேளிர்கள் துணையுடன் வந்து எதிர்த்த பழையனை வென்று, அவனுடைய காவல் மரமாகிய வேம்பினை வெட்டி, அதை முரசு செய்தற்கேற்றவாறு துண்டுகளாக்கி, வண்டியில் ஏற்றி மோகூர் மகளிர்களின் கூந்தல்களை அறுத்துக் கயிறாகத் திரித்துக் கட்டி, பழையனுடைய யானைகளையே அக் கயிற்றால் கட்டி வண்டியை இழுத்துச் செல்லும்படி செய்தனன். இச் செய்தியை இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

'பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்புமுதல் தடிந்த ஏத்துவாள் வலத்து.'[54]

பழையனுக்குப் பிறகு சங்ககால வரலாற்றில் கொங்குநாட்டில் ஒளிபெற்ற செய்திகள் எவை என்பது விளங்கவில்லை.

மோரியரும் கோசரும்

மாமூலனாரால் பாடப்பெற்ற அகநானூற்றுச் செய்யுளில்,

'நந்தன் வெறுக்கை யெய்தினும் மற்றவண்
தங்கலர் வாழி தோழி வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூது ஆலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்.'[55]

பாடலிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய நந்தவம்சத்துக் கடைசி அரசனாகிய மகாபத்மநந்தன் அல்லது தனநந்த

---

53 பதிற். 49 : 7-9
54 சிலப். 27 : 124-5
55 அகம். 251 : 5-12

னுடைய பெருஞ்செல்வத்தையும், தேர்ப்படையில் தேர்ச்சி பெற்ற கோசர் என்ற படைவீரர்களையும், கொங்குநாட்டில் இருந்த பழையனது மோகூர் என்ற ஊரையும், கோசர்களுக்கு உதவியாக வந்த வம்ப மோரியரையும் குறிப்பிடுகிறார். பின்னர் ஒரு பாடலில் கூறும்,

'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ'[56]

என்னும் வரிகளில் மகாபத்மநந்தன் கங்கை நதியின் கரையில் நிலவறை ஒன்றையமைத்துச் சேமித்து வைத்திருந்த பொற் குவியலைப்பற்றிப் பேசுகிறார். இந்த மகாபத்மநந்தனை அழிப் பதற்குக் கௌடில்யர் (சாணக்கியர்) என்பாரும் சந்திரகுப்த மௌரியரும் சேர்ந்து ஒரு புரட்சியை உண்டாக்கி நந்தவமிசத்தை அழித்து மௌரியப் பேரரசை அமைத்தனர். சந்திரகுப்த மௌரியருக்குப் பிறகு பிந்துசாரர் அரியணையில் அமர்ந்து தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் மகதப் பேரரசைப் பரவச் செய்தார். இந்த மௌரிய மரபைச் சார்ந்த சந்திரகுப்தர் தம்முடைய இறுதிக்காலத்தில் சமண சமயத்தை மேற்கொண்டு 12 ஆயிரம் சமணத் துறவிகளுடன் மைசூர் நாட்டில் உள்ள சிரவணபெல்கோளாவிற்கு வந்து அங்கு உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்ததாக நாம் அறிகிறோம். பின்னர் அவருடைய மகன் பிந்துசாரன் தென்னாட்டையும் தம்முடைய பேரரசில் இணைத் துக்கொள்ளும் திட்டத்துடன் தமிழ்நாட்டின்மீது படையெடுத் திருக்கலாம். அவருடைய சேனையைத்தான் வம்பமோரியர் என்று மாமூலனார் குறிப்பிட்டுள்ளார் போலும். மோரியருடைய சேனையில் தூசிப்படையாகக் கோசர் என்ற படைவீரர்களும் இருந்தனர். மோரியரும் கோசரும் சேர்ந்து கொங்குநாட்டுப் பழையனுடைய அரண்மிகுந்த மோகூர் என்ற கோட்டையை முற்றுகையிட்டனர். ஆனால், மோகூர்ப் பழையன் முற்றுகை யிட்ட வடவடுகர், கோசர் முதலியோர் அடங்கிய சேனைகளை முறியடித்துக் கொங்குநாட்டைவிட்டுத் துரத்திவிட்டான். தோற்றோடிய மோரியப் படைத்தலைவன் மீண்டும் பெரும்படை யொன்றை அனுப்பும்படி பாடலிபுரத்திற்குச் செய்தியனுப்பினான். மகதநாட்டிலிருந்து பெரும்படையொன்று தமிழகம் நோக்கி வந்தது. அப் படையிலிருந்த தேர்களும், போர்த்தளவாடங்கள் ஏற்றப்பெற்ற வண்டிகளும் செல்லத் தடையாயிருந்த மலைவழிப்

---

56 அகம். 265 : 4-6

பாதைகளை உடைத்து, வழியுண்டாக்கிக்கொண்டு தமிழகத்தை நோக்கி வந்தது என்பதை,

‘ புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவாய் ’[57]

என்று கூறுகிறார். இப் புதிய மோரியர் படை தமிழகத்தை நோக்கி வரும்போது கலிங்கநாட்டை அடுத்திருந்த வடுகருடன் உறவுகொண்டு வந்தது என்பதை,

‘ முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த ’[58]

என்றும் மாமூலனார் கூறுவார். இவ்விரண்டு படையெடுப்பு களிலும் கோசர் என்ற படைவீரர்கள் முன்னணிப் படையாக இருந்தனர்போலும். இந்தக் கோசர்கள் என்போர் யாவர்? அவர்கள் தமிழர்களா, வெளிநாட்டவர்களா என்பதும், கொங்கு நாட்டு வரலாற்றில் அவர்களுடைய பங்கு யாது என்பதும் இவண் ஆராயத்தக்கதாகும். கொங்கு நாட்டுக் கொண்கானத்தை ஆண்ட நன்னனுடைய மரபைச் சேர்ந்தவர்கள் நன்னன் வேண்மான், நன்னன் ஆய், நன்னன் ஏற்றை என்று குறிப்பிடப் படுகின்றனர். இந்த நன்னன் மரபின் முதல்வனான நன்னன், கொண்கான நாட்டில் ஏழில்மலைப் பகுதியைத் தனக்கு உரித் தாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனன். அதன் வடபகுதியான துளு நாடும் அவனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது. இந்தத் துளு நாட்டில் கோசர் என்ற இனத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்தனர் என்பது,

‘ மெய்ம்மலி பெரும்பூட் செம்மல் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாட் டன்ன ’[59]

என்பதனால் தெரிகிறது. துளு நாட்டுள்ளும் மேலைக் கடற் கரையைச் சார்ந்த நெய்தல் நிலப்பகுதியிலே அவர்கள் வாழ்ந்தமை தோன்ற,

‘ .. பல்வேற் கோசர்
இளங்கள் கமழும் நெய்தல்அம் செறுவின்
வளங்கெழு நன்னாடு ’[60]

57 அகம். 251:13–14
58 ஷ. 281:8–11
59 துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., ‘சேரமன்னர் வரலாறு’, பக். 124
60 அகம். 113 : 5–7

என்று கல்லாடனார் சிறப்பித்துக் கூறுகிறார். இந்தக் கோசர்கள் வேளிர் இனத்தைச் சேர்ந்தவர்களா, வெளிநாட்டினரா என்பது தெளிவாக விளங்கவில்லை. அவர்கள் கொங்குநாட்டு வேளிர் இனத்தவர் என்று சங்கநூல்கள் குறிப்பிடவில்லை. கொங்கு நாட்டில் வாழ்ந்த அதியர், மழவர் என்பாரைப்போல இக் கோசரும் ஓர் இனத்தவராக வாழ்ந்தனர். ஆனால் அதியர், கொங்கர் என்பார்போல ஓரிடத்தில் நிலையான அரசை அமைக்க வில்லை. துளுநாடு, கொங்குநாடு, பாண்டிநாடு ஆகிய இடங் களில்தாம் இக் கோசர்கள் பெரும்பாலும் வாழ்ந்துள்ளனர். தென்பாண்டி நாட்டு வாட்டாற்றுப் பகுதியில் எழினி ஆதன் காலத்தில் இக் கோசர்கள் இருந்தனர். கொல்லிமலைக்குரிய வேளிரது ஆணைவழி நடந்த மழவர்போலக் கொண்கான நாட்டு நன்னர்வழி நின்று அவர்கள் தங்கிய இடங்களில் இக் கோசர் வசித்துள்ளனர். பாண்டியர்களிடத்தும் இவர்கள் மறப்படை மைந்தர்களாகவே அமர்ந்திருந்தனர். சேரநாட்டிலும், சோழ நாட்டிலும் இக் கோசருடைய வாழ்விடங்கள் சங்கநூல்களில் குறிப்பிடப்படவில்லை.[61]

கோசர்களுடைய தொன்மைபற்றி ஆராய்ச்சி நூல் எழுதிய அறிஞர் ஒருவர், இவர்கள் பிரமதேவன் வழிவந்த குசமுனிவன் மக்களான குசாம்பர், குசநாபன், ஆதூர்த்தன், வசு என்ற நால்வரும் கௌசாம்பி முதலிய நான்கு பெருநகரங்களை நிறுவி வாழ்ந்தனர் என்றும், அவர்களின் வழிவந்தவர் இக் கோசர் என்றும், நான்கு ஊர்களில் நிலைகொண்டு வாழ்ந்தமைபற்றி இவர்கள் நாலூர்க் கோசர் எனக் கூறப்பெற்றனர் என்றும் கூறுவார்.[62] கௌசாம்பி நாட்டைப் பிறகு வத்சன் என்ற வேந்தன் ஆண்டனன். வத்சகோசர் என்பது இளங்கோசர் என்று தமிழர் களால் மொழிபெயர்க்கப்பட்டது என்றும் கூறுவார்.[63]

ஆனால், சேரமன்னர் வரலாற்றை எழுதிய அறிஞர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் இக் கருத்தை மறுத்து அவர்கள் வடநாட்டவரும் அல்லர், தமிழ் இனத்தவரும் அல்லர் என்று முடிவு செய்துள்ளார். 'சங்க காலத்திற்கு முன்னும் பின்னும் மேலைக்கடற்கரைப் பகுதியில் யவனர் பலர் குடியேறியிருந்தனர். பின்னர் சோனகரும் மேலைநாட்டவரும் வந்தனர். இவ்விதம்

---

61 ஔவை சு. து., பக். 126

62 இராகவ அய்யங்கார், ரா., 'கோசர்' பக். 47-48

63 மே

வந்தோருள் பாபிலோனியா நாட்டினின்றும் வந்து தமிழ்நாட்டில் குடியேறியவர்கள் இக் கோசர்கள்' எனக் கூறுவார்.

'தைகிரிஸ்[64] நதிக்குக் கிழக்கில் சகராசு[65] மலைப்பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்கட்குக் கோசர்[66] என்பது பெயர். வில்வேட்டம் புரிவதே அவரது தொழில். பின்னர் அவர்கள் மலையடிவாரத்தில் வாழ்ந்த இரானியர்களாகிய கிருதர்,[67] அனுசர்[68] முதலியோருடன் கலப்புற்றனர். அவர்கள் அனைவரையும் கிரேக்கர்கள் கிசியர்[69] என்றும், அவர்கள் நாட்டை கிசியா என்றும், அவர்களது தலைநகரை சூசா[70] என்றும் வழங்கினர். சூசா என்பது அவர்கள் மொழியில் நான்கு ஊர்கள் என்றும், நான்கு மொழிகள் என்றும் பொருள்படும்.'

'இக் கோசர்கள் மேலைக்கடற்கரையில் வந்து தங்கிய யவனருடன் போந்து துளுநாட்டுக் கடற்கரைப் பகுதியில் தங்கி வாழ்ந்தனர். துளுநாட்டின் காலநிலைமையும் மலைவளமும் தங்களுடைய தாயகமாகிய பாபிலோனிய நாட்டைப்போலவே இருந்தமையால் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிப் போக மனமின்றித் துளுநாட்டிலேயே தங்கினர். அவர்கள் தங்கள் நாட்டில் நாடோடி வாழ்க்கை நடத்தியதால் தங்கட்கு எனத் தனி நாட்டை அமைத்துக்கொள்ளாமல் கொங்குநாட்டில் இருந்த வேளிர்களுக்கு விற்படை மறவராக வாழ்ந்து வருவராயினர். கொண்கான நாட்டு வேளிர் தலைவர்களும், பாயல் மலைநாட்டுத் தலைவர்களும் இக் கோசர்களையும் தமக்குப் படைவீரர்களாகக் கொண்டனர். நன்னன் மரபினர் கொங்குநாட்டில் பரவியபொழுது அவர்களோடு இக் கோசர்களும் சென்று தங்கினர்.'

'முதுமையினும் இளமைப்பண்பும், வாடாத உள்ளமும், சொன்னசொற் பெயராத வாய்மையும் சிறப்பாக உடையராதலால் இக் கோசரைச் சங்கப் புலவர்கள் 'ஒன்றுமொழிக் கோசர்' என்று கூறியுள்ளனர். இக் கோசருள் சிலர் இளங்கோசர் இளம்பல் கோசர் என்று கூறப்பட்டனர். (பாபிலோனியாவில் இருந்து முதலில் வந்தோரை மூத்தோர் என்றும், பின் வந்தோரை இளையோர் என்றும் குறிப்பது தமிழ் வழக்கு.) அதனால் பின்வந்த கோசர் இளங்கோசர் எனப்பெற்றனர்.'[71]

---

64 Tigiris
65 Zagros
66 Kossears
67 Kurds
68 Anshar
69 Kissians
70 Susa
71 துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., 'சேரமன்னர் வரலாறு', பக். 128-30

மேற்கூறப்பெற்ற செய்திகள் உண்மை வரலாற்றுச் செய்திகளா என்பது ஆராயத் தக்கதாகும். பாபிலோனிய நாட்டில் இருந்த கோசியர்[72] என்போர் தமிழ்நாட்டிற்கு வந்து குடியேறினர் என்பதற்கு 'வரலாற்றறிஞரின் உலக வரலாறு'[73] என்னும் நூலில் மேற்கோள் தவிர வேறு உள்நாட்டுச் சான்றுகளைப் பிள்ளை யவர்கள் எடுத்துக் காட்டவில்லை. சங்கநூல்களில் கோசர்கள் அயல்நாட்டிலிருந்து வந்தவர்கள் என்ற செய்தி சிறிதேனும் காணப் பெறவில்லை. அவர் எந்தக் காலத்தில் கொண்கானத்திற்கு வந்தனர்? ஏன் வந்தனர்? என்ற கேள்விகளுக்கும் பதில் கிடை யாது. ஆகையால், கோசர்கள் பாபிலோனியா நாட்டிலிருந்து கொண்கானத்தில் குடியேறினர் என்பது அறிஞர்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய செய்தியாகாது. கோசர்களைக் கொண்கான நாட்டில் தொன்றுதொட்டு வசித்துவந்த மறக்குடி மக்களாகவே நாம் கொள்ளவேண்டும். பேரரசர் அசோகருடைய பாறைக் கல் வெட்டில் காணப்படும் 'சத்தியபுத்திரர்' என்னும் சொற்றொடர் 'வாய்மொழிக் கோசர்', 'ஒன்றுமொழிக் கோசர்' என்று சங்க நூல்களில் பயின்றுவரும் தொடர்களுக்கு ஒற்றுமையுடையதாக நாம் கொள்ளலாம். ஆகவே, கோசர்கள் அயல்நாட்டினர் அல்லர் என்பது தெளியப்படும்.

தமிழ்நாட்டின்மீது படையெடுத்துவந்த மோரியருடைய படையில் கோசர் படைவீரர்கள் மிகுதியாக இருந்தனர். ஆகையால், சங்கநூல்களில் மோரியவீரர்களைக் கோசர் என்றும் குறித்துள்ளனர். பிந்துசாரனுக்கு முன்னரே சந்திரகுப்த மௌரியருடன் வந்த சமணர்கள் கொண்கானப் பகுதியில் தங்கித் தங்கள் படை வருவதற்கேற்றவாறு வழிசெய்து வைத்திருந்தனர். எனவே, தமிழ்நாட்டை நோக்கிவந்த அம் மோரியப்படை கொண் கானத்தின் வடபகுதியில் தங்கியது. அங்கிருந்து கொண் கானத்தின் மேல்கடலோரப் பகுதியாகிய துளுநாட்டைத் தாக்கி, அந் நாட்டை ஆண்ட நன்னனை வென்று அவன் நாட்டையும் கைப்பற்றிக் கொண்டது. இச் செய்தி,

> 'அழியல் வாழி தோழி, நன்னன்
> நறுமா கொன்று நாட்டில் போகிய
> ஒன்றுமொழிக் கோசர்'[74]

என்று குறிப்பிடப்படுகிறது. பிறகு, அத் துளுநாட்டிலிருந்த பாழி அல்லது செருப்பாழி என்னும் கோட்டையை மிக்க வலிவுடைய

---

72 Kossears
73 *Historians History of the World*
74 குறுந். 73

தாக்கி அங்குத் தங்கினர். துளுநாட்டின் கிழக்கில் இருந்த குதிரை மலை நாட்டை ஆண்ட பிட்டங்கொற்றனோடும் மோரியரும் கோசரும் பொருது வெற்றிபெற்றனர். அதன் பின்னர்,கோசர்கள் தென்கிழக்காகச் சென்று கொங்குநாட்டுப் பழையன் மோகூரைத் தாக்கினர். இதுபற்றிய வரலாற்றுச் செய்திகள் பழையன் வரலாற்றில் முன்னரே கூறப்பெற்றன.[75] மோகூர்ப் பழையனிடம் தோற்று ஓடிய அக் கோசர், சோழநாட்டை நோக்கிச் சென்று வழியில் ஆங்காங்கே மிக்க அழிவு வேலைகளைச் செய்தனர். வாட்டாற்று ஆதன் எழினி என்பான் அவர்களை எதிர்த்து எழினியின் செல்லூர்க்குக் கீழ்பால் நடந்தபோரில் மார்பில் வேல் பாய்ந்து இறந்தான்.[76]

எழினி இறந்ததால் கோசர்கள் மிக்க ஆரவாரத்துடன் முன் னேறினர் என்னும் செய்தி,

'அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர்'[77]

என்னும் செய்யுட் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எழினியின் செல்லூரில் நிலையாகத் தங்கிய கோசர் சுற்றுப்புறங்களில் சென்று பல அழிவு வேலைகளைச் செய்தனர். அக் கொடி யோரில் சிலர் மாடுகள் பயிரைத் தின்றதற்காக அன்னி ஞிமிலி என்ற பெண்மணியின் தந்தையின் கண்களைப் பறித்துக் கொடுமை செய்தனர். அப் பெண் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் படைத்தலைவனான அழுந்தூர்வேள் திதியனிடம் முறையிட்டாள்.

'வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளாது
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையில்
கலத்தும் உண்ணாள் வாலிதும் உடாஅள்'[78]

அது கேட்ட திதியன் கடும்சினங்கொண்டு கண்ணைப் பறித்த அக் கொடியவர்களைக் கொன்றதோடு மற்றவர்களையும் பொருது வென்று அங்கிருந்து துரத்தினான்.[79] இவ்விதம் மோரியரும் கோசரும் தமிழ்நாட்டிலுள்ள குறுநில மன்னர்களைத் துன்புறுத்து

---

75 இந்நூல், பக். 367
76 அகம். 216 : 14-16
77 மே 90 : 9-12
78 மே 262 : 5-7
79 இராசமாணிக்கனார், மா., 'சோழர் வரலாறு' பக். 36

வதைக் கேள்வியுற்ற சோழன் இளஞ்சேட்சென்னி, சோழ நாட்டிலிருந்து மோரியரையும் கோசரையும் துரத்தியடித்தான். துளு நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அம் மோரியர் தங்கள் வசப்படுத்திய செருப்பாழிக் கோட்டையை அழித்து, 'செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி' எனப் பெயர்பெற்றான்.[80] சோழன் இளஞ்சேட்சென்னி மோரியரையும் அவர்களுடைய உதவியாளர்களாக வந்த கோசரையும் வென்று துரத்தியதோடு நில்லாமல், இனி வடவர் தென்னாட்டின்மீது படையெடுக்காமல் இருப்பதற்குத் தமிழ்மன்னர்களுடைய கூட்டணியொன்றையும் கி.மு. 278-ல் அமைத்ததாகப் புலவர் குழந்தை கூறுவார்.[81] அத்திகும்பா கல்வெட்டின் தலைவனான கலிங்க மன்னன் காரவேலன் கி. மு. 168-ல் இக் கல்வெட்டைப் பொறிக்கும்படி செய்தனன். இக் கல்வெட்டில் 113 ஆண்டுகளுக்குமுன் தமிழ்மன்னர்கள் ஒன்றுசேர்ந்து அமைத்த கூட்டணியொன்றைக் கி. மு. 165-ல் தான் தகர்த்து எறிந்ததாகக் கூறியுள்ளான். இளஞ்சேட்சென்னி யமைத்த தமிழ்மன்னர் கூட்டணி இக் கல்வெட்டால் உறுதி பெறுகிறது.

கொங்குநாட்டின் வாணிகம்

உழவு, கைத்தொழில், வாணிகம் என்னும் மூன்றும் ஒரு நாட்டின் நாகரிக நல்வாழ்விற்கு அடிப்படையாகும். தமிழ்மக்கள் தொன்றுதொட்டே வாணிகத் தொழிலில் சிறந்து விளங்கினர் என்பதும், உள்நாட்டு வாணிகத்தோடு திரைகடல் கடந்தும் செல்வம் திரட்டினர் என்பதும் பழந்தமிழ் நூல்களால் அறியக் கிடக்கின்றது. கொங்குநாட்டின் பழையகாலத்துப் பெருமையை அறிந்துகொள்ளுவதற்குத் தமிழ்நாட்டில் கடல் வாணிகத்தினை அறிந்துகொள்ளுதல் பயன் உடையதாகும். கரிகாற்சோழனுடைய முன்னோருள் ஒருவன் காற்றைத் துணையாகக் கொண்டு கடலிடைக் கலம் செலுத்தியதை வெண்ணிக்குயத்தியார் என்னும் புலவர் குறிப்பிடுவார்.[82] முற்காலத்தில் சாவா முதலிய கிழக்கிந்தியத் தீவுகள் ஒரே நிலப்பரப்பாக இருந்தன. பஃறுளி யாற்றங்கரையிலிருந்த தென்மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்த நெடியோன் என்னும் பாண்டிய மன்னன் கடல்கடந்து சாவக நாட்டிற்குச் சென்று அந் நாட்டின் துறைமுகப்பட்டினமான

80 புலவர் குழந்தை, மு.கு.நூ., பக். 287
81 டி பக். 287
82 புறம். 66 : 1-3

சாலியூர் என்பதைக் கைப்பற்றினான் என்பதை மதுரைக்காஞ்சி என்னும் நூலிலிருந்து அறியமுடிகிறது.[83]

'சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறர்கலம் செல்கலா'[84]

என்னும் புறநானூற்று வரிகள் சேர மன்னர்களுடைய கடலாண்மையைக் குறிக்கின்றன. மிகப் பழங்காலத்தில் இருந்து தமிழர் சீனம், சாவகம் முதலிய கிழக்குநாடுகளுடனும் எகிப்து, சிரியா, கல்தேயம்,[85] எகிப்து, கிரேக்கம், பாபிலோனியா, உரோம், பாரசீகம், அரேபியா முதலிய மேற்கு நாடுகளுடனும் வாணிகம் செய்தமைக்கு நிரம்ப இலக்கியச் சான்றுகள் உள்ளன. பிளினி, தாலமி, பெரிப்புளூஸ் நூலார் முதலிய மேனாட்டு நூலாசிரியர்கள் தமிழரின் கடல்வாணிகம்பற்றிக் குறிப்பிடுவதோடு ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் இன்னின்ன என்பதுபற்றியும் குறித்துள்ளனர். தமிழகத்தைச் சூழ்ந்துள்ள கடற்கரையில் நறவு, மாந்தை, தொண்டி, முசிறி, காந்தளூர், விழிஞம் முதலிய சேர நாட்டுத் துறைமுகங்களும் உவரி, கொற்கை, காயல் முதலிய பாண்டியநாட்டுத் துறைமுகங்களும் புகார், நாகை, கடன்மல்லை, சோப்பட்டினம் முதலிய சோழநாட்டுத் துறைமுகங்களும் கடல் வாணிக நிலையங்களாக விளங்கின.

கி.மு. 3000 ஆண்டுகளுக்குமுன் பாபிலோனியா நாட்டை ஆண்ட ஊர் ஏயா என்னும் அரசனால் சேரநாட்டுத் தேக்கு மரத்தைக் கொண்டு 'ஊர்' என்னும் நகரில் திங்கட்கோட்டம் ஒன்று அமைக்கப்பெற்றது. கி.மு. 2600-ல் தமிழகத்திலிருந்து கருங்காலி மரம், நறுமணப்பொருள்கள் முதலியன எகிப்து நாட்டிற்கு ஏற்றுமதியாயின.[86] பாலத்தீனத்து அரசனான சாலமன் காலத்தே மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை தங்கம், வெள்ளி, தந்தம், குரங்கு, மயில் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு தமிழ்நாட்டுக் கப்பல்கள் அத்தேசத்திற்குச் சென்றன. திமிலையுடைய எருதுகள் பாரசீக வளைகுடாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் ஏற்றுமதியாயின. மேலை நாடுகளுக்குப் பெருமளவில் கொங்குநாட்டிலிருந்து ஏற்றுமதியானவை நவரத்தினங்களில் ஒன்றான மரகதக்கற்கள், யானைத் தந்தம், முத்து, மிளகு, ஏலக்காய் முதலியனவாகும். மேற்கண்ட பொருள்களைத்தவிர இரும்பு, மயில், குரங்கு, கிளி, கம்பு,

83 மதுரைக். 85 - 88
84 புறம். 126 : 14 - 16
85 Chaldea
86 புலவர் குழந்தை. மு.கு நூ., பக். 100

சோளம், சந்தனக்கட்டை, அகில், இஞ்சி, தோல், ஆட்டுமயிர், ஆடை முதலிய பொருள்களும் கொங்குநாட்டில் மிகுதியாகக் கிடைத்தன. எகிப்துநாட்டின் கல்லறைக் கோபுரங்களின் நிலவறைகளில் சேலத்து இரும்பினால் செய்யப்பெற்ற சுத்தி, உளி முதலிய கருவிகள் கிடைத்துள்ளன.[87]

தாராபுர வட்டத்துச் சிவன்மலைக்குப் பக்கத்தில் உள்ள படியூரில் கடல்நிறப் பச்சை வைரக்கற்கள் மிகுதியாகக் கிடைத்தன. இவை மிக்க நீரோட்டமுள்ள உயர்ந்தவகைக் கற்களாகும். 1820ஆம் ஆண்டில் 60 சேர் கற்கள் கிடைத்தனவென்றும், அவற்றின் அக் காலத்திய மதிப்பு ரூ. 18 ஆயிரம் என்றும் கூறப் படுகிறது. கி.மு. நான்காம் நூற்றாண்டில் அலெக்சாந்தரால், அலெக்சாந்திரியா என்று பெயரிடப்பெற்ற எகிப்தியத் துறைமுகம் வாணிகச் சிறப்புடைய நகரமாயிற்று. கி.மு. 47-ல் உரோமானியப் பேரரசனான அகஸ்டஸ்[88] எகிப்து நாட்டைக் கைப்பற்றினான். அதிலிருந்து உரோமானியர்கள் அலெக்சாந்திரியாத் துறைமுகத் திலிருந்து தமிழ்நாட்டுடன் வாணிகம் செய்தனர். சிறப்பாகக் கொங்குநாட்டில் கிடைத்த நவரத்தினக் கற்களை ஏராளமாக வாங்கிச் சென்றதாகத் தெரிகிறது. இவ் வாணிகம் கி. பி. 6 ஆம் நூற்றாண்டுவரை நடந்தது என்பதற்கு ஆதாரமாக அங்குக் கிடைத்த உரோமானிய நாணயங்களைக் கூறலாம். கொங்கு நாட்டில் கிடைத்த உரோமானியப் பேரரசர்களின் தங்க, வெள்ளி நாணயங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

வரிசை எண்	உரோமானியப் பேரரசனின் பெயர்	காலம்	கிடைத்த இடம்
1.	அகஸ்டஸ்	கி.மு. 44 கி.பி. 14	பொள்ளாச்சி
2.	ஷ	ஷ	வெள்ளலூர்
3.	ஷ	ஷ	கரூர்
4.	ட்ரூசஸ்[89]	கி.மு. 8	வெள்ளலூர்
5.	ஷ	ஷ	கலயமுத்தூர்
6.	அன்டோனியா[90]	ஷ	கரூர்
7.	ஜெர்மனியஸ்[91]	ஷ	வெள்ளலூர்
8.	டைபீரியஸ்[92]	கி.பி. 14-37	பொள்ளாச்சி

87 புலவர் குழந்தை, மு.கு.நூ., பக். 100
88 Augustus
89 Trusus
90 Antonia
91 Germanius
92 Tiberius

வரிசை எண்	உரோமானியப் பேரரசனின் பெயர்	காலம்	கிடைத்த இடம்
9.	டைபீரியஸ்	கி. பி. 14-37	கரூர்
10.	ஷ	ஷ	வெள்ளலூர்
11.	ஷ	ஷ	கண்ணனூர்
12.	ஷ	ஷ	கலயமுத்தூர்
13.	கலிகுலா[93]	கி.பி. 37-41	வெள்ளலூர்
14.	ஷ	ஷ	கலயமுத்தூர்
15.	கிளாடியஸ்[94]	கி.பி. 41-54	கரூர்
16.	ஷ	ஷ	வெள்ளலூர்
17.	ஷ	ஷ	கலயமுத்தூர்
18.	நீரோ[95]	கி.பி. 54-68	கண்ணனூர்
19.	ஷ	ஷ	கலயமுத்தூர்
20.	டாமிசியன்[96]	கி.பி. 81-96	ஷ
21.	நெர்வா[97]	கி.பி. 96-98	கலயமுத்தூர்
22.	ட்ராசன்[98]	கி.பி. 96-117	ஷ
23.	ஹாத்திரியன்[99]	கி.பி. 117-138	ஷ
24.	கம்மோடியஸ்	கி.பி. 180-193	ஷ
25.	கான்சடான்	கி.பி. 323-337	கரூர்

மேலே கொடுக்கப்பெற்ற நாணயங்கள் செம்பொன்னினாலும், தனி வெள்ளியினாலும், சிறுபான்மை செம்பினாலும் செய்யப் பெற்றவை. சில இடங்களில் கிடைத்த நாணயங்கள், நகைகளுக் காகப் பயன்படுத்தியவைபோலத் துளைகளும் குத்துகளும் உடையனவாக இருந்தன. உரோமானிய நாணயங்கள் கிடைத் துள்ள பட்டியலிலிருந்து கலயமுத்தூரில் கி. மு. 8 முதல் கி. பி. 193 வரை ஆண்ட 10 அரசர்கள் காலத்து நாணயங்கள் கிடைத் துள்ளன. வெள்ளலூரில் கி. மு. 44 முதல் கி. பி. 54 வரை ஆண்ட 8 அரசர்கள் காலத்து நாணயங்கள் கிடைத்துள்ளன. கரூரில் கி. மு. 44 முதல் கி. பி. 337 வரை ஆண்ட 5 மன்னர் களுடைய நாணயங்கள் கிடைத்துள்ளன. வெள்ளலூர் மேல் கொங்கிலும், கலயமுத்தூர். தென்கொங்கிலும், கரூர் கொங்கு நாட்டுக் கீழ்ப்பகுதியிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. கரூரில் இருந்து கலயமுத்தூர் பொள்ளாச்சி, பாலக்காடு வழியாக ஒரு

93 Caligula
94 Cladius
95 Nero
96 Domitian
97 Nerva
98 Trajan
99 Hadrian

வழியும், பவானி அவினாசி, வெள்ளலூர், பேரூர் வழியாக மற்றொரு பாதையும் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்கு அமைந்திருந்தன என்பதை உணரலாம்.[100]

கொங்குநாட்டுச் சமூகநிலை

கொங்குநாட்டில் வாழும் மக்களை மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் வாழும் மக்கள் என்றும், நாட்டுப்பகுதிகளில் வாழ்பவர்கள் என்றும் இருபகுதிகளாகப் பிரிக்கலாம். கொங்கு நாட்டைச் சுற்றிலும் மலைத்தொடர்கள் உள்ளன. இம் மலைத் தொடரின் பல இடங்களில் காடுகளும் உள்ளன. இந்தக் காடுகளில் தேக்கு முதலிய பெரிய மரங்களும் புலி, சிறுத்தை, யானை முதலிய காட்டுவிலங்குகளும் மயில், வல்லூறு போன்ற பறவைகளும் பாம்பு, உடும்பு முதலிய ஊர்வனவும் நிரம்பியிருந்தன. இங்கு மலைபடு பொருள்கள் சிறப்பாகக் கிடைக்கும். இம் மலைப் பகுதிகளில் நீர் அருவிகள் ஓடுகின்ற பள்ளத்தாக்குகளுக்கு அருகே பாறைகளுக்கிடையில் சிறிய மேடான பகுதிகளில் வட்ட வடிவமான குடிசைகளைக் கட்டிக்கொண்டு வாழ்க்கை நடத்தும் சில மக்களைக் காணலாம். இந்த மலைவாழ் மக்கள் பல வகுப்பினராகப் பிரிந்து வாழ்கின்றனர். கொங்குநாட்டின் மேற்கேயுள்ள வெள்ளிமலைத் தொடர்களில் இருளர், மலசர், முதலிய வகுப்பினர் வாழ்கின்றனர். அவர்களுடைய இருப்பிடங்களுக்கு வெள்ளைப் பதி, மருதைப்பதி முதலிய பெயர்கள் வழங்குகின்றன. கொங்கு நாட்டின் வடமேற்கே உள்ள நீலகிரி மலைச்சரிவுகளில் தோதவர்,[101] கோத்தர், குறும்பர், படுகர் என்னும் வகுப்பினர் வாழ்கின்றனர்.

இவர்களுள், தோதவர் மிகவும் பண்டைக் குடிகளாவர். இவர்களுடைய பழக்கவழக்கங்கள் ஏனைய மலைமக்களுடைய பழக்க வழக்கங்களிலிருந்து வேறுபட்டவையாகும். சைத்தியம் போன்ற வளைவான குடிசைகளில் வாழ்கின்றனர். எருமை இவர்களுக்குப் பிரியமான கால்நடையாகும். தோதவர்கள் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்களா, கொங்குநாட்டிலேயே தொன்று தொட்டு வாழ்ந்தவர்களா என்பதை வரையறுத்துக் கூறுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை. ரிவர்ஸ்[102] என்பவர் 'இவர்கள் மலையாளத்திலிருந்து குடியேறி நீலகிரிமலைகளில் தங்கினர்' என்று கூறுவார். இமானு[103] என்பவர் 'தோதவர் கன்னடிய

---

100 புலவர் குழந்தை, மு.கு. நூ., பக். 104
101 Todas
102 W. H. R. Rivers
103 M. B. Emeneau

இனத்தைச் சேர்ந்தவர்கள்' என மொழிவார். தோதவர்களுடைய சமயத்தையும், தெய்வங்களையும்பற்றி ஆய்ந்த கிரீஸ்நாட்டு இளவரசர் பீட்டர் என்பார், 'சுமேரிய நாட்டிலிருந்து தென் னிந்தியாவில் குடியேறியவர்' எனக் கூறுவார். மற்றும் சிலர், தோதவர்களிடையே நிலவிவருகின்ற, ஒரு பெண் பல கணவரை மணந்துகொள்ளும் வழக்கம் மத்திய ஆசியாவில் இருந்த சித்தியர்[104] என்னும் இனத்தவரிடையே காணப்பெறும் வழக்க மாகும். ஆகையால், இவர்கள் மத்திய ஆசியாவில் இருந்து வந்த வர்களாவர் எனக் கருதுவார்.[105]

தோதவர்களின் இனம் பெருகிவராமல் குறைந்துகொண்டே போகிறது. அவர்களிடையே பெண்மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும். ஆகையால், ஒரு குடும்பத்தில் உள்ள சகோதரர்கள் ஒரே பெண்ணைத் தங்களுக்கு மனைவியாக்கிக் கொண்டு வாழவேண்டிய அவலநிலை உள்ளது. தோதவர் களுடைய நடை, உடை, பாவனை முதலியவை நீலகிரியில் வாழும் மற்ற மக்களின் நடை, உடை, பாவனை முதலியவற்றிலிருந்து வேறுபட்டவையாகும். இவர்கள் பேசும் மொழி மிகப் பழைய மொழியானாலும், தமிழுக்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. தோதவர்களின் நிறமும் உட லமைப்பும் வியக்கத்தக்கதாக இருப்பினும் அவர்களிடையே தோல்பற்றிய நோய் அதிகம் பரவியிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகையால், தோதவர் இனம் முற்றிலும் அழிந்துவிடாமல் இருப் பதற்குத் தமிழ்நாட்டு அரசாங்கம் தக்க ஆதரவு தந்து வருகிறது.

நீலகிரிப் பகுதியில் தோதவர்களைப்போல் கோத்தர் என்னும் இனத்தாரும் உள்ளனர். தோதவர்களும், கோத்தர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களா, இல்லையா என்பது விளங்க வில்லை. படுகர் இனத்தவர், அவர்களுடைய பெயர் குறிப்பிடு கிறபடியே வடக்கே உள்ள கன்னட நாட்டில் இருந்து கொங்கு நாட்டில் குடியேறியவர்கள். இவர்கள் பேசும் மொழியில் கன்னட மொழியின் சாயல் நன்கு தெரிகிறது. கொங்குநாட்டின் வடக்கே யுள்ள மலைகள், தலைமலை, தாளவாடி, திம்பம், மாதேசுவரன் மலை முதலிய இடங்களில் கன்னடியக் குடிகளே வசிக்கிறார்கள். கொங்கு நாட்டில் கிழக்கில் உள்ள சேர்வராயன்மலை, கொல்லி மலைப் பகுதிகளில் மலையாளிகள் என்னும் இனத்தவர் வசிக் கின்றனர். இவர்களுடைய வீடுகள் வட்டவடிவமாகக் கட்டப்

104 Scythians

105 முருகேச முதலியார், நல்., 'தோதவர்களுடைய தெய்வப் பெயர்கள்', பக். 1

பட்டுத் திருப்பிவைத்த பம்பரம்போல் இருக்கும். இவர்கள் சேலத்திற்கு அருகில் உள்ள சேர்வராயனையும், கொல்லிமலையில் கோயில்கொண்டுள்ள அறப்பளீசுவரரையும் வணங்குகின்றனர். கொங்குநாட்டின் தெற்கே உள்ள ஆனைமலைத் தொடர்களில் பல பகுதிகளிலும் மலைசாதி மக்கள் வாழ்கின்றனர். ஏலக்காய், மஞ்சள், இஞ்சி முதலிய விளைபொருள்களையும் மெழுகு, தேன், குங்கிலியம் முதலிய மலைபடு பொருள்களையும் உற்பத்தி செய்கின்றனர். இம் மக்கள் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதோடு அரசாங்கக் காட்டு இலாகாவிலும் அலுவல் பார்க்கின்றனர்.[106]

கொங்குநாட்டுச் சமவெளி மக்கள்

கொங்குநாட்டின் சமவெளிகளில் வாழும் மக்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவர்கள் வேட்டுவர், வேளாளர் என்ற இருவகுப்பினராவர். இவ்விரு வகுப்பினரும் கவுண்டர் என்ற பட்டப்பெயரைக் கொண்டுள்ளனர். வேட்டுவர் முற்காலத்தில் காடுகளில் வேட்டையாடிப் பிழைத்தனர்போலும். வேளாளர் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பது வெளிப்படையாகும் ஆனால், தற்காலத்தில் இரு வகுப்பினரும் உழவுத் தொழிலிலும், வாணிகம், கைத்தொழில் முதலியவற்றிலும் ஈடுபட்டுள்ளனர். கொங்குநாட்டு வேளாளர்களுக்குக் 'கொங்கு வேளாளர்' என்னும் பெயர் வழங்குகிறது. இந்த இரண்டு பிரிவினருக்கும் இடையே கருத்துவேறுபாடும், தொழில் வேறுபாடும் மிகுதியாக இருந்தன. கொங்குநாட்டில் வழங்கும் நாட்டுப் பாடல்களில் ஒன்று, 'கள்ளழகர் அம்மானை' என்பதாகும். இந்த நாட்டுப்பாடல் இக்காலத்திலும் மிகுந்த ஆர்வத்தோடு கிராமங்களில் படிக்கப்படுகிறது. இப் பாடலில் கொங்குவேளாளரின் தலைவனாகக் குன்றுடையாக் கவுண்டன் என்பான் கருதப்பெறுகிறான். அவனுக்குப் பொன்னர், சங்கர் என்ற இரண்டு வீர மக்களும் நல்லதங்கை என்ற பெண்ணும் இருந்ததாக நாம் அறிகிறோம். குன்றுடையாக் கவுண்டனும் அவன் மக்களும் வேளாளருக்குத் தலைமைபூண்டு மிகச் செழிப்போடு விளங்கினர்.

காளி என்பவன் வேட்டுவர்களுக்குத் தலைவன். வேளாளரிடம் பரம்பரைப் பகைமைபூண்டு போர்புரிவதையே பெருந் தொழிலாகக் கொண்டிருந்தான். ஒரு காலத்தில் இந்த இரண்டு தலைவர்களுக்கும் இடையே, ஒரு வஞ்சகனுடைய தூண்டுதலால், பகைமைதோன்றிப் பெரும்போர் மூண்டது. இப் போரின் விளை

106 இராமச்சந்திரன் செட்டியார், சி. எம்., 'கொங்கு நாட்டு வரலாறு' பக். 48-51

வாக இவ்விரு வகுப்பினரிடையே ஆட்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டன. முற்காலத்திய பகைமையை இன்றும் இந்த இரு வகுப்பினரிடையே நாம் காண முடிகிறது. இந்த இரண்டு வகுப் பினர்களையும் சார்ந்து பிழைப்பு நடத்தும் தொழிலாளிகளும் தங்கள் தலைவர்களுடைய வேறுபாடுகளைத் தாங்களும் மேற் கொண்டுள்ளனர்.[107] கொங்குவேளாளர்கள் கொங்கு நாட்டைத் தங்கள் தாயகமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். இவர்களுடைய, திருமணங்கள், ஈமச்சடங்குகள் முதலியன சோழ, பாண்டிய நாடுகளில் நடக்கும் திருமணங்களிலிருந்து பலமுறைகளில் வேற்றுமையாகத் தோன்றுகின்றன. கொங்கு மக்களின் பேச்சுத் தொனியும், ஆடைகள் அணிந்துகொள்ளும் விதமும் மாறு பட்டுள்ளன. மகளிர்கள் அணிகலன்களும், ஆடையுடுத்தும் விதமும் மாறுபட்டிருக்கக் காண்கிறோம்.

கொங்கு வேளாளர்களுக்கு அகத்தொழில் செய்யும் சாதியினர் கொங்கு நாவிதர், கொங்கு வண்ணார், கொங்குப் பள்ளர், கொங்குக் குயவர் என்றழைக்கப் பெறுகின்றனர். இச் சாதி யினரும் கொங்குவேளாளர்களுடைய பழக்கவழக்கங்களையே மேற்கொண்டுள்ளனர். இக்காலத்தில் சோழ, பாண்டிய நாடுகளி லிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் கொங்குநாட்டில் குடியேறிப் புதிய பழக்கவழக்கங்களைப் புகுத்தியபோதிலும், கொங்குநாட்டு மக்களின் வாழ்க்கையில் முற்காலத்திய அடிச்சுவடுகளை நாம் காண்கிறோம். பண்டைத் தமிழர்கள் மூக்கைக் குத்தி மூக் கணிகள் அணிவதில்லை. அதுபோல் கொங்குநாட்டு வேளாளர், நாவிதர், குயவர், அகமுடையர் முதலிய சாதியைச் சேர்ந்த மகளிர் மூக்குத்தி அணிவதில்லை எனச் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் கூறுவார். கொங்கு வேளாளர்கள் இடையே அம்மான் மகளை மணந்துகொள்ளும் உரிமை பின் பற்றப்படுகிறது. அம்மான் மகளுக்கு உரிமைப் பெண் என்ற பெயர் வழங்கியது. உரிமைப் பெண், மணமகனைவிடச் சிறிது மூத்தவளாக இருந்தாலும் அதனால் குற்றமில்லை என்னும் கொள்கையும் கொங்குநாட்டில் பின்பற்றப்பட்டது.

கொங்குநாட்டுச் சமயநிலை

சேர, சோழ, பாண்டிய நாடுகளில் இருந்ததுபோலவே கொங்குநாட்டிலும் சைவம், வைணவம், கௌமாரம், சாக்தம் (கொற்றவை வணக்கம்) முதலிய சமயங்கள் நிலைபெற்றிருந்தன. கௌமாரம் அல்லது முருகன் வழிபாடு மிக்க சிறப்புற்றிருந்தது.

107 இராமச்சந்திரன் செட்டியார், சி. எம்., மு. கு. நூ., பக். 53

குன்றுகளின்மீது முருகனுடைய கோயில்கள் அமைக்கப்பெற்று இருந்தன. கொங்குநாட்டுத் திருச்செங்கோட்டு மலை முருகனுடைய தலமாகச் சிறப்புற்றிருந்தது. சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதன் திருமால் வணக்கத்தை மேற்கொண்டிருந்தான். கொங்குநாட்டு ஆயர்கள் திருமாலைக் கண்ணன் உருவில் வழிபட்டனர். கொங்குநாட்டிற்கும் சேரநாட்டிற்கும் இடையில் இருக்கும் மேற்குமலைத்தொடரில் அயிரைமலையில் கொற்றவை என்னும் வெற்றித் தெய்வத்திற்கு ஆலயம் ஒன்று அமைந்திருந்தது. அயிரைமலைக் கொற்றவையைச் சேரமன்னர்கள் தங்களுடைய குலதெய்வமாக வணங்கினர். கொங்குச் சேரரின் தலைநகராகிய கருவூரில் பூதம் என்ற தெய்வத்திற்கு ஆலயம் ஒன்றை இளஞ் சேரல் இரும்பொறை என்ற கொங்குச் சேரன் அமைத்திருந்தான். சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்து மருவூர்ப்பாக்கத்தில் பூத சதுக்கம் என்ற இடத்தில் நகரத்தின் காவல்தெய்வமாகிய பூதம் என்ற தெய்வத்தின் உருவம் வைத்து வணங்கப்பெற்றது. இப் பூதவணக்கம் கரூர் நகரத்திலும் இருந்ததாகத் தெரிகிறது. சங்கப் புலவர்களில் பலர் பூதனார் என்ற பெயருடன் விளங்கியமை பூத வணக்கத்திற்கு ஒரு சான்றாகும். இளம்பூதனார், பூதன் தேவனார், கரும்பிள்ளை பூதனார், கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதனார், குன்றம் பூதனார் முதலிய பெயர்களை, பூதவணக்கத்திற்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். துளுநாட்டிலும், இப் பூதவணக்கம் இருந்ததாகத் தோன்றுகிறது. பிற்காலத்தில் கொங்குநாட்டிலும், துளுநாட்டிலுமிருந்து பூதவணக்கம் மறைந்து விட்டது.

பத்தினித் தெய்வமாகிய கண்ணகியார் வணக்கமும் சேரன் செங்குட்டுவன் காலத்தில் கொங்குநாட்டில் கொங்கிளங் கோசரால் தொடங்கப்பெற்றது. கொங்கிளங்கோசர், திருச்செங் கோட்டு மலையில் கண்ணகிக்குக் கோயில் அமைத்தனர் என்றும், அக் கோயில் பிற்காலத்தில் பெண்ணொரு பாகக் கடவுள் (அர்த்தநாரி) ஆலயமாக மாற்றம் அடைந்தது என்றும் செய்திகள் வழக்கத்தில் உள்ளன.[108] கரூர்நகரத்தில் ஆண்டுதோறும் உள்ளிவிழா என்ற பெரிய விழாவொன்று நடந்ததாகவும், அவ் விழாவில் கொங்கர்கள் மணிகளை இடுப்பில் கட்டிக்கொண்டு கூத்தாடியதாகவும் அறிகிறோம்.[109]

சமணம், பௌத்தம் ஆகிய புறச்சமயங்களைப் பின்பற்றிய வர்களும் கொங்குநாட்டில் இருந்தனர். கி. மு. மூன்றாம் நூற்

108 வேங்கடசாமி மயிலை சீனி., 'கொங்கு நாட்டு வரலாறு', பக். 153
109 ஷெ

றாண்டில், சந்திரகுப்த மௌரியருடன் தென்னாட்டிற்கு வந்த பத்திரபாகு முனிவரும் மற்றைச் சமணர்களும் கொங்குநாட்டில் சமணசமயம் பரவுவதற்குக் காரணமாக இருந்தனர். அசோக மன்னர் சத்தியபுத்திரர்களுடைய நாட்டிற்குத் தம்முடைய தர்ம மகாமாத்திரர்களை அனுப்பி, தாம் பின்பற்றிய தர்மத்தைப் பரவும்படி செய்துள்ளார். ஆகையால், சமண, பௌத்த சமயத்தைச் சேர்ந்த துறவிகளும், இல்லறத்தாரும் கொங்கு நாட்டில் பலர் இருந்திருக்க வேண்டும். மேற்கூறப்பெற்ற இரு சமயங்களையும் சார்ந்த துறவிகளில் பலர் மக்கள் நெருங்கி வாழும் ஊர்களில் இல்லாமல், காடுகள் நிறைந்த மலைக்குகைகளில் தங்கியிருந்து தனித்தவம் செய்தனர். இந்தத் துறவியர் கற்குகைகளில் படுத்து உறங்குவது வழக்கமாகும். கொங்குநாட்டு மலைக்குகைகள் சிலவற்றில் கற்களால் ஆகிய படுக்கைகளின்மீது தங்கி இருந்த முனிவர்களின் பெயர்கள் பிராமி எழுத்தில் எழுதப் பெற்றுள்ளன. கரூருக்கு அருகில் உள்ள புகழூர் என்னும் இடத்தில் காணப்பெறும் ஆறுநாட்டார்மலையில் உள்ள குகைகளில் காணப்பெறும் பிராமிக் கல்வெட்டுகள், அங்குத் தங்கியிருந்த சமணத்துறவியரின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன, அர்த்த நாரிப்பாளையம் என்னும் சிற்றூரில் நெல்வயல்களின் நடுவில் சிறிய குன்று ஒன்றுள்ளது, அதன் நடுவில் ஐந்து கற்படுக்கைகள் காணப்பெறுகின்றன. இவற்றை இக்காலத்து மக்கள் பஞ்ச பாண்டவர் குகை என்று கூறியபோதிலும், அவற்றின் சுவர்களின் மீது காணப்பெறும் கல்லெழுத்துகள் சமணத்துறவிகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. திருச்செங்கோட்டு மலைமீதும் சில கற்படுக்கைகள் காணப்பெறுகின்றன.

கடைச்சங்க காலத்தில் கொங்குநாட்டில் இருந்த சைவ, வைணவக் கோயில்கள் எவை என்பது தெளிவாக விளங்கவில்லை. பழனி அல்லது பொதினி மலையில் உள்ள முருகப் பெருமான்கோயில் சங்ககாலத்திலேயே திருமுருகாற்றுப்படை என்னும் சங்கநூலில் மிக்க பெருமையுடன் புகழப்பெற்ற திருக்கோயில்லாகும்.

இயல் 8

குறுநில மன்னர்கள்

பண்டைத் தமிழகத்தின் அரசியல் வானில் குறுநில மன்னர்கள் ஒளிமிகு விண்மீன்களாகப் பொலிவுற்றனர். அன்றைய தமிழகத்தினுடைய மூவரசுகளின் தலைவிதியை வரையறுப்பதில் அவர்கள் பேராற்றல் வாய்ந்தவர்களாக விளங்கினர். அவர்களுள் சிலர், ஒப்பற்ற வள்ளல்கள் என்னும் பேரையும் புகழையும் பெற்றனர். அவர்களுடைய பேராதரவினால் பண்டைத் தமிழகத்தில் அழகு கலைகள் பல செழித்தோங்கின. அதையொட்டி அவர்களைப்பற்றிப் புகழ்மிக்க மரபுவழிக் கதைகள் தோன்றி வளர்ந்தன.

பண்டைத் தமிழரின் நாகரிக வரலாறு என்னும் பொற் சங்கிலியில் விடுபட்ட தனிவளையமாக இக் குறுநில மன்னர்களின் வரலாறு விளங்குகிறது. குறுநில மன்னர் பலர் வட்டாரச் சிற்றரசுகளின் தலைவர்களாகத் திகழ்ந்தனர். இவ் வட்டாரச் சிற்றரசரைப் பற்றிய வரலாறு, பண்டைத் தமிழகத்தின் வரலாற்றைச் செம்மைப்படுத்தவும், முழுநிறைவுடையதாக்கவும் உறுதுணையாக உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். குறுநில மன்னர்களின் வரலாறு இந்திய வரலாற்றில் பெறவேண்டிய இடத்தைப்பற்றி டாக்டர் பிலீட் என்னும் அறிஞர்,

> 'முக்கியமான குறுநில மன்னர்களின் குடும்பங்கள் பல மாண்புமிகு அரச மரபுகள் சிறப்புற்று விளங்க அரும்பணியாற்றியுள்ளன. அக் குறுநில மன்னர்களின் குடும்பங்களைச் சிறந்த கருவியாகப் பயன்படுத்திக் கொண்டதன் மூலமே, தனிப்பெருஞ் சிறப்புவாய்ந்த பேரரசர் அனைவரும், தங்களுடைய நாட்டினைப் பலரும் போற்றத்தக்கவாறு ஆட்சி புரிந்துள்ளனர். எனவே, முக்கியத்துவம் வாய்ந்த குறுநில மன்னரின் குடும்பங்களைப்பற்றிய விரிவான வரலாறு இடம் பெறாத பெருஞ்சிறப்பும் புகழும் வாய்ந்த அரச மரபுகளின் வரலாறுகள் யாவும் முழுநிறைவுடையன என நாம் கூற இயலாது'[1]

என்று பொழிந்துள்ளார்.

---

[1] Fleet, J. F. Dynasties of the Canarese Districts, Bombay Gazetteer, Vol. I, p. 324

இவ் வுண்மையைப் பல வரலாற்றாசிரியர்கள் புறக்கணித்து வந்துள்ளனர். விரிவான முறையில் ஆராய்வதற்குத் தேவையான அடிப்படைச் சான்றுகள் போதிய அளவு கிடைக்கவில்லை என்றும், இவ்வாராய்ச்சியில் ஈடுபடும்பொழுது எழும் சிக்கல்கள் மிகப் பலவாக உள்ளன என்றும் அவர்கள் கூறிவருகின்றனர். இப்பொழுது, நம்முடைய முன்னோர்களைவிட நமக்குச் சில வாய்ப்பு வசதிகள் கிடைத்துள்ளன. சங்க இலக்கியம் அனைத்தும் எளிதில் நமக்குக் கிடைக்கின்றன. தமிழகத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளுள் சில, நம் நாட்டின் அரசியல், பண்பாட்டு வரலாற்றின் போக்கினையும் பண்பினையும் அறிவதற்குரிய சின்னங்கள் சிலவற்றைத் தந்துள்ளன. இவையல்லாமல், தென்னிந்திய வரலாற்றைத் திரும்பப் படைப்பதில் ஆர்வம்கொண்ட அறிஞர்குழாம் கடந்த முப்பதாண்டுகளில் இத் துறையில் ஈடுபட்டு, நல்லதோர் அடிப்படையை அமைப்பதற்குரிய பணிகள் பலவற்றைச் செய்துள்ளது.

இத்தகைய வாய்ப்புகளை நன்முறையில் பயன்படுத்தி, சங்க இலக்கியத்தில் குறுநில மன்னரைப்பற்றிப் பொதிந்துள்ள செய்திகளை அகழ்ந்தெடுத்து, பண்டைத் தமிழகத்தில் அவர்கள் பெற்றிருந்த சீரையும் சிறப்பையும், தெளிவாகவும், முறையாகவும், முழுநிறை வடிவுடையதாகவும் வரைய முயல்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

அடிப்படைச் சான்றுகளின் மதிப்பீடு

பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை வரைவதற்கு நாம் பெரிதும் சங்க இலக்கியத்தின் உதவியை நாடவேண்டியவர்களாக இருக்கிறோம். இவற்றோடு, வட இந்திய இலக்கியங்களில் காணப்படும் ஒருசில குறிப்புகளும், யவன ஆசிரியர்களின் பயணக் குறிப்பேடுகள் தரும் செய்திகள் சிலவும் நமக்கு உதவி புரிகின்றன.

தமிழரின் சமுதாய வரலாற்றை வரைவதற்கு வியப்பூட்டத் தக்க அளவிற்குச் சங்க இலக்கியம், சான்றுகள் பலவற்றை தருகின்றது. ஓரளவிற்கு அரசியல் வரலாற்றை அறிவதற்குரிய செய்திகளையும் அவற்றில் நாம் காணுகின்றோம்.

சங்ககாலப் புலவர்களுள் பெரும்பாலோரை, அன்றைய அரசர்களும் குறுநில மன்னர்களுமே போற்றியாதரித்தனர். சங்க காலத்தில் வாழ்ந்த 473 புலவர்கள் பாடிய பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இப் புலவர்களுள் 144 பேர், தங்களை

ஆதரித்த அரசர்களையும் வள்ளல்களையும் போற்றிப் பாடியுள்ளனர். அவர்களுள் 86 புலவர்கள் குறுநிலமன்னரின் அருமை பெருமைகளை 502 இடங்களில் பாராட்டிப் பாடியுள்ளனர்.[2]

குறுநில அரசுகளின் பழைமை

'உரோமானியப் பேரரசு', 'பிரிட்டானியப் பேரரசு' என்று வரலாற்றேடுகள் குறிப்பிடும் பொருள்களில், பண்டைக்கால இந்தியாவில் பேரரசுகள் விளங்கவில்லை. தமிழகத்தின் அரசியல் அரங்கில் ஆற்றல்மிக்க ஒருவன் அரசுகட்டிலேறிய பொழுது, பல சிற்றரசுகளுக்குத் தலைமையூண்ட 'பேரரசன்' என்று தன்னை அவன் அறிவித்துக்கொண்டான். அவனுடைய மேலாண்மையை நிலைநாட்டுவதற்கு ஆண்டுதோறுமோ, குறிப்பிட்ட சில விழாக்களின்பொழுதோ சிற்றரசர்களிடமிருந்து திறைப்பொருள் பெறுவது அன்றைய வழக்கமாகும். இத்தகைய பழக்கம் அண்மைக் காலத்திய அரசர்களிடமும் இருந்துவந்தமை தெரிகிறது. இம்முறையினால், சிற்றரசுகள் பல நிலைபெற்று விளங்குவதற்குரிய வாய்ப்புகள் மிகுதியாக அமைந்தன. இக் காரணத்தைக் கருத்தில்கொண்டே, 'தமிழகத்தின் வரலாறு ஆதி காலம் முதல் பெரிதும் சிற்றரசுகளின் வரலாறாகவே இருந்து வருகிறது.'[3]

உலக வரலாற்று ஏடுகளைப் புரட்டுகின்றபொழுது, உலக நாடுகளில் 'அரசுகள்' எவ்வாறு தோன்றின என்பதை அறிய முடிகின்றது. முதலில் தோன்றிய சமுதாய அமைப்பு, பழங்குடிப் பண்பு வாய்ந்த இனக் குழுக்களைக் கொண்டதாக இருந்தது. முதலில் அமைந்த அரசியல் அமைப்பு, முடியாட்சியாகவும் விளங்கியது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட நிலையில், தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் பல்வேறு இனக் குழுவினராகவே பிரிந்து வாழ்ந்தனர். அவர்களிடையே காணப்பட்ட வேறுபாட்டினை, அவர்கள் வாழ்ந்த நிலவியல் அமைப்பே உருவாக்கியது. இந்த நிலவியல், தட்பவெப்ப நிலைகளால் உண்டான வேற்றுமைகளே தனிப்பட்ட பண்பாட்டு வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. பண்டைத் தமிழர், உலகினை நான்கு வகைப்பட்ட நிலங்களாகப் பாகுபடுத்தியுள்ளனர். தமிழர் நாகரிகம், மலையும் மலைசார்ந்த பகுதியுமாகிய குறிஞ்சி நிலத்தில் தோன்றியது என்பதைப் பழந்தமிழ்

---

2 வையாபுரிப் பிள்ளை, எஸ்., பதிப்பு, 'சங்க இலக்கியம்', பிற்சேர்க்கை, பக். 1436 – 1459

3 Iyengar, P.T.S., Op. cit., pp. 146-4

நூல்கள் எடுத்துரைக்கின்றன. மலையில் தோன்றிய மனிதன், படிப்படியாக நாகரிக வளர்ச்சியுற்று வாழ்ந்ததை விளக்குவதே கற்கால நாகரிகங்களாகும். அக் காலத்தில் மனிதன் வாழ்ந்த நிலையைக் குறிஞ்சிநில மக்களின் வாழ்க்கையைக்கொண்டு அறியலாம். மலையில் தோன்றிய மனிதஇனம் பெருக்கமடைந்து, மலையினின்று இறங்கி மலையடிவாரத்தில் உள்ள காடுகளில் வாழத் தொடங்கியதை வரலாற்றேடுகள் நாகரிக வளர்ச்சியின் மூன்றாம் நிலையெனக் கூறும். அக் காலத்தில் மக்கள் பல குழுக்களாகக் கூடி, இனக் குழுக்களைக்கொண்ட சமுதாயமாக வாழக் கற்றனர்; காட்டுவெளிகளில் ஆடுமாடுகள் மேய்த்து அமைதியாக வாழ்ந்தனர். வெறும் கற்களால் செய்யப்பட்ட கருவிகளையே இது வரை பயன்படுத்திய மக்கள் செம்பு, வெண்கலம்போன்ற உலோகங்களைப் பயன்படுத்த அறிந்தனர். இதனால், இக் கால நாகரிகத்தைச் 'செம்பு வெண்கலக் கால நாகரிகம்' எனக் கூறுவது மரபு. இந் நாகரிகம் தமிழ்நாட்டில் முல்லைநிலத்தில் அரும்பியது.

நெடுங்காலத்திற்குப் பின்னர், மக்கள் ஆற்றுவெளிகளில், வயல் சூழ்ந்த நிலப்பரப்பில், நாடுநகரங்களையும் கோட்டை கொத்தளங்களையும் அமைத்து அரசமைப்பினைக் கண்டனர். அங்கு உழவுத் தொழிலோடு வேறு பல தொழில்களும் செய்து அவர்கள் அமைதியாக வாழ்க்கையை நடத்தத் தொடங்கினர். அவர்கள் இரும்பின் பயனை அறிந்து அதனைக்கொண்டு பல கருவிகள் செய்யக் கற்றனர். இதனால் இக் காலம் இரும்புக்கால நாகரிகமாகப் போற்றப்பட்டது. இரும்புக்கால நாகரிகம் பண்டைத் தமிழகத்தின் மருதநில நாகரிகமாக மலர்ந்தது. பரிணாம வளர்ச்சி அடிப்படையில் நெடுங்காலம் கழிந்த பிறகே முல்லைநில மக்கள், மருதநில மக்கள் ஆகியவரிடையே சமுதாய அமைப்பு திட்டவட்டமாக வடிவம் பெறலாயிற்று. இதன் விளைவாக அரசியல் அமைப்புகள் திடுமெனத் தோன்றலாயின. அக் காலம் முதற்கொண்டு தமிழரிடையே முடியாட்சி முறை மட்டுமே அரசியல் அமைப்பாகச் சிறப்புறலாயிற்று.

குறுநில மன்னர்—சொல்லும் பொருளும்

குறுநில மன்னரின் வரலாற்றை வரைவதற்கு முன்னர், 'குறுநில மன்னர் என்பவர் யாவர்?' என்பதை வரையறுத்துக் கொள்ளுவது நம் கடமையாகும். குறுகிய நிலப்பரப்பினை ஆண்ட அரசர்களைக் 'குறுநில மன்னர்' எனச் சுட்டுவது சங்க காலம் முதல் இருந்துவரும் வழக்கமாகும்.

'குறுநில மன்னர்' என்னும் தொடர்மொழியை நம் முன்னோர்கள் மிக விரிவான பொருளில் பயன்படுத்தியுள்ளனர். எனவே பல்வேறு இனக்குழுக்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள், வேளிர்கள், படைத்தலைவர்கள் முதலியோரைக் குறிப்பதற்கு வசதியான சுட்டுப் பெயராக, இத் தொடர்மொழி இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது.

வரலாற்றுக் காலம் முதற்கொண்டு தமிழகம் சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர்களால்[4] ஆளப்பட்டு வந்தது. மற்றும், மூவேந்தர்களோடு பல குறுநில மன்னர்களும் ஆட்சிசெய்துவந்தனர். அவர்களுள் சிலர் இனக் குழுக்களின் தலைமக்களாக விளங்கினர். அவர்கள் மூவேந்தர்களுள் பேராற்றல் வாய்ந்த அரசரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாக அரசோச்சினர். ஆனால், அவர்களிடையே நிலவிய அரசியல் அல்லது ஆட்சிமுறைத் தொடர்புகளும் உறவுகளும் நட்போ, ஒருமைப்பாடோ இன்றி நெகிழ்ச்சிமிக்கவையாகக் காணப்பட்டன.

பண்டைக்காலத்தில் நாடாண்ட தலைவர் வேந்து, வேந்தர், அரசர், மன்னர், கோ அல்லது கோன்,[5] கொற்றவன், இறைவன்[6] எனும் பல பெயர்களால் சுட்டப்பட்டனர். இப் பெயர்களுள் வேந்து அல்லது வேந்தன் என்னும் சொல், இச் சூழலில் சிறப்புமிகு பொருளுடையதாகும். முடியினை வேய்ந்தோர் (சூடினோர்)

---

4 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' (தொல். பொருள். செய். 75 : 3)
'மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவர்' (புறம். 35 : 4)
'மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவர்' (பெரும்பாண். 32-33)
'தமிழ்கெழு மூவர்' (அகம். 31 : 14)

5 இப் பெயர் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். ஆடுமாடுகளை மேய்க்கும் ஆய (கோ) னோடு ஒத்த பண்புடையவனாக அரசனைக் கருதினர். ஆயன் எவ்வாறு தன் மந்தைகள் உணவைத் தேடி உண்ண உதவியும், பகைவரிட மிருந்தும், கொடிய விலங்குகளிடமிருந்தும் அவற்றைக் காத்தும் வந்தானோ அதைப்போன்று, அரசனும் தன் குடிமக்களைப் பேணிக் காப்பவனாகப் போற்றப் பட்டான். அரசனைக் குறிக்கும் தொல்பழங்காலத் தமிழ்ச்சொல் 'கோன்' அல்லது 'கோ' என்பதாகும். அதற்குக் 'கோ'(பசு)க்கள் காவலன் என்பது பொருளாகும். இது, நாகரிக வளர்ச்சியில் முல்லைநில வாழ்க்கையில்தான், முதன் முதல் 'அரசு' என்னும் அமைப்புத் தோன்றியதை உணர்த்துகிறது.

6 இறை அல்லது இறைவன் என்னும் தமிழ்ச்சொல் 'எல்லாம் வல்ல' பேராற்றல் வாய்ந்தவரைக் குறிப்பதாகும். இச் சொல் முதலில் அரசனையும், பின்னர் இறைவனையும் குறிப்பதாயிற்று. இவ்விரு பொருளிலும் திருவள்ளுவர் இச் சொல்லை வழங்கியுள்ளார் : குறள். 5, 10, 690, 733, 778

'வேந்தர்' எனச் சுட்டப்பட்டனர்.[7] அவர்களுடைய மணிமகுடங்களை நெடுமுடி எனச் சுட்டுவது மரபு. அம் முடிகள் நீண்ட கூருருளை வடிவில் செய்யப்பட்டனவாகும். சிற்றரசர்கள் அகன்ற வட்ட வடிவ அமைப்புடைய குறுமுடிகளையே (கரண்ட மகுடத்தை) அணிந்தனர் என்பதும் இங்குக் கருதத்தக்கதாகும்.[8]

வேந்தர்களுக்கு அடுத்த நிலையில் நாடாளும் தலைவர்களாக விளங்கியவர்களைச் சிற்றரசர், குறுநில மன்னர்,[9] கோ,[10] கோமான்,[11] குறும்பு,[12] வேளிர்[13] என்னும் பெயர்களால் சுட்டுவது வழக்கமாகும். சிற்றரசன்[14] என்னும் சொல், அரசர்[15] எனும் சொல்லிற்கு நேர்மாறான குறுகிய நிலப்பரப்பை ஆண்ட மன்னரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதைப் பண்டை இலக்கியங்களில் காணுகின்றோம். 'மன்னர்' என்போர் நாட்டில் நிலையான ஆட்சியமைப்பை உடையவராவர்;[16] மறைமுகமாக இச் சொல் நிலக்கிழார்களைக் குறிப்பதாக நாம் கருதலாம். ஆனால், வழக்கில் 'குறுநில' என்னும் அடையின்றி, 'மன்னர்' எனச் சுட்டும்பொழுது அது சிற்றரசர்களையே குறிப்பதாகக் கருதப்பட்டு வருகிறது. அதேசமயத்தில் 'வேந்தன்' என்னும் சொல்லை முடியுடை மூவேந்தரையே சுட்டப் பயன்படுத்தியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.[17] 'அரையர்' என்னும் சொல் 'அரைசு' (அரசு) என்னும் சொல்லின் திரிபாகும். இடைக் காலத்தில் நிலக்கிழார்களைக் குறிக்க இச் சொல் வழங்கப்பட்டது. 'பழுவேட்டரையர்' என்னும் குறுநில மன்னர், பிற்காலச் சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய நிலக்கிழார்களாவர்.

---

7 'கொன்றைவேந்தன்' என்னும் நீதிநூல் ஔவையாரால் இயற்றப்பட்டது. 'வேய்ந்தன் திரிந்து வேந்தனாகி இருத்தல்கூடும்.
(தொல்பொருள். செய். 461 பேரா. உரை)

8 தொல். பொருள். 30 நச்சி. உரை

9 'மறமிகு சிறப்பின் குறுநில மன்னர்' (மதுரைக். 776)

10 புறம். 147 : 9

11 புறம். 95 :9

12 'கொல்குறும்பு' (குறள். 735)

13 'தொன்முதிர் வேளிர்' (அகம். 258 : 2)
'வேளிருள் வேளே' (புறம். 201 : 12)

14 இச் சொல்லாட்சி காலத்தால் மிகவும் பிற்பட்டது; சங்க இலக்கியத்துள் காண்பதரிது.

15 புறம். 154 : 4

16 புறம். 6

17 'சிறுர் மன்னன் நெருதை ரூங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன்' (புறம். 319 : 12–13).
மேலும் காண்க: புறம். 11 : 7, 21 : 11, 26 : 15, 157 : 4, 312 : 4; கலி. 108 : 1, 149 : 14

தொடக்கநிலையில், 'கோ, கோன், கோமான்' என்னும் சொற்கள் அரசனையோ, அரசகுடியைச் சேர்ந்தவரையோ குறிக்கப் பயன்படுத்தப்பட்டன. நாளடைவில் இவை இளவரசர்களையும் குறுகிய நிலையில் சுட்டலாயின.

'கோமகன்' என்பதே பழைய சொல் வடிவம். அது அரசனுடைய மகனைக் குறிப்பதற்கே முதன்முதலில் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும். 'பெருமகன்' என்னும் சொல் 'பெருமான்' எனவும், 'அதியர்மகன்' என்னும் சொல் 'அதியமான்' எனவும்[18] மருவி வழங்குவதைப்போன்று, 'கோமகன்' என்னும் சொல் 'கோமான்'[19] எனத் திரிந்து வழங்கலாயிற்று. 'குறும்பு'[20] என்னும் சொல் அரணமைந்த கோட்டையைக் குறிப்பதாகும். இச் சொல் மிகவுயர்ந்த பொருளில் எல்லைப்புறப் பகுதிகளில் இருந்த அரண்களின் காவலரைச் சுட்டுவதற்குப் பயன்படுவதாயிற்று. இதனால், இராச்சியங்களின் எல்லைகளைக் காவல்புரிந்த ஒருவகைப் படைத் தலைவரைக் 'குறும்பு' என்னும் சொல்லால் சுட்டும் வழக்கம் இருந்தமை புலனாகின்றது. இத்தகைய எல்லைக் காவலர், எப்பொழுதுமே வேந்தரின் மேலாதிக்கத்தை உடைத்தெறிவதற்குத் தக்க வாய்ப்பினை எதிர்பார்க்கும் மனப்பான்மை உடையவராக இருந்ததை நம் நாட்டு வரலாறு பேசுகிறது. இந்தச் சூழலில்,

> 'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
> கொல்குறும்பும் இல்லது நாடு'[21]

என்னும் திருவள்ளுவரின் கருத்து நினைவுகூரத்தக்கதாகும். வள்ளுவர் குறும்பிற்குக் கொடுத்துள்ள அடைமொழியைக் காண்க. 'கொல்' என்னும் அடைமொழி ஆழ்ந்த பொருள் பயப்பதாகும். 'கொடிய கொலைக்குரிய' என்னும் பொருள் பயப்பதோடு, 'வேந்தலைக்கும் கொல்குறும்பு' என்பதனால், அவர்கள் 'பொதுவாக அரசனுக்குக் கீழ்ப்படியாமல் கலகம் செய்கிறவர்கள்' என்னும் செய்தியையும் உணர்த்துகிறது. இந்தக் கருத்திலிருந்து, 'கீழ்ப்படியாமல் கலகம் செய்கின்ற சிற்றரசர்' என்று அனைவரும் அறிந்த பொதுப் பொருளைக் 'குறும்பு' என்னும் பெயர் பெறலாயிற்று.[22]

---

18 Burrow, T., *Collected Papers on Dravidian Linguistics*, p. 149

19 அகம். 35 : 14

20 அகம். 319 : 3; புறம். 386 : 13; நற். 77 : 3

21 குறள். 735

22 குறும்பு என்னும் சொல்லின் பொருளுடைய 'அரட்டர்' என்னும் வடமொழிச் சொல்லை இலக்கியங்களும் நிகண்டுகளும் வழங்குகின்றன. சிந்தாமணியில் பயிலும் 'அரட்டர்' என்னும் சொல்லிற்குக் (சீவக. 1221) குறும்பர் எனும் சொல்விளக்கத்தை நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் தந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

மகள்—மகளிர்' என்பதைப்போல, 'வேளிர்' என்னும் சொல் 'வேள்' என்பதன் பன்மைச் சொல்லாகும்.[23] தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை ஆண்ட குறுநில மன்னரைக் குறிக்கும் அடைமொழியாக 'வேளிர்' என்னும் சொல் நெடுங்காலமாகப் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளதைக் காணுகின்றோம். அவர்கள் மூவேந் தருக்கு மகட்கொடை அளித்த பெருமையும் சிறப்பும் உடையவர் களாக வாழ்ந்ததை அறிகிறோம். அரசருக்கு அடுத்த சிறப் புடையவர்களாக - 'மன்பெரு மரபின் ஏனோர்'[24] என்று பாராட் டப்பட்டவர்களாகவே வேளிர் பண்டைக்காலத்தில் வீறுபெற்று விளங்கினர்.

'வேந்தரும் வேளிரும் பின்வந்து பணிய'[25]

என்பதுபோன்ற பண்டைய இலக்கியக் குறிப்புகள் இவ்வெண் ணத்தை எழச்செய்கிறன.

குடக்கோ நெடுஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர வேந் தனின் சிறப்பினைப் பாடுகின்ற புலவர், 'அவன் முடியுடை வேந்தருக்கும் குறுநில மன்னருக்கும் தலைவனாக விளங்கி யமையால் அவர்கள் சேரனுடைய அத்தாணி மண்டபத்திற்கு வந்து அவனைப் பணிந்து நின்றனர்' என்பதை இத் தொடரின் மூலம் தெரிவிக்கின்றார்.

குறுநில மன்னரைக் குறிக்க வழங்கிய சொற்களைப்பற்றிய இவ்வாய்விலிருந்து பண்டைத் தமிழகத்தின் தொடக்க கால வரலாற்றில், அவர்கள் அரசரோடு ஒப்பவைத்துப் போற்றப்படும் சிறப்புமிக்கவர்களாய் விளங்கியமை புலனாகிறது. மற்றும், அரசரையும் சிற்றரசரையும் சுட்டுவதற்குப் பலவகையான சொற்கள் வழங்கப்பட்டதிலிருந்து தமிழரிடையே முடியரசு எனும் அமைப்பு மிகவும் பழமையானதாகும் என்பது தெரியவருகிறது.

சிற்றரசுகளின் தோற்றம்

தமிழகத்தில் சிற்றரசுகளின் தோற்றம்பற்றி அறிஞரிடையே கருத்துவேற்றுமை இருந்துவருகிறது. ஆதிக்க வேட்கையே சிற்றரசுகளின் தோற்றத்திற்குக் காரணம் என்பது ஒருசில அறிஞரின் கருத்தாகும். பரிணாம வளர்ச்சி அடிப்படையில்

---

23 புறம். 24 : 18; அகம். 135 : 12, 206 : 13, 258:2, 331 : 13; பதிற். 88 : 13; மதுரைக். 55

24 தொல். பொருள். மரபு 84:3, இளம். உரை

25 பதிற். 30 : 30, 88 : 13; அகம். 331 : 13

(குடி, இனக்குழு, சிற்றரசு) சிற்றரசுகள் தமிழகத்தில் தோன்றியுள்ளன என்பது மற்றொரு சாராரின் திடமான நம்பிக்கையாகும். இவ்விரு எண்ணப் போக்குகளுள், 'பரிணாம வளர்ச்சி'க் கொள்கையே பண்டைத் தமிழகத்தில் குறுநில அரசுகளின் தோற்றம்பற்றிய விளக்கத்தைத் தருவதாகக் கூறலாம்.

எண்ணற்ற பழங்குடிச் சமூகங்கள் பேராற்றல் வாய்ந்த தங்கள் தலைவர்களின் கீழும், பலவகைப்பட்ட நிலக்கிழார்களின் கீழும் வாழ்ந்துவந்ததைச் சங்க இலக்கிய ஏடுகளில் நாம் காணலாம். பின்வரும் சான்றுகள் இஃது 'உண்மை' வெறும் புகழ்ச்சி இல்லை என எடுத்துரைக்கும்:

'ஆவியர் பெருமகன் பேகன்',[26]

'குறவர் பெருமகன் ஏறை',[27]

'கள்வர் பெருமகன் புல்லி',[28]

'மழவர் பெருமகன் மாவள் ஓரி',[29]

'மழவர் பெருமகன் அஞ்சி'.[30]

இச் சான்றுகள் யாவும் பேகன், ஏறை, புல்லி, ஓரி, அஞ்சி ஆகியோர் முறையே அவர்களுடைய இனத்தவரின் அல்லது இனக்குழுக்களின் தலைவர்களாக (பெருமகன்) விளங்கியதைத் தெளிவுறுத்துகின்றன. இதே முறையில், நிலக்கிழார்கள் பலரும் இனத்தலைவர்களாக இருந்ததற்கு நாம் தக்க சான்றுகளைக் காட்டமுடியும்.

சோழ நாட்டில், காவிரிக் கரையில் இருந்த ஊர் அம்பர் என்பதாகும். அவ்வூரின் தலைவன் அருவந்தை[31] என்பவன். நீர் வளமும் நிலவளமும் மிக்க ஊருக்குத் தலைவனாக விளங்கிய அவன், சிறந்த வள்ளலாகவும் திகழ்ந்தான். இதனால் அவனை 'அம்பர்கிழான் அருவந்தை' என்று போற்றினர். இத் தொடர் மொழியில் உள்ள 'கிழான்' என்னும் சொல் விளக்கத்திற்குரியதாகும். உழவுத் தொழிலுக்குப் பயன்படும் வயல்சார்ந்த நிலப் பகுதிக்கு—மருதநிலத்திற்கு — தலைவனையே *கிழான்* எனச் சுட்டுவது மரபு.[32] எனவே, இந்தக் கிழான் (கிழவன்) மருதநிலத்

---

26 சிறுபாண். 86 : 87
27 புறம். 157 : 7
28 அகம். 342 : 6
29 நற். 52 : 9
30 புறம். 88 : 3
31 டி. 385 : 10
32 டி. 394-2, விளக்கவுரை; திவாகர நிகண்டு, பக். 41, செ. 6; தமிழ் லெக்சிகன், பக். 936

தலைவன் என்பது அவனுடைய பெயரில் உள்ள அடைமொழியே உணர்த்துகிறது. இதனை,

'காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
நல்அரு வந்தை'[33]

என்னும் கல்லாடனாரின் பாடல் தெளிவுறுத்துகிறது.

போர்க்களத்தில் தலைசிறந்த வீரர்களாக விளங்கிய போர் மறவர்கள் பலராவர். அவர்கள் சில ஊர்களின் தலைவர்களாகத் திகழ்ந்தனர். சங்க இலக்கியத்திலிருந்து, பழையன் என்னும் பெயருடைய சிற்றரசர்கள் மூவர் வாழ்ந்தமை தெரியவருகிறது. அவர்களுள் சோழநாட்டிலிருந்த 'போஓர்' என்னும் ஊருக்குத் தலைவனாக விளங்கிய பழையன் சிறப்பு மிக்கவனாவான். அக் காலத்திய மக்கள் அவன் விற்போரில் தலைசிறந்து விளங்கியதை யும் போர்க்களத்தில் வியத்தகு வீரதீரச் செயல்கள் புரிந்ததையும் நன்கு அறிந்திருந்தனர்.[34] பாண்டியன் படைமறவன் நாகன் என்பான் 'நாலை' என்னும் ஊரின் தலைவனாகப் போற்றப் பட்டான்.[35] அவன் ஒரு நிலமானியப் படைமுறைத் தலைவ னாகத் திகழ்ந்தான். அவன் பாண்டிய வேந்தனுக்குப் படை வேண்டிய காலத்துப் படைகொடுத்து உதவினான். போர்க்கால நெருக்கடியின்போது அறிவுரை வேண்டிய சமயத்தில் சிறந்த வகையில் அறிவுரைகளும் வழங்கினான்.[36] இதனால், அவன் பாண்டிய மன்னனுக்குப் படைத்தலைவனாகவும் அமைச்ச னாகவும் பணிபுரிந்துள்ளான் எனக் கருதலாம்.

சங்க இலக்கியத்தை ஓரிரு முறை படித்தவர் அனைவரும் இக் குறுநில மன்னர்கள் கலையுணர்வுமிக்க கலைஞர்களாகவும், கலையுலகக் காவலர்களாகவும் பண்டைத் தமிழகத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதை நன்குணர்வர். சங்க இலக் கியத்தை இவ்வாறு பரந்துபட்ட நிலையில் பார்க்கின்றபொழுது, ஓர் உண்மை புலனாகின்றது, பழங்காலத் தமிழ்நாட்டின், நிலப் பிரபுத்துவத்தின் அடிப்படையிலேயே, சிற்றரசுகள் தோன்றி மலர்ந்தன என்பதாகும். சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப நாளடைவில் அக் குறுநிலத் தலைவர்கள் படை மறவ ராகவும், படைத் தலைவராகவும், அமைச்சராகவும் மற்றும் பல வகையிலும் வேந்தர்களுக்குப் பணிபுரிந்தனர் என்பது தேற்றம்.

---

33 புறம். 385 : 8-10
34 அக்ம். 186 : 14-16; நற். 10 : 13:14
35 புறம். 179
36 கூ 179 : 5-8

தத்தம் ஆட்சி எல்லைக்குள் இக் குறுநில மன்னர்கள் உள்ளாட்சி யுரிமையோடு பேராதிக்கம் பெற்றிருந்தமையும், பெயரளவிற்குத் தங்கள் அரசனிடத்து ஒருவகையான பற்றுறுதி பூண்டிருந்ததை யும் சங்கப் பாடல்களால் நாம் அறிகிறோம்.

சிற்றரசுகளின் அமைப்புமுறை

பண்டைத் தமிழகத்தின் இத்தகைய 'அரசியல்-பொருளியல்' அமைப்பினை, ஒரு நிலமானியப் படைமுறை[37] அமைப்பு எனக் கருதுவோமானால், அது தவறான கொள்கையை உருவாக்குவ தாக அமையும். ஆனால், நிலமானியப் படைமுறை அமைப்பின் வளர்ச்சியுறாத அடிப்படைக் கூறுகள் சில, நம் நாட்டுச் சமுதாய அமைப்பில் இடம்பெற்றிருப்பதை உய்த்துணருமாறு தூண்ட உதவும் குறிப்புகள் சில சங்க இலக்கியத்துள் இலைமறைகாய் போல் இலங்குகின்றன. 'நிலமானியப் படைமுறையின் வேர்கள், உழவுத்தொழிலின் ஆதிக்கத்திற்குட்பட்ட அரசிடத்தும் சமுதாய அமைப்பிடத்தும் ஆழப் பாய்ந்துள்ளன. அந்தச் சமுதாயத்தின் மக்கள்தொகை, இருவகை வர்க்கங்களாகப் பிரிந்து நின்றது. நிலக்கிழார்களான செல்வர்களையும், பொருளாதார அடிப் படையில் அவர்களைச் சார்ந்து வாழும் உழவர்களையும் கொண்ட சமுதாயமாகும்'[38] என்னும் கார்ல் ஸ்டீஃபன்சன் அவர் களின் கருத்து, நம் பண்டைத் தமிழ்ச் சமுதாய அமைப்பைப் பெரிதும் பிரதிபலிப்பதாகும்.

இவ்வகையில் பண்டைத் தமிழக அரசும் சமுதாயமும் வேளாண்மைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண் டிருந்தன. மக்களிடையே இருவகைச் சமுதாயப் பிரிவுகள் நன்கு உருவாகி இருந்தன. அரசர்களும் குறுநில மன்னர்களும் நாட்டில் நிலவுடைமைத் தலைவர்களாக விளங்கினர். வேளாண் மைத் தொழிலில் ஈடுபட்டிருந்த உழவர் பெருங்குடி மக்களைப் பற்றிப் பல குறிப்புகள் சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றன.

உழவுத்தொழில் செய்தவர்கள் வேளாளர் எனப்பட்டனர்.[39] அவர்களிடையேயும் இருவகைப் பிரிவுகள் இருந்ததாகத் தெரிகிறது. நிலத்தைத் தாங்களே உழுது பயிரிட்டோரை 'உழுதுண்போர்' எனவும், ஊழியரைக்கொண்டு நிலத்தை

37 Feudal
38 Stephenson, Carl, *Medieval Feudalism*, p. 7-8
39 தொல். பொருள். மரபு. 81

உழுது பயிரிட்டோரை 'உழுவித்துண்போர்' எனவும் சுட்டினர். இவர்களை 'நிலக்கிழார்கள்' என்று சுட்டுவது பண்டைக்கால வழக்காகும்.[40] இந் நிலக்கிழார்கள் நிலப்பிரபுக்களாக விளங்கினர். அவர்களுடைய முதன்மையான வருவாய், குடியானவர் கொடுத்த குத்தகையாகவே இருந்திருக்கவேண்டும். இந்த நிலப்பிரபுக்களிடையே நிலமானியப் படைமுறைத் தலைவர்கள் எனப் போற்றத்தக்க வகையில் செல்வமும் செல்வாக்கும் பெற்றுச் சிலர் சிறந்தோங்கினர். அவர்களை 'வேளிர்' எனச் சுட்டுவது தமிழகத்தின் பண்டை மரபாகும்.[41]

நிலமானியப் படைமுறை அமைப்பின் அடுத்த முக்கியப் பண்பு நிலவுடைமை உரிமைக்காலம் பற்றியதும், அரசர்களுக்கும் அவ்வரசர்களிடமிருந்து நிலத்தை மானியமாகப் பெற்றிருந்த சிற்றரசர்களுக்கும் இடையே நிலவிய தொடர்புபற்றியதுமாகும். அவ்வரசர்களுக்கு, இக் குறுநில மன்னர் செய்த ஊழியமும் தனிப் பட்ட வகையில் கொண்டிருந்த நேர்முகத் தொடர்பும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

சங்க காலத்தில் முடியுடை மூவேந்தருக்குக் கீழ்ப்பட்ட குறுநில மன்னர் பலர் இருந்தனர். வேந்தருக்கும் குறுநில மன்னருக்கும் இடையே உட்பகை காரணமாக நடைபெற்ற கொடிய போர்கள் பலவற்றைப் புறநானூற்றில் நாம் காணுகின்றோம். இத்தகைய உட்பகைகளுக்கும் போர்களுக்கும் திறை செலுத்துவதைப் புறக்கணிப்பதும் நேர்முகப் பற்றுறுதியை அறுத்து எறிவதுமே காரணங்களாக அமைந்தன. தகடூரைச் சேர மன்னன் முற்றுகையிட்டான். அதையொட்டி நடைபெற்ற போரில் அத் தகடூரின் தலைவனான அதியமான் எழினி கொல்லப் பட்டான்.[42] இதைப்போன்றே, கோவலூரை ஆண்ட மலையமானைச் சோழ வேந்தன் கிள்ளிவளவன் தாக்கிப் புறமிட்டு ஓடச் செய்தான். இவ்விரு போர்களுக்கும் காரணம் குறுநில மன்னராகிய அதியமானும் மலையமானும் தாங்கள் கீழ்ப்படிந்திருந்த சேர, சோழ வேந்தர்களின் மேலாதிக்கத்தை உதறித் தள்ளி, தங்கள் தனியுரிமையை நிலைநாட்ட முயன்றமையேயாகும்.[43]

---

40 தொல். பொருள். 30 நச்சி. உரை

41 வேளிரைப்பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

42 பதிற். 78 : 9; பதி. 8 : 9; Arokiaswami, M., *The Kongu Country*, p. 60

43 அகம். 209

இந்நிலையில், பண்டைக் காலத்தில் நம் இந்திய வேந்தர்கள் மேற்கொண்டு ஒழுகிய 'ஆதிபத்தியம்' அல்லது 'மேலாதிக்கம்' என்னும் கோட்பாட்டை நாம் மறத்தலாகாது. குறுநில மன்னரின் இராச்சியங்களைப் பேரரசர் கைப்பற்றியபொழுது அவற்றைத் தம் இராச்சியத்தோடு இணைத்துக்கொள்ளுவதன்மூலம், தம் அரசின் பரப்பை விரிவுபடுத்தும் நோக்கம் பெரிதும் நம் தமிழ் வேந்தர்களுக்கு இருந்ததில்லை. ஆனால், தம்முடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு திறைசெலுத்த இசைந்தால், கைப்பற்றிய நாட்டை அக் குறுநில மன்னரிடம் திருப்பிக் கொடுத்துத் தனியரசுகளாக இயங்கும் உரிமையை நம் வேந்தர்கள் அவர்களுக்கு அளித்துள்ளனர்.[44] இம் முறையிலேயே சிற்றரசுகள் நம் நாட்டில் பேரளவிற்குத் தோன்றலாயின; தொடர்ந்து வளர்ச்சியுமுற்றன; வட்ட, மாநில ஆளுநர் பதவிகள் மரபுரிமைபாக மாறிய காலத்தில், இத்தகைய சிற்றரசுகளின் எண்ணிக்கை பெருகலாயிற்று. தொண்டைமான் இளந்திரையன் அருவாநாட்டை ஆண்ட குறுநில மன்னன். அருவாளனைச் சோழன் திருமாவளவன் அடிபணிய வைத்ததைப்பற்றிய குறிப்புப் பட்டினப் பாலையில் காணப்படுகிறது.[45] இதனால், சோழனின் மேலாதிக்கத்தைத் தொண்டைமண்டலத்து அருவாளனான இளந்திரையன் ஏற்றுக்கொண்டான் எனக் கருதலாம். அவனைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாரே, திருமாவளவன் என்னும் கரிகாலனைப் பட்டினப்பாலையில் போற்றிப் பாடியுள்ளார். எனவே, கரிகாலன் II-ம் இத் தொண்டைமானும் (தொண்டைமான் I) சமகாலத்தவராக இருத்தல்கூடும் எனத் தோன்றுகிறது. இவ்வுய்த்துணர்வு மெய்ம்மையாக இருக்குமானால், கரிகாலனுடைய மேலாண்மைக்குட்பட்ட குறுநில மன்னனாகவோ, உட்குடியாகவோ[46] இளந்திரையன் இருந்தான் எனக் கூறலாம்.

குறுநில மன்னருடைய தகுதிநிலைக்கும், அவர்களை அடக்கியாளும் மேலாதிக்க அரசனுடைய ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ப, முடியுடை வேந்தனின் பேராதிக்கக் கட்டுப்பாடு வேறுபடலாயிற்று. சங்ககால வள்ளல்களில் காரி என்னும் குறுநில மன்னன் சிறப்புமிக்க வீரனாவான். அவன் சோழப் பெருவேந்த

---

44 'பணிந்தோர் தேஎம் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்' (மதுரைக். 230-231)

45 'தொல்லரு வாளர் தொழில்கேட்ப' (பட்டி. 275)
இதற்கு மாறான கருத்துடையவரும் உண்டு.
காண்க: இராசமாணிக்கனார், டாக்டர் மா., 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி', பக். 302

46 Vassal

னுடைய மேலாண்மையை ஏற்று வாழ்ந்த சிற்றரசனாவான்.[47] தன் படைவலிமையைப் பெருக்கிக்கொண்ட பிறகு, அவன் சோழனின் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற விரும்பினான். விரும்பிய வண்ணமே தன்னுடைய சோழப் பேரரசிடம் கொண்ட பற்றுறுதியை அவன் கைவிட்டான். அதனோடு அமையாமல், அவன் வேந்தருக்குரிய முடியைச் சூட்டிக்கொண்டு தன்னை 'மலையமான் திருமுடிக்காரி' என்று உலகிற்கு அறிவித்தான். இதன்மூலம், அவன் ஓர் உரிமைமிக்க தனியரசின் தலைவன் என்பதை வெளிப்படுத்தினான். சீற்றமுற்ற சோழவேந்தன் காரியை எதிர்த்துக் கடுமையாகப் போரிட்டு, அவனைப் படுதோல்வியுறச் செய்தான்.[48] இதிலிருந்து, பேரரசிற்குப் பணிந்துபோதல், பொதுவாக எதிர்பார்க்கப்பட்டமையும், சில சமயங்களில் கீழ்ப்படிந்து போகுமாறு போரின்மூலம் வலியுறுத்தப் பட்டமையும் புலனாகின்றன.

பிற்காலத்தில், எந்த வேந்தனுக்குக் கீழ்ப்பட்ட குறுநில மன்னர் என்பதைத் தங்கள் அதிகாரப் பதிவேடுகளில் குறிப் பதைக் குறுநில மன்னர்கள் தங்கள் கடமையாகக் கொண்டு இருந்தனர். தங்கள் கல்வெட்டுகளிலோ, செப்பேடுகளிலோ, அரசின் ஆணைகளிலோ முதலில் தங்கள் பேரரசனின் பெருஞ் சிறப்பைப் போற்றிக் குறிப்பிடுவது வழக்கமாயிற்று. இவ் வழக்கம் சங்ககாலத்தில் வழக்கில் இருந்ததை அறிவதற்குப் போதிய நேர்முகச் சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும், புறநானூற்றில்[49] காணப்படும் செய்தியிலிருந்து, மலையமான் திருக்கண்ணன் என்பவன் சோழரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட குறுநில மன்னனாக மட்டும் விளங்கவில்லை; சோழரின் படைத்தலைவனாகவும் விளங்கினான் என்பதை அறிகிறோம்.[50] சோழமன்னன் அரச பதவியை இழந்து தலைமறைவாக இருந்த காலத்தில், அவனுடைய பகைவர்களை எதிர்த்துக் கடும் போரிட்டுப் புறமிட்டு ஓடுமாறுசெய்த மாவீரன் திருக்கண்ணன் என்றும், பின்னர் சோழ மன்னனை அரசுகட்டிலில் அமரச் செய்த பெருந்தகை திருக்கண்ணன் என்றும் அவனை அக்காலப் புலவர் போற்றிப் பாடியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

---

47 'சோழற்குத் துப்பாகிய தேர்வண் மலையன்' (புறம். 125 கொளு, புறம். 122 : 5)

48 புறம். 46

49 புறம். 174 கொளு.

50 'மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்' (புறம். 174) என்னும் தொடர்மொழியைக் காண்க.

இமிழ்கடல் சூழ்ந்த தமிழகப் பெருநிலப் பரப்பை ஒரு குடையின்கீழ்க் கொண்டுவர முயன்றவர் கரிகாலன், சேரன் செங்குட்டுவன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்னும் முப்பெரும் வேந்தர்களாவர். அவர்கள் தமிழக அரசியலில் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டத் தொடங்கிய பொழுது, நாட்டிலிருந்த சிற்றரசர்கள் அடக்கி ஒடுக்கப் பட்டனர். அதன் பயனாக அப் பேரரசர்களின் மேலாதிக்கத்தை அக் குறுநில மன்னர்கள் ஏற்றுக்கொண்டனர். இம் முப்பெரு வேந்தர்கள் நடத்திய போர்களின் விளைவாகத் தோல்வியுற்ற மன்னர்கள் வாகைசூடிய வேந்தர்களுக்குக் கீழ்ப்படிந்து வணங் கினர்; அவர்களுடைய மேலாண்மையை ஏற்றுக்கொண்டு திறை செலுத்த முன்வந்தனர் எனலாம். இச் செயலின்மூலம் சிற்றரசர் களும் மன்னர்களும் தங்கள் பதவி பறிபோகாமல் காத்துக் கொண்டனர். இவ்வாறு, தமிழ்நாட்டு நிலமானியப் படைமுறை அமைப்பு ஐரோப்பிய முறையிலிருந்து வேறுபடலாயிற்று. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பாவில் உயர் தலைமை ஆதிபத்தியங்கள் இருந்தனவேயொழிய, அரசு என்பது இல்லை. நிலமானியப் படைமுறைக் கோபுரத்தின் கொடுமுடியில் 'உயர் அதிபதி'யாகவே அரசன் விளங்கினான்[51] என்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

மேலாதிக்கம் செலுத்திய வேந்தர்கள் குறுநில மன்னரை அடக்கியாண்ட முறை, மிகவும் வேறுபட்ட இயல்புடையதாக இருந்தது. தன்னுடைய பேரரசனுக்கு முறையாகத் திறை செலுத்துவது சிற்றரசனின் கடமைகளுள் ஒன்றாகக் கருதப் பட்டது. மற்றும், போர்க்காலத்தில் படையும் பொருளும் கொடுத்து உதவுவதும் குறுநில மன்னரின் தலையாய கடமையாகப் போற்றப் பட்டது. இம் முறையில் குறுநில மன்னர் சிலர், தத்தம் பேரரசர் களுக்கு ஆற்றிய பணிகள்பற்றிய குறிப்புகள் சில சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றன. நாஞ்சில் வள்ளுவன் என்ற குறுநில மன்னன் புலவர்களையும், பாணர் பாடினிகளையும் போற்றி ஆதரித்துப் பொன்றாப் புகழ்பெற்றான். பேரரசனிட மிருந்து பற்றுறுதி வாய்ந்த சிற்றரசன் எனும் முறையில் பேரளவில் பரிசுகளையும் பாராட்டுகளையும் நாஞ்சில் வள்ளுவன் பெற்றான். இதனால், தன்னுடைய பேரரசனுக்காகப் போரிலே அஞ்சாமல் போரிட்டுத் தன் உயிரை இழக்கவும் அவன் சித்தமாக இருந் தான்.

---

51 Petit-Dutaillis, C. H., *The Feudal Monarchy in France and England*, pp. 14-15

மற்றொரு சிற்றரசன் நாலைகிழான் நாகன் என்பவனாவான். அவன் பாண்டியனுடைய மேலாண்மைக்குட்பட்ட குறுநில மன்ன னாவான். அவன் மாவீரனாகவும் சிறந்த கொடையாளியாகவும் விளங்கினான். தன்னுடைய அரசனுக்குப் படை தேவைப்பட்ட பொழுது படையுதவியும், ஆலோசனை தேவைப்பட்டபொழுது ஆலோசனை வழங்கியும் வந்தான் என்பதும் இங்குக் கருதத் தக்கது.[52] நேர்முக ஈடுபாடும், பற்றுறுதியும், குறுநில மன்னரின் தியாகவுணர்வும், மேலாதிக்க அதிபதியின் பரிவுமிக்க ஆதரவும், பாராட்டும் நிலமானியப் படைமுறைச் சமுதாய அமைப்பின் அடிப் படைகளாகும், அவை ஆழமும் நிலைபேற்றுத் தன்மையும் வாய்ந்தவையாகும்.

சிற்றரசர் பேரரசரிடம் கொண்ட அன்பார்ந்த ஈடுபாடு, பற்றுறுதி, தியாகவுணர்வு போன்றவற்றைத் தெளிவுறுத்தும் சிறப்புமிக்க சான்றுகள் சில சங்க இலக்கியத்துள் காணப்படு கின்றன. போருக்குப் புறப்படுவதற்குமுன், ஓர் அரசன் வீரர் களுக்கு விருந்து நடத்துகிறான்; பெருஞ்சோறு அளித்துப் பாராட்டுகிறான். விருந்திலே குடிப்பதற்குக் கள் வழங்கப் படுகின்றது. குறிப்பிட்ட ஓர் இளைய வீரனை அரசனுக்குச் சுட்டிக்காட்டி ஔவை என்னும் புலவர் பெருமாட்டியார்,

> 'போரில் வல்ல தேர்ப்படைக்கும் யானைப்படைக்கும் தலைவனே! நீ உண்ணும் மதுவினை இவனுக்குக் கொடுத்துப் பின் உண்பாயாக! உன் தந்தையின் தந்தையைப் போரில் காப்பதற்காக இவன் தந்தையின் தந்தை, தச்சனால் ஆரக்காலைச் சேர்த்து எறியப்பட்ட குடம்போல உடம் பெல்லாம் வடுப்பெற்று உயிரை விட்டான். இந்த இளைஞனோ குடிப்பெருமையும் மாவீரமும் வாய்ந்தவன். போரில் உன்மீது பாயவரும் வேற்படையை, மழையை மறைக்கும் குடையைப் போல, உன்மீது பாயாமல் தடுத்துக் காப்பான். எனவே, நீ உண்ணும் கள்ளினை முதலில் இவனுக்குக் கொடுத்து, பிறகு நீ உண்பாயாக!'

என்று அறிவுறுத்தினார்.[53]

இப் பாடல் படைமறவர், குறுநில மன்னர் முதலியோர் தங்கள் பேரரசனிடம் கொண்டிருந்த நேர்முகப் பரிவுமிகு பாசத்திற்கும் பற்றுறுதிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

---

52 புறம். 179 · 6-7 53 புறம். 290

நிலமானியப் படைமுறைத் தலைவரிடையே மனம் கலங்காத பற்றுறுதியையும், பரிவுமிகு பாசத்தையும், ஈடுபாட்டையும் போற்றி வளர்க்க விரும்பிய வேந்தர்கள், அவர்களுக்குப் பரந்துபட்ட நிலப் பரப்பினை மானியமாக வழங்கினர். இத்தகைய நில நன் கொடையைத் 'தண்ணடை நல்கல்'[54] எனச் சங்க இலக்கியம் சிறப்பித்துப் பேசுகிறது. பிற்காலத்திய கல்வெட்டுகள் இதைப் 'படைப்பற்று' என்று கூறும். 'தண்ணடை' என்பது நீர்வளத்தால் சிறப்புடைய நன்செய் நிலத்தைக் குறிப்பதாகும். இது ஆகு பெயராக மருதநிலத்து ஊரினைக் குறிப்பதாயிற்று.[55] 'தண்' எனும் சொல் 'குளிர்ச்சி' எனும் பொருள் பயப்பதாகும். 'அடை' எனும் சொல் (தண் அடை) கையடையாகக் (அன்புப் பரிசாக) கொடுக்கப்பட்ட நிலத்தைக் குறிப்பதாகும். புறநானூற்றில் பொன் முடியார் எனும் புலவர் பாடியுள்ள பாடல் ஒன்றில், அரசன் கடமை களில் தண்ணடை வழங்கிச் சிறப்பித்தலும் கூறப்பட்டுள்ளதாகக் கருதலாம்.[56]

குறுநில மன்னர், தம் வேந்தர்களின் அவைக்களத்தை அணி செய்ததை இரண்டு பெருஞ் சிறப்பு வாய்ந்த புலவர்கள் குறித் துள்ளனர். சேரவேந்தனின் நல்லவையில் வேந்தரும் வேளிரும் வந்து பணிந்து நின்றனர்[57] என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

பாண்டியன் நெடுஞ்செழியனுடைய புகழ்மிக்க அவைக் களத்தில் இளங்கோசர்களும், குறுநில மன்னரும் பிறரும் நெருங்கி நின்று, அவனைப் புகழ்ந்து போற்றினர். இதனை,

'கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்
இயல்நெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பின் குறுநில மன்னர்
அவரும் பிறரும் துவன்றிப்
பொற்புவிளங்கு புகழ்அவை நிற்புகழ்ந்து ஏத்த'[58]

---

54 புறம். 287 : 10, 297 : 8

55 ஷி 312-ல் 'நன்னடை' என்பதற்குத் தரப்பட்டுள்ள பாட வேறுபாடு 'தண்ணடை' என்பதாகும். இப் பாடலில் விரிக்கப்படும் கருத்திற்கு மிகவும் பொருத்தமாகவும் பொருளாழம் வாய்ந்ததாகவும் தோன்றுவது 'தண்ணடை' என்னும் பாடமே. மற்றும், புறம். 287 : 10, 297 : 8 காண்க.

56 புறம். 312 : 4

57 வையாபுரிப் பிள்ளை, எஸ்., 'காவிய காலம்', பக். 307
கைலாசபதி, டாக்டர் கே., *Tamil Heroic Poetry*, p. VII

58 மதுரைக். 773-778

என்னும் மாங்குடி மருதனாரின் பாடற்பகுதியால் அறிகிறோம். இத்தகைய செய்தியை வேறுசில பாடல்களும் எடுத்துரைக்கின்றன. இச் சான்றுகள் யாவும், குறுநில மன்னர்கள் பேரரசன் கொலுவில் வீற்றிருந்தபொழுது அந்த அவையினை அணி செய்த தோடு, அவனுக்கு வணக்கம் செலுத்துவதன் மூலம், தங்கள் பற்றுறுதியையும் ஈடுபாட்டையும் புதுப்பித்துக் கொள்ளுவர் என்பதனையும் தெரிவிக்கின்றன.

தமக்கு மிகவும் வேண்டிய அமைச்சரையோ செல்வரையோ இடைக்காலத்து வேந்தர்கள் சிற்றரசராகவோ, உட்குடியாகவோ பதவியில் அமர்த்திச் சிறப்பித்ததைப் போன்று, சங்ககால வேந்தர்கள் செய்ததாகத் தெரியவில்லை. இடைக்காலத் தமிழகத்தில் அமைச்சர் பொறுப்பில் இருந்தவர்களுள் பெரும் பாலோர் அரசனின் விருப்பத்திற்கிணங்கக் குறுநில மன்னராகவோ மாநிலங்களில் ஆளுநராகவோ சிறப்புற்று விளங்கினர். இத்தகைய வழக்கம் சங்ககாலத்தில் பெருவழக்கிற்கு வரவில்லை எனலாம்.

பெருஞ்சிறப்பு வாய்ந்த குறுநில மன்னர்கள், எப்பொழுதும் பேராற்றல் வாய்ந்தவர்களாக இருந்ததோடு, பயிற்சிமிக்க படையினை உடையவர்களாகவும் இருந்தனர்; திறமைமிகு நிருவாகிகளாகவும் விளங்கினர். 'ஒவ்வொரு தலைவனும் சில உரிமைகள், சலுகைகள், முன்னுரிமை மரியாதை போன்றவற்றைப் பேரரசரிடம் உரிமையுடன் கேட்டுப் பெற்றான். பேரரசரின் வரம்பற்ற மேலாதிக்கம் ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்த காலம்வரை அவர்கள் அவ்வுரிமைகளை இன்பமுற அனுபவிக்கலாயினர்.[59] கலகம் செய்யும் சிற்றரசர் மேலாதிக்கம் செலுத்தும் அரசனுடைய காப்பிற்கு ஊறு விளைவிப்பவர்களாக இருந்தனர். ஆதிபத்தியக் கோட்பாட்டைக் கடைப்பிடித்த வேந்தர்களுக்கு எதிராக நன்னன், அதியமான், மலையமான் போன்ற குறுநில மன்னர் போர்முரசு கொட்டியபொழுது, அவர்களை அடக்கியொடுக்கித் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்ட அவ் வேந்தர்கள் முயன்றனர். ஆயினும், கொண்கானத்து நன்னன்,[60] தகடூரின் அதியமான்,[61] கோவலூரின் மலையமான்,[62] தொண்டைமான் இளந்திரையன்[63] முதலியோர் சிறப்புமிக்க ஆட்சித் தலைவர்களாகவும் ஆற்றல்மிகு படைத்தலைவர்களாகவும் விளங்கினர் என்பதை அக்காலத்திய சான்றோர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

---

59 Mahalingam, T.V., *South Indian Polity*, p 18

60 பதிற். 40 : 14

61 நற். 381 : 7; பதிற். பதி. 8 : 4

62 ஷ 170 : 7

63 பெரும்பாண். 37

சங்ககால ஆட்சிமுறை, தோற்கடிக்கப்பட்ட சிற்றரசர்களைத் தொடர்ந்து அரசோச்ச அனுமதிக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. இதற்குக் காரணம் பேரரசர்களின் ஆள்குழு நலங்களில் உள்ளார்ந்த பற்று வைத்திருந்தமையேயாகும். இதன் விளைவாக, வட்டார உள்ளாட்சி உரிமைப் பண்பு பெருகலாயிற்று. ஆனால், இம் முறை அரசியல் அமைப்பில் நிலையற்ற தன்மை என்னும் இயற்கைச் சூழலை நிலையான கூறாக ஆக்கியது. பேரரசனின் மேலாதிக்கத்தை மூரித்தெறிய வேண்டும் என்ற விழைவார்ந்த எண்ணமும், திட்டமும் உடையவர்களாகத் தக்க வாய்ப்பினை எதிர்பார்த்துக் குறுநில மன்னர் காத்திருந்தனர். இதனைக் கரிகாலன், செங்குட்டுவன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆகியோரின் மறைவிற்குப் பிறகு தமிழக வரலாற்றில் உண்டான குழப்பங்களும் கலகங்களும் உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய கட்டுப்பாட்டை மீறிக் கலகம் செய்யும் குறுநில மன்னர் இருந்து வந்தமையால், வேந்தர்கள் தங்கள் சிற்றரசர்களின் நோக்கங்களையும், செயல்களையும் மிகுந்த விழிப்போடு கண்காணித்து வரவேண்டியதாயிற்று. 'இந்நிலையில் தங்கள் குறுநில மன்னரிடம் உள்ள படைகளைக் கலைத்துவிடுமாறு வேந்தர்கள் செய்திருக்கக் கூடாதா?' என்னும் ஐயம் நமக்கு எழலாம். தங்களுக்குத் தேவை உண்டாகின்றபொழுது வேந்தர்கள், தத்தம் குறுநில மன்னர்களின் படையுதவியை நாடவேண்டிய நிலையில் இருந்தனர் என்பதை நாம் நினைவுகூர்தல் வேண்டும். நிலமானியப் படைமுறை அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளில் ஈதொன்று என்பதை நாம் முன்னரே கண்டோம்.

இவ்வாய்விலிருந்து சங்ககாலத் தமிழகத்தில் நெகிழ்ச்சி வாய்ந்த ஒருவகை நிலமானியப் படைமுறை அமைப்பு இருந்தமை, எளிதில் புலனாகும். இதனை அரைகுறையான 'நிலமானியப் படைமுறை அமைப்பு' எனலாம். அவ்வமைப்பு முறையில் பேரரசனுக்கும் குறுநில மன்னனுக்கும் இடையே எழுதப்பட்ட உடன்படிக்கை யாதும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், இருதரத்தாரும் தங்கள் பற்றுறுதியாலும் நல்லெண்ணத்தாலும் கட்டுண்டிருந்தனர். ஒருவர் பாதுகாப்பு அளிப்பதையும், மற்றவர் ஊழியம் செய்வதையும் தத்தம் கடமையாகக் கொண்டிருந்தனர். படையுதவிக்காக வேந்தனின் நிலத்தை அனுபவிக்கும் உரிமை குறுநில மன்னருக்கு வழங்கப்பட்டது. ஆனால், நிலக்கொடை வழங்கிய வேந்தரிடமே நிலவுடைமையின் மூலாதாரவுரிமை நிலைபெற்று இருந்தது.

குறுநில மன்னர் வகை

சங்க இலக்கியப் பாடல்களிலிருந்து ஏராளமான குறுநில மன்னர் அக் காலத் தமிழகத்தில் வாழ்ந்ததை நாம் அறிகிறோம். மூவேந்தர்களுள் யாராயினும் ஒருவரின் உட்குடியாகவே குறுநில மன்னர் இருந்தனர். ஒருசிலர் மட்டும் சிறிய தனியரசின் உரிமை மிகு தலைவர்களாகப் பெருமையுடன் வாழ்ந்தனர். அவர் களுடைய அரசியல் வாழ்க்கை பெரிதும் அரண்களுடைய கோட்டையை மையமாகக் கொண்டிருந்தது.

சங்க இலக்கியத்தை ஒருமுறை பரந்த கண்ணோட்டத்தில் காண்போமானால், மிகப் பலவாகக் குறுநில அரசுகள் இருந்தமை எளிதில் புலனாகும். அவற்றின் எண்ணிக்கையும் காலத்திற்குக் காலம் வரலாற்றின் தேவைகளுக்கு ஏற்ப வேறுபட்டு விளங்கின. கரிகாலன் I காலத்தில் பதினொரு குறுநில மன்னர்கள் இருந் தனர்[64] என்பது தெரியவருகிறது. எண்ணற்ற குறுநில மன்னர் களுள், அவர்களே பேராற்றல் வாய்ந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். கரிகாலனுக்கு முற்பட்ட காலத்தில் ஏழு குறுநில மன்னர்கள் பேராற்றல் வாய்ந்தவர்களாக இருந்தனர் எனக் கருத இடம் உண்டு.[65] ஆனால், கரிகாலன் காலத்திற்குப் பிறகு, அவர்கள் எண்ணிக்கையில் மிகுதிப்பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் *'ஈரேழ் வேளிர்'* (14) எனக் குறிப்பிடப்படுகின் றனர்.[66] ஒருகால், சிறு குறுநில மன்னரும் இவ்வெண்ணிக்கை யில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத் தில், *ஐந்து குறுநில மன்னர்* இருந்ததை அவர்களுடைய பெயரோடு நக்கீரர் குறிப்பிட்டுள்ளார்.[67] அக் காலத்திய சிற்றரசர்களுள் இவ்வைவரும் சிறப்புமிக்கவராக இருந்திருக் கலாம். இப் பாண்டிய வேந்தன் இருபெரு வேந்தரையும் ஐந்து சிற்றரசர்களையும் படுதோல்வி அடையுமாறு செய்தான். இதி லிருந்து, இரு வேந்தரை வென்றதனால் அவர்கள் நாட்டில் தன் னுடைய மேலாதிக்கத்தைப் பாண்டிய வேந்தன் நிலைநாட்டி னான்; மற்றும் ஐந்து குறுநில மன்னரின் இராச்சியங்களிலும் இவ் வேந்தனுடைய மேலாண்மை கொடிகட்டிப் பறக்கலாயிற்று. மொத்தத்தில் அவன் ஏழு அரசரை அடிபணியச் செய்தான்.[68]

---

64 அகம். 246 : 12
65 ஷை 44 : 7–11
66 ஷை 135 : 12
67 ஷை 36 : 15-20
68 ஷை 36 : 20

இதே முறையில், தமிழ்நாட்டின் பிற அரசரை எல்லாம் வென்று தங்கள் மேலாதிக்கத்தைச் சேர அரசர்கள் நிலைநாட்டினர். அதன் விளைவாகத் தோற்கடித்த ஏழு மன்னரின் முடிகளைத் தங்கள் மாலையில் கோத்து அணியும் வழக்கத்தை அவர்கள் மேற்கொண்டனர். 'எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து' எனும் தொடர்மொழி இவ்வுண்மையைப் புலப்படுத்துகிறது.[69]

சங்க இலக்கியத்தை இக் கண்ணோட்டத்தில் கூர்ந்து ஆய்ந்ததில் சங்ககாலத் தமிழகத்தில் மூவேந்தரோடு 112 குறுநில மன்னர்களும், 18 பழங்குடி மக்களினமும் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்தமை அறியப்படுகிறது. இப் பதினெண் பழங்குடி மக்களினத்தைப் பல்வேறு சான்றுகளைக் கொண்டு இரு குழுவின ராக வகைப்படுத்திவிடலாம். அவை முறையே குறுநில மன்னரின் குடிகளும், வட்டாரக் குறுநிலத் தலைவர்களின் குடிகளுமாகும். இக் குடிகளைச் சேர்ந்தவரை 'இனக்குழுத் தலைவர்' எனலாம்.

இனக்குழுத் தலைவர்களும் வட்டாரச் சிற்றரசர்களும்

சங்ககாலக் குறுநில மன்னரை வகைப்படுத்துகின்றபொழுது முதல் குழுவில் பழங்குடி இனத்தலைவர்களும் வட்டாரச் சிற்றரசர் களும் இடம் பெறுகின்றனர். இக் குறுநிலத் தலைவர்களைத் தனித்தனியே, அவர்களுடைய இயற்பெயரால் குறிப்பிட இயல வில்லை. பழங்குடி இனத்தலைவர்களை இரு வகையாகப் பாகு படுத்தலாம். முதல்வகையில் பழங்குடிகளுக்குரிய குடும்பப் பெயரினால் சுட்டப்பெறும் பழங்குடி இனத்தலைவர்கள் அடங்கு வர். எயினர், ஓவியர், கள்வர், குறவர், கோசர், திரையர், தொண்டையர், பரதவர், மழவர், வடுகர், வாணர், பாணர், வேளிர் என்பன பழங்குடி மக்கள் சமுதாயத்திற்கு வழங்கிய பெயர்களாகும். அதியர், ஆவியர், ஓவியர் என்பன சில முக்கியச் சிற்றரசரின் குடிப்பெயராகும்.

அடுத்த பிரிவில், வாழுகின்ற இடத்திற்குரிய வட்டாரத்தின் பெயரால் சுட்டப்பட்ட சிற்றரசர்களை அடக்கிக் காட்டலாம். அவர்கள் அருவாளர், கொங்கர், பூழியர், எருமையூரர் என்பவ ராவர்.

---

69 பதிற். 14 : 11, 16 : 17, 40 : 13; சிலப். 28 : 169

இங்கு நாம் ஒரு கருத்தை எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும். இரண்டு மூன்று வகையான பாகுபாட்டில் சில குறுநில மன்னர் இடம்பெறுவர். அவர்கள் வெறும் சிற்றரசர்களாக விளங்கவில்லை; கிழான், கோமான், வள்ளல், படைத்தலைவர் எனப் பலவகையாக அறியப்பட்டவராவர். அவர்கள் ஓரிரு இடங்களில் குறிக்கப்பட்டாலும், அவர்களுடைய சிறப்பினைத் தெளிவாக வெளிப்படுத்தும் பாகுபாட்டிலேயே அவர்களுடைய அரசியல் வரலாறு விரிந்துரைக்கப்படும்.

நிலப்பிரபுக்கள்

குறுநில மன்னரின் தோற்றத்தைப்பற்றி நாம் ஆராய்ந்த பொழுது 'கிழார்களே' நிலப்பிரபுக்களாக விளங்கியதைக் கண்டோம். அவர்கள் உழவுநிலங்களையே நம்பி வாழ்ந்தனர். குறிப்பிட்ட ஒரு சிற்றூரில் அல்லது பட்டணத்தில் வேளாண்மைச் சமூகங்களின் தலைவர்களாகப் பெரும்பாலும் அவர்கள் விளங்கினர். 'கிழான்' அல்லது 'கிழவன்' என்னும் பிற்சேர்க்கைப் பெயர், மருதநிலப் பகுதியின் தலைவர்களையே சுட்டுவதாகும்.[70] வேளிருக்குரிய பட்டமாக இது கருதப்பட்டது. கிழான் அல்லது கிழவன் என்பதற்கு, உரிமையுடையவன் என்பது பொருள். இந்த அடைப்பெயர்கள் பெரிதும் ஊர்ப் பெயர்களோடு சேர்த்து வழங்கப்பட்டன. இதனால், அந்த ஊர்களின் உரிமைகளுக்கு, அவர்களே உரிமை உடையவர்கள் என்பதும் தெளிவாகிறது.[71] இத்தகைய கிழார்கள் பதின்மூன்று பேர் சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கினர். அவர்களுள் ஒருவர், பெரும்பாலும் சோழ அரசனிடமிருந்து பிரமதேயத்தைப் பெற்ற பார்ப்பன நிலக்கிழார் என்பதைச் சங்க இலக்கியத்தால் நாம் அறிகிறோம். அவர்கள்:

1. அம்பர்கிழான் அருவந்தை,[72]
2. ஈர்ந்தூர்கிழான் கோயன்மான்,[73]
3. ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் I,[74]
4. கரும்பனூர் கிழான்,[75]
5. கொண்கானங் கிழான்.[76]

---

70 திவாகரம், பக். 41
71 துரையரங்கசாமி, மோ.அ., சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பக். 151
72 புறம். 385
73 புறம். 180
74 மே 242
75 மே 381, 384
76 மே 154

6. சிறுகுடிகிழான் பண்ணன் (பண்ணன் I),[77]
7. நாலைகிழான் நாகன்,[78]
8. நீடூர் கிழவோன்,[79]
9. பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் II,[80]
10. பொறையாற்று கிழான்,[81]
11. மல்லிகிழான் காரியாதி,[82]
12. வல்லார் கிழான் (பண்ணன் II),[83]
13. சோழ நாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன்.[84]

மேற்கண்ட பட்டியலிலிருந்து இந்த நிலக்கிழார்களின் பெயர்கள் பொதுவாகக் குறிப்பிடப்படுவதில்லை என்பது புலனாகின்றது. ஊரொடு சேர்த்து, கிழான் அல்லது கிழார் என்று அவர்கள் சுட்டப்பட்டனர். ஆனால், குறிப்பிட்ட ஒரு பிரிவினுடைய தந்தையும் நிலப்பிரபுவாக உயிருடன் இருந்தால்தான் தந்தையிலிருந்து மகனை வேறுபடுத்திக் காட்ட மகன் பெயர் சுட்டப் பெற்றதைக் காணுகின்றோம்.

சிறப்புமிக்க பார்ப்பனருக்கு ஓர் ஊரையே மானியமாகக் கொடுக்கும் பிரமதேயத் தானமுறை சங்ககாலத்தின் இறுதியில் வழக்கிற்கு வந்துவிட்டமை இதனால் புலனாகிறது. 'அறம் புகழ்ந்த வலைசூடி,..... நீர்நாண நெய் வழங்கியும், எண்நாணப் பல வேட்டும், மண்நாணப் புகழ்பரப்பியவன்'[85] பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன். அவனுடைய அற வாழ்க்கையும், வேள்விபுரியும் வேட்கையும் சோழ அரசனுடைய உள்ளத்தைக் கவர்ந்திருத்தல்வேண்டும். அதனால், அவனுக்குப் பிரமதேயம் வழங்கப்பட்டிருத்தல் கூடும்.

இளவரசரும் கோமான்களும்

குறுநில மன்னருள் சிலர் இளவரசர்களாக வேந்தர்குடியில் தோன்றியும், முடிசூட்டிக் கொள்ளும் உரிமை வாய்க்கப் பெறாதவர்களாக இருந்தனர். மற்றும் சிலர் அரச குடும்பத்தின் கிளை

77 புறம். 173, 388
78 ஷை. 179
79 அகம். 266 : 10
80 புறம். 395
81 ஷை. 391
82 ஷை. 177
83 ஷை. 181
84 ஷை. 166
85 ஷை. 166 : 14, 21-23

களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.[86] அவர்களும் குறுநில மன்னர்களாகவே விளங்கினர். அவர்கள் :

1. அழிசி.[87]
2. சேந்தன்,[88]
3. ஆட்டன் அத்தி,[89]
4. சேரமான் வஞ்சன்,[90]
5. திதியன்,[91]
6. நல்லடி,[92]
7. பாண்டியன் கீரன் சாத்தன்[93]
8. நம்பிநெடுஞ்செழியன்[94]

என்பவராவர்.

வேறு சில குறுநில மன்னர் கோ, கோன், கோமான் எனும் பட்டப் பெயருடையவர்களாக விளங்கினர். அவர்கள் :

1. ஏறைக்கோன்,[95]
2. கண்டீரக் கோப்பெருநள்ளி,[96]
3. இளங்கண்டீரக்கோ,[97]
4. விச்சிக்கோ,[98]
5. இளவிச்சிக்கோ,[99]
6. தாமான் தோன்றிக்கோ,[100]
7. செல்லிக் கோமான் ஆதன் எழினி,[101]
8. வேளாவிக் கோமான் பதுமன்.[102]

இவ்விளவரசரையும் கோமான்களையும் பிரான்சின் நில மானியப் படைமுறை அமைப்பின் தலைவர்களாக இருந்த 'நார்மண்டிக் கோமான்',[103] 'பர்கண்டிக்கோமான்'[104] ஆகிய வரோடு ஒப்பிடலாம்.

வேளிர்

குறுநில மன்னருள் மூன்றாவது முக்கியப் பாகுபாட்டினர் வேளிராவர். அவர்களுள் பலர் பண்டைத் தமிழகத்தின் புகழ் பெற்ற குறுநில மன்னராவர். 'வேளாண் மாந்தரை'ப்பற்றித் தொல்காப்பியர் சுட்டிச் செல்லுகிறார். நிலத்தை உழுது உணவுப் பொருள்களைப் பயிரிடுவதைத் தலையாய தொழிலாக அவர் குறிப் பிடுகிறார். அரசு அலுவல்களில், வேளாளரை அரசன் ஈடுபடுத்து

86 குறுந். 236 : 16
87 ஷை. 258 : 4
88 ஷை. 258 : 4
89 அகம். 222 : 7
90 புறம். 398 கொளு
91 அகம். 36 : 15
92 ஷை. 356 : 14
93 புறம். 178
94 ஷை. 239
95 ஷை. 157
96 ஷை. 148
97 ஷை. 151
98 ஷை. 200
99 ஷை. 151
100 ஷை. 399
101 அகம். 216: 12-14
102 பதிற். பதி. 8-2
103 Duke of Normandy
104 Duke of Burgandy

கின்றபொழுது படைக்கலன் ஏந்துவதற்கும் கண்ணி சூடுவதற்கும் அவர்கள் உரிமையளிக்கப் பெற்றிருந்தனர்.[105]

தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் 'வேந்துவிடு தொழில்' என்னும் தொல்காப்பியத் தொடருக்கு நல்லதொரு விளக்கம் தந்துள்ளார். 'வேந்துவிடு தொழில்' என்பது, 'வேந்தனாற் கொடுக்கப்படுந் தண்டத் தலைமையாகிய சிறப்புக் காரணத்தான்' என்பது அவர் கருத்து.[106] அவர்கள் குறுநில மன்னராகப் பெருவாழ்வு பெற்றனர். அவர்களுள் பலர் புகழ்மிக்க கொடைவள்ளல்களாக விளங்கினர்.

பதிற்றுப்பத்தில் காணப்பெறும் வேளிர்பற்றிய நான்கு குறிப்பு களும், வேந்தரொடு வேளிரைச் சேர்த்துச் சுட்டுவனவாக உள்ளன.

(எ - டு.) 'பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து'[107]

வேளிர் தமிழகத்தில் முடிசூடி ஆளும் உரிமையற்றவர்கள் என்றும், தமிழகம் அல்லாத பிறபகுதிகளில் அவர்கள் அரசராதற் குரியவர் என்னும் கருத்தை நச்சினார்க்கினியர் தெரிவித் துள்ளார்.[108] இதனால், தமிழகத்தை மூவேந்தரே ஆளும் உரிமையுடையவர் என்னும் நம்பிக்கை பண்டைத் தமிழ்மக்களிடம் வேரூன்றி இருந்தமை புலனாகிறது. மற்றும் வேந்தரும் வேளிரும் வெவ்வேறானவர் என்பதும் பெறப்படுகிறது. இதனை, 'ஆள் வதற்கு உரிமை உடையவை' என ஏற்றுக்கொள்ளப்பட்ட இனங்கள் இரண்டேயாகும். அவற்றுள் முதல் இனம் அரசுரிமை யுடைய நாடுகளையும், எல்லை வரையறுக்கப்பட்ட மண்டலங் களையும் ஆண்டுவந்தது. இரண்டாம் இனம் எல்லை வரை யறுக்கப்பட்டவையல்லாத இடங்களில் அரசாட்சி நடத்திவந்தது. இடைவிடாத போர்களில் ஒருவர் கையைவிட்டு மற்றொருவர் கைக்கு மாறிக்கொண்டே இருப்பனவாக அந்த இடங்கள் இருந் தன. அடிக்கடி போரிடுவது அல்லது போர் செய்யச் சித்தமா யிருப்பது இவருடைய தனிப் பண்பாய் அமைந்தது. இவர்கள் அர்த்தசாத்திரத்தில் வரும் எல்லைப்புற அதிகாரிகள் அல்லது பிற்கால வரலாற்றில் வரும் 'அடவிக' சாமந்தர்கள் (காடுகளில்

105 தொல். பொருள். 635 பேரா. உரை
106 ஷை 636 பேரா. உரை
107 பதிற். 30 : 30
108 'ஒளியராவர் மற்ற மண்டலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர்' பட்டினப். 274, நச்சி. உரை

உள்ள குடிகளுக்குத் தலைவர்கள்) போன்றவர்கள்[109] என்று டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் தெளிவுறுத்தியுள்ளமை வன்மை பெறுகிறது. எனவே, வேளிர் என்பார் பேரரசரின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு, தனியாட்சிபுரிந்த குறுநில மன்னரைப் போன்றவர் என்பது அறியக்கிடக்கிறது.

வேளிரும் சிந்துவெளி நாகரிக மக்களும்

கி. மு. 3000 அளவில் தென்மேற்கு இந்தியாவில் சிந்து ஆற்று வெளியில் மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் சிறந்து விளங்கியது. அந் நாகரிகம் அழிந்தொழியத் தலைப்பட்டபொழுது (கி. மு. 1500) அங்கிருந்து கடல்வழியாகவும், நிலவழியாகவும் தென்னாட்டிற்கு வந்து குடியேறிய மக்கள் கூட்டத்தின் தலைவரே வேளிர் குடியினர். அவர்கள் இரும்பு கலந்து பெருங்கல் நாகரிகப் பண்பாட்டினைத்[110] தென்னாட்டிற்குக் கொண்டுவந்து புகுத்தினர். அவர்கள் தென்னிந்தியாவிற்குள் நுழைந்த காலம் கி. மு. 700 அளவினதாகலாம் என்பது ஒருசில ஆராய்ச்சியாளரின் துணிபாகும்.[111]

தக்காணத்தில் அறுநூறு ஆண்டுகள் சிறப்புற்று விளங்கிய சாளுக்கியரை 'வேளிர்' என்று பிங்கல நிகண்டும், 'வேள்புல அரசர்' எனத் திவாகரமும், 'வேள்குலச் சளுக்கர்' என்று சோழர் கல்வெட்டுகளும் கூறுவதை அவர்கள் தம் கருத்திற்குச் சான்றாகக் காட்டுவர். மேலும் சாளுக்கியருக்குப்பின் மைசூரில் எழுந்த ஹொய்சளர் அரசு, 'புலிகடிமால்' என்னும் தமிழ் மரபுக் குரிய கதையைத் தனதாக்கிக் கொண்டதையும், அந்த ஹொய்சளருக்கு அமைந்த பள் (பெள்)ளாளர் (வள்ளாளர்) என்ற பெயரும் வேளிர் குடியின் பரவலான வரலாற்றுச் சிறப்பை உணர்த்துவதாகக் கூறுவர். தக்க அடிப்படைச் சான்றுகளைக்கொண்டு இக் கருத்து நிலைநாட்டப் பெறாமையால், இதை ஒரு சாராரின் எண்ணப்போக்கு எனவே கொள்ளலாம்.

வேளிர் குடியேறிய காலம்

மேற்கண்ட கருத்துரையில், வேளிர் கி.மு. 700 அளவில் தென்னாடு போந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய முடிவினைக் கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடலில் வரும்

---

109 Krishnaswami Aiyangar, S., *Ancient India and South Indian History and Culture*, p. 445

110 Megalithic culture

111 Subramaniam, N., *Sangam Polity*, p. 258

'நாற்பத் தொன்பது வழிமுறை வந்த வேளிர்'[112] என்னும் சொற் றொடரை அடிப்படையாகக் கொண்டு மு. இராகவையங்கார் கணக்கிட்டுள்ளார். 'வழிமுறை வந்த' என்னும் தொடர் 'வேள்' (இருங்கோ)' என்பதற்கு அடையாக நில்லாமல், 'வேளிர்' என் பதற்கே அடையாக நிற்கிறது. இங்கு நாற்பத்தொன்பது என்னும் தொகை, கழிந்த தலைமுறைகள் இவ்வளவு என்று அறுதியிட்டுக் கூறுவதற்காக வரவில்லை; அளவற்ற தலைமுறைகள் என் பதைக் குறிக்கவே வந்துள்ளது. நம்முடைய நினைவாற்றலை யும் கடந்து நின்ற பழங்காலத்திலிருந்து மூத்த குடியாயிற் தொடர்ந்து வந்தது வேளிர்குடி என்பதை வலியுறுத்துவதற் காகவே இவ்வாறு கூறப்பட்டது என நாம் கொள்ளவேண்டும். இக் கருத்தை உணர்த்தும் வகையிலேயே 'தொன்முதிர் வேளிர்'[113] எனவும், 'தொன்றுமுதிர் வேளிர்'[114] எனவும் சங்க காலப் புலவர் பெருமக்கள் வேளிரைப் பாராட்டியுள்ளனர்.

சாளுக்கியர்க்கும், வேளிர்க்கும், பிற தக்கண அரச குடும்பத் தினருக்கும் உறவு இருந்ததைப் பல்வகைப் பெயர்கள் உணர்த்து வதை முன்னரிக் கண்டோம். தமிழகத்து வேளிர்கள் தமிழ கத்திற்கு வெளியே வடக்கேயும், மேற்கேயும் சென்று பரவின ராதல் வேண்டும். டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் 'வேளிர்கள் வடக்கிலும், மேற்கிலும் பரவியமையால் அக்காலத்தில் தக்கணத்தில் வாழ்ந்துவந்த ஆரியக் குடியினரோடு இவர்கள் ஒருவகையான தொடர்புகொள்ளும்படி நேர்ந்தது'[115] என்று மொழிந்துள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கதாகும். இக் காரணங் களால் தமிழகத்திலிருந்த வேளிர்கள் பிறநாடுகளில் பரவிக் குடியேறிப் பிறகு தமிழகத்திற்குப் படையெடுப்பாளர்களால் மீண்டு வந்தனர் என்று கொள்ளுவதே சிறப்புடையதாகும். இதற்கு மாறாக வேளிர்கள் தமிழகத்திற்குப் புதியவராக வடக்கே இருந்து வந்தனர் எனக் கொள்ளுவது அத்துணைச் சிறப்புடைய தன்று.[116]

வேளிர் கிளைகள்

இவ் வேளிர் குடியைச் சேர்ந்த குறுநில மன்னர் அனைவரும் 'வேள்' என்னும் அடைமொழியோடு பெரிதும் சுட்டப்பட்டனர்.

---

112 புறம். 201 : 11-12

113 ஷெ 24 : 21

114 நற். 280 : 8

115 Krishnaswami Aiyangar, S., Op. cit., p. 11

116 துரை அரங்கசாமி, மொ. அ., 'சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்,' பக். 326

அவர்கள்,

(1) வேள் எவ்வி I,
(2) வேள் எவ்வி II,
(3) வேள் ஆய் I,
(4) வேள் ஆவி,
(5) வேள் பாரி,
(6) வேள் பேகன்,
(7) வாட்டாற்று வேள், எழினியாதன்,
(8) நெடுவேள் ஆதன்,

என்பவராவர்.[117]

சில வேளிர், வேண்மான் என்றுஞ் சுட்டப்பட்டனர். (9) வெளியன் வேண்மான், (10) நன்னன் வேண்மான், (11) வீரை வேண்மான் வெளியன் தித்தன் என்போர் இவ்வடைமொழி பெற்றோராவர்.[118] பெருமகன் எனும் சொல் பெருமான் எனத் திரிந்து வழங்குவதைப்போன்று, 'வேள்மகன்' எனும் சொல் 'வேண்மான்' எனத் திரிந்து வழங்கலாயிற்று. எனவே, 'வேள்,' 'வேண்மான்' எனும் அடைமொழிகள் ஒத்த சிறப்புடையனவாகும்.

சில குறுநில மன்னரின் பெயரை அடுத்து வேள் என்னும் அடை சேர்த்து வழங்கப்பட்டதும் உண்டு.

(எ - டு.) (12) இருங்கோவேள்,[119] (13) மானவிறல் வேள்.[120]

மேற்கண்ட வேளிர் சிறப்பாகத் தனித்தனியே குறிப்பிடப் படுபவராவர். இவர் அல்லாமல், பொதுவாகச் சிலர் பழந்தமிழ் இலக்கியத்தில் சுட்டப்படுகின்றனர். காமூரைச் சேர்ந்த கழுவுளை எதிர்த்து ஒருமுறை 14 வேளிர் போரிட்டதாகத் தெரிகிறது. இதனைப் பரணர் என்னும் புலவர் குறிப்பிடுகிறார்.[121] இதே புலவர் வெண்ணி வாயிலில் கரிகாலன் தன்னுடைய பகைவரை எதிர்த்துக் கடும்போர் புரிந்ததை விளக்கியுள்ளார். அப் போரில் இருபெரும் வேந்தர்களோடு, பதினொரு வேளிர் சேர்ந்துகொண்டு கரிகாலனை எதிர்த்தனராம்.[122] எனினும் கரிகாலன் அவர்களைப் படுதோல்வி அடையுமாறு செய்தான். இப் பாடல்களில் காணப்படும் 14, 11 என்னும் எண்ணுத்தொகை வேளிரின் பெயரையோ, அவர்களுடைய அரசுகளையோ அறிவதற்கு உதவி புரிவனவாக இல்லை.

---

117 புறம். 24 : 18, 233 கொளு, 133 : 7; அகம். 61 : 15; புறம். 105 : 8, 15 : 12, 396 : 13, 338 : 4
118 அகம். 208 : 5, 97 : 12; நற். 58 ; 5
119 புறம். 201
120 மதுரைக். 344
121 அகம். 135 : 12-13
122 ஷை 246 : 12

நன்னனுடைய இராச்சியத்தில் பாழி என்னும் ஊரில், வேளிர் பெறற்கரிய தங்கள் அருக்கலன்களைப் புதைத்து வைத்தனராம். அதை வேறு யாரும் கண்டுபிடிக்க இயலவில்லை என்னும் செய்தி சிறப்புடையதாகும்.[123] கீழைக் கடற்கரைக்கு அருகில் குன்றூர்[124] என்னும் ஓர் ஊர் இருந்தது. அது வேளிர்களின் பல் வேறு வாழ்விடங்களில் ஒன்றாக விளங்கியது.

தென்தமிழ் நாட்டுப் பொதியமலைப் பகுதியை ஆண்ட ஆய்மரபின் அண்டிரனை 'மாவேள் அய்' என்று முடமோசியார் விளிக்கின்றார்.[125] இதனால் ஆய் மரபு வேளிர்குலக் கிளை என்பது புலனாகின்றது. அண்டிரனுக்குப் பின் பொதியிலை ஆண்ட திதியனை ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் போற்றிப் பாடியுள்ளான்.[126] பரணரும் மாமூலனாரும் அவனைப் புகழ்ந்து பாடியுள்ளனர். அவனும் ஆய்குடித் தோன்றலாக இருக்க லாம்.[127] ஆனால், அவனை 'ஆய்' என்னும் குடிப்பெயரால் புலவர்கள் சுட்டவில்லை.

பொதினி(பழனி)மலைப் பகுதியை ஆண்ட நெடுவேள் ஆவி மாமூலனாரால் குறிப்பிடப்படுகிறான்.[128] பதிற்றுப்பத்தின் நான்கு, எட்டாம் பத்துகளின் பதிகங்கள் வேள்ஆவிக் கோமான் பதுமனைக் குறிப்பிடுகின்றன. நெடுவேள் ஆவி என்று குறிப்பிடப் பெறுபவனும் (இவன் இயற்பெயர் தெரியவில்லை), பதுமனும், பேகனும் வேளிர் குடியின் ஆவியர் கிளையினர் என்பது தெரிகிறது.

நீடுரைத் தலைநகராகக் கொண்டு காவிரி பாயும் மிழலைக் கூற்றத்தை ஆண்ட மாவேள் எவ்வி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் தோற்கடிக்கப்பட்டான்.[129] எவ்வி என்பது இயற்பெயராகும். இவனை இரண்டாம் எவ்வி எனலாம். அவன் முன்னோன் ஆன ஓர் எவ்வி, கூடல் நகரை ஆண்ட அகுதையுடன் போரிட்டு மாண்டான் என்பதையும் அறிகிறோம்.[130] எவ்வியின் குடி தொன்மையானது என்றும், அக் குடியில் பிறந்தவனே பாரி என்றும் கபிலர் எடுத்துரைப்பார்.[131] இதனால் எவ்வி குடியும் வேளிர் கிளை என்பதும், வள்ளல் பாரி அக் கிளையினுள் ஒருவன் என்பதும் விளங்குகிறது.

---

123 அகம். 258 : 1–3
124 நற். 280 : 8; குறுந். 164 : 3
125 புறம். 135 : 13
126 அகம். 25 : 20
127 மே. 322 : 8, 331 : 12
128 மே. 1 : 2–3
129 புறம். 234
130 மே. 233 : 5–7, 234, 347 : 5–6
131 மே. 202 : 14

துவரை இன்றைய கருநாடகத்தில் உள்ளது; இன்று ஹளபீடு (பழைய வீடு) என வழங்கும் ஊராகும். ஹொய்சளர் காலத்தில் தலைநகரமாக விளங்கிய துவாரசமுத்திரம் இப் பழம்பெரும் நகரமே யாகும். துவரை நகரிலிருந்து ஆண்ட இருங்கோவேளை 'வேளிருள் வேளே' என்று கபிலர் விளித்துப் பாடியுள்ளதை முன்னர்க் கண்டோம்.[132] அவனுக்கு முன்னிருந்த ஓர் இருங்கோ வேளைக் கரிகாலன் வென்றான்.[133] தலையாலங்கானப் போரில் நெடுஞ்செழியனிடம் தோற்ற இருங்கோவேண்மான் கபிலரால் சுட்டப்பட்ட இருங்கோவேளின் மகனாகலாம். இவர்களும் வேளிர் குடியைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது.[134]

வியலூரில் ஆண்ட நன்னனை வேண்மான் என்பர்.[135] நன்னன் உதியனின்[136] பாழிநகரில் தொல்முதுவேளிர் பொன்னைச் சேமித்து வைத்துக் காத்தனர்.[137] நன்னன் ஆய் (நன்னன் I) என்று ஒருவனையும் பரணர் குறிப்பிடுகிறார்.[138] நன்னன் குடியில் தோன்றிய மன்னர் பலராவர். பழையன் தலைமையில் படை யெடுத்து வந்த சோழப் படையை அத்தி முதலியோருடன் சேர்ந்து எதிர்த்தவன் ஒரு நன்னனாவான். பழையன் வழிவந்தவனே, அவ னுடைய காவல்மரமான வாகை மரத்தை வெட்டி வீழ்த்தியவ னாவான். அவன் வாகைப் பெருந்துறையில் நார்முடிச் சேரலுடன் நடந்த போரில் உயிர் நீத்தான். அப் போரில் சேரன் நன்னனுடைய (நன்னன் II) காவல்மரத்தையும் வெட்டினான் என்று பதிற்றுப் பத்து கூறுகிறது. மாமரத்தைக் காவல்மரமாகக் கொண்ட நன்னன் (நன்னன் III) ஒருவனையும் பரணர் குறிப்பிடுகிறார். இவனே 'பெண்கொலை புரிந்த நன்னன்' என்ற பழிப்புக்கு ஆளானான்.[139] இந்த நன்னன் பகைவரைக் கொன்று, அவர்களுடைய உரிமை மகளிரைக் கவர்ந்து, அம் மகளிரின் கூந்தலை அறுத்துக் கயிறாகத் திரித்து, அப் பகைவரின் களிறுகளைப் பிணித்துக்கொணர்ந்தான் என்பார் பரணர்.[140] மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவ னான நன்னன் (நன்னன் IV) இதற்கு நேர்மாறான பண்புடைய வன். அவன் தொண்டை நாட்டின் ஒரு கோட்டமான பல்குன்றக்

---

132 புறம். 201 : 12

133 பட்டினப். 282

134 அகம். 36 : 19

135 ஷை 97 : 12

136 சேரர் குடிக்குரிய பெயர்களுள் ஒன்று 'உதியன்' என்பதாகும். ஆனால், இங்கு நன்னன் ஒருவனுடைய இயற்பெயராக வருகிறது. இதைப்போன்றே 'ஆய்' என்னும் குடிப்பெயரை இயற்பெயராகக் கொண்டவர் நன்னன் ஆயும், வெளியன் வேண்மான் ஆய் எயினன் என்பவனுமாவர்.

137 அகம். 258 : 1–3

138 ஷை 356 : 8

139 குறுந். 292 : 5

140 நற். 270 : 9–10

கோட்டத்தை ஆண்டவன்.[141] அவன் அன்பும் பண்பும் சிறந்த கொடை வள்ளலாக வாழ்ந்தான். இங்கு நாம் கண்ட நன்னன் என்பது வேளிர் குடியைச் சேர்ந்த ஓர் அரச குடும்பத்தின் பெயர் என்பது தெரிகிறது.

பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர், இளவிச்சிக்கோவை நன்னன் மரபினன் என்று குறிப்பிடுகிறார்.[142] எனவே, விச்சிக் கோவும் வேளிர் மரபினனேயாவான். பாரி மகளிரை மணந்து கொள்ளுமாறு விச்சிகோ ஒருவனைக் கபிலர் வேண்டினார்.[143] அவன் இந்த விச்சிக்கோவாக இருத்தல்கூடும். வேந்தரோடு போரிட்ட விற்படையில் சிறந்த விச்சியர் பெருமகன் ஒருவனைப் பரணர் குறிப்பிடுகிறார்.[144] இளஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரன், விச்சியை முறியடித்தான் என்று பதிற்றுப்பத்தின் ஒன்ப தாம் பத்துக்குரிய பதிகம் கூறுகிறது.

பாணர்க்கும் பாடினியர்க்கும் யானையைப் பரிசாக அளித்து மகிழ்ந்தவன் ஆய் எயினன். அவன் பாழி என்னும் இடத்தில் மிஞிலியோடு போர் புரிந்து உயிர்நீத்தான். அவனை 'வெளியன் வேண்மான்' என்று பரணர் போற்றுகிறார்.[145] வெளியன், வேண்மான் என்னும் அடைமொழிகள், 'வேளிர்குடித் தோன்றல்' எனும் பொருள் பயப்பனவாகும். இந்த வெளியன் வேண்மான் இறந்தபொழுது அவனுடைய மனைவியரான பல வேளிர் மகளிர் கதறியழுதனர்.[146] இதனால் ஆய் எயினன் குடியும் வேளிர் கிளையே என்பதை நாம் உய்த்துணரலாம். வேளிர் குடியுள் நன்னன் குடி என்பதைப் போன்று, வெளியன் குடி ஒன்றும் இருந் திருத்தல் வேண்டும். உதியஞ்சேரனின் மனைவி நல்லினியை 'வெளியன் வேண்மாள்' என்று பதிற்றுப்பத்து இரண்டாம் பதிகம் கூறுகிறது. மற்றும் வீரை வேண்மான் வெளியன் தித்தன்[147] என்பவனை நற்றிணைப் பாடல் ஒன்றால் அறிகிறோம். வீரை

---

141 மலைபடு. கொளு

142 புறம். 151 : 8

143 கூ 200 : 8 15

144 குறுந். 328 : 5

145 அகம். 208 : 5-6

146 கூ 208 : 5-15

147 நற். 58 : 5, இவன் வேறு, உறையூரை ஆண்ட தித்தன் வேறு எனத் தோன்றுகிறது. இவ்விருவரையும் ஒருவராக ரா. இராகவையங்கார் கொண் டுள்ளமை ('தித்தன்' பக். 1-4) குழப்பத்தை உண்டாக்குகிறது. உறையூர் அரசனைச் சுட்டும் பாடல்கள் அகம். 122, 152, 238, 262, புறம். 80, 152, 352, 395. இவ்வரசனைப் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியின் தந்தை என்று புறநானூற்றின் உரையாசிரியர் கொள்ளுவது தவறாக இருத்தல்கூடும். பாண்டியனுடைய கூடலை அகுதை கைப்பற்றியதைப் போன்று, சோழன் உறந்தையைத் தித்தன் கைப்பற்றியிருக்கலாம். இதனால் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி அயலூர் சென்று தலைமறைவாக வாழ நேரிட்டிருக்கலாம். உறையூர்த் தித்தனை வெளியன் மரபில் வந்த வேள் எனக் கொள்வதற்கு இல்லை. குறுந்தொகையில் 284ஆம் பாடலைப் பாடியுள்ள மிளைவேள் தித்தன் என்னும் புலவர் வேளிர்குடியைச் சேர்ந்தவராகலாம்.

வெளியன் தித்தனார்,[148] வீரை வெளியனார்[149] என்ற சங்ககாலச் சான்றோர்கள் இருந்தமையும் தெரிகிறது. இவற்றால் வெளியர் என்பது வேளிர்குடி ஒன்றின் பெயர் என்பது உறுதிப்படுகிறது. வெளியர் தலைவன் வெளிமான் (வெளியர்மகன்) ஆகப் போற்றப் பட்டிருக்கலாம்; ஆகவே, பெருஞ்சித்திரனாரால் பாடப்பட்ட வெளிமானை[150] வெளியர்குல வேண்மானாகக் கருதலாம்.

பதிற்றுப்பத்தில் ஒன்பதாவது பத்துக்குரிய பதிகம் மையூர் கிழானின் மகளை 'வேண்மாள்' (வேள் மகள் — வேளிர் குடிப் பெண்) அந்துவஞ்செள்ளை என்று சுட்டுகிறது. இதனால், மையூர் கிழானும் வேண்மான் என்பது பெறப்படுகிறது. சோழ நாட்டுப் பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தனையும் வேண்மான் எனக் குறிப்பிடுவார் நக்கீரர்.[151] கிழான் அல்லது கிழார் என்பது வேளிர்களின் பட்டப்பெயரே என்பதற்கு மேற்கண்ட சான்றுகளும், வேள் எவ்வி நீடூர் கிழவோன் என்று சுட்டப்பெறுவதும்[152] தக்க ஆதாரங்களாகும். எனவே, வேளிர்க்குக் 'கிழான்' அல்லது 'கிழார்' என்னும் பட்டப்பெயர் வழங்கியதில்லை எனச் சில வரலாற்றாசிரியர் கூறுவது உண்மைக்கு மாறான செய்தியாகும்.

சங்ககாலப் புலவர்களுள் அரிசில்கிழார் முதல் வடமோதங் கிழார் வரையில் முப்பதுக்கு மேற்பட்ட (35) புலவர்கள் யாதாவதோர் ஊரின் 'கிழான்' அல்லது 'கிழார் மகன்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளனர்.[153] பாடப்பட்டோர் வரிசையில் அம்பர்கிழான் முதல் வல்லார்கிழான் வரையில் பன்னிரண்டு பேர் யாதாவது ஓர் ஊரின் கிழார் அல்லது கிழார் மகன் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளனர்.

வேளிரும் வேந்தரும்

சங்ககாலத்தில் வேளிர்குடியில் தோன்றிய பெண்களை வேந்தர் மணந்தனர் என்பதை நாம் அறிகிறோம். உதியன் சேரலை மணந்து நெடுஞ்சேரலாதனைப் பெற்றெடுத்த நல்லினி, வெளியர் குல வேண்மாளாவாள்.[154] வேளாவிக் கோமான் பதுமனது மகளிருள் ஒருத்தி நெடுஞ்சேரலாதனையும்,[155] மற்றொருத்தி செல்வக் கடுங்கோ வாழியாதனையும்[156] மணந்துள்ளனர். இருவர் மக்களுமே முடியுடை வேந்தராக விளங்கினர். இளஞ்சேரல் இரும்பொறை என்ற சேரவேந்தன், குட்டுவன் இரும்பொறைக்கும்

148 அகம். 188
149 புறம். 320
150 ஷை 162
151 அகம். 395 : 20
152 ஷை 263 : 10
153 'சஞ்சீவி. ந., 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்', பக். 35
154 பதிற். பதி. 2 : 3
155 ஷை 4 : 1-3
156 ஷை 8 : 1-2

வேண்மாள் அந்துவஞ்செள்ளைக்கும் பிறந்தவன் என்று தெரிகிறது.[157] செங்குட்டுவனை மணந்தவள் வேண்மாள்[158] அந்துவஞ் செள்ளை என்பார் இளங்கோவடிகள். கருவூரில் வேண்மாடம் இருந்ததைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றின்[159] அடிக்குறிப்பு அறிவிக்கிறது. சேரர் தலைநகரில் வேளாவிக்கோ மாளிகை இருந்ததைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.[160]

சேர வேந்தரைப் போலவே, சோழரும் பாண்டியரும் வேளிர் குலப் பெண்களை மணந்தனர் என்பது நச்சினார்க்கினியரின் உரைப் பகுதிகளால் தெரியவருகிறது. அவர் நிலக்கிழார்களாகிய உழுவித்துண்ணும் வேளாளரைப்பற்றிக் குறிப்பிடும் இடத்தில் "அவருள் (வேளாளருள்) உழுவித்து உண்போர் மண்டில மாக்களும் (நாடு, வளநாடு எனும் மாவட்ட, மாநிலத் தலைவர்கள்), தண்டத் (படைத்) தலைவருமாய்ச் சோழ நாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் முதலிய பகுதியில் தோன்றி 'வேள்' எனவும், 'அரசு' எனவும் உரிமை எய்தினோரும் பாண்டிய நாட்டில் 'காவிதி'ப் பட்டம் எய்தினோரும் குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளர் ஆகுப .. உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும், அவன் மகனாகிய கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலும் கூறுவார்"[161] எனத் தாம் அறிந்த மரபுவழிச் செய்திகளைத் தொகுத்துரைப்பர்.

இதிலிருந்து வேந்தருக்குப் பெண்கொடுக்கும் உரிமை, வேளிர்க்கு இருந்தமை புலனாகின்றது. ஆனால், வேளிர் வேந்

157 ஷை 9 : 1-2

158 சிலப். 25 : 5; 28 : 51 சேரமாதேவியைச் செங்குட்டுவனின் வேள்விக்கிழத்தி என்று மாடலன் குறிப்பிடுகிறான். (சிலப். 28 : 183). அரசன் யாகம் செய்யும் போது உடனிருக்கும் உரிமை பட்டத்தரசிக்கே உண்டு. அவள் இளங்கோ வேண்மாள் (சிலப். 25 : 5) என்று சுட்டப்பெறுவதால், இளங்கோ எனும் வேளிர் குடிப்பெண் என்றே அவளைக் கருதலாம். கி. பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் கொடும்பாளூரில் இருந்து ஆட்சிபுரிந்த சிற்றரசர் இருங்கோவேள், இருக்குவேள், இளங்கோவேள் என்னும் பெயர்களை யுடையவராக விளங்கினர். இக் குடியைச் சேர்ந்த பலர் 'இருங்கோவேளார்' எனும் சிறப்புப் பெயருடன் பிற்காலச் சோழப் பேரரசின் அதிகாரிகளாகச் சிறப்புற்றனர். இவற்றின் விளக்கத்தை டாக்டர் மு. ஆரோக்கியசாமி அவர்களின் 'Early History of the Vellar Basin' என்னும் நூலில் காண்க. கொடும்பாளூர் வேளிரின் முன்னோன் ஒருவனுடைய மகளைச் செங்குட்டுவன் மணந்திருந்தான் எனக் கருதலாம். கொடும்பாளூர் வேளிர் இருங்கோவேளிர் எனவும் குறிப்பிடப்பெறுவர் என்பதால், இவர்களுக்கும் சங்ககாலத்தில் துவரையை ஆண்ட இளங்கோவேளுக்கும் தொடர்பு இருந்திருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது. துவரை இருங்கோ (இரு - பெரிய) வேளிரின் கிளையே இருக்குவேளிராகவும், இளங்கோவேளிராகவும் கொடும்பாளூரில் குடியேற்றியவராகலாம்.

159 புறம். 13.

160 சிலப். 28 : 198

161 தொல். பொருள். அகத். 30 நச்சி. உரை

தரின் மகளிரை மணக்கும் உரிமை பெற்றிருந்தனரா என்பது தெரியவில்லை. இதைப்பற்றிய குறிப்பு சங்க இலக்கியத்துள் யாண்டும் காணோம். இதனால், வேளிருக்கும் வேந்தருக்கும் குலமுறைத் தொடர்பு இல்லையெனத் தோன்றுகிறது. வேந்தர்க்கும் வேளிர்க்கும் இடையே திருமண உறவு நிலவியபோதிலும், பெரிதும் அவர்கள் வேந்தரின் ஆதிக்கத்தை எதிர்த்தே வந்தனர் என்பது வெண்ணியிலும் ஆலங்கானத்திலும் பிறவேந்தரோடு கூட்டணி அமைத்துக்கொண்டு, கரிகாலனையும் நெடுஞ்செழிய னையும் அவர்கள் எதிர்த்துப் போரிட்டமையால் அறியப்படு கிறது. வேளிர் தமிழ்ப் பெருங்குடி மக்களாக இருந்தும், தமிழகத்து முடியுடை வேந்தரை எப்பொழுதும் எதிர்த்து வந்தமைக்கு அவர் களுடைய தனியுரிமை வேட்கையும் அதிகாரப் பற்றுமே காரண மாகலாம்.

படைத்தலைவரும் படைவீரரும்

நிலமானியப் படைமுறை அமைப்பில் படைத்தலைவரும், படைமறவரும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். சங்ககாலத் தில் அரைகுறையான நிலமானியப் படைமுறை அமைப்பு நிலை பெற்றிருந்ததை நாம் முன்னரே கண்டோம். அக்காலத்தில், படைத் தலைவர் பலர் சிறப்புற்று விளங்கினர். அவர்களுள் ஆறுபேரைப் பற்றி விரிவாக அறியமுடிகிறது. தம்முடைய அரசரிடத்தில், தனி ஈடுபாடும் பற்றுறுதியும் கொண்டவர்களாக அவர்கள் விளங்கினர். வேந்தர் அணிந்த 'தண்ணடை'யாகிய நிலமானியத்தைப் பெற்று இவர்கள் பணிபுரிந்து வந்தனர்.

பெருஞ்சிறப்பு வாய்ந்த வீரர்களாகிய படைத்தலைவர்களுக்கு 'ஏனாதி' எனும் புகழ்மிக்க விருதினை வேந்தர்கள் கொடுத்துச் சிறப்பித்தனர். கலித்தொகையில் இப் பட்டமளிப்பு விழாவைபற்றிச் சிறந்ததொரு குறிப்புக் காணப்படுகிறது. இப் பட்டம் 'ஏனாதிப் பாடியம்' [162] எனப் போற்றப்படுகிறது. அரசன் போருக்குப் புறப் படுங்கால் சிறப்புமிக்க படைவீரருக்கு 'மாராயம்'எனும் பட்டமும் பரிசுகளும் கொடுத்துச் சிறப்பிப்பது மரபு.[163] 'மாராய' விருது கொடுத்துச் சிறப்பிக்கும் பழக்கம் இருந்தமைக்கு இடைக்காலத் திய கல்வெட்டுகளில் பல சான்றுகள் காணப்படுகின்றன. புறநானூற்றில் 167, 174, 394 ஆம் பாடல்களின் அடிக்குறிப்பு

162 கலி. 81 : 17 டாக்டர் உ. வே. சாமிநாதையர் பெருங்கதையில் வரும் (பக். 141) 'ஏனாதி' என்னும் சொல்லிற்குப் 'படைத்தலைவர்' என்று பொருள் கூறியுள்ளார். 'சேனாபதி' என்னும் வடசொல்லின் மருவிய வடிவமே 'ஏனாதி' என மொழியியல் அறிஞர் கூறுவர்.

163 தொல். பொருள். புறத். 65 : 6

களிலிருந்து மூன்று பேர் 'ஏனாதி' எனும் பட்டம் பெற்றிருந்தமை தெரியவருகிறது. ஏனாதி திருக்கிள்ளி, மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன், சோழிய ஏனாதி திருக்குட்டுவன் என்போர் அக்காலத்தில் ஏனாதிப்பட்டம் பெற்றவருள் நமக்கு அறிமுகமானவராவர். ஏனாதி திருக்கிள்ளி பெரும்பாலும் சோழ வேந்தனுடைய படைத்தலைவனாக இருந்திருக்கக் கூடும். மற்ற இருவருடைய 'சோழிய ஏனாதி' எனும் சிறப்புப் பெயர்களிலிருந்து, அவர்கள் சோழ வேந்தனின் படைத்தலைவர் என்பது புலனாகிறது. இப் பட்டம் பெறாத படைத்தலைவர் சிலர் பெருஞ்சிறப்பு வாய்ந்தவராக விளங்கியதும் உண்டு. வானவன் மறவன் பிட்டன்,[164] தென்னவன் வயமறவன் நாஞ்சில் வள்ளுவன்,[165] சோழன் மறவன் பழையன்[166] என்போர் இங்குக் குறிப்பிடத் தக்கவராவர். பொதுவாக 'மறவன்' எனும் சொல் அச்சந்தருகின்ற வீரமிக்க படைவீரரையே குறிக்கும். ஆனால், இங்குப் படைத் தலைவரையே[167] மறவன் எனும் சொல் சிறப்பிக்கிறது.

இப் படைத்தலைவரே அல்லாமல், போர்க்களத்தில் பெரு வெற்றி காரணமாக விளங்கிய 10 படைவீரர்கள் சிறப்புக் கருதி, சிற்றரசருக்குரிய தகுதி பெற்றிருந்ததாகத் தெரிகிறது. அவர்கள் :

1. அருமன்,[168]
2. அவியன்,[169]
3. அறுகை,[170]
4. எழினி (கண்ணன்),[171]
5. கழுவுள்,[172]
6. தந்துமாறன்,[173]
7. தழும்பன்,[174]
8. பழையன் மாறன்,[175]
9. விராஅன்,[176]
10. திதியன்.[177]

இவ் வீரர்களும் படைத்தலைவர்களும் போர்க்காலத்தில் இராணுவத் தலைவர்களாகப் பணிபுரிந்தனர்; அமைதி நிலவிய காலத்தில் குறுநிலத் தலைவர்களாகத் தங்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை ஆண்டுவந்தனர்.

சிறு சிற்றரசர்கள்

மூவேந்தருடைய நாடுகளின் எல்லைப் பகுதிகளில் மிகப்பல சிற்றரசுகள் இருந்தன. அவை ஒருசில ஊர்களையே தன்னகத்துக் கொண்டிருந்தன. அவற்றின் தலைவர்கள் அருகிலிருந்த

164 அகம். 143 : 10–13
165 புறம். 137–140
166 அகம். 326 : 9–12
167 Warrior
168 குறுந். 293 : 4; நற். 367 : 6
169 அகம். 271 : 12
170 பதிற். 44 : 10
171 புறம். 230 : 6, 392 : 2
172 அகம். 135 : 14, 365:12; பதிற். 71 : 17, 88 : 7
173 புறம். 360, 364
174 ஷை. 348 : 5; நற். 300 : 10; அகம். 227 : 17
175 பதிற். பதி. 9 : 7; அகம். 346 : 19
176 ஐங்குறு. 58 : 2
177 அகம். 45 : 9; 126:16; நற். 180 : 6

ஆற்றல்மிகு வேந்தரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு வாழ்ந்தனர். இத்தகைய தலைவர்களுள் பெரும்பாலோர், பழங்குடி மக்கள் சமூகத்தின் இனக்குழுத் தலைவராக விளங்கினர். அவர்கள் ஆண்ட பகுதிகள் பெரும்பாலும் வறண்ட பகுதிகளாகவே இருந்தன. சிலர் எல்லைப்புறக் கோட்டைகளில் காவற்படைத் தலைவர்களாகப் பேரரசரிடம் பணிபுரிந்ததையும் காணுகின்றோம். அவர்களுள்,

1. ஆதனுங்கன்,[178]
2. கடிய நெடுவேட்டுவன் (கோடைப் பொருநன் I),[179]
3. மாவண் திதியன் (திதியன் I),[180]
4. வெளிமான்,[181]
5. வேங்கைமார்பன்[182]

என்பவர்கள் சிறப்புமிக்கவராவர். இவ்வைவரையும் 'சிறு சிற்றரசர்' எனலாம்.

சிறுநிலத் தலைவர்

இப் பகுதியில் வீரதீரச் செயல்களாலும், வரையாது வழங்கும் வள்ளல் தன்மையாலும் பெயரும் புகழும் பெற்ற இருபது தலைவர்களைக் காணலாம். அவர்கள் :

1. அத்தி,[183]
2. அந்துவன் கீரன்,[184]
3. அந்துவன் சாத்தன்,[185]
4. ஆதன் அழிசி,[186]
5. ஆதன் அவினி,[187]
6. ஆய் எயினன் (ஆய் II),[188]
7. ஏறை,[189]
8. கட்டி,[190]
9. கடலன்,[191]
10. கணையன்,[192]
11. குறும்பியன்,[193]
12. நள்ளி,[194]
13. பாணன்,[195]
14. பிண்டன்,[196]
15. புன்றுறை,[197]
16. பெரியன்,[198]
17. முடியன்,[199]
18. மூவன்,[200]
19. வாணன்,[201]
20. வில்லியாதன்.[202]

178 பறம். 389 : 13
179 ஷை. 205 கொளு
180 ஷை. 80 : 6, 352 : 9, 395 : 18
181 ஷை. 162 கொளு
182 ஷை. 21 : 9
183 அகம். 44 : 7, 226 : 8
184 புறம். 349
185 ஷை. 71 : 13
186 ஷை. 71 : 13
187 ஐங்குறு. 1 : 1
188 அகம். 148 : 7, 181 : 2-5
189 புறம். 157
190 அகம். 44 : 8, 226 : 16; குறுந். 11 : 6
191 ஷை. 81 : 13
192 ஷை. 44 : 13, 386 : 8
193 ஷை. 262 : 9
194 ஷை. 152 : 15; புறம். 148 : 1
195 ஷை. 113 : 17, 325:17
196 ஷை. 152:9
197 ஷை. 44:9
198 ஷை. 100:12; நற். 131:7, 180:6
199 நற். 390 : 9
200 ஷை. 18 : 2; புறம். 290
201 அகம். 117:18, 204:12, 269:22; நற். 340:9; மதுரைக். 203
202 புறம். 379 : 7

மாபெரும் குறுநில மன்னர்

வரலாற்றுப் புகழ்மிக்க குறுநில மன்னர் இப் பகுதியில் இடம் பெறுவர். சங்ககாலத் தமிழகத்தின் அரசியல் அரங்கில், பேராற்றல் வாய்ந்த அரசியல் கத்திகளாக விளங்கியவர்களும், கொடை வள்ளல்களாக வான்புகழ் பெற்றவர்களும் மாபெரும் குறுநில மன்னராவர்.

1. நன்னன் I,
2. நன்னன் சேய் நன்னன் எனப்படும் நன்னன் IV,
3. தொண்டைமான் இளந்திரையன்,
4. பொகுட்டு எழினி (அதியன் III),
5. கோடைப்பொருநன் (III),
6. நல்லியக்கோடன்

என்போர் மாபெரும் குறுநில மன்னருள் முக்கியமானவராவர்.

மற்றும் சிறப்புமிக்க ஏழு வள்ளல்களான பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி என்பாரும் மாபெரும் குறுநில மன்னராவர். இவர்களோடு ஒப்பவைத்து எண்ணத்தக்க சிறப்பும் புகழும் வாய்ந்த குமணன் சங்ககாலத்தின் கடைப்பகுதியில் வாழ்ந்த மாபெரும் குறுநில மன்னனாவான்.[203] இவர்களுடைய வரலாறு 'கொங்கர்' இயலில் விரித்துரைக்கப்பட்டுள்ளதைக் கண்டோம்.

குறுநில மன்னரின் ஆட்சிக் காலத்திய தமிழ்மக்களின் வரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியம் பேருதவியாக உள்ளது. ஆனால், அரசியல் வரலாற்றை வரைவதற்குத் தேவையான பல செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், அக்காலத்திய சமுதாய வரலாற்றைத் தெளிவாக வரைவதற்குப் போதிய கருவூல மாகச் சங்க இலக்கியம் விளங்குகிறது. கிடைத்துள்ள 'வரலாற்று வரைபடங்கள்' அக்காலத்திய வீரவுணர்வை வெளிப்படுத்துகின்றன. பாவலரையும், பாணரையும், மற்றக் கலைஞரையும் குறுநில மன்னர் போற்றியாதரித்த முறை, நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. குறுநில மன்னரின் வீரதீரச் செயல்களுக்கும் வள்ளன்மைக்கும் புகழ்வேட்கையே முதன்மையான காரணம் என்பதும் புலனாகின்றது.

---

203 புறம். 158-161, 163-165

குறுநில மன்னர்களின் அரசுகள்

குறுநில மன்னர்களைத் தொகைவகைப்படுத்தியபொழுதே, அவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை ஆண்டுவந்தனர் என்பதை நாம் கண்டோம். பலதிறப்பட்ட குறுநில மன்னர்களின் அரசுகளை வரையறுத்து, அவற்றின் இடத்தைச் சுட்டுவது எளிய செயலன்று. முன்னர்க் குறிப்பிட்ட எல்லாச் சிற்றரசர்களுடைய இராச்சியங்களின் எல்லைகளை இங்கு வரையறுக்க இயலாது. முதன்மையானதும், முக்கியமானதும், அளவில் பெரியதுமான சிற்றரசுகள் சிலவற்றின் எல்லைகளை இங்குக் கோடிகாட்ட முயலுவோம்.

1. கொண்கான நாடு

சேரநாட்டின் வடமேற்கு எல்லையோரத்தை ஆண்ட சிற்றரசர் மரபு நன்னன் குடும்பமாகும். பொன்னிற்குப் பேர் போன 'புன்னாடு' எனப்படும் கொண்கானத்தை நன்னன் ஆண்டான்.[204] அதனை அக்காலத்தில் 'துளுநாடு' எனவும் வழங்கினர். அங்கு வண்ணமயில்கள் நிறைந்த சோலைகள் சிறப்புற்று விளங்கின.[205] பிற இலக்கியச் சான்றுகளிலிருந்து மேலைக் கடற்கரைப் பகுதிக்கும் மேற்கு மலைத்தொடருக்கும் இடையே குறுகிய நீண்ட நிலப்பரப்பு இருந்ததாகத் தெரிகிறது. இதனையே துளுநாடு என்பர்.

இத் துளுநாடு தமிழக வரலாற்றில் சிறப்புமிக்க நாடாகும். ஸ்டரக்கு எனும் அறிஞர், " 'துளு' என்னும் சொல், 'மென்மை, பணிவு, ஆற்றலின்மை' என்னும் பொருள்களை உடையது; துளுநாட்டு மக்கள் இயல்பாகவே 'சாதுவான' மக்களாக உள்ளனர். எனவே, இவ் வியல்பையே 'துளு' என்னும் சொல் உணர்த்துகிறது" என்பார்.[206] ஆனால், இதனை மறுக்கும் வகையில் 'துளு' எனும் சொல்லிற்குத் 'தாக்கு' என்பது பொருள் என்றும், தாக்குவதில் வல்ல மறவாழ்வு வாய்ந்த மக்கள் வாழ்ந்த பகுதியே துளுநாடு எனப் பெயர்பெற்றது என்றும் பேராசிரியர் சலேட்டர்[207] கருதுகிறார். இதனால், வீரர்கள் மலிந்த நாடு துளுநாடு என்பது தெரிகிறது. இக் கருத்தினை, அண்மைக் கால ஆராய்ச்சியாளர் மறுக்கின்றனர். 'துளு' எனும் சொல் 'தொகு'

---

204 நற். 391 : 6

205 அகம். 15 : 4-5

206 Sturrock, *South Canara Manual*, Vol. I, p. 2

207 Saletore, B.A., *Ancient Karnataka*, Vol. I, *History of Thuluva*, p. 4

அல்லது 'தொறு'[208] எனும் சொல்லோடு தொடர்புடையது. இச் சொற்கள் 'கால்நடை' அல்லது கால்நடைக் கொட்டகை (மாட்டுத் தொழுவம்) என்னும் பொருள் பயப்பவையாகும். ஆதி காலத் துளுவர்கள் இடையர்களாக—ஆடுமாடு மேய்ப்போராக—இருந்திருக்கவேண்டும். பின்னர் 'ஆடுமாடு மேய்ப்போர் நாடு' என்னும் பொருளில் 'துளுநாடு' என்னும் பெயர் வழக்கிற்கு வந்திருத்தல்கூடும் என்பது டாக்டர் குருராஜபட் என்னும் துளு நாட்டு வரலாற்றாசிரியரின் கருத்தாகும்.[209] இக்காலத்தில் தென் கானரா (கன்னட) மாவட்டமாக உள்ள பகுதியே அக்காலத்திய துளுநாடு. கடற்கரைப் பகுதியின் வடபுறம் துளுநாடு எனவும் கொண்கான நாட்டின் தென்மேற்குப் பகுதி 'புன்னாடு' எனவும் அக்காலத்தில் வழங்கலாயிற்று.[210]

கொண்கானம் எனும் சொல்லின் பொருளைப்பற்றிய ஆய்வு சுவை பயப்பதாகும். 'கொண்கானம் அல்லது கொங்கானம்' எனும் சொல்லின் அமைப்பு தமிழ்த் தன்மையுடையது என்பதைக் காட்டுகிறது. இதனைக் 'கொள்' எனவும் 'கானம்' எனவும் இரு சொற்களாகப் பகுக்கலாம். 'கொள்' என்னும் சொல்லிற்கு 'வன்முறையில் எடுத்தல், பிடுங்கிக்கொள்ளுதல்' என்பன போன்ற பொருள்கள் உள்ளன. அதாவது, 'ஒருவருக்கு உரியதல்லாத ஒன்றை உரிமையாகப் பெற்றிருத்தல்' என்பதாகும். இதனை ஒரே சொல்லாகச் சொல்லுவதானால் 'கொள்ளையடித்தல்'[211] எனலாம். 'கானம்' என்பது காட்டுப் பகுதியைச் சுட்டுவதாகும். இவ்விரு சொற்களுக்குமிடையே 'பெரும்' எனும் பெயரடையைச் சேர்த்து வழங்குவதும்[212] உண்டு. இப் பெயரடைக்குப் 'பெருமை, மாட்சி, சிறப்பு' என்பன பொருள்களாகும். 'கொண்பெருங்கானம்' என்னும் தொடரின் முழுப்பொருள், 'யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் இயன்ற அளவு எடுத்துக்கொள்ளுவதற்குரிய காட்டுப்பகுதி' என்பதாகும். இது ஒருவகையான புறம்போக்கு நிலப்பகுதி.[213] யார் வேண்டுமானாலும் சட்டப்படி இயன்றதைக் கைப்பற்றிக்கொள்ளலாம் என்பதே டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரின் கருத்தாகும்.[214] 'கொள் கானம்' என்னும் சொல் வினைத்தொகை;

208 தமிழ் லெக்சிகன், பக். 2078, 2104
209 Gururaja Bhatt, P., *Studies in Tuluva History and Culture*, p. 3
210 அகம். 396 : 2
211 Plunder
212 'கொண்பெருங் கானம் பாடலெனக் கெளிதே' (புறம். 154 : 13)
213 'No man's land
214 Krishnaswami Aiyangar. S., Op. cit., p. 871

மூவகைக் காலத்திற்கும் உரிய பொருளைப் பயப்பது. புதிய காட்டுப் பகுதியைத் தமிழ் அரசர் சிறிது சிறிதாகக் கைப்பற்றிய வரலாற்றை இத் தொடர்மொழி தெரிவிக்கிறது எனலாம். பொதுவாகத் 'தமிழ்நாட்டு மன்னர் (கைப்பற்றிக்) கொள்ளுவதற்குரிய காட்டுப் பகுதி' எனவும் கொள்ளலாம் அல்லது 'மக்கள் புழக்கத்திற்குரியதாக்கப்பட்ட காட்டு நிலப்பகுதி' எனவும் இத் தொடருக்கு விளக்கம் தரலாம். இப் பகுதியில் துளுநாடு அடங்கி இருந்தது. அதாவது, இன்றைய மங்களூர் வடக்கு, தெற்குக் கானரா (கன்னட) மாவட்டங்கள் அடங்கிய பகுதியாகக் கொண்கான நாடு விளங்கியதைக் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

புன்னாட்டின் முக்கிய நகரமாக விளங்கியது வெளியம் என்பதாகும். இப் பகுதிக்கு வெளியமே தலைநகரமாக விளங்கியது. அதனை வேளிர்குடியைச் சேர்ந்தவர் ஆண்டுவந்தனர். அவர்களுள் வெளியன் வேண்மான், ஆய் எயினன் ஆகிய இருவரும் சிறப்புமிக்கவராவர்.[215]

துளுநாட்டின் தெற்கே, ஒரு மலை இருந்தது. அதனை ஏழில் மலை[216] என்று சங்ககாலப் புலவர் சுட்டுவர். போர்ச்சுகீசியர் இம் மலையை 'எலிமலை'[217] என்று குறிப்பிட்டனர். இப் பெயரைப்பற்றிப் பலவகையான சுவைமிக்க விளக்கங்களை அறிஞர்கள் தந்துள்ளனர். இப்பொழுது, கேரளாவில் மலபார் மாவட்டத்தில் இம் மலை இருக்கிறது. கொண்கான நாடு பழங் காலத்தில் மூங்கிலுக்குப் பேர்போனது.[218]

கேரளாவின் தோற்றம்பற்றிய புராணக் கதையில், பரசுராமன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதை நாம் நன்கறிவோம். சங்க இலக்கியத்துள் பரசுராமனைப்பற்றி ஒரேயொரு குறிப்பு தான் காணப்படுகிறது. 'மழுவாள் நெடியோன்' என்பது, பரசுராமனுக்குத் தமிழர் அளித்த பெயராகும். துளுநாட்டில் உள்ள செல்லூரில் வேள்வித்தூபம் நாட்டி, வேள்வி நிறைவு விழாவை அவன் கொண்டாடியதாகப் பண்டைத் தமிழர் நம்பினர்.[219]

---

215 அகம். 208 : 5

216 'ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பு' (அகம். 152 : 3)

217 Mount D'ely

218 அகம். 392 : 26

219 ஷெ 220 : 13

இந் நாட்டில் பாரம், பாழி, கொடுகூர், வியலூர்[220] எனும் நான்கு நகரங்கள் சிறப்புற்று விளங்கின. வியலூரை, பெயிலூர் என இக்காலத்தில் வழங்குகின்றனர். துளுநாட்டின் சிறப்புமிக்க பண்டைத் துறைமுகப்பட்டினம் 'நறவு' என்பதாகும். தமிழில் 'நறவு' என்னும் சொல்லிற்குத் தேன் என்னும் பொருளும் உண்டு. மதுவிலிருந்து வேறுபட்டது இப் பட்டினம் என்பதைப் புலப்படுத்தும் வகையில் 'துவ்வா (உண்ணப்படாத) நறவு' எனச் சுட்டுவது பண்டை மரபாகும்.

யவனப் பயணக்குறிப்பு எழுத்தாளர்கள், 'தமிழிகெ' எனப் படும் தமிழகம் 'நறவு' எனப்படும் துறைமுகத்திலேயே தொடங்கி யதாகக் குறிப்பிட்டுள்ளனர். 'நறவு' என்னும் பட்டினத்தை 'நவ்றா' என்று அவர்கள் சுட்டியுள்ளனர்.[221] இதனால், மேலைக் கடற்கரைப் பகுதியில் துளுநாட்டின் நறவுத் துறைமுகப்பட்டினத் திலேயே பண்டைத் தமிழகம் தொடங்கியமை புலனாகின்றது. துளுமொழியில் 'நாறாவி' என இப் பெயர் வழங்கலாயிற்று. சேர நாட்டின் தொண்டித் துறைமுகம்தான் 'நறவு' என்பது சிலருடைய கருத்து. வேறு சிலர், துளுநாட்டிலுள்ள 'மங்களூரே', நறவு என்னும் பட்டினம் என்பர்.

சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கிய இனக்குழுக்களுள் "கோசர்' என்பார் வீரவரலாறு படைத்தவராவர். அவர்கள் போரில் வல்ல மறவராவர். அவர்கள் பெற்ற வெற்றிகள் பல. அவற்றுள் நன்னனை எதிர்த்துப் பெற்ற வெற்றி, அவர்களுடைய முதல் வெற்றியாகத் தோன்றுகிறது. இவ் வெற்றிக்குப் பிறகு, அவர்கள் துளுநாட்டில் நிலையாகத் தங்கி வாழலாயினர். அவர்கள் துளு நாட்டின் பழங்குடி மக்களே என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும். நன்னனைத் தோற்கடித்த பிறகு, அவர்கள் பேராற்றல் பெற்றுச் சிறந்தனர். பையப்பையக் கொங்கு நாட்டில் தங்கள் ஆதிக் கத்தை அவர்கள் பரப்பினர்.

2. எருமை நாடு

கொங்குப் பகுதியின் ஆதிப் பழங்குடி மக்கள் குறும்பராவர். அவர்கள் ஆடுமாடு மேய்த்து வாழ்ந்த இடையராவர். கொங்குப்

---

220 பாரம் : அகம். 152 : 12; நற். 265 : 5
பாழி : அகம். 142 : 9, 152 : 13, 375 : 13
கொடுகூர் : பதிற். பதி. 5 : 12
வியலூர் : அகம். 97 : 13

221 Kanakasabai, V., *The Tamils 1800 Years Ago*, pp. 17-18

பகுதியின் வடக்கே எருமையூர் இருந்ததாகக் கூறுவர். எருமைகளுக்குப் பேர்போன நாடாக இருந்தமையால், அந் நாடு 'எருமை நாடு' எனப்பட்டது. 'மகிஷம்' என்னும் சமஸ்கிருதச் சொல் எருமையைக் குறிக்கும். 'மகிஷமண்டலா' என்னும் வடமொழிப் பெயர் எருமை நாட்டையே சுட்டிற்று. இச் சமஸ்கிருதப் பெயரின் சிதைந்த வடிவமே இக்காலத்திய 'மைசூர்' எனும் பெயராகும்.[222]

சங்ககாலத்திய புலவர்களுள் எருமை வெளியனார், எருமை வெளியனார் மகனார் கடலனார் என்னும் இரு புலவர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவராவர்.[223]

3. கொங்கு நாடு

வரலாற்றுக் காலத் தொடக்கத்தில் கொங்குநாட்டில் குடியேறிய பழங்குடி மக்களுள் கொங்கர்[224] மூக்கியமானவராவர். வாழ்ந்த நாட்டின் பெயராலேயே அவர்கள் சுட்டப்பட்டனர். கிறித்தவ நூற்றாண்டின் தொடக்கத்தில் கொங்கர், குடகுப் பகுதியிலிருந்து இன்றைய கொங்குநாட்டிற்குக் குடியேறியவராவர்.[225]

இளங்கோவடிகள் 'குடகக் கொங்கர்'[226] என்றே தெளிவாக அவர்களைச் சுட்டியுள்ளார். இதனால், அவர்கள் குடகுப் பகுதியிலிருந்து வந்தனர் என்பது புலனாகின்றது.

4. தகடூர் நாடு

புகழ்மிக்க வீரக்குடி, மழவர் குடி. அக் குடியின் தோன்றலாக விளங்கியவன் அதியமான். தகடூர் அவனுடைய தலைநகரமாகும். தற்காலத்திய தருமபுரியே பண்டைத் தகடூராகும். தகடூர் அரசில் தருமபுரி வட்டம், அரூர் வட்டங்களும், ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்களின் தென்பகுதிகளும் அடங்கியிருந்ததாகத் தெரிகிறது. இன்றைய தருமபுரிக்கு அருகில் அதமன் கோட்டை என்னும் ஊர் ஒன்று உள்ளது. தகடூரை ஆண்ட சிறப்புமிகு அதியமானை, இவ் வூர்ப்பெயர் நினைவுபடுத்துகிறது. தகடூர் நாடு எருமை நாட்டிற்கு அருகில் இருந்தது.

5. கொல்லிமலை நாடு

சங்ககால வள்ளல்கள் எழுவருள், ஓரி என்பவன் கொல்லிமலைப் பகுதியை ஆண்டான். தற்காலத்திய சேலம், தருமபுரி

222 அகம். 36 : 17, 115 : 5, 253 : 19
223 மே 13, 72
224 மே 253 : 4
225 மே 79 : 5, 253 : 4, 368 : 16
226 சிலப். 30 : 159

மாவட்டங்களே கொல்லிமலைப் பகுதியாகும். அன்றைய கொல்லி மலைப் பகுதியில் பதினான்கு பட்டணங்கள் சிறப்புற்று விளங்கின. கொல்லிமலையில் கண்டாரை வருத்தும் கொல்லிப் பாவை என்னும் தெய்வம் குடிகொண்டிருந்ததாகச் சங்ககாலப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[227] ஓரியும் மழவர் குடியைச் சேர்ந்தவனாகக் கருதப்படுகிறான்.[228]

6. குதிரைமலை நாடு

வடகானரா (கன்னடா) மாவட்டத்திலிருந்து மைசூர் மாநிலத்தைப் பிரிக்கும் மலைத்தொடருக்குக் 'குதிரைமலை' என்பது பெயர். அது கொங்கானத்தின் கிழக்கே இருக்கிறது. அம் மலைத்தொடரின் சிகரம் ஒன்று குதிரைமுகம் போன்ற தோற்றமுடையதாக இருந்ததனால் அதனைக் 'குதிரை மூக்கு' எனக் குறிப்பிட்டனர். இக் காலத்தில் 'குதிரைமூக்கு அனல் மின்சாரத் திட்டம்' கருநாடக அரசின் சிறப்புமிகு ஆக்கப்பணி யாக விளங்குகிறது. பண்டைக் காலப் புலவர்கள் அதனை 'ஊராக் (சவாரி செய்யப்படாத) குதிரை' என்று நயமுறச் சுட்டுவர்.[229] முன்னர் இது உடுமலைப்பேட்டை வட்டத்தில் இருந்தது. இப்பொழுது கொங்கணியார் அவ்வூரைக் 'கொட்ட கனவூர்' என்னும் பெயரால் சுட்டுகின்றனர். இதன் பழைய பெயர் கொற்றன்குடி. இதைச் சேர்ந்த குறுநில மன்னருள் பிட்டன் கொற்றன் என்பான் பண்டைக்காலத்தில் மாபெரும் மறவனாகவும், வரையாது வழங்கும் வள்ளலாகவும் விளங்கி னான்.[230]

7. முதிரைமலை நாடு

உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள குதிரைமலைக்கு மிகவும் அருகிலுள்ள ஒரு மலைச்சிகரத்தின் பெயரே முதிரை மலை என்பதாகும். அம் மலையைச் சூழ்ந்த பகுதியை முதிரை மலை நாடு என்பர். பழனி வட்டத்தின் வடமேற்குப் பகுதியும் உடுமலைப்பேட்டை வட்டத்தின் தென்கிழக்குப் பகுதியும் அந் நாட்டில் அடங்கி இருந்தது. அந் நாட்டின் தலைநகரமும் முதிரம் என வழங்கப்பட்டது.[231] சங்ககாலத்தின் கடைப்பகுதியில், இந் நாடு பெரும்புகழ் பெறலாயிற்று. அதனை ஆண்ட குமணன் என்னும் சிறப்புமிக்க வள்ளலால், அதற்கு இத்தகைய சீரும் சிறப்பும் உண்டாயிற்று.

---

227 குறுந். 100 : 5-6
228 நற். 52 : 9
229 புறம். 168 : 14
230 மே. 168 : 20-23, 172 : 8-11
231 மே. 160 : 13

8. அரையம்

இக் காலத்திய கருநாடகத்தின் வடபகுதியில், பண்டைக் காலத்திய எருமை நாட்டின் முக்கிய நகரான துவரை (துவார சமுத்திரம்) இருந்தது. அங்குப் பதினெண்குடி வேளிர் ஆதி காலத்தில் தங்கி இருந்தனர் என்பதை நாம் முன்னரே கண்டோம். அப் பதினெண்குடி வேளிருள், இருங்கோவேள் குடி ஒன்றாகும். இருங்கோவேளின் கொடிய மூதாதை ஒருவன் காலத்தில் அரையம் என்னும் நகரம் சிறப்புற்று விளங்கியது.[232] அவ்வூரே இருங்கோவேளின் மூதாதையரின் வாழ்விடமாகும். அப் பேரூர், இரு பகுதிகளாக இருந்தது. பேரரையம், சிற்றரையம் என்று அப் பகுதிகள் சுட்டப்பட்டன. இருங்கோவேளின் மூதாதையருள் கொடியவன் ஒருவன் இருந்தான். அவன் கழாஅத்தலையார் என்னும் புலவரின் மனம் நோகுமாறு நடந்துகொண்டான். அதனால், அவர் மனம் நொந்து அவனைச் சபித்தார்.

அரையத்தைச் சோழநாட்டில் இருந்த ஊரென்று ஓர் அறிஞர் சுட்டியுள்ளார். ஆனால், எவ்வகையிலும் இக் கருத்துப் பொருந்தாது என்று ரா. இராகவையங்கார் அதனை மறுத்துவிட்டார். தமிழகத்து வடவெல்லையின் மையப்பகுதியில் அரையத்தை அவர் அடையாளம் காட்டியுள்ளார்.[233] ஆனால், கொங்குநாட்டின் 24 நாடுகளுள் ஒன்று என்றும், நாமக்கல்லின் மேற்கு எல்லைப் பகுதியும் ஈரோட்டு வட்டத்தின் வடக்குப் பகுதியும் சேர்ந்த நிலப் பகுதியே அரையம் என்பதாகும் என்றும் புலவர் குழந்தை அவர்கள் தக்க காரணங்காட்டி இப்பொழுது நிறுவியுள்ளார்.[234]

9. பூந்துறை நாடு

புன்றுறை என்னும் வேளிர்குடித் தலைவன் ஒருவன் இருந்தான்.[235] அவன் கொங்குநாட்டின் 24 நாடுகளுள் ஒன்றான பூந்துறை நாட்டை ஆண்டான். அதனை 'மேலைக்கரைப் பூந்துறை' என்பர். அப் பகுதியை ஆண்ட குறுநில மன்னனின் பெயராலேயே அந் நாடும் பெயர்பெற்றிருக்கக்கூடும். அக நானூற்றில் சுட்டப்படும் 'புன்றுறை' என்னும் பெயரே, மக்களிடையே 'பூந்துறை' என்று சிதைந்து வழங்கி இருக்கலாம்.[236]

---

232 புறம். 202 : 8

233 இராகவையங்கார், ரா., 'சோச்சர்', பக். 48

234 புலவர் குழந்தை, 'கொங்குநாடு', பக். 53

235 அகம். 44 : 9

236 துரைசாமி பிள்ளை, ஔவை சு., 'சேரமன்னர் வரலாறு', பக். 137

ஈரோட்டு வட்டத்தின் தென்பகுதியே 'பூந்துறை நாடு' என்பது ஆராய்ச்சியாளர் துணிபாகும்.

10. ஈர்ந்தூர்

ஈரோட்டின் மேற்குப் பகுதியில், பதினெட்டுக் கிலோமீட்டர் தொலைவில் 'ஈங்கூர்' என்னும் ஊர் உள்ளது. அவ்வூரே, சங்க கால ஈர்ந்தூர் எனக் கருதப்படுகிறது. அவ்வூரின் தலைவனே தோயன்மாறன். அவன் ஒரு நிலக்கிழார் மட்டும் அல்லன்; மாபெரும் வீரனுமாவான்.[237]

11. விச்சிமலை நாடு

கொங்கு நாட்டில், கொல்லிமலையின் வடகிழக்குப் பகுதியில் சில குன்றுகளின் தொகுதி உள்ளது. அதை இக்காலத்தில் 'பச்சைமலைப்பகுதி' என்பர். இம் மலைப்பகுதிக்குப் பண்டைக் காலத்தில் 'விச்சிமலை' என்பது பெயராகும். அப் பகுதியை ஒரு சிற்றரசர் குடி ஆட்சிபுரிந்துவந்தது. அவர்கள் விச்சிக்கோ எனப்பட்டனர்.[238] அதாவது, 'விச்சிமலையின் தலைவர்' என்பது இதற்குப் பொருளாகும். இக் குறுநில மன்னர் குடும்பத்தின் தலைமை இடமாகக் குறும்பூர் விளங்கியது.

12. தோன்றிமலை நாடு

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கரூர் வட்டத்தில் உள்ள மலைப்பகுதிதான் தோன்றிமலை என்பதாகும். சங்ககாலத்தில் அம் மலைப்பகுதிக்குத் தோன்றிமலை என்பது பெயராகும். அப் பகுதியை ஆண்ட சிற்றரசன் 'தாமான் தோன்றிக்கோ' என்பவனாவான்.[239]

13. மோகூர்

சேலம் மாவட்டத்தில், நாமக்கல்லில் இருந்து 14 கி.மீ. தொலைவில், காவிரியின் தெற்குக் கரையில் மோகனூர் என்னும் ஊர் இருக்கிறது. இந்த ஊரைச் சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கிய மோகூராக அறிஞர் கருதுகின்றனர்.[240] அவ்வூர், அக்காலம் முதல் இன்றுவரை நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் செழிப்புமிக்கதாக இருந்துவருகிறது. சேர வேந்தன் செங்குட்டுவனால் தோற்கடிக்கப்பட்ட பழையனுடைய தாயகம் இந்த மோகூராகும். அக்காலத்தில் மோகூர் நீரரண், நிலவரண் மிக்க வலிமைமிகு கோட்டையூராக இருந்தது.[241]

237 புறம். 180
238 மே. 200; குறுத். 328 : 5-8
239 மே. 399
240 புலவர் குழந்தை, மு. கு. நூ., பக். 159
241 பதிற். 44 : 14, 49 : 8

14. கட்டி நாடு

பவானி ஆற்றின் வடகரையில் வளமிக்க பட்டணங்கள் பல உள்ளன. அவற்றுள் சத்தியமங்கலம், தாரமங்கலம் என்பன சிறப்புமிக்கன. அவ்விரு நகரங்களையும் தலைநகரங்களாகக் கொண்டு கட்டியர் என்னும் குடியைச் சேர்ந்த குறுநில மன்னர், அண்மைக்காலம் வரையில் ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்கள் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பு கிழக்கே காவிரியாற்றையும், மேற்கே மேற்குமலைத் தொடரையும் எல்லைகளாகக் கொண்டிருந்தன.[242] சங்ககாலத்தில் அவர்களுடைய இராச்சியம் கருநாடகத்தின் தென்பகுதி வரையிலும் பரவியிருந்தது. வேற்று மொழி பேசிய வடுகர் நாட்டின் எல்லையைத் தொடும் நிலையில் கட்டியர் ஆட்சி பரவியிருந்தது.[243]

15. வைகாவூர் நாடு

பழனியும் பழனிமலையைச் சார்ந்த பகுதியும் அக்காலத்தில் வைகாவூர் அல்லது வையாபுரி நாடு என்று வழங்கியது. கொங்கு நாட்டின் 24 நாடுகளுள் ஒன்று வைகாவூர் நாடாகும். அந்நாட்டின் தலைநகரத்திற்குப் பழைய பெயர் பொதினி.[244] அப்பெயர் திரிந்து இன்று பழனி என வழங்குகிறது. இப் பகுதியை ஆண்ட குறுநில மன்னரின் குடிக்கு, 'ஆவியர் குடி' என்பது பெயராகும். ஆவியர் குடியின் கிளைக் குடியினரே, 'வையாவியர்' எனக் கருத இடமுண்டு. அக் குடியிலிருந்து தோன்றிய தனிப் பெருந்தலைவனே வையாவிக்கோப் பெரும்பேகன் என்பவனாவான். அவன் பெருவீரனாக விளங்கியதோடு, சிறப்புமிகு கலையுலகக் காவலனாகவும் விளங்கினான்.[245]

16. கோடைமலை நாடு

கொங்குநாட்டின் தென்பகுதியிலும், பாண்டிய நாட்டின் வடமேற்குப் பகுதியிலும் சிறப்புற்று விளங்குவது பழனிமலைப் பகுதியாகும். அப் பழனிமலைத் தொடரின் தென்கோடியில் உள்ள மலைப்பகுதிக்குச் சங்ககாலத்தில் 'கோடைமலை' என்பது பெயர். இக் காலத்தில் அதனைக் 'கொடைக்கானல்' என்பர். அங்குக் கடியம் என்னும் பட்டணம் ஒன்று இருந்தது. அதைத் தலைநகராகக் கொண்டு இம் மலைப்பகுதியைக் 'கோடைப் பொருநன் நெடுவேட்டுவன்' என்பான் சங்ககாலத்தில் ஆட்சி

---

242 புலவர் குழந்தை, மு. கு. நூ., பக். 162
243 குறுந். 11 : 6-7
244 அகம். 1 : 4, 61 : 16
245 துரை அரங்கசாமி, மொ. அ., 'சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்', பக். 282-283

புரிந்தான். அவனுக்குப் பிறகு 'பண்ணி' என்னும் கோடைப் பொருநன் ஆட்சிக்கு வந்ததை அறிகிறோம்.[246]

17. வேணாடு

பொதுவாக வேளிருடைய நாடு, வேணாடு எனப்படும். இதனைக் கே. வி. சுப்பிரமணிய ஐயர் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் இலக்கண நூலாரின் கருத்துப்படி கொடுந்தமிழ் பேசப்பட்ட பன்னிரண்டு நாடுகளுள் ஒன்றே வேணாடு; கேரளாவின் ஒரு பகுதியாக வேணாட்டைக் 'கேரளோற்பத்தி' என்னும் நூல் குறிப்பிடுகிறது. வேண் எனும் அடிச்சொல் அடியாக அமைவது, வேணாடு என்னும் சொல்லாகும். வேண் என்பதற்குக் 'காதல்' அல்லது 'விருப்பம்' என்பது பொருளாகும். எனவே, வேணாடு என்பது 'அன்பு நிறைந்த நாடு' அல்லது 'அழகுமிகு நாடு' என்றே பொருள்படும்.[247]

ஆனால் கோபிநாதராவ், இதனை மறுப்பார். 'வேள் நாடு என்பதே வேணாடு என்று ஆயிற்று. வேணாடு என்பதற்கு வேளின் நாடு என்பதே பொருளாகும். வேண் மன்னன் என்பவன் ஆண்டநாடு வேணாடு என்று கொள்ளுவதற்கு யாதோர் ஆதாரமும் இல்லை'[248] என்பார். திரு ஐயர் அவர்கள் கருத்துப்படி வேண் நாடு எனக் கொண்டாலும்கூட, 'வேண்' எனும் சொல்லிற்கு அழகு, அன்பு என்னும் பொருள் வழங்குவதில்லை; மூங்கில்[249] எனும் பொருள்தான் தரும். எனவே, மூங்கில்கள் செழித்து வளரும் நாடு எனக் கொள்ளுவதற்கு அவருடைய விளக்கம் இடம் தருகிறது.

இந்த வேணாடு, மேலைக் கடற்கரையில் கோட்டாற்றுக்கும் அதங்கோடு அல்லது தற்காலத் திருவாங்கூருக்கும் இடையே பரவி இருந்த நிலப் பரப்பாகும். ஆய் மன்னர்களின் தாயகமாக இப் பகுதி விளங்கியது. 'ஐயோயி' (ஆய்) யரின் நாட்டைப் பற்றித் தாலமி குறிப்பிட்டுள்ளார். அப் பகுதியில் வாணிகத் தலங்கள் சிலவற்றை அவர் சுட்டுகிறார். 'நெல்சிந்தா', 'இளங்கோன்' எனும் இரண்டும் வணிகச் சந்தை நகரங்களாகும். கொட்டனாரா என்பது பெரும் பட்டினமாகும். தொழிரிது,

---

246 புறம். 205 : 6, அகம். 13:10-11

247 Subramania Aiyer, K. V., *Historical Sketches of Ancient Dekkan*, Vol. III, p. 132

248 Trans. Arch. Series, Vol. I, p. 188

249 பிங்கல நிகண்டு, 4105.

பொம்மலா என்பன முறையே நிலமுனையும் பட்டினமுமாகும். நெல்சிந்தா என்பது பெரிபுளூசில் குறிப்பிடப்பெறும் நெல்சிந்தா; பிளினியின் நியாசிந்தி. இவை நெற்குன்றம் என்னும் பட்டினத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம் இளங்கோனையும், பொம்மலாவையும் இன்றைய விளவங்கோடு பொன்னாணியோடு ஒட்டவைக்கப் பார்க்கும் முயற்சி ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. 'கொட்டியாரா' என்பது இன்றைய 'கோட்டாறு' என்பதில் ஐயம் சிறிதும் இல்லை.[250] இந்தக் கோட்டாறு நாகர்கோயிலின் அருகில் உள்ள ஊராகும்.

ஆய் மன்னனின் அரசைப்பற்றி, யவன ஆசிரியர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் குறித்து டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் தந்துள்ள விளக்கம் கருத்தைக் கவருவதாகும். தாலமி, ஆய் மன்னரைப்பற்றிக் கூறுவன தலையானவை. ஏனெனில், பெரிபுளூஸ் நூல் அவர்களைப்பற்றி ஒன்றுமே கூறாமையால், தாலமியார் கருத்துகள் முக்கியத்துவம் பெறுகின்றன. கிறித்து விற்குப் பிற்பட்ட முதல் நூற்றாண்டு வரையில், பொதியமலைப் பகுதியில் வட்டார இனக்குழுத் தலைவர்களாக இருந்தவர்களே 'ஆய்மரபினர்' என்பது புலனாகின்றது. பின்னர், மேற்கு நோக்கிப் புறப்பட்ட அவர்கள், கொல்லத்திற்கு வடக்கே சென்று இன்றைய செங்கோட்டைக்கு அருகிலுள்ள ஆய்க்குடியில் நிலையாகத் தங்கள் தலைமைப்பீடத்தை நிறுவினர்.[251] 'செங்கடற் பயணக் கையேடு' எனப்படும் பெரிபுளூஸ், கி. பி. 50-க்கும் 80-க்கும் இடையே தொகுக்கப்பட்டது. தாலமியின் நிலநூல் கி. பி. 140 அளவில் தொகுக்கப்பட்டது என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது.[252]

18. நாஞ்சில் நாடு

'அதங்கோட்டிற்கும் கோட்டாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியே நாஞ்சில் நாடு' எனப்படுவதாகும். இக் குறுநிலப் பரப்பின் வடக்கே கொடுக்கரைக் குன்றுகள் எல்லையாக உள்ளன; தெற்கே மணற்குடி ஏரி அமைந்திருக்கிறது; கிழக்கே 'ஆரல்வாய் மொழி' எனப்படும் அருவாய்மொழிக் கணவாய் உள்ளது; மேற்கே எல்லையாகப் பன்றி வாய்க்கால் ஓடுகிறது. இவற்றிற்கு இடைப்

---

250 Pillay, K. K., *A Social History of the Tamils*, p. 269

251 மே. பக். 269, அடிக்குறிப்பு

252 Nilakanta Sastri, K. A., *Foreign Notices of South India*, p. 59

பட்ட பகுதியே 'நாஞ்சில் நாடு' என்று வழங்கப்பட்டது என்பதை 'முதலியார் சுவடி'களாலும் பண்டைய கல்வெட்டுகளாலும் அறியமுடிகிறது என்பது டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் தந்துள்ள விளக்கமாகும்.[253]

ஆரல்வாய்க் கணவாய்க்கு அருகில், திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்குச் செல்லும் பெருவழிக்கு இடையிலுள்ள வள்ளியூரைத் தலைநகராகக்கொண்டு, நாஞ்சில் வள்ளுவன் ஆண்டதாகத் தெரிகிறது.

19. கானப்பேரெயில் நாடு

இராமநாதபுரத்தில் இன்று 'காளையார் கோயில்' என வழங்கப்படும் ஊரே, சங்ககாலத்தில் 'கானப்பேர்' என்று வழங்கப் பட்டதாகும். இவ்வூரின் பெயரிலிருந்து, அது காட்டின் இடையே இருந்தது என்பது புலனாகின்றது. வேங்கைமார்பனின் பகைவர் யாரும் எளிதில் அணுகமுடியாத அரண்களோடு ஆற்றல்மிகு கோட்டையாக அது விளங்கியது. பாண்டிய மன்னரின் சிற்றர சனாக வேங்கைமார்பன் சிறப்புற்றான்.[254]

20. பறம்பு நாடு

பாண்டி மண்டலத்தின் ஒரு பகுதியை ஆண்டவர் முதலாம் எவ்வியும் பாரியுமாவர். இவர்களுடைய இராச்சியம் மிழலைக் கூற்றத்தில் இருந்தது.[255] அது இராமநாதபுர மாவட்டத்தின் ஒரு பகுதியாகும். அறந்தாங்கி வட்டத்தின் தென்பகுதியையும் இராமநாதபுர மாவட்டத்தின் கிழக்குப் பகுதியையும் கொண்டதே மிழலைக்கூற்றமாகும். எவ்வியின் தலைநகரம் 'நீடூர்' என்ப தாகும்.

பண்டைத் தமிழகத்தின் தலைசிறந்த கொடைவள்ளலான பாரி என்பான், அக் குடியில் தோன்றியவனாவான். அவன் எவ்விக்கு அடுத்த தலைமுறையினன் என்பது தெரிகிறது. ஆனால், அவர்களிடையே நிலவிய உறவுமுறையைத் துணிந்து கூறுவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. பாரியின் காலத்தில், பறம்பு மலையைச் சுற்றி இருந்த பறம்பு நாடு (மிழலைக் கூற்றத்தில்) சிறப்புற்று விளங்கலாயிற்று. பறம்பு நாட்டில் மூன்நூறு ஊர்கள் இருந்தன. இக் காலத்தில், பிரான்மலை எனப்

253 Pillay, K. K., *The Early History of Nancinad*, p. 5
254 புறம். 21 : 9
255 ஷ 24 : 19

படும் மலையே பண்டைய பறம்புமலையாகும். பிரான்மலை, இன்றைய இராமநாதபுர மாவட்டத்தின் வடபகுதியில் இருக்கிறது. மதுரையிலிருந்து வடகிழக்குப் பாகத்தில் 14 கி. மீ. தொலைவில் 'திருமோகூர்' என்னும் வைணவத் தலம் இருக்கிறது. அவ்வூரி லுள்ள கல்வெட்டொன்று, 'தென்பறம்பு நாட்டின் திருமோகூர்'[256] என்று அவ்வூரைப்பற்றிக் குறிப்பிடுகிறது. பரமக்குடி வட்டத்தில் உள்ள பரமக்குடி எனும் ஊரைப் 'பறம்புக்குடி' எனும் பாரியின் ஊராக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இக் கருத்து, பொருத்தம் உடையதானால் பறம்பு நாட்டின் தென்பகுதி பரமக்குடி வரையில் விரிந்திருந்தது எனக் கூறலாம். இதனால், மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் வட்டத்தின் கீழைப் பகுதியும், இராமநாதபுர மாவட்டத்தின் திருப்பத்தூர், சிவகங்கை, பரமக்குடி வட்டங்கள் சங்ககாலப் பறம்பு நாட்டினுள் அடங்கியிருந்த நிலப் பரப்பாகும்.

21. கீழைக் கடற்கரை நாடு

பரதவர் என்பார் பெரிதும் மீனவர் இனத்தின் தலைவராகக் கருதப்படுகின்றனர். அவர்கள் தூத்துக்குடி முதல் குமரிமுனை வரையிலுள்ள கீழைக் கடற்கரைப் பகுதியினை ஆண்டனர்.[257] பாண்டி நாட்டின் தென்கோடிப் பகுதியை ஆண்ட சிற்றரசர் இப் பரதவராவர்.[258]

22. கண்டீர நாடு

கடையேழு வள்ளல்களுள் நள்ளி என்பவன் ஒருவனாவான்; கண்டீரப் பகுதியின் தலைவனாக அவன் விளங்கினான். அவ் வட்டாரத்தில் இருந்த குன்றுகளின் தொகுதிக்குத் தோட்டிமலை என்பது பெயர்.[259] பத்து, பதினோராம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளிலிருந்து 'கண்டீரம்' எனும் ஊரே, இன்றைய 'வாலிகண்டபுரம்' என்பதை அறியமுடிகிறது. வாலிகண்டபுரம், தென்னார்க்காட்டு மாவட்டத்தில் விருத்தாசலத் திற்குத் தென்மேற்கே உள்ள பட்டணமாகும்[260] குன்றுகள் நிறைந்த குறிஞ்சிநிலப் பகுதியாக அதைச் சங்கப் புலவர்கள் சுட்டுவர்.[261] அந்தக் குன்றுகள் நிறைந்த பகுதிக்குத் தலைவ னான நள்ளியைக் 'குறிஞ்சிக் கோமான்' என்பர்.

---

256 A. R. E. 63 of 1905
257 இராசமாணிக்கனார், மா., 'பத்துப் பாட்டு ஆராய்ச்சி', பக். 358
258 புறம். 378 : 1
259 மே 150 : 25
260 A. R. E., 14 of 1913
261 புறம். 150 : 28

23. மலைநாடு

இன்றைய குன்றுகள் நிறைந்த திருக்கோவலூர் வட்டாரமே சங்ககாலத்தில் மலைநாடு எனப்பட்டது. மலைகள் நிறைந்த நாடு என்பது இதற்குப் பொருள். இப் பகுதியை ஆண்ட குறு நில மன்னர் 'மலையமான்கள்' என்று குறிப்பிடப்பட்டனர். மலையமான்களின் தலைநகரம் கோவலூராகும்.[262] பெண்ணை யாற்றின் தென்கரையில் அந்த நகரம் இருக்கிறது. முள்ளூர் என்பது அப் பகுதியில் மிக முக்கியமான நகரமாகும்.[263] இப் பொழுது அவ்வூர் செஞ்சி வட்டத்தில் இருக்கிறது. முள்ளூர் மலை மிகவும் செங்குத்தானது. அதையடுத்து ஓர் அடர்த்தி யான காடு இருந்துவருகிறது.[264] பெண்ணையின் கரையில் மற்றொரு முக்கியப் பட்டணம் உண்டு. அதனைக் 'கொடுங்கால்' எனச் சுட்டுவர்.[265]

24. பல்குன்றக் கோட்டம்

வடஆர்க்காட்டு மாவட்டத்தின் மேற்கு எல்லையாகச் சவ்வாது மலைப்பகுதி அமைந்திருக்கிறது. இப் பகுதிக்குப் பல்குன்றக் கோட்டம் என்பது சங்ககாலப் பெயர். இம் மலைக்கு அருகிலுள்ள குன்றுகளின் தொகுதிக்கு நவிரமலை என்பது பழைய பெயர்.[266] இங்குள்ள சிறப்புமிகு நகரமே செங்கம் ஆகும். இம் மலையிலிருந்து ஓடிவரும் ஆற்றுக்குச் சேயாறு என்பது பழைய பெயர். இக் காலத்தில் அதனைச் செய்யாறு என மக்கள் வழங்குகின்றனர். இம் மலையின் அடிவாரத்தில் ஒரு நகரம் தொன்றுதொட்டுச் சிறப்புடன் திகழ்கிறது. சங்ககாலத்தில் 'செங்கண்மா' என்பது அந் நகரின் பெயராகும்.[267] இக்காலத்தில் அதனைச் செங்கம் என்கிறோம். அப் பகுதியை ஆண்ட அரசனைச் செங்கண் மாத்துவேள் என்பர். அதாவது, செங்கத்தின் பெருமைமிகு வேள் என்பது பொருளாகும். திருவண்ணாமலைக்கு மேற்குப் பக்கம் இந் நகரம் இருக்கிறது. குன்றுகளின் தென்பக்கத்தில் செய்யாற் றின் கரையிலே செங்கம் சிறப்புற்று விளங்குகிறது.

25. ஓய்மானாடு

தொண்டை நாட்டின் தென்பகுதியில் ஓய்மான் நாடு எனும் சிறுநாடு உள்ளது. தென்னார்க்காட்டு மாவட்டத்திலுள்ள திண்டிவனம் வட்டமே பண்டைய ஓய்மானாடு என்பர். இச்

---

262 புறம். 99 : 14
263 நற். 170 : 6
264 குறுந். 312 : 3
265 அகம். 35 : 15
266 S. I. I., Vol. 7, No. 118
267 மலைபடு. கொளூ

சிற்றரசின் தலைநகரமே 'கிடங்கில்' என்னும் பட்டணமாகும். திண்டிவனத்தில் ஒரு பழைய சிவன்கோயில் இருக்கிறது. அதில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றுள் 'ஓய்மானாட்டுக் கிடங்கிலிலுள்ள சிவன்கோயில்' என்னும் குறிப்புக் காணப்படுகிறது. இச் சிவன்கோயில் திண்டிவனத்தின் பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் இருக்கிறது. ஓய்மான் நாட்டினை ஓய்மான் நல்லியாதன், ஓய்மான் வில்லியாதன் என்னும் இரு அரசர்கள், ஓய்மான் நல்லியக் கோடனுக்கு முன்னர் இப் பகுதியை ஆட்சிபுரிந்தனர். இந்த ஓவியர் குடி, நாகர் இனத்தைச் சேர்ந்ததாகத் தோன்றுகிறது. சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கிய புலவர்களுள் கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார், கிடங்கில் குலபதி நக்கண்ணனார் என்போர் இவ்வூரைச் சேர்ந்தவராவர்.

இந்தப் பகுதியில் நான்கு முக்கிய நகரங்கள் உள்ளன. அவை எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், மாவிலங்கை என்பனவாகும். இப் பகுதியை ஆண்ட குறுநில மன்னன் நல்லியக் கோடனைப் போற்றிப் பாடிய புலவர், மேற்கண்ட நான்கு நகரங்களின் அமைப்பையும் அழகையும் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார்.

எயிற்பட்டினம் : இது ஓய்மான் நாட்டுத் துறைமுகப் பட்டினம். யவனப் பயணக் கையேட்டு ஆசிரியர்களான தாலமியும் பெரிபுளூஸ் எனும் நூலின் ஆசிரியரும் இந்த எயிற்பட்டினத்தைச் சேரப்பட்டினம் எனக் குறித்துள்ளனர்.[268] பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார், இப் பட்டினத்தை இன்றைய மரக்காணமாக இருத்தல்கூடும் எனக் கருதுகிறார்.[269] ஆனால், மரக்காணத்துச் சிவன்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று, அவ்வூரை மனக்காணம் எனச் சுட்டுகிறது.[270] 'மணற்கானம்' என்னும் பெயரின் திரிபாக மரக்காணம் அமைந்து இருக்கலாம்.

முதலாம் குலோத்துங்கனின் 35ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று, எயிற்பட்டினம் என்பதைக் குறிப்பிடுகிறது. அவ்வெயிற்பட்டினம் பிரமதேயம் என்று தெரிகிறது. 'ஓய்மானாட்டுப் பட்டின நாட்டுப் பிரமதேயமான எயிற்பட்டினம்' என்பது அக் கல்வெட்டு வாசகம்.[271] இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் இவ்வூர், 'விக்கிரம சோழ சதுர்வேதி மங்கலம்' எனப்

---

268 Nilakanta Sastri, K. A., Op. cit., p. 59
269 Nilakanta Sastri, K. A., *The Colas*, p. 22
270 A. R. E., 23, 26 of 1919
271 ஷ 30 of 1919

பெயர் பெறலாயிற்று. இவ்விரு கல்வெட்டுகளிலிருந்து எயிற் பட்டினம் மரக்காணத்திலிருந்து வேறுபட்ட ஊர் என்பது புலனாகின்றது. இப்பொழுதுள்ள எந்த ஊரோடும் எயிற்பட்டினத்தை நாம் இனங்காண முடியவில்லை. இதனால், இவ்வூர் பெரும் பாலும் கடலில் மூழ்கி மறைந்து போயிருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது.[272]

வேலூர் : இவ்வூர் சிறுபாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊராகும். மரக்காணத்திலிருந்து தென்மேற்குத் திசையில் இவ்வூர் இருக்கிறது. இப்பொழுது இதனை 'உப்புவேலூர்' எனச் சுட்டுகின்றனர். இவ்வூரில் சிவன், திருமால், அருகதேவன் ஆகிய மூவருக்கும் மூன்று கோயில்கள் உள்ளன. இங்குள்ள சிவன்கோயிலில், முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் இவ்வூர் 'ஓய்மானாட்டு மணிநாட்டு வேலூர்'[273] எனக் குறிப்பிடப்பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

ஆமூர் : வேலூரிலிருந்து கிடங்கில் செல்லும் வழியில் ஆமூர் இருப்பதாகப் புலவர் குறிப்பிட்டுள்ளார். இப்பொழுது திண்டிவனம் வட்டத்தில் இப் பெயருடைய ஊரை எங்கும் காண இயலவில்லை. ஆனால் வேலூருக்கு வடமேற்கே கொண்டாமூர், சிந்தாமூர், நல்லாமூர் என்னும் சில முக்கியப் பேரூர்கள் உள்ளன. நல்லாமூர் கிடங்கிலிலிருந்து எட்டுக் கி.மீ. தொலைவில் உள்ளது. டாக்டர் மா. இராசமாணிக்கனார் இந்த நல்லாமூரே, சங்ககால ஆமூராக இருத்தல் கூடும் எனக் கருதுகின்றார்.[274]

மாவிலங்கை : புறநானூற்றிலிருந்து கோட்டை கொத்தளங்கள் அமைந்த நல்லதொரு நகரமாக மாவிலங்கை விளங்கியமை புலனாகின்றது.[275] ஆற்றுப் பள்ளத்தாக்கில் செழிப்புமிக்க நகரமாக இது விளங்கியதாகப் புலவர் நத்தத்தனார் வருணித்துள்ளார். இப்பொழுது அந் நகரம், மேல்மாவிலங்கை, கீழ்மாவிலங்கை எனும் இரு சிற்றூர்களாக உள்ளது. இவை இரண்டும் திண்டிவனத்திற்கு வடக்கே பத்துக் கி.மீ. தொலைவில் உள்ள சிற்றூர்களாகும். அவ்வூர்களைச் சுற்றிலும் பெரிய மண்மேடுகள் சில உள்ளன. அவற்றை அகழ்ந்தெடுத்தால் நமக்கு அந் நகரைப் பற்றிய புதிய செய்திகள் கிடைக்கக்கூடும்.

---

272 இராசமாணிக்கனார், மா., மு.கு.நூ., பக். 158

273 டி. பக். 160

274 டி. பக். 161

275 புறம். 379 : 6

26 தொண்டைநாடு

தொண்டைநாடு எனும் பெயரின் தோற்றம் இன்னும் புரியாத தொரு புதிராகவே இருந்துவருகிறது. தொண்டை என்பது முட்கள் நிறைந்த ஒருவகைக் கொடி; முல்லைக்கொடிகள் மிகுந் துள்ள பகுதியை முல்லைவாயில் எனவும், எருமைகள் மிகுதி யாக உள்ள ஊரை எருமையூர் எனவும் குறிப்பிடுவது தமிழ் மரபு; இவற்றைப் போன்றே தொண்டைக்கொடி செழித்து வளரும் பகுதியினைத் தொண்டைநாடு என்று குறிப்பிட்டிருக்கலாம்.[276]

அடர்த்தியான காடுகள் நிறைந்த பகுதியாகத் தொண்டை நாடு இருந்தது. ஆர்க்காடு (ஆத்திமரங்கள் நிறைந்த காடு), ஆலங்காடு (ஆலமரங்கள் நிறைந்த காடு), வேற்காடு (வேல மரங்கள் நிறைந்த காடு), பனங்காடு (பனைமரங்கள் நிறைந்த காடு), காரைக்காடு (காரைப் புதர்கள் நிறைந்த காடு) எனும் பல்வகைக் காடுகள் தொண்டைமண்டலத்தில் நிறைந்திருந்தன. இத்தகைய காடுகள் அழிக்கப்பட்ட பிறகும், அப் பகுதிகளுக்கு அங்கிருந்த காடுகளின் பெயர்கள் வழங்கலாயின. இதைப் போன்றே, முட்கள் நிறைந்த தொண்டைக்கொடி இப் பகுதியில் செழித்து வளர்ந்திருக்கக்கூடும்.

பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படையைப் பாடியவர் உருத்திரங்கண்ணனார். அவர் தொண்டையர் குலத் தலை வனான தொண்டைமானைப்பற்றி நயமிகு சொற்சித்திரத்தைத் தீட்டியுள்ளார். அப் பாட்டில் தொண்டைநாடு எனும் பெயரை அவர் குறிப்பிடவே இல்லை. அவர் பத்துப்பாட்டில் பட்டினப் பாலை என்னும் மற்றொரு பாட்டையும் பாடியுள்ளார். அதிலும் இப் பெயரை அவர் யாண்டும் வழங்கவில்லை. இந்தப் பகுதியில் ஆதிக்கம் பெற்று விளங்கிய அருவாளரைத் 'தொல்லருவாளர் தொழில்கேட்ப' எனப் பட்டினப்பாலையில் அவர் சுட்டுகின்றார். தாலமி இந் நாட்டினைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது 'அருவர் னாய்' என்று சுட்டியுள்ளார்.[277] இதற்கு அருவா நாட்டைச் சேர்ந்த மக்கள் என்பது பொருளாகும். தாலமியின் 'நிலவியல்' நூல் கி. பி. 140 அளவில் தொகுக்கப்பட்டதாகும்.

அருவாநாட்டின் எல்லை, காலந்தோறும் பெருகியும் சுருங் கியும் வேறுபடலாயிற்று. நன்னூலின் முதல் உரையாசிரியரான மயிலைநாதர், அருவா (அருவான் நாடு என்பது அவர் பாடம்)

---

276 இராசமாணிக்கனார், மா., மு.கு.நூ., பக். 290
277 Kanakasabai, V., Op. cit., p. 22

நாட்டைக் கொள்ளிடத்திற்கு வடக்கேயுள்ள தென்னார்க்காட்டு மாவட்டப் பகுதியைக் குறிப்பதாகக் கருதுகிறார். அதே ஆசிரியர் அருவா வடதலை நாடாகச் செங்கற்பட்டு மாவட்டப் பகுதியைக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் பி. தி. சீனிவாச ஐயங்கார் சோழநாட்டிற்கும் அருவா வடதலை நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்ததே அருவாநாடு என்கிறார். அவரும் தற்காலத்திய செங்கற்பட்டு மாவட்டத்தையே அருவா வடதலை நாடாகக் கொள்ளுகிறார்.[278]

கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் சிதம்பரம், கடலூர். விருத்தாசலம் வட்டங்களும் விழுப்புரத்தின் தென்பகுதியும் அருவாநாட்டில் அடங்கியிருந்தன என்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் கணித்துள்ளார். திருவாமாத்தூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றைச் சிறப்புமிக்க சான்றாக அவர் காட்டுகிறார். அவ்வூரினை 'அருவா நாட்டு திருவாமாத்தூர்' என்று அக் கல்வெட்டு குறிக்கிறது.[279]

மேற்கண்ட ஆய்விலிருந்து தொண்டைநாடு, ஒரே இனத்தைச் சேர்ந்த இனக்குழுத் தலைவர்களால் ஆளப்பட்டமை புலனாகின்றது. அவர்கள் தொண்டையர் என்னும் பொதுப் பெயரால் சுட்டப்பட்டனர்.[280] தொண்டையர் என்னும் பெயர், சில சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது.[281] இச் சொல் பன்மை வடிவில் உள்ளமை இங்குக் கருதத்தக்கது. எனவே, இச் சொல் ஒரு குடியை அல்லது இனக்குழுத் தலைவரைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

தொண்டையருக்குத் 'திரையர்' என்னும் மற்றொரு பெயரும் வழங்குகிறது.[282] காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு இக் குடி ஆட்சிபுரிந்தது. தொண்டைமண்டல சதகம், தொண்டை மண்டலத்தின் எல்லைகளை வரையறுத்துக் கூறுகிறது. வடக்கே திருவேங்கடம் காளத்தி மலைகளும், தெற்கே பாலாறும், மேற்குப் பகுதியில் கிழக்கு மலைத்தொடர்களும் எல்லைகளாகக் கூறப்படுகின்றன.[283] ஔவையாரால் பாடப்பட்ட

278 Iyengar, P. T. S., *The University of the Tamils*, p. 145
279 இராசமாணிக்கனார், மா., மு. கு. நூ., பக். 245
280 அகம். 213 : 1
281 குறுந். 260 : 6
282 பெரும்பாண். 37; அகம். 85 : 9, 340 : 6
283 தொண்டைமண்டல சதகம், 6

தாகக் கருதப்படும் தனிப்பாடல் ஒன்று. மேற்கே பவளமலையும் (கிழக்கு மலைத்தொடரும்), கிழக்கே கடலும், வடக்கே வேங்கடமும், தெற்கே பினாகை எனப்படும் தென்பெண்ணை யாறும் தொண்டைநாட்டின் எல்லைகளாகத் தெரிவிக்கின்றது.[284]

இக் காலத்திய வரலாற்றாசிரியர் தொண்டைநாட்டின் எல்லை களைப் பின்வருமாறு வரையறுத்துள்ளனர் : 'வடக்கே நெல்லூர் மாவட்டத்திலுள்ள சுவர்ணமுகி (பொன்முகலி) ஆறும், தெற்கே தென்னார்க்காட்டு மாவட்டத்தில் ஓடும் பெண்ணையாறும், மேற்கே கிழக்குமலைத்தொடரும், கிழக்கே வங்காளக் கடலும் தொண்டை நாட்டின் எல்லைகளாக அமைந்திருந்தன. அந் நாட்டில் தற் காலத்திய செங்கற்பட்டு மாவட்டம் முழுமையும் சித்தூர், வட தென்னார்க்காட்டு மாவட்டங்களின் சில பகுதிகளும் அடங்கி யிருந்தன என்பர்.[285]

தொண்டைநாடு இருபத்து நான்கு ஆட்சிப் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவுக்கும் 'கோட்டம்' என்பது பெயர். இருபத்து நான்கு என்னும் கோட்ட எண்ணுத்தொகை பல்வேறு காலங்களில், பலவகையாக வேறுபட்டது.

தொண்டைமான் இளந்திரையனுடைய தலைநகரம் 'கச்சி' என்பதாகும்.[286] இக் காலத்திய காஞ்சிபுரத்தின் பழைய பெயர் கச்சியாகும். திரையர் குடித் தலைவரின் தலைநகரம் 'பவத்திரி'[287] என்பதாகும். அது கடற்கரைப் பட்டினமாகும்.

பிற்காலத்திய 'காகந்தி' என்னும் பட்டினமே பண்டைக் காலத்தில் பவத்திரியாகும் என்பது அறிஞர் சிலரின் கருத் தாகும். அக் காகந்தி என்னும் பட்டினம் தெல்லூர் மாவட்டத்தில் கூடூர் வட்டத்தில் செட்டிபள்ளத்தின் நகர்ப்புறத்தில் உள்ள தாகும்.[288] பவத்திரி என்னும் தமிழ்ச்சொல் 'பௌவத்திரி' என்னும் பிராகிருதமொழிச் சொல்லின் சிதைவாகத் தோன்றுகிறது. சங்க இலக்கியத்தில் வேங்கடமலைகளைப் பற்றிய தெளிவான குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அம் மலைகள் வெற்றிபொருந்திய வேற்படைத் தலைவனாகிய திரையன் என்பானுடைய இராச்சி யத்துள் இருப்பதாக அப் பாடல் குறிக்கின்றது.[289]

---

284 பெருந் 2102

285 Mahalingam, T. V., *Kanchi in Early South Indian History*, pp. 2-3

286 பெரும்பாண், 420

287 அகம். 340 : 6-7

288 *Nellore Inscriptions*, Vol. I, Nos. 86 & 87

289 அகம். 85 : 9

இச் சான்றுகளினால் தொண்டைநாட்டில் இரண்டு சிற்றரசுகள் இருந்தன எனவும் இரு கிளையினரான திரையர் குடும்பத்தினர் அவற்றை ஆண்டுவந்தனர் எனவும் தோன்றுகிறது. வடக்கு மாநிலத்திற்குப் பவத்திரி தலைநகரமாக இருந்தது; அதனைத் திரையன் ஆண்டான்.[290] வேங்கடமலைகள் ஒருகால் அவனுடைய இராச்சியத்தின் தென்எல்லையாக இருந்திருக்கக் கூடும். மற்றொரு திரையன் (அவனைத் தொண்டைமான் எனச் சுட்டுவது மரபாகிவிட்டது) தொண்டைநாட்டின் தென் பகுதியில் கச்சியைத் தலைநகரமாகக்கொண்டு ஆட்சி புரிந்தான்.

27. வேங்கடமலைப் பகுதி

பண்டைத் தமிழகத்தின் வடக்கு எல்லையின் மையப் பகுதியைக் கள்வர் இனத் தலைவனான புல்லி ஆண்டுவந்தான். அவன் வேங்கடம் அல்லது திருப்பதி மலைகளின் தலைவனாவான்.[291] தமிழகத்தின் வடகோடி எல்லைப்பகுதியில் இருந்த தமிழரசு இது. இவ்வரசுக்கு அப்பால் வேற்றுமொழி பேசிய வடுகருடைய நாடு இருந்தது.[292]

பண்டைத் தமிழகத்தின் சிறப்புமிக்க சிற்றரசுகளின் நிலவியல் பற்றிய இச் சிறு ஆய்வினால் சில உண்மைகள் புலனாகின்றன. நிலவியல் அமைப்புகளின் அடிப்படையிலோ, ஆட்சி அமைப்பின் அடிப்படையிலோ மிகப் பலவாகத் தனியரசுகள் தமிழகத்தில் அமைந்திருந்தமை தெரியவருகிறது. அவை, நிலவியல் தேவைகளுக்கு ஏற்றவாறும், அரசியல் சூழ்ச்சித்திறன் தேவைகளுக்கு ஏற்ற முறையிலும் பரப்பளவில் சிறியனவாகவும் பெரியனவாகவும் அமைந்திருந்தன.

இவ்வரசுகளின் குறுநில மன்னர்கள் அல்லாமல் பாலைநிலப் பகுதிகளில் எயினர், வேட்டுவர் இனச் சிறுகுடித் தலைவர்கள் சிலரும் சிறப்புற்று விளங்கினர்; மலைப்பகுதிகளின் தலைவர்களும், மருதநிலத்தின் தலைவர்களான நிலக்கிழார்களும், படைத் தலைவர்களும், படைமறவர்களும் கணிசமாக ஆட்சி நிலப்பகுதிகளில் தலைவர்களாகத் திகழ்ந்தனர். இளவரசர்களும், அரச குடும்பத்தைச் சேர்ந்த தாயாதிகளும் சில ஊர்களின் மரபுவழி நிலப்பிரபுக்களாக விளங்கினர். வளமும் வறட்சியும் கலந்து

290 அகம். 340 : 6-7
291 ஷை 295 : 13
292 ஷை 31 : 15

அமைந்த பண்டைத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை வேளிர்கள் வீறுடன் ஆட்சிபுரிந்தனர்.

இச் சிற்றரசர்கள் யாவரும், தங்களுக்கு அருகிலிருந்த மூடி வேந்தர் மூவருள் ஒருவரைப் பெரிதும் சார்ந்து வாழ்ந்தனர். இதனாலேயே சங்ககாலத்திய தலைசிறந்த அறிஞருள் ஒருவரான மாமூலனார், 'தமிழ்கெழு மூவர் காக்கும்' திருநாடாகத் தமிழகத்தைக் குறிப்பிட்டுள்ளார்.[293] காலட்போக்கில் இவ்வாறு குறிப்பிடுவது புகழ்மிக்க ஒரு மரபாயிற்று. ஆனால், என்றும் நடைமுறையில் மிகப் பலவான சிற்றரசுகள் பண்டைத் தமிழகத்தில் இருந்தன. அவற்றுள் சில பேராற்றல் வாய்ந்தனவாகவும் தனியுரிமை பெற்ற தனியரசுகளாகவும் சிறப்புற்று விளங்கின. மாபெரும் பேரரசினை நிறுவவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்ட வேந்தர்கள், குறுநில மன்னர்களின் அரசுகளை ஒன்றாகச் சேர்த்து, ஒரு பேரரசை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட பொழுது, மிகமிகக் கடினமான செயலாகவே அதை உணர்ந்தனர்.

குறுநில மன்னர்களின் கால அடைவு

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தை முடியுடை வேந்தர்களான சேர, சோழ பாண்டியர் ஆட்சி செய்து வந்தனர். இதற்கு அசோகனுடைய சிறிய கற்பாறைக் கல்வெட்டுகளும், கலிங்க மன்னன் காரவேலனுடைய கல்வெட்டும் சான்று பகருகின்றன.[294] காரவேலனுக்குக் காலத்தால் முற்பட்டவன் அசோகன். மௌரியப் பேரரசனான அசோகன் கி. மு. 272 முதல் 232 வரை ஆட்சிபுரிந்தான்.[295] அவனுடைய காலத்திலேயே, தமிழக மூவேந்தர் சிறப்புடையவராக விளங்கியமையால், அதற்கு முன்பே மூவேந்தருடைய ஆட்சி தோன்றிவிட்டது என்பதில் ஐயம் இல்லை. எனவே, முறையான தமிழ்நாட்டு வரலாறு, கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அளவிலேனும் தொடங்குவதாகக் கொள்ளலாம்.

ஆனால், அக்காலத்தில் ஆட்சிசெய்த தமிழக வேந்தர் யாவர் என்பதை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. ஆகவே, பொதுவாகத் தமிழக வரலாற்றின் முதற்பகுதியாகிய சங்ககாலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் தொடங்குவதாகக் கொள்ளலாம்.

---

293 அகம். 31 : 14

294 Banerji, R. D., *History of Orissa*, Vol. I, pp. 91-92

295 Sircar, D. C., *Inscriptions of Asoka*, p. 14

பண்டைத் தமிழகத்து வேந்தருள் காலத்தால் மிகவும் முற்பட்டவனாகத் தோன்றுகின்றவன் முதலாம் கரிகாலன் (கரிகாலன் I) ஆவான். அவனை வெண்ணிக்குயத்தியார்,[296] கருங்குழலாதனார்[297] குடவாயில் கீரத்தனார்[298] போன்ற சமகாலப் புலவர்களும், பிற்காலத்தில் வந்த பரணரும்[299] போற்றிப் பாடியுள்ளனர். கழாஅத்தலையார் என்னும் புலவருடைய பாட்டினால், முதலாம் கரிகாலன் காலத்தில் சேரமான் பெருஞ்சேரலாதன் என்னும் சேர வேந்தன் சிறப்புற்று விளங்கினான்[300] என்பது தெரிகிறது. கபிலர் எனும் புலவர், தமக்குக் காலத்தால் மிகவும் முற்பட்டவராகக் கழாஅத்தலையாரைக் குறிப்பிட்டுள்ளார்.[301]

கழாஅத்தலையாரால் பாராட்டப்படும் பெருஞ்சேரலாதன் பதிற்றுப்பத்தின் முதற்பத்தில் பாடப்பட்டவன் என நம்பப்படும் பெருஞ் (சோற்றுதியன்) சேரலாதனாக இருத்தல்கூடும். இதைக் கருதுகோளாகக் கொள்ளுவோமானால், இவனுடைய மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பது போதரும். இமயவரம்பன் மகனே சேரன் செங்குட்டுவன் (கடல் பிறக்கோட்டிய குட்டுவன்) ஆவான்.[302] இதனால், சேரன் செங்குட்டுவன், முதலாம் கரிகாற் சோழனுக்கு இரு தலைமுறைகள் பிற்பட்டவன் ஆவான்.

பொருநராற்றுப்படையிலும், பட்டினப்பாலையிலும், பரணருடைய பாடல் ஒன்றிலும்[303] சிறப்பித்துப் பேசப்படும் திருமாவளவனை இரண்டாம் கரிகாலன் (கரிகாலன் II) என வரலாற்று ஆசிரியர் சுட்டுவர்.[304] இத் திருமாவளவன் காலத்திலேயே காவிரிப்பூம்பட்டினம் 'பூம்புகார்' எனப் பொன்றாப் புகழ்பெற்றது.[305] கிழக்குக் கடற்கரையில் உலகப் புகழ்மிக்க வாணிகத் துறைமுகமாகக் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியதை முதன்முதலாகக் குறிப்பிடும் யவன ஆசிரியர் பெரிபுளூசு எனும்

---

296 புறம். 66
297 மே. 7, 224
298 அகம். 44
299 மே. 226
300 புறம். 65
301 மே. 62, 65
302 பதிற். பதி. 5 : 2-3
303 'முதலாம் இராசராச சோழன்', பக். 15-17;
சுப்பிரமணிய ஆச்சாரியார், வி. எஸ்., 'கரிகாலர் மூவர்', பக். 24-40
304 சதாசிவ பண்டாரத்தார், தி. வை., 'காவிரிப்பூம்பட்டினம்,' பக். 3
305 Nilakanta Sastri, K. A., Op. cit., p. 59

நூலினைத் தொகுத்தவர் ஆவார்.[306] இந் நூல் தொகுக்கப்பட்ட காலம் கி. பி. 50-க்கும் 80-க்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.[307]

பெரிபுளூசில் காணப்படும் குறிப்புகள் குறித்துப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், பயன்மிக்க சிறந்த கருத்துகளைத் தெரிவித்துள்ளார். "'குடாவினை யொட்டியுள்ள கடல் ஓரப் பட்டின நாடு' எனப் பெரிபுளூசு சுட்டுவது ஐயத்திற்கு இடமின்றிப் பட்டினப்பாலை போற்றிப் புகழும் காவிரிப்பூம் பட்டினத்தையே குறிப்பதாகும். இதனை உள்நாட்டுப் பகுதியான 'ஆற்கரு'விலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது சிறப்புமிக்க செய்தியாகும். 'ஆற்கரு' என்னும் உள்நாட்டுப் பகுதி 'உறையூரைத்' தவிர வேறு எந்த நகரமாகவும் இருக்க இயலாது. பெரிபுளூசின் ஆசிரியர், ஒவ்வொரு மாவட்டத்தையும் அங்குள்ள முதன்மையான பட்டணத்தின் பெயராலேயே குறிப்பிட்டுள்ளார்"[308] என்பது பேராசிரியர் சாஸ்திரியார் தரும் விளக்கமாகும்.

எனவே, காவிரிப்பூம்பட்டினத்திற்குப் பெருவாழ்வு அளித்த திருமாவளவன் எனப்பட்ட இரண்டாம் கரிகாலன், கி. பி. முதல் நூற்றாண்டின் கடைப்பகுதியிலும், இரண்டாம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் வாழ்ந்தவன் ஆதல்வேண்டும். இவ்வடிப்படையில் கரிகாலனுடைய II காலம் கி. பி. 81 முதல் கி. பி. 105 வரை எனக் கொள்ளுவது பொருந்தும். ஒரு தலைமுறைக் குரிய காலம் 25 ஆண்டுகள் எனக் கொண்டு கணக்கிடுவோமானால், திருமாவளவனுடைய தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி கி. பி. 55 முதல் கி. பி. 80 வரை ஆட்சி செய்தவன் ஆவான். அவனுடைய தந்தையான கரிகாலன் I, கி. பி. 30 முதல் 55 வரை ஆண்டவன் ஆகலாம். இவ்வடிப்படையில் நோக்கும்பொழுது, திருமாவளவன் எனப்படும் கரிகாலனுக்குப் பிற்பட்டவனாகிய சேரன் செங்குட்டுவனுடைய ஆட்சிக்காலம் பின்வருமாறு அமையும் :

முதலாம் கரிகாலனுடைய காலத்தவனான பெருஞ்சேரலாதன், சற்றேறக்குறைய கி.பி. 20 முதல் 45 வரை ஆட்சி செய்தவன் ஆவான். அவனுடைய மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 58 ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான். எனவே, அவன் கி. பி.

306 McCrindle, *Indian Antiquary*, Vol. 8, p. 145
307 Nilakanta Sastri, K. A., *The Colas*, p. 22
308 Ibid p. 22

46 முதல் 103 வரை ஆட்சிசெய்தவன் ஆகலாம். அவனுடைய மகனான கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் 55 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான்[309] என்பது பதிற்றுப்பத்தால் அறியப்படு கிறது. ஆகவே, செங்குட்டுவன் கி. பி. 104 முதல் கி. பி. 159 வரை செங்கோல் ஓச்சினான் எனக் கொள்ளலாம். இக் காலக் கணிப்பு காமணி அபயன் எனப்படும் கயவாகுவின் காலத் தோடு (கி. பி. 111-136) பொருந்திவருகிறது.[310] இக் கால வரையறையை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலக் குறுநில மன்னர்களின் ஆட்சிக் காலத்தைப் பின்வருமாறு வரன்முறைப் படுத்த முயலலாம்.

முதலாம் கரிகாலனுக்கு முற்பட்ட காலத்திய குறுநில மன்னர்

(கி. பி. 30 வரை)

முதலாம் கரிகாற் சோழனுக்கு முற்பட்ட நிலையில், ஆர்க்காட்டு அழிசி, சேந்தன், திதன் I போன்றோர் தமிழகத் தின் சிற்றரசர்களாக விளங்கினர். அவர்களுடைய சமகாலப் புலவர்களாகச் சாத்தந்தையார், நக்கண்ணையார் வாழ்ந்தனர்.[311] இக் குறுநில மன்னர், கிறித்தவ நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தனர். இதனைப் பிற்காலத் தலைமுறையினரின் வரலாறு எண்பிக்கிறது. இதனால், கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகளில் தமிழகத்தை ஆண்ட சிற்றரசர்களையோ, வேந்தர்களையோ சுட்டிக் கூற இயலவில்லை. இன்றுவரை நமக்குக் கிடைத்துள்ள அடிப்படைச் சான்றுகள் இந்த அளவிற்கே, அரசர்களைக் கால அடைவுபடுத்த உதவிபுரிகின்றன.

முதலாம் கரிகாலன் காலத்திய குறுநில மன்னர்

(கி. பி. 30–55)

கரிகாலனுடைய கன்னிப்போர், வெண்ணிப் போராகும். அப் போரின் விளைவாகச் சோழநாட்டு அரியணையைக் கரிகாலன் தனக்கே உரிமையுடையதாக நிலைநிறுத்திக் கொண்டான். குறுநில மன்னர் பலருடைய ஆட்சிக்குட்பட்டு இருந்த சோழ நாட்டில், முதன் முதல் நிலையான ஒரு பெரிய அரசை நிறுவ அவன் முயன்றான். அவனைத் தலையெடுக்க

309 பதிற். பதி. 5

310 Paranavitana, S., Op. cit., Vol. I, pp. 124-125, 181-185

311 புறம். 80, 82, 83

வொட்டாமல், முளையிலேயே கிள்ளியெறிய அவனுக்கு எதிராகச் சேரவேந்தன் கிளம்பினான். அவன் கரிகாலனுடைய அழுந்தூரைத் தாக்கினான். இருபெரும் படைகளும் வெண்ணிவாயிலில் சந்தித்தன. பெருஞ்சேரலாதன் மார்பில், கரிகாலனுடைய வேல் பாய்ந்து ஊடுருவிச் சென்றது; சேரன் புறப்புண்ணிற்கு நாணி, வடக்கு இருந்து உயிர்விட்டான்.

கரிகாலன் I-க்குப் 'பெரும்பூண் சென்னி' என்னும் சிறப்புப் பெயரும் வழங்கியது.[312] இச் சென்னியைக் கழுமலம் என்னும் இடத்தில் குறுநில மன்னர் பலர் எதிர்த்துப் போரிட்டனர். நன்னன் I, ஏற்றை, அத்தி, வெல்லுவதற்கு அரிய கங்கன், கட்டி I, விற்போரில் வல்ல புன்றுறை என்போர் அச் சிற்றரசர் ஆவர். அப் போரில் சோழனுடைய படைத்தலைவனாகிய பழையன் I இறந்துபட்டான்; சேரனின் படைத் தலைவன் கணையன் I சிறைப்பட்டான்.[313] கழுமலப் போரைப் பாடிய குடவாயில் கீரத்தனார், முதலாம் எவ்வியையும் (எவ்வி I) சம காலத்தவனாகக் குறிப்பிட்டுள்ளார்.[314] இப் புலவரே, ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனையும் பாடியுள்ளார்.[315]

வாகைப் பறந்தலை என்னும் மற்றொரு போர்க்களத்தில் கரிகாலன் I, ஒன்பது சிற்றரசரைத் தோற்கடித்தான்.[316] அவ் வொன்பதின்மர் யாவர் என்பதை அறிய இயலவில்லை. இவை காரிகாலன் காலத்தில் நடைபெற்ற போர்களாகத் தோன்று கின்றன. இப் போர்களில் கலந்துகொண்ட சிற்றரசர், சிறப்பும் ஆற்றலும் மிக்கவர்களாக இருந்திருத்தல்கூடும் என்பது அவர்கள் புதியதாகத் தலையெடுத்த சோழ அரசை அடக்கியொடுக்கக் கூட்டணி அமைத்துக்கொண்டதனால் தெரியவருகிறது.

இளஞ்சேட் சென்னியின் காலத்திய குறுநில மன்னர்
(கி. பி. 56-80)

திருமாவளவனுடைய (கரிகாலன் II) தந்தை இளஞ்சேட் சென்னி என்பதை முன்னரே கண்டோம். இவனை 'உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி' என்பதால்[317] அறிகிறோம்.

---

312 Sivaraja Pillai, K. N., Op. cit., p. 90
313 அகம். 44 : 7-14
314 ஷை 366 : 12
315 புறம். 242
316 அகம். 125 : 18-21
317 புறம். 266

'செருப்பாழி' என்னும் கோட்டையைப் போரில் தகர்த்து, இவன் எறிந்ததாகவும் கூறுவர்.[318] இவனுடைய காலத்தில் விச்சியர், ஆவியர், கொங்கர், பூழியர், வேளிர் என்னும் சிற்றரச மரபினர் சிறந்து விளங்கினர். மற்றும் நன்னன் I,[319] அதிகன் I,[320] பழையன் II[321] ஆகிய குறுநில மன்னரும் இக்காலத்தில் ஏற்றம் பெற்று இருந்தனர்.

திருமாவளவன் (கரிகாலன் II) காலத்திய குறுநில மன்னர்

(கி. பி. 81–105)

'கரிகால் பெருவளத்தான்' எனவும், 'திருமாவளவன்' எனவும் போற்றப்படும் சோழப் பெருவேந்தனே, இரண்டாம் கரிகாலன் ஆவான். அவன் ஆட்சிக்கு வந்தபொழுது, சோழ நாட்டில் குழப்பமும் கொந்தளிப்பும் நிறைந்து இருந்தன. 'தாய் வயிற்றில் இருந்து தாயம் எய்திய' அவன் கடும்போர் புரிந்து, தன் உரிமையை நிலைநாட்டினான். அரசுகட்டில் ஏறியவுடன், அவனைப் பதினொரு வேளிரும் வேந்தரும் எதிர்த்தனர். வெண்ணிப் பறந்தலையில் மற்றொரு பெரும் போர் நடந்தது. பரணர் என்னும் புலவர், இப் போரில் கரிகாலனை எதிர்த்துப் போரிட்ட வேளிர் யாவர் என்பதைப் பெயரைச் சுட்டித் தெரிவிக்காமல், '... பெரும்பெயர்க் கரிகால், ஆர்கலி நறவின் வெண்ணி வாயில் ... பதினொரு வேளிரொடு வேந்தர் சாய' என்று குறிப்பிட்டுள்ளார்.[322] இவற்றிலிருந்து வேறு செய்தி எதையும் நாம் பெற இயலவில்லை. ஒளியரையும் அருவாளரையும் அவன் வெற்றிகொண்டான்; வடவரையும் குடவரை (சேரரை)யும் அடக்கி யொடுக்கினான்; தென்னவ (பாண்டிய)னைத் தோல்வியுறச் செய்தான்; தன் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளுமாறு இருங்கோவேளை ஏவல் கொண்டான்.[323] பின்னர், கரிகாலன் II இமயம் வரை படையெடுத்துச் சென்றான்; இமயத்தில் தன் புலிச் சின்னத்தைப் பொறித்துத் திரும்பினான்.[324] இவனுடைய ஆட்சிக் காலத்தில், தொண்டைமண்டலத்தைத் தொண்டைமான் இளந்திரையன் (தொண்டைமான் I) ஆட்சிபுரிந்தான்.[325]

---

318 அகம். 375 : 13
319 ஷை 15 : 10, 142 : 9, 152:12, 349 : 8
320 ஷை 162 : 18, 325 : 8; குறுந். 393 · 4
321 ஷை 44 : 11
322 ஷை 246 : 9-12
323 பட்டினப். 274-282
324 சிலப். 5 : 96-98
325 பெரும்பாண். கொளு

இவனுடைய சமகாலப் புலவர்களாகப் பரணர், உருத்திரங் கண்ணனார், காப்பியாற்றுக் காப்பியனார், மாமூலனார் போன்றவர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் இருபதுக்குக் குறையாத சிற்றரசர்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அச் சிற்றரசர் நன்னன் II,[326] கட்டி II,[327] தித்தன் II,[328] திதியன் I,[329] பாணன் I,[330] நள்ளி I,[331] வேளாவிக் கோமான் பதுமன்,[332] வண்டன்,[333] நெடுமிடல்,[334] பிண்டன்,[335] கண்ணன் எழினி,[336] நெடுவேளாவி,[337] புல்லி,[338] திரையன்[339] என்பவராவர். அவர்கள் யாவரும் அக்காலத்தில் ஆற்றல்மிக்க சிற்றரசர்களாக விளங்கியவர் ஆவர்.

செங்குட்டுவன் காலத்திய குறுநில மன்னர்
(கி. பி. 105—159)

கரிகாலனுடைய சமகாலப் புலவரான பரணர், செங்குட்டுவன் அவையை அணிசெய்தார் என்பதைப் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தால் அறிகிறோம். இப் பத்தில் செங்குட்டுவனுடைய வெற்றிச் சிறப்புகளையும், கொடைவளத்தையும் அவர் போற்றிப் பாடியுள்ளார். அவர் ஐம்பதுக்கு மேற்பட்ட சிற்றரசர்களைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். அச் சிற்றரசர்களிடையே நிலவிய தொடர்பினைக் கருத்தோடும் விழிப்போடும் ஆய்வோமானால் சில உண்மைகள் தெரியவரும்.

பரணரின் பாடல்களிலிருந்து அவர் நெடுங்காலம் உயிர் வாழ்ந்தார் என்பது புலனாகின்றது. கரிகாலன் காலமுதல், சேரன் செங்குட்டுவனுடைய வாழ்க்கையில் பெரும்பகுதி வரையில் அவர் வாழ்ந்தவர் என்பது சங்கப் பாடல்களால் அறியப்படுகிறது. கரிகாலன் காலத்திய செய்திகளையும் அதற்கு முற்பட்ட நிகழ்ச்சிகளையும் தம்முடைய பாடல்களில் பரணர் சுட்டியுள்ளார்.

---

326 அகம். 97 : 12, 152:12, 208 : 14, 356 : 19, 392:27; பதிற். 88 : 10
327 குறுந். 11 : 6; அகம். 44 : 8, 226 : 16
328 அகம். 152 : 5, 226 : 14
329 மே. 45 : 9, 196 : 11, 262 : 10, 322 : 8
330 மே. 226 : 13, 325 : 17, 386 : 3
331 மே. 152 : 15, 238 : 14 புறம். 148 : 1, 149 : 1
332 பதிற் பதி. 4:2-3 336 மே. 197 : 7
333 மே. 31 : 23 337 மே. 1 : 3
334 மே. 32 : 10 338 மே. 61 : 12
335 அகம். 152 : 9 339 மே. 85 : 9

காவிரிக் கரையிலிருந்து ஆர்க்காட்டை ஆண்ட அழிசியைப் பரணர் ஒரு பாடலில் சுட்டியுள்ளார்.[340] ஆனால், அவர் குறிப்பிடும் வாசகத்தால், அழிசி, அவருடைய சமகாலத்தவன் அல்லன் என்பது தெரிகிறது. எனவே, அவன், கரிகாலன் காலத்திற்குச் சற்று முன்னர் வாழ்ந்து இருக்கலாம் எனக் கருதுவதே பொருத்தம் உடைத்தாகும்.

உறந்தையை ஆண்ட மாவண் தித்தன் I என்பானும், அவனுடைய மகளான ஐயை என்பாளும் பரணரால் சுட்டப்படுகின்றனர்.[341] இவர்களும் பரணருக்குக் காலத்தால் முற்பட்டவர்கள் என்பது அவருடைய பாடலின் போக்கால் புலனாகின்றது. பசும்பூண் பாண்டியன் என்னும் பாண்டிய வேந்தனை அவரே குறிப்பிடுகின்றார். அவனுடைய சேனாதிபதியான அதிகன், வாகைப் பறந்தலையில் கொங்கர்களுக்கு எதிராகப் போரிட்டான் என்பதையும் அவர் சுட்டுகிறார். ஆனால், இந் நிகழ்ச்சியை, அவர் பழங்காலத்தில் நடைபெற்ற ஒன்றாகவே குறிப்பிட்டுள்ளார். இந்த அதிகனை, முதலாம் அதிகன் எனலாம். இவன் பெரும் புகழ் வாய்ந்த அதியமான் நெடுமான் அஞ்சியினும் வேறுபட்டவன் ஆவான். இவ்வஞ்சியை இரண்டாம் அதிகன் எனலாம்.[342] அதிகன் I வேங்கைக் குன்றுகளின் தலைவன். அவன் வாகைப் பறந்தலைப் போரில் உயிர்நீத்தான் என நாம் அறிகிறோம்.[343]

எவ்வி, நீடூரின் குறுநில மன்னனாவான். அவனை இரண்டு பாடல்களில் பரணர் குறிப்பிடுகிறார்.[344] 'எவ்வி' எனும் பெயரை இயற்பெயராகவே கருதலாம். அவன் கலைஞர்களையும் புலவர்களையும் போற்றி ஆதரித்தவன். அவனும் பரணரின் சமகாலத்தவன் அல்லன் என்பது தெரிகிறது. இந்த எவ்வியை, முதலாம் எவ்வி எனக் கொள்ளலாம்.

சங்ககாலத்தில் சிறப்புடன் திகழ்ந்த ஏழு வள்ளல்களுள் ஒருவனான ஓரியையும், அவனுடைய கொல்லிமலையையும் பரணர் பாடியுள்ளார். அப் பாட்டிலிருந்து ஓரி, பரணரின் சமகாலத்தில் வாழ்ந்தவன் என்பது தெரியவில்லை.[345] உறையூரைத்

---

340 குறுந். 3-258 : 7

341 அகம். 6 : 3-4

342 ஷை 142 : 13, குறுந். 91 : 5-6; நற். 381 : 7; சிறுபாண். 103; புறம் 87, 91, 95, 97, 103, 206, 208, 315, 390

343 ஷை 162 : 18-21; குறுந். 393 : 2-4

344 ஷை 266 : 10-11,

345 ஷை 208 : 21-22; குறுந். 199 : 3; நற். 6 : 9, 265 : 7

தித்தன் வெளியன் ஆண்டபொழுது, உறையூரின் சிறையிலிருந்து 'கட்டி' என்பவன் தப்பியோடியதைப் பரணர் கடந்தகால நிகழ்ச்சியாகக் குறிப்பிடுகிறார். இந்தக் கட்டியை நாம் முதலாம் கட்டி எனவும், தித்தனை இரண்டாம் தித்தன் எனவும் கொள்ளலாம்.[346]

ஏழு வள்ளல்களுள் மற்றொருவனான நள்ளியைப் பரணர், சமகாலத்தவனாகப் போற்றிப் பாடியுள்ளார் கபிலரும் காக்கை பாடினியாரும் இக் குறுநில மன்னனைப் பாடியுள்ளனர். இச் சிற்றரசனை முதலாம் நள்ளியாகக் கூறலாம்.

பல பாடல்களில், 'நன்னன்' என்னும் குறுநில மன்னனைப் பரணர் குறிப்பிட்டுள்ளார். நமக்குக் கிடைக்கும் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு, நன்னன் என்னும் பெயருடைய அரசரை முதலாம் நன்னன், இரண்டாம் நன்னன்,[347] மூன்றாம் நன்னன் என வேறுபடுத்திக் காட்டலாம்.

நன்னன் உதியன் எனும் சிற்றரசன் ஒருவன், சேர வேந்தனுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட குறுநில மன்னனாக விளங்கினான். இவன், கரிகாலனை எதிர்த்துப் போரிட்டான்.[348] இவனை நன்னன் I எனலாம். பாழி, பாரம் எனும் நகரங்களுக்குத் தலைவனாக விளங்கிய நன்னனை, நன்னன் II எனக் கொள்ளலாம்.[349] ஆய் எயினன் (ஆய் II), இவனுடைய நண்பன் ஆவான். இவ்விருவரும் மிஞிலியை எதிர்த்துப் பாழி நகரில் போரிட்டபொழுது, ஆய் எயினன் மாண்டான்.[350]

'பெண்கொலை புரிந்த நன்னன்' ஒருவனைப் பரணர் சுட்டுகிறார்.[351] இவனுடைய வரலாற்றினை முன்னரே நாம் கண்டோம். ஒருகால், இவன் பரணரின் சமகாலத்தவனாக, நார்முடிச்சேரலை எதிர்த்துப் போரிட்டவனுமாகலாம்.[352] இவனையே பெருங்குன்றூர்கிழார், மாமூலனார், மோசிகீரனார் போன்ற புலவர்களும் பாடியுள்ளனர்[353] எனக் கொள்ளலாம்.

---

346 அகம் 6 : 4, 122 : 21; புறம். 352 : 9
347 ஷை 97 : 12, 208 : 14, 356 : 8; பதிற். 88 : 10
348 ஷை 44:7
349 ஷை 152 : 12-13
350 ஷை 208 : 5-14, 396 : 2-7
351 குறுந். 292 : 5; அகம். 396 : 2; நற். 391 : 5-6
352 பதிற். 40 : 16
353 அகம். 97 : 11-12, 392 : 26-27

பேகனுடைய கொடைத்திறனைப் பரணர் பாராட்டியுள்ளார். பேகனுக்கும் அவன் மனைவி கண்ணகிக்கும் இடையே உண்டான கருத்து வேற்றுமையைப் போக்க அவர் பெருமுயற்சி செய்துள்ளார். இம் முயற்சியில் பரணருடன் அரிசில்கிழாரும், பெருங்குன்றூர்கிழாரும், கபிலரும் ஒன்றாக ஈடுபட்டுள்ளனர்.[354] பரணரைவிட வயதில் இளையவராகக் கபிலர் இருந்திருத்தல் வேண்டும் என்பது அவருடைய பதிற்றுப் பத்துப் பாடல்களால் தெரியவருகிறது. பெருங்குன்றூர்கிழார், கபிலரைக்காட்டிலும் முதியவராவார் என்பது அவருடைய பாடல்களால் புலனாகின்றது.

வேறு பல குறுநில மன்னர்களைப்பற்றிப் பரணர் சிற்சில செய்திகளைத் தெரிவித்துள்ளார். அவர்கள் ஆய் அண்டிரன் எனப்படும் ஆய் II,[355] ஆய் எயினன் எனப்படும் ஆய் II,[356] அறுகை,[357] தழும்பன்,[358] விராஅன்,[359] விச்சிக்கோ I (விச்சியர் பெருமகன்),[360] பழையன் II,[361] மலையமான் திருமுடிக்காரி,[362] நல்லடி,[363] திதியன் I,[364] கணையன் II,[365] கழுவுள் I,[366] பாணன் I,[367] மிஞிலி,[368] ஞிமிலி,[369] அகுதை,[370] எயினன்,[371] மத்தி,[372] ஆட்டன் அத்தி,[373] கொங்கர்,[374] கோசர்,[375] வேளிர்[376] முதலியோராவர். இவர்களுள் மலையமான் திருமுடிக்

---

354 புறம். 143 : 13 15, 146 : 6-11, 147
355 அகம். 152 : 21; புறம் 127 : 6, 128 : 5, 129 : 5, 131 : 2, 241 : 2, 374:16
356 ஷை. 148 : 7, 181 : 7, 208 : 5
357 பத்.. 44 : 10
358 நற். 300 : 10; புறம். 348 : 5
359 ஷை 350 : 4
360 குறுந். 328 : 5; புறம். 200 : 8;
361 அகம். 186:15, 326:12; பதிற். பதி. 5 : 13
362 புறம். 121–124
363 அகம். 356 : 14
364 ஷை 45 : 9, 196 : 11, 262 : 10, 322 : 8, 331 : 12
365 ஷை 386 : 8
366 ஷை 135 : 13; பதிற். 71 : 17, 88 : 7
367 ஷை 226 : 13, 325 : 17, 386 : 3
368 ஷை 148 : 8, 181 : 5, 208 : 7; நற். 265 : 4
369 ஷை 142 : 11
370 ஷை 76 : 3, 208 : 18; குறுந். 298 : 5
371 ஷை 148 : 7, 181 : 7, 208 : 5, 396 : 4
372 ஷை 6 : 20, 226 : 8
373 ஷை 222 : 7, 236 : 11
374 குறுந். 393 : 6
375 அகம். 113 : 5, 196 : 10, 262 : 6
376 ஷை 246 : 12, 258 : 2; நற். 280 : 8

காரியைப் பரணர் ஓளவிற்கு அறிந்திருந்தார்.[377] பல பாடல்களில் கபிலர், காரியைப் போற்றிப் பாடியுள்ளார்.[378] கல்லாடனார், குடவாயிற்கீரத்தனார், கோவூர்கிழார், பெருஞ்சாத்தனார், மாறோக்கத்து நப்பசலையார் எனும் வேறு புலவர்களும் காரியைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.[379]

பாரி காலத்திய குறுநில மன்னர்

சேரன் செங்குட்டுவனுக்கு அடுத்த தலைமுறையில் சிறப்புற்று விளங்கிய சேரனையோ, சோழனையோ, பாண்டியனையோ நாம் தெளிவாக இனம் கண்டறிய இயலவில்லை. ஒருகால் கோவூர்கிழாரால் சிறப்பித்துப் பாடப்பட்ட நலங்கிள்ளி, கிள்ளிவளவன் என்னும் சோழ வேந்தர்கள் சிறப்புற்று விளங்கியிருக்கலாம். ஆனால் கோவூர்கிழார், ஔவையார் போன்ற புலவர்களுக்கு மூத்த தலைமுறையைச் சேர்ந்த கபிலர் என்னும் புலவர், வள்ளல் பாரியைப் போற்றிப் பாடியுள்ளார். புகழ்மிகு பாரி இறந்த பிறகு, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆட்சிக்கு வந்தமை கபிலருடைய பாடல்களால் தெரியவருகின்றது.

கபிலர் இருங்கோவேளைக (இருங்கோவேள் II) குறிப்பிட்டுள்ளார்.[380] சிறப்புமிகு ஏழு வள்ளல்களுள் தலைசிறந்த குறுநில மன்னனான பாரி, கபிலரின் நெருங்கிய நண்பனும் புரவலனும் ஆவான்.[381] கொல்லிமலை ஓரியை, மலையமான் திருமுடிக்காரி கொன்றுவிட்டதைக் கபிலர் வருத்தத்தோடு தெரிவிக்கிறார்.[382] அதியமான் நெடுமான் அஞ்சி எனப்படும் அதிகனையும் II அவனுடைய பகைவனும், தகடூர்ப் போரில் வீரமரணம் எய்திய வனுமான பெருஞ்சேரல் இரும்பொறையின் படைத் தலைவனையும் அரிசில்கிழார் பாடியுள்ளார்.[383]

பெருங்குன்றூர்கிழார் என்னும் புலவர் பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தைப் பாடியவராவார். இவர் மையூர்கிழானைச் சேரனோடு தொடர்புபடுத்திக் கூறுகிறார். குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையின் பகைவனாக ஓர் இளம் பழையன்

377 நற். 100 : 8-9
378 ஷை 77:1, 320:6; குறுந். 312:2-3; புறம். 121-124
379 அகம். 209 : 12, 35 : 15; புறம். 46, 125, 126
380 புறம். 201, 202
381 ஷை 105-111, 113-120, 337 : 5-6
382 குறுந். 100 : 3-5; நற். 320 : 4-6
383 பதிற். பதி. 8-4

மாறனை இவர் குறிப்பிடுகிறார்.[384] இந்த இளம்பழையன் மாறனை நாம் மூன்றாம் பழையன் எனலாம். இவனை நக்கீரரும் பாடியுள்ளார்.[385]

கோவூர்கிழார் நலங்கிள்ளியையும், கிள்ளிவளவனையும், தென்னம்பொருப்பனையும்,[386] சிறுகுடிகிழான் பண்ணனையும் (பண்ணன் I) பாடியுள்ளார்.[387] கிள்ளிவளவன், நலங்கிள்ளியின் மகனாகக் கருதப்படுகிறான். கிள்ளிவளவன், மலையமான் திருமுடிக்காரியின் மக்களை யானையின் காலில் இட்டுக் கொல்ல நினைத்தான்.[388] இதனால் திருமுடிக்காரியைப் போரில் கொன்று, அவனுடைய சிறுபிள்ளைகளைக் கிள்ளிவளவன் சிறைப் பிடித்து வந்திருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. இந்தக் கிள்ளிவளவனை மாடலன் மதுரைக் குமரனார் எனும் புலவரும் பாடியுள்ளார்.[389] அவரே சேரமான் குட்டுவன் கோதை யையும்,[390] தோயன் மாறனையும்,[391] ஏனாதி திருக்கிள்ளி யையும்,[392] சோழிய ஏனாதி திருக்குட்டுவனையும்[393] பாடி யுள்ளார்.

இக்காலத்தில் வாழ்ந்தவர் ஔவையார் என்னும் புலவர் பெரு மாட்டியாவார். அவர் அதியமான் நெடுமான் அஞ்சி (அதிகன் II), பொகுட்டு எழினி எனப்படும் அதியமான் III,[394] தொண்டை மான்,[395] நாஞ்சில் வள்ளுவன்,[396] முடியன்,[397] பாணன் II[398] என்னும் வள்ளல்களையும் சிற்றரசர்களையும் பாடியுள்ளார்.

மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவரும் இக்காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். அவர் கிள்ளிவளவன், அவியன், (பரணர், கபிலர், கோவூர்கிழார் ஆகியோரால் பாடப்பட்டவன்.) திருமுடிக்காரி,[399] அவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்தவனாகிய சோழிய ஏனாதி திருக்கண்ணன்[400] ஆகியோரையும் பாடி யுள்ளார்.

---

384 பதிற். பதி. 9 : 7
385 அகம். 346 : 19
386 புறம். 33, 41
387 மே. 70 : 13
388 மே. 46
389 மே. 61
390 மே. 54
391 மே. 180
392 மே. 167
393 மே. 394
394 மே. 87, 95, 97, 103, 206, 315, 392, 96, 102, குறுந். 80 : 5, 91 : 6; நற். 381 : 7
395 மே. 185
396 மே. 140
397 நற். 390 : 9
398 மே. 309
399 புறம். 126
400 மே. 174

கல்லாடனார் எனும் புலவரும் அகுதை,[401] ஓரி,[402] கரி,[403] நன்னன்[404] பாணன்[405] போன்றோரைப் பாடியுள்ளார். கதப்பிள்ளையார் எனும் புலவர் இக்காலத்தைச் சேர்ந்த கந்தன் எனும் நாஞ்சில் வள்ளுவனை (நாஞ்சில் வள்ளுவன்!) தம் பாடல்களில் குறிப்பிட்டு உள்ளார்.[406] மற்றும் அந்துவன்,[407] குறும்பியன்,[408] அவியன்[409] இக்காலத்தைச் சேர்ந்தவராவர். ஐயூர் முடவனார் எனும் புலவர் ஆதன் எழினியையும்[410] தாமான் தோன்றிக்கோவையும்[411] பாடியுள்ளார்.

முரசு முழங்கு தானை மூவேந்தர் மூவரும் பாரியின் பறம்பு மலையை முற்றுகையிட்டதையும், பிறகு பாரியுடன் அவர்கள் போரிட்டதையும் அறிகிறோம்.[412] ஆனால், அந்த 'மூவேந்தர்' யார்? என்பதை அறிய இயலவில்லை. மேற்கண்ட சோழநாட்டு அரசியல் நிலையும், அடுத்த காலக்கட்டத்தால் தெரியவரும் பாண்டிய நாட்டு அரசியல் நிலையும். சோழன் கிள்ளிவளவனும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் (நெடுஞ்செழியன் I) பாரியோடு போரிட்டிருக்கலாம் என்னும் எண்ணத்தை எழச்செய்கின்றன. சேரநாட்டில், வஞ்சிப்பகுதியைக் (குட்டநாட்டை) குட்டுவன் கோதையும், தொண்டிப் பகுதியைச் (குடநாட்டை) செல்வக்கடுங்கோ வாழியாதனும் செங்குட்டுவனுக்குப் பிறகு சமகாலத்தில் ஆட்சி புரிந்துள்ளனர்.[413] இவ்விரு அரசர்களுள் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தில் கபிலர் பாடியுள்ளார். பாரியின் ஆருயிர் நண்பரான கபிலர், பாரி இறந்த பிறகே செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடியுள்ளார். அப் பாடல்களில் பாரியின் பகைவனாக ஓரிடத்திலும் அவனைக் குறிப்பிடவில்லை[414] ஆனால், மாடலன் மதுரைக் குமரனார் அதே காலத்தில் வாழ்ந்த சேரமான் குட்டுவன் கோதையைப் புகழ்ந்து பாடியுள்ளார்.[415] இந்தச் சேரமன்னன் ஒருகால், பாரியை எதிர்த்துப் போரிட்ட சேரவேந்தனாக இருத்தல்கூடும்.

---

401 அகம். 113 : 4
402 மே. 209 : 14
403 மே. 209 : 12
404 மே. 208 : 14
405 மே. 113 : 17
406 புறம். 380
407 பதிற். பதி. 7 : 2
408 அகம். 162 : 9
409 மே. 271 : 12
410 மே. 216 : 14
411 புறம். 399
412 அகம். 78 : 21; புறம். 109–117
413 Sesha Aiyer, K. G., *Cera Kings of the Sangam Period*, p. 128
414 'மாவண் பாரி . . . வாராச் சேண்புலம் படர்ந்தோன்' (பதிற். 61 : 8-10)
415 புறம். 54

போரிலே, பாரி வீரமரணம் அடைந்ததையே பாரியின் மகளிர் பாடிய பாடலும்[416] கபிலர் பாடியுள்ள பாடல்களும்[417] தெரிவிக்கின்றன. எனவே, புறநானூற்றின் பழைய உரையாசிரியர் கருதுவதைப்போல மூவேந்தர்கள் பாரியை வஞ்சனையால்[418] கொன்றுவிட்டனர் என்பதற்கு, நமக்குக் கிடைத்துள்ள சங்கப் பாடல்களில் யாதொருவகையான அகச்சான்றும் கிடைக்கப்பெறவில்லை.

இக்காலத்தில் கொங்கர், மழவர், கோசர், வேளிர் என்னும் குடிகளைச் சேர்ந்தவர்கள் பலர் ஆற்றல்மிக்க சிற்றரசர்களாக விளங்கினர்.[419]

பாண்டியர் நன்மாறன் காலத்திய குறுநில மன்னர்

கிள்ளிவளவனைப் பாடிய காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் என்னும் புலவர், பிற்காலத்தில் பாண்டியன் இலவந்திகைப் பள்ளியில் துஞ்சிய நன்மாறனையும் பாடியுள்ளார்.[420] இந்த நன்மாறன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்குப் (நெடுஞ்செழியன் I) பின்னர், அரசுகட்டில் ஏறியவனாக இருத்தல் கூடும். 'நன்மாறன்' என்னும் அடையடுத்த சிறப்புப் பெயர், அவனுடைய முன்னோன் கண்ணகிக்கு இழைத்த அநீதியால் பழிப்புக்கு ஆளானதிலிருந்து 'இவன் வேறுபட்டவன்; நல்லவன்' என்னும் கருத்தை உணர்த்தி வழங்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

கிள்ளிவளவன் செங்குட்டுவன் காலத்தில் இளைஞனாக இருந்து, பின்னரே அரசுகட்டில் ஏறியவனாதல் வேண்டும். ஏனெனில், செங்குட்டுவன் காலத்திய புலவர்கள் யாருமே கிள்ளிவளவனைக் குறிப்பிடவில்லை. எனவே, கிள்ளிவளவன், சேரன்

---

416 புறம். 112

417 மே. 113-116

418 மே. 112 உரையில்—''ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும் வஞ்சித்துக் கொன்றமையின், 'வென்றெறி முரசின் வேந்தர்' என்றது ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது'' என்று உரையாசிரியர் மொழிந்துள்ளார். புறநானூறு மூலமும் உரையும், உ. வே. சாமிநாதையர் பதிப்பு, 1971, பக். 226

419 புறம். 130 : 5; பதிற். 22 : 15; அகம். 35 : 4, 337 : 11; நற். 52 : 9; அகம். 216 : 11; புறம். 283 : 6, 169 : 9; குறுந். 15 : 3; பதிற். 88 : 13

420 புறம். 57, 59—இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனும் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனும் ஒருவராகவே இருத்தல்வேண்டும். காண்க : சதாசிவ பண்டாரத்தார், தி. வை., 'பாண்டியர் வரலாறு', பக். 22

செங்குட்டுவனுக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவனாவான்; இதனைப் 'பாரியின் காலத்திய குறுநில மன்னர்' என்னும் பகுதியில் முன்னரே கண்டோம்.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை ஆலூர் மூலங்கிழார் பாடியுள்ளார்.[421] நன்மாறனைப் பாடிய மற்றொரு புலவர், நக்கீரராவார்.[422] அவர் கிள்ளிவளவனை இறந்த காலத்தில் குறிப்பிடுகிறார்.[423] அதே சமயத்தில் நன்மாறனுக்குப் பின்னர்ப் பாண்டியரின் அரியணை ஏறிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை, கிள்ளிவளவனைக் குறிப்பிடும் புலவர்களுள் இவர் ஒருவரே பாடியுள்ளார்.[424] இதனால், இவர் கிள்ளிவளவன் காலத்தையொட்டி வாழ்ந்தவர் என்பது புலனாகின்றது. இதை அடிப்படையாகக்கொண்டு பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைக் கிள்ளிவளவனுக்கு அடுத்த தலைமுறையில் வாழ்ந்தவனாகக் கூறலாம்.

இப் பாண்டிய வேந்தன் காலத்தில், மல்லிகிழான் காரியாதி,[425] பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன்,[426] ஆய்[427] (அண்டிரன்), பிட்டங்கொற்றன்,[428] இளம்பல் கோசர்[429] என்னும் குறுநில மன்னர் சிறப்புற்று விளங்கினர்.

இரண்டாம் நெடுஞ்செழியன் காலத்திய குறுநில மன்னர்

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை, இரண்டாம் நெடுஞ்செழியன் எனலாம்.[430] இவனை மேற்கண்ட நன்மாறனின் மகன் என்பர். இப் பாண்டிய வேந்தன் காலத்திய குறுநில மன்னரைப் பின்வருமாறு கால வரன்முறைப்படுத்தலாம்.

இக்காலத்தின் பெருஞ்சிறப்புமிகு புலவர்கள் மாங்குடிகிழார் எனப்படும் மாங்குடி மருதனாரும், நக்கீரருமாவர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சியிலும், புறநானூற்றிலும்[431] மாங்குடி மருதனார்

421 புறம். 196
422 மே. 56—இவர் கிள்ளிவளவனையும் பாடியுள்ளார் (புறம். 38, 40)
423 அகம். 346
424 மே. 346
425 புறம். 177
426 மே. 166
427 அகம். 152 : 18, 198 : 14; புறம். 127-129, 241, 374; நற். 237
428 புறம். 170, 172
429 அகம். 216 : 11; புற. 396 : 7
430 புறம். 24
431 மே. 372

போற்றிப் பாடியுள்ளார். மோகூரை ஆண்ட பழையன் மாறனை, இவர் குறிப்பிடுகிறார்.[432] இப் பழையனை, நாம் பழையன் III என முன்னரே குறிப்பிட்டு உள்ளோம், இப் பழையனுடைய அரசவையைக் கோசர்கள் அணிசெய்தனர்.[433] அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய அழும்பில் சிற்றரசன் மானவிறல்வேள்,[434] வேளிர்களின் குடியைச் சேர்ந்தவனாவான்.

மற்றொரு பாடலில் வாட்டாற்று எழினியாதனை மாங்குடி கிழார் போற்றிப் பாடியுள்ளார்.[435] மதுரைக்காஞ்சியில் பெருஞ் செல்வத்திற்கு அதிபதியாக விளங்கிய வாணன்[436] என்பானையும் அவர் குறிப்பிடுகிறார். இவன் பாண்டிய நாட்டிலிருந்து சிறுகுடி என்னும் ஊரின் தலைவனாக விளங்கினான்; தென்னாட்டுப் பரதவரை நெடுஞ்செழியன் தோற்கடித்தான்.[437] வேளிர் தலை வர்க்குரிய மிழலைக் கூற்றத்தையும் முத்தூற்றுக் கூற்றத்தையும் கைப்பற்றி நெடுஞ்செழியன் தன் ஆட்சியை விரிவுபடுத்தினான்.[438]

தம்முடைய காலத்திற்கு மிகவும் அண்மையில், கபிலரும் பாரியும் வாழ்ந்ததாக நக்கீரர் குறிப்பிடுகிறார்.[439] அவர், பத்துப் பாட்டுள் தலைசிறந்த பாட்டான 'நெடுநல்வாடை'யைப் பாடி யுள்ளார். அப் பாட்டுடைத் தலைவன் நெடுஞ்செழியன் II என் பது யாவரும் அறிந்த உண்மை. அகநானூற்றுப் பாடல் ஒன்றில், நெடுஞ்செழியனை எதிர்த்துத் தலையாலங்கானத்தில் போரிட்ட மன்னரை நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். சேரலன் (சேரவேந்தன்), செம்பியன் (சோழவேந்தன்), திதியன் II, எழினி (அதிகன் III), எருமையூரன், இருங்கோவேண்மான் (இருங்கோவேள் II), பொரு நன் (கோடைப்பொருநன் I) என்போர் அம் மன்னராவர்.[440] மற்றொரு பாடலில் கிள்ளிவளவனிடத்துப் பழையன் மாறன் தோல்வியுற்றதை நக்கீரர் சுட்டுகிறார்.[441] இவன், பழையன் III எனப்பட்டவனே யாவான்.

நெடுஞ்செழியனின் சமகாலப் புலவர்களுள் கல்லாடனார் ஒருவராவார்.[442] அப் புலவர் நெடுங்காலம் வாழ்ந்தவராகத் தோன்றுகிறார். அவர் அம்பர்கிழான் அருவந்தையையும்[443] பொறையாற்றுகிழான் என்னும் குறுநில மன்னனையும் பாடி

---

432 மதுரைக். 508
433 மதுரைக். 508-509
434 ஷை. 344, மலைபடு. 164
435 புறம். 396 : 13
436 மதுரைக். 203
437 ஷை. 144
438 புறம். 24 : 19-23
439 அகம். 78 : 22
440 ஷை. 36 ; 13-19
441 ஷை. 346 : 19
442 புறம். 23; 371
443 ஷை. 385

யுள்ளார்.[444] மற்றும் அன்னி,[445] பாணன் II,[446] ஏறைக்கோன்,[447] நாலைகிழான்,[448] தூங்கல்,[449] எவ்வி II[450] என்னும் சிற்றரசர்களும் இக்காலத்தில் சிறப்புற்று விளங்கினர்.

மதுரைக்காஞ்சியில், நன்னனுடைய பிறந்தநாள் விழாவை மாங்குடி மருதனார் குறிப்பிடுகிறார். இந்த நன்னன் வட ஆர்க்காட்டு மாவட்டத்தில் உள்ள செங்கத்தை (செங்கண்மா) ஆண்டவனாவான். இவன் நன்னன் என்பவனுடைய மகனான நன்னன் (நன்னன் சேய் நன்னன்) எனப்படுகிறான்.[451] இவனை நாம் நான்காம் நன்னன் எனலாம். மாங்குடிகிழார் இந்த நன்னனைச் சமகாலத்தவனாகக் குறிப்பிடுவதால், இவன் இரண்டாம் நெடுஞ்செழியனுடைய காலத்தில் வாழ்ந்தவன் என்பது புலனாகின்றது. இவனைப் பத்துப்பாட்டின் இறுதிப் பாட்டாகிய 'மலைபடுகடாம்' என்பதில், இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் போற்றிப் பாடியுள்ளார்.[452]

பிற சமகாலப் புலவர்கள் எல்லாரும் இரண்டாம் நெடுஞ்செழியனையும் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையையுமே பாடியுள்ளனர். இந் நெடுஞ்செழியனைப்பற்றிய பாடல்களிலிருந்து வான்புகழ் கொண்ட வள்ளல்கள் எழுவருள் யாருமே, அக்காலத்தில் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. எனவே, நெடுஞ்செழியன் II பாரி, காரி, அதியமான் போன்ற பொன்றாப் புகழ்மிகு வள்ளல்களுக்குக் காலத்தால் பிற்பட்டவன் என்பது புலனாகின்றது.

உக்கிரப் பெருவழுதியின் காலத்திய குறுநில மன்னர்

இரண்டாம் நெடுஞ்செழியன் காலத்திற்குப் பிறகு சிறப்புற்று விளங்கிய பாண்டிய வேந்தன் 'கானப்பேரெயில்' கடந்த உக்கிரப் பெருவழுதியாவான். இவனை இரண்டாம் நெடுஞ்செழியனுடைய மகன் என்பாரும் உளர்.[453] இவனை ஐயூர் மூலங்கிழாரும், ஔவையாரும் பாடியுள்ளனர். வேங்கைமார்பன் என்னும் குறுநில மன்னனை உக்கிரப் பெருவழுதி, போரில் தோற்கடித்

444 புறம். 391
445 அகம். 126 : 16
446 ஷை 113 : 17
447 புறம். 157
448 ஷை 179
449 அகம். 227 : 16
450 ஷை 126 : 13; புறம். 24 : 18
451 மதுரைக். 618 : 19
452 மலைபடு. கொளு
453 சதாசிவ பண்டாரத்தார், தி. வை., மு. கு. நூ., பக். 28

துள்ளான்.[454] நெடுஞ்செழியன் II காலத்திற்கு முன்பிருந்தே, ஔவையார் வாழ்ந்ததாகத் தெரிகிறது. சங்ககால வள்ளல்கள் எழுவருள் இரண்டாம் அதியமானையும் பாரியையும் அவர் பாடியுள்ளமை இக் கருத்தை அரண் செய்கிறது.[455] அக்காலத்தில் ஔவையார் நடுத்தர வயதினராக இருந்திருத்தல் வேண்டும்.

அதியமானின் மகனான பொகுட்டு எழினி (அதிகன் III),[456] தொண்டைமான் II,[457] நாஞ்சில் வள்ளுவன்,[458] சேரமான் மாவண்கோ,[459] சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, உக்கிரப்பெருவழுதி ஆகியோரையும் ஔவையார் பாடியுள்ளார். இறுதியாகக் குறிப்பிடப்பட்ட வேந்தர் மூவரையும் ஒன்றாக ஓரிடத்தில் கண்டபொழுது அப் பெருமாட்டியார் அவர்களை வியந்து பாராட்டியுள்ளார்.[460] இதனால், சேரமான் மாவண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பாண்டியன் உக்கிரப்பெருவழுதி ஆகிய மூவரும் சமகாலத்தவர் என்பது எளிதிற் புலனாகின்றது.

நெடுஞ்செழியன் காலத்தைச் சேர்ந்த நக்கீரர், இக் காலத்திலும் உயிர் வாழ்ந்துள்ளார். அவர் பழையன் III,[461] அருமன்,[462] தழும்பன் II,[463] (சோழ நாட்டுப் பிடவூர்கிழான் மகன்) பெருஞ்சாத்தன் II,[464] அதிகன்[465] என்னும் சிற்றரசர்களையும் பாடியுள்ளார். இக் காலக்கட்டத்தில் சிறப்புற்று விளங்கிய மற்றொரு புலவர் மருதன் இளநாகனார் ஆவார். இந் நாகனார், மாங்குடி மருதனாரின் மகனாகக் கருதப்படுகிறார். இவர் பாண்டிய வேந்தன் நெடுஞ்செழியன் II, உக்கிரப்பெருவழுதி ஆகிய இருவரையும் பாடியுள்ளார். மற்றும் கழுவுள்,[466] நாஞ்சில் வள்ளுவன்,[467] பிட்டன்,[468] வாணன்,[469] அந்துவன் கீரன்[470] போன்ற அரசர்களையும் பாடியுள்ளார்.

ஆலம் பேரிசாத்தனார் எனும் புலவர் பிட்டன்,[471] கடலன்[472] என்னும் அரசர்களைத் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இக்

454 புறம். 21 : 9
455 மே. 21, 87, 95, 97, 103, 104, 206, 231, 232, 235, 315
456 மே. 96, 102, 393
457 மே. 9 : 5
458 மே. 140
459 மே. 367
460 மே. 367
461 அகம். 346 : 19
462 தற். 367 : 6
463 அகம். 227 : 17
464 புறம். 395
465 அகம். 36 : 15
466 மே. 365 : 12
467 புறம். 138, 139
468 அகம். 77 : 16
469 மே. 269 : 22
470 மே. 59 : 12
471 மே. 143 : 12
472 மே. 81 : 13

காலத்தைச் சேர்ந்த உலோச்சனார் பெரியன்[473] என்னும் சிற்றரசனைச் சிறப்பித்துள்ளார். கள்ளில் ஆத்திரையனார் ஆதி அருமன்,[474] ஆதனுங்கன்[475] என்னும் மன்னர்களைப் பாடியுள்ளார். குன்றூர்கிழார் மகனார் நெடுவேளாதனைக்[476] குறிப்பிட்டுள்ளார். மேலும் தந்துமாறன்,[477] வல்லார்கிழான் பண்ணன் (பண்ணன் II),[478] சேரமான் வஞ்சன்,[479] ஆதன் எழினி,[480] கொடுமிடல்[481] என்னும் குறுநிலத் தலைவர்களும் இக்காலத்தில் சிறப்புற்று விளங்கினர்.

குமணன் காலத்திய குறுநில மன்னர்

சங்ககாலத்தின் கடைப்பகுதியில் மூவேந்தரின் ஆட்சி மறையலாயிற்று. அக் காலக்கட்டத்தில், இரண்டு குறுநில மன்னர்கள் சிறப்புற்று விளங்கினர். ஓய்மானாட்டு நல்லியக்கோடன் பெருமைமிகு சிற்றரசனாவான். சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியரான நத்தத்தனார், முப்பெரும் வேந்தர்களின் பொற்கால ஆட்சி ஒரு முடிவிற்கு வந்துவிட்டதையும், புகழ்வாய்ந்த வள்ளல்களாக விளங்கிய குறுநில மன்னர்கள் அனைவரும் மாண்டு மறைந்ததையும் மிகுந்த வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார். மறைந்துவிட்ட வேந்தரையும் குறுநில மன்னரையும்போல, கலைஞர்களையும் புலவர்களையும் போற்றி ஆதரிக்கும் பொறுப்பு நல்லியக்கோடனைச் சார்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மற்றும், இமயத்தில் வில்லின் சின்னத்தைப் பொறித்துத் திரும்பிய குட்டுவன் காலமும் கழிந்துபோயிற்று எனவும், 'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரையும்' வறிதாயிற்று எனவும் அவர் மனம் நைந்துருகுகிறார்.[482]

அவர் நல்லியாதன், வில்லியாதன் என்னும் இருவரும் ஓய்மானாட்டு நல்லியக்கோடனின் மூதாதையர் என்று குறிப்பிட்டுள்ளார்.[483]

சங்ககாலத்தின் கடைசி நாள்களில் பெருஞ்சிறப்பு வாய்ந்த வள்ளலாக விளங்கியவன் குமணன் ஆவான். அவன் முதிர மலைப் பகுதியை ஆண்ட சிற்றரசன் என்பதை நாம் முன்னரே

473 நற். 131 : 7
474 குறுந். 293 : 4
475 புறம். 175
476 ஷை. 338
477 ஷை. 360
478 ஷை. 181
479 ஷை. 398
480 அகம். 216 : 14
481 பதிற். 32 : 10
482 சிறுபாண். 41–42
483 ஷை. 101-117; புறம். 376, 379

கண்டோம். அவனைப் பெருஞ்சித்திரனார், பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர்கள் போற்றிப் பாடியுள்ளனர்.[484] புலவரின் வறுமையைப் போக்குவதற்குத் தன் தம்பியால் (இளங் குமணனால்) விலைமதிக்கப்பட்ட தன் தலையைக் கொடுத்துதவ முன்வந்த பெருங்கொடையாளன் குமணன் ஆவான்.[485]

பழிமலைந்த நன்னன் III வழிவந்த கண்ணூரக்கோவையும் இளவிச்சிக்கோவையும் (விச்சிக்கோ II) இப் பெருந்தலைச் சாத்தனார் பாடியுள்ளார்.[486] இப் புலவரே பண்ணி எனும் கடியநெடு வேட்டுவனையும் (கோடைப்பொருநன் II) மூவனையும் சுட்டிச் செல்லுகிறார்.[487] வெளிமான் என்னும் வேளிர்குலத் தலைவனை யும் அவனுடைய இளவலான இளவெளிமானையும் பெருஞ் சித்திரனார்[488] பாடியுள்ளார். வெளிமான் இறந்தபொழுது இவர் மனம் நைந்துருகியுள்ளார்.[489] நன்னாகனார் என்னும் புலவர் கரும்பனூர் கிழானைப் பாடியுள்ளார்.[490]

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் புகழ்மிகு குமணனை ஐந்து பாடல்களில் சிறப்பித்துள்ளார்.[491] 'பறம்பிற் கோமான் பாரி' முதல், 'கொள்ளார் ஓட்டிய நள்ளி' வரையுள்ள ஏழு வள்ளல்கள் மாய்ந்த பிறகு, குமணனே வரையாது வழங்கும் வள்ளலாக விளங்குகின்றான் என்று சித்திரனார் சித்திரித்துள்ளார். இப் பாடற் குறிப்புகள், சங்ககாலத்தின் கடைசி நாள்களில் தமிழ கத்தின் அரசியல் நிலையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. கொங்குநாட்டுச் சிற்றரசனான குமணனும், தொண்டைநாட்டுக் குறுநில மன்னனான நல்லியக்கோடனுமே அக்காலத்தில் சிறப்பு மிக்க மன்னர்களாக விளங்கியமை தெளிவாகப் புலனாகின்றது.

தொகுப்புரை

நமக்குக் கிடைத்துள்ள அடிப்படைச் சான்றுகளைக்கொண்டு மூப்பெருவேந்தர் குடியைச் சேர்ந்த, பேராற்றல் வாய்ந்த பேரரசர் களின் காலத்தையும், அக்காலத்தில் நிகழ்ந்த போர்களிலும் வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்ட ஏராளமான குறுநில மன்னர், சிற்றரசர் முதலியோரையும், கால வரன்முறைப்படுத்தியுள்ளோம். அவர்களிடையே நிலவிய தொடர்பைக்கொண்டு, பத்துத் தலை முறையினராக அவர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

---

484 புறம். 158-165
485 மே 165 : 10-15
486 மே 151
487 அகம். 13 : 11; புறம். 205, 209
488 புறம். 162, 207, 237, 238
489 மே 238
490 மே 381, 384
491 மே 158-163

குறுநில மன்னரை இணைக்கும் தொடர்புள்ள நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து, அவற்றின் அடிப்படையில், தெளிவாக நாம் இனம் கண்டுகொள்ளக்கூடிய அளவில், சங்ககால அரசர்களின் பத்துத் தலைமுறைகளை நம்மால் கணிக்க இயலுகிறது. முதலாம் கரிகாலன் காலத்திற்கு முற்பட்ட தலைமுறையிலிருந்து குமணன் காலம் வரையில் அந்தப் பத்துத் தலைமுறைகளைச் சேர்ந்த குறுநில மன்னர்களை வகைப்படுத்தியுள்ளோம். இக் காலக்கட்டத்தைத் தமிழக வரலாற்றில் சிறப்பாகப் பேசப்படும் சங்ககாலமாகக் கொள்ளலாம். இதுவரை, நாம் ஆய்ந்து கண்ட சங்ககாலக் குறுநில மன்னர்களின் காலவரன்முறையை அடுத்துள்ள அட்டவணையில் தெளிவாகக் காணலாம்.

சில புலவர்கள் இரண்டு, மூன்று அரசத் தலைமுறைகள் உயிருடன் இருந்துள்ளனர். இதைப் போன்றே குறுநில மன்னர் சிலரும், இரண்டு மூன்று தலைமுறைகள் வாழ்ந்துள்ளமை பல புலவர்களுடைய பாடல்களினால் புலனாகின்றது. இதனாலேயே சில புலவர்களும், சில குறுநில மன்னர்களும் இரண்டு மூன்று தலைமுறைகளில் இடம்பெற்றுள்ளனர்.

இனக்குழுக்கள்

இந்த வரலாற்றுக் கண்ணோட்டத்திலிருந்து இரு பேர் உண்மைகள் நமக்குப் புலனாகின்றன. சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம் இனக்குழுக்கள் அமைப்பிலிருந்து பையப்பைய வளர்ச்சியுற்று, நிலப்பிரபுத்துவ சமுதாயமாக மாறத் தொடங்கியுள்ளதைக் காணுகின்றோம். இரண்டாவதாக, உருவாகிக்கொண்டிருந்த நிலப்பிரபுத்துவம், தத்தம் அரசுகளை நிறுவின. தங்கள் ஆதிக்கத்தின் கீழ், பிற (இனக்குழுக்களாகப் பெரிதும் விளங்கிய) சிற்றரசுகளைக் கொண்டுவர முயன்றன. அச் சமயங்களில் பெரும் போர்கள் நடைபெற்றன. அப் போர்கள் இருவகைப்பட்டனவாகத் தோன்றுகின்றன. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் பிரதிநிதிகளான மூவேந்தர்களுக்கு இடையில் போட்டியும் பொறாமையும் காரணமாகச் சில போர்கள் நடைபெற்றன. இத்தகைய போர்களில் இனக்குழுக்களில் எச்சமிச்சங்களாக இருந்துவந்த குறுநில மன்னர் தங்களுக்கு எப் பக்கம் சேர்ந்தால் (எந்த அரசனை ஆதரித்தால்), ஆதாயம் அதிகம் கிடைக்குமென்று நம்பினரோ அப் பக்கம், தங்கள் ஆதரவைத் தந்தனர். குறுநில மன்னர்களைத் தங்கள் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்கு வேந்தர்கள் குறுநில மன்னர்களோடு போரிட்டமை இரண்டாவது வகையாகும்.

சங்ககாலக் குறுநில மன்னர்கள் அனைவருமே, யாதானும் ஒரு குடியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இந்தக் குடிகளை இக்காலச் சமூகவியல் கண்ணோட்டத்தில் இனக்குழுக்களாகக் கருதலாம். அதியர்குடி,[492] ஆவியர் குடி,[493] ஓவியர் குடி[494] என்பன முறையே சிறப்புமிகு அதியமான் நெடுமான் அஞ்சி (அதிகன் II), பேகன், நல்லியக்கோடன் போன்றோரால் பெரு வாழ்வு பெற்றன. ஆனால், அதே காலத்தில், இனக்குழுவின் பொதுப் பெயரால் சுட்டப்படும் குடிகள் பல, தமிழக அரசியல் வானில் விண்மீன்களாக ஒளிர்ந்தன.

அவை : (1) எயினர்,[495] (2) ஓவியர்,[496] (3) கங்கர்,[497] (4) கட்டியர்,[498] (5) கள்ளர்,[499] (6) குறவர்,[500] (7) கோசர்,[501] (8) தொண்டையர்,[502] (9) அருவாளர்,[503] (10) பாணர்,[504] (11) பொதுவர்,[505] (12) மழவர்,[506] (13) வாணர்,[507] (14) வேளிர்,[508] (15) பரதவர்[509] என்பன. இவற்றுள் வேளிர் இனக்குழுவில் பல குடிகள் இருந்தன. அவற்றை முன்னர் 'வேளிர்' வரலாற்றில் கண்டோம். அவற்றுள் இருங்கோவேள் குடி, பிற்காலத்தில் 'இருக்குவேளிர்' மரபென்று பெருஞ்சிறப்புப் பெற்றது. திரையரும் தொண்டையரும் ஒரே குடியைச் சேர்ந்தவர்களாவர். இருவரும் தமிழகத்தின் வடபகுதியை ஆண்டவராவர். இவர்களையே 'அருவாளர்' எனவும் சுட்டினர்.

இவை அல்லாமல், இட அடிப்படையில் — வட்டார அடிப்படையில் — பெயர்பெற்ற சில இனக்குழுக்களும் சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கின. இன்றைய கருநாடகத்தின் தென்பகுதியை 'எருமையூரர்'[510] என்னும் சிற்றரசர் ஆட்சிபுரிந்தனர். வடமொழியில் மகிஷமண்டலம் என்று பிற்காலத்தில் (இக் காலத்தில் மைசூர்) வழங்கிய இப் பெயரின் மூலவடிவம் 'எருமைநாடு' என்பதேயாகும்.

---

492 புறம். 93
493 ஷை. 147 : 9
494 சிறுபாண். 122
495 பட்டினப். 275
496 ஷை. 274
497 அகம். 44 : 8
498 ஷை. 44 : 8; குறுந். 11 : 6
499 ஷை. 61 : 11, 342 : 6
500 புறம். 157 : 7
501 ஷை. 396 : 7
502 குறுந். 260 : 6; அகம். 213 : 1
503 பட்டினப். 275
504 அகம். 325
505 பட்டினப். 281 : 4
506 அகம். 1 : 2, 35 : 12
507 ஷை. 117 : 18, 204 : 4
508 புறம். 24 : 21, 210
509 அகம். 340 : 19
510 ஷை. 36 : 17, 115 : 5

குறுநில மன்னர்களின் கால அடைவு

தலை முறை	வேந்தர் அல்லது சிறப்புமிகு சிற்றரசர்	வேந்தரையும் குறுநில மன்னரையும் பாடிய புலவர்கள்	குறுநில மன்னர்கள்	
1.	கரிகாலன் I-க்கு முற்பட்ட காலம்	1. சாத்தந்தையார், 2. நக்கண்ணையார்.	1. அழிசி, 2. தித்தன்,	3. சேந்தன்.
2.	கரிகாலன் I	1. வெண்ணிக் குயத்தியார், 2. கருங்குழலாதனார், 3. குடவாயில் கீரத்தனார், 4. பரணர் (பிற்காலத்தவர்).	1. நன்னன் I, 2. ஏற்றை, 3. அத்தி, 4. கங்கன், 5. கட்டி, 6. புன்றுறை,	7. கணையன் I, 8. பெருஞ்சாத்தன் I, 9. எவ்வி I, 10. பழையன் I, 11. கொங்கர்.
3.	இளஞ்சேட் சென்னி (உருவப்பஃறேர்)	1. பெருங்குன்றூர் கிழார், 2. பரணர்.	1. நன்னன் I, 2. பழையன் I, 3. அதிகன் I, 4. விச்சியர்,	5. ஆவியர், 6. கொங்கர், 7. பூழியர், 8. வேளிர்.
4.	கரிகாலன் II (திருமாவளவன்)	1. பரணர், 2. உருத்திரங்கண்ணனார், 3. காப்பியாற்றுக் காப்பியனார், 4. மாமூலனார்.	1. இருங்கோவேள் I, 2. தொண்டைமான் I, 3. நன்னன் II, 4. கட்டி II, 5. தித்தன் II, 6. திதியன் I, 7. பாணன் I,	13. கண்ணன் எழினி, 14. நெடுவேளாவி, 15. புல்லி, 16. திரையன், 17. பொதுவர், 18. ஒளியர், 19. அருவாளர்.

			8. நள்ளி I,	20. கோசர்,
			9. வேளாவிக் கோமான் பதுமன்,	21. மழவர்,
			10. வண்டன்,	22. வேளிர்.
			11. நெடுமிடல்,	23. கொங்கர்,
			12. பிண்டன்,	24. தொண்டையர்,
				25. எருமையூரன்.
5.	சேரன் செங்குட்டுவன்	1. பரணர்,	1. நன்னன் II,	16. திதியன் I,
		2. கபிலர்,	2. பேகன்,	17. கணையன் II,
		3. அரிசில்கிழார்,	3. ஆய் I,	18. பாணன் I,
		4. பெருங்குன்றூர்கிழார்.	4. காரி,	19. கழுவன் I,
			5. ஆய் II,	20. ஞிமிலி,
			6. ஓரி,	21. அகுதை,
			7. நள்ளி I,	22. எயினன்,
			8. மிஞிலி,	23. மத்தி,
			9. நன்னன் III,	24. ஆட்டன் அத்தி,
			10. அறுகை,	25. கொங்கர்,
			11. தழும்பன் I,	26. கோசர்,
			12. விராஅன்,	27. வேளிர்,
			13. விச்சிக்கோ I,	28. கட்டியர்,
			14. பழையன் I,	29. பூழியர்.
			15. நல்லடி,	
6.	பாரி	1. கபிலர்,	1. இருங்கோவேள் II,	8. திருக்கிள்ளி,
		2. அரிசில்கிழார்,	2. ஓரி,	9. திருக்குட்டுவன்,
		3. பெருங்குன்றூர்கிழார்,	3. காரி,	10. அதிகன் III,
		4. கல்லாடனார்,	4. அதிகன் II,	11. தொண்டைமான் II,
		5. ஔவையார்,	5 பழையன் II,	12. நாஞ்சில் வள்ளுவன் II,
		6. கோவூர்கிழார்,	6 பண்ணன் I,	
		7. மதுரைக்குமரனார்,	7. தோயன்மாறன்,	13. முடியன்,

தலை முறை	வேந்தர் அல்லது சிறப்புமிகு சிற்றரசர்	வேந்தரையும் குறுநில மன்னரையும் பாடிய புலவர்கள்	குறுநில மன்னர்கள்	
		8. கருவூர் கதப்பிள்ளையார், 9. மாறோக்கத்து நப்பசலையார்.	14. பாணன் II, 15. அவியன், 16. திருக்கண்ணன், 17. நன்னன் IV, 18. அகுதை, 19. அந்துவன், 20. குறும்பியன், 21. ஆதன் எழினி, 22. தாமான் தோன்றிக்கோ,	23. மையூர்கிழான், 24. தென்னம் பொருப்பன், 25. மழவர், 26. கோசர், 27. வேளிர், 28. கொங்கர், 29. பூழியர், 30. பாரி.
7.	பாண்டியன் நன்மாறன் (இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய)	1. கல்லாடனார், 2. மூலங்கிழார், 3. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், 4. பேரிசாத்தனார், 5. நக்கீரனார்.	1. மல்லிகிழான் காரியாதி, 2. வெளியன் வின்னந்தாயன், 3. ஆய் II,	4. பிட்டங்கொற்றன், 5. கோசர், 6. கொங்கர், 7. தொண்டையர், 8. எருமை (யூரன்).
8.	நெடுஞ்செழியன் II (தலையாலங்கானத்துச் செருவென்ற)	1. கல்லாடனார், 2. நக்கீரனார், 3. மாங்குடிகிழார் எனப்படும் மாங்குடி மருதனார், 4. குறமகள் இளவெயினி.	1. நன்னன் IV, 2. பழையன் III, 3. மானவிறல்வேள், 4. எழினியாதன், வாட்டாற்று 5. வாணன், 6. திதியன் II,	12. எவ்வி II, 13. பாணன் II, 14. ஏறைக்கோன், 15. நாகன், நாலைகிழான் 16. தூங்கல், 17. கோசர்,

			7. அதிகன் III, 8. இருங்கோவேள் II, 9. கோடைப் பொருநன் I, 10. அருவந்தை அம்பர்கிழான், 11. பொறையாற்று கிழான்,	18. பரதவர், 19. வேளிர், 20. தொண்டையர், 21. மழவர், 22. திரையர், 23. எருமையூரன்.
9.	உக்கிரப் பெருவழுதி (கானப்பேரெயில் கடந்த)	1. ஔவையார், 2. நக்கீரனார், 3. மருதனிளநாகனார், 4. ஐயூர் முடவனார், 5. ஆலம்பேரிசாத்தனார், 6. உலோச்சனார், 7. கள்ளில் ஆத்திரையனார், 8. குன்றூர்கிழார் மகனார்.	1. வேங்கைமார்பன், 2. பழையன் III, 3. அருமன், 4. தழும்பன் II 5. பெருஞ்சாத்தன் II, 6. அதிகன் III, 7. கழுவன் II, 8. நாஞ்சில் வள்ளுவன் II, 9 பிட்டன்கொற்றன், 10. வாணன், 11. அந்துவன்கீரன், 12. கடலன், 13. பெரியன்,	14. கொடுமுடி, 15. ஆதனுங்கன், 16. நெடுவேளாதன், 17. தந்துமாறன், 18. பண்ணன் II, 19. வஞ்சன், 20. ஆதன் எழினி, 21. வேண்மான், 22. மழவர், 23. எருமை (யூரன்), 24. கோசர், 25. பரதவர், 26. வேளிர்.
10.	குமணன் (வேந்தர் யாரும் இல்லாத காலம்)	1. பெருந்தலைச் சாத்தனார், 2. பெருஞ்சித்திரனார், 3. நத்தத்தனார், 4. நன்னாகனார்.	1. நல்லியாதன், 2. வில்லியாதன், 3. நல்லியக்கோடன், 4. குமணன், 5. இளங்குமணன், 6. நள்ளி II, 7. விச்சிக்கோ,	8. கோடைப் பொருநன் II, 9. மூவன், 10. வெளிமான், 11. இளவெளிமான், 12. கரும்பனூர்கிழான்.

இன்றைய நீலகிரி, தருமபுரி, கோயமுத்தூர், சேலம் மாவட்டங்களைக் கொண்ட பகுதிக்குக் 'கொங்கு மண்டலம்' என்னும் பெயர் சங்ககாலத்தின் கடைப்பகுதியில் வழங்கத் தொடங்கியதை நாம் முன்னரே கண்டோம். இம் மண்டலத்தின் சிற்றரசர் 'கொங்கர்' எனப்பட்டனர்.[511]

பூழியர் என்பார்[512] பூழிநாட்டை ஆண்ட சிற்றரசராவர். பூழிநாடு சேரநாட்டிற்கு (குட்டநாட்டிற்கு) வடக்கே, கொண்கான நாட்டிற்குத் தென்மேற்கே இருந்துவரும் நிலப்பரப்பினைச் சங்க காலத்தில் **பூழிநாடு** என்று சுட்டினர். அந்த நாட்டு மக்கள் ஆடு வளர்ப்பில் சிறப்புற்று விளங்கினர். அவர்களைப் பூழியர் என்று குறிப்பிடுவது மரபு. அந்த நாட்டைச் சேரரும் நன்னன் மரபினரும் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டுவருவதில் பேரார்வம் காட்டியுள்ளனர்.

மலையமான்கள்[513] சோழநாடும், சேரநாடும், கொங்குநாடும் சந்திக்கும் இடைப்பகுதியில் குன்றுகள் பல சூழ்ந்த பகுதியை—இன்றைய திருக்கோவலூர் வட்டத்தை—ஆண்ட குறுநில மன்னராவர் என்பதை நாம் முன்னரே கண்டோம். இப் பகுதியில் ஆட்சிபுரிந்தவர்கள் 'மலையமான்கள்' என்று போற்றப்பட்டனர்.

'எருமைநாடு', 'கொங்குநாடு', 'பூழிநாடு', 'மலைநாடு' போன்றவற்றை ஆண்ட குறுநில மன்னர்கள் நாட்டு அமைப்பு அடிப்படையில் எருமையூரர், கொங்கர், பூழியர், மலையமான்கள் என்னும் பெயர்களால் சுட்டப்பெற்றனர் என்பது இங்குக் கருதத் தக்கதாகும்.

இவை யாவும் சங்ககாலத்திய குறுநில மன்னர்களின் தோற்றத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள உதவுகின்றன. பல்வேறு இனக்குழுக்களின் தலைவர்களாக வலிவும் பொலிவும் பெற்றவர்களே, அவ்வவ் வினக்குழுக்களின் தலைவர்களாக விளங்கியவர்களே சிற்றரசர்களாகச் சிறந்தோங்கும் வாய்ப்பைப் பெற்றமை புலனாகின்றது. குறிப்பிட்ட வட்டார இனக்குழுத் தலைவர்கள், அந்தந்த வட்டாரங்களின் தலைவர்களாகப் போற்றப்பெற்றனர். இவ்விரு நிலைகளிலிருந்து வளர்ந்து, படைப்பலமும் உள்ளூர மும் வாய்க்கப்பெற்ற சிற்றரசர்கள், தொண்டைமான் இளந்திரையன், பாரி, காரி, நன்னன் IV போன்றோர் பேராற்றல் வாய்ந்த

---

511 புறம். 130; அகம். 79:5, 253:4; குறுந். 393:9; பதிற். 22:15, 88:19, 90:25
512 அகம். 6:8; குறுந். 163; புறம். 387 : 28; பதிற். 21 : 23, 90 : 27
513 புறம். 46, 123, 124, 125; குறுந். 312; நற். 77 : 1, 100 : 9

நிலப்பிரபுத்துவத்தின் வழிப்பட்ட குறுநில மன்னர்களாகப் பொன்றாப் புகழ்பெற்றனர். இத்தகைய மூவகைப்பட்ட குறுநில மன்னர்களுக்கும் மேம்பட்ட நிலையில், நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் தனிப்பெருந் தலைவர்களான முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் வீறுடன் விளங்கினர்.

சங்ககாலத்தில் சீர்த்தியும் கீர்த்தியும் பெற்று விளங்கிய குறுநில மன்னரின் குடிகள் பல கி. பி. பதினான்காம் நூற்றாண்டு வரையிலும் தமிழகத்தின் அரசியல் அரங்கில் ஓரளவிற்குப் புகழோடு பொலிவுற்றன. தம் குடிகளின் தொன்மைச் சிறப்பையும் மரபுவழிப் பெருமையையும் அவர்கள் போற்றிக் காத்தனர்.

சங்ககாலக் குறுநில மன்னர்களின் மரபுவழியில் வந்த ஆய் மன்னர் (வேணாட்டு ஆய் மரபினர்), அதியமான் மரபினர் (அதிகன்). மலையமான்கள் (மிலாடுடையார், சேதிராயர்), இருங்கோவேள் குடியினர் (கொடும்பாளூர் இருக்குவேளிர்), கட்டியர் குடியினர் (கட்டி முதலியோர்), வாணர் (வாணவரையர்), மழவர் (மழவராயர்) போன்றோர் இசுலாமியப் படையெடுப்பிற்குப் பிறகு, தமிழக அரசியலிலிருந்து மெல்ல மறைந்துவிட்டனர். வரலாற்றுக் காலம் நெடுக, இவர்கள் குறுநில மன்னர்களாகவே வாழ்ந்து மறைந்தமை வியப்பிற்குரிய செய்தி ஆகும். சோழ, பாண்டியப் பேரரசுகளைக் கட்டிக் காப்பதற்கே, இவர்கள் தங்கள் அறிவாற்றல், உழைப்பு, படை, செல்வம் ஆகியவற்றை மனமுவந்து நல்கினர். பேரரசைத் தாங்கிய தூண்களாக விளங்கிய இக் குறுநில மன்னரின் ஆதரவு மறுக்கப்பட்ட சமயங்களில், புறக்கணிக்கப்பட்ட சமயங்களில் அப் பேரரசுகள் சரிந்து வீழ்ந்தன. பிற்காலச் சோழப் பேரரசின் வீழ்ச்சியே இதற்குச் சிறப்புமிக்க தொரு சான்றாகும்.

குறுநில மன்னரின் மாட்சி

சங்ககால வரலாற்றில் குறுநில மன்னர் பெற்றிருந்த இடத்தையும் அவர்கள் இந் நாட்டின் பண்பாட்டை வளர்ப்பதற்கு ஆற்றிய அரும்பணியையும் கோடி காட்டுவது இப் பகுதியின் நோக்கம் ஆகும்.

குறுநில மன்னரின் செல்வாக்கு

கரிகாலர் காலத்தில், அன்றைய சிற்றரசர்கள் சேர, பாண்டிய வேந்தர்களோடு சேர்ந்துகொண்டு, சோழனுடைய ஆதிக்கத்தை வளரவொட்டாமல் தடுக்க முயன்றனர். இவ்வாறே, பாண்டிய

வேந்தன் இரண்டாம் நெடுஞ்செழியன் ஆட்சிக்கு வந்தபொழுது, இருபெரு வேந்தரும் ஐந்து குறுநில மன்னரும் ஒருங்கிணைந்த கூட்டணியை எதிர்த்துப் போரிட வேண்டியதாயிற்று. சேர மன்னர் ஏழு சிற்றரசர்களின் முடிகளை மாலையாகக் கோத்து[514] அணிந்துகொண்டிருந்ததாகத் தொடர்ந்து குறிப்பிடப்படுவதும் சங்ககால அரசியலில் குறுநில மன்னர் பெற்றிருந்த பெரு வாழ்வைத் தெரிவிக்கிறது.

பிற அரசுகள் பேராற்றல் பெற்று வளருவதை விரும்பாத பொழுதும், தன்னுடைய நிலைக்கு—ஆதிக்கத்திற்கு—ஊறு உண்டாகாதவாறு காத்துக்கொள்ள விரும்பியபொழுதும், மூவேந்தர்களுள் யாராயினும் ஒருவர், அல்லது இருவர் ஆற்றல் மிக்க குறுநில மன்னர்களின் உதவியை நாடினர். அவர்களுடைய ஆதரவைத் தங்கள் சார்பாகத் திரட்டினர். தனியரசுகளாக விளங்கிய குறுநில மன்னர்களுடைய உதவியைப் பெற்று, வேந்தர்கள் கூட்டணிகளை அமைத்துக்கொண்ட நிகழ்ச்சி களே,[515] சிற்றரசர்கள் பேராற்றலும் பெருந்திறனும் வாய்ந்தவர் களாக விளங்கினர் என்பதைப் பறைசாற்றுகின்றன. மற்றும் போர்க்கலையில் தேர்ச்சிமிகு வல்லுநர்களாக அவர்கள் விளங் கினர் என்பதையும் அறிவிக்கின்றன. நன்கு பயிற்சிபெற்ற படை களைத் தங்களுக்குரிமையாக அவர்கள் நிலையாகக் காத்துப் போற்றியமையும் புலனாகின்றது. இவ்விடத்தில் ஓர் உண்மையை நாம் நினைவுகூர்தல் வேண்டும். சங்ககாலத்திய தமிழகத்தில், வடஇந்தியாவில் இருந்ததைப்போல, போரிடுவதற்கு என்று தனிப்பட்ட இனமோ, சாதியோ (பண்டைத் தமிழ்ச் சமுதாயத் தில்) இருந்ததில்லை என்பதை நாம் மறக்கலாகாது.

மேற்கண்ட குறுநில மன்னர்களின் வரலாற்றிலிருந்து மற்றும் ஓர் உண்மை அறியப்படுகிறது. உண்மையிலேயே சில குறுநில மன்னர்கள், தனியுரிமை வாய்ந்த தனியரசர்களாக விளங்கினர். தங்கள் விருப்பத்திற்கு இணங்கவே, பகைவர்களான இருபெரு வேந்தர்களுள் ஒருவரைத் தாங்கள் ஆதரிக்கத் துணியும் அளவிற் குத் தன்னுரிமையும், உள்ளவுரமும், படைப்பலமும் பெற்றவர் களாக அவர்கள் வாழ்ந்தனர். தொண்டைமான் இளந்திரையன், நெடுங்காலம் தனியுரிமையுடன் தன்னாட்சி செய்து வந்தான். இரண்டாம் கரிகாலனுடைய ஆதிக்கம் வடக்கே பரவியபொழுது

514 பதிற். 14 : 11, 16 : 17, 40 : 13, 45 : 6
515 அகம். 36 : 44, 125, 246

தான். இளந்திரையனுடைய ஆட்சியுரிமை ஒரு வரம்பிற்குட்பட்ட தாக அமைந்ததைக் காணுகின்றோம்.[516]

மலைநாட்டுக் குறுநில மன்னர்களை 'மலையமான்கள்' எனப் போற்றுவது மரபு. அவர்கள் சோழ வேந்தர்களின் சிற்றரசர்களாக இருந்தனர். மலையமான்களுள் தலைசிறந்து விளங்கியவன் மலையமான் திருமுடிக்காரியாவான். அவன் வலிமைமிக்க தேர்ப்படையைப் பெற்றிருந்தமையால் 'தேர்வண் மலையன்' என்று போற்றப்பட்டான். தன்னுடைய தனி யாண்மைத் தன்னுரிமையை நிலைநாட்ட அவன் முயன்றான்; சேர வேந்தனோடு கூட்டுச் சேர்ந்துகொண்டு, சேரனுக்கு எதிரி யான ஓரியெனும் சிற்றரசனைப் போரில் கொன்றான். ஓரிக்கு உரிய கொல்லிமலைப் பகுதியைச் சேரனுடைய ஆதிக்கத்திற்கு மலையமான் திருமுடிக்காரி மாற்றினான்.[517] இதனால், சோழ வேந்தன் கிள்ளிவளவன் சினந்தெழுந்தான். காரியை அடியோடு அழித்தொழித்தான்.

தகடூர் அதியமான் நெடுமான் அஞ்சியும் (அதிகன் II), கொண்கானங் கிழாராகிய நன்னன் II, நன்னன் III முதலி யோரும் சேர வேந்தர்களுக்கு அச்சத்தை அளிக்கும் குறுநிலத் தலைவர்களாக ஓயாது தொல்லை கொடுத்துவந்தனர். சில சமயங்களில் சேரருடைய மேலாண்மையை முறியடிக்கவும் அவர்கள் முயன்றனர். இதை முன்னரே நாம் கண்டோம். இதனால், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், இச் சிற்றரசர் களை அடக்கி ஒடுக்குவதில் சேர வேந்தர்கள் பேரார்வம் காட்டி யும் வந்தனர்.

பாரியின் பறம்புமலை நாட்டை, மூவேந்தர்கள் நெடுங்காலம் முற்றுகையிட்டிருந்தனர்; கடைசியில் பாரியைத் தோற்கடித்தனர். இச் செய்திகள் சங்கப் பாடல்களில் விரிவாக இடம் பெற்றுள் ளன.[518] இவை யாவும், வேளிர் குடியைச் சேர்ந்த பாரி, பேராற்றல் வாய்ந்தவனாய், தனியுரிமைத் தன்னாட்சி நடத்தி வந்தான் என்பதைத் தெரிவிக்கின்றன. இதனால், மூவேந்தர் களுக்கும் பொதுவான பகைவனாய்ப் பாரி விளங்கினான். இக் காரணத்தால் மூவேந்தர்களும் ஒன்றாகச் சேர்ந்து பாரியின் பறம்பு நாட்டை முற்றுகை இட்டனர். எனினும், எளிதில் அவனைத் தோற்கடிக்க இயலவில்லை. இந்தப் பறம்புமலை முற்றுகைக்குரிய காரணம் யாது? 'தாளிடூஉக் கடந்து வாளம

516 பட்டினப். 276

517 நற். 320; அகம். 209 : 14-15

518 புறம். 105 - 112, 114-120

குழக்கி ஏந்துகோட் டியானை வேந்தர் ஓட்டிய கடும்பரிப் புரவிக் கைவண் பாரி'[519] என்று நக்கீரர் குறிப்பிடுவதனால், போர் மூண்டபொழுது, முதற்போரில் மூவேந்தரையும் புறமிட்டு ஓடுமாறு விரட்டி, பாரி வாகை சூடியிருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. தோற்றோடிய சேர, சோழ, பாண்டியர் மூவரும் மீண்டும் ஒன்றாகத் திரண்டு திட்டமிட்டு அவர்களுடைய படையாற்றலை ஒருமுகப்படுத்திப் பறம்புமலையை முற்றுகை இட்டிருக்கவேண்டும். அம் முற்றுகையை மாவீரனான பாரி, நெடுங்காலம் நீடிக்குமாறு செய்து, பிறகு போரிட்டுள்ளான். போரில், பாரி வீரமரணம் அடைந்தான்.

இத்தகைய நிகழ்ச்சிகள் யாவும் குறைந்தது மூன்று நான்கு குறுநில மன்னர்களாயினும் முடியுடை மூவேந்தர்களைக் காட்டிலும், பேராற்றலும் பெருந்திறனும் வாய்ந்தவர்களாக இருந்திருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன. மற்றும் இக் குறுநில மன்னர்கள் உரிமைமிக்க தனியரசர்களாக விளங்கியமையும் இவற்றால் புலனாகின்றன.

மலையமான் திருமுடிக்காரியின் மகன் மலையமான் திருக்கண்ணன் என்பவனாவான். அவனுடைய காலத்தில், சோழ அரசன் ஒருவன் தன்னுடைய நாட்டைப் பாண்டியனிடம் இழந்து, திருக்கண்ணனுடைய முள்ளூர்க் காட்டில் தலைமறைவாகத் தங்கி இருந்தான். மலையமான் திருக்கண்ணன் பாண்டிய வேந்தனோடு போரிட்டு, வாகை சூடி, சோழ நாட்டை மீட்டுத் தன்னுடைய காட்டில் தலைமறைவாக வாழ்ந்த சோழ வேந்தனிடம் ஒப்படைத்தான் என்பதையும் காணுகின்றோம். 'சோழிய ஏனாதி' என்னும் அவனுடைய பட்டப்பெயரால் மலையமான் திருக்கண்ணன், இச் செயற்கருஞ் செயலுக்குப் பிறகு, சோழ வேந்தனின் படைத்தலைவனாக விளங்கியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. அவனுடைய வீரமும் தீரமும் பெருஞ் சிறப்பு வாய்ந்தனவாகப் புலவரால் போற்றப்பட்டுளளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.[520]

இதுவரை நாம் கண்ட சங்ககால வரலாற்று நிகழ்ச்சிகள் யாவும், சங்ககாலத்துக் குறுநில மன்னர்களுள் சிறப்புமிக்க சிலர், மூவேந்தர்களுள் யாருடைய மேலாதிக்கத்திற்கும் உட்பட்ட சிற்றரசர்களாய் விளங்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன. மேலும், அரசியல் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு நடை

519 அகம். 78 : 20-22 520 புறம். 174

பெற்ற போர்களில், இக் குறுநில மன்னர்கள் மாபெருஞ் சக்தியாக வீறுடன் விளங்கினர் என்பதையும், இந் நிகழ்ச்சிகள் தெரிவிக்கின்றன.

பண்டைத் தமிழகத்தில் பேரரசு ஒன்றை நிறுவ முயன்ற பெருவேந்தர்களின் பெருமுயற்சிகளுக்கு, இந்தக் குறுநில மன்னர்களின் தனியரசுகள் சில சமயங்களில், பெருந்தடையாக இருந்துவந்தன. இதற்குச் சங்க இலக்கியத்துள் சான்றுகள் சில உள்ளன.[521]

சங்ககாலத்தில் நடைபெற்ற போர்கள் பல.[522] அவற்றுள் பெரும்பாலானவை சிற்றரசர்களுக்கும் வேந்தர்களுக்கும் இடையே நடைபெற்றவையாகும். ஆற்றல் குலைந்து வீழ்ச்சியுறும் நிலையிலிருந்த சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளின் மேலாண்மையை உடைத்தெறிந்து, தனியுரிமைத் தன்னாட்சியை நிறுவ வேண்டும் எனும் உந்துதலால், குறுநில மன்னர்கள் செயல்பட்டனர். இந்த மனப்போக்கே, அக்காலத்தில் அடிக்கடி போர்கள் நடைபெற்றமைக்குரிய முதன்மையான காரணமாகலாம். ஆனால், இத்தகைய பூசல்களும் போர்களும் சங்ககாலத்தில் ஓய்வு ஒழிச்சலின்றி நடைபெற்றுவந்தன. மூவேந்தர்களுடைய ஆட்சிக் குலைவிற்கும், நலிவிற்கும், வீழ்ச்சிக்கும் இப் போர்களே அடிகோலின. இதை நாம் மறுக்கவோ, மறக்கவோ, மறைக்கவோ இயலாது. மற்றும் குறுநில மன்னர்களின் உறுதுணையும் படையுதவியும் பெற இயலாமற் போனமையால், சங்ககால மூவேந்தனின் அரச மரபுகள் பேரளவிற்கு வலிவுகுன்றிப் போயின. நாளடைவில் அவை மறையத் தொடங்கின.

இந்நிலையில், 'சங்ககாலக் குறுநில மன்னர்கள், தமிழகத்து முடியுடை மூவேந்தர்களுடைய அரசுகளின் நிலைபேற்றிற்கும் முன்னேற்றத்திற்கும் எவ்வகையிலாயினும் உதவிபுரிந்துள்ளார்களா'? எனும் ஐயம் எழுவது இயற்கை. முப்பேரரசுகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் குறுநில மன்னர்கள் பேரளவிற்குக் காரண

---

521 பொருநர். 140-150; மதுரைக். 776; பட்டினப். 276

522 செருப்பாழிப் போர், வெண்ணிப் போர்—1, 2, வாகைப் பறந்தலைப் போர், கழுமலப் போர்-1, வாயில் போர், நேரிவாயில் போர், கூடல் பறந்தலைப்போர், கோவலூர்ப் போர், பறம்புமலைப் போர், குளமுற்றத்துப் போர், காரியாற்றுப் போர், தகடூர்ப் போர், தலையானங்கானத்துப் போர், கானப்பேரெயில் போர், கழுமலப் போர்-2, என்பன சங்ககாலத்திய தமிழகத்தில் நடைபெற்ற சிறப்புமிக்க போர்களாகும். இவற்றில் மூவேந்தர்களின் சார்பில் குறுநில மன்னர்கள் பெரும் பங்கு கொண்டுள்ளனர்.

மாக அமைந்தனர் என ஐயத்திற்கு இடமில்லாமல் கூறலாம். தமிழக அரசுகளினுடைய எல்லைகள் அடிக்கடி மாற்றம் அடைந்ததற்கு, அவர்களே காரணமாக இருந்தனர் என்பதை யாரும் மறுக்க இயலாது.

கலையார்வம்

தமிழகத்தின் 'வீரயுகமாக'ச் சங்ககாலம் போற்றப்படுவதை நாம் முன்னரே கண்டோம். செயல்வீரர்களுக்கே, அக்காலத்திய மக்கள் சமுதாயத்தில் சிறப்பிடம் கொடுத்தனர். செயற்கருஞ் செயல்களால் உண்டாகும் மதிப்பையும் புகழையும் அவர்கள் பெரிதாகப் போற்றினர்.[523] புலனுகர் இன்ப வாழ்க்கையையும், ஆதாயம் கருதிச் செய்யப்படும் முயற்சிமிகு வாழ்க்கையையும் அவர்கள் சிறிப்புமிக்கனவாகக் கருதவில்லை. அவர்கள் வீர வாழ்வினையே பலவகையிலும் சிறப்புடையதாகப் போற்றினர். எவனொருவன் புகழுக்காக உயிரைக் கொடுக்க முன்வந்தானோ, அவனே மதிப்பிற்குரியவனாகக் கருதப்பட்டான்.

'தமிழருடைய நாகரிக வளர்ச்சியின் முதல் கட்டமான சங்க காலத்தில், வீரம் ஒருவகைச் சமய உணர்வைப்போல மதித்துப் போற்றப்பட்டது. கடுமையான வீரதீரச் செயல்களுக்கும், அருள்கனிந்த அறச்செயல்களுக்கும் புகழார்வமே பேரளவிற்கு உந்துதல் சக்தியாக அமைந்திருந்தது'[524]

எனும் விபுலாநந்த அடிகளின் கருத்து, சங்ககாலத் தமிழர்களின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

சங்ககாலக் குறுநில மன்னர்கள் மாபெரும் வீரர்களாய் விளங்கியதோடு அமையவில்லை. கலைகளையும் கலைஞர் களையும் போற்றியாதரிப்பதில், ஒப்பாரும் மிக்காரும் இல்லாக் கொடை வள்ளல்களாகவும் பொன்றாப் புகழை அவர்கள் பெற்றனர். அவர்கள் பாணர்களையும் பாடினியரையும், புலவர் களையும் பொருநரையும் போற்றியாதரித்ததில் வேறு எத்தகைய உள்நோக்கமும் உறைந்து கிடந்ததாகத் தெரியவில்லை. இதை, அவர்கள் ஒரு 'புனிதமான கடமை'யாகவே கருதினர். எனவே, 'வரையாது வழங்கும் வள்ளன்மை' சிறப்புமிகு குறிக்கோளாக அவர்களால் போற்றப்பட்டதில் வியப்பு இல்லை.

---

523 புறம். 182 : 5

524 Swami Vipulananda, *The Development of Tamilian Religious Thought in Tamil Culture*, Vol. V, 1956, p. 254

கானகத்தில் குளிரால் நடுங்கிய மயிலுக்குத் தன் போர்வையினைப் போர்த்திய பேகன் என்னும் குறுநில மன்னனுடைய வாழ்க்கையின் குறிக்கோளைப் பரணர் எனும் பெரும்புலவர்,

'... ... ... பேகன்
எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர், வறுமை நோக்கின்று அவன் கைவண் மையே'[525]

என்று போற்றிப் புகழ்ந்துள்ளார். பிற உயிர்களுடைய துன்பத்தைப் போக்கவேண்டும் என்னும் அருளுணர்வே பேகனுடைய சிறப்புமிகு இலட்சியமாக இருந்தமை இதனால் புலனாகின்றது.

போரிலே பகைவர்களைக் கொல்லுவதில் எந்த அளவிற்கு அஞ்சாநெஞ்சம் வாய்ந்தவர்களாகப் பண்டைத் தமிழகத்தின் குறுநில மன்னர்கள் விளங்கினரோ, அதைவிடப் பிறருடைய துன்பத்தைப் போக்க முயலும் அருள் உணர்வை அவர்கள் மிகுதியாகப் பெற்றிருந்தனர். அவர்களைத் 'தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளர்'[526] என்று அடிக்கடி புலவர்கள் பாராட்டுவது மரபாகும்.

கானமயிலுக்குக் கலிங்கம் (போர்வை) நல்கினான் பேகன்; கொழுகொம்பு இல்லாமல் காற்றால் அலைப்புண்ட முல்லைக் கொடிக்குத் தன் பெருந்தேரினையே கொடுத்து, பறம்பிற் கோமான் பாரி மகிழ்ந்தான்; இரவலர்க்கு வரையாது பொன்னையும் பொருளையும் இன்மொழியோடு காரி வழங்கினான்; தன் மனைவியின் தாலியைத் தவிர, மற்றப் பொருள்களை எல்லாம் கலைஞர்களுக்கும் புலவர்களுக்கும் கொடுத்துதவினான் ஆய். அமிழ்தினும் சிறந்த கருநெல்லிக் கனியை ஔவைக்குக் கொடுத்து, அறிவு வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றினான் அதியமான் (அதிகன் II); 'இல்லை' என்று தன்னைத் தேடி வந்தவருக்கெல்லாம் 'இல்லை' என்று உரைக்காமல் வாரி வழங்கினான் நள்ளி (நள்ளி II); கூத்தர்க்கும் பாணர்க்கும் தன் நாட்டிலுள்ள பொருளை எல்லாம் ஓரி வரையாது கொடுத்து வான்புகழ் கொண்டான்;[527] வறுமையின் பிடியில் சிக்கிச் சீரழிந்த புலவரைத் தன் தலையைக் கொடுத்துப் பரிசு பெறுமாறு குமணன் வேண்டினான்.[528]

---

525 புறம். 141, 12 15
526 அகம். 51 : 13; புறம். 182 : 8-9
527 புறம். 158:3-7; சிறுபாண். 85-113
528 மே 165 : 12

இவர்கள் எல்லாரும் 'இப்பிறப்பில் செய்யும் நல்வினை மறுபிறப்பிற்கு உதவும் என்னும் எண்ணம் உடைய அறவிலை வணிகராய்'[529] வாழவில்லை. 'கலைகளைப் போற்ற வேண்டுமே' என்னும் நோக்கமும், 'தகுதியுடையோருக்கு உதவவேண்டும், என்னும் எண்ணமும், 'வாழப் பிறந்த மனிதன் வறுமையால் வாட்டமுற்று உயிர்விடக் கூடாது' என்னும் அருள் நெஞ்சமும் சங்ககாலத் தமிழகத்தின் குறுநில மன்னர்களைச் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்னும் கொள்கையோடு வாழுமாறு தூண்டின. அவர்களுடைய அருள்மிகு செயல்களால், அவர்களுக்குப் புகழ் உண்டாயிற்று என்பது உண்மை. ஆனால், புகழ் கிடைக்கும் என்பதற்காக, அவர்கள் இச் செயற்கருஞ் செயல்களைச் செய்யவில்லை.

ஈரம் நிறைந்த வீரர்கள்

இத்தகைய அருள் உள்ளத்தைப் புரிந்துகொள்ள இயலாத ஓர் அறிஞர், 'பாரி, முல்லைக்கொடிக்குத் தேரைக் கொடுத்தது இன்றைய புத்துலக மக்களுக்குப் பொருளற்றதாகத் தோன்றும்' என்று[530] குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், ஓர் உண்மையை நினைவுபடுத்திக்கொள்ளுவது நல்லதாகும். ஆப்பிரிக்காவில் வாம்பர்னே நாட்டுப் பகுதியில், தொழுநோயாளர்களுக்குப் பெருந்தொண்டாற்றியமையால் ஆல்பர்ட் சுவைட்சர் பெரும்புகழ் பெற்றார். அவர் 'உயிர்களை மதித்துப் போற்றுதல்'[531] எனும் கொள்கையை இந்த நூற்றாண்டில் உலகிற்கு அளித்ததோடு, அக் கொள்கைப்படி வாழ்ந்தும் காட்டினார். அவர் வாழ்ந்த பகுதியில் செழித்து வளர்ந்திருந்த 'பசும்புல் தரையில் நடப்பது புல்லுக்குச் செய்யும் பெருந்தீமையாகும்' என்று கருதி, அத்தகைய பசும்புல் தரையில் அவர் நடப்பதற்கும் உலாவுவதற்கும் மறுத்துவிட்டார். இச் செயலை இந்த அறிவியல் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த — வாழும் அறிஞர்கள் மிகச் சிறப்பாகப் போற்றினர்—போற்றுகின்றனர்.

'சுவைட்சரின் செயலை அருட்கனிவு வாய்ந்தது' எனப் போற்றும் இன்றைய உலகம், காட்டில் கொழுகொம்பு இன்றிக் காற்றால் அலைப்புண்டு அல்லல்பட்ட முல்லைக் கொடிக்கு—வாயால் தன் துன்பத்தை எடுத்துரைக்க இயலாத முல்லைக் கொடிக்கு—

---

529 புறம். 134 : 1-2, 141 : 14-15

530 Nilakanta Sastri, K. A., *A Comprehensive History of India*, Vol. II, p. 530

531 'Reverence for Life'

புலவர்களையும் பாணர்களையும்போல வாய்திறந்து புகழ்ந்து பாட இயலாத முல்லைக் கொடிக்கு—தன்னுடைய மணியொலிக்கும் நெடுந்தேரினைக் கொழுகொம்பாகக் கொண்டு துன்பம் தவிர்க்குமாறு பாரி கொடுத்த செயல்[532] பொருளற்ற செயலாகத் தோன்றும் எனக் கூறுவது எவ்வாறு பொருந்தும்? வான்முகிலைக் கண்டு, வண்ணமயில் தோகை விரித்தாடுவதைக் கண்டான் பேகன். அவனுடைய அருள்மயமான உள்ளம், குளிர்தாங்காமல் மயில் நடுங்கி அகவுகிறது என எண்ணியது. தன்னுடைய போர்வையை மயிலுக்குப் போர்த்துமாறு இவ்வுணர்வு அவனைத் தூண்டியது.[533] இச் செயலும் அருள் உணர்வின் வெளிப்பாடேயாகும்.

இத்தகைய அருட்செயல்களில், பிற்காலத்திய தமிழ்மக்கள் உருவாக்கிய 'அருளறக் கொள்கையின்' கருமுதலை நாம் காணுகின்றோம். 'வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடும்' நெஞ்சம் அறவோர்களிடம் அமைவது எளிது. ஆனால், போரினைப் பொழுதுபோக்காகக் கொண்டு நாடாளும் அரசர்களிடத்தில், ஓரறிவு உயிரும் ஐந்தறிவு உயிரும் படும் துன்பத்திற்குக் கசிந்து உருகும் அருளுள்ளம் வாய்க்கப்பெறுதல் அரிய செயலாகும். எனவே, பண்டைத் தமிழ் இனத்தின் 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்னும் சிறப்புமிகு கொள்கை, இத்தகைய அருள் உணர்வின் பரிணாம வளர்ச்சியாகவே தோன்றுகிறது. எனவே, பண்டைத் தமிழக அரசர்களின் கொடைத்திறத்தில் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படை அமைந்திருக்கிறது எனலாம். இக் காரணங்களால், சங்ககாலச் சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் ஆற்றியுள்ள ஆக்கப்பணிகளைச் சிறப்புடையனவாகப் போற்றுவது நேரிய செயலாகும்.

பிற்சேர்க்கை

(அ) குறுநில மன்னர்

1. அகுதை
2. அத்தி
3. அதிகன் I (வேங்கைக் குன்றின் தலைவன்)
4. அதிகன் II (அதியமான் நெடுமான் அஞ்சி)
5. அதிகன் III (பொகுட்டு எழினி)
6. அந்துவன்
7. அந்துவன்கீரன்
8. அருமன், ஆதி
9. அருவந்தை (அம்பர்கிழான்)
10. அவியன்

532 புறம். 200 : 8-11

533 மே 145 : 1-2

11. அழிசி (ஆர்க்காட்டு)
12. அறுகை
13. ஆட்டன் அத்தி
14. ஆதன் எழினி (செல்லிக் கோமான்)
15. ஆதனுங்கன்
16. ஆய் I (ஆய் அண்டிரன்)
17. ஆய் II (ஆய் எயினன்)
18. இருங்கோவேள் I
19. இருங்கோவேள் II
20. இளங்குமணன்
21. இளந்திரையன் (தொண்டைமான் I)
22. இளவெளிமான்
23. எயினன்
24. எவ்வி I (நீடூர்கிழான். பாரிக்கு முற்பட்டவன்)
25. எவ்வி II (நெடுஞ்செழியன் II காலத்தவன்)
26. எழினியாதன் (வாட்டாற்று)
27. ஏறைக்கோன்
28. ஏற்றை
29. ஓரி (வல்வில்)
30. கட்டி I
31. கட்டி II
32. கடவன்
33. கண்ணன் எழினி
34 கணையன் I
35. கணையன் II
36. கரும்பனூர் கிழான்
37. கழுவுள் I
38. கழுவுள் II
39. காரி (மலையமான் திருமுடி)
40. காரியாதி (மல்லிகிழான்)
41. குமணன்
42. குறும்பியன்
43. கொடுமுடி
44. கோடைப்பொருநன் I (கடிய நெடுவேட்டுவன்)
45. கோடைப்பொருநன் II (பண்ணி)
46. சேந்தன் (உறந்தை)
47. ஞிமிலி
48. தந்துமாறன்
49. தழும்பன் I
50. தழும்பன் II
51. தாமான் தோன்றிக்கோ
52. தித்தன் I
53. தித்தன் II
54. திதியன் I
55. திதியன் II
56. திருக்கண்ணன் (சோழிய ஏனாதி)
57. திருக்கிள்ளி
58. திருக்குட்டுவன் (சோழிய ஏனாதி)
59. தூங்கல்
60. தென்னம்பொருப்பன்
61. தொண்டைமான் II
62. தோயன்மாறன்
63. நல்லடி (வல்லங்கிழான்)
64. நல்லியக்கோடன்
65. நள்ளி
66. நள்ளி I (கண்டீரக்கோ)
67. நள்ளி II (இளங்கண்டீரக்கோ)
68. நன்னன் I (உதியன்)
69. நன்னன் II (கொண்கானங்கிழான்)
70. நன்னன் III (புலவரைப் புறக்கணித்த, பெண் கொலை புரிந்தவன்)
71. நன்னன் IV (செங்கண் மாத்துவேள்)
72. நாகன், நாலைகிழான்
73. நாஞ்சில் வள்ளுவன் I (கந்தன்)
74. நாஞ்சில் வள்ளுவன் II
75. நெடுமிடல்
76. நெடுவேளாதன்

77. பண்ணன் I (சிறுகுடி கிழான்)
78. பண்ணன் II (வல்லார்கிழான்)
79. பழையன் I
80. பழையன் II
81. பழையன் III (இளம்பழையன்மாறன்)
82. பாணன் I
83. பாணன் II
84. பாரி (வேள்)
85. பிட்டங்கொற்றன்
86. பிண்டன்
87. புல்லி (கல்வர் கோமான்)
88. புன்றுறை
89. பெரியன்
90. பெருஞ்சாத்தன் I (ஓல்லையூர்கிழான் மகன்)
91. பெருஞ்சாத்தன் II (பிடவூர்கிழான்)
92. பேகன் (வேளாவிக் கோமான்)
93. பொறையாற்றுகிழான்
94. மத்தி
95. மானவிறல்வேள் (அழும்பில்வேள்)
96. மிஞிலி
97. முடியன்
98. மூவன்
99. மையூர்கிழான்
100. வஞ்சன் (சேரமான்)
101. விச்சிக்கோ I (விச்சியர் பெருமகன்)
102. விச்சிக்கோ II (பெருந் தலைச்சாத்தனரால் பாடப்பட்டவன்)
103. விண்ணந்தாயன் (பூஞ்சாற்றூர்க் கௌணியன் பார்ப்பான்)
104. விராஅன்
105. வில்லியாதன்
106. வெளிமான்
107. வேங்கைமார்பன்
108. வேள்மான் (வெளியன்)
109. வேளாவிக்கோமான் (பதுமன்)

(ஆ) குறுநில மன்னரின் குடிகள்

(இனங்குழுக்கள்)

1. எயினர்
2. ஒளியர்
3. கங்கர்
4. கட்டியர்
5. கள்ளர்
6. குறவர்
7. கோசர்
8. தொண்டையர்
9. பரதவர்
10. பாணர்
11. பொதுவர்
12. மழவர்
13. வாணர்
14. வேளிர்

(இ) வட்டாரக் குறுநிலத் தலைவர் குடிகள்

1. அருவாளர்
2. எருமையூரர்
3. கொங்கர்
4. பூழியர்

இயல் 9
ஆட்சிமுறை

முன்னுரை

சங்க இலக்கியங்கள், தமிழ்நாட்டுக்கு வந்துபோன கிரேக்கரின் குறிப்புகள், தமிழ்நாட்டிலுள்ள சங்ககாலத்துக் கல்வெட்டுகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு இந்தப் பகுதி அமைந்துள்ளது.

தமிழ்நாடு, தொன்றுதொட்டு அரசர்களாலேயே ஆளப்பட்டு வந்தது. சங்ககாலத்தில் அரசர்களுக்குத் துணையாக அலுவலர்களும் அமர்த்தப்பட்டிருந்தனர். மக்களின் செல்வாக்கினைப் பெற்ற 'கிழார்' முதலானோரும் ஒருவகையில் ஆட்சித் தலைவர்களாக விளங்கினர். அவர்களையெல்லாம் மக்கள் பெரிதும் மதித்தனர்; அவர்களுக்கு அடங்கி நடந்தனர்; அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்படுவதைத் தம் கடமை எனக் கொண்டனர். அவர்கள் மக்களைத் தம் உயிரினும் மேலாக மதித்து, மக்களின் நலத்தின்மேலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். இதனால், ஆட்சிக்கும் மக்களுக்கும் இடையே அரசியல் முரண்பாடுகள் தோன்றவில்லை. அதாவது, மக்கள் அரசிற்கு எதிராகப் புரட்சி செய்யவில்லை. பகைவர் தாக்கும் போர்கள் நிகழ்ந்தாலும் ஆட்சி நிலையில் அமைதியே நிலவிற்று. இதனால், அரசியல் நிலையில் சங்ககாலத்தைப் 'பொற்காலம்' என்று குறிப்பிடலாம்.

வேந்தர் - மன்னர்

சங்ககாலத்தில் தமிழ்நாட்டைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர் ஆண்டு வந்தனர். இவர்கள் 'வேந்து', 'வேந்தன்' என்னும் சொற்களால் குறிக்கப்பட்டனர். இவர்களுக்குக் கீழ்ப்படிந்தோ, கீழ்ப்படியாமலோ நாட்டில் ஆங்காங்கே பல சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். பொதுநோக்கில் சிற்றரசர்களின் நாட்டுப்பரப்பு, வேந்தர்களின் நாட்டுப்பரப்பைக் காட்டிலும் சிறியதாகத் தோன்றியமையால் அம்மன்னர்கள் 'குறுநில மன்னர்கள்'[1] என்று குறிக்கப்படலாயினர்.

---

[1] மதுரைக். 776

குடிமக்கள் நலனுக்கு நிழலாக அமையும்படி அரசாட்சியை வேய்ந்து காப்பாற்றுவோர் என்னும் பொருளில் 'வேந்தர்' என்னும், சொல் சங்கப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்தப் பகுதியில் 'வேந்தர்' என்னும் சொல் சேர, சோழ, பாண்டியரையும், 'மன்னர்' என்னும் சொல் குறுநில மன்னர்களையும் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'அரசர்' என்னும் சொல் இருதிறத்தாரையும் உணர்த்தும்.

நாடும் நாட்டுப் பிரிவுகளும்

நாடு என்னும் சொல்

தமிழகம் முழுவதையும் 'தமிழ்நாடு' என்னும் பெயரால் குறிப்பிட்டுவந்த வழக்கம் சங்ககாலத்தில் இருந்தது.[2] தமிழகத்தின் உட்பிரிவுகளாய் விளங்கிய பகுதிகளும் 'நாடு' என்று குறிப்பிடப்பட்டன. தமிழகத்தை ஆண்டுவந்த அரசர்களின் பெயரால் அவர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதி நாடு என்று குறிப்பிடப்பட்ட நிலையும் உண்டு. சோழ நாடு,[3] காரி நாடு,[4] எருமை நாடு[5] முதலான தொடர்களை இதற்குச் சான்றாகக் காட்டலாம். ஒரு பகுதியில் வழங்கிய மொழியின் பெயரால் நாட்டின் பெயர் அமைந்த நிலையும் உண்டு. 'துளு நாடு'[6] என்னும் வழக்கை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். இருப்பிடத்தின் திசை நோக்கி நாட்டின் பெயர் அமைந்திருந்ததற்குத் 'தென்னாடு'[7] என்பதைச் சான்றாகக் கொள்ளலாம். காவிரிப்படப்பை நன்னாடு,[8] பறப்பு நன்னாடு,[9] புன்னாடு[10] முதலான நாட்டுப் பெயர்கள் நிலவியலின் அடிப்படையில் அமைந்தவை. எனவே, நாடு என்பது சங்க காலத்தைப் பொறுத்தவரை ஓர் ஆட்சிப் பிரிவு என்று தெளிவாகக் கொள்ள முடியாத நிலையில் கையாளப்பட்டுள்ளது. எனினும் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்று பொதுவாக ஆட்சிப் பிரிவு நோக்கில் கூறும் வழக்கம் இருந்துவருகிறது.

கோட்டம்

சங்ககாலத்தில் அரசாண்ட நண்ணன் என்னும் மன்னன் பல் குன்றக் கோட்டத்துச் 'செங்கன்மா' என்னும் பகுதியை அரசாண்

---

2 சிலப். 23 : கட்டுரை 15, 25 : 165, 29 : உரைப்பாட்டுமடை 1-8
3 புறம். 337 : 1, 382 : 3
4 ஷை 122 : 2
5 அகம். 253 : 19
6 ஷை 15 : 5
7 பதிற். பதி. 2 கொளு
8 ஷை 90 : 47
9 பறம். 110 : 3
10 அகம். 396 : 2

டான் என்று மலைபடுகடாம் என்னும் நூலின் இறுதியில் உள்ள கொளுக்குறிப்புக் கூறுகிறது. இந்தக் 'கோட்டம்' தொண்டை நாடு என்று கூறப்படும் பகுதியில் உள்ளது. தொண்டைநாடு 24 கோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருந்ததாகப் பிற்கால வரலாறு தெரிவிக்கிறது.[11] எனவே, சங்ககாலத்திலும் இதுபோன்ற கோட்டம் என்னும் அரசியல் நாட்டுப் பிரிவு இருந்தது என்று எண்ண இடம் உண்டாகிறது.[12]

கூற்றம்

எட்டாம் பதிற்றுப்பத்தின் இறுதியில் உள்ள பதிகம் 'கொல்லிக் கூற்றம்' என்னும் நாட்டுப் பிரிவைக் குறிக்கிறது. ஆகவே, கூற்றம் என்னும் நாட்டுப் பிரிவும் சங்ககாலத்தில் சிற்சில பகுதிகளில் இருந்திருக்க முடியும் என்று கூறலாம். மிழலைக் கூற்றம்' என்பது பாண்டிய நாட்டின் உட்பிரிவுகளில் ஒன்றாகும்.

நாடு, கோட்டம், கூற்றம் என்னும் இந்த நாட்டுப் பிரிவுகளின் எல்லையை வரையறுத்துக் கூறுவதற்குப் போதிய சான்று சங்கப் பாடல்களில் கிடைக்கவில்லை. சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்குக்கூடப் பிற்காலத்தில் கூறப்படும் எல்லைகள்[13] சங்க காலத்திற்குப் பொருந்திவரும் என்று கொள்ளமுடியாது. சேர, சோழ, பாண்டிய நாடுகள் முறையே குடபுலம்,[14] குணபுலம்,[15] தென்புலம்[16] என்னும் பெயர்களால் குறிப்பிடப்பட்டுவந்தன. தமிழ்நாட்டுக்கு வடக்கே இருந்த நாடுகள் வடபுலம்[17] என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டதையும் இவ்விடத்தில் நினைவுகூர வேண்டும்.

நாட்டுப்பிரிவு வரையறை

சங்ககாலச் சான்றுகளை வைத்துக்கொண்டு சேர, சோழ, பாண்டிய நாடுகளின் எல்லைகளை வரையறுத்துக்கூற இயலாது என்று கூறினோம். எனினும், பின்வருமாறு ஓரளவு எல்லைகளைக் கொள்ள இடம் உண்டு. காவிரி ஆறு பாயும் பகுதிகளில் இன்றுள்ள குளித்தலை வட்டமும், அதற்குக் கிழக்கிலுள்ள காவிரிப் படப்பையும், இவற்றைச் சார்ந்துள்ள பகுதிகளும் சோழநாட்டைச் சேர்ந்தவை எனலாம். அதேபோல் வைகை ஆறு பாயும் பகுதியும் அதனைச் சார்ந்துள்ள பகுதிகளும் பாண்டிய நாடு எனலாம்.

---

11 தொண்டைமண்டல சதகம்
12 புறம். 275 : 1
13 கந்தய்யா பிள்ளை, ந. சி., 'தமிழகம்', பக். 73-76
14 புறம். 373 : 26
15 சிறுபாண். 79
16 சிலப். 20 : 76
17 புறம். 391 : 7

மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கிலுள்ள பகுதி சேர நாடு. இப் பாகுபாட்டில் அடங்காத தமிழ்நாட்டிலுள்ள பிற பகுதிகள் சில சமயங்களில் தனி நாடுகளாக விளங்கியதும் உண்டு; சில சமயங்களில் செல்வாக்குக்கு ஏற்ப அடுத்துள்ள நாடுகளோடு இணைந்து விளங்கியதும் உண்டு.

சோழநாட்டுப் பிரிவு

சோழர் குடிக்குரியோர் ஒன்பது பேர் சோழ நாட்டிலுள்ள ஒன்பது ஊர்களில் இருந்துகொண்டு ஆட்சி செய்துவந்தனர்.[18] ஆமூர்,[19] ஆர்க்காடு,[20] உறந்தை,[21] கழார்,[22] குடந்தை,[23] பருவூர்,[24] புகார்,[25] போர்,[26] வல்லம்[27] என்பவை அந்த ஊர்கள். எல்லாக் காலங்களிலும் இந்த ஒன்பது ஊர்களிலும் அரசர்கள் இருந்தார்கள் என்று கூறவியலாது. சோழர் குடியில் தோன்றிய பல மன்னர்கள் ஒரே சமயத்தில் அரசாண்டார்கள் என்பது மட்டும் தெளிவு. இவர்கள் சோழப் பெருவேந்தன் ஒருவனின் தலைமைக்கு உட்பட்டோ, உட்படாமலோ ஆண்டிருக்கக்கூடும். கரிகாற் சோழன் குடிக்குரியோரிடையே தலைமைபூண்டு விளங்கியவன். நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகிய மன்னர்கள் ஒருவருக்கொருவர் அடங்காமல் தன்னாட்சி செலுத்திய மன்னர்கள்.

மேலே கூறிய ஒன்பது ஊர்களில் உறந்தையும் புகாரும் பெருஞ்சிறப்புப்பெற்ற தலைநகரங்களாக விளங்கியவை. புகார்ப் பட்டினம் தலைநகராக விளங்கியது மட்டுமன்றிச் சிறந்த துறை முகமாகவும் விளங்கியது. எயிற்பட்டினமும் வீரைப்பட்டினமும் சோழநாட்டுக்கு வடக்கில் தமிழ்நாட்டில் விளங்கிய வேறு துறை முகப்பட்டினங்கள்.

சேரநாட்டுப் பிரிவு

சேரநாடாவது கடுங்கோ நாடு,[28] குடநாடு,[29] குட்டநாடு,[30] பூழிநாடு,[31] பொறைய நாடு,[32] மாந்தரநாடு,[33] வானநாடு[34] முதலான பல பிரிவுகளாய் அமைந்திருந்தது என்று எண்ண இடம்

---

18 பதிற். பதி. 5 : 18-19
19 ஐங்குறு. 56 : 2
20 நற். 190 : 6
21 ஷை 400 : 7
22 ஷை 281 : 3
23 அகம். 60 : 13
24 ஷை 96 : 14
25 ஷை 123 : 11
26 ஷை 326 : 11
27 ஷை 336 : 21
28 பதிற். பதி. 8 : 1
29 ஷை 6 : 5
30 ஷை 86 : 9
31 ஷை 4 : 6
32 ஐங்குறு. 404 : 4
33 பதிற். 90 : 13
34 அகம். 33 : 19

உண்டு. அந்தந்த நாட்டுப் பகுதியை ஆண்ட அரசர்கள் அந்தந்த நாட்டுப் பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளனர். கடுங்கோ குடக்கோ, குட்டுவன் (குட்டுவர்கோ), பூழியர்கோ, பொறையன் (பொறையர்கோ), மாந்தரன் வானவன் (வானவர் பெருந்தகை) என்பன முறையே அவர்களின் பெயர்கள். சேரநாடு எட்டுப் பிரிவுகளாய் விளங்கியது என்றும், அப் பிரிவுகளின் அரசர்கள் தமக்குள் ஒருவரைத் தலைவராகக் (வேந்தனாக) கொண்டார்கள் என்றும் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுகிறார்.[85] சேரல்,[86] சேரன்,[87] சேரமான்[88] என்பன இவர்களின் பொதுப் பெயர்.

சேர மன்னர்களின் வஞ்சி-கரூர் தலைமை நகரம் என்றும் தொண்டி, முசிறி என்பன துறைமுகங்கள் என்றும் சங்கநூல்களில் இருந்து அறிகிறோம். பிற்காலச் சேரர்களின் தலைமை நகரங்களாக மாந்தை, நறவு, குழுமூர் என்னும் ஊர்கள் சிறப்பிக்கப் படுகின்றன. வஞ்சி மாநகர், வஞ்சி மூதூர் எனக் குறிப்பிடப் படுகிறது. இந்த வஞ்சி மாநகரம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கரூர் என்னும் இடமா. மேற்கு மலைத்தொடர்ச்சியைச் சார்ந்துள்ள கரூர்ப்பட்டினம் என்னும் இடமா என்பதுபற்றி வரலாற்றறிஞர்களிடையே பெரியதொரு விவாதம் நடைபெற்றுள்ளது. '1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் வரலாறு' என்னும் அரிய நூலை எழுதிய கனகசபைப் பிள்ளையவர்கள் சேர நாட்டில் உள்ள கரூர்ப்பட்டினமே சேரரது வஞ்சி நகரமாகும் எனக் கூறிப்போந்தார். ஆனால், அவர் திருவஞ்சைக்களம் என்னும் பாடல்பெற்ற சிவத்தலத்தையும் வஞ்சி மாநகரமாகக் கருதியுள்ளார். இக் கொள்கையைக் கே. ஜி. சேஷய்யரும் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், தமிழ்ப் பேராசிரியர்களாகிய மு. இராகவ அய்யங்காரும், ரா. இராகவ அய்யங்காரும் திருச்சிராப்பள்ளிக்கருகில் உள்ள கரூர் என்னும் நகரமே சேர மன்னர்களுடைய வஞ்சிமாநகர் என்று தங்களுடைய ஆராய்ச்சி நூல்களில் சாதித்துள்ளனர்.

இக் கொள்கைகளைத் தீவிரமாக ஆராய்வதற்குக் கொச்சி சமத்தானத்தின் திவானாக பணியாற்றிய திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார், முதுபெரும் வரலாற்று அறிஞராகிய டாக்டர் சா. கிருட்டிணசாமி அய்யங்கார் அவர்களைக் கேட்டுக்கொண்

85 துரைசாமிப் பிள்ளை ஔவை சு., 'பண்டை நாளைச் சேரமன்னர் வரலாறு', பக். 77

86 பதிற். 38 : 4, 39 : 17, அகம். 36 : 15

87 சிலப். 23 : 62

88 புறம். 203 கொளு

டதற்கிணங்க அவர்கள், 'சேரன் வஞ்சி' என்னும் சிறந்த நூலை எழுதி, அதில் சேர நாட்டில் பெரியாறு என்னும் ஆற்றின் கரைக் கருகில் உள்ள கரூர்ப்பட்டினமே சேரர்கள் வஞ்சிமாநகரம் எனக் கூறியுள்ளார். கொங்குநாட்டில் உள்ள 'கரூர் ஆனிலை' என்ற நகரத்தையும் அதைச் சுற்றியுள்ள இடத்தையும் பிற்காலச் சேரர்கள் வென்று தங்கள் நாட்டுடன் சேர்த்துக்கொண்ட பிறகு 'சேரர் கொங்கு' என்னும் பெயர் வழங்கியது; சேரநாட்டின் தலைமை நகரத்தின் பெயராகிய வஞ்சி என்னும் பெயராலும் அழைக்கப்பட்டது. முசிறி என்னும் இடமும் மேலைக்கடற்கரை யில் உள்ள முசிறி என்னும் பெயரை யொட்டியே இடப்பட்டதாகும். ஆகையால், சா. கிருட்டிணசாமி அய்யங்கார் கூறியபடி சேர நாட்டில் உள்ள கரூர்ப்பட்டினமே சங்க நூல்களில் கூறப்பெறும் வஞ்சிமாநகரம் எனக் கொள்ளவேண்டும்.

சோழநாட்டில் கூறப்பட்ட பிரிவுகள் ஒரு குடியில் தோன்றிய தாயாதியரின் ஆட்சியால் அமைந்தவை; சேரநாட்டுப் பிரிவுகள் நிலவியலின் அடிப்படையில் அமைந்தவை.

பாண்டியநாட்டுப் பிரிவு

பாண்டியர்கள் பஞ்சவர்[39] எனப்பட்டனர். பொலம்பூண் ஐவர்[40] என்று குறிப்பிடப்படுபவர்களும் இவர்களே என்று எண்ண வேண்டியுள்ளது. இவற்றால் பாண்டிய நாடு 5 பிரிவுகளாக அமைந்திருந்தது என்று கொள்ள இடமுண்டு. இந்த 5 பிரிவுகள் எவை என்பது தெளிவாகத் தெரியவில்லை.

நாடுபற்றிய செய்திகள்

சங்கப் பாடல்களால் அறியப்படுவன

நல்ல நாடு இயற்கை அமைப்பிலும் மக்களின் வாழ்க்கை நிலையிலும் எவ்வாறு இருந்தது என்பதுபற்றிச் சங்ககாலத்து நூல்களில் ஆங்காங்கே விரிவாகப் பேசப்படுகிறது. அவற்றுள் கீழ்க்காணும் செய்திகள் குறிப்பிடத்தக்கவை :

ஏர் பரந்த வயல், நீர் பரந்த செறு, நெல் மலிந்த மனை, பொன் மலிந்த தெரு, வண்டார்க்கும் மலர்க்கா ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு இயற்கை அமைப்பிலும் வாழ்க்கை நிலை யிலும் நாடுகள் சிறந்து விளங்கின.[41]

---

39 புறம். 58 : 8
40 மதுரைக். 775
41 புறம். 338 : 1–4

மலைசூழ்ந்த காட்டுப் பகுதிகளில் கடவுளர் (முனிவர்கள்) இடையூறு இன்றித் தவம் செய்து கொண்டிருந்தனர். முல்லை நிலப் பகுதிகளில் ஆயரும் மகளிரும் மகிழ்ந்தனர். ஆற்றுநிலப் பகுதிகளில் உணவு தானியங்களை விற்கும் நிலை இல்லாமல் மிகுதியான விளைவினால் வந்தேறும் குடிகளைப் பாதுகாப்போர் வாழ்ந்து வந்தனர். மழை, வேண்டிய இடத்தில் வேண்டிய காலத்தில் பெய்தது. நோய், பசி முதலான துன்பங்கள் இன்றி மக்கள் முதுமைவரை வாழ்ந்தனர். நல்லறிவு, நன்னடத்தை உடையவர்களாய் மக்கள் தம் சுற்றத்தார்களைப் பிரியாமல், வாழ்வுக்காக வேற்றூர் செல்லும் நிலை இல்லாமல் வாழ்க்கையில் விருப்பம் உடையவர்களாய் வாழ்ந்து வந்தனர். அவர்கள் உண்மையையே பேசி அடக்கத்துடன் வாழ்ந்தனர். பிறர் பொருளை விரும்புதலோ, பிறரைத் துன்புறுத்தலோ அவர்களிடம் காண முடியாதவை. தம்மிடமுள்ளவற்றைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தாமும் உண்டு மகிழ்ந்தனர். சண்டை சச்சரவுகள் இல்லை. பிறரால் மனம் வெதும்பும் நிலை இல்லை.[42] இவ்வாறு நாடு நலமுடன் திகழும் வகையில் அக்கால ஆட்சிமுறைகள் அமைந்திருத்தன.

நாடுகளும் குடியும்

சோழநாடு, சோழர் குடி

சோற்று வளம் மிகுதியாக உள்ள நாடு சோழ நாடு எனப் பட்டது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.[43] கிள்ளி,[44] செம்பியன்,[45] சென்னி,[46] வளவன்[47] என்னும் பெயர்கள் சோழர்களின் குடிப்பெயர்களாக வருகின்றன.

இவர்களது குடிப்பூ ஆத்தி.[48] குடிச்சின்னம் புலி.[49] குலம் ஞாயிற்றுக்குலம்.[50]

பாண்டியநாடு, பாண்டியர் குடி

பாண்டியர் என்னும் சொல் பண்டையர் என்னும் சொல்லின் அடிப்படையில் தோன்றியதாகக் கூறப்படுகிறது. கவுரியர்,[51]

42 பதிற். 13 : 20-28, 15 : 24-31, 22 : 5-10, 27 : 15-16
43 சொல்-நெல் - சோறு
சொல்-சோழம்-சோழ நாடு
தேவநேயப் பாவாணர்
44 அகம் 205 : 10
45 ஷ 36 : 15
46 பதிற். 27 : 4
47 புறம். 34 : 16
48 சிலப். 28 : 211
49 புறம். 33 : 9
50 சிலப். 29 : 1மு
51 அகம். 70 : 13

செழியன்,[52] தென்னவன்,[53] பஞ்சவர்(ன்),[54] மாறன்,[55] வழுதி[56] என்னும் பெயர்களும் பாண்டியரின் குடிப்பெயர்கள்.

இவர்களது குடிப்பூ வேம்பு.[57] குடிச்சின்னம் மீன்.[58] கொடி மீன்.[59] குலம் திங்கள் குலம்.[60]

சேரநாடு, சேரர்குடி

நாட்டின் பெரும்பகுதி சேர்ப்பாக (கடற்கரை நிலமாக) விளங்கும் நாடு சேரநாடு எனப்பட்டது. உதியன்,[61] கடுங்கோ,[62] குடக்கோ,[63] குட்டுவன்,[64] கோதை,[65] சேரலன்,[66] சேரல்,[67] சேரமான்,[68] பூழியர்,[69] பொறையன்,[70] மாந்தரன்,[71] வானவன்[72] ஆகிய பெயர்கள் சேரர்குடி வேந்தரைக் குறிப்பன.

இவர்களது குடிப்பூ பனம்பூ.[73] குடிச்சின்னம் வில்.[74] பிற வேந்தரைநோக்க இவர்கள் தீக்கடவுள் குலத்தவர் எனலாம். சேர, சோழ, பாண்டியரின் குடிப்பெயர்களில் பல, நாட்டின் அடிப் படையில் அமைந்துள்ளன. இந்தக் குடிப்பெயர்கள் இரண்டு மூன்று சேர்ந்தும் ஒரு மன்னனின் பெயராக அமைந்துள்ளன. 'மாந்தரம் பொறையன் கடுங்கோ',[75] 'மாறன்வழுதி',[76] 'கிள்ளி வளவன்'[77] முதலானவற்றை இதற்குச் சான்றாகக் காட்டலாம். இவற்றுள் சேரமன்னன் பெயர் அந்த நாடுகளுக்கெல்லாம் மன்ன னாக விளங்கியவன் என்று கொள்ள இடமிருப்பதால் கிள்ளி, வளவன், மாறன், வழுதி முதலான பிற பெயர்களும் ஒரு குறிப் பிட்ட நாட்டுப் பகுதியில் ஆண்ட குடியினரை உணர்த்துவன வாய்த் தோன்றியிருக்கவேண்டும் என்று எண்ண இடமுண்டு.

---

52 அகம். 36 : 13
53 மே. 13 : 6
54 புறம். 58 : 8
55 அகம். 346 : 19
56 மே. 93 : 9
57 பதிற். 49 : 16
58 சிலப். 17 : 1
59 மே. 28 : 19
60 மதியுறழ் மரபு 'திங்கட் செல்வன் திருக்குலம்', சிலப். 11 : 23
61 நற். 113 : 9
62 பதிற். பதி. 8 : 1
63 மே. பதி. 6 : 1
64 மே. 29 : 14; பதி. 9 : 1
65 மே. 49 : 2
66 சிலப். 23 : 64
67 பதிற். 38 : 4
68 புறம். 203 : கொளு
69 அகம். 6 : 8
70 பதிற். பதி. 7 : 3
71 மே. 90 : 13
72 அகம். 33 : 14
73 தொல். பொருள். புறத். 5 4
74 சிலப். 17 : 2
75 பதிற். பதி. 8
76 நற். 97
77 அகம். 346 : 22

மூத்தகுடி

சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூன்று குடிகளில் மூத்த குடி எது என்பதைத் தெளிவாகக் கூறமுடிவில்லை. எனினும், பாண்டியர் என்னும் குடிப்பெயர் 'பண்டையர்' என்னும் சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம் என்னும் ஒரு கருத்து உள்ளமையாலும், சோழ மன்னன் ஒருவன் பாண்டியர் குடி தொன்மையானது என்று பாடியுள்ளமையாலும்[78] பாண்டியர் குடி ஏனைய இரு குடிகளைக்காட்டிலும் தொன்மையானது என்று கொள்ள இடமுண்டு.

அரசன்

அரசு அல்லது ஆட்சி

அரசபாரம் : ஆட்சி செலுத்துதல் அரசனுக்கு உள்ள சுமை என்று கருதப்பட்டது.[79] இதனை 'அரசாட்சிப் பொறுப்பு'[80] என்று கூறுகிறோம். இந்தப் பாரத்தை அரசன் தன் தோள்களில் சுமக்கிறான் என்றும்,[81] தலையில் சுமக்கிறான் என்றும்[82] உருவகப்படுத்திக் கூறிவந்தனர்.

ஆணைச் சக்கரம் : அரசனது ஆணை நாட்டில் செல்லுபடியாவதை அதாவது, ஆணையை மக்கள் ஏற்றுநடப்பதை ஆணைச் சக்கரம் உருள்வதாகக் கருதினர்.[83] சிலர் ஆணைச் சக்கரம் என்னும் ஒன்றை அரசன் தோளில் சுமந்திருப்பதாகக் கூறியுள்ளனர்.[84] அந்த ஆணைச் சக்கரம் மணிகள் பதித்துப் பொன்னால் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.[85]

நாடுகாவல் வண்டி : அரசன் 'நாடுகாவல்' என்னும் வண்டியைப் 'பகைவர் தொல்லை' என்னும் சேற்றில் ஆழ்ந்து விடாமல் ஓட்டிச் செல்லுபவன் என்றும் கூறப்படுகிறான்.[86]

குடைநிழல் : அரசனது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதி அவனது குடைநிழலின்கீழ் இருப்பதாகவும் கருதப்பட்டது.[87]

---

78 கலி 104 : 1-4
79 சிலப். 25 : 100-14
80 சுமையைத் தாங்குதல்
81 பொருந. 138
82 புறம். 82 : 10
83 'உருட்டுவோன் எனவே'(சிலப். 1:68)
84 புறம். 99 : 14
85 பதிற். 14 : 18
86 புறம். 185 : 5-6
87 ஷெ 38 : 10, 102 : 7-8

அரசுரிமை முறை

சங்ககாலத்து அரசர்கள் பெரும்பாலும் தந்தைக்குப்பின் தனயன் என்ற மரபுவழியில் தங்களது அரசுரிமையைப் பெற்றனர். சோழன் நலங்கிள்ளி முறையாக அரசாட்சி உரிமை கிடைக்கப் பெற்று வந்ததைக் குறிப்பிடுகிறான்.[88] அரசன் தன் காலத்திலேயே தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவைப்பான். இளவரசன் தந்தையின் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் வேறொரு பகுதியில் இருந்துகொண்டு தன்னுரிமையுடனும், தந்தையின் துணையுடனும் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு, அரசாட்சியில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றுவருவான். அக்காலை அவன் தந்தையின் படைத்துணையைப் பெற்றோ, பெறாமலோ வேற்று நாட்டின்மீது படையெடுத்துச் சென்று வெற்றிபெறுவதும் உண்டு. அவன் பெற்ற வெற்றிகள் மகனது வெற்றியாகவும், தந்தையின் வெற்றியாகவும் புலவர்களால் பாராட்டப்பட்டுள்ளன. தந்தையின் காலத்திற்குப்பின் இளவரசன் தந்தையின் நாட்டையும் சேர்த்து ஆளும் அரசன் ஆவான்.

அரசனின் ஆட்சிக்கு எதிரிடையாக இளவரசனின் ஆட்சி அமைவதும் உண்டு. கோப்பெருஞ்சோழனின் ஆட்சிக்கு எதிரிடையாக அவனது மகன்மார் ஆட்சி அமைந்தது. போர்வைக் கோப்பெருநற்கிள்ளியின் ஆட்சி, அவனது தந்தை என்று கொள்ளத்தக்க தித்தனின் ஆட்சிக்கு எதிரிடையாக அமைந்தது என்று கருத இடமுண்டு.

அரசன் ஒருவனுக்குப் பல ஆண்மக்கள் இருந்தால் மூத்தவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டப்பட்டு, இளையவன் அரசுரிமையிலிருந்து விலகிக்கொள்வதும் உண்டு. செங்குட்டுவனுக்கு விட்டுக்கொடுத்துவிட்டு இளங்கோவடிகள் அரசுரிமை பெறுவதனின்று விலகித் துறவுபூண்ட நிகழ்ச்சி இதனை உணர்த்துகின்றது.

அண்ணனை நாடாளவிடாமல் தம்பி அவனது நாட்டைப் பறித்துக்கொண்டு ஆண்ட நிலையும் உண்டு. இளங்குமணன் அவனது அண்ணன் குமணனது நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு அவனைக் காட்டுக்குத் துரத்திவிட்டான்.

அண்ணனும் தம்பியும் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டு, நாட்டின் வெவ்வேறு பகுதிகளை அரசாண்ட நிலையும்

---

88 புறம் 75 : 1-3

உண்டு. உடன்பிறந்தார் என்று அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும் தாயாதிகள் என்று தெளிவாகக் கொள்ளத்தக்க நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டு ஒரு நாட்டின் வெவ்வேறு பகுதிகளை ஆண்ட அரசர்கள் ஆவர்.

பொதுவாக அண்ணன் தம்பியர் பலர் இருந்தபோது அவர்கள் அனைவருமே, வயதும் திறமையும் வரும்போது தந்தையாலேயே இளவரசுப் பட்டம் கட்டப்பெற்று, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்துகொண்டு அரசாண்டு, அரசியலில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றுவந்தனர் என்றே எண்ணவேண்டியுள்ளது.

உதியஞ்சேரலாதனின் ஆண்மக்கள் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஆகிய இருவருமே நாட்டை ஆண்டுவந்தனர். இமயவரம்பனது மக்கள் நால்வருள் (இளங்கோவடிகள் நீங்கலாக) களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆகிய மூவருமே முடிசூடி அரசாண்டனர். இவர்கள் மூவரும் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே ஒருவருக்கொருவர் உறுதுணையாய் இருந்துகொண்டு அரசாட்சி செய்துவந்த பாங்கை அவர்களது வரலாற்றில் உணரலாம். பாண்டிநாட்டிலும் பெருவழுதி, இளம்வழுதி, நன்மாறன், மாறன்வழுதி முதலானோர் இத்தகைய ஒருமைப்பாட்டு உணர்வுடன் அரசாண்டார்கள் என்பது அவர்கள் வரலாற்றில் காணலாம்.

சங்ககாலத்துச் சோழர் வரலாற்றிலும் பாண்டியர் வரலாற்றிலும், ஒரு தந்தைக்குப்பின் அவனது மகன் இன்னான் அரசனானான் என்று அறுதியிட்டுக் காட்டத்தக்க நேரடிச் சான்றுகள் இல்லை. சோழர் குடியில் தோன்றிய தாயாதியர் ஆங்காங்கு அரசாண்டுவந்ததைச் சோழர் வரலாற்றில் கண்டோம். அவர்களுள் யார் வலிமையும் செல்வாக்கும் பெற்று விளங்கினார்களோ அவர்களே அரசர்களாக விளங்கினார்கள் என்று கொள்ள இடமுண்டு. இவ்வாறு திறமையும் செல்வாக்கும் காரணமாக அரசரான காரணமும், தந்தை மகன் உறவுமுறை தெரியாமல் போனதற்கு ஒரு காரணமாகக் கூறலாம். பாண்டியநாட்டு அரசியலிலும் இத்தகைய நிலைதான் இருந்ததோ என்று எண்ணவேண்டியுள்ளது.

எனினும், சோழன் கரிகாற்பெருவளத்தான் தனது தந்தையின் அரசுரிமையை முறைப்படி அடைந்தான் என்று கூறப்

படுகிறது.[89] இதனை எண்ணும்போது சோழநாட்டிலும் ஏன்-பாண்டிய நாட்டிலும்கூடத் தந்தைக்குப்பின் அவனது மக்கள் என்றே அரசுரிமை நிலவிவந்தது என்றும், சேரர் பரம்பரையில் அதனைத் தெளிவாகக் காட்டப் பதிற்றுப்பத்துப் பதிகங்கள் அமைந்திருப்பதுபோல, சோழ - பாண்டியர் வரலாற்றில் தெளிவாகக் காட்டத் தொகுப்புநூல் எதுவும் அமையாது போனதுதான் மரபுவழி ஆட்சியுரிமை, தெளிவாகத் தெரியாமல் போனதற்குக் காரணம் என்றும் கொள்வதே பொருத்தமானது.

ஆண்பிள்ளைகளே மரபுவழி அரசுரிமை எய்தும் பேறு பெற்றவர்களாக விளங்கினர் என்று இதுவரையில் பார்த்தோம். இக் கருத்துக்கு நாம் அடிப்படைச் சான்றாகக் கொள்வதில் தலைமையானவை பதிற்றுப்பத்துப் பதிகச் செய்திகளே.

ஆட்சித் தலைவர்களில் சிலர், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள் என்று கொள்ள இடமுண்டு. கரிகாலன் பட்டத்து யானையின் துணைகொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான் என்னும் கதை ஒன்று வழங்கிவருகிறது. குடவோலை முறையில் ஊராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று கொள்ளத்தக்க சான்று உள்ளது.[90] சங்ககாலத்தில் 'கிழான்' என்று சிறப்பிக்கப்பட்டிருந்தவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்று எண்ண இடமுண்டு.[91]

இதுவரையில் கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்போது சங்ககாலத்து அரசுரிமை, மூன்று அடிப்படையில் அமைந்ததைக் காணமுடிகிறது.

1. மரபுவழி அரசுரிமை (தாயம்),
2. செல்வாக்கு அரசுரிமை,
3. மக்கள் அளித்த அரசுரிமை

என்பன அவை.

அரியணையேறுவதோ, இளவரசுப் பட்டம் கட்டுவதோ இன்ன வயதில் நடைபெற்றது என்று கூறுவதற்குச் சான்று இல்லை. என்றாலும், மிக இளமைப் பருவத்திலேயே முடிசூடி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றமையைத் தெரிவிக்கும் சான்றுகள்

---

89 பட்டினப். 227; பொருந. 132
90 அகம். 77 : 7-8
91 விளக்கம் : 'ஊராட்சி முறை'ப் பகுதியில் காணலாம்

உள்ளன. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முடிசூடிப் போருக்கு எழுந்தபோது மிகவும் இளைஞனாக இருந்தமையைப் புலவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.[92] கரிகாலன் ஆட்சிப் பொறுப்பேற்று முறை வழங்க வந்தபோது மிக இளைஞனாக விளங்கினான்.[93] சங்க கால நூலும் இச் செய்தியைக் குறிப்பால் உணர்த்துகிறது.[94] அதியமான் நெடுமான் அஞ்சியும் இவ்வாறு இளமைப் பருவத்திலேயே ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான்.[95] ஆளும் மரபில் தோன்றிய உரிமையாளருள் முதியோர் இல்லாதபோது இவ்வாறு வயதில் இளையோரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர் எனலாம்.

பெண் அரசு

மெகஸ்தனீஸ் என்னும் கிரேக்கத் தூதர் பாண்டிய நாட்டில் பெண்கள் அரசாட்சி செய்துவந்ததாகக் குறிப்பிடுகிறார். ஆட்சி செய்துவந்த அந்தப் பெண்களில் முதல் அரசி 'பண்டையா' என்பவள் 'எர்க்குலசு' என்பவனின் மகள் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.[96] சங்க இலக்கியங்களில் பெண்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்ததைக் காட்டும் சான்று இல்லை. பிற்காலத்துத் திருவிளையாடற் புராணம் முற்காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறும் வரலாற்றில் தடாதகைப் பிராட்டியார் என்னும் பெண், மதுரையை ஆண்ட செய்தி வருகிறது. இவ் வரலாறு மெகஸ்தனீஸ் குறிப்போடு பொருந்திவருவதால், பெண் ஒருத்தி ஆட்சி புரிந்தது உண்மையாயிருக்கலாமெனச் சிலர் கருதுகின்றனர். மெகஸ்தனீஸோ பல பெண்கள் தொடர்ந்து ஒருவர் பின் ஒருவர் அரசாண்டார்கள் என்பதுதோன்றக் குறிப்பிட்டுள்ளார். தடாதகைப் பிராட்டியார் வரலாறோ ஒருத்தியோடு மட்டும் தொடர்புடையதாயுள்ளது. எனவே, பொருந்துமாறில்லை.

இடைக்கால அரசு

ஓர் அரசனின் ஆட்சி முடிவுற்றபின் அடுத்தவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரையில் இடையில் சில காலம் அரசனின்றி நாடு திண்டாடுவதும் உண்டு.[97] உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி மாண்டபின், அவனது மகன் கரிகாலன் அரியணை ஏறுவதற்கு முன், கரிகாலனது தாய்மாமன் இரும்பிடர்த்தலையார் அரசுப் பொறுப்பினை ஏற்று நடத்தினார் என்று கூறப்படும் கதை

92 புறம். 77 : 6, 78 : 6
93 பழமொழி. 6
94 பொருளர். 130
95 புறம். 104 : 6
96 Nilakanta Sastri, K. A., *Foreign Notices of South India*, p. 41
97 கலி. 118 : 7-8

இதனோடு தொடர்புடையதாக உள்ளது. இத்தகைய ஆட்சியைப் 'பகர ஆட்சி' என்று சிலர் கொண்டு பலவாறு விளக்கம் கூறுகின்றனர்.[98]

அரசன், அரசாட்சி எதற்கு?

மக்களைக் காப்பாற்றுவதற்காகவே அரசாட்சி நடைபெற்றது.[99] மக்களைக் காக்கும் எல்லாவகைத் துறைகளிலும் அக்கால அரசர்கள் ஈடுபட்டனர். காக்கும் பணியில் அரசிளங் குமரர்களும் தேர்ச்சிபெற்று விளங்கினர்.[100]

நாட்டில் நல்லாட்சி நடைபெற்றால் பருவமழை தவறாது பொழியும் என்னும் நம்பிக்கை நிலவிவந்தது.[101] நாட்டில் பருவ மழை பொய்த்தாலும், நாட்டின் வருவாய் குறைந்தாலும், இயற்கைக்கு மாறான செயற்கைத் தீங்குகள் நேர்ந்தாலும் மக்கள் அரசனையே பழிக்கும் உரிமை பெற்றிருந்தனர்.[102] மக்கள் இவ்வாறு பழிப்பார்களே என்று அரசர்கள் அஞ்சி நடுங்கினர்[103] சிறப்பாக அதில் வாழும் மக்களுக்கு அரசனே உயிர்.[104] அரசனும் உலகத்தைத் தன் உயிர்போலக் காத்துவந்தான்.[105] குழந்தையைப் பாதுகாக்கும் தாயைப் போலவும்,[106] தன் குட்டியைப் பாதுகாக்கும் புலியைப்போலவும்[107] அவன் தன் நாட்டையும் மக்களையும் காத்துவந்தான்.

தன் குடிமக்களை நல்ல நடத்தை உடையவர்களாக விளங்கச் செய்தல் அரசனின் கடமை என்று கருதப்பட்டது.[108] அரசனை அவனது குடிமக்கள் 'இறைவன்' என்றே கருதிப் போற்றினர்;[109] 'தந்தை' என்று உரிமை முறையோடு குறிப்பிடும் முறையும் நிலவி வந்தது.[110]

அரசனது பண்புகள்

புறப்பாடல்கள் கூறுவன : அரசன் சிறந்த கல்வி அறிவு உடையவனாக விளங்கினான்.[111] செறிவு,[112] காட்சிக்கு எளிமை,[113] இன்சொல் பேசுதல்[114] முதலான நற்பண்புகளை உடையவனாக விளங்கினான்.

---

98 Mahalingam, T. V., *South Indian Polity*, p. 102
99 பதிற். 74 : 20
100 டி 74 : 20-21
101 புறம். 117 : 6-7
102 டி 75 : 4, 5
103 டி 72 : 10-13
104 டி 186 : 2
105 கலி. 143 : 52
106 பதிற். பதி. 6 : 9
107 புறம். 42 : 10
108 டி 312 : 4
109 குறள். 388
110 புறம். 235 : 16
111 பதிற். 80 : 16-17
112 புறம். 30 : 7
113 டி 35 : 15, 40 : 9
114 குறள். 387

போருக்கு அஞ்சாமை, கொடை வழங்குதல், வலியவர் களுக்கு வழிமொழிந்து நடவாமை, மெலியவர்களுக்குமுன் தன்னைப் பெருமைப்படுத்திப் பேசாமை, தம் மனைவியின் கண்ணீரைவிட மக்கள் கண்ணீரைப் பெரிதென மதித்தல் முதலான நல்ல பழக்கவழக்கங்கள் அக்கால அரசர்களிடம் பொது வாகக் காணப்பட்டன.

பொய் பேசாமை, சினம் இன்மை, கழிகாமம் இன்மை, கண்ணோட்டம் உடைமை, அன்புடைமை, அஞ்சாமை, குற்ற வாளிகளைக் கடுமையாகத் தண்டித்தல், அவர்களிடம் கடுமை யாக நடந்துகொள்ளுதல், நடுநிலைமையிலிருந்து தவறாமை, நயன் உடைமை, பணிந்தவர்களை மன்னித்தல் முதலான நல்ல பழக்கவழக்கங்கள் நல்ல அரசனிடம் எதிர்பார்க்கப்பட்டன.

சில அரசர்கள் முனிவர்களைப் பணிந்தனர்; அந்தணர் களுக்கு வணக்கம் செலுத்தினர்.[115] சில அரசர்கள் அந்தணர் வேண்டுகோளைப் புறக்கணித்தனர். அந்தணப் புலவராக விளங்கிய கபிலர் பாரியின் மகளிரை மணஞ்செய்து கொள்ளும்படி வேண்டியபோது விச்சிக்கோவும் இருங்கோவேளும் அவரது வேண்டுகோளைப் புறக்கணித்தனர்.

திருக்குறள் கூறுவன : சிறந்த படை, குடிமக்கள், செல்வம், அமைச்சர், நண்பர், அரண் ஆகிய ஆறும் அரசனின் உறுப்புகள்.[116] அஞ்சாமை,[117] துணிவுடைமை,[118] சோர் வின்மை,[119] கல்வி அறிவுடைமை,[120] அரசியலறிவுடைமை,[121] ஈகை,[122] கொடை,[123] அளி,[124] இன்சொல்,[125] காட்சிக் கெளிமை,[126] செங்கோல்,[127] முறைவழங்குதல்,[128] குடிகளைக் காப்பாற்றுதல்[129] முதலான பண்புநலன்கள் அரசனது ஆட்சிக்குச் சிறப்பு உண்டாக்குவன. நாட்டு வருவாயைப் பெருக்கல், அதனைக் காத்து மக்களுக்குப் பயன்படும் வகையில் வகுத்தளித்தல் ஆகிய செயல்களில் அரசன் வல்லமை பெற்றிருக்க வேண்டும்.[130]

---

115 புறம். 6 : 20
116 குறள். 381
117 டி 382
118 டி 383
119 டி 383
120 டி 382
121 டி 382
122 டி 382, 387
123 டி 390
124 டி 390
125 டி 386, 387
126 டி 386
127 டி 390
128 டி 388
129 டி 388
130 டி 385

அரசன் தன் செயல்களில் குற்றம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.[131] தகுதியற்ற மகிழ்ச்சி கூடாது.[132] தவறு நேர்ந்தவிடத்து இடித்துரைத்துத் திருத்தும் பெரியவர்களை ஆட்சிக்குத் துணையாகக் கொள்ளவேண்டும்.[133] அரசன் எந்தச் செயலைச் செய்தாலும் தன்னுடைய வலிமை,[134] தக்க காலம்,[135] தக்க இடம்,[136] நிறைவேற்றத்தக்க ஆள்[137] ஆகிய வற்றை நன்குணர்ந்தே செய்யவேண்டும். தன் சுற்றத்தார் களைத் தழுவி வாழவேண்டும்.[138] மக்கள் வெறுக்கத்தக்கன செய்யக்கூடாது.[139] குற்றம் செய்தவர்களைக் கடுமையாக அச்சுறுத்தவேண்டும்; ஆனால், தண்டனை சிறிதாக இருக்க வேண்டும்.[140] அமைச்சர், அவைப் பெரியோர் முதலானவர் களைக் கலந்து எண்ணியே செயல்படவேண்டும்.[141] ஒற்றர்,[142] அமைச்சர்,[143] தூதர்,[144] அவையத்தார்,[145] வினைசெய் வார்[146] முதலானோர் துணையுடன் ஆட்சிசெலுத்தவேண்டும்.

அரசர்களின் மணவுறவு

அரசர்கள் பல பெண்களை மணந்துகொண்டனர். இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் மனைவியர் இருவரின் பிள்ளைகளும் அரசுரிமை பூண்டு ஆண்டனர். மணந்தோ, மணவாமலோ சில அரசர்கள் பல மகளிரைத் தழுவி மகிழ்ந்தனர்.[147] அரசனைத் தழுவி மகிழ்வூட்டிய மகளிர் 'வதுவை மகளிர்' எனப் பெயர் பெற்றனர்.[148] அரசி, இந்த மகளிர் கூட்டத்திடையே சிறப்புற்று விளங்கினாள் என்று கூறப்படுவதால் அவர்கள் அரசியின் ஆயத் தார் எனவும் கொள்ளலாம்.[149] அரசனே அன்றி அரச குமாரர் களும் இவ்வாறு பல மகளிரைத் தழுவி மகிழ்ந்தனர்.[150] மகளிர் பலர் சூழ்ந்து அரசனுக்குப் பொற்கலத்தில் தேறல் ஊட்ட அவன் உண்டு மகிழ்வதும் வழக்கம்.[151] ஒருத்தியை மட்டும் மணந்து, அவளைத் தவிர பிற மகளிரைத் தழுவியும் அறியாத தூய வாழ் வினைச் சில அரசர்கள் கடைப்பிடித்தனர்.[152]

---

131 குறள். 432
132 டி 432
133 டி 445, 448
134 குறள். அதி. 48
135 டி அதி. 49
136 டி அதி. 50
137 டி அதி. 51
138 டி அதி. 53
139 டி அதி. 57
140 குறள். 562
141 டி 568
142 குறள். அதி. 59
143 டி அதி. 64
144 டி அதி. 69
145 டி அதி. 72,73
146 குறள். 584
147 பதிற். 50 : 18
148 டி 89 : 17
149 டி 88 : 29
150 புறம். 96 : 4, 5
151 மதுரைக். 779–780
152 புறம். 71 : 6, 73 : 12-14, 245 : 6-7

சங்ககாலத்து மகளிரில் பெரும்பகுதியினரைப் போலவே அரசியர் கற்புநெறி தவறாமல் வாழ்ந்தனர்.[153] அரசன் மாய்ந்த போது அவன் மனைவியும் உடன் மாய்ந்தாள்.[154] பட்டத்து அரசியே அன்றி அரசனது மகளிர் பலர் அரசனுடன் உடன் கட்டை ஏறியதும் உண்டு.[155]

மூவேந்தரும் தமக்குள்ளே மணவுறவு கொண்டிருந்தனர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சோழன் மணக்கிள்ளியின் மகளை மணந்தான் என்று கொள்ளும்படி பதிற்றுப்பத்து ஐந்தாம் பதிகம் தெரிவிக்கிறது. சேர மன்னர்கள் பிற குறுநில மன்னர் களாக விளங்கிய வேளிர் குலத்தவரிடமும் பெண்கொண்டனர் என்ற செய்தியைப் பதிற்றுப்பத்துப் பதிகங்கள் தெரிவிக்கின்றன. இவர்களைப்போலவே பிற வேந்தர்களும் மன்னர்களும் மணவுறவு கொண்டிருக்கலாம். இவர்களது மணவுறவும், பலமனைவி நிலை யும் தம் ஆட்சிக்கு உறுதுணையாய் அமையும் நோக்கில் அமைந் திருக்கலாம்.

வேந்தர்களும் மன்னர்களும் சாதாரண மறவர்குலப் பெண் களையும் மணக்க விரும்பி முயன்றனர்.[156]

இவற்றையெல்லாம் திரட்டி நோக்கும்போது, அரசர்களின் திருமணம் குடிப்பிறப்புக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடைபெற வில்லை என்பது தெளிவாகிறது.

மூடி துறப்பு

சங்ககாலத்தில் பெரும்பான்மையான மன்னர்களின் ஆட்சி அவர்களுடைய உயிருள்ள வரையில் நீடித்தது. சிறப்பாக, இறப்பும் போரிலேயே நிகழ்ந்தது. சிலர் வடக்கிருந்து உயிர் துறந்தனர். அரசருக்குப் போரில் மானக்கேடு நேருமானால் அவர்கள் வடதிசை நோக்கி அமர்ந்து, உண்ணாநோன்பு இருந்து உயிர்துறப்பர்.

அரசன் தான் இறப்பதற்குமுன் அரசாட்சியைத் துறந்தான் என்று எண்ணுவதற்கும் சில சான்றுகள் உள்ளன. பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பவன் நெடும்பாரதாயனார் என்னும் அந்தணரைப் பின்தொடர்ந்து காட்டுக்குச் சென்றான் என்று பதிற்றுப்பத்து மூன்றாம் பதிகம் கூறுகிறது. தாயனார் என்னும்

153 புறம். 246 : 10-15
154 ஷை 240 : 3-6
155 ஷை 246
156 ஷை 345 : 11

துறவிக்கு அவர் உள்ள இடத்திலேயே பணிவிடை செய்வதற் காகத் தன் அரச பதவியைத் துறந்துவிட்டு, அவர்பின் சென்றான் போலும். இதனால், அரசர்கள் துறவிகளைப் போற்றியமையும் விளங்கும்.

அன்றியும் அரசர்கள் வயதில் முதியவர்களுக்குப் பணிவிடை செய்வதிலும் ஊக்கம் காட்டினர். செல்வக்கடுங்கோ வாழியாதன் தன் இரண்டு இளைய ஆண் மக்களைக்கொண்டு முதியவர் களைப் பேணிவந்தான். செங்குட்டுவன் தன் மகன் குட்டு வன் சேரலை, பரணர் என்னும் புலவர்க்குப் பணிவிடை செய்யக் கொடுத்தான்.[157] இளங்கோவடிகள் தம் அண்ணனுக்காகத் தாமே தம் இளமைப் பருவத்திலேயே முடிதுறப்புத் தியாகம் செய்தார். இவை முடிசூடா முன்னம், முடிசூடும் உரிமை உடைய வர்கள் செய்த முடிதுறப்புத் தியாகம். பெருஞ்சேரல் இரும் பொறை தான் அரசாண்டு கொண்டிருந்தபோதே பழையமையில் (துறவறக் கோட்பாட்டில்) சிறந்து விளங்கித் தன்னிடமிருந்த நரைமூதாளத் துறவிக்குத் தவத்தின் மாண்பை அறிவுறுத்தி னான்.[158] செல்வக்கடுங்கோ வாழியாதனும், இளஞ்சேரல் இரும் பொறையும் 'புரோசு' (புரோகிதர்) மயக்கினார்கள் என்று கூறப் படுகிறது.[159] இவர்களும் பெருஞ்சேரல் இரும்பொறையைப் போன்று தவ ஒழுக்கத்தால் புரோகிதர்களுக்கு நல்லறிவு புகட் டினர் என்று கொள்ளலாம். இந்த வகையில் பார்க்கும்போது தவநெறி என்பது முடிதுறப்பு நிகழாமலேயே நிகழவும் இட மூண்டு.

சில அரசர்கள் மான உணர்வால் தம் உயிரைத் தாமே மாய்த்துக்கொண்டனர். கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் இடையே காணப்பட்ட இகல் காரணமாகத் தன் உயிரை வடக் கிருந்து துறந்தது, சேரமான் பெருஞ்சேரலாதன் தன் முதுகில் புண் பட்டதால் தன் வீரத்திற்கு இழுக்கு நேர்ந்ததென்று கருதிப் போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர்விட்டது, சேரமான் கணைக்கால் இரும்பொறை சிறையில் பகைமன்னன் காவலனால் மதிக்கப்படாமை எண்ணித் தண்ணீரும் உண்ணாதிருந்து உயிர் துறந்தது, பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலனுக்கிழைத்த தவற்றை எண்ணி அரியணையிலிருந்து கீழே விழுந்து உயிர் துறந்தது முதலானவை தானே தன் உயிரை விடுவதற்கு முனைந்த செயல்களே.

---

157 பதிற். பதி. 5
158 மே 74 : 24 – 27
159 மே பதி. 9 : 12

மக்கள் புரட்சி செய்து அரசனை முடிதுறக்கச் செய்யும் நிலைமை, சங்ககாலத் தமிழ்நாட்டு வரலாற்றில் இடம்பெறவில்லை; அரசர்கள் தாமே துறந்த நிகழ்ச்சிகள் தாம் உண்டு.

மிக்க செல்வாக்குப் பெற்றிருந்த மக்களில் சிலர், தம் வாழ்க்கையைத் துறந்து காட்டில் தவம்செய்யும் துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர் என்று புறநானூற்றுப் பாடல்களில் செய்தி வருகிறது.[160] இந்த நிலையில், அரசர்களும் தம் முடி வாழ்க்கையைத் துறந்து, துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர் எனலாம். மேலே கூறப்பட்ட பல்யானைச் செல்கெழு குட்டுவன் துறவு இந்த வகையில் அமைந்தது.

அரசர்கள் முடிதுறத்தலைத் தொல்காப்பியம் 'கட்டில் நீத்த பால்' என்று குறிப்பிடுகிறது.[161] 'அரியணையைத் தாமே துறந்த நிகழ்ச்சிகளும் அரசர்களிடையே உண்டு' என்பதனை இது தெளிவுபடுத்துகிறது.

அரச சின்னங்கள்

படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார், முடி ஆகியனவும் பிறவும் அரசருக்கு உரிய சின்னங்கள்.[162] அந்தணர்களுக்கு உரிய நூல், கரகம், முக்கோல், இருக்கைமணை ஆகிய வற்றுள்ளும் அரசர்க்கு உரியன உண்டு. அந்தணர்கள் அரசாளும் நிலைமையும் உண்டு.[163] அரசியல் தொடர்புள்ள இந்தச் செய்திகள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. இந்தச் செய்திகளைக் கூறும் பகுதிகள் இடைக்காலத்தில் புகுத்தப் பட்டவை ; தொல்காப்பியரோ, இளங்கோவோ கூறியவை அல்ல என்று அறிஞர்கள் கருதிவருகின்றனர். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நாற்குலப் பிரிவு இப் பகுதியில் காணப் படுவதாலும், சங்கப்பாடல்களில் தெளிவாக இப் பாகுபாடு காணப் படாமையாலும் அவர்கள் இந்தச் செய்திகளைப் பிற்காலத்தவை என்று கருதுகிறார்கள். அவர்கள் கருத்து ஏற்புடைத்தே. எனினும் படை, கொடி, குடை முதலானவற்றைச் சங்ககால மன்னர்கள் கொண்டிருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் இருப்பதால் அரசனின் சின்னங்கள் என்னும் பகுதியில் அவற்றை ஆராய்கிறோம்.

---

160 புறம். 251, 252
161 தொல். பொருள். புறத். 17 : 16
162 டி மரபு 72
163 டி 73; 83

படை : நாட்டின் பாதுகாப்பில் அரசனுக்குத் துணையாய் அமைவது படை. இந்தப் படை பகைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பதிலும், தன் நாட்டின் நலனுக்காக அயல்நாடுகளை வெற்றி கொள்வதிலும் அரசனுக்குத் துணையாக விளங்கின.

இந்தப் படையினர் நாட்டுக்குப் பொதுப்பணி செய்வதிலும் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது. பாண்டிய அரசனின் படைவீரர்கள், வாணனது சிறுகுடியின் நிலத்திற்கு நீர்பாய்ந்த குளம் ஒன்றைக் காவல்புரிந்து வந்தனர்.[164] கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனது படை, கடல் உடைப்பைத் தடுக்கும் பணியை மேற்கொண்டு வெற்றிகண்டது.[165]

ஊர்காவல் படையினர், இரவில் ஊர்காவல் பணியை மேற்கொண்டிருந்ததையும்,[166] வாணிகச் சாத்துக்குக் காவலாய் வழித்துணை சென்றமையையும் காவலர் என்னும் பகுதியில் காணலாம்.

எனவே, சங்ககாலத்துப் படைகள் வெறுமனே போர்த்தொழிலில் மட்டும் ஈடுபட்டிருந்தவை அல்ல. போரில்லாக் காலங்களில் நாட்டுக்கு நலம் பயக்கும் பொதுப்பணியிலும் ஈடுபட்டிருந்தன எனலாம்.

'படை' என்னும் சொல் சங்ககாலத்தில் படைக்கருவி, படிவு அடுக்கு, படியவைத்தல், படைவீரர் தொகுதி முதலான பல்வேறு பொருள்களில் கையாளப்பட்டுள்ளது. எனவே, தொல்காப்பியரால் அரசனுக்கு உரியனவாகக் குறிப்பிடப்படுவனவற்றுள் வரும் 'படை' என்பது படைக்கருவியை உணர்த்துகிறதா, படைவீரர்களின் தொகுதியை உணர்த்துகிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. சங்ககாலத்து அரசர்களுள் சிலர் படைக்கருவியால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். சிலர் போர்ப்படைகளாலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். எனவே, அரசன் எப்போதும் படைக்கருவியை வைத்துக்கொண்டிருந்தான் என்றும், படை வீரர்கள் புடைசூழ விளங்கினான் என்றும் கொள்ளலாம்.

அரசனுக்கு நிலையான படை இருந்தது. அது போரில் தேர்ச்சிபெற்ற படை. இப் படை அன்றிப் போர்க்காலங்களில் அவ்வப்போது படை திரட்டப்படுவதும் உண்டு. இப் படை கட்டாயப்படுத்திச் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. நாட்டின்மீது பற்றுக்கொண்ட வீரர்கள், தாமே முன்வந்து படையில்

164 நற். 340 : 3-7
165 பதிற். 46 : 10-13
166 நற். 260 : 3

சேர்ந்துகொண்டனர், அரசன் அவர்களை ஏதோ ஒருவகையில் தரம்பிரித்து முதல் நாள் போருக்கும் அடுத்த நாள் போருக்கும் அனுப்பிவைத்த நிலைமை காணப்படுகிறது.[167]

பொதுவாக நோக்குகையில் தேர், யானை, குதிரை, மறவர் என்னும் நான்குவகைப் படைகள் சங்ககால அரசர்களிடத்தில் இருந்தமை வெளிப்படும். 'தானை' என்பது சிறப்பு வகையால் மறவர் படையை உணர்த்தும். 'வேல்தானை', 'வாள்தானை' என்று அவை தாம் கொண்டிருந்த படைக்கருவிகளால் பெயர் பெற்றிருந்தன. ஆழ்ந்து நோக்குகையில் ஐம்படை நிலையே தமிழகத்தில் விளங்கியது என்பது தெளிவாகும்.

'தோல்படை' என்பது சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கிய படைகளில் ஒன்று. முரசு, கிணை முதலான தோற்கருவிகளைப் போர்க்களங்களில் முழக்கி, வீர உணர்வு உண்டாக்கும் படை இது. மேலே கூறப்பட்ட நான்கு படைகளுடன் இந்தப் படையையும் சேர்த்துப் புறநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

இந்தப் படை அல்லாமல் கடற்படையும் இருந்தது.[168] கரிகாலன் ஈழத்தை வென்றதும், செங்குட்டுவன் கடம்பரை வென்றதும் கடற்படையின் துணைகொண்டுதான் எனல் பொருத்தமானது.

இவற்றுள் எல்லாவகைப் படைகளையும் எல்லா அரசர்களும் கொண்டிருந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. சிலரிடம் ஒன்றிரண்டு இல்லாமலும் இருந்திருக்கலாம்.

கொடி : கொடி அரசச் சின்னங்களில் ஒன்று என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதாகவும், அரச பூதம் கொடியைத் தன் கையில் பிடித்திருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுவதாகவும் மேலே குறிப்பிட்டோம். இவை கொடி அரசனுடைய சின்னம் என்பதை விளக்குகின்றன. கொடியின் அளவு, நிறம்பற்றிச் செய்திகள் இல்லை. பாண்டியன் கொடியில் மீனும் (கயல்), சேரன் கொடியில் வில்லும் (சிலை), சோழன் கொடியில் புலியும் பொறிக்கப்பட்டிருந்தன.[169]

கொடியை அரச பூதம் கையில் பிடித்திருந்தது என்று மேலே குறிப்பிட்டோம். இதுபோலப் போர்வீரர்கள் தம் கையில் கொடி

167 புறம். 197 : 5
168 மே 6 : 12, 382 : 1
169 சிலப். 25 : 151–158, 26 : 139

பிடித்துச் சென்றார்கள்.[170] போர்ப் பாசறையிலும் கொடிகள் பறந்துகொண்டிருந்தன.[171] பொதுவாகப் போரில் வெற்றிபெற்ற பின் வெள்ளை நிறம்கொண்ட கொடிகள் வெற்றிச் சின்னமாகப் பிடிக்கப்பட்டன.[172] பட்டத்து யானை,[173] போருக்குச் செல்லும் யானை,[174] வென்று மீளும் யானை[175] முதலான யானைகள்மீது கொடிகள் பறந்தன.

அரசர்கள் ஏறிச்சென்ற தேரின்மீது கொடிகள் பறந்தன.[176] சில அரசர்கள் 'கொடித்தேர்' என்னும் அடைமொழியால் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.[177] அரசர்கள் கொடித்தேரில் ஏறி நகரில் உலா வரும் வீதி 'கொடித்தேர் வீதி' என்றே குறிப்பிடப்பட்டது.[178] அரசனேயன்றி அரசனது தேர்ப்படையைச் சேர்ந்தவர்களும் கொடி தாங்கிய தேரில் சென்றனர்.[179] பொதுமக்களும் தேரில் செல்வது உண்டு.[180] பொதுமக்கள் ஏறிச் செல்லும் தேரில் கொடிகள் பறக்கவில்லை.

அரசனின் ஒவ்வொரு வெற்றியையும் குறிப்பிடும் வகையில் தனித்தனியே அவனது நகரில் கொடிகள் பறக்கவிடப்பட்டன.[181] அரசன் வெற்றி பெற்றவுடன் வெற்றிக்கொடி பறக்கவிட்டான்.[182] தான் பெற்ற வெற்றி ஒவ்வொன்றையும் குறிப்பதற்குத் தனித் தனிக் கொடிகள் பறக்கவிட்டான்.[183]

நாள்தோறும் கோட்டை வாயிலில் கொடிகள் ஏற்றப்படுவதும் உண்டு.[184] முருகன்கூட வெற்றிக்கொடி பிடித்தான் என்று கூறப்படுகிறது.[185] போரில் வெற்றிபெற்று மீளும்போது நகரத்திலுள்ள மக்கள் கொடிகளை உயர்த்திக்கொண்டு சென்று வரவேற்றதாகத் தெரிகிறது.[186]

நகரின் பல்வேறு இடங்களில் பல்வேறு வகையான கொடிகள் பறந்தன.[187] கோட்டை வாயில்,[188] கோட்டைச் சுவர்[189]

---

170 புறம். 38 : 3, 314 : 5
171 டை 69 : 9
172 டை 362 : 5; அகம். 162 : 21
173 டை 228 : 10
174 பதிற். 14 : 16, 52 : 1, 53 : 20, 69 : 1, 82 : 3, 88 : 17
175 நெடுநல் 87; அகம். 162 : 23
176 புறம். 24 : 23, 175 : 6
177 டை 367 : 14; அகம். 57 : 14
178 சிலப். 22 : 109
179 டை 30 : 177
180 பரிபா. 11 : 51
181 மதுரைக். 368
182 பதிற். பதி. 5 : 1; அகம். 354 : 3
183 மதுரைக். 371; மலைபடு. 582
184 சிலப். 15 : 217
185 பரிபா. 21 : 17
186 கலி. 31 : 25
187 மதுரைக். 373
188 டை 356; அகம். 326 : 5
189 மணிமே. 28 : 164, 28 : 170

ஆகியவற்றில் கொடிகள் பறந்தன. புகார் நகரத்திலிருந்த நான்கு வாயில்களில் ஒன்று 'கொடிவாயில்' எனப் பெயர்பெற்றிருந்தது.[190] கச்சியிலிருந்த வாயில் 'கொடிநிலை வாயில்' எனப் பெயர்பெற்றிருந்தது.[191] பொதுவாகத் தலைநகரின் எல்லாப் பகுதிகளிலும் கொடிகள் பறந்துகொண்டிருந்தன.[192] நகரத்திலுள்ள தெருக்களிலும் கொடிகள் பறந்துகொண்டிருந்தன.[193] தெருக்களில் உள்ள மாடங்களில் வெண்ணிறக்கொடி பறந்துகொண்டிருந்தது.[194] வாணிகர்கள் தங்களது வாணிகப் பொருள்களின் அடையாளச் சின்னங்களாகத் தனித்தனிக் கொடியைப் பறக்கவிட்டனர்.[195] மற்றும், கடல் வாணிகக் கப்பல்கள்மீதும் கொடிகள் பறந்தன.[196] சொற்போர் நடத்தியவர்களும் தம் அடையாளக் கொடியை உயர்த்தியிருந்தனர்.[197] வஞ்சியிலிருந்த கோப்பெருந்தேவியின் அந்தப்புரக் கனக மாளிகையில் முத்துகள் கோத்த கொடிகள் இருந்தன.[198] மற்றும் திருவிழாக் காலங்களில் பல்வேறு வகையான கொடிகள் பறக்கவிடப்பட்டன.[199]

தமிழர்களின் தெய்வங்களுக்குத் தனித்தனிச் சின்னங்களையுடைய கொடிகள் இருந்தன.[200]

இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நோக்கும்போது, கொடி என்பது பொதுவகையால் அரசனுக்கு மட்டும் உரிய சின்னம் அன்று என்பதும், எல்லோருக்கும் பொதுவானது என்பதும் விளங்கும். அரசனுக்கு மட்டும் உரிய கொடிகளும் இருந்தன. அந்தக் கொடிகளில் அவனது இலச்சினைகள் பொறிக்கப்பட்டிருந்தன. எனவே, அரசச் சின்னங்களில் ஒன்றாகப் பொதுப்படையாகக் கொடியைக் கொள்ளாமல், அரசச் சின்னம் பொறித்த கொடியை மட்டும் கொள்ளலாம்.

குடை : அரசச் சின்னங்களில் ஒன்றாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் குடை 'வெண்கொற்றக் குடை' என்று வழங்கப்படுகிறது. 'வெண்குடை' என்று சங்கநூல்களில் அது சிறப்பித்துக் கூறப்படுகிறது. வெண்ணிறத் துணியாலான குடையாய் அமைந்

190 மணிமே. 6 : 40
191 டி 28 : 28
192 வஞ்சி நகரில் – புறம். 32 : 1
கூடல் நகரில் – சிலப். 12 : 189
193 நற். 45 : 4
வஞ்சியில்–பதிற். 15 : 19
மதுரையில்–அகம். 149 : 14
ஆர்க்காட்டில் – நற். 227 : 6
194 பதிற். 47 : 4
195 பொன் வாணிகர் – சிலப். 14 : 204
கூல வாணிகர் – சிலப். 6 : 132
196 மதுரைக். 370; பட்டினப். 174-175; அகம். 110 : 18
197 பட்டினப். 171
198 சிலப். 27 : 202
199 பட்டினப். 160 - 168
200 அகம். 149 : 14 – 15 ; புறம். 1 : 4; பரி. 4 : 36-41

திருந்தமையால் போலும் இப் பெயர் பெற்றது. வெள்ளை நிறம் தூய்மையின் அடையாளம். அது அரசனது ஆட்சி தூய்மையாக அமைந்திருத்தலை—செங்கோலின் தன்மையை—உணர்த்தியிருக்கலாம். கால்களைப் போன்றும், மாலைகளைப்போன்றும் நூல்கள் தொங்கும்படி கட்டப்பட்டு அக் குடை அழகு செய்யப்பட்டிருந்தது.[201] 'மாலை வெண்குடை' என்னும் தொடர், மாலைகளால் அது அழகு செய்யப்பட்டிருந்ததை[202] உணர்த்துகிறது. இது 'காவல் வெண்குடை'[203] என்று கூறப்படுவதால் மக்களைக் காக்கும் அடையாளச் சின்னம் என்று இதனைக் கூறலாம்.

அரசனுக்குப் பிடிக்கப்பட்ட இக் குடை மழைத்தூறல் அவன் மீது படாவண்ணம் காத்ததாக நெடுநல்வாடை கூறுகிறது. அரசனின் குடை அவன்மீது வெயில்படாமல் காக்கப் பிடிக்கப் படுவது அன்று என்றும், குடிமக்களின் துயரைப் போக்கித் தன் நிழலில் அடைக்கலம் தரும் ஆட்சி இது என்பதை வெளிப்படுத்தும் அடையாளச் சின்னம் என்றும் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.[204] மக்களைக் காக்கும் குடையே வெண்குடை என்று மற்றொரு புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.[205]

வெண்கொற்றக் குடை அரசர்களுக்கு மட்டுமே உரிய சின்னமாகும்.[206] வேந்தர்களும்,[207] குறுநில மன்னர்களும்,[208] வெண் கொற்றக் குடையைப் பெற்றிருந்தனர். சேரன் அளித்த வெண் குடையை அந்தணன் ஒருவன் பிடித்துச் சென்றான்.[209] பொதுவாக, அவர்களும் செல்வவளம் காரணமாகப் பிடித்திருந்தனரோ என்று எண்ணவேண்டியுள்ளது.[210] கண்ணகிக்கு நடந்த திருமண விழா நிகழ்ச்சியிலும் 'வெண்குடை' பிடித்துச் செல்லப்பட்டது.[211] அரசர்க்கு உரிய படைத்துணை, வாணிகர்க்கும் உரியது என்று தொல்காப்பியம் கூறுவது[212] இவ்விடத்தில் நினைவுகூர்ந்து பிற அரசச் சின்னங்களில் சில வாணிகர்க்கும் இருந்திருக்கக்கூடும் என்று கருதலாம்.

போரில் தோற்ற அரசர்களின் வெண்கொற்றக் குடைகள் பகைவரால் கைப்பற்றப்பட்டன.[213] அரசன் செல்லுமிடங்களிலெல்லாம் அக் குடை பிடிக்கப்பட்டது.[214]

201 நெடுநல். 184
202 சிலப். 5 : 173, 17 : 5
203 மே. 3 : 118; 23 : 79
204 புறம். 35 : 19-21
205 மே. 229 : 19
206 புறம். 189 : 2, 367 : 14
207 பதிற். 52 : 31
208 அகம். 125 : 20-21
209 சிலப். 23 : 77
210 புறம். 75 : 11-12, 197 : 7-8
211 சிலப். 1 : 46
212 தொல். பொருள். மரபு. 77
213 அகம். 36 : 21
214 புறம். 174 : 15-16

அரசபூதம் வெண்குடை பிடித்துச் சென்றதாகக் கூறப் படுகிறது.[215] வெண்கொற்றக்குடை அரசச் சின்னம் என்பதைக் மேற்கண்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

முரசு: தொல்காப்பியம் அரசனுக்கு உரியன என்று கூறுவன வற்றுள் முரசும் ஒன்று என்று குறிப்பிட்டோம். சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர் முரசினைக்கொண்டு சிறப்பிக்கப் பட்டுள்ளனர்.[216] அரசாளும் தாயப்பேறு முரசால் சிறப்பித்துக் கூறப்படுகிறது.[217] படையும்,[218] பாசறையும்,[219] போரும்,[220] முரசப்பறையால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. இவை முரசு, அரசனுக்கு உரிய சின்னம் என்பதைக் காட்டுகின்றன. எனினும், முரசை அரசனுக்கு மட்டுமே உரிய சின்னமாகக் கொள்ள முடியாது. செல்வர்களும் முரசு அடைமொழியால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர்.[221] செல்வர்களே அன்றிப் பழங்குடி மக்களும் முரசு என்னும் அடையால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர்.[222] மற்றும் நகரம் எங்கும் முரசு முழங்கும் ஒலி கேட்டதாகவும் கூறப் பட்டுள்ளது.[223] இவற்றைத் திரட்டி நோக்குப்போது முரசச் சின்னம் அரசனுக்கு மட்டும் உரிய சின்னமன்று. பொதுமக்களும் முரசை வைத்திருந்தனர் என்பது பெறப்படும். ஒருவேளை முரசு வைத்திருப்பவர் அரசனால் சிறப்புப் பெற்றோராக இருந்திருக்கக் கூடும்.

அரசர்கள் பொதுவகையால் 'முரசு மூன்று ஆள்பவர்' என்று கூறப்பட்டுள்ளனர்.[224] பாண்டியர்கள் மூன்று முரசுகளுடன் அரசாட்சி செய்ததாகக் குறிப்பிடப்படுகிறார்கள்.[225] இவற்றில் கூறப்பட்ட மூன்று முரசுகள் வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு என்று கூறப்படுகிறது.[226] வீரமுரசுக்கு நீராட்டுவிழா நடந்தது பற்றியும் அதனை வைப்பதற்கென்று தனிக் கட்டில் இருந்தது பற்றியும் குறிப்புகள் உள்ளன.[227] 'நியாயமுரசு' என்பது அரசன் நீதி வழங்கப்போவதை அறிவிக்கும் முரசு. 'தியாகமுரசு' என்பது அவன் கொடை வழங்குவதை அறிவிக்கும் முரசு. 'மணமுரசு' என்பது அவன் கலைநிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதை அறி விக்கும் முரசு. அரசன் பகற்பொழுதை மூன்று கூறுகளாக்கி

---

215 சிலப். 22 : 53
216 புறம். 75 : 11-12
217 ஷெ. 366 : 1-6
218 ஷெ. 301 : 5
219 முல்லைப். 79
220 பதிற். 34 : 10, 41 : 19
221 புறம். 127 : 10
222 கலி. 105 : 1 - 5
223 பதிற். 12 : 7
224 கலி. 132 : 4
225 புறம். 58 : 12-13
226 மண முரசு, நியாய முரசு, தியாக முரசு என்று கூறுவாரும் உளர்.
227 புறம். 50

முதல் பகுதியைக் கொடை வழங்குவதற்கும், இரண்டாம் பகுதியை நீதி வழங்குவதற்கும், மூன்றாம் பகுதியை கலை நிகழ்ச்சிகளுக்கும் செலவிட்டான் என்பதை அரசனது வாழ்க்கை வரலாற்றுப் பகுதியில் காணலாம்.

அரசர்கள் முரசு என்னும் இசைக் கருவியால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதுபோலவே 'பணை' என்னும் இசைக் கருவியாலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர்.[228] போரிலும்,[229] பாசறையிலும்,[230] திறை கொடுத்து இரண்டு வேந்தர்களும் ஒன்றான நிலையிலும்[231] இந்தப் பணை என்னும் கருவி முழங்கிற்று. மதிலின்மீது வைத்திருந்த போர்க்கருவிகளில் ஒன்றாகவும் இது விளங்கிற்று.[232] இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடம்பர்களை வென்று அவர்களது காவல்மரமான கடப்ப மரத்தை அறுத்து அதிலிருந்து தன் பணையைச் செய்துகொண்டான்.[233] இப் பணைப்பறையும் முரசைப்போலவே அரசனுக்கு உரிய சின்னமாக விளங்கிற்று என்பதைக் காட்டுகின்றன. முரசைப் போலவே பணையும் மக்களால் பயன்படுத்தப்பட்டது. மாலையில் அரண்மனையில் பணை முழக்கம் எழுந்தது.[234] அதைப் போலவே மாலைக்காலத்து அந்திப்பொழுதில் கோட்டை சூழ்ந்த ஊரில் வாழ்ந்த கோவலர்கள் மாடியிலிருந்த நிலாமுற்றத்திலிருந்து கொண்டு பணையை முழக்கி மகிழ்ந்ததாகக் குறிப்பு உள்ளது.[235] மற்றும் திருமண வீட்டிலும்,[236] அரிவையர் ஆடும் இடங்களிலும்,[237] திருவிழாவை அறிவிப்பதற்காகத் தெருவிலும்[238] இப் பணைக்கருவி முழக்கப்பட்டது. இவை, பணைக்கருவி மக்களாலும் பயன்படுத்தப்பட்டதைக் காட்டுகின்றன.

முரசு, பணை ஆகியவை வெவ்வேறு கருவிகள் என்னும் குறிப்பு பட்டினப்பாலையில் உள்ளது.[239] முழவு பணை ஆகியவை வெவ்வேறு கருவிகள் என்னும் குறிப்பு பரிபாடலில் உள்ளது.[240] இவற்றில் முரசு, பணை, முழவு என்னும் மூவேறு இசைக்கருவிகளைக் காண்கிறோம். முழவு என்னும் இசைக்கருவி எல்லா இடங்களிலும் ஆண்மகனின் தோளுக்கு உவமையாகக்

228 புறம் 119 : 6; பதிற். 30 : 30
229 பட்டினப். 239 ; பதிற். 39 : 5-6
230 பதிற். 88 : 16-17
231 அகம். 44 : 1-4
232 சிலப். 15 : 214
233 பதிற். 11 : 14-16, 17 : 5
234 மணிமே. 19 : 18
235 அகம். 124 : 13-16
236 பதிற். 136 : 5-9
237 அகம். 301 : 17
238 மதுரைக். 359-362
239 பட்டினப். 236-239
240 பரிபா. 7 : 16

கூறப்பட்டுள்ளது.[241] பணை எல்லா இடங்களிலும் பெண்களின் தோளுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.[242] முழவு, பணை யைப்போலவே நகரெங்கும் ஒலிக்கப்பட்டது.[243] விழாக்காலங் களிலும்,[244] துணங்கை ஆட்டத்திலும்[245] இது ஒலிக்கப்பட்டது. இந்த மூன்று இசைக்கருவிகளும் 'முரசு மூன்று' எனக் கூறப்படும் பாகுபாட்டிற்குப் பொருந்துவனவாக உள்ளன.

பொதுவாக, முரசை அரசச் சின்னமாகக் கொள்ளலாம் என்பதும், எனினும் அரசனுக்கு மட்டுமே உரியதன்று என்பதும் தெளியவேண்டிய உண்மைகளாகும்.

புரவி, களிறு, தேர், தார்

தொல்காப்பியம் அரசனுக்கு உரிய பொருள்கள் என்று குறிப் பிடும் பகுதியில் புரவி, களிறு, தேர், தார் என்னும் நான்கை யும் சேர்த்தாற்போல் கூறுகிறது.[246] இதனால் இவை நான்கும் அந்தந்தப் படைகள் என்று எண்ணத் தோன்றும். அப் பகுதியில் 'படை' தனிச் சின்னமாகக் கூறப்பட்டுள்ளமையால் இவை படை அன்று ; ஊர்திகளும் பிறவுமாம் என்பது பெறப்படும்.

புரவி : அரசனுக்கு என்று தனிக் குதிரை இருந்தது. அந்தக் குதிரைகளுக்குச் சிறப்புப் பெயரிட்டு வழங்கியதாகவும் தெரிகிறது. காரி அரசனின் குதிரை 'காரி' என்றும், ஓரி அரசனின் குதிரை 'ஓரி' என்றும் பெயர்பெற்றிருந்தன.[247] சாக்கையன் என்பவனது குதிரை 'பாண்டி' என்னும் பெயர்பெற்றிருந்தது. மூவேந்தர் களும் குதிரை அடைமொழிகளால் சிறப்பித்துக் கூறப்பட்டுள் ளனர்.[248] இவர்களது குதிரைக்குச் சிறப்புப் பெயர்கள் இருந்தமை கலித்தொகையால் தெரியவருகிறது.[249] காரி, ஓரி முதலான மன்னர்களின் குதிரைகளுக்குச் சிறப்புப் பெயர் இருந்திருக்கும் போது இவர்களுடைய குதிரைகளுக்கும் சிறப்புப் பெயர் இருந் திருக்கலாம். பிற்கால நூல்கள் சோழனின் குதிரைக்குக் 'கோரம்' என்றும், பாண்டியன் குதிரைக்குக் 'கனவட்டம்' என்றும், சேர னின் குதிரைக்குப் 'பாடலம்' என்றும் பெயர்கள் இருந்ததாகக்

---

241 புறம் 50 : 12 ; அகம். 346:14; மதுரைக். 99
242 நற். 166 : 3; 24; அகம். 181 : 2-4
243 புறம் 247 : 8; பதிற். 15 : 18
244 அகம். 336.16
245 டி டி
246 தொல். பொருள். மரபு. 4 : 72
247 சிறுபாண். 110-11
248 அகம். 309 : 10
249 கலி. 96 : 26; சேந்தன் திவாகரம்— விலங்கில் பெயர்த் தொகுதி, கழகப் பதிப்பு (1958) பக். 52 — குறுநில மன்னர்களின் குதிரைக்குக் 'கந்துகம்' என்னும் சிறப்புப் பெயர் இருந்ததாகவும் குறிக்கப்படுகிறது.

குறிப்பிடுகின்றன.[250] மூவேந்தர்களே அன்றிக் குறுநில மன்னர்களும் அவரவர்களுடைய குதிரையால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். குமணன்,[251] இளவெளிமான்,[252] பேகன்[253] முதலான மன்னர்களும் மேலே கூறப்பட்ட காரி, ஓரி ஆகியோரும் இவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்ட குறுநில மன்னர்களில் சிலராவர்.

அரசர்களே அன்றி அரசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் குதிரையால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர்[254] இவ்வாறு அதியமான் மகன் பொகுட்டெழினி, யானை ஊர்தியால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான்.[255] இந்தச் சான்றுகள் அரசனுக்கு உரிய ஊர்தி, அரசக் குடும்பத்தார்க்கும் உரியதாக விளங்கியது என்று கொள்ள இடம் தருகிறது.

குதிரைப்படை அரசனுடைய படைகளுள் ஒன்றாக விளங்கியது. எனவே, அரசனே அன்றிப் போர்வீரர்களும் குதிரைமீது ஏறிச்சென்றனர் என்பது தெளிவாகிறது.[256] அப் படைக்குத் தலைவர்களாக விளங்கிய பிட்டன்,[257] கொற்றன்[258] ஏனாதி, திருக்கிள்ளி[259] முதலானோர் குதிரையால் சிறப்பிக்கப்பட்ட படைத்தலைவர் ஆவர்.

அரசரும் பொதுமக்களும் குதிரைகள் பூட்டிய தேரில் ஏறிச் சென்றதாகப் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளன. போருக்கே அன்றிப் போக்குவரத்துக்கும் இவ்வகையில் குதிரை பயன்பட்டதாகத் தெரிகிறது. இந்த வகையில் பார்க்கும்போது குதிரை அரசனுக்கு மட்டுமே உரிய சின்னமாகத் தென்படவில்லை. குதிரையை அரசச் சின்னம் என்று கொள்ளும்போது தனிப்பட்ட பட்டத்துக் குதிரை என்பதுபோன்ற ஒரு குதிரையையே கொள்ள வேண்டும்.

களிறு : ஆண்யானை, களிறு எனப்படும். சங்ககாலத்து அரசர்களின் படைப் பிரிவுகளில் ஒன்று யானைப்படை. ஆண் யானை பகைவரைக் குத்திக் கொல்லும் கோடுகளைப் பெற்றிருந்தமையாமல் படையில் ஆண் யானைகளே — களிறுகளே — பயன்படுத்தப்பட்டன. இந்த யானைப்படை அரசனுக்கு உரியது.

---

250 கலி. 96 : 26
251 புறம். 165
252 மே 162
253 மே 141 : 12, 143 : 3, 145 : 3
254 'கருமான் கைவண் தோன்றல்' (புறம். 43 : 11-12)
255 புறம் 96 : 8
256 மே 304 : 3
257 மே 172 : 8
258 மே 1 8 : 17
259 மே 167 : 10

சேரவேந்தன் ஒருவன் 'பல்யானைச் செல்கெழு குட்டுவன்' என்று யானைப்படையால் சிறப்பிக்கப்பட்ட அடைமொழியுடன் கூடிய பெயரைக் கொண்டிருந்தான். எனினும், களிறு அரசனின் சின்னம் என்ற வகையில் தொல்காப்பியம் கூறுமிடத்து இந்த யானைப்படையைக் கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை. காரணம் 'படை' என்னும் சின்னம் தனியாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, அரசச் சின்னம் என்று கொள்ளத்தக்கது 'பட்டத்து யானை' எனக் கொள்ளலாம்.

பட்டத்து யானைபற்றிச் சங்கப் பாடல்களில் தெளிவான குறிப்பு இல்லை. கரிகாலனைப் பட்டத்து யானை மாலைசூட்டித் தேர்ந்தெடுத்ததைப் பழமொழிப் பாடல் தெரிவிக்கிறது. இதனை முன்னர்க் கண்டோம். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பொலிவுடன் அமர்ந்து சென்றதாகக் கூறப்படும்[260] யானை, பட்டத்து யானை என்று கொள்ள இடமுண்டு. முத்தொள்ளாயிரப் பாடல்களில் பல சேர, சோழ, பாண்டிய வேந்தர்களுக்குத் தனி யானை (பட்டத்து யானை) இருந்ததாகக் கூறுகின்றன. இவை — களிறு அதாவது, பட்டத்து யானை அரசச் சின்னம் என்பதைத் தெரிவிக்கும் சான்றுகள்.

அரசனே அன்றிப் புலவர்களும், போர்வீரர்களும் யானைமீது ஏறிச்சென்றதாகக் குறிப்புகள் உள்ளன. அவர்கள் ஏறிச்சென்ற யானைகளும் அரசனால் வழங்கப்பட்டவையாகவே இருக்கக் கூடும். விழாக்காலங்களில் செல்வர்கள் யானைமீது செல்லும் வழக்கம் உண்டு எனத் தெரிகிறது.[261] சங்ககாலத்தில் செல்வ வள மிகுதியானது செல்வாக்கு மிகுதியையும் தேடித்தந்ததனால் ஒரு வகையில் செல்வர்களும் ஆட்சித் தலைவர்களாகவே விளங்கினார்கள் எனலாம். இந்த வகையில் நோக்கும்போது களிறு, சிறப்பாகப் பட்டத்து யானை அரசச் சின்னம் எனலாம்.

தேர் : சங்ககாலத்தில் நிலவழிக்குப் பயன்படுத்தப்பட்ட செயற்கை ஊர்திகளில் தேர், வையம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. 'வையம்' என்பது காளை மாடுகள் ஈர்த்துச் செல்லும் கூட்டு வண்டி; 'தேர்' என்பது குதிரைகள் ஈர்த்துச் செல்லும் அலங்கார வண்டி.[262]

அரசனுக்கு உரிய பொருள்களாகத் தொல்காப்பியம் கூறுவதுள் தேரும் ஒன்று என்று கண்டோம். சேர வேந்தர்களும்,[263] சோழ

260 பதிற். 11 : 18-19
261 பரிபா.. 10 : 44, 12 : 27
262 பரிபா. 20 : 16
263 புறம். 14 : 8, 39 : 16

வேந்தர்களும்,[264] பாண்டிய வேந்தர்களும்,[265] பல குறுநில மன்னர்களும்,[266] வடநாட்டிலிருந்து படையெடுத்து வந்த மோரியர் முதலானோரும்[267] தேர் என்னும் அடைமொழியால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். இந்தச் சிறப்புக் கூற்றுகள் அவர்கள் வைத்திருந்த தேர்ப்படை நோக்கி அமைந்தவையா அன்றி அவர்கள் பயன்படுத்திய சிறப்பு ஊர்திநோக்கி அமைந்தவையா என்று தெளிவாகக் கூறமுடியவில்லை.

அந்துவன் கீரன்,[268] ஆய்,[269] கடியநெடுவேட்டுவன்,[270] பாரி,[271] பேகன்,[272] காரி[273] முதலானோர் தேரைக் கொடையாக நல்கியுள்ளனர். அவர்கள் தேர்களை நிறுத்திக் கொடை வழங்கிய இடம் 'தேர் வீசு இருக்கை' என்று பெயர்பெற்றிருந்தது.[274] பரிசில் பெற்றவர்கள் தேர்மீது ஏறிச்சென்றனர்.[275] இந்தச் செய்திகள் அரசனுக்கும் அரசனால் சிறப்புச் செய்யப்பட்டோருக்கும் தேர் உரியது என்பதைத் தெரிவிக்கின்றன. தேர்ப்படையும் இந்த வகையுள் அடங்கும்.

தலைவியை நாடிச் சென்ற தலைவன் தேரில் சென்றான் என்று அகத்திணைப் பாடல்கள் பலவற்றில் கூறப்பட்டுள்ளன. அவர்களும் மான் பூட்டிய தேரில் சென்றார்களாம். திருவிழாக் காணச் சென்றவர்களும்[276] நீராடச் சென்றவர்களும்[277] தேரில் சென்றனர். ஆண்களே அன்றிப் பெண்களும் தேரில் ஏறிச் சென்றனர்.[278] இந்தச் செய்திகள் செல்வர்கள் தேரைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தியதைத் தெரிவிக்கின்றன. எனவே, தேரை அரசனுக்கு மட்டும் உரிய சின்னமாகக் கூறுவதற்கு இயலவில்லை எனினும், அரசச் சின்னம் தாங்கிக் கொடி பறக்கும் தேரை அரசனுக்கு மட்டும் உரிய சின்னமாகக் கூறலாம்.[279]

---

264 புறம். 4:14, 7:10, 61:13, 203:6, 220 : 6, 226:6
265 மதி. 24 : 23, 52 : 6, 198 : 6, 239 : 14
266 மதி. 144 : 13, 145 : 9, 146 : 11 151 : 7, 158 : 26, 175 : 6
267 மதி. 175 : 6
268 மதி. 359
269 மதி. 133, 240:3, 241
270 மதி. 205
271 மதி. 200 : 12, 201 : 5
272 மதி. 141 : 12
273 புறம். 122 : 2
274 நற். 381:9, புறம். 69:18, 114:6
275 புறம். 12 : 2, 15 : 1
276 பரிபா. 19 : 33
277 மதி. 11 : 53, 12 : 31-33
278 மதி. 9 : 52
279 இது இக்காலத்தில் அரசச் சின்னம் தாங்கிய ஊர்திகள் அரசு பணிக்கு மட்டும் உரியதாக விளங்குவது போன்ற நிலைமை உடையது எனலாம்.

தார் : அரசச் சின்னங்களில் ஒன்று 'தார்' என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதாகக் கண்டோம். தார் என்னும் சொல் அணிகலன்களில் ஒன்றாகிய மாலையையும், படை அணிவகுப்புகளில் ஒன்றாகிய தார்ப்படையையும் சங்ககாலத்தில் உணர்த்தி வந்தது. தொல்காப்பியம் இந்த இரண்டு பொருள்களிலும் இச் சொல்லைக் கையாண்டுள்ளது.[280] மேலே குறிப்பிட்டவாறு அரசச் சின்னங்களில் ஒன்றாகிய படை தனிச் சின்னமாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடியால் இங்குக் கூறப்பட்ட சின்னம் மாலை என்னும் அணிகலனே ஆகும்.

சேரர்,[281] சோழர்,[282] பாண்டியர்[283] ஆகிய மூவேந்தர்களும், வேளிர் முதலான குறுநில மன்னர்களும்[284] தார் அணிந்திருந்தனர். பூவாலும்,[285] பொன்னாலும்,[286] இலைகளாலும்[287] அவர்களது தார்மாலைகள் அமைந்திருந்தன. அவை கைத்திறமையால் புனைவு செய்யப்பட்டவை.[288] போர்க்களம் செல்வோர் வில்லையே தார்மாலை என அணிந்துகொண்டனர் போலும்.[289] இவ்வகையான தார்மாலைகள் பலவற்றை ஒருவர் அணிந்துகொள்வது உண்டு.[290] அரசர்களே அன்றி இளவரசர்களும் தார்மாலைகளை அணிந்துகொண்டார்கள்.[291]

தார் அணி அரசர்களுக்கே அன்றி வாணிகர்க்கும் உரியது என்றும், மன்னனால் சிறப்பிக்கப்பட்ட பிறருக்கும் உரியது என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.[292]

தார்மாலை புனையப் பயன்படுத்தப்பட்ட பூக்களும் இலைகளும் அரசர்களின் குடிச்சின்னப் பூக்களாகவும் தழைகளாகவும் இருந்தன.[293] தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போர்க்கோலம் பூண்டபோது தார்மாலை அணிந்து கொண்டான் என்று கூறப்படுவதால்[294] பொதுவாக, அரசர்கள் போருக்குச் செல்லும்போது தங்களது குடிச்சின்னப் பூவால்

280 படை-தொல். பொருள் மரபு. 72 : 3
மாலை-குறுந். 393 : 6, நற். 280, 350 : 7-8
281 புறம். 343 : 9, பதிற். 23 : 10, அகம். 389 : 15
282 புறம். 378 : 5, 226 : 4, 220 : 5
283 ஷை. 55 : 6, அகம். 335 : 9
284 அஞ்சி—புறம். 91 : 4
அண்டிரன்—ஷை. 241 : 1
அழிசி—நற். 190 : 4
சித்தன்—அகம். 226 : 14
285 புறம். 55 : 6, சிலப். 1 : 2
286 ஷை. 91 : 4, 226 : 4
287 சிலப். 27 : 62
288 மதுரைக். 771
289 சிலப். 23 : 95
290 அகம். 226 : 13
291 மணிமே. 18 : 151
292 தொல். பொருள் மரபு. 84
293 சிலப். 26 : 19
294 புறம். 77 : 6

புனைந்த தார்மாலைகளை அணிந்துகொண்டனர் எனலாம். பிறகாலங்களில் அவர்கள் மணமும் வனப்பும்மிக்க தார்மாலைகளையும்.[295] பொன்னால் புனையப்பட்ட தார்மாலைகளையும் அணிந்திருந்தனர்.

தார்மாலையைப் பொதுமக்களும் அணிந்திருந்தனர். காதலன், காதலியர், இடையன், மறவர், ஆண் கடவுள், பெண் கடவுள் முதலானோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர். அரசர்கள் தங்களது குடிச்சின்னப் பூக்களைப் பொதுவாகத் தார் அணி நிலையிலும், போர்ச் சின்னப் பூக்களைப் பொதுவாகக் கண்ணி நிலையிலும் புனைந்து அணிந்துகொண்டனர். அரசர்களது குடிச்சின்னப் பூக்கள் 'குடிச்சின்னம்' என்னும் பகுதியிலும், போர்ச் சின்னப் பூக்கள் 'போர்ப் பகுதியிலும்' விளக்கப்பட்டுள்ளன.

முடி : முடி, அரசனது சின்னங்களுள் ஒன்று என்று தொல் காப்பியம் கூறுகிறது.[296] முடி என்னும் சொல் ஆண், பெண் என்னும் இருபாலரின் தலைமயிரை உணர்த்தவும் சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக மயிரை முடிந்து செய்யப்பட்ட ஒப்பனை காரணமாக 'முடி' என்னும் பெயர் அமைந்தது.[297]

தலைமுடி என்று செய்யப்பட்ட அணிகலனும் முடி எனப் பட்டது. பொன்னாலும் மணியாலும்[298] முடிகள் செய்யப்பட்டன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நார்முடிச்சேரல், செங்குட்டுவன், அதியமான் ஆகிய மன்னர்கள் 7 முடிகளைக்கொண்ட மாலையை மார்பில் அணிந்திருந்ததாகக் கூறப்படுகிறது. தோற்ற அரசனின் முடியை அழித்து அதன் பொன்னால் வீரக்கழல் செய்து காலில் அணிந்துகொள்வது வழக்கம். இந்த வகையில் தோற்ற மன்னர்களின் 7 முடிகளைக் கோத்து அணிந்தார்களோ என்று எண்ண வேண்டியுள்ளது.

சேர, சோழ, பாண்டியர் தாம் அணிந்திருந்த முடியால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர்.[299] நார்முடிச்சேரல், முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி, நெடுமுடிக்கிள்ளி முடியன் முதலான சங்க கால அரசர்களின் பெயர்களும், முடிநாகராயர் என்னும் புலவர் பெயரும் 'முடி' என்னும் அடைமொழியுடன் அமைந்துள்ளன.

---

295 புறம். 69 : 14, 241 : 1; அகம். 381 : 15
296 தொல். பொருள் மரபு. 72 : 3
297 சிலப். 12 : 1-23; முருகு. 84; பதிற். 46 : 4, கலி. 92 : 43
298 ஷை 26 65, 26 : 20
299 ஷை 61, பதி. 29 : 2,

இந்த முடியின்மீது வாகை முதலான போர்ப் பூக்களைத் தமிழ்நாட்டு அரசர்கள் அணிந்துகொண்டனர்.[300] ஆத்தி, வேம்பு, பனை முதலான குடிப்பூக்களையும் அணிந்து கொண்டனர். வேற்றுப் புல அரசர்கள் தம் முடி, நிலத்தில் படியுமாறு தெய்வத்தையும் தமிழ் மன்னர்களையும் வணங்கியதாகத் தெரிகிறது.[301]

ஆக, இதுவரை கூறியவற்றில் முடி அணி, அரசருக்கு மட்டுமே உரிய சின்னம் என்பதும், பொதுமக்கள் முடி அணியவில்லை என்பதும் பெறப்படும்.

பிற சின்னங்கள்

அரசபூதம் முடி, கண்ணி ஆகியவற்றை அணிந்திருந்ததாகவும், கையில் முரசு, வெண்குடை, கவரி, கொடி, அங்குசம், வடிவேல், வடிகயிறு ஆகியவற்றைக் கொண்டிருந்ததாகவும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

செங்கோல் : அரசன் 'கோன்' எனப்பட்டான். அரசாட்சி 'கோல்' எனப்பட்டது. சங்ககாலத்து அரசர்கள் கையில் செங்கோல் என்னும் கோலை வைத்திருந்தனர் 'அறம் துஞ்சும் செங்கோலையே' என்று மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக் குறுங்கோழியூர் கிழார் சுட்டுவதனால் இது உறுதிப்படுகிறது.[302]

அரசியல் விழாக்கள்

முடிசூட்டுவிழா : அரசன் ஆட்சிப் பொறுப்பேற்கும் செயல் 'அரியணையேறுதல், என்றும், 'முடிகவித்தல்' என்றும் குறிப்பிடப்படும். அரியணை என்பது ஓர் இருக்கை. அது அரிமா (சிங்கம்) சுமப்பதுபோல் உருவமைதி கொண்டது.[303] இதில் ஆட்சித் தலைவனைத் தவிரப் பிறர் அமரார். அரசியும் அரசனோடு இணையாக அதில் வீற்றிருப்பது உண்டு.[304] பகைவரது களிற்றைக் கொன்று அதன் தந்தங்களைக்கொண்டு தங்களது அரியணையைச் செய்துகொள்வது உண்டு.[305] அரசன் தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டித் தன் நாட்டில் வேறோர் ஊரைத் தலைநகராக்கி, அதில் உள்ள அரண்மனையில் அரியணை அமைத்து அதில் அமர்த்தி, நாட்டின் ஒரு பகுதியை

---

300 சிலப். 26 : 70, 27 : 36
301 29 : 1 (உரைப்பாட்டுமடை), 28 37
302 பதிற் 2 0 : 17
303 சிலப். 20 : 22, 26 : 1, பொருந. 1 வெண்பா. 2 : 1
304 குறி 25 : 5
305 பதிற் 79 : 12-14

ஆண்டுவரச் செய்வான். மற்றும், ஒரு வேந்தனுக்குக் கீழ்ப்பட்ட குறுநில மன்னர்களும் அரியணையில் அமர்ந்திருப்பர். அரியணை என்பது 'அரசுகட்டில்' என்றும் கூறப்படும். இதனால், ஓர் ஆட்சியில் ஒரே சமயத்தில் பலர் அரியணையில் வீற்றிருப்பர்.

'அரியணையேறுதல்' ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். அரசன் அரியணையேறியது முதல் தொடங்கி அவன் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்வரை உள்ள ஆண்டுகள் மட்டுமே அரசனது ஆண்டுகள் என்று குறிப்பிடப்படும். பதிற்றுப்பத்துப் பதிகங்கள் இவ்வாறு ஆண்டுகள் கணக்கிடப்பட்டதற்குச் சான்று பகர்வனவாய் உள்ளன.

அரியணையேறும் நாளில் முடிசூட்டு விழாவும் நடைபெறும். அரசர்கள் முடிசூடுதல்பற்றி அரசச் சின்னங்கள் என்னும் பகுதியில் தெளிவாகக் காணலாம். முடிசூட்டு விழாவின்போது அரசன் நீராட்டப்பெறுவது வழக்கமாக இருந்திருக்கலாம். இதனால் போலும் இந்த விழா 'மண்ணு மங்கலம்' என்னும் பெயரைப் பெற்றது[306] ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சியின் நினைவுவிழாக் கொண்டாடப்பட்டது என்று கொள்ள இடமுண்டு.

வாட்போரில் வெற்றிபெற்று நிற்பவனுக்கு மகிழ்ச்சிப் பறையின் முழக்குடன் நாட்டை வழங்குதல் உண்டு.[307] இச் செய்தியைக் கொண்டு போர்க்களத்தில் முடிசூட்டுவிழா நடைபெற்றது என்று சிலர் கூறுவது பொருத்தமாக அமையவில்லை. காரி என்பவன் சோழ வேந்தனின் குடையைப் புதுமையான முறையில் தன் நாட்டில் நிலைநாட்டினான் என்று கூறப்படுகிறது. இது அயல்நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி. இந்த நாளுக்கும் ஆண்டுதோறும் நினைவுநாள் கொண்டாடப்படும் என்று எண்ண இடமுண்டு.[308]

நன்னன் என்னும் மன்னனுக்குப் 'பெரும்பெயர் நாள்' சேரி தோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.[309] 'பெருப்பெயர் நன்னாள்' என்பது அரியணை ஏறிய நாளில் குடிப்

306 மண்ணல் — நீராட்டுதல் 'மண்ணு மங்கலம் மாற்றான் மதிலை வெற்றி பெற்று அதன் கோபுர உச்சியில் தண்ணீர் ஊற்றி மாற்றான் நாட்டைத் தன் ஆட்சிக்குக் கொண்டுவருதலும் மண்ணு மங்கலம் எனப்படும். (தொல். பொருள். புறத். 11:10, 30:12)

307 தொல். பொருள். புறத். 5 : 17

308 சிலப். 23 : 56

309 'பெரும்பெயர்ச் சாத்தன்', 'பெரும்பெயர் ஆதி' என்ற முறையில் சில மன்னர்கள் சிறப்பிக்கப்பட்டமை பெயரின் பெருவழக்கு நோக்கியதாகும்.

பெயராகிய யாவரும் அறிந்த பெருவழக்குப் பெயரைச் சூட்டிக் கொண்ட நன்னாள் ஆயின் இவ் விழாவைக் குறிப்பதாகும். இந்த நாளைப் 'பெருநாள்' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இந்த நாளில் முதன்முதலாக அமரும் இருக்கை (அரியணை) 'பெருநாள் இருக்கை' என்றே கூறப்படுகிறது.[310] 'பெரும் பெயர்' என்பது பலரும் அறிந்த பெயர்.[311]

கோதையின் பெருநாள் இருக்கையைச் சூழ்ந்து விழுமியோர் விழாக் கொண்டாடினர் என்று கூறப்படும் செய்தி[312] பிறந்தநாள் விழாவையோ, முடிபுனை விழாவையோ குறிப்பதாக இருக்கலாம். கரிகாலன் 'தண்பதம்' கொள்ளும் தலைநாள் விழாக் கொண்டாடியதாகத் தெரிகிறது.[313] இந்த விழாவில் மக்கள் மகிழ்வுடனும் பேரார வாரத்துடனும் கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. கரிகாலன் கழார்த்துறையில் கொண்டாடப்பட்ட புனல் விழாவைத் தன் சுற்றத்தார் சூழ வந்திருந்து கண்டுகளித்தான் என்று பரணர் குறிப்பிடுகிறார்.[314] இவை ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பன எனலாம். புனலாட்டு விழா இப்போது 'தலையாடி', 'ஆடிப் பதினெட்டு' என்னும் பெயர்களுடன் கொண்டாடப்படுவதால் கரிகாலன் கலந்துகொண்ட 'தலைநாள் விழா' வைத் தலையாடிவிழாப் போன்ற மக்கள் விழா எனவே கொள்ளவேண்டும்; அரசியல் நிகழ்ச்சி தொடர்பான விழா அன்று.

அரசர்கள் நீராடல்,[315] துணங்கையாடல்[316] முதலான நிகழ்ச்சிகளில் மக்களோடு மக்களாகக் கலந்துகொண்டு ஏற்றத் தாழ்வின்றிப் பழகினார்கள்.

பிறந்தநாள் விழா: அரசனது பிறந்தநாள் ஆண்டுதோறும் வரும்போது விழாக் கொண்டாடப்படும். அது 'பெருமங்கலம்' என்று குறிப்பிடப்பட்டது. முன்பு குறிப்பிட்ட நன்னனின் 'பெரும்பெயர் நன்னாள்' விழாவைப் பிறந்தநாள் விழா என்று கருதுவாரும் உண்டு.

வெற்றிவிழா: மாற்றான் மதிலை அரசன் கைப்பற்றியபோது விழாக் கொண்டாடப்பட்டது. இது 'மண்ணுமங்கலம்' எனப் பட்டது.[317] இந்த விழா வெற்றிக்கொரு கொடி பறக்கவிட்டு

---

310 மதுரைக் 525
311 ஷை 618, மணிமே. 18 : 94
312 ஷை 524-525
313 சிலப். 6 : 160
314 அகம். 376 : 4-6
315 மாறன்—பரிபா. தி. 2
316 பதிற். 57:4
317 தொல். பொருள். புறத்.30 : 12

அவ்வப்போது வென்ற அரசனின் தலைநகரிலும் கொண்டாடப் பட்டது.

போரில் வெற்றிபெற்று மீண்டவர்கள் கள்ளுண்டு களித் தாடியும், போரில் உதவியவர்களுக்குக் கொடை வழங்கியும், போர்க்களத்தில் வாளை உயர்த்திக்கொண்டு ஆடியும்[318] விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர். போரில் இறந்துபட்டவர்களின் நினை வாக அவர்களது பெருமைக்குரிய செயலையும், அவரது பெய ரையும் கல்லில் பொறித்து நடுகல்லாக்கி வழிபட்டனர். போருக்குச் செல்லும்போதும் பல விழாக்கள் கொண்டாடப்பட்டன. வேலனின் வெறியாட்டம் நடைபெறும் 'காந்தள் விழா', மூவேந்தர் தம் குடிப் பூவை அணியும் 'பூ வீழா', வீரர்கள் வீரக் கழல் அணியும் 'வள்ளி விழா', பகைவேந்தனின் உடலுக்குக் கொடும்பாவி கட்டி எரியில் அடுக்கிய 'உன்னநிலை விழா', மாயவனின் ஆட்டம் நிகழும் 'பூவைநிலை விழா' முதலானவை அவற்றுள் குறிப்பிடத் தக்கவை.

அரசர்களின் பொழுதுபோக்கு

கலைநிகழ்ச்சிகளில் ஈடுபடுதல் : அரசர்கள் நாள்தோறும் கலைநிகழ்ச்சிகளில் ஈடுபட்டு மகிழ்ந்தனர். பகல் காலத்தை மூன்று கூறுகளாக்கி அதன் பிற்பொழுதில் இவ்வாறு ஈடுபட்டனர். அப்போது மகளிரோடு மகிழ்ந்தும் திளைத்தனர்.

உலா : அரசர்கள் ஊரில் உலா வரும் வழக்கம் உண்டு என்பதை முத்தொள்ளாயிரப் பாடல்கள் பல தெரிவிக்கின்றன. சில அரசர்கள் தெருவில் உலா வந்ததாகச் சங்ககாலத்துத் தொகை நூல்கள் குறிப்பிடுகின்றன. இந்த உலாவும் ஊர்ப் பகுதியில் நிகழ்ந்திருக்கலாம். இளவரசர்கள் வெளியூர்களுக்கும் சென்று உலவி வந்ததாகத் தெரிகிறது.

சேரன் செங்குட்டுவன் தன் மனைவியுடனும், ஆயத்தா ருடனும் நகரைவிட்டு வெளியே சென்று மலைவளம் கண்டு மகிழ் வாக விளையாடித் திளைத்தான் என்று சிலப்பதிகாரத்தில் கூறப் பட்டுள்ளது.[319] அவன் நிலாமுற்றத்தில் தன் மனைவியுடன் மகிழந்திருந்ததையும் அந்த நூல் குறிப்பிடுகிறது. மாவண்கிள்ளி புகார் நகரில் இருந்த பூங்காவில் தன் மனைவி சீர்த்தி என்பாளுடன் மகிழ்வாக விளையாடியதாக மணிமேகலை குறிப்பிடுகிறது.

318 குறுந். 393 : 5–6 319 சிலப். 25 : 3–9

இவை அக்கால அரசர்கள் உலாவிப் பொழுதுபோக்கியதைக் காட்டுகின்றன.

அவைக்களத்திலும் அரசர்கள் மகிழ்வுடன் திளைத்திருந்தனர். திளைத்திருந்த இடம் 'நாண்மகிழ் இருக்கை' எனப் பட்டது. கொடை வழங்கியும் புலவர்களோடும் அரசர்களோடும் அளவளாவியும் அவர்கள் அங்கு விழாவில் ஈடுபடுவதுபோல்[320] மகிழ்ந்திருந்தார்கள்.

வேட்டையாடுதல்: வல்வில் ஓரி, நள்ளி முதலான அரசர்கள் வேட்டையாடிய செய்தி சங்ககாலப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது. மக்களுக்குத் தீங்கிழைக்கும் விலங்குகளைக் கொல்வதற்காக அரசர்கள் வேட்டையாடினார்கள் என்று ஒரு பாடல் கூறுகிறது.[321]

மாறுவேடம்: அரசர்கள் தாமே மாறுவேடம் புனைந்து கொண்டு பிறர் அறியாவண்ணம் இரவுக் காலங்களில் வேவு பார்ப்பது வழக்கம். பொற்கைப்பாண்டியன் இவ்வாறு செய்த வரலாறு ஒன்று உண்டு. இந்த முறை கொடியவர்களிடமிருந்து குடிமக்களைக் காக்கும் நோக்கத்துடனேயே நடைபெற்றது எனல் வேண்டும்.

பங்கீட்டு முறை

அரண்மனைகளில் வாழ்ந்தவர்களுக்கு வேண்டிய பொருள்களை அவனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதி மக்கள் பங்கீடு செய்து கொண்டு நாள் முறைசெய்து வழங்கிவந்தனர். 'மாதரி' என்னும் இடைக்குல மடந்தை பாண்டியனுக்குப் பால் வழங்கும் முறை, தனக்கு வந்துள்ள நாளைப்பற்றிக் குறிப்பிடுகிறாள். பாண்டிய அரசி ஒருத்திக்கு நாள்முறை வைத்துக்கொண்டு பொருள்கள் வழங்கப்பட்ட செய்தியைக் கிரேக்கக் குறிப்பு ஒன்று கூறுகிறது. இந்த நிகழ்ச்சிகள் அரண்மனைப் பங்கீட்டு முறையைத் தெரிவிக்கின்றன.

அலுவலர்

ஐம்பெருங்குழு, எண்பேராயம்

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் அமைப்புகள் குறிப்பிடப் பட்டுள்ளன.[322] இந்த அமைப்புகள் அரசனுக்குத் துணையாக

320 பதிற். 65 : 11—13
321 புறம். 152
322 சிலப். 3 : 126, 26 : 38; மணிமே. 1 : 17

இருந்தன என்றும், அவை புகார் நகரத்திலும் வஞ்சி நகரத்திலும் இருந்தன என்றும் அந்த நூல்கள் குறிப்பிடுகின்றன. பிற சங்க இலக்கியங்களில் இவைபற்றிய குறிப்புகள் இல்லை. தொல்காப்பியத்தில் ''எட்டு வகை நுதலிய அவையம்' என்னும் குறிப்பு உள்ளது.[323] இது எண்பேராயத்தைக் குறிக்கலாம் என்று எண்ண இடம் உண்டு.

இந்த அமைப்புகள்பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவிவருகின்றன. சேரநாடு எட்டுப் பகுதிகளாய் விளங்கியது என்றும், அதன் தலைவர்கள் ஒன்றுகூடிச் செயல்பட்ட இயக்கம் எண்பேராயம் என்று பெயர்பெற்றது என்றும், பாண்டிநாடு 5 பிரிவுகளாய் விளங்கியது என்றும், அவற்றின் தலைவர்கள் ஒன்றுகூடிச் செயல்பட்ட நிறுவன அமைப்பு ஐம்பெருங்குழு எனப் பெயர் பெற்றது என்றும், நாளடைவில் இச் சொற்கள் தம் சிறப்புப் பொருளை இழந்து பொதுமைப் பொருளில் பொதுமக்கள் கூடிய ஐந்துவகை, எட்டுவகை அவைகளை உணர்த்தின என்றும் ஔவை துரைசாமிபிள்ளை கருதுகிறார்.[324] இது எந்த அளவுக்குப் பொருந்தும் என்று எதிர்கால ஆய்வுகளால்தாம் முடிவுசெய்யமுடியும்.

அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், சாரணர் ஆகிய இந்த ஐவரின் குழு ஐம்பெருங் குழு என்றும், கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர் ஆகிய எண்மரின் குழுக்கள் எண்பேராயம் என்றும் பிற்கால நிகண்டு நூல்கள் குறிப்பிடுகின்றன. இவைபற்றித் திரு. கனகசபைப் பிள்ளை வேறுவகையான கருத்தைத் தெரிவித்துள்ளார்.[325] இந்தக் குழுக்கள்பற்றிச் சங்கநூல்களில் சான்று இல்லை. மதுரைக்காஞ்சியில் நாற்பெருங்குழு என்னும் குறிப்பு உள்ளது.[326] அந்தணர்,[327] அறங்கூறு அவையத்தார்,[328] காவிதி மாக்கள்,[329] வணிகர்[330] ஆகிய இந்த நால்வேறு குழு மக்களே நாற்பெருங்குழு என்னும் தொகைமொழியால் அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளனர். பிற்காலத்து நச்சினார்க்கினியர், காவிதி மாக்களை அமைச்சர் என்று கொண்டு நாற் பெருங்குழு என்பதற்கு ஐம்பெருங் குழுவில் தனித்துக் கூறப்பட்ட

323 தொல். பொருள். புறத். 17:17
324 துரைசாமி பிள்ளை, ஔவை சு., மு.கு.நூ., பக். 78
325 Kanakasabai, V., Op. cit., (1966) pp. 109—110
326 மதுரைக். 510
327 ஷெ 474
328 ஷெ 492
329 ஷெ 499
330 ஷெ 506

அமைச்சர் அல்லாத ஏனைய நாற்பெருங்குழுவினர் என்று கருதுகிறார் இவரது கருத்துக்குப் பாடலில் இடம் இல்லை. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுடைய அவையில் இருந்தவர்களைக் குறிப்பிடுகையில் குறுநில மன்னர்களுடன் 'பொலம்பூண் ஐவர்' என்போரும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் அவையில் இருந்தவர்களைப்போல[331] மன்னர்களாகத்தாம் இருக்கமுடியும். ஐம்பெருங் குழுவினர் என்று பொலம்பூண் ஐவரைக் கொள்வதற்கு இடம் இல்லை.

ஆசான், பெருங்கணி, அமைச்சர், தானைத்தலைவர் ஆகிய நால்வகை அலுவலர் அரசனுடன் இருந்தனர் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.[332] மற்றும் ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகிய இரண்டையும் ஒருசேரக் குறிப்பிடுகையில் மேலே கண்டபடி இக் குழுவில் அடங்காத வேறு சிலரையும் குறிப்பிடுகிறது. படைவீரர்கள்,[333] கருமவினைஞர், கணக்கியல் வினைஞர், தரும வினைஞர், தந்திர வினைஞர் என்போர் அவ்வாறு குறிப்பிடப்படுபவர் ஆவர். 'கருமவினைஞ'ரை இக் காலத்து அரசு செயலாளர் போன்ற அலுவலர் என்று கருதலாம். 'கணக்கியல் வினைஞர்', இக்காலத்துக் கணக்காயர்[334] போன்றவர். 'தரும வினைஞர்' அறங்கூறவையத் தலைவர். இவர்கள் அக்காலத்து நீதிமன்ற நடுவர்.[335] 'தந்திர வினைஞர்' என்பவர் சூழ்ச்சியால் செயலாற்றும் அலுவலர்; இக்காலத்து உளவுத் துறை[336] அலுவலர் போன்றவர். 'ஆசான்' என்பவர் அரசன் கல்விபெறத் துணையாயிருந்த ஆசிரியர். அவர் அரசியலிலும் அவனுக்குத் துணையாய் விளங்கியமையால் ஆசான்[337] எனப்பட்டார். 'பெருங்கணி' என்பவன் அரசனது செயல்முறைகளுக்குக் காலம்கணித்துத் தருபவன்.[338] இவர்களைப் போன்று இன்னும் பல அலுவலர்களும் இருந்தனர். நாழிகைக் கணக்கர், சூதர், மாகதர், வேதாளிகர், காவலர் முதலானோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

அரசனுக்குத் துணையாக ஆட்சி செய்துவந்தவர்கள் 'வேந்துதொழில் அயரும் அருந்தலைச் சுற்றம்' என்னும் தொடரால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.[339] தொண்டைமான் இளந்திரையன்

331 புறம் 71·11-14
332 சிலப் 26 : 3—4
333 ஷ 26 : 37
334 Accountant
335 Judges
336 C.I.D.
337 ஆசு—துணை
338 An Officer incharge of Royal Administrative Programmes
339 புறம். 285 : 7

னுக்கு 'உரும்பில் சுற்றம்' என்பார் துணையாக இருந்ததாகத் தெரிகிறது.[340] இவர்களை அரசுரிமைபூண்ட சுற்றத்தார் எனக் கொள்வது பொருந்தும். 'சுற்றம்' என்னும் சொல் இங்குச் சூழ்ந் திருப்போர் என்னும் பொருளை உடையது.

அமைச்சர்

சங்ககாலத்து மன்னர்களுக்கு நல்லாட்சி புரிய உதவும் வகையில் அமைச்சர்கள் இருந்தார்கள். அவர்களைப் 'பெரி யோர்' எனவும், 'சான்றோர்' எனவும் சுட்டுவது பழைய வழக் கம். சங்ககாலத்து மன்னர்களான பெருஞ்சேரலிரும்பொறைக்கு அரிசில்கிழார் அமைச்சராக அமைந்தார்[341] என்றும், இளஞ்சேரல் இரும்பொறைக்கு மையூர்கிழான் அமைச்சராக விளங்கினார்[342] என்றும் பதிற்றுப்பத்துப் பதிகங்கள் குறிப்பிடுகின்றன. சிலப்பதி காரத்தில் 'அறைபோகு அமைச்சனைக் காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்த பூதம் புடைத்துண்ணும்' என்னும் செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.[343] கச்சிமா நகரில் அமைச்சர்களுக்கென்று தனித் தெரு இருந்ததாகக் கூறப்படுகிறது.[344] திருக்குறளில் 'அமைச் சியல்' என்னும் தனி இயலே வகுக்கப்பட்டு அமைச்சன் தன்மை கள் பேசப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நோக்கும்போது சங்ககால அரசர்களிடம் சிக்கலான அரசியல் சூழ்நிலை தோன்றும்போது தக்க கருத்துகளை எடுத்துக் கூறுவ தற்காக அறிவுநல மிக்க அமைச்சர்கள் விளங்கினார்கள் என்பது தெளிவாகிறது.

திருக்குறளில் 'அமைச்சு' என்னும் இயலாகப் பரிமேலழகர் கொள்ளும் பகுதியில் 10 அதிகாரங்கள் உள்ளன. அதன்படி பார்த்தால் அமைச்சன் சொல்லாற்றல், செயல் தூய்மை, செயல் திறமை, செயல் ஆற்றல், தூது செல்லுதல், அரசருடன் சேர்ந் திருத்தல், அரசனின் குறிப்பறிந்து நடத்தல், பிறநாட்டு அவைக்குச் செல்லும்போது அதன் தன்மை அறிதல், அந்த அவைக்கு அஞ்சாமல் தன் கருத்துகளை எடுத்துரைக்கும் பண்பு களை உடையோனாய் விளங்கவேண்டும் என்பது பெறப்படு கிறது. இவற்றுள் 'தூது செல்லுதல்' அமைச்சர் அல்லாத வேறு ஒரு தூதுவனின் கடமையென்று கொண்டால் மேலே அதனை அடுத்துக் கூறப்பட்டுள்ள நான்கு பண்புகளும் தூதுவனது பண்பு கள் எனக் கொள்ளுதல் வேண்டும். 'உழை இருந்தார்',[345]

340 பெரும்பாண். 447
341 பதிற். பதி. 8
342 ஷ. 9 : 11
343 சிலப். 5 : 130-34
344 மணிமே. 28 : 57
345 குறள். 638

'மந்திரி'[346] என்னும் சொற்களாலும் திருவள்ளுவர் அமைச்சனைக் குறிப்பிடுகிறார். அந்த அமைச்சன் மனஉறுதி, குடிமக்களைக் காத்தல், கற்றல், தெளிவுபெறுதல், முயற்சியுடைமை ஆகிய ஐந்து பண்புகளும் கொண்டிருக்கவேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.[347] மற்றும் செயலாற்றுதல், பகைவர்களை மன்னர்களிடமிருந்து பிரித்தல், பிரிந்திருப் போரைப் பயன் கருதி அரசனின் நண்பனாகக் கொள்ளுதல் முதலான செயல்திறமையும் உடையோனாக இருக்கவேண்டும் என்றும் கூறுகிறார். இவற்றால் சங்ககாலத்து அமைச்சர்கள் இத்தகைய செயல்திறமையும் பண்பு நலன்களும் வாய்க்கப்பெற்று விளங்கினர் என்று கருத இடம் உண்டு.

தூது

தலைவன் தன் தலைவிபால் தூது அனுப்பியதாகச் சங்கப் பாடல்களில் குறிப்புகள் மிகுதியாக வருகின்றன. தலைவன் ஒருவன் வேந்துவிடு தொழிலின்மேல் சென்றதாக அகத்துறைப் பாடல் ஒன்று கூறுகிறது.[348] இது தவிர அரசன் தன் அரசியல் தொடர்பாகத் தூது அனுப்பியதாகக் கொள்ளத்தக்க முறையில் சங்கப் பாடல்களில் வெளிப்படையான கூற்று இல்லை. என்றாலும் சில பாடல்களில் கூறப்பட்டுள்ள செய்திகளையும், சில பாடல்களின் கொளுக்குறிப்பையும், தொல்காப்பியத்தில் வரும் செய்திகளையும், திருக்குறள் கருத்துகளையும் ஒருங்கிணைத்து எண்ணும்போது அரசர்கள் அரசியல் தொடர்பாகவும் தூது அனுப்பினார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. தூது செல்லுவதற்கு என்று தனி அலுவலர்கள் இருந்தார்களா என்பது புலப்படவில்லை. புலவர்களும், மன்னர்களும், பார்ப்பனரும் தூது சென்ற செய்திகள் உள்ளன.

பெண் புலவர் தூது : அதியமான் நெடுமானஞ்சி என்னும் அரசன் ஔவையாரைத் தொண்டைமானிடம் தூது அனுப்பினான் என்று புறநானூற்றுக் கொளுக்குறிப்புக் கூறுகிறது.[349] இந்தத் தூது, படை எடுப்பைத் தடுப்பதற்காக அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

பார்ப்பார் தூது : அந்தணன் ஒருவன் தூது மொழிகள் எழுதப்பட்ட ஓலையை மடியில் கட்டிக்கொண்டு படைத் துணையுடன் தூது சென்றான் என்னும் செய்தியைப் பாலை பாடிய

---

346 குறள். 639
347 ஷ 632
348 குறுத். 242 : 5
349 புறம். 95 கொளு

பெருங்கடுங்கோ குறிப்பிட்டுள்ளார்.[350] இவன் படைக்கலம் தாங்கிய வீரர்கள் சூழ்ந்துவரச் சென்றான் என்று கூறப்படுவதால் அரசனின் தூது மொழிகளையே கொண்டுசென்றான் என்று எண்ணுவது பொருத்தமாக அமைகிறது. இக் கருத்தை வலியுறுத்தும் வகையில் இரவோடு இரவாக வந்து போனதாகக் கூறும் பாடல் ஒன்றும் உள்ளது.[351]

தூதுவன் செயல் : போர்க்காலத்தில் அரசன் தூதுவர்களை அனுப்பிப் படைதிரட்டுதல் உண்டு. இவ்வாறு அனுப்பப் பட்ட தூதன் ஒருவன் 'படையில் சேர உடனே வாருங்கள்! உடனே வாருங்கள்!' என்று ஆங்காங்கே கூறிக்கொண்டு சென்றதாக ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது.[352] இது, தூதுவன் படைதிரட்டும் பணியையும் மேற்கொண்டிருந்தான் என்பதைக் காட்டுகிறது. சிறந்த வீரனை அரசன் தன்பக்கம் அழைத்துக்கொள்ளும் வழக்கத்தை, காரியைச் சோழமன்னன் அழைத்துக்கொண்ட வரலாற்றால் உணரலாம்.[353]

தூதுக்காகப் பிரிதல் : தலைவன் தன் தலைவியை விட்டு விட்டுப் பிரிந்து செல்வதற்குரிய காரணங்களுள் ஒன்றாகத் தூது செல்லுதலும் கூறப்படுகிறது.[354] இந்தத் தூதினை அரசியல் தூது என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது; வேறு ஒரு தலைவியிடம் தூதாகச் செல்லும் அகத்திணைத் தூது என்று எடுத்துக்கொள்ள முடியவில்லை.

இவற்றால் சங்ககாலத்தில் அரசியல் தொடர்பாகத் தூது செல்லும் நிலைமை இருந்தது என்பதைத் தெளிவாக உணரலாம்.

தூது செல்லுதல்பற்றித் திருக்குறளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.[355] அன்புடைமை, நற்குடிப்பிறப்பு, பண்புடைமை, அறிவுடைமை, சொல்வன்மை, துணிவுடைமை முதலான நற்பண்புகள் தூதுவனுக்கு அமைந்திருக்கவேண்டும் என்றும், தன் உயிருக்கே இறுதி நேர்வதாயினும் தன் அரசனுக்கு உறுதி பயப்பதை வேற்றரசனுக்கு அஞ்சாமல் தூதுவன் கூறவேண்டும் என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். சங்ககாலத்தில் தூதுவர்களாக விளங்கியவர்களிடம் இத்தகைய பண்புநலன்கள் இருந்தன வென்று இதனால் எண்ணலாம்.

---

350 அகம். 337 : 7–8
351 புறம். 305 : 2–3
352 ஷ 284 : 1–2
353 ஷ 122 : 5
354 தொல். பொருள். அகத். 27, 28, 44 : 15
355 குறள். அதி. 69

ஒற்றன்

ஒற்றுத்தொழில் அரசனது செயல்களில் கண்போன்றது.[356] ஒற்றர்கள் ஐயுறமுடியாத உருவமும், அஞ்சா நெஞ்சமும், சோராத ஊக்கமும் கொண்டிருக்கவேண்டும்.[357] வேண்டியவர் வேண்டாதவர் என்று பாராது, அரசனது உறவினராயினும் அலுவலராயினும் ஒற்றர்கள் கண்காணிக்கவேண்டும்.[358] தம்முள் ஒருவரை ஒருவர் அறியாத பல ஒற்றர்களால் அரசன் நிலைமைகளை ஆராயவேண்டும்.[359] ஒற்றர்களுக்கு வெளிப்படையாக அரசன் சிறப்புச் செய்தல் கூடாது.[360]

வஞ்சிமாநகரில் பிறநாட்டு ஒற்றர்கள் பலர் வாழ்ந்தனர் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.[361] ஒற்றுச் செல்லும் மாக்கள் ஒடுங்கிய குரலில் வேற்றார்க்குக் கேட்காவண்ணம் பேசுவார்கள் என்று பாலை பாடிய பெருங்கடுங்கோ குறிப்பிடுகின்றார்.[362]

நாட்டுப்படை

அரசனது செல்வங்களில் தலைமையான செல்வம் படை.[363] படைகளில் தொல்படை என்பது ஒன்று.[364] (இந்தப் படை நிலையான படை, போர்க்காலங்களில் திரட்டப்படும் படை; போர் முடிந்ததும் கலைக்கப்பட்டுவிடும்.) தொல்படைபில் உள்ள வீரர்கள் 'நிலைமக்கள்'[365] எனப்பட்டனர். அஞ்சாமை,[366] வீரமுழக்கம்,[367] ஆற்றல்,[368] அறைபோகாமை[369] (பகைவரால் கீழறுக்கப்படாமை), மறம், மானம், நெறியோடு தாக்கச்செல்லல், தெளிவுடைமை[370] ஆகிய நற்பண்புகளை அந்தத் தொல்படை பெற்றிருக்கவேண்டும். படையில் 'தானை' என்பது ஒரு பிரிவு. இப் பிரிவு கொடிபிடித்துச் சென்று முதலில் பகைவர் படையைத் தாக்கும்.[371] இதனால், இது 'தார்ப்படை' என்றும், 'தூசிப்படை' என்றும் வழங்கப்படும். இது பொதுவாகத் தொல்படையைக் காட்டிலும், பகைவரை அடும் தன்மையிலும் ஆற்றலிலும் குன்றியது.[372] படைப்பெருக்கம், சினம், போர்த் தளவாடங்களில்

---

356 குறள். 581
357 ஷெ. 585, 586, 587
358 ஷெ. 584
359 ஷெ. 588, 589
360 ஷெ. 590
361 சிலப். 25 : 173–74
362 அகம். 313, 15
363 குறள். 761
364 ஷெ. 762
365 ஷெ. 770
366 ஷெ. 762
367 ஷெ. 763
368 ஷெ. 765
369 ஷெ. 764
370 ஷெ. 766
371 ஷெ. 767
372 ஷெ. 768

வறுமையின்மை ஆகியவை படையின் வெற்றிக்கு உதவுவன.[373] படைத்தலைவன்வழிப் படை செயல்படும்.[374]

படைவீரர்கள் புகழை விரும்பித் தம் உயிரைப் பொருட்படுத்த மாட்டார்கள்.[375] தம்மேல் விழுப்புண் படாத நாளை வீண் நாளாகக் கருதுவர்.[376] சூளுரை கூறி அதனை நிறைவேற்ற உயிரையும் கொடுப்பர்.[377] தம்மைக்காட்டிலும் எளியோரோடு போர் செய்வதை அவர்கள் விரும்புவதில்லை.[378] பகைவன் தம் மீது வேல் வீசும்போது கண்ணிமைக்க நேர்ந்தாலும்கூட அதனை இழுக்கென்று கருதுவர்.[379] தம் மார்பில் பாய்ந்த வேலைப் பிடுங்கித் தாக்குதல் அவர்களின் வீரமிக்க செயல்களில் ஒன்று.[380] சிறந்த வீரனை இழந்தால் அரசன் கண்ணீர் வடிப்பான்.[381]

போர்

தொல்காப்பியம் நான்கு வகையான போரை விளக்கிக் கூறுகிறது. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்பன அப் போர் வகைகள். தொல்காப்பியத்தில் கூறுகிறபடி அப் போர்முறைகளைக் காணலாம்:

வெட்சி: வேந்தனால் ஏவப்பட்ட போர்வீரர்கள் வேற்று நாட்டுக்குச் சென்று, அங்குள்ள கறவை இனங்களைத் திருட்டுத் தனமாகக் கைப்பற்றிக் கொண்டுவந்து தந்நாட்டில், பாதுகாத்து அவற்றின் பயனைத் துய்த்தல் 'வெட்சிப்போர்' எனப்படும்.[382]

அதன் போர்முறை வருமாறு: வீரர்கள் ஆரவாரத்துடன் செல்வர். அப்போது ஊரில் நல்ல குறிச்சொல் கேட்கிறதா என்று பார்ப்பர்; பெருந்திரளாகச் செல்வர்; சென்ற ஊரில் உளவு பார்ப்பர்; உளவாளிக்குப் பாதுகாவலாய்ச் சூழ்ந்திருப்பர்; ஊரில் உள்ளோர் சிலரைக் கொன்று ஊரை அச்சுறுத்துவர்; அங்குள்ள கறவை இனங்களைக் கவர்வர்; கவரும்போது தடுப்போரை எதிர்த்துப் போரிடுவர்; கவர்ந்த கறவைகளை வருந்தாவண்ணம் பேணித் தம் நாட்டுக்கு ஓட்டிவருவர். தம் வீரச்செயல்களைத் தம் நாட்டவர்க்கு எடுத்துரைப்பர். கறவைகளைத் தம் ஊர் மன்றம் நிறையும்படி நிறுத்துவர். தம்மவர்களுக்கு அவற்றைப்

373 குறள். 769
374 ஷெ 770
375 ஷெ 777, 778
376 ஷெ 776
377 ஷெ 779
378 ஷெ 772
379 ஷெ 775
380 ஷெ 774
381 ஷெ 780
382 தொல். பொருள். புறத். 2

பகுத்துக் கொடுப்பர்; விரும்பியன உண்டு களிப்புடன் ஆடுவர்; பிறர்க்கும் கொடையாக வழங்குவர்.[383]

பின், துடியை முழக்கிக்கொண்டு கொற்றவையை வழிபடுவர். வேலன் வெறியாட்டு, மூவேந்தரின் வீரப்போர் காட்டும் ஆட்டங்கள், வள்ளி ஆட்டம், பின்னடி இடாது எதிர்த்தாடும் ஆட்டம், உன்ன ஆட்டம், மாயவனின் பூவை ஆட்டம் முதலான கலையாட்டங்கள் வீரம் தோன்ற நடைபெறும்.

கறவையினங்களைக் கவரும்போது அவற்றின் உடைமையாளர் எதிர்த்துப் போராடிக் கவர்வோரை முடுக்குதல், கவர்ந்து செல்லும் கறவைகளை மீட்டுவருதல், மீட்டவர்கள் தம் வேந்தன் சிறப்பைப் பாராட்டுதல், தம் வீரச்செயல்களை எண்ணி மகிழ்தல் முதலான செயல்களும் நடைபெறும்.

மீட்போன் தன்னைத் தாக்கும் படையை எதிர்த்து நிற்றல், அப்போது வாட்போரில் வீழ்தல் அல்லது வெற்றி பெறுதல், வென்று மீள்வோனைத் துடிமுழக்கத்துடன் மகிழ்ச்சியாக வரவேற்று நாடுகளைப் பரிசிலாக அவனுக்கு நல்குதல், இறந்தவனுக்கு நினைவுச் சின்னமாகக் கல்நட்டு வழிபாடு செய்தல் முதலானவையும் நடைபெறும்.[384]

வஞ்சி : மண்ணாசை கொண்ட வேந்தனை அடக்கக் கருதித் தாக்கும் போர் 'வஞ்சிப் போர்' எனப்படும்.[385]

படை ஆரவாரத்துடன் செல்லும். பகைவர் நாடு எரியூட்டப்படும். தாக்கப்பட்ட நாடு தாக்கிய அரசனின் பெருமைக்குக் கட்டுப்படும்; திறைகொடுத்து அவனது சினத்தைத் தணிக்கும். கொடுக்காவிட்டால் மேலும் தாக்கி வெற்றிபெறுதல் உண்டு. வெற்றிபெற உதவியவனுக்கு 'மாராயம்' என்னும் பட்டம் வழங்கப்படும். எதிர்த்துத் தாக்குவோர் வலிமை உடையவராயின், தாக்குவோன் தன் படைக்குச் சேதமின்றிக் கொண்டு சென்று விடுதல் உண்டு. போர்க்காலத்தில் சோற்றுப் பிண்டங்கள் வழங்கப்படும். போரில் வெற்றிபெற்றவர் புகழ் எய்துவர்; தோற்றவர் தேய்வு அடைவர். அவனது வெற்றிச் சின்னம் வளைக்கப்படும். போரில் அழியும் படையைத் தடுத்து நிறுத்

383 தொல். பொருள். புறத். 3
384 ஷை 5
385 ஷை 6

துதல் உண்டு. இவ்வகையான நிகழ்ச்சிகளைக் கொண்டது வஞ்சிப்போர்.[386]

உழிஞை : அரசனின் கோட்டையை முற்றுகையிடுதலும், அதனைக் கைப்பற்றுதலும் 'உழிஞைப் போர்' எனப்படும்.[387]

போருக்கெழுவோர் தம் குடைகளையும் வாள்களையும் நல்ல நாளில் விழாக்கோலத்துடன் வெளிக்கொணர்வர். கோட்டைக்குள் நுழைய ஏணி சாத்தி ஏறும்போதே போர் நடைபெறும். கோட்டையைச் சுற்றித் தாக்கியவர்கள் போரை நிறுத்தும் வண்ணம் உள்ளிருந்தோர் வெளியே வந்து வென்று, தாக்கியவர்களை முற்றுகையிடுதலும் உண்டு. உள்ளிருந்தவன் விழுப்புண் பட்டு வீழ்ந்த நொச்சி நிலையும் உண்டு; அல்லது புறத்தே இருந்தவன் வீழ்ந்த புதுமை நிலையும் உண்டு. அகழி நீரில் வீழ்ந்து போராடும் பாசி நிலையும் உண்டு. கோட்டையைக் காக்க ஊரார் போராடும் நிலையும் உண்டு. மதில்மேல் ஏறி வெல்லலும் உண்டு. மதிலின் கோபுர உச்சியைக் கைப்பற்றி அதில் தான் கொண்டுசென்ற நீரை ஊற்றி வெற்றியின் அடையாளமாக மண்ணுமங்கலம் செய்வதும் உண்டு. வாட்போரில் ஈடுபட்டு இருதிறத்தாரும் வீழ்ந்து மடிவதும் உண்டு. இந்த நிகழ்ச்சிகள் உழிஞைப் போருக்கு உரியவை.[388]

தும்பை : தன் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டுமென்று கருதிப் போர் தொடுத்த வேந்தனை எதிர்சென்று தாக்கி அழிக்கும் போர் 'தும்பைப்போர்' எனப்படும்.[389]

தானைப் (காலாட்) படை, யானைப்படை, குதிரைப்படை ஆகிய மூவகைப் படையும் இப் போரில் ஈடுபடும். வேந்தனைச் சூழ்ந்துகொண்டு தாக்கும் தார்ப்படையை (முன்படையை) ஒருவனாகவே எதிர்த்துத் தாக்கி வெல்லுவது உண்டு. இரு படைத் தலைவர்களும் இறத்தல் உண்டு. தளரும் கூழைப் படையை (பின்படையை) எதிர்த்துத் தாங்கி நிற்கும் எருமை நிலையும் உண்டு. படையை ஊடுருவிச் செல்வது பாழிநிலை. களிற்றைக் கொன்று அதனால் தானும் சாதல் உண்டு. களிற்றின் மீதிருந்த வேந்தனைக் கொன்ற பகைவேந்தன், தன் வாள்வீரர் சூழ ஆரவாரம் செய்தல் 'வாள் அமலை'. இருவேந்தரும் அவரது சுற்றத்தாரும் (சூழ்ந்திருப்போரும்) ஒருங்கு மாய்ந்ததனால் ஒருவன் சினங்கொண்டு போராடித் தன் புகழை நிலைநாட்டுதல் உண்டு. பல படைகளும் உடைந்து செல்லும்படி தனி ஒருவன் வாள் வீசிப்

386 தொல். பொருள். புறத். 7
387 ஷெ 8
388 ஷெ 11
389 ஷெ 12

போராடுதல் 'நூழில்'[390] எனப்படும். இந்த நிகழ்ச்சிகள் வாகைப் போரில் நடைபெறுவன.

பொதுவாகப் போருக்கெழும் அரசன் பாசறை அமைத்துத் தங்குவான். தேர்ப்படையும் போரில் பயன்படுத்தப்படும். வெற்றி பெற்ற வேந்தனது தேருக்கு முன்னும் பின்னும் குரவை ஆட்டங்கள் ஆடப்படும்.[391]

தொல்காப்பியத்தில் தனித்த முறையில் திணை என வகுத்துக் காட்டப்படாத கரந்தை,[392] நொச்சி[393] ஆகியவற்றைப் புறநானூற்றுப் பாடல்களுக்கு அமைந்த கொளுக்குறிப்புகள் தனித் தனிப் போர்த்திணைகளாகக் கொண்டு கூறுகின்றன. இவற்றைத் தனிப் போர்ப்பிரிவாகக் கொள்ளும் வழக்கம் பிற்காலத்தது (புறப் பொருள் வெண்பாமாலைக் காலம்). இவற்றைப் புறநானூற்றுப் பாடல்களுக்கு ஏற்றிக் கூறுவது பொருந்தாது என்றும், தொல் காப்பியத்தின் வழியே போர்ப்பிரிவுகளும் (திணையும்), அவற்றின் நிகழ்பகுதிகளும் (துறையும்) கூறப்படவேண்டும் என்றும் அறிஞர் களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன. கொளுக் குறிப்புகள் நூல் தொகுக்கப்பட்ட காலத்தில், அதாவது சங்க காலத்து இறுதியில் தரப்பட்டவை. ஆதலால், அந்தப் போர் முறைப் பாகுபாடுகள் சங்ககாலத்தின் பிற்பகுதியில் தோன்றியவை என்றே கொள்ளத்தகும்.

கரந்தை : வெட்சிப் பூச்சூடிக் கறவை இனங்களைக் கவர்ந்து செல்வோரிடமிருந்து, கரந்தைப் பூச்சூடிக் கொண்டு போராடி மீட்பது 'கரந்தைப் போர்' முறை ஆகும்.

காஞ்சி : தாக்கிய மன்னர்களிடமிருந்து தம் இருப்பிடத் தைக் காப்பாற்றக் காஞ்சிப் பூச்சூடிப் போராடுவது 'காஞ்சிப் போர்' ஆகும்.[394]

நொச்சி : உழிஞைப் பூச் சூடிக்கொண்டு கோட்டை மதி லைத் தாக்கும் வீரர்களை, நொச்சிப் பூச் சூடிக்கொண்டு எதிர்த் துத் தாக்கி, அவர்கள் கோட்டையைக் கைப்பற்றாவண்ணம் காப்பாற்றுவது 'நொச்சிப்போர்' எனப்படும்.

---

390 தொல். பொருள். புறத். 14 : 17

391 ஷெ. 17 : 4-6

392 வெட்சித்திணையில் வரும் ஒரு துறையாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

393 உழிஞைத் திணையில் வரும் ஒரு துறையாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

394 காஞ்சித்திணை என்பது 'உலகம் நிலையாமை' என்னும் பொருள்மேல் அமைந்த பாடல்களைக் குறிக்கும். (தொல். பொருள். புறத். 18)

இவை இலக்கண வகையால் தெரியவரும் போர்முறை வரலாறுகள். இனிச் சங்கப் பாடல்களில் ஆங்காங்கே காணக் கிடக்கும் போர்ச் செய்திகளில் இன்றியமையாதனவற்றைத் தொகுத்துக் காண்போம்.

போருக்கான காரணங்கள்

பிறநாட்டுச் செல்வத்தைத் தன் நாட்டு மக்களுக்கு அளிக்க விரும்புதல் (வெட்சி), மண்ணாசை கொண்டவர்களை அடக்குதல் (வஞ்சி), நாட்டை விரிவுபடுத்த விரும்புதல் (உழிஞை), தன் ஆற்றலை வெளிப்படுத்த விரும்புதல் (தும்பை) முதலான காரணங்களால் போர் மூளும் என்பதை முன்பே குறிப்பால் உணர்த்தினோம். இந்தக் காரணங்கள் புகழ் ஆசையால் தோன்றியவை. இவையன்றி வேறு காரணங்களும் உண்டு. தனக்குப் பெண் கொடுக்க மறுத்தவர் அரசராயினும் பிறராயினும் அவர்மீது போர் தொடுத்தலும் உண்டு.

படை திரட்டுதல்

அரசன் போர்க்காலங்களில் பொதுமக்களிடமிருந்து மறவர் படையைத் திரட்டுதல் உண்டு. அப்போது அரசனால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் 'போருக்கு உடனே வாருங்கள்' என்று கூறி முரசு அறைந்தனர்.[395] தொன்றுதொட்டு வழிவழியாக மறவர்களாய் விளங்கிய குடிகளில் தோன்றிய ஆண்மக்கள் தாமே முன் வந்து வேல், வாள் முதலான படைக்கருவிகளுடன் போருக்குச் சென்றனர். படையில் சேர்ந்து நாட்டுக்காகப் போராடுவதை ஆண்மக்கள் எல்லோரும் தம் கடமையாகக் கொண்டனர். பெண் மக்கள், ஆண்மக்களுக்கு இந்த நாட்டுப்பற்றை ஊட்டிவந்தனர்.[396]

போர்ப்படையில் சேர்ந்த மறவர்களை அரசர்கள் போர்க்களத்திற்கு முன்னர்ச் செல்லவேண்டியவர் என்றும், பின்னர்ச் செல்லவேண்டியவர் என்றும் பாகுபாடு செய்து அனுப்பிவைத்ததாகத் தெரிகிறது. பின்னே செல்ல முறையுடைய மறவர்களில், சிலர் முன்னே செல்லத் துடித்தனர்.[397] சிலர் தம் முறை வரட்டும் என்று காத்திராமல் தம் எழுச்சி மிகுதியால் போர்க்களத்திற்கு முந்திச் சென்றனர்.[398] மன்னன் தம்மைப் போருக்கு அனுப்பவில்லை என்று வருந்தி தம்மைத் தாமே பலியிட்டுக் கொள்ளச் சென்ற வீரர்களும் உண்டு.[399]

---

395 புறம். 284 : 1-2
396 ஷ 312
397 ஷ 298 : 5
398 ஷ 292 : 6-8, 294 : 6-7
399 ஷ 68 : 11-12

போர் நிகழ்ச்சி

பொதுவாகப் போர் நிகழ்ச்சி விடியற்காலத்தில் தொடங்கும்.[400] போருக்கு எழும் வீரர்கள் உணவைப்பற்றிச் சிறிதும் எண்ணிப் பாராது போர் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பர்.[401] போரில் அரசன் படையை வழிநடத்திக்கொண்டு முன்னே சென்று போரிட்டான்.[402] அரசன் அரசனை வீழ்த்துவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர்.[403] எதிரிப்படை, அரசனைக் கொல்ல முயலும். நேசப்படை, அரசனைக் காக்க முயலும். இதனால் படைகள் ஒன்றோடொன்று தாக்கப்படும். இதுவே சங்ககாலப் போர்.

படைகள் மாண்டபின்போ, மாளுவதற்குமுன் அவற்றைப் போரிடவேண்டா என்று நிறுத்திவிட்டோ போரில் முரணிய அரசர்கள் இருவரும் தனித்த நிலையில் 'ஒற்றைக்கு ஒற்றை' என்ற முறையில் போராடுதலும் உண்டு. இது 'அறத்தின் மண்டல்' எனப்படும்.[404]

முருக்கமரக் கம்பங்களை நிறுத்தி அதன் பாதுகாவலில் நின்று கொண்டு போராடும் வழக்கம் தமிழ்நாட்டுக் கோசர் படையிடம் காணப்பட்ட தந்திர முறையாகும்.[405] முருக்கமரம் இலேசானது. இதனால் அதனை எளிதாகச் சுமந்து செல்லலாம். படைக்கலங்கள் எளிதில் பதியக்கூடியது. இதனால் பகைவரது வேல் முதலானவை அதில் எளிதில் பதிந்துவிடும். பதிந்த வேலைப் பிடுங்க ஈடுபடுகையில் எளிதில் தாக்கிக் கொல்ல வாய்ப்பாக இருக்கும். இதுபோன்ற தந்திர முறைகளைச் சேர, சோழ, பாண்டியர் படைகள் பயன்படுத்தவில்லை.

போரில் காயம்பட்டோரைப் பேணல் : போர்க்களத்தில் விழுப்புண்பட்டவர்கள் நல்ல முறையில் பேணிப் பாதுகாக்கப் பட்டனர். விழுப்புண் பட்டோன் பேணப்படும் மனை என்பதைத் தெரிவிக்கும் அடையாளமாக வேப்பந்தழை செருகப்பட்டது. கொம்பு, யாழ், பல இசைக் கருவிகள் முதலானவற்றின் வாயிலாக ஆறுதல் இசை இசைக்கப்பட்டது. அவர்கள் விழுப்புண்பட்ட உறுப்புகள் நோவாவண்ணம் மெதுவாக எடுத்துக் கிடத்தப் பட்டனர். அப் பகுதிகளுக்கு மருந்து எண்ணெய் பூசப்பட்டது. வெண்சிறுகடுகு மருத்துவமனையின் தரையில் சிதறப்பட்டன

400 புறம். 369 : 11
401 மே 304 : 7
402 மே 169 : 2
403 மே 63-10
404 மே 62 : 7
405 மே 169 : 10

(இது இக்காலத்தில் பினாயில் தெளிப்பதுபோன்றது). ஆம்பல் என்னும் குழல் ஊதப்பட்டது. இனிய இசையோடு மணிகள் அடிக்கப்பட்டன. ஆறுதல் தந்து தூங்கவைக்கும் காஞ்சிப்பண் பாடப்பட்டது. மணம் வீசும்படி புகை எழுப்பப்பட்டது.[406]

விழுப்புண் பட்ட வீரர்களுக்கு அரசன் தன் கையாலேயே பாலை ஊட்டினான். நோவு மிகுதியால் அவர்கள் உண்ணா விட்டால் தன் கையிலிருந்த சிறிய கோலைக்காட்டி அவர்களை நயமாக அச்சுறுத்தி அப் பாலை உண்ணும்படி செய்தான்.[407] இவ்வாறு போரில் விழுப்புண் பட்ட வீரர்கள் பேணிப் பாதுகாக்கப் பட்டனர்.

போருக்குப் பின் நிகழ்வன : ஆனிரை மீட்டு வருவோனை மக்கள் மகிழ்வோடு வரவேற்றனர். சிறப்பான முறையில் பந்தலிட்டும், பந்தலில் புதுமணல் பரப்பியும், சிறந்த உண்டிகளை அவனுக்கென்று சமைத்தும் மகிழ்வுடன் வரவேற்றனர்.[408] வெற்றிக்கொடி நாட்டி மகிழ்ச்சியுடன் வரவேற்பதும் உண்டு.[409] போர் நிகழ்ச்சிக்குப்பின் நாட்டில் இசை விழாக்கள் நடை பெற்றன.[410]

போர்வீரர்களுக்கு ஊக்கம் ஊட்டுவதில் அரசன் தானே ஈடு பட்டான். போர்வீரர்களுக்குப் போர்ப்பூவை தானே சூட்டிப் போருக்கு அனுப்பிவைத்தான்.[411] போர்வீரன் யார் என்று பாராது அவனது திறமையைக் கருதி அரசன் பொற்பூ சூட்டிப் பெருமைப்படுத்தினான்.[412] இது இக்காலத்துப் போர்வீரர் களுக்கு வழங்கப்படும் பதக்கம்[413] போன்றது. போருக்குச் செல்லும்முன் பரிசில் நல்கி ஊக்கம் ஊட்டுவதும் உண்டு.[414] போரில் இறந்துபட்ட வீரர்களுக்காக அவன் பெயரால் அவனது சுற்றத்தார்களுக்கு ஊர்கள் பரிசுகளாகக் கொடுக்கப்பட்டன.[415]

போர் வெற்றி குறித்துப் பாணர்கள் பணையம் வைத்துக் கொண்டனர்.[416] போரின் விளைவை எடுத்துக்கூறிப் புலவர்கள் அரசர்களுக்கு அறிவுரை வழங்கினர். பொதுவாகப் புலவர்களின் அறிவுரை அரசனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

406 புறம். 281 : 1-6
407 ஷெ 310 : 1-2
408 ஷெ 262 : 1-4
409 கலி. 31 : 25
410 அகம். 253 : 7
411 புறம். 289 : 9, 341 : 9
412 மதுரைக். 737-38
413 Medal
414 புறம். 291 : 6-7
415 ஷெ 287 : 7-10
416 ஷெ 316 : 7

போரில் பெண்கள் பங்கு : சங்ககாலத்துப் பெண்கள் வீரம் மிக்கவர்களாய் விளங்கினர். தாமே நேரடியாகப் போரில் ஈடுபட வில்லை என்றாலும், தம் குடும்பத்திலுள்ள ஆண்கள் போரில் ஈடு படுவதைத் தமக்குப் புகழ் என்று கருதினர். இந்தச் செய்திகளை விளக்கும் பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

மறக்குல மங்கையொருத்தியின் மகன் போரில் கொல்லப் பட்டான். எனினும், அவன் தான் கொல்லப்படுவதற்குமுன் பகைவரின் யானையை வீழ்த்தினான். இந்தச் செய்தியைக் கேட்டுத் தாய் மகிழ்ச்சியால் கண்ணீர் உகுத்தாள்.[417]

மற்றொருத்தி, தன் மகன் படையைக் கண்டு அஞ்சி திரும்பி விட்டதாகப் பிறர் கூறக் கேட்டாள். அச் செய்தியை அவள் நம்ப வில்லை. திரும்பியது உண்மையாயின் அவன் பால் உண்ட தன் மார்பை அறுத்து எறிவதாகக் கூறி எழுந்தாள். போர்க்களம் சென்றாள்; பிணங்களைப் புரட்டினாள். தன் மகனைக் கண்டாள். அவன் உடல் வெட்டுண்டு சிதைந்து கிடப்பதைக் கண்டாள்; மகிழ்ந்து திரும்பினாள்.[418]

போருக்குச் சென்றவர்கள் அனைவரும் போர் முடிந்து திரும்பியபோது, தன் மகன் வாராமையைக் கண்ட ஒருத்தி அவனைத் தேடிச்சென்றாள். தன் நாட்டுப் படைவீரர்களின் பிணங்களிடையே அவனது உடலைக் காணமுடியவில்லை. பகைவர் படையின் பிணங்களிடையே தேடியபோது அவனது உடல் கிடக்கக் கண்டாள். பகைவரைக் கொன்றுகொண்டே முன்னேறுகையில் அவன் கொல்லப்பட்ட நிலையை உணர்ந்தாள். அப்போது அவனுக்குப் பாலூட்டிய அவளது மார்பகங்கள் வீரப் பால் சுரந்தன.[419]

கணவன் மார்பிலே வேல் பாய்ந்து குருதியோடு போர்க் களத்திலே கிடந்தான். மனைவி போர்க்களம் சென்றாள். அவனது மார்பைக் கண்டாள்; மகிழ்ச்சிப் பெருக்கால் தழுவ முயன்றாள்; பருந்துகள் அவளை விடாது தாம் தழுவிக் கொண்டன.[420]

ஒருத்தியின் கணவன் சிற்றூர் மன்னன். அவனுக்கும் வேந் தனுக்கும் போர் மூண்டது. மன்னன் நடந்து சென்று போரிட்

417 புறம், 277 : 2-4
418 மே 278 : 1-9
419 மே 295 : 7-8
420 மே 288 : 6-9

டான். வேந்தன் யானைமீது வந்து போரிட்டான். மன்னன் தன் வேலை வேந்தனது யானையின் மத்தகத்தில் பாய்ச்சினான். வேந்தன் தன் வேலை மன்னது மார்பில் பாய்ச்சினான். மன்னன் தன் மார்பில் பாய்ந்த வேலைப் பிடுங்கி மற்றொருமுறை வேந்தனது யானையின் மத்தகத்தில் பாய்ச்சினான். யானை அஞ்சிப் புறங் கொடுத்தது. வேந்தனது யானை புறங்கொடுக்கவே, அவனது படையிலிருந்த பிற யானைகளும் புறங்கொடுத்தன. மன்னன் மாண்டான். கணவன் மாண்ட இந்தச் செய்தியை அவள் பாணனிடம் மகிழ்வோடு கூறினாள்.[421]

கையற்ற நிலையிலும் கலங்காது வீர உணர்வு மேலிட்டு நின்ற சங்ககாலத்துப் பெண்கள் தம் குடும்பத்திலுள்ள ஆண்மக்களை நாட்டிற்காகப் போரிட அனுப்பியதில் வியப்பில்லை.

பெற்றுப் பாதுகாத்தல் மட்டுமே தன் கடமை என்றும், போர்க் களத்தில் யானையைக் கொன்றுவிட்டு வெற்றியோடு திரும்புதல் தன் மகனது கடமை என்றும் ஒருத்தி கூறுகிறாள்.[422]

ஒருத்தியின் அண்ணன் முதல் நாள் போரில் மாண்டான். மறுநாள் போரில் அவளது கணவன் மாண்டான். மூன்றாம் நாள் போர்ப்பறை முழக்கங் கேட்டு அவள் தன் ஒரே மகனை—சின்னஞ் சிறு மகனை—சீவி முடித்து, வெள்ளாடை உடுத்திவிட்டு, வேலைக் கையிலே கொடுத்துப் போருக்கு அனுப்பிவைத்தாள்.[423]

வேல் துருப்பிடித்துக் கூரையில் செருகிக்கிடக்கினும் கிடக்கும்; மறக்குல மங்கல மகளிரால் மாலை சூட்டப்பெற்று யாழிசை முழங்க நீராடித் தெருவில் உலா வந்து போர்முகத்திற்குச் சென்றாலும் செல்லும். இந்த நிலைகள் இல்லாவிட்டாலும் அந்த வேலுக்கு ஒன்று மட்டும் உறுதி. பகை வேந்தன் ஏறிவந்த களிற்றுமுகத்தின் மீது பாய்வதில் மட்டும் அது தவறுவது இல்லை.[424]

மறக்குலத்தில் பிறந்த பெண்களுக்கு நடுகல்லைத் தவிரக் கைதொழக் கூடியது வேறு இல்லையாம்.[425] ஒருத்தி தன் மன்னனின் நடுகல்லை நாளும் தொழுதுவந்தாள். அப்போதெல் லாம் வேந்தனின் நாட்டைக் கைப்பற்றும் பகைமையைத் தன் இல்லத்துத் தலைவன் பெறவேண்டுமென்று வேண்டிக்கொண் டாள்.[426]

421 புறம். 308 : 3-7
422 ஷெ 312 : 1, 5-6
423 ஷெ 27)
424 ஷெ 332 : 9-10
425 ஷெ 335 : 11-12
426 ஷெ 306 : 4-7

கடன் வாங்கி உண்ணும் அளவுக்கும், விதைப்பொருளைச் சமைத்து உண்ணும் அளவுக்கும் தன் குடும்பத்தில் வறுமை நிலை வந்த காலத்திலும் கணவன் போர்க்களம் சென்று பகை அரசனின் யானையைக் கொன்று அந்த யானையின் பொன் ஓடையைத் தன் அரசன் கையிலிருந்து பெற்றுத் தன் மனைவியிடம் கொடுக்க, அதனை மனைவி தனக்குத் தன் கணவன் அளிக்கும் பரிசிலாகக் கொள்வதிலும், அதனை அவள் பிறருக்கு வழங்குவதிலும் தவறுவது இல்லை.[427]

ஒருத்தியின் கணவன் பகை அரசனின் யானையைக் கொன்று அதன் பொன் ஓடையைப் பரிசிலாகப் பெற வல்லவன்; அவளது சிறுவன் விளையாட்டில் உடும்பைக் கொல்பவன்; இவற்றால் அவள் மகிழ்பவள்.[428]

மறக்குடிப் பெண்கள் வீரம் செறிந்தவர்களாய், போரைக் கண்டு அஞ்சாதவர்களாய், நாட்டுக்காகப் போராடும்படி ஊக்கம் ஊட்டுபவர்களாய் விளங்கினர் என்பதை மேலே காட்டப்பட்ட குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன.

போர்ப் பாசறை

அமைப்பு : 'பாசறை' என்னும் சொல் சங்ககாலத்தில் கதிர்களைக் குவித்துப் பச்சைத் தட்டைகளாய்க் கூம்பு வடிவத்தில் வேயப்பட்ட குத்தரிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[429] ஆமையின் முதுகுப்புறமும் அமைப்பு நோக்கில் 'பாசறை' என்று வழங்கப்பட்டுள்ளது.[430] குத்தரிக் கூம்பையும், ஆமையின் முதுகையும்போலக் கூடாரங்கள் அமைத்து அரசன் போர்க்காலங்களில் தங்கிய பகுதியும் ஒப்புமைநோக்கில் 'பாசறை' என்று குறிப்பிடப்பட்டது. பாசறை தாற்காலிகமாகக் கட்டப்பட்டு ஊர்போல அமைக்கப்பட்டமையால் 'கட்டூர்' எனவும் குறிக்கப்பட்டது.[431] மக்கள் வாழாப்பகுதிகளில் போர்கள் நடைபெறுவதற்காகப் பாடிகள் (ஊர்கள்) அமைக்கப்பட்டமையின் பாசறையானது 'பாடி'[432] என்றும், 'பாடியிருக்கை'[433] என்றும் அழைக்கப்பட்டது.

குளிர்காலத்துப் பாசறை, கோடைக்காலத்துப் பாசறை என்று காலம்நோக்கிப் பாகுபாடு செய்யப்படும்[434] என்றும், பாசறையில்

---

427 புறம். 327 : 7-8, 333 : 9-10, 334 : 8-9
428 ஷை 326 : 8-9
429 நற். 125 : 10-11
430 ஷை 280 : 6
431 புறம். 295 : 1
432 முல்லைப். 28
433 சிலப். 26 : 88, 175
434 தொல். பொருள். புறத். 17 : 1

பெண்களோடு கூடி மகிழ்வதில்லை[435] என்றும், பெண்களோடு மகிழ்தல் பாசறையின் புறப்பகுதியில்தான் நடைபெறும்[436] என்றும், பாசறைத் தொழில் முடிவுற்றபின் அதில் உள்ள ஆண்கள் தம் காதலியரை எண்ணிப் புலம்புதல் உண்டு[437] என்றும் தொல் காப்பியம் கூறுகிறது.

வேனில், கார், வாடை ஆகிய பருவகாலங்களில் பாசறைகள் அமைக்கப்பெற்றன. கார்காலத்தில் பொதுவாகப் பாசறை முடிந்து விடுவது வழக்கம்.[438]

முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை ஆகிய நூல்களில் பாசறை அமைந்திருந்த கோலம் காட்டப்பட்டுள்ளது.

பாசறை, காட்டாறு ஓடும் முல்லை நிலத்தில் அமைக்கப் பட்டது. அமைப்பதற்குமுன் அதில் இருந்த புதர்கள் அழித்துச் செப்பஞ்செய்யப்பட்டன. முள்ளிட்டு வேலிகள் அமைக்கப் பட்டன.[439] பதுங்கியிருந்து பகைவர்களைத் தாக்குவதற்காக இதில் புழைகள் (குறுகிய வாயில்கள்) அமைக்கப்பட்டன. உவலைகளால் வேயப்பட்டுக் கூடாரங்களின் கூரைகள் அமைக் கப்பட்டிருந்தன. தெருக்கள் அமையுமாறும், தெருக்கள் கூடும் சந்திகளில் யானைகள் காவலாக நிற்குமாறும் அமைக்கப்பட்டன. வில், தூணி, குந்தம், கிடுகு முதலானவை ஆங்காங்கே தொங்க விடப்பட்டும் நிறுத்தப்பட்டும் பாதுகாவலாய் வைக்கப்பட் டிருந்தன. கூடாரங்கள் கயிறுகளால் இழுத்துக் கட்டப்பட்டன. நள்ளிரவில் வாளைத் தம் கச்சிலே மாட்டிக்கொண்டிருந்த பெண்கள் எண்ணெய் ஊற்றி விளக்குகளைத் தூண்டிவிட்டனர். நள்ளிரவு என்பதனை அறிவிக்க மணி அடிக்கப்பட்டது. 'கன்னல்' என்னும் கருவியைக் கொண்டு நாழிகைக் கணக்கு அறிந்து அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. துணி முடிந்து போர்த்திக் கொண்டிருந்த வீரர்கள் அரசனுக்குக் காவலாய்ச் சூழ்ந் திருந்தனர். சட்டை அணிந்துகொண்டிருந்த யவனர் கூட்டி லிருந்த புலிகளை அவிழ்த்துவிட்டு வீர விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தனர். அரசன் திரையிடப்பட்ட அறையிலிருந்த பள்ளியில் படுத்திருந்தான்; முழங்கையை ஊன்றித் தலைக்கு முட்டுக் கொடுத்தவண்ணம் தூங்காது படுத்திருந்தான். படம்

435 தொல். பொருள். கற்பு. 34
436 ஷை கற்பு. 35
437 ஷை அகத். 44:19
438 ஐங்குறு. 427 : 2-3, 461 : 2 ;
439 'முள்வேலி' என்பது போர்க் கருவி யாகிய கூர்முள்களை அமைத்துச் செய்யப்பட்ட வேலி என்பதனைப் புறப்பாடல் உணர்த்துகிறது. (புறம். 301 : 3-4)

வரைந்த ஆடைகளை உடுத்திக்கொண்டு ஊமை மிலேச்சர்கள் அவன் அருகில் மெய்காப்பாளர்களாக நின்றனர். அரசனது மற்றொரு கை புலி விளையாட்டைச் சுட்டிக் காட்டுவதுபோல் இருந்தது. அரசனது நினைவுகள் முதல் நாள் போரில் புண்பட்ட யானைகள்மீதும், குதிரைகள்மீதும், வீரர்கள்மீதும் இருந்தன. தலைக்கு ஊன்றுகோலாக அமைந்திருந்த கையிலுள்ள விரல், பகைவர்களைச் சுட்டிக்கொண்டிருந்தது. கார்காலத்திலிருந்த பாசறை இவ்வாறு அமைந்திருந்ததாக முல்லைப்பாட்டில் கூறப் பட்டுள்ளது.[440]

வாடைக்காலத்தில் அமைந்திருந்த ஒரு பாசறையை நெடுநல் வாடை விளக்குகிறது.[441] யானைகளும் குதிரைகளும் வரிசை வரிசையாகத் தெருக்கள் இடையில் அமையுமாறு கட்டப்பட்டிருந்தன. இரவில் பாண்டில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அரசன் புண்பட்ட வீரர்களைக் கண்டு தேற்றுவதற்காகப் புறப்பட்டான். படையில் முதன்மைபெற்று விளங்கிய ஒருவன் அரசனுக்கு முன்னே சென்று புண்பட்டுக் கிடப்பவர்களை முறையாகக் காட்டி விளக்கம் கூறினான். வாளைத் தோளிலே கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருந்த அஞ்சாத வீரனொருவன் (மெய்காப்பாளன்) அரசனருகில் சென்றுகொண்டிருந்தான். அரசன் தனது ஒரு கையை மெய்காப்பாளனின் தோள்மீது (சுவல்மேல்) வைத்துக்கொண்டிருந்தான். வாடைக் காலத்துப்பனி, அவன்மீது படாதவாறு குடை பிடித்துச் செல்லப்பட்டது. இவ்வாறு அரசன் தூக்கமின்றிப் பாசறையில் சிலரோடு திரிந்து கொண்டிருந்தான்.

பாசறையின் தோற்றம்

பாசறை நெய்தல் பூவின் இதழ்களைப் போன்ற அமைப்பினைக் கொண்டு விளங்கியதுண்டு.[442] தொலைதூரத்திலுள்ள பகைவர்களை அறிவதற்காக மிக உயர்ந்த இடங்கள் அமைக்கப் பட்டிருந்தன. அவை 'பார்வல் பாசறை' என்று குறிப்பிடப் பட்டன.[443] பாசறையில் பல கொடிகள் ஆங்காங்கே பறந்து கொண்டிருந்தன.[444] பாசறையிலிருந்த யானைகள்மீது கொடிகள் பறந்தன.[445] பாசறையில் குருதி ஆறு ஓடிற்று.[446] பாசறையில், அரசனின் வெண்கொற்றக் குடையின் நிழலில் வாளின்றி அமைதியான உறக்கம் நிகழ்தலும் உண்டு.[447]

---

440 முல்லை. 19-79
441 நெடுநல். 168-188
442 பதிற். 64 : 16-20
443 மதுரைக். 281 ; பதிற். 84 : 5
444 பதிற். 82 : 3
445 புறம். 69 : 9, பதிற். 88 : 17
446 ஷை 373 : 4-5
447 ஷை 22 : 11-13

பாசறையில் ஒலிகள்

பாசறையில் பலவகையான ஒலிகள் எழுந்தவண்ணம் இருந்தன.[448] முரசுமுழக்கம்,[449] யானைமுழக்கம்,[450] சங்கு முழக்கம்[451] முதலானவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. முரசு காலை நேரத்தில் முழக்கப்பட்டது.[452] வைகறையில் முரசையும் வலம்புரிச் சங்குகளையும் முழக்கிக்கொண்டு பாசறையில் அரச னிடம் பரிசில் வேண்டி இரவலர்கள் பாடியதும் உண்டு. முரசு, வீரப்பலி ஊட்டி முழக்கப்பட்டதும் உண்டு.[453] பாடினியர் தம் மிடமிருந்த முழவுகளை முழக்கிக்கொண்டு, இசை பாடி விழாக் கோலத்துடன் ஆடினார்கள்.[454] போர் வீரர்கள் குரவை ஆடி னார்கள்.[455] திருவிழாவையும், போர் விழாவையும் ஒன்றென உருவகம் செய்துகாட்டி 'இழிசினன்' தன் தண்ணுமைக் கருவியை முழக்கிப் 'பூக்கோள் இன்று' என்று கூறிப் பறையறைந்தான்.[456]

கட்டூர்

பாசறைகளில் இருக்கும் படை அணிவகுப்பு சிறப்பு வகை யால் 'கட்டூர்' என்னும் பெயரைப் பெறும். இங்கும் போர்கள் நிகழ்ந்தன.[457] இங்குக் குருதி பெருக்கெடுத்து ஓடியதும் உண்டு. பகைவரின் பாசறைக்குள் வீரன் ஒருவன் தனியே சென்று போராடி வெற்றிபெறுதல் உண்டு.[458]

வேல் மின்னுதல்,[459] வாள் மின்னுதல்,[460] யானையின் ஓடை இரவில் மின்னுதல்,[461] பலமொழி பேசுவோரும் ஒன்றுதிரண்டு இருத்தல்,[462] வீரர் சூடிய பூக்கள் தெருக்களில் படிந்து மக்கித் தோன்றுதல்[463] முதலானவை பாசறையின் காட்சிகளில் குறிப் பிடத்தக்கவை.

புண்பட்ட வீரர்களைப் பேய் பின்தொடருதல்,[464] பெண் யானைகள் ஆண்யானைகளைத் தழுவிக்கொண்டு செல்லுதல்,[465] பாசறையிலிருந்துகொண்டு அரசன் இரவலர்களுக்குப் பரிசில்

448 மணிமே. 8 : 31–32
449 பதிற். 68 : 2–3; அகம். 24 : 15
450 ஷை. 16 : 8, 61 : 15
451 ஷை. 50 : 25
452 மதுரைக். 232
453 புறம். 362 : 3
454 பதிற். 61 : 16-18
455 புறம். 22 : 22
456 ஷை. 289 : 9-10
457 ஷை. 295 : 1; பதிற். 68 : 2
458 ஷை. 309 : 1-2
459 அகம். 214 : 6
460 நற். 387:9
461 அகம். 100 : 9-10
462 ஷை. 212 : 14-15
463 புறம். 33 : 10–11
464 நற். 349 : 8
465 தொடுநல். 169–171, 178-179

வழங்குதல்,[466] தோற்றவர் பணிந்து திறை செலுத்துதல்,[467] பேய்கள் களச்சோறு ஆக்கி உண்ணுதல்[468] முதலானவை பாசறை நிகழ்ச்சிகளில் சில.

செங்குட்டுவன் நீலமலையிலும்,[469] உத்தரநாட்டிலும்[470] பாசறை அமைத்துத் தங்கினான். உத்தரநாட்டில் அமைத்திருந்த பாசறையை மன்பெருங்கோயில், மணிமண்டபம், பொன்புனை அரங்கம், பூம்பந்தர், உரிமைப்பள்ளி, பூஞ்சோலை, மலர்ப்பொய்கை, வரிகாண் அரங்கம் முதலான பகுதிகளுடன் ஆரிய மன்னர் கங்கையாற்றின் தென்கரையில் செங்குட்டுவனுக்கு அமைத்துத் தந்தனர்.[471]

அரசியல் பழக்கவழக்கங்கள்

காவல்மரம்

சங்ககால அரசர்கள் காவல்மரம் ஒன்றை வளர்த்து வந்தனர். 'கடிமரம்' என்பது இந்த மரத்தைக் குறிக்கும் சங்க காலத்துப் பெயர்.

வேம்பு — பழையன் மாறன்
புன்னை — திதியன்
மா — நன்னன்
(வாகை) — நன்னன்
கடம்பு — கடம்பர்

மேலே காட்டியுள்ளபடி குறிப்பிட்ட மரங்கள் குறிப்பிட்ட அரசர்களுக்கு உரியன.

போர்க்காலங்களில் இந்த மரம் பகை அரசர்களால் தம் வெற்றியின் அறிகுறியாக வெட்டிச் சாய்க்கப்படும். அல்லாமலும் அந்தக் காவல்மரத்தின் அடிமரத் துண்டைக்கொண்டு வெற்றி பெற்ற அரசர்கள் தங்களது படைமுரசினைச் செய்துகொண்டார்கள். இவ்வாறு செய்துகொள்வதை அரசர்கள் தமக்குப் பெருமையாகக் கருதினார்கள்.

காவல்மரத்தைப் பொதுமக்கள் எதற்கும் பயன்படுத்தவில்லை. பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் தாம் குமணனிடம்

---

466 புறம். 33: 10-11, 371 : 20-21
467 அகம். 84 : 14-15
468 புறம். 372 : 8-9
469 சிலப். 26 : 85
470 டி 26: 183
471 டி 27 · 17-24

பரிசிலாகப் பெற்றுவந்த யானையை, இளவெளிமானின் காவல் மரத்தில் கட்டி வைத்தார். இது 'தமக்குப் பரிசில் நல்காத இளவெளிமானை இழிவுபடுத்தும் நோக்கோடு செய்யப்பட்டது' என அவரது பாடலிலிருந்து குறிப்பால் உணர்கிறோம். இதே போல நன்னனின் காவல்மரத்தில் குறிகூறும் பெண்கள் தாம் திதியனிடம் பெற்றுவந்த யானைகளைக் கட்டிவைத்தனர். இந்த நன்னன், தன்னுடைய காவல்மரமான மாமரத்திலிருந்து விழுந்து ஆற்றில் மிதந்துவந்த மாங்காயைக் காவல்மரத்துக் காய் என்று அறியாது உண்ட பெண்ணை, காவல் மரத்தை அவமதித்த குற்றம் சுமத்திக் கொன்றான். இக் கொடிய செயலுக்குப் பாடம் கற்பிக்கவே குறிகூறும் பெண்கள் யானைகளைக் கட்டிவைத்து மரத்தை அடியோடு சாய்க்கச் செய்தனர். இந்த நிகழ்ச்சிகள் காவல்மரத்துக்கு இருந்த மதிப்பைப் புலப்படுத்துவன.

முடியால் கழல் செய்தல்

போரில் தோற்ற அல்லது சாய்ந்த அரசர்கள் தலையில் அணிந்திருந்த முடி அணியின் பொன்னைக் கொண்டு, வென்ற அரசர்கள் கழல்செய்து தம் கால்களில் அணிந்துகொண்டனர்.[472] அரசர்கள் தம் பகைவர்களை இந்த வகையிலும் இழிவுபடுத்தினார்கள்.

பகையரசியின் கூந்தலால் கயிறு திரித்தல்

போரில் வீரர்கள் மாண்டால் அவ் வீரர்களின் மனைவிமார் தம் கூந்தலைக் களைந்துகொண்டு கைம்மைக்கோலம் பூணுவது வழக்கம். அரசியருள் சிலரும் இந்த வழக்கம் உடையவர்களாக இருந்திருக்கலாம். இவ்வாறு மகளிர் களைந்த தலைமுடியைக் கொண்டு கயிறு திரித்துச் செங்குட்டுவன் தான் வெட்டிச் சாய்த்த பழையன் மாறனின் காவல்மரத் துண்டைக் கட்டி யானைகளைக் கொண்டு தன் நாட்டுக்கு ஈர்த்துவந்தான். இதனை உயர்வு நவிற்சியாகக் கொள்ளுவதே பொருத்தமாகும்.

பெண்களைக் கவர்ந்துவரல்

அயல்நாட்டில் உள்ள ஆனிரைகளைக் கவர்ந்துவருவது போல் சில அரசர்கள் தாம் வென்ற நாடுகளிலிருந்து அழகிய பெண்களையும் கவர்ந்து வந்தார்களோ என்று எண்ணவேண்டியுள்ளது. 'கொண்டி மகளிர்' எனப்படுவோர் இவ்வாறு கவர்ந்து

472 புறம். 40 : 2-4

வரப்பட்ட பெண்கள் என்று எண்ணப்படுகிறது. 'வேண்மாடம்' என்பது இப் பெண்கள் வாழ்ந்த இடம் என்று கூறப்படுகிறது. இந்தக் கருத்துகளுக்குரிய அடிப்படைச் சான்றுகள் வலிமை யற்றவை.

போர்வீரர்களைக் கவர்ந்து வருதல்

போர்க்காலங்களில் பகைவரது வீரர்களைக் கைப்பற்றிச் சிறைப்பிடித்துக் கொண்டுவருவது வழக்கம். நார்முடிச்சேரல் என்னும் சேர அரசன் இவ்வாறு போர் மறவர்களைக் கொண்டு வந்தான் என்று தெரிகிறது.[473] இவ்வாறு கொண்டுவரப்பட்டவர் கள் 'கொண்டி மள்ளர்' எனப்பட்டனர். இவர்களுக்குச் செங்குட்டுவன் போர் யானைகளைப் பரிசிலாக நல்கித் தன்வயப் படுத்திக் கொண்டான் எனத் தெரிகிறது.[474]

போரில் தோற்றவர்களுக்குத் தண்டனை

போரில் தோல்வி அடைந்து பிடிபட்ட அரசர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானாலும், சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை பாண்டியன் நெடுஞ்செழியனாலும், கணையன் என்பவன் பெரும் பூட்சென்னியாலும் சிறைவைக்கப்பட்டனர். சிறைவைக்கப்பட்ட அரசர்கள் மரியாதையுடன் நடத்தப்படவில்லை என்பதனைக் கணைக்காலிரும்பொறைக்குத் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொடுப் பதற்குக் காலந்தாழ்த்தப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து உணரலாம்.

சிறை வைப்பதற்காகப் பிடித்து வரும்போது கைதியான மன்னர்கள் இழிவாகவே நடத்தப்பட்டனர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்னிடம் போரில் தோற்ற யவனர்களைக் கைதுசெய்து கொண்டுவருகையில் அவர்களது கைகளைப் பின் கட்டாகக் கட்டி, தலையில் நெய்யை ஊற்றி அழைத்து வந்தான்.[475] சேரன் செங்குட்டுவன் தன்னிடம் தோற்ற கனகவிசயர் தலையில் கண்ணகிக்குச் சிலை செய்வதற்காகத் தெரிந்தெடுத்த கல்லைச் சுமத்திக் கொண்டுவந்தான்.

போரில் காரி மாண்டுபோனதால் கைதியாகக் கிடைத்த அவனது சின்னஞ்சிறு குழந்தைகளை வெற்றிபெற்ற குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் யானைக்காலில் இட்டு மிதித்துக் கொல்ல முயல்கிறான்.

---

473 பதிற். 37 : 9 'மறவர்த் தரீஇ' 475 மே. பதி. 2 : 8–9
474 மே. 43 : 25

இந்த நிகழ்ச்சிகள் அரசக் கைதிகள் கொடுமையாக நடத்தப் பட்டதைத் தெளிவாக்குகின்றன.

தோற்ற நாட்டை அழித்தல்

பகைவரின் நாடுகளைத் தீக்கிரையாக்குவதும், அந் நாட்டுச் செல்வவளத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு வருவதும் சங்க காலத்தில் நடைபெற்ற கொடுமைகள். தோற்ற நாட்டில் வென்ற அரசன் கழுதை ஏர் பூட்டி உழுதலும், கொள்ளும் கவடியும் விதைத்தலும்[476] பகைநாட்டை இழிவுபடுத்திய செயல்கள்.

வேந்தனைக் குறுநிலமன்னர் வணங்குதல்

பேரரசர்களுக்கு உட்பட்ட சிற்றரசர்களும், போரில் தோற்ற அரசர்களும் 'திறை' என்னும் பெயரால் பெருஞ் செல்வம் நல்கினர். சிலர் பேரரசனின் காலடியில் தம் தலைமுடி படியும்படி விழுந்து வணங்கியதாகவும் தெரிகிறது.

வேள்வி

சில அரசர்கள் வேள்வி செய்தனர். வேள்வி என்பது உதவி. அது மக்களுக்கு உணவு வழங்கும் வேள்வியாகவும், தேவர்களுக் குத் தீயில் அவியுணவு வழங்கும் வேள்வியாகவும்[477] இருந்தது. ஓர் அரசன் பரிவேள்வி செய்ததாகவும் தெரிகிறது.[478] அந்தணர் செய்த வேள்வி பற்றிச் சமுதாய வரலாற்றுப் பகுதியில் காணலாம்.

போரில் படைவீரர்கள் இரும்புக் கவசம் அணிந்து இருந் தனர்.[479] போர்க்கைதிகள் யானைக்காலில் இட்டுக் கொல்லப் படுவது உண்டு.[480] போர்க் கைதிகளின் தலையில் எண்ணெய் ஊற்றி அவர்களின் கைகளைப் பின்கட்டாகக் கட்டி அழைத்து வரும் வழக்கம் இருந்தது.[481] இது யவன நாட்டு வழக்கம் என்று கருதப்பெறுகிறது. இழிபிறப்பாளன் அரசனது பிணத்தை விலங்குகள் நடமாட்டமுள்ள இடத்தில் அப்படியே எறிந்ததாகத் தெரிகிறது.[482] அரசனுக்குக் கவரி வீசப்பட்டதாகத் தெரி கிறது.[483]

---

476 சிலப். 27 : 226
477 'அடுநெய் ஆவுதி', 'பெரும் பெயர் ஆவுதி' (பதிற். 21 : 7, 13)
478 பரிவேள்வி—பதிற். 21 : 27
479 புறம். 309 : 1
480 பறம். 46
481 பதிற். பதி. 2 : 8-9
482 புறம். 363 : 10-15
483 சிலப். 14 : 128

நாட்டின் செல்வம்

நாட்டின் செல்வம் அல்லது நாட்டுடைமை என்பது அரசனின் செல்வம். மரபுவழியில் கிடைத்த செல்வம், மக்கள் நல்கும் வரியால் கிடைக்கும் செல்வம், மாற்றாரை அழித்துக் கைப்பற்றிய செல்வம் ஆகிய செல்வங்கள் அரசனுக்கு உரியவை.[484] அரசன் இவற்றை நாட்டுநலனுக்குப் பயன்படுத்துதலின் 'நாட்டுடைமை' என்று கூறலாம். இந்தச் செல்வத்தைக்கொண்டு அறஞ்செய்து நாட்டுமக்களுக்கு உதவினான்;[485] தானும் துய்த்து இன்பமாக வாழ்ந்தான்;[486] பகைவரைத் தொலைக்கப் பயன்படுத்தினான்;[487] தன் நாட்டு மக்களின் வெளிநாட்டுக் கல்விக்கும் செல விட்டான்.[488] இந்தச் செல்வத்தை அரசன் அன்போடும் அருளோடும் பெறுவதையே விரும்பினான்.[489]

கருவூலம்

அரசனது செல்வத்தைச் சேர்த்து வைத்த இடம் கருவூலம். பாழி,[490] குடந்தை[491] ஆகிய ஊர்களில் கருவூலம் அமைந்திருந் ததுபற்றிக் குறிப்புகள் உள்ளன. இவைபோன்று பல இடங்களிலும் கருவூலங்கள் அமைந்திருக்கவேண்டும். கருவூலங்கள் அகழி, மதில் முதலான சிறந்த அரண் வலிமையைக் கொண்டு விளங்கின.

வங்கிகள்

நாட்டிலிருந்த செல்வர்களில் சிலர், தம்மிடமிருந்த செல்வத்தை இக்காலத்தில் உள்ள தனியார் வங்கிகளைப் போன்று மக்களுக்குப் பயன்படும்படி வைத்திருந்ததாகவும் எண்ண இடமுண்டு. வாணன் என்பவன் தென்புலப் பகுதியில் பெருஞ்செல்வத்தை இவ்வாறு வைத்திருந்தான்.[492] பாழி நகரத்து மக்கள் தம் செல்வத்தை அரச வங்கியில் (கருவூலத்தில்) இட்டு வைத்திருந்ததாகத் தெரி கிறது.[493]

நாட்டில் ஆங்காங்கே வாழ்ந்த வள்ளல்களும் தங்கள் செல் வங்களை மக்களுக்கு நல்கி உதவினார்கள். ஆனால், இவர்கள் தாம் வழங்கிய செல்வத்தைத் திரும்பப் பெறுவதில்லை. ஆகையால், இவர்களது செல்வச் சேமிப்புகளை வங்கிகள் என்று கொள்வதற்கில்லை.

---

484 குறள். 756
485 டி. 760
486 டி. 760
487 டி. 759
488 டி. 753
489 டி. 755
490 அகம். 258 : 1-3, 372 : 3-5
491 டி. 60 : 13; நற். 379 : 7
492 மதுரைக். 202-203
493 அகம். 258 : 1-2, 372 : 3-5

இந்த வங்கிகளும் வள்ளல்களும் நாட்டின் செல்வத்தை ஒரே இடத்தில் குவியவிடாமல் பரவலாக்கினர் எனலாம்.

ஆவணக் காப்பகம்

குடவோலை முறையில் ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஆவணமாக்கள் எனப்படுவோர் குடவோலையிலிருந்த பெயர்களைப் படித்து மக்களுக்கு வெளிப்படுத்தியதாகத் தெரிகிறது.[494] ஆவணம் என்பது 'பத்திரம்'.[495] எனவே, ஆவணமாக்கள் என்போர் பத்திரங்களைப் பதிவுசெய்து வைப்பவர் எனலாம். ஆயின், பதிவு செய்துவைக்கும் ஆவணக் காப்பகங்களும் இருந்திருக்க வழியிண்டு.

முறைவழங்கல் (நீதி)

சங்ககாலத்து அரசர்கள் குடிமக்களுக்கு முறை வழங்குவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள் என்பதைப் பல அரசர்களது வரலாறுகள் தெரிவிக்கின்றன. கரிகாலன், வழக்குத் தொடுத்தவர்களின் கருத்தை உணர்ந்து, தானே முதியவன்போல் மாறுவேடம் புனைந்துகொண்டு வந்திருந்தவர்களின் வழக்கைக்கேட்டு நீதி கூறினான் என்று பிற்காலத்துப் பழமொழி நானூற்றின் பாடல் கூறுகிறது. தான் கோவலனுக்குத் தவறு செய்துவிட்டதை உணர்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன் தனக்குத்தானே முறை கூறிக்கொண்டு தண்டனை நிறைவேற்றுவான்போல் அரியணையிலிருந்து கீழே விழுந்து உயிர் துறந்தான். உண்மையில் மக்கள் நலம் நாடிச் செய்திருந்தும் கதவைத் தட்டிய கள்வன் கைகளைக் குறைக்கவேண்டுமென்னும் அறங்கூறவையத்தாரின் கட்டளைக்கு இணங்கப் பொற்கைப் பாண்டியன் தானே தன் கையை வெட்டித் தீர்ப்பு வழங்கிக்கொண்டான். முறை வேண்டுவதுபோல் தன் மடியில் விழுந்த புறாவுக்கும், அப் புறாவை உண்ணத் தனக்குத் தரும்படி கேட்ட பருந்திற்கும் முறை வழங்குவது போல, சிபி என்னும் சோழ அரசன் தன் உடலையே பருந்திற்கு உணவாகக் கொடுத்தான். தேரில் உலாச்செல்லுகையில் அறியாது கன்றைக் கொன்றதற்காக நீதி கேட்ட பசுவிற்குத் தன் ஒரே மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்று மனு என்னும் சோழ அரசன் முறை வழங்கினான். இவ்வாறு மக்களுக்கே அன்றி, விலங்குகளுக்கும் நெறி தவறாது அரசர்கள் முறை வழங்கிய பாங்கைச் சங்ககாலத்தில் காணமுடிகிறது. ஆனால், அவை உண்மையான வரலாற்றுச் செய்திகளா என்பது ஆராயத்தக்கதாகும்.

---

494 அகம். 77 : 10

495 Records or testimonials

முறை வேண்டுவோர் எந்த நேரத்திலும் அரசனிடம் முறை வேண்டலாம். தன் வேண்டுதலைத் தெரிவிப்பதற்கு உதவியாக அரண்மனை வாயிலில் மணி ஒன்று கட்டப்பட்டிருந்தது. சோழனும்[496] பாண்டியனும் இவ்வாறு 'ஆராய்ச்சி மணி'[497] கட்டி ஆண்ட அரசர்கள் ஆவர்.

அரசன் முறை தவறி நீதி வழங்கும்பொழுது சான்றோர் களும் தெய்வங்களும் அறிவுறுத்தி அவனை நன்னெறியில் திருப்பி விட்டனர். பகைவர் நாட்டிலிருந்து வந்த இள்ந்தத்தன் என்னும் புலவன் ஒருவனை நெடுங்கிள்ளி என்னும் சோழ அரசன் ஒற்றன் என்று கருதிக் கொல்ல முற்பட்டான். அப்போது கோவூர்கிழார் என்னும் புலவர் இளந்தத்தன் ஒற்றன் அல்லன் என்பதை விளக்கி அரசனை நீதி தவறுவதினின்றும் காத்தார். காரி என்னும் அரசன் தனக்குப் பகைவன் என்பதற்காக, தன்னிடம் கிடைத்த அவனது மக்களை—ஏதும் அறியாப் பாலகர்களை—குளமுற்றத் துத்துஞ்சிய கிள்ளிவளவன் யானைக் காலில் இட்டுக் கொல்லச் சென்றான். கோவூர்கிழார் தக்க அறிவுரை கூறி அரசனைக் கொடுஞ்செயல் புரிவதினின்றும் காப்பாற்றினார்.

அரசன் முறை தவறும்போது கண்ணீர் வடித்துக் காட்டித் திருத்தும் பாவைச் சிலை ஒன்று புகார் நகரத்துப் பாவைமன்றத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

பாண்டிய அரசன் வார்த்திகன் என்னும் பார்ப்பனனைச் சிறை வைத்தபோது மதுரையிலிருந்த ஐயை கோயில் தன் கதவை அடைத்துக்கொண்டதாகவும், நிகழ்ந்தது அறிந்த பாண்டியன் முறையிட்டபோது வார்த்திகன் குற்றமற்றவன் என்பதை வெளிப் படுத்தி அவனை விடுவிடுக்குமாறு அத் தெய்வம் கூறியதாகவும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.[498] பாவை, கோயில் தெய்வம் ஆகியவை உதவியதாகக் கூறப்படுவன வெறும் கதைகள் எனலாம். வழக்குகளை மக்கள் அரசனிடம் தாமே நேரில் முறை யிட்டுக் கொண்டனர்.[499] இக் காலத்தில் வழக்குரைஞர்கள் இருப்பதுபோன்று அக் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

அரசன் அவையில் தகுதியுடைய சான்றோர்களை நடுவர் களாக வைத்து நீதி வழங்குவதும் உண்டு. உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியின் அவையில் இவ்வாறு நீதி வழங்கும்

496 சிலப். 20 : 53
497 ஷி 20 : 3
498 ஷி 23 : 90-120
499 குறுந். 276:6-7; சிலப். வழக்குரைத்த காதை

சான்றோர் இருந்தனர்.[500] இந்த வழக்கத்தை ஒட்டியே கரி காலன் நரைமுடித்து வந்து வழக்குத் தீர்த்த நிகழ்ச்சியும் அமைந்தது. அரசர்கள் நீதி வழங்கும்போது துலாக்கோல்போல் கோட்டமின்றிச் செம்மையாக நடுவுநிலைமையுடன் இருந்து முறை செய்தனர்.[501]

தண்டனை

அரசன் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கக் கண்ணோட்டமின்றி (ஈவுஇரக்கமின்றி) அவர்களைத் தண்டிக்கவேண்டும். அவன் அவர்களைக் கண்டிப்பது பயிர் நன்கு வளரக் களைகட்டுவது போன்றது. இவ்வாறு கண்டித்துக் குற்றம் புரியாமல் காப்பாற்றுவது அரசனது கடமை; செங்கோல் மன்னனது கடமை; இவ்வாறு திருக்குறள் கூறுகிறது. புற நானூற்றுப் பாடலும் கொடியவர்களுக்குத் தண்டனை வழங்குதல் வேண்டும் என்று கூறுகிறது.[502]

களவு செய்தவனுக்குத் தண்டனை அவனது கையை வெட்டு தல் என்பதைப் பொற்கைப் பாண்டியன் வரலாறு தெரிவிக்கிறது. ஒருத்தியின் கற்பை அழித்துவிட்டு அவளை ஏற்க மறுத்தவ னுக்குத் தண்டனை, சுண்ணாம்புக் காளவாயிலிட்டு அவனைச் சுடுதல் என்பது கள்ளூர் மக்கள் வழங்கிய தீர்ப்பால் தெரிகிறது. ஆற்றில் மிதந்து வந்த மாங்காயைக் காவல்மரத்தின் காய் என்று அறியாது உண்ட ஒரு பெண்ணுக்குக் கொலைத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. விளைச்சல் வயலில் பசு நுழைந்து தின்றதற்காக மேய்த்தவனது கண் தோண்டப்பட்டது.[503] பின்னவை இரண்டையும் அக்கால மக்களும் கொடுமை என்று கருதினர்.

பொதுவாகச் சங்ககாலத்தில் குற்றங்களுக்குத் தண்டனைகள் கடுமையாக இருந்தன என்பதை மேற்கண்ட நிகழ்ச்சிகள் தெரிவிக் கின்றன. விரிவாக அறிவதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

சங்ககால ஊராட்சி முறை

சங்ககாலத்தில் முடியரசர்கள் ஆட்சி செலுத்திவந்தனர். அவர்களது ஆட்சியில் மக்களும் பொறுப்பாளர்களாக இருந்து வந்துள்ளனர். அரசர்களால் அமர்த்தப்பட்ட அலுவலர்கள் மட்டு

---

500 புறம். 266:8
501 குறள். 541, 549, 550
502 புறம். 29:9
503 அகம். 262:5

மன்றி மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் ஆட்சியில் பங்கேற்றுள்ளனர் என்பதற்குச் சங்கப் பாடல்களில் தெளிவான சான்றுகள் பரவலாகக் காணப்படுகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் ஊர்களிலும் நகரங்களிலும் பொறுப்பேற்றிருந்தனர் என்பது தெரியவருகிறது. இவர்களின் ஆட்சியை 'ஊராட்சி' என்று நாம் குறிப்பிடலாம்.

மக்கள் ஒன்றுகூடி, பொதுவாழ்வுபற்றி ஆராய்ந்து செயல்பட்ட இடம் சங்ககாலத்தில் அவை, அவையம் என்னும் சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அவையம் அரசன் பங்கேற்ற அவையம், அரசனால் அமர்த்தப்பட்டோர் பங்கேற்ற அவையம், பொதுமக்கள் மட்டும் பங்கேற்ற அவையம், உற்றார் உறவினர் கூடிச் செயல்பட்ட அவையம் என்று பலதிறத்தனவாகக் காணப்படுகின்றன.

அவையின் தன்மைபற்றிப் பல கருத்துகள் தெளிவாகின்றன. அவை என்பது மக்கள் கூடி இருக்கும் ஓர் அமைப்பு.[504] அது அவைக்களம் என்றும் கூறப்படும்.[505] நல்லவர்கள் கூடி இருக்கும் அவை 'நல்லவை' எனப்பட்டது.[506] வயது முதிர்ந்தோருக்குப் பொதுவாக அவையில் முதன்மையிடம் அளிக்கப்படும்.[507] சான்றோர் கூடியிருக்கும் அவை பிறரது துன்பத்தை விரைவில் போக்கும்.[508]

அரசன் பங்கேற்கும் அவை அரசவை என்றும்,[509] வேத்தவை[510] என்றும் கூறப்படும். இந்த அவையில் வேந்தர்களும் மன்னர்களும்[511] கூடி நாட்டின் நலன் கருதி ஆராய்வர். இதில் மக்கள் உடனிருத்தலும், மகளிரும் அங்குச் சென்று தம் குறையைக் கூறி முறைவேண்டலும் உண்டு.[512] அரசன் நாள் தோறும் பங்கேற்ற அவை 'நாளவை' என்று வழங்கப்பட்டது. இது பகற் காலத்தில் அரண்மனையில் கூடும். இந்த அவைக்குள் புலவர்கள் அரசனின் அனுமதி இல்லாமலேயே நுழையலாம்.[513] இங்குப் பொருநர், பாணர் முதலானோர் தம் இசைக் கருவிகளை முழக்குவர்.[514] அரசன் இந்த அவையில் இருந்துகொண்டு கொடைவழங்குதல் வழக்கம்.[515]

---

504 புறம். 54 : 3, கலி. 140 : 22
505 சிலப். 30 : 93-4
506 குறள். 728
507 பொருநர். 187-88
508 புறம். 266 : 8-9
509 பொருநர். 55, சிலப். 26 : 47
510 மலைபடு. 39, புறம். 157 : 4
511 நற். 400 : 7-8 ; மதுரைக். 775-78
512 கலி. 90 : 12
513 புறம். 54 : 3
514 மலைபடு. 36-40; புறம். 394 : 6-9
515 அகம். 76 : 4-5

அரசன் தன் சார்பாகத் தகுதிவாய்ந்த ஒருவனை அவையில் அமர்த்தி ஆளும் வழக்கமும் சங்ககாலத்தில் இருந்தது.[516] நம்பி நெடுஞ்செழியன் என்பவன் இவ்வாறு அரசன் சார்பில் அமர்த்தப் பட்டவன் என்று தெரிகிறது.[517] அரசனது அலுவலாளர்கள் இந்த அவையில் இருந்துகொண்டு வரிதண்டுதல் முதலான செயல் களைச் செய்தலும் உண்டுபோலும்.[518]

மக்கள் மட்டும் பங்கேற்ற அவையங்கள் ஊர்ப் பகுதிகளிலும் நகரப் பகுதியிலும் இருந்தன என்று தெரிகிறது. செங்கண்மா (செங்கம்) என்னும் நகரில் மக்கள் கூடிப் பொதுவாழ்வைப்பற்றி உரையாடிய ஓர் அவையம் இருந்ததாகக் குறிப்பு உள்ளது. இது 'நல்லோர் குழீஇய நாநவில் அவையம்' என்று கூறப்பட் டுள்ளது.[519] இது, அரசன் இருந்த 'நாள்மகிழ் இருக்கை' (அவை)யின் வேறுபட்டது என்பது தெளிவாகக் காட்டப்பட் டுள்ளது. மதுரை நகரிலும் இதுபோன்ற மக்கள் அவையம் இருந்ததாகக் குறிப்பு உள்ளது.[520]

ஊர்ப்பகுதிகளிலும் மக்கள் அவை இருந்தது. கள்ளூர் என்னும் ஊரிலிருந்த ஒரு மக்கள் அவை, தவறு செய்த ஒருவனுக்கு முறைசெய்த நிகழ்ச்சியை, அகநானூற்றுப் பாடல்[521] விளக்க மாகத் தெரிவிக்கிறது. ஒருவன் அழகி ஒருத்தியைத் தகாத முறையில் நுகர்ந்துவிட்டதால், ஊரவையில் வழக்குத் தொடரப் பட்டது. அவன் அவளை அறியேன் என்று பொய்யாகச் சூளுரைத்தான். அவையத்தார் கரியாளரை (சாட்சியாளரை) வினவினர். உண்மை வெளிப்பட்டது. குற்றவாளியைப் பச்சை மரத்தின் கிளை ஒன்றில் கட்டினர். அவனுடைய தலையில் சுண்ணாம்பு நீற்றைக் கொட்டினர். ஊரவை கூடி இவ்வாறு முறை செய்ததிலிருந்து ஊராட்சி முறை சங்ககாலத்தில் இருந்தது என்பதை உணரலாம்.

உழவர்கள் போர் அடித்துத் தூற்றினர். கடுங்காற்று வீசிய தால் அதிலிருந்து கிளம்பிய தூசி அருகில் இருந்த பரதவரின் உப் பளங்களில் படிந்து உப்பை மாசுபடுத்தியது. இதனால் உழவர்க் கும் பரதவர்க்கும் பூசல் ஏற்பட்டது. சேற்றை அள்ளி ஒருவர் மேல் ஒருவர் மாறிமாறி வீசிக்கொண்டனர். இதனைக் கண்ட நரைமூதாளர் அவர்களிடையே தோன்றிய கைச்சண்டையை

516 புறம். 71 : 7–9
517 ஷ 239 : 10
518 ஷ 293
519 மலைபடு. 77
520 மதுரைக். 161, 404
521 அகம். 256 : 15-20

விலக்கிவிட்டனர். பூவைக் காய்ச்சி இறக்கிய தேறலைத் தூசியைப் போக்கி, கொள்ளும் உழைப்பிற்குத் தெம்பூட்டும் கூலியாகப் பரதவர்க்குக் கொடுக்கச் செய்தனர்.[522]

அன்னி மிஞிலியின் தந்தை மாடு மேய்த்துக்கொண்டிருந்தான். அப்போது அவனை அறியாது ஒரு பசு விளைவயலில் புகுந்து தின்றுவிட்டது. அப்போது ஊரிலிருந்த கோசரின் முது மக்கள் கூடி அவனது கண்களைத் தோண்டிவிட்டனர்.[523] இதுவும் ஒருவகையில் ஊராட்சியே. இந்த ஊராட்சிகள் நீதி வழங்கும் செயல்களில் ஈடுபட்டிருந்தவை.

ஊரை ஆளும் முறைமை, அதாவது நிருவகிக்கும் முறைமையும் ஊராட்சியாளர்களிடம் இருந்திருக்கலாம். மழைக்காலத்தில் ஊர் ஏரியைக் காவற்காரனைக்கொண்டு காவல் புரிந்து வந்தது போன்ற செயல்கள்,[524] ஊராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப் பட்டவை என்று எண்ண இடமுண்டு.

உற்றார் உறவினர்கள் கூடிச் செயல்படும் அவையில் திருமணப் பேச்சு முதலான உறவு நிகழ்ச்சிகள் ஆராயப் பட்டன.[525] இதில் வயது முதிர்ந்தவர்களுக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டது.

இந்த இருவகை மக்கள் அவையில் வேறுபல பொதுவாழ்வு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன என்று தெரியவருகிறது. தன்னை விட்டுவிட்டு மற்றொருத்தியிடம் வாழ்ந்த தன் கணவனை ஒருத்தி அவைமுன் இழுத்துவர முயல்கின்ற செய்தியும், அவன் அவைக்கு அஞ்சித் தப்பி ஓடிவிடுகின்ற செய்தியும் பரிபாடலில்[526] விளக்கப் பட்டுள்ளன. தன் உணவுக்காக வரகினைக் கடன் வாங்கும் ஒருவன் ஊரவையைச் சான்றாக வைத்து அந்த அவையத்தார் முன்னிலையில் கடன் வாங்கும் செய்தி புறநானூற்றில்[527] கூறப் பட்டுள்ளது. அவையில் வழக்குரைப்போரும் கரியாளரும் உயர்ந்த இடத்தில் நின்றுகொண்டு தாம் அறிந்த உண்மைகளைக் கூறுவதைக் கலித்தொகை[528] நம் கண்முன் நிறுத்துகிறது. கரிகாலன் தன் மனைவிமாரோடு வேள்வித்தூண் நட்டு விழாக்கொண்டாடிய இடம் இத்தகைய ஊரவையில் ஒன்று என்று எண்ண வேண்டி

522 அகம். 366 : 11
523 ஷெ. 262 : 5-6
524 ஷெ. 252 : 11-13
525 குறுந். 146
526 பரிபா. 20 : 55-62
527 புறம். 327 : 5 7
528 கலி. 3 : 20

யுள்ளது. அந்த அவை நெறிபிறழாத அவை என்றும், ஏதோ காரணத்தால் அது அப்போது அறநெறி பிறழ்ந்திருந்தது என்றும், உலகியல் முறையை[529] நன்கு அறிந்த சான்றோர் அதில் சேர்ந்து நெறிப்படுத்தினர் என்றும் அந்த அவை கூறப்பட்டுள்ளது.[530]

தொல்காப்பியர் எட்டு வகையான அவையம் தம் காலத்தில் இருந்ததனைக் குறிப்பிடுகிறார்.[531] அவர் குறிப்பிடும் எட்டு வகைகள் யாவை என்று தெளிவாகக் கூறத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை.[532]

சங்க நூல்களிலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் 'ஊராண்மை' என்னும் சொல் பயின்றுவந்துள்ளது.[533] 'தவற்றைத் திருத்திக்கொள்ளுதல்' என்பது அச் சொல்லின் பொருள். ஊரை ஆளும் கழகங்கள் — ஊராண்மைக் கழகங்கள் — மக்களின் நடத்தையில் தவறு கண்டவிடத்துத் திருத்தி நல்வழிப்படுத்தியமையால் ஊராண்மை என்னும் சொல்லிற்கு அப் பொருள் அக்காலத்தில் அமைந்திருக்கலாம்.

ஊரவைபற்றிய இந்தச் சான்றுகளுடன், ஊர்மக்கள் தங்களுக்குரிய தலைவர்களைத் தாங்களே தெரிந்தெடுத்துக் கொண்டனர் என்பதனைக் காட்டும் உறுதிமிக்க சான்றுகள் சங்கப் பாடல்களில் உள்ளன. ஊர்ப் பெயரை அடுத்துவரும் வல்லின எழுத்தை முதலாவதாக உடைய மக்களின் பெயரை இடையில் வல்லொற்று மிகுத்துக் குறிப்பிடுவது தமிழ்நெறி. சங்ககாலப் புலவர்களும் தலைவர்களும் இந்த முறையிலேயே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.[534] ஆனால், கிழார், கிழான் முதலான பெயர்கள் வரும்போது ஊர்ப்பெயரை அடுத்து ஒற்றெழுத்துகள் மிகவில்லை.[535] உயர்திணைப் பெயருக்கு முன் (இரண்டாம் வேற்றுமைத்தொகை அல்லாதவிடத்து) ஒற்றுமிகுதல் இல்லை. இந்த நெறிமுறையின்படி பார்த்தால் 'கிழார்' என்னும் சொல்லுக்கு முதலில் வந்துள்ள ஊரின் பெயர் அஃறிணைப் பொருளை உணர்த்தவில்லை; உயர்திணைப் பொருளையே உணர்த்துகிறது. அதாவது, அவ்வூர் மக்களின் கிழார் என்று பொருள் தருகிறது. பிற பெயர்களெல்

529 Law and usage
530 புறம். 224 : 4–5
531 தொல். பொருள். புறத். 17 : 17
532 'எட்டுவகை நுதலிய அவையம்' என்பது எண்பேராயமாகவும் இருக்கலாம்
533 குறள். 773; நாலடி. 240 : 1, 384 : 2; கலி. 89 : 2
534 பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்—மலைபடு. (கொளு) ஏறைக்கோன்—புறம். 157
535 கோவூர் கிழார், பொறையாற்று கிழான்

லாம் ஒற்றுமிகுந்து வந்திருத்தலை நோக்கும்போது கிழார் என்பதற்கு ஊரில் வாழ்ந்த கிழார் என்பது பொருள் அன்று. ஊர் மக்களுக்குக் கிழார் என்பதே பொருள் என்னும் உண்மை தெளிவாகிறது.

சங்ககாலத்தில் கிழமை என்னும் சொல் தொடர்புரிமை என்னும் பொருளை உடையது.[536] கிழமையர்,[537] கிழமையோன்[538], கிழமையான்,[539] கிழவர்,[540] கிழத்தியர்,[541] கிழவது,[542] கிழவியது[543] முதலான சொற்களும் இப் பொருளிலேயே கையாளப்பட்டுள்ளன. எனவே, கிழார் என்பது தொடர் புரிமையாளர் என்னும் பொருளைத் தரும். இதனால் கிழார் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பது தெளிவாகிறது. 'கிழக்கு' என்னும் சொல்லுக்குக் 'கீழ்' என்னும் பொருளுண்டு.[544] கிழவன் என்பவன் அரசனால் வரி தண்டித் தரும் உரிமை அளிக்கப்பட்டவன் என்று பொருள் தரத்தக்க வகையில் உள்ள சங்கப் பாடல் குறிப்பும் உள்ளது.[545] இதனை நோக்கும்போது கிழார் முடிவேந்தனுக்குக் கீழ் இருந்தவர்களோ என்றும் எண்ண வேண்டியுள்ளது. எப்படியிருந்தாலும் அவர்கள் முடிவேந்தனால் அமர்த்தப்பட்டவர்கள் அல்லர். மக்களால் தங்களுக்குத் தலைவர் என்ற முறையில் சிறப்பிக்கப்பட்டவர் என்பது தெளிவு.

ஊர்மக்கள் இந்தக் கிழாரை எவ்வாறு தெரிந்தெடுத்தனர் என்பதற்குத் தெளிவான சான்று இல்லை. என்றாலும் குடவோலை முறையில் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடும் என்று எண்ண வேண்டியுள்ளது.

குடவோலை முறை

ஊர்த் தலைவர்களாக வரத் தகுதியுடையவர்கள் பெயர்களைத் தனித்தனி ஓலையில் எழுதி ஒரு பானையில் இட்டு மூடிக் கயிற்றால் கட்டிவைத்தனர். பின் அந்தக் கயிற்றை அவிழ்த்துப் பானையிலிருந்த ஓலைகளில் ஒன்றை எடுத்தனர். அதில் எழுதப்பட்டிருந்த எழுத்தைப் பலரறிய வெளிப்படுத்திவிட்டு எஞ்சிய ஓலைகளை அழித்துவிட்டனர். அரசுப் பதிவுகளைச் செய்யும்

536 அகம். 32 : 18, 230 : 9; புறம். 32 : 7, 216 : 3
537 புறம். 216 : 8
538 ஷை 165 : 15
539 சிலப். 1 : 39
540 தொல். பொருள். அகத். 23 : 2; நற். 291:9; புறம். 35:3; கலி. 21:10
541 தொல். பொருள். கற்பு. 10 : 14
542 ஷை புறத். 24
543 ஷை களவு. 33 : 3
544 நற். 297 : 1; தொல். பொருள். உவம. 5
545 புறம். 184 : 5-7

ஆவண மாக்கள் இதனைச் செய்தனர். இச் செயல் போரிட்டுச் சாய்ந்த வீரனின் குடலை, எருவைப் பறவை தன் அலகுகளால் குத்தி ஈர்ப்பது போன்று இருந்தது என்று அகநானூற்றில் கூறப் பட்டுள்ளது.[546] வீரனின் குடலை ஈர்க்கும் பறவைக்கு உவமை யாகப் பானையிலிருந்து ஓலையை எடுக்கும் பதிவு அலுவலர் காட்டப்பட்டுள்ளதைக் கொண்டு ஊரவைத் தலைவர் சங்ககாலத் தில் தெரிந்தெடுக்கப்பட்ட முறைமையை உணரமுடிகிறது.

தொகுத்துக் காணும்போது கீழ்க்காணும் உண்மைகள் தெளி வாகும். சங்ககாலத்தில் முடியாட்சிக்குத் துணையாக மக்க ளாட்சி முறையும் அமைந்திருந்தது. அரசனால் அமர்த்தப்பட்ட அலுவல் தலைவர்களும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப் புடைத் தலைவர்களும் ஆட்சியில் ஈடுபட்டிருந்தனர். ஊரவை, குடவோலை முறை, கிழார் முதலானவற்றால் அறியப்படும் செய்திகள், சங்ககாலத்தில் குடியாட்சி முறை இருந்தமையைக் காட்டும் சான்றுகளாகும்.

546 அகம். 77 : 7-11

இயல் 10

இலங்கையில் தமிழர்

சங்ககாலத்து இலங்கை

நில அமைப்பு

தமிழகத்துக்குத் தென்கிழக்கே, பாண்டி நாட்டுக்கு அருகிலே, இலங்கைத் தீவு இருக்கிறது. தமிழகத்துக்கு மிகச் சமீபத்திலே இருப்பதனாலே இலங்கைக்கும் தமிழகத்துக்கும் நெருங்கிய தொடர்பு ஆதிகாலம் முதல் இருந்து வருகிறது. சமயத் தொடர்பும் வாணிகத் தொடர்பும் அக்காலத்தில் இருந்தன.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இப்போது தனித் தீவாகப் பிரிந்திருக்கிற இலங்கை, தமிழகத்தோடு இணைந்து ஒரே நிலப் பரப்பாக இருந்தது. அந்தக் காலத்தில் கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் கிழக்கிலும் பாண்டி நாட்டோடு இணைந்திருந்த நிலம் இலங்கையோடு இணைந்து சேர்ந்து ஒரே நிலப்பரப்பாக இருந்தது. பின்னர்க் காலந்தோறும் ஏற்பட்ட கடல்கோள்களினாலே அந்த நிலப்பகுதி சிறிது சிறிதாக அரிக்கப்பட்டுத் தனித் தீவாகப் பிரிந்து இலங்கை என்று பெயர் பெற்றிருக்கிறது. அதன் பிறகு, குமரிமுனையோடு இணைந்து இருந்த நிலப்பகுதி, அவ்வப் போது நிகழ்ந்த சில கடல்கோள்களினாலே சிறிது சிறிதாகக் கடலில் முழுகி இப்போதுள்ள நிலையையடைந்தது. தமிழ் நாட்டின் கரையோரங்களைச் சுற்றிலும் இலங்கைத் தீவின் கரையோரங்களைச் சுற்றிலும் இப்போதுள்ள கடல் ஆழமில்லாமல் இருக்கிறது. இந்தக் கடல் ஆழமில்லாமலிருப்பது, முன்னொரு காலத்தில் இந்தப் பகுதி நிலமாக இருந்து இலங்கையும் தமிழகமும் ஒன்றாக இணைந்திருந்தன என்பதற்குச் சான்றாக இருக்கிறது.

சங்ககாலத்தில் இலங்கையில் இருந்த இடங்களை இனிப் பார்க்கலாம் :

அநுராதபுரம்

இதை அநுரை என்றும் கூறுவர். சிறு கிராமமாக இருந்த இந்த ஊரைப் பாண்டுகாபய அரசன் இலங்கையின் தலைநகரமாக்கினான். பின்னர் இது சிறிது சிறிதாக வளர்ந்து பெரிய

நகரமாயிற்று. சிங்கள இராச்சியத்தின் தலைநகரமாக இருந்த இந்த நகரத்தில் சிங்கள அரசரும் தமிழ் அரசரும் தங்கி அரசாண்டார்கள். தேவனாம்பிய திஸ்ஸன் காலத்தில், அசோகர் சக்கர



நிலப்படம் 5

வர்த்தி புத்தகயாவிலிருந்து அனுப்பிய போதி (அரச) மரத்தின் கிளை இந் நகரத்தில் நடப்பட்டது. இப்போதுள்ள அரசமரம் அந்த அரசமரக் கிளைகள் என்று கூறப்படுகிறது. புகழ்பெற்றுப் பெருஞ்சிறப்பாக இருந்த அநுராதபுரம் பிற்காலத்தில் சிறப்புக்

குன்றிவிட்டது. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் புலத்தி நகரம் (பொலனறுவை) இலங்கையின் தலைநகரமான போது அநுராதபுரம் பெருமை குன்றிக் காலப்போக்கில் சாதாரண நகரமாக மாறி விட்டது. இடைக்காலத்தில் இந்த நகரம் பாழடைந்து காடு பிடித்து நெடுங்காலம் மறைந்துகிடந்தது. சென்ற நூற்றாண்டில் இந்த நகரம் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக் கப்பட்டு இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது. மறைந்து கிடந்த பல இடங்களும், விகாரைகளும், தாகோபாக்களும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. அவற்றில், கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இந்த நகரத் தில் தங்கியிருந்து வாணிகஞ்செய்த தமிழ் வணிகரின் மறைந்து போன மாளிகையும் ஒன்று. அங்கு எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்தினால் இது தெரிகிறது.

உரோகண நாடு

உரோகண நாடு பழைய இலங்கையின் ஒரு பிரிவு. இலங்கை யின் தென்கிழக்கில் இந்த நாடு அமைந்திருந்தது. இதனுடைய கிழக்கிலும் தெற்கிலும் கடல் எல்லையாக இருந்தது. இதனுடைய தலைநகரம் மாகாமம் (மாகாமம் பிற்காலத்தில் திஸ்ஸமாகாமம் என்று கூறப்பட்டது). மாணிக்க கங்கை என்னும் ஆறு உரோகண நாட்டில் வடக்கிலிருந்து தெற்காகப் பாய்ந்து கடலில் கலக்கிறது. சம்பந்திட்டை என்னும் துறைமுகப்பட்டினம் இதன் தெற்கில் இருந்த பேர்பெற்ற துறைமுகப்பட்டினம். இப்போது இம்பாந்தோட்டம் என்னும் சிறு துறைமுகமாக இருக்கிறது.

முருகக் கடவுளின் (ஸ்கந்த முருகனின்) பெயர்பெற்ற கதிர் காமம் உரோகண நாட்டில் இருந்தது. இப்போதும் கதிர்காமம் பேர் பெற்றுள்ள திருப்பதியாக இருக்கிறது. கதிர்காமத்தைச் சிங்களவர் 'கதரகாமம்' என்றும், 'கஜரகாமம்' என்றும், 'காசரகாமம்' என்றும் கூறுவர். கதிர்காம முருகனைச் சிங்களவர் 'கதரகாம தெவியோ' (கதிர்காமத் தெய்வம்) என்று கூறுவர். இலங்கையின் நான்கு பெரிய காவல் தெய்வங்களில் கதிர்காமக் கந்தனும் ஒரு தெய்வமாகக் கருதப்பட்டான். பழங் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு முருகன் வழிபாடு சென்றது. கி. மு. நான்காம் நூற்றாண்டில் பாண்டிநாட்டுத் தமிழர் உரோகண நாட்டுக்கு வந்து குடியேறியபோது அவர்கள் தங்களுடைய முருக வழிபாட்டை உரோகண நாட்டில் நிறுவி னார்கள். முருகன் குறிஞ்சிநிலக் கடவுள் ஆகையால், தமிழரின் வழக்கப்படி அவர்கள் கதிர்காம மலைமேல் முருகனுக்குக் கோயில் கட்டி வழிபட்டார்கள். பிற்காலத்தில் பௌத்த மதம் இலங்கை யில் பரவினபோது பௌத்த பிக்குகள் மலைமேல் இருந்த

முருகனைக் கீழே இறக்கிவிட்டு மலைமேல் தாகோபா (தாதுகர்ப் பத்தைக்) கட்டிவிட்டனர்.

உரோகண நாட்டில் தமிழர் வழிபட்ட இன்னொரு கோயில் அட்டாலயம் என்பது. அது சிவன் கோயிலா, கொற்றவை கோயிலா என்பது தெரியவில்லை. தேவனாம்பிய திஸ்ஸனுடைய தம்பியான மகாநாகன், தன்னுடைய உயிருக்கு அஞ்சி உரோகண நாட்டு மச்சமகாராசனிடம் அடைக்கலம் புகச் சென்ற போது இந்த அட்டாலயத்தில் அவனுடைய மனைவி குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்கு அவன் அட்டாலய திஸ்ஸன் என்று பெயர் இட்டான்.[1] உரோகண நாட்டில் இருந்த இன்னொரு கோயில் சிவன்கோயில் என்று தோன்றுகிறது. அந்தக் கோயில் ஏரகாவில்ல என்னும் ஊரில் இருந்தது. நெடுங் காலமாக இருந்த அந்தக் கோயிலைப் பிற்காலத்தில் மகாசேனன் என்னும் சிங்கள அரசன் (கி.பி. 325—352) பௌத்தமத வெறி கொண்டு இடித்துப்போட்டு அங்குப் பௌத்த விகாரை ஒன்றைக் கட்டினான்.[2]

தமிழர் குடியேறி வாழ்ந்த உரோகண நாட்டைப் பாண்டியன் மரபைச் சேர்ந்த மச்சமகாராசர் (பாண்டியரின் அடையாளம் மீன்) கி. மு. 4ஆம் நூற்றாண்டிலிருந்து கி. மு. 2ஆம் நூற்றாண்டு வரையில் அரசாண்டனர். பல நூற்றாண்டுகளாக உரோகண நாட்டில் நிலையாகத் தங்கியிருந்த அவர்கள் பாண்டியரோடு தொடர்பு இல்லாமலே தனித்து இருந்தனர். அவர்கள் பிற்காலத்தில் பௌத்த மதத்தைத் தழுவியிருந்தனர். அவர்களிடம் தேவனாம்பிய திஸ்ஸனின் தம்பியான மகாநாகன் அடைக்கலம் புகுந்து உரோகண நாட்டில் தங்கியிருந்தான். பிறகு, அவனும் அவனுடைய மகனும் மச்சமகாராசரை அழித்து அவர்களுடைய உரோகண நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள். இவ்வாறு உரோகண நாட்டை அரசாண்ட மச்சமகாராசர் அழிக்கப்பட்ட போதிலும், அவர்கள் அக்காலத்தில் கற்பாறைகளில் எழுதிவைத்துள்ள பிராமி எழுத்துச் சாசனங்களும் அச் சாசனங்களோடு பொறிக்கப்பட்டுள்ள மீன் அடையளங்காளும் அவர்களைப்பற்றிக் கூறுகின்றன.

சமந்தம்

இது இலங்கையின் நடுவில் உள்ள மலையநாட்டில் மிக உயரமான மலை. இது 'சமனொளி மலை' என்றும் 'சமந்த கூடம்'

---

1 மகாவம்சம், 22ஆம் பரிச்சேதம் 7-8 2 ஷை 37 : 41

என்றும் கூறப்பட்டது. இந்த மலையின் உச்சியில் புத்தருடைய அடிச்சுவடு உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆகவே, பௌத்தர்கள் இந்த மலையைப் புனிதமாகக் கருதி அங்கு யாத்திரை போகிறார்கள். மணிமேகலைக் காவியமும் இந்த மலையைக் கூறுகிறது. 'இரத்தின தீவத்து ஓங்குயர் சமந்தத்து உச்சி மீமிசை' புத்தருடைய பாதச்சுவடு இருப்பதாகக் கூறுகிறது.[3] 'இலங்கா தீவத்துச் சமனொளி என்னும் சிலம்பு' எனவும் கூறுகிறது.[4]

பிற்காலத்தில் இங்கு வந்த முகமதியர்களும் கிறித்தவர்களும் இந்த மலையை 'ஆதம் மலை' என்று கூறினார்கள்.

மணிபல்லவம் (சம்புகொலப்பட்டினம்)

தமிழில் மணிபல்லவம் என்றும், சிங்களமொழியில் சம்புகொலப்பட்டினம் என்றும் பெயர்பெற்ற இந்தத் துறைமுகம் மிகப் பழைமையானது. இது இலங்கையின் வடகோடியில், நாகநாட்டின் (இப்போதைய யாழ்ப்பாணத்தின்) வடக்கே இருந்தது. சம்பில் துறை என்றும் இது கூறப்பட்டது. இங்குப் பெரிய பட்டினம் (ஊர்) இல்லை. இங்கு ஏற்றுமதி, இறக்குமதிகள் நடைபெறவில்லை. ஆனால், தமிழருக்கு முக்கியத் துறைமுகமாக இருந்தது. சோழ நாடு, பாண்டிய நாடுகளிலிருந்து தூரக்கிழக்கு நாடாகிய சாவக நாட்டுக்குப் (கிழக்கிந்தியத் தீவுகளுக்கு) போன வணிகக் கப்பல்கள் மணிபல்லவத் துறையில் தங்கி, அங்கிருந்து கடல் பிரயாணத்துக்கு வேண்டிய குடிநீரை எடுத்துக்கொண்டு போயின. மணிமேகலைக் காவியத்தில் இந்தத் துறைமுகம் சிறப்பாகக் கூறப்படுகிறது.

இலங்கையின் பழைய தலைநகரமாயிருந்த அநுராதபுரத்துக்கு தெடுஞ்சாலையொன்று மணிபல்லவத் துறையிலிருந்து சென்றது. இலங்கையை அரசாண்ட தேவனாம்பிய திஸ்ஸன் (கி.மு. 247-207), அக்காலத்தில் இந்திய தேசத்தை அரசாண்ட அசோகச் சக்கரவர்த்தியிடம் தூதுக்குழுவை அனுப்பியபோது, அத்தத் தூதுக்குழு சம்புகொலத் (மணிபல்லவத்) துறையிலிருந்து கப்பலேறிச் சென்றது.[5] அத்தத் தூதுக்குழு மீண்டும் திரும்பி வந்தபோது இந்தத் துறைமுகத்தில் வந்து இறங்கி அநுராதபுரத்துக்குச் சென்றது.[6]

---

3 மணி. மே. 11 : 21-22
4 டீ 28 : 107-108
5 மகாவம்சம், 11 : 23-24
6 டீ 11 : 33

அசோகச் சக்கரவர்த்தி, சங்கமித்திரையின் தலைமையில் மகாபோதிக் கிளையை இலங்கைக்கு அனுப்பியபோது அந்தக் கப்பல் இந்தத் துறைமுகத்தில் வந்து இறங்கிற்று.[7] போதிமரக் கிளையுடன் அனுப்பப்பட்ட எட்டுப் போதிமரக் கன்றுகளில் ஒரு கன்றைத் தேவனாம்பிய திஸ்ஸன் இங்கு நட்டான்.[8] பிறகு இந்தப் போதி மரத்தின் அடியில் புத்தருக்குப் பாதபீடிகை அமைக்கப்பட்டது. இந்தப் பீடிகைக்கு மணிபல்லங்கம் (பல்லங்கம்—பலகை) என்று பெயர். மணிபல்லங்கம் என்னும் பெயர் தமிழில் மணிபல்லவம் என்று திரிந்து வழங்கியது. இந்தப் பீடிகையை மணிமேகலைக் காப்பியம் 'மணிபீடிகை' என்றும் 'தரும பீடிகை' என்றும் கூறுகிறது.

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்திலிருந்து தெற்கே முப்பது யோசனை தூரத்தில் மணிபல்லவத் துறை இருந்தது.[9] கோவலன் மகள் மணிமேகலை பௌத்த சமயத்தைச் சேர்ந்த பிறகு மணி பல்லவஞ் சென்று அங்கிருந்த புத்த பாதபீடிகையை வணங்கித் திரும்பி வந்தாள்.[10]

யாழ்ப்பாண நாட்டை (நாக நாட்டை) அக்காலத்தில் அரசாண்ட வளைவணன் என்ற நாக அரசனுடைய மகளான பீலிவளை, மணிபல்லவத் துறையிலிருந்து கப்பல் ஏறிக் காவிப்பூம் பட்டினத்துக்கு வந்து நெய்தலங்கானலில் சில நாள் தங்கியிருந்தாள்.[11] மணிமேகலை, சாவகநாடு சென்று அந்த நாட்டு அரசன் புண்ணியராசனோடு மணிபல்லவத்துக்கு வந்து அங்கிருந்த பாத பீடிகையை வணங்கினாள்.[12] மணிபல்லவத் துறைமுகம், சங்க காலத்திலும் அதற்குப் பிறகும் கப்பல்கள் தங்குவதற்கு வாய்ப்பான துறைமுகமாக இருந்தது, ஆனால், அது வாணிகப் பண்டங்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் துறைமுகமாக அமைந்திருக்கவில்லை.

மாதிட்டை

இலங்கையின் மேற்குக் கரையில் மன்னார்குடாக்கடலில், பாண்டி நாட்டுக்கு எதிர்க்கரையில் இருந்த பேர்பெற்ற பழைய துறைமுகம் இது. மகாதிட்டை என்பது மாதிட்டை என்று மருவி வழங்கிற்று. பிற்காலத்தில் இந்தப் பட்டினம் மாதோட்டம் என்று கூறப்பட்டது. இது மாந்தை என்றும் வழங்கப்பட்டது.

---

7 மகாவம்சம், 19 : 23
8 டி 19 : 60
9 மணிமே. 6 : 211–13
10 டி 25 : 120–127
11 டி 25 : 178–192
12 டி 25 : 119–127

கி. மு. 5ஆம் நூற்றாண்டில் இலங்கையை அரசாண்ட முதல் சிங்கள அரசனான விசயன் பாண்டியனுடைய மகளை மணஞ் செய்துகொண்டான். அவனுடைய 700 தோழர்களும் பாண்டி நாட்டு மகளிரை மணஞ்செய்து கொண்டார்கள். பாண்டியன் மகளும், பாண்டிநாட்டு மணமகளிரும் பரிவாரங்களோடு இலங்கைக்கு வந்தபோது மாதிட்டைத் துறைமுகத்தில் வந்து இறங்கினார்கள்.[13]

கி. மு. முதல் நூற்றாண்டில் இலங்கையை அரசாண்ட ஏலார அரசன்மேல் துட்டகமுனு போர் செய்தபோது, ஏலாரனுக்கு உதவி செய்யப் பல்லுகன் என்பவன் சோழ நாட்டிலிருந்து சேனையை அழைத்துக்கொண்டு மாதிட்டைத் துறைமுகத்தில் வந்து இறங்கினான்.[14] வட்டகாமணி அரசனுடைய ஆட்சிக் காலத்தில் பாண்டி நாட்டிலிருந்து ஏழு வீரர்கள் கி. மு. 29-ல் தங்கள் சேனைகளோடு மாதிட்டைத் துறைமுகத்தில் வந்து இறங்கினார்கள்.[15] கி. பி. முதல் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட இளநாகனை, இலம்பகன்னர் அரசைவிட்டு ஓட்டிய போது, அவன் மகாதிட்டைத் துறைமுகத்தில் கப்பல் ஏறித் தமிழ்நாட்டுக்கு வந்து புகல் அடைந்தான்.[16]

தமிழ்நாட்டிலிருந்து வாணிகத்துக்காகவும் பிற அலுவல் காரணமாகவும் இலங்கைக்குச் சென்றவர்கள் மாதிட்டைத் துறை முகத்தில் இறங்கிச் சென்றார்கள். அவ்வாறே இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்தவர்களும் இந்தத் துறைமுகத்தில் வந்து கப்பல் ஏறினார்கள். (அந்தக் காலத்தில் இப்போது உள்ள கொழும்புத் துறைமுகம் இல்லை. கொழும்புத் துறைமுகம் பிகப் பிற்காலத்தில் ஐரோப்பியர் வந்து வாணிகஞ் செய்யத் தொடங்கிய போது புதிதாக ஏற்பட்டது.)

மாதிட்டை என்னும் பழைய பெயர் காலப்போக்கில் மாதோட்டம் என்றாகி, பிறகு அது மாந்தோட்டம் என்று மாறிக் கடைசியில் மாந்தை என்றும் வழங்கப்பட்டது. சங்ககாலத்தில் சேரநாட்டுத் துறைமுகமாயிருந்த மாந்தைப் பட்டினத்தை இந்த மாந்தை என்று கருதுவது தவறு. சேரநாட்டு மாந்தைத் துறை முகத்தைக் 'குட்டுவன் மாந்தை' என்று சங்கநூல்கள் கூறுகின் றன. சங்கநூல்களில் கூறப்படுவது சேரநாட்டு மாந்தைத் துறை முகத்தையே; திரு. நவரத்தினம் அவர்கள் மாதோட்டத்தை,

13 மகாவம்சம், 7 : 58
14 ஷை 25 : 80
15 ஷை 30 : 39
16 ஷை 35 : 15-45

(மகாதிட்டையை) மாந்தை என்று சங்கநூல்கள் கூறுவதாகக் கருதிக்கொண்டு தவறாக எழுதியுள்ளார்.

சங்ககாலத்திலும் அதற்கு அடுத்த காலத்திலும் மாதிட்டைக்கு மாந்தை என்று பெயர் இருக்கவில்லை. இப் பெயர் மிக மிகப் பிற்காலத்தில்தான் அங்கு வழங்கப்பட்டது. எனவே, சேரநாட்டில் இருந்த மாந்தைப் பட்டினத்தை இலங்கையில் சங்க காலத்தில் இருந்த மாதிட்டைத் துறைமுகத்துடன் இணைப்பது தவறாகும்.

மாவலி கங்கை

மாவலி கங்கை இலங்கையில் உள்ள பெரிய ஆறாகும். இலங்கையின் மத்தியில் உள்ள மலையநாட்டில் (கண்டிமலைப் பிரதேசங்களில்) இது உற்பத்தியாகிக் கிழக்காகப் பாய்ந்து பிறகு வடகிழக்காக ஓடிக் கடைசியில் வங்காளக் குடாக்கடலில் உள்ள திருக்கோண மலைக்கு அருகில் கடலில் சேர்கிறது. மாவலி கங்கையின் சரியான பெயர் மகாவாலுக கங்கை என்பது. (மகா = பெரிய, வாலுகம் = மணல், கங்கை = ஆறு. எனவே, 'பெருமணல் ஆறு' என்பது இதற்குப் பொருள்.) மகாவாலுக கங்கை என்னும் பெயர் சுருங்கி மாவலி கங்கை என்று வழங்கப்படுகிறது. மாவலி கங்கை இலங்கையை வடக்குப்பகுதி என்றும், தெற்குப் பகுதி என்றும் இரு கூறாகப் பிரிக்கிறது. சிங்கள இராச்சியத்தின் (இராசாட்டத்தின்) தெற்கு எல்லையாக இந்த ஆறு இருந்தது. இந்த ஆற்றின் தெற்கே மலைய நாடும், உரோகண நாடும் இருந்தன. இந்த நாடுகள் சிங்கள ஆட்சிக்கு அடங்காமல் இருந்தன.

இலங்கையின் பழங்குடி மக்கள்

இலங்கையில் ஆதிகால முதல் நிலையாகத் தங்கி வாழ்ந்தவர்கள் இயக்கர், நாகர், வேடர் என்னும் பழங்குடி மக்களாவர். இந்தப் பழங்குடி மக்களைப்பற்றிய இலங்கை வரலாற்றைத் தீபவம்சம், மகாவம்சம் என்னும் நூல்கள் கூறுகின்றன. இந்த நூல்கள் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் வாழ்ந்த புத்தர் பெருமான், இலங்கைக்கு மூன்று முறை வந்தார் என்றும், முதல் முறை வந்தபோது அவர் இயக்கரை இலங்கைத் தீவிலிருந்து வெளியேற்றினார் என்றும், இரண்டாம் முறை, மூன்றாம் முறை வந்தபோது அவர் நாகர் என்னும் இனத்தாருக்குப் பௌத்த மதத்தைப் போதித்துச் சென்றார் என்றும் கூறுகின்றன. ஆனால், புத்தர் பெருமான் வடஇந்தியாவிலேயே

தம்முடைய வாழ்நாள் முழுவதையும் கழித்தார் என்றும் தென்னிந்தியாவுக்கோ, இலங்கைக்கோ, வேறு நாடுகளுக்கோ அவர் போகவில்லை என்றும் அவருடைய வாழ்க்கை வரலாறு கூறுகிறது. ஆனால், புத்தரை இலங்கையோடு சம்பந்தப்படுத்த வேண்டும் என்னும் ஆசையினாலே, தீபவம்சமும் மகாவம்சமும் புத்தர் மூன்று முறை இலங்கைக்கு வந்துபோனார் என்று கூறுகின்றன.

புத்தர் பெருமான் போதிஞானம் அடைந்தபிறகு ஒன்பதாவது திங்களில் இலங்கைக்கு வந்தார் என்றும், அப்போது இலங்கையில் வாழ்ந்திருந்த இயக்கர் ஆற்றங்கரையிலே இருந்த மகாநாகத் தோட்டத்திலே வழக்கம்போலக் கூடியிருந்ததைக் கண்டு அவர், அவர்களை அச்சுறுத்த எண்ணிக் காரிருளையும் புயற்காற்றையும் பெருமழையையும் உண்டாக்க, அவர்கள் அஞ்சி நடுங்கித் தங்களை இந்தத் துன்பத்திலிருந்து காப்பாற்றவேண்டும் என்று புத்தரை வேண்டிக்கொள்ள, அவர் தமக்கு இருக்கச் சிறிதளவு இடந்தந்தால் அந்தத் துன்பத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதாகக் கூற, அவர்கள் அவருக்குத் தம் நாட்டில் இருக்க இடந்தந்தனர் என்றும், இடம்பெற்ற புத்தர் புயலையும் மழையையும் அகற்றிக் கீழே இறங்கிவந்து தம்முடைய தோல் ஆசனத்தை விரித்து அதில் அமர்ந்தபோது, அது அகன்று விரிந்துகொண்டு போக, இயக்கர் ஒதுங்கிச் சென்று கடற்கரையில் நின்றனர் என்றும், அப்போது புத்தர் அருகில் கடலில் இருந்த கிரித் தீவு என்னும் தீவைத் தம்முடைய இரித்தி(சித்தி)யினால் இலங்கைக்கு அருகில் வரவழைக்க, இயக்கர் அந்த கிரித் தீவில் சென்றுவிட அவர் அத் தீவை முன்போலக் கடலிலிருந்து அகன்று போய்விடச் செய்தார் என்றும் இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு, புத்தர் இலங்கையிலிருந்து இயக்கரை வேறு தீவுக்கு அனுப்பிவிட்டார் என்று கூறுகின்றன.[17] இலங்கை நூல்கள் கூறுகிற இந்தச் செய்தியைப் புத்தருடைய வரலாறு கூறவில்லை. ஆகையால், இது ஒரு கற்பனைக் கதை என்று தெரிகிறது. புத்தர், கொடியவரையும் நல்லவராக்கி அவர்களுக்குப் பௌத்தக் கொள்கையை உபதேசித்தார் என்று அவருடைய வரலாறு கூறுகிறது. ஆனால், இலங்கை நூல்கள் அவர் அப்படிச் செய்யாமல் இயக்கரை வேறு தீவுக்கு அனுப்பிவிட்டார் என்று கூறுகின்றன.

இயக்கரை வேறு தீவுக்கு ஓட்டியபிறகு தேவர்கள் இலங்கைக்கு வந்தார்கள் என்றும், அவர்களுக்குப் புத்தர்

17 மகாவம்சம், 1 : 19-31

திரிசரணம், பஞ்சசீலம் முதலான உபதேசங்களைச் செய்தார் என்றும் இந் நூல்கள் கூறுகின்றன.[18] இந்தத் தேவர்கள் யார், எங்கிருந்து இலங்கைக்கு வந்தார்கள் என்று இந் நூல்கள் கூறவில்லை. இலங்கையிலிருந்த இயக்கரைத் துரத்திவிட்டுத் தேவருக்குத் தருமோபதேசம் செய்த புத்தர் மீண்டும் வடஇந்தியாவுக்குப் (உருவேல என்னும் இடத்துக்குப் போய்விட்டார்.[19] இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், ஆதி காலத்தில் இலங்கையில் இயக்கர் என்னும் பழங்குடிமக்கள் பெருவாரியாக வாழ்ந்திருந்தனர் என்பதே. இயக்கர்கள் இலங்கையிலிருந்து கிரித் தீவுக்கு ஓட்டப்பட்டதாக இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகிறபோதிலும், இயக்கர்கள் எல்லோரும் இலங்கையை விட்டுப் போய்விடவில்லை. ஏனென்றால், இயக்கரும் அவர்களுடைய அரசர்களும் இலங்கையில் பிற்காலத்திலும் வாழ்ந்திருந்தனர் என்பதை மகாவம்சமும் தீபவம்சமும் கூறுகின்றன.

இலங்கையில் அந்தப் பழங்காலத்திலே நாகர் என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்திருந்ததையும், நாக அரசர்கள் அவர்களை ஆண்டு ஆட்சி செய்ததையும் தீபவர்சமும் மகாவம்சமும் கூறுகின்றன. புத்தர் வடஇந்தியாவில் ஜேதவனம் என்னும் இடத்தில் இருந்தபோது (அவர் புத்த பதவியடைந்த ஐந்தாவது ஆண்டில்) இலங்கையில் இருந்த நாகர் குலத்து அரசர்களான மகோதரன், குலோதரன் என்பவர்கள் ஒரு மணியாசனத்துக்காகப் போர் செய்யப்போவதையறிந்து, அவர்கள்மேல் இரக்கங்கொண்டு புத்தர் இலங்கைக்கு வந்து அவர்களுடைய போரை நிறுத்தித் தருமோபதேசம் செய்தார் என்று இலங்கை நூல்கள் கூறுகின்றன.[20]

இலங்கையின் வடக்கில் கடல் பிரதேசத்தில் (இப்போதைய யாழ்ப்பாணத்தில்) நாகர் என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்திருந்தனர். அவர்களுடைய அரசனான நாகராசனுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறந்தனர். நாகராசன் தன்னுடைய மகளை மலை நாட்டில் வாழ்ந்திருந்த நாகராசனுக்கு மணஞ்செய்து கொடுத்துத் தன்னிடத்தில் இருந்த மணியாசனத்தையும் அவளுக்குப் பரிசாகக் கொடுத்தான். அவளுக்குக் குலோதரன் என்னும் ஒரு மகன் பிறந்தான். யாழ்ப்பாணப் பகுதியில் இருந்த நாகராசன் இறந்தபின பிறகு அவனுடைய மகனான மகோதரன் யாழ்ப்பாணத்தை நாக நாட்டை) அரசாண்டான், அப்போது அவனுடைய மருகனான (தங்கையின் மகனான) குலோதரன் அரசாண்டு கொண்டிருந்

18 மகாவம்சம், 1 : 32
19 ஷை 1 : 43
20 ஷை 1 : 44-47

தான். மகோதரன் தன் தந்தை தன்னுடைய தங்கைக்குப் பரிசாகக் கொடுத்த மணியாசனத்தைப்பெற எண்ணிக் குலோதரன் மேல் படையெடுத்துப் போர்செய்யச் சென்றான். இருவரும் போர்க்களத்திலே சந்தித்தபோது புத்தர்பெருமான் போர்க்களத் திலே உயரத்தோன்றிப் பேரிருளை உண்டாக்கினார். அந்த இருட்டைக் கண்ட நாகர் நடுங்கி அஞ்சினார்கள். அப்போது புத்தர் வெளிச்சத்தை உண்டாக்கினார். நாகர்கள் மகிழ்ந்து புத்தரை வணங்கி அவருக்கு மணியாசனத்தைக் கொடுத்து அதில் அமரச் செய்தார்கள். மணியாசனத்தில் அமர்ந்த புத்தர் அவர் களுக்குத் தருமோபதேசம் செய்தார். போர்செய்யக் காரணமாக இருந்த மணியாசனம் புத்தருக்கு உரியதாயிற்று. இவ்வாறு நாகர் களின் போரை நிறுத்திய புத்தர், பிறகு வடஇந்தியாவுக்குப் (ஜேதவனத்துக்கு) போய்விட்டார். அவர் அமர்ந்து உபதேசம் செய்த மணியாசனத்தை நாகர் வழிபட்டு வணங்கினார்கள்.[21] மணியாசனத்துக்காக நாக அரசர் போர் செய்ததையும், அப்போது புத்தர் வந்து அந்தப் போரை நிறுத்தியதையும் மணி மேகலைக் காப்பியமும் கூறுகிறது.[22]

நாக அரசர் போர் செய்யக் கூடியிருந்தபோது இலங்கையில் கலியாணி நாட்டையாண்ட மணியக்கன் என்னும் நாகராசனும் போர்க்களத்துக்கு வந்திருந்தான். அவன் யாழ்ப்பாணத்தை ஆண்ட நாக அரசனான மகோதரனுடைய தாய்மாமனாவான். அவன் புத்தருடைய உபதேசத்தைக் கேட்டு மகிழ்ந்தான். அவன் கலியாணி நாட்டுக்கு அரசன். கலியாணி நாடு என்பது இலங்கையின் மேற்குக் கரைப்பக்கம் இருந்தது. (இப்போதைய கொழும்புப் பக்கத்தில் கெலனியோயா என்னும் கெலனியாறு பாய்கிற பிரதேசந்தான் பழைய கலியாணி நாடு.) கலியாணி நாட்டில் நாகர் என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களை ஆண்ட மணியக்கன் புத்தரைத் தன்னுடைய நாட்டுக்கு வருமாறு அழைக்க, புத்தர் தம்முடைய சீடர்களோடு அங்குச் சென்றார். மணியக்கன் மணியாசனத்தில் புத்தரை அமர்த்தி அவருக்கும் அவருடைய சீடர்களுக்கும் உணவு கொடுத்தான். உணவு கொண்ட பிறகு புத்தர் மணியாசனத்தில் அமர்ந்து தருமோபதேசம் செய்தார் என்று மகாவம்சம் கூறுகிறது.[23]

இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், இலங்கையிலே பழங்காலத்தில் நாகர் என்னும் இனத்தவர்

21 மகாவம்சம், 1 : 44-62
22 மணிமே. 9 : 58-63, 10 : 58-71
23 மகாவம்சம், 1 : 71-77

வாழ்ந்திருந்தனர் என்பதும், அவர்கள் இலங்கையின் வடபகுதியிலிருந்த நாகநாட்டிலும் (இப்போதையயாழ்ப்பாணம்). இலங்கையின் நடுப்பகுதியான மலையநாட்டிலும், இலங்கையின் மேற்குப் பகுதியான கலியாணி நாட்டிலும் வாழ்ந்திருந்தனர் என்பதும் தெரிகின்றன.

சங்ககாலத் தமிழகத்திலேயும் இயக்கர், நாகர் என்னும் இனத்தவர் வாழ்ந்திருந்தார்கள் என்பதைச் சங்கநூல்களிலிருந்து அறிகின்றோம். தமிழ்நாட்டு இயக்கரும் நாகரும் தமிழரின் ஒரு பிரிவினர். அவர்கள் பிற்காலத்தில் தமிழரோடு கலந்து போனார்கள்.

விசயன் வருகை

இந்தியாவின் மேற்கே இலாட தேசத்திலிருந்து (இப்போதைய குஜராத்து நாட்டிலிருந்து) விசயன் என்னும் அரசகுமரன் தன்னுடைய எழுநூறு தோழர்களோடு இலங்கைக்கு வந்தான். விசயன் வங்காள தேசத்திலிருந்து இலங்கைக்கு வந்ததாகக் கூறுவதும் உண்டு. அவன் வந்ததும், புத்தர் பரிநிருவாணம் அடைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு. ஆனால் இலங்கை நூல்கள், புத்தரை இலங்கையோடு தொடர்புபடுத்துவதற்காக, அவர் பரிநிருவாணம் அடைந்த அதே நாளில் விசயன் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றன. புத்தர்பெருமான் வட இந்தியாவில் குசி நகரத்தில் பரிநிருவாணம் அடைந்த அன்று, சக்கன் (தேவேந்திரன்) அவரிடம் சென்றான். பரிநிருவாணம் அடைகிற நிலையில் இருந்த புத்தர் இந்திரனிடம், 'விசயன் இலாடதேசத்திலிருந்து இலங்கைக்கு வருகிறான்; இலங்கையில் பௌத்த தர்மம் பரவப்போகிறது; ஆகையால், அவனையும் அவனுடைய தோழர்களையும் காப்பாற்றுக' என்று கூறினாராம். அதுகேட்ட இந்திரன், உற்பல வண்ணனை (நீலத்தாமரை வண்ணனை) அதாவது திருமாலை (விஷ்ணுவை) இலங்கையில் பாதுகாப்பாளராக நியமித்தானாம்.[24]

விசயனும் அவனுடைய 700 தோழர்களும் கப்பலில் வந்து இலங்கையில் தம்பபாணி என்னும் இடத்தில் தங்கினார்கள். அவர்கள் தங்கின இடம், இப்போது அநுராதபுரம் உள்ள இடத்தைச் சார்ந்திருந்தது. அது இயக்கர் வாழ்ந்த இடம். இயக்க அரசனுடைய மகளான குவண்ணி என்பவளோடு விசயன்

24 மகாவம்சம், 7 : 1–5

தொடர்புகொண்டு, அவளுடன் வாழ்ந்தான். குவண்ணி, இயக்க நாட்டை விசயன் கைப்பற்றுவதற்கு உதவி செய்தாள். அவளுடைய உதவியினாலே, விசயனும் அவனுடைய தோழர்களும் இயக்க அரசனைக் கொன்று அவனுடைய நாட்டைக் கைப்பற்றினார்கள். அவர்கள் கைப்பற்றிய இயக்கருடைய தலைநகரத்தின் பெயர் 'சிர்சவத்து' என்பது.[25] விசயனுடைய தோழர்கள் ஆங்காங்கே கிராமங்களை அமைத்துக்கொண்டனர். அநுராதன் என்பவன் கடம்ப நதிக்கரையில் (இப்போதைய மல்வட்டெஓயா) அநுராத கிராமத்தையும், உபதிஸ்ஸன் கிராமத்தையும் உண்டாக்கினார்கள். உச்சேனி, உருவேலா, விஜிதம் முதலான ஊர்களையும் அமைத்தார்கள்.[26]

பாண்டிநாட்டுத் தொடர்பு

இயக்க அரசன் மகளான குவண்ணிக்கும் விசயனுக்கும் ஓர் ஆணும் பெண்ணும் பிறந்திருந்தனர். விசயனுடைய தோழர்கள், விசயனுக்கு முடிசூட்டி அவனை அரசனாக்க விரும்பினார்கள். அவர்கள் தங்கள் எண்ணத்தை அவனுக்குக் கூறினபோது, அவன் இயக்க குலத்துக் குவண்ணியை இராணியாக்கி முடிசூட்டிக்கொள்ள விரும்பவில்லை. நல்ல அரச குலத்து மகளை மணந்து அவளை இராணியாக்கி முடிசூட்டிக்கொள்ள விரும்பினான். அவனுடைய தோழர்கள் எண்ணிப்பார்த்து இலங்கைக்கு அக்கரையில் உள்ள பாண்டிநாட்டு அரசனிடம் மகள் கேட்க, முத்து மணிகள் முதலான விலையுயர்ந்த பொருள்களைக் கொடுத்துத் தூதர்களை அனுப்பினார்கள். தூதர்கள் மதுரைக்குச் சென்று பாண்டியன் மகளை விசயனுக்கு மணம் செய்விக்கக் கேட்டார்கள். பாண்டியன் அமைச்சர்களோடு கலந்து ஆய்ந்து தன் மகளை மணஞ் செய்விக்க இசைந்தான். மற்ற எழுநூறு தோழர்களும், பாண்டி நாட்டில் பெருங்குடி மக்கள் வீடுகளிலிருந்து மணப்பெண்களை மணம் பேசி முடித்தனர். மதுரையிலிருந்து பாண்டியன் மகளும் மற்ற மணப் பெண்களும் பரிவாரங்களோடும் யானை, குதிரை, தேர் முதலான வற்றோடும் பதினெட்டு வகையான கைத்தொழில் செய்யும் சாத்தர்களோடும் அவர்களைச் சார்ந்த ஆயிரம் குடும்பங்களோடும் இலங்கைக்குச் சென்றனர். சென்றவர்களை விசயனும் அவனுடைய தோழர்களும் வரவேற்று அவர்கள் தங்குவதற்குரிய இடங்களை அமைத்துக் கொடுத்தார்கள்.

---

25 மகாவம்சம், 7 : 10-42 26 டீ 7 : 43-45

விசயன் குவண்ணியையும் அவளுடைய மக்களையும் துரத்திவிட்டான். தங்கள் அரசனையும் நாட்டையும் காட்டிக் கொடுத்த குவண்ணியை இயக்கர்கள் கொன்றுவிட்டார்கள். பிறகு விசயனும் அவனுடைய தோழர்களும் முறையே பாண்டிய அரச குமாரத்தியையும் பாண்டி நாட்டு மகளிரையும் திருமணஞ்செய்து கொண்டார்கள். தோழர்கள் விசயனுக்கு முடிசூட்டி அவனை அரசனாக்கினார்கள்.[27]

பாண்டியன் மகளைத் திருமணம் செய்துகொண்டு முடிசூடிய விசயன் தன் மாமனாகிய பாண்டியனுக்கு ஆண்டுதோறும் இரண்டு நூறாயிரம் (இரண்டு இலட்சம்) பொன் மதிப்புள்ள முத்துகளைக் காணிக்கையாகச் செலுத்திவந்தான். விசயன் 38 ஆண்டுகள் அரசாண்டான்.[28]

இவ்வாறு கி. மு. 4ஆம் நூற்றாண்டிலே இலங்கையரசனுக்கும் பாண்டிய அரசனுக்கும் அரசியல் தொடர்பும் திருமணத் தொடர்பும் ஏற்பட்டது.

விசயன் இலங்கை முழுவதும் அரசாளவில்லை. விசயன், அநுராதபுரத்தைச் சூழ்ந்துள்ள நாட்டை அரசாண்டான். இலங்கையின் மற்ற இடங்களை இயக்கரும் நாகரும் அரசாண்டார்கள். இலங்கையின் வடபகுதியாகிய நாகநாட்டை (யாழ்ப்பாணப் பிரதேசம்) நாக அரசனும், கலிபாணி நாட்டை இன்னொரு நாக அரசனும், மலைய நாட்டையும் உரோகண நாட்டையும் வேறு வேறு அரசர்களும் அரசாண்டார்கள். மகாவலி கங்கை என்னும் ஆற்றின் வடகரைக்கும் நாகநாட்டின் தென் எல்லைக்கும் இடையில் இருந்த சிங்கள நாட்டை விசயன் அரசாண்டான். விசயன் கி. மு. 483 முதல் 445 வரையில் 38 ஆண்டுகள் அரசாண்டான் என்பர். அவனுக்கு மக்கட்பேறு இல்லை. பாண்டி நாட்டிலிருந்து மணமகளிரோடு இலங்கைக்குச் சென்ற 18 வகையான தொழிலாளிகள் இலங்கையின் தலை நகரத்தை அமைத்தார்கள் என்று தோன்றுகிறது.

விசயன் இறந்த பிறகு, ஓராண்டு வரையில் சிங்கள இராச்சியத்தை அவனுடைய அமைச்சர்கள் அரசாண்டார்கள். அப்போது நாட்டுக் குடிமக்களான இயக்கர், அரசியல் காரணமாகக் கலகஞ்செய்தனர் என்று தோன்றுகிறது. அதன் பிறகு, பாண்டு வாசுதேவன் என்பவன் இலங்கையை அரசாண்டான்.

---

27 மகாவம்சம், 7 : 45–71 28 ஷை 7 : 72-74

அவன் விசயனுடைய தம்பியாகிய இலாடதேசத்தை அரசாண்ட சுமித்தனுடைய இளையமகன் என்று மகாவம்சம் கூறுகிறது. ஆனால், இவன் பாண்டிநாட்டுப் பாண்டிய அரசகுலத்தவனாக இருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். தீபவம்சம் இவனைப் பாண்டுவாசன் என்றுதான் கூறுகிறது.[29]

ஆனால், அதற்குப் பின் எழுதப்பட்ட மகாவம்சம் பாண்டுவாசனைப் பாண்டுவாசுதேவன் என்று மாற்றிக் கூறுகிறது.[30] பாண்டுவாசன் என்பதன் பொருள் 'வெள்ளாடை அணிந்தவன்' என்றும் 'பாண்டி நாட்டில் இருந்து வந்தவன்' என்றும், ஆகும். வெள்ளாடை அணிந்தவன் என்பதைவிடப் பாண்டிய நாட்டிலிருந்து வந்தவன்; அதாவது, பாண்டி நாட்டவன் என்று கூறுவதே பொருத்தமாகும்.[31] ஆனால் மகாவம்சம், புத்தர் இலங்கைக்கு வந்தார் என்று கூறி அவரை இலங்கையோடு தொடர்புபடுத்தியது போலவே, பாண்டுவாசனைப் பாண்டுவாசுதேவனாக்கி அவனையும் அவன் மணந்த பத்தகச்சானை என்பவளையும் வடஇந்தியாவில் வாழ்ந்த, புத்தருடைய குலத்தைச் சேர்ந்த சாக்கிய குலத்தோடு தொடர்புபடுத்துகிறது. பாண்டுவாசன் பாண்டி நாட்டிலிருந்து சென்ற பாண்டிய அரச மரபினனாகத் தோன்றுகிறான். இவன் கி. மு. 444 முதல் 414 வரையில் 30 ஆண்டுகள் அரசாண்டான்.

சிங்களவர் ஆட்சி

பாண்டுவாசனுக்குப் பத்து ஆண் மக்களும் ஒரு மகளும் பிறந்தனர். மூத்தமகனுக்கு அபயன் என்றும், கடைசிமகளுக்கு சித்தா என்றும் பெயர். சித்தாவின் மகன் தன்னுடைய அம்மான்களைக் (பாண்டுவாசனுடைய மக்கள் பதின்மரைக்) கொன்றுபோட்டு அரசாள்வான் என்று நிமித்திகர்கள் கூறினார்கள். ஆகவே, அந்த அம்மான்கள் தங்கள் தங்கைக்கு மகன் பிறந்தால் அவனைக் கொன்றுவிடுவதற்கு வழிசெய்திருந்தார்கள். சித்தாவுக்கும் தீககாமணி என்பவனுக்கும் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அந்த ஆண்குழந்தையை அம்மான்களிடம் அகப்படாதபடி ஒளித்து வைத்து வளர்த்தார்கள். அவனுக்குப் பெயர் பாண்டுகாபயன் என்பது.

---

29 தீபவம்சம், 10 : 2

30 மகாவம்சம், 8 : 10

31 *On the Chronicles of Cylon*, Bimala Churn Lake, pp. 50–52

பாண்டுவாசன் இறந்தபிறகு அவனுடைய மூத்தமகனான அபயனுக்கு முடிசூட்டினார்கள். அவனுடைய தம்பிமார் ஒன்பது பேரும், தங்கள் தங்கையின் மகனைக் கொல்ல அவனைத் தேடிக் கொண்டிருந்தார்கள். பாண்டுகாபயன் அவர்கள் கையில் அகப்படாமல் மகாவலி கங்கையாற்றின் தென்கரையில் மறைந்து வாழ்ந்திருந்தான். அவன் பதினாறுவயதடைந்தபோது தனக்குச் சேனையைச் சேர்த்துக்கொண்டான். அவன் சேதியா என்னும் பெயருள்ள இயக்கியின் உதவியினால் தன்னுடைய அம்மான்களைப் போரில் கொன்றான். கடைசியில் தன்னுடைய மூத்த அம்மானாகிய அபயனையும் வென்று சிங்கள இராச்சியத்தைக் கைப்பற்றினான்.

பாண்டுகாபயன், பழைய தலைநகரான உபதிஸ்ஸ கிராமத்தை விட்டு, அநுராதபுரத்தைத் தலைநகரமாக்கினான். இவன் அநுராதபுரத்தின் காவல்தெய்வங்களாக இயக்கரை அமைத்தான். நகரத்தின் கிழக்குப் பக்கத்தில் காளவேள என்னும் இயக்கரை நியமித்தான். அபயவாவி என்னும் ஏரியின் (இப்போதைய பசவக்குளம்) கரைமேல் சித்தராசன் என்னும் இயக்கத் தெய்வத்தை அமைத்தான். அநுராதபுரத்தின் தெற்கு வாயிலில் இயக்கிக்கு ஒரு கோயில் கட்டினான். அரண்மனையை அடுத்து, போரில் தனக்கு உதவி செய்த சேதியா என்னும் இயக்கிக்குக் கோயில் அமைத்தான். இந்த இயக்கத் தெய்வங்களுக்கும் வேறு இயக்கத் தெய்வங்களுக்கும் இவன் பூசைகளையும் விழாக்களையும் நடத்தினான். நாட்டில் குடிமக்களாக இருந்த இயக்கர்களை மகிழ்விப்பதற்காக இத் தெய்வங்களைக் கொண்டாடினான் என்று தெரிகிறது.

திருவிழாக்காலங்களில் இவன் சித்தராசன் என்னும் இயக்கத் தெய்வத்தின் அருகில் அமர்ந்து விழாவைக் கொண்டாடினான்.[32] பாண்டுகாபயன் அநுராதபுரத்தில் முடிசூடி எழுபது ஆண்டு (கி. மு. 377—307) அரசாண்டான். சித்தராசன் என்னும் இயக்கத் தெய்வங்களைக் கண்கண்ட தெய்வங்களாகக் கொண்டும், இயக்க பூதங்களை நண்பர்களாகக் கொண்டும் அரசாண்டான்.[33]

விசயன் இலங்கையில் சிங்களராச்சியத்தை அமைத்தபோது, அவன் இயக்கருடைய இராச்சியத்தை இயக்கியாகிய குவண்ணியின் உதவியினால் கைப்பற்றினான். அதனால், இயக்கர் அவனுக்குப் பகைவராக இருந்தனர். அவர்கள் தங்களையும் தங்கள்

---

32 மகாவம்சம், 10 : 84-88 33 ஷ 10 : 103-105

அரசனையும் காட்டிக்கொடுத்த குவண்ணியைக் கொன்றுவிட்டார்கள். ஆனால், பாண்டுகாபயன் இயக்கருடைய உதவி கொண்டு தன்னுடைய அபிமான்களை வென்று சிங்கள இராச்சியத்தை அமைத்தான். இவன் இயக்கரைப் போற்றி அவர்களுக்கு உயர்ந்த இடங்கொடுத்து, இயக்கத் தெய்வங்களுக்குக் கோயில் கட்டித் திருவிழா செய்து வழிபட்டான். இவனுக்குக் குடிமக்களான இயக்கர் ஆதரவு இருந்தது.

உரோகண நாட்டில் பாண்டியர் ஆட்சி

பாண்டுகாபயன் காலத்திலோ. இவன் காலத்துக்கு முன்போ, இலங்கையின் தென்கிழக்குப் பக்கத்தில் உள்ள உரோகண நாட்டில், பாண்டிய அரசர் குலத்தைச் சேர்ந்தவர் வந்து அந்நாட்டையும் அதற்கு வடக்கேயுள்ள கிழக்கு இலங்கையையும் கைப்பற்றி அரசாண்டனர். அவர்களைப்பற்றிய வரலாற்றைத் தீபவம்சமும் மகாவம்சமும் பேசவில்லை. அந்தப் பாண்டிய குலத்து அரசர்கள் உரோகண நாட்டிலே நிலைகொண்டு அப்பகுதிகளை அரசாண்டு கொண்டிருந்தார்கள். அவர்களுடைய வழியினர் பிற்காலத்தில் எழுதிவைத்த பிராமி எழுத்துச் சாசனங்களிலிருந்து அவர்களைப்பற்றி ஒருவாறு அறிகிறோம்.

பாண்டுகாபயன் அநுராதபுரத்தில் கி. மு. 307-ல் காலமான பிறகு, அவனுடைய மகனான முட்டசிவன் அநுராதபுரத்தில் சிம்மாசனம் ஏறிச் சிங்கள இராச்சியத்தை அரசாண்டான். சிவன் என்று பெயர் பெற்றிருந்தமையால் இவன் சைவ சமயத்தவன் என்று கூறலாம். இவன் சிங்கள இராச்சியத்தை அறுபது ஆண்டுகள் (கி. மு. 307—247) அரசாண்டான். இவன் ஆட்சிக் காலத்திலும் இலங்கையைச் சேர்ந்த உரோகண நாட்டில் பாண்டிய குலத்தார் அரசாண்டு கொண்டிருந்தார்கள். உரோகண நாட்டில் மாகாமம் (மகாகிராமம்) என்னும் ஊரைத் தலைநகராக்கிக்கொண்டு அவர்கள் அரசாண்டார்கள். முட்டசிவனுக்குப் பிறகு இவனுடைய இரண்டாவது மகனான திஸ்ஸன் அரசாண்டான். திஸ்ஸனைத் தேவனாம்பிய திஸ்ஸன் (தேவனாம்பிரிய திஸ்ஸன்) என்று கூறுவர். தேவனாம்பிரிய திஸ்ஸன் கி. மு. 247 முதல் 207 வரையில் அரசாண்டான்.

பாரத தேசத்தை அரசாண்ட அசோகச் சக்கரவர்த்தியும் திஸ்ஸனும் சமகாலத்தில் இருந்த அரசர்கள். அசோகச் சக்கரவர்த்தி, 'தேவனாம்பிரியின்' என்னும் சிறப்புப்பெயர் பெற்றிருந்தது போலவே, இலங்கையையாண்ட திஸ்ஸனும்

'தேவனாம்பிரியன்' என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்தான். திஸ்ஸன், தூதரை அசோகச் சக்கரவர்த்திபிடம் அனுப்பி, பகவான் புத்தர் போதிஞானம் பெற்ற போதிமரத்தின் கிளையை இலங்கைக்கு அனுப்பும்படியும், பௌத்த மதத்தை இலங்கையில் பரவச் செய்வதற்காகச் சங்கமித்திரை முதலான பௌத்தப் பிக்குகளை அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டான். அவ்வாறே அசோகச் சக்கரவர்த்தி போதிமரக் கிளையையும், பிக்குணிகளையும் இலங்கைக்கு அனுப்பிவைத்தார்.[34] இதற்கு முன்பே அசோகச் சக்கரவர்த்தி மகிந்தன் (மகேந்திரன்) என்னும் பிக்குவை இலங்கைக்கு அனுப்பி பௌத்தமதப் பிரசாரம் செய்வித்திருந்தார்.[35] திஸ்ஸ அரசன் புத்தகயாவிலிருந்து வந்த போதிமரக் கிளையை அநுராதபுரத்தில் நட்டபோது அந்த விழாவிற்கு இலங்கையில் இருந்து அரசர்களும் பெருமக்களும் வந்திருந்தார்கள். அவர்களில் கஜரகாமத்திலிருந்து (கதிர்காமத்திலிருந்து—அதாவது உரோகண நாட்டிலிருந்து) அதன் பெருமக்களும் வந்திருந்தனர்.[36] மகாவம்சம், கதிர்காமப் பெருமக்கள் என்று கூறுகிறதே தவிர அவர்களின் பெயரைக் கூறாமலே மறைத்துவிட்டது. கதிர்காமத்துப் பெருமக்களில் உரோகணநாட்டுப் பாண்டிய குல அரசனும் முக்கிய மானவன் என்பதில் ஐயமில்லை. மகாவம்சம் உரோகணநாட்டுப் பாண்டிய குல அரசர்களைக் கூறாமல் விட்டபோதிலும், வேறு இடத்திலிருந்து இந்தப் பாண்டியரின் செய்திகள் கிடைக்கின்றன.

உரோகண நாட்டில் அரசாண்டிருந்த பாண்டியகுலத்து அரசரை, தேவனாம்பிரிய திஸ்ஸனுடைய தம்பி மகாநாகன் கொன்று அந்த இராச்சியத்தைக் கைப்பற்றினான். மகாநாகனுக்கு உபராச மகாநாகன் என்னும் பெயரும் உண்டு. இவன் எப்படி உரோகண நாட்டுப் பாண்டியப் பரம்பரையை அழித்தான் என்பதைக் கூறுவதற்கு முன்பு, அந்தப் பாண்டிய குலத்தரசரைப் பற்றிக் கூறுவோம்.

இலங்கைத் தீவின் தென்கிழக்கில் உரோகணநாடு இருக்கிறது. அதன் பழைய தலைநகரம் மாகாமம் (மகாகிராமம்) என்பது. அதன் துறைமுகப்பட்டினம் சம்பந்திட்டை. இக் காலத்தில் அது ஹம்பந்தோட்டம் என்று கூறப்படுகிறது. சம்பந்திட்டை பழங்காலத்தில் பேர்பெற்ற துறைமுகப்பட்டினமாக இருந்தது. உரோகண நாட்டின் மற்றொரு தலைநகரம் கதிர்காமம். கதிர்காமத்தைச் சிங்கள நூல்கள் கதரகாமம் என்றும், கஜரகாமம் என்றும் கூறுகின்றன. கதிர்காமம், முருகன் கோயிலுக்குப் பேர்பெற்றது. மாணிக்க கங்கை என்னும் ஆற்றின்

34 மகாவம்சம். 18, 19 : 1-52 36 ஷெ 19 : 53-55
35 ஷெ 8

அருகில் கதிர்க்காமக் கோயில் இருக்கிறது. அந்தப் பழங் காலத்தில், கதிர்காமக் கோயில் ஒரு குன்றின்மேல் இருந்தது. தமிழர் முருகனைக் குன்றின்மேல்வைத்து வணங்குவது வழக்கம். உரோகண நாட்டை யரசாண்ட பாண்டிய குலத்தவர் கதிர்காம முருகனைப் பழைய வழக்கப்படி குன்றின்மேல் கோயில் கட்டி வணங்கினார்கள். (பிற்காலத்தில் சிங்களவர், குன்றின்மேல் இருந்த முருகனைக் கீழே கொண்டுவந்து இப்போதுள்ள கோயிலில் வைத்தனர்.) உரோகண நாட்டில் அக்காலத்தி லிருந்த இன்னொரு கோயில் அட்டாலயம் என்பது. அதுவும் முருகன் கோயில் என்று தோன்றுகிறது. அசோகச் சக்கரவர்த்தி அனுப்பிய போதிமரத்துக் கிளையை அநுராதபுரத்தில் திஸ்ஸ அரசன் நட்டுச் சிறப்புச் செய்தபோது, அவ் விழாவுக்கு வந்திருந்த பெருமக்களில் கதிர்காமத்துப் பெருமக்களும் வந்திருந்தனர் என்று மகாவம்சம் கூறுகிறது.[37] பெருமக்கள் என்று பன்மையில் கூறுகிறபடியால் உரோகண நாட்டை அரசாண்டவர் பாண்டிய சகோதரர்கள் என்று தெரிகிறது. உரோகண நாட்டரசர்கள் காமணி என்று பெயர் பெற்றிருந்தனர். அவர்கள் உரோகண நாட்டையும் அதற்கு வடக்கே கடற்கரையோரமாக இருந்த கிழக்கு இலங்கையையும் அரசாண்டார்கள் என்பதை அவர்கள் அங்கு எழுதியுள்ள பாறைக்கல் சாசன எழுத்துகளிலிருந்து அறிகிறோம் என்பதை முன்னமே கூறினோம். இலங்கையில் அம்பரை மாவட்டத்தில் ஹெனன்னெகல என்னும் இடத்திலுள்ள மலைக்குகையில் எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துச் சாசனம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இந்தக் கல்வெட்டு வாசகத்தின் இறுதியில் மீன் உருவம் பொறிக்கப்பட் டிருக்கிறது. மீன் அடையாளம் பாண்டியருக்குரியது என்பதை அறிவோம். இந்தச் சாசனம் எழுதிய அரசர் பாண்டியர் மரபைச் சேர்ந்தவர் என்பதற்கு இது முக்கியமான சான்றாகும்.[38] மேலும்,

---

37 மகாவம்சம், 19 : 54

38 பழங்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த தமிழர்கள் இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு நாடுகளில் தங்கி அரசாண்டனர். அவர்கள் மீன் இலச்சினை யைத் தங்களுக்கு அடையாளச் சின்னமாகக் கொண்டிருந்தார்கள். போவட்டகல கதரகாமத்துக்கு அருகிலுள்ள கொட்டதாமு கல, பட்டிக் குகாலவ மாவட்டத்தில் உள்ள ஹெனன்னெகல, வடமத்திய மாகாணத்தில் கிழக்குத் தமன் கடுவலில் உள்ள கண்டேகமகண்ட ஆகிய இடங்களில் காணப் படுகிற கல்வெட்டெழுத்துகளுடன் காணப்படுகிற மீன் உருவங்கள், அந்தப் பழைய அரசர்கள் ஆதிகாலத்தில் அநுராதபுரத்துச் சிங்கள அரசருக்குக் கட்டுப் படாமல் சுதந்தரமாக இருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கின்றன. அவர்கள் இந்தப் பகுதிகளில் ஆதிகாலத்தில் வந்து குடியேறியவர்களின் சந்ததியாரின் வழிவந்தவர் என்று தெரிகின்றது. (Mendis, Dr. G. C., *A Comprehensive History of India*, Vol. II, p. 575, Edited by K. A. Nilakanta Sastri, 1957. The Titles of Sinhalese Kings as recorded in the Inscriptions of 3rd Century B. C. to 3rd Century A.D. by C.W. Nicholes, University of Ceylon Review, Vol. VII

இந்தச் சாசனத்தில் மஜிமகாராசன் என்னும் பெயர் கூறப்படு கிறது. அதாவது, மச்ச (மீன்) மகாராசன் என்று கூறப்படுகிறான். பழைய சிங்கள மொழியில் மஜி என்றால் மச்சம் (மீன்) என்பது பொருள். ஆகவே, மஜிமகாராசன் என்றால் மீன் அடை யாளத்தையுடைய மகாராஜன் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும், இந்தச் சாசனத்தின் இறுதியிலுள்ள மீன் உருவம், இவனுடைய அடையாளம் மீன் (கயல்) என்பதை ஐயமில்லாமல் தெரிவிக்கிறது. ஆகவே, இந்த அரசர் பரம்பரை மீன் அடையா ளத்தையுடைய பாண்டியப் பரம்பரை என்பது தெரிகிறது. மச்ச மகாராசனும் அவனுடைய மகனான காமணி நிஸ்ஸனும் சேர்ந்து பௌத்தப் பிக்குகளுக்குச் சில கிராமங்களையும் அவற்றைச் சேர்ந்த பொருள்களையும் தானஞ் செய்ததை இந்தக் கல்வெட்டு எழுத்துக் கூறுகிறது. இந்த அரசர்கள் பௌத்த பிக்குச் சங்கத்துக்கு ஏழு கிராமங்களைத் தானஞ்செய்ததையும், அந்த ஏழு கிராமங்களின் பெயர்களையும் இச் சாசனம் கூறுகிறது. இவ்வரசர்கள் எழுதியுள்ள 16 பிராமி எழுத்துச் சாசனங்கள் வெவ்வேறு இடங்களில் காணப்படுகின்றன. அந்தச் சாசனங் களின் இறுதியில் இவர்களுடைய மீன் அடையாளம் பொறிக் கப்பட்டுள்ளது. மீன் அடையாளம் அந்த அரசர் பாண்டிய மரபைச் சேர்ந்தவர் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றது. இந்தப் பிராமி எழுத்துச் சாசனங்களையும் அதன் வாசகங்களையும் அச் சாசனங்களின் இறுதியில் பொறிக்கப்பட்டுள்ள மீன் உருவங்களையும் பரணவதானே அவர் கள் தொகுத்துப் பதிப்பித்துள்ள இலங்கைச் சாசனங்கள் முதலாம் தொகுதியில் காணலாம்.[39]

உரோகண நாட்டை அரசாண்ட காமணி அபயன் என்னும் (மீனன், பாண்டிய பரம்பரையரசன்) அரசனுக்குப் பத்து மக்கள் இருந்தனர். அவர்களுக்குத் தசபாதிகர் என்று பெயர் இருந்ததை முன்னமே கூறினோம் (தசபாதிகர்—பத்துச் சகோதரர்). அந்தப் பத்துச் சகோதரர்களில் மூத்தவன் பெயர் தர்மராசன் என்றும், அவனுடைய மகன் பெயர் மகாதிஸ்ஸ ஐயன் என்றும் போவட்டெகல பிராமி எழுத்துச் சாசனம் கூறுகிறது. 'காமணி அரசனுடைய குமாரர்களான தசபாதிகர்களில் மூத்தவன் பெயர் தர்மராசன். அவனுடைய மகனான மகாதிஸ்ஸன், மகாசுதர்சனம் என்னும் பெயருள்ள இந்த மலைக் குகையைப் பௌத்த சங்கத் துக்குத் தானங்கொடுத்தான்' என்று இந்தக் குகைச் சாசனங்

39 Inscriptions of Ceylon, Vol. I, Edited by Paranavathana, 1970, Nos. 406, 549 to 558, 561 to 569

கூறுகிறது.[40] இந்த மலைக்குகையில் உள்ள இன்னொரு சாசனம், 'காமணி அரசனுடைய மகன் உதிராசன். உதிராசனுடைய மகன் அபயன். அபயனுடைய மகள் அநுராதி என்பவள், இந்தக் குகையைப் பிக்குகளுக்குத் தானஞ் செய்தாள்' என்று கூறுகிறது.[41] உரோகண நாட்டையாண்ட பாண்டிய மரபைச் சேர்ந்த காமணி அரசனுடைய பரம்பரையைப்பற்றிக் கொட்டதாமூஹெல குகையில் உள்ள பிராமி எழுத்துச் சாசனங்களும் கூறுகின்றன. 'தர்மராசனின் மகனான மகாதிஸ்ஸ ஐயனுடைய மகளும், அபயராசனுடைய மகனின் மனைவியுமான சவெர, புத்தசங்கத்துக்கு இந்தக் குகையைத் தானங் கொடுத்தாள்' என்று ஒரு சாசனம் கூறுகிறது.[42] 'தர்மராசனுடைய மகனான மகாதிஸ்ஸ ஐயனுடைய மகளும், அபய அரசனுடைய மகனான திஸ்ஸனுடைய மனைவியுமான சவர இந்தக் குகையைப் பௌத்த சங்கத்துக்குத் தானங்கொடுத்தாள்' என்று இன்னொரு பிராமி எழுத்துச் சாசனம் கூறுகிறது.[43] இவற்றிலிருந்து உரோகண நாட்டையரசாண்ட பாண்டிய குல அரசர் கால்வழியை இவ்வாறு அறிகிறோம்.

மஜிமகாராசன் (மச்சமகாராசன்)

காமணி அபயன்

(தேவனாம்பிய திஸ்ஸனுக்கும் அசோகச் சக்கரவர்த்திக்கும் சமகாலத்தில் இருந்தவன். அநுராதபுரத்தில் போதிமரத்தைத் திஸ்ஸன் நட்டு விழாக் கொண்டாடியபோது, அவ் விழாவுக்குச் சென்றிருந்தான். தேவனாம்பிய திஸ்ஸனுடைய தம்பி மகாநாதன், உயிருக்கு அஞ்சி இவனிடம் அடைக்கலம் அடைந்தபோது, அவனுக்குப் புகலிடங்கொடுத்து ஆதரித்தான்.)

தர்மராசன்	உதிராசன்	மற்றும் எட்டு மக்கள் (தசபாதிகர்)
மகாதிஸ்ஸன்	அநுராதி (மகள்)	

சவெர (மகள்)	(மகள்)

(பௌத்த சங்கத்துக்கு 14 குகைகளைத் தானங் கொடுத்தாள். கொட்ட தாமூஹெல சாசனங்கள்.)[44]

40 Ibid, Vol. I, p. 42, No. 549
41 Ibid, Vol. I, p. 42, No. 550
42 Ibid, Vol. I, p. 43, No. 556
43 Ibid, Vol. I, p. 43, No. 557
44 Ibid, Vol. I, Nos. 556 to 569

மகாநாகன் அடைக்கலம் புகுந்தது

உரோகணநாட்டை அரசாண்ட பாண்டிய மரபு மச்சராசர் பரம்பரையைக் கூறினோம். இனி, தேவனாம்பிய திஸ்ஸனுடைய தம்பி மகாநாகன், உரோகண நாட்டுக்குப் போய்க் காமணி திஸ்ஸனிடம் அடைக்கலம் அடைந்ததையும், புகலிடம் பெற்றுக் காமணி திஸ்ஸனுடைய மக்கள் தசபாதிகரைக் (பத்துச் சகோதரர்களைக்) கொன்று உரோகண இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டதையும் விளக்கிக் கூறுவோம்.

தேவனாம்பிய திஸ்ஸனுடைய தம்பியை மகாநாதன் என்று கூறுவர். அவன் அரச பதவிக்கு வரவேண்டியவனாகையினால் அவனை உபராச மகாநாகன் என்றும் கூறுவர். அவனை அரச பதவிக்கு வராதபடி செய்து தன்னுடைய மகனை (தேவனாம்பிய திஸ்ஸனுடைய மகனை) அரச பதவிக்கு வரச்செய்ய, தேவனாம்பிய திஸ்ஸனுடைய இராணி கருதினாள். ஆகவே, உபராச மகாநாகனைக் கொல்ல அவள் சூழ்ச்சி செய்தாள். மகாநாகனும் இந்த இராணியின் மகனும் தரச்ச என்னும் ஊரில் தங்கி ஏரி ஒன்றை அமைத்துக்கொண்டிருந்தபோது, அநுராதபுரத்திலிருந்து இராணி மாம்பழங்களை மகாநாகனுக்கு அனுப்பினாள். அந்தக் கூடையில் உயர்தரமான நல்ல மாம்பழங்களை வைத்திருந்தாள். அவை நஞ்சு இடப்பட்டவை. அவற்றைத் தின்று மகாநாகன் இறந்துபோவான் என்று இராணி கருதினாள். மாம்பழங்களைக் கண்ட இராணியின் மகன் (தேவனாம்பிய திஸ்ஸனின் மகன்), அந்த மாம்பழத்தை எடுத்துத் தின்றான். அது நஞ்சிடப் பட்டிருந்தபடியால் அவன் இறந்துபோனான். அவன் இறந்து போன காரணத்தையறிந்த மகாநாகன், இராணியால் தன் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்று அறிந்து தன்னுடைய குடும்பத் தோடு இராச்சியத்தைவிட்டு அயல் இராச்சியத்துக்குப் போய்விட எண்ணி, உரோகண நாட்டுக்குச் சென்று அங்கு மச்சராசனின் மகனான காமணி திஸ்ஸனிடம் அடைக்கலம் புகுந்தான். காமணி திஸ்ஸன் அவனுக்குப் புகலிடங் கொடுத்து ஆதரித்தான்.[45]

உரோகண நாட்டுக்குப் போகிறபோது வழியில் அட்டாலயம் என்னும் கோயிலில் மகாநாகனுடைய மனைவி ஒரு மகனைப் பெற்றாள். அந்தப் பிள்ளைக்கு அவன் பிறந்த இடத்தின் பெயரையும் மகாநாகனுடைய தமயனான திஸ்ஸராசனின் பெயரையும் இணைத்து அட்டாலய திஸ்ஸன் என்று பெயரிட்டான்.

---

45 மகாவம்சம், 22 : 2-6

பிறகு அவன் உரோகண நாட்டுக்கு வந்து மகாகாம நகரத்தில் தங்கி உரோகண நாட்டையரசாண்டான் என்று மகாவம்சம் கூறுகிறது.[46] இதனைக் கூறுகிற மகாவம்சம், உரோகண நாட்டில் மகாநாகன் புகல் அடைந்ததையும், அவனுக்கு உரோகண நாட்டரசனான காமணி திஸ்ஸன் அடைக்கலங்கொடுத்து ஆதரித்ததையும், காமணி திஸ்ஸன் இறந்த பிறகு அவனுடைய ஆட்சியை மகாநாகன் கைப்பற்றிக் கொண்ட துரோகச் செயலையும், மகாநாகனுடைய மகன், காமணி திஸ்ஸனுடைய மக்கள் பதின்மரைக் (தசபாதிகர்) கொன்று தானே உரோகண நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதையும் கூறாமல் அடியோடு மறைத்துவிட்டது. ஆனால், மகாவம்சம் மறைத்துவிட்ட வரலாற்றைத் தாதுவம்சம் என்னும் நூல் கூறுகிறது.

மகாநாகனுக்கு அட்டாலய திஸ்ஸன் என்னும் ஒரு மகன் பிறந்தான் என்று கூறினோம். மகாநாகனுக்கு உரோகண நாட்டரசனான காமணி திஸ்ஸன் அபயங்கொடுத்து ஆதரித்து அவனுக்கு ஜாவக நாயகன் என்னும் சிறப்புப் பெயர் அளித்துக் காப்பாற்றினான். பிறகு மகாநாகனுக்கு இன்னொரு மகன் பிறந்தான். அவனுக்குக் கோதாபயன் என்றும், அய்ய அபயன் என்றும், அபயன் என்னும் பெயர் உண்டு. தனக்குப் புகலிடங் கொடுத்துக் காப்பாற்றிய காமணி அபயன் (மச்சராசன்) காலமான பிறகு, மகாநாகன் உரோகண நாட்டு ஆட்சியைத் தானே கவர்ந்துகொண்டான். காமணி அபயனுக்குப் பத்துக் குமாரர்கள் இருந்தார்கள் என்றும், அவர்களுக்குத் தசபாதிகர் (பத்துச் சகோதரர்கள்) என்பது பெயர் என்றும் கூறினோம். காமணி அபயனுக்குப் பிறகு அவர்களே உரோகண நாட்டு ஆட்சிக்கு உரியவர்கள். ஆட்சியை அவர்களிடம் கொடுக்காமல் மகாநாகன் உரோகண நாட்டு ஆட்சியைத் தானே கைப்பற்றிக்கொண்டான். பிறகு மகாநாகனுடைய இளைய மகனான கோதாபயன் (அபயன்) தசபாதிகரைக் கொன்று உரோகண நாட்டைத் தானே கைப்பற்றிக் கொண்டான். கைப்பற்றிக்கொண்ட பிறகு, கோதாபயன் தான் செய்த மகாபாதகத்தைக் கழுவுவதற்காகப் பல பௌத்த விகாரைகளைக் கட்டினான் என்று தாதுவம்சம் என்னும் நூல் கூறுகிறது.[47] உரோகண நாட்டை அரசாண்ட பழைய பாண்டியர் ஆட்சி இவ்வாறு அழிக்கப்பட்டது. இவர்களுடைய கால்வழியைப் பின்னர் விளக்குவோம்.

---

46 மகாவம்சம், 22 : 7-8

47 ஸ்ரீசாகுசந்தர், தாதுவம்சம், பக். 23-24; *Inscriptions of Ceylon*, Vol. I, 1970, p. 1, VI, University of Ceyion, Review Vol. II, p. 239

மகாநாகனும் அவனுடைய மகனும் உரோகண நாட்டைத் தூரோகமாகக் கைப்பற்றி அரசாண்டபோது, இராஜராட்டிரத்தைத் (அநுராதபுரம் இராச்சியத்தை) தேவனாம்பிரிய திஸ்ஸன் அரசாண்டான். அவன் கி.மு. 247 முதல் 207 வரையில் நாற்பது ஆண்டுகள் அரசாண்டான். அவனுக்குப் பிறகு அவனுடைய இரண்டாவது தம்பியான உத்தியன் கி. மு. 207 முதல் 197 வரையில் பத்து ஆண்டுகள் அரசாண்டான். அவனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான மகாசிவன் கி. மு. 197 முதல் 187 வரையில் பத்து ஆண்டுகள் அரசாண்டான். அவனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான சுவண்ணபிண்ட திஸ்ஸன் அரச னானான். அவன் முடிசூடிய பிறகு சூரதிஸ்ஸன் என்று பெயர் பெற்றான். அவன் கி. மு. 187 முதல் 177 வரையில் பத்து ஆண்டுகள் அரசாண்டான். இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் பௌத்தமதம் இலங்கையில் பரவிற்று.

அநுரையில் தமிழர் ஆட்சி

சூரதிஸ்ஸன் அநுராதபுரத்தில் இருந்து இராஜராட்டிரத்தை அரசாண்டு கொண்டிருந்தபோது, கி. மு. 177-ல் இரண்டு தமிழர்கள் சூரதிஸ்ஸனை வென்று அரசாட்சியைக் கைப்பற்றி இருபத்திரண்டு ஆண்டுகள் இலங்கையை அரசாண்டார்கள். இவர்களைப்பற்றிச் சங்க இலக்கியங்கள் ஒன்றுமே கூறவில்லை. ஆனால், இலங்கை நூல்களான தீபவம்சம், மகாவம்சம், தூபவம்சம், பூஜாவளி, இராஜாவளி ஆகிய நூல்கள் இந்தத் தமிழர் இலங்கையை அரசாண்டதைக் கூறுகின்றன. இவர்கள் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் எந்த நாட்டிலிருந்து இலங் கைக்குச் சென்றவர்கள் என்பது தெரியவில்லை.

தமிழராகிய சேனனும் குட்டகனும் கப்பல் வாணிகர் என்றும், இவர்கள் இலங்கையில் குதிரைகளைக் கொண்டுவந்து குதிரை வாணிகஞ் செய்தார்கள் என்றும் (அஸ்ஸநாவிகர் — அஸ்வநாவிகர்), இவர்கள் சூரதிஸ்ஸ அரசனை வென்று இருவரும் இலங்கையை இருபத்திரண்டு ஆண்டுகள் நீதியாகச் செங்கோல் செலுத்தினார்கள் என்றும் கூறப்படுகின்றது.[48] தமிழ் நாட்டில் குதிரைகள் உற்பத்தியாகவில்லை. ஆனால், அரசர்கள் குதிரைப்படை வைத்திருந்தபடியால், அவர்களுக்குக் குதிரைகள் தேவைப்பட்டன. குதிரைகள் அரேபியா, பாரசீகம் முதலான அயல்நாடுகளிலிருந்து தமிழ்நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டன.

48 மகாவம்சம், 21 : 10-11 ; தீபவம்சம், 18 : 47

இறக்குமதியான குதிரைகளைத் தமிழ் வாணிகர் இலங்கைக்குக் கொண்டுபோய் விற்றார்கள். சங்ககாலத்தில் சோழ நாட்டை அரசாண்ட இரண்டாம் கரிகாலனைப் பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத் துறை முகத்தில் வெளிநாடுகளிலிருந்து கப்பல்களில் வந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டதைக் கூறுகிறார்.

'நீரின் வந்த நிமிர்பரிப் புரவி'[49] தொண்டைநாட்டின் துறைமுகப்பட்டினமாகிய எயிற்பட்டினத்திலும் குதிரைகள் கப்பலில் கொண்டுவரப்பட்டு இறக்குமதியாயின என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில், 'வாலுளைப் புரவியொடு வடவளந் தருஉம், நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை'[50] எனக் கூறுகிறார்.

வெளிநாடுகளிலிருந்து கடல்வழியாக வந்து இறக்குமதியான குதிரைகளைத் தமிழக் குதிரை வாணிகர் தமிழ்நாட்டில் விற்றது போக எஞ்சிய குதிரைகளை இலங்கைக்குக் கொண்டுபோய் விற்றார்கள். அவர்கள் மகாவம்சம், தீபவம்சம் போன்ற இலங்கை நூல்களில் 'அஸ்ஸநாவிகர்' (அசுவநாவிகர், அசுவம் - குதிரை, நாவிகர்-நாவாய்க் கப்பல்களை வைத்து வாணிகம் செய்பவர்) என்று கூறப்பட்டனர். இலங்கையரசைக் கைப்பற்றின சேனனும், குட்டகனும் அசுவநாவிகனின் (குதிரை வாணிகனின்) மக்கள் என்று மகாவம்சமும் தீபவம்சமும் கூறுகின்றது.

அந்தக் காலத்தில், வாணிகர் தங்களுக்குப் பாதுகாப்பாக வில்வீரர்களை வைத்திருந்தார்கள். தமிழ்நாட்டு வாணிகர் மட்டு மல்லர், வேற்று நாட்டு வாணிகரும் வீரர்களைத் தங்களுக்குப் பாதுகாப்பாக அக்காலத்தில் வைத்திருந்தார்கள். இலங்கையில் குதிரை வாணிகஞ் செய்த சேனனும் குட்டகனும் வீரர்படையை வைத்திருந்தபடியால் அவர்கள் இலங்கை அரசனான சூரதிஸ்ஸனைப் போரில் வென்று அரசாட்சியைக் கைப்பற்றினார்கள்.[51]

---

49 பட்டினப். 185

50 பெரும்பாண். 320-321

51 சங்க காலத்தில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டு வாணிகர் இலங்கையில் சென்று வாணிகஞ் செய்தது போலவே, அக்காலத்துத் தமிழர் வடக்கே கலிங்க நாட்டுக்குச் சென்று வாணிகஞ் செய்தனர். கலிங்க நகரத்தில் கி.மு. 278ஐ யடுத்த ஆண்டுகளில் அவர்கள் அந்நகரத்தில் தங்கிப் பெரிய வாணிகஞ் செய்தார்கள். அவர்கள் நூற்றிருபது ஆண்டுகளாக அந்தக் கலிங்க நகரத்திலே வாணிகஞ் செய்து செல்வாக்குள்ளவர் ஆனார்கள். அவர்களிடத்தில சேனை இருந்தபடியால கலிங்கநாட்டு ஆட்சியையே கைப்பற்றிக் கொள்ளும் அளவு பலம் பெற்றிருந்தார்கள். தமிழ் வாணிகரினால் நேரிடக் கூடிய ஆபத்தைக் கண்டு அஞ்சிய கலிங்கநாட்டரசன் காரவேலன் என்பவன் கி. மு. 165ஆம் ஆண்டில் (தன்னுடைய 11ஆவது ஆட்சியாண்டில்) தமிழ் வணிகச் சாத்தரை அழித்து ஒடுக்கினான். இந்தச் செய்தியைக் காரவேலன் கலிங்கநாட்டு ஹத்திகும்பா மலைக்குகையில் எழுதிவைத்துள்ள கல்வெட்டுச் சாசனத்தில் கூறுகிறான்.

மகாவம்சம் குட்டகன் என்று கூறுகிற பெயரைத் தீபவம்சம் குட்டபரிந்தன் என்று கூறுகிறது. சேனனும் குட்டகனும் இலங்கையை நீதியாக அரசாண்டார்கள் என்று மகாவம்சம் கூறுவது போலவே தீபவம்சமும் கூறுகிறது.[52] தன்னுடைய ஆட்சிக் காலத்தில் குட்டபரிந்தன் (குட்டகன்) பௌத்தமத விகாரைகளுக்குத் தானஞ் செய்தான். அவன் தானஞ் செய்ததைக் கூறுகிற கல்வெட்டெழுத்துச் சாசனம் அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது இலங்கையின் தலைநகரான அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.[53] சேனகுட்டபரிந்தகர்களைப் பற்றி வேறு ஒன்றும் தெரியவில்லை. இவர்கள் கி.மு. 177 முதல் 155 வரையில் இலங்கையை அரசாண்டார்கள்.

கி. மு. 155-ல் சிங்கள அரசர் பரம்பரையில் வந்த அசேலன் என்பவன் இவர்களை வென்று ஆட்சியைக் கைப்பற்றிப் பத்து ஆண்டுகள் அரசாண்டான்.

ஏலாரன் (ஏலேலசிங்கன்)

இலங்கையில் மீண்டும் தமிழர் ஆட்சி அமைந்தது. உயர் குலத்தைச் சேர்ந்தவனும் சோழநாட்டுத் தமிழனுமான ஏலாரன் என்பவன் அசேலனை வென்று இலங்கையை நாற்பத்துநான்கு ஆண்டுகள் அரசாண்டான் என்று மகாவம்சம் கூறுகிறது. இவன் கி. மு. 145 முதல் 101 வரையில் அரசாண்டான். இவனைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் ஒன்றும் காணப்படவில்லை. ஏலாரனை ஏலேலசிங்கன் என்றும் கூறுவர். ஏலேலசிங்கன், திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரைத் தன்னுடைய குருவாகக் கொண்டிருந்தான் என்று ஒரு செவிவழிச் செய்தி உண்டு.

தமிழனாகிய ஏலாரன் சைவ சமயத்தவனாக இருந்தும், பௌத்த நாடாகிய இலங்கையை மதக் காழ்ப்பு இல்லாமல் நீதியாக அரசாண்டான் என்றும், பகைவர் நண்பர் என்று கருதாமல் எல்லோரையும் சமமாகக் கருதிச் செங்கோல் செலுத்தினான் என்றும் மகாவம்சம் கூறுகிறது; இவனுடைய நேர்மையும் நீதியுமான ஆட்சியைப் பெரிதும் புகழ்ந்து பேசுகிறது. இவ்வரசன் தன்னுடைய படுக்கை அறையில் ஆராய்ச்சிமணி யொன்றைக்

52 'ஸோ திஸ்ஸம் கஹேத்வான தமிளா சேன குட்டகா
துவே த்வாஸ வஸ்ஸானி ரஜ்ஜம் தம்மேன காரயும்' (தீபவம்சம், 18 : 47)
சேனன் குட்டகன் என்னும் தமிழர் சூரதிஸ்ஸனை வென்று இருபத்திரண்டு ஆண்டுகள் நீதியாக இராச்சியத்தை அரசாண்டார்கள் என்பது இதன் பொருள்.

53 Anuradhapura Slab Inscriptions of Kutta Parinda by S. Pranavatana, Epigraphia Zelonica, Vol. IV, pt. III, p. 15

கட்டித் தொங்கவிட்டிருந்தான். அந்த மணியை அடிப்பதற்கு வாய்ப்பாக நீண்ட கயிற்றை அரண்மனை வாயிலில் கட்டி வைத்தான். முறையிடுவோரும் நீதிவேண்டுவோரும் அரண்மனை வாயிலில் உள்ள கயிற்றை இழுத்து மணியடித்தால் அரசன் நேரில் வந்து அவர்களுடைய முறையீடுகளைக் கேட்டு நீதி வழங்குவான்.[54]

ஏலார மன்னனுக்கு ஒரே மகன் இருந்தான். அந்த அரசகுமரன் ஒருநாள் திஸ்ஸவாவி என்னும் ஏரிக்குச் சென்றான். செல்லும் வழியில் ஒரு பசுவின் கன்று துள்ளி ஓடிவந்து அரசகுமரனுடைய தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு மாண்டுபோயிற்று. அதைக் கண்ட தாய்ப்பசு தீராத துயரமடைந்து, அரண்மனைக்கு வந்து கயிற்றை இழுத்து ஆராய்ச்சி மணியை அடித்தது. அரசன் வெளியே வந்து பசுவின் துயரத்தையறிந்து, அதன் கன்று சாவதற்குக் காரணமாக இருந்த தன்னுடைய ஒரே மகனைத் தேர்ச் சக்கரத்தில் மடியும்படி செய்தான்.[55] இது திருவாரூரை அரசாண்ட மனுநீதிச் சோழன் வரலாறு போல இருக்கிறது.

பனைமரத்தின் மேலே கூட்டுக்குள் இருந்த ஒரு குருவிக் குஞ்சை ஒரு பாம்பு பனைமரத்தின்மேல் ஏறி விழுங்கிவிட்டது. அதனைக் கண்ட தாய்க்குருவி அரண்மனைக்கு வந்து ஆராய்ச்சி மணியை அடித்தது. அரசன் வந்து செய்தியறிந்து அந்தப் பாம்பைப் பிடித்துவரச் செய்து அதன் வயிற்றைக் கீறிக் குஞ்சை வெளியில் எடுத்துவிட்டு, பாம்பை அந்த மரத்தில் தூக்கிக் கட்டித் தண்டித்தான் என்று இன்னொரு கதையை மகாவம்சம் கூறுகிறது.[56]

ஏலாரமன்னன், புத்த சங்கத்தாராகிய பௌத்தப் பிக்குகளை உணவுகொள்ள அழைப்பதற்காக அவர்கள் இருந்த சேதிய மலைக்குச் சென்றான். செல்லும் வழியில் ஒரு பௌத்த தூபிக் கட்டடத்தில் அவனுடைய தேரின் அச்சுப்பட்டுச் சில கற்கள் விழுந்தன. அருகிலிருந்த அமைச்சன் கட்டடத்திலிருந்து கற்கள் விழுந்துவிட்டதைத் தெரிவித்தான். அரசன், தேரிலிருந்து இறங்கித் தேர்ச்சக்கரத்தின் அருகே படுத்துக்கொண்டு தன்மேல் தேரைச் செலுத்திக் கொல்லும்படி கூறினான். அமைச்சன், 'எங்கள் புத்தர் பெருமான் ஒருவருக்கும் தீமை செய்வதைச் சம்மதிக்கமாட்டார். சிதைந்துபோன தூபியைப் பழுது தீர்ப்பது

54 மகாவம்சம், 21 : 15
55 ஷை 21 : 15-18
56 ஷை 21 : 19-20

தான் முறை' என்று கூறினான். அரசன், அவ்வாறே பழுது தீர்த்தான். 'விழுந்துபோன பதினைந்து செங்கற்களுக்கு ஈடாகப் பதினைந்தாயிரம் காப்பணம் (அக்காலத்தில் வழங்கிய ஒரு நாணயம் 9·48 கிராம் எடையுள்ளது) செலவு செய்து அந்தத் தூபியைப் பழுதுதீர்த்தான்.[57]

கிழவியொருத்தி வெய்யிலில் உலர வைத்திருந்த அரிசியை மழை பெய்து நனைத்துவிட்டது. அவள், ஆராய்ச்சி மணியை அடித்து முறையிட்டாள். அரசன் பட்டினி நோன்பிருந்து தன் குல தெய்வத்திடம் பகலில் மழை பெய்யாமல் இரவில் மழை பெய்விக்கும்படி இந்திரனிடம் கூறும்படி கேட்டுக்கொண்டான். அவ்வாறே பகலில் மழைபெய்து மக்களுக்கு இடுக்கண் நேராமல் இரவில் மழை பெய்துகொண்டிருந்தது என்று இன்னொரு கதையை மகாவம்சம் கூறுகிறது.[58]

இந்தக் கதைகள் எல்லாம் இவ்வரசன் நீதியாகவும் நேர்மையாகவும் குடிமக்களின் நன்மையைக் கருதி அரசாண்டான் என்பதற்குச் சான்றாக இருக்கின்றன. இந்தக் கதைகளை இலங்கை வரலாற்றைக் கூறுகிற மகாவம்சம் சொல்லுகிறது.

ஏலார மன்னனுடைய இலங்கை இராச்சியம் கிழக்கு, மேற்கு, வடக்குத் திசைகளில் கடலையும், தெற்குத் திசையில் மாவலி கங்கை என்னும் ஆற்றையும் எல்லையாகக் கொண்டிருந்தது. இந்த ஆறு இலங்கையில் உள்ள ஆறுகளில் பெரியது.

ஏலார மன்னன் தெற்கு எல்லையில் பல கோட்டைகளை அமைத்து ஆங்காங்கே சேனைகளையும், சேனைத் தலைவர்களையும் நிறுத்தியிருந்தான். ஏலாரனுடைய இராச்சியத்தின் தென்கிழக்கில் உரோகண நாடு இருந்தது. ஏலேல அரசன் காலத்தில் உரோகண நாட்டை அரசாண்டவன் காகவன்ன திஸ்ஸன் என்பவன். அவன் உரோகண நாட்டை அரசாண்ட பழைய (பாண்டியர் குலத்தைச் சேர்ந்த) அரசர்களைக் கொன்று அநீதியாக நாட்டைக் கைப்பற்றிக்கொண்ட உபராச மகாநாகனுடைய பேரன். காகவன்ன திஸ்ஸனுக்குத் திஸ்ஸ அபயன் என்னும் பெயர் உண்டு. அவனுடைய மனைவியின் பெயர் விகார மகாதேவி. அவர்களுடைய மூத்த மகன் பெயர் கமுனு என்பது. இந்தக் கமுனு, ஏலேல மன்னன்மேல் போர் செய்து இலங்கை இராச்சியத்தைக் கைப்பற்றும்படி தன் தந்தையான காகவன்ன திஸ்ஸனுக்கு அடிக்கடி கூறினான். அவன் அதற்கு இணங்க

57 மகாவம்சம், 21 : 21-26 58 ஷ 21 : 27-33

வில்லை. நீதியாகவும் நேர்மையாகவும் ஆட்சி செய்துகொண்டிருக்கும் ஏலேல அரசனைக் குடிமக்கள் பக்தியோடு நேசித்தார்கள். மேலும், ஏலேலன் தன்னுடைய இராச்சியத்தில் ஆங்காங்கே பலமான சேனைகளை நிறுத்தியிருந்தான். ஆகையால், அவனை வெல்ல முடியாது என்று காகவன்ன திஸ்ஸன் அவன்மேல் போருக்குப் போக விரும்பவில்லை. ஆகவே, கமுனு தன் தந்தைமேல் சினங்கொண்டு 'என் தந்தை ஆண் மகன் அல்லன், பெண் மகள்' என்று கூறி அவனுக்குக் கைவளைகளையும் பெண்களுக்குரிய ஆடையணிகளையும் அனுப்பினான். அதனால், அவன் துட்டகமுனு (துஷ்ட கமுனு) என்று பெயர் பெற்றான். காகவன்ன திஸ்ஸன் காலஞ்சென்ற பிறகு அவன் மகனான துட்டகமுனு ஏலேல மன்னன்மேல் போர் செய்ய வந்தான்.

உரோகண நாட்டில் சிங்கள அரசர்

இங்குத் துட்டகமுனுவுடைய பரம்பரையைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். தேவனாம்பிய திஸ்ஸனுடைய தம்பி மகாநாகன் தன்னுடைய உயிருக்கு அஞ்சித் தன்னுடைய குடும்பத்தோடு உரோகண நாட்டுக்குச் சென்று அங்கு அரசாண்டிருந்த பாண்டிய குலத்து அரசரனான காமணி அபயனிடம் அடைக்கலம் புகுந்ததையும், காமணி அபயன் அவனுக்குப் புகலிடங்கொடுத்து ஆதரித்ததையும், காமணி அபயன் காலமான பிறகு மகாநாகன் உரோகண நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதையும், மகாநாகனுடைய இளைய மகனான கோதாபயன் உரோகண நாட்டு அரசகுமாரர்கள் (காமணி அபயனுடைய மக்கள்) பதின்மரையும் கொன்று உரோகண நாட்டையே கைப்பற்றிக் கொண்டதையும் முன்னமே அறிந்தோம். பத்து இராச குமாரர்களைக் கொன்று உரோகண நாட்டு ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்ட கோதாபயன், தன்னுடைய மகனான காகவன்ன திஸ்ஸனுக்கு உரோகண நாட்டுப் பாண்டியர் பரம்பரையில் வந்த சவெர என்ப வளைத் திருமணம் செய்துவைத்து உரோகண நாடு தன்னுடைய பரம்பரைக்கே சேரும்படி செய்துகொண்டான். காகவன்ன திஸ்ஸன் கலியாணிநாட்டு (இலங்கையின் மேற்குப் பக்கத்தில் கொழும்புப் பிரதேசத்தைச் சேர்ந்த நாடு) அரசன் மகளான விகாரமகாதேவி என்பவளையும் திருமணஞ் செய்திருந்தான். காகவன்ன திஸ்ஸனுக்கும் விகாரமகாதேவிக்கும் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் மூத்தவன் தான் ஏலேல சிங்கன்மேல் போர் செய்யவந்த துட்டகமுனு. அவனுடைய கால்வழியை அடுத்த பக்கத்தில் தருகிறோம்.



காகவன்ன திஸ்ஸன் இறந்த பிறகு துட்டகமுனு ஏலேல அரசன்மேல் போர் செய்யப் பெருஞ்சேனையைத் திரட்டினான். அவனுடைய தாயான விகார மகாதேவியும் ஏலேல மன்னன்மேல் போர் செய்யும்படி மகனைத் தூண்டி ஊக்கப்படுத்தினாள். என்ன தான் தங்களுக்குச் சேனைப்பலம் இருந்தாலும், குடிமக்கள் ஏலேல அரசனைத் தெய்வம்போலக் கருதியிருந்தபடியால் அவனை நேர்மையாகவும் வீரமாகவும் வெல்ல முடியாது என்று அறிந்து அவர்கள் (விகார மகாதேவியும் துட்டகமுனுவும்) யோசித்துச் சூழ்ச்சியினால் போரில் வெல்லத் திட்டமிட்டார்கள். திட்டமிட்டபடியே துட்டகமுனு பெரிய சேனையோடு மாவலி கங்கையைக் கடந்து ஏலேல மன்னன்மேல் போர் செய்ய வந்தான். தன்னுடைய சேனையோடு ஐந்நூறு பௌத்தப் பிக்குகளின் சேனையையும் அழைத்துக்கொண்டு வந்தான். ஐந்நூறு பௌத்தப் பிக்குகள் போர் செய்வதற்காக அல்லர்; ஐந்தாம்படை வேலை செய்வதற்காக. குடிமக்களிடத்தில் போய் அவர்களுக்கு மத வெறியையூட்டி ஏலேல மன்னனுக்கு எதிராக அவர்களைக் கிளப்பிவிடுவது அவர்கள் வேலையாக இருந்தது. சேனைகளோடு

பிக்குகளை ஐந்தாம்படை வேலை செய்ய அழைத்துக்கொண்டது மல்லாமல், துட்டகமுனு தன்னுடைய தாயாகிய விகாரமகா தேவியையும் போர்க்களத்துக்கு அழைத்து வந்தான்.

போரில் வெல்ல முடியாமல் இருந்த இடங்களில் துட்டகமுனு தன்னுடைய தாயாகிய விகாரமகாதேவியைப் பகைவனின் தளபதிக்குக் காட்டி மயக்கி வெற்றி பெற்றான். தளபதிகள் அவளை மணஞ்செய்து கொள்ளும் ஆசையினால், போரைச் சரியாகச் செய்யாமல் நழுவிவிட்டார்கள். அப்போது துட்டகமுனு எதிரிப்படைகளை வென்று வெற்றிபெற்றான். மஹேல நகரத்துக் கோட்டைமேல் போர் செய்த துட்டகமுனு அந்த நகரத்தைப் போர் செய்து வெல்ல முடியாதென்று கண்டு, அக் கோட்டைத் தலை வனான மகேலன் என்னும் தமிழ்ச் சேனாதிபதிக்கு விகார மகா தேவியைக் காட்டிச் சூதாகப் போரை வென்றான்.[59] அம்பதித்தகக் கோட்டைமேல் போர் செய்தபோது அக் கோட்டையைத் துட்டகமுனு வெல்ல முடியவில்லை. ஆகையால், அக் கோட்டை யிலிருந்த தித்தம்பனுக்கு விகார மகாதேவியைக் காட்டி ஏய்த்துச் சூதாகப் போர் வென்றான்.[60] இவ்வாறு விகார மகாதேவியைக் காட்டியும் பௌத்தப் பிக்குகளின் ஐந்தாம்படைச் செயலினாலும் துட்டகமுனு போர்களை வென்று கடைசியாகக் 'காசப்பட' என்னும் இடத்துக்கு வந்து பாசறை இறங்கினான். காசப்பட என்னும் இடம் தலைநகரமான அநுராதபுரத்துக்குத் தென் கிழக்கே 29 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. ஏலேல மன்னனுடைய சேனாபதியான தீகஜாந்து என்பவன் தன் சேனையை நடத்திக் கொண்டுபோய்த் துட்டகமுனுமேல் போர் செய்தான். இந்த இடத்திலும் துட்டகமுனு சூழ்ச்சி செய்து சூதாகப் போர் செய்தான். துட்டகமுனு தன்னைப்போல் மரத்தினால் ஒரு பிரதிமை செய்து, அந்தப் பிரதிமையைப் போர்க்களத்தில் தன்னுடைய சேனைக்கு நடுவில் நிறுத்தினான். நிறுத்தி அந்தப் பதுமைக்கு அருகில் கொற்றக் குடையைப் பிடிக்கச் செய்தான். அரசர்கள் போர் செய்யும்போதும் போர்க்களத்தில் கொற்றக் குடை பிடிப்பது அக்காலத்து வழக்கம். கொற்றக் குடையின் கீழே தன்னுடைய பதுமையை நிற்கச் செய்தான். அதனைத் துட்டகமுனு என்று கருதித் தீகஜாந்து அங்குச் சென்று அந்த அரசன்மேல் (பதுமையின்மேல்) பாய்ந்து வாளால் வீசினான். வீசின வேகத்தில் பதுமை கீழே விழுந்தபோது தீகஜாந்து அதை வெட்ட ஓங்கினான். அப்போது, துட்டகமுனுவின் வீரனான சூரநிமிலன் என்பவன் அவன்மேல் பாய்ந்து அவனைக் கொன்று

59 மகாவம்சம், 25 : 48-49. 60 ஷெ 25 : 8-9

விட்டான்,[61] சேனாதிபதி இறந்துபோகவே தமிழச்சேனை தோற்றுவிட்டது.

தன்னுடைய சேனாதிபதி போர்க்களத்தில் இறந்த செய்தி யறிந்து ஏலேல மன்னன் தானே போர்க்களத்துக்குச் சென்று போர் செய்தான். தன்னுடைய பட்டத்து யானையாகிய மகா பப்பதம் (மகாபர்வதம்) என்னும் யானைமேல் அமர்ந்து ஏலேல மன்னன் போர் செய்தான். வயது முதிர்ந்த கிழவனாகிய ஏலேல மன்னனுக்கும் இளைஞனான துட்டகமுனுவுக்கும் அநுராத புரத்தின் தெற்கு வாயிலின் அருகில் குயவர் கிராமத்துக்கு அருகே போர் நடந்தது. ஏலேல மன்னன் போரில் இறந்துபோனான். துட்டகமுனு வெற்றியடைந்தான்.[62]

ஏலேல மன்னன் இறந்தது அறிந்து குடிமக்கள் துக்கம் அடைந்தனர். தெய்வம்போல் இருந்த மன்னனை அவர்கள் அன்போடு நேசித்தார்கள். போர்க்களத்தில் வீரப்போர் செய்து இறந்த ஏலேல மன்னனுக்குத் துட்டகமுனு கடைசி மரியாதை செய்தான். அரசனுடைய உடம்பை நகரமக்களின் முன்பு கொளுத்தி எஞ்சியிருந்த எலும்புச் சாம்பலின்மேல் ஏலேல மன்ன னுக்கு நினைவுச்சின்னமாக ஒரு சேதிமக் கட்டடம் கட்டினான். நான்கு வகையான பெரியவர்களுக்கு நினைவுச் சின்னமாகச் சேதிமம் அமைக்கவேண்டும் என்று பௌத்த மத நூல்கள் கூறு கின்றன. புத்தர்கள், பிரத்தியேக புத்தர்கள், அர்ஹந்தர்கள், சக்கரவர்த்திகள் ஆகிய நான்கு வகையான பெரியவர்கள் இறந்து போனால், அவர்களுக்குச் சேதிமங்கள் கட்டவேண்டும் என்று பௌத்த நூல்கள் கூறுகின்றன. அந்த முறைப்படி, துட்டகமுனு ஏலேலச் சக்கரவர்த்திக்கு சேதிமம் கட்டிச் சிறப்புச் செய்தான்.[63]

---

61 மகாவம்சம், 25 : 55-64

62 ஷ 25 : 69-70

63 'பிக்குகளே! தூபிகள் (சேதிமங்கள்) அமைக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர் நால்வர். அந்த நால்வர் யாவர்? ததாதகர் என்று சொல்லப்பட்ட அர்ஹந்த ராகிய நான்கு உண்மைகளைத் தாமாகவே அறிந்தவராகிய புத்தபகவான், பிரத்தியேக புத்தர், புத்தருடைய சீடர்களாகிய அர்ஹந்தர், அரசச் சக்கரவர்த்தி. இந்த நால்வரும் தூபங்கள் அமைக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்கள்' என்று தீகநிகாயம் (மகாபரிநிப்பாண குத்தந்தம் 12ஆம் அதிகாரம்) என்னும் நூல் கூறுகிறது. இதையே அங்குத்தர நிகாயம் (சதுக்கநிபாதம், ஆபத்திவக்கம்) என்னும் நூலும் கூறுகிறது.

இந்தப் பௌத்த சமய மரபின்படி துட்டகமுனு, ஏலேல மன்னனுக்குச் சேதிமம் அமைத்தான்.

அரசர்கள் போர்க்களத்திலே இறந்துபோனால், அவருக்குப் பள்ளிப்படை என்னும் கோயில் அமைப்பது தமிழரின் பழங்கால வழக்கம். ஏலேல மன்னனுக்கு அமைக்கப்பட்டது, தமிழர் முறைப்படி அமைக்கப்பட்ட பள்ளிப்படை அன்று, பௌத்த மதப்படி அமைக்கப்பட்ட சேதிமக் கட்டடம் ஆகும். ஏலேல மன்னனுக்கு அமைக்கப்பட்ட சேதிமத்துக்கு 'ஏலார படிமக்கம்' (ஏலாரப் படிமக்கிருகம்) என்று மகாவம்ச டீகா (டீகா-டீகை, உரை) கூறுகிறது. ஏலேல மன்னனை இலங்கை நூல்கள் ஏலாரன் என்று கூறுகின்றன.

'இன்றும் இந்தச் சேதிமத்தின் அருகிலே இலங்கை அரசர்கள் வரும்போது மரியாதையின் அறிகுறியாக வாத்திய கோஷங்களை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி அமைதியாகவும் வணக்கமாகவும் நடந்து இந்த இடத்தைக் கடந்து போகிறார்கள்' என்று மகாவம்சம் கூறுகிறது.[64]

ஏலேல மன்னனுக்குப் பிறகு மீண்டும் சிங்கள அரசர்கள் இலங்கையை அரசாண்டார்கள். அவர்கள் 58 ஆண்டுகள் அரசாண்டார்கள். துட்டகமுனு (கி.மு. 101—77), ஸத்தாதிஸ்ஸன் (கி.மு. 77—59), தூலத்தனன் (கி.மு. 59), வஞ்சதிஸ்ஸன் (கி.மு. 59—50). கல்லாடநாகன் (கி.மு. 50—43) ஆகியோர் அரசாண்ட பிறகு, வாட்டகாமணி அரசனானான். வாட்டகாமணி காலத்தில் இலங்கையில் மீண்டும் தமிழர் ஆட்சி ஏற்பட்டது.

ஐந்து தமிழர் ஆட்சி

வாட்டகாமணி ஆட்சிக்கு வந்த ஐந்தாம் மாதத்தில் உரோகண நாட்டில் மகாகாமம் என்னும் ஊரில் இருந்த திஸ்ஸன் என்பவன், தனக்கு அரசாளும் ஊழ் இருக்கிறது என்று சோதிடர் சொன்ன வார்த்தையை நம்பிச் சேனையைத் திரட்டிக்கொண்டு வாட்டகாமணிமேல் போருக்கு வந்தான். அதே காலத்தில் ஏழு தமிழச் சேனாதிபதிகள் சேனைகளோடு இலங்கைக்குச் சென்று மகாதிட்டை (மாதோட்டம்) என்னுந் துறைமுகத்தில் இறங்கினார்கள். அவர்கள் கொற்றக்குடையைத் (அரசாட்சியை) தங்களிடம் கொடுக்கும்படி வாட்டகாமணிக்குத் தூதனுப்பினார்கள்.

உரோகண நாட்டிலிருந்து படையெடுத்து வந்த திஸ்ஸனும் ஆட்சியைத் தன்னிடம் கொடுக்கும்படி அரசனுக்கு தூது அனுப்பினான். வாட்டகாமணி, 'தமிழர்களை வென்று அரசாட்சியை எடுத்துக்கொள்' என்று திஸ்ஸனுக்குத் தெரிவித்தான். ஆகவே, திஸ்ஸன் தமிழப் படைமேல் போருக்கு வந்து போர் செய்து தோற்றுப் போனான்.[65]

பிறகு ஏழு தமிழத் தலைவர்களும் வாட்டகாமணியின்மேல் படையெடுத்துச் சென்று அநுராதபுரத்துக்கு வடக்கேயுள்ள கொலம்பாலக் என்னும் ஊரில் வந்து பாசறை இறங்கினார்கள். வாட்டகாமணி தன் சேனையுடன் போர்க்களத்துக்கு வந்து அவர்

64 மகாவம்சம், 25 : 72-74 65 டி. 33 : 37-41

களோடு போர் செய்தான். போரில் தமிழர் வெற்றி பெற்றனர். தோல்வியடைந்த வாட்டகாமணி உரோகண நாட்டுக்கு ஓடிப் போனான்.

போரில் வெற்றிபெற்ற ஏழு தமிழத் தலைவர்களும் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்களுள் ஒருவன் போரில் தோற்று ஓடிப்போன வாட்டகாமணி விட்டுவிட்டுச் சென்ற இளைய இராணியாகிய சோமதேவியை அழைத்துக்கொண்டு தமிழ்நாட்டுக்குப் போய்விட்டான். இன்னொரு சேனாதிபதி, பகவான் புத்தரின் பாத்திரம் என்று புனிதமாகப் போற்றி வைத்துக்கொண்டிருந்த பாத்திரத்தை எடுத்துக் கொண்டு தன் ஊருக்குப் போய்விட்டான். மற்ற ஐந்து சேனாதிபதிகளும் அநுராதபுரத்தில் தங்கி ஒருவருக்குப்பின் ஒருவராக இலங்கையை ஆட்சி செய்தார்கள்.[66]

இந்தத் தமிழத் தலைவர்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் எனக் கருதப்பெறுகிறார்கள். இவர்களுடைய பெயரைப் பாலி மொழியில் மகாவம்சம் இவ்வாறு கூறுகிறது: *புலஹத்தன், பாகியன், பனையமாறன், பிலயமாறன், தாட்டிகன்.* தீபவம்சம் இவர்கள் பெயரை அலவத்தன், பிஹியன், பழையமாறன், பலயன், தாட்டிகன் என்று கூறுகிறது. புலஹத்தன் மூன்று ஆண்டு அரசாண்டான். அவனுக்குச் சேனாதிபதியாக இருந்த பாகியன் அவனைக் கொன்று இரண்டு ஆண்டு அரசாண்டான். பாகியனுடைய சேனாதிபதியான பனையமாறன் பாகியனைக் கொன்று ஏழு ஆண்டு அரசாண்டான். அவனுக்குச் சேனைத் தலைவனாக இருந்தவன் பிலயமாறன். இவன் பனையமாறனைக் கொன்று ஏழு மாதம் அரசாண்டான். பிலயமாறனுடைய சேனாதிபதி தாட்டிகன், பிலயமாறனைக் கொன்றுவிட்டு இரண்டு ஆண்டு அரசாண்டான். இவ்வாறு ஐந்து தமிழரும் பதினான்கு ஆண்டு ஏழு திங்கள்கள் (கி.மு. 44—29) அரசாண்டார்கள்.[67] இந்தத் தமிழர்கள் பாண்டி நாட்டிலிருந்து வந்தவர் என்று கூறினோம். இவர்களில் பிலயமாறன் என்பவன் பழையமாறன் ஆவான். பழையன்மாறன் என்னும் குடிப் பெயருள்ளவர் பாண்டியர்களுக்குச் சேனைத் தலைவராக இருந்தார்கள்.

---

66 மகாவம்சம், 33 : 54-55

67 டி 33 : 56-61 ; தீபவம்சம், 19 : 16, 20 : 15-18

அவர்கள் மதுரைக்கு அருகில் உள்ள மோகூரில் வாழ்ந்து வந்தனர். மோகூர்ப் பழையன்மாறனைச் சேரன் செங்குட்டுவன் போரில் கொன்றான் என்று சங்கச் செய்யுள் கூறுகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனின் சேனாதிபதியாக இருந்தவன் இன்னொரு பழையன் மாறன். கிள்ளிவளவன் என்னும் சோழன், பாண்டியன்மேல் போருக்கு வந்தபோது இந்தப் பழையன்மாறன், அவனைப் போரில் வென்றான் என்று நக்கீரர் கூறுகிறார்.[68] பழையன் மாறன் பரம்பரை, பாண்டியருக்குச் சேனாதிபதிகளாக இருந்ததையறி கிறோம். இலங்கையை அரசாண்ட பழையமாறன் கி.மு. முதல் நூற்றாண்டில் இருந்தபடியால் அவன் இந்தப் பழையன்மாறர் களுக்கு முன்னோன் என்பது தெரிகிறது.

மீண்டும் சிங்களவர் ஆட்சி

முன்பு, இவர்களுக்குப் போரில் தோற்று ஓடிப்போன வாட்ட காமணி அபயன் பதினான்கு ஆண்டுக்குப் பிறகு சேனையைச் சேர்த்துக்கொண்டு படையெடுத்து வந்து தாட்டிகனைப் போரில் கொன்று மீண்டும் அரசனானான். இவன் கி.மு. 29 முதல் 17 வரையில் பன்னிரண்டு யாண்டு அரசாண்டான்.[69] அவனுக்குப் பிறகு அவனுடைய தமயன் மகனான மகாசூளிக மகாதிஸ்ஸன் பதினான்கு ஆண்டு (கி.மு. 17-3) அரசாண்டான். இவன் ஆட்சி செய்த காலத்தில், வாட்டகாமணியின் மகனான மகாநாகன், தான் ஆட்சியைப் பெறுவதற்காகக் கலகஞ் செய்துகொண் டிருந்தான். அதனால், அவன் சோரநாகன் என்று பெயர் பெற்றான். மகாசூளிக மகாதிஸ்ஸன் இறந்த பிறகு மகாநாகன் (சோரநாகன்) முடிசூடிப் பன்னிரண்டு ஆண்டு (கி.மு. 3 முதல் கி.பி. 9 வரையில்) அரசாண்டான். இவன் கலகஞ் செய்து கொண்டிருந்த காலத்தில் தனக்குப் புகலிடம் கொடுக்காமலும் உதவி செய்யாமலும் இருந்த பௌத்தப் பிக்குகளின்மேல் பகை கொண்டு, அரசாட்சிக்கு வந்தபோது அவர்களுடைய விகாரை களை அழித்தான். பதினெட்டுப் பௌத்த விகாரைகளை இவன் அழித்தான். இவனுடைய அரசியான அநுலாதேவி இவனை நஞ்சிட்டுக் கொன்றாள்.[70]

---

68 அகம். 346 : 18 - 24
69 மகாவம்சம், 33 : 95-102
70 ஷை 34 : 11-14

சோரநாகனுக்குப் பிறகு, மகாசூளிக மகாதிஸ்ஸனுடைய மகனான திஸ்ஸன் அரசனாகிக் கி. பி. 9 முதல் 12 வரையில் அரசாண்டான். அநுலாதேவி இவனையும் நஞ்சிட்டுக் கொன்று, தானே அரசாட்சியை ஏற்று நடத்தினாள். இவள் ஒருவருக்குப் பின் ஒருவராகப் பலரை மணந்து அவர்களையெல்லாம் நஞ்சிட்டுக் கொன்றுவிட்டாள். இவள், அநுராதபுரத்தில் பெருந் தச்சனாக இருந்த வட்டுகன் என்னும் தமிழன்மேல் விருப்பங் கொண்டு அவனுக்கு அரசாட்சியைக் கொடுத்தாள். அவன் இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவனைக் கொன்ற பிறகு, அரண்மனையில் பூசைக்காரியங்களைச் செய்து கொண்டிருந்த திலியன் என்னும் தமிழப் பிராமணனுக்கு ஆட்சியைக் கொடுத்தாள். அவன் ஆறு திங்கள் ஆட்சி செய்த பிறகு அவனையும் நஞ்சிட்டுக் கொன்றாள். பிறகு தானே நான்கு ஆண்டு (கி.பி. 12—16) அரசாண்டாள்.

குட்டகண்ண திஸ்ஸன் என்பவன், அநுலாதேவியைக் கொன்று இருபத்திரண்டு ஆண்டு (கி.பி. 16—38) அரசாண்டான். அவனுக்குப் பிறகு அவனுடைய மகனான பாதிகாபயன் முடிசூடி இருபத்தெட்டு ஆண்டு (கி.பி. 38—66) அரசாண்டான். அவனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான மகாதாட்டிக மகாநாகன் முடிசூடிப் பன்னிரண்டு ஆண்டுகள் (கி. பி. 66—78) ஆட்சி செய்தான். இவனுடைய இராணியின் பெயர் தமிளா தேவி (தமிழத்தேவி). இதனால், இவன் தமிழ அரசன் குமாரத்தியைத் திருமணம் செய்திருந்தான் என்று தெரிகிறது. இந்தத் தமிழத்தேவி சேர, சோழ, பாண்டியரில் யாருடைய மகள் என்பது தெரியவில்லை. தமிளாதேவி இளமையும் அழகும் உள்ளவள். அவள் அம்பத்தல என்னுமிடத்தில் இருந்த பௌத்தக் கோயிலுக்குச் சென்றபோது அங்கு அவளைக் கண்ட சித்தன் என்னும் பௌத்தப் பிக்கு அவளுடைய அழகில் ஈடுபட்டு அவளை வியந்தான். சில காலத்துக்குப் பிறகு அவள் இறந்துபோனதை அந்தப் பிக்குவிடஞ் சொன்னபோது அதை அவன் நம்பவில்லை. இந்தச் செய்தியை, 'அங்குத்தர நிகயா' என்னும் பௌத்த மத நூலின் உரையாகிய 'மனோரத பூரணி' என்னும் நூலிலிருந்து அறிகிறோம். மகாதாட்டிக மகாநாகனுக்கும் தமிளாதேவிக்கும் பிறந்த மகன் ஆமண்டகாமணி.

ஆமண்டகாமணி ஒன்பது ஆண்டு எட்டுத் திங்கள்கள் (கி.பி. 78—88) அரசாண்டான். அவனுடைய தம்பியாகிய

கணிராஜானு திஸ்ஸன், அவனைக் கொன்று மூன்று ஆண்டுகள் (கி.பி. 88—91) அரசாண்டான். அவனுக்குப் பிறகு சூளாபயன் ஓராண்டும் (கி.பி. 91—92), அவனுடைய தங்கையான சிவாலி நான்கு திங்களும் (கி.பி. 92) அரசாண்டனர். சீவாலியின் உறவினனான இளநாகன் அவளை அரச பதவியிலிருந்து இறக்கித் தான் ஆட்சியைக் கைப்பற்றி அரசாண்டான்.

இளநாகன் ஆட்சியைக் கைப்பற்றி அரசாண்டபோது அரச ஊழியத்தில் இருந்த இலம்பகன்னர் என்னும் இனத்தாருக்கும் இவனுக்கும் பகை ஏற்பட்டது. இலம்பகன்னர் பாண்டி நாட்டினர் என்பது தெரிகின்றது. அரச ஊழியத்திலிருந்த இலம்பகன்னர் இளநாகனை அரண்மனையில் சிறைப்படுத்தி ஆட்சியைத் தாமே நடத்தினர். சிறைப்பட்ட இளநாகன் சிறையிலிருந்து தப்பி மகாதிட்டைத் துறைமுகத்துக்குச் சென்று, அங்கிருந்து தமிழ் நாட்டுக்குப் போய்விட்டான். அவன் தமிழ்நாட்டில் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்தான். தமிழ்நாட்டில் எந்த இடத்தில் தங்கினான் என்பது தெரியவில்லை. இளநாகன், மூன்று ஆண்டுக்குப் பிறகு தமிழச் சேனையைச் சேர்த்துக்கொண்டு கப்பலில் பிரயாணஞ்செய்து இலங்கையின் தென்கிழக்கிலிருந்த உரோகண நாட்டில் வந்து இறங்கினான். பிறகு அங்கிருந்து அநுராதபுரத்துக்கு வந்து இலம்பகன்னர்மேல் போர்செய்து அவர்களை வென்று ஆட்சியை மீட்டுக்கொண்டான். இளநாகன் ஆறு ஆண்டுகள் (கி.பி. 95—101) அரசாண்டான்.[71] இளநாகனுடைய மகன் சந்தமுக சிவன் (சந்திரமுக சிவன்) என்பவன். இளநாகன், சந்தமுக சிவனுக்குத் தமிழ்நாட்டு அரசன் மகளைத் திருமணஞ் செய்திருந்தான். இந்தத் திருமணம், இளநாகன் தமிழ்நட்டில் தங்கியிருந்த காலத்தில் நடந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

சந்தமுக சிவன் இலங்கையை எட்டு ஆண்டு எட்டுத் திங்கள்கள் (கி. பி. 101—110) அரசாண்டான். இவனுடைய இராணியின் பெயர் தமிளாதேவி (தமிழத்தேவி). சந்தமுக சிவன் மணிகாரகாமகம் என்னும் ஊரில் ஓர் ஏரியை அமைத்து, அந்த ஏரியை இஸ்ஸர பௌத்த விகாரைக்குத் தானமாகக்

---

71 மகாவம்சம், 35 : 15—45.

கொடுத்தான். அதாவது, அந்த விகாரையிலிருந்த பௌத்தப் பிக்குகளின் உணவுக்காகப் பயிர் செய்யப்படும் நிலங்களுக்கு நீர் பாய்ச்ச அந்த ஏரியைத் தானஞ் செய்தான். இவனுடைய இராணியாகிய தமிழத்தேவியும், மணிகாரகாமகத்திலிருந்து தனக்குக் கிடைத்த இறைப் பணத்தைப் பௌத்தப் பிக்குகளுக்குத் தானஞ் செய்தாள்.[72]

சந்தமுக சிவனுடைய தம்பியான அசலாலக திஸ்ஸன், சந்தமுக சிவனைக் கொன்று அரசாட்சியைக் கைப்பற்றி ஏழு ஆண்டு எட்டுத் திங்கள்கள் (கி. பி. 110—118) அரசாண்டான். அசலாலக திஸ்ஸனும் அவனுடைய அரண்மனைக் காவலனான சுபன் என்பவனும் உருவத்தில் ஒரேவிதமாகக் காணப்பட்டனர். இவர்களைக்கண்டவர் இவர்களில் யார் அரசன், யார் காவற்காரன் என்பதை அறிய முடியாமலிருந்தனர். சில சமயங்களில் அசலாலக திஸ்ஸன், காவற்காரனாகிய சுபனை அரசவேடத்தில் சிம்மாசனத்தில் வைத்துத் தான் காவற்காரன் உடையில் வாயிலில் நிற்பான். அமைச்சர் முதலானவர் வந்து சிம்மாசனத்தில் இருக்கும் காவற்காரனை உண்மையரசன் என்று கருதி அவனை வணங்குவார்கள். அதனைக் கண்டு காவற்காரனாக நிற்கும் உண்மையரசன் நகைப்பான். இவ்வாறு பலமுறை நிகழ்ந்தது. ஒரு நாள் இவ்வாறு நிகழ்ந்தபோது, சிம்மாசனத்தில் இருந்த காவற்காரனாகிய சுபன், காவற்காரன் உடையில் இருந்த அசலாலக திஸ்ஸனைச் சுட்டிக்காட்டி, 'இவன் ஏன் மரியாதையில்லாமல் நகைக்கிறான்? இவனைக் கொண்டுபோய்த் தலையை வெட்டுங்கள்' என்று தன்னுடைய வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அதன்படியே அவன் கொல்லப்பட்டுக் காவற்காரனாகிய சுபன் அரசாட்சி செய்தான். அரசாட்சிக்கு வந்தபோது சுபன், சுபராசன் என்று பெயர் பெற்றான். சுபராசன் இலங்கையை ஆறு ஆண்டுகள் (கி. பி. 118—124) அரசாண்டான்.

இலம்பகன்னர் ஆட்சி

சுபராசன் ஆட்சிக் காலத்தில் நிமித்திக வதந்தியொன்று நாடெங்கும் பரவிற்று. 'வசபன் என்னும் பெயருள்ளவன் ஒருவன், சுபராசனை வென்று அரசாளப் போகிறான்' என்பது அந்த

---

72 மகாவம்சம், 35 : 45-48

வதந்தி.[73] இந்த நிமித்திக வதந்தியைக் கேட்ட சுபராசன், நாட்டில் உள்ள வசபன் என்னும் பெயருள்ளவர்களையெல்லாம் கொன்றுவிடும்படி கட்டளையிட்டான். அவ்வாறே வசபன் என்னும் பெயர் கொண்டவர் கொல்லப்பட்டார்கள். சுபராசனுடைய சேனையிலே வசபன் என்னும் பெயருள்ள போர்வீரன் ஒருவன் இருந்தான். அவன், தன்னையும் கொன்றுவிடுவார்கள் என்று அஞ்சி அநுரையிலிருந்து தப்பி ஓடி மலையநாட்டுக்குச் சென்றான். சென்றவன் அங்கே ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு, அநுராதபுரத்தின்மேல் படையெடுத்து வந்து போர் செய்தான். சுபராசன் போரில் தோற்றான். வசபன் அரசாட்சியைக் கைப்பற்றி இலங்கையை நாற்பத்துநான்கு ஆண்டுகள் (கி. பி. 124—168) அரசாண்டான்.[74] வசபன், இலம்பகன்னர் இனத்தைச் சேர்ந்தவன். இலம்பகன்னர் பாண்டிநாட்டுத் தமிழ இனத்தைச் சேர்ந்தவர் என்றும், பாண்டிநாட்டிலிருந்து வட இலங்கையில் குடியேறி அரச ஊழியம் செய்தவர் என்றும் தெரிகின்றது. வசபன் இலம்பகன்னர் ஆட்சியைத் தொடங்கிய முதல் அரசன். இலம்பகன்னர் என்பதன் பொருள் நீள்செவியர் என்பது. அந்த இனத்தார் காதுகளைத் தொங்கும்படி நீட்டி வளர்த்தபடியால் இலம்பகன்னர் என்று பெயர் பெற்றனர். (லம்ப - நீளம், கன்னர் - கர்ணர், செவியையுடையவர்.) தமிழர்களில் சில இனத்தவர் காதுகளை நீள்மாகத் தொங்கும்படி வளர்த்தனர். இலம்பகன்ன இனத்தவனாகிய வசபனுக்குப் பிறகு அவனுடைய மகனான வங்கநாசிக திஸ்ஸன் இலங்கையை அரசாண்டான்.

வங்கநாசிக திஸ்ஸன், சுபராசனுடைய மகளான மகாமத்தா என்பவளைத் திருமணஞ் செய்திருந்தான். அவன் இலங்

---

73 சுபராசன் இலங்கையை யரசாண்ட காலத்தில் பாண்டிநாட்டை அரசாண்டவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். சுபராசனை வசபன் என்னும் பெயருள்ளவன் கொன்று இராச்சியத்தைக் கைப்பற்றுவான் என்னும் நிமித்திக வதந்தி இருந்தது போலவே, பாண்டி நாட்டிலும் நெடுஞ்செழியனைப்பற்றியும் ஒரு நிமித்திக வதந்தி இருந்தது. ஓர் ஆடிமாதத்தில் தேய்பிறையில் அட்டமி வெள்ளிக்கிழமையில் மதுரைநகரமும் அரசாட்சியும் அழிந்துவிடும் என்பது அந்த நிமித்திக வாக்கு (சிலப். 23 : 133 – 37). அக்காலத்தில் நிமித்திக வதந்திகளை மக்கள் நம்பினார்கள். இந்த இரண்டு நிமித்திக வதந்திகளும் உண்மையாகவே நிறைவேறிவிட்டன என்பதை மகாவம்சத்தினாலும் சிலப்பதிகாரத்தினாலும் அறிகிறோம்.

74 மகாவம்சம், 35 : 51-100

கையை மூன்று ஆண்டு (கி. பி. 168—71) அரசாண்டான். (இவன் காலத்தில், சோழநாட்டை அரசாண்ட சோழன் கரிகால் வளவன், இலங்கைமேல் படையெடுத்துச் சென்று பன்னிரண்டாயிரம் சிங்களவரைச் சிறைப்படுத்திக் கொண்டுபோய்க் காவிரிக்குக் கரைகட்டினான் என்று சிலர் கருதுகிறார்கள். இது உண்மையென்று தோன்றவில்லை. இலங்கையின் பழைய நூல்களான மகாவம்சமும் தீபவம்சமும் இச் செய்தியைக் கூறவில்லை. கரிகால் வளவன்மேல் பாடப்பட்ட பட்டினப்பாலையும், பொருநராற்றுப்படையும் இதுபற்றி ஒன்றும் கூறவில்லை. பிற்காலத்தவையான சிங்கள நூல்களும் தமிழ்நூல்களுந்தாம் இதனைக் கூறுகின்றன. எனவே, கரிகாலன் இலங்கைமேல் போர் செய்தான் என்பதும், கஜபாகு அரசன் சோழ நாட்டின்மேல் படையெடுத்து வந்தான் என்பதும் வரலாற்று நிகழ்ச்சிகள் என்று கருதுவதற்கில்லை). இந்தக் காலத்தில் இலங்கையின் வடக்கிலிருந்த நாகநாட்டை (இப்போதைய யாழ்ப்பாண நாடு) வளைவணன் என்னும் நாகராசன் அரசாண்டான். நாகர் திராவிட இனத்தவர். வளைவணனுடைய அரசியின் பெயர் வாசமயிலை. இவர்களின் மகள் பீலிவளை. பீலிவளை நாகநாட்டிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த நெய்தலங்கானலில் வந்திருந்தபோது, சோழ நாட்டு நெடுமுடிக்கிள்ளி அவளைக் கண்டு காதல் கொண்டான். அவர்கள் சிலகாலம் வாழ்ந்த பிறகு பீலிவளை நாகநாட்டிற்குச் சென்றுவிட்டாள். நாகநாட்டில் அவளுக்குப் பிறந்த குழந்தையை அவள் மணிபல்லவத் (சம்புகொலப்பட்டினம்) துறைமுகத்தில் வந்த கம்பளச் செட்டி என்னும் கப்பல் வாணிகனிடம் கொடுத்து, அச் சிறுவனைச் சோழனிடம் சேர்ப்பிக்கும்படி அனுப்பினாள். ஆனால், வழியில் அந்தச் சிறுவன் கடலில் முழுகி இறந்து போனான்.[75]

கஜபாகு I

வங்கநாசிக திஸ்ஸனுக்கும் மகாமத்தாவுக்கும் பிறந்த மகன் பேர்பெற்ற கஜபாகு அரசன். கஜபாகுவைக் கஜபாகு காமணி என்றும், கஜ்ஜபாகுக காமணி என்றும், கயவாகு என்றும் கூறுவர். சிலப்பதிகாரம் கயவாகு என்று கூறுகிறது. கஜபாகு காமணி இருபத்திரண்டு ஆண்டுகள் (கி. பி. 171—193)

75 மணிமே. 24 : 27-60, 25 : 178–196

அரசாண்டான்.[76] கஜபாகுவின் காலத்தில் சேரநாட்டையரசாண்ட சேரன் செங்குட்டுவன் பத்தினித் தேவிக்கு வஞ்சிமா நகரத்தில் பத்தினிக் கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்தான். அந்த விழாவுக்கு வந்து சிறப்புச் செய்த மன்னர்களுள் கஜபாகுவும் ஒருவன். கஜபாகு வேந்தன் இலங்கையில் பத்தினித் தெய்யோ (பத்தினித் தெய்வ) வழிபாட்டை உண்டாக்கினான். கஜபாகு வேந்தன் வஞ்சிமா நகரத்துக்கு வந்திருந்தபோது பத்தினித் தேவியைத் தன்னுடைய நாட்டிலும் வந்தருள வேண்டுமென்று வரங்கேட்டதும், அத் தெய்வம் வரந்தந்ததும், பிறகு அவன் பத்தினி வழிபாட்டை இலங்கையில் உண்டாக்கியதும் ஆகியவற்றைச் சிலப்பதிகாரக் காப்பியம் கூறுகிறது.

'குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்'[77]

'தந்தேன் வரம்' என்று எழுந்த குரலைக் கேட்டு மகிழ்ந்த கஜபாகு, பிறகு தன்னுடைய நாட்டுக்குச் சென்று பத்தினிக்குக் கோட்டம் அமைத்து விழாச் செய்ததைச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரை இவ்வாறு கூறுகிறது :

'ஆடித் திங்க ளகவையி னாங்கோர்
பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப
மழைவீற் றிருந்து வளம்பல பெருகிப்
பிழையா விளையுள் நாடா யிற்று.'[78]

கஜபாகு வேந்தன் இலங்கையில் பத்தினித் தெய்வ வழி பாட்டை ஏற்படுத்தினான் என்று சிலப்பதிகாரம் கூறுவதை

---

76 முதலாம் கஜபாகு கி.பி. 171 முதல் 193 வரை அரசாண்டான் எனக் கூறுவது பழைய மரபு. டாக்டர் பரனவிதானேவின் ஆராய்ச்சியால் இக் காலக்கணிப்புத் தவறானது என்று நிலைநாட்டப்பட்டுள்ளது. இவனுடைய காலம் கி.பி. 112—134 என்று மறுகணிப்புச் செய்துள்ளனர். காண்க : Paramavitana, S., Op. cit., University of Ceylon, Colombo. 1959, Vol. I, p. 125 (ப—ர்.)

77 சிலப். 30 : 159-164

78 சிலப். உரைபெறு (கட்டுரை) 3

இலங்கை நூல்களான மகாவம்சமும் தீபவம்சமும் கூறவில்லை. அந்த நூல்கள், இலங்கை அரசர்கள் பௌத்த மதத்துக்குச் செய்த தொண்டுகளையும் சிறப்புகளையும் கூறுவதையே நோக்க மாகக் கொண்டு பௌத்தமதப் பிக்குகளால் எழுதப்பட்ட நூல்கள். ஆகவே, கஜபாகு பௌத்த மதத்துக்குச் செய்த தொண்டுகளை மட்டும் கூறி, பௌத்தமத மல்லாத இந்துமதச் சார்பான பத்தினி வணக்கத்தைப்பற்றி ஒன்றும் கூறாமல் விட்டன. அந்த நூல்கள் பொதுவான வரலாற்று நூல்கள் அல்ல; பௌத்தமதச் சிறப்புக் கூறுவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்ட நூல்கள். பௌத்தமதச் சார்பான அந்த நூல்கள், புறமதச் சார் பான பத்தினி வழிபாட்டைப்பற்றிக் கூறாமல் விட்டதில் வியப்பு ஒன்றுமில்லை.

கஜபாகுவுக்குப் பிறகு அவனுடைய மைத்துனனான மஹல்லகநாகன் ஆறு ஆண்டுகள் (கி.பி. 193—199) அரசாண் டான். அவனுக்குப் பிறகு அவனுடைய மகனான பாதிக திஸ்ஸன் இருபத்துநான்கு ஆண்டுகள் (கி. பி. 199—223) அரசாண்டான். அவனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான கனிட்ட திஸ்ஸன் பதினெட்டு ஆண்டுகள் (கி. பி. 223—241) அரசாண்டான். அவனுக்குப் பிறகு அவனுடைய மகனான குஞ்ஜநாகன் ஓராண்டும், பிறகு அவனுடைய தம்பியான குஞ்சநாதன் இரண்டு ஆண்டுகளும் (கி. பி. 241—243) அரசாண்டார்கள்.

ஏறக்குறைய இந்தக் காலத்தில் கடைச் சங்ககாலம் முடி வடைகிறபடியால் இந்த வரலாற்றை இதனோடு நிறுத்துகிறோம்.

சங்ககாலத்து இலங்கையில் தமிழர் வாணிகம்

சங்ககாலத்து இலங்கையில், இலங்கையை அரசாண்ட சிங்கள மன்னர்களைப்பற்றியும் இடையிடையே அரசாண்ட தமிழ மன்னர் ஆட்சியைப்பற்றியும் மகாவம்சம், தீபவம்சம் என்னும் இலங்கைப் பௌத்த நூல்களின் ஆதாரத்தைக் கொண்டு சுருக்க மாகக் கூறினோம். இனி, இலங்கையில் அக்காலத்தில் வாழ்ந்த தமிழரைப்பற்றியும், முக்கியமாக அக்காலத்துத் தமிழர் வாணிகத் தைப்பற்றியும் கூறுவோம்.

ஆதிகாலத்திலிருந்தே இலங்கைத் தீவில் திராவிட இனத்தவராகிய நாகரும் இயக்கரும் வாழ்ந்திருந்தனர். தமிழரில் ஓரினத்தவராகிய அவர்கள், சங்க காலத்தில் தமிழ்நாட்டிலும் இருந்ததைச் சங்க நூல்களில் காணப்படுகிற குறிப்புகளிலிருந்து அறிகிறோம். இலங்கையிலிருந்த நாகரும் இயக்கரும் தமிழைத்தான் பேசினார்களா என்பது தெரியவில்லை. ஆனால், அவர்கள் திராவிட மொழியைச் சேர்ந்த ஏதோ ஒரு மொழியைத்தான் பேசியிருக்க வேண்டும். பழங்காலத்திலிருந்தே தமிழர், இலங்கைப் பழங்குடி மக்களான நாகருடனும் இயக்கருடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததனால், தமிழ்நாட்டிலிருந்து தமிழ வாணிகர் அப் பழங்காலத்திலேயே இலங்கைக்குச் சென்று வாணிகஞ் செய்தார்கள். பிறகு கி. மு. ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விசயனும் அவனுடைய எழுநூறு தோழர்களும் தமிழகத்திலிருந்து பாண்டிய நாட்டு மகளிரை மணஞ்செய்து கொண்டதை முன்னமே அறிந்தோம். பாண்டி நாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்ற எழுநூறு மணமகளிரோடு அவர்களைச் சேர்ந்த பரிவாரங்களும், பதினெட்டு வகையான தமிழத் தொழிலாளர் குடும்பங்கள் ஆயிரமும் இலங்கைக்குப் போனார்கள் என்பதையும் அறிந்தோம். அவர்கள் எல்லோரும் தமிழ்மொழி பேசியவர்கள். அதனால், காலப்போக்கில் தமிழ்மொழியும் வடஇந்திய மொழியும் சேர்ந்து புதுவகையான பழைய சிங்கள மொழி (ஈளுமொழி) தோன்றிற்று. இந்தக் கலப்புத் திருமணத்தின் காரணமாகத் தோன்றிய சந்ததியார் சிங்களவர் அல்லது ஈழவர் என்று பெயர் பெற்றனர். சிங்கள மொழியில் பேரளவிற்குத் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளதற்கு இதுவே காரணமாகும். தமிழ்-சிங்கள உறவு அந்தப் பழங்காலத்தோடு நின்றுவிடவில்லை. இடையிடையே அவ்வக் காலங்களில் தமிழகத்திலிருந்து சில தலைவர்கள் தமிழ்ச் சேனையை அழைத்துக்கொண்டுபோய் இலங்கையாட்சியைக் கைப்பற்றிச் சில பல காலம் அரசாண்டதையும் வரலாற்றில் கண்டோம். அந்தத் தமிழர் ஆட்சிக் காலத்தில் தமிழ வீரர்களும் தமிழக் குடும்பங்களும் இலங்கையில் தங்கி வாழ்ந்தனர். அவர்களில் சிலர் சிங்களவர்களாக மாறியிருக்கக் கூடும். இதன் காரணமாகவும் தமிழ்ச் சொற்கள் சிங்களமொழியில் கலந்து விட்டன. இவ்வாறு அரசியல் காரணமாகத் தமிழர் இலங்கையில் குடியேறினது மட்டுமல்லாமல், வாணிகத் தொடர்பு காரணமாகவும் தமிழ்வாணிகர் இலங்கையில் சென்று தங்கி வாணிகம் செய்தார்கள். அந்த வாணிகக் குழுவினர் அந்தக் காலத்தில் தங்கள்

வாணிகப் பொருள்களின் பாதுகாப்புக்காகச் சிறு சேனைகளை வைத்திருந்தார்கள். தமிழ்நாட்டிலேயும் வாணிகச் சாத்துக் குழுவினர் வாணிகப் பொருள்களை வெவ்வேறு ஊர்களுக்கும் நாடுகளுக்கும் கொண்டுபோனபோது, இடைவழியில் கொள்ளைக் காரர் வந்து கொள்ளையடிப்பதைத் தடுக்கும்பொருட்டு, வில்வீரர் களை அழைத்துச் சென்றதைச் சங்க இலக்கியத்தில் பார்க்கிறோம். அதுபோலவே, இலங்கைக்குச் சென்று வாணிகஞ் செய்த தமிழர் தங்களுடைய பொருள் பாதுகாப்புக்காக வில்வீரர்களை வைத் திருந்தார்கள்.

சேனன், குட்டகன் என்னும் இரண்டு தமிழ் வாணிகர், சூரதிஸ்ஸன் என்னும் சிங்கள அரசனை வென்று அரசாட்சியைக் கைப்பற்றி இருபத்திரண்டு ஆண்டுகள் (கி. மு. 177—155) அரசாண்டார்கள் என்பதைக் கண்டோம். அந்தப் பழங் காலத்திலே தமிழ் வாணிகர் இலங்கையில் தங்கி வாணிகம் செய்த போது வணிகச் சாத்தை (வணிகச் சங்கத்தை) நிறுவி வாணிகஞ் செய்ததை அக்காலத்துச் சாசன எழுத்துகளிலிருந்து அறிகிறோம். இலங்கையின் பழைய தலைநகரமான அநுராதபுரத்திலே தமிழ் வாணிகரின் வாணிகச் சங்கக் கட்டடம் இருந்ததைச் சமீப காலத்தில் இலங்கை அரசாங்கத்துத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை கண்டுபிடித்தது. அந்தப் பழைய வாணிகச் சங்கக் கட்டடம் பிற்காலத்தில் இடிந்து தகர்ந்து மண்மூடி மறைந்து போயிற்று. அந்தக் கட்டடத்தைச் சார்ந்திருந்த கற்பாறைகளில் எழுதப்பட்டுள்ள அக்காலத்துப் பிராமி எழுத்துகள் அக் கட்டடம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்தது என்பதைத் தெரிவிக்கின்றன. இலங்கையில் இலுபரத என்னும் ஊரில் வாழ்ந் திருந்த ஸமன என்று பெயர்பெற்றிருந்த தமிழ் வாணிகத் தலைவன் அநுராதபுரத்தில் அந்த வாணிகச் சங்கக் கட்டத்தைக் கட்டினான் என்று அந்த எழுத்துகள் கூறுகின்றன. ஈளு என்னும் பழைய சிங்கள மொழியில் பிராமி எழுத்தினால் எழுதப் பட்டுள்ள அந்தக் கல்வெட்டெழுத்தின் வாசகம் வருமாறு :

'இலுபாதஹி தமேட ஸமணெ கரிதெ தமட ககபதிகன பஸதெ

ஸகஸ அஸநெ நஸதஸ அஸநெ கஃதிஸஹ அஸநெ

....அஸநெ குபிர ஸுஜதஹ நவிக காரவ்வஹ அஸநெ'[79]

இதன் பொருள்:

'இலுபாதத்தில் வாழும் ஸமண என்னும் தமிழன் செய்வித்த தமிழக் குடும்பிகளின் மாளிக ஸ்க என்பவரின் இருக்கை, நஸதரின் இருக்கை, கஃதிஸ்ஸரின் இருக்கை .... உடைய இருக்கை, குபிர ஸுஜதகரின் இருக்கை, நாவிகராகிய காரவ் வரின் இருக்கை.'

குடும்பிகள் என்பது வாணிகரைக் குறிக்கிறது. ஆசனம் (இருக்கை) என்பது அவரவர் அமர்ந்திருந்த இடத்தைக் குறிக் கிறது. நாவிகன் என்பது கப்பல் தலைவன். நாவிகராகிய காரவ்வரின் பெயர் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. அவர் கடல் கடந்த நாடுகளுடன் கப்பலில் வாணிகஞ் செய்தவர். இந்த வாணிகச் சாத்து இலங்கையில் பௌத்த மதம் வருவதற்கு முன்பு அமைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

இலங்கையில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாணிகம் செய்தவரின் பெயர் இன்னொரு கல்வெட்டெழுத்தில் கூறப்படு கிறது. இலங்கையில் வாவுண்ணி மாவட்டத்தில் பெரிய புளியங் குளம் என்னும் இடத்தில் உள்ள ஒரு மலைக்குகையில் இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டு விசாகன் என்னும் தமிழ் வாணிகன் பெயரைக் கூறுகிறது, அதன் வாசகம் இது:

'தமெட வயிஜ க(ப)தி விஸகஹ லிணே'

'தமெட வணிஜ கபதி விஸகஹ லேணி மென'[80]

---

79 *Inscriptions of Ceylon* Vol. I., p. 7, No. 94 (a), Edited by S. Paranavitana, 1970; See also Plate XI No. 94, Edited by S. Paranavitana, Tamil House-holders' Terrace, Anuradhapura, Annual Bibiliography of Indian Archaeology, Kern Institute, Lydon, Vol. XIII, 1940, Tamil House-holders' Terrace; S. Paranavatana, Journal of Ceylon, Branch of the Royal Asiatic Society, Colombo, Vol. XXXV, 1942, pp. 54-56

80 *Inscriptions of Ceylon*, Vol. I. p. 28, Nos. 356(19), 357(20), Edited by Paranavitana, S. 1970, See also Plate XXXV, Nos. 356, 357 Edited by Paranavitana, S. 1970

இதன் பொருள் :

'தமிழ வாணிகக் குடும்பிகன் விஸாகனுடைய (செய்வித்த) குகை'

'தமிழ வாணிகக் குடும்பிகன் விஸாகன் செய்வித்த படிகள்.'

இப்போது பெரிய புளியங்குளம் என்னும் பெயர் பெற்றுள்ள இடத்தில் உள்ள மலைக்குகையில், தமிழ வாணிகக் குடும்பிகனான விஸாகன் என்பவர் பௌத்த முனிவர்கள் தங்கியிருப்பதற்காக அக்காலத்தில் (கி. மு. 2 ஆம் நூற்றாண்டில்) அமைத்துக் கொடுத்த குகையைப்பற்றி இந்தப் பிராமிக் கல்வெட்டெழுத்துக் கூறுகிறது.

இன்னொரு கல்வெட்டெழுத்து இலங்கையிலிருந்த தமிழ் வாணிகக் குடும்பத்தைக் கூறுகிறது. அம்பரை மாவட்டத்தில் குடுவில் என்னுமிடத்தில் உள்ள மலைக்குகையில் பழைய சிங்கள மொழியாகிய ஈளுவில் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ள இந்தக் கல்வெட்டு கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இந்த எழுத்துகளின் இடையே சில எழுத்துகள் காலப்பழமையினால் மறைந்துபோயின. இந்தக் கல்வெட்டெழுத்தில் வாசகம் இது:

'திகவபி ப(பொ)ரண வணிஜ . . . . . ய புதன பரியய தமெட திஸய ல(ணெ)'[81]

இதன் பொருள் :

'தீகவாபி என்னும் ஊரில் வாழும் . . . . . உடைய மக்களாகிய வாணிகரும் தமிழ திஸ்ஸனுடைய மனைவியும் சேர்ந்து செய்வித்த குகை.'

மேலே கூறப்பட்ட கல்வெட்டெழுத்துகள் பழைய சிங்கள மொழியாகிய ஈளு மொழியில், அக்காலத்தில் வழக்கத்திலிருந்த பிராமி எழுத்தினால் எழுதப்பட்டவை என்று கூறினோம். அந்தக் கல்வெட்டெழுத்துகளில் கூறப்படுகிற தமிழ வாணிகருடைய பெயர்கள் சிங்களப் பெயர்களாக இருக்கின்றன. இதனால், இவர்கள் சிங்கள நாட்டிலே நெடுங்காலம் தங்கியிருந்தவர்கள் என்பது தெரிகிறது. இவர்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலும்,

81 Ibid, Vol. I, p. 37 No. 480, Edited by S. Paranavitana, 197

இரண்டாம் நூற்றாண்டிலும் இலங்கைக்குச் சென்று வாணிகஞ் செய்தார்கள் என்பது தெரிகிறது. அவர்கள் சென்று வாணிகஞ் செய்த அயல்நாட்டிலே அவர்கள் தாங்கள் ஈட்டிய பொருள்களில் ஒரு பகுதியினை அந் நாட்டில் தருமம் செய்தனர் என்பது இக் கல்வெட்டு எழுத்துகளினால் அறிகின்றோம். அந்தப் பழங் காலத்திலே இலங்கைக்குப் போய் வாணிகஞ் செய்த தமிழர் எல்லோரையும்பற்றித் தெரியவில்லை. அவர்கள் எல்லோரும் கல்வெட்டுச் சாசனம் எழுதிவைக்கவில்லை. ஆனால், பெருந் தொகையான தமிழ் வாணிகர் இலங்கைக்கு வாணிகஞ் செய்யச் சென்றிருந்தனர் என்பது தெரிகிறது. அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து கொண்டுபோய் விற்ற பொருள்கள் இன்னின்னவை, இலங்கையிலிருந்து தமிழகத்துக்குக் கொண்டுவந்து விற்ற பொருள்கள் இன்னின்னவை என்பது தெரியவில்லை. அக் காலத்தில் ஈழநாட்டிலிருந்து உணவுப் பொருள்கள் காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுகத்தில் கொண்டுவரப்பட்டு இறக்கு மதியாயின என்று அறிகிறோம். 'ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்'[82] என்று பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகிறார்.

ஈழநாட்டுக்குச் சென்று வாணிகஞ் செய்த பொலாலையன் என்னும் தமிழருடைய பெயர் (கடைச்சங்க காலத்தவர்) ஒரு கல்வெட்டெழுத்தில் காணப்படுகிறது. பாண்டிநாட்டுத் திருப்பரங் குன்றத்து மலைக்குகையொன்றில் எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டு இதைக் கூறுகிறது.[83] இந்தத் தமிழ வாணிகன் பெயரை 'எருக்காட்டூர் ஈழக்குடும்பிகன் பொலாலையன்' என்று கல்வெட்டெழுத்துக் கூறுகிறது. பாண்டிநாட்டில் எருக்காட்டூரில் இருந்தவரும் ஈழத்தில் சென்று வாணிகம் செய்தவருமான பொலாலையன் என்பது இதன் பொருள்.

ஈழநாடாகிய இலங்கையில் சங்ககாலத்திலே தமிழர் சென்று வாழ்ந்திருந்தனர் என்பதை அறிந்தோம். அவர்களில் ஒருவர் பெயர் பூதன்தேவனார் என்பது. ஈழத்தில் வாழ்ந்து வந்தபடியால் அவர் ஈழத்துப் பூதன்தேவனார் என்று கூறப்பட்டார்.

---

82 பட்டினப். 191

83 Madras Epigraphy Collections, A. R. No. 333 of 1908, p. 65, No. 51 Tamil Brahmi Inscriptions. Seminar on Inscriptions (1966), Edited by R. Nagaswamy, p. 255. Early South Indian Palaeography by T.V. Mahaligam, 1967

அவர் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவர். அவருடைய செய்யுள் கள் சங்கத் தொகைநூல்களில் தொகுக்கப்பட்டுள்ளன.[84]

அகநானூற்றுச் செய்யுளில் இவர்,

'.....பொருவர்,
செல்சமங் கடந்த செல்லா நல்லிசை
விசும்புஇவர் வெண்குடைப் பசும்பூண் பாண்டியன்
பாடுபெறு சிறப்பிற் கூடல்'

என்று பசும்பூண் பாண்டியனைக் குறிப்பிடுகிறார். இந்தப் பசும்பூண் பாண்டியன் கி. பி. 2ஆம் நூற்றாண்டின் தொடக்கத் தில் அரசுகட்டிலில் துஞ்சிய ஆரியப்படை கடந்த நெடுஞ்செழிய னுக்கு முன்பு இருந்தான். ஆகவே, இவர் கடைச்சங்க காலத்தில் (கி. பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்தவர் எனக் கூறலாம்.

84 அகம். 231 : 10-13

கருவிநூல் பட்டியல்

(Bibliography)

தமிழ் இலக்கியம்

1. தொல்காப்பியம்
2. எட்டுத்தொகை
3. பத்துப்பாட்டு
4. பதினெண்கீழ்க்கணக்கு
5. சிலப்பதிகாரம்
6. மணிமேகலை
7. கலிங்கத்துப்பரணி
8. திருத்தொண்டர் புராணம்
9. தொண்டைமண்டல சதகம்
10. நளவெண்பா
11. நன்னூல்
12. பன்னிருபடலம்
13. பெரிய திருமொழி
14. பெருந்தொகை
15. வெண்பாப்பாட்டியல்

பாலி இலக்கியம்

1. தீப வம்சம்
2. மகாவம்சம்

இயல் 1

1. அப்பாத்துரை, கா. — தென்னாட்டுப் போர்க் களங்கள், ஔவை நூலகம், சென்னை, 1957

2. இராமன், டாக்டர் கே. வி. — தொல்லியல் ஆய்வுகள், சேகர் பதிப்பகம், சென்னை, 1979

3. குருமூர்த்தி, சா. — தொல்பொருள் ஆய்வும் தமிழர் பண்பாடும், சென்னைப் பல்கலைக்கழகம், 1974

4. Chelvanayagam, V. — *Some Problems in the Study of Tolkappiam in Relation to Sangam Poetry* in the Proceedings of the First International Tamil Conference, Seminar, Vol. II, Kuala Lampur, 1966

5. Iyengar, P. T. S. — *History of the Tamils*, C. Coomaraswamy Naidu & Sons, Madras, 1929

6. Mortimer Wheeler, Sir — *Rome Beyond the Imperial Frontiers*, Pelican Books, G. B., 1955

7. Pillay, K. K. — *A Social History of the Tamils*, Vol I, University of Madras, 1975

இயல் 2

1. நாகசாமி, இரா. (1) கல்வெட்டியல், தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1981

2. Do (2) கல்வெட்டு ஓர் அறிமுகம், தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1972

3. Ahamed Hasan Dani *Indian Palaeography*, Oxford University Press, 1963

4. Arokiaswami, M. *The Classical Age of the Tamils*, University of Madras, 1966

5. Kamil Zvelebil *The Brahmi Hybrid Tamil Inscriptions*, Archiv Orientalini 32, 1964

6. Do *The Smile of Murugan*, E. J. Brill Leiden, 1973

7. Krishna Sastri, H. *Cave-ns and Brahmi Inscriptions of South India* in the Proceedings and Transactions of the First Oriental Conference, Poona, 1919

8. Mahadevan, I. *Corpus of Tamil Brahmi Inscriptions*, Reprint of the Seminar on Inscriptions, Department of Archaeology, Government of Tamilnadu, Madras, 1966

9. Mahalingam, T. V. *Early South Indian Palaeography*, University of Madras, 1967

10. Mortimer Wheeler with A. Ghosh and Krishna Deva *Arikamedu : An Indo-Roman Trading Station on the East Coast of India* in Ancient India No. 2, July 1946

11. Narayan Rao, C. 'The Brahmi Inscriptions of South India' in *New Indian Antiquary*, Vol. I

12. Nilakanta Sastri, K. A. *Sangam Literature: Its Cults and Culture*, Swathi Publications, Madras, 1972

13. Pillay, K. K. 'The Brahmi Inscriptions of of South India and the Sangam Age' in *Tamil Culture* Vol. V. No. 2

14. Subramania Iyer, K.V. *Historical Sketches of the Ancient Dekkan*, Vol. III, Coimbatore, 1969

கல்வெட்டுத் தொகுப்பு நூல்கள்

1. Annual Report on South Indian Epigraphy Vols. 1904, 1906, 1907, 1908, 1910, 1911-12, 1927-28, 1936-37, 1937-38, 1939-40, 1951-52,1961-62, 1963-64.

2. Inscriptions of the Pudukkottai State.

3. Madras Epigraphical Report 1914-15.

நாளிதழ்கள்

1.	கொங்கு	15-8-1974
2.	தமிழ் முரசு	13-9-1973
3.	தினமணி சுடர்	15-7-1973
4.	Indian Express	6-12-1973
5.	The Sunday Standard	16-7-1967

இயல் 3

1. அருணாசலம், மு. — தமிழ் இலக்கிய வரலாறு (பத்தாம் நூற்றாண்டு), காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், தஞ்சை, 1972

2. இராகவன், அ. — கோநகர் கொற்கை, கலைநூற் பதிப்பகம், பாளையங்கோட்டை, 1971

3. இராகவையங்கார், மு. — ஆராய்ச்சித் தொகுதி, பாரி நிலையம், சென்னை-1. 1964

4. இராமச்சந்திரன் செட்டியார், கோ. மா. — கொங்குநாட்டு வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1954

5. குழந்தை, புலவர் — கொங்கு நாடு, வேலா பதிப்பகம், ஈரோடு, 1968

6. கோதண்டபாணி பிள்ளை, கு. — பழந்தமிழ் இசை, கழகம், சென்னை, 1959

7. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. — பாண்டியர் வரலாறு, கழகம், சென்னை, 1972

8. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. — தமிழ் இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1977

9. சிதம்பரனார், அ. துடிசைகிழார் — சேரர் வரலாறு. கழகம், சென்னை, 1972

10. சுப்பிரமணிய பிள்ளை, கா. — தமிழ் இலக்கிய வரலாறு. முதல் பாகம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை 1957

11. சுப்பிரமணியன், தி. ந. — பல்லவர் செப்பேடுகள் முப்பது, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, 1966

12. வையாபுரிப் பிள்ளை, சு. (பதி.) — சங்க இலக்கியம். பாரி நிலையம், சென்னை, 1965

13. Iyengar, P. T. S. — *History of the Tamils*, C. Coomaraswamy Naidu & Sons, Madras, 1929

14. Kunjan Pillai, Elankulam P. N. — *Studies in Kerala History*, National Book Stall, Kottayam, 1970

15. Majumdar, R. C. (Ed.) — *History and Culture of the Indian People*, Vol I, 1971

16. Do (Ed.) — Do. Vol. II, 1968

17. Do. (Ed.) — Do. Vol. III, 1970 Bharathiya Vidya Bhavan, Bombay

18. Nilakanta Sastri, K. A. — *A History of South India*, Oxford University Press, 1966

19. Ramachandra Dikshitar, V. R. — *Studies in Tamil Literature and History*, University of Madras, 1947

20. Ramachandran, C. R. — *Ahananuru in Its Historical Setting*, University of Madras, 1972

21. Sivaraja Pillai, K. N. — *The Chronology of the Early Tamils*, University of Madras, 1932

22. Subramanian, N. — *A History of Tamilnadu*, Koodal Publishers, Madurai, 1972

இயல் 4

1. கோவிந்தன், புலவர் கா. — சேரர், கழகம் சென்னை, 1966

2. துரைசாமிப் பிள்ளை, ஔவை சு. — சேர மன்னர் வரலாறு, சாந்தி நூலகம், சென்னை, 1960

இயல் 5

1. துரையரங்கசாமி, மொ.அ — சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பாரி நிலையம், சென்னை, 1960

2. வேங்கடசாமி, மயிலை சீனி. — சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1970

3. Bhandarkar, D. R. — *Ancient India*, Calcutta, 1919

4. Mukerji, R. K. — *The Fundamental Unity of India*, Baratiya Vidya Bhavan, Bombay, 1970

5. Nilakanta Sastri, K. A. — *A Comperhensive History of India*, Vol II, Orient Longmans, Calcutta, 1957

6. Paranavitana, S. — *History of Ceylon*, Vol. I, University of Colombo, 1959

7. Ramaswami Aiyar, L.V. — *Collected Papers*, Annamalai Univerty, 1966

பருவ இதழ்கள்

1. Indian Antiquary, Vol. III
2. Tamilian Antiquary, Vol. 29

இயல் 6

1. வையாபுரிப் பிள்ளை, சு. (பதி.) — சங்க இலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1965

இயல் 7

1. இராகவையங்கார், இ.ரா. — கோசர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1931

2. இராசமாணிக்கம், மா. சோழர் வரலாறு,
கல்வி வெளியீடு,
சென்னை,
1947

3. இராமச்சந்திரன் செட்டியார், கோ. மா. கொங்கு நாட்டு வரலாறு,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
1954

4. குழந்தை, புலவர் கொங்கு நாடு,
வேலா பதிப்பகம்,
ஈரோடு,
1968

5. துரைசாமிப் பிள்ளை, ஒளவை சு. சேரமன்னர் வரலாறு,
சாந்தி நூலகம்,
சென்னை,
1980

6. வேங்கடசாமி, மயிலை சீனி. கொங்கு நாட்டு வரலாறு,
சென்னை,
1974

7. Aiyangar, S. K. *Seran Vanji*,
Ernakulam,
1940

இயல் 8

1. இராசமாணிக்கம், மா. பத்துப்பாட்டு ஆராய்ச்சி,
சென்னைப் பல்கலைக்கழகம்,
1970

2. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. காஞ்சிப்புராணம்,
தொல்காப்பியர் நூலகம்,
1959

3. ஷெ பாண்டியர் வரலாறு,
சென்னை,
1952

4. திருநாவுக்கரசு, க. த். முதலாம் இராசராச, சோழன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975

5. துரைசாமிப் பிள்ளை, ஔவை சு. சேரமன்னர் வரலாறு, சாந்தி நூலகம், சென்னை, 1960

6. துரையரங்கசாமி, மெ. அ. சங்ககாலச் சிறப்புப் பெயர்கள், பாரி நிலையம், சென்னை, 1960

7. Aiyangar, S K. *Ancient India and South Indian History and Culture*, Central Book Depot. Poona, 1941

8. Arokiaswami, M. *The Kongu Country*, University of Madras, 1956

9. Banerjee, R. D. *History of Orissa*, University of Calcutta, 1930

10. Burrow, T. *Collected Papers on Dravidian Linguistics*

11. Carl Stephenson *Mediaeval Feudalism*, Cornell University Press, Ithaca, New York, 1967

12. Gururaja Bhatt, T. *Studies in Tuluva History and Culture*, Kaliampur, 1975

13. Iyengar, P. T. S. — *History of the Tamils*, C. Coomaraswamy Naidu & Sons, Madras, 1929

14. Kailasapathy, K. — *Tamil Heroic Poetry*, Clarendon Press, Oxford, 1968

15. Kanakasabai Pillai, V. — *The Tamil* 1800 *Years Ago*, Kazhagam, Madras, 1966

16. Mahalingam, T. V. — (1) *Kanchipuram in Early South Indian History*, Asia Publishing House, Bombay, 1969

17. Do. — (2) *South Indian Polity*, University of Madras, 1967

18. Nilakanta Sastri, K. A. — *Foreign Notices of South India*, University of Madras, 1972

19. Paranavitana, S. — *History of Ceylon*, Vol. I, University of Ceylon, Colmbo, 1959

20. Petit Duttaillis, C. H. — *The Feudal Monarchy in France and England*, Routledge Kegan Paul, London

21. Pillay, K. K. — *A Social History of the Tamils*, Madras, 1975

22. Pillay, K. K. — *The Early History of Nancilnad*, Sankara Parvati Endowment Lectures, University of Madras, 1951

23. Saletore, B. A. — *Ancient Karnataka*, Vol. I, Central Book & Co., Poona, 1936

24. Sesha Aiyar, K. G. — *Cera Kings of the Sangam Period*, luzac & Co., London, 1937

25. Sirkar, D. C. — *Inscriptions of Asoka*, Publications Department, New Delhi, 1957

26. Subramaniam, N. — *Sangam Polity*, Asia Publishing House, Bombay, 1966

27. Vipulananda, Swami — *The Development of Tamilian Religious Thought in Tamil Culture*, Vol. V. 1956

பருவ இதழ்கள்

1. Bombay Gazetteer, Vol. I
2. Indian Antiquary. Vol. VIII
3. South Canara Mannual, Vol. I
4. Tamil Culture, Vol. V

கல்வெட்டுத் தொகுப்பு நூல்கள்

1. Annual Report on Epigraphy 1905, 1919.

2. Nellore Inscriptions, Vol. I.

3. South Indian Inscriptions, Vol. VII.

4. Travancore Archaeological Series, Vol I.

இயல் 9

1. கந்தையா பிள்ளை, ந. சி. தமிழகம், கழகம், சென்னை, 1945

2. துரைசாமிப் பிள்ளை, ஒளவை, சு. சேரமன்னர் வரலாறு, சென்னை, 1960

3. Kanakasabai, V. *The Tamils* 1800 *Years Ago*, Kazhagam, Madras, 1966

4. Mahalingam, T. V. *South Indian Polity*, University of Madras, 1967

5. Nilakanta Sastri, K. A. (1) *Foreign Notices of South India*, University of Madras, 1972

6. Do (2) *A Comprehensive History of India*, Orient Longmans, Calcutta, 1957

இயல் 10

1. Paranavitana, S. *History of Ceylon*, Vol. I, University of Ceylon, Colombo, 1959

2. Do *Inscriptions of Ceylon*, Colombo, 1970

பருவ இதழ்

1. A Review of University of Ceylon, Vols. II & VII

கல்வெட்டுத் தொகுப்பு நூல்கள்

1. Annual Bibliography of Indian Archaeology, Vol. XIII, 1940.

2. Epigraphia Zelonica, Vol. IV.

3. Madras Epigraphical Reports (Annual Reports), 1908.

பொருட்குறிப்பு அகராதி

அ

அஃதை 248
அக்ரிபினா 130
அகத்திணை 5, 551
அகத்தியம், 1
அகத்தியர் 1, 2
அகத்தியனார், 103
அகநானூறு, 6, 9, 10
அகப்பா 154, 193
அகலிகை 9
அகவாழ்க்கை 5
அகஸ்டஸ் சீசர் 130
அகுதை 8, 455, 493
அங்குசம் 554
அங்குத்தர நிகயா 627
அஃலாலக திஸ்ஸன் 629
அசேலன் 617
அசோகச் சக்கரவர்த்தி 593
அசோகர் கல்வெட்டு 40
அசோகன் 119, 353
அட்டாலயம் 595, 610, 613
அட்டாலய திஸ்ஸன் 595
அட்டில்சாலை 297
அடவிக சாமந்தர்கள் 451
அடியார்க்குநல்லார் 102
அடுநெய் ஆவுதி 158
அத்தி 462
அதங்கோட்டாசான் 6
அதங்கோடு 474
அதமன்கோட்டை 400, 468
அதிகன், அதிகன்-I, 491
அதியமான் நெடுமான் அஞ்சி 400, 495
அதியர் குடி 447, 505
அந்துவஞ்செள்ளை 191, 206, 458, 459
அந்துவன் 136, 496
அந்துவன் கால்வழி 186
அந்துவன் கீரன் 462, 501
அந்துவன் சாத்தன் 191, 579, 462
அந்துவன் சேரல் 118
அந்தோணியார் 130
அநுராதபுரம் 127, 592, 607
அநுலாதேவி 626, 627
அப்பர் 100
அபயவாவி 607
அபயன் 616
அர்ப்பத்தல் 627
அம்பதித்தகக் கோட்டை 622
அம்பர்கிழான் அருவந்தை 435, 499
அம்பரை மாவட்டம் 610, 637
அம்மூவனார் 237
அயிரைப் பொருநன் 153
அயிரைமலை 112, 134, 153
அர்கந்தர்கள் 623
அர்த்தசாரிபாளையம் 426
அரியன் 25
அரசபாரம் 530
அரசபூதம் 546, 554
அரசஞர்க் கல்வெட்டு 63, 90
அரசுகட்டில் 555
அரசுரிமை முறை 531
அரப்பா 45
அரிக்கமேடு 54, 67
அரிசிற்கிழார் 201, 204, 458, 493
அரிமணவாயில் 162
அருமன் 7, 8
அருவாநாடு 294, 480
அருவாளர் 18, 294, 439, 450, 505
அரையம் 470
அலக்சாந்தர் 25
அவியன் 461, 495

அவினி 8
அவையத்தார் 537
அழகர்மலைக் கல்வெட்டு 50, 84
அழிசி 7, 335, 336, 450
அழுந்தூர் 488
அழுந்தூர்வேள் 416
அறத்தின் மண்டல 570
அறிவுடைநம்பி 382
அறுகை 169, 409, 493
அன்னி 50
அன்னிஞிமிலி 7, 416
அஸ்வ நாவிகர் 615, 616

ஆ

ஆட்டன் அத்தி 301, 450, 493
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 9, 179
ஆணைச்சக்கரம் 530
ஆத்திப்பூ 253
ஆத்திரையனார் 502
ஆதன் 8, 235
ஆதன் எழினி 496, 502
ஆதன் செல்இரும்பொறை 118
ஆதனுங்கன் 462
ஆதி 8
ஆதி அருமன் 502
ஆதித்த கரிகாலன் 302
ஆதிமந்தி 201
ஆப்பிரிக்கா 518
ஆமண்ட காமணி 627
ஆமூர் 9, 16, 478, 525
ஆய் அண்டிரன் 7, 8, 428, 493
ஆய் எயினன் 457, 462, 466
ஆயோய் 126
ஆர்க்காடு 253, 334, 491, 525
ஆரல்வாய்மொழிக் கணவாய் 474
ஆராய்ச்சிமணி 584, 617
ஆரியக்கூத்து 8
ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் 12, 305, 639
ஆல்பர்ட் சுவைட்சர் 518
ஆலங்கானம் 459
ஆலஞ்சேரி 453
ஆலம்பேரிசாத்தனார் 501
ஆவூர் மூற்றுகை 308
ஆற்கரு 29
ஆறுநாட்டார் மலை 118
ஆனைமலைக் கல்வெட்டு 56, 58

இ

இசைவெங்கிள்ளி 332
இடெம்பில்போர் 171
இடைக்குன்றூர் கிழார் 359
இடைச்சங்கம் 103
இண்டிகா 25, 353
இந்திரன் ஆம் பூண்ட பாண்டியன் 385
இமயவரம்பன் நெடுஞ்சேர லாதன் 455, 547
இயக்கர் 379, 599
இயற்கை வரலாறு 123
இரணியமுட்டம் 500
இராசசூயம் 133
இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி 12, 321, 501
இராசாவளி 295, 615
இராஜராட்டிரம் 615
இருங்குன்றம் 346
இருங்கோவேள் 18
இரும்பொறை, மாந்தரஞ்சேரல் 238
இலங்கை 295, 592
இலங்கைச் சாசனங்கள் 610
இலம்பகன்னர் 598, 628
இலவந்திகைப்பள்ளி 364
இலாடதேசம் 603
இளங்கடுங்கோ 118, 248
இளங்கண்டீரக்கோ 450
இளங்குமணன் 531
இளங்கோசர் 443
இளங்கோவடிகள் 19, 151
இளஞ்சடிசன் 354
இளஞ்சேட்சென்னி 11, 282
,, I 282
,, II 283
,, III 285, 486
இளநாகன் 598, 628
இளம் பெருவழுதி 374
இளவிச்சிக்கோ 450, 503

ஈ

ஈர்ந்தூர், ஈங்கூர் 471
ஈர்ந்தூர்கிழான் கோயன்மான் 448
ஈழக்குடும்பிகன் 55, 638
ஈழநாடு 293
ஈழத்துப் பூதன்தேவனார் 638
ஈழவர் 634

உ

உக்கிரப்பெருவழுதி 97, 105, 321, 372, 501, 509
உச்சேனி 604
உதயகுமரன் 329
உதியன் 136, 138, 457, 458, 529
உதிராசன் 612
உபதிஸ்ஸ கிராமம் 607
உபராச மகாநாகன் 609, 613, 619
உம்பற்காடு 154, 228
உரகபுரம் 251
உருத்திரங்கண்ணனார் 17, 287, 480, 490, 638
உருத்திரசன்மன் 98, 372
உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி 459
உருவேலா 604
உரோகண நாடு 127, 594, 608
உரோம நாடு 130
உரோமானிய நாணயங்கள் 419
உலோச்சனார் 322, 502
உழிஞைப்போர் 295, 567
உற்பல வண்ணன் 603
உறந்தை 8, 301, 491
உறையூர் 29, 208, 251
உறையூர் முற்றுகை 301
உன்னநிலை விழா 557
உன்னமரம் 193, 557

ஊ

ஊராக் குதிரை 469
ஊன்பொதி பசுங்குடையார் 285
ஊணூர் 349

எ

எட்டிப்பட்டம் 244
எயிலாந்தை 379
எயிற்பட்டினம் 16, 478, 525
எயினர் 447, 483, 505
எரித்திரையக் கடற்செலவு 123, 250
எருக்காட்டூர் 638
எருமைநாடு 467
எவ்வி 162, 361, 491
எழினி 8, 202, 416, 461, 499
எழுமுடி 447

ஏ

ஏணிச்சேரி 251
ஏரகாவில்ல 595
ஏலார 598
ஏலாரன் 617
ஏலேல சிங்கன் 617
ஏழில்மலை 466
ஏற்றை 488
ஏனாடு 250
ஏனாதி 244, 460, 461
ஏனாதி திருக்கண்ணன் 461, 495
ஏனாதி திருக்கிள்ளி 333, 461, 495
ஏனாதி திருக்குட்டுவன் 243, 495

ஐ

ஐந்தாம்படைவேலை 621
ஐந்தெயில் 209
ஐந்து தமிழர் ஆட்சி 624
ஐயர்மலைக் கல்வெட்டு 64

ஐயூர் முடவனார் 407, 496
ஐயை 491
ஐயோயி 473

ஒ

ஒல்லையூர்கிழான் 448
ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் 335, 578
ஒல்லையூர் நாடு 225
ஒருதந்தை 192
ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை 228
ஒளியர் 18, 294, 489
ஒற்றர் 537, 564

ஓ

ஓதல் ஆந்தையார் 237
ஓய்மான் நல்லியக்கோடன் 478
,, நல்லியாதன் 478
,, வில்லியாதன் 478
ஓய்மானாடு 16, 477
ஓரி 7, 225, 314, 402, 491
ஓவியர்குடி 149, 447, 505

ஔ

ஔவையார் 101, 442, 495

க

கங்கர் 112, 172, 505
கச்சி (காஞ்சிபுரம்) 482
கட்டி, கடலன் 462, 490
கட்டி 490
கட்டி நாடு 472
கட்டியர் 112, 172, 505
கட்டில் நீத்த பால் 540
கடம்பர் 111, 547
கடம்பெறிதல் 173
கடல்பிறக்கோட்டல் 172
கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் 136
கடல் ஏழா 370
கடலன் 462
கடலன் வழுதி 43, 118, 348, 377
கடியம் 472
கடியலூர் உருத்திரங்கண்ணனார் 439
கடுங்கோ 526, 529
கடுங்கோ நாடு 525
கடுங்கோன் 105
கடுமான் கிள்ளி 333
கடைச்சங்கம் 102
கண்டீர நாடு 476
கண்ணகி 545
கண்ணன் 3
கண்ணன் எழினி 490
கணியன் 7
கணிராசனு திஸ்ஸன் 628
கணைக்கால் இரும்பொறை 24, 324, 539
கணையன் 462
கதப்பிள்ளையார் 496
கதிர்காமம் 609
கபிதாலியர் 26
கபிலர் 192, 485, 494
கமரா 29
கமுனு 619
கயவாகு வேந்தன் 128, 340
கரிகாலன் 12, 17, 254, 441
கரிகாலன் I 446
கரிகாலன் II 489
கரிகாற் பெருவளத்தான் 17, 287, 489, 532
கரியாளர் 587
கருங்காலக்குடிக் கல்வெட்டு 49, 83
கருங்குழலாதனார் 298, 339, 485
கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதி 291
கருநாடர் 172
கரும்பனூர்கிழான் 448
கருவூர் 218, 228
கருவூர் முற்றுகை 311
கல்லணை 297
கல்லாட நாகன் 624
கல்லாடனார் 359, 436
கலிங்கர் 172
கலியாணி நாடு 602
கவாடபுரம் 4, 349, 350
கவீரப்பட்டினம் 252

கவுந்தியடிகள் 255
கவுரியர் 528
கழாஅத்தலையார் 149, 224, 339, 485
கழார் 525
கழார்ப் பெருந்துறை 254
கழிஞ்சமலைக் கல்வெட்டு 64, 91
கழுகுமலை 347
கழுமலம் 327, 488
கழுவுள் 200, 454, 461, 493
கள்வர் 505
கள்வர் குடி 447
களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் 161, 405
களப்பிரர் 109, 328
களவேள்வி 298
களிறு (யானைப்படை) 549
கன்னிப்போர் 487
கன்னியாகுமரி 29
கனகவிசயர் 175
கனிட்ட திஸ்ஸன் 633
கஜபாகு 631
கஜபாகு காமணி 631
கஜரகாமம் 609

கா

காகவண்ணதிஸ்ஸன் 619
காசப்பட 622
காஞ்சியூர் 8
காத்தியாயனர் 257
காந்தமன் 258
காப்பியாற்றுக் காப்பியனார் 162, 490
காமணிதிஸ்ஸன் 611, 614
காமரூபம் 116
காமணி அபயன் 487
காமூர் 200, 454
காய்சின வழுதி 105
காரவேலன் 119, 354, 417, 484
காரி 225, 314, 439, 494, 517
காரிக் கண்ணனார் 497
காரியாற்றுப்போர் 331
காரியாற்றுத் துஞ்சிய நெடுங் கிள்ளி 307
காவிதிப்பட்டம் 244
காவிரிப்பூம்பட்டினம் 339
காவிரியாறு 251
காழக நாடு 298
காளவேள (இயக்கர்) 607
கானப்பேர் 321, 475

கி

கிடங்கில் 7, 16, 478
கிரித்தீவு 600
கிள்ளிவளவன் 494
கிள்ளிவளவன் I 310 (குளமுற்றத்துத் துஞ்சியவன்)
கிள்ளிவளவன் II (குராப்பள்ளித் துஞ்சியவன்) 318

கீ

கீரஞ்சாத்தன் 383
கீரந்தை 386
கீழ்பவானி அணைக்கட்டு 391
கீழ்மாவிலங்கை 479
கீழவளவுக் கல்வெட்டு 45, 73

கு

குசி நகரம் 603
குஞ்சநாதன் 633
குட்டகண்ணதிஸ்ஸன் 627
குட்டகன் 615
குட்டநாடு 134, 525
குட்டபரிந்தன் 617
குட்டுவன் 529
குட்டுவன் கோதை 362
குட்டுவன் சேரல் 539
குடக்கோ 529
குடகக்கொங்கர் 468
குடந்தை 252, 582
குடநாடு 134, 242
குடமலை 161
குடவர் 18, 294, 489
குடவாயில் கோட்டம் 28

குடிச்சின்னம் 553
குதிரைமலை நாடு 469
குமணன் 404, 463, 469
குமரவேள் 104
குமரனார் 244
குமரித் துறைமுகம் 349
குமரியாறு 348
குராப்பள்ளி 254
குராலம் பறந்தலைப்போர் 170
குலோதரன் 601
குவண்ணி 603, 607
குழூமூர்ச் சோற்றுமடம் 138
குறவர் 447, 505
குறிஞ்சிக்கோமான் 476
குறுங்கோழியூர்கிழார் 240
குறும்பர் 421
குறும்பியன் 462, 496
குறுவழுதி 376
குன்றக்குடிக் கல்வெட்டு 62
குன்ற நாடு 134
குன்றமெறிந்த குமரவேள் 104
குன்றூர் 8, 455
குஜ்ஜ நாகன் 633

கூ

கூடல் 7, 350, 455
கூடலூர்கிழார் 21, 237, 239
கூலிப்படை 559
கூற்றம் 524

கெ

கெலனி ஓயா நாடு 602

கே

கேரள புத்திரர் 119
கேரளோற்பத்தி 473

கை

கைவண்கிள்ளி 333

கொ

கொங்கணர் 11, 172
கொங்கர் 468, 493
கொங்கர் புளியங்குளம் கல்வெட்டு 46, 74, 75, 76
கொங்குநாடு 10, 119, 134, 171
கொட்டகனவூர் 469
கொட்ட தாமுகல குகை 612
கொட்டனாரா 123, 473
கொடுகூர்ப்போர் 171
கொடும்பாளூர் 346
கொடுமுடி 441
கொடுமிடல் 162, 382
கொடைக்கானல் 472
கொண்கானங்கிழான் 448
கொண்கானத்து நன்னன் 444
கொண்டிமல்லர் 580
கொல்லிக்கூற்றம் 524
கொல்லிப்பாவை 469
கொல்லிமலை 201, 403, 468
கொலம்பாலக் 624
கொழும்புத் துறைமுகம் 598
கொற்கை 7, 9, 29, 107, 349
கொற்றவை 5, 595
கொற்றன் 549

கோ

கோசர் 120, 121, 221, 333, 367, 410, 447, 467, 493, 505
கோட்டம் 482, 523, 524
கோடைப் பெருநன் 462, 463, 499
கோதை மார்பன் 328
கோப்பெருஞ்சோழன் 277, 357, 531, 539
கோப்பெருந்தேவி 544
கோப்பெருநற்கிள்ளி 531
கோலர் 265
கோவலூர் மலையமான் 444
கோவூர்கிழார் 302

கௌ

கௌணியன் விண்ணந்தாயன் 498
கௌரியர் 226

ச

சக்கன் (தேவேந்திரன்) 603
சங்கம் 1, 92, 103
சங்கரமலைக் கல்வெட்டு 65
சங்கமித்திரை 597, 609
சஞ்சயன் 175
சத்திய புத்திரர் 119, 415
சத்தியமங்கலம் 472
சதுக்கப் பூதம் 210
சந்தமுகச் சிவன் 628
சந்திரகுப்த மௌரியன் 120
சம்பந்திட்டை 609
சம்புகொலப்பட்டினம் 596
சமந்தம் 595
சமனொலிமலை (சமந்தகூடம்) 595
சமுத்திரகுப்தன் 116, 145

சா

சாக்கையன் 548
சாணக்கியர் 127
சாத்தந்தையார் 487
சாத்தர்கள் 604
சாத்தனார் 19
சாதவாகன அரசர்கள் 129
சாந்திவேள்வி 212
சாய்க்காடு 255
சாலியூர் 349
சாவக நாடு 597

சி

சிக்கற்பள்ளி 197
சிங்களவர் ஆட்சி 606
சிங்கன் 175
சித்தன்னவாசல் கல்வெட்டு 49, 82
சித்தராசன் 607
சித்தியர் 422
சித்தா 606
சிபிச்சோழன் 259
சிர்சவத்து 604
சிலம்பாறு 348
சிவகங்கை 476
சிவேதன் 175
சிறுகுடிகிழான் பண்ணன் 449
சிறுநல்லூர் 8
சிறுமேதாவியார் 103

சு

சுகந்தன் (ககந்தன்) 259
சுமித்தன் 606
சுவண்ண பிண்ட திஸ்ஸன் 615
சுவர்ணமுகி 482

சூ

சூரநிமிலன் 622
சூளாபயன் 628

செ

செங்கண்மா 97, 477
செங்கணான் 23, 321, 323, 328
செங்குட்டுவன் 19, 167, 202, 487
செம்பியன் 528
செருப்பாழிப்போர் 284, 489
செருப்பு மலை 153, 192
செல்யூகஸ் நிகேடார் 25, 353
செல்வக் கடுங்கோ வாழியாதன் 9, 96, 136, 494, 539
செல்வக்கோமான் 196
செல்லிக்கோமான் ஆதன் எழினி 450
செழியன் 354
சென்னி 528

சே

சேட்சென்னி நலங்கிள்ளி 301
சேதிமக் கட்டடம் 623
சேதிய மலை 618
சேதியர் 607
சேந்தன் 336, 450

சேயோன் 5
சேர அரசப் புலவர்கள் 245
சேர சோழ பாண்டியர் ஒருமைப் பாடு 321
சேரமான் எந்தை 245, 246
,, கணைக்கால் இரும் பொறை 245, 324
,, குட்டுவன் கோதை 495
,, கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை 245
,, சாத்தனார் 246
,, இளங்குட்டுவன் 246
,, பெருஞ்சேரலாதன் 223
,, பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் 139
,, மாரிவண்கோ 222, 501
,, வஞ்சன் 220, 450,
சேரர் கொங்கு 527
சேரமான் (மூடங்கிக்கிடந்த) 153, 245
சேனன் 615

சோ

சோரநாகன் 627
சோழநாடு 249
சோழர் 112, 249
சோழன் சேட்சென்னி 245
,, நல்லுருத்திரன் 12, 329

த

தக்கணப்போர் 172
தகடூர் 199, 202, 400, 468
தகடூர்ப் போர் 173
தங்கால் 351
தசபாதிகர் 611
தசும்பு 323
தடாதகைப்பிராட்டியார் 353, 387, 594
தண்டாரண்யப்போர் 180
தண்ணடை நல்கல் 443
தண்பொருநை 230
தந்துமாறன் 461
தம்பன்னி 119
தம்பாணி 603
தமிளாதேவி 627,628
தர்மராசன் 612
தருமபுரி 468
தருமி 100
தலைச்சங்கம் 102
தலைச்செங்காடு 255
தலைமுடி 553
தலையாலங்கானம் 98, 101, 235, 263, 357, 441, 446, 456

தா

தாகோப்பாக்கள் 594
தாட்டிகன் 625
தாதுவம்சம் 614
தாமப்பல் கண்ணனார் 260
தாமான் தோன்றிக்கோ 407, 450, 471, 496
தார்ப்படை 156, 180, 552
தார்மாலைகள் 552
தாரமங்கலம் 472
தாலமி 30, 343

தி

திண்டிஸ் 27, 124
தித்தம்பன் 622
தித்தன் 7, 267, 462, 490
தித்தன் வெளியன் 492
திதியன் 379, 450, 455, 461, 490
திமிரிகா 29
தியாக முரசு 546
திருக்கண்ணன் 440
திருக்கோண மலை 599
திருக்கோவலூர் 401
திருச்சிராப்பள்ளி 526
திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு 62, 89

திருச்செங்கோடு 425
திருநாதர்குன்றம் கல்வெட்டு 64
திருப்பரங்குன்றக் கல்வெட்டு, 55, 191
திருப்பரங்குன்றம் 9, 347
திருப்போர்ப்புறம் 247, 273, 327
திருமாவளவன் 287, 485, 489
திருமால் 9
திருமாலிருஞ்சோலை 9, 348
திருமுடிக்காரி 440
திருமோகூர் 351, 476
திருவஞ்சைக்களம் 528
திருவாதவூர்க் கல்வெட்டு 44
திஸ்ஸ அபயன் 619
திஸ்ஸவாவி (ஏரி) 618

தீ

தீகாமணி 606
தீக ஜாந்து 622
தீண்டாமை 22
தீப வம்சம் 352, 600

து

துட்டகாமுனு 598, 620
துணங்கைக் கூத்து 8, 548
தும்பை 147, 567
துவ்வா நறவு 467
துவரை (துவாரசமுத்திரம்) 456
துளுநாடு 464

தூ

தூங்கெழில் 165, 262
தூசிப்படை 411
தூதர் 537
தூபவம்சம் 615
தூலத்தனன் 624

தெ

தென்குமரி 144
தென்பரதவர் 284
தென்புலம் 524
தென்வெள்ளாறு 346
தென்னவன் 295, 529

தே

தேமூர் 247
தேர்வண்மலையன் 234, 322
தேவனாம்பிய திஸ்ஸன் 593, 595, 608, 609 613, 615

தொ

தொடித்தோள் செம்பியன் 262
தொண்டி 7, 27, 235, 242 325, 526
தொண்டைமான் 111, 401, 439
தொண்டைமான் இளந் திரையன் 439, 444, 463, 489
தொல்காப்பியர் 2, 3, 4, 5, 6

தோ

தோதவர் 421
தோயன் மாறன் 471
தோல்படை 542
தோன்றிமலை நாடு 471

ந

நக்கண்ணனார் 478
நக்கண்ணையார் 268, 269
நக்கீரன் 100, 102
நச்சினார்க்கினியர் 459, 372, 559
நடுகல்விழா 212, 573
நத்தத்தனார் 479
நந்தர் 113, 114, 257
நம்பி நெடுஞ்செழியன் 450
நரிவெரூஉத்தலையார் 229
நல்லந்துவனார் 347
நல்லடி 256, 328, 337, 450, 493
நல்லாமூர் 479

நல்லியக்கோடன் 16, 463,
நல்லியாதன் 502
நல்லினி 139, 457
நல்லூர் 304
நல்வழுதி 376
நல்வேள்வி 371
நலங்கிள்ளி 301
நவநந்தர் 257
நவிரமலை 477
நள்ளி 462, 476, 490, 492
நற்சோணை 151, 334
நறவுப்பட்டினம் 192
நன்மாறன் 364, 365, 497
நன்றா 196
நன்னன் 7, 97, 161, 405, 483, 464
நன்னன் உதியன் 492
நன்னன் சேய் நன்னன் 463

நா

நாஞ்சில் நாடு 474
நாஞ்சில் வள்ளுவன் 373, 441, 461, 496
நாடுகாவல் 530
நாண்மகிழ் இருக்கை 558
நாநவில் அவையம் 587
நாம நல்லமர் 322
நார்முடிச்சேரல் 492, 553
நாரே 26
நாலைகிழான் நாகன் 436, 442
நாழிகைக் கணக்கர் 560
நாளங்காடிப் பூதம் 261
நாளவை 586
நாற்பெருங்குழு 559

நி

நிதியின் கிழவன் 104
நியாசிண்டன் 27
நியாசிந்தி 474
நியாய முரசு 546
நிலந்தரு திருவின் நெடியோன் 94
நிலமானியப் படைமுறை 437, 441
நிலியன் 627

நீ

நீடூர் 455, 475
நீடூர் கிழவோன் 449
நீலமலை (நீலகிரி) 175, 578
நீர்கூர் 201

நூ

நூழில் 568
நூற்றுவர் கன்னர் 129, 176

நெ

நெடுங்கிள்ளி 12, 584
நெடுங்கிள்ளி (காரியாற்றுத் துஞ்சியவன்) 307
நெடுஞ்செழியன் 12, 43, 354
நெடுஞ்செழியன் (தலையாலங் கானம்) 98, 235, 357
நெடுஞ்சேரலாதன் 140, 153
நெடும்பாரதாயனார் 158, 538
நெடுமான் அஞ்சி 7, 400
நெடுமிடல் 162, 382, 409
நெடுமுடிக்கிள்ளி 329, 553, 631
நெடுவேளாதன் 454, 502
நெடுவேளாவி 455, 490
நெய்தலங்கானல் 254, 597, 631
நெல்சிந்தா 474
நெல்வினூர் 362

நே

நேசப்படை 570
நேரிவாயில் போர் 170

நொ

நொச்சிநிலை 567
நொச்சிப்போர் 568

ப

பஃறுளியாறு 348, 370, 417
பங்களர் 172
பங்கீட்டுமுறை 558
பங்குனி முயக்கம் 299
பச்சைமலை 406
பசும்பூண் பாண்டியன் 202, 380, 491, 639
பசும்பூண் வழுதி 378
பஞ்சசீலம் 601
பஞ்சவர் 226, 527, 529
பட்டத்துயானை 543, 550
பட்டினப்பாக்கம் 252
படுகர் 421
படைத்தலைவர் 448
படைப்பற்று 443
பண்டேயா 25
பண்டையர் 528
பண்ணன் 316
பணை 547
பத்தினிக்குக் கோட்டம் 632
பதினெண் பழங்குடி 447
பதுமன்தேவி 198
பந்தர்த் துறைமுகம் 195
பரணர் 389, 490
பரதவர் 299, 447, 505
பரமக்குடி 476
பராசரன் 356
பரிணாம வளர்ச்சி 434, 435, 519
பரிநிருவாணம் 603
பரிமேலழகர் 561
பருவூர் 525
பல்குன்றக்கோட்டம் 456, 477
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி 94, 370
பல்யானைச் செல்கெழு குட்டுவன் 9, 136, 153
பல்லவர் 109
பல்லவனீச்சுரம் 33
பல்லுகன் 598
பவத்திரி 482
பவளமலை 482, 483
பழையன் 7, 367, 408, 436, 456, 489, 493
பழையன் மாறன் 367, 461, 499, 579, 625
பறம்பு 347, 475
பன்றிமலை 346

பா

பாகியான் 625
பாசறை 546, 574
பாடலிபுரம் 25, 113
பாடினி 149
பாண்டியர் 117
பாண்டியன் அறிவுடை நம்பி 382
பாண்டியன் கீரன் சாத்தன் 450
பாண்டியன் நன்மாறன் 497
பாண்டியன் மாறன் வழுதி 373
பாண்டுகாபயன் 592, 606, 608
பாண்டு வாசுதேவன் 605
பாணர் 447, 505
பாணன் 7, 462, 490
பாணினி 1, 257
பாதிகாபயன் 627
பாதிகதிஸ்ஸன் 633
பாழுள்ளூர் 283
பாயல்மலை 220
பார்ப்பனர் 4, 448, 562
பார்வல் பாசறை 576
பாரதப்போர் 139
பாரம் 467
பாலகுமரன் 115
பாலை 5
பாலைக் கௌதமனார் 158
பாலைபாடிய பெருங்கடுங்கோ 230

பாழி 284, 381, 467, 582
பாழிநிலை 567
பான்-கௌ 31

பி

பிகாரே 27
பிசிராந்தையார் 280, 351
பிட்டங்கொற்றன் 373, 416, 469, 498
பிட்டன் 118, 241, 328, 549
பிடவூர் 253
பிண்டன் 462, 490
பித்துசாரன் 120
பிரமதேயம் 448, 449
பிராமி எழுத்து 35, 594, 595, 608
பிலயமாறன் 625
பிள்ளையார்பட்டிக் கல்வெட்டு 63
பிளினி 26, 114, 122, 123, 125
பிறந்தநாள் விழா 556
பினாகை (தென்பெண்ணை) 482

பீ

பீலிவளை 331, 631

பு

புகழூர், 231
புகழூர்க் கல்வெட்டு 40, 57, 231
புகார் 251, 525
புகார்ச் செல்வன் 201
புண்ணியராசன் 597
புத்தகயா 593, 609
புத்தப்பள்ளி 33
புதுக்கோட்டை 250
புதுப்புனல் விழா 299
புரோகிதர் 559
புரோசு மயக்குதல் 539
புல்லாற்றூர் எயிற்றியனார் 279
புலத்தி நகரம் 594
புலிகடிமால் 452
புன்றுறை 462, 470
புன்னாடு 465

பூ

பூக்கோள்விழா 577
பூந்துறை நாடு 470
பூம்புகார் 32
பூரிக்கோ 98
பூவைநிலை விழா 557
பூவையாட்டம் 566
பூழிநாடு 134, 192, 405, 510, 525
பூழியர் 447, 510, 529
பூழியர்கோ 153, 526
பூழியர் மெய்ம்மறை 199
பூஜாவளி 615

பெ

பெண்ணையாறு 250
பெருங்கடுங்கோ 118
பெருங்கல் நாகரிகம் 452
பெருங்கணி 560
பெருங்குளம் 363
பெருங்குன்றூர் 500
பெருங்குன்றூர்கிழார் 211, 232, 285, 492, 494
பெருங்கொற்றனார் 478
பெருங்கோப்பெண்டு 380
பெருங்கோழியூர் 272, 274
பெருங்கௌசிகன் 500
பெருஞ்சாத்தன் 225, 254, 449, 488
பெருஞ்சித்திரனார் 404, 503, 578
பெருஞ்சேரல் இரும்பொறை (தகடூர் எறிந்த) 9, 137, 191, 199
பெருஞ்சேரலாதன் 223, 539
பெருஞ்சோறு 442
பெருந்தலைச் சாத்தன் 404, 457, 503
பெருந்தோளாதன் 225
பெருநற்கிள்ளி I 271
,, II 275
,, III 276
பெருநாள் இருக்கை 553

பெரும்பெயர் ஆவுதி 158
பெரும்பெயர் நாள் 555
பெரும்பெயர் வழுதி 375
பெருமங்கலம் 556
பெருமலை (பழனி மலை) 163
பெருமுத்தரையர் 21

பே

பேகன் 398, 493
பேயனார் 237
பேரெயின் முறுவலார் 362

பை

பைரவன் 175

பொ

பொகுட்டெழினி 402, 463, 495
பொத்தி 209, 255
பொதிகைமலை 1, 347
பொதினிமலை 472
பொதுக்கா 30, 130
பொதுவர் 18
பொம்மலா 474
பொய்கையார் 21, 23, 325, 328
பொரக்காடு 28
பொருந்தில் இளங்கீரனார் 238
பொருநர் 516
பொலந்தார்க்குட்டுவன் 160
பொலம்பூண் ஐவர் 443, 527, 560
பொலம்பூண் கிள்ளி 333
பொலாலையன் 638
பொற்கைப் பாண்டியன் 386, 558, 585
பொறையன் 525
பொறையன் பெருந்தேவி 189, 192
பொறையாற்று கிழான் 449, 499
பொன்முகலி 482
பொன்முடியார் 443
பொன்னியாறு 251

போ

போதி ஞானம் 609
போர்ப்புறம் (ஊரின் பெயர்) 148, 276
போவட்டக்கல பிராமி எழுத்து 611

ம

மகல்லக நாகன் 633
மகாகாமம் (ஊர்) 624
மகாசிவன் 615
மகாசுதர்சனம் 611
மகாசூளிக மகாதிஸ்ஸன் 626
மகாதாட்டிக மகாநாகன் 627
மகாதிட்டை 624
மகாபப்பதம் 628
மகாபோதிக்கிளை 597
மகாவம்சம் 344, 352
மகாவாலுக கங்கை 599
மகோதரன் 601
மச்ச மகாராசன் 595
மண்ணுமங்கலம் 555, 556, 567
மணக்கிள்ளி 151, 334
மணமுரசு 546
மணிபல்லவம் 596
மணிபல்லங்கம் 597
மணிபீடிகை 597
மத்தி 9, 493
மதுரை 95
மந்தராசா 121
மயிதவோலு, 110
மயிலை நாதர் 480
மரந்தை 295
மரபுரிமை 439
மருகல்தலைக் கல்வெட்டு 50, 84
மருங்கூர்ப்பட்டினம் 348
மருதம் பாடிய இளங்கடுங்கோ 245, 248
மருதன் இளநாகனார் 501

மருவூர்ப்பாக்கம் 252
மல்லிகிழான் காரியாதி 449, 498
மலயத்துவச பாண்டியன் 386
மலையமான் 7, 401, 477, 510
மலையாளம் 134
மழவர் 447, 497, 505
,, பெருமகன் அஞ்சி 435
,, பெருமகன் மாவள் ஓரி 435
,, மெய்ம்மறை 153
மறவர் குலப்பெண் 538
மறவன் பழையன் 461
மன்பெருங்கோயில் 578
மன்னார் வளைகுடா 597
மனுச்சோழன் 231
மனோரத பூரணி 627
மஜி மகாராசன் 611

மா

மாகதர் 560
மாகாமம் 594, 608
மாங்குடி மருதன் 93, 359, 444
மாசாத்துவர் 252
மாடலன் மதுரைக் குமரனார் 495
மாதிட்டை 597
மாந்தரம் சேரல் இரும்பொறை 141, 238, 322, 360
,, பொறையன் கடுங்கோ 234
மாந்தரன் 526
மாந்தர நாடு 525
மாந்தை 8, 134, 242, 526
மாநாய்கர் 252
மாமண்டூர்க் கல்வெட்டு 62, 69
மாமூலனார் 10, 455, 490, 492
மாரிவெண்கோ 222, 321
மாலகொண்டாக் கல்வெட்டு 65
மாலை மாறன் 366
மாலை வெண்குடை 545
மாவண் கிள்ளி 557
மாவளத்தான் 302, 305, 333
மாவலி கங்கை 599, 621
மாவிலங்கை 478, 479
மாறுவேடம் 558
மாறோக்கத்து நப்பசலையார் 260, 494
மானவிறல்வேள் 454, 499
மாணியம் 443

மி

மிஞிலி 492
மிழலைக் கூற்றம் 361, 499

மீ

மீனாட்சிபுரம் கல்வெட்டு 43, 69, 71-73, 354

மு

முக்காவல் நாடு 271
முசிறி 26, 126, 526
முசுகுந்தன் 260
முட்டசிவன் 127, 608
முடத்தாமக்கண்ணியார் 286
முடத்திருமாறன் 105, 366
முடிகவித்தல் 554
முடிசூட்டு விழா 554
முடித்தலை நாடு 275
முடி துறப்பு 538
முடிநாகராயர் 553
முடியரசு 434
முடியன் 462, 495
முத்துப்பட்டிக் கல்வெட்டு 55
முத்தூற்றுக் கூற்றம் 499
முதலியார் சுவடிகள் 475
முதியர் 138
முதிரைமலை நாடு 404, 469
முதுகுடுமிப் பெருவழுதி 370
முதுபொழில் மண்டிலம் 362
முதுமக்கட்டாழி 397
முதுவெள்ளிலை 362

மூரசு 542, 546, 577
மூருகன் 3
மூல்லை 5
மூள்ளூர் 8, 477
மூறை வழங்கல் 583

மூ

மூத்தகுடி 530

மெ

மெகஸ்தனீஸ் 25, 126, 353, 387
மெய்காப்பாளர் 576

மே

மேக்ரிண்டில் 25
மேட்டுப்பட்டிக் கல்வெட்டு 48, 78
மேல்மாவிலங்கை 479
மேலாதிக்கம் 438

மை

மையற்கோமான் 379
மையூர் 200
மையூர்கிழான் 494, 561

மொ

மொகஞ்சதாரோ 452

மோ

மோகனூர் 471
மோகூர் 10, 120, 169, 351, 367, 408, 411, 471, 626
மோகூர்ப் பழையன் 408
மோசிகீரனார் 192, 492
மோசியார் 190
மோரியர் 551

மௌ

மௌரியப் பேரரசு 257
மௌரியர் 10

ய

யவனர் 142

யா

யாழ்ப்பாணம் 596
யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை 137, 500

வ

வங்க நாசிக திஸ்ஸன் 128, 630, 631
வஞ்ச திஸ்ஸன் 624
வஞ்சன் 220
வஞ்சி-கரூர் 526
வஞ்சிப்போர் 566
வஞ்சி மாநகர் 134, 210, 248
வஞ்சிமுற்றம் 318, 565
வட்டாரச் சிற்றரசர் 447
வட்டுகன் 627
வட ஆரியர் 172
வடக்கிருத்தல் 224, 279
வடநாட்டுப்போர் 174
வடபுலம் 524
வட வர் 18
வடிகயிறு 554
வடிம்பலம்ப நின்ற பாண்டியன் 384
வடுகர் 10, 447
வண்டன் 165, 263, 490
வணிகச் சாத்து 635
வயவர் 147
வயிரியர் 195
வரிச்சியூர்க் கல்வெட்டு 54
வருணன் 3
வல்லம் 256, 337, 525
வல்லம் கிழவோன் 337
வல்லார்கிழான் 449, 502
வல்வில் ஓரி 8, 403
வழுதி 529
வள்ளல் 448
வள்ளி ஆட்டம் 566
வள்ளிவிழா 557
வள்ளியூர் 475
வளைவணன் 331, 597, 631
வன்பரணர் 403

வா

வாகைப் பறந்தலை 161, 294, 488, 491
வாசமயிலை 331, 631
வாட்ட காமணி 598, 624, 625
வாட்டாற்று எழினியாதன் 499
வாட்டாறு 413
வாணர் 447, 505
வாணன் 462, 499, 501
வாய்மொழிக் கோசர் 221
வார்த்திகன் 355, 584
வாலிகண்டபுரம் 476
வாவுண்ணி 636

வாள் அமலை 567
வாள்தானை 542
வாள் மின்னுதல் 577
வானகிரி நீர்த்தேக்கம் 34
வானநாடு 525
வானநூல் அறிவு 19
வானவர் 526
வானவரம்பன் 165, 226
வானவன் 240
வானவன் மறவன் 461

வி

விக்கிரமங்கலம் கல்வெட்டு 47, 77
விகார மகாதேவி 619, 620
விச்சிக்கோ 8, 209, 406, 450, 471, 493
விச்சிமலை 209, 471
விச்சியர் பெருமகன் 457
விசயன் (இலங்கை அரசன்) 127, 123, 352, 603
விசாகன் 636
வித்தை (ஊர்) 210, 367, 369
வியலூர் 467
வியலூர் (பெயிலூர்) 467
வியலூர்ப் போர் 71
விராஅன் 7, 461, 493
வில்லவன் கோதை 174
வில்லியாதன் 462, 502
வில்லோர் மெய்ம்மறை 192
விழிஞம் 349, 350
விழுப்புண் 570
விளங்கில் 238
விறலியர் 149
விஜிதம் 604

வீ

வீரக்கழல் 553
வீரமுரசு 546
வீரைப்பட்டினம் 525

வெ

வெங்கண்ணியார் 359
வெஞ்சமக் கூடல் 222
வெட்சி 565
வெண்கொற்றக் குடை 544, 545
வெண்டோர்ச் செழியன் 105
வெண்ணி 7, 223, 256, 293, 487
வெண்ணிக் குயத்தியார் 224, 256, 339, 485
வெள்ளலூர் 431, 419
வெள்ளாறு 250
வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி 373
வெளிமான் 462
வெளியம் 466
வெளியன் வேண்மான் 457, 466
வெற்றி விழா 556

வே

வேந்தர் 523
வேந்தன் 5
வேங்கட மலை 483
வேங்கைக் குன்றுகள் 491
வேங்கை மார்பன் 372
வேண்மாடம் 190, 191, 580
வேண்மாள் 179
வேண்மான் 454
வேணாடு 473
வேதாளிகர் 560
வேந்துவிடு தொழில் 451, 562
வேதானை 542
வேல் பம்பிடக்கை 12, 140, 148 241
வேல் மின்னுதல் 577
வேலன் வெறியாட்டம் 557
வேள் எவ்வி I, II 454
வேள்குலச் சளுக்கர் 452
வேள் பேகன் 454
வேளாவிக்கோ மாளிகை 459
வேளாவிக் கோமான் பதுமன் மகள் 179
வேளாளர் 5
வேளிர் 446, 450
வேளிர்குடி 453, 458

ஸ்

ஸ்கந்தவர்மன் 110

ஹ

ஹதிகும்பா கல்வெட்டு 119

ஹெ

ஹெனன்னெகல 610

ஸ்ரீ

ஸ்ரீயக்ஞ ஸ்ரீசதகர்ணி 129

பிழைதிருத்தம்

பக்கம்		வரி	பிழை	திருத்தம்
3		26	பரிபாட்டால்	பரிபாடலால்
5		5	படம்படித்து	படம்பிடித்து
12	அடிக்குறிப்பு	2	Iyanngar	Iyengar
38	,,	91	Martimer	Mortimer
43	,,	3	Report of	Report on
49	,,	18	Inscription	Inscriptions
50	,,	24	S. E. I.	S. I. E.
55		8	ஈழக்கடும்பிகன்	ஈழக்குடும்பிகன்
58		21	அண்ணணாகவே	அண்ணனாகவே
63	அ. கு.	44	8 to 282	280—282
63	,,	45	ங்கடசாமி	வேங்கடசாமி
70	,,	1	ancient dekkan	Ancient Deccan
73		13	ஒகி	ஒழுகி
105	அ. கு.	36	in History	and History
107		6	அமைந்திருந்தது	அமைந்திருந்தது.
107		27	வியாளமாலை	வியாழமாலை
107		34	சங்கங்கள்	சங்கங்களிலும்
116	அ. கு.	68	Decan	Deccan
118		9	ஆறுநாட்டான்	ஆறுநாட்டார்
123		33	எழுதிய	வெளியிடப்பட்ட
127		15	கி. மு. 483—345	கி. மு. 468—445
130		25	வெள்ளனூர்	வெள்ளலூர்
131	அ. கு.	104	இராமச்சந்திர	இராமச்சந்திரன்
148		23	என்னும்	என்றும்
151		13—14	அந்துவஞ்சேரல்	உதியஞ்சேரல்
177		22	மன்னர்	மள்ளர்
188		26	வடசூரியர்	வடவாரியர்
197		17	ஆண்டுக்கொண்டு	ஆண்டுகொண்டு
212		1	பெருஞ்சேரல்	இளஞ்சேரல்
252		26	மசாத்துவர்	மசாத்துவர்
266		27	சேரழர்	சோழர்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
269	இறுதி	பரணர்	நெடுமான் அஞ்சி
281	21	அன் றியுப்	அன் றியும்
340	அ. கு. 9	Paranavitane	Paranavitana
351	3	பறந்தை	பறந்தது
418	8	எனீசியா	பினீசியா
448	8	விரிந்துரைக்கப்படும்	விரித்துரைக்கப் படும்.
452	12	கலந்து	கலந்த
455	2	அருக்கலன்களை	அருங்கலன்களை
459	8	நச்சினார் கிக்னியரின்	நச்சினார்க் கினியரின்
460	22	அணிந்த	அளித்த
465	8	வரலாற்றாசிரியரிர்	வரலாற்றாசிரியர்
471	20	பகுதிதான் தோன்றிமலை	பகுதி தான் தோன்றிமலை
473	அ. கு. 248	Trans	Travancore
478	22	சேரப்பட்டினம்	சோப்பட்டினம்
481	அ. கு. 278	University	History
497	10	பாண்டியர்	பாண்டியன்
505	11	கள்ளர்	கள்வர்
521	25	இளங்குழுக்கள்	இனக்குழுக்கள்
523	29	நண்னன்	நன்னன்
523	இறுதி	செங்கன்மா	செங்கண்மா
584	அ. கு. 499	ழுழக்குரைத்த	வழக்குரைத்த
593	3	அசோகர்	அசோகச்
598	12	வட்டகாமணி	வாட்டகாமணி
600	11	வழக்கம் பே லக்	வழக்கம்போலக்
600	22	கிரித் நீவு	கிரித் தீவு
600	25	அத் நீவை	அத்தீவை
601	21	எரு மகனும்	ஒரு மகனும்
606	அ. கு. 31	Cylon	Ceylon
608	35	தேவனாம்பிரியின்	தேவனாம்-பிரியன்
610	8	வதைத்தனர்	வைத்தனர்
617	அ. கு. 53	Zelonica	Zeylanica
628	26	தமிழ்நட்டில்	தமிழ்நாட்டில்